# திருமந்திரம்

## 1

தமிழ மொழி

கழக வெளியீடு, எண்

ஓம்

திருச்சிற்றம்பலம்

திருமூல நாயனார்

அருளிச் செய்த

# திருமந்திரம்

## மூவாயிரம்

### [முதற் பகுதி]

(1 முதல் 5 தந்திரங்கள்)

*

கழகப்புலவர், சித்தாந்தபண்டிதர்

திரு ப இராமநாத பிள்ளை

எழுதிய விளக்கமும்,

துடிசைகிழார்,

திரு அ சிதம்பரனார்

எழுதிய குறிப்பும்

*

திருநெல்வேலித் தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,

சென்னை-1. மதுரை-1. திருநெல்வேலி-6.

1969

பரமசிவன் பிள்ளை இராமநாத பிள்ளை (1891)
துடிசைகிழார் அர்த்தநாரீசுவர முதலியார் சிதம்பரனார் (மறைவு-1954)

© THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,

Ed 1 Aug 1942
Ed 2 June 1957
Reprints July 1962: Jan 1969

Q23:417x8
K9·1

# THIRU MANTHIRAM Vol. I

Appar Achakam, Madras-1

# பதிப்புரை

தென்னாடுடைய சிவன் எந்நாட்டவர்க்கும் இறைவன். சிவன் என்னும் திருப்பெயர் உண்மை நிலையின்கண் உள்ளதாகும். இறைவன் என்னும் திருப்பெயர் சார்பு நிலையின்கண் உள்ளதாகும். இவ் விரு நிலையினையும் முறையே சிறப்பும் பொதுவும் என இசைப்பர். சிறப்பை அறிவுநிலை யென்றும், பொதுவை ஆள்வினை நிலையென்றும் கூறுப. ஆள்வினை அறிவினுள் அடங்கி நிற்கும் நிலை உண்மைநிலையாகும். அறிவு ஆள்வினையோடியைந்து அவ் ஆள்வினை தொழிற்படுநிலை சார்பு நிலையாகும். ஒருபுடை யொப்பாகக் கூறுங்கால் அருவுருவத் திருவுருவாம் சிவக்கொழுந்து அறிவு நிலையாகும். மற்றுக் கூத்தப்பெருமான், ஆலமர் செல்வன், அம்மை, பிள்ளையாரிருவர், முடிவிலடியார் ஆகிய திருவுருவங்கள் ஆள்வினை நிலையாகும். ஆள்வினைநிலை ஒன்றே தோற்ற ஒடுக்கத் தொன்மை இயற்கைத் தொழிலதாகும்.

மூப்பொருள் உண்மை மொழிவதே விழுமிய தமிழ்மொழியின் தனிச்சிறப்பாகும். மூப்பொருளாவன: 'இறை, உயிர், தளை' என்பன. இச் சிறந்த குறிக்கோள் திருவருள் கைவந்த தொன்மைத் தமிழ்ப் பெரும் முனிவர்கள் கண்டு வழங்கிய நன்மைக் குறிக்கோளாகும். சங்கமருவிய நூற்களுள் மிகவும் தொன்மை வாய்ந்த நூற்கள் தொட்டுப் பின்னுள்ள நூற்கள் எல்லாவற்றிலும் இக் குறிக்கோள் உயிரென ஊடுருவி நிற்றல் காணலாம். அவ்வுண்மை வருமாறு:

'வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
மூன்னவன் கண்டது முதனூ லாகும்.'

—தொல். பொருள், சூசசு.

முதனூல்: நூன்முதல் - நூலுக்குக் காரணம், கண்டது - திருவுள்ளம் கொண்டது.

'வேண்டிய கல்வி யாண்டுமூன் றிறவாது.'

—தொல். பொருள், கஅஅ.

யாண்டும் வேண்டிய கல்வி மூன்று இறவாது. மூன்று - மூப்பொருள்: இறை, உயிர், தளை.

'கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்.' —திருக்குறள், உ.

வாலறிவன்—முன்னவன்; சிவபெருமான்.

மூப்பொருள்களின் மாறு இயல்பும், தொடர்பும், இயல்பாகவே உயர்வற உயர்ந்த மெய்ப்பொருள் உயரும் உரிமையுடைய ஆருயிர் கட்குச் செய்யும் மாறில் உதவியும், அவ்வுதவிவாயிலாக ஆருயிர்கள் ஒன்றோடொன்று அன்புற்று இன்பெய்தி வாழும் எழிலும், அவ் வெழிலால் அருள் பிறத்தலும், அத் திருவருளால் இருள் நீங்கலும், திருவடிப் பேறெய்தியோங்கலும், ஒங்கியுயர்ந்தார் அருமறை

யோதலும், அகம்புற வழிபாடுகள் ஓவாதியற்றலும், அவற்றுல் உலகம் நலம்பெற்று வாழ்தலும் பிறவும் இறைநூல்களிற் காணும் முறையாகும்.

இறைநூல்கள் புகழ்நூல் எனவும் பொருள்நூல் எனவும் இருவகைப்படும். புகழ்நூற்கனேத் தோத்திரங்கள் என்ப. பொருள் நூற்கனேச் சாத்திரங்கள் என்ப. இவற்றை ஆளுடைய அரசர் 'சொல்லும் பொருளெலா மானுர் தாமே, தோத்திரமும் சாத்திரமு மானுர் தாமே' என அருளும் திருமொழியான் உணரலாம்.

திருவருட்கொடையால் நமக்குக் கிடைத்துள்ள புகழ் நூற்களேத் திருமுறை எனவும், பொருள்நூற்களே மெய்கண்ட மறை எனவும் கூறுப. மறை ஈண்டு ஆகமம். திருமுறைகள் பன்னிரண்டு மெய்கண்டமறைகள் பதினுன்கு. இவை முறையே தமிழ் வேதமெனவும் தமிழ்ஆகமம் எனவும் கூறுப. இவையே தமிழகத்துத் திருக்கோவில் வழிபாட்டுக்குத் தலேசிறந்தவை. ஆகமம் : ஆவியின் நிறைவு.

மக்கட்கு மாந்தர் என்னும் ஒரு தலேசிறந்த திருப்பெயர் வழங்குகின்றது. மாந்துதல் - உட்கொள்ளுதல். ஐம்புலனுகர்வும் உட்கொள்ளுதலேயாகும். அம்முறையிற் பார்த்தால் ஆருயிர் அனேத்தும் மாந்தர் என்னும் பெயர்க்கு உரியனவாகும். அங்ஙனமாகாமல் அப்பெயர் பொது நீக்கி மக்களேயே வரைந்து சுட்டுவதால் அதற்கொரு சிறப்புப் பொருள் காணுதல் வேண்டும். அது செம்புல உணர்வினில் திருமறைப் பொருள் மாந்துஞ் சீர்மையென்றுகும். திருமறை - உபதேசமந்திரம்; குருமொழி. அம் மறையினே மாந்துவிப்பாரும், மாந்துவாரும் மாந்தரெனவே அழைக்கப்பெறுவர். அவருள் மாந்துவிப்பாரை 'நிறைமொழி மாந்தர்' என வழங்குவர். அந் நிறைமொழி மாந்தரால் அருளப்பட்டு மெய்கண்டார் செம்புலவுணர்வினுல் மாந்தி அவ் வுணர்வின்கண் அமீது என்றும் மாருது இருத்தலேயுள்ளது 'மாந்திரம்' என்றுகும். இரம் - இருத்தல். மெய்கண்டார்-மாணவர். இவ் வுண்மையினே வரும் வெண்பாவால் நினேவு கூர்க :

ஐம்புலனுல் மாந்தல் அனேத்துயிர்க்கும் ஆம்பொது
செம்புலனுல் மாந்தல் சிறப்பாமால்—இம்பரிடை
மக்கட்கே மாந்துணர்வு மாந்திரமே மந்திரமாம்
தக்கபொருள் மந்திரத்தாம் சாற்று.

செம்புலன் - மெய்யுணர்வு. மாந்திரம் : மந்திரம் என மரீஇயிற்று.

புகழ்நூல் பொருள்நூல்கள் அனேத்தும் மந்திரமே. அவையனேத்துப் திருவருள் வண்ணமாய்த் திகழ்ந்த நிறைமொழி மாந்தராம் நாயன்மார்களால் அருளிச் செய்யப்பட்டன. மந்திரமே மறை எனவும் வழங்கப்படும். மந்திரமே மாந்தர் திருவாணே எனவும் வழுத்தப்படும். அவ்வுண்மை திருஞானசம்பந்தப் பெருமானுர் ஐந்தெழுத்துகளில் 'ஆணே நமதே' என வாய்மலர்ந்தருளியவாற்றுன் உணர்க. நிறைமொழி மாந்தர்தம் நீர்மையுரைக்கும் பண்டைத் திருப்பாட்டுக்கள் வருமாறு :

" நிறைமொழி மாந்தர் ஆணேயிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப."

--தொல். பொருள், [illegible]

இதன்கண் பேராசிரியர் "'தானே' என்று பிரித்தான், இவை தமிழ் மந்திரம் என்றற்கு" என உரைத்தருளினர். ஒருசார் அங்கதப் பாட்டும் இதனோடு ஒத்துக் காணப்படினும் திருமுறை முதலிய மந்திரப்பாசுரம் போன்று யாண்டும் எல்லார்க்கும் வேண்டுவன விளைத்துப் பயன்படுவதன்று.

"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்." —திருக்குறள், உ.அ.

இதன்கண் பரிமேலழகியாரும் 'அவராணையாகச் சொல்லிய மந்திரங்கள்' என்றனர்.

திருமுறைகளுள் சிறப்பாகத் **'திருமந்திரம்'** எனத் திருப்பெயர் பெற்றுத் திகழ்வது பத்தாம் திருமுறையாகும். இதற்கு **'மந்திர மாலை'** (148) என்னும் மற்றொரு திருப்பெயரும் உண்டு. இவ்விரு திருப்பெயர்களும் ஐந்தெழுத்தாலமைந்துள்ளன. இதுவும் திருவருட் சிறப்பேயாகும்.

இந் நூலின் சிறப்பைப்பற்றியும், நூலாசிரியரைப்பற்றியும், நூல் வந்த வரவைப்பற்றியும், காலத்தைப்பற்றியும் நான்முகத்தும், முகவுரைக்கண்ணும் அவ்வப் பெரியார்களால் விரித்து விளக்கப்பட்டுள்ளன. அவற்றை ஆண்டுக் காண்க.

இந்நூல் ஒன்பது தந்திரங்களையும், ஒரு நூற்றுத் தொண்ணூற்று ஐந்து உட்டலைப்புக்களையும் கொண்டு ஒளிர்கின்றது. இதன்கண் அடங்கிய திருப்பாட்டுக்கள் ஒரு மூவாயிரமென்ப. மேலும் இத் திருப் பாட்டகத்துப் பொதுப்பாயிரம் நூற்றிருபத்தெட்டுத் திருப்பாட்டுக் களும் தற்சிறப்புப்பாயிரம் இருபத்தெட்டுத் திருப்பாட்டுக்களும் கொண்டு காணப்படுகின்றன. இவ்விரண்டியும் சிறப்புப்பாயிரம் என ஏழு திருப்பாட்டுக்கள் தனியாகக் காணப்படுகின்றன. இப் பாயிரவைப்பும் திருக்குறள் பாயிரவைப்பும் பெரும்பாலும் கருத்தொத்து விளங்கின்றன. திருக்குறளின்கண் கடவுள்வாழ்த்து, வான்சிறப்பு, நீத்தார் பெருமை, அறன்வலியுறுத்தல் என நான்கு தலைப்புக்கள் காணப்படுகின்றன. இந் நூலின்கண்ணும் கடவுள்வாழ்த்து, வான்சிறப்பு, நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல் என நான்கு தலைப்புக்கள் சிறு மாற்றத்துடன் காணப்படுகின்றன. இதன்மேலும் மும்மூர்த்திகளின் முறைமை, வேதச்சிறப்பு, ஆகமச்சிறப்பு, ஆகுதிவேட்டல், அரசாட்சி முறை, அறஞ்செயான் திறம் என ஏழு தலைப்புக்கள் காணப்படுகின்றன. அவ் வேழனுள்ளும் மும்மூர்த்திகளின் முறைமை கடவுள்வாழ்த்தின் கண் அடங்கும். அந்தணரொழுக்கமாகிய நீத்தார் பெருமையின்கண் வேதச்சிறப்பு, ஆகமச்சிறப்பு, ஆகுதி வேட்டல் என்னும் மூன்றும் அடங்கும். அறன்வலியுறுத்தலாகிய அறஞ்செய்வான் திறத்தின் கண் அரசாட்சிமுறை, அறஞ்செயான் திறம், அவையடக்கம் ஆகிய மூன்றும் அடங்கும்.

இத் திருமந்திர நூல் ஒன்றுமே தமிழ்வேதாகம முழுமுதற் கருவூல நூலாகும். இதனை முதனூலாகக்கொண்டு இதன் விளக்கமே ஏனைப் பதினெரு திருமுறைகளும், பதினென்கு சித்தாந்த நூற்களும் என நடு நின்றுய்வார்க்கு உண்மை அங்கை நெல்லியெனப் பொங்கிப்புலனாகும். இவ் வொரு நூல் திருக்கோவில்களில் நாளும் விடாது ஓதிவரப்படு மாயின் சமயவுண்மைகளும், உலகியல் ஒழுக்கங்களும், அருளியலாகிய

திருக்கோவில் வழிபாடுகளும், திருவுருவச் சிறப்புக்களும், சக்கர அமைப்பும், மந்திரமாண்பும், அடியார் பெருமையும், சிவகுருவின் முதன்மையும், சிவபூசை மூட்டின்று நிகழவேண்டிய இன்றியமையாமையும், சிவப்பேறும் ஆகிய இவற்றைத் திருக்கோவிலாரும், செந்நெறிச் செல்வர்களும், வழிபாட்டுப் பெருமக்களும், செந்தமிழன்பர்களும் நன்குணர்ந்து ஒற்றுமையுற்று வாழ்ந்து நாடு வளமுற்றுப் பொலியுமென்பதில் ஒருசிறிதும் ஐயமின்று. ஆன்றோரும் அன்பரும் முன்னின்று முயல்வாராக. சிவனருள் முன்னிற்பதாக.

இவ் வரும்பெரும் நூற்குச் சிறந்ததொரு விளக்கவுரையில்லாதது ஒரு பெருங்குறை என எல்லாரும் எண்ணியுரைத்து எழுதியும் வருவாராயினர். இதற்கு 1912இல் திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை யாதீனத்துப் பிரபல மாவித்துவசிரோமணி, யாழ்ப்பாணத்து வடகோவை, ஸ்ரீலஸ்ரீ - சபாபதி நாவலரவர்கள் மாணாக்கர் மாவை, வே. விசுவநாதபிள்ளையவர்கள் ஓர் அரிய குறிப்புரை எழுதி அச்சிட்டுள்ளார்கள். அக் குறிப்புரை ஒவ்வொரு பக்கத்திலுமுள்ள பாட்டுக்களுக்கு அடிக்குறிப்பாக அமைந்துள்ளது. இனி 1913 இல் மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் சைவநூற் பரிசோதகராயிருந்த திருவாவடுதுறை, ஆதீன வித்துவான் சேற்றூர் ரா. சுப்பிரமணியக் கவிராயரவர்கள் அங்கும் இங்குமாகப் பலபாட்டுக்களைத் தொகுத்துத் 'திருமந்திர நூறு பாட்டுக்குரை' என ஒரு நூல் வெளிப்படுத்தியுள்ளார்கள். அந் நூறு பாட்டுக்கும் இவ்வுரைகாரருக்குப் பலவாண்டுகளுக்கு முன்னமே 'கன்னடியர் கம்பளிச்சட்டை கைலாயசித்தர்' என்னும் ஒருவர் ஒருரை வரைந்திருந்தனர். அவ்வேடு மதுரைத்தமிழ்ச்சங்கத்திலிருந்தது. அவ்வுரை ஒருவகையானும் பொருந்துமாறில்லாதிருந்ததால் இவ் வுரையாசிரியர் செவ்வியவுரையொன்று வரைந்து வெளிப்படுத்தினர். பின்பு 1923இல் முதல்தந்திரம் முதல்தகைப்பு உபதேசப் பகுதி முப்பதுக்கும் 'ஒரு சிவயோகியார் அருளியவிளக்கக்குறிப்புக்களை' ஆதாரமாகக்கொண்டு கோயமுத்தூரையடுத்த புதுமதுரை ரிடையர்ட் டிப்டி - சூப்ரிண்டெண்டு C. S. சுந்தரமுதலியாரவர்கள் ஒரு விளக்கவுரை பல மேற்கோள்களுடன் செந்தமிழ் முதன்மை சிறக்க வரைந்து வெளிப்படுத்தியுள்ளார்கள்.

1942இல் நம் கழகப்பதிப்பாகத் துடிசைகிழார் திருமந்திரமணி அ. சிதம்பரனாரவர்களைக்கொண்டு பல சுவடிகளையும் ஒத்தாராய்ந்து எழுதிய சிறந்த உரைக்குறிப்போடு வெளிவந்துள்ளது. அக் குறிப்புரை அந்நூலின் இறுதியில் சேர்க்கப்பட்டுள்ளது.

1951இல் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் 20ஆவது பட்டத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள் நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களுடைய திருவுள்ளப்படி, திருமந்திரமணி, துடிசைகிழார் அ. சிதம்பரனார் அவர்கள் எழுதிய வரலாற்று முன்னுரையும், தணிகை பணி இராவ்பகதூர் வ. சு. செங்கல்வராயபிள்ளை, எம். ஏ., அவர்கள் செய்துள்ள ஆராய்ச்சிக்குறிப்புக்களும் சேர்ந்த மூலபாடநூல் வெளிவந்துள்ளது.

இவையனைத்தையும் துணையாகக்கொண்டு நம் கழகப்புலவர் சித்தாந்த பண்டிதர் திருவாளர். ப. இராமநாதபிள்ளையவர்கள் ஒரு சிறந்த ஆராய்ச்சி விளக்கவுரை வரைந்துள்ளார்கள். அவ் வுரைக்கண் பாருத்தமான இடங்கட்கு வேண்டும் பல்வேறு எடுத்துக்காட்டுக்கள்

திருமுறை பன்னிரண்டு, சித்தாந்த நூற்கள் பதினான்கு, திருக்குறள், தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, குமரகுருபரர், தாயுமானார், சிவப்பிரகாசர், சிவஞான முனிவரனார் முதலிய அருளாளர் பாடியருளிய பல நூற்கள் இவைகளினின்றும் எடுத்து அடிக்குறிப்பாக அமைத்துள்ளார்கள். அவர்கள் தம் நுண்மாண் நுழைபுல வண்மைக்கு அஃதோர் எடுத்துக்காட்டாக விளங்கும். அவ் வடிக்குறிப்புக்கள், ஆராய்வார்க்கும், செம்பொருட்டுணிவின் சிறந்த நுணுக்கங்களைத் தேர்ந்து தேற உண்மையாய் விழைவார்க்கும், வழிபாடுகள் அனைத்தும் தமிழாகமப்படி நாளும் நிகழவேண்டுமென்னும் நன்னேக்குடைய நல்லார்க்கும் பெருந்துணை புரிவனவாகும். ஆங்காங்கு வேண்டும் இலக்கணக் குறிப்புக்களும், சொற்பொருள் நுணுக்கங்களும், உருவக வண்மைகளும், செந்தமிழ் மந்திரங்களின் சீரிய வாய்மைகளும், தனித் தமிழ் முதன்மையும் வேண்டும் அளவுக்கு விரித்து விளக்கப்பட்டுள்ளன; இவ் வுரையின் பக்கத்துத் திருவாளர் துடிசைகிழார். திருமந்திரமணி. அ. சிதம்பரனாரவர்கள் குறிப்புரையும் அமைத்துள்ளோம். இவ் விரண்டின் குறுக்கமாக முறையே (ப. இ.) எனவும் (அ. சி.) எனவும் அமைத்துள்ளோம். மேலும் இன்றியமையாத் திருத்தங்களும், திருமாமறை முறை மேற்கோள்கள் பலவும் புதியனவாக இப் பதிப்பின் கண்ணும் சேர்க்கப்பட்டுள்ளன.

இதன்கண் வரும் 'காலசக்கர முதலாக நவாக்கரிசக்கரம் ஈறுகவுள்ள எண்பெருஞ் சக்கரங்களும், பல்வேறு இருக்கை (ஆசனம்)களும் பிறவும் படங்களுடனும், அவ்வவற்றிற்குரிய மந்திர அமைப்புக்களுடனும் வெளிப்படுத்துவது உலகிற்குப் பெரும் பயனுகும் எனவுன்னித் திருமடத்தலைவர், பெரும்புலச் செல்வர் பலர்க்கும் பலகால் எழுதியும் பயன்பெறுமாறு விடைபெற்றிலேம். இன்னும் இதனைக் கண்ணுறும் நல்லார் எவரேனும் தம்பாலுள்ளனவற்றைத் தந்துதவுவார்களாயின் அவர்கள் திருப்பெயருடன் அடுத்த பதிப்பில் வெளிப்படுத்தும் கடப்பாடுடையோம்.

நூலின் விரிவு நோக்கி இதனை **இரண்டு பகுதியாக** வெளியிடுகின்றோம். இரண்டு பகுதியும் ஒருங்கு வாங்குவார்க்கே கிடைக்கப்பெறும். பகுதி இரண்டின் ஈற்றில் பாட்டுமுதற்குறிப்பும், அருஞ்சொல் விளக்கமும், எடுத்தாண்ட நூற்களின் வரிசையும் பிறவும் சேர்க்கப்பெறும்.

இப் பகுதி ஒன்றின்கண் ஒன்றுமுதல் ஐந்து தந்திரங்களும் அவற்றின் பொருளடக்கமும் நான்முகம், முகவுரை முதலியனவும் வெளிவருகின்றன. பகுதியிரண்டில் ஆறுந்தந்திரமுதல் ஒன்பதாந் தந்திரமுடிய நான்கு தந்திரங்களும் அவற்றிற்குரிய பொருளடக்கமும் பிறவும் வெளிவரும்.

இதனைப் பொதுவாகச் செந்தமிழன்பர்கள் அனைவர்களும் சிறப்பாகச் செந்நெறிச் செல்வர்களும் வாங்கி ஓதியும் ஓதுவித்தும் மெய்ம்மைத் தமிழகமாண்பும், தமிழ்மாண்பும், தமிழ்த்தெய்வமாண்பும் தெளிந்து நல்வாழ்வு வாழ்ந்து இன்புறுவார்களாக; இறையருள் முன்னிற்பதாக.

சென்னை,
21—5—1957.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

# உள்ளுறை


| | பக்கம் |
|---|---|
| 1 - 5 தந்திரங்களின் அதிகார அகரவரிசை | 9 |
| நூன்முகம் | 11 |
| முகவுரை | 55 |
| க. பாயிரம் | ,, |
| உ. திருமூலநாயனார் வரலாறு | 63 |
| சிறப்புப் பாயிரம் | 87 |
| **திருமந்திரம்** | |
| பொதுப்பாயிரம் | க |
| தற்சிறப்புப் பாயிரம் | ருள |
| முதல் தந்திரம் | சுக |
| இரண்டாம் தந்திரம் | கசடு |
| மூன்றும் தந்திரம் | உசக |
| நான்காம் தந்திரம் | நூசுக |
| ஐந்தாம் தந்திரம் | டுசக |

# திருமந்திரம் 1 முதல் 5 தந்திரங்களின் அதிகார அகரவரிசை


க. பொதுப் பாயிரம் க

அந்தணரொழுக்கம் ஙஞ் நக
அரசாட்சி முறை ஙஞ் சo
அவையடக்கம் ஙடி
அறஞ்செயான் திறம் ஙி ஙக
அறஞ்செய்வான் திறம் ஙி சசு
ஆகமச் சிறப்பு உக
ஆகுதி வேட்டல் ஙி நசு
கடவுள் வாழ்த்து ஙி க
மும்மூர்த்திகளின் முறைமை உஉ
வானச் சிறப்பு ஙை சஙி
வேதச் சிறப்பு உசு

உ. தற்சிறப்புப் பாயிரம் ஙிள

குரு பரம்பரை ஙிள
திருமூலர் தம் வரலாறு ஙிள
கூறுதல் ஙிக

முதல் தந்திரம் சுசு

அன்பு செய்வாரை அறிவன் ஙி
சிவன் ககள
அன்புடைமை ஙி ககஉ
இளமை நிலையாமை ஙை கஙி
உபதேசம் ஙிச சுக
உயிர் நிலையாமை ஙை சுக
கல்லாமை ஙை கஙக
கல்வி ஙை கஉக
கள்ளுண்ணுமை ஙி கஙள
கேள்விகேட்டமைதல் ஙி கஉசு
கொல்லாமை ஙை கoஙி
செல்வம் நிலையாமை ஙி கக
நடுவு நிலைமை ஙிஞ கஙசு
நல்குரவு ஙை ககo
பிறன்மனை நயவாமை ஙி கoசு
புலால் மறுத்தல் ஙி கoஙி
மகளிர் இழிவு ஙி கoஅ
யாக்கை நிலையாமை ஙி அக

இரண்டாம் தந்திரம் கசஙி

அகத்தியம் கசஙி
அடிமுடி தேடல் கசுச

அதோமுக தெரிசனம் உஉள
அபாத்திரம் உஉக
அருளல் ககஙி
அழிப்பு கஅஙி
இலிங்க புராணம் கஙிஙி
எலும்பும் கபாலமும் கசுஙி
கரு உற்பத்தி ககக
காப்பு கஅக
குருநிந்தை ஙிஙி உஙக
சக்கரப்பேறு கசுக
சிவநிந்தை உஙo
தக்கன் வேள்வி கஙிசு
திருக்கோயில் உஉஙி
தீர்த்தம் உஉஙி
படைப்பு கசுஅ
பதிவலியில் வீரட்டம் எட்டு கசஅ
பாத்திரம் உஉo
பிரளயம் கஙிக
பெரியாரைத் துணைக் கோடல் உஙள
பொறையுடைமை உஙசு
மறைப்பு ககo
மாகேசுரர் நிந்தை உஙஙி
மூவகைச் சிவவர்க்கம் உகசு

மூன்றும் தந்திரம் உசக

அட்டமாசித்தி உஅo
அட்டாங்கயோகப் பேறு உஎசு
அட்டாங்கயோகம் உசக
அமுரிதாரணை ஙஉள
ஆதனம் உசசு
ஆயுள் பரீட்சை ஙஉஙி
இயமம் உசஙி
கலிநிலை ஙoஙி
காயசித்தி உபாயம் ஙoஅ
காலசக்கரம் ஙிஙஙி
கேசரியோகம் ஙிஙo
சந்திரயோகம் ஙிசக
சமாதி உஎக
தாரணை உஙிஅ
தியானம் உசுச
நியமம் உசச

| | |
|---|---|
| பரியங்கயோகம் | ௫௬௯ |
| பிரத்தியாகாரம் | ௨௫௫ |
| பிராணயாமம் | ௨௯அ |
| வாரசரம் | ௫௨௭ |
| வாரசூலம் | ௫௨௯ |

**நான்காம் தந்திரம்** ௫௯௯

| | |
|---|---|
| அசபை | ௫௯௯ |
| அருச்சனை | ௯00 |
| ஆதார வாதேயம் | ௯௫௯ |
| ஏரொளிச் சக்கரம் | ௯அ௭ |
| சத்திபேதம் - திரிபுரைச் சக்கரம் | ௯௯௫ |
| சாம்பவி மண்டலச் சக்கரம் | ௫00 |
| திருவம்பலச் சக்கரம் | ௫௭௨ |
| நவகுண்டம் | ௯0௫ |
| நவாக்கரி சக்கரம் | ௫0௭ |
| புவனபதி சக்கரம் | ௫0௯ |
| பூரண சத்தி | ௯௯௯ |
| வயிரவச் சக்கரம் | ௯௯அ |
| வயிரவி மந்திரம் | ௯௨௯ |

**ஐந்தாம் தந்திரம்** ௫௯௯

| | |
|---|---|
| அசுத்த சைவம் | ௫௯௬ |
| உட்சமயம் | ௫௯அ |
| கடுஞ் சுத்த சைவம் | ௫௯௯ |
| கிரியை | ௫௫௫ |
| சகமார்க்கம் | ௫௯௯ |
| சத்திநிபாதம் | ௫அ0 |
| சரியை | ௫௫௯ |
| சற்புத்திர மார்க்கம் | ௫௭௨ |
| சன் மார்க்கம் | ௫௯௯ |
| சாமீபம் | ௫௭அ |
| சாயுச்சியம் | ௫௭௯ |
| சாரூபம் | ௫௭௯ |
| சாலோகம் | ௫௭௭ |
| சுத்த சைவம் | ௫௯௯ |
| ஞானம் | ௫௯௯ |
| தாச மார்க்கம் | ௫௭௫ |
| நிராசாரம் | ௫௯௫ |
| புறச்சமய தூட்டணம் | ௫அ௯ |
| மார்க்க சைவம் | ௫௯௫ |
| யோகம் | ௫௫௭ |

720

# நூன்முகம்

"தென்னு டைய சிவனே போற்றி
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி."

"சிந்திப் பார்மனத் தான்சிவன் செஞ்சுடர்
அந்தி வானிறத் தானணி யார்மதி
மூந்திச் சூடிய முக்கண்ணி னைடி
வந்திப் பாரவர் வானுல காள்வரே."

(அப்பர், இ. சித்தத்தொகைத் திருக்குறுந்தொகை, கள-க)

"திருக்கோவில் செல்வார் **திருமந் திரநூல்**
உருக்கமுடன் கொண்டுசென் றோதின்--பெருக்க
அறமுதலாம் நான்கும் அருள்முதலாம் ஐந்தும்
உறவருள்வன் **முக்கணிறை** ஓது."

**தமிழ்:**

"மொய்வைத்த வண்டின் செறிசூழன் முரன்ற சந்தின்
மைவைத்த சோலை மலையந்தர வந்த மந்த
மெய்வைத்த காலுந் தருஞாலம ளந்த **மேன்மைத்**
**தெய்வத் தமிழுந்** தருஞ்செவ்வி மணஞ்செய் ஈரம்."

(கஉ. மூர்த்தி நாயனார், கூ)

"திசையனைத்தின் பெருமையெலாம் தென்றிசையே வென்றேற
மிசையுலகும் பிறவுலகும் மேதினியே தனிவெல்ல
**அசைவில்செழுந் தமிழ்வழக்கே** அயல்வழக்கின் துறைவெல்ல
இசைமூழுது மெய்யறிவும் இடங்கொள்ளு நிலைபெருக."

(கஉ. சம்பந்தர், உச்,)

"நாளு மின்னிசை யாற்றமிழ் பரப்பு
ஞான சம்பந் தனுக்குல கவர்முன்
தாள மீந்தவன் பாடலுக் கிரங்கும்
தன்மை யாளனை யென்மனக் கருத்தை
ஆளும் பூதங்கள் பாடலின் றூடு
மங்க ணன்றனை யெண்கண மிறைஞ்சுங்
கோளி லிப்பெருங் கோயிலு ளானைக்
கோலக் காவினிற் கண்டுகொண் டேனே."

(எ. நம்பியாரூரர், கஉ, அ)

"பின்னைனின் றென்னே பிறவி பெறுவது
முன்னைனன் ருக முயல்த்வஞ் செய்கிலர்
என்னைனன் ருக இறைவன் படைத்தனன்
தன்னைனன் ருகத் **தமிழ்செய்யு** மாறே."

(கo. நம்பிரான் மூலர், கஞஉ.)

"வீடு ஞானமும் வேண்டுதி ரேல்வீர தங்களால்
வாடி ஞானமென் னுவது மெந்தை வலஞ்சுழி
நாடி ஞானசம் பந்தன செந்தமிழ் கொண்டிசை
பாடு ஞானம்வல் லாரடி சேர்வது ஞானமே."
(சம்பந்தர், உ, உ, கக.)

நம் தமிழ் தொன்மையும் நன்மையும் வாய்ந்தது. மூன்மை யும் மென்மையும் முகிழ்த்தது. தனிமையும் இனிமையும் தவழ்வது. 'கன்னடம் களிதெலுங்கு' முதலிய பல கிளை மொழிகளுக்குத் தாயாகத் திகழ்வது. பல மொழிகளுக்குத் தாயாக நிலவினும் தான் என்றும் கன்னித் தன்மை அழியாது மன்னுவது. ஒருகாலம் உலக முழுவதும் நிலவித் தன்னொளி பரப்பி ஒளிர்ந்தது. தனித்தியங்கும் பேராற்றல் வாய்ந்தது. உயிர்ப்புச் செட்டு மிக்குள்ளது: எம்மொழிக் கண்ணும் இல்லாத பொருளிலக்கணக் கருவூலத்தை யுடையது. ஆரியம்போல் உலக வழக்கு அழியாதது. சீரிய பண்பாடு பல நிரம்பியது, ஒருங் தோறும் உவகைதரும் தொல்காப்பியம், திருக்குறள், திரு மந்திரம் முதலிய சிறந்த நூல்கள் பலவற்றைத் தன்னகத்துக் கொண்டு மிளிர்வது. இவ்வுண்மைகள் அனைத்தும் ஒருங்கு புலப்படுமாறு சேக்கிழாரடிகள் 'ஞாலம் அளந்த மேன்மைத் தமிழ்' (பக்கம் 11) என்றருளினர்.

அவ்வுண்மை பிற்காலப் பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர் கள் பெருமொழியானும் உணரலாம். அது வருமாறு:

"சதுமறையா ரியம்வருமுன் சகமுழுது னினதாயின்
முதுமொழிநீ அநாதியென மொழிகுவதும் வியப்பாமே."
(மனோன்மணீயம், தமிழ்த்தெய்வ வணக்கம்-உ)

அத்தகைய அருந்தமிழால் திருந்திய மணவினை, தெய்வ வழிபாடு, பொருந்துநல்லாட்சி முதலிய அனைத்தும் தொன்று தொட்டுத் தொடர்ந்து சிறப்புற நடந்துவந்துள்ளன. இடையே ஆரியக் கூட்டுறவால் அவை மாறத்தொடங்கின. அங்ஙனம் தொடங்கிய காலத்து ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான் ரோரும், தெய்வத் திருவருள் கைவரப்பெற்ற மெய்யுணர்வினரும் உலகுய்யவும், உண்மை என்றும் பொன்றுதுன்று நிலவவும் அவற்றை எதிர்த்து உண்மை நாட்டி வரை செய்துள்ளனர். அப் பெருந்திருவினர் அரும்பாடுபட்டு நிலைநாட்டியவைகளும் சில நூற்றாண்டுகள் சென்றதும் அமைதியாக மறைக்கப்பட்டும் மாற்றப்பட்டும் வழக்கு வீழ்வவாயின. அங்ஙனம் செய்யும் குழுவினரும் அன்றுதொட்டு இன்றுகாறும் நம்முடனிருக்கும் கல்லோரேயாவர். நம் அருந்தமிழ்த்தாய் எத்தனையோ இடுக்கண்

கீழ்த் தப்பி இன்றும் வளங்குன்றாது நிலைத்திருக்கின்றுள் என்றால் அதற்குக் காரணம் அவள்தன் இயற்கை எழில்நலம் வாய்ந்த தெய்வத் தன்மையேயாகும்.

ஒருசிறிது தோன்றிய இடையூறுகளை ஆன்றோர் அகற்றிய முறையினைச் சுருக்கமாகக் கூறி மேற்செல்வாம். தமிழ்மொழி தனித்தமுறையில் பிறமொழிச் சொல்லோ எழுத்தோ கலவாது தூய்மையாய் வழங்கவேண்டுமென வரை செய்துள்ளனர். இன்றியமையாது கலக்கநேரின் தமிழ்ஒலிமுறைக்கு ஏற்றவாறு தமிழாக்கிச் சேர்த்துக்கொள்க. என்பதும், எக்காரணத்தையொட்டியும் பிறமொழி எழுத்துக்களை அறவே சேர்த்தல் கூடாதென்பதுமே அவ்வரையறையாம். அது வரும் தொல்காப்பிய நூற்பாவான் உணர்க.

"வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே."

(தொல். சொல்-சூ0க.)

இதனால் நாம் அறியக்கிடப்பது என்? இந்நாள்போல் அந்நாளிலும் வடவெழுத்துக்களை அவ்வவ்வாறே சேர்த்துத் தமிழைக் கெடுக்கமுயன்றுளரென அறியக்கிடப்பதாம்.

மேலும் ஒலிப்பெருக்கால் மயக்கி ஆரியத்தை உயர்த்தித் தமிழைக் குறை கூறினரும், தமிழில் மந்திரங்களில்லை என மயக்குவித்து மயலாயினரும் பலராயினர் எனத் தெரிகின்றது. அவர்கள் மயலைத் தக்கவாறகற்றியும் மந்திரங்கள் உண்டெனத் தெளிவித்தும் நிலைநாட்டியுள்ள உண்மைத் தமிழ்ச்சான்றோர் இன்றுபோல் அன்றும் உளரெனக் காண வியப்பும் உட்கும் ஒருங்கு விளைகின்றன என்பது வியப்பாமோ! அவை வருமாறு:

"ஆரிய நன்று தமிழ்தீ தெனவுரைத்த
காரியத்தாற் காலக்கோட் பட்டானைச்—சீரிய
அந்தண் பொதியில் அகத்தியனார் ஆணையாற்
செந்தமிழே தீர்க்க சிவா."

"முரணில் பொதியின் முதற்புத்தேள் வாழி
பரண கபிலரும் வாழி—அரணியல்
ஆனந்த வேட்கையான் வேட்கோக் குயக்கொண்டான்
ஆனந்தம் சேர்க சிவா"

(தொல். பொருள்-சூகூ0, மேற்கோள்.)

இவ்விரண்டு வெண்பாக்களிலும் முடிவு 'சுவா' என்ற தொடந்தான் காணப்படுகின்றன. அதற்குக் கூறப்படும் பொருள்

பொருத்தமாகத் தோன்றவில்லை. சுவாகா என்னும் சொல் சுவா எனக் குறுகிற்றென்பதேயாம். 'தீர்க்க' 'சேர்க' என்னும் வியங்கோட்களின் பின் இங்ஙனம் நேர்ந்தமை சிவன் செயலே எனக் குறிக்குங் குறிப்பாகவே 'சிவா' என்னும் சொல் நிற்கின்றதெனக் கொள்க. இவ்வெண்பாக்கள் நக்கீரரால் பாடப்பட்டன எனக் காணப்படுகிறது. அவரே பதினொராந் திருமுறையிலும் ஓர் உண்மை கட்டுரைக்கின்றனர். அது வருமாறு :

> "ஆரியப் புத்தகப் பேய்கொண்டு புலம்புற்று
> வட்டணை பேசுவர் மானுடம் போன்று."
> (கக. கோபப்பிரசாதம், வரி-அச-ஙி)

கண்மூடி முறையாக மண்ணுளோர் துண்ணெனத் தமிழ் மொழி வடமொழியினின்று பிறந்துளது என வாளா பிதற்றினரும் உளர். அவர்களனைவர்கட்கும் சிவஞானபோதப் பேருரையாசிரியர் 'சிவஞான முனிவரனர்' நல்லதொரு நடுநிலை நயமொழி புகன்று அறிவு கொளுத்துவாராயினர். அது முழுவதும் தொல்காப்பியச் சூத்திர விருத்தியுட் காண்க. சுருக்கம் வருமாறு :

தமிழ்மொழிப் புணர்ச்சிக்கட்படும் செய்கைகளும், குறியீடுகளும், வினைக்குறிப்பு, வினைத்தொகை முதலிய சில சொல்லிலக்கணங்களும், உயர்திணை அஃறிணை முதலிய சொற்பாகுபாடுகளும், அகம் புறம் என்னும் பொருட்பாகுபாடுளும், குறிஞ்சி வெட்சி முதலிய திணைப்பாகுபாடுகளும், அவற்றின் பகுதிகளும், வெண்பா முதலிய செய்யுளிலக்கணங்களும், இன்னோரன்ன பிறவும் வடமொழிக்கண் பெறப்படாமை...

தமிழின்கண் வேத ஆகமங்களாகிய மறைநூலும் முறைநூலும் இல்லை என வல்லைக் குழறி மருண்டாரும் பலர். அவர் மருட்சி அத்தனையும், 'வெற்பிற்றேன்றிய வெங்கதிர்க்கண்டவப், புற்பனிக்கெடுமாறு' போன்று திருமூலர் தமிழ்மூவாயிரம் திருவருளால் தோன்றியதும் கெட்டொழிந்தன : எனினும் அந்நூலை அடியோடு தோன்றவொட்டாது திருவாவடுதுறைப் பலிபீடத்தின்கண் மறைத்தடக்கினர். அம் மறைப்புப் புதையல் பல நூற்றாண்டுகளுக்குப்பின் தோன்றியருளிய திருஞானசம்பந்தப் பெருமானர் திருவருள் மொழியான் வெளிவருவதாயிற்று. அக் குறிப்பு வருமாறு :

'திருஞானசம்பந்தப் பெருமானர்பால் அவர்தம் திருத்தந்தையார் நான்மறை வேள்வியினை நயந்து புரியுமாறு பொன் வேண்டியிருந்தனர். பெருமானர் திருவாவடுதுறை இறைவன்

பால் விண்ணப்பித்தருளினர். இறைவனும் உலவாக்கிழி கல்கி யருளினன்.' அது வருமாறு :

"நச்சி யின்றமிழ் பாடிய ஞானசம் பந்தர்
இச்சை யேபுரிந் தருளிய இறைவரின் னருளால்
அச்சி றப்பருள் பூதமூன் விரைந்தகன் பீடத்து
உச்சி வைத்தது பசும்பொ னுயிரக்கிழி யொன்று."

(கஉ. சம்பந்தர், சஉசு.)

சம்பந்தப்பெருமானர் பணிந்து அப்பீடத்தினைந்த உலவாக் கிழியினை எடுத்து உச்சிமேல் வைத்துத் தந்தைபாலளித் தருளினர். அப்பொழுது வருமாறு ஓதியருளினர் :

"ஆதி மாமறை வீதியி னாறுசூழ் வேணி
நாத னுரைமுன் னுகவே புரியுநல் வேள்வி
நீது நீங்கநீர் செய்யவும் திருக்கழு மலத்து
வேத வேதிய ரனைவரும் செய்யவு மிகுமால்."

(கஉ. சம்பந்தர், சஉசு.)

ஆதிமாமறை : செந்தமிழ்த் திருநான்மறை; முன்னுகவே-முழுமுதன்மையாகவே. நல்வேள்வி - கொலைபுலையில் சிவவேள்வி.

"செவி வழக்கமாக வருவன வருமாறு :

சம்பந்தப் பெருமானர் பீடத்தின்கீழ்ப் பணிந்தெழுந்ததும் திருவருள் வலத்தால் ஈண்டு உலவாத் தமிழ்மணம் நிலவாகின்று கமழ்கின்றது. பீடத்தின்கீழ்ப் பார்க்க என்று அருளினர். அகழ்ந்து பார்த்தபோது திருமந்திரச் செப்பேடு திகழ்ந்து விளங்கிற்று. அதனை உச்சிமேற்கொண்டு உலகுக்கு அளித் தருளினர் என்பதே. இவ்வுண்மை திருத்தொண்டர் புராணத் தின்கண் காணப்படாவிடினும் உலகின்கண் பெருவழக்காகக் கேட்கப்படுகின்றது. திருவாவடுதுறைப் புராணத்துங் காணப் படுகின்றது. எவ்வாருயினும் திருமந்திரம் மறைக்கப்பட்டு வெளிப்போந்ததென்னும்உண்மைஐயமின்றி வெளிப்படுகின்றது.

இதுபோல் பண்டைச் செந்தமிழ்த் திருநான்மறையும் மறைக்கப்பட்டுவிட்டன எனும் மெய்ம்மை உய்த்துணரக் கிடக் கின்றது. அக் கொடுமை புலனுகா வண்ணம் 'பேர்கொண்ட பார்ப்பார்' ஒரு புனைகதை கட்டி அனைவரையும் மயக்கினர். அஃதாவது 'அருமறைகள் பெரும்பொருளாம் சிவபெருமானை விரும்பி வழிபட்டுத் திருமறைக்காட்டு நேர்முகத் திருக்கதவி னைத் திருக்காப்பிட்டுச் சென்றன. இனி அம் மறைகள் எப் பொழுது பூசனைக்கு வரும் அப்பொழுது அக்கதவம் தானே திறக்கும்' என்பதாம். நேர்முகம் - அபிமுகம்; கோபுரப் பெருந் திருவாயில்.

இதன் உண்மையினை நடுநின்று நாம் எண்ணுவேமாயின் அப் பார்ப்பார் செந்தமிழ்த் தொன்மைத் திருநான்மறையினுக்கு அம் மறை வழங்கா வண்ணம் இழைத்த சொல்லொணாக்கொடுமை யினை மறைக்காட்டுறையும் மணாளனும் விழுமிய முழுமுதற் சிவபெருமான் திருவுள்ளம் பொருது அத் திருக்கதவினை அடைப்பித்தருளினன் என்பது தெற்றெனப் புலனாகும். இவ் வுண்மை வருமாற்றான் உணர்க :

"இடுசிறைக் கோட்டத் திட்டன ராக
வார்த்திகன் மனைவி கார்த்திகை என்போள்
அலந்தனள் ஏங்கி அழுதனள் நிலத்தில்
புலந்தனள் புரண்டனள் பொங்கினள் அதுகண்டு
மையறு சிறப்பின் ஐயை கோயில்
செய்வினைக் கதவம் திறவா தாகலின்
திறவா தடைத்த திண்ணிலைக் கதவம்
மறவேல் மன்னன் கேட்டனன் மயங்கிக்
கொடுங்கோ லுண்டுகொல் கொற்றவைக் குற்ற
இடும்பை யாவதும் அறிந்தீ மின்னென."

(சிலப்பதிகாரம், உகூ. கட்டுரைகாதை.)

இச் சிலப்பதிகாரச் செவ்விய அடிகளால் நாம் உணர்வது என்ன ? நாட்டில் கொடுமை நடந்தால் தெய்வம் வாட்ட முணர்த்தப் பண்ணமை திண்மைத் திருக்கதவினை அடைக் கும் என்பதாம்.

அடைத்த அத் திருக்கதவினைத் திறக்கும் ஆற்றல் அப் பார்ப்பனர்க்கோ அவர்கள் ஒதிவரும் ஆரிய மறையினுக்கோ இல்லையென்பது எல்லாரும் வெளிப்படவுணரும் ஒன்றாயிற்று. பின்பு அப்பர் பெருமானும் சம்பந்தப் பெருமானும் திருவீழி மிழலையினின்று திருமறைக்காட்டுக்கு எழுந்தருளினர். இங் நிகழ்வினைக்கேட்டுத் திருமுறைத் திருமறைபாடித் திறக்கவும் அடைக்கவும் முறையே செய்வித்தருளினர். அவ்வுண்மை வருமாறு :

"அருமறைகள் திருக்காப்புச் செய்து வைத்த
அக்கதவந் திறந்திடவம் மறைகள் ஓதும்
பெருகியவன் புடையடியா ரணைந்து நீக்கப்
பெருமையினு லன்றுமுத லாகப் பின்னை
ஒருபுடையோர் வாயிலமைத் தொழுகுந் தன்மை
உள்ளபடி கேட்டருளி யுயர்ந்த சண்பைத்
திருமறையோர் தலைவர்வியப் பெய்தி நின்று
திருநாவுக் கரசருக்குச் செப்புகின்றார்.

அப்பரே வேதவனத் தையர் தம்மை
அபிமுகத்துத் திருவாயில் திறந்து புக்கே
ஈப்பரிசு நாமிறைஞ்ச வேண்டும் நீரே
இவ்வாயில் திருக்காப்பு நீங்கு மாறு
மெய்ப்பொருள்வண் டமிழ்பாடி யருளு மென்ன
விளங்குமொழி வேந்தரது மேற்கொண் டென்னே
இப்பரிசு நீரருளிச் செய்தீ ராகில்
இதுசெய்வே னெனப்பதிக மெடுத்துப் பாட.

பாடியவப் பதிகப்பாட் டான பத்தும்
பாடனிரம் பியபின்னும் பைம்பொன் வாயில்
சேடுயர்பொற் கதவுதிருக் காப்பு நீங்கச்
செய்கையினுல் வாகீசர் சிந்தை நொந்து
நீடுதிருக் கடைக்காப்பில் அரிது வேண்டி
நின்றெடுக்கத் திருக்காப்பு நீங்கிக் காட்ட
ஆடியசே வடியார்தம் அடியார் விண்ணோர்
ஆர்ப்பெழுந்த தகிலாண்ட மதிரத்து மூழ்க.''
(கூ. சம்பந்தர், திஅ0-உ.)

''அன்றர சருளிச் செய்ய வருமறைப் பிள்ளை யாரும்
வென்றிவெள் விடையார் தம்மை விருப்பினுற் சதுர மென்னும்
இன்றமிழ்ப் பதிகப் பாட லிசைத்திட விரண்டு பாலு
நின்றவக் கதவு காப்பு நீரம்பிட வடைத்த தன்றே.

அடைத்திடக் கண்டு சண்பை யாண்டகை யாரு மஞ்சொற்
றொடைத்தமி ழாளி யாருந் தொழுதெழுத் தொண்ட ரார்த்தார்
புடைப்பொழிந் திழிந்த தெங்கும் பூமழை புகலி வேந்தர்
நடைத்தமிழ்ப் பதிக மாலை நிரம்பிட நவின்று போற்ற.

அத்திரு வாயில் தன்னில் அற்றைநாள் தொடங்கி நேரே
மெய்த்திரு மறைகள் போல மேதினி புக்குப் போற்ற
வைத்தெதிர் வழக்கஞ் செய்த வரம்பிலாப் பெருமை யோரைக்
கைத்தலங் குவித்துத் தாழ்ந்து வாழ்ந்தது கடல்சூழ் வையம்.''
(கூ. சம்பந்தர், திஅள-க.)

அங்ஙனமிருந்தும் நம்மவரிற் சிலருக்கு அவ்வாரிய மறையின் மயல் பின்னும் விட்டபாடில்லை. என்று தெளியுமோ இம்மயல் னன்று நின்று வருந்துவதே தென்றமிழ்வாணர் செயத்தகும் பரிவென்க.

அம்மட்டோ? மூவர் முதலிகள், தேவர் மூவர்க்கும் அறி யொணாச் சிவபெருமானே யாவரும் உய்யச் செந்தமிழ்த் திரு மறை பாடியருளினர். இத் திருமறைபினைப் பண்பொடும் ஓதித் திருக்கோவில்களில் முறையாக எல்லா வழிபாடும் யாண்டும்

யாவரும் செய்து போந்து நல்லாராக வேண்டுமென்பது அவர்தம் திருவுள்ளக் குறிப்பாகும். அவ்வுண்மை வரும் ஆளுடைய பிள்ளையார் அருள்மொழியான் உணரலாம் :

"அந்தண் சோற்றுத் துறையெம் ஆதியைச்
சிந்தை செய்ம்மின் அடியா ராயினீர்
சந்தம் பரவு ஞான சம்பந்தன்
வந்த வாறே புனைதல் வழிபாடே." (சம்பந்தர். க. உஅ-கக)

வழிபாடு - பூசை.

நால்வர் பெருமக்களும் நம்பிரான் மூலரும் நாயனார் திருவருளால் பாடியருளிய திருமுறைகள் செந்தமிழ் மறையும், மறை முடிவும் முறையும் எனப்படும். முறை - ஆகமம். மறை - வேதம். மறைமுடிவு - உபநிடதம். இவையனைத்தும் சிவபெருமான் திருமொழியேயாகும். அவ்வுண்மை வருமாறு :

'ஒழுகலரி தழிகலியி லுழியுலகு
பழிபெருகு வழியைநினையா
முழுதுடலி லெழுமயிர்கள் தழுவுமுனி
குழுவினெடு கெழுவுசிவனைத்
தொழுதுலகி லிழுகுமல மழியும்வகை
கழுவுமுரை கழுமலநகர்ப்
பழுதிலிறை யெழுதுமொழி தமிழ்விரகன்
வழிமொழிகள் மொழிதகையவே."

(சம்பந்தர், கூ. கூஎ-கஉ.)

இறைவன் நாக்கும், மூக்கும், வாயும், நோக்கும் முதலிய உறுப்புக்களைக் கொண்டன்று மறைபாடியருள்வது. அவ்வுறுப்புக்களை இயல்பாகவே கொண்டுள்ள மயல்தீர் மெய்யடியார் தம் பொய்யில் திருவுள்ளத்து அருளுருவாய் நின்று மறை முதலெழுப்புவது. மறைமுதல் - மறைக்குக் காரணம். அதுவே 'நினைவோசை எனப்படும்'. பைசந்தி என்பதும் இதுவே. இதனையே 'சொற்பிரிவிலாத மறை' என்ப. இம்மறையினையே அவன் பாடியருள்வது. அவ்வுண்மை வருமாறு :

"சொற்பிரிவி லாதமறை பாடிநட மாடுவர்தொ லானையுரிவை
மற்புரிபு யத்தினிது மேவுவரெந் நாளும்வளர் வானவர்தொழத்
துற்பரிய நஞ்சமுத மாகமுன யின்றவரி யன்றதொகுசீர்
வெற்பரையன் மங்கையொரு பங்கர்நக ரென்பர்திரு வேதிகுடியே',

(சம்பந்தர், கூ. எக-உ.)

ஆரியர் தங்கள் மறையினை ஓர் இறைவன் பாடினனென்று ஒப்புக்கொள்வதில்லை. அவர்கள் தம் வேதம் தான்தோன்றி

என்பர். தான்தோன்றி-சுயம்பு. 'வேதங்கள் ஒருவராற் செய்யப் படாது கிலேபேறுடைமையானும்,' என்பது சிவஞானபோதச் செந்தமிழ்நூற் பேருரைக்கண் சிவஞானமுனிவரனர் பிறன் கோளாக எடுத்து மொழிவதால் இவ்வுண்மை விளங்கும்.

வேதம் எல்லாமொழிகளிலும் தனித்தனியுண்டு. அது போல் ஆரிய மொழியிலும் உண்டு. நம் அருமைச் செந்தமிழ் மொழியிலும் உண்டு. ஒவ்வொரு மொழியினரும் தத்தம் மொழிமறையினையே உயிர்போற் போற்றுகின்றனர். அதுபோல் ஆரியரும் போற்றுகின்றனர். ஆனல் நம்மவரிற் சிலர் அங்ஙனம் போற்றவில்லை. அதற்கு மாருக ஆரிய மறையே மறையெனவும் தமிழ்மறை வெறும் தோத்திரங்களெனவும் மொழிந்து மடி தற்றுப் போருக்கு முந்துகின்றனர். அந்தோ! இவர்கள் ஏன் தமிழராகப் பிறந்தோமென்று எண்ணுகின்றனர் போலும்! அவ் வாரியர் அமிழ்தினுமினிய தமிழ்மறையினைப் பேசுந்தமிழெனக் கூடக் கொள்வதில்லை, கற்பதில்லை, கேட்பதில்லை: காண்பும் நாணுகின்றனர். 'ஆரியமும் செந்தமிழும் ஆனன் கண்டாய்' என்பதும் இருமொழியும் வெவ்வேறென்பதனையே இனிதுணர்த் தும். அம்மட்டோ? 'ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்' என்பதும் அவ்விருவரும் இருவேறினமும் நாடும் மொழியும் வெவ்வேறு உடையவரென்பதனையே உணர்த்தும். அவ்விரு வர்க்கும் முழுமுதற் சிவபெருமான் ஒருவனே கடவுள் என்பது அதன் பொருள். அவை ஒன்றெனக் குழப்பித் தொன்றிய லழிக்கும் ஒன்றுச் செயலை உணர்த்தாதென்க. தமிழ்மறைச் சுவையினை யறியாத் தற்கொலிமாந்தரைத் திருஞானசம்பந்தப் பெருமானர் நீத்தகன்று நாமும் நீத்தகல நெறி காட்டினர் என்பது வரும் நம்பியாண்டார் நம்பி திருமொழியானும் உணர லாம். அது வருமாறு :

"அடுசினக்.....

கக. .....நீத்தது

அமிழ்ச்சுவை யேயறிந் தரனடி பரவுந்

உக. தமிழ்ச்சுவை யறியாத் தம்பங் களையே."

(கக. பிள்ளையார், திருமும்மணி-ச)

முனிவன் நூலுக்கு முதலாகிய காரணத்தையே அருள் புரிவன் என்பது பண்டைத்தமிழர் கொண்ட வாய்மைக் குறிக் கோளாகும். அது வருமாறு :

"வினையின் நீங்கி விளங்கிய அறிவின்

முனிவன் கண்டது முதல்நூல் ஆகும்."(தொல்.மரபு-கச)

'முதல் நூல் ஆகும்' என்பதை 'நூல் முதல்' ஆகும் என மாறி நூலுக்குக் காரணம் எனக்கொள்க. முதல் - காரணம்.

நிலையிலா ஆரிய மறைகளிலுள்ள ஐயங்களைப் போக்குவது நிலையான தமிழ்மறையேயாம். இவ்வுண்மை வருமாறு,

"ஒருபிறப்பு மெய்தாமை யுடையார் தம்மை
யுலகியல்பி னுபநயன முறைமை யாகும்
இருபிறப்பின்* நிலைமையினைச் சடங்கு காட்டி
எய்துவிக்கு மறைமுனிவ ரெதிரே நின்று
வருதிறத்தின் மறைநான்குந் தந்தோ மென்று
மந்திரங்கள் மொழிந்தவர்க்கு மதுர வாக்கால்
பொருவிறப்ப ஒதினர் புகலி வந்த
புண்ணியனர் எண்ணிறந்த புனித வேதம்
சுருதியா யிரமோதி யங்க மான
தொல்கலைகள் எடுத்தியம்புந் தோன்ற லாரைப்
பரிதியா யிரகோடி விரிந்தா லென்னப்
பரஞ்சோதி யருள்பெற்ற பான்மை மேன்மை
கருதியா தரவோடும் வியப்புற் றேத்துங்
கலைமறையோர் கவுணியனர் தம்மைக் கண்முன்
வருதியா னப்பொருளென் றிறைஞ்சித் தாமுன்
வல்லமறை கேட்டையம் தீர்ந்து வாழ்ந்தார்.
மந்திரங்க ளானவெலா மருளிச் செய்து
மற்றவற்றின் வைதிகநூற் சடங்கின் வந்த
சிந்தைமயக் குறுமையந் தெளிய வெல்லாம்
செழுமறையோர்க் கருளியவர் தெருளு மாற்றான்
முந்தைமுதன் மந்திரங்க ளெல்லாந் தோன்று
முதலாகு முதல்வனு ரெழுத்தஞ் சென்பார்
அந்தியினுள் மந்திரமஞ் செழுத்து மேயென்
றஞ்செழுத்தின் திருப்பதிகம் அருளிச் செய்தார்."
(கூ. சம்பந்தர், உசுசு-சு.)

"மந்திர நான்மறை யாகி வானவர்
சிந்தையுள் நின்றவர் தம்மை யாள்வன
செந்தழ லோம்பிய செம்மை வேதியர்க்
கந்தியுள் மந்திரம் அஞ்செ ழுத்துமே." (சம்பந்தர், கூ.உஉ-உ.)

மேலும்,

"தேவரெலாம் தொழச் சிவந்த செந்தாள் முக்கண்
செங்கரும்பே மொழிக்குமொழி தித்திப் பாக
மூவர்சொலுந் தமிழ்கேட்குந் திருச்செ விக்கே
மூடனேன் புலம்பியசொல் முற்று மோதான்,"
(தாயுமானவர், கல்லாலின்-கசு)

*மறியொரு. சள. எஉ-சு.

"நல்லிசை ஞானசம் பந்தனு நாவினுக்
கரசரும் பாடிய நற்றமிழ் மாலை
சொல்லிய வேசொல்லி யேத்துகப் பாணைத்
தொண்ட னேனறி யாமை யறிந்து
கல்லி யன்மனத் தைக்கசி வித்துக்
கழலடி காட்டியென் கனிகனி யறுக்கும்
வல்லியல் வானவர் வணங்கதின் ருணை
வலிவ லந்தனில் வந்துகண்டேனே."(ஆருரர், எ.கூ.எ.இ.)

என இருபெரும் முதல்வர்களால் பாடப்பெற்ற திருப்பாட்டுக்களும் திருமுறையின் ஏற்றத்தினைத் தெளிவிப்பதாகும் காண்க.

இத்துணைச் சிறந்த செந்தமிழ்த் திருமறையினை நாள் வழிபாடு சிறப்புவழிபாடு முதலியவற்றின்கண் நாளும் ஓதி நன்மை எய்தும் பொருட்டுப் பின்னுள்ளோர் தில்லைத் திருமறையோர்பால் ஒப்புவித்துப் பெருநம்பிக்கை பூண்டிருந்தனர். அந்நம்பிக்கைக்கு முற்றுமாறுக அம் மறையோர், அத் தமிழ்மறையினை அழித்தொழிக்கக் கரவுள்ளங் கொண்டனர். ஒருவர்க்கும் புலனாகாப் பாழ்ங்குழியில் புதைத்து மறைத்தனர். அரும்பாடுபட்டு அபய குலசேகரமன்னன் திருவருள் துணையால், அந்தணநம்பிவழித் தமிழ்மறை இருக்கும் இடம் ஓர்ந்தனன். அந்நம்பியுடன் சென்று வினவினன். அஞ்சாநெஞ்சம் படைத்த அவ்வஞ்சகர் மன்னனையும் மயலாக்கி ஏமாற்றப் பெரும்புனைவொன்று சித்திரிப்பாராயினர். அது வருமாறு :

அம் மூவர் கையடையாளமிட்டுப் பூட்டப்பட்டிருக்கிறது. அம் மூவர் வந்தால் அவ் வறை திறக்குமென்று மொழிந்தனர். அவ்வுண்மை வருமாறு :

"அத்தகையோர் தமிழ்வைத்த மூவர் வந்தால்
அறைதிறக்கு மெனவுரைக்க அரசன் ருனும்
மெய்த்தகுசீர் அம்பலவர்க் குற்ற செல்வ
விழாவெடுத்து விளம்புதமிழ் மூவர் தம்மை
உய்த்தணிவீ தியினுலா வருவித் தும்பர்
நாயகன்றன் கோயில்வல மாக்கி யுள்ளே
சித்தமெலா முருக்குதமி ழிருக்கை சேரச்
சேர்த்தியவர் சேர்ந்ததெனச் செப்பி னின்ருன்."
(திருமுறைகண்ட புராணம், கக.)

தமிழ்மறைப் பெருமையுணர்ந்த தமிழ்மன்னன் வேறென் செய்வன்? தேவாரத்தைச் சிறை செய்த மறையோர் சூழ்ச்சி நிறைவுறுது குறைவுற்றுச் சிதைந்து தேய்வதாயிற்று. தேவாரங்கள் வெளியெடுத்துத் திருவருளால் போற்றப்பட்டன.

நம்மவர்களுள் சிலர்க்கு ஏற்பட்டிருந்த ஆரியமறை மையலை அகற்றக் கொற்றவன்குடி உமாபதி சிவனார் பாடியருளிய திருப்பாட்டு வருமாறு :

"அருமறையைச் சிச்சிவிபண் டருந்தத் தேடும்
அதுபோலன் றிதுவென்று முளதா முண்மைப்
பரபதமுந் தற்பரமும் பரனே யன்றிப்
பலரில்லை யென்றெழுதும் பனுவல் பாரின்
எரியினிடை வேவாதாற் றெதிரே யோடும்
என்புக்கும் உயிர்கொடுக்கும் இடுநஞ் சாற்றும்
கரியைவளீ விக்குங்கன் மிதக்கப் பண்ணும்
கராமதலை கரையிலுறக் காற்றுங் காணே."

(திருமுறைகண்ட புராணம், கள.)

இத் திருப்பாட்டின்கண் மூவர் அருளிச் செய்த வியத்தகு செயல்கள் பலவற்றுள்ளும் ஏழு திருச்செயல்களே குறிக்கப் பெற்றுள்ளன. அவை மூவர் தேவாரம் ஏழு திருமுறைகள் என்னும் திருக்குறிப்புணர்த்தற்கென்க. அவை முறையே ஆளுடைய பிள்ளையார்க்கு மூன்று, ஆளுடைய அரசர்க்கு மூன்று, ஆளுடைய நம்பிகட்கு ஒன்று எனக்கொள்க.

செந்தமிழ்த் திருநான்மறை நாட்டுவழக்கினும், வீட்டு வழக்கினும், நன்னெறி காட்டுந் திருக்கோவில் வழிபாட்டு வழக்கினும் முட்டின்றி நிகழ்தல்வேண்டும். அங்ஙனம் நிகழும் வாய்ப்புப்பெறுத நாட்டுக்கோ திருக்கோவிலுக்கோ 'செந்தமிழர் தெய்வமறைநாவர்' செல்லுவதால் எப்பயனும் இன்றென நம் ஆளுடைய பிள்ளையார் செல்லாது தமிழ்நாட்டிலிருந்தே தொழுது பாடி நம்மனோர்க்கு வழிகாட்டியருளினர். அவர்கள் காலத்து அவ்வாறு இருந்தது. நம் காலத்தோ தமிழ்நாட்டிலேயே அம்மூவிடத்தும் தமிழ் வழங்காநிலை ஏற்பட்டுவிட்டது. இதற்கொரு தீர்வு இறைவனே அருளுதல் வேண்டும். இவ்வுண்மை புலப்படுத்தும் திருப்பாட்டு வருமாறு :

"அங்கண்வட திசைமேலும் குடக்கின் மேலும்
அருந்தமிழின் வழக்கங்கு நிகழா தாகத்
திங்கள்புனை முடியார்தந் தானந் தோறும்
சென்றுதமிழ் இசைபாடும் செய்கை போல
மங்கையுடன் வானவர்கள் போற்றி சைப்ப
வீற்றிருந்தார் வடகயிலை வணங்கிப் பாடிச்
செங்கமல மலர்வாவித் திருக்கே தாரந்
தொழுதிருப் பதிகவிசை திருந்தப் பாடி."

(கூ. சம்பந்தர், கoஉ.)

இஞ்ஞான்று நிகழ்வதுபோன்று ஆஞ்டைய பிள்ளையார் காலத்துத் தமிழ்நாட்டுத் திருக்கோவில்களில் வழிபாடஞ்தும் ஆரியமொழியிலேயே நடந்திருக்குமாஞல் அவ்வாரிய மொழியில் நடக்கும் ஏஞை நாட்டகத்துப் பிள்ளையார் செல்லத் திருவுள்ளங் கொள்ளாமைக்குக் காரணமின்று. எனவே தமிழ்நாட்டில் திருக் கோவில்களில் வழிபாடஞைத்தும் தமிழ்மொழியிஞலேயே நடந் துள்ளன என்பது தேற்றமாம். ஒரு சில ஆரியர் வருவாராஞல் அவர்கள் அவர்தம் ஆரியமொழியில் வழிபட வாய்ப்பளித் துள்ளனர் தமிழகத்தார் என்பதுதான் துணிபு.

அவ்வுண்மை, திருப்பழனி வழிபாடு அவ்வூர்த் தமிழ்ப் பண்டாரப் பழங்குடி மக்களால் தமிழிலேயே தொன்றுதொட்டு நடத்தப்பட்டு வந்ததென்பதும், அவ்வழிபாடு ஏறத்தாழ முந்நூறு ஆண்டுகளுக்குமுன் சூழ்ச்சியால் பறிக்கப்பட்டுப் பேர் கொண்ட பார்ப்பார் வகையாள் கைக்கு மாற்றப்பட்டுவிட்ட தென்பதும் வரலாற்று உண்மை. அவ்வுண்மையினை மெய்ப் பிக்கும் அறிகுறியாக இன்றும் அப் பழங்குடி மக்களே திரு முழுக்குக்கு நாடொறும் திருமஞ்சனம் கொண்டுவந்து நல்கு கின்றனர். அந் நீர் ஆட்டப்படுகின்றது. இங்ஙிகழ்ச்சி பேர் கொண்ட பார்ப்பார் வகையாள் வழிபாடு செய்யும் எத்திருக் கோவில்களிலும் இல்லாத நிகழ்ச்சியாகும். இதுபோலவே திருத் தணிகை, திருப்பதி முதலிய பல திருக்கோவில்களில் பழங்குடி மக்களே பண்டு தண்டமிழால் வழிபட்டுவந்து இடையே மாற்றப் பட்டிருப்பதாகவுங் கூறுகின்றனர்.

ஆரிய மறையினும் தமிழ்மறையே சீரும் சிறப்பும் வாய்ந்துளதென்பது அண்மையில் மறைந்த வள்ளலாரடிகளின் உள்ளம் நிறைந்த உண்மை மாண்புரையாகும். அது வருமாறு :

> "இலேக்குளநீ ரழைத்ததனில் இடங்கருற வழைத்ததன்வாய்த் தலேக்குதலே மதலேயுயிர் தழைப்பவழைத் தருளியநின் கலேக்கும்வட கலேயின்முதற் கலேக்குமுறு கணக்குயர்பொன் மலேக்குமணு நிலேக்குமுரு வன்றெண்டப் பெருந்தகையே."
>
> (ஆளுடைய நம்பிகள் அருண்மாலே, க.)

ஆரிய நூலேச் சீரிய தமிழில் புனேபெருங்காப்பியமாக யாவரும் நினேவுற யாத்த கம்பரும் ஆரிய மறை மயக்கந் தருவ தென்றும், அம்மொழியும் உலக வழக்கிறந்ததென்றும், கன்னிச் செந்தமிழ் மன்னிய முக்கட் செல்வனய சிவபெருமாஞல் அருளிச் செய்யப்பட்டதென்றும், அஃது எக்காலத்தும் இரு வகை வழக்கிலும் பொன்றுது நின்று நிலவுவதென்றும், தென்றமிழ்நாட்டுமொழி செந்தமிழென்றும், ஆரிய மறையினும்

உயர்ந்த நேரியதென்றும், தென்னாட்டுக் கடவுள் சிவபெருமா னென்றும் உண்மையை ஒருசிறிதும் ஒழியாது உரைப்பாரா யினர். அவ்வுண்மை வருமாறு :

'உழக்குமறை நாலினுமு யர்ந்துலகம் ஓதும்
வழக்கினும கிக்கவியி னினுமரபின் நாடி
நிழற்பொலிக ணிச்சிமணி நெற்றியுமிழ் செங்கண்
தழற்புரைசு டர்க்கடவுள் தந்ததமிழ் தந்தான்.'

(கம்பர், அகத்தியப்படலம், ச க.)

இற்றைக்கு இருநூற்றைம்பது ஆண்டுகளுக்குமுன் விளங்கிய சிவப்பிரகாசவடிகள் ஆரிய வேதம் புரியாத மொழியிலிருப்ப தாலும், பொய்ம்மைத் தேவரை மெய்ம்மைத் தேவரென மயக்கு விப்பது உண்மையாலும் பெருமக்கள் மனத்தையொட்டி உருக்குந் தன்மைய தன்றெனவும், திருவாசகச் செழுந்தமிழ்த் திருமாமறை இருவகை வழக்கிலும் மக்களுக்குப் புரியும் கன்னிப் புண்ணியத் தமிழிலிருப்பதாலும், விழுமிய முழுமுதற் சிவபெரு மான் ஒருவனே மெய்ப்பொருட் கடவுளென விளம்புவது உண்மையாலும் மக்கள் மனத்தையொட்டிக் கனிவித்து உருக்கி அன்பராக்கும் ஒண்மையதெனவும் உரைத்தருளினர். அது வருமாறு :

"விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை மூக்கட்
காரண னுரையெனும் ஆரண மொழியோ
ஆதிசீர் பரவும் வாதவூ ரண்ணல்
மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனே
யாதோ சிறந்த தென்குவீ ராயின்
வேத மோதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சநெக் குருகி நிற்பவர்க் காண்கிலேம்
திருவா சகமிங் கொருகா லோதிற்
கருங்கன் மனமுங் கரைந்துகக் கண்கள்
தொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
அன்ப ராகுந ரன்றி
மன்பதை யுலகின் மற்றைய ரிலரே."

(நால்வர் நான்மணிமாலை, ச.)

மருந்து உண்டால் மட்டும் நோய் நீங்கும். கண்டதால் கேட்டதால் நோய் நீங்காது. அதுபோல் மறையும் சொற் பொருள் உணர்ந்து துய்ப்பார்க்கே அன்பின்புகள் உண்டாகும். பொருளுணராதார்பால் தெருளுணர்வுண்டாகாது. தெருள் தோன்றுமையால் மருளும் இருளும் மாயா. இவை மாயாவாகவே அன்பின்புகள் உண்டாகா. இதனை வரும்வெண்பாவால் உணர்க.

"வேண்டுமருந் துண்டார்பால் மெய்நோய்கள் நீங்குமால்
நீண்டகண் கேள்வியால் நீங்காவாம்—பூண்டமொழிச்
சொற்பொருள்கள் ஓர்ந்தார்பால் தோயுமால் தோயாவாம்
பற்பலர்பால் அன்பின்பப் பண்பு."

தொன்மைத் தமிழின் நன்மையோர்ந்து 'வாயிருந் தமிழே படித்து,' அதற்கு ஆளுறும் சீரியோரை இவ்வாரிய மயலினர் புறக்கணித்து ஒதுக்கிப் புறம்பழிப்பதும் செய்வர். அவ்வுண்மை வருமாறு : இருபொழி வல்லராய், தெருள் உணர்வு சேர்ந்தாராய்ச் செந்தமிழ்க்கும் சிவனெறிக்கும் நீங்கா அடிமையராய், ஓங்கிய ஒழுக்க விழுமியராய், ஒப்பில் ஒருவராய்ச், செப்புந் தில்லைவாழ் அந்தணராய்த் திகழ்ந்தவர் உமாபதி சிவநாயனார். அவர் இருவகை வழக்கிலும் பொருவற என்றும் பொன்றுது நின்று நிலவும் தெய்வத்தன்மை வாய்ந்த நம் தமிழின் உண்மை மேன்மையை உணர்ந்து 'சிவப்பிரகாசம்' முதலிய அளவிறந்த செந்தமிழாகம நூற்கீழ்த் திருவருளால் ஆக்கி உணர்த்தினமையால் அவ்வந்தணர் கூட்டம் அவரைக் காணவும் ஒண்ணுதெனப் புறக்கணித்தது. அம்பலவாணன் அவரைச் சிறக்கணித்துத் தமிழின் மேன்மையைத் தானும் வெளிப்படுத்துவான் திருவுள்ளங் கொண்டனன். ஒரு திரு விழாக் காலத்தில் உமாபதிசிவநாயனரை விலக்கிக் கொடி யேற்றுவிக்கத் துவங்கினர். எத்துணை முயன்று பலர் கூடி வலிந்திழுத்தும் அந்தோ கொடி ஏறுமாறில்லை. பெருமக்களனை வர்களும் ஒருமிக்க வருந்தினர். அவர் வருத்தங்கண்டிரங்கி அம்பலவாணர் அருள்புரிந்து "யாம் உமாபதி சிவநாயனரின் விழைதகு பேழையகத்து உறைகின்றும். அவர் வந்தால் கொடி யேறும்," என்றருளினர். அவ்வருள் தலைமேற்கொண்டு ஊரெ லாம் சென்று நாயனரைச் சிறப்புடன் அழைத்துக்கொண்டு வந்தது. அந் நாயனர் திருப்பேழையினை விழைவுடன் திறந்து செந்தமிழ்த் திருக்கொடிப் பாட்டு நான்கினையும் பாடியருளினர். திருக்கொடியும் தானே இவர்ந்து நிலைநின்றது. அனைவரும் என்னே தமிழ்க்கிளவி மந்திரத்தின் தனிமாண்பென இனிது மொழிந்து அகம்புறம் ஒத்து அளவில் மகிழ்வு மிகவும் பூண்டனர். அத் திருக்கொடிப்பாட்டுள் ஒன்று வருமாறு :

"அஞ்செழுத்தும் எட்டெழுத்தும் ஆறெழுத்தும் நாலெழுத்தும்
பிஞ்செழுத்தும் மேலைப் பெருவெழுத்தும்—நெஞ்சழுத்திப்
பேசு மெழுத்துடனே பேசா வெழுத்தினையும்
கூசாமற் காட்டக் கொடி." (கொடிக்கவி, ச.)

அந்தோ இங்ஙகழ்வு நிகழ்ந்து ஏறத்தாழ எழுநூறியாண்டு களாயின. எத்தனை திருக்கோவில்களில் இத் திருக்கொடிப்

பாட்டுப் பாடிக் கொடி ஏற்றுகின்றனர்? எத்தனை திருக்கோவி லவர்களுக்கு இங்ஙகழ்வு தெரியும்? எத்தனை திருமடத்தார் இதனைத் தெரியப்படுத்தியுள்ளனர்? பெருமக்களுக்கு இப் பேருண்மையினைத் தெரியப்படுத்துங் கடமை மேற்கூறியவர் களைச் சார்ந்ததல்லவா? என் செய்வது, தமிழ்த்தாயின் தவக் குறைவே மேற்குறித்த தவப்பெரியோர் வாளா மறந்தமைக்கு வாயிலாகும். அம்மட்டோ! அம்பலவாணர் தமக்குத் தமிழின் மாட்டுள்ள காதலைப் புலப்படுத்துவான் வேண்டிப் பெத்தான் சாம்பானுக்கு வீடுபேறளித்தற் பொருட்டுத் தமிழ்த் திருப் பாட்டு எழுதியருளினர். அத் திருப்பாட்டு வருமாறு :

"அடியார்க் கெளியன்சிற் றம்பலவன் கொற்றங்
குடியார்க் கெழுதிய கைச்சீட்டுப்—படியின்மிசைப்
பெத்தானைச் சாம்பானைப் பேதமறத் தீக்கைசெய்து
முத்தி கொடுக்க முறை."

மேலும் திருவாசகம், திருக்கோவையாரென்னும் செந் தமிழ்த் திருமறைகளை அவ்வம்பலவாணர் எழுதியமையும் மேலதனை வலியுறுத்தும்.

அம்மட்டோ? பின்னொரு ஞான்று திருத்தில்லைத் திருத் தேர் எவ்வளவு முயன்றும் நகரவில்லை. சேந்தனார் பாடியருளிய திருப்பல்லாண்டுத் திருப்பாட்டுப் பதின்மூன்றினையும் அத் திருத்தேர் தானாகவே நகர்ந்து ஊர்சுற்றிவந்து நிலைநின்றதென்ப. அவற்றுள் ஒரு திருப்பாட்டு வருமாறு :

"சேலுங் கயலுந் திளைக்குங் கண்ணூர் இளங்
கொங்கையிற் செங்குங்குமம்
போலும் பொடியணி மார்பிலங் குமென்று
புண்ணியர் போற்றிசைப்ப
மாலும் அயனும் அறியா நெறிதந்து
வந்தென் மனத்தகத்தே
பாலும் அமுதமும் ஒத்துநின் றானுக்கே
பல்லாண்டு கூறுதுமே."
(கூ. சேந்தனார், அ.)

திருக்கோவில் வழிபாட்டில் திருமுறைத் திருத்தமிழே சிறந்த பொருத்தமென்பதற்கு மேற்கூறிப் போந்த திருமறைக் காட்டின் திருக்கதவந் திறந்தடைத்ததும், திருத்தில்லைக்கண் திருக்கொடி ஏறியதும், திருத்தேர் ஊர்சூழ் வலம்வந்து நிலை நின்றதும் திருநெறிய தமிழே எனின், ஏனை வழிபாட்டினுக்கா தமிழ் ஆகாதென்று சாற்றுவது? இனியேனும் நம்மவர் கண் விழித்து அனைவரையும் நன்னெறிச் செலுத்தித் தாமும் செல்வா ராக. சிவபெருமான் திருவருளும் துணைபுரியுமாக.

## தமிழ் வேதாகமம்

சிவபெருமான் திருவருளால் திருவாவடுதுறைக்கண் திருவரசின்கீழ் சிவயோகத்து அமர்ந்து 'அந்திமதிபுனை அரனடி நாள்தொறும், சிந்தை செய்து' நம்பிரான் திருமூலநாயனார் செப்பியருளிய செந்தமிழாகமம் திருமந்திரமாகும். அந்நூலைப் பற்றியும், அந்நூலருளிய ஆசிரியரைப் பற்றியும் விரிந்த ஆராய்ச்சியுரை யொன்று துடிசைகிழார், திருமந்திரமணி அ. சிதம்பரனாரவர்கள் கழக முதற்பதிப்புக்கண் முகவுரையாக அமைத்துள்ளார். அதனை அவ்வாறே இப் பதிப்பின்கண்ணும் அமைத்துள்ளோம். அதன் ஒழிபாக ஈண்டும் சில பல கூறுதும். திருமூலநாயனார் என்னும் திருப்பெயர்க்குக் காரணம் சாத்தனூர் ஆமேய்க்கும் இடையன் மூலன் உடம்பில் ஆத்துயர் நீங்கற் பொருட்டுத் தம் உயிரைப் புகுத்தி எழுந்தமையால் நேர்ந்தது என்பது எல்லார்க்கும் ஒப்ப முடிந்ததான்றாகும். அதற்கு அகச்சான்றாக எடுத்துக் காட்டும் திருமந்திரம்,

> "நந்தி அருளாலே மூலனை நாடிப்பின்
> நந்தி அருளாலே சதாசிவ னுயினேன்
> நந்தி அருளால்மெய்ஞ் ஞானத்துள் நண்ணினேன்
> நந்தி அருளாலே நானிருந் தேனே"[1]

என்பதே. சிலர் இதன்கண் காணப்படும் 'மூலன்' என்பது சிவபெருமானையும் குறிக்கலாம் எனக் கூறுகின்றனர். ஒரு பாட்டுக்குப் பொருள் கொள்ளுங்கால் பற்பல சூழ்வுகளையும் கருத்துட்கொண்டே பொருள் கொள்ளுதல் வேண்டும். இங்கு 'நந்தியருளாலே' என்னும் ஏதுவால் 'மூலன்' என்னும் சொல் நந்தியல்லாத பிறன் என்றே பொருள்படும். மேலும் பின் 'சதாசிவனுயினேன்' என்பதனால் தமிழாகமம் செப்பும் தூய நிலையினை அருளால் அடைந்தார் என்பதாம். இந்நிலையே சதாசிவக்கடவுள் ஆகமம் திருவாய் மலர்ந்தருளினரென்பதனை நினைவூட்டுவதாகும். மேலும் 'மெய்ஞ்ஞானத்துள் நண்ணினேன்' என்பதனால் செந்தமிழாகமம் திருவாய் மலர்ந்தருளும் செவ்வி வாய்க்கப்பெற்றனர் என்பதாகும். 'நானிருந்தேன்' என்பதனால் தனித் தமிழாகமமாகிய இத் திருமந்திர மாலையைப் பாடியருளிப் பல்லாண்டு நல்லாராய் வீற்றிருந்தருளினரென்பதாம்.

நம்பிரான்மூலர்க்குத் தொன்மைத் திருப்பெயர் 'சுந்தரன்' என்பதாகும். அது 'வந்த மடமேழு' என்னும் திருப்பாட்டில் 'சுந்தரன் ஆகமச் சொன்மொழிந் தானே' என ஓதப்படுதலால்

---

1. திருமந்திரம், தற்சிறப்புப்பாயிரம், திருமூலர் தம் வரலாறு கூறுதல், உ.

உணரலாம். 'நாதன்' என்னும் திருப்பெயர் நந்தி திருவருளால் பெற்றதாகும். அது 'நந்தியருளாலே நாதனும் பேர்பெற்றேம்' என்னும் திருப்பாட்டானுணரலாம்.

இந்நாயனார் தாம் பாடியருளிய திருமந்திர மாலையை ஒன்பது தந்திரங்களாக வகுத்துள்ளனர். நந்தியெம்பெருமான் பெற்ற ஆகமம் ஒன்பது என்பது 'சிவமாம் பரத்தினில்' (72) என்னும் திருப்பாட்டான் உணர்கின்றோம். அதனால் அவ்வொன்பது ஆகமங்களின் சாரம் என ஆன்றோர் அறைகின்றனர். எனினும் அகச்சான்றுகச் சிந்தை செய் தாகமஞ் செப்பலுற் றேனே' (135) என்று காணப்படுகின்றது. அதுவும் அன்றிச் சேக்கிழாரடிகள் 'ஆகமப் பொருளைத் தமிழ் வகுப்ப' என அருளுவதும் காணப்படுகின்றது. இவ்விரண்டாலும் நாயனார் புதிது வகுத்தருளினர் என்பதே துணிபாகும். அத் திருப்பாட்டு வருமாறு :

> "தண்ணிலவார் சடையார்தாந் தந்தவா கமப்பொருளை
> மண்ணின்மிசைத் திருமூலர் வாக்கினற் றமிழ்வகுப்பக்
> கண்ணியவத் திருவருளால் அவ்வுடலிற் கரப்பிக்க
> எண்ணிறைந்த வுணர்வுடையார் ஈசரரு ளெனவுணர்ந்தார்."
>
> (கஉ. திருமூலர், உகூ.)

நாயனார் அருளிய தமிழாகமமாகிய திருமந்திரம் தமிழகத்தார் கற்று நாட்டிலும், வீட்டிலும், திருக்கோவில் வழிபாட்டிலும் நாளும் முட்டின்றி நடைபெறவேண்டும் என்பதே சிவபெருமான் திருவுள்ளக் குறிப்பாகும். அத் திருவுள்ளக் குறிப்பினுக்குப் புறம்பாகத் தமிழகம் சென்றுகொண்டிருக்கின்றது. திருவுள்ளக் குறிப்பின்வழி ஒழுகும் சீரிய நாள் என்று வருமோ என்று தான் ஏங்கவேண்டிய திருக்கின்றது. மேலும் தமிழில் வேதாகமங்கள் கிடையா எனச் சிலர் அயன்மொழி மயலால் மயங்குகின்றனர்; மயக்குகின்றனர். அவர் மயக்கு இனியேனும் ஒழிவதாக. வரும் நம்பியாண்டார் நம்பி திருப்பாட்டு அவர்தம் மயலை அகற்றும் நயமுடையதாகும். அது வருமாறு :

> "குடிமன்னு சாத்தனூர்க் கோக்குல மேய்ப்போன் குரம்பைபுக்கு
> முடிமன்னு கூனற் பிறையாளன் றன்னை முழுத்தமிழின்
> படிமன்னு வேதத்தின் சொற்படி யேபர விட்டெனுச்சி
> அடிமன்ன வைத்த பிரான்மூல னுகின்ற வங்கணனே."
>
> (கக. திருத்தொண்டர் திருவந்தாதி, கூசு:)

இதன்கண் 'முழுத்தமிழின்' படிமன்னு வேதத்தின் சொற்படியே' என்பதனை 'இன்படிமன்னு முத்தமிழ் வேதத்தின் சொற்படியே' எனக் கொண்டுகூட்டிப் பொருள் காணுதல் வேண்டும். அங்ஙனம் காணுங்கால் இனிய உலகத்தின்கண் நிலைபெற்று விளங்காநின்ற குறைபாடு ஏதும் இல்லாத முழுமை

யமைந்த தமிழ்வேதத்தின் சொற்படியே என்றுகும். இனிய வுலகம் என்பது தென்னாடாகும். அது சிவம் பெருக்கும் திரு நாடு. அதனால் இனியவுலகம். இவ்வுண்மை 'மர்தவம் செய் தென்திசை' என்னும் திருமுறைத் திருப்பாட்டான் உணரலாம்.

இத் திருமந்திரம் பத்தாம் திருமுறையாகப் பண்டுள்ளோர் தொகுத்தமைக்குக் காரணம் சிவஞானபோதச் செழுந்தமிழின் பத்தாம் நூற்பாக்குறிப்பாகு மென்ப. அந் நூற்பாவின் குறிப்பு இறைபணிநிற்றல். இறைபணிநிற்பார் சிவபெருமானின் சிறந்த அடியாராவர். வேறொரு வகையாகக் கருதுங்கால் சிவபெரு மானின் எண்பெருங் குணங்களும் முறையே எட்டுத் திருமுறை களாகவும், ஒன்பதாவதாகக் காணப்படும் திருக்கோவையார் எட்டுக் குணங்களையுமுடைய குணிப்பொருளாம் சிவபெருமானை யும் கொண்டு, அச் சிவபெருமானின் ஒப்பிலா வழிபாட்டினையும் அவ்வழிபாட்டினுக்குரிய மக்கள் தம் உலகியல் ஒழுகலாற்றினை யும் ஒருங்கு குறிக்கும் ஒருபெரும் தமிழ்மறையாம் திருமந்திரம் பத்தாவதாக இயல்பாகவே அமைந்துள்ளதென்றலும் ஒன்று.

செந்தமிழ்ச் சிவமூலமந்திரம் திருவைந்தெழுத்தென்ப. அது 'சிவயசிவ' என்பதாம். அதுபோல் சிவனைறிக்குரவரும் ஐவராவர். இதுகாறும் நால்வரெனவே வழங்கிவந்த நம்மனோர்க்கு இது வியப்பினைத் தருமாயினும் உண்மையதுவாகும். ஐந்தாமவர் நம்பிரான் மூலராவர். இவ்வைம் பெருங்குரவரும் முறையே ஞானசம்பந்தர், நாவுக்கரசர், நம்பியாரூரர், மணிமொழியார், நம்பிரான்மூலர் எனப்பெறுவர். இத் திருப்பெயர்கள் ஐந்தும் தனித்தனியே ஐவைந்து எழுத்தாலமைந்தமை நோக்குக. இவ்வைவரும் முறையே சிகர, வகர, யகர, சிகர, வகரங்களின் சிறப்புப் பொருளுடன் பெரிதொத்துத் திகழ்வர். ஞான சம்பந்தர் அருளர் மகளர் அருட்பெருகு தனிக்கடல் ஆதலினால் சிகரத்தை யொப்பர். நாவுக்கரசர் அன்பு செறிகடல்; ஈன்றாள் தன் திருவருள் ஆதலினால் வகரத்தை யொப்பர்; நம்பியாரூரர் மையல் மானுடரினின்று தடுத்தாட்கொள்ளப்பட்டவர் ஆதலினால் யகரத்தையொப்பர். மணிமொழியார் காதன்மையர் திருக்கோவை யருளினர் ஆதலினால் சிகரத்தை யொப்பர். நம்பிரான்மூலர், திரு வருளால் மூலன் உடல்புக்குத் தமிழ்வேதாகமங்கள் அருளினர் அதனால் வகரத்தையொப்பர். வேறோராற்றால் விளம்பின் மூவர் தமிழ் முறையே சிறப்பாக அறம்பொருளின்பங்களும், முனி மொழித் திருவாசகம் வீடும், திருக்கோவையார் பேறும் ஒரு புடையொப்பாகக் குறிப்பன என்றலும் ஆம். ஆகவே, நம்பிரான் மூலர் சொல் இவ்வைந்தினையும் விளக்கும் அருங்குறிப்பின தாகும்.

## தந்திரத் தனிக் குறிப்பு

திருமந்திர மாலையின்கண் காணப்படும் ஒன்பது தந்திரங்களுள் முதல் நான்கு தந்திரங்களும் முறையே அறம், பொருள், இன்பம், வீடென்னும் நான்கினையும் ஒருபுடையொப்பன வெனலாம். அதனால் அவை வேதமாகும். ஐந்து முதல் ஒன்ப தீருகவுள்ளன வைந்தும் முறையே பேறு, பேற்றுவழி, வழிபாடு, வழிபாட்டுறுதி, வாழ்வு என்னும் ஐந்தினையும் ஒருபுடை யொப்பன வெனலாம். அதனால் அவை ஐந்தெழுத்தின் விரியாம் ஆகமமாகும். இவற்றை வரும் வெண்பாவால் நினைவு கூர்க :

செந்தமிழின் வைப்பாம் திருமூலர் மந்திரநால்
மூந்துமறை ஐந்தெழுத்தின் முற்றுமுறை—தந்ததமிழ்
ஆகமமாம் பேறுவழி அவ்வழிபா டாமுறுதி
போகம் சிவயசிவ போற்று.

மறை - வேதம். முறை - ஆகமம். ஐந்தெழுத்தின் முற்று முறை - ஐந்தெழுத்தின் குறிக்கோளை விளக்குவனவே ஆகமம்.

### முதல் தந்திரம்

முதல் தந்திரம் நூற்றறுபத்தாறு திருப்பாட்டுக்களை யுடையது. உபதேச முதல் கள்ளுண்ணுமை ஈருகப் பதினேழு பிரிவுகளைக் கொண்டது. இஃது அறத்தின் இயல்பையுடையது. அறத்தின் அடிப்படை மூப்பொருளுண்மை கைக்கொள்வது. அது 'ப்திபசு' எனத் தொடங்கும் நூற்றைம்பத்தொன்பதாம் திருப்பாட்டான் அறியலாம். அவ்வுண்மைக்கு அரணுவது நிலையாமையுணர்வு. இஃது யாக்கை நிலையாமை, செல்வ நிலை யாமம், இளமை நிலையாமை, உயிர் நிலையாமை என்னும் நான்கு தலைப்புக்களால் விளக்கியருளினர். ஒருபுடையொப்பாக இந் நான்கு நிலையாமையினையும் உணர்ந்தவர் முறையே நன்னெறி யின் நான்மையினையும் மேற்கொள்வர் எனலாம். அவ்வுணர் வினர் யாண்டும் மேற்கொள்ளும் ஒழுக்கம் கொல்லாமை, புலான் மறுத்தல், பிறன்மனை நயவாமை முதலியன. இம்மூன்றும் முறையே காமம், வெகுளி, மயக்கம் என்னும் மூக்குற்றத்தின் காமமுங் கெடுத்தார்மாட்டே நிலவுவன. கெடாதார் மாட்டுப் பெண்வழிச்சேறல் நிகழும். மகளிர் இழிவு - பெண்வழிச்சேறல். பெண்வழிச்செல்வார்மாட்டுப் பேய்போற் பற்றும் நல்குரவு. நல்குரவு - அறிவும் ஆக்கமும் செறியாமை. அவை செறிந்தார் மாட்டே அன்புடைமை யுண்டாம். ஆக்கம் - ஈண்டு ஊக்கம். ஆருயிர்க்கட்கு அன்பு செய்வாரை ஈசன் அறிவன்.[1] சிவனறியு மாறு செந்நெறியினெழுகத் துணைபுரியுங் கல்வியே சிவனிறை

1. ஈசனுக். சிவஞானசித்தியார், சூ. உ - க.

கல்வி.[1] கல்விப் பயனே கேள்வி கேட்டமைதல். சிவனிறை கல்வி கேளாது ஏனைய கல்வியுடையரேனும் அவர் கல்லாதவரே யாவர். இவரே உலகத்தோடொட்டவொழுகல் கல்லாதவராவர். சிவனிறை கல்வியர் செந்நெறியொழுகும் நடுவுநிலைமையராவர். ஈண்டு நடுவுநிலைமை ஐந்தெழுத்தின் நடுவோர்ந்து அடிமையாதல். அடியார் திருவடிக் களிப்பில் மூழ்குவராதலின் உலகியற் கள்ளுண்ணார். உலகியற்கள்ளுண்ணார் என்பதை 'சத்தியை' (319) எனத் துவங்கும் திருப்பாட்டானுணர்க. சிவனடித்தேதறல் உண்பர் என்பதனை 'சித்தம்' (312) எனத் தொடங்கும் திருப் பாட்டானுணர்க. ஒவ்வொன்றனையும் விரித்து விளக்குவதாயின் இது மிக விரியும். இதனைத் தொடர்ந்து திருமந்திர ஆராய்ச்சி யென்னும் தனிநூல் வாயிலாக அவையனைத்தும் விளக்கப் பெறும். நம்பிரான்மூலர் அருளிய நிலையாமை கல்வி கேள்வி முதலியன இன்னும் விரிவாகத் திருக்குறளில் காண்கின்றோம். அதனால் இந்நூல் திருக்குறளுக்கும் ஒருவேளை முந்தியதாகலாம் என எண்ணுவதற்கும் இடனுகின்றது. சித்தர் யாப்புக்கள் மிகப்பெரும் தொன்மைத் தமிழர் யாப்பாகலாம் எனக் கூறு வாருமுளர். இங்கிலையில் முதல்தந்திரம் அறத்திறம் என அமைவுறுவோமாக.

இரண்டாம் தந்திரம்

இஃது இருநூற்றெட்டுத் திருப்பாட்டுக்களை யுடையது. அகத்தியம் முதல், பெரியாரைத் துணைக்கோடலீறாக இருபத் தைந்து பிரிவுகளை யுடையது. கேடில் விழுச்செல்வம் கல்வி. நாடில் தலைச்செல்வம் கேள்வி. பாடில் துணைச் செல்வம் அருள். வீடில் முழுச்செல்வம் செம்பொருட்சிவன். அச் சிவனே மெய்ப் பொருள். அப்பொருள் தலைக்கூடுவதே பிறவிப் பெரும்பயன். அதற்குத் துணையாவதே ஏனைப் பொருள்கள் அனைத்தும். அச் சிவனுறையும் திருநாடு தென்னாடு. அதனாலேயே 'தென்னா டுடைய சிவனே போற்றி' எனச் செந்தமிழ்த் திருநான்மறை முடிவும் முழங்கியருளிற்று. அவன் திருவடியிணையினை எய்தும் நன்னெறி நன்மைப் பண்பாடு தொன்மைத் தமிழகப் பண்பாடு. அப் பண்பாட்டினை உடன்பழகிப் பெறுவதல்லாமல் நூற்கேள்வி யான் எய்துதல்இயலாது. இவ்வுண்மையினை 'நடுவுநில்லா'தெனத் தொடங்கும் (323) திருப்பாட்டின்கண் விரித்து விளக்கி யுள்ளாம். அப்பொருளுண்மை குறிப்பதே அகத்தியர் வரவு. வந்த அகத்தியர் பதிவலியில் வீரட்டம் எட்டின் உருவகக் கதை யினை உண்மை வாயிலாக உணர்ந்தனர். அவ்வுண்மையினை இருந்த மனத்தை' (332) எனத் தொடங்கும் திருப்பாட்டின்,

1. தவமுயன், கூ. மனுநீதிகண்ட புராணம், கசு.

கண் விளக்கியுள்ளாம். இக்கதைகள் உண்மையுணர்த்தும் புனைவு உருவகமே யென்னும் உண்மையினைத் திண்மையுற உலகுக் குணர்த்தியருளியவர் நம் திருமூலரே யாவர். ஏனைத் திருமுறைகள் அங்ஙனம் உணர்த்தாமைக்குக் காரணம் அவை இறைவன் புகழினையே முதன்மையாகக் கொண்டமையான் என்க. அவ் வுண்மையினை வரும் வெண்பாவான் உணர்க :

" புண்ணியனை வையம் புகழ்ந்தவா றும்புகழ் நூல்
உண்மைபொருள் நூலுணர்த்தும் ஒருங்கால்—வண்மைமிகு
நால்வர் புகழ்நூலார் நம்பிரான் மூலர்பொருள்
போல்வர் சிவயசிவ போற்று."

புகழ்நூலார் - நால்வர். பொருள் நூலார் - மூலர்.

எனினும் புகழ்நூலாரும் பொருளுண்மையோர்ந்துரைத் தருளினரென்பது வரும் திருமுறைத் திருப்பாட்டானுணரலாம் :

" மூவா வுருவத்து முக்கண் முதல்வமிக் கூரிடும்பை
காவா யெனக்கடைதூங்கு மணியைக் கையாலமரர்
நாவா யசைத்த ஒலியொலி மாறிய தில்லையப்பால்
தீவா யெரிந்து பொடியாய்க் கழிந்த திரிபுரமே."

(அப்பர், சு. ககசு-கூ.)

இதன்கண் முப்புரம் தீவாய் வீழ்ந்தவியச் செய்தருளிய சிவபெருமானின் திருவருட் செயல் திருவுள்ளக் குறிப்பே யன்றிப் புறத்துத் தேர் முதலிய வூர்ந்துசென்று செய்த புறச் செயல் அன்றென்பது நன்று வெளிப்படுதல் காண்க. அதுபோல் சிவபெருமானின் அருவுருவத் திருமேனியாம் சிவக்கொழுந்தே னத்திற வழிபாட்டிற்கும் ஒத்த உயர்வொப்பில்லா ஒண்மையது. அங்ஙனே விழுமிய முழுமுதற் சிவபெருமானுக்கே உரியதென்பதை யுணர்ந்தொழுகல் உரைக்கப்பட்டது. அங்ஙனம் ஒழுகாது மாறாய் ஒழுகுவார் (தமிழ்மொழி அல்லாத மொழியினையும் சிவ பெருமான் அல்லாத வுயிர்களையும் முறையே தெய்வமொழி யெனவும் தெய்வம் எனவுங் கொண்டொழுகுவார்) தக்கன் பட்ட பாடு படுவர், நீரூழிக்கண்ணும் பேரூர் இல்லாப் பெரும் பொருளாம் சிவபெருமான் ஒருவனே இறவாது எஞ்சிநின்று காத்தருள்வன். ஏனைப் பொருளல்லா உயிரினமாம் மால் முதலி யோரும் சிவபெருமானிடம் சக்கர முதலியன தவமிருந்து பெற்றுத் தாங்கும் வலிமையும் எய்தினர். உயிரினங்களாய்ச் சிவபெருமான் திருவாணையால் படைத்தல் காத்தலைப் புரிவர். எனினும் அவர்களும் வினைக்கீடாக மாள்வர். உலகியலில் மாண் டார் எலும்பினை மாளாதிருக்கும் அவர்தம் வழியினர் சுமந்து நீர் நிலையில் புகவிடுவர். அதுபோல் எஞ்சிநிற்கும் சிவனே

திருவர் எலும்பும் மண்டையும் தாங்குகின்றனன். கல்விச் செருக்குடைய நான்முகனும் செல்வச் செருக்குடைய மாலும் சிவனைக் காணுதிளைத்துப் பின்தொழுது வாழ்வுபெற்றமையினை உணர்த்துவது அடிமுடி தேடல்; அயன் அரி அரன் உள்ளிட்ட எல்லாவுயிரினங்களையும் மீண்டும் சிவபெருமானே படைத்தருள்வன். அதுபோல் காத்தல், துடைத்தல், மறைத்தல், அருளல் முதலிய தொழில்களைப் புரிபவனும் அவனே. ஆருயிர்களை அவ்வுயிர்கள் கருவாய்க் கிடக்குங்காலத்தும் உடனுகவிருந்து காப்பவன் சிவன். கருவுற்றுப் பிறக்கும் உயர்ந்த மக்கட்பிறப்பினர் மூவகையராவர். சிவஞானிகட்கு ஈவதே பொருளூறு புண்ணியம்; ஏனையார்க்கீவது பாவம். சிவஞானியின் சார்பால் இடையறுச் சிவனினைவுடையார் உளளம் தீர்த்தமாகும். திருக்கோவிற் காவலே செங்கோலின் செவ்விய சாவல். செங்கோற் காவல் ஆருயிர்கட்குத் துன்பம் நீக்கி இன்பம் ஆக்குதல் அச்செயல் திருவருட்செயலே என்பது 'சூரட்ட வேலன்' தொல் கதையால் விளங்கும். சிவனைக் குருவைச், சிவனடியாரைப் பேணுமை கழுவாயில் வழுவாகும். வாழ்வின் அடிப்படை தாழ்வில் பொறையே. எல்லாப் பொருளும் பெரியாரைத் தூணைக்கோடலால் எளிதின் முற்றுறும். இம் முறையான் இவ்விரண்டாம் தந்திரம் பெரிதொத்துப் பொருளொடு பொருந்துதல் காண்க. மெய்ப்பொருளுணர்வில்லாதார் ஏனைப் பொருள்களும் எய்தார் என்பது வரும் திருக்குறளான் உணர்க;

"அற்றுரைத் தேறுதல் ஓம்புக மற்றவர்
பற்றிலர் நாணுர் பழி." (அஅசு)

அற்றுர்-மெய்ப்பொருளாம் சிவன் நினைவில்லார்.

மூன்றும் தந்திரம்

இது முந்நூற்று மூப்பத்து மூன்று செய்யுட்களையுடையது. இருபத்தொரு பிரிவுகளையுடையது. இன்பநிலையினது. இன்பமென்பது இல்வாழ் தவநிலையே. புதுமணம் பொருந்தி இல்வாழ் தவநிலைபுகுவார் இருவரும் சிவனும் சிவையுமாம் உடையாளை உடையாளாகக் கருதுவதே ஒப்பில் தமிழர் செப்பருங் கடனும். அவ்வுண்மை வரும் திருப்பாட்டுக்களான் உணர்க:

"மின்னெருத் திடுகழல் நூபுரம் வெள்ளெருச் செம் பட்டுமின்ன
மன்னெருத் திடவுடை யாளொடொன் றும்புலி யூரனென்றே
நன்னெருத் தெழிலைத் தொழுவுற் றனமென்ன தோர்நன்மைதான்
குன்றத் திடைக்கண் டனமன்னி நீசொன்ன கொள்கையரே."
(அ. திருக்கோவையார், உசசு)

"வந்துமுன் னெய்தித் தாமுன் செய்தமா தவத்தினன்மை
நந்துநம் பாண்டார் நம்பி ஞான போ னகர்பொற் பாதங்
கந்தவார் குழலி னூர்பொற் கரகநீர் எடுத்து வார்ப்பப்
புந்தியா னிநீ தியானம் புரிசடை யானென் றுன்னி."

(கூ, சம்பந்தர், கூகூகூ.)

அத்தவ நிலைக்குச் சிவனினைவு மறவாமை வேண்டும். அதற் குரிய வுறுப்பு எட்டென்ப. அவை தீதகற்றல், நன்ருற்றல், இருக் கை, வளிநிலை, தொகைநிலை, பொறைநிலை, நினைதல்நொசிப்பு என்ப. இவ் வெண்வகைப் பயிற்சியுடையார் இறைநிறைவில் அழுந்தி யிருக்கும் நொசிப்புநிலையினை எய்துவர். நொசிப்பு எனினும் சமாதி எனினும் ஒன்றே; அத்தகைய ஒழுகலாற்றினர் அவற்றின் பெறு பேறுகளை எண்ணே எய்துவர். அதன்மேல் எண்பெரும் சித்தியினை யும் எய்துவர். உயிர்ப்புப் பயிற்சியால் உடையான் மாட்டுக் காத லுண்டாகும். அதனால் உடல் திடமுடன் நிலைக்கும். அதற்கு வேண்டும் சக்கர வழிபாட்டுப் பயிற்சி எய்தும். வாழ்நாள் தங்கலும் மங்கலும் ஆகிய முற்குறி ஆய்வுகளுண்டாம். அதன் மேல் உயிர்ப்புச் செல்லும் ஓட்டமுறையால் உண்மை கண்டுணர்வர். செல்லும் வழிக்குச் செல்லாச் சூலத்துணைகொள்வர். உயிர்ப்புப் பயிற்சியால் பெறுதற்குரிய செயிர் தீர் நலங்களுண்டாம். உள் ளீரை மாற்றி அமிழ்தாக்குவர். திங்கட் கலையில் மங்காது நிலைத் துச் சிவமாவர். இதுவே மெய்யின்பமாகும். இன்பம் என்பது உடலை உறுதியாக வைத்துக்கொண்டு உள்ளத்தை வள்ளற்பெரு மானுகிய சிவன் திருவடிக்கண் பள்ளத்து வெள்ளமபோற் பதிய வைத்து இவ்வாழ்க்கைக்கண் நல்வாழ்வு பெறுவதாகும். நாயன் மார் திருவரலாறுகள பலவும் அதனை நன்கு வலியுறுத்தும். அவ்வுண்மை வரும் திருமுறைத் திருப்பாட்டுக்களானும் உணர்க:

"தென்னவ னூர்மன்னன் தேவர்பிரான் திருவருளான்
மின்னுரு கொடிமருங்கும் பரவையெனும் மெல்லியல்தன்
பொன்னுரு முலையோங்கற் புணர்குவட் டார்வாகப்
பன்னுளும் பயில்யோகம் பரம்பரையின் விரும்பினர்.
தன்னையா ளுடையபிரான் சரணுரை விந்தமலர்
சென்னியிலும் சித்தையிலு மலர்வித்துத் திருப்பதிகம்
பன்னு தமிழ்த் தொடைமாலை பலசாத்திப் பரவையெனு
மின்னிடையா ளுடன்கூடி வீளையாடிச் செல்கின்றூர்."

(கூ, தடுத்தாட்கொண்ட, கஅக-உ.)

நான்காம் தந்திரம்

இஃது ஐஞ்ஞூற்றுமுப்பது திருப்பாட்டுக்களையுடையது. அசபை முதலாக நவாக்கரி சக்கரம் ஈருகப் பதின்மூன்று பிரிவு களையுடையது. விடாவது பொருளிழபபன்று; தன்னிழப்பாகும்.

தன்னிழப்பென்பது தன்னைச் சிவபெருமானுக்கு அடிமையாக்குதல். 'ஆண்டாற் கடிமையாய் அவ்வன்பால் தாஞ்முழுகல், ஈண்டுவீ டாம்தன் னிழப்பு' என்பதனாலும் இவ்வுண்மை உணரலாம். இங்ஙிலியினை விழைவார் எல்லா மந்திரங்கட்கும் உயிராய், யாவற்றையும் இயக்கும் தன்மையதாய், எல்லாப் பெருஞ்ஞமையையும் விளக்குவதரய்ஆதியந்தம் இல்லாததாய்த் திகழ்வது திருவைந்தெழுத்தாகும் என்னும் மாறுவண்மையினை யுணர்வர். அதனையே இந் நான்காம் தந்திரம் விளக்குகின்றது. முதற்கண் ஊமை எழுத்தாகிய அசபையும், அதன்பின் சக்கரங்கள் எல்லாவற்றிற்கும் முதன்மையும் முன்மையும் வாய்ந்த திருவம்பலச் சக்கரமும் வகுத்தளித்தனர். திருவம்பலச் சக்கரத்துத் திருமந்திரம் உயிர்மந்திரமாகிய 'சிவயநம' (903) என்னும் திருவைந்தெழுத்தாகும். அதுவே எல்லாவற்றிற்கும் ஆதிமந்திரமாகும். ஆதி - காரணம். அவ்வுண்மை வரும் திரு முறைத் திருப்பட்டான் உணரலாம்.

"ஆதி மந்திரம் அஞ்செழுத் தோதுவார் நோக்கும்
மாதி ரத்தினும் மற்றைமந் திரவிதி வருமே
பூதி சாதனர் மடத்திற்றும் புனைந்தசா தனைகள்
சாதி யாவகை கண்டமண் குண்டர்கள் தளர்ந்தார்."
(கூ, சம்பந்தர், சுகூஅ.)

அதன்பின் அச் சக்கரத்தின் வழிபாடமைத்தனர்; அதன் வழிபாட்டிற்கு இன்றியமையாது வேண்டப்படும் தழலோம்பல் காணப்படும். அடுத்துத் திருவருளம்மையின் சக்கரம். அம்மை யும் அப்பனும் உயிரும் அறிவும் போன்றொன்றே. பின் வயிரவி மந்திரம் அம்மையின் முதன்மையாகும். பின் அத் திருவரு ளம்மையின் முழுவாற்றல் காணப்படும். அவ் வம்மையே எஞ் ஞான்றும் பொன்றுதலின்றித் தாங்கும்நிலை தாங்கப்படுநிலை என்னும் இரண்டுமாய் நிறைந்து நிற்பள். இங்ஙிலியினை முறையே ஆதாரம் ஆதேயம் என்ப. பின் அழகொளி திகழும். பின் வயிரவச் சக்கரம் காணப்படும். பின் இன்பநிறை இறைவியின் சக்கரம், உலகிறைவற் சக்கரம் காணப்படுகின்றன. பின் அம்மையின் நவாக்கரி சக்கரம் அமைத்துள்ளனர். இவ் வடிப் படைத் தமிழ் வழிபாட்டினுல் ஆகமச் சிறப்புச் சிவவழிபாடு வரும் ஐந்தாம் தந்திரத்தருளுகின்றனர். வீடென்பது, பற்றப் படும் உலகியற் பொருள்களையும் உடலையும் நீக்குவதன்று. அப் பொருள்கள் விழுத்துணையாம் சிவபெருமானை அடையச் செல் லும் செந்நெறிக்கு வழித்துணையாம் என்னும் உண்மையினை ஓர்ந்து, அவை தம்முடைய உடைமையல்ல சிவபெருமானின் உடைமைகள் எனக் கண்டு அவற்றைத் தம்முடையவை எனக்

கொண்டுள்ள பற்றினின்றும் நீங்குவது வீடாகும். இதுவே, "பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப், பற்றுக பற்று விடற்கு" (கூநுo) என்னும் செந்தமிழ்ப் பொதுமறைப் பொருளாகும்.

## ஐந்தாம் தந்திரம்

இது, நூற்று ஐம்பத்துநான்கு திருப்பாட்டுக்களைக் கொண்டது. சுத்த சைவ முதல் உட்சமயம் ஈறுகச் சொல்லப்படும் இருபது பிரிவுகளையுடையது. அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கும் அறம் என்றே கூறப்படும். அவ்வண்மை 'ஆலின்கீழ் நால்வர்க்கன் றறமுரைத்த வங்கணனே' என்னும் சேக்கிழாரடிகள் திருமொழியான் உணரலாம். அறம் எனினும் வேதம் எனினும் ஒன்றே. அவ்வுண்மை நம்பிரான் மூலரருளிய 'வேதத்தைவிட்ட அறம் இல்லை. வேதத்தின், ஓதத் தகும் அறம் எல்லாம் உள' (61) என்னும் திருப்பாட்டான் உணரலாம். எனவே நான்கு தந்திரங்களினும் உறுதிப் பொருள் நான்காகிய அறத்தினை உரைத்தமை ஒருபுடையொப்பாக விளக்கப் பட்டது. இனி அந்நான்கினும் மேலாகக் கருதப்படும் பேறு கூறியருளத் தொடங்குகின்றனர்.

பேருவது செம்பொருட் செந்நெறியாம் சித்தாந்த சைவத்தினை மேற்கொள்வது. அங்ஙிலை வேதத்தொடர்பு முற்றிய பின்கை கூடுவதென்பது வரும் சிவஞான சித்தியார் திருவிருத்தத்தான் உணரலாம்.

"புறச்சமய நெறிநின்றும் அகச்சமயம் புக்கும்
புகல்மிருதி வழியுழன்றும் புகலுமாச் சிரம
அறத்துறைக ளவையடைந்தும் அருந்தவங்கள் புரிந்தும்
அருங்கலைகள் பலதெரிந்தும் ஆரணங்கள் படித்தும்
சிறப்புடைய புராணங்கள் உணர்ந்தும் வேத
சிரப்பொருளை மிகத் தெளிந்தும் சென்றுற் சைவத்
திறத்தடைவ ரிதிற்சரியை கிரியா யோகஞ்
செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்."

(அ, உ-க.)

உலகிடை நிலவும் சமயங்களை நான்காகப் பகுப்பர்; அவை முறையே மெய்ப்பொருளாம் விழுமிய முழுமுதற் சிவபெருமானின் உண்மையுணராமை, அப் பொருளின் முதன்மை உணராமை, பேறுபெறும் நெறியுணராமை, பேற்றின் இயல்புணராமை என்பன. இந் நான்கனுள் முன் மூன்றனையும் புறப்புறம், புறம், அகப்புறம் என்னும் மூக்கூற்றுப் புறச்சமயங்கள் என்ப.

மற்றொன்றனை அகச் சமயம் என்ப. செம்பொருட்டுணிவாம் சித்தாந்தச் சைவம் சமயங்கடந்த பெருநெறி. அதுவே திருநெறி. இதனை வருமாறு நினைவுகூர்க: 'உண்டாமெய் ஓரார் உறுமூதலோ ராரோர்ந்தும், அண்டார் பெறுநெறியன் ஞர்,' 'உண்டாமெய் ஒண்முதல் ஓங்கு பெறுநெறியும், கண்டார் காணர்பேற் றியல்பு'.

பேறு என்பது திருவடிக்கலப்பு; கலப்பு என்பது மறவா இன்ப அன்புநினைப்பு. அறமுதல் நான்கும் நால்வரருள் நான்மறையாகும். பேறு என்பது திருக்கோவையாராகும். பேற்றின் உறுதுணையே நம்பிரான் மூலரருளிய திருமந்திரமென்னும் செந்தமிழாகமமாகும். அப் பேற்றின் அடிப்படை இவ் வைந்தாந்திரமாகும். சைவம் நால்வகை என்பதூஉம், தொண்டு நாற்பாலதென்பதூஉம், அத்தொண்டர் தன்மையும் நால்வகை என்பதூஉம், அத் தொண்டர்பெறும் பேறுகளும் நான்மையவென்பதூஉம், அத் தொண்டர்களின் செவ்விகிலைகளும் நான்கென்பதூஉம், புறச்சமயப் புன்மையும், ஒழுக்கவுறுதியும், அன்பகநெறியும் முறையே ஒன்றன்பின்னொன்றுக அடைவுபட இதனகண் அருளிச் செய்துள்ளனர்.

ஆரும் தந்திரம்

ஐந்தாம் தந்திரத்தில் கூறியபடி பேற்றின் அடிப்படையாம் சிவனெறியை மேற்கோடல் பெறுவார்க்கு உறுதுணையாய் எழுந்தருளிவந்து அருளுபவர் சிவகுருவாவர். அதனால் அப் பேறு வரும்வழி வகுத்தருள்வதாயிற்று. இது, நூற்றிருபத்தெட்டுத் திருப்பாட்டுக்களையுடையது. சிவகுரு தெரிசனமுதல் பக்குவன் ஈறுகப் பதினைந்து பகுப்புக்களையுடையது. சிவகுருத்தோற்றம் என்பது சிவபெருமான் ஐம்புலவேடரிற் பட்டுழலும் ஆருயிர்களைச் செவ்விநோக்கி மீட்பான் எழுந்தருள்வன் என்பதாம். அங்ஙனம் எழுந்தருளுங்கால் செவ்விபெற்ற நல்லாரை இவர்தந்தூர்தலாகிய ஆதிட்டித்தலைப் புரிந்து மேற்கொண்டருள்வன். செவ்வி வரத் துணைபுரிந்தருள்பவனும் அவனே. இது, செஞ்சாலிச் சோறமைப்பார் குழிசியும், நீரும், அரிசியும், நீயும், விறகும் சேர்த்துச் சமைப்பர். அங்ஙனம் செய்வார்தாமே சோற்றின்பதமும நோக்குவர். பதமாகிவிட்டதெனவும் கூறுவர். ஆனால் அவ்வரிசி தானகப் பதமாகவில்லை; பதமாக்கப்பட்டது. அப்படியிருந்தும் அரிசி பதமாகிவிட்டது எனக் கூறுவதனையொக்கும்.

குருவே சிவன் என்பது (1566) விளங்கவே அச் சிவனால் உணர்த்தப்படுவது திருவடிப்பேருகும். இதனை 1571 ஆம்

திருப்பாட்டான் உணரலாம். திருவடிப்பேற்றுல் காண்பான காட்சி காணப்படும் பொருள் விளக்கமுறும். இவ்வுண்மை 'காணுத' (1584) என்னும் திருப்பாட்டான் விளங்கும். சிவ பெருமானே மறவாமை (1558) யே துறவாகும். அது மும்பொருள் விளக்கத்தால் அமைவதாகும். அம்மறவாத் துறவினரே சிவனேப் பேணும் இறவாத் (1599) தவம் பெற்றோராவர். சித்தஞ் சிவமாவார் தவக்கடப்பினை (1617) உடையராவர். பள்ளியில் பிள்ளைகள் மேல்வகுப்புக்குச் செல்வதுபோன்று தவமுடை யாரும் தவக்கடப்பு எய்துவர். தவக்கடப்பால் திருவடியுணர்வு (1623) கைவரப்பெறுவர். கைவரப்பெற்றுரால் நாட்டினுக்கு எல்லா நலமும் என்றும் நின்று நிலவும். போலிக்கோலமாம் அவவேடத்தாரால் எல்லாத் தீங்கும் உண்டாகும். அத்தகை யோரை வேந்தன் நாடித் (1629) தண்டித்தல் கடனுகும். மெய்த்தவ வேடர்க்கு வேண்டும் அடையாளம் பத்து (1636) ஆகும். திருநீறே திருவடி (1638) சேர்ப்பிக்கும். அடியார் திருக்கோலமே ஞானவேடமாகும். அடியாரவரே சித்த (1646) சாவர். சிவவேடம் அனைத்தும் உடலுக்கு அன்று ; உயிருக்கே (1648) யாம். சிவவேடத்திற்குத் தகுதியில்லாதார் செவ்வி யில்லாதவராவர். அவரைக் குருவெனக்கொள்வார் குழி (1652) வீழ்வர். நற்குருவால் திருவடிஞான (1670) முண்டாகும். என ஒதி விளக்குவதால் இத் தந்திரம் பேற்றுவழியாகும்.

ஏழாம் தந்திரம்

இது நானூற்று ஏழு திருப்பாட்டுக்களையுடையது. ஆரூ தாரம் முதல் இதோபதேசம் ஈருக மூப்பது பகுதிகளையுடையது. இது பேற்றுவழிபாடாகும். பேற்றுவழிபாடெனினும் சிவலிங்க வழிபாடெனினும் ஒன்றே. அவ் வழிபாட்டின் சிறப்புணர்தற்கு உடம்பகத்துக் காணப்படும் ஆறு நிலைகளும் உடல் உலகிடைக் காணப்படும் ஆறு வழிகளும் உண்மையுணர்தலாகிய தூய்மை பெறுதல்வேண்டும். ஆறுநிலைகள் - ஆருதாரம், ஆறுவழிகள்- ஆறத்துவா. தூய்மை - சுத்தி. சிவலிங்கத்தின் வகைகளாகிய அண்டலிங்கம், பிண்டலிங்கம், சதாசிவலிங்கம், ஆன்மலிங்கம், ஞானலிங்கம், சிவலிங்கம் என்னும் விழுமிய அறுவகை இலிங்கங் களின் இயல்புணர்தல்வேண்டும். இலிங்க வழிபாடே தொன் மைத் தமிழகவழிபாடு. இன்றும் அதற்கே முதன்மை. அத் திருவுருவிற்குக் சிவன் என்னும் திருப்பெயர் வழங்குகின்றேம். இதுவே "சிவனெனும் நாமம் தனக்கேயுடைய செம்மேனி எம்மான்" திருவுருவாகும். திருவுரு - படிமை. இவ்வாறும் முறையே உலகம், உடல், உலகமுதல், உயிர், உணர்வு, உணர் வருள் ஒண்மைச் சிவகுரு எனக்கொள்ளப்படும். இவ்வாறும் ஒரு

புடையொப்பாகச் சிவபெருமானின் அறுவகைப் பண்புகளைக் குறிக்கும் குறிப்பாகும். அறுவகையாவன : ஆக்கம், ஆண்மை, சீர்த்தி, திரு, மெய்யுணர்வு, உறுதி, (பெண்மை, ஆண்மை, வண்மை, எண்மை, உண்மை, திண்மை) என்பன. இவ்வுண்மை யுணர்வார் சிவலிங்கவழிபாடு எத்துணை விரிந்த பெருநெறி வழிபாடென்பது கண்டு இன்புற்று இறும்பூதெய்துவர். எல்லாம் சிவவண்ணம் என்பதனைச் சொல்லளவினன்றி நல்லார் செய்யும் செயலளவிலும் காண்கின்றோம். அச் செயலால் பண்டை முறையாகக் கொண்டும் கொடுத்தும் வாழும் குடிப் பிறப்பு (1747) உண்டாகும். இக்குடிப்பிறப்பால் எல்லாம் திருவருள் வைப்பு (1774) என்னும் இயைபு தோன்றும். பின் அகம்புறமாய் ஆருளொளி தோன்றும். அத் திருவருட் செயலாற்றலென்றும் சிவபூசையுண்டாம். பூசையின் உயிர் செந்தமிழ்த் திருமுறைத் திருப்பாட்டேயாகும். அதுவே நம்மூரிமையுமாகும். அவ்வுண்மை 'வேட்டவி' (1793) என்னும் திருப்பாட்டானுணரலாம். மேலும், 'அருச்சனை பாட்டே யாகும்' என்னும் சேக்கிழாரடிகள் திருமொழியானும் உணரலாம். பூத்தூவி வழிபடும் நாம் அப் பூமரத்திற்குக் கையாளாவோம் பூமரம் ஈன்ற பொருளே பூவாகும். அது தரையில் உதிர்ந்து கிடக்குங்கால் அம் மரம் நேரே செய்த உலக இலிங்க வழிபாடாகும். நாம் எடுத்துத் தொடுத்துத் திருக்கோவிற் சிவலிங்கத்திற்குச்சாத்தில் உலக முதல் இலிங்க வழிபாடாகும். உண்மையான் நோக்கின் அவ் வழிபாடும் அம் மரத்தினையே சாரும். நாம் அம் மரத்தின் கையாளாய் அம் மரம் உய்யச் செய்த சிவபுண்ணியத்தராவோம். இப்படியே சிவவழிபாட்டிற்குரிய எல்லாப் பொருள்கட்கும் நாம் கையாளேயாவோம். ஆலை பாட்டு ஒன்றுமட்டுமே நம் உரிய உலப்பில் உடைமையாகும். அதனை யாவரும் குறிக்கொண்டு போற்றுமின். அப்பொழுதுதான் 'அருச்சனை பாட்டே யாகும்' என்னும் வைப்பாம் மெய்ப் பொருள் செப்பமுறத் தோன்றும்.

சிவபூசையின் பெறுபேறுகச் சிவகுருவின் பூசை (1817 உண்டாகும். குருபூசைப்பயனுகச் சிவனடியார் வழிபாடு (1824 உண்டாகும். சிவனடியார் எனினும் மகேசுவரர் எனினும் ஒன்றே. சிவனடியார் சிவனேடொப்பர். அவர் பெருமை (1836) அறிந்து அவர்க்கு அடிமையாதலே செந்நெறிச் சிறப்பு. உண்ணுங்கால் தம்முயிர் சிவபெருமான் அமரும் திருக்கோவில் (1848) என்னும் தீந்தமிழ் உண்மையினை உணர்ந்து சிவனினை வுடன் உண்பர். உண்ணும் ஊண்முதல சிவனுடைமையாதலின் யாண்டும் எப்பொருளையும் அவன்பால் (1851) இரந்துபெற்றே யுண்பர். இஃதொருபெருந்தவமாகும். இத்தவநிலையை யாமெலாம்

மேற்கொள்ளும் பொருட்டு அச் சிவபெருமானே முற்படியாக இரந்து வழிகாட்டியருளுகின்றனன். முத்திரையெனினும் பொதியடையாளம் எனினும் ஒன்றே. அம் முத்திரைச் சிறப்பினையும் சிவனடியார் உணர்ந்து (1858) ஒழுகுவர். சிவயோகிகள் அடக்கம் செய்யப்பட்ட கல்லறைபோன்று இருக்கும்போதும் உடலோடு இருப்பர். அவர்தம் திருவுடலைக் குகை செய்து கற்றளி எடுத்தலே யாவர்க்கும் (1876) இன்பம் தருவதாகும். குகை-சமாதி. கற்றளி-கருங்கல்லாலாகிய திருக்கோவில். விந்துவை வீணுக்குதல் செய்யாது வளர்த்தலே வீறுடைத் (1896) தாகும். விந்தின் அடக்கமாம் வெற்றியால் சிவோகம் (1932) உண்டாகும். பகலவனின் உண்மைநிலை காண்பார் ஒண்மையோராவர். அப் பகலவன் அண்டம், பிண்டம், மனம், ஞானம், சிவன் என ஐவகையாகப் பகுக்கப்பெறுவன். ஐம்புலன் அடக்கும் அருமையும் முறைமையும் அறிந்தொழுகுவோரே அன்பர் சிவனடியாராவர். சிவகுருவல்லாதார் சிறுமை (2010) யோர்தலே செம்மையாம். சிவகுருவின் சிறப்போர்ந்து வாழ்வதே சிவகதி (2016) யாகும். மறைமுறையாகிய செந்தமிழ் வேதாகமங்களில் விதித்தபடியே ஒழுகுதலுடையோர் திருவடிகூடும் சிவனடியாராவர். அதற்கு மாறுக ஒழுகுவார் சிவனைக்கூடா ஒழுக்கினராவர். கூடா ஒழுக்கினர் (2029) கூடார் திருவடி. இவர்தம் கேடு கண்டு சிவனடியார் பெரிதும் (2052) இரங்குவர். குரு மொழியாகிய உறுதி இன்னுரை உற்றுரே சிவபெருமான் திருவடியைக் (1080) கூடியின்புறுவர்; ஆகமம் ஆவியின் நிறைவு.

'முன்னொரு சமயந் தன்னைப் பொருளென முற்றிநின்று, பின்னர் வான் சைவம் எய்தப்பெற்றவர்' நம் திருநாவுக்கரசு நாயனாவர். ஐந்தாம் தந்திரமே மயலொழிக்கும் இயற்கைச் செந்நெறியின் மாண்பு வகுத்தோதுகின்றது. அதனால் அந் நாயனருடன் ஒருபுடையொப்புக் கூறும் உண்மை ஒண்மையதாகும். அஃது ஆறாம் தந்திரம் சிவகுருவின் மாண்புரைக்கின்றது. 'நாளும் இனிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தப் பெருமானரே' நம் செந்நெறியினருக்கு முதற்குரவராவர். அவரே இச்சை ஏதும் இன்றிப் பச்சைப் பசுங்குழவிப் பருவத்தே சிவபெருமானைக் கண்டு சுட்டியவ (1556) ராவர். அதனால் அந் நாயனருடன் ஒருபுடையொப்புக் கூறும் ஒண்மையதாகும்.

ஏழாம் தந்திரம் சிவலிங்க வழிபாடு செப்புகின்றது. சிவலிங்க வழிபாட்டைச் செய்யுமாறு வழிதடுத்தாட்கொண்டு வாழ்வருளப் பெற்றவர் நம்பியாரூரர். அவரையே திருவெண்ணெய் நல்லூர்த் திருக்கோவிலுக்குள் அழைத்துச் சென்று காட்சியருளி வழிபடுவித்தருளினன் சிவன். அவ் வழிபாடு செ

தமிழாலேயே இருத்தல்வேண்டுமென்பது திருவருளாணை. அவ் வுண்மை வரும் திருமுறைத் திருப்பாட்டான் உணர்க:

"மற்றுநீ வன்மை பேசி வன்றொண்ட னென்னும் நாமம்
பெற்றனை நமக்கு மன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க
அற்சனை பாட்டே யாகு மாதலான் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடு கென்றார் தூமறை பாடும் வாயார்"

(கூ. தடுத்தாட்கொண்ட புராணம், எ0)

இதன்கண் தமிழ்ப் பாட்டால் வழிபாடு செய்யவேண்டு மென்று ஆண்டவன் திருவாணை அருளியும் அவ்வுண்ணமே திருமுறைச் செந்தமிழ்ப் பாட்டுத் தோன்றியும நம்மனோர் அவ் வருளாணையைப் பற்றாது மருள்வழியொழுகும் பழிபெருகு வழுச்செயல் அழிந்தொழிவது எஞ்ஞான்றுகொல்லென ஆன் றோர் வருந்துகின்றனர். சொற்றமிழ் - சிறந்தடுத்துப் புகழப் படும் தமிழ்; உலகியல் - வழக்கியல், வழக்கிலும் பயின்று உரை பெறும் தமிழ். நம்பியாரூரரின் நடைமுறையனைத்தும் ஒருபுடை யொப்பாக இவ்வேழாந் தந்திரத்தோடிணைந்தனவாகும். அவ் வுண்மையினைத் தனி நூலாக அமைத்தல் வேண்டும். ஈண்டு ஒரு திருப்பாட்டினை மட்டும் குறிப்பாக எழுதி அமைகின்றும்;

"பாசத்தி விட்ட தருளந்தப் பாசத்தின்
நேசத்தை விட்ட தருளந்த நேசத்திற்
கூசற்ற முத்தி யருளந்தக் கூட்டத்தின்
நேசத்துத் தோன்று நிலையரு ளாமே"

(க0-களைக.)

மேலும் ஆருயிரின் அடிமை ஆவணக் குறிப்பும் என் தாயோ (1839) டெனத் தொடங்கும் இத் தந்திரத் திருப்பாட் டானே காணப்படும் பொருத்தமும் ஓர்க. ஆரூரரின் அடிமை ஆவணம் செந்தமிழின்கண் அமைந்ததும் அயன்மொழியாகிய ஆரியத்தின்கண் அமையாமையும் உற்றுநோக்கின் தமிழ் நாட்டில் எல்லாம் தனித்தமிழாலேயே நடப்பதுதான் சிவபெருமானுக்கு இனித்தமுடைய செயல் என்பது எனைத் தோர் ஐயுறவிற்கும் இடனின்றிப் போதரும். மேலும் பாணபத்திரர்க்கு ஆலவாயில் மன்னிய சிவபெருமான் சேரர் பெருமானுக்கு விடுத்த திருமுகப் பாசுரம் இருவகை வழக் கிலும் பொன்றாச் செந்தமிழில் நின்றுநிலவுவதும், பெத் தான் சாம்பானுக்குப் பேறருளும் பொருட்டுக் கொற்றங் குடியார்க்கு அடியார்க்கு எளியராம் சிற்றம்பலனார் எழுதிய கைச் சீட்டும் செந்தமிழே. சேரமான் பெருமாள் நாயனார் இந்நில வுலகத்து மட்டுமன்றித் திருக்கயிலையில் பாடி அரங்கேற்றியுள்ளதும் உரமருள் ஒண்மை நற்றமிழே. நற்றமிழின்

முழக்கம் சொற்பெறு கயிலையிலும் உண்டு. ஆனால் அற்புத நிலவுலகில் நிலவிப் பெரும்பயன் அளித்தற்குரிய திருக்கோவில்களில் அஃதில்லை. இஃதென்ன புதுமையென்று நம்மை நாமே வினவி மனம் தெளிந்து அமைத்தல் வேண்டும்; இஃது 'இனம் போன்று இனமல்லார் கேண்மை மகளிர், மனம்போன்று வேறுபடும்' என்னும் வாய்மைச் செந்தமிழ் வைப்பாம் பொதுமறையின் எடுத்துக் காட்டாக அடுத்துள்ளோர் செய்யும் மறைமுக அடாச் செயலால் நிகழும் குறையெனக் கூறுவது நிறையெனும் நேர்மையாகும். சிவஞான சித்தியார் பரபக்கம் சௌத்திராந்திகன் மறுதலை இருபத்துநான்காம் பாட்டின்கண் வரும் 'ஆரியமாய்' என்பதற்கு ஆசானால் செய்யப்பட்டதாயென்று பொருள். ஆரியன் - ஆசான். ஆரியம்: ஆசானால் செய்யப்பட்டது, தொல்பாப்பியம் என்பது போன்று.

எட்டாந் தந்திரம்

இது பேற்றுவழிபாட்டாற் பெறப்படும் பேற்றுறுதிவகுப்பதாகும். இஃது ஐஞ்ஞூற்றுப்பதினெட்டுத் திருப்பாட்டுக்களையுடையது. இஃது உடலிற் பஞ்சபேத முதல் சோதனை ஈறாக மூப்பத்துமூன்று பிரிவுகளையுடையது. உடலின் பாகுபாட்டை உற்றுரைப்பார் உடலிற் பஞ்சபேதமென்றனர். அவை 'நோக்குபரு மைநுண்மை போர்வைமீ நுண்முன்மை, ஆக்கு முடல் ஐந்தாம் அறி' என்றதனால் பருவுடல், நுண்ணுடல் போர்வையுடல், மீநுண்ணுடல், முன்மையுடல் என உடல் ஐவகைப்படும். போர்வை - கஞ்சுகம். மீநுண்மை - அதிசூக்குமம். முன்மை - முதல்; காரணம். இவ்வுடல்கள் அழியும் தன்மையன. இவற்றிற் பல்வேறு அவத்தைகளாகிய பாடுகள் உள்ளன. இப்பாடுகளினால் அறிவு தோன்றும். அவ்வறிவினால் அறிவின் மெய்யியல்பு (2318) கைவரும். அறுவேறு முடிபுகளும் (2329) வெளிப்படும். வெளிப்படவே, விரவுதலால் பதி பசுபாசம் வேறன்மை (2367) புலனாகும். புலனாகவே அடிதலை யுண்மை வெளிப்படும். வெளிப்பட முக்குற்றம் புலனும். புலனாக மூப்பதம, மூப்பரம், அப்பாலியல்பு, முத்தூரியம், மும்முத்தி, முச்சொருபம், முக்காரணம், முச்சூனியம், மூப்பாழ், காரியகாரணவின்னல், வேண்டுதல் வேண்டாமை இன்மை, சிவனுண்மை தேறுது புறங்கூறல், எண்புலக் காவலர், ஒன்பான்கோள், தூய்மை முத்திப்பழிப்பு, மும்மையிலக்கணை முதலியன தெளிவுறும். தெளியவே மூப்பத வுண்மை விளங்கும், விளங்கவே எல்லாம் விழுங்கும் சிவனியல்பு (2548) புலனும். புலனாகப் பொய்யொழிந்தார்க்கு அவன் புகலிடம் (2558) எனபது போதரும். போதரவே மெய்யுணர்ந்தார் செயல் (2567) வெளிப்படும்.

வெளிப்படவே பசைமலமாம் அவாவறுத்தல் (2570) உண்டா கும். அவாவறவே அடியார்க்கு அடியராம் (2578) பத்தியுண் டாம் அப் பத்தியின் பாலதாய் விளைவது முத்தியாகும். முத்தி யின் பெறுபேறு செயலற்றிருக்கும் திருந்திடம். இதனைச் சோதனை எனவும் கூறுப. இவ் வெட்டாம் தந்திரம் பத்தின் பாலராய் முத்திபெற்ற ஆளுடைய அடிகளாகிய மணிமொழியார் திறத்துடன் ஒருபுடை யொப்பதாகும். இத் தந்திரத்தின்கண் முத்தியும் பத்தியும் முத்திநிலையும் வலியுறுத்துள்ளமையும் மேலதனை உறுதிசெய்யும். ஆளுடைய அடிகள் அருளியதும் எட்டாம் திருமுறை என்னும எண்ணெற்றுமையும்நோக்குக. இவ்வுண்மையினை வரும் திருப்பாட்டான் உணர்க :

"முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தனைக் கருளியவா ரூர்பெறுவார் அச்சோவே"

(அ. அச்சோப்பதிகம், க.)

ஒன்பதாந் தந்திரம்

இது பேற்றுறுதியாற் பெறப்படும் பெரும்பயன் வகுத் தருள்கின்றது. இது நானூறு திருப்பாட்டுக்களைக் கொண்டது. குருமட தரிசனம் முதல் சர்வவியாபி ஈறாக இருபத்திரண்டு பகுப்புக்களையுடையது. இவ்வொன்பதாம் தந்திரம் ஒருபுடை யொப்பாக ஆணந்தோரியல்பு அருளுகின்றது எனலாம். சித்தாந்த சைவர் இருந்துவாழ் உறையுளே 'மடம்' என அழைக் கப்படும். இவ்வுண்மை வரும் சேக்கிழாரடிகள் திருமொழியான் உணரலாம் :

"மிக்க செல்வ மனைகடொறும் விளையும் இன்பம் விளங்குவன
பக்க நெருங்கு சாலிதொறும் பயில்சட் டறங்கள் பல்குவன
தக்க வணிகொள் மடங்கடொறும் சைவ மேன்மை சாற்றுவன
தொக்க வளங்கொ டங்கடொறும் அடங்க நிதியம் துவன்றுவன"

(கஉ, சேரமான் பெருமாள், கூ.)

ஞானசம்பந்தப பெருமானர் தங்கும் திரு இடம் மடம் எனப்படும். அங்ஙனமை சேக்கிழாரடிகள் அருளிய திருத் தொண்டர் புராணத்துத் திருஞானசம்பந்தர் திருவரலாற்றில் இருநூற்று அறுபத்திரண்டாம் திருப்பாட்டில்'மடத்துப்புக்கார்' எனவும் எண்ணூற்று ஐம்பத்துநான்காம் திருப்பாட்டில்'சைவர் இருந்துவாழ் மடம்' எனவும் ஓதியருளப் பெற்றமையான் வலி யுறுத்தப்பெறும். அக் குருமடக்காட்சி சிவனடியினைந்த நற்றவத்தோர் அனைவர்கட்கும் என்றும் வேண்டப்படுவதாகும்.

எட்டாம் தந்திரம் எட்டாம் திருமுறை ஆசிரியராகிய ஆண்டை யடிகளாருடன் ஒருபுடையொப்பாம் என்பது அவர் கண்ட பெருந்துறையே ஈண்டுக் கூறப்படுவதுபோல் பெருந்துறை (2601) என்னும் திருப்பெயர் அமைந்துள்ளது பெரிதும் நினைவு கூர்தற்பாலதாகும். குருமடங்கண்டார் குருவினைக் காண்பர். அக்குருவினை நெஞ்சகம் பூண்பர். பூண்பதால் திரிமலம் அறும். அறவே அவர் (2511) சிவனிலை எய்துவர். ஓங்காரத்தின் உண்மையும் உணர்வர். சிவஒளியின் செம்மையும் (2646) தேறுவர். தேறவே அவ்வருள் ஒளியின் துணையால் 'நமசிவய' (2649) என்னும் பரிய திருவைந்தெழுத்துணர்வர். அதன் வாயிலாகச் 'சிவயநம' (2659) என்னும் நுண்ணிய திருவைந் தெழுத்தெண்ணுவர். இவ்வெண்ண முதிர்ச்சியால் 'சிவயசிவ' (2669) என்னும் மீநுண்மைத் திருவைந்தெழுத்தினை மேற்கொள் வர். இதனை மேற்கொண்டார் திருவைந்தெழுத்தால் பெறப்படும் அம்பலவாணர் திருவுருவும், அத் திருவுருவின்கண் காணப்படும் அடையாளங்களும், ஐந்தொழில் அருட்கூத்தும் கண்டு அகமிக மகிழ்வர். அத்திருக்கூத்துச் சிவஇன்பம், சிவனனப்பு, பொற்பதி, பொற்றில்லை, வியப்பு, என ஐவகை வெவ்வேறு சிறந்த செவ்வித் திருப்பெயரும் பெறும். இப் பேற்றால் திருவருள் வெளியாம் ஆகாசபதவி பெறுவர் (2767) பெறுவர். திருவருள் வெளிப்பேறு பெறவே திருவடியுணர்வு (2779) நிகழ்ந்தெழும். நிகழ்ந்தெழவே உண்மை அறிவு இன்ப ஒண்மை (2784) எண்மையினை எய்தும். எய்தவே திருவருளுருவினைக் குருவழியாக (2796)க் கூடுவர். கூடியவர் உடலுழாய்க் கழியும் ஊழால் (2803) தந்தன்மை குன்றுர். குன்றுராகவே சார்புச் சிவக்காட்சியினைச் சிந்தையினுள்ளே (2809) தெளியக் காண்பர். அங்ஙனங் கண்டார் உண்மைச் சிவக்காட்சியினை (2819) வண்மையுடனே உணர்வர். இவ்வுணர் வுடையார் முழுப்பொருள் கண்ட விழுப்பேற்றினை (2823) ராவர். அப் பேற்றினர் உண்மைப் பொருட்களை மறைபொருட் கூற்றுக (2845) வழுத்தி வழங்குவர். மறைபொருள் : வெளிப்படப் பொருள் தோன்றுது மறைந்துநிற்றல். இம்முறை சித்தர் கையாளும் சிறிய முறையாகும். இதனனும் இந்நூல்தொல்காப்பிய முனிவரனர் காலத்துக்கு மிகமுற்பட்டதாகலாம். மறைபொருட் கூற்றுணர்ந்தார் ஒன்றினின் (2913) றுணரும் மேன்ஞானம் எனப்படும் மோனநிட்டை யெய்துவர். அந்நிட்டையினர் சிவ னடிமையாம் சிறப்பெய்தி வரைவுற்ற உரைமாட்சி மாற்றங்கழிந்த மாண்பாம் என்பது உரையற்ற (2915) தென்றதனால் விளங்கும். அங்ஙனம் அணைந்தோர் அழுந்தும் இன்பம் அடைதற்குரியது, (2922) அறிதற்கரியது. அணைந்தோர் அவன்றன் பொருள்சேர் புகழையே இருள்சேர் இருவினை நீங்க இடையருது ஏத்திப்

(2980) புகழ்வர். அவன் எங்கும் நீக்கமறநின்று தங்கும் பொங்கிய இயற்கை உண்மை அறிவின்பச் செம்பொருள். 'சிவனெனும் நாமம் தனக்கேயுடைய செம்மேனி எம்மான்,' அவன் எங்கும் என்று முளன் என்னுமுண்மை (2990) நன்கு புலனாகும்.

## ஒப்பிலா ஒன்று

நம் தென்தமிழ்நாடே தொன்மை நன்னாடாகும். உலக முழுமைக்கும் மொழிவளத்தால் கடவுட் கொள்கையால் நாகரிகப் பண்பாட்டால் நலம் பல அளித்து அன்றும் இன்றும் என்றும் தலைசிறந்து நிற்பது நம் பொன்னாடாகிய தமிழ்நாடே. சிவனெனியும் செந்தமிழும் உயிரும் செயிர்தீர் உடம்பும்போல் பிரிவின்றி இயைந்தியங்குவன. அவை, மாற்றரும் வேற்றுமை அகற்றி ஆற்றரும் ஒற்றுமைதேற்றிப் போற்றியொழுகச் செய்யும் பொற்பின.

இதன்கண் ஒப்பிலா ஒரு நூல் எனப் போற்றிப் பயிலத் தக்கது நம்பிரான்மூலர் நவின்றருளிய திருமந்திரமாலை யென்னும் தமிழ்மூவாயிரமாகும். இதன்கண் ஒன்பது தந்திரங்களும், நூற்றுத்தொண்ணூற்றைந்து உட்பிரிவுகளும் காணப்படும் முறைமைகளை மேலே ஒருசிறிது விரித்து விளக்கினும். இதன்கண் காணப்படும் யோகமுறைகளும், சக்கரமுறைகளும், பொறியடையாளங்களும் நன்கு பயின்றார் வாயிலாகத் தெளிவு பெறுவது சிறப்பு. அதன்பொருட்டு இந்நூல் முழுவதுமே கற்றற்கும், தெளிவுபெறுதற்கும், கைக்கொண்டுற்று ஒழுகுதற்கும் அரியதென்று கருதுதல் நன்றாகாது. ஏனைப்பாடல்கள் எளிமையும் இனிமையும் இயல்பாகவே அமைந்து செம்பாகமாகப் பொருள் விளங்குவன. அரிதுணர் பொருளவாய் ஆசான் வாயிலாகப் பொருள் விளங்கவேண்டுவனவாயுள்ள பாடல்கள் பத்து விழுக்காட்டுக்கும் குறைவாகவே காணப்படுகின்றன. இந் நூலால் தமிழுலகம் உறுதிப்பாடாக மேற்கொள்ளவேண்டிய ஓர் அழியாவுண்மை நன்கு புலனாகும். அஃதாவது, ஆரியமொழியே ஆண்டவன் வழிபாட்டிற்குச் சீரியதென்னும் பொருந்தாக் கொள்கையினை இருக்கிடம் சுவடறியாவாறு அகற்றுவது. மேலும் வேதாகமங்கள் ஆரியமொழியிலேயே தான் இருத்தல் வேண்டும், ஏனைய மொழிகளில் மொழிபெயர்த்தல் ஏற்புடையதன்று என எண்ணுதுரைக்கும் நண்ணார்மொழியினை நாட்டிலும் ஏட்டிலும் ஒருசிறிதும் இடம்பெறுவாறு ஓட்டுவது. அம்மட்டோ? இஃதொரு நூலுமே இருக்கிற திருவருள் நூல்களில் தொன்மை வாய்ந்த செந்தமிழ் வேதாகமச் செழுநூலென உளங்கொளக்கொண்டு வணம்பெற வாழ்வது. விரிவஞ்சி இத்துடன் நிறுத்துதும்.

பொதுமுறையாக இன்றியமையாச் சில பல ஈண்டுக் காட்டுதும். அதுகொண்டு ஏனையவற்றை விரித்துக் காணுமாறு செந்தமிழன்பர்களையும், செந்நெறிச் செல்வர்களையும், சிவனுணர் தவத்தரையும் பன்முறையும் பணிந்துவேண்டுதும். அவை வருமாறு: ஆரியர்கள் அன்றுதொட்டு இன்றுகாறும் மடிதற்றுநின்று பறையறைந்தாற்போன்று பகர்வது பல கடவுள், பல இனம், பலநிலை. அவற்றிற்கு முற்றுமாறுகச் செந்தமிழ்வாணர் சிரிதின் மொழிவது ஒன்றே கடவுளும், ஒன்றே இனமும், ஒன்றே நிலையும் என்பதாம். அவ்வுண்மை 'ஒன்றே குலமும்' (2066) என்னும் திருப்பாட்டாற் பெறப்படும். அவ்வொன்றும் விழுமிய முழுமுதற் சிவபெருமானே என்பது 'சிவனெனடொக்கும்' (4) என்பதனால் விளங்கும். அவனைச் செந்தமிழ்த் திருமாமறை வழியாக வழிபடுமாறு காட்டியருள்பவன் சிவகுருவாவன். அது 'சிவனை வழிபட்டார்' (2080) என்பதனால் விளங்கும்.

அவனை வழிபடுவது செந்தமிழினாலேயேதான் என்பதும், அதுவே 'மாதவம் செய்த தென்றிசை'ப் பிறந்தார் பெறும்பயன் என்பதும், சிவபெருமானின் திருவுள்ளக் குறிப்புமாம என்பதும் 'பின்னைநின்' (152) றென்னுமை திருப்பாட்டான் விளங்கும். இதன்கண் 'தன்னை நன்முகத் தமிழ் செய்யுமாறு' என்பது, சிவபெருமானைச் செந்தமிழ்த் திருமாமறை ஓதி அவனவர்களையும் பொருள் புரிந்து விரும்பி மகிழ்ந்து வழிபடுமாறு செய்து தாமும் தவறாது வழிபடுவதென்பதாம். அச் சிவபெருமான் ஏனையோர் கூறும் கடவுளர் போன்று பிறப்பு இறப்பிற் குட்பட்டவரல்லர் என்பதும், பிறப்புக்கடவுளரால் சிறப்போடு வழிபடப் பெறுபவர் என்பதும், 'பிறப்பில்' (148) என்றும் திருப்பாட்டான் விளங்கும். முப்பொருள் உண்மை சாற்றும் முத்தமிழ் வேதம் சதாசிவக் கடவுள் திருவருள் பெற்ற மெய்யுணர் தவத்தோரால் வெளிப் போந்தது. அவ் வுண்மை 'சதாசிவம்' (149) என்பதனால் விளங்கும். அச் சிவபெருமான் அமரும் திருக்கோவில் அடியார் திருவுள்ளம். அஃது 'உள்ளம்' (1792) என்னும் திருப்பாட்டான் விளங்கும். சிவ வழிபாட்டில் நம்முடையதென நம்மால் ஒப்புவிக்கத் தக்கது செந்தமிழ்த் திருமுறைத் திருப்பாட்டொன்றுமேயாம். அது 'வேட்டவி' (1793) என்பதனால் விளங்கும். சிவபெருமானைச் சிவலிங்கத்து வழிபடுவது 'பான்மொழி' (1794) என்பதனால் விளங்கும். வழிபாட்டிற்கு இன்றியமையாது வேண்டத்தக்கன ஐந்தமிழ்தும், பதினாறு முகமனுமாம் என்பது 'மஞ்சன' (1796) என்பதனால் விளங்கும். முகமன் - உபசாரம், சிவபுண்ணியம் செய்வார்க்குப் பூவும் புனலும் எளிமையும் இனிமையும் சிறப்பு முள்ளன என்பது

'புண்ணியம்' (1797) என்பதனால் விளங்கும். திருக்கோவிலின் சிறந்த அமைப்பே முப்பொருள் உண்மை செப்பும் என்றும் பொன்றுது நின்று நிலவும் ஒவிய நூல் என்பது 'ஆயபதிதான்' (2372) என்பதனால் விளங்கும். முப்பொருள் தொன்மையே உள்ளன எனபது 'அறிவறி' (2366) என்பதனால் விளங்கும். பிரமன் முதலிய அனேத்து நிலையினரும் ஆருயிர் இனங்களே யாம் என்பது 'பசுப்பல' (2367) என்பதனால் விளங்கும். படைப்பு, முதலிய அருட்டொழில்கள் ஆருயிர்களின் நன்மைக் காகவே ஆண்டவன் அவ்வுயிர்களுடன் புணர்ப்பாய் நின்று புரி கின்றனன். அது 'படைப்பு' (2379) என்பதனால் விளங்கும்.

எல்லா மறையினும் முந்தியதும், சிறந்ததும், பொருள் உண்மைப் பொற்பதும் ஒருங்கு வாய்ந்தது செந்தமிழ்த் திருவைந்தெழுத்தே. அஃது 'ஒன்று கண்டீர்' (2922) என்பத னால் விளங்கும். ஆருயிர் பேருயிராகிய சிவனுதற்கு அச் சிவ பெருமான் வைத்துள்ள குறிகை 'சிவயநம.' அஃது 'எளிய' (2659) என்பதனால் விளங்கும். திருவைந்தெழுத்துத் தனித் தனிப் பொருளுணர்த்தும் ஐந்து சொற்களின் முதலெழுத்து. அது 'சிவனரு' (2661) என்பதனால் விளங்கும். அவ் வைம் பெரும் சொல்லும் வருமாறு : சிறப்பு, வனப்பு, யாப்பு, நடப்பு, மறைப்பு என்பன. 'சிவசிவ' (2667) என்னும் செந்தமிழ்த் திருமாமறை எப்பொருளும் தெளிக்கும் செப்பரிய ஒப்பறு மந்திரம். இத் திருப்பாட்டில் 'சிவ சிவ' என்பது ஒன்பது முறை வருகின்றது. அதனால் இத் திருப்பாட்டைப் பன்னிரண்டு முறை அன்புடன் ஓதினால் இன்பருளும் சிவவுரு நூற்றெட்டுக் கண்ணியதாகும். சிவயசிவ என்பதன் மேனிலையே 'சிவசிவ' என்பதாகும். அது 'சிவாய' (2669) என்பதனால் விளங்கும்.

அச் சிவபெருமானைத் திருமுறைப் போற்றித் தொடர் புகன்றே வழிபடுதல் வேண்டும். அது 'போற்றி என்பார்' (44) என்பதனால் விளங்கும். 'முன்னவனுர் கோவில் பூசைகள்' செந் தமிழால் முட்டின்றி நடைபெறுதல் வேண்டுமென்பது 'முன்ன வனுர் (501) என்னும் திருப்பாட்டான் விளங்கும். அப் பூசை யினைப் 'பேர்கொண்ட பார்ப்பான்' தன் ஆரிய மறையினால் செய் வது போக்கலாகாப் புரை தருவதாகும். அதனால் அவன் பூசை செய்வது அடாது. அது 'பேர்கொண்ட' என்னும் (502) திருப் பாட்டான் உணரலாம். புரை : கருதிய நன்மை யொழியக் கருதாத தீமை பயத்தல். அவ் வாரியப் பார்ப்பனர்க்கு ஈயும் அகரமாகிய குடியிருப்பினால் நாட்டுக்கோ மொழிக்கோ நன் னெறிக்கோ ஏதும் நலமின்று ; சிவஞானிக் கீவீதை சிறப்புடைய தென்பதாம். அஃது 'அகர' (1824)ம் என்பதனால் விளங்கும்.

காயனார் இதன்கண் விளக்கியருள எடுத்துக் கொண்ட அரும்பெரும் பொருள்கள் எட்டென்ப. அவ் வெட்டும் முறையே அறியப்படும் பொருள், அறிவு, அறிவோன், உடல் மெய், உணர்வுமெய், உணர்த்துமெய், வனப்பாற்றல், சிவன் என்ப. இவ்வுண்மை 'ஞேயத்தை' (154) என்னும் திருப்பாட்டானுணரலாம். 'தன்னை' (1406) என்னும் திருப்பாட்டும் இதனுடன் ஒத்துக் காண்க. விழுமிய முழுமுதற் சிவபெருமானை எதிர் மறைமுகத்தான் வலியுறுத்தருளிய திருப்பாட்டு 'உரு விலி' (2900) என்பதாகும். இத் திருப்பாட்டினை அடி யொற்றியதே சிவஞான சித்தியாரிற் காணப்படும் 'சிவனருவுருவுமல்லன்' என்னும் திருப்பாட்டு. இத்தகையோரே 'சைவசித்தாந்தர்' என விளக்குவது 'கற்பன' (1396) எனத் தொடங்கும் திருப்பாட்டு; இதனை அடி யொற்றியது சிவஞான சித்தியாரின் 'புறச் சமய நெறி நின்றும்' என்னும் திருப்பாட்டு. சித்தாந்தச் செந்நெறி நிற்போர் அடிச் சார்ந்தார் ஆவர்: இவரையே சிவன் முத்தரென்பர். சித்தாந்தம் ஒன்றுமே சிவனைக் காட்டும் சிறுடையது. இவ் வுண்மை 'சித்தாந்தத்' (2355) தே என்னும் திருப்பாட்டான் விளங்கும். சைவம் சிவத் தொடர்புடையது என்பது 'சைவஞ் சிவனுடன்' (1486) என்னும் திருப்பாட்டானுணரலாம். அருஞ் சைவர்மெய் முப்பத்தாறென்பதும், மெய்யாகிய தத்துவக் கொள்கையினை வைத்தே குறிக்கோளாம் சமயங்கள் வகுக்கப்பட்டன என்பதும், அவை சித்தாந்தம், வேதாந்தம், வைணவம், மாயாவாதம் என நான்கே என்பதும் 'ஆகின்ற' (2139) என்னும் திருப்பாட்டானுணரலாம். ஈண்டுக் கூறும் வேதாந்தம் தமிழ்வேதாந்தம் என்க. தழல் வண்ணனாகிய சிவ பெருமான் செய்தருளும் இருவகை நலமும் விளக்குவது 'சார்ந்தவர்க்' (2075) என்னும் திருப்பாட்டு. சித்தாந்த நெறியினர் சித்தர் எனப்படுவர். அவர்தம் அருமறை 'சிவய சிவ'. அதுவே தமிழ்மண்டிலம் ஐந்து. அதுவே மெய்ஞ்ஞானம்; அதனை எங்ஙனும் பரப்புவோர் சித்தர். இவ் வுண்மை 'தமிழ் மண்டலம்' (1619) என்னும் திருப்பாட்டானுணரலாம். அறிந்தோர் சிவ பெருமான் திருவடியன்றி மற்று யார் பாடுஞ் சாரார். என்னை? 'சிவபெருமான் திருவடியே சேரப் பெற்றார் ஆதலா'னென்க. அஃது 'ஆராலும்' (2920) என்னும் திருப்பாட்டான் உணரலாம். 'சங்கந்தரு' (அந்) என்னும் திருச்சிற்றம்பலக் கோவையாரின் திருப்பாட்டு இதனை டொத்து இன்புறற்பாலது.

**பயிற்றும் பள்ளி**

பன்னிரு திருமுறையும் பதினன்கு மெய்கண்ட நூல்களும் பயிற்றும் பொதுப்பள்ளி திருக்கோவில்களாகும். பயில்வார்

கற்றவரும் மற்றவரும் பெருமக்களுமாவர். பயிற்றுவிப்பார் திருக் கோவில் அந்தணக் குருக்கண்மார்களும், அறங்காவலரும், அதற் கென அமர்த்தப்பட்ட ஆசிரியன்மார்களும் ஆவர்.

மேற் குறித்த தெய்வத் தமிழ்நூல்கள் ஓதற்கும் ஓதுவிப்ப தற்குமுரிய சிறப்புப்பள்ளி திருமடங்களாகும். பயில்வார் அற வோரும் துறவோரும் ஆவர். பயிற்றுவிப்பார் திருமடத் தலைவர் களும் அதற்கென அமர்த்தப்பட்ட ஆசிரியன்மார்களுமாவர். தொழுகைக் கூடங்களும் திருமட மாண்பைச் சேர்ந்ததே. அனைவர்களும் பயின்றவற்றை நினைவுகூரும் நிலையம் அவரவர் களின் இல்லங்களாகும். இவ்வாறல்லாமல் அவற்றைப் பயில்வது எவர்க்கும் ஒல்லாது. இவற்றைப் பயிலாமல் சிவ மெய்யுணர்வு எவர்க்கும் கைவரப்பெறாது. கல்லூரிகளில் இவற்றின் சார மாகிய பிழிவுகளும் குறிப்புகளும் உளங்கொளுமாறு அளவாகக் கற்பித்தல் வேண்டும்.

இவைகள் அனைத்தும் தனித்தமிழ் முதல் நூற்களே. எந்த அயன் மொழியினின்றும் மொழி பெயர்த்தவை யல்ல. நாள் விழா, சிறப்புவிழா, குடமுழுக்கு முதலிய வழிபாடுகளனைத் திலும் இவ்வருள் நூற்கள் ஓதியே வழிபடுவித்தல் வேண்டும்; வழிபடுதலும் வேண்டும். சமய உண்மைகள் உணராதார் எங்ஙனம் அமைதியாக வழிபடுவர்? திருக்கோவில்களில் அமைதி நிலவ வேண்டுமென வாளா சொல்லுவதால் மட்டும் யாதுபயன்? புறச் சமயத்தார் கைக்கொண்டொழுகும் சமய ஒழுங்குகள் யாண்டும் ஒன்றுபோல் அமைந்து ஒற்றுமை நலங்காட்டுகின்றன. அகச்சமயத்தையும் உள்ளடக்கிப் பிணக்கம் ஒரு சிறிதும் இன்றி இணக்குவித்துக் கொண்டிருக்கும் சித்தாந்தப் பெருநெறி ஓர் ஒழுங்குட்பட்ட விழுமியநெறி போன்று தெளியப் புலனாகாமல் மழுங்கி நிற்கின்றது. தெய்வத் தன்மை வாய்ந்த இத் திருமந்திர மாலை என்னும் ஒரு நூலே ஏனைய இருபத்தைந்து நூற்களுக்கும் மூதனூலாய்க் கருவூலமாய்ச் செந்தமிழ்மறை முறையாம் வேதாகமமாய் விளங்குகின்றது. அவ் விளக்கம் மேல் விரித்துக் கூறினும். அதனால் இவ் வொரு நூலைத் தாய்நூலாகவும், ஏனைய இருபத்தைந்தினையும் சேய்நூலாகவும் மற்றைய அருள் நூல் களைத் துணை நூல்களாகவும் கொண்டு ஓதியும் ஓதுவித்தும் வருதல் சால்புடைத்தாகும். ஆளுடைய பிள்ளையார் அருளிய "வையக முந்துயர் தீர்கவே" என்னும் தமிழ்மறையின் வேறொருருவே 'நான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்' (147) என்னும் திருமந்திரத் திருப்பாட்டு.

இத் திருமந்திரமாலையினை வழிப்பேற்றினராம் வானவர் திருமுறையோடு சேர்த்துச் சிறப்புற ஓதிச் சிவனை வழிபடுபவர்

என்பது 'பிறப்பிலி' (148) என்னும் திருப்பாட்டால் தெளிவுறுத்தப்பட்டுள்ளது. அங்ஙனமாயின் நாம் ஓதி வழிபடுதல் வேண்டுமென்பது எத்துணை இன்றியமையா இயற்கையெனக் கூறுமே புலனுகும். மேலும் சிறப்புப்பாயிரம், திருமந்திரத் தொகைச் சிறப்புள் இரண்டாவது திருப்பாட்டு வருமாறு :

"மூலன் உரைசெய்த மூவா யிரந்தமிழ்
ஞாலம் அறியவே நந்தி அருளது
காலே எழுந்து கருத்தறிந் தோதிடின்
ஞாலத் தலேவியை நண்ணுவ ரன்றே."

நம்பிரான் மூலர் வாயிலாக வெளிப்போந்து அவர் உரை செய்தருளிய தெய்வத்திருத் தமிழ் ஒரு மூவாயிரம் என்ப. உண்மையான் நோக்குவார்க்கு அது நந்தியருளிய அருளிப்பாடாகும். இவ் வருளிப் பாட்டை 'பழுதிலிறை எழுது மொழியெனவும்' 'விழுமிய தமிழ் முனிவன் மூலன் வழிமொழிகள்' எனவும் வழங்குவதே வாய்வதாகும். இறை எழுது மொழி யென்பது தெய்வத் திருவருள் கைவந்த அடிச் சார்ந்தார் அருளுணர்வகத்துப் பொருண் மொழிகள் வெளிப்படுதற்கு வேண்டும் முதலாம் நுண்ணேசையினே மிக நுண்ணிதாக எழுப்புவது. வழிமொழிகள் என்பது தஞ்செயலற்றுச் சிவனுர் திருவருட் செயலாய் வந்தவாறே வாய் மொழிவது. இவ் வுண்மை வரும் ஆளுடைய பிள்ளேயார் திருப்பாட்டான் உணர்க. "பழுதிலிறை யெழுது மொழி தமிழ்விரகன் வழிமொழிகள் மொழிதகையவே" (கூ. சுள - கஉ). அங்ஙனம் வெளிப்போந்தது திருவருள் நினேவால் ஞாலத்தார் அறிந்து ஓதிச் சிவபெருமானே இத் திருமந்திரத் திருப்பாட்டால் வழிபட்டு உய்யும் நெறி உணர்தற்கேயாம். இதுவும் பிள்ளேயாரருளிய "ஞால நின்புக ழேமிக வேண்டுந்தென், ஆலவாயி லுறையுமெம் மாதியே" (கூ. ககக - க) என்னும் அருளிப்பாட்டால் இனிது விளங்கும். "காலே எழுந்து கருத்தறிந் தோதிடின்" என்பது, ஒவ்வொரு நாளும் வைகறையிலெழுந்து செய்வன செய்து சிறப்புடனிருந்து ஓதினல் என்பதாம். அதனேயே இரட்டுற மொழிந்து வழிபாட்டிற்கு எனவகுத்த காலங்கள் தோறும் அதற்கு வேண்டும் துணேப்பொருள்களுடன் எழுந்து திருமந்திர மாலேத் திருப்பாட்டினே வழிபடுவார் அனேவர்களும் கருத்துணருமாறு ஓதி வழிபாடு செயின் எனக் கூறுதலுமாம். இப் பொருட்குக் காலே - காலம்; ஐ : சாரியை, அம் : கடைக்குறை. கருத்தறிந்து - கருத்தறிய : எச்சத் திரிபு. ஓதிடின் - ஓதி வழிபட்டால் : சொல்லெச்சம். வழிபடுதற்குரிய திருஇடங்கள் எல்லார்க்கும் இன்ப நலம் எளிதிற் பயிற்றுமிடமாம் திருக்கோவில்களும், பயிற்றுவிக்கும் பான்மை வாய்ந்த நல்லார்

பல்லோர் நாளும் பயிலும் நல்லுறையுளாம் திருமடங்களும், சொல்லார் தொழுகைக் கூடங்களும், வல்லார் வாழும் நல் இல்லங்களும் பிறவுமாம்.

வழிபாட்டினுக்குரிய காலம் நான்கு. அவை : காலை, நண் பகல், மாலை, நள்ளிரவு என்பன. இவ் வுண்மை வரும் அம்மை யார் திருவெண்பாவானுணரலாம் :

"காலையே போன்றிலங்கும் மேனி கடும்பகலின்
வேலையே போன்றிலங்கும் வெண்ணீறு—மாலையின்
தாங்குருவே போலும் சடைக்கற்றை மற்றவர்க்கு
வீங்கிருளே போலு மிடறு."(கக.அற்புதத் திருவந்தாதி, சுஞ)

இந் நான்கு பொழுதுகளும் ஒரு புடையொப்பாக அறம், பொருள், இன்பம், வீடு என்பனவற்றையும்; சீலம், நோன்பு, செறிவு, அறிவு என்பனவற்றையும் விழைவார் வேண்டி வழிபடப் படும் விழுப் பொழுதுகளாகும்.

இத் திருமந்திரத் திருப்பாட்டுக்கள் ஆனைத்தும் வெண்டளை பிழையாது ஈராறெழுத்தாகிய பன்னிரண்டின் மிகாக் கட்டளை பெற்று விளங்குகின்றன. ஒழுகிய இன்னோசையுடையன. இத் தகைய யாப்பொன்றே இதன் காலத் தொன்மையைச் சால விளக்கும் பெற்றி வாய்ந்தது. இப்பன்னிரண்டென்னும் எழுத் தமைப்பு நம் செந்தமிழ் மொழியின் உயிர் பன்னிரண்டினையும்; திருமுறை பன்னிரண்டினையும், மெய்கண்டார் தமிழ் நூற்பா பன்னிரண்டினையும் வரைசெய்துணர்த்தும் வாய்மை பெரிதும் போற்றிப் புகழ்தற்குரியது. இதுபோன்று முன்னும் பின்னும் ஓதும் முதுமறை 'திருச்சிற்றம்பலம்' என்பதாகும். அவை அவ்வாறெழுத்துக்களாலாயவை. எனவே அவை இரண்டுங் கூடிப் பன்னிரண்டாகும். இவையும் மேலவற்றை வலியுறுத்தும் மேம்பாட்டினவாகும். எழுத்துச் சுருக்கம் இயற்சீர் வெண்டளை யான் வரும் வெண்பாவில் மட்டுந்தான் காணப்படும். அதுவும் பன்னிரண்டெழுத்தேயாம். அகவலின்கண் இதனினும் எழுத் துச் சுருக்கம் காணுப்படினும் அஃது அடிவரையறைசேர் பாட் டெண்ணிக்கையை உடையதன்று. அப்பரடிகள் அருளிய செப் பருந் திருக்குறுந் தொகை நேர் பதினென்றும் நிரைபன்னிரண்டு மாகக் காணப்படினும் முதலயற்சீர்களே வெண்டளை விரவி வருகின்றன.

இத்தகைய பெருநூலுக்குத் தவத்தான் மனந்தூயராய், முக்குணமும் கடந்து தக்க எண் குணமும் சார்ந்து சார்ந்தோர்க் கருளும் சான்றோராய்த், திருவடியுணர்வு கைவந்த சிவத் திரு வினராய், திருக்குறள் மிக்க திருமுறை சித்தாந்தம், உருக்கு

தொல்காப்பிய நூல் ஓதும் ஒண்மையராய், இவற்றின் வாய்மை கீழ் வரையாது வழங்கும் வண்மையராய்த், தண்ணளி வாய்ந்த எண்மைப் பொலிவினராய், அருள் திருமேனியராய் உள்ளாரே பொருளுரைக்கும் பொற்பினராவர். ஒன்றுக்கும்பற்ற நாயேனைக் கருவியாகக்கொண்டு திருவருள் இத்தொண்டினை முற்றுவிக்க முன்னியது மேற்கூறிய தக்கார் முன்வந்து மிக்கதொரு விழுமிய வுரை அருளுதற்குத் தூண்டுந் திருக்குறிப்பாகும். இதன்கண் காணப்படும குற்றம் பொறுத்து அடியேனை ஆட்கொள்ளுமாறு பணிவுடன் பன்முறையும் வேண்டுகின்றேன்.

"கந்தமலர்க் கொன்றையணி சடையான் தன்னைக்
கதிர்விடுமா மணிபிறங்கு கனகச் சோதிச்
சந்தமலர்த் தெரிவையொரு பாகத் தானைச்
சராசரநற் முயானை நாயேன் முன்னைப்
பந்தமறுத் தாளாக்கிப் பணிகொண் டாங்கே
பன்னியநூல் தமிழ்மாலை பாடு வித்தென்
சிந்தைமயக் கறுத்ததிரு வருளி னானைச்
செங்காட்டங் குடியதனிற் கண்டேன் நானே."

(அப்பர். சு. அ - ச.)

"நம்பிரான் மூலரடி நாளும் தலைக்கொண்டு
செம்பொருட்சீர் செந்தமிழ்த் தேயமெலாம்—தம்பொருளாய்ப்
போற்றத் தூணைசெய்யும் பொய்யில் திருத்தொண்டாய்
ஆற்றவருள் தந்ததடி யேற்கு."

"திருமன்னும் மறைமுறையும் தீந்தமிழால் ஞாலம்
தேறிவழி பாடியற்றச் செப்பியநம் பெருமான்
திருமூலர் அருளாளர்க் கொருமூலர் வாழ்க
செப்புதிரு மந்திரமூ வாயிரமும் வாழ்க
பெருகும்அறம் பொருளின்பம் வீடுடனே பேறு
பேற்றுவழி பூசைவழி பாட்டுறுதி வாழ்வு
ஒருநான்கோ டைந்தாந்தந் திரமொன்பான் வாழ்க
ஓதிவழி பாடியற்றும் ஒண்மையர்வா ழியவே."

மூவாயிரம் இரட்டுறமொழிதலால் மூவா + இரம் எனக் கொண்டு என்றும் பொன்றுதிருத்தல் எனலுமாம். இரம்—இருத்தல். வருதல் வரம் என்பது போலாம் இது. பூசை-வழிபாடு.

"எம்பிரான் ஞானசம் பந்தர் நாவினுக் கரசரா ரூர்வாழ்
தம்பிரான் தோழரா ரூரர் மணிமொழி யார்தமிழ் நால்வர்
நம்பிரான் மூலரோ டைவர் நற்'சிவ யசிவ' நல்லார்
ஐம்பெரும் சைவநல் லாசான் அடியிணை வாழிய அன்றே."

திருக்ககற்றும் தொகைமறையில் சிவனருளால் நம்பி
செந்தமிழால் எம்பிரான் சம்பந்தன் என்றும்
உருக்கமிகு நம்பிரான் திருமூலன் என்றும்
ஓதும்உண்மை உய்த்துணரின் ஓரிருவர் தாமும்
பெருக்கமிகு செந்நெறியைப் பேணிவளர்த் தாண்ட
பெட்புநிறை சிவனரும் சிவையாரும் ஆகும்
சுருக்கமிலாக் கருத்துணர்த்தும் துணைமையதென் றேநாம்
தொழுதெழுவோம் வழுவாது துணையடிகள் சேர்ந்தே.

சேர்ந்தஇரு மூலரவர் செந்தமிழால் வையம்
சிறந்தோங்கி வாழ்ந்திடவும் செந்நெறியின் மாண்பே
ஆர்ந்தஇரு பாலாரும் அகங்கொண்டு போற்றி
அன்பருளால் இன்புற்றிங் கடிதொழுது வாழ்த்திக்
கூர்ந்தவழி பாடனைத்தும் அத்தமிழால் நாளும்
குறிக்கொண்டிங் காற்றிடவும் எண்குணத்தான் தாள்கள்
நேர்ந்தமனத் தாற்றெழுது ஐங்குரவர் நீடு
நிறைமலர்த்தாள் தலைக்கொண்டு வாழ்ந்திடுவம் மாதோ.

''வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாமரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.''
(ஆளுடைய பிள்ளையார் கூ. இசை. – க.)

''என்றும் இன்பம் பெருகும் இயல்பினோடு
ஒன்று காதலித் துள்ளமும் ஒங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி யுலகெலாம்.''
(கூ. வெள்ளானை, இசை.)

''ஐந்தெழுத்து நீறுமணி ஐங்குரவர் தந்தமுறை
முந்துசித்தாந் தம்மொடும்வாழ் க.''

திருச்சிற்றம்பலம்

அடியார்க்கு அடியன்
திருவள்ளுவரகம்,
**ப. இராமநாதன்.**

# முகவுரை

## கு. பாயிரம்

"ஆயிர முகத்தான் அகன்ற தாயினும்
பாயிரம் இல்லது பனுவல் அன்றே"

என்னும் சூத்திரப்படி ஒருநூற்குப் பாயிரம் உரைப்பது நூன் முறையாகும். அம் முறைப்படி நாயனரும் "தமிழ் மூவாயிரத்" துக்குப் பாயிரம் கூறியுள்ளார்.

மூவாயிரம் செய்யுட்களில் பாயிரச் செய்யுட்கள் சேர்ந் தனவே யாயினும், ஒன்பது தந்திரங்களுக்கும் அது பொது.

நாயனர் கூறியது ஒன்பது தந்திரங்களே என்பது.

"தந்திரம் ஒன்பது சார்வு மூவாயிரம்
சுந்தரன் ஆகமச் சொன்மொழிந் தானே."

என்ற சிறப்புப்பாயிரப் பாசுரத்தால் விளங்கும்.

பாயிரம், பொது, சிறப்பு என இருவகைப்படும். நாயனர் கூறியது பொதுப்பாயிரம். அவர் மாணக்கர்கள் கூறியது சிறப் புப் பாயிரம். தற்காலம் அச்சிடப்பட்டு வெளிவந்திருக்கின்ற புத்தகங்களில் இவ்விரண்டினையும் வேறு பிரியாது அச்சிட்டிருக் கின்றனர். அதனால் படிக்கிறவர்களுக்கு எது நாயனர் பாடல், எது அவருடைய மாணக்கர்களுடைய பாடல் என வேறு பிரித்து அறிவது கடினமாயிருக்கிறது. அக் குறையையும் ஒருவாறு கண்டு நீக்கியுள்ளேன்.

நாயனர் ஒன்பது ஆகமங்களின் கருத்தைத்தான் ஒன்பது தந்திரங்களாகப் பாடினர் என்பது.

"அந்தி மதிபுனை அரனடி நாடொறும்
சிந்தை செய்துஆகமம் செப்பலுற் றேனே"

என்னும் பாயிரச் செய்யுளால் விளங்கும்.

ஆகமங்கள் இருபத்தெட்டு ஆயிற்றே; நாயனர் ஒன்பது ஆகமங்களைப்பற்றி மாத்திரம் ஏன் கூறவேண்டும் என்பார்க்கு, சதாசிவநாயனர் வெளியிட்டது இருபத்தெட்டு ஆகமங்கள் என் றும், அவைகளில் நந்தி என்று பேர்பெற்ற சீகண்ட உருத்

திரர்க்கே ஒன்பது ஆகமங்கள்தாம் கிட்டின என்றும், அவ் வொன்பது ஆகமங்களையே நந்தியெம்பெருமான் திருமூலர் முதலிய தம்முடைய எட்டுச் சீடர்களுக்கு அருளினர் என்றும், ஆகையால், இப் பூவுலகிற்குக் கிட்டினதே ஒன்பது ஆகமங்கள் தாம் என்றும், ஆதியில் கல்லால் நீழலிலும், மகேந்திர மலை யிலும். திருப்புறம்பயத்திலும் ஒவ்வொரு காலங்களில் வெளி யிடப்பட்ட ஆகமங்கள் எல்லாம் மறைந்துபோகவே இறைவ னுடைய ஆணையால் அவ்வொன்பது ஆகமங்களின் கருத்துக்களை ஒன்பது தந்திரங்களாக நம் நாயனார் பாடி உலகர்க்கு உபகரித்து உள்ளார் என்றும் அடியில் காட்டப்படும் அவருடைய பாசுரங் களால் வெளியாம்.

ஆகமங்கள் இருபத்தெட்டு என்பது

"அஞ்சன மேனி அரிவையோர் பாகத்தன்
அஞ்சொ டிருபத்து மூன்றுள ஆகமம்"

என்பதால் அறியலாம்.

ஒன்பது ஆகமங்கள்தாம் சீகண்டர் பெற்றார் என்பது

"சிவமாம் பரத்தினில் சத்தி சதாசிவம்
உவமா மகேசர் உருத்திர தேவர்
தவமால் பிரமீசர் தம்மிற்றும் பெற்ற
நவஆ கமம்எங்கள் நந்திபெற் றனே"

என்னும் பாசுரத்தால் அறியலாம்.

அவ்வாகமங்கள் இன்னவென்பது

"பெற்றநல் ஆகமம் காரணம் காமிகம்
உற்றநல் வீரம் உயர்சிந்தம் வாதுளம்
மற்றவவ் வியாமளம் ஆகுங்கா லோத்தரம்
துற்றநற் சுப்பிரம் சொல்லும் மகுடமே"

என்னும் பாசுரத்தால் விளக்கமாம்.

ஆதலின் முதற்றந்திரம் காரண ஆகமத்தின் சாரமாகவும், இரண்டாம் தந்திரம் காமிக ஆகமத்தின் சாரமாகவும், மூன்றும் தந்திரம் வீர ஆகமத்தின் சாரமாகவும், நான்காம் தந்திரம் சிந்தியா கமத்தின் சாரமாகவும், ஐந்தாம் தந்திரம் வாதுள ஆகமத்தின் சாரமாகவும், ஆறும் தந்திரம் வியாமள ஆகமத்தின் சாரமாகவும், ஏழாம் தந்திரம் காலோத்தர ஆகமத்தின் சாரமாகவும், எட்டாம் தந்திரம் சுப்பிரபேத ஆகமத்தின் சாரமாகவும், ஒன்பதாம்

தந்திரம் மகுட ஆகமத்தின் சாரமாகவும் அமைந்திருப்பது விளங்கும்.

சதாசிவ மூர்த்தியானவர் இருபத்தெட்டு ஆகமங்களையும் பிரணவர் முதலிய பதின்மருக்கும், மகாஉருத்திரர் முதலிய பதினெண்மருக்கும் ஓரோவொன்று ஒவ்வொருவருக்கும் அருளிச் செய்தார். இதனை,

"எஞ்சலில் விஞ்ஞகர் இருபத் தெண்மரும்
அஞ்சா முகத்தில் அரும்பொருள் கேட்டனர்"

என்ற பாயிரச் செய்யுளால் அறியலாம்.

ஆனால் ஒன்பது ஆகமங்களையும் ஒருங்கே பெற்றவர் நூற்றுப் பதினெட்டு உருத்திரர்களில் முதல்வராகிய சிகண்ட உருத்திரர் ஆவர். அவரைத்தான் "சிவமாம் பரத்தினில்" என்ற பாசுரத்தில் நாயனார் "நந்தி" எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஒன்பது தந்திரங்களிலும் நாயனார் விளக்கியுள்ளவை எவை என்பது,

"ஞேயத்தை ஞானத்தை ஞாதுரு வத்தினை
மாயத்தை மாமாயை தன்னில் வரும்பரை
ஆயத்தை அச்சிவன் தன்னை அகோசர
வீயத்தை முற்றும் விளக்கியிட் டேனே"

என்னும் பாசுரத்தால் விளங்கும்.

நாயனார் திருமந்திரப் பாட்டுக்களைத் தமிழ்மொழியிலேயே தான் பாடினார் என்பது,

"என்னை நன்னுக இறைவன் படைத்தனன்
தன்னை நன்னுகத் தமிழ்செய்யு மாறே"

என்ற நாயனார் வாக்காலும்,

"மூலன் உரைசெய்த மூவா யிரந்தமிழ்"

என்ற அவர் மாணாக்கர் வாக்காலும்,

"ஒன்றவன்றான்" என எடுத்து நாயனார் திருமந்திரத்தைத் தொடங்கினர் எனச் சேக்கிழார் பெருமான் பெரிய புராணத்தில் கூறுமாற்றாலும் அறியலாகும்.

தமிழ் மூவாயிரம் என்னும் திருமந்திரமானது நாயனார் மூல னுடைய உடம்பில் புகுந்த பின்னர்த்தான் செய்யப்பட்டது என்பது,

"அகலிடத்தார் மெய்யைப் அண்டத்து வித்தை
புகலிடத்தெம் மெய்யைப் போகவிட் டாணை"

என்ற பாசுரத்தாலும்,

"இருந்தேன் இக் காயத்தில் எண்ணிலி கோடி"

என்ற பாசுரத்தாலும் அறியலாம்.

தமிழ் மூவாயிரம் என்னும் திருமந்திர நூலைத் திருவாவடுதுறையில் அரசமரத்தின் அடியில் தவமிருந்துகொண்டு படித்து முடித்துத் தம்முடைய ஏழு சீடர்களுக்கும் நாயனார் புகட்டி வந்தார் என்பது,

"சேர்ந்திருந் தேன் சிவ மங்கைதன் பங்கனை
சேர்ந்திருந் தேன்சிவ னுவடு தண்டுறை
சேர்ந்திருந் தேன்சிவ போதியி னீழலில்
சேர்ந்திருந் தேன்சிவ நாமங்கள் ஓதியே"

என்ற பாசுரத்தாலும் அறியலாம்.

"மந்திரம் பெற்ற வழிமுறை மாலாங்கன்
இந்திரன் சோமன் பிரமன் உருத்திரன்
கந்துரு காலாங்கி கஞ்ச மலையனோடு
இந்த எழுவரும் என்வழி யாமே"

என்ற பாசுரத்தாலும் அறியலாம்.

"இருந்த அக் காரணங் கேள் இந்திரனே"

என்ற பாயிரச் செய்யுளில் இந்திரனை முன்னிலைப்படுத்தியும்,

"மாலாங்க னேயிங்கு யான் வந்த காரணம்"

என்ற பாயிரச் செய்யுளில் மாலாங்கனை முன்னிலைப்படுத்தியும்,

"நேர்ந்திடு மூல சரியை நெறியிதென்று
ஆய்ந்திடும் காலாங்கி கஞ்சன் மலையமான்
ஓர்ந்திடுங் கந்துரு கேண்மின்கள் பூதலத்து"

என்ற பாசுரத்திற் காலாங்கியையும் கந்துருவையும் முன்னிலைப் படுத்தியும் நாயனார் கூறுவதால், மேலே "மந்திரம் பெற்ற வழி முறை" என்ற பாசுரத்தில் கூறிய ஏழு சீடர்களில் நால்வர் சம காலத்தவர்கள் என்றும், அவர்கள் எல்லோரும் நாயனாருடன் உடன் உறைந்தவர்கள் என்றும் அறிகிறோம்.

"ஓர்ந்திடுங் கந்துரு" எனத் தனிப்படுத்திக் கூறியுள்ளதால் கந்துரு என்பதே தனிப்பட்ட ஒரு சீடர் பெயர் என்றும், "ஆய்ந்திடும் காலாங்கி கஞ்சன் மலையமான்" என்றதால் அவை

மூன்று சொற்களும் ஒரு சீடரையே குறிக்கும் என்றும் அறி கிறோம். எழுவரில் நால்வர் போக மீதியுள்ள சோமன்—பிரமன்—உருத்திரன்—என்பார் இந் நால்வருக்கும் சற்று மூத்தியவர் ஆவார்.

ஆகமங்கள் ஒன்பதுதாம் என்றும், பின் அவ்வொன்பது ஆகமங்களையும் 28 ஆகமங்களாகப் பிரித்துத் தனித்தனிப்பெயர் கள் கொடுத்து, ஒவ்வோர் ஆகமத்தையும் கருமகாண்டம், ஞான காண்டம், உபாசனாகாண்டம் என மும்மூன்று பிரிவுகளாகச் செய்தார்கள் என்றும், அவைகளே இப்போது சைவ உலகில் வழங்கி வருகின்றன என்றும், ஆதலின் மூலாகமங்கள் ஒன்பதே ஆகும் என்றும் நாயனார்,

"ஆகமம் ஒன்பான் அதிலான நாலேழும்
மோகமில் நாலேழும் முப்பேத முற்றுடன்
வேகமில் வேதாந்த சித்தாந்த மெய்ம்மையொன்(று)
ஆக முடிந்த அருஞ்சுத்த சைவமே"

என்ற பாசுரத்தால் விளக்கியுள்ளார்.

நாயனார் மூவாயிரம் ஆண்டு தவமிருந்து ஆண்டுக்கு ஒரு பாட்டாகப் பாடினார் என்பது எப்படி என்பார்க்கு,

"சராறு கால்கொண் டெழுந்த புரவியைப்
பேராமற் கட்டிப் பெரிதுரை வல்லிரேல்
நீரா யிரமும் நிலமா யிரத்தாண்டும்
பேராது காயம் பிரானந்தி யாணையே"

"உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே"

"மூன்று மடக்குடைப் பாம்பிரண் டெட்டுள
வேன்ற வியந்திரம் பன்னிரண் டங்குலம்
நான்றவிழ் மூட்டை இரண்டையுங் கட்டியிட்
டூன்றி யிருக்க உடல்அழி யாதே"

என்ற பாசுரங்களினால் உடல் அழியாமல் இருக்கும் வழியைத் தான் தெரிந்து உடம்பை அழியாமல் காப்பாற்றினதாகவும், ஏனை யோர்களும் அப்படிச் செய்தால் உடல் அழியாது என்றும் கூறுவதை நோக்க விளங்கும். ஆகையால், நாயனார் மூவாயிர ஆண்டும் அதற்கு மேலும் இருந்ததைப்பற்றி யாரும் சந்தேகம் கொள்ள நியாயம் இல்லை.

நாயனார் நந்தி என்று சொல்லப்படுகின்ற சிகண்டருடையே எட்டு மாணவர்களில் ஒருவர்.

சனகர் - சனந்தனர் - சனாதனர் - சனற்குமாரர் - சிவயோக மாமுனி - பதஞ்சலி - வியாக்கிரமர் - திருமூலர் ஆகிய எண்மரும் நந்தி அருள்பெற்ற நாதர் ஆவார்கள்.

நாதர் : தந்திதாந்த நாமம். நாதர் என்ற மொழிக்கு 'நந்தி அருள்பெற்றவர்' என்பது பொருள்.

இவ்வெண்மரும் தாங்கள் கேட்ட உண்மையை உலகில் மடங்கள் தாபித்துச் சீடர்களைச் சேர்த்துப் பக்குவ ஆன்மாக்களிடத்துப் பரப்பி வந்தார்கள்.

சனற்குமாரருடைய சீடர் சத்தியஞான தரிசினிகள் ஆவர். அவருடைய சீடர் பரஞ்சோதி முனிவர். அவர் சீடர் மெய்கண்டார். அவருடைய பரம்பரையில் ஏற்பட்ட மடங்கள் தாம் திருவாவடுதுறை, தருமபுரம் முதலியவை.

பதஞ்சலி-வியாக்கிரமர் இருவரும் வடதேசத்தில் மடங்கள் தாபித்ததுபோலவே சிதம்பரத்திலும் தாபித்துத் தங் கொள்கைகளைப் பரப்பி வந்ததோடு சிதம்பரத்திலேயே நடனதரிசனம் செய்து சிவத்துடன் கலந்தார் என்றும் அறிகிறோம்.

சிவயோகமாமுனி என்றாலும் சிவமுனி சித்தசன் என்றாலும் ஒன்றே. அவரும் தென்னாட்டில் பல சித்தர்களுக்குப் போதித்துப் பல மடங்கள் தாபித்துள்ளார்.

திருமூலரும் திருஆவடுதுறையில், அமர்ந்து 'மூவாயிரந் தமிழ்' என்ற திருமந்திர நூலைச் செய்து முடித்து, தம்முடைய ஏழுசீடர்களுக்கும் போதித்து அவர்கள் மூலமாக ஆகமங்களின் கருத்துக்களை உலகில் பரவச் செய்தார். அவ்வேழு சீடர்களும் ஏழுமடங்கள் தாபித்துத் தம்முடைய சீடர்களுக்குப போதித்து வந்தார்கள்.

காலாங்கர் என்பதும், காலங்கி கஞ்சமலையன் என்பதும், காலங்கிகஞ்சன் மலையமான் என்பதும் ஒருவரையே குறிக்கும்.

காலாங்கர் என்பவர் மலை மன்னர் என்று சொல்லப்படும். உடையார் வகுப்பைச் சேர்ந்தவர் என்னும், அவர் கஞ்சமலை என்னும் ஊரைச் சேர்ந்தவர் என்றும் அவரைக் கஞ்சமலைச் சித்தர் என்று சொல்வதும் உண்டென்றும் அறிகிறோம். கஞ்சமலை என்னும் ஊரை இப்போது சித்தர்கோயில் என்று வழங்குகிறார்கள்.

நாயனார் தம் திருமந்திர நூலை ஏழு சீடர்களுக்கும் ஒரே தடவையாகக் கூறவில்லை என்றும், இரண்டு தடவையில் கூறினார் என்றும், முதல் தடவையில் சோமன்—பிரமன்—உருத்திரன் ஆகிய மூவர்க்கும், இரண்டாந் தடவையில் ஏனைய நால்வர்க்கும் கூறினார் என்றும்,

> "மொழிந்தது மூவர்க்கும் நால்வர்க்கும் ஈசன்
> ஒழிந்த பெருமை இறப்பும் பிறப்பும்"

என்னும் பாசுரத்தால் அறிகிறோம்.

நாயனார் முதலில் கூறிய ஐங்கரன் வாழ்த்தும், கடைசியில் கூறிய "வாழ்கவே வாழ்க" என்னும் வாழ்த்துச் செய்யுளும் நூலில் சேரா.

"ஒன்றவன்றானே" என்ற செய்யுள் முதற்கொண்டு கூறிய பரசிவப்பெருமை 50 செய்யுட்களும்; மும்மூர்த்திகளின் முறைமை 10 செய்யுட்களும; வேதச் சிறப்பு—7; ஆகமச் சிறப்பு—7; அந்தணர் ஒழுக்கம்—10; அக்கினி காரியம்—10; அரசனது ஆட்சிமுறைமை—10; வான் சிறப்பு—2; அறம் செய்வான் திறம்—10; அறம் செயான் திறம்—10; அவையடக்கம்—2 ஆகச் செய்யுட்கள 68 ம் மொத்தச் செய்யுட்கள் 128 ம் பாயிரமாகும். இப் பாயிரத்தில் தொல்காப்பியப்படி அறுவகை வாழ்த்தும் அடங்கியுள்ள தன்மை கண்டுகொள்க.

குரு பாரம்பரியம்—நாயனார் தம் வரலாறு கூறல் முதலியன நாயனார் தம் சீடர்களுக்கு வரன்முறை தெரியவேண்டிக் கூறியவை; ஆதலால் நூலிற் சேரா.

குருமட வரலாறு—திருமந்திரத் தொகைச் சிறப்பு முதலியன மாணாக்கர்கள் ஓதியவை யாதலால் நூலில் சேரா.

இவை யிரண்டினையும் நூலுக்குத் தற்சிறப்புப் பாயிரமாகவும் சிறப்புப் பாயிரமாகவும் கொள்ளுதல் பொருத்தம்.

அக்காலத்திய இலக்கண நூன் முறைப்படி அறுவகை வாழ்த்துக்களும் பாயிரத்தில் அடங்கும்.

சில படிகளில் பாயிரத்தில் இருக்கவேண்டிய அந்தணர் ஒழுக்கம்—அக்கினி காரியம்—அறம் செய்வான் திறம்—அறம் செயான் திறம்—அரசனது ஆட்சி முறைமை—வான் சிறப்பு முதலியன முதற் றந்திரத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. அவை ஓலைச் சுவடிகள் கோப்பார் கைப்பிசகு ஆகும்.

ஆதலின் பாயிரச் செய்யுள்களுக்கு உரை எழுதுவதன் முன்னம் பாயிரம் இன்னது என்றும், அதில் கூறப்பட்ட அறுவகை வாழ்த்துச் செய்யுள்கள் இன்னவை யென்றும் தெரிந்துகொள்ள வேண்டியிருத்தலால், அவைகளைப்பற்றி ஈண்டு விரிவாக எழுத நேர்ந்தது.

ஆகமநூலைத் தமிழ் உலகுக்குப் பாடி உபகரிக்க வந்தவர் ஆனதால் நாயனார் நூன்முறைப்படி பாயிரமுரைத்து நூலைத் தொடங்கியுள்ளார் என்பது தெளிவாகின்றது.

## உ. திருமூலநாயனர் வரலாறு

" வம்பரு வரிவண்டு மணநாற மலரும்
மதுமலர்நற் கொன்றையான் அடியலாற் பேணு
எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கு மடியேன்
ஏயர்கோன் கலிக்காமன் அடியார்க்கும் அடியேன்
கம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்
நாட்டமிகு தண்டிக்கும் மூர்க்கற்கும் அடியேன்
அம்பரான் சோமாசி மாறனுக்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே." (அ)

—திருத்தொண்டத்தொகை.

" குடிமன்னு சாத்தனூர்க் கோக்குல மேய்ப்போன் குரம்பைபுக்கு
முடிமன்னு கூனற் பிறையாளன் தன்னை முழுத்தமிழின்
படிமன்னு வேதத்தின் சொற்படி யேபர விட்டெனுச்சி
அடிமன்ன வைத்த பிரான்மூல னாகின்ற அங்கணனே." (ஆ)

—திருவந்தாதி.

" .....முத்தமிழை—ஆரும்
திருஞான சம்பந்தர் செய்ய கலிக்காமர்
அருண்மூலர் தண்டி யடிகள்—வருமூர்க்கர்
சோமாசி மாறனர்....." (இ)

—திருநாமக்கோவை.

" கயிலாயத் தொருசித்தர் பொதியிற் சேர்வார்
காவிரிசூழ் சாத்தனூர் கருது மூலன்
பயிலாநோ யுடன்வீயத் துயர நீடும்
பசுக்கூக்கண் டவனுடலில் பாய்ந்து போத
அயலாகப் பண்டையுடல் அருளான் மேவி
ஆவடுதண் டுறையாண்டுக் கொருபா வாகக்
குயிலாரும் அரசடியி லிருந்து கூறிக்
கோதிலா வடகயிலை குறுகி னரே." (ஈ)

—திருத்தொண்டர் புராணசாரம்.

" திருமூல தேவனையே சிந்தைசெய் வார்க்குக்
கருமூல மில்லையே காண்." (உ)

—பாடினவர் பெயர் தெரியவில்லை.

" திருமந் திரமே சிவகதிக்கு வித்தாம்
திருமந் திரமே சிவமாம்—அருமந்த
புந்திக்கு ளோதினேன்று போற்றுமடி யார்தமக்குச்
சந்திக்கும் தற்பரமே தான்." (ஊ)

—பாடினவர் பெயர் தெரியவில்லை.

## (அ) திருமூலர் காலத்தில் தமிழ்நாட்டெல்லை

"வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்
தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும்
குணாஅது கரைபொரு தொடுகடல் குணக்கும்
குடாஅது தொன்றுமுதிர் பவ்வத்தின் குடக்கும்"

—புறநானூறு.

என்ற புறநானூற்றுச் செய்யுளின்படி, தமிழ்நாடானது 800 வருடங்களின்முன் வடக்கே பனிமலையாகிய இமயமலை வரைக்கும், தெற்கே உருவத்திற் சிறந்த குமரித் தெய்வத்தின் கோயிலுக்கும் தெற்கே இடைச்சங்கம் இருந்த கபாடபுரத்தைச் சேர்ந்த நாட்டின் வரைக்கும், கிழக்கே இயற்கையாய் அமையாமல் சகரர்களால் தோண்டப்பட்ட வங்கக் கடல் வரைக்கும், மேற்கே தொன்றுதொட்டுள்ள, தற்காலம் அரபிக்கடல் என்று வழங்கப்படும் பழங்கடல் வரைக்கும் பரவி இருந்தது.

"இமய முதல் குமரிவரை ஒரு மொழிவைத் துலகாண்ட சோழன் மணக்கிள்ளி நற்சோணையின் மகன் சேரன் செங்குட்டுவன்" எனச் சிலப்பதிகாரத்தில் கூறுகிறபடியால், கி. பி. இரண்டாம் நூற்றாண்டுவரையும் தமிழ்மொழிக்கு வட எல்லை இமயமலையாகவே இருந்தது.

அதன் பிறகுதான் தமிழ் எல்லை குறுக ஆரம்பித்தது.

## (ஆ) திருமூலர் நந்தியெம்பெருமான் மாணாக்கர்களில் ஒருவர் என்பது

தமிழ்நாட்டின் வட எல்லையாகிய இமயமலையின் சிகரங்களில் சிறந்த கயிலாயத்தின்(Mount Kailas) திருக்கோயிலுக்கு முதற்பெரு நாயகமாகி இந்திரன், மால், அயன் முதலாம் இமயவாக்கு[1] நெறியருளும் நந்தியெம் பெருமானுடைய திருவருள் பெற்ற மாணாக்கர்கள் எண்மர். அவராவார்,

"நந்தி அருள்பெற்ற நாதரை நாடிடில்
நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி
மன்று தொழுத பதஞ்சலி வியாக்கிரமர்
என்றிவர் என்னோடு எண்மரு மாமே."

—தமிழ் மூவாயிரம்.

திருமூலர் தம்முடைய நூலில் ஓரிடத்திலும் நால்வர் நந்திகள் இன்னர் என்று அவர்கள் பெயரைக் குறிப்பிடவில்லை.

1. இமயவர்—இமயமலை வாசிகள்.

அவருக்குப் பின்னால் வந்த பெரியோர்கள் சனகர்—சனந்தனர்—சனாதனர்—சனற்குமாரர் என்றனர்.

பதஞ்சலி என்ற பேர் உடையவர்கள் பலபேர் அக்காலத்திலேயே இருந்ததால் அம் மயக்கம் ஒழிய, தம்முடன் கூட இருந்த ஒருசாலை மாணாக்கராகிய பதஞ்சலியைக் குறிப்பிடவே திருமூலர் "மன்று தொழுத" என்று அடைகொடுத்துக் கூறுவார் ஆயினர். ஏனைய பதஞ்சலிகள் எல்லாம் மன்று தொழுதவர்கள் அல்லர்.

வியாக்கிரமர் என்பார் வியாக்கிரபாதர்—வியாக்கிரபதர்—புலிக்கால் முனிவர் என்று பலவாறுகப் பேசப்படுவர்.

ஆதலின், இவ்வெண்மரும் சம காலத்தவர்கள் ஆவார்கள். இவர்கள் எல்லாரும் கயிலாயத்தில் உள்ள சித்தர் குழாத்தைச் சேர்ந்தவர்கள்.

ஆதலினலன்றே உமாபதி சிவாச்சாரியார் திருமூலரைக் குறிப்பிடும்போது "கயிலாயத்தொரு சித்தர்" என்றார்.

## (இ) பதஞ்சலிகள் பலர் என்பது

டாக்டர் எ. பி. கீத் (Dr. A. B. Keith) என்பவர் வட மொழியில் மகாபாஷியம் இயற்றிய பதஞ்சலி வேறு என்றும், யோக சூத்திரம் இயற்றிய பதஞ்சலி வேறு என்றும், முன்னவர் கி. மு. 150லும் பின்னவர் கி. பி. 7 ஆம் நூற்றாண்டிலும் இருந்தவர்கள் என்றும் சரித்திர நூல் ஆராய்ச்சியுடன் கூறுகின்றார்.

சிலர் திருமூலர் தம் நூலில் கூறிய பதஞ்சலி, மகாபாடியம் இயற்றியவர் தாமோ என்று கொண்டு, திருமூலரின் காலம் கி.மு. இரண்டாம் நூற்றாண்டு என்றும்,

சிலர் திருமூலர் கூறியது, யோக சூத்திரம் செய்த பதஞ்சலி தாமோ என்று கொண்டு, திருமூலரின் காலம் கி. பி. 7 ஆம் நூற்றாண்டு என்றும் கூறுகிற்பர்.

இத்தகைய இடர்ப்பாடுகள் வரும் என்றே திருமூலர் தமது ஞானக்கண்ணால் அறிந்து, தம்முடன் கூட இருந்தவரை "மன்று தொழுத பதஞ்சலி" என்று அடைகொடுத்துக் கூறி மயக்கத்தை ஒழித்தார். மேலும் தாம் கூறிய தமிழ் மூவாயிரச் செய்யுளில் பதஞ்சலி ஒருவருக்கு மாத்திரம் அடைகொடுத்தும் மற்றவர் களைப் பெயர் மாத்திரத்திலும் கூறியிருப்பதை நோக்க, திருமூல நாயனருடைய கருத்து விளங்கும்.

ஆதலின், மன்று தொழுத பதஞ்சலி வேறு, யோக சூத்திரம் செய்த பதஞ்சலி வேறு, மாபாடியம் இயற்றிய பதஞ்சலி வேறு எனக் கண்டாம்.

## (ஈ) திருமூலரும் மன்று தொழுதது

நந்தியெம் பெருமான் மாணாக்கரில் பதஞ்சலியும், வியாக்கிரமரும் கயிலையினின்றும் தென்னாடு போந்து திலதைவனம் எம்பெருமானுடைய நடன தரிசனம் காண்பான் வதிந்து வந்த காலத்து, திருமூலநாயனாரும் தம்முடைய சொந்த உடம்புடன் (அஃதாவது மூலனுடைய சரீரத்தில் புகுவதற்கு முந்தி) அவர்களுடன் கூடவே வந்து, நடன தரிசனத்தைக் கண்டு களித்துப் பின் கயிலைக்கு ஏகி, அங்குத் தவத்தினில் இருந்தார் என்பதை,

> "செப்பும் சிவகாமம் என்னுமப் பேர்பெற்று
> அப்படி நல்கும் அருணந்தி தாள்பெற்றுத்
> **தப்பிலா மன்றில் தனிக்கூத்துக் கண்டபின்**
> ஒப்பில் எழுகோடி யுகமிருந் தேனே."

> "இருந்தேனிக் காயத்தில் எண்ணிலி கோடி
> இருந்தேன் இராப்பகல் அற்ற விடத்தே
> இருந்தேன் இமயவர் ஏத்தும் பதத்தே
> இருந்தேன் என்நந்தி இணையடிக் கீழே"

என்ற தமிழ் மூவாயிரச் செய்யுட்களால் அறியலாம்.

"இமயவர் ஏத்தும் பதத்தே" என்றதாலும், "என் நந்தி இணையடிக் கீழே" என்றதாலும், நாயனார் திலதைவனக் கூத்தைக் கண்டு களித்தபின் கயிலை சென்று தவம் இயற்றினர் என்று போதருகின்றது.

## (உ) திருமூலர் என்னும் நாமம் ஏற்பட்ட காரணம்

திருமூலர் பதஞ்சலி வியாக்கிரமருடன் தென்னாடு போந்தது முதல் நடவையாகும். அப்போது அவருக்குத் திருமூலர் என்ற நாமம் கிடையாது. இரண்டாம் நடவை அவர் கயிலையினின்றும் பொதியையை நோக்கி வரும்போது, சோழநாட்டுச் சாத்தனூரில் கோகுலம் மேய்க்கும் மூலன் இறந்து கிடக்கக் கண்டு, தம் உடலை ஓர் அரசமரப் பொந்தில் சேமித்து வைத்துவிட்டு, தம் உயிரை மூலன் குரம்பையுள் புகுத்தி மூலனாக எழுந்த பின்னர் அப் பெயர் ஏற்பட்டது ஆகும்.

அவர் மூலன் குரம்பையுள் புகுந்த பின்னர்ச் செய்த நூல் "தமிழ் மூவாயிரம்" என்ற ஒரு நூலேயாகும். மூலன் குரம்பை

யுள் புகுமுன்னர், "உபதேசம் முப்பது" "மந்திரம் முந்நூறு" என்ற இரண்டு நூல்கள் செய்துள்ளார். இதனைத் தமிழ் மூவாயிரத்திலுள்ள,

"மூலன் உரைசெய்த முப்பது உபதேசம்
மூலன் உரைசெய்த முந்நூறு மந்திரம்
மூலன் உரைசெய்த மூவா யிரம்தமிழ்
மூலன் உரைசெய்த மூன்றும்ஒன் றுமே"

என்ற பாயிரச் செய்யுளால் அறியலாம்.

இச் செய்யுளில் முப்பது உபதேசமும், முந்நூறு மந்திரமும் மூலன் உரை செய்ததாகக் கூறப்படிருக்கிறதே, அந்நூல்களைப் பாடும்போது அவருக்கு மூலன் என்ற பெயர் இல்லையே என்று கேட்கலாம். இச் செய்யுள் மூலன் குரம்பையுள் புகுந்த பின்னர்ச் செய்த தமிழ் மூவாயிரத்துக்குப் பாயிரச் செய்யுளாதலால் உடம்பு வேறுபாடு கருதாது உரைத்ததாகும்.

"மந்திரமும் முந்நூறு" என்ற நூலில் சிறப்புப் பாயிரத்தில் திருமூலருடைய இயற்பெயர் சுந்தரநாதன் என்று கூறப்பட்டிருக்கிறது. அச் செய்யுள் வருமாறு :

"மந்திரங் கொண்டு வழிபடு வோர்க்குச்
**சுந்தர நாதன்** சொல்லிய மந்திரம்
நந்திஎந் நாதன் நாவார ஓதினன்
பைந்தெரி மேனிப் பயனது தானே"

"வந்த மடமேழு மன்னுஞ்சன் மார்க்கத்தின்
முந்தி உதிக்கின்ற மூலன் மடவரை
தந்திரம் ஒன்பது சார்வுமூ வாயிரம்
**சுந்தரன்** ஆகமச் சொன்மொழிந் தானே"

என்று தமிழ் மூவாயிரத்திலுள்ள சிறப்புப்பாயிரச் செய்யுளாலும் அறியலாம். இச் செய்யுள் சுந்தரநாதருடன் ஒருங்கு கற்ற ஒருவரால் பாடப்பெற்றது.

இவருக்கு நாதன் என்ற பட்டம் நந்தியெம் பெருமானால் கொடுக்கப்பட்டது. இதனை,

"நந்தி அருளாலே **நாதனும்** பேர்பெற்றேம்"

என்ற தமிழ் மூவாயிரச் செய்யுள் விளக்குகிறது.

இவர் நந்தி அருளாலேயே மூலன் குரம்பையுள் புக நேர்ந்தது என்பதனை,

"நந்தி யருளாலே மூலனை நாடினேன்"

"நந்தி அருளாவ தென்செயும் நாட்டினில்
நந்தி வழிகாட்ட நானிருந் தேனே"

"நந்தி அருளாலே மூலனை நாடிப்பின்
நந்தி அருளாலே சதாசிவன் ஆயினேன்"

என்ற தமிழ் மூவாயிரச் செய்யுள் அடிகளால் அறியலாம்.

சுந்தரநாதர் திருவருள் இயக்க இரண்டாம் தடவை தென்னாடு போந்த காலத்தில், மூலன் தேகத்தில் புக நேர்ந்ததும், ஒன்பது ஆகமங்களையும் ஒன்பது தந்திரங்களாகப் பாடித் "தமிழ் மூவாயிரம்" என்று பெயர் கொடுத்ததும் ஆகும். முதல் தடவைக்கும் இரண்டாம் தடவைக்கும் ஏறக்குறைய 3000 ஆண்டுகள் இடையே உள்ளன.

## (ஊ) திருமூலர் காலம்

அறுபான் மும்மை நாயன்மார்களில் திருமூலரும் ஒருவர். அவர் தாம் பாடிய "தமிழ் மூவாயிரத்தில்" சேய்ஞலூர்ச் சண்டியைப்பற்றி மாத்திரம் கூறியுள்ளார். மற்ற நாயன்மார்களுடைய பெயர்கள் அவர் நூலில் இல்லை. சண்டியைப்பற்றிக் கூறும் செய்யுள் வருமாறு,

"உறுவ தறிதண்டி ஒண்மணற் கூட்டி
அறுவகை ஆனைந்தும் ஆட்டத்தன் தாதை
செறுவகை செய்து சிதைப்ப முனிந்து
மறுமழு வால்வெட்டி மாலைபெற் றானே."

இதனால் சேய்ஞலூர்ப் பிள்ளை ஒருவர் மந்திரம் திருமூலருக்கு முந்தியவர் என்றும், ஏனைய நாயன்மார்கள் எல்லாம் பிந்தியவர்கள் என்றும் அறிகிறோம்.

இன்னும், தமிழ் மூவாயிரத்தில், (1) அகத்தியர், (2) திரிபுராதிகள், (3) இராவணன், (4) சலந்தரன், (5) தக்கன், (6) அந்தக அசுரன், (7) மார்க்கண்டர் முதலியவர்களைப் பற்றியும் திருமூலர் கூறியுள்ளார். இவர்களில் பெரும்பாலார் திருமூலருக்கு முந்தியவர்களாயும், சிலர் சம காலத்தவர்களாயும் இருக்கிறார்கள்.

திருமூலருக்குச் சம காலத்தவரான பதஞ்சலி வியாக்கிரமர் முதலிய எழுவரில் தசரத இராமருக்குக் குலகுருவாயிருந்த வசிட்டருடைய தங்கையை மணந்தவர் வியாக்கிரமர். வியாக்கிரமருடைய பிள்ளை தான் உபமன்னியு.

உபமன்னியு பிறந்தது வடநாட்டில் வசிட்டருடைய ஆசிரமத்தில் என்று புராணம் கூறும். பிறந்தது முதல் காமதேனுவினுடைய பாலைக் குடித்து உபமன்னியு வளர்ந்தார். தென்னாட்டில் தம் பிதாவின் ஆசிரமத்துக்கு வந்த பிற்பாடு, பாலுக்காக உபமன்னியு அழ, வியாக்கிரமர் நடராசப் பெருமானே வேண்ட, கூத்தப்பெருமான் அருள் சுரந்து பாற்கடலையே வரவழைத்துக் கொடுத்தார் என்று கோயிற் புராணத்தில் உமாபதி சிவம் கூறுகின்றார். அப்பாடல்களாவன :

"நற்பான் மிகுதந் தையரும் புதல்வர்
நஞ்சந் ததியுய்ந் திடநண் ணினையேல்
இற்பா லினியா குதியா திமறித்
திடுவா னுடையான் நெடுவா னடைவான்
முற்பா லுனையா னெனநீ பெறுமா
முனியா துகொளென் றுவசிட் டமுனிக்
கற்பார் தருபின் னியைமன் னுமணக்
கடனல் உடனு நெறிகண் டனனே."

"பின்பக் கொடிமன் னுபமன் னியனைப்
பெறவந் தவருந் ததிகொண்டு பெயர்ந்து
இன்பச் சுரபிப் பொழிபா னுகர்வித்
தெழிலா ரவளர்த் திடுநா ளிவர்தாம்
அன்பிற் புணரக் கொணர்வித் துமகிழ்ந்து
அயலென் றிடுமுன் பயிலும் படிசேர்
புன்பற் கமர்பண் டமுமுன் பறிபால்
போலுய்த் தனவும் புகழா திகழ்வான்."

"மணமே தருபால் பெறுமா றமுமா
மகனூர் முனியாம் வறியோம் அறியோம்
உணவே இனிதாம் அவைதாம் இவர்கா
னுடையா ரெனவாழ் விடையா னெதிரே
துணர்மே லெழுவெங் கனல்தங் கிநடுத்
துஞ்சும் தொழிறஞ் சனைநஞ் சமுதக்
கணமேஇறையான் இறைபால் அலையுங்
கடல்பெற் றதுகண் டுகளித் திடுவான்."

—கோயிற்புராணம்.

ஆதலின், வசிட்டர், உபமன்னியு, பதஞ்சலி, வியாக்கிரமர், திருமூலர் முதலியோர் சமகாலத்தவர் என்க.

தசரத இராமருடைய காலம் 6000 B.C. என்றும், அவர் பாண்டிநாட்டுத் தலைநகரமாகிய கபாடபுரம் சென்ற காலத்து, அப்போது முடிதாங்கி அரசாண்ட அனந்தகுண பாண்டியன்,

அவரை உபசரித்ததாகவும் பாண்டிய வமிசாவளியும் சரித்திரமும் பேசுகின்றன.

ஆதலின், திருமூலர் காலம் இற்றைக்கு ஏறக்குறைய **8000** ஆண்டுகள் ஆகின்றன.

திருமூலர் காலம் இராமாயண காலம், அஃதாவது 6000 B. C. என்று கொண்டால், திருமூலர் தம் நூலின்கண் கூறிய திரிபுராதிகளும், பொதியமலை அகத்தியரும், சலந்தரனும், தக்கனும், அந்தக அசுரனும், மார்க்கண்டேயரும் திருமூலருக்கு முற்பட்டவர்கள் ஆகின்றார்கள்.

வசிட்டர்—வியாக்கிரமர்—மன்று தொழுத பதஞ்சலி—உபமன்னியு—கோதமர்—சதாநந்தர்—இராவணன்—பஞ்சவடி அகத்தியர்—தசரத இராமர், சனகர் முதலியவர்கள் சம காலத்தவர்கள் ஆகின்றார்கள்.

## (எ) அகத்தியர் பலர் என்பது

அகத்தியர் என்ற பெயர் உடையவர்கள் பலபேர். அவர்கள் எல்லாரும் பல காலங்களில் இருந்தவர்கள். அவர்களிற் சிலரை ஈண்டுத் தருகிறேன் :

(1) திரிபுராதிகள் காலத்தில் இருந்த பொதியமலை அகத்தியர் அல்லது குற்றுலமுனி அல்லது குறுமுனி.

(2) செங்கோவின் காலத்தில் இருந்த பஃறுளியாற்றுத் தலைப்பாய்ச்சல் முத்தூர் அகத்தியர்.

(3) சூரபன்மன் காலத்தில் இருந்த வாதாபி அகத்தியர்.

(4) பரசுராமர் காலத்தில் இருந்த குடகுமலை அகத்தியர் அல்லது குடமுனி.

(5) இராமாயண காலத்தில் தசரத இராமருக்கு உதவியாயிருந்த பஞ்சவடி அகத்தியர்.

(6) பாரத காலத்தில் இருந்த உலோபா முத்திரையை மணந்த துவராபதி அகத்தியர்.

(7) பவுத்த மதத்தைச் சேர்ந்த அகத்தியர்.

(8) சித்தர் குழாஅத்தைச் சேர்ந்த சித்த அகத்தியர்.

(9) வைத்திய முறையில் கைதேர்ந்த அகத்தியவேள்.

(10) காம்போதி நாட்டு (Cambodia) யசோமதியை மணந்த அகத்தியர்.

என எத்துணையோ பேர் அகத்தியர் நாமம் படைத்தவர்கள் ஆவார்கள்.

புலவர்கள் எல்லாம் பெயர் ஒற்றுமை ஒன்றையே கருதி, எல்லா அகத்தியர்களையும் ஒன்றுபடுத்தி ஒருவர் சரித்தத்தை இன்னொருவர் சரித்தத்தில் புகுத்திப் புராணங்களில் எழுதி விட்டார்கள்.

மேலே கூறிய எல்லா அகத்தியர்களும், காலத்தாலும்—இடத்தாலும்—உணவாலும்—உடையுடை பாவனைகளாலும்—பழக்க வழக்கங்களாலும் முற்றிலும் மாறுபட்டவர்கள் ஆவார்கள்.

குடகுமலையில் வாழ்ந்துவந்த அகத்தியரைக் குடகுமுனி என்பர். அவரைக் குடமுனி என்றும் சுருக்கம் நோக்கி அழைப்பர். பிற்காலப் புலவர்கள் சரித்திரம் தெரியாததால் வார்த்தையைக்கொண்டு குடமுனி குடத்தில் பிறந்தார் என்று கதைகட்டிவிட்டார்கள்.

அதுமாதிரியே, பொதியமலைக்குக் குற்றாலம் என்று ஒரு பேர் இருப்பதால் பொதியமலை அகத்தியரைக் குற்றாலமுனி என்பர். சுருக்கமாகக் குறுமுனி என்பதும் உண்டு. குறுமுனி என்றாலும் குற்றாலமுனி என்றாலும் பொதியமலை முனி என்றாலும ஒன்றே. பிற்காலப் புலவர்கள் சரித்திரம் தெரியாமையால் குறுமுனி என்றால் குறுகிய முனி என்றும் அவர் பெருவிரல் அளவு உள்ளவர் என்றும் கதை எழுதிவிட்டார்கள்.

மேலும், இராமாயண காலத்தில் பஞ்சவடியில் ஆரிய அரசராகிய தசரதருக்குத் தூதராக (Ambassador) இருந்த பஞ்சவடி அகத்தியரையும், பொதியமலையில் இமயவரம்பன் மகள் பார்வதியைக் கலியாணம் செய்த மேருவரம்பன் என்கிற பரமேச்சுரர் காலத்தில் இருந்த பொதியமலை அகத்தியரையும் ஒன்றுபடுத்திக் கூறுவாரும் உளர்.

அகத்தியர், என்ற பெயரை உடைய பல அகத்தியர்களைப் பற்றி "அகத்தியர் விளக்கம்" என்னும் நூலில் பரக்கக் காட்டியிருக்கின்றேன். ஆண்டுக் கண்டுகொள்க.

ஆதலின், அகத்தியர் என்னும் நாமம் உடையவர் பலர் என்பதூஉம், திருமூலர் தம் நூலில் கூறிய அகத்தியர் பொதியமலை அகத்தியர் என்பதூஉம்: அப்பொதியமலை அகத்தியரைப் பார்க்கவேண்டியே கயிலையினின்றும் அவர் இரண்டாம் தடவை தென்னாடு போந்தார் என்பதூஉம் அறிந்தாம்,

## (ஏ) திருமூலர் காலத்தைக் குறித்த உட்சான்றுகள்

இனி, இன்னொருவிதமாகத் திருமூலர் காலத்தை ஆராய்வாம். சிந்துநதிப்பிரதேசத்தில் உள்ள அரப்பா—மோகஞ்சதாரோ

என்னும் இடங்களில் அகழ்ந்து கண்டுபிடிக்கப்பட்ட கட்டடங்களையும் பொருள்களையும் நோக்குமிடத்து அவைகள் எல்லாம் 5000 B.C-க்குப் பல்லாண்டுகள் முற்பட்டவை என்றும், அவைகள் எல்லாம் தமிழர் நாகரிகத்தை வெளிப்படுத்துகின்றன என்றும், அந்நாகரிகம் ஆரியர் இந்தியாவுக்கு வருவதற்குப் பன்னூருண்டுகள் முன்னர் இருந்த நாகரிகம் என்றும், அக்கட்டடங்களில் தமிழில் உருவ எழுத்துக்களால் செதுக்கப்பட்ட பலவரிகள் காணப்படுகின்றன என்றும், அது கற்காலத்துக்கும் (Neo-Lithic-Age), செப்புக் காலத்துக்கும் (Copper Age) இடைப்பட்ட நாகரிகத்தைக் கொண்டதென்றும், தமிழருக்கே சிறப்பான மூக்கு ஆபரணங்களும் நாலி முதலிய கழுத்து ஆபரணங்களும் அக்கட்டடங்களில் காணப்படுகின்றன என்றும் அறிஞர் சர் ஜான் மார்ஷல் என்பவரும், செவரெண்டு ஈராஸ் என்னும் பாதிரியாரும் கூறுகின்றனர்.

தமிழ்மொழியானது முதன்முதல் உருவ எழுத்துக்களையும், பின் கோல் எழுத்துக்களையும், பின் வட்ட எழுத்துக்களையும், பின் சதுர எழுத்துக்களையுங் கொண்டு மாறுதல் அடைந்து வந்திருக்கிறது. இஃது ஆராய்ச்சியாளர் துணிபு.

உருவ எழுத்துக் காலத்திலேதான் தமிழில் இருந்து சீனம்—கடசரம்—சுமேரியம்—பினீசியம்—எகுபதியம் முதலிய பல மொழிகள் பிரிந்தன.

கோல் எழுத்துக் காலத்தில் தமிழில் இருந்து மராட்டியம்—வங்கம்—கோசலம்—பலுச்சியம்—ஆரியம்—பாளி—பிராகிருதம் முதலிய பல மொழிகள் பிரிந்தன.

வட்ட எழுத்துக் காலத்தில் தமிழில் இருந்து தெலுங்கு—கன்னடம்—துளு—மலையாளம் முதலிய மொழிகள் பிரிந்தன.

தமிழுக்குத் தற்காலம் சதுர எழுத்துக் காலம்.

ஆரியர்கள் வடமேற்குக் கணவாய்கள் வழியாய்த் தமிழ் நாட்டில்நுழைந்தது கோல் எழுத்துக்காலத்தில் ஆகும். அஃதாவது அரப்பா—மோகஞ்சதாரோ முதலிய தமிழருடைய நகரங்கள் மண்மாரியால் அழிவெய்திய பிற்றைக் காலத்தில் ஆரியர்கள் முதன்முதல் சிந்துநதிப் பிரதேசத்தில் குடியேறி, பிறகு கங்கை பாயும் நாட்டை விந்தியமலை வரை வென்று, ஆரியாவர்த்தத்தை ஏற்படுத்திக்கொண்டார்கள். ஆரியாவர்த்தத்துக்கு இந்துஸ்தானம் என்று பெயர். இந்துஸ்தானம் என்ற பெயருக்கு இந்துக்கள் வசிக்கும் இடம் என்பது பொருள். ஆரியருக்கு இந்துக்கள் என்ற பெயர் பாரசீகர்களால் கொடுக்கப்பட்டது. "இந்து" என்ற பதம் பாரசீக மொழியைச் சேர்ந்தது.

ஆரியர் ஆரியாவர்த்தத்தை நிலைநாட்டிய காலத்தில் பல தமிழ் மன்னர்கள், விஸ்வாமித்திரர்—சனகர் முதலியோர் ஆரிய மதத்தை அநுசரித்துக் கொண்டார்கள். சைவராயிருந்து சைன மதத்துக்குப் போன திருநாவுக்கரசு சுவாமிகளுக்குச் சைனர்கள் தங்களுடைய மதத்தலைமை கொடுத்ததுபோல, தமிழராயிருந்து ஆரியமதத்தை அநுசரித்த விசுவாமித்திரருக்குப் "பிரமரிஷி"ப் பட்டமும் சனகருக்கு "ஞானரிஷி"ப் பட்டமும் ஆரியர்கள் அளித்து, மேலும் பல தமிழர்கள் ஆரியமதத்தை அநுசரிக்கும் பொருட்டு அவர்களைப் பெருமைப்படுத்தினர்கள். ஆரியமதத்தை அநுசரிக்காத தமிழ் மன்னர்களும் ஏனைத் தமிழ்ச் சான்றோரும் விந்தியமலைக்குத் தெற்கே நக்கணம் என்ற தமிழ்நாட்டின் பகுதிக்கு ஓடிவந்துவிட்டார்கள்.

தக்காணத்திலேதான் தமிழுக்குப் பின் வட்டெழுத்துக் கர்லம் துவங்கிற்று.

கோல் எழுத்துக் காலத்தில் தமிழில் 16 உயிர்களும் 35 மெய்களும் இருந்ததுபோலவே வட்ட எழுத்துக் காலத்திலும் மேலே சொன்ன 51 எழுத்துக்களும் இருந்தன. ஆரியாவர்த்தத்தில் கோல் எழுத்துக்களால் வழங்கிய மொழிகளுக்கு வட தமிழ்—வடமொழி என்றும், தக்காணத்தில் வட்டெழுத்துக்களால் வழங்கிய மொழிகளுக்குத் தென்தமிழ் தென்மொழி என்றும் வழக்குகள் ஏற்பட்டன:

பிறகு, பாரதகாலத்துக்குச் சற்று முன்பின் தமிழுக்குச் சதுர எழுத்துக் காலம் ஆரம்பம் ஆயிற்று. சதுர எழுத்துக் காலத்திலேதான் தமிழுக்கு 12 உயிர்களும், 18 மெய்களும் ஆக அறிஞர்கள் வகுத்தார்கள். இக்காலத்திலேதான் துவராபதியினின்றும் வந்த உலோபா முத்திரை அகத்தியர். பேரகத்தியம், சிற்றகத்தியம் என இரண்டு இலக்கண நூல்களை வகுத்தார். பழந்தமிழ் மொழியினின்றும் வேறுபிரித்து "செந்தமிழ்" எனத் தமிழ்மொழிக்குப் பெயரிட்டார். தமிழ் மொழி மிகச் சீர்திருந்திய முறையில் ஆய்த எழுத்தைச் சேர்த்து 31 எழுத்துக்களுடன் வழங்கலாயின.

இதேமாதிரி வியாசரும் வடநாட்டில் வழங்கிய மொழி களாகிய ஆரியம்-பிராகிருதம் முதலியவைகளைச் சீர்திருத்திச் 'சமஸ்கிருதம்' எனப் பெயர் அமைத்து, சமஸ்கிருதத்தில் பல புராணங்களும் இதிகாசங்களும் எழுதினர். ஆனால், அவர் தமிழில் இருந்த கோல்எழுத்துக்களையே கருவியாகக்கொண்டனர். அதனாலேயே சமஸ்கிருதத்துக்கு 'வடதமிழ்' என்ற பெயரும் அமைந்தது.

திருமூலருடைய காலம் 'இராமாயண காலம்' என்று மேலே கூறினும். இராமாயண காலம் தமிழுக்கு வட்டெழுத்துக் காலம் ஆகும்.

இராவணனுடைய சேனைமொழி (Military Language) தெலுங்கு. அம்மொழியை உண்டு செய்தவன் இராவணன். தமிழ் வட்டெழுத்துக்களையே சிறிது மாற்றி அம்மொழிக்கு நெடுங் கணக்கு ஏற்பாடு செய்தார்கள், ஆதலின், தெலுங்கிலும் 16 உயிர்களும் 35 மெய்களுமாக 51 எழுத்துக்கள் உண்டு.

நம் திருமூலர் வட்டெழுத்துக் காலத்தவர் ஆனபடியால் தம்முடைய நூலில் தமிழ்மொழியிலுள்ள 16 உயிர்களைப் பற்றியும் 35 மெய்களைப்பற்றியும் கூறியுள்ளார். அப் பாடல்கள் வருமாறு :

" ஓதும் எழுத்தோடு உயிர்க்கலை மூவைந்து
ஆதி எழுத்தவை ஐம்பதோ டொன்றென்பர்
சோதி எழுத்தின் நிலைஇரு மூன்றுள
நாத எழுத்திட்டு நாடிக்கொள் ளீரே." கூடுஉ

" விந்துவி லும்சுழி நாதம் எழுந்திட
பந்தத் தலைவி பதினாறு கலையதாக்
கந்தர வாகரம் காலுடம் பாயினுள்
அந்தமு மின்றியே ஐம்பத்தொன் றுயதே." கூசகூ

" ஐம்ப தெழுத்தே அனைத்துவே தங்களும்
ஐம்ப தெழுத்தே அனைத்துஆ கமங்களும்
ஐம்ப தெழுத்தேயும் ஆவது அறிந்தபின்
ஐம்ப தெழுத்தும்போய் அஞ்செழுத் தாமே." கூசச

ஆதலின், திருமூலர் வட்டெழுத்துக் காலத்தவர் என்று கூறுவதில் தடை ஒன்றுமில்லை. அவர் சதுர எழுத்துக் காலத்தவராயுல் 12 உயிர்களையும் 18 மெய்களையுமே பற்றிப் பாடியிருப்பர்.

திருமூலர் கூறியது ஆரிய மொழியின் திரிபாகிய சமஸ்கிருதத்தின் எழுத்துக்களையே ஒழியத் தமிழ்எழுத்துக்களை அல்ல என்பாரும் உண்டு. அவர்கள் எல்லாரும் கூர்ந்து ஆராய வேண்டியது ஒன்று உண்டு. அஃதாவது,

" என்னை நன்முக இறைவன் படைத்தனன்
தன்னை நன்முகத் தமிழ்செய்யு மாறே"

என்று கூறியிருக்கும் அடிகளை நோக்குக. இறைவன் அருளால் தமிழ் மூவாயிரம் செய்தவர் வேறு மொழியின் எழுத்துக்களைக் கூற நியாயம் இல்லை.

மேலும் திருமுறை வகுத்த நம்பியாண்டார் நம்பிகள்,

"..... முழுத்தமிழின்
படிமன்னு வேதத்தின் சொற்படி யேபர விட்டென்னுச்சி
அடிமன்ன வைத்த பிரான்மூல னாகின்ற அங்கணனே"

என்று திருவந்தாதியில் திருமூலரைப்பற்றிக் கூறுவதை நோக்குங்கள். முழுத்தமிழின்படி மன்னும் வேதத்தின் சொற்படி பாடியதாகக் கூறுகிறார். ஆதலின், திருமூலர் வேறு மொழிகளின் எழுத்துக்களைப்பற்றி முழுத்தமிழ் நூலாகிய தமிழ் மூவாயிரத்தின்கண் கூற ஒரு சிறிதும் நியாயம் இல்லை.

ஆகையால், திருமூலர் தமிழுக்கு வட்டெழுத்துக் காலத்தவர் என்பது நிச்சயம்.

இராமாயண காலத்தில் அயோத்தியிலும், கோசலத்திலும், கிட்கிந்தையிலும், இன்னும் வடநாட்டில் பல இடங்களிலும் தமிழ்மொழி பொதுமொழியாக இருந்ததென்று திருவாளர். திரு. நாராயண அய்யங்கார் 1939 ஆம் வருடச் 'செந்தமிழ்' பத்திரிகையில் "வான்மிகரும் தமிழும்" என்ற கட்டுரையில் விளக்கியுள்ளார். ஆதலின் தமிழ்மொழி இராமாயண காலத்தில் வட பெருங்கல்லில் இருந்து தென்குமரியாறுவரை பரவியிருந்ததென்று அறியலாம்.

அல்லாமலும் அக்காலத்தில் தமிழ்மொழியானது 5 கண்டங்களிலும் பரவி இருந்ததாக அறிகிறோம். தமிழ்மொழியின் இந்த நிலையைத்தான்,

" தமிழ்மண் டலம்ஐந்தும் தாவிய ஞானம்
உமிழ்வது போல உலகம் திரிவார்
அமிழ மனமும்எம் மாதி அறிவும்
தமிழ்மண் டலம்ஐந்தும் தத்துவ மாமே"

என்று திருமூலர் கூறியுள்ளார்.

தமிழ் மண்டலம் என்பதற்குச் சிலர் பஞ்ச திராவிடமொழிகளான தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், மராட்டிரம் வழங்கும் மண்டலங்கள் என்றும்; சேர, சோழ, பாண்டிய, கொங்கு, தொண்டை மண்டலங்கள் என்றும் பொருள் செய்து இடர்ப்படுவார் ஆயினர்.

ஈண்டு மண்டலம் என்று திருமூலர் கூறியது ஆசிய - ஐரோப்பா - ஆப்பிரிக்கா - அமெரிக்கா-ஆஸ்திரேலியாக் கண்டங்களையே ஆகும். மண்டலம் = மண் + தலம் எனப் பிரிக்க. அப்பாட்டிலேயே, தமிழ்நாட்டுச் சித்தர் குழாஅங்கள் அக் கண்டங்

களிலே "ஞானம் உமிழ்வதுபோல உலகம் திரிவார்" எனக் கூறி மண்டலம் என்பது உலகம் (கண்டங்கள்) என்று விளக்கி யுள்ளார்.

சுத்த தத்துவத்தினின்று அசுத்த தத்துவமும், அசுத்த தத்துவத்தினின்று பிரகிருதி தத்துவமும் தோன்றுகிறபடியால் சுத்த தத்துவத்திலேயே முந்தமிழ் வேதம் தோன்றியதெனச்,

"சதாசிவம் தத்துவம் முத்தமிழ் வேதம்"

என்று திருமூலர் கூறியுள்ளார்.

இதனனே, அக் காலத்தில் இமயமுதல் குமரிவரை, அங்கம் முதல் காந்தாரம் வரை வழங்கிய 18 மொழிகளும் தமிழி னின்றுமே பிறந்தன என்பது வெள்ளிடைமலை. பதினெண் மொழிகளாவன :

" சிங்களம், சோனகம், சீனம், சாவகம்,
கொங்கணம், குடகம், கொல்லம், துளுவம்,
வங்கம், கடாரம், மகதம், கோசலம்
கங்கம், காச்மீரம், கலிங்கம், நேபாளம்,
அங்கம், காந்தாரம் ஆகிய மொழிகள்
தங்கி வளரும் தமிழ்நா டென்ப"

என்னும் பாட்டால் அறியலாம்.

அக் காலத்தில் பண்டிதர்கள் எல்லாம் 18 மொழிகளிலும் வல்லுநராய் இருந்தனர். இதனையே,

" பண்டித ராவார் பதினெட்டுப் பாடையும்
கண்டவர் கூறும் கருத்தறி வார்என்க
பண்டிதர் தங்கள் பதினெட்டுப் பாடையும்
அண்ட முதலா அரன்சொன்ன வாறே"

என்று நம்மூலர் கூறியுள்ளார்.

தமிழ் மொழியை "மதுரம் வாக்கியம்" (—இனிய மொழி— தமிழ் மொழி) என்றும், அதுதான் 'மனிதர் மொழி' என்றும் வான்மீகர் இராமாயணத்தில் கூறுகிறதாகச் 'செந்தமிழ்' இதழாசிரியர் கூறுகிறார் (Vide செந்தமிழ Vol. 36. No. 7). "தமிழ் மானுஷ பாஷையென்று பொதுப்படக் கூறப்பட்டமை யால், அக் காலத்தில் மானிடர் வாழும் இடம் எங்கும் நேர பாஷையாகத் தமிழ்மொழி நடைபெற்று இருந்ததென்று அறியத்தக்கது" என்றும் இதழாசிரியர் கூறுகின்றார்.

மேலும் செந்தமிழ் Vol. 36 No. 8 இல் பக்கம் 341 இல் மானிடர்க்கும் பிறப்புரிமையாயுள்ள பாஷை ஒன்று இருக்க

வேண்டுமன்றே! அது தமிழ்மொழி என்றும், பின்பு செயற்கையாயுள்ள பாஷை தேவபாஷை முதலிய பிறமொழிகள் என்றும் கொள்ளத்தகும்" என்றும் கூறுகிறதால் ஐந்து கண்டங்களிலும் உள்ள மானிடர் எல்லாருக்கும் பிறப்புரிமையாயுள்ள மொழி தமிழ்மொழியே யாகும்.

ஆதலின், திருமூலர் காலத்தில் தற்காலம் 'இந்தியா' என்று வழங்கும் தமிழ்நாடுகளில் எல்லாம் தமிழ்மொழியே பெரு வழக்காக இருந்தது என்பது பெற்றம்.

அரப்பா—மோகஞ்சதாரோ நாகரிகம் எல்லாம் தமிழில் உருவ எழுத்துக் காலமாகும். அக்காலக் கடைசியில் மண் மாரி பெய்து, பெரிய நகரங்கள் எல்லாம் அழிந்து, பெரிய மாறுதல் உண்டாயிற்று.

அதன் பிறகு, தமிழில் கோல் எழுத்துக் காலம் ஏற்பட்டது. அக் காலத்திலேதான் ஆரியர் சிந்துநதி நீரத்தில் குடி ஏறினார்கள். பிறகு, இருக்க இருக்கத் தமிழர்க்கும் ஆரியர்க்கும் சச்சரவுகள் ஏற்பட்டன. ஆரியர்கள் தமிழர்களை வென்று, தமிழர் நாடு நகரங்களை அழித்துப், பல தமிழ் அரசர்களைத் தம் வயப்படுத்தி, எதிர்த்தோரை விந்தத்துக்குத் தெற்கே விரட்டி விட்டார்கள். ஆரிய மொழிக்கு எழுத்தில்லாததால் தமிழ்க் கோல் எழுத்துக்களைத் தங்கள் மொழிக்குச் சில மாறுதல்களுடன் நெடுங்கணக்காக வகுத்துக்கொண்டார்கள். சிந்துநதிப் பக்கத்திலும், கங்கை பாயும் நாட்டிலும் தமிழர் நாகரிகம் பாழ்படுத்தப்பட்டது என்பதை ஆரியர்களுடைய இருக்கு வேதத்தைப் படிப்பவர் அறியாமல் இரார்.

ஆரியர்களுக்கு விந்தியமலைக்கு வடக்கே உள்ள நிலங்கள் முழுவதையும்விட்டுவிட்டுத், தமிழர்கள் தெற்கே தக்காணத்துக்கு வந்து தம் இனத்தவருடன் கலந்துகொண்டார்கள். அக் காலத்திலேதான் தமிழுக்கு வட்டெழுத்துக் காலம் ஆரம்பமாயிற்று. வட்டெழுத்துக் காலக் கடைசியிலேதான் இராமாயண காலம்.

ஆர்யாவர்த்தத்தை ஏற்படுத்திய பிறகு பல ஆண்டுகள்வரை ஆரியர் தக்கணத்துக்கு வராமல் இருந்தார்கள். ஆரிய இருடிகள் ஆரியரைத் தக்கணத்துக்குச் செல்லக்கூடாதென்று தம்முடைய ஒழுக்க நூல்களில் விதித்தும் இருந்தார்கள். ஆபஸ்தம்பர்—போதாயனர் முதலியோர் சூத்திரங்களே இதற்குச் சான்று பகரும்.

அப்படி இருந்தும், சிவப்பு இந்திய (Red Indian) வம்சத்து ஆரிய இராவணனைத் தமிழ் நாட்டினின்றும் தொலைக்க, தமிழ்

அரசர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து, ஆரிய அரசனுகிய தசரத இராமனையும் உதவிக்குச் சேர்த்துக்கொண்டு போரிட்டு வெற்றி அடைந்தார்கள். அன்று தொட்டு ஆரிய நாகரிகம் விந்திய மலைக்குத் தெற்கே தமிழ்நாட்டில் பரவத் தொடங்கியது. சூத்திரங்களில் விதித்ததற்கு மாறுக ஒரு தடவை எண்ணூயிரம் பேரும் (அஷ்ட சகஸ்ரம் என்ற பிராமண வகுப்பார்), இன்னொரு தடவை ஆறுயிரம் பேரும் (ஆறு வேலு என்ற தெலுங்கநாட்டுப் பிராமண வகுப்பார்), இவர்களுக்கெல்லாம் முன்னடி வந்தவரும் (பிரகச்சரணர் என்ற பிராமண வகுப்பார்) கும்பல் கும்பலாகத் தமிழ்நாட்டுக்கு வந்தார்கள்.[1] ஆரியமொழிச் சொற்கள் தமிழில் கலக்க ஆரம்பித்தன. ஆரியமொழிச் சொற்களைக் கலந்து பேசுவதுதான் சிறந்த நாகரிகமானது என்று பல தமிழர் எண்ணினர்கள்.

ஆதலின் அந்தக் காலத்தில் வாழ்ந்த நம் திருமூலரும் ஆரிய மொழிச் சொற்களைத் தம் நூலின்கண் வழங்குவார் ஆயினர்.

இதுகாறுங் கூறியவாற்றுல், நம் திருமூலர் இராமாயண காலத்தவர் என்றும், அஃது இற்றைக்கு ஏறக்குறைய 8000 வருடங்கள் முன்னர் என்றும், சனகர்—சனந்தனர்—சனாதனர்—சனற்குமாரர்—சிவயோக மாமுனி—மன்று தொழுத பதஞ்சலி — வியாக்கிரமர் — உபமன்னியு—வசிட்டர் — பஞ்சவடி அகத்தியர்—கவுசிகர்—கவுதமர்—சதானந்தர்—தசரத இராமர்—வாலி சுக்ரீவர்—இராவணன்—அனந்தகுண பாண்டியன் முதலியோர் திருமூலருக்குச் சம காலத்தவர் என்றும் அறிகின்றும்.

நம் திருமூலர் சுந்தரநாதன் என்னும் பெயருடன் முதல் தடவை தென்னாட்டுக்கு வந்து தில்லையில் தப்பிலா மன்றில் பதஞ்சலி, வியாக்கிரமர்களுடன் தனிக் கூத்துக் கண்டது 8000 வருடங்கள் முன்னர் ஆகும்.

அதன்பின் அவர் திருக்கயிலைக்குச் சென்று 3000 ஆண்டுகள் தவம் இயற்றினர். பின் 3300 B. C. யில், அஃதாவது 5041 ஆண்டுகள் முன்னர், அஃதாவது பாரதச் சண்டை முடிவில் அவர் பொதியமலை அகத்தியரைப் பார்க்க விரும்பிக் கயிலையினின்றும் புறப்பட்டார். திருமூலருக்கு இஃது இரண்டாவது தென்னாட்டு யாத்திரை ஆகும்.

"கயிலாயத் தொருசித்தர் பொதியிற் சேர்வார்"

என்ற உமாபதி சிவத்தின் வாக்கை நோக்குக.

---

1. தில்லை மூவாயிரவரும், திருநாங்கூர் நாலாயிரவரும், திருவெண்காடு இரண்டாயிரவரும் மேலேகூறிய ஆரியக் கும்பல்களே.

நம் திருமூலர் கயிலாயத்தினின்றும் புறப்பட்டு வரும் வழியில் மகாநதிக்கரையில் பூரி (ஜெகன்னாதம்) சமீபம், துவரைக் கோமான் கண்ணன் ஒரு வேடனால் கொல்லப்பட்டார். கொன்ற வுடன் அவ் வேடன் அக்கண்ணன் சரீரத்தைச் சிதையில் வைத்துக் கொளுத்திவிட்டுப் போய்விட, உடனே பெருமழை பொழிய, கருகிய கைகால்களையுடைய கண்ணன் சரீரமானது வெள்ளத்தால் அடித்துக்கொண்டு போகப்பட்டுப் பூரிக்குப் பக்கத்தில் ஒதுக்கிவிடப்பட்டது. அவ் வூரார் அதனைக் கண்டு துவரைக்கோமான் கண்ணன் சரீரமென்று கருதி, எடுத்து, அதனை அடக்கம் செய்து கோயில் அமைத்தார்கள். அதுவே இப்போது ஜெகன்னாதம். இதனைத் திருமூலர் நேரே கண்டவர் ஆனதால்,

> ''இருக்குரு வாம்எழில் வேதத்தி னுள்ளே
> உருக்குணர் வாயுணர் வேதத்துள் ஓங்கி
> வெருக்குரு வாகிய வேதியர் சொல்லும்
> **கருக்குரு வாகிய கண்ணனு மாமே''**

என்று தம் தமிழ் மூவாயிரத்தில் பாடியுள்ளார். ஆதலின். இரண்டாம் தடவை திருமூலர் தென்னாடு போந்தது கி. மு. 3100 இல் ஆகும்.

இவர் பொதியையை நோக்கி வரும் வழியில் சாத்தனூரில், திருவருளியக்கத், தம் உடலை ஓர் இடத்தில் சேமித்து வைத்து விட்டு, இறந்து கிடந்த கோக்குல மேய்க்கும் மூலன் குரம்பையுள் புக்கு, ஆக்களின் துயர் நீக்கிப் பின் தம் உடலை வைத்த இடத்தில் வந்து பார்க்க அவ்வுடல் மறைக்கப்பட்டதைத் திருமூலர் உணர்ந்தார் இதனை,

> ''அகவிடத்தார் மெய்யை அண்டத்து வித்தைப்
> **புகலிடத்தெம் மெய்யைப் போகவிட் டானைப்**
> பகலிடத் தும்இர வும்பணிந் தேத்தி
> இகலிடத் தேயிரு ணீங்கினின் றேனே'' (கசக)

என்று தமிழ் மூவாயிரத்தில் விளக்கியுள்ளார்.

பிறகு, மூலன் சரீரத்தோடு 'திருமூலர்' என்ற பெயருடன் திருவாவடுதுறையை அடைந்து, அங்கே கோயிலின் வெளிப்பிரகாரத்தில் வடமேற்கு மூலையில் இருந்த ஓர் அரசமரத்தடியில் 3000 ஆண்டுகள் யோகத்தில் இருந்து ஆண்டுக்கு, ஒரு பாவாகத் ''தமிழ் மூவாயிரத்தை''ப் பாடியருளி, கி. மு. 100 இல் பரமுத்தி அடைந்தார்.

அவர் திருவாவடுதுறை அரசமரத்து கீழலில் இருந்தார் என்பதை,

"சேர்ந்திருந் தேன்சிவ மங்கைதன் பங்கனைச்
சேர்ந்திருந் தேன்சிவ ஞவடு தண்டுறை
சேர்ந்திருந் தேன்சிவ போதியின் நீழலில்
சேர்ந்திருந் தேன்சிவ நாமங்கள் ஓதியே"

"ஞானத் தலிவிதன் னந்தி நகர்புக்கு
ஊனமில் ஒன்பது கோடி யுகந்தனுள்
ஞானப்பா லூட்டியென் ஞதனை யர்ச்சித்து
நானு மிருந்தேன்நற் போதியின் கீழே"

என்ற தமிழ் மூவாயிரச் செய்யுள்களால் அறியலாம்.

தாம் பரமுத்தி அடைவதன் முன்னம் "தமிழ் மூவாயிரத் தைத்" தம்முடைய ஏழு சீடர்களுக்குப் புகட்டி உலகில் பல மடங்களை ஏற்பாடு செய்து பதி, பசு, பாச இலக்கணங்களைப் புகட்டும்படி செய்து, தமிழ் மூவாயிரப்பாக்கள் வரையப்பட்ட ஒரு சுவடியைத் திருவாவடுதுறைத் திருக்கோயிலின் முன்னர் இருக்கும் பலிபீடத்தின் கீழ்ச் சேமித்து வைத்துவிட்டுப் பின் தாம் பரமுத்தி எய்தினர்.

திருமூலருக்கு ஏழு சீடர்கள் உண்டு என்பதும், அவர் ஏழு மடங்களைத் தாபித்தார் என்பதும்,

"மந்திரம் பெற்ற வழிமுறை மாலாங்கன்
இந்திரன் சோமன் பிரமன் உருத்திரன்
கந்துருக் காலாங்கி கஞ்ச மலியனோடு
இந்த எழுவரும் என்வழி யாமே"

"வந்த மடமேழு மன்னும்சன் மார்க்கம்
முந்தி உதிக்கின்ற மூலன் மடவரை"

என்ற தமிழ் மூவாயிரச் செய்யுட்களால் அறியலாம்.

திருமூலர் திருவாவடுதுறைத் திருக்கோயிலின் முன்னர் உள்ள பலிபீடத்தின் கீழ் வைத்திருந்த தமிழ் மூவாயிரம் வரையப்பட்ட சுவடியைத்தான், கி. பி. 634 முதல் கி. பி. 650 வரை வாழ்ந்த திருஞானசம்பந்தர் எடுத்தார் என்று தேவாரப் பதிப்பாளர்கள் வரைந்துள்ளார்கள். இச் செய்தி பெரிய புராணத்தில் இல்லை. தேவாரப் பதிப்பாளர்களுக்கு ஆதாரம் எதுவோ தெரியவில்லை. ஒருவேளை கர்ண பரம்பரைச் செய்தியாய் இருக்கலாம்.

### (ஐ) திருமூலர் கி. மு. 6000 முதல் கி. மு. 100 வரை வாழ்ந்தவர் என்பது

திருமூலநாயனார் கி. மு. 6000 முதல் கி. மு. 100 வரை 5900 ஆண்டுகள் உயிரோடு இருக்கமுடியுமா என்று சந்தேகப்

படிக்கிறவர்களுக்கு, அவர் தமிழ்மூவாயிரத்தில் பாடியுள்ள சில செய்யுட்களைப் பார்த்தால் அவர் அத்தனை ஆண்டுகள் வாழ்ந்திருக்கமுடியும் என்று நம்புவார்கள். அப் பாட்டுக்களாவன :

"வளியினை வாங்கி வயத்தி லடக்கில்
பளிங்கொத்துக் காயம் பழுக்கினும் பிஞ்சாம்
தெளியக் குருவின் திருவருள் பெற்றால்
வளியினும் வேட்டு வளியனு மாமே" (இஇக)

"நீல நிறனுடை நேரிழை யாளொடும்
சாலவும் புல்விச் சதஞ்மன் நிருப்பார்க்கு
ஞால மறிய நரைதிரை மாறிடும்
பாலனு மாவர் பராநந்தி யாணையே" (எகச)

என்றும்,

"எங்கே இருக்கினும் பூரி இடத்திலே
அங்கே அதுசெய்யில் ஆக்கைக்கு அழிவில்லே" (இஇஉ)
"அண்டம் சுருங்கில் ஆக்கைக்கு அழிவில்லே" (எகஇ)
"நாட்ட மிரண்டும் நடுமூக்கில் வைத்திடில்
வாட்டமு மில்லே மனைக்கும் அழிவில்லே" (இஅச)
"ஈராறு கால்கொண்டு எழுந்த புரவியைப்
பேராமற் கட்டிப் பெரிதுண வல்லிரேல்
நீரா யிரமும் நிலமா யிரத்தாண்டும்
பேராது காயம் பிரான்நந்தி ஆணையே" (எ0உ)

என்றும்,

"காற்றைப் பிடிக்கும் கணக்கறி வாளர்க்குக்
கூற்றை யுதைக்கும் குறியது வாமே" (சு0உ)
"மூல நாடி முகட்டல குச்சியுள்
நாலு வாசல் நடுவுள் இருப்பிர்காண்
மேலே வாயில் வெளியுறக் கண்டபின்
காலன் வார்த்தை கனவிலும் இல்லையே" (இஇங)

என்றும்,

"உடம்பா ரழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தேன்
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே" (எ0ச)

என்றும்,

நாயனார் தம் அனுபவத்தைக் கூறியுள்ளார். "தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்பது ஆன்றோர் கொள்கையாதலால், உலகத்தார் உய்யும்பொருட்டு மேற்சொன்ன கூற்றை உதைக்கும் முறைகளைத் தம் நூலின்கண் அருளிச்செய்துள்ளார்.

தி.—ச

அவர் எத்தனை ஆண்டுகளேனும் உயிரோடிருக்கும் வன்மை வாய்ந்தவர். இவர் மாத்திரமன்று; இவர் குழாஅத்தைச் சேர்ந்தவர்கள் எல்லோரும் பொதியமலை அகத்தியரும் இத்தகைய வன்மை வாய்ந்தவர்களே. இவ்வாறு சித்தி பெற்றவர்களே சித்தர்கள். இவர்கள் கண்ட இந்த முடிவே சித்தாந்தம்.

ஆதலின் திருமூலர், கி. மு. 6000 முதல் கி. மு. 100 வரை 5900 ஆண்டுகள் திருவாவடுதுறையில் நற்போதியின்கீழ் இருந்தார் என்பதில் யாதும் ஐயுறவு இல்லை.

## (ஒ) திருவள்ளுவர் (கி. மு. 75 to 36 கி. பி.), திருமூலரின் கருத்துக்களையும், சொற்களையும், தொடர்களையும் பொன்னேபோல் போற்றியுள்ளார் என்பது

பாண்டிய நாட்டில் கி. மு. 50 முதல் கி. பி. 30 வரை அரசாண்ட கருங்கை ஒள்வாள் பெரும்பெயர் வழுதி காலத்தில் உன்மந்திரத் தலைவராய் இருந்து, "வள்ளுவர்" என்னும் பட்டம் பெற்று, வழுதியின் வேண்டுகோட்கிணங்கித் திருக்குறள் என்னும் நீதிநூற்பாடியவர் "வாளார் நெடுமாறன் வள்ளுவனார்" ஆவார்.

> "தப்பா முதற்பாவால் தாமாண்ட பாடலினால்
> மூப்பாலின் நாற்பால் மொழிந்தவர்—எப்பாலும்
> **வைவைத்த கூர்வேல் வழுதி மனமகிழத்**
> தெய்வத் திருவள் ளுவர்"

என்ற கீரந்தையார் பாடலினால் வழுதியின் கட்டளைப்படி வழுதி மனமகிழத் தெய்வத் திருவள்ளுவர் திருக்குறளைப் பாடினர் என்பது பெற்றம்.

> "அறனறிந்தேம் ஆன்ற பொருள்தெரிந்தேம் இன்பின்
> திறனறிந்தேம் வீடு தெளிந்தேம்—மறன்எறிந்த
> **வாளார் நெடுமாறன் வள்ளுவனார் தம்வாயால்**
> கேளா தனவெல்லாங் கேட்டு"

என்ற கொடிஞாழல் மாணிபூதனர் பாட்டால் திருவள்ளுவருடைய இயற்பெயர் "நெடுமாறன் வள்ளுவர்" என்பது பெற்றாம்.

திருவள்ளுவர் தம் இளவயதில் 'தொல்காப்பியம்' என்னும் இலக்கண நூலையும், 'தமிழ் மூவாயிரம்' என்னும் தத்துவ நூலையும் நன்கு கற்றவர். அரசியல் ஞானமும் உலக அறிவும் மிகுதியும் உடையவர். வாட் படையைத் தாங்கிச் சண்டை செய்வதில் இணையற்றவர். இவர் கருங்கை ஒள்வாள் பெரும் பெயர் வழுதியுடனும் தனித்தும் பல தடவைகளில் பகைவர் களுடன் மலைந்து வெற்றிபெற்றவர். அதனைன்றே, "மன்ற

எறிந்த வாளார் நெடுமாறன் வள்ளுவனார்" என்று கொடி ஞாழல் மாணிபூதனர் கூறலாயினர்.

திருவள்ளுவர் கி. மு. 75 முதல் கி. பி. 36 வரை வாழ்ந்தவர். ஆனபடியால், இவர் பிறப்பதற்கு 25 ஆண்டுகள் முன்னர் அஃதாவது கி. மு. 100 இல் திருமூலர் "தமிழ் மூவாயிரம்" என்னும் நூலை இயற்றி, தம்முடைய ஏழு சீடர்களுக்கும் உபதேசித்துவிட்டுப் பரமுத்தி யடைந்ததை அறிந்தவர் ஆனபடியால், தமிழ் மூவாயிரத்தை நன்கு கற்றார்.

தமிழ் மூவாயிரத்தினின்றும் திருவள்ளுவர் எடுத்தாண்ட பகுதிகளில் சிலவற்றை ஈண்டுத் தருகின்றோம்.

1. "ஆரும் அறியார் **அகாரம்** அவனென்று" —தமிழ்மூவாயிரம்
   "**அகரம்** முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன்" —திருக்குறள்
2. "அறிவுடையார் நெஞ்சொடு ஆதிபகவனும்" —தமிழ்மூவாயிரம்
   "**ஆதிபகவன்** முதற்றே யுலகு" —திருக்குறள்
3. "**போதுகந் தேறும்** புரிசடை யானடி" —தமிழ்மூவாயிரம்
   "மலர்மிசை ஏகினான்" —திருக்குறள்
4. "பொருளதுவாய் நின்ற புண்ணியன்" —தமிழ் மூவாயிரம்
   "இறைவன் பொருள்சேர் புகழ் புரிந்தார்" —திருக்குறள்
   (பொருள்சேர் இறைவன் புகழ் புரிந்தார்)
5. "எண் சத்தி தூய்மையும்" —தமிழ்மூவாயிரம்
   "எண் குணத்தான்" —திருக்குறள்
6. "தன்னே யொப்பார் ஒன்றுமில்லாத் தலைமகன்"
   —தமிழ்மூவாயிரம்
   "தனக்கு உவமை யில்லாதான்" —திருக்குறள்
7. "அறவாழி அந்தணன் ஆதி பராபரன்" —தமிழ்மூவாயிரம்
   "அறவாழி அந்தணன் தாள்" —திருக்குறள்
8. "விளைக்கும் தவம் அறம் மேல்துணை யாமே" —தமிழ்மூவாயிரம்
   "தானம் தவம் இரண்டும்" —திருக்குறள்
9. "முழக்கி எழுவன மும்மத வேழம்
   அடக்க அறிவெனும் தோட்டியை வைத்தேன்"
   —தமிழ் மூவாயிரம்
   "உரன் என்னும் தோட்டியால் ஓர் ஐந்தும் காத்தல்"
   —திருக்குறள்
10. "ஆமே சுவை ஒளி ஊருசை நாற்றம்" —தமிழ் மூவாயிரம்
    "சுவை ஒளி ஊருசை நாற்றமென் றைந்தின்" —திருக்குறள்

11. "அந்தண்மை பூண்ட அறவோர் ஆகமத்துச்
சிந்தைசெய் அந்தணர் சேரும் செழும்புவி" —தமிழ்மூவாயிரம்

"அந்தணர் என்போர் அறவோர்" —திருக்குறள்

இன்னும் எத்தனையோ உள. விரிவஞ்சி விடுத்தாம். இதனால் தமிழ் மூவாயிரம் திருவள்ளுவர் காலத்துக்கு முற்பட்டது என்றும, இப்போது தமிழில் உள்ள தத்துவ நூல்களில் தலையாயது என்றும், திருவள்ளுவர்—பட்டினத்தார்—தாயுமானவர் போன்ற பெரியார்கள் எல்லாம் படித்துச் சுவைத்து இன்புற்றது என்றும் அறிந்தாம்.

## (ஏ) திருமூலர் இரண்டாந் தடவை தென்னாடு வந்தது

திருமூலர் இரண்டாம் தடவை தென்னாட்டுக்கு வந்த வரலாறுறைப்பற்றி விரிவாய்ப் பெரிய புராணத்தில் கூறப்பட்டிருக்கின்றது. அச் சரித்திரத்தைத்தான் பல பதிப்பாளர்கள் வெளியிட்டுளளார்கள். ஆதலின், அதனை யாம் இங்குக் கூறவில்லை. பெரிய புராணத்தில் கண்டுகொள்க.

## (ஐ) தமிழ் மூவாயிரம் மொழிபெயர்ப்பு அன்று என்பது

"தமிழ் மூவாயிரம்" என்னும் நூலுக்குத் "திருமந்திரம்" என்று ஒரு பெயர் உண்டென்று நாம முன்னமே கூறியுள்ளாம். திருவாளர் மா. வே. விசுவநாத பிள்ளை அவர்கள் பதிப்பில் நான்முகத்தில் பக்கம் 8 இல் "திருமூலர் தம்முடைய தவப் பயனாய் விளங்கும இந் நூலைத் திருமந்திரமாலிகை எனப் பெயரிட்டு விடுத்தாரேனும். 'மாலிகா' எனற வடமொழிக் கிளவி சிறுமாலை எனப் பொருள்படும்" என்றும், பக்கம் 15 இல் அடிக்குறிப்பில், "ஸ்ரீ மந்திர மாலிகா என்னும் ஞானநூல் முதலில் வடமொழியில் ஆக்கப்பட்டதெனக் கொள்வதற்கு இடமுண்டு. உபமனயு பக்த விலாசத்தில் பகரும் வாய்மையை நோக்கின் இத் திருமந்திரத்தின் முதல்நூல் வடமொழியில் உளது என்பது போதரும்" என்றும் கூறப்பட்டிருக்கிறது. இதனை எழுதியவருடைய துணிபே துணிபு. "நேர்நின்று காக்கை வெளிதென்பார் என்சொலார்" எனனும் சொற்றொடர்ப் பொருட்கு இலக்காகியவர். இத்தகைய தவருன வாக்கியங்களையும ஒரு பெரிய நூலின் நூனமுகத்தில் பதித்துள்ளதுதான் வேடிக்கை. வடமொழியினனறுமே தமிழ்நூல்கள் எல்லாம் வந்தன என்று கூறுதற்குக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கும் குழாத்தின் அங்கத்தினருள் நான்முகம் எழுதியவரும் ஒருவர் ஆவர்.

தமிழர்கள் தமிழையும் சரியாகப் படிப்பதில்லை. வட மொழியும் கற்பதில்லை. ஆங்கிலம் முதலிய பிற மொழிகளையும் பயில்வதில்லை. ஆதலின், தமிழர்களிடையே எத்தகைய தவருன கொள்கைகளையும் நிலைநாட்டலாம் என்பது சிலருடைய கொள்கையா யிருக்கிறது.

திருமூலருடைய காலமாகிய இராமாயண காலத்தில் இமய முதல் குமரி வரையும் அவ் வெல்லைக்கு அப்பாலும் தமிழே பேசப்பட்டது என்பதை உணர்வார், அவ்வாறு கூறமாட்டார்கள்.

திருமூலர் ஒன்பது ஆகமங்களின் சாரங்களை ஒன்பது தந்திரங்களாகப் பாடினார். இதனை,

> " நந்தி இணையடி நான்தலை மேற்கொண்டு
> புந்தியி னுள்ளே புகப்பெய்து போற்றிசெய்து
> அந்தி மதிபுனை அரன்அடி நாடொறும்
> சிந்தைசெய்து ஆகமஞ் செப்பலுற் றேனே"

என்ற தற்சிறப்புப் பாயிரச் செய்யுளாலும்,

> " வந்த மடம்எழு மன்னும்சன் மார்க்கத்தின்
> முந்தி உதிக்கின்ற மூலன் மடவரை
> தந்திரம் ஒன்பது சார்வு மூவாயிரம்
> சுந்தரன் ஆகமச் சொன்மொழிந் தானே"

என்ற சிறப்புப் பாயிரச் செய்யுளாலும் அறியலாம்.

தமிழ்மொழியில் வேதம் சூத்திரமும் ஆகமம் அதன் பாடியமும் போன்றவை. வேதம் பொது. ஆகமம் சிறப்பு. இதனை

> " வேதமோ டாகமம் மெய்யாம் இறைவனூல்
> ஓதும் சிறப்பும் பொதுவும்என் றுன்னுக
> நாதன் உரையவை நாடில் இரண்டந்தம்
> பேதம தென்பர் பெரியோர்க் கபேதமே"

என்ற தமிழ் மூவாயிரச் செய்யுளால் அறியலாம். ஆரிய வேதம் ஆகமத்தை ஒப்புக்கொள்ளவில்லை.

தற்காலம் கிரந்த எழுத்துக்களிலும் நாகரத்திலும் உள்ள ஆகமங்கள் எல்லாம் தமிழ் ஆகமங்களினின்றுமே மொழி பெயர்த்தவையும், வடமொழி கற்ற தமிழர், தமிழ் ஆகமங் களின் சாரங்களை வடமொழியாளர்க்கும் அறிவுறுத்துவான் கருதி எழுதப்பட்டவையுமே தவிர வேறு இல்லை. இவ்வுண்மை யைக் காமிகம் முதலிய ஆகமங்கள் பவுஷ்கரம் முதலிய உப ஆகமங்களினுடைய முகவுரையிலிருந்து அறியலாகும்.

மேலும், திருமூறைகளை வகுத்த நம்பியாண்டார் நம்பிகள் "முழுத் தமிழின்படி மன்னும் வேதத்தின் சொற்படியே" நம் திருமூலர் பாடினதாகத் தம் அந்தாதியில் கூறியுள்ளதையேனும் அனைவரும் கூர்ந்து நோக்கினால் உண்மை வெளியாகும்.

மேலும், நம் சேக்கிழார் பெருமான் "ஒன்றவன் தானே என வெடுத்துத்" திருமூலர் தம் நூலைத் தொடங்கினர் எனப் பாடியுள்ளார்: "ஒன்று" என்ற சொல்லில் தமிழுக்கே சிறப்பான 'ற்'கரம் உள்ளதால் அச் சொல்—வேறு மொழியாயிருக்க நியாயம் சிறிதும் இல்லை.

ஆதலின் தமிழ் மூவாயிரம் என்னும் நூலானது மொழி பெயர்ப்பு நூல் அன்று என்பது காட்டப்பட்டது.

## (க) நூற்பயன்

ஒரு நூலின்கண் நூற்பயனைக் கூறவேண்டும் என்னும் இலக்கண விதியின்படி, நம் திருமூலரின் மாணாக்கர்கள் கூறிய சிறப்புப் பாயிரத்தில் நூற்பயனும் கூறப்பட்டிருக்கிறது. அப் பாடல்களாவன:

"மூலன் உரைசெய்த மூவா யிரம்தமிழ்
ஞாலம் அறியவே நந்தி யருளது
காலை எழுந்து கருத்துஅறிந்து ஓதிடின்
ஞாலத் தலைவனை நண்ணுவர் அன்றே.

"வைத்த பரிசே வகைவகை நன்னூலின்
முத்தி முடிவிது மூவா யிரத்திலே
புத்திசெய் பூர்வத்து மூவா யிரம்பொது
வைத்த சிறப்புத் தருமிவை தானே."

———

திருச்சிற்றம்பலம்

# சிறப்புப் பாயிரம்

## (அ) குருமட வரலாறு

வந்த மடமேழும் மன்னுஞ்சன் மார்க்கத்தின்
முந்தி உதிக்கின்ற மூலன் மடவரை
தந்திரம் ஒன்பது சார்வுமூ வாயிரம்
சுந்தரன் ஆகமச் சொன்மொழிந் தானே.

ஏழு திருமடங்களும் நிலைபெற்ற நன்னெறியினைப் போதிப்பனவே. அவற்றுள் சிறந்து காணப்படுவது திருமூலர் திருமடமாகும். அதன்வழி இவ் வொன்பது தந்திரமும் அவற்றிற்குரிய மூவாயிரம் திருமந்திரமும் வெளிப்போந்தன. இவற்றைத் திருமூலராகிய சுந்தரர் அருளிச் செய்தனர். அதனால் இதற்குச் சுந்தர ஆகமம் எனவும் ஒரு திருப் பெயருண்டு. (க)

கலந்தருள் காலாங்கர் தம்பால் அகோரர்
நலந்தரு மாளிகைத் தேவர்நா தாந்தர்
பலங்கொள் பரமானந் தர்போக தேவர்
நிலந்திகழ் மூலர் நிராமயத் தோரே.

இறைவன் திருவருளால் மெய்யுணர்வு கைவந்த வழிவழித் தவத் தோர் காலாங்கர், அகோரர், மாளிகைத்தேவர், நாதாந்தர், பரமா னந்தர், போகதேவர், திருமூலர் என ஏழுதமிழ் முனிவராவர். (உ)

## (ஆ) திருமந்திரத் தொகைச் சிறப்பு

மூலன் உரைசெய்த மூப்ப துபதேசம்
மூலன் உரைசெய்த முந்நூறு மந்திரம்
மூலன் உரைசெய்த மூவா யிரந்தமிழ்
மூலன் உரைசெய்த மூன்றுமோன் றாமே.

திருமூலநாயனார் அருளிச்செய்த திருப்பாட்டுக்கள், மூப்பது உபதேசம், முந்நூறு மந்திரம், மூவாயிரந் தமிழ் ஆகிய இம் மூன்றும் ஓர் உண்மையினை உரைத்தருளும் கருத்தொன்றாகும். மேலும் இம் மூவாயிரத்தின்கண் ஆயிரத்துக்குப் பத்து விழுக்காடு உபதேசம் எனவும், நூற்றுக்குப் பத்து விழுக்காடு மந்திரமெனவும் ஏனையவை இவற்றை விளக்கும் விரிவெனவுங் கொண்டு ஆய்தலும் ஒன்று. (க)

மூலன் உரைசெய்த மூவா யிரந்தமிழ்
ஞாலம் அறியவே நந்தி அருளது
காலை எழுந்து கருத்தறிந் தோதிடின்
ஞாலத் தலைவியை நண்ணுவ ரன்றே.

திருமூலநாயனார் அருளிச்செய்த மூவாயிரந் தமிழும் உலகமுய்ய நந்தி யருளியதாகும். ஒவ்வொருநாளும் வைகறைப்பொழுதிலும் மற்றைய பொழுதுகளிலும் சிவக்கோலத்துடன் எழுந்து பொருளுணர்ந் தோதுவார் திருவருள் கைவந்தோராவர். (உ)

வைத்த பரிசே வகைவகை நன்னூலின்
முத்தி முடிவிது மூவா யிரத்திலே
புத்திசெய் பூர்வத்து மூவா யிரம்பொது
வைத்த சிறப்புத் தருமிவை தானே.

இம், மூவாயிரந் தமிழும் ஒன்பது தந்திரப்பகுப்பில் நான்கு பொதுவும் ஐந்து சிறப்புமாக நின்று வீடுபேற்றை நல்கும். (ஊ)

அத்தன் நவதீர்த்தம் ஆடும் பரிசுகேள்
ஒத்தமெய்ஞ் ஞானத் துயர்ந்தார் பதத்தைச்
சுத்தம தாக விளக்கித்[1] தெளிக்கவே
முத்தியாம் என்றுநம் மூலன் மொழிந்ததே.

திருவடிப்பேறு பெற்ற செந்நெறியாளர், செம்பொருட்டுணிவினர் என்னும் சிவனடியார்தம் திருவடிவிளக்கிய திருத்த நீரே புதுமைவாய்ந்த சிவதீர்த்தமாகும். இதுவே ஒன்பான் தீர்த்தமெனலு மொன்று. (எ)

வித்தக மாகிய வேடத்தர் உண்டஊண்
அத்தன் அயன்மால் அருந்திய அன்னமாம்
சித்தம் தெளிந்தவர் சேடம் பருகிடின்
முத்தியாம் என்றுநம் மூலன் மொழிந்ததே.

சிவனடியார்ர் உண்டருளிய திருவமிழ்து மூவராய் நின்றிலங்கும் சிவபெருமான் உண்டருளியதாகும். அவ் வமிழ்த எச்சம் உண்ணும் பேறுடையார் திருவடியின்பெய்துவர். இது திருமூலர் ஆணை மொழி யாகும். (ஏ)

சிறப்புப்பாயிரம் முற்றும்

---

1. விருப்பினால். கூ. சம்பந்தர், கூஉ.

ஓம்
திருச்சிற்றம்பலம்

# திருமூலர்
# திருமந்திரம்

## க. பொதுப்பாயிரம்

### 1. கடவுள் வாழ்த்து

1. ஒன்றவன்[1] தானே இரண்டவன் இன்னருள்
நின்றனன் மூன்றினுள் நான்குணர்ந் தான்ஐந்து
வென்றனன்[2] ஆறு விரிந்தனன் ஏழும்பார்ச்
சென்றனன் தானிருந் தானுணர்ந் தேட்டே.

(ப. இராமநாதன்) இத்திருமறை முழுமுதற் சிவபெருமானின் எண் பெருங் குணங்களையும் முறையே குறிக்கும் அருங்குறிப்புமாகும். மேலும் சிவபெருமான் உலகப் பெருந்தோற்றத்துக்கு முன்னும், உலகப் பேரொடுக்கத்துக்குப் பின்னும், நிலைத்திருக்கும் அழிவிலா ஒருவன். அவன் இனிய அருள் 'சிவய நம' என்னும் திருவைந்தெழுத்திற் காணப் படும் வகரமும் நகரமும் ஆகிய இரண்டெழுத்துக்குரிய வனப்பு (பராசக்தி) நடப்பு (ஆதிசக்தி) என இரண்டாகும். அன்பு அறிவு ஆற்றல் என மூன்றுகும். இவற்றை இச்சை ஞானம் கிரியை எனவும் இசைப்பர். சிவசிவ எனப் பொருள்மறை நான்காகும். படைத்தல் காத்தல் துடைத்தல் மறைத்தல் அருளல் எனத் திருவருட்டொழில் ஐந்தாகும். அவன் திருவடியைச் சேர்ப்பிக்கும் படிமுறைவழிகள் (அத்துவாக்கள்) தொகை வகையால் ஆறுகும். எழுவகை யாற்றலுக்கும் அப்பாற் பட்டவன். எழுவகை ஆற்றல் தமிழாகம விரிவாகிய சிவஞான சித்தியாரில் அருளியபடி சத்தி, விந்துசத்தி, மனோன்மனி, மகேசை, உமை, திரு, வாணி* என்பர். நிலம், நீர், நெருப்பு, உயிர் (காற்று) விசும்பு, நிலா, பகலோன், புலனுய மைந்தன்† என எண்வகை நீங்குநிலைப் பொது வடிவங்களாகும்.

---

1. ஒன்றென்ற. சிவஞானபோதம், உ. க - உ.
2. வென்று. அப்பர். தி. கூஅ - எ.
* சத்தியாய். சிவஞானசித்தியார், உ. ச - கூ.
† நிலம்நீர். திருவாசகம், திருத்தோ - இ.

இன்னும் ஒருவகையாக நோக்கின், முழுமுதல் சிவன் ஒருவனே. அவன் அம்மையப்பரெனெ இரண்டாக விளங்குவன். அவன், அவள், அது என மூன்றினுள் நின்றனன். சீலம் நோன்பு செறிவு அறிவு என நான்குணர்த்தினன். இவற்றைச் சரியை கிரியை யோகம் ஞானம் எனக் கூறுவர். மூவர் தேவாரம், மூனி மொழியும் திருவாசகம் திருக் கோவையார், திருமூலர் சொல்லென்னும் ஐந்தால் வெல்லுவித்தனன். ஓர் அறிவுமுதல் ஆறறிவு ஈருகவுள்ள அனைத்துயிர்க்கும் அறிவிக்க ஆருய் விரிந்தனன். எழுவகைப் பிறப்பிற்கும் அப்பால்நின்று பிறப்பினை நல்கி இயக்கும் பிறப்பில் பெருமான். பேறுபெற்ற ஆருயிர்கள்பால் சிவ பெருமானின் எண்பெருங் குணங்களும் பதிந்து விளங்கும். அங்ஙனம் விளங்க அச்சிவபெருமான் அவ் வெட்டினையும் உணர்த்தல் வேண்டும். மூன்று என்பதற்கு அருவம், அருவுருவம், உருவம் எனக் கூறுதலும் ஒன்று. இத்திருமறை பொருளியல்புரைக்கும் பொற்பினது.

(அ. சீ. பாயிர்) ஒன்றவன்றானே - அவன் தானே ஒன்று; அவன் தனிப்பட நிற்கும்போது ஒன்று. இது கடவுள் ஒன்று எனக் கூறியது ஆகும். இரண்டவனின் னருள்-அவன் இன்னருள் இரண்டு; கடவுள் தன் அருளுடன் கூடி இருக்கும்போது இரண்டு எனப்படுவான். நின்றனன் மூன்றினுள் - கடவுள் முக் குணங்களோடு (இராசதம், தாமதம், சாத்து வீகம்) கூடி யிருக்கும்போது, மூன்று என்று சொல்லப்படுவான். நான்கு உணர்ந்தான்-நான்கு வேதங்களையும் (இருக்கு, சாமம், தலவகாரம், பவுடிகம்) உணர்ந்து வெளிப்படுத்தினன். ஐந்து வென்றனன் - பொறி வாயில் ஐந்து அவித்தனன். ஆறு விரிந்தனன் - பதம், எழுத்து, மந்திரம், கலை, தத்துவம், புவனம் என்னும் ஆறு அத்துவாக்களாகப் பரந்துள்ளான். ஏழு உம்பர்ச் சென்றவன் - ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, என்னும் ஏழு அண்டங்களையும் கடந்து நின்றவன். தான் எட்டு உணர்ந்து இருந்தான் - தான் எண் குணங்களையும் அறிந்து அவைக ளுடன் உலகர் பொருட்டுச் சேர்ந்திருந்தான். (க)

2. போற்றிசைத்[1] தின்னுயி ரன்னும் புனிதனை
நாற்றிசைக் கும்நல்ல மாதுக்கு நாதனை
மேற்றிசைக் குள்தென் திசைக்கொரு வேந்தனுங்
கூற்றதைத் தானையான்[2] கூறுகின் றேனே.[3]

(ப. இ.) மேற்றிசை - நாற்றிசையொடும் பொருந்தி அப்பெயரை முற்கொண்டு திகழும் கோணத்திசை நான்கு. அவை முறையே தென் கிழக்கு, தென்மேற்கு, வடமேறகு, வடகிழக்கென்பன. இதன்கண் சேர்தல் செறிதல் செலுத்தல் என்னும் உயிர்க்குயிராம் சிவபெருமானின் முப்பண்புகளும் குறிப்பால் விளக்கப்பட்டுள்ளன. அவை புனிதன், நாதன், தென்பால் நிறுவியவேந்தன், ஆளாம் கூற்றுதைத்தான் என்னும் கூற்றுக்களால் விளங்கும். ஒப்பில் முழு முதலாம் சிவ பெருமான் ஒருவனே அனைத்துயிரின் போற்றுதற்கும் உரியவன். அத்தகையோன் அருளாலாம் தூயவுடம்பினையுடையவன் அனைத்துகினுக்கும் இன்னருள் புரியும் நடப்பாற்றலாகிய ஆதிசத்திக்குத் தலைவன். உயர்ந்த திசை என்று சொல்லப்படும் வடதிசை தென்திசை என்ற இரண்டனுள்ளும்

1. போற்றிசைத்துன் அப்பர் கூ. திரு-கo.
2. நீற்றினே. அப்பர். ச சகூ-உ.
3. ஒழுகலறி. சம்பந்தர், கூ. கூரு-கஉ.

சிறந்ததாகிய தென்திசைக்கு வேந்தனை நிறுவிய ஒப்பில்லாத வேந்தன் சிவபெருமான். வேந்தன் என்பது ஆருயிர்கட்குப் போக[1] மீன்ற புண்ணியன் என்பதாம். தொன்மைத் தமிழரே சிவபெருமானை வேந்தன் எனவும் வழிபட்டனர். அவ்வுண்மை ஒல்காப்பெரும் புகழ்த் தொல் காப்பியத்தின்கண் 'வேந்தன் மேய தீம்புனல் உலகமும்' (தொல். பொருள் - ஙி) என்னும் நூற்பாவால் உணரலாம். இதன்கண் காணும் வேந்தன் என்பதற்கு இந்திரன் என்று பொருள் கொள்வது ஒருவாற்றானும் ஒவ்வாது. மேலும் 'தென்பாண்டி நாடே சிவலோகம்,' 'பாண்டி நாடே பழம்பதி' என்பன மணிமொழியார் திருமொழி. 'முனைத்தானை யெல்லார்க்கு முன்னே தோன்றி' என்பது அப்பர் அருண்மொழி அவன் ஒருவனே கூற்றுதைத்து ஆட்கொண்ட எண்குணவன். அவ்வுண்மை 'சிவத்தைப் பேணில் தவத்திற் கழகு' என்னும் ஔவையார் செம்மொழியால் உணரலாம். அத்தகைய அமிழ்தினும் இனிய தமிழ் முழுமுதலை அவன் விழுமிய அருளால் வழிமொழிகின்றேன்.

(அ. சி.) தென்றிசைக்கு ஒரு வேந்தன் - தென்திசையிலுள்ள யம புரத்துக்கு ஒப்பற்ற அரசனுகிய யமனை. நாற்றிசை - கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு. மேற்றிசை-நாற்றிசைகளிலும் உயர்ந்த (பரிசுத்தமான) திசை அல்லது மேலே சொல்லப்பட்ட நான்கு திசைகளுள். (உ)

3. ஒக்கநின் றூனை உலப்பிலி தேவர்கள்
நீக்கனென் றேத்திடு நாதனை நாள்தொறும்
பக்கநின் றூர்அறி யாத பரமனைப்
புக்குநின் றுன்னியான் போற்றிசெய் வேனே.

(ப. இ.) சிவபெருமான் திருவருளோடும், அவ்வருளின் ஆணை யுடனும், ஆருயிரோடும், மாயை கன்மங்களுடனும் கூடி இயக்குதற் பொருட்டு ஒப்பதின்றனை, பிறப்பு இறப்புக் கேடு ஏதுமில்லாத கடவுளை, விண்ணவர். விண்ணவர்கோன், மூவர் முதலிய தேவர்களுக்கு உற்றுழி உதவ அருளால் வெளிப் பட்டுநின்று அருள்வோனை, பக்கமாய் உடனிற் பினும் அவனருளில்லாதாரால் அறிய வொண்ணுத விழுப்பொருளை, அவனருளால் அவனுட்புக்கு அவன் முன்நிற்ப நற்றவத்தால் நினைந்து போற்றிப் புகழ்வேன். நக்கன் - வெளிப்பட்டுத் தோன்றியருள்பவன்.

(அ. சி.) நக்கன் - தத்துவங்களைக் கடந்தவன்; மலமில்லாதவன். மாசில்லாதவன். உலப்பிலி தேவர்-பாவம் இல்லாத புண்ணிய பூமியாகிய தேவருலகத்தில் வசிக்கின்றவர்கள். ஒக்க நின்றூனை-உயிர்களுடன் கூடவே தின்றவனை. (கூ)

4. சிவனெடொக் குந்தெய்வந் தேடினும் இல்லை[2]
அவனெடொப் பார்இங்கு யாவரும் இல்லை
புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னுந்
தவனச் சடைமுடித்[3] தாமரை யானே.[4]

1. நாகத்தணையானும். க. அஙி - கூ.
2. மைப்படிந்த. அப்பர், சு, கூஎ - கo.
3. பிறை நிலாவிய. சம்பந்தர், உ: கoசூ-எ. பின்னுவார். சு. சசு-எடி
4. மண்முதல். சிவஞானபோதம் கூ. கூ - கூ.

(ப. இ.) சிவனுடன் ஒப்பான ஒரு தெய்வத்தை ஆண்டுத் தேடினும் காண்டல் இல்லை. அவனுடன் ஒப்பாரை ஈண்டுங் காண்டல் இல்லை. எனவே, யாண்டும் யாவரும் அவனுக்குத் தாழ்ந்தவரே. அனைத்துலகங்களுக்கு அப்பாற்பட்டுப் பொன்போல் விளங்காநின்ற பின்னுதலையுடைய திவண்ணச் செஞ்சடையுடன் திகழ்கின்றான். மெய்யன்பர்களின் அன்பால் விளங்கும் நெஞ்சத் தாமரையைத் துய்ய வைப்பாகக் கொண்டு உறைகின்றனன் சிவன்.

(அ. சீ.) தவனம் - தீ—(செந்நிறம்). புவனம்-அண்டங்கள். சிவன் - சிவனோடு சேர்ந்துள்ளவன்; மங்களகரமானவன்; செந்நிறத்தவன். (சு)

5. அவனே ஒழிய அமரரும் இல்லை
அவனன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை
அவனன்றி மூவரால் ஆவதோன் றில்லை
அவனன்றி ஊர்[1]புகு மாறறி யேனே.

(ப. இ.) அச் சிவபெருமான் திருவானை ஒன்றுய் வேறுய் உடனுய் நிற்கும் முத்திறப்புணர்ப்பானும் ஆருயிர்களைப் பொருந்தும். அங்ஙனம் பொருந்தாவிடின் அமரர் எவர்க்கும் வாழ்வில்லை. அவன் அருள் துணையின்றிச் செய்யப்படும் அருந்தவங்கள் ஏதும் இல்லை. அவனருள் இல்லாமல் அயன், அரி, அரன் என்னும் மூவரால் நடத்தக்கூடியது ஒன்றும் இல்லை. அவன் திருவருளில்லாமல் வானோர்க்கு உயர்ந்த உலகமாகிய பேரின்பத் திருவூர்புகும்வழி ஒருவராலும் உணரவொண்ணுதென்க.

அவன் : சேய்மைச் சுட்டு; பண்டறிசுட்டுமாம். சேய்மைச் சுட்டு உண்மையும், பண்டறிசுட்டுப் பொதுவுமாம்; பொது-ஈண்டுச் சார்பு.

(அ. சீ.) ஊர் - முத்தி நகர். மூவர் - அயன், அரி, அரன் (உருத்திரன்). அமரர்-மரியாதவர்கள்; இறவாதவர்கள். (இ)

6. முன்னையோப் பாயுள்ள மூவர்க்கு மூத்தவன்
தன்னையோப் பாயொன்றும் இல்லாத் தலைமகன்
தன்னையப் பாஎனில் அப்பனு மாய்உளன்
பொன்னை யோப்[2] பாகின்ற போதகத் தானே.

(ப. இ.) ஒவ்வொரு தொழிலே உடைய அயன் அரி அரன் என்னும் மூவரும் அவ்வத் தொழில் ஒன்றேபற்றித் தம்முள் ஒப்பாவர். அம் மூவர்க்கும் முழுமுதலாய்ச் சிறந்தோனுய் என்றும் காணப்படுபவன் சிவன். மூப்பு - சிறப்பு. அச் சிவன் தன்னை யொப்பாக ஒருபொருளுமில்லாத தனிமுதல்வன். அவனை விட்டுநீங்காது ஆருயிரோடு ஒட்டியுறைவோன் என்னுங் கருத்தால் அப்பன் என்று அன்பாய்க் கூறின், அப்பனுமாவன். அவன் ஆருயிர்களின் நெஞ்சத் தாமரையின் உள்ளிடத்தான். அந்நெஞ்சத் தாமரையின்கண் பொன்னெத்துத் திகழ்கின்றனன். பொன் : பொதுப்பெயர்; அஃது இரும்பு, பொன் என்னும் இரண்டினையும் குறிக்கும். ஆருயிரின் நெஞ்சம் ஆணவச் சார்பால் இரும்பொக்கும்; அருட்சார்பால் பொன்னெக்கும்.

---

1. இருடரு. அப்பர், சு. கூ - தி. பெருமான் அ. யாத்திரை அ.
2. மின்னும். (பெரும்பொருள் விளக்கம்) தொல். பொ. கூ0. மேற்கோள்.

(அ. சி.) முன்னே-படைப்புக் காலத்துக்கு முன். போதகத்தான் - போது அகத்தான்; உள்ளமாகிய தாமரை மலர்மீது உள்ளவன். (சு)

7. தீயினும் வெய்யன் புனலினுந் தண்ணியன்
ஆயினும் ஈசன் அருளறி வார்இல்லை
சேயினும் நல்லன் அணியன்நல் அன்பர்க்குத்
தாயினும் நல்லன் தாழ்சடை யோனே.

(ப. இ.) தீயைக் காட்டிலும் மிகவும் வெப்பம் உள்ளவன். இந்நிலை அறிவாய்த் தனியாய் நிற்கும் கழிநிலை. புனலிலிடக் குளிர்ந்தவன். இந்நிலை அருளுடன் கூடி அனைத்துயிரையும் இயக்கியாளும் வழிநிலை. ஆயினும் அவன்தன் அருள் நிலையினை உள்ளவாறு அறிவார் ஒருவரும் இலர். சுட்டுணர்வாலும் சிற்றுணர்வாலும் அறியப்படாத சேய்மையனாயினும் நல்லன்பர்களுக்கு அணியனாய் நின்று என்றும் நன்மை செய்பவன். 'பால் நினைந்தூட்டும் தாயினும்'[1] இனியன். தாழ்ந்த திருச்சடையை உடையவன். கழிநிலை - கடந்தநிலை. வழிநிலை - கலந்தநிலை.

(அ. சி.) சேயினும் - மனமாதிகளுக்கு எட்டாதவன் ஆயினும். அணியன் - அணுவாகிய உயிருடன் கலந்துள்ளவன். (எ)

8. பொன்னுற் புரிந்திட்ட பொற்சடை யேன்னப்
பின்னுற் பிறங்க இருந்தவன் பேர்நந்தி
என்னுல் தொழப்படும் எம்இறை மற்றவன்
தன்னுல் தொழப்படு வாரில்லை தானே.

(ப. இ.) பொன்னுல் பின்னி அழகுற அமைக்கப்பட்ட திருச்சடையென்று வழுத்தும்படியாகப் பின்னுல் விளங்கும் சடையுடன் வீற்றிருந்தருள்பவன். அவன் திருப்பேர் நந்தியங் கடவுள் என்று சொல்லப்படும். அடியேனுல் தொழப்படும் எம் தலைவன். அத்தகைய சிவன் யாரையும் தொழுவானல்லன். எல்லாரும் அவனையே தொழுவர்.[2] அதனுல் தன்னுல் தொழப்படுவார் இல்லை யென்றருளினர். இதுபற்றியே 'சேர்ந்தறியாக் கையானை'[3] என்னும் செந்தமிழ்ச் சிறப்புத் திருமறை முடிவும் (திருவாசகம்) அருளிற்றென்க.

(அ. சி.) நந்தி - நந்துதல் இல்லாதவன். பிறப்பு, இறப்பு இல்லாதவன். பொன்...இருந்தவன் - அருளாகிய கதிர்களால் சூழப்பட்டவன். (அக் கதிர்கள் ஒன்றோடொன்று பிணைந்திருப்பது சடைபோன்ற காட்சியை அளிக்கின்றது.) (அ)

9. அயலும் புடையும்எம் ஆதியை நோக்கில்
இயலும் பெருந்தெய்வம் யாதுமொன் றில்லை
முயலும் முயலில் முடிவுமற் றுங்கே
பெயலும் மழைமுகிற் பேர்நந்தி தானே.

---

1. பால்நினைந். அ. பிடித்த பத்து - கூ.
2. முழுத்தழல். அப்பர் ச. ககசு - இ.
3. கையார். அ. திருவம்மானை, கசூ.

(ப. இ.) வேறிடத்தும் பக்கத்தும் யாவற்றிற்கும் காரணமாம் சிவபெருமானே அவனருளால் ஆராயின் அவனுடன் ஒத்து விளங்கும் பெரிய முழுமுதல் தெய்வம் யாதொன்றும் இல்லை. அவன் திருவடியுணர்வு கொண்டு சீலம், நோன்பு, செறிவு, அறிவு என்னும் நன்னெறி நான்மையால் அடைய முயலும் முயற்சிக்கண் அவன் துணைபுரிந்து வெளிப்பட்டருள்வன்; முடிவிலும் அங்ஙனே திகழ்ந்தருள்வன்; அதனால் அவன் வேண்டுங்காலத்துப் பொய்யாது வேண்டுமளவு பெய்யும் அருண் மழை முகில் போல்வன். அவன் திருப்பேர் நந்தி என்ப.

(அ. சி.) பெயலு மழைமுகில் - மழை பெய்யும் முகில், அருண் மழையைப் பொழிகின்ற மேகம் போன்றவன். முயலின் முடிவும் - அச்சாதனையின் பயனும். முயலும் - முத்தி சாதனையும். (கூ)

**10.** பிதற்றுகின் றேன்என் றும்பேர்ந்தி தன்னை
இயற்றுவன் நெஞ்சத் திரவும் பகலும்
முயற்றுவன் ஓங்கொளி வண்ணன்எம் மானை
இயற்றிகழ் சோதி இறைவனு மாமே.

(ப. இ.) எந்நாளும் அவனருள் துணையால் நிகழும் பேரன்பால் நந்தியங் கடவுளைச் 'சிவ சிவ' என்று இடையறுது ஏத்துகின்றேன். இரவும் பகலும் நெஞ்சத்து அவனையே இடையறுது நினைதலாகிய பரவதலைச் செய்கின்றேன்; அவன் திருவடியைப் பெறவே முயல்கின்றேன்; அவன் ஒரு பெற்றியாய் என்றும் அழியா அறிவொளியாய் எவற்றையும் ஒளிர்விக்கும் ஆற்றலொளியாய்த் திகழும் ஓங்கொளிவண்ணன்; எம் தலைவன்; இயல்பாக விளங்கும் உண்மையறிவின்பப் பேரொளி வண்ணன்; குறைவிலா நிறைவாய்க் கோதிலா அமிழ்தாய்த் திகழும் முறையுறும் முதல்வனுவன்.

(அ. சி.) இயற்றிகழ் - இயல்பாகவே பிரகாசிக்கின்ற. உயற்றுவன் - உயிர் வாழ்வேன். இயற்றுவன் நெஞ்சத்து - நந்திதன் திருவடியை நெஞ்சத்துள் பொறிப்பன். பிதற்றல் - ஓயாமல் உச்சரித்தல். (கo)

**11.** கண்ணுத லான்ஒரு காதலின் நிற்கவும்
எண்ணிலி தேவர் இறந்தார் எனப்பலர்
மண்ணுறு வார்களும் வானுறு வார்களும்
அண்ணல் இவன்என் றறியகி லார்களே.

(ப. இ.) நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமான் அன்பு செய்யும் ஆருயிர்கட்கு அருள் புரிய வேண்டும் என்னும் ஒப்பில்லாத தனிப்பெருங் காதலுடன் என்றும் ஒருபடித்தாய் அழிவின்றி நிற்பன். அவன் அவ்வாறு நிற்கவும் அளவில்லாத தேவர்கள் என அவன் ஆணையால் சிறப்புப்பெற்ற ஆருயிர்கள் மலப்பிணிப்பால் விலக்கீடாய் மாயகாரிய உடம்புகளுடன் பிறந்திறந்து வருவதே தொழிலாய் ஒழிந்தனர். அங்ஙனமிருந்தும் மண்ணுலகத்தாரும் விண்ணுலகத்தாரும் என்றும் அழியா இயற்கைச் சேர் அண்ணல் சிவபெருமானே என்று அறியாது தடுமாறுகின்றனர்; கண்ணுதலான் நினைப்பானெல்லாமியற்றுபவன்[1] என்றலுமாம்.

1. கதிரார்திங்கள் கூ. சூ. சு.

(அ - சி.) மண்ணுறுவார்கள் - மானிடர்கள்; தூல தேகத்தை உடையவர்கள்; தேவர்-திவ்விய (சூட்சும) தேகத்தையுடையவர். புதன், வியாழம், வெள்ளி, செவ்வாய் முதலிய அண்டங்களில் உள்ளவர். (கச)

12. மண்ணளந் தான்மல ரோன்முதல் தேவர்கள்
எண்ணளந் தின்னம் நினைகிலார் ஈசனை
விண்ணளந் தான்தன்னை மேல்அளந் தாரில்லை
கண்ணளந் தெங்குங் கடந்துநின் ருனே.

(ப. இ.) மால் வஞ்சனையாற் சென்று மாவலிபால் மூன்றடி மண் வேண்டி அவன் புனலுடன் பூச்சொரிந்து தரப்பெற்றுத் தன் ஈரடியால் மண்ணும் விண்ணும் அளந்து மற்றோரடிக்கு அவன் தலையில் அடி வைத்து அழுத்தி அவனை அழித்தனர் என்ப. அத்தகைய மாலும் மலரோனுகிய நான்முகனும் ஏனைத் தேவர்களும் தங்கள் தங்கள் மனத்தாலும் கருதிச் சிவனை நினைக்கும் ஆற்றலில்லாதவராவர். அச் சிவன் ஆருயிர்களின் நெஞ்ச வெளியினையும் அளந்து அப்பாற்பட்டவன் ஆவன். தன் திருவுள்ளமாகிய கருத்தளவானே எல்லாவற்றையும் தந்தருளுதலாகிய அளத்தலைச் செய்து கலந்தும் கடந்தும் நிற்பவனும் அச் சிவனே. கண். கருத்து; கண்ணுதலோன் - நினைப்பளவா னெல்லா மாக்குவிப்பவன்.[1]

(அ. சி.) கண்ணளந்து - எல்லா அண்டங்களையும் வரையறுத்து. விண்ணளந்தான் - ஆகாய தத்துவத்திற்கு அதிபதியாகிய சதாசிவன். எண் அளந்து - தங்களுக்குள்ள ஆயுட்காலத்தை எண்ணி. மலரோன் - அயன் என்னும் தேவர். மண்ணளந்தான் - மால் என்னும் தேவர். (கஉ)

13. கடந்துநின் ருன்கம லம்மல ராதி
கடந்துநின் ருன்கடல் வண்ணன் எம்மாயன்
கடந்துநின் ருன்அவர்க் கப்புறம் ஈசன்
கடந்துநின் ருன்எங்கும் கண்டுநின் ருனே.

(ப. இ.) சிவபெருமான் மண்ணுலகைக் கடந்து நிற்கின்ற மலரோனுகிய ஆதியையும் கடந்து நின்றனன். அதுபோல் கடல் வண்ணனுகிய மாயனையும் கடந்து நின்ருன். ஈசனுகிய அரனையும் கடந்து நின்ருன். எல்லாவற்றையும் கடந்தும் நோக்கிநின் றருள்கின்றனன் அருளால்.

(அ. சி.) கமலம் மலராதி - பிரம உலகமாகிய வியாழ அண்டத்தையும்; கடல்வண்ணன் எமமான் - விண்டு உலகமாகிய செவ்வாய் அண்டத்தையும்; அவர்க்கப்புறம் ஈசன் - அதற்குமேல் இருக்கப்பட்ட உருத்திரன் உலகமாகிய சுக்கிர அண்டத்தையும்; மகேசன் உலகமாகிய புதன் அண்டத்தையும்; எங்குங் கண்டு நின்ருன் - எல்லாங் கலந்து நின்ருன். (கங)

14. ஆதியு மாய்அர னுய்உட லுளநின்ற
வேதியு மாய்விரிந் தார்ந்திருந் தான்அருட்
சோதியு மாய்ச்சுருங் காததோர் தன்மையுள்
நீதியு மாய்நித்த மாகிநின் ருனே.

---

1. கதிரார் திங்கள். கூ, சூஉ - சு.

(ப. இ.) சிவபெருமான் எல்லாவற்றிற்கும் வினைமுதற் காரணமாய் நின்று தோற்றுவித்தலும், அரனுய் நின்று ஒடுக்குவித்தலும் செய்தருள் கின்றனன். ஆருயிர்களின் உடலகத்து அவற்றின் நெஞ்சத் தாமரை கூளச் சிறந்த இருக்கையாகக் கொண்டு நிறைந்து அங்கங்கே நின்றனன். திருவருட் பேரொளிப் பிழம்பாய் யாண்டும் குவிதலில்லாத ஒரு தன்மை யாய் நின்றனன். மேலும் அதன்கண் எவர்க்கும் முறை செய்தலிற் றப்பாத நீதியுமாய் என்றும் ஒரு பெற்றியனுமாய் நின்றனன்.

(அ- சி.) வேதியுமாய் - ஓமத்தானமாய் (Solar plexus); இஃது உடலில் மணி பூரகத்தானம்; உந்திக் கமலத்து நேர். ஆதியுமாய் - உற்பத்திக்குக் காரணமாய். ஆர்ந்து இருந்தார்·உணர்ந்து ஓமத்தானத்தி னின்றும் கிளம்பும் ஒளியைக்கொண்டு பிரகாசிப்பவர்களுக்கு நிறைந் திருந்தார். (கூ)

**15.** கோது குலாவிய கொன்றைக் குழற்சடை
மாது குலாவிய வாள்நுதல் பாகனே
யாது குலாவி அமரரும் தேவரும்
கோது குலாவிக் குணம்பயில் வாரே.

(ப. இ.) சீராட்டுப் பொருந்திய கொன்றை மலர் மாலையணிந்த குழற் சடையினையுடைய சிவபெருமான் அழகு விளங்குகின்ற ஒளிசேர் நெற்றியினையுடைய உமையம்மையாரை ஒருபாகத்தே உள்ளவன். அமரர் களும் தேவர்களும் தங்களுக்கு யாது வேண்டுமாலுலும் அச் சிவபிரா னுடைய குணங்களைப் பரவி வழுத்துவார் என்க. கோதுகுலம்-சீராட்டு.

(அ. சி.) கோது குலாவிய கொன்றை - வண்டுகள் மொய்க்கின்ற கொன்றை. மாது - விருப்பம். மாது குலாவிய - கண்டார் விரும்புத் தன்மையையுடைய. யாது - துன்பம். கோது குலாவி - குற்றத்தை நீக்கி. கோது · குற்றம், குலாவு - வளை, நீக்கு. (கடி)

**16.** காயம் இரண்டுங் கலந்து கோதிக்கினும்
ஆயங் கத்தூரி யதுமிகும் அவ்வழி
தேசங் கலந்தொரு தேவனேன் றெண்ணினும்
ஈசன் உறவுக் கெதிரில்லை தானே.

(ப. இ.) காயம் இரண்டு ஆருயிர்கட்கு உள்ளன. ஒன்று விரும்பத் தகுந்த காய மாயையினின்றும் தரப்படும் சிவவுலக அருவுடம்பு. இது வெங்காயம் எனப்படும். மற்றொன்று தூவா மாயையினின்றும் தரப் படும் உரு உடம்பு. இது பெருங்காயம் எனப்படும். இவ்விருவேறு மாறு பட்ட உடல்களும் கலந்திருப்பினும், கூட்டுப் பொருள்களோடாகிய கத்தூரி மணம் மிகுதல்போலத் தூமாயை அருவுடம்பின் குணமாகிய மணம் மிக்குத் தோன்றும். அவ்விடத்துத் தேசங்களாகிய அகன் துலகையும் கடந்து நின்றதொரு முழுமுதற் றெய்வம் சிவபெருமான் என்று எண்ணினுல் உண்டாம் அவன் உறவுக்கு ஒப்பில்லையாகும்.

(அ. சி.) காயம் இரண்டும் - வெங்காயம் பெருங்காயம் ஆக இரண் டும். மாயம் கத்தூரி - கறுத்த கத்தூரி. (கசு)

17. அதிபதி செய்து அளகை வேந்தனை
நிதிபதி செய்த நிறைதவ நோக்கி
அதுபதி யாதரித் தாக்கம தாக்கின்
இதுபதி கொள்ளென்ற எம்பெரு மானே.

(ப - இ.) அளகை வேந்தனுகிய செல்வக் கிழவனே அந் நகர்க்குத் தலைவனுக்கியருளினவன் சிவன். அச் செல்வக் கிழவனைச் சிவன் நோக்கி அளவில்லாத செல்வத்துக்கு உரியவனுகும்படி அருளினன், இதுவே உனக்குச் சிறந்த திருவூர் கொள்ளென வழங்கியருளினவன் சிவ பெருமான்.

(அ. சி.) அதிபதி செய்து - சுற்பாந்தரத்திலும் அளகை நகரை அழியாமற் செய்து. (கஎ)

18. இதுபதி ஏலங் கமழ்பொழில் ஏழும்[1]
முதுபதி செய்தவன் மூதறி வாளன்[2]
விதுபதி செய்தவன் மெய்த்தவம் நோக்கி
அதுபதி யாக அமருகின் றனே.

(ப. இ.) மணங் கமழாநின்ற ஏழுலகமும் சிவபெருமானின் உடைமைப் பதியாகும். இவற்றினும் சிறப்பாகப் பேரொடுக்கக் காலத்துத் தோன்றும் சுடுகாடாகிய முதுபதியினையே தன் இருப்பிடமாக அமைத்துக் கொண்டவன், இயற்கையுணர்வும் முற்றுணர்வும் இயல்பாகவே அமைந்த மூதறிவுசேர் பேரறிவாளன் அவன் ; ஆயினும் திருவருள் துணையால் திருவடியுணர்வால் தன் நெஞ்சினை அச் சிவனுக்கு இருப்பிடமாக அமைக்கும் நற்றவத்தோர் உள்ளமே உறைவிடமாகக் கொண்டு வீற்றிருந்தருளுகின்றனன்.

(அ. சி.) விதுபதி செய்தவன் - மதிக்கலையைப் பதியச் செய்வ தாகிய யோகமார்க்கத்தை அநுட்டித்தவன். (கஅ)

19. முடிவும் பிறப்பையும் முன்னே படைத்த
அடிகள் உறையும் அறநெறி நாடில்
இடியும் முழக்கமும் ஈசர் உருவங்
கடிமலர்க் குன்ற மலையது[3] தானே.

(ப. இ.) ஆக்கப்பாடுகளாகிய மாயாகாரியப் பொருள்கள் அனைத் திற்கும் முடிவாகிய இறப்பினையும் தோற்றமாகிய பிறப்பினையும் முன்னு தலாகிய திருவுள்ளத்தானே படைத்தருளியவன் சிவபெருமான். அவனே அடிகள். அவன் உறையும் அறநெறியினை ஆராயின் அஞ்சத் தகுந்த இடியும் வேறு பல முழக்கமும் ஈசர் உருவும் தனக்கு அடக்கம் என்பதனைப் புலப்படுத்த ஆண்டும் உறைவன். மேலும் அவன் எங்கும் நிறைந்தவன். அதனால் எதுவும் அவனுக்கு விலக்கன்று. ஆருயிர்க்கு

1. ஏழுடையான். அ திருக்கோவையார், எ.
2. அறிவிலா. சு. கூ - கo.
3. பொன்னின். கஉ. திருமலைச் சிறப்பு, க.

அருள் செய்தற் பொருட்டு அம்மையும் தானுமாய் எழுந்தருளி இருப்பது நறுமணம் கமழாநின்ற திருக்கயிலாய மலையதுவாகும். வெள்ளி - அறிவின் அடையாளம்.

(அ. சி.) முன்னே - முதற் படைப்பில். இடியும் முழக்கமும் - வித்துவும் நாதமும். (கக)

20. மன்னிய வாய்மொழி யாலும் மதித்தவர்
இன்னிசை உள்ளே எழுகின்ற ஈசனைப்
பின்னை உலகம் படைத்த பிரமனும்
உன்னும் அவனை உணரலு மாமே.

(ப - இ.) நிலைபெற்ற வாய்மை மொழியாகிய திருவைந்தெழுத்தை இடையறாது கணிக்கும் எண்ணரிய சிறப்பாலும், சிவபெருமானின் பொருள்சேர் புகழை எப்பொழுதும் சொல்லும் எழிலாலும் மெய்யன்பராவர். அத்தகையோர் தூயஉள்ளத்து அவன் எழுந்தருள்கின்றனன். அத்தகைய முழுமுதல் விழுப்பொருளை அவன் திருவாணை பெற்று உலகத்தைப் படைக்கின்ற பிரமனுகிய அவனும் நினைப்பன். ஆயினும் அவனலும் உணரவொண்ணு தென்க. மதித்தல் - தியானித்தல்; உள்ளந்தழுவல். உணரலுமாம் + ஏ - உணரலுமாமே. ஏகாரம் எதிர்மறை வினுப்பொருள் ஆதலால் உணர வொண்ணுதென்பதாம்.

(அ. சி.) மதித்தவர் - மதிக்கலையைப் பதியச் செய்தலாகிய யோகானுட்டிப்பால் தியானித்தவர். முன்னும் (பாடம்) - பிரமாவிற்கு முந்தியவனுகிய விண்டுவும். (உ0)

21. வானப் பெருங்கொண்டல் மாலயன் வானவர்
ஊனப் பிறவி ஒழிக்கும் ஒருவனைக்
கானக் களிறு கதறப் பிளந்தஎங்
கோனைப் புகழுமின் கூடலு மாமே.

(ப. இ.) மழைக்கும் மழையருளும் வானப்பெருங்கொண்டல் சிவபெருமான். மால் அயன் வானவர்கோன் வானவர் முதலாயினுர்தம் தூவாமாயையினுலாகிய இழிந்த பிறப்பாம் ஊனப் பிறவியை ஒழித்தருளும் ஒப்பில்லாத முழுமுதல். தேவதாரு வனத்துப் போலிமுனிவர்கள் ஆணவச் செருக்கால் வேள்வியினைப் புரிந்தனர். விளையும் ஆணவச் செருக்காகிய காட்டானை அதன்கண் தோன்றிற்று. அவ்வியானையைச் சிவபெருமான் உரித்துப் போர்த்து அடக்கினன். நாட்டானை நலம் பெறுவதும் காட்டானை பொலம் பெறுவதும் காண்க. யானை ஆணவச் சார்பாம் மாயை. இவ்வுண்மை 'தொண்டர் அஞ்சு களிறும் அடக்கி' என்பதனுல் உணரலாம். எம் தலைவனுகிய அவனை மனமார நினைந்து வாயாரப் புகழுங்கள். அப்பொழுது அவனுடன் இரண்டறக் கலந்து பேரின்பம் நுகர்தலும் உண்டாம். நலம் - இன்பம். பொலம் - துன்பம்.

(அ. சி.) வானப் பெருங் கொண்டல் மால் - கார்நிற வண்ணனுகிய திருமால். கானக்களிறு கதறப் பிளந்த எம்கோன் - யானையை உரித்த சிவபெருமான். (உக)

22. மனத்தில் எழுகின்ற மாயநன் ஞடன்
நினத்த தறிவ னெனில்தான் நினைக்கிலர்
எனக்கிறை அன்பிலன் என்பர் இறைவன்
பிழைக்கநின் ரூர்பக்கம் பேணிநின் ரூனே.[1]

(ப. இ.) மாயை மாயையின் ஆக்கம் முதலிய உலகங்களே என்றும் உடைமையாகவுடையவன் சிவன். அதனால், அவன் மாய நல்நாடன் எனப்படுவன். அவன் அன்பர் மனத்துத் தோன்றுகின்றவன். உலகினர் அவன் பெருமையைத் தெளிவாக விளங்கக் கூறினும் செவிகொடார். அவன் நினைத்ததறியும் நீர்மையன் என்று கூறினும் நினைக்கிலர். தாங்கள் முயற்சி ஏதும் இன்றி இறைவன் எங்கள்பால் அன்பிலன் என்று குறை கூறுவர். அவன் பிறப்பற்றுச் சிறப்புற (பிழைக்க) முழுமனதுடன் வேண்டி நிற்பார் சார்பாய் அவரைச் சிறப்பாக ஆட்கொண்டருள்வன்.

(அ சி.) மனத்திலெழுகின்ற மாய நன்ஞடன் - ஒவ்வொருவர் மனத்திலும் எழுகின்ற எண்ணங்களே அறியும் ஒருவன். பிழைக்க நின்ரூர் - முத்திக் கரை சேர விரும்பி நின்றவர். (உஉ)

23. வல்லவன் வன்னிக் கிறையிடை வாரணம்
நில்லென நிற்பித்த நீதியுள் ஈசனே
இல்லென வேண்டா இறையவர் தம்முதல்
அல்லும் பகலும் அருளுகின் ரூனே.

(ப. இ.) சிவனுக்கே உரிய எண்குணங்களுள் முடிவிலாற்றலு மொன்ரூதலின் அவன் எல்லாம் நினைப்பளவானே எளிதின் முடிக்கத் தகுந்த வியத்தகு பேராற்றல்சேர் வல்லவன் - சிவன்: தீக்கடவுளைக் கடலின் நடுவாகக் கடல்நீர் மிகுந்து மேலேரு வண்ணம் ஆணையும் ஆற்றலும் ஈந்து நிறுத்தி வைத்தனன். இதுவே அறமுறையாகும். அத்தகைய ஆண்டவனை அன்பிலார்க் கறிய வொண்ணுமை பற்றி இல்லை எனல் வேண்டா. தேவர்கள்முதல் யாவர்களுக்கும் முதல்வன். அல்லும் பகலும் என்னும் வேறுபாடின்றி இடையீடின்றி எப்பொழுதும் அருள் செய்கின்ரூன். வாரணம் - கடல்.

(அ. சி.) வன்னிக்கிறையிடை வாரணம் - கடலினுள்ளே தீயை (உக)

24. போற்றிசைத் தும்புகழ்ந் தும்புனி தன்னடி
தேற்றுமின் என்றுஞ் சிவனடிக் கேசெல்வம்
மாற்றிய தென்று மயலுற்ற சிந்தையை
மாற்றிநின் ரூர்வழி மன்னிநின் ரூனே.

(ப. இ.) 'தென்ஞ டுடைய சிவனே போற்றி', 'எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி' என்று திருமுறைப் போற்றித் தொடர்புகன்ரூ

1. சார்ந்தாரைக். சிவஞானபோதம், க0-உ-உ-
2. பிறப்பானே, அப்பர். கூ. அ0-எ.

சிவனடியைப் புனலொடு பூவால் வழிபட்டுப், (பாட்டு 2) பொருள்சேர் புகழ்களே எடுத்துப் புகழ்ந்தும் தூய உடம்பும் வாலறிவும் அருளும் முதலாகவுடைய புனிதனே அவனருளால் தெளியுங்கள். எந்நாளும் சிவ பெருமான் திருவடிக்கே ஈட்டிய செல்வமுதலியன உரிய என்று அறம்பல புரியுங்கள். அவ் வறத்திறத்தால் மயலுற்ற சிந்தையை மாற்றுங்கள். அங்ஙனம் மாற்றி நின்ருர்வழிச் சிவன் நிலேபெற்று நிற்பன். (உசு)

25. பிறப்பிலி பிஞ்ஞகன் பேரரு ளாளன்
இறப்பிலி யாவர்க்கும் இன்பம் அருளும்
கறப்பிலி[1] தன்னேத் தொழுமின் தொழுதால்
மறப்பிலி மாயா விருத்தமும் ஆமே.

(ப. இ.) சிவபெருமான் என்றும் பிறப்பில்லாதவன். பின்னற் சடையினேயுடையவன். அளவிடப்படாத பேரருளாளன். என்றும் அழிவிலாதவன். யாவர்க்கும் குறைவிலா நிறையின்பம் அருளி அவரை விட்டு நீங்காதவன். அவனேத் தொழுங்கள். அங்ஙனம் தொழுதால் அவன் உங்களே ஒருபோதும் மறவான். மாயைக்கு மறுதலேயாகிய இயற்கைப் பேரறிவினன். அன்னே அஞ்ஞை என்று வந்ததுபோல் பின்னல் பிஞ்ஞல் என்று வந்திருத்தல் அமையும்.

(அ. சி.) துறப்பிலி - தன்னே அடைந்தவர்களே நீக்காதவன். மறப் பிலி - தன்னேத் தொழுதவர்களே மறக்காதவன். மாயா விருத்தமும் ஆம் - மயக்கமும் ஒழியும். (உகி)

26. தொடர்ந்துநின் ருனேத் தொழுமின் தொழுதால்
படர்ந்துநின் ருன்பரி பாரக முற்றுங்
கடந்துநின் ருன்கம லம்மலர் மேலே
உடந்திருந் தானடிப் புண்ணிய மாமே.

(ப. இ.) ஆருயிர்களேப் புறம்புறம் திரிந்து என்றும் தொடர்ந்து நிற் கின்றவன் சிவன். அச் சிவனே அன்புடன் திருமுறைவழித் தொழுங்கள். தொழுதால் இடையருது யாண்டும் இனேந்து நிறைந்து நிற்பன் சிவன். அனேத்தையும் சுமக்கும் நிலமுதல் மெய்கள் எல்லாவற்றையும் கடந்து நிற்பவன் சிவன். ஆருயிரின் நெஞ்சத் தாமரைமேல் உடங்கிருந்தருளி னன். அத்தகைய சிவபெருமான் திருவடியினேத் தொழுவதே அழிவில் சிவபுண்ணியமாகும். மெய்கள் - தத்துவங்கள்.

(அ. சி.) பரிபாரகமுற்றும் கடந்துநின்ருன் அண்டங்களே யெல் லாம் கடந்துநின்றவன். கமலம் மலர்மேலே உடந்திருந்தான் - மலர் மிசை யேகினன். (உசு)

27. சந்தி எனத்தக்க தாமரை வாண்முகத்
தந்தமில் ஈசன் அருள்நமக் கேயென்று
நந்தியை நாளும் வணங்கப் படுமவர்
புந்தியி னுள்ளே புகுந்துநின் ருனே.

1. பிறப்போ. அப்பர், சு. கo.-இ.

(ப. இ.) சந்தி எனப்படும் அந்தியின் நிறம் சிவப்பு. அந்நிறம் போலும் தாமரை செந்தாமரை. அம் மலர்போலும் ஒளியுடைத் திரு முகம் சிவபெருமான் முகம். அவனே ஆண்டவன். அவன் திருவருள் எந் நாளும் நமக்கேயாம், அவ்வருளே அளிப்பவன் அழிவில் செல்வத்தன் ஆகிய நந்தி. அந் நந்தியை நாளும் வணங்கும் நல்லன்பர்தம் சிறந்த அறிவினுள் சிவபெருமான் புகுந்து நின்றனன்.

(அ. சி.) சந்தியெனத்தக்க - அந்தியில் தோன்றும் செவ்வான நிறத்தையுடைய. வணங்கப்படுமவர் - தொழும் அவர். (உஎ)

28. இணங்கிநின் ருன்எங்கு மாகிநின் ருனும்
பிணங்கிநின் ருன்பின்முன் னுகிநின் ருனும்
உணங்கிநின் ருன்அம ராபதி நாதன்
வணங்கநின் ருர்க்கே வழித்துணை[1] யாமே.

(ப. இ.) எங்கும் இணக்கத்துடன் நிறைந்து நின்றவனும் அங்ஙனம் நிற்பினும் அருட்கண் பெருதார்க்குத் தோன்றாது பிணங்கி மறைந்து நிற்பவனும் சிவனே. உலக ஒடுக்கத்துக்குப் பின்னும் உலகத் தோற்றத் திற்குமுன்னும் நிற்பவனும் சிவனே. உயிர்க்குயிராய் நுணுகுதலாகி உணக்கத்துடன் நிற்பவனும் சிவனே. அவன் துறக்க வுலகத்துக்கு முதல்வன். வணங்கி வழிபட்டு நிற்பார்க்கே வழித்துணை யாவன். துறக்கவுலகம் ஈண்டுக் கயிலாயம்.

(அ. சி.) பிணங்கி - பொருந்தியும் பொருந்தாமலும். பின்முன் - படைப்புக்கு முந்தியும், அழித்தலுக்குப் பிந்தியும். உணங்கி நின்றான் - மறைந்து நின்றவன். (உஅ)

29. காணநில் லாயடி யேற்குற வாருளர்
நாணநில் லேன்உன்னை நான்தழு விக்கொளக்
கோணநில் லாத குணத்தடி யார்மனத்
தாணிய னுகி அமர்ந்துநின் ருனே.

(ப. இ.) சிவபெருமானே அடியேன் காணுமாறு வெளிப்பட்டரு ளாய். அடியேனுக்கு உன்னையன்றி வேறு உறவாவார் யாருளர்? நீ வெளிப்படின் உன்னை யான் அகந்தழுவுவதுபோல் புறந்தழுவுவதிலும் நாணுற்றுப் பின்னில்லேன். மனக்கோட்டம் சிறிதுமில்லாத அருட் பண்பு பெரிதும் செறிந்த செந்நெறிக் குணத்தடியார் நல்லுளத்தில் உயிர்க்குயி ராய் நிற்பவன் சிவன். ஆதலால் அவன் அச்சாணியன்னனுகி அமர்ந் தருளுகின்றனன்.

(அ. சி.) ஆணியனுகி-ஆழப் பதிந்தவனுகி. கோணலில்லாத குணத்து அடியார் மனக்கோட்டமின்றி நலம்செய் அடியார். (உக)

30. வானின் றழைக்கும் மழைபோல் இறைவனுந்
தானின் றழைக்குங்கோல் என்று தயங்குவார்
ஆனின் றழைக்கு மதுபோல்என் நந்தியை
நானின் றழைப்பது ஞானங் கருதியே.

---

1. சுழித்துணையாம். அப்பர், கூ. ச0-எ. வானநாடனே. எ. எ0-க

(ப. இ.) உலகை உய்விக்கும் மழை வானத்தினின்றும் ஒலிக்கின்றது. அதுபோல் இறைவனும் இந்நாள் நம்மை அருளால் அழைப்பனே என்று தயங்குவர். ஆன்கன்று தன் தாய்ப் பசுவை நினைந்துருகி அழைப்பது போல[1] யானும் என் நந்தியங் கடவுளை அன்பால் மனமுருகி ஓவாது அழைக்கின்றேன். எது கருதியென்றால் அவன்றன் திருவடியுணர்வைப் பெறுதற் பொருட்டேயாம்.

(அ. சி.) வானின்றழைக்கும் மழை - உலகர் வேண்டாது தானே பெய்யும் மழை. ஆனின்றழைக்கும் - கன்று தாய்ப்பசுவை அழைக்கும். (கo)

31. மண்ணகத் தான்ஒக்கும் வானகத் தான்ஒக்கும்
விண்ணகத் தான் ஒக்கும் வேதகத் தான்[2]ஒக்கும்
பண்ணகத் தின்னிசை பாடலுற் றானுக்கே
கண்ணகத் தேநின்று காதலித் தேனே.

(ப. இ.) மண்ணகத்தும் வானகத்தும் விண்ணகத்தும் முறையே வாழ்வார் மக்கள், தேவர் முதலிய மூவர், அருளோன் முதலிய ஐவர் ஆவர். அவரவர்களுக்கு வேண்டுவன அருளுவதால் அவரவர்களை ஒப்பவன்போல் தோன்றுவன். ஆயினும் அவன் அவர்களனைவர்களையும் இரும்பைப் பொன்னுக்கும் குளிகையனைய வேதகத்தானவன், அவன் செந்தமிழ்ப் பண்ணகத்து இன்னிசை போன்றுள்ளவன். அப்பாடலினை ஏற்று அளவிலா மகிழ்வு பூப்பவன். அவன் என் அறிவின்கண்ணே நிறைந்து நிற்கின்றான். யானும் அவனருளால் அவ் வறிவின் கண்ணேயே காதலிக்கின்றேன். மூவர்: அயன், அரி, அரன். ஐவர். ஆசான், ஆண்டான், அருளோன், அன்னை, அத்தன்.

(அ. சி.) மண்ணகத்தான் - பூமியில் உள்ளவனையினும். வானகத் தான் - இந்திர உலகத்துள்ளவனையினும். விண்ணகத்தான் - இந்திர உலகத்தைத் தவிர ஏனைய பிரம, விண்டு, உருத்திர, மகேசுர, சதாசிவ உலகத்தானையினும். வேதகத்தான் - மண், வான், விண்ணைத் தவிர்த்து நரக புவனங்களில் உள்ளவர்களாயினும். (கக)

32. தேவர் பிரான்நம் பிரான்திசை பத்தையும்
மேவு பிரான்விரி நீரில கேழையுங்
தாவு பிரான்தன்மை தானறி வாரில்லை
பாவு பிரான்அருட் பாடலு மாமே.

(ப. இ.) சிவபெருமான் தேவர்கட்கு முதல்வன்: எளியோமாகிய நமக்குத் தலைவன். பத்துப் புலங்களையும் கலப்பால் ஒன்றுப்ப் பொருந்தி யிருக்கும் தலைவன். கடலால் சூழப்பட்ட ஏழுலகையும் பொருட்டன்மை யால் கடந்துநிற்கும் கடவுள். இத்தகைய அவன்றன் வியத்தகு தன்மையை உள்ளவாறு உணர்வாரில்லை. செலுத்துந்தன்மையால் எங்கும் நிறைந்து விளங்கும் அச் சிவனைச் செந்தமிழ்ப் பாடல் பாடித் தொழுவோமாக. புலம் - திசை; திசையும் தமிழ்ச்சொல்லே. (கஉ)

1. மன்றி னிறைந்து. கஉ. சோமான் - கஙஇ.
2. இரும்பைக்காந். சிவஞான சித்தியார் - கஙஇ.

33. பதிபல வாயது பண்டிவ் வுலகம்
விதிபல செய்தோன்று மெய்ம்மை உணரார்[1]
துதிபல தோத்திரஞ்[2] சொல்லவல் லாரும்
மதியிலர் நெஞ்சினுள் வாடுகின் றூரே.

(ப. இ.) வேற்றுப் புலத்தார் தெய்வங்களைத் தெளிவுணர்வின்மையால் பலவாகக் கொண்டு வழிபடுவர். இது தொடக்க காலத்து உலக மக்களின் செய்கை. வேள்வியென்னும் பெயரான் கொன்றூரும் கடைச் செயல் பலவும் புரிவர். அதற்குக் காரணம் அவர்கட்குப் பெறவேண்டிய மெய்யுணர்வு சிறிதும் இல்லாமையேயாம். முழுமுதற் சிவனேயொழித்து ஏனைய உயிரினங்களாகிய தேவர்களைப் போற்றிப் புகழ்ந்து பாடுவர். அப் பாட்டுப் பாடுவாரும் தெய்வவுணர்விலாதவராவர். அதனால் அவர்கட்குப் பிறப்பு இறப்பு நீங்காமையால் துன்புற்று உள்ளம் வாடுவர். விதி ஆகு பெயராய் வேள்வியைக் குறித்தது. ஒன்றும் - சிறிதும்.

(அ. சி.) பதி பலவாவது - பல தேயங்களை உடையது. விதிபல செய்து. ஆரிய வேதங்களில் சொல்லப்பட்ட புன்னெறி யாகத்தைச் செய்து. துதிபல தோத்திரம் சொல்லவல்லார் - முதல்வனைத் தவிர்த்துப் பல தேவர்களை வணங்கித் துதிப்பவர். (கூ)

34. சாந்து கமழுங் கவரியின் கந்தம்போல்
வேந்தன் அமரர்க் கருளிய மெய்ந்நெறி
ஆர்ந்த சுடரன்ன ஆயிர நாமமும்
போந்தும் இருந்தும் புகழுகின் றேனே.

(ப. இ.) கலவை மணக் கூட்டுப் பூசப்பெற்ற தலையினிடமாக இருந்துவரும் நறுமணம் போன்று வேந்தனுகிய சிவபெருமான் தூய விண்ணவர்க்கருளிய மெய்ந்நெறி ஒன்றுண்டு. அச் சிவபெருமான்றன் நிறைந்த அறிவொளிப் பொருண்மறையான திருவைந்தெழுத்தை அளவின்றித் திருக்கோவில் முதலிய புறம்போந்தும் திருமடம் முதலிய அகமிருந்தும் போற்றிப் புகழ்கின்றேன். தூயவிண் - சிவவுலகம்.

(அ. சி.) சாந்து - கலவைச் சாந்து. கவரி - உமையம்மையார். வேந்தன் - இறைவன்; மருதநிலத் தெய்வம்; முதல்வன். (கூ)

35. ஆற்றுகி லாவழி யாகும் இறைவனைப்
போற்றுமின் போற்றிப் புகழ்மின் புகழ்ந்திடில்
மேற்றிசைக் குங்கிழக் குத்திசை எட்டோடு
மாற்றுவன் அப்படி யாட்டவு மாமே.

(ப. இ.) முழுமுதற் சிவன் அருளால் ஆருயிர் உய்யத் தானே வகுத்த மெய்ந்நெறி சன்மார்க்கம் எனப்படும். அதுவே எவராலும் ஆற்றமுடியா அரும்பெரும் வழியாகும். அம் மெய்ந்நெறியே செந்நெறி எனவும் தன்னெறி எனவும் கூறப்படும். அந் நெறி நின்று பேரன்புடன் திருவைந்

1. எரிபெருக்குவர். அப்பர். இ. க00 - எ.
2. அல்லும் பகலுமாய். கூ. எஅ - இ.

தெழுத்தோதிப் போற்றுமின்; புகழ்மின். அங்ஙனம் புகழ்ந்தால், மேற்றிசை கீழ்த்திசை ஏனை எட்டுத்திசை ஆகப் பத்துத் திசைக்கும் அவனே முழுமுதல்வன். அவனே எங்கணும் மெய்ந்நெறியைப் பரப்பு கின்றவன் ஆவன். அவன் ஆட்டும் அருள் வழியின்கண் நாம் ஆடின் திருவடிப் பேறு எய்துதல் உண்டு.

(அ. சீ.) ஆற்றுவன் - சன்மார்க்க நெறியினுள் படச் செய்வன். ஆற்றுகிலா வழியாகும் - முன் மந்திரத்தில் கூறிய வண்ணம் போற்று விட்டால் வழிபாடு செய்யாததற்கு ஒப்பாகும். அப்படி ஆட்டவும் (ஆற்றவும்) ஆமே - அப்படிச் சன்மார்க்க நெறியில் சேரும்படி செய்தால் வீடுபேறு கைகூடும். (கஇ)

36. அப்பனே நந்தியை ஆரா அமுதினை
ஒப்பிலி வள்ளலை ஊழி முதல்வனை
எப்பரி சாயினும் ஏத்துமின் ஏத்தினுல்
அப்பரி சீசன் அருள்பெற லாமே.

(ப. இ.) அனைத்துயிர்க்கும் தந்தையொப்பானை, அழியாச் செல்வ நந்தியை, உண்ணத் தெவிட்டாப் பண்ணப்படாத இயற்கை அமுதனை, ஒப்பில்லாத பிழைபொறுத்தாளும் விழைதகு வள்ளலை, பேரூழிக் காலத் தும் ஒடுக்கமின்றி நின்று மீண்டும் உலகினைப் படைப்பிக்கும் முழுமுதல் வனை, எந்த வகையானும் அருள் உந்தும் வழியில் தொழுங்கள். தொழு தால் அந்த வகையால் அச் சிவனும் வந்து அருள் புரிவன். வள்ளலென்றார், நஞ்சுண்டு காத்த நாயனர் என்பது பற்றி. (கசு)

37. நானும்நின் றேத்துவன் நாள்தொறும் நந்தியைத்
தானும்நின் ருன்தழல் தாளைக்கு மேனியன்
வானில்நின் ருர்மதி[1] போல்உடல் உள்ளுவந்
தூனில்நின் ருங்கே உயிர்க்கின்ற வாறே.

(ப. இ.) அவன் திருவருளால் அடியேனும் நாடொறும் நந்தியங் கடவுளைத் தொழுவேன், அவனும் விட்டுப் பிரிவின்றிஉடன் நின்றனன். அவன் செந்தழலொக்கும் செம்மேனியன்; விண்ணிடை நிறைமதிபோலும் தண்ணளி செய்து உடலுள் வந்து உவந்து நின்றனன். ஊனுள் நின்று உயிர்க்குமாறு செய்து செலுத்துகின்றனன். ஆர்மதி-கலைநிரம்பு திங்கள். இஃது ஆவிக்குத் திருவடி யுணர்வு படிமுறையான் நிரம்புவதற்கு ஒப்பு. ஊன்: ஆணவவல்லிருள். உயிர்க்கின்றவாறு: அவ்விருளைத்துரத்தும் மெய் யுணர்வு தோன்றும் வழி. (கன)

38. பிதற்றெழி யேன்பெரி யான்அரி யானைப்
பிதற்றெழி யேன்பிற வாஉரு வானைப்
பிதற்றெழி யேன்எங்கள் பேர்நந்தி தன்னைப்
பிதற்றெழி யேன்பெரு மைத்தவன்[2] நானே.

1. மன்னும். சிவஞானபோதம், கக. உ-உ.
2. பசித்துண்டு. " அ- க-உ.
,, சன்மார்க்கம். சிவஞானசித்தியார், அ-உ-அ.

(ப. இ.) அம்பலத்தாடும் ஐந்தொழி லருட்கூத்தனும் பெரியானே மறவா நினைவுடன் அடிமைத்தொண்டு செய்து வழிபடலொழியேன். அலகில் ஒளிப்பிழம்பாய் அருவத்திற்கும் உருவத்திற்கும் காரணத் திருமேனியாய் எழுந்தருளும் சிவக்கொழுந்தாம் அரியானே மறவாநினைவுடன் மகன்மைத்தொண்டு செய்து வழிபடலொழியேன். நிலவாகிய திருவடியுணர்வு முற்றுப்பெற்ற ஆவியும், அவ்வாவிக்கு உறுதுணையாக நிற்கும் வனப்பாற்றலாகிய மலிநீராம் திருவருளும் தலையன்பால் தங்க இடமருளி ஆருயிர் உணர்வின்கண் தோன்றும் புறத்துப் பிறவா ஆற்றல் நிலைக்கள வேணியனும் உணர்வுருவானே மறவா நினைவுடன் தோழன்மைத் தொண்டு செய்து வழிபடல் ஒழியேன். உலகெலாம் உணர்ந்து ஓதற்கரிய மெய்யுணர்வுசேர் வாலறிவனே அவனருளால் புணர்ந்து நந்துதற்கு இடனளிக்கும் அச்சிவனே எஞ்ஞான்றும் வேறன்மையனுய் நின்று மறவா நினைவுடன் காதன்மைத் தொண்டுபூண்டு வழிபடலொழியேன். இவையே யான்பெற்ற இறப்பில் தவம். அதனுல் யான் பெருமைத் தவமுடையேனுயினேன். இந் நான்கு நெறியினையும் முறையே சீலம், நோன்பு, செறிவு, அறி[1]வெனக் கூறுவர். அலகில் - அளவில்லாத. (ந.அ)

**39.** வாழ்த்தவல் லார்மனத் துள்ளுறு சோதியைத்
தீர்த்தனே அங்கே திளைக்கின்ற தேவனே
ஏத்தியும் எம்பெரு மான்என் றிறைஞ்சியும்
ஆத்தஞ்செய் தீசன் அருள்பெற லாமே.

(ப. இ.) சிவபெருமான் தன்னைத் திருவைந்தெழுத்தால் வாழ்த்த வல்ல நற்றவத்தாரின் தூய திருவுள்ளத்து மிக்க அறிவுப் பேரொளியாய்த் தோன்றுவன். அத்தகைய இயல்பாகவே பாசங்களினின்று நீங்கிய தீர்த்தனே, மேலும் செவ்வி வாய்ந்த உயிர்கள்மாட்டு மகிழ்ந்து திளைக்கும் முழுமுதல் தெய்வத்தினைப் பலவாருகப் பரவியும், எம் தலைவனே என்று வணங்கியும், அவனுக்கு முற்றும் உரிமையாய்த் தன்னை அறக்கொடுத்தவன் ஆத்தன் - நண்பன் எனப்படுவன். அந்நிலை எய்தியவர் அதன் திருவருள் பெறுவது எளிதாம். ஈசன் - ஆண்டவன்.

**40.** குறைந்தடைந் தீசன் குரைகழல் நாடும்
நிறைந்தடை சேம்பொனின் நேரொளி ஒக்கும்
மறைந்தடஞ் செய்யாது வாழ்த்தவல் லார்க்குப்
புறஞ்சடஞ் செய்யான் புகுந்துநின் றானே.

(ப. இ.) சிவபெருமான் திருவடிக்கண் ஏக்கற்றவராய், அவன் திருவடியுணர்வால் தாழ்ந்தடைந்து அத் திருவடியை நாடுவாராக. அவன் நிறைந்த செம்பொனின் சிறந்த ஒளியை ஒப்பன். வஞ்சனையால் மறைந்து குறும்புசெய்யாது வாழ்த்தவல்ல மெய்யன்பர்களுடைய உடம்பினைப் புறக்கணியாது அதன்கண் புகுந்து நின்றனன். செய்யான்: முற்றெச்சம். ஏக்கற்றவர் - ஆசையாற்றுழ்ந்தவர்.

(அ. சி.) குறைந்தடைந்து - மிகத் தாழ்ந்து வணங்கி. மறைஞ்சு அடம் செய்யாது - வஞ்சித்து மாறுசெயாது. புறம் சடம் செய்யான் - சடம் புறம் செய்யான் - சரீரத்தைப் புறக்கணிக்காது. (சி)

---

1. சிலமின்றி. அ. ஆனந்த - ந.

41. சினஞ்செய்த நஞ்சுண்ட தேவர் பிரானைப்
புனஞ்செய்த நெஞ்சிடை போற்றவல் லார்க்குற்
பனஞ்செய்த வாள்நுதல் பாகனும் அங்கே
இனஞ்செய்த மான்போல் இணங்கிநின் ருனே.

(ப. இ.) சிவனே மறந்து நெடுநாள் வாழவேண்டுமென்னும் கெடு நினைவால் மாலுற்று மாலைத் தலைமையாகக் கொண்டு பாலுற்ற பிறவிக் கடலைக் கடைந்தனர் தேவர். அப்பொழுது சிவனே மறந்த பெரும் பிழை, பொருவருஞ் சினத்துப் பெருநஞ்சாக வெளிப்பட்டது. அதன் வெப்பம் பொறுக்காது தேவர்கள் மாலுள்ளிட்டாரனைவர்களும் ஓட்டம் எடுத்தனர். சிவன்பால் வந்து ஓலிட்டனர். சிவனும் பிழைபொறுக் கும் பெரியோனுதலின் பிழைபொறுத்து அந் நஞ்சினை உண்டு கண்டத் தடக்கினன். தேவர்கட்கு அமிழ்து ஈந்து காத்தனன். அத்தகைய முதல்வனைத் திருத்தப்பட்ட மனத்தின்கண் தொழுதற்கு வல்ல தொண்டர்க்கு, உலகுயிர் எல்லாம் படைத்து வளர்த்தருள் கன்னியாகிய அம்மையை ஒரு பக்கத்தேயுடைய சிவபெருமான் அப்பொழுதே தன் இனத்தை நாடும் மான்போன்று அவர்களுடன் இணங்கி நின்றருளினன்.

(அ. சி.) புனம் செய்த - திருத்தப்பட்ட. உற்பனம் செய்த வாணுதல் பாகன் - அகிலம் படைத்த ஆதிபகவன். இனம் செய்த மான்போல் - இனத்தோடு கூடிய பார்வைமானைப்போல. (ஈக)

42. போயரன் தன்னைப் புகழ்வார் பெறுவது
நாயக ஞன்முடி[1] செய்தது வேஙல்கு
மாயகஞ் சூழ்ந்து வரவல்ல ராகிலும்
வேயன தோளிக்கு வேங்[2] தொன்றுந் தானே.

(ப. இ.) பற்றற்ருன் பற்றினைப் பற்றிப் பற்றுவிட்டுப்போய்ச் சிவ பெருமானை மெய்யாகப் புகழ்கின்றவர்கள் பெறுவது நாயகனுகிய சிவ பெருமானுல் 'உரையிறந்த சுகமதுவே முடியாகும்' என்பதற்கிணங்க எங்கும் இயல்பாகவே சிவமாய்க் காட்டுவித்துப் பேரின்பம் நல்கும் அவ்வருளினையேயாம். மாயாகாரியமாகிய உலகனைத்தும் சூழ்ந்துவர வல்லராகிலும், மூங்கில் போலுந் திருத்தோளியுடைய உமையம்மை யார்க்கு மணுளனுகி ஆருயிர்கட்குப் போகமீன்றருள் புண்ணியப் புனித வேந்தனும் சிவபிரான் உடன்நில்லாது ஒழியின் பயனில்லை. எனவே அவன் உடனுய் நிற்பதே பெரும்பேறென்க. (சஉ)

43. அரனடி சொல்லி அரற்றி அழுது
பரனடி நாடியே பாவிப்ப நாளும்
உரனடி செய்தங் கொதுங்கவல் லார்க்கு
நிரனடி செய்து நிறைந்துநின் ருனே.

1. பரையுயிரில். உண்மை நெறிவிளக்கம், ச.
2. சாந்தம் சம்பந்தர், உ. கஉ0 - க,
" கல்லிய. சம்பந்தர், ங. கoசு - எ.
" மேகமீன்ற. சிவகசிந்தாமணி, நாமகள், ஙஙங.

(ப. இ.) அரன் திருவடிப் பெயராம் திருவைந்தெழுத்தைத் தூய மனத்துடன் இடையறாது வழுத்தி, ஆற்றுமை மீதூரப்பட்டுப் பெரு முழக்கிட்டு அழுது, அச் சிவபெருமான் திருவடியே நிலைவாகக்கொண்டு நின்று எந்நாளும் உறுதியான வீடுபேற்றைத் தரும் அத் திருவடிக்கண் அடங்கிநிற்க வல்லார்க்கு அவன் எங்குஞ் செறிந்த எல்லாம் நிரம்பிய திருவடியை அருளி, அந் நல்லாருடன் புணர்ப்பாய் வேறறநின்று நிறைந் தனன் என்க. ஒதுங்குதல் - புகலிடம் பெறுதல்.

(அ. சி.) உரன் அடி செய்து - உறுதியான எண்ணத்துடன். ஒதுங்க வல்லார் - துதித்து, அரற்றி, அழுது பரவ வல்லார். (சகூ)

44. போற்றிஎன் பார்அம ரர்புனி தன்அடி
போற்றிஎன் பார்அசு ரர்புனி தன்அடி
போற்றிஎன் பார்மனி தர்புனி தன்அடி
போற்றி[1] என் அன்புள் போலியவைத் தேனே.

(ப. இ.) இன்ப வேட்கையராய அமரர்கள் அதன் பொருட்டுத் தூயோனுகிய சிவபெருமான் திருவடியைப் போற்றி செய்வர். பொருள் வேட்கையராகிய அசுரர்கள் அதன் பொருட்டு அவன் திருவடியைப் போற்றி செய்வர். அறத்தின் வேட்கையராகிய நன்மக்கள் அதன் பொருட்டுச் சிவனைப் போற்றியுரைத்துத் தங் கைகளால் மலர்தூவி வழி படுவர். வீடுபேற்று வேட்கையனுகிய அடியேனும் [2]திருமுறை போற்றித் தொடர் புகன்று வழிபட்டு என் அன்பினுள் திகழும்படி விளங்க வைத்துத் துளக்கின்றி நிற்கின்றேன். (சச)

45. விதிவழி அல்லதிவ் வேலை உலகம்
விதிவழி இன்பம் விருத்தமும் இல்லை
துதிவழி கித்தலுஞ் சோதிப் பிரானும்
பதிவழி காட்டும் பகலவ னுமே.

(ப. இ.) வகுத்தான் வகுத்த வகையாகிய விதிவழியல்லாமல் கடலாற் சூழப்பட்ட உலகம் நடைபெற மாட்டாது. வகுத்தான் - சிவ பெருமான். அச்சிவன் விதித்தவாறே என்றும் இன்பம் பெருகும். அத் திருவாணைக்கு மாறுதலாகிய விருத்தமுமில்லை. நாடொறும் திருவைந் தெழுத்தெண்ணித் தொழுது நிற்பார்க்குப் பதிவழியாகிய திருவடிப் பேற்றினை உலகம்மைக்குத் தன் உடம்பில் ஒருபாகம் பகுந்துகொடுத்துப் பகலவன் என்னும் திருப்பெயர் பூண்டு நிற்கும் சிவன் அளித்தருள்வன்.

(அ. சி.) வேலை - கடல் சூழ்ந்த உலகம். பதிவழி - முத்திமார்க்கம். (சஅ)

46. அந்திவண் ணஅர னேசிவ னேஎன்று
சிந்தைசெய் வண்ணந் திருந்தடி யார்தொழ
முந்திவண் ணமுதல் வாபர னேஎன்று
வந்தி[3]வ் வண்ணன்எம் மனம்புகுந் தானே.

---

1. போற்றிசைத்துன். சு. நிள-க0.
2. வாழ்த்துவதும். அ. அறிவுறுத்தல்-கஉ.
3. (பாடம்) புந்தி.

(ப. இ.) படைத்தற்பொருட்டு அந்திவண்ணனுய்ப் பொன்நிறங் கொண்டருள்பவனே, துடைத்தற்பொருட்டு அரனுய் நீலநிறங் கொண்டருள்பவனே, அருளுதற் பொருட்டுச் சிவனுய் வெண்ணிறங் கொண்டருள்பவனே என்று திருந்திய மெய்யடியார்கள் தொழுவர், உலகந்தோன்ற வேண்டும் எனச் சிவன் திருவுள்ளங் கொண்டதும் அதன் பொருட்டுத் திருவருளின்கண் முதற்கண் தோன்றிய நிறம் ஐந்து. இவ்வைந்தும் ஒருங்கு கூடியவனே முந்திவண்ணன். அவனே முழு முதல்வன். இங்ஙனம் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி அடியேனும் வாழ்த்த, அந்திவண்ணனும் அருளால் வந்து அடியேன் அகம் புகுந்தருளினன். ஐந்நிறம் : வெண்மை, பொன்மை, சிவப்பு, பச்சை, கருமை.

முதல்வன் - வினைமுதற் காரணன், பரன்-யாவர்க்கும் மேலானேன்.

(அ. சி.) முந்திவண்ண - படைப்புக்குஇச்சை கொண்ட காலத்தில் முதல் முதல் வெளிப்பட்ட ஐந்நிறக் கதிர்களை உடையவனே, (சக)

47. மனையுள் இருந்தவர் மாதவர் ஒப்பர்
நினைவுள் இருந்தவர் நேசத்துள் நிற்பர்
பனையுள் இருந்த பருந்தது[2] போல
நினையா தவர்க்கில்லை நின்இன்பந் தானே.

(ப. இ.) சிவபெருமான் உயிர்க்குயிராய் உடம்பகத்துத் திருக்கோயில் கொண்டருளியிருக்கும் உண்மையுணர்ந்து, அதற்கேற்றவாறு செந்நெறியில் ஒழுகி உடலோம்பவார் பெருந்தவத்தவராவர். அச் சிவன் நினைவுக் கருவியாகிய நெஞ்சத் தாமரையின்கண் எழுந்தருளியிருக்கும் விழுமிய தன்மையை அறிந்தவர் அவன் திருவடிக்குப் பேரன்பு பூண்டு ஒழுகும் நேயத்தராவர். அச்சிவபெருமானின் திருவடிப் பேரின்பம் திருவருள் துணையால் நினையாதவர்க்கு எஞ்ஞான்றும் எய்துதல் இல்லை, அதற்கு ஒப்பு பனைமரத்தின் மேலிருக்கும் பருந்து அப் பனம்பழத்தின் இயல்பினை அறியாமையால் அதனை யுண்ண நினையாது இழிந்த பொருள்களை உண்ண நினைத்துப் பழியுடன் இருப்பதாகும்.

(அ. சி.) பனையுளிருந்த பருந்ததுபோல - பழத்தையுடைய பனை மரத்தின் மேல் பருந்து இருந்தாலும் பழத்தை நினைப்பதில்லை அது போல. (சஎ)

48. அடியார் பரவும் அமரர் பிரானை
முடியார் வணங்கு முதல்வனை முன்னிப்
படியார் அருளும் பரம்பரன் எந்தை
விடியா விளக்கென்று மேவினின் றேனே.

(ப. இ.) திருவடி யுணர்வு கைவந்த பொய்யடிமையில்லாத புலவராம் மெய்யடியார் பாடிப் பரவிப் பணிந்து அமரர்பிரானுகிய சிவபெருமானைத் தொழுவர். இவ்வுண்மை 'பாடிப் பரவிப் பணிதல் ஒருமூன்றும், சடிலுரை உள்ளமுடல் என்' என்பதனுன் உணரலாம். முத்தேவர் முதலிய ஆட்சியினர் முடியார் எனப்படுவர். அவர்களாலும் வணங்கப் படும் முழுமுதல்வன் சிவன். அவன் தன் மெய்யடியார்களைத் திருவுளங்

1. செய்யாய், சு-இ-கூ.
2. பரப்பமைந்து. திருவருட்பயன், கூக.

கொண்டு சிறந்தபடியாகிய இவ்வுலகின்கண் வைத்தருள்வன். அவனே விழுமிய விழுப்பொருள். எமக்குத் தந்தையும் ஆவன். என்றும் நின்று நிலைபெறும் அருட்பெரு விளக்கும் அவனே. அவன் அடியேனுடன் புணர்ந்து நின்றனன்.

(அ. சி.) படியார் - (படியாருக்கு) பூமியில் உள்ளவர்களுக்கு. முடியார் - முடியுடைய அரசர்கள். விடியா விளக்கு - அழிதல் இல்லாத அருட்பெருஞ்சோதி. (சஅ)

**49.** பரைபசு பாசத்து நாதனே உள்ளி
உரைபசு பாசத் தொருங்கவல் லார்க்குத்[1]
திரைபசு பாவச் செழுங்கடல் நீந்திக்
கரை[2]பசு பாசங் கடந்தெய்த லாமே.

(ப. இ.) நடப்பாற்றல், கிடப்புயிர், முடக்குமலம் முதலியவற்றை முக்காலத்தும் தொழிற்படுத்தும் முழுமுதல்வன் சிவன். அந் நாதனே அருளால் விடாது நினைந்து, அந் நினைவால் கிடப்புயிராம் பசுத்தன்மையும் முடக்குமலமாம் பாசத்தன்மையும் நீங்கப்பெற்றுப் புகழ்ந்து சொல்லப்படும் வனப்பாற்றலாகிய திருவருளால் திருவடிக்கண் அடங்கி நிற்கும் ஆற்றல் மிக்கார்க்குக் கரைமோதும் அலைபோல் வரும் யான் எனதென்னும் செருக்காகிய பிணிமையையும். அதனால் விளையும் பாவப் பெருங் கடலையும் நீந்துதல் கூடும். அம்மட்டோ? பசு பாசத் தன்மையையுங் கடந்து திருவடிப் பேரும் இன்பக் கரை எய்துதலும் கைகூடும்.

பிணிமை - பசுத்தன்மை. கரை - இன்பக்கரை.

(அ. சி.) பரை - மனோன்மனி. நாதனே - சதாசிவத்தை. (சசு)

**50.** சூடுவன்[3] நெஞ்சிடை வைப்பன் பிரான்என்று
பாடுவன் பன்மலர் தூவிப் பணிந்துநின்று
ஆடுவன் ஆடி அமரர்பி ரான்என்று
நாடுவன் நானின் றறிவது[4] தானே.

(ப. இ.) திருவருள் துணையால் சிவபெருமானின் திருவடி மலரைத் தலையிற் சூடுவேன். அத்திருவடியுணர்வை மறவாநெஞ்சத்திடை வைப்பன். உயிருக்குயிராம் செயிரறு பெருந்தலைவனே என்று செந் தமிழால் பாடுவன். போற்றித் தொடர் புகன்று கொல்லாமை ஐந் தடங்கல், பொறுமை, இரக்கம், அறிவு, வாய்மை, தவம், அன்பு ஆகிய எண்பெருங்குணனும் எண்மையின் எய்தப் பல நறுமலர்களைக் கைகளால் தூவி அருச்சித்துப் பணிந்து நிற்பேன். மகிழ்ச்சி மேலீட்டால் ஆடுவேன். ஆடிச் சிவவுலகத்து வாழும் அமரர் தலைவனென்று நாடுதலாகிய சிந்தனையைச் செய்வேன். முதல்வன் சிவமாக்கி எனையாண்ட இக் காலத்து அவனருளால் என் உணர்விற்றோன்றி யான் அறிந்து பணி செய்வது இதுவேயாம். (சo)

---

1. முருகார், அப்பர். ச. ககச - உ.
2. துன்பக். அப்பர், ச. கூஉ - சு.
3. சூடுவேன். அ. திருவம்மானை, கஎ.
4. அவனே. சிவஞானபோகம். நாற்பா. கo.

# 2. மும்மூர்த்திகளின் முறைமை

51. அளவில் இளமையும் அந்தமும் ஈறும்
அளவியல் காலமும் நானும் உணரில்
தளர்விலன் சங்கரன் தன்னடி யார்சொல்
அளவில் பெருமை அரிஅயற் காமே.[1]

(ப. இ.) என்றுங் குன்று எவ்வளவையையும் கடந்த இளமையும், அழகும், பேரொடுக்கமாகிய ஈற்றினைச் செய்யும் பெருமையும், அளவில்லாத காலம் நானும் இருந்து உணர்ந்தாலும் முடிவு பெறாது. சங்கரனாகிய சிவனும் நம்முடைய ஆய்வுக்கு எட்டுவதாகிய தளர்வினை எய்தான். தன் அடியார் அருளால் கூறும் அளவில் பெருமை அனைத்தும் உடையன். அத்தகைய சிவபெருமான் பெருமையினை அரிஅயன் இருவராலும் சொல்ல வொண்ணுதென்க.

(அ. சி.) அந்தம் - அழகு. (க)

52. ஆதிப் பிரானும் அணிமணி வண்ணனும்
ஆதிக் கமலத் தலர்மிசை யானுஞ்
சோதிக்கில் மூன்றுந் தொடர்ச்சியில் ஒன்றெனர்
பேதித் துலகம் பிணங்குகின் றார்களே.

(ப. இ.) அனைத்துலகினுக்கும் அந்தத்தைச் செய்து பின் படைக்குங்கால் ஆதிப்பிராணாக நிற்கும் அரனும், காத்தற்கு அழகிய நீலமணி போலும் அரியும், உலகப் படைப்புக்குக் காரணனாகிய அயனும் என்று சொல்லப்படும் மூவரும் தொழில் பற்றி முறையே மும்பெயர் பெற்றனர். அஃதல்லாது பொருளால் மூவரல்லர். அருளால் ஆராய்ந்து நோக்கின் மூன்று நிலையும் ஒரு முழுமுதற் சிவனுக்கே யுரியன என்பது புலனாகும். இக் கருத்தமையத் தொடர்பினால் ஒன்றே முழுமுதல் என்று கூறாது வேறு வேறு உலகோர் மாறுபடக் கூறித் தம்முள் பிணங்கி மயங்குகின்றார்கள்.

(அ. சி.) ஆதிப்பிரான் - உருத்திரன். மணி வண்ணன் - மால். அலர்மிசையான் - அயன். தொடர்ச்சியில் - தோற்றத்தில். (உ)

53. ஈசன் இருக்கும் இருவினைக் கப்புறம்
பீசம் உலகிற் பெருந்தெய்வ மானது
ஈசன் அதுஇது[2] என்பார் நினைப்பிலார்
தூசு பிடித்தவர் தூரழிந் தார்களே.

(ப. இ.) இருவினைகட்கு இருப்பிடமாகிய மாயைக்கு அப்புறம் இருப்பவன் வாராத்திருவும் பேராமுதன்மையும் ஒருங்கமைந்த சிவன். அவனே ஈசன் எனப்படுவன். உலகில் பெருந்தெய்வமாவது உருவின் நினைப்பிற்கும் அருவின் நினைப்பிற்கும் காரணமாயுள்ள அருவுருவமே

1. மறையினுல். அருளினு. சிவஞானசித்தியார், பாயிரம் - ஏ, இ.
2. அதுஇது. சிவஞானபோதம், கூ. ச - க.

யாகும். அதுவே அருளோன்; அதுவே சதாசிவன்; அதுவே சிவக் கொழுந்து. இவ்வுண்மை யுணர்ந்தவர் அது, இது என்று வேற்றுமைப் படக் கூறார். அங்ஙனமன்றி வேற்றுமைப்படக் கூறுவோர் உண்மை உணரும் நிலைப்பிலராவர். அருளால் அகம்புறம் தூய்மையாளரே உண்மையான முதன்மை மூலத்தை யுணர்ந்தவராவர். அகந்தூய்மை திருவைந்தெழுத்தாலும் புறந்தூய்மை திருவெண்ணீற்றாலும் அமைவன. அது இது: அதுவும் இதுவும் என வேறுபாடும், அதுவே இது என ஒற்றுமையும், அதுவாகிய இது என ஒற்றுமை வேற்றுமை ஆகிய இருமை யும் குறியாமல் விளங்கும் பொதுமைப் புணர்ப்பு.

(அ. சி.) ஈசன் - மகேசன். இருவினை - கன்மம் - மாயை. பீசம் - தாமரை மொக்கு (அருவுரு). தூசுபிடித்தவர் - தூய்மையாளர். (கூ)

54. சிவன்முதல் மூவரோ டைவர் சிறந்த[1]
அவைமுதல் ஆறிரண் டோன்றொடோன் றாகும்
அவைமுதல் விந்துவும் நாதமும் ஓங்கச்
சவைமுதற் சங்கரன் தன்பெயர் தானே.

(ப. இ.) அத்தன் அன்னை ஓசை ஒளி (சிவன், சத்தி, நாதம், விந்து) ஆகிய அருவம் நான்கும் சிவன் முதல் மூவர். அருளோன் (சதாசிவன்) அருவுருவம் ஒன்று. ஆண்டான், அரன், அரி, அயன் என்னும் நால்வரும் உருவத்தர். இவையெல்லாம் எண்ணுங்கால் ஒன்பது என்னும் எண்ணி லடங்கும். அதுவே ஆறு, இரண்டு, ஒன்று. இவை ஒன்பதும் நிலையால் வேறுபட்டதல்லாமல் பொருளால் ஒன்றே. அவற்றுள் விந்துவும் நாத மும் சிறப்புள்ளனவாகும். இக் குழுவினுக்கு முதன்மை சங்கரன்; அப் பெயரே சிறந்த பெயர்.

(அ. சி.) சிவன் ஐவர் - சிவம் - சத்தி - விந்து - நாதம் - சதாசிவம் - மகேசன் - உருத்திரன் - மால் - அயன். சிவன் முதல் மூவர் - ஈ + ஐவர் ஔ ஆக கூ. அவை...ஆகும் - அவை ஒன்பதும் தோற்றத்தில் ஒன் றாகும். ஆறு + இரண்டு + ஒன்று. கூ. (ஈ)

55. பயன்அறிந் தவ்வழி எண்ணும் அளவில்
அயனொடு மால்நமக் கன்னியம் இல்லை
நயனங்கள் மூன்றுடை நந்தி தமராம்
வயனம் பெறுவீர்அவ் வானவ ராலே.

(ப. இ.) மேலோதிய முறையின் உண்மைப் பயனே அறிந்து எண்ணுமிடத்து அயனுடன் மாலும் நாம் தொழும் தன்மையரே யன்றி நமக்கு வேறானவராகார். ஆனால் இவ்வயனும் மாலும் முதற்கண் சிவனே. பின்பு அவனருள் பெற்று முப்பத்திரண்டாம் நிலையாகிய ஆசான் (சுத்த வித்தை) மெய்க்கண் உறையும் வழிப்பேற்றுயிரினத் தவரேயாவர். (இவர்களே இருபத்துநான்காம் தத்துவத்தில் உறை கின்ற கட்டுயிராகிய மும்மலத்தயன் மால் இருவரையுந் தொழிற்படுத்தும் முதன்மையினை அருள் ஆணையால் பெற்றவர். கீழுள்ள அயனும் மாலும் ஆகிய இருவருமே அவர்தம் பேதைமை காரணமாகச் செந்நெறி

1. சிவஞ்சத்தி, சிவஞானசித்தியார். உ. ஈ - உ.

முதல்வர்களால் புறக்கணிக்கப்பட்டவர்.) மூன்று திருக்கண்களையுடைய சிவபெருமான் தரமாயைக்கண் வைகும் அயன்மாலிருவரையும் தமரெனக் கொள்வர். இம் முறைமை அறிந்து அவரையும் தொழுக. அவரால் ஆம் நன்மையினையும் பெறுக.

(அ. சீ.) வயன் - பயன் ''வகரம் பகரமுமாகும்'' என்ற சூத்திரப் படி, (உ - ம்: வலம் - பலம்.) (இ)

56. ஓலக்கஞ் சூழ்ந்த உலப்பிலி தேவர்கள்
பாலொத்த மேனி பணிந்தடி யேன்தொழ
மாலுக்கும் ஆதிப் பிரமற்கும் ஒப்புநீ
ஞாலத்து நம்மடி நல்கிடென் ருனே.

(ப. இ.) உலத்தலாகிய அழிவில்லாத சிவபெருமானைத் தேவர்கள் கூட்டமாகக் கூடிப் பாலொத்த மேனியனே என்று வழிபட்டனர். அடியேனும் தொழுது காக்கும் மாலுக்கும் படைக்கும் நான்முகனுக்கும் திருவாணை நல்கிப் பெயரொற்றுமையும் காட்டியருளியவன் நீயே என்று விண்ணப்பித்தேன். அச் சிவபெருமான் இம் மாநிலத்து நம் திருவடி யொன்றையுமே நீ விரும்புக என்றருளினன். நல்கிடு - விரும்பு.

(அ. சீ.) உலப்பிலி - அழிவில்லாத சிவன். (சு)

57. வானவர் என்றும் மனிதர்இவர் என்றும்
தேனமர் கொன்றைச் சிவனருள் அல்லது
தானமர்ந் தோருந் தனித்தெய்வம் மற்றில்லை
ஊனமர்ந் தோரை உணர்வது தானே.

(ப. இ.) தேன் நிறைந்துள்ள கொன்றைமாலை யணிந்த சிவபெருமான் படைத்தளித்தருளும் உடம்பு வேறுபாட்டாலேயே அவர் வானவரென்றும் இவர் மனிதரென்றும் பெயர் பெறுவாராயினர். அதுவல்லாமல் வேறொரு சிறப்பும் உயிர்வகையான் இல்லை. எல்லாராணும் விரும்பி நினைந்து துணியும் தனித்தெய்வம் ஒப்பில்லாத சிவபெருமான் ஒருவனே; வேறில்லை. உடலினை விரும்பி அதன்கண் பொருந்தி வாழ்வோர் ஐ என்று சொல்லப்படும் தலைமைப்பாடமைந்த சிவபெருமானை யுணர்வதே பிறவிப்பெரும்பேறாகும். (எ)

58. சோதித்த பேரொளி மூன்றைந் தெனநின்ற
ஆதிக்கண் ஆவ தறிகிலர் ஆதர்கள்
நீதிக்கண் ஈசன் நெடுமால் அயன்என்று
பேதித் தவரைப் பிதற்றுகின் ருரே.

(ப. இ) சோதித்த - ஒளியருளுகின்ற. சிவபெருமானின் பேரொளியாய்த் திகழ்வன அன்பு அறிவு ஆற்றல் (சத்தி, சிவம், விந்து) களாகிய மூன்றுமேயாம். அன்பின் இவ்வொளி பெற்றுப் பேரொளியாய் விளங்கும் நிலைகள் ஐந்து. அவை: அருளோன், ஆண்டான், அரன், அரி, அயன் என்னும் இவர்தம் நிலைகளாம். இவ் வேறுபாடுகள் அனைத்தும்

நிலைவேறுபாடுகளே யன்றித் தலைமைப் பொருள் வேறுபாடுகளில்லை. இவை யனைத்தும் ஆதியாகிய திருவருளின்கண் அமைவன. இவ்வுண்மை யினை உண்மையறிவில்லாத சில மூடர்கள் அறியார். முறைமைக்கண் ஒரு பொருளையே ஆண்டான் நெடுமால் அயன் என்று வேறுபடுத்திக் கூறுகின் றனர். அதற்கு மாறுக வெவ்வேறுளவென்று கூறுவது உண்மைக்கு மாறுகிய பிதற்றுரையேயன்றிப் பிறிதன்று.

(அ. சி.) பேரொளி மூன்று: சத்தி, சிவம், விந்து. பேரொளி ஐந்து: சதாசிவம், ஈசன், அரன், அரி, அயன். (அ)

59. பரத்திலே ஒன்றுய்உள் ளாய்ப்புற மாகி
வரத்தினுள் மாயவ னுய்அய னுகித்
தரத்தினுள் தான்பல தன்மைய னுகிக்
கரத்தினுள் நின்று கழிவுசெய் தானே.

(ப. இ.) சிவபெருமான் கடந்த மேனிலையுள் ஒன்றேயாய் உள்ளும் புறம்புமாய் விரவி நின்றருள்வன். உயிர்கள் பிறப்பினுள் வருதலாகிய வரத்தின்கண் அயனுய் (காப்பின்கண்) மாயனுய் அம்முறைபோல் இன்னும் பலவாய்த் தோன்றியருள்வன். கரத்தலாகிய மறைப்பினுள் ஆண்டானுய் நின்று ஆருயிர்கட்கு விடுக்கழிவு செய்தருள்கின்றனன்.

(அ. சி.) வரத்து - படைப்பு. தரம் - முறை. கரத்து - அழித்தல்; மறைவு. (கூ)

60. தானெரு கூறு சதாசிவன் எம்இறை
வானெரு கூறு மருவியும் அங்குளான்
கோனெரு கூறுடல் உள்நின் றுயிர்க்கின்ற
தானெரு கூறு சலமய னுமே.

(ப. இ.) சத்தியாகிய திருவருளாற்றலை ஒப்பில்லாத ஒரு கூற்றிலே யுடைய சிவபெருமான் சதாசிவன் எனப்படுவன். சத்தியோடு கூடிய சிவன் சதாசிவன். சதாசிவன் எனினும் அருளோன் எனினும் ஒன்றே. அவனே எம் கடவுள். அறிவுவெளியாகிய வனப்பாற்றலென்னும் பராசத்தி யுடன் கூடியும் அங்குளன். அத் தலைவனுடன் கூடி ஒரு கூறுய் உயிர்க் குயிராய் உண்ணின்று உயிர்த்தலாகிய செலுத்தலைச் செய்வதும் திருவருளே. அத் திருவருள் குளிர்ச்சியாயிருத்தலின் அவனும் தண்ணளி யன் ஆவன்.

(அ. சி.) வான் - பராசத்தி, பரை. கோன் - பதி. சலமயன் - தண்ணியன். (கo)

# 3. வேதச் சிறப்பு

**61.** வேதத்தை விட்ட அறம்இல்லை வேதத்தின்
ஓதத் தகும்அறம்[1] எல்லாம் உளதர்க்க
வாதத்தை விட்டு மதிஞர் வளமுற்ற
வேதத்தை ஓதியே வீடுபேற் றுர்களே.

(ப - இ.) 'உலகியல் வேதநூல் ஒழுக்கமாதலின்' அவ் வேதத்திற்கு அறநூல் என்னும் சிறப்புப் பெயர் உண்டு. செந்தமிழ்ப் பொது அறநூல் திருவள்ளுவநாயனர் அருளிய திருக்குறளாகும். அக் காரணம் பற்றியே அதற்குப் பொதுமறை என்னும் திருப்பெயரும் வழங்குவதாயிற்று. வீட்டியல் அறநூல் செந்தமிழ்ச் சிறப்புமறை. அதுவே திருநான்மறை முடிவாம் மூவர் தமிழ். எனவே அம் மறையினை விட்டு வேருக அற வொழுக்கம் இல்லை. அம் மறையின்கண் ஓதத்தகுந்த அற இயல்புகள் அனைத்தும் உள. வீண் அளவை முறையான் வழக்கிடும் வல்லாண்மையை விட்டுத் திருவடி யுணர்வு கைவந்த நுண்மதி வாய்ந்த நல்லார் எல்லா முறைவளமும் நிரம்பப் பெற்ற செந்தமிழ்த் திருநான்மறையினை இடையருது இனிது ஓதித் திருவடிப் பேருகிய வீடு பெற்றுர்களே.

(அ. கீ.) வேதம் - தமிழ்வேதம். ஓதத் தகும் அறம் - அறம், பொருள், இன்பம், வீடு. (க)

**62.** வேதம் உரைத்தானும் வேதிய ஞகிலன்
வேதம் உரைத்தானும் வேதா விளங்கிட
வேதம் உரைத்தானும் வேதியர் வேள்விக்காய்[2]
வேதம் உரைத்தானும் மெய்ப்பொருள்[3] காட்டவே.

(ப. இ,) உலகினைத் திருவாணை வழிநின்று படைக்கும் நான்முகனும் மறையினை உரைத்தருளியவன் ஆகான். அதனுல் அவன் சிறப்பாக மறையினுக்கு உரியவனுகமாட்டான். சிறப்பாகவுரியவன் சிவபெருமானே. அம் மறையினை அருளிச்செய்தவன் 'மாற்றம் மனம் கழிய நின்ற மறையோன்.' மறைவல்லார் சிவபெருமானை முழுமுதலாகக் கொண்டு மறை முறைப்படி வேள்வி செய்து உய்வதற்காகவும் மெய்ப்பொருளாகிய திருவடி நிலையினைக் காட்டிக் காணும் அழியா நிலைமை பிறப்பித்தற்காகவும் மறையுரைத்தனன். மெய்ப்பொருள்: இறை உயிர் தளை ஆகிய அழியாமும்பொருள். காட்ட - உணர்த்த.

(அ. கீ.) வேதமுரைத்தானும் - தமிழ் வேதம் உரைத்தவனும். வேதியன் ஆகிலன் - பிரமா அல்லன். வேதமுரைத்தானும் வேதா - ஆரிய வேதம் உரைத்தவன் பிரமா. (உ)

---

1. ஆலின்கீழ். அப்பர், ச. நூ-சு.
'' ஆலின்கீழ், கூ. சம்பந்தர், அ.அ.
2. ஆதி மாமறை. கூ. சம்பந்தர், சூ.க.
3. வேதமுதல்வன். சம்பந்தர், ரு. நி.ச-அ.

63. இருக்குரு வாம்எழில் வேதத்தி னுள்ளே
உருக்குணர் வாயுணர் வேதத்துள் ஒங்கி
வெருக்குரு வாகிய வேதியர் சொல்லுங்
கருக்குரு[1] வாய்நின்ற கண்ணனு மாமே.

(ப. இ.) இருக்காகிய மந்திரங்களின் தொகுப்பு ஆதிமறை என்ப. அம் மறையினுள் உணர்வையுருக்கும் பொருள்சேர் புகழ்ப் பாடலால் சிறந்தனவற்றை விருப்புடன் சிவவேதியர் சொல்லுவர். கண்ணன் முதலிய தேவர்கட்கும் மூலகுருவாய் எழுந்தருளுபவன் சிவனே. கண்ணன் முக்கண்ணன் எனலுமாம்.

(அ. சீ.) இருக்கு உருவாம் எழில் வேதம் - இருக்கு என்று சொல்லப்படுகின்ற சுலோகங்களையுடைய ஆரிய வேதம். (சு)

64. இருக்கில் இருக்கும் எண்ணிலி கோடி
அருக்கின்ற மூலத்துள் அங்கே இருக்கும்
அருக்கனுஞ் சோமனும் ஆரழல் வீச
உருக்கிளர் ரோமம் ஒளிவிடுந் தானே.

(ப. இ.) அளவில்லாத மந்திரங்களில் சிவன் எழுந்தருள்வன். பொருந்தியுள்ள மூலத்திடத்தும் ஓம் என்னும் மூலமந்திரத்தினிடத்தும் இருப்பன். ஞாயிறும் திங்களும் ஒளி வீசும்படி ஆருயிர்களின் உடம்பகத்துக் காணும் மயிர்க்கால் தோறும் அருள்ஒளி தோன்றும். அதனால் அங்குச் சிவன் உறைந்தருள்வன். அருகுகின்ற என்பது அருக்கின்ற எனத் திரிந்து நின்றது: அருகுதல் - பொருந்துதல். (ச)

65. திருநெறி யாவது சித்தசித் தன்றிப்
பெருநெறி யாய பிரானே நினைந்து
குருநெறி யாஞ்சிவ மாநெறி கூடும்
ஒருநெறி ஒன்குக வேதாந்தம் ஓதுமே.

(ப. இ.) திருநெறி என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது அறிவிக்க அறியும் சித்தும் அறிவித்தாலும் அறியுந்தன்மையாகிய அறிவில்லாத அசித்தும் அல்லாதவன் சிவன். இயல்பாகவே விளங்கும் பேரறிவினையுடையவன் அவன். சித்து - அறிவுடையது. அசித்து - அறிவில்லது. அவன் வகுத்தருளிய நன்னெறி பெருநெறி என வழங்கப்பெறும். அந்நெறியின் முதல்வனும் சிவபெருமானே. அப் பெருமானையே நினைக்கும் திருவடியுணர்வை நல்கியருளும் சிவகுரு எழுந்தருள்வது குருநெறியாகிய சிவமாநெறிக்கண் என்று கொள்க. அதுவே திருவடியின்கண் கூடச் செய்யும் ஒப்பில்லாத் தனிநெறி. இவற்றை ஒருங்கு ஓதுவது மறைமுடிவாம் வேதாந்தம் எனப்படும். மூவர்தமிழ் மறையும், முனிவராம் மணிமொழியார் தமிழ் மறைமுடிவு மென இஞ்ஞான்றும் கொண்டு ஒழுகுவதே செந்நெறிச் செல்வரின் சீரிய கடன்.

(அ. சீ.) குருநெறி - சன்மார்க்கம், நன்னெறி. (கு)

---

1. ஆரண ஆகமங்கள், சிவஞானசித்தியார், க. உ - உசு.
2. சிவனரு. ,. க. ங - கக.
" உணருரு. சிவஞானபோதம், சு.

66. ஆறங்க மாய்வரு மாமறை ஓதியைக்[1]
கூறங்க மாகக் குணம்பயில் வாரில்லை
வேறங்க மாக விளைவுசெய் தப்புறம்
பேறங்க மாகப் பெருக்குகின் றாரே.[2]

(ப. இ.) அறுவகைச் சமயங்களையும் ஆறங்கங்களாகக் கொண்டு திகழும் தமிழ்மாமறையினை ஓதியருளிய சிவபெருமானை மண்ணகத்தார் உய்யப் பெண்ணொரு கூறுகத் திகழும் அவன்தன் பேரருட்குணத்தைத் திருவடியுணர்வோடு ஓதியுணர்வார் இல்லை. இவ்வுண்மை தொன்மையது, தன்மையது, மென்மையது, அழியா விழுமியது, முழுமையது என உணராது அயன்மொழி அங்கங்களையும் வேதங்களையும் அவையே பேறெனக் கொண்டு பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்குகின்றார்கள். ஆறங்கம்: எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி, பண் என்றலும் ஒன்று.

(அ. சி.) ஆறங்கமாய் வருமாமறை - ஆறு அங்கங்களோடு கூடிய தமிழ்மறை. கூறங்கமாக - மாதொருபாகனுக. மாட்டாதார் - தமிழ் வேதம் ஆரிய வேதங்களைப் பிரித்து அறிந்து கொள்ளமாட்டாதார். (சு)

67. பாட்டும் ஒலியும் பரக்குங் கணிகையர்
ஆட்டும்[3] அரூத அவனியின் மாட்டாதார்
வேட்டு விருப்பார் விரதமில் லாதவர்
ஈட்டும் இடஞ்சென் றிகலலுற் றாரே.

(ப. இ.) செந்நெறிக்கண் பரந்து தென்னாடு எங்கணும் தொன்னாள் தொட்டுச் சிவவழிபாடாகச் செய்து வரும் செந்தமிழ்ப் பாட்டும், ஏனை இசையொலியும், இவற்றுடன் இணைந்த சிவகணிகையர் சிவபெருமானின் முழுமுதல் தன்மையை விளக்கிக் காட்டி ஆடும் ஆட்டமும் ஒருகாலமும் நீங்காத தமிழகத் தனிப்பண்புகளை ஏற்றுக்கொள்ளமாட்டாதார் புலை வேள்வி விருப்பினராய் ஒன்றுக நல்லது கொல்லாமை என்னும் சிறந்த நோன்பாகிய விரதமில்லாதாராய்க் கொலை வேள்வி செய்வர். அவ் வேள்விப்பயன் நுகரும் துறக்கவுலகத்துச் சென்று மாலும் அயனும் போல் ஒருவரோடொருவர் முரணிச் சண்டையிடுவாராயினர். ஈட்டுமிடம் - பயன் நுகருமிடம். (எ)

---

1. மலியினர். சம்பந்தர், க. எசு - கூ.
2. அம்மையே. அ. பிடித்த - நூ.
3. புலனைந்தும். க. கஙo - க.

# 4. ஆகமச் சிறப்பு

**68.** அஞ்சன மேனி அரிவையோர் பாகத்தன்
அஞ்சொ டிருபத்து மூன்றுள ஆகமம்
எஞ்சலில் விஞ்ஞகர் இருபத் தெண்மரும்[1]
அஞ்சா முகத்தில் அரும்பொருள் கேட்டதே.

(ப. இ.) நீலமேனி வாலிழைபாகத்தனாகிய சிவபெருமான் இருபத்தெட்டுத் தமிழ்ச்சிவாகமங்களையும் அருளிச் செய்தனன். குறையாத திருவடியுணர்வு கைவந்த மேலோராகிய விஞ்ஞகர் என்னும் நல்லோர் இருபத்தெண்மரும் அவற்றைக் கேட்டுணர்ந்தனர். இருபத்தெட்டு ஆகமங்களையும் சிவபெருமான் தனக்குரிய ஒப்பில்லாத் திருமுகங்கள் ஐந்தனுள் உச்சித் திருமுகத்தால் உரைத்தருளினன். அவற்றின்கண் கூறப்படுவதே அரும்பொருள் என்க. அரும்பொருள்-முப்பொருளுண்மை.

(அ. சி.) அஞ்சாமுகம் - ஈசானமுகம். (க)

**69.** அண்ணல் அருளால் அருளுஞ் சிவாகமம்
எண்ணில் இருபத்தெண் கோடிநூ றாயிரம்
விண்ணவர் ஈசன் விழுப்பம் உரைத்தனர்
எண்ணினின் றப்பொருள் ஏத்துவன் நானே.

(ப. இ.) தலைமைப்பாடுடைய சிவபெருமான் திருவருளால் அருளிச் செய்த இருபத்தெட்டு ஆகமங்களின் திருப்பாட்டுக்களின் தொகை இருபத்தெட்டுக்கோடி நூறாயிரமாகும். விண்ணவராகிய தூமாயையின்கண் வாழும் அருளோன் - சதாசிவப் பேற்றினர் சிவபெருமானின் விழுமிய மாண்பினை அவ்வாகம வழி உரைத்தருளினர். சிவன் திருவடியினையினை ஓவாது அடியேனும் எண்ணி அவ்விழுப்பொருளை ஏத்துவன்.

(அ. சி.) நூறாயிரம் - இலக்கம் சூத்திரங்களையுடையன. (உ)

**70.** அண்ணல் அருளால் அருளும் சிவாகமம்
விண்ணில் அமரர் தமக்கும் விளங்கரிது
அண்ணல் அறைந்த அறிவறி யாவிடின்
எண்ணிலி கோடியும் நீர்மே லெழுத்தே.

(ப. இ.) சிவபெருமான் திருவருளால் அருளிச்செய்த சிவாகமம் அயன் மால் உள்ளிட்ட தேவர்களாலும் விளங்கிக்கொள்ள முடியாத அருமையானது. அச்சிவாகமங்களின்கண் சிவபெருமான் அருளிச்செய்த மெய்ப்பொருள் உண்மை கைவரச் செய்யும் சிவவுணர்வுச் சிறப்பினை அறியாவிட்டால் அளவில்லாத அவை முற்றும் நீர்மேல் எழுத்துப்போல் பயன்தாராதொழியும். (கூ)

---

1. (பாடம்) அஞ்சலிகூப்பி யறுபத்தறுவரும்.

71. பரனுய்ப் பராபரங்[1] காட்டி உலகின்
தரனுய்ச் சிவதன்மந் தானேசொல் காலத்து
அரனுய் அமரர்கள் அர்ச்சிக்கு நந்தி
உரனுகி ஆகமம் ஓங்கிநின் ருனே.

(ப. இ.) சிவபெருமான் விழுமிய முழுமுதலாம் பரனுய் நின்று தன் திருவடியான் உணரப்படும் உவமையிலாக் கலைஞானமாகிய அபரமும் மெய்ஞ்ஞானமாகிய பரமும் முறையே சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானத்தார்க்கும், பவமதனே அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானத்தார்க்கும் நீங்காது உடனுய் நிறைந்து அருளிச் செய்தனன். அங்ஙனம் அருளிச் செய்து உலகினில் சிவபுண்ணியங்களுள் எல்லாம் மேலானது சிவவழிபாடாகிய பூசையாகும். அச் சிவபுண்ணியத்தைத் தானே செய்துகாட்டும் வழிகாட்டியாய் முன்னின்று திருவிடைமருதூரில் தானே தன்னே வழிபட்டுங் காட்டியருளினன். அம் முறையான் சிவவுலகத்தவர் வழிபாடும் புரிவாராயினர். அவர்களால் வழிபடப்படும் நந்தியும் அவர்கட்கு உறுதியளித்தருளும்படி ஆகமமாக ஓங்கி நின்றருளினன். 'ஆகமம் ஆகி நின் றண்ணிப்பான் தாள்வாழ்க' என்பதும் இவ்வுண்மையை வலியுறுத்தும்.

(அ. சீ.) தரன் - பரிபாலிப்பவன். உரனுகி - திண்மையுடையவனுகி. (ச)

72. சிவமாம் பரத்தினிற் சத்தி சதாசிவம்
உவமா மகேசர் உருத்திர தேவர்
தவமால் பிரமீசர் தம்மில்தாம் பெற்ற
நவஆ கமம்எங்கள் நந்திபெற் ருனே.

(ப. இ.) சிவம் என்று சொல்லப்படும் மேலாம் பொருளினிடத்துத் திருவருளால் அன்னேயாகிய சத்தியும், அச் சத்தியினிடத்திருந்து அருளோனுகிய சதாசிவனும், சதாசிவத்தினின்று ஆண்டானுகிய மகேசனும், அம் மகேசனினின்று ஆசானுகிய நந்தியங்கடவுளும், அரன், அரி, அயன் என்னும் இவர்கள் தங்களுக்குள்ளே பெற்ற சிவாகமங்கள் ஒன்பதும் என்ப. அவை முற்றும் எங்கள் ஆசானும் நந்தியங்கடவுள் பெற்றனர் என்ப. உவமாமகேசர் - இரண்டுமகேசர் அவ்விருவரும் ஆண்டான் ஆசான் எனப்படுவர். (நி)

73. பெற்றநல் ஆகமம் காரணங் காமிகம்,
உற்றநல் வீரம் உயர்சிந்தம் வாதுளம்
மற்றவ் வியாமள மாகுங்கா லோத்தரந்
திற்றநற் சுப்பிரஞ் சொல்லு மகுடமே.

(ப. இ.) மேலோதியவாறுள்ள சிவாகமங்கள் ஒன்பதின் திருப்பெயர்கள் வருமாறு : க. காரணம், உ. காமிகம், கூ. வீரம், ஙு. சிந்தம், ஜ. வாதுளம், சு. வியாமளம், எ. காலோத்தரம், அ. சுப்பிரம், கூ. மகுடம் என்பன. (சு)

1. சிவனடியே. கஉ. சம்பந்தர், எ0.

74. ஆகமம் ஒன்பான் அதிலான நாலேழு
மோகமில் நாலேழு முப்பேத முற்றுடன்
வேகமில் வேதாந்த சித்தாந்த மெய்ம்மையோன்
ரூக முடிந்த அருஞ்சுத்த சைவமே.

(ப. இ.) மேல் (எஉ) ஓதிய சிவன் முதலாகவுள்ள ஒன்பதின்மர் வழியாக வந்த சிவாகமங்கள் இருபத்தெட்டாகும். பிறப்பற்றுச் சிறப் புற்று வாழ வழி காட்டுவதால் இவ்வாகமங்கள் ஏனைச் சமயத்தார் கூறும் வேதாகமங்கள் மயக்குவதுபோன்று மயக்குந் தன்மையன அல்ல. அதனால் இவை மோகமில் நூல்கள் என்று எல்லாராலும் பாராட்டப் படுவன. இவ்விருபத்தெட்டும் மூன்று பாகங்களாகப் பிரிக்கப்பட் டுள்ளன. அவை திருக்கோவில், திருவுரு, நாள்விழா, சிறப்புவிழா முதலியன புரிய வேண்டிய முறைமைகளை வகுத்துக்கூறும் செய்கைப் பகுதியும், வழிபாட்டுப் பகுதியும், முப்பொருளுண்மை தப்பின்றித் தெளிக்கும் மெய்யுணர்வுப் பகுதியும் என மூன்றும். இவை முறையே கரும காண்டம்; உபாசனை காண்டம், ஞான காண்டம் எனப் பெயர் பெறும். கேடில்லாத வேதாந்த சித்தாந்த மெய்ம்மைகளாகிய முப் பொருள் முடிபுகள் ஒன்றுவனவே. ஆயின் இவை மூன்றும் முடிபிரண் டும் ஒன்றுக மேற்கொண்டு ஒழுகுவோர் சுத்த சைவர் எனப்படுவர். வேகம் - கேடு. கலப்பின்மை - தனிமை. (எ)

---

# 5. அந்தணரொழுக்கம்

75. அந்தண ராவோர் அறுதொழில் பூண்டுளோர்
செந்தழல் ஓம்பிமுப் போதும் நியமஞ்செய்
தந்தவ நற்கரு மத்துநின் ரூங்கிட்டுச்
சந்தியும் ஓதிச் சடங்கறுப் போர்களே.

(ப. இ.) அந்தணர் என்று சிறப்பித்துச் சொல்லப்படுவோர் அற வோர். அவர் பிறப்பற முயலும் பெற்றியர். இறைபணி நிற்கும் முறை யினர். அதனால் அவர் தம்முணர்ப்பற்று அருள் முணர்ப்பால் செய்யும் இருளில் தொழிலினர். அதனால் அத் தொழில் அறு தொழில் என வழங்கப்பட்டது. அறுதொழில் என்பது தொழிற்பயன் செய்தாரைச் சாராது செய்யப்பட்டாரைச்சார்ந்து அவர் துய்ப்புக்கு வயலுக்கிடும் உரம் போல் வளம் நல்குவது. அற்றதொழில் என்பதாம். இத் தொழிவினை ஏறு வினை என்பர். ஏறுவினை எனினும் ஆகாமியம் எனினும் ஒன்றே. இதற்கு அற்ற தொழிலெனப் பொருள் கொள்ளாது, ஆறுவகைத் தொழிலெனக் கூறுதலுமுண்டு. அவை வருமாறு: ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஈவித்தல் என்பன. இவற்றுள் ஈவித்தலே விடுத்து ஏற்றல் எனக் கூறுவாரும் உளர். செய்யவேண்டுங் காலங்களில் எல் லாம் செந்தழல் ஓம்பும் செம்மையர் உரிய காலங்கள் எல்லாம் என்பதே மூப்போதும் என்பது. நியமம் செய்தல் என்பது இயமம் நியமம் எனக் கூறப்படும் எண்வகை யோகவுறுப்புகளுள் ஒன்று. அதனை இயற்றல் என்பதாம். அல்லது தவறுது செய்வேமென மேற்கொண்ட செய்கை எனினுமாம். அவர்கள் குறிக்கோள் கொள்ளுதலாகிய நியமத்தினைப்

புரிந்து. சிவனே வழிபடும் அழகிய நற்றவத் தொண்டில் உறைத்து நின்று தங்களே அதற்கே ஒப்புவித்து ஓதவேண்டிய காலங்களிலெல்லாம் திரு முறைகள் ஓதிச் செய்யும் பணியில் முட்டின்றிச் செய்வர். சடங்கு - செய்யும் பணி, கரணம். அறுத்தல் - முட்டின்றிச் செய்தல்.

(அ. சி.) அந்தணர் - அறவோர். அறுதொழில் - ஓதல், ஓதுவித்தல், தவம், வேட்டல், ஈட்டல், ஈதல். (க)

**76.** காயத் திரியே கருதுசா வித்திரி
ஆய்தற் குவப்பர் மந்திரமாங் குன்னி
நேயத் தேரேறி நினைவுற்று நேயத்தாய்
மாயத்துள் தோயா மறையோர்கள் தாமே.

(ப. இ.) காயத்திரி மந்திரத்துக்குரியளாகிய உமையம்மையாரையும், ஆராயப் பெறுகின்ற சாவித்திரி மந்திரத்துக்குரியளாகிய நாமகளையும் வழிபட்டுப் பயன்பெறுதற்குரிய வழிவகைகளே ஆராய்தற்கு உவப்பர். அவற்றிற்குரிய மந்திரங்களையும் தூய நெஞ்சிடத்து நினைப்பர். நினைத்துப் பேரன்பாகிய காதலாக இருந்து அம் மறையே நினைவாய் உறைத்துநிற்பதால் ஏனை மாயாகாரியப் பொருள்களைச் சிறிதும் பொருந்தார். அத்தகையோரே செந்தமிழ்ச் சிவமறையோர் எனப்படுவர். (உ)

**77.** பெருநெறி யான பிரணவம் ஓர்ந்து
குருநெறி யாலுரை கூடிநால் வேதத்
திருநெறி யான கிரியை யிருந்து
சொருபம தானோர் துகளில்பார்ப் பாரே.

(ப. இ.) ஓமொழியானது ஏனை மந்திரங்களின் விரிவிற்கும் அவற்றின் ஒலிப்பிற்கும் தாயாய் அமைந்தது. அதனால் அம்மறை பெருநெறி யெனப்படும். அதனை அருள் வலத்தால் ஓர்ந்து, சிவகுருவின் திருவருள் நெறியால் திருவைந்தெழுத்தின் அருமறை கேட்டு, அக்கேள்வியாகிய உபதேசத்தினால் திருநெறியான திருவருளைக் கை ஏற்று நடப்பர். அத்தகையோரைச் சிவவடிவினராக[1] அம் மறை செய்யும். அங்ஙனம் சிவவடிவானோர் குற்றமற்ற சிவமறையோராவர். இவரே தமிழகத்துப் பார்ப்பாராவர். துகள் - குற்றம்.

(அ. சி.) பெருநெறி-முத்தி மார்க்கம். குருநெறி-சன்மார்க்கம். (கூ)

**78.** சத்திய மூந்தவம் தான்அவன் ஆதலும்[2]
எய்த்தகும் இந்தியம் ஈட்டியே வாட்டலும்[3]
ஒத்த உயிர்கள் உண்டா யுணர்வுற்றுப்
பெத்தம் அறுத்தலு மாகும் பிரமமே.

(ப. இ.) முப்பொருள் உண்மை காண்டலாகிய திருவடியுணர்வும், சிவத்தைப் பேணுதலாகிய நற்றவமும் செந்நெறியொழுகுவார் தானவனுதலாகிய சிவவடிவிற்கு உறுப்புக்களாகும். அவ்வருந் தவத்தினை மேற்

1. நீலத்தார் கரிய. கூ. க - ஙூ.
2. நானவனென், சிவஞானபோதம், கo-க-க.
3 நானேயோ, அ. திருவேசறவு, கo.

கொள்வார் ஐம்பொறியடக்குதலே முதற்கண் செய்தல் வேண்டும். அப் பொறிகள் தன்வழி மீளாதஇடத்து அருள் துணையால் அவற்றை வாட்டி நல்வழிப்படுத்துதல் வேண்டும். கட்டும் உறுப்பும் காரணமும் கொண்டுள்ள உடம்பும் அவ்வுடம்பகத்து விளைக்கிடாகப் பொருந்திப் பிறந்து இறந்து உழலும் உயிரும் வெவ்வேறென்று கருதாது ஒன்றென்றே கருதிய மருளுணர்வு நீங்கப்பெற்று வெவ்வேறென்னும் உண்மை தோன்றிக் கட்டறுத்து நின்றநிலையில் சிவவடிவாகுவர்.

(அ. சி.) இந்தியம் ஈட்டி - புலன்களே அடக்கி. பெத்தமறுத்தல் - பாசம் நீங்குதல். (சு)

79. வேதாந்தங் கேட்க விரும்பிய வேதியர்
வேதாந்தங் கேட்டுந்தம் வேட்கை ஒழிந்திலர்
வேதாந்த மாவது வேட்கை ஒழிந்திடம்
வேதாந்தங் கேட்டவர் வேட்கைவிட் டாரே.

(ப. இ.) முப்பொருள் நாட்டும் தமிழ்மறை முடிபாம் வேதாந்தங் கேட்க அயற்புல மாந்தராம் வேதியர் விரும்பினர். வேதாந்தத்தைக் கேட்டும் நெடுதாள் நிலையாகச் செய்துவரும் கொலைபுலை வேள்வியினை விட்டொழியார். உண்மை வேதாந்தமென்பது தன்னைச் சிவனுக்கு அடிமையெனக் கொண்டு அவன் அருள்வழி நிற்பதே வேட்கையாய்த் தனக்கென ஒரு சிறிதும் எவ்வகை வேட்கையும் இலனாயிருத்தல். வேட்கை அகன்ற இடமே வேதாந்தங் கேட்டுப் பயனடைதற்குரிய நயன்சேர் தகுதியிடமாகும். அந் நிலையில் வேதாந்தங் கேட்டவர் வேட்கைவிட்ட சிவநாட்டமுற்ற விழுமியோராவர். கொலைபுலை வேள்வியால் எய்தும் பயன் நிலையிலாச் சிறுபயனும் பாவவாயிலுமாகும்.

(அ. சி.) வேதாந்தம் - வேதத்தின் முடிவு. (இ)

80. நூலுஞ் சிகையும் நுவலிற் பிரமமோ[1]
நூலது கார்ப்பாச நுண்சிகை கேசமாம்
நூலது வேதாந்தம் நுண்சிகை ஞானமாம்
நூலுடை அந்தணர் காணும் நுவலிலே.

(ப. இ.) பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும் ஆதலின் சிறப்பாகிய பெயர் பெறுவது தூய அகம்புற வொழுக்கத்தினுலேயாம். புறவடையாளங்கள் அகவொழுக்கத்தைக் காட்டும் அறிகுறியேயாம். அக வொழுக்கமில்லாமல் புறவொழுக்கமாகிய அடையாளம் மட்டும் கொள்வது தன்னையும் பிறரையும் வஞ்சிக்கும் பாவச் செயலேயாம். அம் முறையில் பேர்கொண்ட பார்ப்பார் பூணூலும் உச்சிக்குடுமியும் விடாது பற்றிக் கொண்டு தம்மைப் பார்ப்பார் என்பர். இவை பிரமத்தன்மை யுணர்த்தும் உண்மையாகா. அக் குறிப்பே நுவலிற் பிரமமோ வென்பது. நூலென்பது கயிறு. சிகை என்பது மயிர்முடி. இவற்றின் அக அடையாளமாக நீங்கா உயிர் ஒழுக்கமாகவுள்ளன, முறையே மறை முடிபும், அம் முடிபால் பெறப்படும் முப்பொருள் உண்மைத் திருவடி

1. கோலும். அப்பர், ஞ0-ச0-அ.

யுணர்வுமேயாம். தெய்வ அருள்நூலுடை அந்தணரைக் காணின் இவை ஒவ்வொருவர்க்கும் செவ்விதிற் புலனுதல் வேண்டும். (கூ)

81. சத்தியம் இன்றித் தனிஞானந் தானின்றி
ஒத்த விடையம்விட் டோரும் உணர்வின்றிப்
பத்தியும் இன்றிப் பரன்உண்மை யின்றிப்
பித்தேறும் மூடர் பிராமணர் தாமன்றே.[1]

(ப. இ.) உலகியல் ஒழுக்கவுண்மையும், அருளியல் ஆய்வாம் இறை, உயிர், தளை என்னும் முப்பொருள் உண்மையும் சத்தியம் எனப்படும். அத்தகைய சத்தியமின்றி, ஒப்பில்லாத சிவபெருமானே முழுமுதல் என்னும் தனி ஞானமாகிய திருவடிஉணர்வின்றி மனம் போனவாறே பொறிகளில் சென்று புலன்களை நுகர்வதாகிய வேட்கையினை விட்டுத் திருவடியினை யுணரும் உணர்வின்றி. இவற்றுன் ஆருயிர்க்கொழுநனும் சிவபெருமான்மாட்டு வீளையும் அழியாக் காதலாம் பத்தியுமின்றி, மிக எளியவரும் நம்பியொழுகும் கடவுள் உண்மைக் கோளுமின்றி, ஐம்புலன் நுகர்விலே மருள் கொண்டு இருளுக்கு அடிமையாய், மெய்ப்பொருளை நாடாது திரியும் மூடர்கள் எங்ஙனம் பிராமணர்கள் ஆவார்கள்? ஒரு காலத்தும் பிராமணர் ஆகார்.

(அ. சி.) பிராமணர் - பிரமனை வணங்குகிறவர்கள். (விஷ்ணுவை வணங்குவோர் வைணவர். உருத்திரனை வணங்குவோர் உருத்திர பல் கணத்தார், மகேசனை வணங்குவோர் மாகேசுரர்.) (எ)

82. திருநெறி யாகிய சித்தசித் தின்றிக்[2]
குருநெறி யாலே குருபதஞ் சேர்ந்து
கரும நியமாதி கைவிட்டுக் காணுங்
துரிய சமாதியாந் தூய்மறை யோர்க்கே.

(ப. இ.) ஆருயிர் சுட்டுணர்வோடும் சிற்றுணர்வோடும் கூடியுணர்வதாகிய சித்தும், இருள் மலத்துடன் கிடந்து ஏதும் அறியாததாகிய அசித்தும் முற்றுணர்வாகிய திருவடியுணர்வைச் சார்ந்த இடத்து இலவா யொழியும். அப் பேற்றினைக் கைவரச் செய்வது திருநெறியாகும். அதுவே குருநெறியென்றும் சொல்லப்படும். இந் நெறியாலே சிவகுருவின் திருவடியினைச் சேர்ந்து நாட்கடன் வழிபாடு முதலிய படிமுறைப் பயிற்சிகளெல்லாம் நிட்டையாகிய சமாதியின்கண் ஏற்படும் நாலாம் நிலையாம் பேருறக்கத்தின்கண் (துரியநிலை) தாமே பகல் விளக்குப்போல் அடங்கிவிடும். அந்நிலைக்கண் சிவவுணர்வாகவே இருப்பர். அத்தகையோரே தூய சிவமறையோராவர்.

(அ. சி.) திருநெறி - வேதத் திருநெறி, வேதமார்க்கம். குருநெறி - சன்மார்க்கம். (அ)

---

1. சாவமுன். அ. திருச்சதகம் க. மெய்யுணர்தல், ச.
,, படுபொருள். காஞ்சி. தக்கீசப் படலம், உஉ.
2. அறியாமை. சிவஞானசித்தியார், அ-உ-உ0.

83. மறையோ ரவரே மறையவ ராஞல்
மறையோர்தம் வேதாந்த வாய்மையில் தூய்மை
குறையோர்தன் மற்றுள்ள கோலா கலமென்று
அறிவோர் மறைதெரிந் தந்தண ராமே.

(ப. இ.) சிவமறையின் மெய்ப்பொருளைச் சிவகுருவால் உணரும் அவரே சிவமறையவர். ஆனல் அவர்கட்குரிய மறைமுடிவால் பெறப் படும் வாய்மை தூய்மை இவற்றில் குறையுடையோர் செய்யும் புறச் செயல்களனைத்தும் பிறர் மெச்சச் செய்யும் ஆகுல நீர என்று மெய்யறி வுடையோர் கூறுவர். அங்ஙனம் அஞ்சாது கூறும் வஞ்சநெஞ்சமிலாரே சிவமறை தெரிந்த சிவ அந்தணராவர். குறையோர் என்பதற்கு அயன் மொழி நூல் வழி யொழுகுவோர் என்றலும் ஒன்று. கோலாகலம் - சந்தைகூட்டிரைச்சல்; ஆகுலம். (கூ)

84. அந்தண்மை பூண்ட அருமறை யந்தத்துச்[1]
சிந்தைசெய் அந்தணர் சேருஞ் செழும்புவி
நந்துதல் இல்லை நரபதி நன்ருகும்
அந்தியுஞ் சந்தியும் ஆகுதி பண்ணுமே.

(ப - இ.) சிவ வழிபாடு செய்யும் செந்நெறியினர் இயற்கை அந்தண்மையுடையோராவர். 'வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந் தம்'[2] என்பதனலும், 'சிவாகமங்கள் சித்தாந்தமாகும்' என்பதனலும் அருமறையந்தத்துச் சிந்தைசெய் அந்தணர் ஆகமத்தராவர். அத்தகை யோர் சிவனே மறவாத் திருவுடை நல்லோராவர். நல்லோர் - சிவஞானி. அத்தகையோர் சேரும் புண்ணியத் தென்புலம் எவ்வாற்றலுங் கேடெய் துதல் இல்லை. மாந்தர் ஆட்சித் தலைவனும் வேந்தனும் செந்நெறி யொழுகி நன்ருகுவன். அந்தியும் சந்தியுமாகிய சிவவழிபாட்டுக் காலங் களில் தவருது வழிபாடு புரிதலாகிய ஆகுதியினே அந்தணர் செய்வர். ஆகுதி - தூய ஆன்பால். (கo)

---

1. (பாடம்) அறவேள் ஆகமத்துச்.
2. மூற்படுமாயை. குமரகுருபரர், கூ. பண்டார-கக.

# 6. ஆகுதி வேட்டல்

85. வசையில் விழுப்பொருள் வானும் நிலனுந்
திசையுந் திசைபெறு தேவர் குழாமும்
விசையம் பெருகிய வேத முதலாம்
அசைவிலா அந்தணர் ஆகுதி வேட்கிலே.

(ப. இ.) மலப்பிணிப்பும் அது காரணமாக நேரிடும் பிறப்பும், இறப்பும், இருவினையும், மருளும், வினைநுகர்வும் முதலிய உயிர்க் குற்றங்கள் வசை எனப்படும். அத்தகைய வசை ஏதுமில்லாத விழுப்பொருளாம் சிவபெருமானை, (அருள் சேர்ந்த நெஞ்சினர்க்கு அல்லல் இல்லையாதலின், அத்தகையோர் அசைவிலார் எனப்படுவர்.) அசைவிலா அந்தணர் பாலவியால் ஆகுதி வேட்பர். அவ் வேள்விப் பயனால் வானும் நிலனும் திசையும் மாருவளம் பெற்றுச் செழிப்பினை எய்தும். அவ்வத்திசையின் கண் வாழும் தெய்வங்களும் அத் தெய்வ இனங்களாகிய கூட்டங்களும் உய்வினை எய்தும். தன்வழி யொழுகுந் தக்காரினைவர்கட்கும் நீதொரீஇ நன்றின்பால் உய்க்கும் வழி காட்டுவதால் மறை வெற்றியைத் தரும் விழுமியதாயிற்று. எனவே வெற்றியினைப் பெருகச் செய்யும் வேதத்தை முதன்மையாக வைக்கப் பெற்றது. அதனை முதன்மையாகக் கொண்டு சிவவேள்வி வேட்பதே தவலில் தவ வேள்வியாம்.

(அ. சி.) ஆகுதி வேட்டல் - ஆவின் நெய்யைப் பறப்பையில் விட்டு எரிவளர்த்து, எரியுருவராகிய சிவபெருமானை வணங்கல். பறப்பை - சிருக்கு - சிருவம். (க)

86. ஆகுதி வேட்கும் அருமறை அந்தணர்
போகதி நாடிப் புறங்கொடுத் துண்ணுவர்
தாம்விதி வேண்டித் தலைப்படு மெய்ந்நெறி
தாமறி வாலே தலைப்பட்ட வாறே.

(ப. இ.) அருமறை வழியே நெய்சொரிந்து வேள்விவேட்கும் அந்தணர் திருவடியுணர்வால் மீளா நிலையாம் சிவப்பேற்றினை எண்ணி, பிறழாநிகழ்ச்சியாம் ஊழ்ப் பயனை உள்ளங் கொள்ளாது உடலுழாய் துகர்வர். அவ்வந்தணர் ஏறுவினையாகிய ஆகாமியத்தை ஆண்டவன் ஏற்று விதியாக்கும்படி விரும்புவர். அதன் பொருட்டு மெய்ந்நெறியினைத் தலைப்படுவர். மேலும் திருவடியுணர்வால் சுட்டுணர்வும் சிற்றுணர்வும் நீங்கி முற்றுணர்வுள் தம்மறிவு அடங்கித் தாம் அவ்வறிவாகவே நிற்பர். அதனால் தாமறிவாலே அவ் வந்தணர் திருவடியைத் தலைப்பட்ட முறைமையாகும் என்றனர் : தலைப்படல் - அன்புடன் சேர்தல். (உ)

87. அணைதுணை அந்தணர் அங்கியுள் அங்கி
அணைதுணை வைத்ததின் உட்பொரு ளான
இணைதுணை யாமத் தியங்கும் பொழுது
துணையணை யாயதோர் தூய்நெறி[1] யாமே.

---

1: மண்ணதனிற். அ. அச்சோப்பதிகம் - ச.

(ப. இ.) செந்நெறிக்கண் பொருந்திய உலகிற்குத் துணையாகிய அவ் வந்தணர் வேள்வியுட் சிறந்த சிவ வேள்வியினை ஆருயிர்தோறும் அணைந்து வழித்துணையாக நிற்கும் சிவபெருமானை முதன்மையாக வைத்துப் புறத்தே புரிவர். அவர் அவ் வேள்வியினை யொத்து உயிர்ப்புப் பயிற்சியால் அகத்து வேள்வி செய்யும்போது, துணையாய்ப் பொருந்தும் சிவபெருமான் வெளிப்பட்டு விளங்கித் தோன்றுவன். அந் நிலையே தூநெறியாகிய நன்னெறி என்ப. (கூ)

88. தானே[1] விடும்பற் றிரண்டுந் தரித்திட
நானே[2] விடப்படு மேதோன்றை நாடாது
பூமேவு நான்முகன் புண்ணிய போகனும்[3]
ஓமேவும் ஓரார் குதிஅவி உண்ணவே.

(ப. இ.) செந்தாமரை மலரை இருக்கையாகக் கொண்ட நான்முகன் முதலாயினர்க்கும் புண்ணியப் போகனுயுள்ளவன் சிவன். அவன் திருவடியை அன்றி வேறொன்றினையும் எண்ணாது அதனையே எண்ணி ஓ மறைமொழிந்து ஆகுதி செய்யின் அவ்வாகுதிப்பயனால் யான் எனது என்னும் இருவகைப் பற்றும் தானே விடும். அங்ஙனமன்றி என்னால் விடப்படும் தன்மையதோ ?

(அ. சி.) பற்று இரண்டு · யான், எனது என்னும் அகப்பற்று, புறப் பற்றுக்கள். (ச)

89. நெய்நின் றெரியும்[4] நெடுஞ்சுட ரேசென்று
மைநின் றெரியும் வகையறி வார்கட்கு
மைநின் றவிழ்த்தரு மத்தின மாம்என்றுஞ்
செய்நின்ற செல்வம் தீயது வாமே.

(ப. இ.) புறவிருளைப் போக்குதற்கு அகலும், நெய்யும், திரியும் தீயும் ஒன்றுகூடி எரியும் விளக்கைப்போல், அகத்தேயுள்ள மை போன்ற ஆணவ வல்லிருள் சிவனுர் திருவடியுணர்வால் அகலும். அத் திருவடியுணர்வு திருவைந்தெழுத்தை இடையருது எண்ணும் பொருள் மறையால் வாய்க்கும். அவ் வுண்மை உணர்வார்க்கு இருண்மலம் தானே அகலும். அத்தகைய நன்னுள் செய்தற்குரிய செந்நெறியில் நிற்கும் பொன்னுளாகும். அந்நெறியால் பெறப்படும் அழியாச் செல்வம் திருவடிப் பேறு. அது மலவிருளோட்டும் பேரறிவுச் சுடராம் தீயாகும்.

(அ. சி.) மை - மலம். நெய் - அறிவு, ஞானம். (ஞ)

90. பாழி அகலும் எரியுந் திரிபோலிட்டு
ஊழி அகலும் உறுவினை நோய்பல
வாழிசெய் தங்கி உதிக்க அவைவிழும்
வீழிசெய் தங்கி வினைசுடு மாமே.

---

1. (பாடம்) தாமே. 2. (பாடம்) நாமே.
3. நாகத்தணையானு. சம்பந்தர், க. அதி-கூ.
4. செய்ஞ்ஞின்ற. அப்பர், சு. அ0 - இ.

(ப. இ.) பெரிய அகல்போல் காணப்படும் வேள்விக்குண்டமும், அதன்கண் காணப்படும் திரிபோன்ற ஆல் அத்தி முதலிய சுள்ளிகளும் அமைத்துச் சிவபெருமானே முழுமுதலாகக் கொண்டு மாறு உறுதியுடன் வேள்வியினைப் புரிய நெடுநாள் வாழ்தற்கு வேண்டிய கால எல்லையாகிய ஊழியும் பெருகும். பொருந்த வேண்டிய துன்ப இன்பக் கூறுபாடாகிய இருவினையால் வரும் நோய்கள் பல விழுந்தழியும். அங்ஙனம் அவை விழுவதற்குக் காரணம் சிவ வேள்விப் பயனாக விளைந்த திருவருட்கண் கடைக்கணிக்கும் சூட்டினால் ஏற்படும் சுடுதலேயாம். விழி வீழியென நீண்டு நின்றது. விழுதலைச் செய்தல் என்னும் பொருள்தரும் தொழிற் பெயருமாம். சுள்ளி - பால்மரக்குச்சு.

(அ. சீ.) பாழி - பள்ளம், குழி. வீழிசெய்து - பார்த்து. (சு)

91. பெருஞ்செல்வங் கேடென்று முன்னே படைத்த
அருஞ்செல்வம் தந்த தலைவனை நாடும்
வருஞ் செல்வத் தின்பம் வரவிருந் தெண்ணிப்
பருஞ்செல்வத் தாகுதி வேட்கநின் றூரே.

(ப. இ.) பெருகும் செல்வமாகிய ஏறுவினை பிறவிக்கு வித்தாகிய கேட்டினைத் தருமென்று தன்னினைப்பற்ற அந்தணச் செல்வர்கள் தாங்களாக முற்பிறவிகளிற் செய்துகொண்ட எஞ்சுவினையாகிய சஞ்சிதத்தினின்றும் ஏன்றுகொள்ளப்பட்டு மாறுத ஊழ்வினைச் செல்வம் தந்த தலைவனுகிய சிவனை நல்லார் பலரும் நாடுவர். அவனுலே வரும் திருவடிச் செல்வம், பேரின்பம் தருவதாகும். அது வரவிருந்த வள்ளலை எண்ணிப் புறப் பொருளாய் விளங்கும் பெரிய செல்வங்களைச் சிவஞானங் கிட்டுதற்கு வாயிலாகிய சிவவேள்வியின்பால் பற்றற ஆகுதி செய்வதே மெய் வேள்வி என்க. பருஞ்செல்வம் - தழல்.

(அ. சீ.) பெருஞ்செல்வம் - பெருகும் செல்வம் - அஃதாவது ஆகாமியம். முன்னே படைத்த அரும் செல்வம் - ஊழ்வினை - வல்வினை. பருஞ் செல்வத் தாகுதி - முத்தி பயக்கும் ஆகுதி. (எ)

92. ஒண்சுடராகின உலப்பிலி நாதனை
ஒண்சுட ராகிஎன் னுள்ளத் திருக்கின்ற
கண்சுட ரோன்உல கேழுங் கடந்தஅத்
தண்சுட ரோமத் தலைவனு[1] மாமே.

(ப. இ.) அறவடிவாம் ஒளிமிக்க ஆனேற்றை ஊர்ந்து வரும் தலைமைப்பாடுடைய சிவபெருமானை, என்றும் பொன்றுமையாகிய எவர்க்கும் மில்லாத ஏர்மிக்க முதல்வனை, பேரறிவுப் பெருஞ்சுடராய் என் உள்ளத்தே வீற்றிருந்தருளுகின்ற ஒளிப்பொருள்களுக்கு ஒளிகொடுத்தருளும் மூச்சுடர்க் கண்ணானை, முழுமுதல்வன் என்பர். அவன் ஏழு உலகம்

1. அஞ்செழுத்தா. சிவஞானபோதம், கூ.கூ - க.
2. நானே. ஆரூரர், எ, உக - சு.

கூலியும் கடந்த நிலையில் தண்சுடராக நின்றருள்வன். அத்தகைய தண்சுடரோனைச் சிவமறையோர் ஓமத் தலைவனுகக் கொள்வர். அவனே உண்மை ஓமத் தலைவனுமாவன். (அ)

93. ஓமத்துள் அங்கியின் உள்ளுளான் எம்இறை
ஈமத்துள் அங்கி[1] இரதங்கொள் வானுளான்
வேமத்துள் அங்கி வலைவு வினைக்கடல்
கோமத்துள் அங்கி குரைகடல் தானே.

(ப. இ.) அஞ்செழுத்தால் செய்யப்படும் ஓமத்துள் வளர்கின்ற சிவ வேள்வித் தீயும் சிவபெருமானே ; அவனே நம் தலைவன். ஒவ்வொரு வரின் இறுதிக் காலத்துச் செய்யப்படும் அந்தியேட்டியாகிய பெருமண வேள்வித் தீக்கண் விளங்குபவனும் அவனே. இரதங்கொள்வான் : அவ் வேள்வித் தீயினைத் தேராகக் கொண்டருள்பவன். இனரெரி தோய் வன்ன வினைவாய் வரும் வினைப்பயன் கடல் போன்றது. அவ் வினைக் கடலை அழித்தொழிப்பது மிக்க ஒளியோடு காணப்படும் ஒலிக்கின்ற கடல் போன்ற பெருவேள்வித் தீ என்க. (அதனுல் பெறப்படும் திருவடி யுணர்வே வேள்வித் தீ என்க.)

(அ. சி.) ஓமம் - பிரணவத்துடன் கூடிய மந்திரத்தால் செய்யும் அக்கினி காரியம். இது வடமொழியில் ஹோமம் என வழங்கப்படு கிறது. ஈமத்துள் அங்கி - சுடு காட்டில் செய்யும் அக்கினி காரியம். அந்தி யேட்டி - ஈமக்கடன். (கூ)

94. அங்கி நிறுத்தும் அருந்தவர்[2] ஆரணத்
தங்கி இருக்கும் வகையருள் செய்தவர்
எங்கும் நிறுத்தி இலைப்பப் பெரும்பதி
பொங்கி நிறுத்தும் புகழது வாமே.

(ப. இ.) மெய்ப்பொருள் அடையாளமாகிய சிவச்சுடரே சிவவேள் வித் தீயாகும். அதை உலகின்கண் நிறுவினவன் அருந்தவனுகிய சிவ பெருமான். அவன் வழிப்பட்டு அவ் வேள்வியினை நடாத்தும் சிவமறை யோரும் அருந்தவர் எனப்படுவர். அத் தவத்தோர் வாயிலாகவே அவ் வேள்வி முறையினை விளக்கும் செந்தமிழ்த் திருநான்மறை, முறை யாகிய ஆகமம் அருளிச் செய்தவனும் சிவனே. அவ் விறைநூலின் வழி எங்கணும் வேள்வியினைச் செய்ய ஆருயிர் இலைப்பினை எய்தும். அவ்வினைப்பகலப் பெரும்பதியாகிய வழிப்பேறும் சிவவுலகத்தினை எய்து விப்பன். சிவபெருமானுக்கும் அவனை வழிபடும் சிவமறையோர்க்கும் மிகுந்து நிலைபெறும் பொன்றுப் புகழ் இதுவேயாம்.

(அ. சி.) ஆரணத் தங்கி - தமிழ் வேத ஆகமங்களில் கூறிய சிவாக்கினி. (கூ)

---

1. ஏறுகந்தீரிடு. சம்பந்தர், கூ. கூடு - டு.
2. இன்னவுரு. ,, நூ. எக - ச.

'' கண்ணி கார்நறுங். புறம் - கடவுள் வாழ்த்து.

# 7. அரசாட்சி முறை

95. கல்லா அரசனுங் காலனும் நேரோப்பர்
கல்லா அரசனிற் காலன் மிகநல்லன்
கல்லா அரசன் அறம்ஓரான் கோல்லென்பான்[1]
நல்லாரைக் காலன் நணுகநில் லானே.

(ப. இ.) அறமுறை கல்லாது, ஆண்டவன் நினைவினைக் கொள்ளாது, அருள்வழி நில்லாது, மருள்வழி யொழுகும் மன்னனே கல்லா அரசன் எனப்படுவன். உயிரையும் உடலையும் காலம் பார்த்துப் பிரிக்கும் கூற்றுவன் காலன் எனப்படுவன். இவ்விருவரும் துன்புறுத்தும் வன்செயலால் ஒருங்கொப்பர். ஆயினும் முறைமை வழுவிய பழிபடு கல்லா வரசனைக் காட்டிலும் முறைமை வழுவாத காலன் மிக நல்லன். காலன் காலக்கணக்கை முறையாகக் கொண்டு நடப்பவன். அதுபற்றியே 'காலனும் காலம் பார்க்கும்' என்னும் கட்டுரையும் எழுந்தது. தல்லொழுக்கங் கல்லாத அரசன் அறமாகிய மறைநூலினை ஆன்றோருடன் ஆய்ந்தறிந்து உளங்கொண்டு அதன்படி ஒழுகான். அதனால் எக்காரணமுமின்றி நல்லவர்களையும் நினைத்த நினைத்தபடி கொல்லச்சொல்லி அல்லலுறுத்துவன். திருவடியுணர்வு கைவரப் பெற்ற நல்லாராகிய சிவஞானிகளைக் காலன் நெருங்கான். கூன்பாண்டியன் ஆளுடைய பிள்ளையார் திருமடத்தில் அமணர் தீவைக்க வேண்டுமெனக் கூறியபோது இணங்கியது கல்லா அரசன் கொடுமைக்குக் காட்டாகும்.

(அ. சீ.) கல்லா அரசன் - அரச நீதிகளைக் கல்லா அரசன். மனு நீதி கண்ட சோழன் செய்த நூல், திருக்குறள் முதலியன மனுஸ்மிருதி அல்ல. (க)

96. நாள்தோறும் மன்னவன் நாட்டில் தவநெறி
நாள்தோறும் நாடி யவன்நெறி நாடானேல்
நாள்தோறும் நாடு கெடுமூட நண்ணுமால்[2]
நாள்தோறும் செல்வம் நரபதி குன்றுமே.

(ப. இ.) வேந்தனும் சிவபெருமானின் மெய்த்தூண் கொண்டு நாடாளும் மன்னவன் தன் நாட்டில் ஒவ்வொரு நாளும் பிறர்க்கென வாழும் பெரியோரின் தவநெறி செம்மையாக நிகழ்கின்றதா என்று கண் காணித்தல் வேண்டும். தவநெறி பிழைத்தாலும் அந்நெறிக்குப் பிறர் ஊறு இழைத்தாலும் நாட்டினுக்குப் போக்க முடியாத பொல்லாங்கு விளையும். அதனால் இன்றியமையாத கண்காணிப்பு முதற்கண் தவநெறிக்கண் வேண்டும். அதன் பின்பு மன்னவன் தன்பால் ஏதும் குற்றம் உளதா என்று ஆராய்தல் வேண்டும்; என்னை? 'தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின், என்குற்ற மாகும் இறைக்கு' என்பது

1. கல்லார்ப். திருக்குறள், இஎ0.
" குற்றெரு. ஆரூரர், எ - கூடு - ச.
2. மாநிலங். கஉ. மனுநீதிகண்ட புராணம், கூசு.
" நாடொறு. திருக்குறள், இஇகூ.

வாயுறை வாழ்த்தாகலான் என்க. அம் முறையினை நாடாவிட்டாலும் ஒவ்வொரு நாளும் கேடும் உடன் தோன்றிக் கொண்டிருக்கும். மேலும் ஒவ்வொரு நாளும் பல்வகைச் செல்வமும் கெடும். மன்னனும் உறை கடுகி ஒல்லைக் கெடுவான்.

(அ. சி.) அவன் நெறி - அரசநீதி. செல்வ நரபதி - செல்வமும் அரசனும். (உ)

97. வேடநெறி நில்லார் வேடம்பூண் டென்பயன்[1]
வேடநெறி நிற்போர் வேடம்மெய் வேடமே
வேடநெறி நில்லார் தம்மை விறல் வேந்தன்
வேடநெறி செய்தால் வீடது வாகுமே.

(ப. இ.) தவக்கோலத்துக்குரிய தனிப்பெரு நெறியில் நிற்கும் ஆற்றல் இல்லாதவர் அத் தவக்கோலத்தினை மேற்கொண்டு கரவொழுக்கம் ஒழுகுவதால் உண்டாகும் பயன் யாது? தவக் கோலத்திற்குப் பொருந்தியவாறு செம்மையாக ஒழுகுவாரின் தவக்கோலம் உண்மைக் கோலமாய் வண்மைப் பயனை நாட்டிற்கும் பிறர்க்கும் எண்மையில் எய்துவிக்கும் திண்மைச் சிவக்கோலமாகும். உண்மைத் தவக்கோலத்தின் வழி ஒழுகாத தீப்பண்பாளரை வெற்றி பொருந்திய வேந்தன் தவக்கோல நெறியில் நிற்பித்தல் வேண்டும். அங்ஙனம் செய்தால் அம்முறைமை நாட்டிற்கும் நற்றவத்தோர்க்கும் நல்லின்பந் தருவதாகும். வீடு - நல்லின்பம். (கூ)

98. மூடங் கெடாதோர் சிகைநூல் முதற்கொள்ளில்
வாடும் புவியும் பெருவாழ்வு மன்னனும்
பீடோன் றிலனுகும் ஆதலாற் பேர்த்துணர்ந்து
ஆடம் பரநூற் சிகையறுத் தால்நன்றே.[2]

(ப. இ.) ஆருயிர்களின் அறிவை மூடித் தடைசெய்துகொண்டிருக்கும் தொன்மலம் மூடம் எனப்படும். அதன் காரியம் யான் எனது என்னும் செருக்கை விளைவிக்கும் ஆணவம் ஆகும். அவ் வாணவம் கெடாதார் உயர்ந்தார்க்குரிய உச்சிக்குடுமியும் பூணூலும் பிறவும் பூண்டு உலகை ஏமாற்றுவதால் விளையும் தன்மை யாது? அதற்கு மாறுக விளையும் தின்மைக்கு அளவே இல்லை. அஃதாவது உலகமும் உயிர்களும் வாடி வதங்கும். பெருவாழ்வினையுடைய மன்னனும் பெருமை குன்றுவன். ஆதலால் அவர்தம் பொய்ம்மையை மெய்ம்மையாளரைக் கொண்டாராய்ந்து ஆடம்பரமாகக் கொண்டுள்ள உச்சிக் குடுமியையும், பூணூலையும் அறுப்பித்தால் நாட்டுக்கும் அப்பொய் வேடத்தார்க்கும் நன்மை பயப்பிப்பதாகும். நாட்டவர் அவரை மெய்த்தவரென்று நம்பித் தானஞ் செய்கின்றனர். அவ்வாறு செய்கின்றவர் பெரும் பாவத்தைப் பெறுகின்றனர். என்னை? அவர் ஈந்த பொருள் தீவழிச்சென்று பெருந் துன்பத்தை உலகினுக்குப் பலகாலும் பலவகையாலும் ஈந்தமையான் என்க. இப்பொருள் "நெஞ்சில் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து, வாழ்வாரின் வன்கணுர் இல்" என்னும் செந்தமிழ்ப் பொது மறையால் நன்குணர

1. மெய்யெலா. கஉ. மெய்ப்பொருள் நாயனார், எ.
2. தெக்கு. அப்பர், இ. கo - க.

லாம். மேலும் அப் பொய்க் கோலத்தவர் தம் புன்மை யுணர்ந்து அதனை யொழித்து நன்மைவழி யொழுகி நலமுறுவர். (சு)

99. ஞானமி லாதார் சடைசிகை நூல்நண்ணி
ஞானிகள் போல நடிக்கின் றவர்தம்மை
ஞானிக ளாலே நரபதி சோதித்து
ஞானமுண் டாக்குதல் நலமாகும் நாட்டிற்கே.

(ப. இ.) திருவடியுணர்வாகிய சிவஞானமில்லாதார் சடையும், உச்சிக்குடுமியும், பூணூலும் மேற்கொண்டு மெய்யுணர்ந்தார் போல நடிப்பர். அங்ஙனம் நடிக்கும் புல்லியோரை நாடாளும் மன்னவன் ஆராய்தல் வேண்டும். அங்ஙனம் ஆராய்வது அத் துறைக்கண் திருவருளால் மேன்மையுற்ற சிவஞானிகளைக் கொண்டேயாம். அவர்கள் கட்டளையிட்டருளிய வாறே புல்லியோரை வல்லவாறு தண்டித்து நல்லநெறியில் மன்னவன் நிறுத்துதல் வேண்டும். அங்ஙனஞ் செய்யின் அவர்தமக்கும் நாட்டிற்கும் அது பெருநன்மை செய்ததாகும்.

(அ. சி.) சடை - துறவறத்தார்களுக்கு உரியது. சிகை - நூல் - இல்லறத்தார்களுக்கு உரியன. (சி)

100. ஆவையும் பாவையும் மற்றற வோரையுந்[1]
தேவர்கள் போற்றுந் திருவேடத் தாரையுங்
காவலன் காப்பவன் காவா தொழிவனேல்
மேவும் மறுமைக்கு மீளா நரகமே.

(ப. இ.) 'பிறந்தநாள் தொட்டுச் சிறந்ததம் தீம்பால் அறந்தரு நெஞ்சமொடு' அன்னவர்க்கும் ஈயும் ஆவையும், உலகின் வாய்மையும் தூய்மையும் மறவாது கைக்கொண்டு, செம்பொருட் சிவனே தம்பெருமுதலா வழிபாடு புரிதலும், ஐந்தெழுத்து வெண்ணீறு சிவமணி போற்றித் தொழுந் தொழுகையால் நன்னெறிப்படுத்தும் தாய்மை சிறந்த பாலையரையும், தாய்மைவழித் தப்பாது நிற்கும் அறவோரையும், மண்ணுலகத்தாரே யன்றி விண்ணுலகத் தேவர்கள் போற்றும் சிவனடியார்களையும் சிறப்பாகக் காக்கும் கடமை காவலனுக்கு என்றும் உள்ளது. மேற்கூறிய மூன்றும் முறையே இன்பமும் பொருளும் அறமும் ஒருபுடை யுணர்த்தும் குறிப்பாகும். அத்தகைய காவலன் காவாது ஒழிவானெனில் அம் மன்னனுக்கு மீளா இருள் உலகத்துன்பம் எய்தும். திருவேடத்தார்-சிவனடியார். நரகம் - இருள் உலகம். (கூ)

101. திறந்தரு முத்தியுஞ் செல்வமும் வேண்டின்
மறந்தும் அறநெறி யேஆற்றல் வேண்டும்
சிறந்தநீர் ஞாலஞ் செய்தொழில் யாவையும்
அறைந்திடில் வேந்தனுக் காழிலொன் றுமே.

1. ஆபயன். திருக்குறள், இசுo.

(ப. இ.) வழிப்பேறும் விழுப்பேறுமாகிய இருநிறமுத்தியும், இம்மை மறுமையாகிய இருபெரும் செல்வங்களும் ஒருவர் உள்ளன்புடன் கள்ள மின்றி விரும்புவாராஞல் எள்ளலிலாது மறந்தும் அறதெறியையே புரிதல் வேண்டும். மறந்தும் புரிதல் என்பது பயிற்சி மேலீட்டால் பொறிகள் மனத் தொடர்பின்றியே தானவு கனவுகளில் மனமுறச் செய்வன. இவ் வுண்மை, "நற்றவாவுனை நான்மறக்கினும் சொல்லுதா நமச்சிவாயவே" என்னும் திருமறையான் உணரலாம் சிறந்த கடலால் சூழப்பட்ட உலகோர் செய்தொழில் எல்லாவற்றினும் வரும் வருவாயில் ஆறில் ஒன்று வேந்தனுக்குரிய முறையான இறைப் பொருளாகும். ஏனைய ஐந்து கூறும் 'தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தானென்றிங்கு, ஐம்புலத்தாறு ஓம்பல் தலை' என்பதனுற் பெறப்படும் ஐவர்க்குமாம். தென்புலத்தார் - தெய்வத்தை நிலை நாட்டிச் சென்ற அழகிய திருவடியுணர்வுடைய நாயன்மார். விருந்து - தெய்வ நாட்டத்தை நிலைநாட்டி வருகின்ற நாயன்மார். (எ)

102. வேந்தன் உலகை மிகநன்று காப்பது
வாய்ந்த மனிதர்கள் அவ்வழி யாநிற்பர்
பேர்ந்திவ் வுலகைப் பிறர்கொள்ளத் தாங்கொள்ளப்
பாய்ந்த புலியன்ன பாவகத் தானே.

(ப. இ.) வேந்தன் உலகை நலமுறக் காப்பது மிகச் சிறந்த சிவ புண்ணியமாகும். நன்னெறி வாய்ந்த உலகமாந்தர் அரசன் எவ்வழி அவ்வழி நடவாநிற்பர். என்னே? குடிகள் அன்புடையராய் வேந்தன் அருளுடையனுய் இணங்கி வாழும் குணத்தான் என்க. மாறுபட்டுத் தன்னடிக் கீழுள்ள உலகைப் பிறர்கொள்ள வந்தபொழுது காவாதவனும் தன் மாணுவுவகையான் செருக்குற்றுப் பகைவனினும் மிக்க கேட்டை யுண்டாக்குபவனும் காட்டில் வாழும் கொடுவிலங்காகிய பதுங்கிப் பாய்ந்து கொல்லும் புலியினும் மிகக் கொடியவனுவன். பாவகத்தான் - பாவமே எண்ணும் நீயவுள்ளத்தான்; கொடியன் என்று எல்லாரும் எண்ணி அஞ்சும் நினைப்பிற்கு உரியன். பாவகம் - நினைப்பு. (அ)

103. கால்கொண்டு கட்டிக் கனல்கொண்டு மேலேற்றிப்
பால்கொண்டு சோமன் முகம்பற்றி உண்ணுதோர்
மால்கொண்டு தேறலை உண்ணும் மருளரை
மேல்கொண்டு தண்டஞ்செய் வேந்தன் கடனே.

(ப. இ.) உயிர்ப்பினை அகத்தவப் பயிற்சியான் உள்ளடக்கி மூலத் தீயினை நடுநாடி வழியாக மேலேற்றித் திங்கள் மண்டிலத்துக் காணப்படும் பால்போலும் தூய வெள்ளி நிலவுப் பயனும் அமிழ்தினை அத்திங்கள் வாயிலாக நாளும் உண்ணுமவர் உலகியல் தேறலாம் மெய்யறியாமையினைத் தரும் கள்ளினை யுண்ணுர். இம்முறையில் அமிழ்துண்ணும் செம்மையிலாதார், அறிவழிவினைச்செய்யும் புறக்கள்ளினை மருள்கொண்டு உண்பர். அதனுல் அவர்கள் தமக்கும் உலகுக்கும் பெருந்தீங்கை உண்டுபண்ணுவர். அத்தகையோரைத் தக்கவாறு தண்டஞ்செய்து நன்னெறிப் படுத்துதல் வேந்தன் கடமையாகும். செய் - செய்தல்: முதனிலைத் தொழிற் பெயர்.

(அ. சி.) கால்-பிராணவாயு, மூச்சு. கனல்-மூலக்கனல், குண்டலினி. மேலேற்றி - வீணைத்தண்டின் மேலேற்றி. பால் - அமிழ்தம், (கூ)

**104.** தத்தஞ் சமயத்[1] தகுதிநில் லாதாரை
அத்தன் சிவன்சொன்ன ஆகம நூல்நெறி
எத்தண் டமுஞ்செய்யும் அம்மையில்[2] இம்மைக்கே
மெய்த்தண்டஞ் செய்வதவ் வேந்தன் கடனே[3].

(ப. இ.) அவரவர் மேற்கொண்டுள்ள உயிர்க் கொள்கையாம் சிறப் பினைச் சமயம் என்பர். உலகியற் கொள்கை அனைவர்க்கும் பொது. அவற்றின்கண் வேறுபாடு காண்டலில்லை. சமயக்கொள்கை அவரவர் மேற்கொண்ட வரம்பின்படி ஒழுகுதல் வேண்டும். ஒருவரோடொருவர் பிணங்கி வாழ்வது அறமாகாது. இணங்கி வாழ்வதே அறமாகும். சமயங் கள் அனைத்தும் மாந்தர் வளர்ச்சியும். பேரூர் வழியும், கல்லூரி வகுப்பும், ஏணிப்படியும் போன்று ஒன்றுக்கு ஒன்று துணையாவனவேயாம். அதனால் அவரவர் சமய நெறியில் அவரவர் நிற்றல் வேண்டும். அங்ஙனம் நில்லா தாரை நிறுத்த வேண்டுவது வேந்தன் கடமையாகும். அங்ஙனம் நில்லா தாரை முப்பத்தாரும் மெய்யினை இயக்கும் அத்தனுகிய சிவன் தானருளிய சிவாகம நூல்வழி அம்மைக்கண் எல்லாத் தண்டமும் இயற்றுவிப்பன். இம்மைக்கண் பிறர் நல்வழிப் படுதற்கும், தவறியவர் திருந்திச் சிவமாம் பெருவாழ்வு எய்துதற்கும் மெய்ம்மையான தண்டத்தை வேந்தன் செய்தல் வேண்டும். அஃது அவன் கடனுகும். அத்தன் சிவன்-தலைவனுகிய சிவன்; இருபெயரொட்டுப் பண்புத்தொகை.

மாந்தர் வளர்ச்சியென்பது கருவுற்ற நாள்முதல் இருமுது குரவர் பெருநிலைவும், பிறந்தநாள் தொட்டு அவர்தம் உறுதுணையும், வளரு தாளில் உடன்பிறந்தார் உறுதுணையும், ஆடற்காலத்துப் பக்கத்தார் உறுதுணையும், பொது அறிவில் உற்றார் உறுதுணையும் பெற்று வளர்வ தாகும். அதுபோல ஆட்சித் தலைநகராம் பேரூர்க்கு எல்லாப் பக்கங் களிலுமிருந்து பல வழிகள் செல்லும். அதனை முன்னுணர்ந்து பயின்றூர் பின்வருவார்க்கு உணர்த்தல் வேண்டும். கல்லூரி வகுப்புக்களில் எல்லா வகுப்புக்களும் என்றும் இன்றியமையாது வேண்டப்படுவனவே. அவை களில் பயில்வாரும் பயின்றூரும் பின்வருவார்க்குத் துணைபுரிதல் வேண்டும். ஏணிப்படி அடிப்படைப்படி முடியுடைப்படிக்கு வழிகாட்டி யாகி அதைத் தாங்கியும் நிற்றல் வேண்டும் என்பதே வளர்ச்சியென்ப தற்குப் பொருளாவதுடன் வளர்ச்சியுற்றூர் வளருவார்க்குத் துணைசெய்ய வேண்டும் கடமையும் உரிமையும் உடையார் என்பதும் பொருளாகும்.

(கo)

---

1. சமையமே. அப்பர், ச. சஞ் - ஞி.
2. (பாடம்) மும்மையில்.
3. அரசனும். சிவஞான சித்தியார். உ. உ -உகூ.

# 8. வானச் சிறப்பு

**105.** அமுதூறு[1] மாமழை நீரத னுலே
அமுதூறும் பன்மரம் பார்மிசை தோற்றுங்
கமுகூறு தெங்கு கரும்பொடு வாழை
அமுதூறுங் காஞ்சிரை ஆங்கது வாமே.

(ப. இ.) பெருமழைநீர் ஊறும் அமுதமாகும். அதனால் நிலவுலகில் உயிர்வாழ்க்கைக்கு வேண்டும் நிலையான உணவு முதலிய பல்வகைப் பயன்தரும் மரங்கள் உண்டாகும். அவைகளும் அமுதூறுவனவேயாம். அவற்றுட் சில வருமாறு: பாக்குமரம், தென்னை, கரும்பு, வாழை முதலியன. இவைகள் அமுதூறுவனவேயாம். அத்தகைய மழையில்லையானால் உலகம் பெருந்துன்பம் எய்தும். அத் துன்பம் எல்லாரானும் வெறுக்கப்படுதலினாலும் சாவினைத் தருதலினாலும் அதனைக் காஞ்சிரங்காய் என்று ஓதினர். (க)

**106.** வரையிடை நின்றிழி வான்நீர் அருவி
உரையில்லை உள்ளத் தகத்துநின் றூறு
நுரையில்லை மாசில்லை நுண்ணிய தெண்ணீர்க்
கரையில்லை எந்தை கழுமணி யாறே.[2]

(ப. இ.) எந்தையாகிய சிவபெருமானுக்குத் திருமுழுக்காட்டுக்குரிய திருத்த நீரைத் தரும் யாறு கழுமணியாறு என்று சொல்லப்படும். கழுமணி என்பது இயல்பாகவே குற்றமில்லாத நீலமணி. இம் மணி போன்று தெளிந்த நீரென்பது பொருள். இஃது இறவாத இன்பமாகிய திருமஞ்சனம். ஏனைய யாறுகள் ஓடிவரப் பெருமலை வேண்டும். அதுபோல் இந்த யாறு ஓடிவரும் பெருமலை வரை எனப்படும். அது, நன்னெறி நான்மையுள் சிறந்த காதன்மை வரையாகும். காதன்மை நெறி அறிவு நெறியாகும். அறிவுநெறி எனினும் உண்மைநெறி எனினும், சன்மார்க்க மெனினும், ஞானநெறி யெனினும் ஒன்றே. அஃது இவ்வெல்லையினின்றும் ஓடிவருவது. அது தூய அருவியாகும். இவ்வருவியின் பெருமை சொல்லுக்கு அடங்காதது. ஆருயிரின் அகத்துள் நின்று ஊறுவது. புறத்து யாறுபோல் இதற்கு நுரையில்லை; எவ்வகை மாசுமில்லை. ஏனைத் தெளிந்த நீர்களுக்கு அமைவதுபோன்று தோன்றுமிடம், புகுமிடம், இரண்டு பக்கங்களிலுமுள்ள இருகரை முதலிய எல்லை எதுவும் இல்லை. மேலும் சிவபெருமானின் திருவடியின்பத்தினைக் கழுமணியாருக்கு கூறுதலுமொன்று. அதற்கேற்பக் கூறுங்கால் அருளாகிய வரையிடைத் தோன்றி வாலறிவாகிய அருவியாகிச் சொல்லொண்ணுததாய் ஆருயிர் அகத்தே பெருகி இறவாத இன்ப ஊற்றெடுப்பதாகும். அதற்கு வேண்டுதல் வேண்டாமையாகிய நுரையில்லை. இருவினைக்கும் வித்தாம் இருளாகிய மாசில்லை. பேரின்ப வெள்ளமாகிய நுண்ணிய தெண்ணீர்க்கு எல்லை இல்லை என்பதாம்.

(அ. சி.) உரையில்லை - குற்றங் கூறப்படுவது இல்லை. (உ)

---

1. வானின். திருக்குறள். கக.
2. செய்யவாய்ப். அ. திருத்தசாங்கம், சு.

# 9. அறஞ்செய்வான் திறம்

107. ஆர்க்கும் இடுமின்[1] அவரிவர் என்னன்மின்
பார்த்திருந் துண்மின் பழம்பொருள் போற்றன்மின்
வேட்கை யுடையீர் விரைந்தொல்லை உண்ணன்மின்
காக்கை கரைந்துண்ணுங்[2] காலம் அறிமினே.

(ப. இ.) கேளிர், கேளல் கேளிர், கேளலார், நாடு மொழி நன்னெறி உய்ர்வு, தாழ்வு, வறுமை செல்வம், இளமை, முதுமை முதலிய எவ்வகை வேறுபாடுமின்றி உடலினுக்கு உணவும் உயிரினுக்கு உணர்வும் வேண்டினுர்க்கு ஈதல் உடையோர் கடனுகும். ஈண்டு உணவினே ஒதுகின்றனர். தக்காராய் வந்தார் யாவர்கட்கும் மிக்கவுவகையோடு இலனென்னும் எவ்வம் உரையாவகையாய்க் குறிப்பறிந்து இடுங்கள். அவர் இவர் என்று எவ்வகை வேறுபாடும் கூருதீர்கள். செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருந்து உண்ணுங்கள். உண்ணத்தக்க காய்கனி கிழங்கு விதை இலே பூ முதலியவற்றை அவ்வாறே கொண்டும், ஏனைய வற்றைத் தக்கவாறு சமைத்தும் உண்ணுதல் வேண்டும். அவ்வாறு உண்ணுங்கால் சிறுபொழுதும் நாள்களும் கழியவிட்டு அவை பழைமையாகிச் செவ்வியழிந்த பின் உண்ணுதல் தவறு. அதனுல் பழம் பொருள் போற்றன்மின் என்றனர். தமிழகத்தாருண்ணும் பழஞ்சோறு கறி முதலியன இவ்வகையைச் சார்ந்தனவல்ல அவை முறையே கழுநீர் வடிகஞ்சி வெந்நீர் சுக்கு கருவேப்பிலே முதலியன கூட்டிப் பதஞ்செய்து புதுப்பித்தலும், கறிவகைகள் பலவற்றையும் பொருந்துமாறு கூட்டி மீண்டும் அடுப்பேற்றி மருந்தென அமைத்தலும் செய்தலின் அவை உண்ணத்தக்க புதுப்பொருளேயன்றிப் பழம்பொருள்கள் அல்ல. காரணம் பற்றியோ கிட்டாமையாலோ சில பகல் கழிந்து உண்ண நேரின் மிக்க வேட்கையுண்டாவதியல்பு. அங்ஙனம் நேரினும் படபடப்பாய்க் கழிவிரைவாய் உண்ணுதல் ஆகாது. ஆர அமர இருந்து நன்ருய் மென்று உடலொடு சார்ந்து திடம் பெறுமாறு உண்க. 'நுறுங்கத் தின்ருர்க்கு அகவை நூறென்ப' என்பது பழமொழி. காக்கையானது வீட்டிலுள்ள பொருள்களேக் கவர்ந்து கள்ளமாய் உண்ணும் போது ஒரு சிறிதும் கரைவதில்லே. வீட்டிலுள்ளார் காக்கையைக் கூவியழைத்து அதற்கென வைத்த உணவினேக் கரையாது உண்பதும் இல்லே. இவ்விரு வேறு காலத்தன்மையான் ஏற்படும் நன்மை புன்மைகளே யறிந்து புன்மையை அகற்றி நன்மைக்கண் உறைத்து நின்று ஒழுகுதல் வேண்டும். இஃது ஒட்டனி. இதனுல் பெறப்படுவது: ஆருயிர் அனேத்தும் இவ்பெருமானுக்கு அடிமை. ஏனே உலகமும் உலகியற் பொருள்களும் அவன் உடைமை. அவன் திருவருள் ஒவ்வொருவரையும் பிறர்க்கு உதவி முதற்கண் அவர்களேயுயர்த்தி அதன் வாயிலாகத் தாமும் உயருமாறு அறிவால், ஆற்றலால், ஆக்கத்தால், ஆண்மையால், ஊக்கத்தால், நோக்கத்தால், சீலத்தால், கோலத்தால், காலத்தால் உயர்த்துவிக்கின்றது. இவ்வுண்மை யுணர்ந்தோர் தம்பாலுள்ளவை ஆண்டவன் அருளென்னும் மறவாத்தெருளுடன் தம்மிலிருந்து தமது பாத்து ஏனேயவற்றை ஈத்துவந்து உண்பர். ஏனேயார் களவுகொண்டார் கைப்

1. புண்ணிய. கக. பட்டினத். திருவிடை. மும்மணி கக.
2. காக்கை. திருக்குறள், இஉ.

பொருள்போல் வளமறைத்து மருள் உணர்வினராய் இருள் மனத்தராய்க் காக்கை கரையாது கவர்ந்துண்ப தொத்து உண்பர் என்பதாம்.

(அ. சி.) அவரிவர் உயர்ந்தோர், தாழ்ந்தோர், உறவினர், பகைவர், நண்பர் முதலியோர். (க)

108. தாமறி வாரண்ணல் தாள்பணி வாரவர்
தாமறி வாரறந் தாங்கிநின் றாரவர்
தாமறி வார்சிவ[1] தத்துவ ராவர்கள்
தாமறி வார்க்குத் தமர்பர[2] ஞமே.

(ப. இ.) தேவர்க்கும் மூவர்க்கும் யாவர்க்கும் தலைமையராய்த் திகழ்வதை என்றும் இயல்பாக உடைய சிவபெருமான் அண்ணல் எனப் படுவன். அவன் தாள் பணியும் பேரன்பினர்தாம் ஆருயிர் அனைத்திற்கும் துன்பந்துடைத்து இன்பியற்றி இனிதுற வாழச் செய்யும் நிலைபேரும் அறத்தினை அறிவர். அறிந்து மனமாசாம் அழுக்கா றவா வெகுளி இன்னுச் சொல் நான்கும் கடிந்து தம் தூயவுள்ளத்து அவ் வறத்தினைத் தாங்கி நிற்பர். அவர்களே சிவபெருமானின் பிறவா இறவா இயற்கைப் பேருண்மையினை இனிதினுணர்வர். அதனால் அவர் சிவத்தின் உண்மை உணர்ந்த சிவ தத்துவராவர். இவ்வுண்மைகளை அருளால் உணர்ந்தவர் களுக்கு என்றும் யாண்டும் புகலிடமாம் உரிமையுடைய தமர் சிவ பெருமானேயாவன். சிவதத்துவம்-சிவத்தின் உண்மை.

(அ. சி.) அறம் தாங்கி நின்றார் - அழுக்காறு, அவா, வெகுளி, இன்னுச் சொல் நான்கும் இல்லாதவர். (உ)

109. யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை[3]
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை[4] தானே.

(ப. இ.) எந்நிலையிலுள்ளார்க்கும் இன்பக் கூறும் சிவனை அன்புடன் பச்சிலையிட்டு வழிபடுதல் கூடும். பச்சிலையே செம்பைப் பொன்னுக்கும். அதுபோல் சிவ வழிபாடே ஆருயிரைச் சிவமாக்கும். அதுபோல் எல்லாராலும் ஆன்களுக்கு வாயுறையாகிய புல் முதலியன கொடுத்தல் இயலும். இது பொருட்கூறு ஆகும். இவ்வாயுறை கொடுப்பதன்கண் இருவேறு தொண்டுகள் அடங்கியுள்ளன. ஒன்று நந்தன வனத்துக்குக் கூனையெடுத்தல். மற்றொன்று பசுவினுக்குப் புற்கொடுத்தல். அதுபோல் யாவர்களாலும் உண்ணும்போது ஒரு கைப்பிடி யுணவு உவகையுடன்

---

1. (பாடம்) வார்சில.
2. அரியவற்று. திருக்குறள், சசஉ.
3. நின்போ. அப்பர், ச. சஉ - ச0.
,, பேதும். சக. பட்டினத்தார், திருக்கழு - சஉ.
4. இன்சொலால். திருக்குறள், கக.
,, அல்லவை. ,, கக.

பிறர்க்குக் கொடுத்தல் இனிதின் இயலும். இஃது அறத்தின் கூறாகும். 'இரப்பவர்க்கு ஈயவைத்தார், ஈபவர்க்கு அருளும் வைத்தார்' என்பதனால் மேலது வீளங்கும். அனைவர்க்கும் எல்லா இடத்தும் எல்லாக் காலத்தும் எல்லாருடனும் உயிர் தளிர்ப்ப, உணர்வு திருவடியில் மூழ்கிக் குளிர்ப்பச் சொல்லாலும் பொருளாலும் இனிமை பயப்பதாய் அது போல் கேள்வியினும் வினையினும் இனியதாய் உள்ள நன்மொழிகளை ஆராய்ந்து பார்த்துக் கூறும் இன்னுரை இயலும் என்க. இது வீட்டின் கூறாகும். பச்சிலையின் மாண்பு 'வில்லமறுகுக் கொவ்வா மெல்மலர்கள்' என்னும் பிற்காலச் சான்றோர் மொழியாலும் உணர்க. (கூ)

110. அற்றுநின் றுருண்ணும் ஊணே அறனென்னுங்
கற்றன போதங் கமழ்பவர் மானிடர்
உற்றுநின் றுங்கொரு கூவற் குளத்தினிற்
பற்றிவந் துண்ணும் பயன்அறி யாரே.

(ப. இ.) பற்றற்றான் பற்றினைப் பற்றிப் பற்றுவிட்ட பண்பாளராம் தவத்தோர் உண்ணும் ஊணே அறப்பாங்காகும் என்று தமிழ்மறை மொழியும், திருவடியுணர்வைத் திருவருளால் பெற்றுச் சிவ வழிபாடு திருவைந்தெழுத்தாற் செய்யக் கற்பனவே கற்றனவாம். அவற்றால் விளைவனவே போதம். போதம் என்றாலும் சிவஞானம் என்றாலும் ஒன்றே. உணர்விற் கலந்து அகத்து வெளிப்படும் அப் போதம் புறத்துச் சிவமணமாகக் கமழும். அங்ஙனங் கமழும் அருள் திருமேனியுடையார் சிவஞானத்தேன் நிறைந்த கூவலினையும் குளத்தினையும் ஒப்பர். பிறப் பற்றுச் சிறப்புற்று வாழும் பேரின்பத் தோட்டமுடையார் அம் மெய்யடியாரைச் சார்ந்து உய்தல் வேண்டும். அங்ஙனம் அறியாவிட்டால் அவர் பிறவிப்பயன் அறியாப் பெரும்பேதையராவர். நீர் வேட்கை மிக்கார் அண்மையில் கூவல் குளங்களிருந்தும் அதன்பாற் சென்று இன்னீர் பருகி வேட்கை தணிந்து இன்புறுது, பயனறியாது வாளா இருந்து துன்புறுவாரன்றே? அத்துன்புறுவாரே இவர்கட்கு ஒப்பு ஆவர்.

(அ. சி.) அற்று ஒன்றூர் - பற்று அற்று நின்றூர். (சு)

111. அழுக்கினை ஓட்டி அறிவை நிறையீர்
தழுக்கிய நாளில் தருமமுஞ் செய்யீர்
விழித்திருந் தென்செய்வீர் வெம்மை பரந்து
இழிக்கவன் றென்செய்வீர் ஏழைநெஞ் சீரே.

(ப. இ.) திருவருளால் ஆணவ அழுக்கினை அகற்றித் திருவடியுணர்வை நும் உணர்வில் நிறைத்துக் கொள்ளீர். சிறப்பாகத் தழுவப்பட்ட நன்னாட்களில் செய்யத் தகும் சிவ புண்ணியங்களையும் செம்மையுறச் செய்யீர். அப் புண்ணியம் செய்யாமையான் உலகியலில் விழித்திருந்தும் அருளியலில் ஏமாந்தவராகின்றீர். அதனால் நீர் என் செய்வீர். நீரும் நும் பாவக் கொடுவினை மிகுந்து துன்புறுவீர். அக்காலத்து அத்துன்பத்திருந்து என் செய்வீர். அன்பும் அறிவுமில்லாத ஏழை நெஞ்சுடையீர். தழுக்கிய: தழுவிய என்பதன் திரிபு. இழிக்க - துன்புற,

(அ. சி.) தழுக்கிய நாள் - கல்வி, செல்வம், இளமை ஆகியவை கூடி இருக்கும்போது. வெம்மை - சாக்காடு. (கி)

112. தன்னை அறியாது தான்நல்ல ரென்னுதிங்[1]
கின்மை யறியா தினையரென் றேராது[2]
வன்மையில் வந்திடுங் கூற்றம்[3] வரு முன்னந்
தன்மையின் நல்ல தவஞ்செய்யும் நீரே.

(ப. இ.) காலமுடிவில் தவறாது கூற்றுவன் வருவன்; அவனை யாரும் அறிந்துகொள்ளுதல் முடியாது. வருகின்ற அவன் கொண்டு போகப் படுபவர் இருவினைப் பாங்காம் நல்லாரா? அல்லது பொல்லாரா? என்றும் நாடான்; மேலும் அக் குடும்பம் வறுமையால் வாடும் குடும்பமே என்றும் நினையான். ஆண்டில் மிகவும் இளைஞரே எனவும் வேண்டான். எவரும் மாற்ற முடியாதபடி மிக்க வன்மையுடன் வருவன். அக் கூற்றுவன் வருமுன் நீங்கள் சீல முதலியவற்றிற் பயிலும் தன்மை பெற்று அதனால் நற்றவஞ் செய்யுங்கள். (சு)

113. துறந்தான் வழிமுதற் சுற்றமும் இல்லை
இறந்தான் வழிமுதல் இன்பமும் இல்லை
மறந்தான் வழிமுதல் வந்திலன் ஈசன்
அறந்தான் அறியும் அளவறி வாரே.

(ப. இ.) பற்றற்ற பண்பினராம் துறந்தார்க்கு 'யாதும் ஊரே யாவரும் கேளிர்.' ஆதலால் தனிப்பட்ட வழிமுதற் சுற்றம் என்பது ஒன்றில்லை. சுட்டுணர்வும் சிற்றுணர்வுமாகிய உலகியல் தன்மையும் உயிர்த்தன்மையும் 'நாமங்கெடக் கெடுநோய்' என்பது போன்று திருவடியுணர்வான் முற்றுங் கடந்தவன் உலகியலில் இறந்தவனவன். அவன் முற்றுணர்வு கைவந்துற்றவனதலால் அவன் திருவடிப் பேரின்பம் ஒருவாது நுகரும் அருந்தவன். அவன்பால் நிலையா உலகியற் சிற்றின்பம் இல்லை என்பதாம். சிவனை மறந்தார்பால் அச் சிவனும் வந்திடான். அறத்தின் பகுதியில் அறிய வேண்டிய எல்லையைக் கூடச் சிவனை மறந்தார் அறியார். அறிவாரே: ஏகாரம் எதிர்மறை; அறியார் என்பது பொருள்.

(அ. கீ.) இறந்தான்-உலகில் செத்தாரைப் போலத் திரிகின்றவன். அஃதாவது, உலகை மறந்து சிவனை நினைந்தவன். மறந்தான்-ஈதலை மறந்தவன். (எ)

114. தான்தவஞ் செய்வதாஞ் செய்தவத் தவ்வழி
மான்தெய்வ மாக மதிக்கும் மனிதர்கள்
ஊன்தெய்வ மாக உயிர்க்கின்ற பல்லுயிர்
நான்தெய்வம் என்று நமன்வரு வானே.[4]

(ப. இ.) திருவடியுணர்வு கைவந்த சிவமாந்தன்மை பெற்ற சிவஞானிகள் பராவுசிவனர் எனப்படுவர். அந்த நல்லாரை மதித்து அறவழி

1. (பாடம்) தானல்லா, தானல என்னுதிங்.
2. காலபாசம். அப்பர், இ. அசு-க.
3. கூற்றம். ,, ,, ,, சு.
4. அந்தணனுன். ஆரூரர், எ. திடு-க.

யில் நிற்கும் மாந்தர்கள்தாம் தவம் செய்யும் மாந்தராவர். அத்தகையோர் சிவஞானிகளேயே சிவமென வழிபடுவர். ஏனையோர் யான் எனது என்னும் செருக்கால் தம் உடம்பினையே தெய்வமென மடம்பட்டு ஏனைய உயிர்போல் மூச்சுவிடுதல் ஒன்றே பற்றி உயிர்க்கின்றவராவர். அவ் வுயிர்கட்கு நமன் வருங்கால் 'இவன் மற்றென்னடியா னென்று' கூறும் சிவன் வெளிப்படாமையால் அந் நமனே தெய்வமாவன். (ஆக்கைக்கே இரைதேடி அலமந்து அறஞ் செய்யாது கழியும் அறிவிலார்க்கு மாற்றரிய கூற்றுவன் தெய்வம் எனத் தோற்றுவன்.)

(அ. சி.) ஊன் தெய்வமாக - தேகத்தையே பெரிதாக எண்ணிக் காலங் கழிப்பவர். (அ)

115. தீனைக்கும் வினைக்கடல் தீர்வுறு தோணி[1]
இளைப்பினை நீக்கும் இருவழி உண்டு
கினைக்குந் தனக்கும்அக் கேடில் புகழோன்
விளைக்குந் தவம்அறம் மேற்றுணை யாமே.

(ப. இ.) ஒருவன் அறஞ்செய்யின் தனக்கும் தன் வழியினுள்ளார்க்கும் அழியாத பழியில் புகழ் நிறுவியவனுவன். அவ்வறம் மேற் சிவனடி கூடுதற்கு வாயிலாம் சீலம் நோன்பு செறிவு அறிவு என்னும் நற்றவம் புரிதற்குத் துணையுமாகும். வினையான் வரும் பிறவிக் கடலுள் அழுந்தும் ஆருயிர்கள் கரைசேரப் பற்றும் புணை இறைவன் அடித் தோணியே. அதுவே உயிர்களின் இளைப்பினை நீக்குவதாகும். அத் தோணியினைப் பெறுவிக்கும் வாயில் தவமும் அறமுமேயாம்.

(அ. சி.) தினைக்.....யாமே - தவம், அறம் இரண்டுமே வினைக்கடல் கடக்க உயர்ந்த தோணிகள் போன்றன. (கூ)

116. பற்றது வாய்நின்ற பற்றினைப் பார்மிசை
அற்றம் உரையான் அறநெறிக் கல்லது
உறறுங்க ளால்ஒன்றும் ஈந்தது வேதுணை
மற்றண்ணல் வைத்த வழிகோள்ளு மாறே.

(ப. இ.) அனைத்துயிர்க்கும் பற்றுக்கோடாக நின்றருளும் சிவபெருமானைப் பற்றிய மெய்யன்பர் நிலமிசை யார்மாட்டும் எவ்வகையான குற்றமும் புகலார். அறநெறியல்லாமல் பிறநெறியிற் செல்லார். பிறநெறி - பாவநெறி. அறவழியில் ஈட்டிய பொருளை அறவோர்க்கு மனமுவந்து உங்களால் கொடுக்கப்படுவது ஒன்றுமே உங்கட்கு வழித் துணையாகும். அம்மட்டோ? சிவபெருமான் தன் திருவடியைச் சேருமாறு வகுத்தருளிய நேர் வாயிலாகிய நன்னெறியினையும் நண்ணுவிக்கும். இதுவே நல்வழியினைக் கைக் கொள்ளும் வழியாகும். பற்றினை - பற்றப் படும் மெய்ப்பொருளாகிய சிவபெருமானை.

(அ. சி.) பற்றது...பற்று-பொருள். அண்ணல்...வழி-சன்மார்க்கம். (கட)

---

1. துன்பக் கடலிடைத். அப்பர், ச-கூ-சு.

# 10. அறஞ்செயான் திறம்

117. எட்டி பழுத்த இருகனி வீழ்ந்தன
ஒட்டிய நல்லறஞ் செய்பா தவர்செல்வம்
வட்டிகொண் டீட்டியே மண்ணின் முகந்திடும்
பட்டிப் பதகர் பயன்அறி யாரே.

(ப. இ.) 'நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள், நச்சு மரம்பழுத் தற்று' என்பராகலின், எட்டிமரங்கள் பழுத்துப் பெரும் பெரும் பழங்கள் வீழ்ந்தன. ஆனுல் அஃது பயன்படாமையினுல் ஒருவராலும் தொடப் படுவதில்லே. அதுபோல் நல்லறஞ் செய்யாதார் செல்வமும் ஒருவர்க்கும் பயன்படுவதின்று. பொன்னுசையினுல் கடும் வட்டி வாங்கி மிகுபொருள் ஈட்டியதோடமையாது வஞ்சனையால் பிறர்பொருள் கவரும் பாதகர், தாம் செய்யவேண்டிய அறத்தினேயு முணரார்; தவிர வேண்டிய பாவத்தையு முணரார்; அவற்றினுன் விளேயும் பயனேயும் அறியார். பாதகர் என்பது பதகர் எனக் குறுகி நின்றது

(அ. சி.) இருங்கனி - பெரும்பழம். ஒட்டிய - தானே நேர்ந்த. மண்ணின் முகந்திடும் - எட்டிப்பழம்போல் பயனின்றிக் கெடும். பட்டி - வஞ்சனே. பதகர் - பாதகர். (க)

118. ஒழிந்தன காலங்கள் ஊழியும் போயின
கழிந்தன கற்பனே நாளுங் குறுகிப்
பிழிந்தன போலத்தம் பேரிடர் ஆக்கை
அழிந்தன கண்டும் அறம்அறி யாரே.

(ப. இ.) நாழிகை, சிறுபொழுது, நாள், திங்கள், பெரும்பொழுது ஆண்டு முதலியவாகக் கணக்கிடப்படும் காலங்கள் பல நீங்கின. உலக முடிவாம் ஊழிகளும் பலவாயின என்ப. 'ஒருபொழுதும் வாழ்வதறியார் கருதுப. கோடியு மல்ல பல' என்பதுபோல அளவின்றி எண்ணிய வீண் எண்ணங்களும் அகன்றன. வரையறுத்த நாளும் நெருங்கி அது காரண மாகச் சாறு பிழிந்த நறுவிய கனி கரும்பு முதலியவற்றின் சக்கை போன்று யாக்கையும் பயனற்று அழிந்தன. இங்ஙனம் நிகழ்வன பலவும் கண்டும் அறம் செய்யவேண்டு மென்னும் அரும்பெரும் திறமறியா மாந்தர் பலராவர்.

(அ. சி.) கற்பனே - வீண் எண்ணங்கள். பிழிந்.....அழிந்தன - இரசம் பிழியப்பட்ட கனிபோல் சத்துக் கெட்ட யாக்கை. (உ)

119. அறம்அறி யார்அண்ணல் பாதம் நினேயுந்
திறம்அறி யார்சிவ லோக நகர்க்குப்
புறம்அறி யார்பலர் போய்ம்மோழி கேட்டு
மறம்அறி வார்பகை[1] மன்னிநின் றாரே.

---

1. (பாடம்) வார்வகை.
எனேப்பகை. திருக்குறள். உ0எ.

(ப. இ.) மறை வழியாம் உலகியல் அறம் அறியார் அண்ணலாகிய சிவபெருமானின் திருவடியினை ஆராக் காதலுடன் நினையும் நீராத் திற மறியார். அறம் அறியார் என்பது அறத்தினைக் கருதவோ கூறவோ ஒருப்படார் என்பதாம். சிவவுலகமாகிய நிலையினையும் அறியார். இதற்குப் புறமாகிய வழிப்பேறும் பதமுத்திகளையும் அறியார். பற்பல நெறியினர் மருளாற் கூறும் பொய்ம்மொழி கேட்டு மறமாகிய பாவ வழியில் ஒழுகு வார். அவர்க்கு வினைப்பகையும் அதன் விளைவாம் பிறவியும் எல்லையின்றி நிலைபெற்றுண்டாம்.

(அ. சி.) சிவலோகம்-புதன் அண்டம். புறம்-இதர பத முத்திகள். மறம்-துன்மார்க்கம். வகை - பிறப்பு இறப்பு. (கூ)

**120.** இருமலும் சோகையும் ஈளையும்[1] வெப்புந்
தருமஞ்செய் யாதவர் தம்பால தாகும்
உருமிடி நாக முரோணி கழலை
தருமஞ்செய் வார்பக்கல் தாழகி லாவே.

(ப. இ.) நீங்காத் துன்பத்தினைத் தரும் குத்திருமலும், குருதிக் குறைவாம் சோகையும், கோழையும், உடம்பெலாம் கொதிக்கும் உட்சூடும் இவை போன்ற பிறவும் நிலைபெற்ற நல்லறஞ் செய்யார்பால் நிகழ்வன. அச்சத்தைத் தரும் இடியும் கொடுநஞ்சுடைய நாகப்பாம்பும், உரோணியென்னும் தொண்டை நோயும், பிளவைக் கட்டி முதலிய நோய்களும் நல்லறஞ் செய்வார்பால் வந்து சாரமாட்டா.

(அ. சி.) சோகை - இரத்தமின்மை. ஈளை - கோழை. வெப்பு - உட்சூரம். (சு)

**121.** பரவப் படுவான் பரமனே ஏத்தார்
இரவலர்க் கீத்தலை யாயினும் ஈயார்[2]
கரகத்தால் நீரட்டிக்[3] காவை வளர்க்கார்
நரகத்தில் நிற்றிரோ நன்னெஞ்சி[4] னீரே.

(ப. இ.) மண்ணவர் விண்ணவர் முத்தேவர் முதலிய யாவர்களாலும் தொழப்படுவான் சிவபெருமான் ஒருவனே. அச் சிவபெருமானைப் பாடிப் பரவிப் பணியவும் மாட்டார். அற்றூராய் உற்று இரந்தவர்க்கு ஈயின் தலையளவு சிறுபொருளைக்கூட ஈயவும் செய்யார். நீர்க்குட மூதலியவற்றுள் நீர்முகந்து எல்லார்க்கும் நல்ல பல பயன் தரும் சோலைகளை வளர்க்கார். அத்தகையோர் பெறும்பயன் யாதெனின் இருளுலகத் துன்பமேயாம். நெஞ்சினீரே நீரும் இவ்வகை நல்லறம் புரியாது நரகத்

1. கேளு மின்னிளை. அப்பர், தி. ஏ0 - தி
2. முந்திச் செய்வினை. ஆரூரர், எ. சு0 - சு.
,, தாழ்வெனுந். ,, ,, அ - எ.
3. (பாடம்) கரகத்தே நீராடிக்.
,, காவளர்த்துப். சே. திருநாவுக்கரசர், நஉ.
4. (பாடம்) நாள்எஞ்சி.

திடை நிற்றிரோ ? நாள் எஞ்சினீரே என்பதற்கு நல்லறம் புரியாது நாளை வீணாக்கிச் சாவை நெருங்கினீரே என்க. (இ)

122. வழிநடப் பாரின்றி வானேர் உலகங்
கழிநடப் பார்நடந் தார்கரும் பாரும்
மழிநடக் கும்வினை மாசற வோட்டிட்டு
ஒழிநடப் பார்வினை ஓங்கிநின் றாரே.

(ப. இ.) அறவழியில் நடவாதார் வானேர் ஒளியுலகினை எய்தார். முறை கடந்து அரும்பாவம் புரியும் கழிநடப்பார் இருளுலகஞ் சென்று துன்புற்றுக் கழிவர். கரும்பார் - கரியவுலகம்; இருளுலகம். அழிவினை உண்டாக்கும் வினையினையும் அதற்குக் காரணமான மலமாசினையும் அருளால் அறவே ஓட்டிட்டுத், தீமைகள் முற்றும் ஒழிந்த நன்னெறியின் ஒழுகுவார் ஒழி நடப்பார் எனப்படுவார், நல்வினையாகிய அறச் செயலான் மேம்பட்டு நின்றார் என்க. மழி: முதனிலைத் தொழிற்பெயர்; அழித்தல். ஒழி நடப்பார்: தீமையொழித்து நல்வழியில் நடப்பார்.

(அ. சி.) கழிநடப்பார் - வரம்பிகந்து நடப்பவர். கரும்பார்-நர்கம். ஒழிநடப்பார் - சன்மார்க்கர். (ஈ)

123. கனிந்தவர் ஈசன் கழலடி காண்பர்
துணிந்தவர் ஈசன் துறக்கம தாள்வர்
மலிந்தவர் மாளுந் துணையுமொன் றின்றி
மெலிந்த சினத்தினுள் வீழ்ந்தொழிந் தாரே.

(ப. இ.) உள்ளமுருகி ஈர நெஞ்சினராய் இரப்பவர்க்கு ஈயும் தாயினையார் சிவபெருமானின் திருவடியினைத் திருவருளால் அறிவுறக் காண்பர். திருவடியுணர்வு கைவந்த சிவனடியார்களைச் சிவனெனவே துணிந்து வழிபடுவோர் சிவவுலகினையடைவர். இவறன்மையுடையராய்ப் பொருட்பற்று மிக்கவர் நல்லறஞ்செய்யாமையால் வழித்துணை ஏதுமின்றி மாள்வர். சினத்தைப் பொருளென்று கொண்டு அச் சினத்தின்கண் மிக்குத் தீமை புரிந்தோர் துன்புற்று இருளுலகினில் வீழ்ந்தொழிந்தனர்.

(அ. சி.) கனிந்தவர் - ஈர நெஞ்சுடன் அறம் செய்தவர். துணிந்தவர் - துறந்தவர். மலிந்தவர் - ஆசை உள்ளவர். (எ)

124. இன்பம் இடரென் றிரண்டுற வைத்தது[1]
முன்பவர் செய்கையி னலே முடிந்தது
இன்பம் அதுகண்டும் ஈகிலாப் பேதைகள்
அன்பிலார் சிந்தை அறம்அறி யாரே.

(ப. இ.) ஆருயிர்கட்கு இன்பத் துன்பங்களென இருவேறு வகைப்பட இறைவன் அமைத்தது அவ்வுயிர்கள் முன்பு செய்த நல்வினை

1. மறைக. சிவஞான சித்தியார், உ - உ - உஎ.
" இதமகி " " " - கo.

தீவினைகளாலுகும். முன் செய்த நல்வினைப் பேற்றால் சிலவுயிர்கள் ஈண்டு இன்புறுதலைக் கண்டிருந்தும் சில அறிவிலாப் பேதைகள் அறத்தின் சிறப்பறியாராய் அதனால் தம் உள்ளத்தின்கண் பள்ளத்தை தோக்கிச் செல்லும் வெள்ளமனைய அன்பிலராய்க் கழிகின்றனர். (அ)

125. கெடுவது மாவதுங் கேடில் புகழோன்
நடுவல்ல செய்தின்ப நாடவும் ஓட்டான்
இடுவதும் ஈவதும் எண்ணுமின் இன்பம்
படுவது செய்யிற் பசுவது வாமே.

(ப. இ.) ஆவதும் அழிவதும் அவன் செயல் என்ப. அம்முறையால் என்றும் பொன்ற இரும்புகழையுடையவன் சிவபெருமான். அவன் அவரவர் வினைக்கீடாக ஆவதும் அழிவதும் செய்வன். அறமுறை நில்லாததுடன் கொடுமைகளே வடுவென்றும் பாராது வந்தவாறு செய்த ஒருவர்க்கு இன்பத்தினை எண்ணுவதற்கும் இடங்கொடான். அதனால் ஊணும் உடையும் பிறவும் முறையே வேண்டுவார்க்கு இடுவதும் ஈவதும் எண்ணுமின். அதுவே இன்பம். இன்பம் படுவது இன்பம் அழிவது. எனவே இன்பங் கெடவரும் துன்ப வினைகளை இயற்றினால் அவர்கள் மக்கட் பிறப்பினின்றும் தாழ்ந்து மாக்களாய், அவற்றினும் தாழ்ந்து மாவாய்ப் போவர். மா என்பது விலங்கு. அவ் விலங்கினுள்ளும் வீட்டினும் நாட்டினும் வாழும் நல்விலங்கன்றிக் காட்டில் வாழும் கொல்விலங்காய்க் கருதப்படுவர். அதுவே ஈண்டுப் பசுவதுவாமே என்று ஓதப்பட்டது.

(அ. சி.) இடுவது - அன்னம் இடுவது. இன்பம் படுவது - துன்பம் தருவது. (கூ)

126. செல்வங் கருதிச் சிலர்பலர் வாழ்வெனும்
புல்லறி வாளரைப்[1] போற்றிப் புலராமல்
இல்லங் கருதி இறைவனை ஏத்துமின்[2]
வில்லி இலக்கெய்த விற்குறி யாமே.

(ப. இ.) நிலையா வாழ்வெனும் இவ்வுலக வாழ்வின் உண்மையை அறியாமை மட்டுமல்லாமல் நிலைக்குமென்று மாறுபடக் கொள்வோர் புல்லறிவாளராவர். அத்தகையோர் சிலரையேனும் பலரையேனும் கேடுறு செல்வங் கருதிப் பாடிப் பரவிப் பணிந்து போற்றி வாடுறுதல் வேண்டா. புக்கில்லாகிய வீடுபேற்றினைக் கருதி முழுமுதற் சிவனைத் தொழுங்கள். தொழுதால் இம்மை உம்மை அம்மை என்னும் முத்திறச் செல்வமும் முறையாகக் கைகூடும். அதற்கு ஒப்பு சிறந்த வில்லேருழவனுடைய வில்லி (வேடன்) எய்த விற்குறி தப்பாமல் கைகூடியதென்ப.

(அ. சி.) புலராமல் - வருந்தாமல். இல்லங் கருதி - முத்தி கருதி. (கo)

---

1. நில்லாத. திருக்குறள், கூகக.
2. தம்மையே. ஆரூரர், எ. கூசு - க.

# 11. அவையடக்கம்

127. ஆரறி வார்எங்கள் அண்ணல் பெருமையை
ஆரறி வார்இந்த அகலமும் நீளமும்
பேரறி யாத பெருஞ்சுடர் ஒன்றதின்
வேரறி யாமை விளம்புகின் றேனே.[1]

(ப. இ.) ஒரு பொருளின் பெருமையைக் கூறுவார் அப் பொருளின் தன்மைகளை முற்றும் ஆராயும் அறிவு ஆற்றல் ஆண்மை முதலிய வற்றுள் மிக்காராய் ஒழுக்கம் வாய்மை தூய்மை முதலியவற்றில் தக்காராய்க் கடவுள்நாட்டம் கைக்கொண்டொழுகும் சான்றோராயுள்ள உயர்ந்தாராவர். அனைத்துலகினுக்கும் அனைத்துயிர்கட்கும் முதன்மைக் காரணராயுள்ள முழுமுதற் சிவன் அண்ணல் எனப்படுவன். அவற்கு உயர்ந்தாரும் ஒத்தாரும் எவருமிலர். யாண்டும் தாழ்ந்தாரே உளர். கடல்நீர் முற்றும் கொள்ளத்தக்க பாசனம் - கலம் ஒன்றிருந்தாலன்றி அந்நீரின் பெருமையை அளத்தல் ஒண்ணுது. கடல்நீர் மூன்று மடங்கு பெரியது உலகத்தைவிட என உலகியலுணர்ந்தாருரைப்பர். ஆயின், அதனை அளக்கும் கருவி உலகத்தில் ஏதும் இன்று என்பது துணிபு, கடலுள்வாழ் உயிர்களும் மேற்செல்லும் கலன்களும் அக் கடலின் ஒரு புடை யடங்குவனவே. அதுபோல் ஆண்டவன் பெருநிறை வினைஞதலின் எல்லாம் அவன்கண் அடங்குவனவே. ஆதலால் எங்கள் அண்ணல் பெருமையை யாரறிவார் என்றனர். ஒன்றின் பெருமையை அளந்தறிய உளங்கொள்வார் அதன் அகலம், நீளம், ஆழம், உயரம் முதலிய வற்றை யன்றே அளப்பர். அங்ஙனம் அளப்பின் அப்பொருள் ஓர் எல்லையில் அடங்கும். சிவபெருமான் 'மறையினுல் அயனுல் மாலால் மனத்தினுல், வாக்கால் மற்றும், குறைவிலா அளவினுலும் கூற' வொண்ணுதவனுகலின் எல்லையிலான் எனப்பட்டான். ஆதலால் அவனது அகலமும் நீளமும் அறிவார் ஒருவரு மிலர். உலகத்தையும் உயிர்களையும் விட்டு நீங்காத ஒட்டியுறைகின்ற செம்பொருட் பெருஞ்சுடர் சிவன். அவன் ஒருவனுகிய ஒப்பில்லாதவனுய் இருக்கின்றுன். அவனது வேராகிய அடிநிலைத் தன்மையைக் கூட அறிய முடியாத யான் அருள் உணர்த்தக் கடல்நீர் கொண்ட கலம்போல் உணர்த்துகின்றேன். பேரறியாத - பெயர்ந்தறியாத. அடிநிலைத் தன்மை: சிவனே உள் நின்று செய்தும் செய்வித்தும் வருகின்ற ஆதிகாரணத் தன்மை. அதனை அவனருளால் உணர்வதன்றிச் சோதித்தல் வேண்டா என்பதனை வருந்திருமுறையான் உணர்க: கலம் - கொள்கலம், மரக்கலம்.

'ஏதுக்க ளாலு மெடுத்த மொழியாலு மிக்குச்
சோதிக்க வேண்டா சுடர்விட்டுள னெங்கள் சோதி
மாதுக்க நீங்க லுறுவீர் மனம்பற்றி வாழ்மின்
சாதுக்கண் மிக்கீ ரிறையே வந்து சார்மின்களே.'

(சம்பந்தர், கூ. இசை - இ)
(க)

---

1 மறையினுல். சிவஞான சித்தியார், அவையடக்கம் - ச.

**128.** பாடவல் லார்நெறி பாட அறிகிலேன்
ஆடவல் லார்நெறி ஆட அறிகிலேன்
நாடவல் லார்நெறி நாட அறிகிலேன்
தேடவல் லார்நெறி தேடகில் லேனே.

(ப. இ.) பாடப்படுதற்குச் சிறந்தாராகிய அம்மையப்பரைப் பாடிப் பணியுநெறி நன்னெறியாகும். அந் நெறிமுறையான் பாடும் அறிவாற்றல் இல்லேன். அதுபோல் வழிபடப்படுதற்குரிய சிவனே வழிபடுதற்கும் அறியேன். அவ்வழிபாட்டின்பின் அச் சிவனே எண்ணத்தின்கண் நாடுமுறைமையும் அறியேன். வேட்கை மிகவினுல் உணர்வின்கண் உணர்தலாகிய நிலைமை தேட்டம். தேடப்படுதற்குரிய பெருமையுடையானும் சிவனே. அவனே அம் முறையால் தேடவும் அறியேன். இத் திருமறையின்கண் குறிக்கப்படும் பாடல் ஆடல் நாடல் தேடல் என்னும் நான்கும் முறையே சீலம் நோன்பு செறிவு அறிவு என்னும் நன்னெறி நான்மைத் திருத்தொண்டின் குறிப்பாகும்.

இந்நான்மையினைக் குறிக்கும் திருமுறை வருமாறு:

'சீல மின்றி நோன்பின்றிச் செறிவே இன்றி அறிவின்றித்
தோலின் பாவைக் கூத்தாட்டாய்ச் சுழன்று விழுந்து கிடப்பேனை
மாலுங் காட்டி வழிகாட்டி வாரா உலக நெறியேறக்
கோலங் காட்டி ஆண்டானைக் கொடியேன் என்றே கூடுவதே'.

(அ. ஆனந்தமாலை, கூ)

இந்நானெறித் தொண்டினை ஒருபுடை ஒப்பாக வைத்துப் பயிற்றுவித்த பண்பினைக் குறிக்கும் திருமுறை வருமாறு:

'நல்ல நந்தன வனப்பணி செய்பவர் நறுந்துணர் மலர்கொய்வோர்
பல்ப ணித்தொடை புனைபவர் கொணர்திரு மஞ்சனப் பணிக்குள்ளோர்
அல்லு நன்பக லுந்திரு வலகிட்டுத் திருமெழுக் கமைப்போர்கள்
எல்லி யில்விளக் கெரிப்பவர் திருமுறை எழுதுவோர் வாசிப்போர்,

(கஉ, கணநாதர், கூ)

இதன்கண் திருமெழுக்கு அமைத்தல் ஈருகச் சொல்லப்படும் ஐம்பெரும் தொண்டும் சீலமாகும். விளக்கெரித்தல் நோன்பாகும். திருமுறை எழுதுதல் செறிவாகும். திருமுறை வாசித்தல் அறிவாகும். இவ்வெண் பெருந்தொண்டினுலும் சிவபெருமானின் எண் பெருங்குணமும் எளிதின் எய்தும். (உ)

# உ. தற்சிறப்புப் பாயிரம்

## 1. குரு பரம்பரை

**129.** நந்தி அருள்பெற்ற நாதரை நாடிடின்
நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி
மன்று தொழுத பதஞ்சலி வியாக்ரமர்
என்றிவர் என்னே டெண்மரு மாமே.

(ப. இ.) நந்தியெம் பெருமான்பால் அவர்தம் திருவருட்டுணையால் பொருள்மறை கேட்டுப் போற்றி யொழுகும் மெய்கண்டார் நால்வராவர். மெய்கண்டார் - மாணவர். அவர் சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் என்ப. சிவயோக மாமுனிவர். பதஞ்சலியார் எனப்படும் பாம்புக்கால் முனிவர், வியாக்கிரபாதர் எனப்படும் புலிக்கால் முனிவர் ஆகிய மூவர். தன்னெடுங் கூட்டி எண்மர் என்றனர். நாதர் - செந்நெறி முதல்வர்; சித்தாந்த ஆசிரியர்.

(அ. சி.) நந்திகள் நால்வர் - சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர். மன்று தொழுத பதஞ்சலி - தில்லையில் நடம் கண்ட பதஞ்சலி முனிவர். (க)

**130.** நந்தி அருளாலே நாதனும் பேர்பெற்றோம்
நந்தி அருளாலே மூலனை[1] நாடினோம்
நந்தி அருளாவ தென்செய்யும் நாட்டினில்
நந்தி வழிகாட்ட நானிருந் தேனே.[2]

(ப. இ.) தன்னை முழுமுதற்சிவனும் தலைவற்கு அடிமையாக ஒப்பு வித்தவர் அத் திருவருளால் நாதன் எனப்படுவர். அச் சிறப்புப் பெயரே பெயராக அழைக்கவும் படுவர் அந் நந்தியின் அருளாலே ஆ மேய்க்கும் மூலன் திருவுருவின்கண் புகுந்தேன். நந்தி அருளாவது நாட்டினில் என் செயுமெனின் ? நந்தி வழிகாட்டவே நானிருந்து முந்திய தொண்டெலாம் முயல்கின்றேன். நந்தி - ஆலமர் செல்வன். வழிகாட்ட - சித்தாந்த நெறி காட்ட. அடிமையாயினர்க்கு நந்தியருள் எல்லாம் இனிதினியற்றும் என்க.

(அ. சி.) நந்தி.....நாடினேன் - நந்தியம்பெருமான் திருவருள் இறந்த மூலனுடைய தேகத்தில் புகுந்தேன். (உ)

**131.** நால்வரும் நாலு திசைக்கொன்று நாதர்கள்
நால்வரும் நாலு விதப்பொருள் கைக்கொண்டு
நால்வரும் நான்பெற்ற தெல்லாம் பெறுகென
நால்வருந் தேவராய்[3] நாதரா னார்களே.

---

1. அந்தணர்தஞ். கஉ. திருமூலர், கக.
2. விளம்பிய. சிவஞான போதம், இ.
3. சம்பு. கஉ. திருமூலர் சிறப்பு, கக.

(ப. இ.) நந்தியருள் பெற்ற நால்வரும் நாற்புலத்து முள்ளார் உய்தற் பொருட்டு ஆங்காங்குப் பொருந்திய தலிவரானுர்கள். அத் நால்வரும் பல்வேறு வகையான திருவருட் பொருளைக் கைக்கொண்டு அவர்கள் தாம் பெற்றதெலாம் இவ்வுலகம் பெறுக என, அந் நால்வரும் செம்பொருட் சிவத்தை அகந்தமுவியவராய் அதனுல் சிவமானவராய்ச் சித்தாந்த முதல்வரானுர்கள். (கூ)

132. மந்திரம் பெற்ற வழிமுறை மாலாங்கன்
இந்திரன் சோமன் பிரமன் உருத்திரன்
கந்துருக் காலாங்கி கஞ்ச மலியனுேடு
இந்த எழுவரும் என்வழி யாமே.

(ப. இ.) திருவாவடுதுறையின்கண் திருமூல நாயனருடன் இத் திருமந்திர நூலைக் கற்று மாணவர்களாக வீற்றிருந்த நற்றவமுனிவர்கள் எழுவராவர். அவர்கள் கந்துருவனிய நந்தா நிலையினர். அவர்கள் திருப் பெயர் வருமாறு : மாலாங்க முனிவர், இந்திர முனிவர், சோமமுனிவர், பிரமமுனிவர், உருத்திர முனிவர். காலாக்கினி முனிவர், கஞ்சமலிய முனிவர் என்ப. இம் முனிவர்கள் எழுவர்களும் தம் வழி வந்தவர்க ளென இதன்கண் திருமூல நாயனர் அருளுகின்றனர். இஃது அகச் சான்முகும்.

(அ. கி.) மாலங்.....மலியன் - திருமூலருடைய ஏழு மாணவர்கள். ஆவடுதுறையில் உடனிருந்தவர்கள். (சு)

133. மொழிந்தது மூவர்க்கும் நால்வர்க்கும் ஈசன்
ஒழிந்த பெருமை இறப்பும் பிறப்புஞ்
செழுஞ்சுடர் மூன்றெளி யாகிய தேவன்
கழிந்த பெருமையைக்[1] காட்டகி லானே.

(ப. இ) இறப்பும் பிறப்பும் இயல்பாகவே என்றும் நீங்கிய சிவ பெருமான் மேலோதிய எழுவர்க்கும் என்னுள்ளிருந்து மொழிந் தருளினன். செழுமை மிக்க மாறு ஒளியுடைய அன்பு, அறிவு, ஆற்றல் மூன்றனையும் இயல்பாகவே யுடையவன் சிவன். அவன் தன் திருவடிக் காதலர் அல்லாதார்க்கு எல்லையில்லாத தன் பெருமையைக் காட்டுந் தன்மையன் அல்லன். அன்பு அறிவு ஆற்றல்: இச்சை, ஞானம், கிரியை. கழிந்த - எல்லையில்லாத. மூன்றெளி என்பதற்கு ஞாயிறு திங்கள் தீ எனலும் ஆம். (இ)

134. தத்துவ ஞானம் உரைத்தது தாழ்வரை
மூத்திக் கிருந்த முனிவருந் தேவரும்
ஒத்துடன் வேறு யிருந்து[2] துதிசெயும்
பத்திமை யால்இப் பயனறி யாரே.

---

1. அம்பரமாம். அ. திருச்சாழல், கக.
2. சிரிப்பார். அ. கோயின் மூத்த. கூ.

(ப. இ.) சிவபெருமான் திருவெள்ளிமலையின் திருத்தாழ்வரையில் பத்திப் பெருக்காம் பேரன்பால் பாடிப்பரவிப் பணிந்து வழிபட்டுக் கொண்டிருந்த முனிவர் தேவர் முதலாயினர் பொருட்டு மும்பொருளுண்மை செப்பும் மெய்யுணர்வு நூலினை உரைத்தருளினர். அவர்கள் வீடுபேற்றையே வேண்டி வழிபட்டனர். அவர்கள் ஒன்று கூடியும் தனித்து நின்றும் வழிபட்டனர். இத்தகைய நூலின் சிறந்த பயனை ஏனையோர் எளிதின் உணரார். ஒத்துடன் வேரும் என்பதற்குச் சிவபெருமான் ஒன்றுயச் சேர்ந்து உடலுயச் செலுத்தி வேரும்யச் செறிந்து உயிர்க்குயிராய் நிற்பன் என்றலும் ஒன்று. சேர்தல் செறிதல் செலுத்தல் ஒரு மூன்றும், ஓரின் உயிர்க்குயிரின் பண்பு. மெய்யுணர்வு நூல்களே மெய்கண்ட நூல்களென்ப. (சு)

---

# 2. திருமூலர் தம் வரலாறு கூறுதல்

(மாணாக்கர்களுக்கு)

135. நந்தி இணையடி நான்தலை மேற்கொண்டு
புந்தியின் உள்ளே புகப்பெய்து போற்றிசெய்து
அந்தி மதிபுனை அரனடி நாள்தொறுஞ்
சிந்தைசெய் தாகமஞ் செப்பலுற் றேனே.

(ப. இ.) ஆலமர் செல்வனும் நந்தியெங் கடவுளின் திருவடியினைத் தலைமேற் கொண்டு, கொண்டவாறே இறுப்பு மெய்யாம் புத்தியின்கண் நிலைபெறச் செய்து செந்தமிழ்ப் போற்றித்தொடர் புகன்று வழிபட்டு வளரும் மதியினைப் புனைந்த திருச்சடையினை உடைய சிவபெருமானை நாடொறும் உள்ளத்தின்கண்ணே நாடி உயிர்க்கு உறுதி பயக்கும் செந்தமிழ்ச்சிவாகமம் மொழியலுற்றேன் என்பதாம். ஆகமம் - இறைவன் நூல். ஆவி நிறைவாம் முறைநூல் எனவும் படும். ஆ - ஆவி. கமம் - நிறைவு. புந்தி-அறிவு. சிந்தை செய்து - இடையருது நாடி. ஆகமம்-தமிழாகமம். ஆகமம்: ஆவியின் அறிவை நிறைவிக்கும் நூல். (க)

136. செப்புஞ் சிவாகமம் என்னும்அப் பேர்பெற்றும்
அப்படி நல்கும் அருள்நந்தி தாள்பெற்றுத்
தப்பிலா மன்றில் தனிக்கூத்துக் கண்டபின்
ஒப்பில் எழுகோடி யுகம்இருந் தேனே.

(ப. இ.) ஆருயிர்கள்மாட்டுச் சிவப்பண்பு நிறைவதற்காம் வழிவகை ஆக்கும் கருவிநூல் சிவாகமம் எனப்படும். அம்முறையானே அருளிச் செய்தவன் ஆலமர் செல்வனுகிய நந்தியெம் பெருமான். அவன் திருவடிப்புனை கொண்டு அப் பெயரே பெற்றுத் திகழுமாறு என்னைக் கொண்டும் இயற்றியருளினன். 'நள்ளிருளிலும் நட்டம் நாதன் பயின்றாடலின்' பொன்னம்பலமும் ஆருயிர்களின் நெஞ்சத் தாமரையும் தப்பிலாமன்று எனத் தமிழகச் சென்நெறிச் சான்றோர் திருவருளின் திறத்தால் தொன்மையே நன்மையாக மொழிந்தனர். அத் திருக்கூத்

தினே அவனருளால் கண்டபின் ஒப்பில்லாத அளவிலா ஊழிகள் அமர்ந் திருந்தேன்.

(அ. சி.) யுகம் - ஆண்டு (சதுர்யுகக் கணக்குகள் எல்லாம் பாரத காலத்தில் வியாசரால் வகுக்கப்பட்டன). யுகாதி - வருடப்பிறப்பு என் பதை நோக்க. (உ)

137. இருந்தவக் காரணங் கேளிந் திரனே
பொருந்திய செல்வப் புவனு பதியாம்
அருந்தவச் செல்வியைச் [1]சேவித் தடியேன்
பரிந்துடன் வந்தனன் பத்தியி னலே.

(ப. இ.) செம்பொருளின் துணிவாம் சித்தாந்த முதன்மை மாணவர் எழுவருள் ஒருவனும் இந்திரனே! என்னைச் சிவபெருமான் தென்னுட்டின்கண் இருத்தியருளிய காரணம் கூறுகின்றேன் கேட்பா யாக. எல்லாவுலகங்கட்கும் தூமாயைச் செல்வ உலகத்துக்கு முழு முதல்வியாம் உடையாள் அருந்தவச் செல்வி எனப்படுவள். அவள் அண்ணித்துயிரும் சிவ வழிபாட்டுத் தவத்தினைக் கை ஏற்றுப் புரிதற் பொருட்டுத் தானே தவக்கோலம் பூண்டு சிவவழிபாடியற்றி யுணர்த்தி யருளினள். அதனால் அருந்தவச் செல்வி எனப் பெயர் பூண்டனள், அவள் திருவடியை அடியேன் நீங்காப் பெருங்காதல் ஓங்குதலான் வழி பட்டு இருந்து வந்தனன்.

(அ. சி.) புவனு...செல்வி - புவனேசுவரி. (கூ)

138. மாலாங்க னேயிங்கு யான்வந்த காரணம்
நீலாங்க மேனியள் நேரிழை யாளொடு[2]
மூலாங்க மாக மொழிந்த திருக்கூத்தின்
சீலாங்க வேதத்தைச் செப்பவந் தேனே.

(ப. இ.) திருமூல நாயனார் தம் மெய்கண்ட மாணவருள் ஒருவ ராகிய மாலாங்கரைப் பார்த்து அருளுகின்றனர். மாலாங்கரே! சிவ வுலகை நீங்கி ஓங்கிய தென்தமிழ் நாட்டகத்துக்கு அருள் என்னைக் கொண்டுவந்த காரணம் கூறுகின்றேன் கேள். சிவபெருமான் திரு மலைக்கண் அழகிய நீலவண்ணத் திருமேனியும், நேரிய பொன்மணி அணிகளும் பூண்ட அம்மையுடன் திருவைந்தெழுத்தே திருவுருவாகக் கொண்டு ஒலிமுடிவாம் நாதாந்தத்துச் செய்தருளும் திருக்கூத்தின் அடிப்படை யுண்மைக் காரணங்களை மொழிந்தருளினன். அத்தகைய அருளொழுக்கு நிறைந்த தமிழ்முறையினை வேதமெனவும் சிவாகமம் எனவும் கூறுப. அதைச் செப்புதற் பொருட்டே யான் வந்தேன். நீலாங்கம் - கரிய அழகிய. மூலாங்கம் - அடிப்படை யுண்மைக் காரணங் கள். சீலம் - ஒழுக்கம்.

(அ. சி.) நீலாங்க.....வேதம்-தமிழ் நான்மறை. (அறம்-பொருள் இன்பம் - வீடு.) (எ)

1. எண்ணி. கூ. திருக்குறிப்புத் - இக.
,, துணையி. அப்பர், இ. ஏடு - ச.
2. நீலமேனி. ஐங்குறுநூறு, கடவுள் வாழ்த்து.

**139.** நேரிழை யாவாள் நிரதிச யானந்தப்
பேருடை யாளென் பிறப்பறுத் தாண்டவள்
சீருடை யாள்சிவ ஞவடு தண்டுறை
சீருடை யாள்பதஞ் சேர்ந்திருந் தேனே.

(ப. இ.) திருவாவடுதுறைக்கண் சிறந்த அணிகலன் அணிந்து விளங்கும் திருவருளம்மை உயர்வற உயர்ந்த ஒருபேரின்பத் திருப்பெயரினள்; அடியேனுடைய பிறப்பினை அறுத்து ஆண்டவள் அவளே. சிவனுடன் விட்டு நீங்காது இடப்பாகத்து ஒட்டியுறையும் சிறப்பினையுடையவள். அத்தகைய எல்லாச் சிறப்பினையுமுடைய திருவருளம்மையின் திருவடியினைச் சேர்ந்திருந்தேன். சேர்ந்திருத்தல் - இடையருது நினைந்திருத்தல். (இ)

**140.** சேர்ந்திருந் தேன்சிவ மங்கைதன் பங்கனைச்
சேர்ந்திருந் தேன்சிவ ஞவடு தண்டுறை
சேர்ந்திருந் தேன்சிவ போதியின் நீழலிற்[1]
சேர்ந்திருந் தேன்சிவன் நாமங்கள்[2] ஓதியே.

(ப. இ.) சிவமங்கைதன் பங்கனுகிய சிவபெருமானைக் கூடியிருந்தேன். சிவனுக்குச் சிறப்பாக உடைய திருவாவடுதுறைக்கண் கூடியிருந்தேன். திருவாவடுதுறைத் திருக்கோவிலின்கண் மேல்பாலுள்ள திரு அரசமரத்து நிழலில் கூடியிருந்தேன். சிவன் திருநாமம் திருவைந்தெழுத்தென்ப. அது 'நந்திநாமம் நமச்சிவாயவே' என்பதனால் உணரலாம். பண்டையோர் மந்திர எழுத்துக்களை மாத்திரை கூட்டியும் குறைத்துங் கடைக்குறைத்தும் கையாண்டு வந்தனர். அதனாலேயும் அது மறை எனவும் பெயர் பெற்றது. இவ்வுண்மை 'அவ்வுடன்' என்று தொடங்கும் சிவஞான சித்தியார் (அ-க-க) திருப்பாட்டின்கண் சிவஞான முனிவர் உரைத்தருளிய உரையான் உணரலாம். அது வருமாறு: 'பிரணவமகலின் உள்ளவாறே வெளிப்படக் கூறது ஒவ்வெனக் கடைக் குறைத்துக் குறுக்கல் விகாரமாக்கிக் கூறினர்.' எனவே 'நமசிவய' என்பதே நமசிவாய என நீட்டல் விகாரம் பெற்றது. சிவநாமங்கள்: நமசிவய, சிவயநம, சிவயசிவ, சிவசிவ என்பனவாம். இவை நன்னெறி நான்மைக்கும் முறையே உரிய மேன்மை மந்திரங்களாம். இவற்றின் பெருமையை வருமாறு நினைவுகொள்க. விளக்கம் முன்னுரைக்கண் காண்க. செவிலியொடு நற்றாய் சிவமணமே இன்பச் சுவையழுந்தல் நான்மை எழுத்தைந்து.

(அ. சி.) சிவபோதி - சிவன் கோவிலில் உள்ள அரசு. (சு)

**141.** அகலிடத் தார்மெய்யை அண்டத்து வித்தைப்
புகலிடத் தெம்மெய்யைப்[3] போதவிட் டானைப்
பகலிடத் தும்இர வும்பணிந் தேத்தி
இகலிடத் தேஇருள் நீங்கிநின் றேனே.

---

1. ஆவடுதண். கூ. திருமூலர், கூடு.
2. நந்திநாமம். சம்பந்தர், கூ. சகூ - கக.
3. (பாடம்) தென்றனைப்.

(ப. இ.) அனைத்துலகின்கண் வாழும் எல்லாவுயிர்கட்கும் உயிர்க் குயிராய் நிற்கும் மெய்ப்பொருளே, எல்லா அண்டங்களும் மாயா காரிய மாக வெளிப்படுதற்கு வினைமுதற் காரணமாய் நிற்கும் வித்தை, என்றும் தின்று பொன்றுப் பேரின்பத்தினைத் தெவிட்டாதருளும் வீடுபேற்று நிலைக்களமான புகலிடத்தை, அவ்விடத்து அருளால் அடியேனைப் பு.. விட்ட உண்மை யறிவின்ப வடிவினனைப் பகலும் இரவும் ஓவாது பணிந்து தொழுது பெரும்பாலும் மாறுபாட்டினைத் தரும் இவ்வுலகத் திடத்து அருளால் ஆணவவல்லிருளினின்றும் நீங்கி நின்றேன். இகல் - மாறுபாடு; உலகம் நிற்பனபோன்று நில்லா நிலைமைத்து. இருள் - கார் அறிவு : அறியாமை. வினைமுதற்காரணம் - நிமித்த காரணம்.

(அ. சீ.) புகலி.....டானே - மறைத்துவைத்த இடத்திலிருந்த என் உடம்பை மறையும்படி செய்தானே. (எ)

142. இருந்தேன் இக்காயத்தே எண்ணிலி கோடி
இருந்தேன் இராப்பகல் அற்ற இடத்தே
இருந்தேன் இமையவர் ஏத்தும் பதத்தே
இருந்தேன் என்நந்தி இணையடிக் கீழே.

(ப. இ.) அருளால் தரப்பெற்று நடமாடுந் திருக்கோவிலாகிய இவ் வுடம்பகத்தே அளவிலாக் காலம் சிவன் இருக்கச் செய்ய இருந்தேன். வாடகை வீட்டிலிருப்பார் இருப்பு வீட்டுக்குடையவர் கட்டளைப்படியே மூட்டின்றி முடியும் என்பது இதற்கு ஒப்பு. இராப்பகலற்ற இடமென்பது மறப்பு நினைப்பும் அற்று நெஞ்சம் வஞ்ச மின்றிச் சிவன் திருவடிக்கே இடமாக இருப்பது. எனவே மறவா நினைவுடன் இருந்தேன் என்பதாம். விண்ணுடவர் உற்ற போதெல்லாம் உண்ணுடித் தொழும்பதம் திருவடி. அத் திருவடியே புகலிடமாக இருந்தேன். என்னையாட்கொண்டருளும் நந்தியெங் கடவுளின் திருவடிக்கீழ்த் தாடலைபோல் ஒடுங்கி இருந்தேன். (அ)

143. ஞானத் தலைவிதன் நந்தி நகர்புக்கு
ஊனமில் ஒன்பது கோடி யுகந்தனுள்
ஞானப்பா லாட்டி நாதனை அர்ச்சித்து
நானும் இருந்தேன்நற் போதியின் கீழே.

(ப. இ.) திருவடியுணர்வின் முதல்வியாக விளங்கும் திருவருளால் தந்திக்குரிய திருவாவடுதுறையின்கண் குற்றமற்ற ஒன்பது கோடி ஊழி கள் தவமிருந்தேன். திருமுறைச் செந்தமிழ்த் திருப்பாட்டுக்கள் ஓதிச் சிவபெருமானை வழிபாடாகிய அருச்சனையைப் புரிந்தேன். இத் திரு முறைகளே ஞானப்பால் என்க. அதனைச் சிவபெருமானுக்குச் சூட்டு தல் ஆட்டுதல். போதம் விளைவிக்கும் நிலைக்களம் போதி. அஃது அரசமரம். அறிவுக் கூரும் பிள்ளையார் அரசமரத்தடியில் எழுந்தருளி யிருப்பதும் இதனை வலியுறுத்தும் அடியேனும் அத்தகைய நல்ல போதி மரத்தின் கீழ் இருந்தேன் என்க. எனவே உளப்பான்மைக்குத் தக்கவாறே உறைவிடமும் நாடுவர் நிறையருளினர் என்பது துணிபு.

(அ. சீ.) நந்திநகர் - ஆவடுதுறை. (கு)

144. செல்கின்ற வாறறி சிவமுனி சித்தசன்
வெல்கின்ற ஞானத்து மிக்கோர் முனிவராய்ப்
பல்கின்ற தேவர் அசுரர் நரர்தம்பால்
ஒல்கின்ற வான்வழி யூடுவந் தேனே.

(ப. இ.) நன்னெறியில் ஒழுகும் ஒழுக்கத்தால் திருவடியுணர்வு கைவரப் பெறும். அவ்வுணர்வால் நினைப்பில் தோன்றும் சித்தசன் என்னும் கருவேனே முனிந்து வெல்லுதல் கூடும். அவர்களே மிக்கோராவர். அவர்கள் சிவ முனிவர்கள் என்று அழைக்கப்படுவர். முனிவர்களாகவும் தேவர்களாகவும் அசுரர்களாகவும் மக்களாகவும் நாளும் வளர்ந்து பெருகும் இத் திறத்தார்மாட்டு நுண்ணிய வான் வழியாக அருள்துணைக் கொண்டு வந்தனன். சிவமுனி - சிவமுன்னி: சிவனடியினை நினைந்து. சித்தசன்-மனத்தில் பிறப்பவன். ஒல்கின்ற-நுணுகுகின்ற. (கo

145. சித்தத்தின் உள்ளே சிறக்கின்ற நூல்களில்
உத்தம மாகவே ஓதிய வேதத்தின்
ஒத்த உடலையும் உள்நின்ற உற்பத்தி
அத்தன் எனக்கிங் கருளால் அளித்ததே.

(ப. இ.) சிவபெருமான் திருவருளால் திருவடியுணர்வு கைவரப் பெற்ற மெய்கண்ட மேலோர் உள்ளத்தில் அமையும் நூல்களில் தலைமையாக இறைவன் எழுப்ப முறையாக எழுந்து ஓதப்பெறும் ஒண்தமிழ் மறைமுறையாகிய முன்னே வேதாகமங்களே யொப்பச் சொல்லையும் பொருளையும் அடியேற்கு உள்நின்று அத்தன் அருளால் உணர்த்தியருவினன்.

(அ. சி.) உடல் - சொல் - உற்பத்தி - பொருள். (கக)

146. நேர்ந்திடு மூல சரியை நெறியிதென்று
ஆய்ந்திடுங் காலாங்கி கஞ்ச மலையமான்
ஓர்ந்திடுங் கந்துரு கேணைமின்கள் பூதலத்
தோர்ந்திடுஞ் சுத்த சைவத் துயிரதே.

(ப. இ.) திருவடிப் பேற்றிற்கு நேர்வழியாயுள்ள நான்கினுள் நேர்ந்திடும் அடிப்படைச் சீலம் என்னும் சரியை நெறி இத் தன்மைத்தென்று ஆய்ந்தவர் கந்துரு காலாங்கி முனிவரும், கஞ்சமலையமான் முனிவரும் என்க. அவ்விருவர்களையும் நோக்கித் திருமூலர் அருளுகின்றனர். இச் சீலம் இந்நிலவுலகத்துத் தனி முதற் சிவனெறியாகிய சுத்த சைவத்துக்கு ஆராய்ந்து கடைப்பிடிக்கும் உயிராம் என்க. உயிர்-நானெறித் தொண்டு. (கஉ)

147. நான்பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்
வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்
ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரந்
தான்பற்றப் பற்றத் தலைப்படுந் தானே.

(ப. இ.) திருவருளால் திருவடியுணர்வால் அடியேன் பெற்ற இறவாப் பேரின்பம் இவ்வையகம் பெற்று இன்புறுமாக. செந்நெறிச் செல்வர்களாகிய நற்றவத்தான் உயர்ந்தோர், இடையருது பெருங் காதலால் பற்றி நின்ற விழுமிய முழுமுதற் சிவம் மறைப்பொருளாகும், அப் பொருளினை எய்தும் மெய்ந்நெறி சொல்லிடின், ஊனுகிய நெஞ்சத் திடத்து ஓசை அருவாய் நிற்கும். அதன்பின் ஆருயிரின்கண் அவ் வோசை உணர்வுருவாய்த் திகழும். அம்மந்திரம் செந்தமிழ் நான்மறைச் 'சிவசிவ'. இந்தத் தனிப்பெருந் தமிழ்மறையினை ஆருயிர் இடையருது அழுந்த அழுந்தக் கணிக்கக் கணிக்கத் திருவடியில் தலைக்கூடும். ஊன்: நெஞ்சம் - ஆகுபெயர். உருவால் வரி அருவாம் ஓசையுணர்வின், உருவால் உயிரின்பாம் ஓர்.

(அ. சி.) ஊன்பற்றி - தசைபொதி நாவைப் பற்றி. (கக)

148. பிறப்பிலி நாதனைப் பேர்நந்தி தன்னைச்
சிறப்பொடு வானவர் சென்றுகை கூப்பி[1]
மறப்பிலர் நெஞ்சினுள் மந்திர மாலை
உறைப்பொடுங் கூடிநின் றோதலு மாமே.

(ப. இ.) சிவன் பிறவா யாக்கைப் பெரியோனுதலின் பிறப்பிலி முதல்வன் எனப்படுவன். அவனை நந்தியென்னும் திருப்பெயரான் அழைப்பர். சிவவுலகத்தில் வாழும் வானவராகிய வழிப்பேற்றினர் சிறப்பொடு திருமுறையோதி வழிபடுவர். தம் நெஞ்சினுள் செந்தமிழ்த் திருமுறையாம் இத்திருமந்திர மாலையினைத் திருவடி உறைப்புடன் திருவருளுடன் கூடிநின்று மறவா நினைவுடன் இடையருது ஓதுதலும் இயல்பாம் என்ப. வழிப்பேறு - பதமுத்தி. ஓதுதல் - பாராயணம் செய்தல்.

(அ. சி.) உறைப்பு - உறுதி. (கச)

149. சதாசிவம் தத்துவம் முத்தமிழ் வேதம்
மிதாசனி யாதிருந் தேனின்ற காலம்
இதாசனி யாதிருந் தேன்மன நீங்கி
உதாசனி யாதுட னேஉணர்ந் தேமால்.

(ப. இ.) அருளோனுகிய சதாசிவக் கடவுள் அருளிச் செய்த என்றும் மாறு மெய்ம்மை மறை மும்பொருள் தேற்றும் தமிழ்மறை. ஒருபுடையாக முத்தமிழினை முறையே உயிர் உள்ளம் உடல் என உலகியலிற் கொள்ளலாம். முத்தமிழ்: இயல் இசை கூத்து. அவற்றையே வீட்டியலிற் கொள்ளுங்கால் இறை உயிர் தளை எனக் கொள்ளுதல் சாலும். இத்துணை நாளும் அளவாயுண்ணும் அமைவுடையவனுக விருந்தேன். முத்தமிழ் வேதத்துக்கு உறைவிடமாக உள்ளத்தினையே அமைத்தேன். அம்முறையினைப் புறக்கணிக்காது திருவருளுடன் கூடியுணர்ந்தோம். மிதாசனி—மித + அசனி: அளவாயுண்போன். இதாசனி - உள்ளத்தை உறைவிடமாக நல்கியோன்.

1. பிறப்போ. அப்பர், கு. கூ - இ.

(அ. சி.) சதா...வேதம் - படைப்புக் காலத்தில் சதாசிவனுடைய தத்துவமாகிய சாதாக்கிய தத்துவத்தினின்றும் வெளிப்பட்ட தமிழ் வேதம். (கஅ)

150. அங்கிமி காமைவைத் தானுடல் வைத்தான்
எங்குமி காமைவைத் தானுல கேழையும்
தங்கிமி காமைவைத் தான்தமிழ்ச் சாத்திரம்
பொங்கிமி காமைவைத் தான்பொருள் தானுமே.

(ப. இ.) ஆருயிரின் உடலகத்து உணவினைச் சிரிக்கத் தக்கவாறு அகட்டுத் தீ அமைத்தனன். அத் தீ அவ்வளவுக்கு மேல் மிகாமலிருப்பதும் அவன் திருவாணையே. அதுபோல் கடலகத்தும் அது காலமல்லாக் காலத்தும் பொங்கி மிகுந்து, உலகத்தை அழித்துவிடாதபடி ஒரு தீயினை அமைத்தனன். அதனால் ஏழுலகமும் கேடின்றி நிலை பெறுவவாயின. அதுபோல உலகத்தின்கண் ஆணவவல்லிருள் மிகுந்து ஆருயிர்களின் அறிவைத் தடைப் படுத்திப் பிறப்புக்கு ஆளாக்கும் தன்மை மிகாமைப் பொருட்டுத் தமிழ்த் திருமறையும் திருமுறையும் முறையே புகழ்நூல் பொருள்நூல் வகையான் அமைத்தருளினன். திருமறை-நால்வர் முதலிகள் முதலாயினர் அருளிய பதினெரு திருமுறைகள். திருமுறை - திருமூலர் சொல்லாகிய தமிழாகமமும் மெய்கண்ட நூல்களும். இங்ஙனம் அமைத்தருளினவன் மெய்ப்பொருளாகிய சிவன் என்க.

(அ. சி.) தங்கி...சாத்திரம் - தமிழ் வேதாகமங்கள் இறந்து ஒழிந்தது திருவருளாலே. (கசு)

151. பண்டித ராவார் பதினேட்டுப் பாடையுங்
கண்டவர் கூறுங் கருத்தறி வார்என்க
பண்டிதர் தங்கள் பதினேட்டுப் பாடையும்
அண்ட முதலான் அறஞ்சொன்ன வாறே.

(ப. இ.) கற்பன கற்றுத் திருவருள் துணையால் பொற்புற நிற்பார் புலவரெனப்படுவார். 'தம்மை ஐந்து புலனும் பின் செல்லும் தகைய' ராகிய நல்லொழுக்கினர் புலவர். அப் புலவரே பண்டிதர் எனப்படுவர். பண்டைக் காலத்து மொழிகளுள் தூணையாந்தன்மை வாய்ந்த மொழி பதினெட்டு. பதினெட்டு மொழிக்கண்ணும் கூறப்படும் பொருட் கருத்தினை உள்ளவாறுணர்வார் பண்டிதரென்க. அப் பதினெட்டு மொழிகளையும் தக்கார் வாயிலாக அருளிச் செய்தவன் அனைத்தண்டங்கட்கும் முதல்வனும் விளங்கும் அரன் என்னும் திருப் பெயரினையுடைய சிவ பெருமான். (கன)

152. பின்னேநின் றென்னே பிறவி பெறுவது
முன்னேநன் ருக முயல்தவஞ் செய்கிலர்
என்னேநன் ருக இறைவன் படைத்தனன்
தன்னேநன் ருகத் தமிழ்செய்யு மாறே.[1]

1. திசை யானைத்தின். கஉ. சம்பந்தர், உசு.
,, நாளுமின்னிசை, தல்லிசைஞானசம். ஆரூர், எ. கூஉ-அ. கூஎ-இ.

(ப. இ.) 'அயல் வழக்கின் துறைவெல்லும் அசைவில்செழுந்தமிழ் வழக்கே' திருவடியுணர்வைக் கூட்டுவிக்கும் அருள் வழக்காகும். அத் தமிழ் வழங்கும் நாடே சிவனடி சேர்ப்பிக்கும் நற்றவம் புரிதற்கேற்ற பழநாடாகும். இந் நாட்டகத்துத் தோன்றி முன்னமே நன்னெறி நான்மை நற்றவத்தினை முயன்று செய்கிலாதவர் பின்னும் பிறப் பெடுத்துத் துன்புறுவர். என்னே அவர்தம் பேதைமை ? சிவபெருமான் என்னை நன்முகப் படைத்தருளினன். தன்னை ஏனையார் திரிபின்றி உள்ள வாறு உணர்ந்து உயர்தற்குக் கருவியாகிய செந்தமிழ்த் திருமுறையினை ஓதி வழிபடுதல் வேண்டும் எனத் திருவுள்ளங் கொண்டனன் சிவன். அத்தகைய தமிழ் அறிவுநூலை அடியேனைக் கொண்டு பாடுவிக்கவும் எண்ணினன். அங்ஙனமே என்னைத் 'தன்னை நன்முகத் தமிழ் செய்யுமாறு' இருத்தியருளினன். தமிழ் பரப்பியவர் ஆளுடைய பிள்ளையார் ; தமிழ் உகந்தவர் சிவபெருமான். (கஅ)

153. பெற்றமும் மானும் மழுவும்[1] பிரிவற்ற
தற்பரன் கற்பனை யாகுஞ் சராசரத்
தற்றமும் நல்கி அடியேன் சிரத்தினில்
நற்பத மும்அளித் தான்எங்கள் நந்தியே.

(ப. இ.) பெற்றமாகிய ஆனேறும் மானும் மழுவும் பூண்டது திரு வருளோடும் ஆருயிராடும் அனைத்துலகோடும் பிரிவற்றுப் பின்னலாய் நின்றருளும் சிவபெருமானின் திருவாணையாகும். தற்பரன்-தானே முழு முதலாய் நிற்கும் சிவன். கற்பனை, கட்டளை ; திருவாணை. ஆனேறு அறத் தின் குறிப்பாகும். மான், செந்தமிழ்மறை முறைகளின் குறிப்பாகும். மழு, திருவாணையின் குறிப்பாகும். இம்மூன்றும் ஒருபுடையாக உள்ளம் உரை உடல் எனக் கொள்ளலுமாம். மேலும் இவை திருவடி தலைக் கூட்டும் அறமும். அவ்வறத்தினை அறிவூட்டும் செறிதமிழ்மறை முறை யாகிய மெய்ந்நூலும். அந் நூலின்வழி ஒழுகுவதற்கு உறுதுணையாகிய படைப்பு காப்பு துடைப்பு ஆகிய முத்தொழில் ஆணையும் குறிப்பன வாகும். மழுவாகிய முத்தலைவேல் மேற்குறித்த திருவாணைக் குறிப்பே யாகும். இதனால், அறத்தைச் செலுத்துபவனும், மறையின் ஒலிக்குள் ஒலியாய் நிற்பவனும், அயன் அரி அரன் என்னும் மூவர்க்கும் திருவாணை அருள்பவனும் சிவனே என்பது தெளிவாகும். இயங்குதினை நிலைத்தினை என்னும் இருவேறுயிர்களின் மெய்ம்மையினையும் உணர்த்தியருளினன். அடியேன் முடியின்மீது தன் திருவடியினையும் சூட்டியருளினன். அவன் எங்கள் நந்தியங் கடவுளாகிய சிவனே. (கக)

154. ஞேயத்தை ஞானத்தை ஞாதிரு வத்தினை
மாயத்தை மாமாயை தன்னில் வரும்பரை
ஆயத்தை யச்சிவன் தன்னை யகோசர
வீயத்தை முற்றும் விளக்கியிட் டேனே.

(ப. இ.) ஞேயமாகிய அறியப்படும் பொருளையும், ஞானமாகிய அறிவையும், ஞாதுருவாகிய அறிவோனையும், உணர்வு மெய்யாகிய தூவா

1. தூமதி. கக. பட்டினத்துப் பிள்ளையார், ஒருபா - சு.

மாயையும், உடல் மெய்யாகிய மூலப் பகுதி என்ற மாயத்தையும், உணர்த்து மெய்யாகிய தூமாயை மாமாயை ஆதலால் அம் மாமாயையையும், வனப்பாற்றலாகிய பரைத்தொகுதியையும், கடந்து, மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனுகிய அழிவில்லாத முழுமுதல் விழுப் பொருள் சிவன். அச் சிவனே அவனருளால் அவன் தாளுணர்த்த முழுதும் விளக்கியிட்டேன். இதன்கண் விளக்கப்பட்ட பொருள் எட்டு. அவை முறையே அறியப்படும் பொருள், அறிவு, அறிவோன், உடல் மெய், உணர்வு மெய், உணர்த்து மெய். வனப்பாற்றல், சிவன் என்ப. அறியப் படும் பொருள் நிலையிலாப் பொருள், நிலைப்பொருள் என இருவகைய. அவற்றுள் நிலையிலாப் பொருள் சுட்டுணர்வால் காணப்படும் உலகு உடல் முதலியன. நிலைப்பொருள் சுட்டுணர்வாலும் சிற்றுணர்வாலும் காணவொண்ணுத ஆனல் முற்றுணர்வால் காணவொண்ணும் இறை அருள் உயிர் முதலியன. அறிவு சுட்டறிவு, சிற்றறிவு, முற்றறிவு என மூவகைப் படும். சுட்டறிவு என்பது உயிர் மாயாகாரிய அகப்புறக் கருவிகளைத் துணைக்கொண்டு மாயாகாரியப் பொருள்களை யுணர்தல். சிற்றறிவென்பது இக்கருவிகளைக்கொண்டு உணரும் நான் இக்கருவிகளுக்கு வேறான அறிவுப்பொருள் என்று உள்நின்று அருள் உணர்த்த உணர்தல். முற்றறிவென்பது சிவபெருமான் சிவகுருவாய் எழுந்தருளி வந்து சிவமாக்கி ஆட்கொண்டதும் திருவருளே கருவியாய்த் திருவடியை உணர்தல். அறிவோன் என்பது என்றும் அடிமையாய்ச் சார்ந்ததன் தன்மையாய் நின்று பயன்துய்க்கும் ஆருயிராகும். உடல்மெய் : இருபத்து நான்கு தத்துவங்களைக் கொண்டது. உணர்வுமெய் : ஏழு தத்துவங்களைக் கொண்டது. உணர்த்துமெய் : ஐந்து தத்துவங்களைக் கொண்டது. வனப்பாற்றல் : திருவருளாகிய உண்மை இயற்கைப் பேரறிவுப் பெரும் பொருள். சிவன் : அத் திருவருளை உடைய திருவடிப் பேரின்பத்தை ஆருயிர்க்குக் காட்டிக் கண்டு ஊட்டிவரும் ஒப்பில்லாத விழுமிய முழு முதலாம் உண்மை அறிவு இன்ப எழிலுருவினன். தன்னில் வரும்பரை : சிவத்தினின்றும் பிரியாது தோன்றும் திருவருள். வீதல் - மலர்தல் ; அழியாதிருத்தல்.

(அ. சி.) ஞேயம் - அறியப்படுபொருள். ஞானம் - அறிவு. ஞாதுரு - அறிபவன். பரை ஆயம் - சத்திகள் கூட்டம். வீயம் - பிறப்பில்லாச் சிவம். (உ0)

155. விளக்கிப் பரமாகும் மெய்ஞ்ஞானச் சோதி
அளப்பில் பெருமையன் ஆனந்த நந்தி
துளக்கறும் ஆனந்தக் கூத்தன்சொற் போந்து
வளப்பில் கயிலை[1] வழியில்வந் தேனே.

(ப. இ.) மேலோதியவற்றை விளக்கியருளியவன் மேலாகிய மெய் யுணர்வுப் பேரொளி. அவன் அளவில்லாத பெருமையையுடையவன். இன்பவடிவினனுகிய நந்தி. ஆருயிர்களை நடுங்கச் செய்யும் ஆணவ வல்லிருளை அவ்வுயிர்களாலேயே அடக்குவிக்கும் அருட்பெருங் கூத்தன். அவன் செவியறிவுறுத்திய திருவைந்தெழுத்தினைச் சிறப்புற உணர்விற் பதித்து, அவன் திருவாணைவழி வளப்பம் மிக்க திருக்கயிலைமலையின் கணுள்ள நந்தி மரபில் யான் வந்தேன்.

1. மாதவம் செய். கூ. திருமூலச் சிறப்பு. உஇ.

**159.** பதிபசு பாசம் எனப்பகர் மூன்றிற்
பதியினைப் போற்பசு பாசம் அனுதி
பதியினைச் சென்றணு காப்பசு பாசம்
பதியணு கிற்பசு பாசம் நிலாவே.

(ப. இ.) தொன்மையிலுள்ள பதியாகிய இறையும், பசுவாகிய உயிரும், பாசமாகிய தளையும் என்று சொல்லப்படும் மூன்றினுள் இறையின் தொன்மையினை எல்லா நெறியினரும் சொல்லாலும் பொருளாலும் ஐயந்திரிபின்றி மெய்க்காட்சியான் உடன்படுகின்றனர். அப் பதியினைப் போல் பசு பாசமும் தொன்மையே. பதியினைச் சென்று அணுகுந்தன்மையில்லாத உயிரியும் தளையும் பதி அருளால் எழுந்தருளி வரின் பசுத் தன்மையாகிய மூனைப்பும் செயலும் மருளலும், இவற்றிற்கு மூறையே வாயிலாகிய ஆணவம் கன்மம் மாயை என்னும் பாசமூம் மூனைத்து நில்லாது ஒடுங்கும். பசுத் தன்மை - தளையினுட்பட்ட தன்மை. இதனைத் தளையி எனலாம். நிலா-மூனைத்துநில்லா; அடங்கியிருக்கும். (கூ)

**160.** வேயின் எழுங்கனல் போலெனும் மெய்யெனும்
கோயி லிருந்து குடிகொண்ட கோன்நந்தி
தாயினும் மும்மலம் மாற்றித் தயா[1] என்னுந்
தோயம தாய்எழுஞ் சூரிய[2] னுமே.

(ப. இ.) மூங்கிலினுள் ஒளியுடைத் தீ மறைந்து நிற்கின்றது. அது போல் ஆவியின் உடம்பகத்து உயிர்க்குயிராய்த் திருக்கோவில் கொண்டு விட்டுப் பிரியாக் குடியிருப்பாக உறைந்தருள்பவன் முழுமுதற்றலைவனாகிய நந்தியெம்பெருமான். அவன், பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிவுடையனாய் ஆருயிர்களின் மும்மை மலங்களையும் மாற்றியருள்வன். மேலும் தண்ணளியென்று சொல்லப்படும் தயாவுடையவன். அத் தயாவே திருவருள் வெள்ளமாய் எழும். அத் திருவருளையுடைய நந்தி சிவசூரியன் எனப்படுவான். சிவசூரியன்: அனைத்தொளிக்கும் ஒளியருளும் அறிவுப்பேரொளி. (சு)

**161.** சூரிய காந்தமுஞ்[3] சூழ்பஞ்சும் போலவே
சூரிய காந்தஞ் சூழ்பஞ்சைச் சுட்டிடா
சூரியன் சந்நிதி யிற்சுடு மாறுபோல்
ஆரியன் தோற்றமூன் அற்ற மலங்களே.

(ப. இ.) ஞாயிற்றின் கதிரை ஏற்றுப் புறத்தே விடும் கல் சூரிய காந்தக்கல் எனப்படும். அக்கல் சூரியன் முன்னன்றித் தன்னைச் சூழ்ந்துள்ள பஞ்சினைச் சுடமாட்டாது. அதற்குச் சுடும் ஆற்றலை நல்குவது ஞாயிறே. ஆயினும் அச் சூரியனும் இக்கல்லின் வாயிலாக அன்றிச் சுடான். அதுபோன்று சிவபெருமான் மும்மலத்தார் மலங்களை அகற்

1. குலங்கொடுத்துக். அப்பர், சு : உ0 - சு.
2. பரிதி. அப்பர், கி. கூசு - கி.
3. சூரியகாந். சிவஞான சித்தியார், அ. உ - உஅ.

றச் சிவகுருவாய் வெளிப்படுவன். வெளிப்பட்டுத் திருவைந்தெழுத்தை ஓதியருள்வன். அங்ஙனம் ஆட்கொண்டபோதே ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலங்களும் அற்றொழியும். இதுபோல் திருவைந்தெழுத்தும் நாட்டிலுள்ளார்க்கு ஏட்டிலுள்ளதேனும் ஆசான் கூட்டினு லல்லாமல் பயனெய்தாதென்க. ஏட்டிலுறும் ஐந்தெழுத்தும் எம்மான் அருட்குருசொற், கூட்டிலன்றிப் பேறின்றும் கூறு. ஆரியன் : பேரறிவு நிறைந்தோன் ; சிவன் ; குரு. மும்மலக் கட்டுடைய நம்மனோர்க்குச் சிவ பெருமான் நம்முடன் போக்கும் வரவும் புணர்வுமிலாப் பின்னலாயிருப் பினும் அவன் கொள்ளும் குருஉருவின் வழியாகவே மலமகலும். அத்துவிதம். (இ)

162. மலங்களுங் தாமென மாற்றி அருளித்
தலங்களுந் தானற் சதாசிவ மான
புலங்களுந் தானப் போதுவினுள் நந்தி
நலங்களுந் தானுள் நயந்தான் அறிந்தே.

(ப. இ.) ஆணவம், கன்மம், மாயை, மாயாகாரியம், இவற்றை இயக்கும் நடப்பாற்றல் ஆகிய ஐந்தும் மலங்கள் என்று சொல்லப்படும். அருளோனுகிய சதாசிவன் சிவகுருவாய் எழுந்தருளிவந்து அவற்றை மாற்றியருளி, இவ்வுலக வாழ்வையும் சிவவுலக வாழ்வாகச் செய்தமைத்தனன். பொன்னம்பலத்து இன்பக் கூத்தினை இயற்றியருளும் நந்தியெங் கடவுள் ஆருயிரின் சிற்றறிவாகிய மூன்றப்புப் புலங்களை அகற்றினன். அதனுல் இருள்சேர் இருவினையுள் விழையும் நல்வினையையும் நீக்கியருளினன். அதன்பின் ஆவியின் தூய்நிலை அறிந்தே நயந்து உள்ளெழுந்தருளினன். (ஈ)

163. அறிவைம் புலனுட னேநான்ற தாகி
நெறியறி யாதுற்ற நீராழம் போல
அறிவறி வுள்ளே அழிந்தது போல
குறியறி விப்பான் குருபர னுமே.

(ப. இ.) ஆருயிரின் அறிவு ஐம்புலனுடன் கூடினதாகி எல்லே காண வொண்ணு ஆழத்தையுடைய நீர் நிலைகளில் இறங்கி ஏறும் துறை யறியாது ஒருவர் செல்வதுபோலச் செல்லும். அச் சிற்றறிவு இயற்கைப்பேரறிவின் அடங்கியது போல் மயங்குவார்க்கு மயக்கமற்றி நல் வழியை அறிவித்து நடத்துவிப்பான் சிவகுருவென்க.

(அ. சி.) நான்றதாகி - கூடினதாகி. (எ)

164. ஆமேவு பால்நீர் பிரிக்கின்ற அன்னம்[1] போல்
தாமே தனிமன்றில் தன்னந் தனிநித்தந்
தீமேவு பல்கா ணங்களுள் உற்றன
தாமேழ் பிறப்பெரி சார்ந்தவித் தாமே.[2]

1. கல்வி. நாலடியார், கஉ.

2. காமல்ல. சிவஞானபோதம், கo. உ - க.

(ப. இ.) ஆவின் பாலுடன் கலந்த நீரினைப் பிரிக்கின்ற இயல்பு வாய்ந்த அன்னப்புள் போன்று ஒப்பிலாத ஐவகை மன்றத்திலும், ஆருயிர் நெஞ்சத்திடத்தும் நீங்காதுறைகின்றனன் சிவன். அவன் மலங்களைப் பிரித்துத் தூய வெண்மை வாலறிவினைப் பதிவிக்கும் பொருட்டுத் தன்னந்தனியாகத் திருக்கூத்தியற்றுகின்றனன். அதனால் இருள்சேர் இருவினையையும் அதற்கிடாகிய பிறப்பினையும் தருவன். அதனால் தீமை பொருந்திய பல செயல்கள் பொருந்தின. கரணங்கள் - செயல்கள். அதனால் ஆருயிர்கட்கு எழுவகைப் பல்பிறப்புக்கள் எய்தும். அங்ஙனம் எய்துவிக்கும் வினைத்தொகுதி எஞ்சுவினை என்ப. எஞ்சுவினை எனினும் சஞ்சிதம் எனினும் ஒன்றே. அவ்வெஞ்சுவினை சிவகுருவின் திருக்கடைக் கண்ணோக்கத்தால் எரி சேர்ந்த வித்துப் போல் பயனற்று அழியும்.

(அ. சி) தீமேவும் - தீமை பொருந்திய. எரி சேர்ந்த வித்து - வறுக்கப்பட்ட விதை. (அ)

165. வித்தைக் கெடுத்து வியாக்கிரத் தேமிகச்
சுத்தத் துரியம் பிறந்து துடக்கற
ஒத்துப் புலனுயிர் ஒன்றுய் உடம்பொடு
செத்திட் டிருப்பர்[1] சிவயோகி யார்களே.

(ப. இ.) பிறவிக்கு வித்தாகிய ஆணவமலத்தினை அடக்கிச் செவியறிவுறூஉவென்று சொல்லப்படும் திருவைந்தெழுத்தின் உபதேச மூறைப்படி கணித்தலாகிய உருவேற்றுதலின் மிகுதியால் இயற்கை உண்மைப்பேருறக்கமாகிய சுத்தத் துரியம் பிறக்கும். பிறக்கவே பாசப்பிணிப் பாகிய தொடக்கு அறும். அத் தொடக்கறவே பொறிபுலன் கலன் உடம்பெல்லாம் முன்போலவே காணப்படினும் அவற்றுடன் தூய ஆவியும் ஒத்து உறையினும் சிவன் நினைவேயன்றி உலக நினைவு சிறிது மில்லாதிருக்கும். அந்நிலையே நல்லாரின் நனிதிகழ் நிலையாம். இதுவே செத்திட்டிருக்கும் நிலை. இவர்களே சிவயோகியர் ஆவர்.

(அ. சி.) வியாக்கிரம் - உபதேசச் சொல். உடம்பொடு செத்திட்டிருப்பார் - உலகவாசனை அற்று இருப்பர். (கு)

166. சிவயோக மாவது சித்தசித் தென்று
தவயோகத் துள்புக்குத் தன்னொளி தானுய்
அவயோகஞ் சாரா தவன்பதி போக
நவயோக நந்தி நமக்களித் தானே.

(ப. இ.) சிவன் நினைவாய்ச் சிவனுடன் கூடியிருக்கும் தவத்தோர் சிற்றறிவு அறிவில்லது என்று சொல்லப்பெறும் பசு பாசத் தன்மைகள் நீங்கப் பெறுவர். தவ - நீங்க. சிவயோகத்தே நிலைத்துத் தம்மறிவு சிவனறிவாய்த் திகழ்வர். பிறப்பினுக்கு வாயிலாகிய ஆணவகன்ம மாயைகள் சாரமாட்டா. அத்தகைய நற்றவத்தோர், சிவமாய் நிறையும் நிறைவினையுடையராவர். அப் பெருநிலையினை நவயோக நந்தி நமக்களித்தருளினன். சித்தசித்து - அறிவறியாமை. அவயோகம் - பிறப்பு இறப்புக்கு உட்படுதல். நவம் - புதுமை. (கo)

1. நாயிற். அ. குழைத்த பத்து, அ.

167. அளித்தான் உலகேங்குந் தானுன உண்மை
அளித்தான் அமரர் அறியா உலகம்
அளித்தான் திருமன்றுள் ஆடுந் திருத்தாள்
அளித்தான் பேரின்பத் தருள்வெளி தானே.

(ப. இ.) சிவபெருமான் உலகமே உருவமாக விளங்கும் கலப்பால் தானும் உண்மையினை அருளினன். அமிழ்துண்டும் செத்துப் பிறக்கும் சிறு தெய்வங்களாம் அமரரறியாத சிவவுலகங்களை அளித்தருளினன். திருமன்றுகளில் திருக்கூத்தியற்றும் திருவடித் தாமரையினை அளித்தருளினன். பேரின்பப் பெருவாழ்வாம் அறிவுப் பெருவெளியினை அளித்தருளினன். (எக)

168. வெளியில் வெளிபோய் விரவிய வாறும்
அளியில் அளிபோய் அடங்கிய வாறும்
ஒளியில் ஒளிபோய் ஒடுங்கிய வாறும்
தெளியும் அவரே சிவசித்தர் தாமே.

(ப. இ.) திருவருள்வெளி சிவபெருமான் வெளியின்கண் சென்று ஒடுங்கிய முறைமையும், சிற்றுயிர்கள்மாட்டு வைக்கும் பேரன்பாகிய உயிரளி சிவபெருமான் பெரும்பேரின்ப அளியில் அடங்கியவாறும், திருவடியுணர்வு கைவந்த அருளொளி உயிர் சிவஒளியில் உள்ளொடுங்கிய வாறும் திருவருளால் சிவஞானத்தால் தெளியுமவர்களே சிவசித்தராவர். சிவசித்தர்: செம்பொருட்டுணிவினர். வெளி, மனவெளி எனலும் ஒன்று. (எஉ)

169. சித்தர் சிவலோகம் இங்கே தெரிசித்தோர்
சத்தமுஞ் சத்த முடிவுந்தம் முட்கொண்டோர்
நித்தர் நிமலர் நிராமயர் நீள்பர
முத்தர்தம் முத்தி முதல்முப்பத் தாறே.

(ப. இ.) மேலோதிய சிவசித்தர் சிவவுலகினை இம்மையிலே இருக்குமிடத்தே கண்டு வழிபட்ட மாண்பினர். ஓசையும் அவ்வோசை ஒடுங்கும் தூமாயையும் திருவருளால் தம்முள் கண்ட தனித் தவத்தவராவர். அவர்கள் சிவத்துடன் கூடினமையால் பிறப்பு இறப்பு அற்றுச் சிறப்புற்று என்றும் ஒன்றுபோலிருப்பவர். மலமற்றவர்; மலச்சார்பாகிலமும் இருவினை மாசற்றவர். என்றும் அழியா விழுப்பேற்றினர். அவர் எய்தும் விழுப்பேறு ஏணிப்படிபோல் அமைந்த அருஞ்சைவர் தத்துவம் முப்பத்தாறினையும் கடந்த மாற்ற மனங்கழிய நின்ற தோற்றமுதலே. (எக)

170 முப்பதும் ஆறும் படிமுத்தி ஏணியாய்
ஒப்பிலா ஆனந்தத் துள்ளொளி புக்குச்
சேப்ப அரிய சிவங்கண்டு தான்தெளிந்து
அப்பரி சாக அமர்ந்திருந் தாரே.

(ப. இ.) மன் முதல் சிவம் ஈறுகச் சொல்லப்படும் முப்பத்தாறு மெய்களும் ஏணி போன்று பல படிகளையுடைய வழிப்பேறுகிய பதமுத்திக்கு ஏறும் வழிகளாகும். அவ்வழியாக அருளால் கடந்து சென்று தனக்குத்தானே ஒப்பாய்த் தன்னிகரின்றி விளங்கும் இயற்கை உண்மை அறிவுப்பேரின்ப உள்ளொளியோடு அருளால் உள்புக்குச் சொல்ல ஒண்ணுத சிவபெருமானைக் கண்டு திருவடி உணர்வால் தெளிவடைந்து அச் சிவனுகவே என்றும் ஒன்றுபோல் அமர்ந்திருந்தனர். மெய்-தத்துவம். அமர்ந்திருத்தல் - சிவன்நிறைவு ஒன்றினையே உணர்ந்து அதன்கண் அழுந்தியிருத்தல். (கச)

171. இருந்தார் சிவமாகி எங்குந்தா மாகி[1]
இருந்தார் சிவன்செயல் யாவையும் நோக்கி
இருந்தார் முக்காலத் தியல்பைக் குறித்தங்கு
இருந்தார் இழவுவந் தெய்திய சோம்பே.

(ப. இ.) மேலோதியவாறே சிவமாகியிருந்த மெய்யடியார் அச் சிவனிறைவில் சமநிறைவாய் நிற்றலினுல் எங்குந் தாமாகி நின்றூர். அச் சிவன் அருளிச் செய்யும் அருளிப்பாட்டினை அவனருளால் கண்டிருந்தனர். இறப்பு நிகழ்வு எதிர்வு என்னும் முக்காலமும் ஒரு புடையாகப் புலம்பு புணர்வு புரிவு என்னும் முந்நிலைகளாகவும் கூறுதல் பொருந்தும். அம் மூன்றன் இயல்புகளையும் நினைவுணர்விற் கண்டிருந்தனர். இருள் மூனைப்பும் மருள்மூனைப்பும் அறுதலாகிய இழவுவந்து அருள்மூனைப்பால் தற்செயலறுதலாகிய சோம்பெய்தியிருப்பர். இருள் மூனைப்பு - யான் என்னும் செருக்கு. மருள் மூனைப்பு - எனதென்னும் செருக்கு. அருள் மூனைப்பு - செருக்கறுதல். புலம்பு - கேவலம். புணர்வு - சகலம். புரிவு - சுத்தம்.

(அ. சி). இழவு - ஒழிவு. சோம்பு - செயலற்றிருத்தல். (கஞ)

172. சோம்பர் இருப்பது சுத்த வெளியிலே
சோம்பர் கிடப்பதுஞ் சுத்த வெளியிலே
சோம்பர் உணர்வு சுருதி முடிந்திடஞ்
சோம்பர்கண் டாரச் சுருதிக்கண் தூக்கமே[2]

(ப. இ.) தற்செயலற்றுச் சிவச் செயலாக இருப்பவர் சோம்பர் எனப்படுவர். அத்தகையார் தங்கியிருப்பது இயற்கை உண்மைத் தூவெளியாகிய சிவவெளியில். அவர் பேரின்பம் நுகர்ந்து கிடப்பதும் அச் சிவ வெளியிலேயேயாம். அவர் உணர்வு மறைக்கும் எட்டாத முடிவிடமாகிய சிவவெளியில் திருவடியுணர்வோடு ஒன்றி ஊழ்ந்துணரும் அவர்கள் மறையாகிய சுருதிக்கண் நினைவறுதலிலையே கண்டனர். ஊழ்ந்துணர்தல் — அனுபவித்தல். இதன்கண் இருப்பது கிடப்பது உணர்வது என்னும் சொற்கிடக்கை முறையான் முறையே அன்பு ஆற்றல் அறிவென்னும் உயிர்ப் பண்பு மூன்றும் சிவத்தின்பால் ஒருங்கு

1. ஏகமாய். சிவஞானபோதம். கக. க - உ.
.. அரக்கொடு. , உ. க - ங.
2. கண்கள். அ. திருப்படையாட்சி, த.
. காணும். சிவஞானபோதம், கக.

நிகழும் உண்மையினை ஒருபுடை யொப்பாக உணரலாம். தூக்கம்: மறை கடந்த இன்பத்துயில் என்றலுமாம். புலனும் உடலுரையிற் போக்கற்றே யுள்ளம் நலனுணர்வில் போக்குவர்; சோம்பர். (கசு)

173. தூங்கிக்கண் டார்சிவ லோகமும் தம்உள்ளே
தூங்கிக்கண் டார்சிவ யோகமுந் தம்உள்ளே
தூங்கிக்கண் டார்சிவ போகமும் தம்உள்ளே[1]
தூங்கிக்கண் டார்நிலை சொல்வதெவ் வாறே.

(ப. இ.) தூங்காமல் தூங்கி அறிதுயிலாய் நிற்கும் மெய்யன்பர்கள் சிவலுலகமும் தம்முளே சிவனை நினைவதாலும் அவன் படைப்பாம் உலகினைத் தம்முனைப்பாக நினையாமையாலும் தம்முட் கண்டனர். உலகைக் காரிய வடிவமாகும் மாயை என்றுமட்டும் கருதாமல் அதனைப் படைத்தருளிய வினைமுதற் காரணனெனப்படும் சிவபெருமானின் திரு வருட் பண்புகளையுந் தெருண்டு தம்முள் கண்டனர். அதுபோலவே சிவனை விட்டுப் பிரியாது ஒட்டிநிற்கும் சிவபோகமும் தம்முள்ளே கண்ட னர். அதுபோல் சிவயோகமாகிய திருவடி நுகர்வினைத் தம்முள்ளே கொண்டனர். அதனால் நிலையா உலகை மறந்து நிலைக்கும் சிவனை உலையாவுணர்வில் உழந்துணர்ந்து நிற்பார் தூங்கிக் கண்டாராவர். அவர்தம் திருவடிப் பேற்றின் பொருவரு நிலையினை ஒருவராலும் கூற வொண்ணு தென்க. தூங்கல் : தூங்காமல் தூங்கல்; அறிதுயில். இது புரிவு நிலையில் நான்காம் நிலை. புரிவுநிலையினைச் சுத்தாவத்தை என்பர். இதன்கண் துரியநிலை நிட்டையே தூங்காமல் தூங்கல்.

(அ. சி.) தூங்கி - செயலற்றிருந்து. (கள)

174. எவ்வாறு காண்பான் அறிவு தனக்கில்லை
அவ்வா றருட்செய்வன் ஆதி யரன்தானும்
ஒவ்வாத மன்றுள் உமைகாண ஆடிடுஞ்
செவ்வானிற் செய்ய செழுஞ்சுடர்மா ணிக்கமே.

(ப. இ.) ஒப்பில்லாத ஐவகை மன்றத்தும் ஆருயிர் நெஞ்சத்தும் ஆருயிர் உய்தற் பொருட்டுச் சிவகாமியம்மையார் கண்டுகளிக்கச் சிவ பெருமான் எப்போதும் திருக்கூத்தாடுகின்றனன். அவன் அறிவு வெளியாகிய செவ்வானிற் காணப்படும் இயற்கைச் செழுமைவாய்ந்த செஞ்சுடர் மாணிக்கமாவன். திருவருள் துணையால் விளக்க விளங்கும் ஆருயிரின் அறிவின் எல்லை சென்ற நிலையின்வண்ணம் ஆதியை யுடைய அரன் அவ்வுயிர்கட்கு அருள் செய்வன். (கஅ)

175. மாணிக்கத் துள்ளே மரகதச் சோதியாய்
மாணிக்கத் துள்ளே மரகத மாடமாய்
ஆணிப்பொன் மன்றினில் ஆடுந் திருக்கூத்தைப்
பேணித் தொழுதென்ன பேறுபெற் றாரே.

---

1. பரையுயிரில். எப்பொருள்வந்' பாதங்கள்.

(ப. இ.) உடையான் மாணிக்கச் செவ்வொளியாய், உடையாள் மரகதப் பச்சொளியாய்க் கலந்து விளங்குவர். அதனுல் மாணிக்கத்தினுள்ளே மரகதச் சோதியாய் என்றனர். அம்மையே அப்பனுக்குத் திருமேனியாதலின் மரகத மாடத்துள்ளே மாணிக்கம் என்றனர். ஆருயிர்கட்கு அச்சுப்போல் தாங்கும் தாங்கியாய் நிற்றலின் ஆணிப் பொன் அம்பலத்து ஆடுந் திருக்கூத் தென்றனர். அத் திருக்கூத்தினை உள்ளத்தாற் பேணி, உரையால் வாழ்த்தி, உடம்பால் திருமுறை வழித் தொழுதவர் பெற்ற பெரும் பேற்றினை என்னென்று சொல்வது? இவ் வளவு என்று அளவிட்டுச் சொல்லொணு தென்க. (கக)

176. பெற்றூர் உலகிற் பிரியாப் பெருநெறி
பெற்றூர் உலகிற் பிறவாப் பெரும்பயன்
பெற்றூர்அம் மன்றிற் பிரியாப் பெரும்பேறு
பெற்றூர் உலகுடன் பேசாப் பெருமையே.

(ப. இ.) உலகிற் பிரியாப் பெருநெறி என்பது என்றும் இறவாத இன்ப அன்புநெறி. அதுவே சிவநெறி; செந்நெறி; நன்னெறி; திரு நெறி; ஒளிநெறி; வீட்டுநெறி; பொதுநெறி என்ப. திருவடியுணர்வு கைவந்த பெருமக்கள் அருளால் அந்நெறியினைப் பெற்றனர். அதன் பயனுக அவர்கள் பிறவாப் பெரும் பேறு பெற்றனர், திருவடியுணர்வே பொருவருமன்றம். அம் மன்றிற் பிரியாப் பெரும்பேறே பேரின்பம். அதனையும் அவர்கள் பெற்றனர். அதனுல் அவர்கள் உலகிறந்த ஒருவர் என்றும், உலகுடன் பேசாப் பெருமையரென்றும் உரைபெறுவாராயினர். உரை-புகழ். அம் மெய்யடியார்கள் தேனுண்ட வண்டெனச் சிவன் திருவடியில் நுகரும் இன்பம் உலகிற்குச் சொல்ல ஒண்ணு தென்க. பெருநெறி - திருவடியுணர்வு நெறி.

(அ. சி.) பிரியா...நெறி - முத்தி. பெற்றூர்...பெருமையே - மது வுண்ட வண்டுகள்போல் தாம் கண்டு அனுபவிப்பதே விள்ளமுடியாத பெருமை. (உ0)

177. பெருமை சிறுமை அறிந்தேம் பிரான்போல்
அருமை எளிமை அறிந்தறி வாரார்
ஒருமையுள் ஆமைபோல்[1] உள்ளங் தடக்கி
இருமையுங்[2] கேட்டிருந் தார்புரை அற்றே.

(ப. இ.) ஒரு பிறப்பினுள் ஆமையினைப் போன்று தமக்கு இடர் வரும் நெறியில் ஐம்புலனையும் போக விடாது, இடரில் இன்பமே கடலெனப் பெருகும் நன்னெறியிற் போகச் செய்வதே புலனடக்கம் ஆகும். அங்ஙனம் புலனடக்கியவர்களே புலவோராவர். அவர்கள் எம்பிரான் அருளால் அடக்கப்பெருமையின் பயனுகக் கிடைத்தற்கு அரிய பிறவாச்சிறப்பினை எய்துவர். புலனடங்காப் புன்மையோர் அடங் காமையின் பயனுகச் சிறுமையுற்று எளியராய்ப் பிறப்பு இறப்புக்கு உட் படுவர். புரையாகிய ஐம்புலனடக்காக் குற்றமுடையார் பிறப்பும் சிறப்பும்

1. ஒருமையுள். திருக்குறள், கஉசு.
2. ஒரு பிறப்பி. அப்பர், சு. கூ-இ.

ஆகிய இரண்டினையும் கேட்டுப் பிறப்புக்கே ஆளாகி வாளா இருப்பர். அக் குற்றமற்றவர் சிறப்புக்கு ஆளாகி அறப்பயன் சேர் பெரியரா யிருப்பர். இருந்தார் : (குற்றமற்று) வாய்வாளாதிருந்தார் என்றலும் ஒன்று. சிறப்பு - வீடுபேறு. புரை - குற்றம். (உச)

178. புரையற்ற பாலினுள் நெய்கலந் தாற்போல்
திரையற்ற சிந்தையுள் சிவனவன் செப்பும்
உரையற் றுணர்வோர் உடம்பிங் கொழிந்தால்
கரையற்ற சோதி கலந்தசத்[1] தாமே.

(ப. இ.) அமிழ்துமோராகிய புரை கலவாத பாலினுள் நெய் மறைந்து வெளிப்படா திருப்பது போல் ஏனையார் உள்ளத்துள் ஒளிந்து நிற்கும் சிவபெருமான் பதைப்பாகிய அலையற்ற ஆருயிரின் தூய தெஞ்சத் தினுள் தயிரின் நெய்போல் வெளிப்பட்டருள்வன். அவன் சிவகுருவாய் வந்து அருளிச் செய்யும் திருவைந்தெழுத்தின் வழியே உரையற்று உணர்வோர் உடல் அருளால் இங்கு நீங்கும். நீங்கினுல் எல்லையில்லாத திருவருள் ஒளியில் அவ்வுயிர் கலக்கும். கலந்து அழிந்து ஒன்றுகாமலும் கழிந்து இரண்டாகாமலும் உழந்துணர்ந்து அவ்வுண்மையோடு புணர்ந்து உண்மையாகவே நிற்கும். சத்து : நிலைத்தது ; புக்கில்லாகிய திருவடிப் பேறு பெற்று வாழ்வது. உரை - பேச்சு. உணர்தல் - நினைதல்.

(அ. சி.) புரையற்ற பால் - புரை குத்தாத பால். உரையற்றுணர் வோர் - மவுன நிலையுற்றுச் சிவம் நினைவோர். (உஉ)

179. சத்த முதல்ஐந்துந் தன்வழித் தான்சாரில்
சித்துக்குச் சித்தன்றிச் சேர்விடம் வேறுண்டோ[2]
சுத்த வெளியிற் சுடரிற் சுடர்சேரும்
அத்தம் இதுகுறித் தாண்டுகொள் அப்பிலே.

(ப. இ.) சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் பூதமூதலாகிய தன்மாத்திரைகள் ஐந்தும் ஒடுங்கும் முறையில் ஒன்றனுள் ஒன்றாய் மூப்பத்தாறு மெய்யும் ஒடுங்கும். இவற்றாலாகிய உடம்பு உலகங்களில் வாழ்ந்தவுயிர் அறிவுடைய உள்பொருள். அவ்வுள் பொருளுக்கு உடற் சார்பு நீங்கினுல் அவ்வுயிர்க்கு என்றும் அறிவு விளக்கும் உயிர்ச்சார்பாம் சித்தாகிய பேரறிவுடைய சிவமே நிலைத்த சார்பாகும். அஃதல்லாமல் சேரும் இடம் வேறில்லை. திருவருள் வெளியில் விளக்க விளங்கும் அறி வொளியாகிய உயிரும் தானே விளங்கும் பேரறிவொளியாகிய சிவனும் ஓரினச் சுடராகலின் ஒன்று சேரும். அத்தமாகிய மெய்ப்பொருட் சிவன் அப்பாகிய அருளாலே இதனைத் திருவுளங்கொண்டு ஆண்டு கொள்வன். தன்வழி - தன்மாத்திரையின் இனவழியாகிய மாயையில். அத்தம் - மெய்ப்பொருள். (உக)

---

1. புண்ணியமே. சிவஞானசித்தியார், அ. உ - உக.
2. சிறை செய்ய. சிவஞானபோதம், அ. ச - க.
உறுகயி. அப்பர், சு. உஎ - சு.

**180.** அப்பினிற் கூர்மை ஆதித்தன் வெம்மையால்
உப்பெனப் பேர்பெற் றுருச்செய்த[1] அவ்வுரு
அப்பினிற் கூடிய தோன்றுகு மாறுபோற்
செப்பினிற் சீவன் சிவத்துள் அடங்குமே.

(ப. இ.) அப்பாகிய தண்ணீரில் அதன்கண் விரவி நுண்ணிதாகி அடங்கிநிற்கும் உப்பு கூர்மையெனப்படும். அக் கூர்மை ஞாயிற்றின் வெம்மையால் பிரிந்து உப்பெனப் பெயர் பெறும். அவ் வுப்பினுல் ஓர் உருச்செய்து மீண்டும் அவ் வுருவினை அந் நீரினில் கரையவிட்டால் நீருடன் கலந்து வேறு தோன்றுது ஒன்றாய் அடங்கிநிற்கும். அதுபோல் சொல்லுமிடத்து ஆவி சிவத்துள் அடங்கும். இவ்வொப்புச் சிவஞான போதத்தின்கண் ஏழாம் நூற்பாவில் மூன்றும் கூற்றில் 'மெய்ஞ்ஞானம்' என்னும் எடுத்துக் காட்டு வெண்பாவில் மலமும் உயிரும் கலந்த கலப்புக்குக் காட்டப்பட்டுள்ளது. எங்ஙனமாயினும் இருபொருள் ஒன்றாய்க் கலந்து ஒன்றினுள் ஒன்று அடங்கி இரண்டுங்கெடாது ஒன்றாய்த் தோன்றுதற்குப் பொருத்தமான ஒப்பு[2] இதுவென்க.

(சீ. சி.) கூர்மை - உப்புத்தன்மை. (உசை)

**181.** அடங்குமே ரண்டத் தணுஅண்டஞ் சென்றங்
கீடங்கொண்ட தில்லை இதுவன்றி வேறுண்டோ
கடந்தொறும் நின்ற உயிர்கரை காணில்
திடம்பெற நின்றுன் திருவடி தானே.

(ப. இ.) எல்லாம் அடங்கும் இயல்பு வாய்ந்த பேரண்டத்தினுள் சிறிய அண்டங்கள் சென்று ஒன்றாய்ப் பின்னிக் கலந்து இடங் கொண்ட தில்லை. இத்தன்மையன்றி மாயா காரிய அறிவில்பொருள்களுக்கு வேறொரு நிலையும் இல்லை. உடல்தொறும் நின்ற உயிர் திருவருளாற் சென்றுசார் கரையினை எண்ணும். எண்ணிக் காணுங்கால் மாறுதல் இன்றி ஏனைய உயிர்களும் தன்னைப்போல் உறுதிபெற உன்னும். உன்னி என்றும் ஒன்றுபோல் நிற்பதன் பொருட்டு நிலைபெற்று நின்ற சிவபெருமான் திருவடியே அளவிலாக் கரையாகும் என்னும் உண்மை கடைப் பிடிக்கும். அண்டஞ் சென்று - விண்ணிற் புகுந்து எனலுமாம். இடம் - வேறிடம். கரை - வீடுபேற்றெல்லை. (உஞ)

**182** திருவடி யேசிவ மாவது தேரில்
திருவடி யேசிவ லோகஞ்சிந் திக்கில்
திருவடி யேசெல் கதியது செப்பில்
திருவடி யேதஞ்சம் உள்தெளி வார்க்கே.

(ப. இ.) திருவருள் உணர்த்த முப்பொருள் உண்மையினை நன்னெறி நான்மையின் வழிநின்று திருவைந்தெழுத்தின் வைத்து

1. சிவனெனவே, திருக்களிற்றுப்படியார், கக.
2. ஆணவத்தோ, தாயுமானவர், கசு. நிற் - உஅ.

உணரும் உணர்வுத் தெளிவுடையார் தேரில் அவர்க்குத் திருவடியே சிவமாகும். தேரில் என்பது புறத்து ஆய்ந்துணரின் என்பதாகும். அகத்து நாடில் திருவடியே சிவலோகம் ஆகும். உணர்ந்து உரைக்கில் திருவடியே செல்லு நிலையாகும். உணர்ந்து தெளியில் திருவடியே என்றும் பொன்றுப் புகலிடத் தஞ்சமாம் என்க. ஏகாரம்: பிரிநிலை; தேற்றம் எனினுமாம். நான்மை: சீலம், நோன்பு, செறிவு, அறிவு. (உசு)

183. தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவருச் சிந்தித்தல் தானே.[1]

(ப. .இ) திருவருளால் திருவடித் தெளிவினை அருளும் சிவகுருவின் திருமேனி காண்டல் தெளிவினில் சீலமாகும். அவர்தம் திருப் பெயரினைத் திறம்பட நாளும் சொல்லுதல் தெளிவினில் நோன்பாகும். அச்சிவகுரு செவியறிவுறுத்தருளிய திருவைந்தெழுத்தைச் சிறப்புற உளங்கொளக் கேட்டல் தெளிவினில் செறிவாகும். அச் சிவகுருவின் உண்மை நிறைவாகிய திருவுருவினை உடன் கலந்து நாடல் தெளிவினில் அறிவாகும். தெளிவு - ஞானம். தெளிவினில் சீலம் என்பது ஞானத்தில் சரியை என்பதாம். இப்படியே மற்றவற்றையும் கூறிக் காண்க. காண்டல் செப்பல் என்னும் இரண்டும் புறமாகவும், கேட்டல் சிந்தித்தல் இரண்டும் அகமாகவும் கொள்க. (உஎ)

184. தானே புலன்ஐந்துந் தன்வச மாயிடும்
தானே புலன்ஐந்துந் தன்வசம் போயிடும்
தானே புலன்ஐந்துந் தன்னில் மடைமாறும்[2]
தானே தனித்தெம் பிரான்தனைச் சந்தித்தே[3]

(ப. .இ) ஒப்பில்லாத நம் தலைவனுகிய சிவபெருமானைத் திருவருளால் திருவடியுணர்வு கொண்டு சந்திப்பதாகிய உணர்வினில் நேர்ந்த விடத்து எளிதாக மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஐம்புலனும் நம் வயமாகிவிடும். முன்பு அவ் வைம்புலன்களும் நம்மை அவற்றின் வயமாக்கி வினைக்கீடாக ஆட்டின. அவ்வாட்டுதல் இப்பொழுது அகன்றொழிந்தது. அவ் வைம்புலன்களும் முன்னர் இருள்வழி நின்று பிறப்புக்கு வித்தாம் நிலையாப் பொருள்களில் வேட்கை கொள்ளுவித்தது. அது மாறி இப்பொழுது அருள்வழி நின்று சிறப்புக்கு வித்தாம் நிலைத்த பொருளாம் திருவடியில் வேட்கையினை விளைவிக்கும் தனித்தென்பது; ஆருயிர் தன்னை அவ் வைம்புலன்களில் வேறு எனக் காண்ப தென்ப தாகும். சந்தித்து - இறைவனைக் கண்டு. (உஅ)

1. கருவ. அப்பர், தி. கூ - நி.
,, ஐம்புல. சிவஞானபோதம், அ.
,, கேட்டலுடன். சிவஞானசித்தியார், அ. உ. கச.
2. மாயைமா. சிவப்பிரகாசம், எ. உ.
,, சிறைசெய்ய. சிவஞானபோதம், அ. சு - க.
3. இந்திரியம். சிவஞானசித்தியார், கூ - உ - க.

185. சந்திப் பதுநந்தி தன்திருத் தாளிணை
சிந்திப் பதுநந்தி செய்ய திருமேனி
வந்திப் பதுநந்தி நாமம்என் வாய்மையால்
புந்திக்குள் நிற்பது நந்திபோற் போதமே.[1]

(ப இ.) நல்லார் இணக்கத்தால் நாளும் நாம் உளங்கொண்டு நேர்வது திருத்தாளிணையாகிய திருவருளே. அத் திருவருள் துணையாகில் உணர்வின்கண் ஒளாது நாடுவது சிவபெருமானின் திருமேனியாகிய திருவைந்தெழுத்தே. வாயாரப் புகழ்வது நன்னெறி நான்மைக்கும் வாய்ப்ப அமைந்த திருவைந்தெழுத்தேயாம். நான்மை என்பது சீலம் நோன்பு செறிவு அறிவு என்பதாம். இவற்றிற்கு முறையே நம சிவய, சிவயநம, சிவயசிவ, சிவசிவ என்னும் திருவைந்தெழுத்துக்களேயாம். இத் திருவைந் தெழுத்தின் தெளிவாகிய சிவஞான போதமே நந்தி பொற்போதமாகும். அப் போதமே நம் உணர்வுக்குள் உணர்வாய் நம் அறிவினுள் நிலைபெறுவதாகும்.

(அ. சி.) நந்திநாமம் - அஞ்செழுத்து. பொற்போதம் - பொன் போன்ற சிவஞானபோதச் சூத்திரங்கள் பன்னிரண்டுமே. (உசு)

186. போதந் தரும்எங்கள் புண்ணிய நந்தியைப்[2]
போதந் தனில்வைத்துப் புண்ணிய ராயினர்
நாதன் நடத்தால்[3] நயனங் களிகூர
வேதந் துதித்திடப் போயடைந் தார்விண்ணே[4].

(ப. இ.) சிவஞான போதத்தைச் செந்தமிழால் அருள்செய் தளிக்க நிற்பவன் நம் தவப்பேறுகிய புண்ணிய நந்தி. அவனருளால் ஆருயிர் உணர்வில் அகந்தழீஇ வைத்த புண்ணியராயினர். அனைத்துயிரானும் நத்தும் தன்மையராவர். அவர்கள் நாதன் என்னும் திருப்பெயர் பூண்டனர். அகம் புறம் காண்பார் காட்சிக் கண்கள் மிகவும் களிப்பினை எய்தச் செந்தமிழ்த் திருமறை போற்றினர். தூய விண்ணகிய சிவவுலகினை அடைந்தனர். வேதம் - இறைவன் நூல், இதன்கண் அடைந்தார் என் பதனால் உண்மையும், போதம் என்பதனால் அறிவும், களிகூர என்பதனால் இன்பமும் பெறப்படும். எனவே ஆவி எய்தும் 'உண்மை அறிவு இன்ப, உயர்வற உயர்ந்த ஒண்மை வண்மைச் சிவன்நிலை பெறப்படும்.

(அ. சி.) போத நந்தியை-தமிழ்ச் சிவஞான போதப் பன்னிரண்டு சூத்திரங்களையும் உபதேசித்த நந்தியை. போதந்தனில் - தெளிந்த சிந்தையினிடத்து. (கo)

---

1. பரஞானத். சிவஞானசித்தியார், கக - உ.
2. முந்தியிருந்தாயு. அப்பர், கூ. சக - டு
3. எட்டும். ஆடும். சேர்க்கும், உண்மை விளக்கம், கூ - ச.
4. ஏற்ற தொண்டரை, கூ - வெள்ளாணை, கூ.

# 2. யாக்கை நிலையாமை

187. மண்ணொன்று கண்டீர் இருவகைப் பாத்திரந்
திண்ணென் றிருந்தது[1] தீவினை சேர்ந்தது
விண்ணின்று நீர்வழின் மீண்டுமண் ணாஞற்[2] போல்
எண்ணின்றி மாந்தர் இறக்கின்ற வாறே.

(ப. இ.) ஒருவகையான மண்ணே இருவகைக் கலமாகும்: ஒன்று தீயினைச் சேர்ந்து வன்மையாக இருந்தது. மற்றொன்று தீயினைச் சாராது தன்னியல்பாய்ப் பசுமண்ணுய் மென்மையாக இருந்தது. இது தீவினை சேர்ந்தது. விண்ணில் நின்று மழைநீர் விழுந்தால் தீயினைச் சாராத பசுமட்கலம் அழிந்து மீண்டும் மண்ணாகும். தியினைச் சார்ந்த கலம் அழியாது நிலைபெற்று நிற்கும். தியினைச் சாராத கலம் போன்றது. திருவருள் வழி நில்லாத உடம்பு. அது தன்னகத்துள்ள ஆவி உறுதிப் பயனுகிய சிவத்தன்மை எய்துதற்கு வாயிலாகாமல் மீண்டும் பிறப்பதற்கு வாயிலாகி அழிகின்றது. அவ்வுடம்பினைக் கழித்து எண்ணிறந்த மாந்தர் இறந்தொழிகின்றனர். தீ - சிவபெருமான். நீர் - திருவருட் செல்வி. சிவபெருமான் திருவடி நினைவினையுடையார் மீண்டும் பிறவார். அந்நிலை மாறு உறுதியான திண்ணென்ற அருள்நிலை. அதற்கு வாயிலாகிய சிவனுடைமையாம். இவ் உடம்பும் ஏற்றுரையான் திண்ணென்றிருக்கும் எனப்பட்டது. ஏற்றுரை - உபசாரம். (க)

188. பண்டம்பெய் கூரை பழகி விழுந்தக்கால்
உண்டஅப் பெண்டிரும் மக்களும் பின்செலார்
கொண்ட விரதமும் ஞானமும் அல்லது
மண்டி அவருடன் வழிநட வாதே.

(ப. இ.) வினைநுகர்வுப் பண்டங்களைப் பெய்துவைத்து மேற் கூரையும் அமைத்து நன்மையும் வன்மையும் உள்ளனபோற் காணப் படும் இவ்வுடல் நாட்பட மூப்புப் பிணியுற்றுச் சாக்காட்டினை எய்தும். எய்தவே, இவ்வுடலாலும் உடலுழைப்பாற் பெற்ற உடைமையாலும் ஐம் புலன் நுகர்வு ஆரத்துய்த் தின்புற்ற பெண்டிரும் மக்களும் தத்தம் உடம்பினை நீக்கி அவ் ஆவியுடன் பின்செல்லார். ஆயின் செந்நெறி யாகிய நன்னெறிக்கண் நின்று மேற்கொண்ட திருவருளால் எய்தும் சீலமும் திருவடியுணர்வுமே உடன் துணையாய் ஒத்து வழி நடக்கும். ஏனைய உலகியற் பொருள்களும் ஆக்கப்பாடுகளும் நிலைத்த துணையாக அவ்வழியில் நடவாவென்க. சீலமும் அறிவும் சொல்லவே இனக்கோளாக நோன்பும் செறிவும் கூட்டிக் கூறிக்கொள்க.

(அ. சி.) பண்டம்...விழுதலால் - உயிர் நீங்கி உடல் கீழே வீழுதலால். மண்டி - சேர்ந்து. (உ)

---

1. மண்ணுலகும். ஆசிரர், எ. சசு-கூ.
2. சலத்தால் - திருக்குறள், சுகூ0.

189. ஊரேலாங் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்[1]
சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பொழிந் தார்களே.

(ப. இ.) ஆவி நீங்கிய உடல் ஊர்முனி பண்டமாகும். ஆவி நீங்கியதும் அவ்வுடம்பினைச் சூழ்ந்திருந்து உறவோடு ஊரெலாம் ஒன்று கூடியழுவர். முறைப்பெயர் சிறப்புப்பெயர் முதலிய பெயர்களை ஒழித்துப் பிணமென்று பெயரிடுவர். பெயரிட்டு முட்செடியாகிய சூரையடர்ந்த சுடுகாட்டிற்குக் 'காலைக் கரையிழையாற் கட்டித்தாங் கையார்த்து, மாலை தலைக் கணிந்து மையெழுதி - மேலோர், பருக்கோடி மூடிப் பலரழ' (கக. ஐய்டிகள் - சு) எடுத்துச் செல்வர். சென்று அவ்வுடம்பினை ஈமத்தேற்றி வாய்க்கரிசியிட்டுக் குடமுடைத்துக் கொள்ளி வைத்து எரிகொளீஇச் சுடுவர். சுட்டபின் நீரின் மூழ்கி இறந்தவரைப் பற்றியேனும் இனி இறக்கப் போகும் தம்மைப் பற்றியேனும், இதற்கு வாயில்களாகவுள்ள நிலையாமை, மாயை, வினை, மலங்களைப் பற்றியேனும் ஒரு சிறிதும் நாடாது நினைப்பொழிந்திருப்பர். (கூ)

190. காலும் இரண்டு முகட்டலக் கொன்றுள
பாலுள் பருங்கழி மூப்பத் திரண்டுள
மேலுள கூரை பிரியும் பிரிந்தால்மூன்
போலுயிர் மீளப் புகஅறி யாதே.[2]

(ப. இ.) உடம்போடு கூடிய உயிர் உறையும் இல்லம்போல் இவ்வுடம்பினையும் ஓர் இல்லமாக உருவகிக்கின்றனர். காலிரண்டு, முகட்டுச் சட்டம் ஒன்று. பக்கத்திலுள்ள பெரிய கழிகள் முப்பத்திரண்டு, மேலுள்ள கூரை ஒன்று. ஆகியவற்றோடு கூடிய உடம்பு ஓர் உழலும் இல்லமாகும். இவ்வில்லத்தில் ஆவி நீங்குங்கால் உச்சித்துளை வாயிலாக வீங்கற் காற்று நீங்கப் பிரியும். பிரிந்தால் முன்போல் உயிர் அவ்வுடலகத்துப் புகும்வாயில் அறியாது வீங்கற்காற்று - தனஞ்செயன். நம் முடைய கால்களிரண்டும் வீட்டின் முகட்டுச் சட்டம் அமைக்கும் இரண்டு கால்களை ஒக்கும். முதுகெலும்பு முகட்டுச் சட்டத்தினை ஒக்கும். கழிகள் முப்பத்திரண்டும் இருபக்கங்களிலும் முதுகெலும்புடன் பொருந்தி இணைக்கப்பட்ட முப்பத்திரண்டு பக்க எலும்புகளை ஒக்கும். மேலுள்ள கூரை தலைமயிரினை ஒக்கும்.

(அ. சி.) பாலுள் - பக்கங்களில், விலாவில். (எ)

191. சீக்கை விளைந்தது செய்வினை மூட்டிற்ற
ஆக்கை பிரிந்த தலகு பழுத்தது
மூக்கினிற் கைவைத்து மூடிட்டுக் கொண்டுபோய்க்
காக்கைக்[3] குப்பலி காட்டிய வாறே.

---

1. மணமென. ஆரூரர், எ. அ-சு.
,, தொட்டுத். கக. ஐயடிகள். அ.
2. கால்கொடுத். அப்பர், ஈ. நகூ-ச.
,, கால்கொடுத் தெலும்பு. அப்பர், ச, கஎ - கூ.
3: பூக்கைக்கொண், ,, இ - கo - இ.

(ப. இ.) ஆவி ஆக்கையை விட்டு அகலுங்காலத்து ஐம்மேலுந்தும். ஐ - கோழை. அதுவே சீக்கை எனப்பட்டது. அக் கோழையும் மிகுந்தது. ஊழ்வினைமூட்டு இற்றது. அதனால் ஆக்கையாகிய் உடம்பும் பிரிந்தது. பக்கங்களிலுள்ள முப்பத்திரண்டு பழுக்களும் பயனற்றுப் பழுத்தன; ஆவி அகத்ததோ புறத்ததோ என்று அறிதற் பொருட்டுக் கிடக்கும் உடம்பின் மூக்கின்மேல் கைவைத்து உயிர்ப்பு உளதா என்று பார்ப்பர். உயிர்ப்பு நின்று விட்டது கண்டதும் உடலினைத் தூய வெள்ளிய ஆடையினால் முற்றுக மூடிக்கொண்டுபோய்ச் சுடுகாட்டிலிடுவர். ஆங்குச் செய்கரணங்களுள் காக்கைக்குப் பலியிடுதலும் ஒன்று. அதனையும் காட்டுவர். கரணம் - சடங்கு உடம்பினைப் புறச் சமயத்தோர் சுடாது காக்கை முதலியவற்றிற்குப் பலியாக இடுவது போன்றதன்று இப்பலி. இது சோறு முதலியவற்றைக் காக்கைக் கிடுவது.

(அ. சீ.) சீக்கை விளைந்தது - உயிர் உடலினின்றும் பிரியுங்காலம் நேர்ந்தது. செய்வினை மூட்டிற்ற - ஊழ் கழிந்தது. மூக்கினில் கை வைத்து - உயிர் இருக்கிறதா? இல்லையா? என்று மூக்கினில் கை வைத்துப் பார்த்தல். காக்கைப் பலி - ஈமக்கடன் செய்யும்போது பிண்டமிட்டுக் காக்கைகளுக்குப் போடுதல். (ஙி)

192. அடப்பண்ணி வைத்தார் அடிசில உண்டார்
மடக்கொடி யாரோடு மந்தணங் கொண்டார்
இடப்பக்க மேஇறை நொந்தது என்னூர்
கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந் தாரே.

(ப. இ.) இன்னின்ன வகையான சுவையுணவு வேண்டுமென விழைந்து கூறிச் சமைப்பித்து வைத்தனர்: அவ்வுணவினை அமர்ந்து இல்லாள் ஊட்ட மகிழ்ந்து உண்டனர். அகத்துள்ள கற்பிற் சிறந்த பொற்புறு மனைவியாருடன் மறைமுறைச் சூழ்வினையைத் தம்பயன்நாடிச் சூழ்ந்தனர்; அவ்வளவில் ஐயோ உயிர் நிலைக்களமாகிய நெஞ்சஞ்சேர் இடப்பக்கம் சிறிது நொந்ததே என்றனர். கைத்தாங்குதலாகக் கிடத்தப் படுத்தனர். ஒரே கிடப்பாய் அப்பொழுதே இறந்தொழிந்தனர். இறை - சிறிது. இஃது 'இறைகளோ டிசைந்த இன்பம்' என்பதன் கண்ணும் காண்க.

(அ. சீ.) அடப்பண்ணி வைத்தார் - பலகாரம் செய்தார். மந்தணம் - மந்தனம் என்ற சொல்லின் திரிபு; மந்தனம் - ஆலோசனை. (சு)

193. மன்றத்தே நம்பி மாடம் எடுத்தது
மன்றத்தே நம்பி சிவிகை[1]பேற் றேறினன்
மன்றத்தே நம்பி முக்கோடி வழங்கினன்
சென்றத்தா வென்னத் திரிந்திலன் தானே.

(ப. இ.) நம்பி திருமணத்தின் பின் மனையறம் புரக்கப் புதுமாடம் எடுத்தனன். திருமணம் பலர் நடுவே நிகழ்வதால் அது மன்றம் எனவழைக்கப் பெறும். பலர்க்கும் கல்வி கலியாணம் நில்லாவுலகம் நீங்கு

1. அரீசனம். சிவஞானசித்தியார், உ-உ-கூஉ.

மெல்லே ஆகிய மூவிடத்தும் கோடி வழங்கினன். கோடி - புது உடை: இறுதிக் காலத்து மக்கள் முதலாயினர் அன்பும் அழுகையும் துன்புமாய் நின்று அத்தா என்று அலறி அழைத்தனர். சிறிதும் புரண்டிலன்: என்னென்றும் கூறிலன். பலர் நடுவே தெருவில் ஆட்சுமை யூர்தியாம் பல்லக்கேறி ஒல்லேச் சுடுகாடேகினன். (எ)

194. வாசந்தி பேசி மணம்புணர்ந் தப்பதி
நேசந் தெவிட்டி நினைப்பொழி வார்பின்னை
ஆசந்தி மேல்வைத் தமைய அழுதிட்டுப்
பாசந்தீச் சுட்டுப் பலியட்டி னூர்களே.

(ப. இ.) வாயினுல் அழகிய இனிய உறுதி உரைகளைப் பேசி நல்லாரை மணந்தனர். பின்பு, மணந்தார் ஒருவரையொருவர் அன்பு போதுமென அமைந்து அறவே நீங்கப்பொழிவர். நீங்கப்பொழிந்து மாளுதலும் சுற்றத்தார் கால்கழி கட்டி லாகிய ஆசந்தியில் வைத்தெடுத்து அழுதிட்டுச் சுடுகாட்டில் கொண்டு போய்த் தீயிட்டுச் சுடுவர். காக்கைக்குப் பலியிடுவர். கால்கழித்தல் - காலில்லாது ஏணிபோலிருத்தல்; இது மணமாகா திறந்தார்க்குரியது: வழியிலா ரென்பது குறிப்பு. (அ)

195. கைவிட்டு நாடிக் கருத்தொழிந் தச்சற
நெய்யட்டிச் சோறுண்ணும் ஐவரும் போயினர்
மையிட்ட கண்ணுளும் மாடும் இருக்கவே
மெய்விட்டுப் போக விடைகொள்ளு மாறே.

(ப. இ.) மைதீட்டிய கண்ணையுடைய மனையாளும் மக்கள் முதலிய செல்வங்களும் தக்கவாறு இருக்க ஆவி உடம்பினை விட்டுப் போகுங்காலம் நிகழும் வழிவகைகள் எவ்வாறெனில்? வளிமுதலா எண்ணிச் சொல்லப்படும் வாத பித்த சிலேட்டுமம் என்னும் உடம்பாகிய வீட்டுக்குரிய நாடிகள் மூன்றும் கைவிடும். விடவே உயிரின் கருத்தழியும். உயிர் அச்சறுதலாகிய நீங்குதலைச் செய்யும். செய்யவே நெய்யாற் சமைத்த சோற்றை நாளும் உய்யலாமென்று விலாப்புடைக்க உண்டு வளர்ந்த உடம்பாகிய ஐம்பூதமும் பிரிந்து ஒழியும். ஐவர் என்பதற்கு ஐம்பூதங்களேயன்றி ஐங்காற்றுக்கள் என்றலுமொன்று. அவை, உயிர்க்காற்று, மலக் காற்று, தொழிற்காற்று, ஒலிக்காற்று, நிரவு காற்று என்பன. இவற்றைப் பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன் எனவுங் கூறுப.

(அ. சி.) அச்சு அற - உயிர் நீங்க. ஐவர் - ஐம்பூதங்கள். (கூ)

196. பந்தல் பிரிந்தது பண்டாரங் கட்டற்ற
ஒன்பது வாசலும் ஒக்க அடைந்தன[2]
துன்புறு காலந் துரிசுவர மேன்மேல்
அன்புடை யார்கள் அழுதகன் றூர்களே.

---

1. வெள்ளே. புறம் - உஅசு.
2. எண்ணுகேன். அப்பர், சு. கூகூ - உ.

(ப. இ.) உடம்பாகிய பந்தல் திடமொழிந்து நலிந்து மெலிந்து பிரிந்தது. உடம்பினை நடத்தும் பண்டாரமாகிய உயிர் அவ்வுடலுடன் பிணைந்து நிற்கும் கட்டற்று நின்றது. அவ்வுடம்பின்கண் காணப்படும் ஒன்பது வாயிலும் ஒருமிக்க அடைத்துக்கொண்டன. அனைவரும் துன்பம் எய்தும்படியான முடிவு காலம்வரை அன்புடையவர்கள், மேலும் மேலும் அழுது நீங்கினர். ஆவியும் பிரிந்தகன்றது.

(அ. சி.) பந்தல் பிரிந்தது - உடல் கட்டுக் குலைந்தது. பண்டாரம் - உயிர் நிலை. துரிசு - முடிவு. (கo)

197. நாட்டுக்கு நாயகன் நம்மூர்த் தலைமகன்
காட்டுச் சிவிகையோன் றேறிக் கடைமுறை
நாட்டார்கள் பின்செல்ல முன்னே பறைகோட்ட
நாட்டுக்கு நம்பி நடக்கின்ற வாறே.

(ப. இ.) பெருநிலம் ஆளும் பொருவில் வேந்தன். நம்பேரூராம் கோநகர்த் தலைமகன். முன்னர்க் கரி பரி தேர் ஏறிச்செல்லும் அவனே இப்பொழுது சுடுகாட்டுக்கு எடுத்துச் செல்லும் ஆட்சுமை ஊர்தியாகிய சிவிகை என்னும் பாடையின் மேல் ஏறிச் சென்றனன். இறுதி முறையாக நாட்டவர்கள் பின் சென்றனர். முன்னே நெய்தற் பறை முதலிய வாத்தியங்கள் கொட்டப்பட்டன. இதுவே நாட்டுக்கு நம்பி நானிலம் விட்டு மேனிலம் எய்தப் பாடுபட்டுக் கூடுவிட்டுப் போகும் முறையாகும்.

(அ. சி.) நாடு - தேகம். காட்டுச் சிவிகை - பாடை; சுடுகாட்டுக்குச் செல்லும் சிவிகை. (கக)

198. மூப்பதும் மூப்பதும் மூப்பத் தறுவருஞ்
செப்ப மதிளுடைக் கோயிலுள் வாழ்பவர்
செப்ப மதிளுடைக் கோயில் சிதைந்தபின்
ஒப்ப அனைவரும் ஓட்டோடுத் தார்களே.

(ப. இ.) மூன்று முப்பது தொண்ணூறு அதனுடன் சேரும் ஆறு ஆகிய தொண்ணூற்றாறு மெய்களும் செம்மையாக அமைக்கப்பெற்ற மதில் முதலியவற்றையுடைய கோட்டைபோன்ற உடம்பினுள் வாழும். அச் சிறந்த உடம்பாகிய கோவில் சிதைவுற்றால் அப்பொழுதே அத் தொண்ணூற்றாறு மெய்களும் சார்பின்மையால் ஓட்டோடுக்கும் என்க.

(அ. சி.) முப்பது முப்பது முப்பத்தறுவரும் - கக தத்துவங்களும். செப்பமதிளுடைக்கோயில் - தேகம். (கஉ)

199. மதவூர் குழலியும் மாடும் மனையும்
இதவூர் ஒழிய இதணம தேறிப்
போதவூர் புறஞ்சுடு காடது நோக்கி
மதவூர வாங்கியே வைத்தகன் றார்களே.

---

1. அரிசனம். சிவஞானசித்தியார், உ. சை.
,, சென்றே. நாலடி, - உசை.
2. துருத்தியாங். அப்பர், சை, உடு - சை.

(ப. இ.) தாம் வாழ்ந்ததாகிய இவ்வூரகத்துக் குழலினும் யாழினும் பிக்க இனிமை வாய்ந்த சொல்லினையுடைய தம்மக்களும், வருந்தித் தேடியீட்டிய பெரும் பொருளும், திருந்திய மனைவியும் அழுது நொந்தொழிய விமானமாகக் காட்டுச் சிவிகையினை ஏறி ஊர்ப் பொதுவாயுள்ள புறங்காடு எனப்படும் சுடுகாடு நோக்கி இறந்தார் புறப்பட்டனர். ஊரவரும் சுடுகாடாகிய அவ்வூர் சென்று காட்டுச் சிவிகையாகிய் பாடையினை இறக்கிவைத்து நீங்கினர். (கஉ)

200. வைச்சகல் வுற்றது கண்டு மனிதர்கள்
அச்சக லாதென நாடும் அரும்பொருள்
பிச்சது வாய்ப்பின் தொடர்வுறு மற்றவர்
எச்சக லாநின் றிலைக்கின்ற வாறே.

(ப. இ.) ஏனையார் தம் உடம்பினை உலகத்தே வைத்துவிட்டு நீங்கிய நிலைமையை மாந்தர் கண்கூடாகக் கண்டிருந்தும், தம் உடம்புமட்டும் நிலைகெடாது என நாடுவர். அங்ஙனம் அவர்களால் நாடப்படும் அவ்வுடம்பாகிய அரும்பொருள் (காலனால்) பறிக்கப்பட்டதாய் மற்றையார் உட்ம்பு போன்று அழியும். தாங்கள் நிலைக்குமென்று கருதிய உடம்பு எச்சமாகிய மேன்மை நீங்க நின்று அவர்கள் பிறந்து இறந்து இளைப்பர். பிச்சு - பிய்த்து; வெளவி - அபகரித்து. பிச்சு என்பது பிய்த்து என்பதன் போலி. எச்சு - மேன்மை.

(அ. சி.) அச்சு அகலாதென-உயிர் விரைவில் நீங்காதென்று. (கச)

201. ஆர்த்தேழு சுற்றமும் பெண்டிரும் மக்களும்
ஊர்த்துறைக் காலே ஒழிவர் ஒழிந்தபின்
வேர்த்தலை போக்கி விறகிட் டெரிமூட்டி
நீர்த்தலை மூழ்குவர் நீதியி லோரே.

(ப. இ.) உடம்புவிட்டு நீங்கிய உயிரினைச் சார்ந்த சுற்றத்தார் அலறி அழுது கூடுவர். அவரும், உரிய பெண்டும், ஏனைமக்களும் ஊர்ப்பொதுவாகிய வாய்க்காலிற் சென்று செய்யும் சடங்கினைச் செய்து நீர்த்தநீர் கொண்டுவந்து முழுக்காட்டுவர். பின்பு அவ்வுடம்பினை எரியின்கண் இடுவதற்கு உண்டாகும் அச்ச முதலியவற்றை அகற்றி விறகடுக்கித் தீ மூட்டுவர். தீ மூட்டியபின் நீர்நிலையிற் சென்று மூழ்குவர். சிறிதும் முறைமையில்லாதவராவர். நீதி - முறைமை.

(அ. சி.) ஊர்த்துறைக்கால் - ஊர்ப் பொதுவாய்க்கால். (கஇ)

202. வளத்திடை முற்றத்தோர் மாநிலம் முற்றங்
குளத்தின் மண்கொண்டு குயவன் வனைந்தான்
குடமுடைந் தால்அவை ஓடென்று வைப்பர்
உடலுடைந் தால்இறைப் போதும்வை யாரே.

(ப. இ.) மாயா காரியமாகிய குடமும் உடலும் முறையே குயவனாலும் இறைவனாலும் செய்யப்படுவன. ஆனால் குடமுடைந்தால்

வறையோடென்று அகத்தே வைப்பர். உயிர் நீங்கினால் அவ்வுடம்பினைக் கண்ணிமைக்கும் நேரம் வரையிற்கூட வீட்டில் வைத்திருக்கப் பொறார். சுடம் செய்வதற்கு வளமான முற்றமும் வாய்ப்பான மண்ணும் வேண்டும். அம் மண் குளத்தினின் நின்றும் பெரும்பாலும் எடுக்கப்பெறும். அது போல உடம்புக்கு, தாய் வயிறு முற்றத்தை ஒக்கும். கருப்பை குளத்தினை ஒக்கும். மண் செந்நீரை யொக்கும். வினைமுதற் காரண னாகிய சிவன் குயவனை ஒப்பான்; (பாட்டு 470.) (கக)

203. ஐந்து தலைப்பழி யாறு சடையுள
சந்தவை மூப்பது சார்வு பதினேட்டுப்
பந்தலும் ஒன்பது பந்தி பதினைந்து
வெந்து கிடந்தது மேலறி யோமே.

(ப. இ.) ஐந்து தலையாகிய ஐம்பொறிகளும், ஆறு பறியாகிய மூலாதார முதலிய ஆறு ஆதாரங்களும், சடையாகிய இடைவெளியின் கண் உள்ள சந்துகள் மூப்பதும் உள்ளன. நுண்ணுடம்பு மெய் எட்டு; வாயுக்கள் பத்து ஆகப் பதினெட்டு. ஒன்பது தொளைகள். பூதமைந்து தொழிற் கருவி ஐந்து, உணவுடம்பு முதலிய உடம்பு ஐந்து ஆகப் பதினைந்து. இவையனைத்தும் வெந்து நீறுகிக் கிடந்தன. மேல் விளைவினை எவரும் உள்ளவாறு அறியார். உணவுடம்பு முதலிய ஐந்தும் வருமாறு: உணவுடம்பு. வளிவுடம்பு, மனவுடம்பு, அறிவுடம்பு, இன்பவுடம்பு என்பனவாம். இவற்றை முறையே அன்னமய கோசம், பிராணமய கோசம், மனோமயகோசம், விஞ்ஞானமயகோசம், ஆனந்தமயகோசம் என்பர். ஆதாரம் - நிலை.

(அ. சி.) ஐந்துதலை - ஐம்பொறிகள். பறி ஆறு-ஆதாரங்கள் ஆறு. சடையுள சந்தவை - முதுகெலும்புகள். சார்பு - பொருத்து. (கஎ)

204. அத்திப் பழமும் அறைக்கீரை நல்வித்துங்
கொத்தி உலைப்பெய்து கூழட்டு வைத்தனர்
அத்திப் பழத்தை அறைக்கீரை வித்துண்ணக்
கத்தி எடுத்தவர் காடுபுக் காரே.

(ப. இ.) அறைக்கீரை வித்தாகிய உயிரை இருவினைப் பயனாகிய இன்பத்துன்பக் கூறுபாடுகளென்னும் அத்திப்பழத்தை உணவாகிய ஊழாகச் சமைத்து, உடலோடு உலகிடைப் பிறப்பித்தனன். அத்திப் பழமாகிய ஊழ்ப்பயனை அறைக்கீரை வித்தாகிய உயிர் உண்டுகழித்தது. எனவே உயிர் நீங்கிய உடம்பினைச் சுடத் துணிந்தனர். கத்துதலாகிய அழுகையொலியுடன் சுடுகாட்டுக்குக் கொண்டுபோயினர். உலைப் பெய்து - உலையிலிட்டு. கூழ அட்டு - சோறு சமைத்து. கத்தி - கத்தி போன்ற கூர்மையுடைய பல். இஃது உவமையாகு பெயர் எனினும் ஆம்.

(அ. சி.) அத்திப்பழம் - உடல். அறைக்கீரை நல் வித்து - உயிர். உலை - கருப்பாசயம். கூழ் - ஊழ். (கஅ)

205. மேலும் முகடில்லை கீழும் வடிம்பில்லை
காலும் இரண்டு முகட்டலக் கொன்றுண்டு
ஓலையான் மேய்ந்தவ ரூடு வரியாமை
வேலையான் மேய்ந்ததோர் வெள்ளித் தளிகையே.

(ப. இ.) வீட்டை யொப்பாகிய உடம்பு ஆவிநீங்கிய காலத்து வீங்கற் காற்று மண்டையோட்டைப் பிளந்து கொண்டு செல்லும். அப் பொழுது மேலே மூடப்படும் முகடு இல்லாது இருக்கும். அதனால் மேலும் முகடில்லை என்றனர். அம் முகட்டின்கீழ் விளிம்பாகிய கரையுமில்லை. பயனில்லாத காலும் இரண்டுண்டு. மூடும் அலக்கும் ஒன்றுண்டு. ஓலையான் மேய்ந்தவர் ஊடுவரியாமை விட்டனர். இவற்றைக் கூட்டி அமைத்த படைப்போலுல் செய்யப்பட்ட வெள்ளிக் கோயில் போன்றது உடம்பு. தளி - கோயில். வரியாமை - கட்டாமை. (கசு)

206. கூடங் கிடந்தது கோலங்கள் இங்கில்லை
ஆடும் இலையமும் அற்ற தறுதலும்
பாடுகின் ரூர்சிலர் பண்ணில் அழுதிட்டுத்
தேடிய தீயினில் தீயவைத் தார்களே.

(ப. இ.) ஆவி நீங்கிய உடம்பு இந்நிலத்தே கிடந்தது. ஆயினும் முன் அதன்கண் காணப்படும் இயற்கைப் பொலிவு முதலிய காட்சிக் குரிய ஒப்பனைகள் ஒன்றும் இல்லை. உண்டல் உழைத்தல் ஓடல் ஆடல் முதலிய இயக்கத்தொழில்களும் அற்றொழிந்தன. அவை அறுதலும் திருமறை முதலிய செந்தமிழ் அருட்பாடல்களைச் சிலர் பாடுகின்றனர். இசையொடு பொருந்த ஒப்பாரி வைத்து மாதர்நல்லார் பலர் காதலான் ஓதி அழுகின்றனர். ஏனையோர் அவ்வுடம்பினைச் சுடுகாட்டிற்கு வேண்டும் பொருள்களுடன் ஒடியெடுத்துச் சென்று தீயினில் எரித்துத் தீய வைத்தனர்.

(அ. சி.) கூடம் - உடல். கோலம் - சித்திரம். (உ0)

207. மூட்டை பிறந்தது முந்நூறு நாளினில்
இட்டது தானில்லை ஏதேனும் ஏழைகாள்
பட்டது பார்மணம் பன்னிரண் டாண்டினிற்
கேட்ட தெழுபதிற் கேடறி யீரே.

(ப. இ.) உயிர் கருத்தோன்றுங் காலத்து மீன் முட்டை அளவான உடம்புடன் தோன்றும். அவ்வுடல் தாய் வயிற்றினில் முந்நூறு நாள் வரை தேடியமைத்த எய்ப்பில் வைப்புப் பொருளாய்த் தங்கியிருக்கும். பின்பு அருளால் வெளிவரும் வெளிவரும்போது இன்னவாறென்று கூறுவதற்கு ஏதேனும் இல்லை. உறுதிப்பாடான அறிவில்லாத ஏழைகளே! உலக மயக்கமாகிய பண்டைப் பயிற்சி பிறந்தநாள் தொட்டுச் சிறிது சிறிதாக வளர்ந்து பன்னிரண்டு ஆண்டில் நன்றாக நிரம்பும். அம் மயக்கம் எழுபதாண்டு அளவையினுள் முற்றுற்றுக் கேடெய்துவிக்கும். எனவே, எண்பத்திரண்டு ஆண்டில் உலகப் பசை தானாகவே விலகும் என்க.

1. அந்நாளிற். கூ. திருநாவுக்கரசர் - உஉ.

(அ. சீ.) முட்டை - உயிருடன் கூடின உடல். பார்மணம் - உலக வாசனை. (உச)

208. இடிஞ்சில் இருக்க விளக்கெரி கொண்டான்
முடிஞ்ச தறியார் முழங்குவர் மூடர்
விடிஞ்சிரு ள்ாவ தறியா உலகம்
படிஞ்சு கிடந்து பதைக்கின்ற வாறே.

(ப. இ.) விளக்கில் நெய்யும் திரியும் இடும் பகுதி அகல் எனவும் இடிஞ்சில் எனவும் கூறப்படும். அவ்விடிஞ்சி லிருக்கவும் விளக்கு அணைவ தென்றால் எவ்வளவு வியப்போ அவ்வளவு வியப்பு உடலிருக்கவும் உயிர் நீங்கும் தன்மை. அதுபோல் உடலழியாதிருக்கவும் உயிரினைக் கூற்றுவன் கைக்கொண்டகன்றான். உலகத்தார் தம் வாணாள் முடிந்தமையை முன்னறியார். பின்னுள்ளார் இறந்தவர் பொருட்டு அழுது புலம்புவர். இவ்வுண்மையைக் கொண்டு விடிதலாகிய் பிறப்பையும் இருள்வதாகிய இறப்பையும் எவரும் உணர்தல் எளிது. அங்ஙனமிருந்தும் உலகவர் உணர்கின்றிலர். உலக மயக்கத்தில் ஈடுபட்டு அதில் உலகவர் படிந்து கிடக்கின்றனர். அதனால் பின்பு நடுங்கித் துன்புறுகின்றனர். முடிஞ்சது: முடிந்ததென்பதின் போலி.

(அ. சீ.) இடிஞ்சில் - அகல். முடிஞ்சது - முடிந்தது. விடிஞ்சு இருளாவது - பிறந்து இறப்பது. (உஉ)

209. மடல்விரி கொன்றையன் மாயன்[1] படைத்த
உடலும் உயிரும் உருவந் தொழாமல்
இடர்படர்ந் தேழா நரகிற் கிடப்பர்
குடர்பட வெந்தமர் கூப்பிடு மாறே.

(ப. இ.) சிவபெருமான் இதழ் விரிந்த கொன்றைமாலையைக் கண்ணியும் தாருமாகக் கொண்டவன். மாயையை உடைமையாகக் கொண்டவன். அதனால் சிவன் மாயன் என்று அழைக்கப்படுவன். ஆயின் 'மாயோன் மேய காடுறை யுலகம்' என்பதும் சிவனையே குறிக்கும் சென்தொடராவது உணர்க. அவன் தன் திருவாணையால் மாயையினின்றும் உலகினையும் உடலுறுப்புக்களையும் உண்பொருள்களையும் தோற்றுவித்து அவற்றோடு ஆருயிர்களைத் தனித்தனி புணர்ப்பித்தனன். இதுவே படைப்பாகும். அப் படைப்பினை எய்திய உயிர் அச்சிவபெருமானின் பொதுத் தன்மையாகிய இருநிலன் முதலாகச் சொல்லப்படும் எண்பேர் உருவங்களில் இயைந்த தொன்றைத் தொழுதல் வேண்டும். அங்ஙனம் தொழுதலைச் செய்யாதவர் எழுவகையாகச் சொல்லப்படும் இருள் உலகில் கிடந்து துன்புறுவர். இவ்வுலகிலும் இடர் உறுவர். பின் வினைக்கிடாகக் கருப்பையுள் புகுவர். மிகவும் விரும்பிய சுற்றத்தாரால் போற்றப்படுவர். மீண்டும் அவர்களால் கூப்பிட்டு, அழுமாறு இறப்பர். எழுவகை இருளுலகமும் வருமாறு: 'பெருங்களிற்று வட்டம், பெருமணல் வட்டம், எரி பரல் வட்டம், அரி படை வட்டம், புகையின் வட்டம், பெருங்கீழ் வட்டம், இருளின் வட்டமென எழுவகை நரகம்' (பிங்கலம்: சகஉ). அள்ளல், இரௌரவம், கும்பீபாகம், கூடசாலம், செந்துத்தானம், பூதி,

1. மாயனுய் மாலனுகி, ச. சச - கு.

மாபூதி, எனலுமொன்று. குடர்-ஈண்டுக் கருப்பை. பிறப்பற்றுச் சிறப் புற்று வாழவிழையும் செந்நெறியினர்க்கு ஊர்வன, நீர்வாழ்வன, பறப்பன, நாற்காலின, நிலைத்திணையன, மக்கள், தேவர் ஆகிய எழு வகைப் பிறப்பும் துன்பமேயாம். அதனுல் அவ் வேழினையும் அள்ள லெனக் கூறுதலுமொன்று.

(அ. சி.) மடல்விரி கொன்றையன் மாயன் - மாயையை உடைய சிவன். இடர் படர்ந்து-துன்பப்பட்டு. ஏழாநரகிற் கிடப்பர் - கருப்பத்தில் கிடப்பர். (உக)

210. குடையுங்[1] குதிரையுங் கோற்றவா ளுங்கொண்டு
இடையுமக் காலம் இருந்து நடுவே
புடையு மனிதனுர் போகும்அப் போதே
அடையும் இடம்வலம் ஆருயி ராமே.

(ப. இ.) வேந்தர் தமக்குச் சிறந்த அடையாளமாகிய கொற்றக் குடையும் நற்றிறப் பரியும், வெற்றிவாளுங் கொண்டு பலர்சூழச் சுற்றித் திரிவர். பலர்நடுவே வெற்றியுடன் வீற்றிருப்பர். அத்தகைய வேந்தராகிய மாந்தர் இறக்குங் காலத்து அவர்தம் உயிர்ப்பு இடம் வலம் மாறிச் செல்லும். குடையும் குதிரையும் கொற்றவாளும் ஒருபுடையொப்பாக முறையே குடிகளது இன்பமும் பொருளும் அறமும் ஆகும்.

(அ. சி.) ஆருயிர் - பிராணவாயு. இடம் வலம் அடையும் - இடமும் வலமும் மாறுதல் அடையும். (உச)

211. காக்கை கவரிலென் கண்டார் பழிக்கிலென்
பால்துளி பேய்யிலென் பல்லோர் பழிச்சிலென்
தோற்பையுள் நின்று தொழிலறச் செய்தூட்டுங்
கூத்தன்[2] புறப்பட்டுப் போனஇக் கூட்டையே.

(ப. இ.) ஐம்பூதக் கூட்டரவாகிய உடலகத்தினின்று ஆருயிர் புடை பெயர்தலாகிய கூத்தினை விளைக்கிடாக நாளும் புரிகின்றது. அவ்வுயிர் உடம்பாகிய தோற்பையுள் நின்று செய்ய வேண்டிய தொழில்களை முற்றுகச் செய்து முடித்ததும் நீங்கிவிடும். நீங்கவே உண்டு நீக்கிய வாழை இலைபோன்று அவ் வுடலும் தூயதல்லாததாகிவிடும். அவ்வுடலைப் பல்லோர் புகழுமாறு பாராட்டுதல் முதலிய சிறப்பினைச் செய்து நல் லடக்கம் புரிந்தால்தான் என்ன? பலர் பழிக்கும்படி வாளா புறத்துப் போகட்டால்தான் என்ன? காக்கை கொத்தினுல்தான் என்ன? அவ் வுடலை நல்லடக்கம் செய்வது நம்முடைய நனிநாகரிக நற்பண்பைக் காட்டும். செய்யாமல் விடுவது தீப்பண்பையே காட்டும். ஊட்டும் கூத்தன்-வினைப்பயனை நுகர்வித்துக் காக்கும் உயிர்க்குயிராகிய இறைவன் என்றலும் ஒன்று.

(அ. சி.) தோற்பை - உடல். கூத்தன் - உயிருடன் கூடிய இறைவன். (உஇ)

---

1. நளியிரு. புறநானூறு, கூடு.
2. நார்த்தொடுத். நாலடியார், உசு.

# 3. செல்வம் நிலையாமை

212. அருளும் அரசனும் ஆனையுந் தேரும்
பொருளும் பிறர்கொள்ளப் போவதன் முன்னம்[1]
தெருளும் உயிரோடுஞ் செல்வனைச் சேரின்
மருளும் பிணையவன் மாதவ மன்றே.

(ப. இ.) வேந்தர் ஆனை தேர் முதலிய பத்து அரச உறுப்புக்களும் பெரும் பொருளும் பிறர் கொள்ளப் போவதன்முன் திருவருளால் தெளிவினை எய்தித் தம் உயிரொடும் சிவனடியைச் சேர்தல் வேண்டும். சேர்ந்தால் அஃது அருளிப் பாடாகிய அருந்தவம் ஆகும். அத் தவப் பேறு எய்தாவிட்டால் பின்பு அவ்வுயிர் மயக்கமெய்திப் பிறப்பினை எய்தும். பின்னை - பினை, பின் ; ஐ : சாரியை. (க)

213. இயக்குறு திங்கள் இருட்பிழம் போக்குந்
துயக்குறு செல்வத்தைச் சொல்லவும் வேண்டா
மயக்கற நாடுமின் வானவர் கோனைப்
பெயற்கோண்டல் போலப் பெருஞ்செல்வ மாமே.[2]

(ப. இ.) பொருட் செல்வத்தின் நிலைமை ஒரு படித்தாக இராது. பெரும்பாலும் குறைந்து கொண்டே வந்து முற்றும் இல்லாதாகிவிடும். அதற்கு ஒப்பு, திங்களின் தேய்பக்கமாகும். இயங்கும் திங்கள் சிறிது சிறிதாகக் குறைந்து தளர்ச்சியுற்று உவா நாளில் முழு இருட்டாவதைக் காண்கின்றோமன்றே ! அத்தகைய செல்வத்தை நிலையுடையதென்று கூறுதல் வேண்டா. வானவர்க்கும் மற்றும் யாவர்க்கும் முழுமுதல் தலைவனுக விளங்கும் சிவபெருமானை மயக்கம் நீங்கித் தெளிவு எய்தும் பொருட்டுப் பேரன்பால் இடையறாது எண்ணித் தொழுங்கள். அது வற்றாவூற்றாக வேண்டுங்காலத்துப் பொய்யாது பெய்து பெருஞ் செல்வமாக்கும் பெருமழைபோல் திருவடிப் பெருஞ் செல்வத்தை அளிக்கும்.

(அ. சி) இயக்குறு...செல்வம் - இயங்குகின்ற திங்களின் இருட்பக்கத்தைப் போன்று குறைந்துகொண்டே போகின்ற. (உ)

214. தன்னது சாயை தனக்குத வாதுகண்டு
என்னது மாடென் றிருப்பர்கள் ஏழைகள்[3]
உன்னுயிர் போம்உடல் ஒக்கப் பிறந்தது
கண்ணது காணுளி கண்டுகொ ளீரே.

(ப. இ.) நம்முடைய நிழலென்று நாம் மிகுதிபடப் பேசுகின்றோம். அது நமக்கு எந்தக் காலத்தும் எவ்வகை உதவியும் தந்தது இல்லை.

---

1. மத்தயானை. ஆரூரர், எ.எ - க.
2. செல்வ. சம்பந்தர், க. அ0 - இ.
- களித்துக். அப்பர். ச - கூ - எ.
3. பிறக்கும். பட்டினத்தார், திரு ஏகம்பமாலை - எ.

அதனை நம்முடைய நிழல் என்பதைவிட அழிவிலா ஒளிவழித் தடை யென்பதே அமைவுடைத்து. அதுபோல் செல்வமும் நம்முடைய கையில் இருப்பதால் நம்முடைய தென்று கூறுகின்றோம். உண்மை யான் நோக்கின் அது சிவனுடையதே. இவ்வுண்மை கண்டும் தம் முடைய தென்று அறிவிலார் பலர் எண்ணிக்கொண்டிருக்கின்றனர். உன்னுதலாகிய கருத்துக்குப் புலனுகும் உயிர் காலம் வந்தால் நீங்கிப் போகும். அதுவரையும் உடல் உம்மிடமுள்ளது. பின்பு உம்மை விட்டு அகல்கின்றது. இவ்வுண்மையினை அகக் கண்ணுகிய அருளொளி கொண்டு கண்டு கொள்ளுங்கள். (கூ)

215. ஈட்டிய தேன்பூ மணங்கண் டிரதமும்
கூட்டிக் கொணர்ந்தொரு கோம்பிடை வைத்திடும்
ஓட்டித் துரந்திட் டதுவலி யார்கொளக்[1]
காட்டிக் கொடுத்தது கைவிட்ட வாறே.

(ப. இ.) தேன்ஈ ஆனது பூவின் மணத்தினை இயற்கையாகக் கண்டு போய்த் தேனினைச் சிறிது சிறிதாக எடுத்துக் கூட்டி ஒரு மரக் கொம்பிற் கொண்டு சேர்க்கும். அவ் ஈக்கள் மனமாரப் பிறருக்குக் கொடுக்காமையால் உடல்வலி யொன்றே யுடையார் அவ் ஈக்களைப் பல வகைச் சூழ்ச்சிகளான் விரட்டி விட்டுத் தங்கள் உடைமை போல் எடுத் துக்கொள்வர். அந்த ஈக்கள் அரும்பாடுபட்டு அணு அணுவாகச் சேர்த்த தேனைப் பிறர் கொள்ள வைத்திருந்தது போன்று ஆருயிர் களும் அரும்பாடுபட்டு வளர்த்த உடம்பினையும் தொகுத்த உடைமை யினையும் நல்வழிப்படுத்தாது வாளா வைத்திருந்தன. அவ் வுயிர்களின் நோக்கம் தாமே பயன் பெறவேண்டுமென்பது. ஆனல், காலன் அவ் வுயிர்களின் எண்ணத்துக்கு மாருக அவ்வுடலினின்றும் உயிரினைப் பிரித் துக் கொண்டு செல்கின்றனன். அவ்வுயிர்கள் உடம்பினையும் உடைமை யினையும் காட்டிக் கொடுத்து நீங்குகின்றன. இரதமும் கூட்டி என்ப தற்குத் தேன் ஈக்களின் வாயிலுள்ள உமிழ் நீரும் கூட்டி எனக் கூறலும் ஒன்று. தேன் - தேனீ. இரதம் - தேன். (ச)

216. தேற்றத் தெளிமின் தெளிந்தீர் கலங்கன்மின்
ஆற்றுப் பெருக்கிற் கலக்கி மலக்காதே
மாற்றிக் கலைவீர் மறுத்துங்கள் செல்வத்தைக்
கூற்றன் வருங்கால் குதிக்கலு மாமே.

(ப. இ) திருவடியுணர்வு கைவந்த நல்லோர், செல்வத்தின் உண்மையினைத் தெளிவிக்கத் தெளிந்து கொள்ளுங்கள். தெளிந்தபின் ஐயுற்றுக் கலங்காதீர்கள். 'செல்வம் ஆறிடும் மேடும் மடுவும் போலாம்' தன்மைத்து. அதனுல் அச்செல்வத்தின்மாட்டு கலக்கங்கொண்டு மலங்குதல் வேண்டா. அச்செல்வத்தின்மாட்டு வைத்துள்ள கடும் பற்றினை மாற்றிக் கலையுங்கள். அவ்வாறு கலைந்து கொண்டால் கூற்று வன் வருங்கால் செல்வப் பற்றின்றி அச் செல்வத்தினின்றும் நீங்கி மேனிலை எய்துதலும் கூடும். குதித்தல் - விட்டு நீங்கல்; பற்றறல். (தி)

1. அன்பொரீஇத். திருக்குறள், ஈ00கூ.

217. மகிழ்கின்ற செல்வமும் மாடும் உடனே
கவிழ்கின்ற நீர்மிசைச் செல்லுங் கலம்போல்
அவிழ்கின்ற ஆக்கைக்கோர் வீடுபே றுகச்
சிமிழோன்று[1] வைத்தமை தேர்ந்தறி யாரே.

(ப. இ.) நாம் மகிழ்கின்ற செல்வ வாழ்வும் அச் செல்வத்தால் தேடும் மாடு முதலிய பல பொருள்களும் நீரில் செல்லும் கலம் இன்ன நேரத்தில் கவிழுமென்று எதிர்பாராத வகையாகத் திடும்மெனக்கவிழ்வது போல் அழிந்தொழியும். உயிரும் உடம்பும் சிலநாள்வரை வினைக்கீடாகப் பொருந்துமாறு சிமிழ்த்தலாகிய கட்டினுள் உள்ளன. பின்பு அவ் வாக்கையின் கட்டினை விடுவித்து உயிரினைக் காலன் கொண்டு செல்கின்றனன். இங்ஙனம் கொண்டு செல்வதால் உடலுக்குரிய கட்டு அகற்றப் படுவதல்லாமல் உயிரினுக்குரிய கட்டு அகற்றப்படுவதில்லை. சிமிழ்ப்பு - கட்டு. (கூ)

218. வாழ்வும் மனைவியும் மக்கள் உடன்பிறந்
தாரு மளவே தெமக்கென்பர் ஒண்பொருள்
மேவு மதனை விரிவுசெய் வார்கட்குக்
கூவுந் துணையொன்று கூடலு மாமே.

(ப. இ.) ஒருவர் இறக்குந் தறுவாயில் அவருடன் பலவகையாலும் ஒத்துவாழ்ந்த மனைவியும், மக்களும், உடன் பிறந்தார்களும் தனித் தனியே எங்களுக்குச் சொத்து என்ன இருக்கின்ற தென்று வினவுவர். எவ்வளவு பொருள் இருந்தாலும் இந்த நிலைமைதான் ஏற்படும். அதனால் நன்மைக்கு ஆகும் சிறந்த பொருளை வழிக்குத் துணையாம் புண்ணியத்தில் செலவு செய்தல் வேண்டும். அப் புண்ணியப் பயனைச் சிவபெருமான் அருளால் தோன்றுவன். தோன்றித் திருவைந் தெழுத்தைச் செவியறி வுறுத்துவன். அம் மறையினை முறையாகக் கணிப்பார்க்கு வழித் துணையாக அது கை கூடும். கணித்தல் - சிவஞ் செய்தல்.

(அ. சி.) விரிவு செய்வார்க்கு - அறவழியில் செலவிடுவார்க்கு. ஒன்று - சிவன் என்று. (எ)

219. வேட்கை மிகுத்தது மெய்கொள்வார் இங்கிலை
பூட்டுந் தறியொன்று போம்வழி ஒன்பது
நாட்டிய தாய்தமர் வந்து வணங்கிப்பின்
காட்டிக் கொடுத்தவர் கைவிட்ட வாறே.

(ப. இ.) உடம்புடன் கூடிவாழ வேண்டும் என்னும் நீங்கா விருப்ப மாகிய வேட்கை அளவின்றி மிகுந்தது. அதைஒழித்து இறைவன் திருவடியைச் சேர வேண்டுமென்னும் உண்மையினை மேற்கொள்வார் ஒருவருமிலர். உயிர்ப்பாகிய பிராணவாயுவைப் போகவொட்டாது கட்டுந்தறி போன்று உடம்பகத்து அமைந்துள்ளது நடுநாடியாகிய சுழு முனை. உயிர்ப்பு அதன் வழிச் செலுத்தும் பயிற்சியிலார்க்கு எவ்வகைத்

1. தவமறைந். திருக்குறள், உசை.

தனடியுமின்றிப் போகும் வழிகள் ஒன்பதுள்ளன. இறுதிக் காலத்து உடம்பினைப் பேணி வளர்த்துக் காப்பாற்றி நிலைப்பித்த தாய் தந்தை முதலிய உறவினர் சூழ்ந்து உயிரினை ஏதுஞ் செய்ய முடியாதபடி உடம்பினைக் காட்டிக் கொடுத்துக் கைவிட்டனர். வணங்கி - வணங்கு; சூழ்ந்து.

(அ. சி.) தறி - சுழுமுனை. போம்வழி-உயிர்போம் வழி. நாட்டிய - வளர்த்த. (அ)

220. உடம்பொ டுயிரிடை விட்டோடும் போது
அடும்பரி சோன்றில்லை அண்ணலை எண்ணும்
விடும்பரி சாய்நின்ற மெய்ந்மன் தூதர்
சுடும்பரி சத்தையுஞ் சூழகி லாரே.[1]

(ப. இ.) உயிரானது உடம்பினை விட்டு நீங்கிக் கூற்றுவன் வாயிலாக மேற் செல்லும் போது அக் கூற்றுவனைத் தடுக்கக் கூடிய ஆற்றல் தவமோ தானமோ வேள்வியோ பிறவோ ஒன்றுக்கும் இல்லை. ஆனால் அண்ணலாகிய சிவபெருமான் திருவைந்தெழுத்தை நன்னெறி நான்மை நலந்தோன்ற 'நமசிவய, சிவயநம, சிவயசிவ, சிவசிவ' எனப் படிமுறையான் நான்காகப் பகுத்துள்ளனர். இவற்றில் ஏதாவதொன்றைத் திருவருள் வலத்தால் கைக்கொண்டு ஒழுகினால் அது கூற்றுவனை வெல்லும் ஆற்றல் வாய்ந்ததாக இருக்கும். அம் மறைவல்லார்பால் கூற்றுவன் தூதுவர் வர நினைக்கவும் (இயமன். கூ. சக - ச.) அஞ்சுவர். சூழ்தல் - நினைத்தல். ஏனையார்பால் அத் தூதுவர் அஞ்சாது வந்து கைக்கொண்டு செல்லுவர். அவ் வண்மை 'வெந்தூதுவரோ டிறப்பன்' என்னும் திருமுறையான் உணரலாம். இம்மைக்கண் செந்நெறிப் பயிற்சியிலாதார் சிவனை மறப்பினும் உம்மைக்கண் புக்கதும் கூற்றுத் தலைவனும் நடுவன் அச் சிவனை நினைவுறுத்துவன். அது வருமாறு :

வெற்றிக் கடுந்தூதர் வேகத் துடன்வந்து
பற்றித்தம் வெங்குருவின் பாற்காட்ட—இற்றைக்கும்
இல்லையோ பாவி பிறவாமை யென்றெடுத்து
நல்லதோர் இன்சொல் நடுவாகச்—சொல்லியிவர்.

—போற்றிப்பஃறொடை : அக - ச

அண்ணலை - சிவனை. எண்ணும் - எண்ணச் செய்வன். இறப்பு சிவனை எண்ணச் செய்தற்கு ஒப்பு வருமாறு : பசி உணவினையும், நோய் மருந்தினையும், பருவம் தக்க உறையுளையும் நாடச் செய்வனவாம். உறையுள் - இல்லம், போர்வை, குடை, பாதக்குறடு முதலிய தற்காப்புக்கள். போற்றிப் பஃறொடை செந்தமிழ்ப் பொருள் நூல் பதினெண்களுள் ஒன்று. கடும் பரிசம் - மிகச் சிறந்த திருவடியுணர்வின் விளக்க ஊற்றுணர்வு.

(அ. சி.) அடும்பரிசு - வெல்லும் வகை. அண்ணலை...லாரே-உயிர் போகும்போது சிவனை நினைந்தால் நமன் தூதுவர் நணுகமாட்டார். (கு)

---

1. கண்டு, இன்னங். அப்பர், தி. கூஉ - க, கு.

# 4. இளமை நிலையாமை

221. கிழக்கெழுந் தோடிய ஞாயிறு மேற்கே
விழக்கண்டுந் தேரூர் விழியிலா மாந்தர்
குழக்கன்று மூத்தேரு தாய்ச்சில நாளில்
விழக்கண்டுந் தேரூர் வியனுல கோரே.

(ப. இ.) நாள்தொறும் கிழக்கே தோன்றுகின்ற பகலவன் மெல்ல மெல்ல உச்சிக்கு ஏறிவந்து அதுபோலவே கீழிறங்கி மேற்கே மறை கின்றனன். இங்ஙனம் மறைவதை ஒவ்வொரு நாளும் பார்த்திருந்தும் அகக் கண்ணுகிய திருவடியுணர்விலார் தமக்கும் இந் நிலைமை வரும் என்று எண்ணுர். இளங்கன்றுனது ஆண்டுகள் செல்லச் செல்ல முதிர்ந்து சில ஆண்டுகளில் எருதாய் ஆகின்றது; பின் இறந்து படுகின்றது. அவர்கள் இவ்வுண்மையினையும் கண்டு தெளியார். இச் செய்யுள் ஒட்டி யாதும். பகலவன் நின்றுங்கு நிற்ப நில உருண்டை அப் பகலவனைச் சூழ்ந்து உருண்டு வருகின்றது. அதனல் பகலவன் எழுந்து மறைவது போல்காணப்படுகின்றது. கீழும்மேலுமாகச் சுழன்றுவரும் இராட்டையில் நாம் ஏறியிருந்து ஒரு பக்கம் ஓரிடத்து ஒரு பொருளைக் குறிப்பாக வைப்பித்து அதனை நோக்கிக் கொண்டே வந்தால் நாம் மேலே இருக்கும் போது அது கீழிருப்பதாகத் தோன்றும்; நாம் அதன் வழிக் கீழ் வர வர அப் பொருள் மேலெழுவதாய்த் தோன்றும். நாம் அதன் கீழ்ப்பக்கஞ் சென்ல அது முற்றுக மறைந்துவிடும். இவ்வொப்பினல் அவ்வுண்மை அறியலாம். விழியிலா மாந்தர் - திருவடி யுணர்விலாத மாக்கள். (க)

222. ஆண்டு பலவுங் கழிந்தன அப்பனைப்
பூண்டுகொண் டாரும் புகுந்தறி வார்இல்லை
நீண்டன காலங்கள் நீண்டு கொடுக்கினுந்
தூண்டு விளக்கின் சுடரழி[1] யாரே.

(ப. இ.) உலக மாந்தர் பிறந்து ஆண்டுகள் பலவுங் கடந்தன. அப்படியிருந்தும் அப்பனுகிய சிவபெருமானை அவனருளால் யாரும் இடையருது நினைவதாகிய அகந்தழுவுதலைச் செய்திலர். அகந்தழுவுவாரே பூண்டு கொண்டாரெனப்படுவர். அவன் திருவடியுணர்வால் அவனுட்ன் புணர்ந்து அவனுள் அடங்கி அவன் திருவடிப் பேரின்பத்தினை துகர்ந்தறிவாரும் இலர். சித்தி முதலியவற்றுல் வாழ்வுக்குரிய காலங்கள் மிக நீண்டு கொடுத்தாலும் ஆருயிரின் அன்பறிவு ஆற்றல் மூன்றனையும் ஆண்டவனுடைய அன்பறிவு ஆற்றல்கள் மூன்றும் கலந்து தூண்டிஞலன்றித் தொழிற்படா. அதனல் சிவபெருமான் தூண்டு விளக்கு எனப்படுகின்றனன். அத்தகைய தூண்டு விளக்கின் சுடரினை அச் சித்தர்களும் அறியார். நீண்டன காலங்கள்: நீண்டனவாகிய காலங்கள்; பண்புத் தொகை. (உ)

---

1. தூண்டு. „ கு. உகூ. க.

223. தேய்ந்தற் றொழிந்த இளமை கடைமுறை
ஆய்ந்தற்ற பின்னை அரிய கருமங்கள்
பாய்ந்தற்ற கங்கைப் படர்சடை நந்தியை
ஓர்ந்துற்றுக் கொள்ளும் உயிருள்ள போதே.

(ப. இ.) இளமைப் பருவம் தேய்ந்து ஒழிந்தன. கடைசியாகப் பருவ முடிவில் செயற்கருஞ் செயல்கள் பலவும் ஆய்ந்து முடிந்தன வாயினும் அவை செய்வதற்கு அரியனவாய் முடியாமல் கழியும். வான் புனலாகிய ஆகாயகங்கை மிக்க வேகமாகப் பாய்ந்து வந்து இறைவன் திருச்சடையில் அடங்கிற்று. அத்தகைய திருச்சடையினையுடைய சிவ பெருமானை உடம்பகத்து உயிர் நல்ல நிலைமையிலுள்ளபோதே திரு வருளால் ஓர்ந்து திருவடியுணர்வால் கலந்து கொள்ளுங்கள். அரிய : பலவின் பால் படர்க்கைக் குறிப்பு வினைமுற்று.

(அ. சி.) தேய்...பாய்ந்தற்ற-இளமை கழிந்தால் அரிய கருமங்கள் செய்ய முடியா. கங்கை...போதே-இளமை நடமாடும்போதே நந்தியை நினை. (கூ)

224. விரும்புவர் முன்னென்னை மெல்லியன் மாதர்
கரும்பு தகர்த்துக் கடைக்கொண்ட நீர்போல்
அரும்போத்த மென்முலை ஆயிழை யார்க்குக்
கரும்போத்துக் காஞ்சிரங் காயும்ஒத் தேனே.[1]

(ப. இ.) யான் சுட்டிளமையாக இருக்கும்போது அழகிய மெல்லிய இயல்பினையுடைய பெண்கள் முறையாக மணந்து கொள்ள விரும்புவர். அவ் விருப்பம் கரும்பை யொடித்து நன்றுகச் சாறு பிழிந்தெடுத்த தூய கருப்பஞ் சாற்றை விரும்புவதனை யொக்கும். முதுமை வந்துற்றபோது கோங்கரும்பினை யொத்த மிகமெல்லிய முலையினையும் ஆராய்ந்து அழகாக அமைக்கப் பெற்ற சிறந்த அணிகலன்களையும் பூண்டுள்ள பெண்களுக்கு முன்னம் கரும்பொத்துக் காணப்பட்ட யானே காஞ்சிரங்காயாகிய எட்டியினை ஒத்து வெறுப்புக்கிடனுகக் காணப்படுவன். இது பருவ மாறுதலினுல் அன்பகல ஏற்படும் மனமாறுபாடென்க.

(அ. சி.) முன் - இளமையில். காஞ்சிரங்காய்-எட்டிக்காய். (சு)

225. பாலன் இளையன் விருத்தன்[2] எனநின்ற
காலங் கழிவன கண்டும் அறிகிலார்
ஞாலங் கடந்தண்டம் ஊடறுத் தானடி
மேலுங் கிடந்து விரும்புவன் நானே.

(ப. இ.) பாலன், சுட்டினுளுன், கோல்காலாம் முதியவன் என்னும் பருவங்கள் முறை முறையாகக் கழிவனவற்றைக் கண்டிருந்தும் நன்

1. விளைவறி. அப்பர், சு. எஅ-கூ.
,, வேம்பின். குறுந்தொகை, ககசு.
,, தாழாத். நாலடியார் - கசு.
2. அண்ட. அப்பர், தி. கூஎ - உ.
3. பாலனுய்க். அப்பர், சு. கூசு - கூ.

னெறிச் சென்று நலம் பெற வேண்டுமென்னும் உண்மையைப் பலர் அறிகிலர். அடியேன் ஞால முழுதினையுங் கடந்து அண்டமுகட்டினையும் ஊடறுத்து எங்கும் நிறைந்து நின்றருளும் சிவபெருமான் திருவடியினை அவனருளால் அவன்பணி செய்துகிடந்து மேலும் மேலும் விரும்புவன். (இ).

226. காலை எழுந்தவர் நித்தலும் நித்தலும்
மாலை படுவதும் வாணாள் கழிவதுஞ்[1]
சாலும்அவ் வீசன் சலவிய ஞகிலும்[2]
ஏல நினைப்பவர்க் கின்பஞ்செய் தானே.

(ப. இ.) ஒவ்வொரு நாளும் காலையில் கிழக்கே எழும் பகலவன் மாலையில் மேற்கே சென்று மறைகின்றனன். அவ்வாறு மறைவதைக் கண்டு பலர் இன்பமுடன் பொழுது போகாநின்றதெனக் களித்து அந்நாளைக் கழிப்பர். ஆனால் உண்மையான் நோக்கினால் அப்பொழுது ஒவ்வொரு நாளும் அவருடைய வாழ்நாளின் ஒவ்வொரு கூற்றையும் அவர் மகிழும்படியாக அறுத்துக் கொண்டு செல்கின்றது. அங்ஙனம் இறைவன் செய்வதுதான் நடப்பாகிய ஆதியாற்றலின் மறைப்பருள். எல்லா நிறைவும் இயற்கையிலேயே ஒருங்கமைந்த அவ்விறைவன் நினையாதார்மாட்டு நினைப்பிக்கும்படி செய்தருள முனிவுள்ளவன் போன்று காணப்படினும் தக்கவாறு நினைவார்மாட்டு இடையறு இன்பஞ் செய்யும் தடையிலாக் கனிவுள்ளவனவன். சலவியன் - வழிவாராதார்மாட்டு முனிவுள்ளவன். ஏல - தகுந்த முறையால். (சு).

227. கண்ணனுங்[3] காய்கதி ரோனும் உலகினை
உண்ணின் றளக்கின்ற தொன்றும் அறிகிலார்
விண்ணுறு வாரையும் விண்ணுறு வாரையும்
எண்ணுறும் முப்பதில் ஈர்ந்தொழிந் தாரே.

(ப. இ.) ஒவ்வொருநாளும் காய் கதிரோன் காலை, நண்பகல், மாலைமறைந் தொளித்தல் என்னும் மூன்று கூறுக, உலகத்துள் நின்று அளக்கின்றனன்; அதுபோல் கண்ணனும் உடலுள் நின்று ஒருவனுடைய வாழ்நாள் முழுமையையும் கல்வி கற்றல், மனையறம் பேணல், இறைவன்பால் நினைவுகலாமை என மூன்று கூறுக அளக்கின்றனன். அவன் பதினாறு ஆண்டுவரை கல்வியும். நாற்பத்தாறு ஆண்டுவரை மனையறம் பேணலும், அதற்கு மேல் நிறைவாழ்நாள் என்னும் நூற்றிருபது ஆண்டுவரை இறை நினைவு அகலாமையுமாக ஆருயிர்களைக் காத்து நிறுத்துதலாகிய அளவையைச் செய்கின்றனன். இம் மூன்றினையும் ஒரு புடையாக இன்பம் பொருள் அறம் என்னும் முப்பகுதியின் சிறப்பியல்பு என்னலாம். எடுத்துக் காட்டாக மனையறம் பேணுதல் பொருளின் சிறப்பியல்பாயின் ஏனை இன்பமும் அறமும் அம் மனையறத்திற்குப் பொது இயல்பு என்க. அதுபோல் மற்றவற்றிற்குங் கொள்க. 'முப்பதாம் ஆண்டளவில்

1. நாளென. திருக்குறள், கூகூ.
" வைகலும். நாலடியார், கூகூ.
2. தந்தைதாய். சிவஞானசித்தியார், உ. உ - கஉ.
3. (பழடம்) கண்ணதுங்.

மூன்றற்று ஒரு பொருளைத் தப்பாமல் தன்னுட் பெறல்' வேண்டு மென்னும் நல்வழிக்கண் (கூக) தமிழ் மூதாட்டியார் நவின்றதும் இதனுடன் ஒத்துக் காண்க, இதன்கண் குறிக்கப்பட்ட முப்பதாண் டென்பது செந்தமிழ்க் கற்பியல் திருமணம் திருமுறைவழித் திருவரு ளால் முடிந்தநாள் தொட்டுள்ள வரையறையாகும். இங்ஙனம் இரு திறத்தாரும் அளக்கும் அளவையின் உண்மையைப் பலர் அறிகின்றிலர். இவ் விருதிறத்தாராகிய கதிரவனும் கண்ணனும் சிவன் திருவாணையின் வழிநின்று விண்ணுறுவாரையும், வினைக்கிடாகப் பிறந்து மண்ணுறுவா ரையும் எண்ணப்படும் முப்பதாண்டளவில் இன்பம் பொருள் என்னும் இரண்டினின்றும் ஈர்த்து அறத்தின்பால் நிறுத்துங் கடனுடையராவர். ஆயின் ஆருயிர்கள் அவ்வழி நிற்கும் கருத்துடைய வாதல் வேண்டும். அங்ஙனமில்வழி மீண்டும் வினைக்கிடாகப் பிறப்பு இறப்பிற்பட்டு அவ் வுயிர்கள் உழலும். (எ)

228. எய்திய நாளில் இளமை கழியாமை
எய்திய நாளில் இசையினுல் ஏத்துமின்
எய்திய நாளில் எறிவ தறியாமல்
எய்திய நாளில் இருந்துகண் டேனே.

(ப. இ.) வினைக்கிடாக வரையறுக்கப்பட்ட இளமை கழிவதன் முன் உள்ளநாட்களில் பொருள்சேர் புகழால் திருமுறைவழி இடையறாது ஏத்துங்கள். ஒவ்வொருவரும் தங்களுக்கென வரையறுக்கப்பட்ட நாள் களில் அருள் துணையால் மாசறுத்துத் தூயராய் இறை நினைவுடன் வாழுதல் வேண்டும். இங்ஙனம் ஒழுகாமல் மனம்போல் ஒழுகி வழுக் குற்று இழுக்கடைவாரும் பலர். இதனைப் பொருந்திய நாள்களில் இருந்து கண்டேன் என்க. கண்டேன்: நன்றுற்றுதலாகிய நல்லறஞ் செய்யாது இளமை சிலர்க்குப் பயன் இன்றிக் கழியக் கண்டேன். இளமை கழிவதன்முன் இறையடி தொழுதலாகிய நல்லறஞ் செய்தல் வேண்டுமென்னு முண்மை வரும் செந்தமிழ்த் திருமாமறையானுணர்க.

"பன்னீர்மை குன்றிச் செவிகேட்பிலா
படர்நோக் கிற்கண் பவளந்நிற
நன்னீர்மை குன்றித் திரைதோலொடு
நரைதோன் றுங்கால நமக்காதன்முன்
பொன்னீர்மை துன்றப் புறந்தோன்றுநற்
புனல்பொ திந்தபுன் சடையினுனுறையும்
தொன்னீர்க் கடந்தைத் தடங்கோயில்சேர்
தூங்காணை மாடந் தொழுமின்களே."

—க. இக . ஞ.

(அ. சி.) இசையினுல் - புகழக்கூடிய அறச்செய்கைகளினுல். எய்திய நாள் - வரையறுக்கப்பட்ட ஆயுள். எறிவது - அழிவது. (அ)

# 5. உயிர் நிலையாமை

229. தழைக்கின்ற செந்தளிர்த் தண்மலர்க் கோம்பில்
இழைக்கின்ற தெல்லாம் இறக்கின்ற கண்டும்
பிழைப்பின்றி எம்பெரு மானடி ஏத்தார்
அழைக்கின்ற போதறி யாரவர் தாமே.[1]

(ப. இ.) பலவாம் பயன் மரங்களுள் மரத்தையும், கிளைகளையும். சூளிரும் நறுமணமு மிக்க மலர் முதலியவற்றையும் உண்டாக்குவனவாகிய செந்தளிர்கள் நன்றுய்த் தழைத்துச் செழித்துக் காட்சிக்கு இனிய வாய் இருந்தனவற்றையுங் காண்கின்றேம். பின் பழுப்புற்று உதிர்ந்து மரத்தை விட்டுக் கழிகின்ற முறைமையையும் காண்கின்றேம். கண்டும் அம் முறைமைபோல் நம்முடம்புக்கும் அழிவுவரும் என்று எண்ணுவார் அரியர். உண்மையுணர்வார் தவறுதல் ஒரு சிறிதுமின்றி எப்பொழுதும் எம்பெருமான் அடியினையே ஏத்துதல் புரிவர். சிவனைத் தொழாதார் அனைவரையும் காலமுடிவில் காலன் வந்து உயிரினைக் கைக்கொண்டு செல்ல அழைப்பன்; அப்பொழுது அவர் என் செய்வதென்று அறியாது துன்புறுவர்.

(அ. சி.) இழைக்கின்ற - உண்டாக்கப்பட்ட. பிழைப்பு-தவறுதல். அழைக்கின்றபோது - இயமன் கூப்பிடுகிறபோது. (க)

230. ஐவர்க் கொருசெய் விளைந்து கிடந்த
ஐவரும் அச்செய்யைக் காத்து வருவர்கள்
ஐவர்க்கு நாயகன் ஓலை வருதலால்
ஐவரும் அச்செய்யைக் காவல்விட் டாரே.[2]

(ப. இ.) ஆருயிராகிய விளைநிலம் மெய் வாய் கண் மூக்கு செவி யென்னும் ஐம்புலத்தார்க்கும் உரிமையாக விளைந்து கிடந்தது. அவ் வைவரும் அவ் விளைநிலத்தினைத் தம்வழி இழுத்துக் காத்து நின்றனர். இவ்வைவரும் சிவபெருமானின் திரு ஆணைவழி நடப்பவராவர். வழிக்கு வாராத மாவினங்களையும் மாக்களையும் வழிக்கு வரும்பொருட்டு அத் துறையில் வல்லார்பால் சில நாட்களுக்கு உரியவர்கள் விட்டுவைப்பார் களல்லவா? அதுபோல் ஆண்டவனும் தன்னை நினைப்பதாகிய நல்வழிக்கு ஆருயிர்கள் வருவதன் பொருட்டு 'ஊன்றிநின் ருரைவர்க்கு ஒற்றிவைத் தனன்.' அவ்வுயிர்கள் அருளால் அவனுக்கு அடிமையாகிவிடின் அவன் அவ்வுயிர்களை ஏன்று கொண்டு ஒற்றியெல்லாம் சோன்று கொள்வன்.' அதுவரையும் அவ் வைவரே காவலராவர். அவ் வைவர்க்குந் தலைவன் சிவபெருமானே. அவனது ஆணைவழி ஆருயிர்களின் நாள் முடிவின்கண்

1. கொல்லத். அப்பர், தி - சை - க.
2. நாமல்ல சிவஞானபோதம். சூ. உ - க.
" மெய்யுளே. அப்பர், சை. தி.சை - கூ.
" ஏன்றுகொண். " சை. சூ00 - கூ.

கூற்றுவன் ஓலை தோற்றமுடன் வரும். அவ்வோலை கண்டதும் ஐவரும் ஆருயிராகிய அச் செய்யினைக் காவல் கைவிட்டகல்வர். சோன்று கொண்டாய் - சொந்தமாக்கிக் கொண்டாய். சொந்தம் - உரிமை.

(அ. சி.) ஐவர்க்கு - ஐம்பொறிகளுக்கு. ஐவர்க்கு நாயகன் - உருத்திரன். (உ).

231. மத்தளி ஒன்றுள தாளம்இ ரண்டுள
அத்துள்ளே வாழும் அரசரும்[1] அஞ்சுள்ள
அத்துள்ளே வாழும் அரசனும் அங்குளன்[2]
மத்தளி[3] மண்ணுய் மயங்கிய வாறே.

(ப. இ.) மண் + தளி = மண்டளி. இதுவே மட்டளி எனவும், மத்தளி எனவும் மருவிவரும். எனவே மண்ணுலாகிய நடமாடும் திருக்கோவில் - உடம்பு. அஃது ஈண்டு மத்தளி எனப்பட்டது. மத்தளியாகிய உடம்பு ஒன்று உள்ளது; அதன்கண் உயிர்ப்பினை விடுதலும் நிறுத்தலுமாகிய இடங்கள் இரண்டுள. அவ்வுடம்பினை எனதெனப் பற்றுக்கொண்டு ஆளும் அரசர்களாகிய ஆவிக்கருவிகளும் அங்குள்ளன. தூமாயையினின்றும் உணர்வுமெய்யாகத் தோன்றும் காலம், ஊழ், உழைப்பு, உணர்வு, விழைவு ஆகிய ஐம் போர்வையுடன் ஆருயிர் உடம்பகத்து நிற்றலான். ஏற்றுரையாக அரசர் ஐவர் எனக் கூறப்பட்டனர். அவ்வுயிர்களை இயக்கி, என்றும் பிரியாது நின்றருளும் சிவபெருமானுகிய அரசனும் முழுமுதல் வேந்தனும் அங்குளன். அவ் வேந்தன் புறப்பட்டால் அம் மத்தளியாகிய உடம்பு மண்ணொடு கலந்து மண்ணுய்ப் போகும். மாத்தளி என்பது. மத்தளி எனக் குறுகிற்று எனலும் ஒன்று. வாழும் அமைச்சரும் ஐந்துளர் எனவும் பாடம் என்ப. ஒன்றுள என்பது துவ்வீறு தொக்கு நின்றது. தளி - திருக்கோவில். மாத்தளி - பெருமை மிக்க திருக்கோவில்.

(அ. சி.) மத்தளி - உடல். தாளம் - இரேசகம், பூரகம். அரசன் - உயிர். (ஊ)

232. வேங்கட நாதனை வேதாந்தக் கூத்தனை
வேங்கடத் துள்ளே விளையாடு நந்தியை
வேங்கடம் என்றே விரகறி யாதவர்
தாங்கவல் லாருயிர் தாமறி யாரே.

(ப. இ.) வெந்தொழியும் இயல்பு வாய்ந்த உடம்புக்குத் தலைவனுகிய உயிர்க்கு உயிரை, திருவருளால் திருவடியுணர்வு பெறுதலாகிய திருநான்மறை முடிவின்வழி நடப்பிக்கும் வேதாந்தக் கூத்தனை, ஊழிக் காலத்து அனைத்தும் ஒருங்கு வெந்தழியும் அறிவுப் பெரு வெளியாகிய சுடுகாட்டுள் ஆடும் சுடர்க் கொழுந்தாகிய நந்தியை இவ்வுடம்புள்ளபோதே நன்குணர்ந்து ஒழுகுதல் தலை. இவ்வுடம்பு எரியுண்டழியும். அதனல் நிலையா உடம்பு நிலைத்துள்ள போதே நந்தியெங் கடவுளை அடையும் வழி வகைகளை அறிந்துணர்தல் வேண்டும். இவ்வுண்மையினை அறிந்துகொள்ளாதவர் தப்முயிர் அவ்வுடம்பினைத் தாங்கி நிற்கும்

1. (பாடம்) அமைச்சரும் ஐந்துளர்.
2. ,, அரசன் புறப்பட்டான்,
3. அம்மானே. ஆரூர், எ. கசு - கூ:

வன்மையால் உளதாம் பயன் இன்ன தென்றறியார். வேங்கடம்: எரிந்து கொண்டிருக்கும் சுடுகாடு. விரகு - வழிவகை ; சூழ்ச்சி.

(அ. சி.) வேங்கடநாதனே - வேகும் இயல்புள்ள உடலுக்கு நாதனே. வேங்கடம் - உடல். (ச)

233. சென்றுணர் வான்திசை பத்துந் திவாகரன்
அன்றுணர் வால்அளக் கின்ற தறிகிலர்
நின்றுண ராரிங் நிலத்தின் மனிதர்கள்
பொன்றுணர் வாரிற் புணர்க்கின்ற மாயமே

(ப. இ.) பத்துத் திசையினையும் உணர்வு மெய்யாகிய காலதத்துவம் ஞாயிற்றினைக் கருவியாகக் கொண்டு அளக்கின்றது. ஞாயிற்றினைத் திவாகரன் எனவும் கூறுவர். அத் திவாகரன் அளக்குந்தன்மை ஆருயிர் களின் வாழ்நாளை அளக்கின்ற தன்மை என உணரார். இந் நிலத்தின் வாழும்மனிதர்களே இவ்வுண்மையினை யுணரும் இயல்பு வாய்ந்தவராவர். அத்தகையோரும் உணராது வீணுய்ப்பிறந்து இறந்து ஒழியும் மாக்கள் கூட்டத்தில் கலந்து விடுகின்றனர். இஃதென்ன மாயம் !

(அ. சி.) திவாகரன் - சூரியன். (இ

234. மாறு திருத்தி வரம்பிட்ட பட்டிகை
பீறு மதனைப் பெரிதுணர்ந் தாரிலை
கூறுங் கருமயிர் வெண்மயி ராவது
ஈறும் பிறப்புமோ ராண்டெனும்[1] நீரே.

(ப. இ.) பட்டிகையாகிய பட்டாடையின்கண் ஏற்படும் மாறுதல் களைச் செம்மைப்படுத்தி விலை வரம்பும், கரை வரம்பும், பிறவரம்பும் செய்தமைத்து நல்கிய அப் பட்டாடையும் 'நூற்றுப்பத் தாயிரம் பொன் பெறினும் நூற்சீலை,நாற்றிங்கள் நாளுக்குள் நைந்து விடும்' என்பது முது மொழியாதலின், நாளாக நாளாகக் கிழிந்தொழியும். இவ்வுண்மை உட லும் நாளாக நாளாகத் தளர்ந்து மாயும் என்பதனையே குறிப்பதாகும். இவற்றைப் பலர் பெரிதும் உணர்ந்தாரல்லர். சிறப்பித்துச் சொல்லப்படும் நீலமணியின் மிக்க கருமை வாய்ந்த தலைமயிர், கொக்கின் தூவியன்ன வெண்மையாவதும் காண்கின்றனர். ஒவ்வொரு நாளும் ஞாயிறு தோன்றி மறைவதையும் காண்கின்றனர். அது தம்முடைய வாழ்நாளாகிய அகவையை ஆண்டெனும் பெயரால் ஈர்ந்து செல்லும் காலத்தன்மை என்று உணர்கிலர். இந்நிலைக்கு வருந்தாது மகிழ்ந்து கொண்டிருப்பது அறிவிலார் செய்லாகும். அகவை - ஆண்டு ; வயது. நீர் - தன்மை.

(அ. சி.) பட்டிகை - பட்டாடை. (சு)

235. தடுப்பிடு பானைக்கும் ஒன்றே அரிசி
அடுப்பிடு மூன்றிற்கும் அஞ்சேரி கொள்ளி
அடுத்தேரி யாமற் கொடுமின் அரிசி
விடுத்தன நாள்களும் மேற்சென் றனவே.

1. நாளென. திருக்குறள், ஈடுசை.

(ப. இ.) உடலினைப் புறத்துப் பேணும் உணவு சமைத்தற்கு அடுப்பும், துடுப்பும், பானையும், அரிசியும், எரி கொள்ளியும், எரியும் வேண்டுவன. அதுபோன்று உடலகத்து அமிழ்த வுணவு சமைப்பதற்கும் அத்தனையும் வேண்டும். அம்முறையில் உடம்பு பானை ; உயிர்ப்பு அரிசி ; வலப்பால் இடப்பால் மூக்குகள் துடுப்பு ; கொப்பூழ் அடுப்பு ; ஞாயிறு திங்கள் தீ எரி ; உயிர்க்காற்று, மலக்காற்று, தொழிற் காற்று, ஒலிக் காற்று, நிரவுகாற்றென்னும் ஐந்தும் எரிகொள்ளி. ஏற்றி இறக்கி நிறுத்திச் செய்வதாகிய உயிர்ப்புப் பயிற்சியாம் சமையலினைச் செய்து புருவ நடுவின்கண் அமிழ்த்தத்தை ஆக்குங்கள். அதனால் உடல் நலமுற நீண்டு நிற்கும். ஏனையார்க்கு வீணுகக் காலங்கள் பல கழிந்து மேற்போயின. பயிற்சியுடையார்க்கு உடம்பு நெடுங்காலம் நிலைபெறும். வரையறுத்த அகவை கழியினும் மேலும் நெடுநாள் வரை செய்யப்படும். அரிசி - புருவ நடுவிலுள்ள அமிழ்து.

(அ. சி.) துடுப்பு - இடைகலை பிங்கலை. அடுப்பு - நாபித்தானம். கொள்ளி - ஞானக்கினி. பானை - உடல். அரிசி - உயிர். (எ)

236. இன்புறு வண்டிங் கினமலர் மேற்போய்
உண்பது வாச மது[1] போல் உயிர்நிலை
இன்புற நாடி நினைக்கிலு மூன்றெரி
கண்புற நின்ற கருத்துள்நில் லானே.

(ப. இ.) இன்புறும் இயல்பு வாய்ந்த வண்டுகள் பூவின் நறுமணம் கண்டு அம் மணத்தின் வழியே சென்று பூவினகத்துள்ள மண நிறைந்த மதுவினையே நுகரும். அதுபோல் ஆருயிர்கள் நிலைத்த திருவடிப் பேரின் பத்தினை நுகர நினைக்கினும், ஞாயிறு திங்கள் தீ என்னும் மூன்று ஒளிப் பொருள்களைக் கண்களாகக் கொண்டு திகழும் சிவபெருமான் புறத்தே காணும்படி வேறுக நில்லான். உயிரொடு பின்னி அறிவிற் காணும்படி அகத்தே நிற்பன். கண்புறம் - புறக்கண்; சுட்டுணர்வு. நில்லான் - வேறுக விளங்கான்.

(அ சி.) மூன்றெரி கண் - மூன்று கண் ஒளி ; (சோம சூரிய அக்கினி வடிவான சிவன்.) புறநின்ற - சேரமாட்டான். (அ)

237. ஆம்விதி நாடி அறஞ்செய்மின் அந்நிலம்
போம்விதி நாடிப் புனிதனைப் போற்றுமின்
நாம்விதி வேண்டும் தென்சொலின் மானிடர்
ஆம்விதி பெற்ற அருமைவல் லார்க்கே.

(ப. இ.) கூறுங்கால் எழுவகைப் பிறப்பினுட் சிறந்த மக்கட் பிறப்பை எடுக்கும் அருமைப்பாட்டினை அருளால் பெற்ற உரனுடை உள்ளத்தார்க்கு வேறு நாம் கூறவேண்டிய விதி யாதுளது? மனையறம் பேணும் பொருட்டு அறநூல் கூறும் விதியின்படி செய்தல் வேண்டும். திருவடிப் பேற்றினை அடைதற்கு அவனருள்தரும் தமிழாகம முறைப்படி தூயோனுகிய சிவபெருமானைப் பாடிப் பரவிப் பணியுங்கள். போம்

1. நினைத்தனை. அ. திருக்கோத்தும்பி, கூ.
2. அண்டசம். சிவஞான சித்தியார், உ-சு-கள.

விதி: வீடு பேற்றுநிலை. தென்சொல் - அழகிய இனிய என்றுமுள்ள இயற்கைத் தமிழ்மொழித் திருமாமறை திருமாமுறைகள்.

(அ. சீ.) ஆம் விதி - இல்லற துறவறங்களுக்கு உரித்தாம் விதி. அந்திலம் - முத்தியுலகம். (கு)

238. அவ்வியம் பேசி அறங்கெட நில்லன்மின்
வெவ்விய ஞகிப் பிறர்பொருள் வவ்வன்மின்
செவ்விய ஞகிச் சிறந்து[1]ண்ணும் போதோரு
தவ்வி கொடுமின்[2] தலைப்பட்ட போதே.

(ப. இ.) வஞ்சனை பொய் முதலிய பிறர்க்குத் துன்பம் விளைக்கும் தீச்சொற்களைச் சொல்லி அறமுறை கெடுமாறு நில்லாதீர். பேராசை கொண்டு மற்றவர் பொருளைச் சிறிதும் நடுநிலை திறம்பி விரும்பாதீர். எல்லா வகையானும் மேம்பட்ட நற்பண்புகளை உடையவர்களாகுங்கள். அதனால் சிறப் பெய்துங்கள். உண்ணும் போது ஓர் அகப்பை (109) உணவு அற்றவராய் வந்து உற்றவர்க்கு அப்பொழுதே உதவுங்கள்.

(அ. சீ.) வெவ்வியஞகி - பேராசை உடையவனாகி. தவ்வி - அகப்பை. (கo)

# 6. கொல்லாமை

239. பற்றுய நற்குரு பூசைக்கும் பன்மலர்
மற்றோர் அணுக்களைக் கொல்லாமை ஒண்மலர்[3]
நற்றூர் நடுக்கற்ற தீபமுஞ் சித்தமும்
உற்றுரும் ஆவி அமர்ந்திடம் உச்சியே.

(ப. இ.) திருவடிப் பேற்றைப் பற்றுதற்குரிய வாயில் சிவகுரு விண்ணைப் பற்றுதல். பற்றுதலென்பது அத்தகைய சிவ குருவினைப் பூசிப்பதாகும். அச்சிவகுரு பூசைக்கும், சிவபூசைக்கும் வேண்டத்தக்கன மணஞ் சேர் பல மலர்கள். புறத்துக்காண்கின்ற நற்பண்புக்கு ஒப்பாகிய தூணைப் பூக்கள் மட்டுமன்றி அகத்துக் காணவேண்டிய 'கொல்லாமை ஐந்தடக்கல் கொள்பொறுமையோடிரக்கம், நல்லறிவு மெய்தவம்அன் பெட்டு' என்னும் நற்பண்புகள் எட்டும் ஒண்மலராகும். ஒண் மலர்கள்: கொல்லாமை, ஐம்பொறியடக்கல், பொறுமை, இரக்கம், அறிவு, மெய், தவம், அன்பு என்பன. இவை எட்டும் முறையே சிவபெருமானின் எட்டுக் குணங்களும் நம்மாட்டுப் பதிதற்காம் இயைபுடைக் குறிப்பாகும். 'எட்டு நான்மலர் கொண்டவன் சேவடி, மட்டலரிடு வார்வினை மாயுமால்' என்னும் அப்பர் அருமறையால் எட்டுப்பூக்கள் கொண்டு வழிபடும் எழில் பெறப்படுகின்றது காண்க. புறத்தே காணப்படும் தூணைப்பூ என்பது பாற்கலனை ஒக்கும். அகத்தே காணப்படும் கொல்லாமை முதலிய

1. பொய்கடிந் கூ. திருநீலகண்டக் குயவனார்; உ.
2. (பாடம்) தவ்விக்கொடுண்மின்.
3. மானமா. சம்பந்தர். கூ·உசு-எ.

எட்டும் பாலை ஒக்கும். இச்சிறந்த அகமலரால் தொடுக்கப்படும் மாலை துளக்கமில் விளக்கனைய திருவடியுணர்வும், அத் திருவடியினையே நாடும் எண்ணமுமாகும். அவ்வுயிர் திருவடிக்கண் விரும்பி உறைந்த இடமே சிறந்த நிலைப்பான இன்பிடமாகும்.

(அ. சி.) அணு - உயிர். (க)

240. கொல்லிடு குத்தென்று கூறிய மாக்களை
வல்லடிக் காரர் வலிக்கயிற்றுற் கட்டிச்[1]
செல்லிடு நில்லென்று தீவாய் நரகிடை
நில்லிடும் என்று நிறுத்துவர் தாமே.

(ப. இ.) கொல்லென்றும், எறிஎன்றும், குத்து என்றும் கூறி அங்ஙனமே செய்வித்தும் செய்துவரும் கொடியோர்களைக் கூற்றுவன் தன் ஏவலர்களாகிய வலிய அடிகாரர், வன்மையுள்ள கயிற்றினுற் கட்டி இடிமுழக்கம் போல் முழங்கி நில்லென்று கூறித் தீவாய் நரகிடை வீழ்த்துவர். ஆருயிர்கள் பருவுடம்பினின்று கருதவும் காணவும் கேட்கவும் ஒண்ணுத அஞ்சத்தக்க கொடுமைகளைச் செய்கின்றன. அவ்வுயிர்கள் எவ்வெவ்வாறு செய்தனவோ அவ்வவ்வாறே அவ்வுயிர்களைக் கூற்றுவனின் ஏவலாளர்கள் நுண்ணுடலில் வைத்து மாற்ற முடியாத துன்பத்தைச் செய்கின்றனர். அத்துன்பத்திற்கு மருந்தும் கிடையாது. துன்புறுவார்க்கு இரங்குவாரும் அங்குக் கிடையார். துன்புறுத்துவாரை நற்றவ ஆற்றலால் மாற்றுவாரும் கிடையார். ஆகவே அத்துன்பம் பொறுக்க முடியாத பெருந்துன்பமாகும். இதனை மனங்கொண்டு பிறர்க்குத் துன்பஞ்செய்யாது இன்பஞ் செய்தல் நன்று. (உ)

241. கொலையே களவுகட் காமம்பொய் கூறல்
மலைவான பாதக மாம்அவை நீக்கித்[2]
தலையாஞ் சிவனடி சார்ந்தின்பஞ் சார்ந்தோர்க்கு
இலையாம் இவைஞான னந்தத் திருத்தலே.

(ப. இ.) கொலை, களவு, கள்ளுண்டல், அறந்திறம்பிய காமம், பொய் என்னும் ஐந்தும் மாறு மயக்கம்தரும் பெரும்பாவங்களாகும். இவ்வைந்தினையும் புரிவார் சிவனடி சார்தலின்றித் தீவாய் நரகிடை வீழ்ந்து மாறுத் துன்பத்தினை எய்துவர். இவற்றை அறவே ஒழித்துத் தலைமையும் இயற்கை உண்மையும் வாய்ந்த சிவபெருமான் திருவடியினைத் தலைப்பட்டு இறவாப் பேரின்பம் சார்ந்த நல்லார்க்கு நரகத் துன்பம் இல்லை. அழிவிலாத் திருவடி உணர்வின்பத்திருத்தலே என்றும் நிலைநின்ற மெய்ப்பொருளாகும். தலைப்படல் - சார்தல். மலைவான என்பதற்கு அப் பாவங்கள் தம்மைச் செய்தாருடன் பின் விளைவாய் வந்து போர் செய்யும் தன்மை வாய்ந்தன என்றலுமொன்று. கொலை களவு கள் காமம் பொய்யென்னும் ஐந்தும் அகல, முறையே அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மை என்னும் ஐந்தினையும் மேற்கொண்டு இடையறாது ஒழுகுதல் வேண்டும். (கூ)

---

1. கருமையாற். ஆரூரற், எ-கo- ச.
2. களவு பொய். கஉ - அப்பூதியடிகள், உ.

# 7. புலால் மறுத்தல்

242. போல்லாப் புலாலே நுகரும் புலையரை[1]
எல்லாருங் காண இயமன்றன் தூதுவர்
செல்லாகப் பற்றித் தீவாய் நரகத்தில்
மல்லாக்கத் தள்ளி மறித்துவைப் பாரே.

(ப. இ.) உலகவராலும் உயர்ந்தோராலும் உண்பா
உறுப்புக்களாலும் ஏற்றுக் கொள்ளும் வாய்ப்பு அமையாதது
புலால். அப் புலாலே விரும்பியுண்ணும் மக்கட் பிறப்பினை
கொடு விலங்கினும் இழிவாகப் பேசுவர். அப் புலையர்களை அத்
பலரும் காணும்படி. இயமன் தூதுவர் கொண்டுபோவர். கொண்
இடிபோல் முழங்கி அஞ்சும்படியாகப் பற்றி என்றும் நீங்கா
துன்பம் தரும் கொடிய நரகத்தில் தள்ளுவர். தள்ளி மல்
கிடத்துவர். என்றும் துன்புறும்படி எங்கும் செல்லவொட்டாது
நிறுத்துவர். அப் புலால் உண்பவர்க்கு இம்மையிலும் பொல்
யாகும். என்னே ? அவ்வூன் நல்ல உள்ளத்தைத் தாராதாகலான்
இவ்வுண்மை[1] 'உழைப்பால் உடலழகாம் ஊனுலாம் உள்ளம்,
யொழுக்காலாம் உயிரின் மாண்பு' என்பதனு லுணரலாம்.

243. கொன்றி லாரைக் கொலச்சொலிக் கூறினுர்
தின்றி லாரைத் தினச்சொலித் தெண்டித்தார்
பன்றி யாப்படி யிற்பிறந் தேழ்நர
கொன்று வார்அரன் ஆணையீ துண்மையே.

(ப. இ.) கொல்லும் கருத்தும் ஆற்றலும் இல்லாதாரைக் கொல்
லும்படி சொல்லியும் துணை நின்றும் தூண்டியவரும், அவ்வூனைத் தின்னும்
மனமில்லாது அருவருப்புக் கொண்டுள்ளோரை வற்புறுத்தித் தின்னச்
செய்தவரும், அப்படியும் தின்னுதவரை ஒறுத்தவரும் இந் நிலத்துப்
பன்றியாய்ப் பிறப்பர். பின்பு ஏழ்நரகிடை வீழ்ந்து ஆழ்ந்து துன்புறுவர்.
இங்ஙனம் அவர் துன்புறுவது அரன் திருவாணையே யாகும். இது மாரு
வுண்மையுமாகும். அயலார் வேள்வியிற் கொன்றுண்ணும் புலாலும்
இத்தகையதே. அவ்வுண்மை வரும் செந்தமிழ்மறை முடிபாந்
திருவாசகத்தான் உணர்க:

'சாவமுன் ஞள்தக்கன் வேள்வித் தகர்தின்று நஞ்சமஞ்சி
ஆவவெந் தாயென் றவிதா விடுநம் மவரவரே
மூவரென் றேயெம் பிராஞெடும் எண்ணிவிண் ணுண்டுமண்மேல்
தேவரென் றேஇறு மாந்தென்ன பாவந் திரிதவரே.'—ச. (உ)

---

1. கொலைவினைய. திருக்குறள், கூஉசு.
,, உண்ணுமை. ,, உஙிஎ.
,, துக்கத்துள். நாலடியார், சூஉக.

# பிறன்மனை நயவாமை

த்த மனையாள் அகத்தில் இருக்கவே
ாத்த மனையாளைக் காமுறுங் காளையர்
ாய்ச்ச பலாவின் கனியுண்ண மாட்டாமல்
ஈச்சம் பழத்துக் கிடருற்ற வாறே.

) இம்மை வாழ்க்கையும், உம்மை வாழ்க்கையும், அம்மை யும் செம்மையுற அமைவதற்கு ஒருவனும் ஒருத்தியுமாய் பர் அருளால் இம்மை வாழ்க்கைத் துணையாய் மனையறம் ல தூய இல்வாழ்க்கையாகும். அதன் பொருட்டு ஊரார் உற ற்றூர் பெற்றோர் சான்றோர் ஆசான் தெய்வம் சான்றுகப் லி புனைந்து கைக்கொண்ட மனையாளே ஆத்த மனையாளாவள். புனைந்த ; கட்டிய. அத்தகைய கற்பு நிறைய ஆர்ந்த பொற்புறு ள் மதிற்காவலும் வாயிற்காவலும் ஆகிய புறக் காவலமைந்த த்துத் தங்கியிருக்கவே, பிறரால் அப் புறக் காவலுடன் அகக் ாகிய நிறைக்காவலும் சேர்ந்து காக்கப்படும் பிறன் மனையாளைக் வர் விழைவதறியாக் காளையர். முப்பழங்களுள் ஒன்றாய் இன்பப் ாய்க் காணப்பெறுவது பலாப்பழம். அது செவ்வியுறக் காய்த்து கனிந்தால் மிக்க இன்பந் தரும். அத்தகைய பலாமரத்தின் கனியை வகை அச்சமுமின்றிப் புகழும் புண்ணியமும் பெருகவும் நிலையாம் னடி எய்தவும் நுகரலாம். அவ் வின்பத்தை உலைவின்றி நுகரமாட்டாத ாடியோரும் சிலராவர். அவர் எக்காலமும் நீங்கா அச்சமும் பெருகும் தியும் பாவமும், நரகிடை வீழ்தலும், இன்ப மின்மையும், துன்ப நீங் ாமையும், பிறப்பினைத் தருதலும் ஆகிய நுகர்வல் நுகர்வை நுகர்வதற்கு யல்வர். அஃது ஈச்சம் பழத்தினை உண்ண விரும்பிக் கிட்டாது இடருற்று எய்த்தலை ஒக்கும். வாழ்க்கைத் துணைவராயுள்ளார் உரு மாகிய உடலாலும், உரு அருவமாகிய உள்ளத்தாலும், அருவமாகிய உணர்வாலும் அப்பாலாகிய உயிராலும் ஒருவருக் கொருவர் துணைவ ராவர். உடலால் காத்தல் மதிலும் வாயிலும் அமைப்பதால் ஆகும். உள்ளத்தால் காத்தல் கற்பு நிறை வழுவாதொழுகுதலாலாகும். உணர்வால் காத்தல் ஒத்த பண்புடையராய் நண்பகலாது நடத்தலா லாகும். உயிர்க் காவல் என்பது திருநீல நக்கநாயனரும் அவர்தம் மனைவியாரும் அகத்தும் புறத்தும் நீங்காது அருளாலாற்றிய சிவ வழி பாட்டுத் தவ வாழ்க்கையாகும். இக் குறிப்பினை நினைவிற் கொள்ள வாய்ப்பாம் வெண்பா வருமாறு :

உருவமுட லாகும் உருவருவாம் உள்ளம்
அருவமுணர் வப்பா லுயிராம்—திருவருளால்
இல்லுறைவு கற்புநிறை ஏருணர்வு தெய்வவழிச்
செல்லுமியல் வாழ்க்கைத் துணை.

காத்த - பிறனால் காக்கப்பட்ட. வாழை, அறப்பகுதியாகவும், மா பொருட் பகுதியாகவும். கொள்ப.

(அ. சீ.) ஆத்த - தாலிகட்டின.

245. திருத்தி வளர்த்ததோர் தேமாங் கனியை
அருத்தமென் றெண்ணி அறையிற் புதைத்துப்
பொருத்தமி லாத புளிமாங்கோம் பேறிக்
கருத்தறி யாதவர் காலற்ற வாறே.

(ப. இ.) அறப்பகுதியாகிய சிவவழிபாடும், பொருட் பகுதியாகிய குடும்ப வாழ்க்கையும், இன்பப் பகுதியாகிய வேளாண்மையும், வீட்டுப் பகுதியாகிய திருவருள் நோக்கமும், பேருகிய திருவடியும் இடையூறு ஆணும் பெண்ணும் எய்துமாறு குடிப்பிறப்பினர் நடந்து காட்டியும் நவின்று நாட்டியும் குடும்பத்தை வளர்ப்பர். அக் குறிப்புத் தோன்றவே உருவகமாகத் திருத்தி வளர்த்ததோர் தேமாங்கனி என்றனர். இதனால் பெறப்படுவது வாழ்க்கைத்துணையாம் கற்புறு மனைவியாகும். அக்கனியை வீட்டையும் குடும்பத்தையும் ஏட்டையும் காக்கும் வாட்டமில் கருவிப் பொருள் என்று எண்ணி வீட்டை விட்டு வெளியிற் போகாவாறு புதைத்த பொருள்போல் காவல் செய்து வைத்தனர். அத்தகைய பேதையார் காம மயக்கத்தால் பொருத்தமில்லாத புளியமரக் கோப்பிலேறிப் பயனும் எய்தாது கீழ் வீழ்ந்து காலொடிவர்.[1] இதன் குறிப்பு அழகிய தன் மனையாளைப் புறக்கணித்து அருவருக்கத் தக்க பிறன் மனையாளை விரும்பி அலைந்து இன்பமும் அடையாது துன்பம் எய்தி உயிர் துறப்பதாகும். கருத்தறியாதவர் என்பது 'ஈன்ருளுமாய் எனக்கு எத்தையுமாய் உடன் தோன்றினராய், மூன்ருய் உலகம் படைத்து உகந்தான்' திருவுள்ளக் கருத்தறியாதவர் என்பதாகும். சிவன் திருவுள்ளம் 'ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும் நீ என்பதற் கிணங்கக் குடும்பப் பொருளைக் கடவுட்பொருளாகக் கருதித் துணையென உலகம் உணர்ந்து உய்ய வேண்டும் என்பது. அஃதாவது, மாதரும் பொருளும் பிறவும் சிவனருளால் தரப்பட்ட தவத்திற்குரிய துணைப்பொருள்கள் எனவும் அவற்றை யன்றிப் பிறவற்றைக் கவர நினைப்பது சிவபெருமானுக்குச் செய்யும் உய்தியில் குற்றமாம் பெரும்பாவம் எனவும் எண்ணி அன்பும் அச்சமும் கொண்டு இன்புற ஒழுகல் என்பதாம். காலற்றவாறென்பது இரட்டுற மொழிதலால் பிறன்மனை விழைந்தார் தம் காலொடியும் என்பதோடு குடும்பமும் பாழாய் வழியற்றுப் போம் என்பதாம். கால் - குடும்ப வழி.

ஈன்ருர்க் குறவுமுறை எம்மான் உடைமையிர்
சான்ருன்கொற் றற்குமகன் சார்ந்து.

உறவும் இறைவன் பொருளென்பது நான்கன் உருபாற் பெறப்படும். (உ)

246. பொருள்கொண்ட கண்டனும் போதகை யாளும்
இருள்கொண்ட மின்வெளி கொண்டுநின் ருேரும்
மருள்கொண்டு மாதர் மயலுறு வார்கள்
மருள்கொண்ட சிந்தையை மாற்றகில் லாரே.[1]

(ப. இ.) அன்பும் அருளுமின்றி முறை கடந்து பொருள் அவாவினுல் குடிகொன்று இறைகொள்ளும் கோமகனுகிய கண்டன் எனப்படும் மன்னனும் பிறன் மனைவிழைந்து அறந்திறம்பி மயலுற்று வாழ்

1. அறன்கடை. திருக்குறள், கசஉ.

வான். அதுபோல் மெய்யுணர்வு எழாவண்ணம் அறிவினை அடக்கி ஆணவ முனைப்பாம் இருளினூடே மின்னொளி போன்று தோன்றிய புல்லறிவாளரும் பிறர்மனைவேட்டு மயலுறுவர். அத்தகைய பெண்டிரும் கற்பழிந்து பழிசேர் இழிகுலத்தவராவர். அறந்நிறம்பிய செல்வமும் சிற்றினச் சார்பாம் புல்லறிவும் மருள் கொள்ளவும் மாதர் மயலுறவும் செய்யும் கருவிகளாகும்: இத்தகையோர் தாமாகவே மருள்கொண்ட சிந்தையை மாற்றிக்கொள்ளும் வன்மையிலாதவராவர். தெருளுறு நல்லோர் ஒருநாளும் இம் மருள் கொள்ளார். மருளுறும் நெஞ்சுடைய அல்லோர் மாற்ற முடியாது கொண்டு இருளுறு நெஞ்சினராய் இடர்ப் படுவர். இத்தகைய பெண்டிரையே நல்லோர் பழிப்பர். என்னை? ஆண் பெண் இருவரும் ஒருவருக்கொருவர் சிறப்புறும் வழிக்குத் துணையாதல் வேண்டும். அதுவே இறைவன் திருவுள்ளம்; அதற்கு மாறுகப் பிறப்புறும் பழிக்குத் துணையாவதாலென்க. இவ்வுண்மை, 'மதனெனும் பாறை தாக்கி மறியும்' எனவும், 'கனியைநேர் துவர்வாயார் என்னுங்கால்' எனவும் முறையே அப்பர் பெருமானும் அருள்வாதவூரடிகளும் செப்பி யருளினமையால் உணரலாம். சிறப்பு - திருவடிப்பேறு.

(அ. சி.) கண்டன் - அரசன். (கூ)

## 9. மகளிர் இழிவு

247. இலைநல வாயினும் எட்டி பழுத்தால்
குலைநல வாங்கனி கோண்டுணை லாகா
மூலைநலங் கோண்டு முறுவல்செய் வார்மேல்
விலகுறு நெஞ்சினை வெய்துகொள் ளீரே.

(ப. இ.) இலை தளிர் பூ காய் முதலியவற்றுல் அழகினை உடையன வாய் எட்டிமரம் பழுத்துக் குலைகளில் கண்ணைக் கவரும் வனப்பாகிய நலமுடன் கனி காணப்பட்டாலும் பின் விளையும் இறப்பினை எண்ணி அக் கனியை எவரும் உண்ணார். அதுபோன்று கண்ணைக் கவரும் அழகிய முலையினையும், எண்ணத்தை ஈர்த்து மனத்திண்மையை மாய்க்கும் வாய்ப் புன்முறுவலையுங் கொண்டு தம்மையும் பிறரையும் செம்மை நெறிச் செல்லவொட்டாது கெடுக்கும் பொய்ம்மை மாதர் மேல் செல்லும் எண்ணத்தைக் கொடிதெனக் கொண்டு நன்னெறிச் செல்வீராக. பொய்ம்மை மாதர் - பொருட்பெண்டிர்.

(அ சி.) இலைநலவாயினும் - பார்ப்பதற்கு இலையால் அழகுடைய தேனும். விலகுறும் - செல்லும். வெய்து - கடிந்து. (க)

248. மனைபுகு வார்கள் மனைவியை நாடில்
சுனைபுகு நீர்போற் சுழித்துடன் வாங்குங்
கனவது போலக் கசிந்தெழும் இன்பம்
நனவது போலவும் நாடவொண் ணுதே.

(ப. இ.) கட்டிய மனைவிபால் முறையாக இன்பம் எய்துவார் நிலை சுனைநீர் மூழ்கி இன்புறுவாரோ டொக்கும். அவ் வின்பினைக் கனவிற் காணினும் நனவுபோல் நலன்[1] படப்படாதாகும். தவறுமாதர்பால் கொள்

1. நனவினற் கண்டதூஉம். திருக்குறள், கூடாநட்பு.

ஞும் இன்பம் சுனை நீரில் காணும் சுழியிற்பட்டுத் துன்புற்று ஆழ்வது போல் பிறப்பிற்பட்டுத் துன்புற்று ஆழ்வதற்கு வழியாகும். அப் பொய்ம்மை மாதர் காட்டும் பொய்யான கசிந்தெழுவது போன்று தோன்றும் அன்பு அப்பொழுதே கனவுபோல் நிலையாதழியும். நனவில் நினைத்தாலும் பெரும் துன்பந் தருவதாகும். (உ)

249. இயலுறும் வாழ்க்கை இளம்பிடி மாதர்
புயனுறப் புல்லிப் புணர்ந்தவர் எய்தும்
மயலுறும் வானவர் சார்வித[1] என்பார்
அயலுறப் பேசி அகன்றுழிங் தாரே.

(ப. இ.) சாயலும் அழகும் அமைந்த பெண்யானையை ஒத்த இளம் பெண்கள் மேகம் பொழியும் மழைபோல் உடலும் உயிரும் தளிர்ப்பத் தழுவிப் புணர்ந்தவராலும் அவர்மனம் பொருளின் பாலே செல்லும். புதுப் பொருளுடையாரைக் காணின் அவர் எல்லாவகையாலும் தாழ்ந்தோராயினும் வானவரே யென்று சொல்லித் தம் பெருமயலில் ஆழ்த்துவர். அவர்சார்பே எய்தற்கரியதெனவுங் கூறுவர். பொருளற்றால் அவரை விலகும்படி கடுமையாகப் பேசியும் துன்புறுத்தியும் ஓட்டுவர்.

(அ. சி.) இயல் - அழகு. (கூ)

250. வையகத் தேமட வாரோடுங் கூடியேன்
மெய்யகத் தோருளம் வைத்த விதியது
கையகத் தேகரும் பாலியின் சாறுகொள்
மெய்யகத் தேபெறு வேம்பது வாமே.

(ப. இ.) வழித்துணையாகாமல் பழித்துணையாம் பெண்களைக் கூடுவதால் உண்டாகும் பயன் ஏதும் இல்லை. அதனால் மெய்யுணர்ந்தோருள்ளம் வெருவும். அப்பெண்கள் பொருளுடையார் பாலுள்ள கரும்பின் சாறனைய பொருள்களை அவர்கள் விரும்பி வலியக் கொடுத்து வணங்குமாறு செய்வர். அம்மட்டோ? மேலும் அப் பொருளுடையாரைப் பொருளற்ற காலத்துப் புறக்கணிப்பர்: பொருளுடையார் மனம் வேம்பனைய கசப்பாகிய வெறுப்பினை எய்தும்படி நடப்பர். அவர்தம் புன்மை புறத்துக் காணப்படும் வடுப்போல் உடம்பெல்லாம் அருவருக்கத் தகுந்த தொழுநோய் முதலியன கொள்ளவும் வைப்பர்.

(அ. சி.) மெய்யகத்தோர் - உண்மை உணர்ந்தோர். (ச)

251. கோழை ஒழுக்கங் குளமூடு பாசியில்
ஆழ நடுவார் அளப்புறு வார்களைத்
தாழத் துடக்கித் தடுக்கில் லாவிடில்
பூழை நுழைந்தவர் போகின்ற வாறே.

(ப. இ.) முறையாக மணந்து நாட்டுக்கும் வீட்டுக்கும் மொழிக்கும், நன்னெறிக்கும் துணைபுரியத்தக்க நன்மக்களைப் பெறுவதே இல்வாழ்க்கை

1. பஞ்சின். கஉ. தடுத்தாட்கொண்ட, கஙிக.
,,* பெண்ணெனப். சீவகசிந்தாமணி, கஙிகஎ.

யாகிய நற்றவப் பயனுகும். அதற்கென அமைக்கப்பட்டதே விந்துவாகிய வித்து. அவ்விந்து கோழை எனப்படும். அவ்விந்துவை முறை கடந்த பெண்பால் தீ யொழுக்கமாகிய மாசு மூடிக் கிடக்கும் குளமாகிய கருக் குழியில் ஒழுக்கி நட்டு வாழ ஆராய்வார்களே நல்லோர் தடுத்து ஒறுத்து வழி நிறுத்துதல் வேண்டும். அங்ஙனம் தடுக்காவிட்டால் அத்தீயோர் பாவப்புகும்வழி நுழைந்து தமக்கும் பிறர்க்கும் வரவேண்டிய நற்பயனே இழப்பித்து மாள்வர். பாசி - மாசு. அளப்புறுவார் - ஆராய்வார். தாழ - தடைப்பட. பூழை - புகும் வழி.

(அ. சி.) கோழை - விந்து. குளம் - கருப்பை. (கி)

---

# 10. நல்குரவு

252. புடைவை கிழிந்தது போயிற்று வாழ்க்கை
அடையப்பட் டார்களும் அன்பில ராஞர்
கோடையில்லே கோளில்லே கொண்டாட்ட மில்லே
நடையில்லே நாட்டில் இயங்குகின் ருர்கட்கே.[1]

(ப. இ.) 'உழப்பின் வாரா உறுதிகள் உளவோ' என்பதை நாடாது, 'கழப்பின் வாராக் கையற வுளவோ' என்பதற்குக் காட்டாக உழையாது வைத்து நல்குரவு எய்துவோர் வாழ்க்கை முற்றுங்கிழிந்து அற்றம் மறைத்தற்கும் ஆகாப்புடைவை போல் மதிப்புருது போய்க் கழியும். கழியவே தம்மைச் சார்ந்த நண்பர் உறவினர் முதலாயினரும் அன்பற்று விலகுவர். எவர்க்கும் ஏதும் கொடுத்தலும் உண்டாகாது. அதனல் அவர்கள்பால் ஏதும் கொள்ளுதற்கும் இடன் இன்று; சிறப்பாகக் கொண்ட உயிர் தட்பும் பறந்தொழிந்தது. ஆனேறுபோல் தான் நிமிர்ந்து நடக்கும் பீடு நடையுமில்லே. நாட்டில் என்புதோல் போர்த்த உடம்புபோல் இன்பின்றித் திரிகின்ருர்கள். கோள் - கொள்ளுதல். (க)

253. போய்க்குழி தூர்ப்பான்[2] புலரி புலருதென்
றக்குழி தூர்க்கும் அரும்பண்டம் தேடுவீர்
எக்குழி தூர்த்தும் இறைவனே ஏத்துமின்
அக்குழி தூரும் அழுக்கற்ற போதே.

(ப. இ.) ஐயோ! பொழுது விடிகின்றதே 'இன்றும் வருவது கொல்லோ நெருநலும், கொன்றது போலும் நிரப்பு' என்று நிலையிலாக் குழியாகிய வயிற்றினே நிரப்புதற் பொருட்டு மிக வருந்தி அக் குழி தூர்த்தற்கு வேண்டிய அரும் பொருள்களேத் தேடுவீர்! பசிக்குழி நோய்க்குழி. வறுமைக்குழி. பிறவிக்குழியாகிய எக்குழி தூர்க்க வேண்டுமானலும் எல்லாம்வல்ல இறைவனே முறையாகச் செந்தமிழ்த் திரு முறைச் சொல்லால் ஏத்துங்கள். ஏத்தவே, அகத்துக்கண் உள்ள அழுக்காறு,

1. நல்குரவென்னும் திருக்குறள் ; கoசஇ.
,, அறஞ்சாரா நல்குரவு. ,, கoசஎ.
2. வாழ்ந்தன. கக. பட்டினத்துப்—திருவிடை மும்மணி. எ.

அவா, வெகுளி, இன்னுச்சொல் ஆகிய நான்கு அழுக்கும் அப்பொழுதே அறும். அறவே, அவ்வயிற்றுக்குழி அந்நொடியே தூரும்.[1] தூர்ப்பான் - நீரப்பும்படி. அழுக்கு - மலம்: தூர்ப்பான்: பானீற்று வினையெச்சம்.

(உ)

**251.** கற்குழி தூரக் கனகமுந் தேடுவர்
அக்குழி தூர்க்கை யாவர்க்கும் அரியது
அக்குழி தூர்க்கும் அறிவை அறிந்தபின்
அக்குழி தூரும் அழுக்கற்ற வாறே.

(ப. இ.) ஒன்றனும் ஒரு காலத்தும் தூர்க்கமுடியாத குழியென்பார் 'கற்குழி' என்றனர். அஃதாவது வயிறு. அக் குழியைத் தூர்க்கவேண்டிப் பொன் முதலியவற்றைத் தேடுவர் எப்படிப்பட்டவர்க்கும் அருள் துணையின்றி அக் குழியைத் தூர்க்க முடியாது அக் குழியினைத் தூர்க்கும் அறிவாகிய திருவடியுணர்வை உணர்ந்தபின் மலமாயை கன்மங்களாய அழுக்கறும். அழுக்கறவே அக் குழி தானே தூரும். (ஊ)

**255.** தோடர்ந்தெழு சுற்றம் வினையினுந் தீய[3]
கடந்ததோர் ஆவி கழிவதன் முன்னே
உடந்தொரு காலத் துணர்விளக் கேற்றித்[3]
தோடர்ந்துநின் றவ்வழி தூர்க்கலு மாமே.

(ப. இ.) ஒருயிரைத் தொடர்ந்து வருத்திக்கொண்டு வரும் சுற்றத்தார் வினையினும் கொடியர். ஆவி உடம்பைவிட்டுக் கடந்து கழிவதன் முன்னே ஐம்புலன்கள் வழிச் செல்லாது மாறுபட்டு ஒரு காலத்துத் திருவடியுணர்வாகிய திருவிளக்கினைத் திருவருளால் ஏற்றுங்கள். அங்ஙனம் ஏற்றினால் எக்காலத்தும் மனமாசாகிய அழுக்கறும். பிறப்புறுவதாகிய குழியும் தூரும். கடந்தது என்பது கடந்து என்னும் வினையெச்சப் பொருள் தந்து நின்றது. உடந்து என்பது உடன்று என்பதன் திரிபு. உடன்று - மாறுபட்டு.

(அ. கி.) உடந்து - வருத்தப்பட்டு. (எ)

**256.** அறுத்தன ஆறினும் ஆனின மேவி
அறுத்தனர் ஐவரும் எண்ணிலி துன்பம்
ஒறுத்தன வல்வினை ஒன்றல்ல வாழ்வை
வெறுத்தனன்[4] ஈசனை வேண்டிநின் றேனே.

(ப. இ.) அறுசுவையினை மிகுதியும் விரும்பியுண்பான் கழிபேரிரையான் என்று கருதப்படுவான் அதனால் அவன் ஆனின முதலிய விலங்கினத்

---

1. தம்மையேபுகழ்ந். எ. ஈ - க.
2. மக்களே. அப்பர், சு. எக - உ.
3. உடம்பெனு. ,, ,, எடு. சு.
4. வெறுத்தேன். ஆரூரர், எ. சு - அ.

தோடு ஒப்பான். அவ்வறுவகைச் சுவைகளும் அவனைத் துன்பத்தில் ஆழ்த்தின. ஐம்புல வேடரும் அளவிலாத் துன்பத்தில் ஆழ்த்தினர். முற் செய்த வல்வினையும் கடுமையாகத் தண்டித்தன. இவற்றினின்றும் விலகி இன்புற வேண்டுமென்று அருளால் துணிந்த ஒருவன் சிவபெருமான் திருவடியினை வேண்டி நின்றான்: அதனால் அவற்றை வெறுத்தனன். அறுத்தல்: துன்பத்திலாழ்த்தல். (இ)

---

# 11. அன்புடைமை

257. அன்பும் சிவமும்[1] இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ[2]தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே.[3]

(ப. இ.) அன்பாகிய திருவருளும் இன்பாகிய சிவனும் மணியும் ஒளியும்போல் ஒன்றே. அவற்றை இருவேறு பொருள்கள் என்று கூறுவார் மெய்யுணர்வு கைவரப் பெறுதார். மெய்ம்மையான் நோக்கின் அன்பாகிய திருவருளே இன்பமாகிய சிவனுக்குத் திருமேனியாகும். அம்முறையான் அன்பே சிவமாகும். இவ்வுண்மையினையும் எவரும் உணர்கிலர். அன்பே சிவம் என்னும் உண்மையினை அருளால் அனைவரும் அறிந்தபின் தாம் இடையறாது திருவடிக்கண் வைக்கும் அன்பாகிய வித்தே சிவமாய் விளைந்து இன்பாய்க் கனிந்து அவ்வன்புடையார்க்கு என்றும் பொன்றாப் பேரின்ப நுகர்வாகும். அவ்வுண்மை 'சிவமாய் அமர்ந்திருந்தார்' என்னும் இம் மறைமொழியான் உணரலாம். (க)

258. பொன்னைக் கடந்திலங் கும்புலித் தோலினன்[4]
மின்னிக் கிடந்து மிளிரும் இளம்பிறை
துன்னிக் கிடந்த சுடுபோடி யாடிக்குப்
பின்னிக் கிடந்ததென் பேரன்பு தானே.

(ப. இ.) பொன்னையும் வென்று விளங்கும் புலித்தோலை ஆடை யாகவுடையவன். மின்னொளிபோல் விளங்கும் ஆருயிராகிய இளம் பிறையினை நிறைமதியாக்கற்குச் சூடினன்: அப் பிறை அழகுறப் பொருந்தியிருந்தது. அப் பிறை சிவனைச் சார்ந்தமையால் 'பதினெண் கணத்தவராலும் ஏத்தப்படுவதாயிற்று'. சிவபெருமான் திருவெண்ணீற் றுத் திருக்கோலத்தன். அதனால் சுடுபோடியான் என்றழைக்கப்

1. பெருமையால்: கஉ: தடுத்தாட், ககசு.
" மாறிநின்றென்னை: அ: கோயிற் - க.
2. ஆரண, உருவருள்: சிவஞானசித்தியார், க, உ - கஅ - கக:
3. மெய்ம்மையா: அப்பர், சு, எசு - உ.
4. பொன்னுர். ஆரூரர், எ. உச - க.

படுவன். அவன்மாட்டு என்னுடைய அளவிலாப் பேரன்பு பிரிவிலாக் கலப்பாகப் பின்னிக் கிடந்தது. மினிரும்: விளங்குகின்ற. பின்னல், கலப்பு: அத்துவிதம். அசைக்கும் புலித்தோல் அசுன்ற வெகுளி, இசைக்கும் உருவகமாம் எண்.

(அ. சி.) சுடுபொடி-நீறு. பின்னிக் கிடந்தது-சேர்ந்திருந்தது. (உ)

259. என்பே விறகா இறைச்சி அறுத்திட்டுப்
பொன்போற் கனலிற் பொரிய வறுப்பினும்
அன்போ டுருகி அகங்குழை வார்க்கன்றி[1]
என்போல் மணியினை[2] எய்தவொண் ணுதே.

(ப. இ.) 'விரதமே பரமாக வேதியரும், சரதமாகவே சாத்திரம் காட்டுவர்.' அவர் காட்டு மவ்விரதமும், 'நரிவிருத்தமதாக, எரிபெருக்கும் வேள்வியும்' ஈண்டு என்பே விறகாய்த் தன் இறைச்சியைத் தானே அறுத்திட்டுப் பொன்போற் கனலில் வறுப்பதெனக் கூறப்பட்டன. அவர்கள் தமக்கும் அன்பிலர், எவ்வுயிர்க்கும் அன்பிலர், அடியவர்க்கன்பிலர்; அம்முறையான் ஈசனுக்கும் அன்பில்லாராவர். அன்பில்லாத அவர்கள் எத்துணை வல்வினை செய்யினும் அன்பொன்றினுக்கு மட்டும் வெளிப்படும் இன்ப வடிவினனை சிவன் அவர்கள்முன் வெளிப்படான்; என்னைப்போல அன்போடுருகி அகங்குழைவார்க்கே வெளிப்பட்டருள்வன்; அடியேனுக்கும் வெளிப்பட்டருளினன்; அதனால் யான் எய்தியதுபோல் மனமணி இலிங்கமாகிய சிவபெருமானை ஆருயிர்கள் மாட்டுச் சிறிதும் அன்பிலாதாரால் பெறமுடியாதென்க; ஆருயிர்கள் மாட்டு அன்புடையாரே இன்பமாகிய சிவனைப் பெறுவர். அவ்வுண்மை வரும் தாயுமானச் செல்வர் திருமொழியான் உணர்க.

'அன்பர்பணி செய்யஎனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே.'—தாயுமானார், கருணை

மணி - சிவன். என்போல் - யான் அடைந்ததுபோல். குழைவு - பத்தி.

(அ. சி.) என்பொன்மணி : சிவம். (கூ)

260. ஆர்வம் உடையவர் காண்பர் அரன்தன்னை
ஈரம்[3] உடையவர் காண்பார் இணையடி
பாரம்[4] உடையவர் காண்பார் பவந்தன்னைக்
கோர நெருக்கொடு கோங்குபுக் காரே.

(ப. இ.) சிவக்கொழுந்தின்மாட்டு வைக்கும் அன்பாகிய தவம், சிவபெருமான் மாட்டுச் செல்லும் ஆர்வத்தினை விளக்கும். அத்தகைய

1. ஈசனுக்கன், சிவஞான சித்தியார். கஉ. உ - க.
" அன்பினனஞ். அப்பர். இ அ0 - ங.
2. காயமே. ,, சு: எசு - சு.
3. ஆரங்: கஉ. திருக்கூட்டச் சிறப்பு, க.
4. எத்தாயர்: அப்பர், சு: கூஉ - க:
" மற்றுந். திருக்குறள், கூசஇ.

ஆர்வமுடையவர் சிவபெருமானே அருளால் காண்பர். அவ்வார்வ விளைவு ஈரமாகிய நண்பினைத் தரும். அத்தகைய நண்பினர் சிவபெருமான் இணையிலாத் திருவடியிணையினைக் காண்பர். உலகியற் பற்றுள் குடும்பப் பாரமுடையவர் பிறப்பு இறப்புத் தடுமாற்றத்தைக் காண்பர். இவர்கள் எய்தும் கடும் துன்பத்தினை வாயினலும் சொல்லொணுதென்க. மேலும் இருளுலகத் துன்பமும் எய்துவர். கோங்கு: மாறுபாடு எனக் கொண்டு அதனைத் திசைச்சொல் எனவுங் கூறுவர். அன்பு ஆர்வம் முதலியவற்றைக் கண்ணப்ப நாயனார் திருவரலாற்றிலே 'முன்பு செய் தவத்தி னீட்டம்' (கூடூ) எனவரும் திருப்பாட்டான் உணர்க. ஈரம் - உள்ளன்பு. நெருக்கு - துன்பம். சிவக்கொழுந்து - சிவலிங்கம்.

(அ. சி.) ஆர்வம் - அன்பிற்கு முதல். ஈரம் - இரக்கம். பாரம் - அன்பின்மை. கோரம் - துன்பம். கோங்கு - ஒருவித நரகம்: (சு)

261. என்னன் புருக்கி இறைவனை ஏத்துமின்
முன்னன் புருக்கி முதல்வனை நாடுமின்
பின்னன் புருக்கிப் பெருந்தகை நந்தியுந்
தன்னன் பெனக்கே தலைநின்ற வாறே.

(ப. இ.) பலவாகப் பேசிப் பயன் என்? உள்ளன்பு உருகிக் கள்ள மொழிந்து தெள்ளத் தெளியச் செந்தமிழ்த் திருமுறையால் சிவனை இடையருது ஏத்துங்கள். எப்பற்றும் அற்று முதன்மையான அன்பால் முடிவிலா முழுமுதல்வனின் விழுமிய அடியிணையினைத் திருவருட் கண்ணுல் ஒருவாது நாடுங்கள். அவ்வாறு ஒழுகினுல் பின்னுதலாகிய புணர்ப்பன்பு எய்துதற் பொருட்டுப் பெருந் தகுதிப்பாடுடைய நந்தியெம் பெருமான் தன்னையே நாடும் தனியன்பினை நமக்கே தந்தருள்வன். தந்தருளி நம்நாட்டுத் தலைமைச்சிறப்பாய் வெளிப்பட்டு நின்றருள்வன். என்: வினவிடைச் சொல்லாய் ஏதும் பயனின்று என்பதை உணர்த்திற்று. முன் அன்பு - முதன்மையான பத்தி. தலை நின்ற ஆறு-தோன்றிய முறை.

(அ. சி.) என் - பல கூறிப் பயன் யாது. தலை நின்றவாறு - தோன்றிய விதம். (இ)

262. தாளொரு காலஞ்[1] சயம்புவென் றேத்தினும்
வாளொரு காலம் வழித்துணை யாய் நிற்கும்
தேளொரு பால்திகழ் கொன்றை அணிசிவன்
தாளொரு வண்ணம்என் அன்பில்நின் றுனே.

(ப. இ) சிவபெருமான் தன்னை அடியவர்க்கு அருளுதற்பொருட்டுத் திருவருளில் ஒரு காலத்துத் திருவுருக்கொள்ளுவன். அம்முறையில் தான்தோன்றியாகிய சயம்பு என்று பெறப்படுவன். அங்ஙனம் ஏத்துவார்க்குச் சிவவுலக வழித்துணையாய் அச்சிவன் என்றும் நின்றருள்வன். ஈண்டு ஒருகாலம் என்பது ஒப்பிலாத எக்காலமும் என்பதாம். தேன் போலும் இனிய மொழியினையுடைய உமையம்மையாரை இடப்பால் கொண்ட கொன்றைமாலை அணிந்து விளங்குகின்ற சிவபெருமான்

1. பிணத்தினை : சிவஞான சித்தியார், உ.சு - உ.

அடியேன் அன்பில் இன்னவண்ணம் என்று சொல்லவாராத அளவிலா வண்ணமாய் எழுந்தருளி நின்றனன்.

(அ. சி.) தேன் ஒரு பால் திகழ் - ஒரு பக்கத்தில் விளங்குகின்ற உமாதேவியை உடைய. (சு)

263. முன்படைத் தின்பம் படைத்த முதலிடை
அன்படைத் தெம்பெரு மானே அறிகிலார்
வன்படைத் திந்த அகலிடம் வாழ்வினில்
அன்படைத் தான்[1] தன் அகலிடத் தானே.

(ப. இ) ஆருயிர்கள் உய்யும் பொருட்டுப் பேரருளால் உலகுடல் ஊண் முதலியவற்றைச் சிவபெருமான் தன் வைப்பாற்றலாகிய மாயையினின்றும் படைத்தனன். அதன்கண் அவ்வுயிர்க்குப் பற்றுவருமாறு மால் கொடுத்து அவ்வுயிரை அதில் அடைத்தனன். அதன் வாயிலாகச் சிறிது இன்பமும் வழங்கினன். அப்படிப் படைத்தருளிய முதல்வனிடத்து அன்பினை முழுதுமாக அடைத்து எம்பெருமானை அவனருளால் அறிகின்றிலர். பலவாக விரிந்த நிலைபாத இந்தப் பெரிய உலக வாழ்வில் அவை நிலையுள்ளன எனக்கொண்டு மயங்குகின்றனர். அதன் மாட்டு மிகவும் உறுதிகொண்டு அன்பு கொள்ளுகின்றனர். இவையனைத்தும் சிவபெருமான் பெருநிறைவில் அருளால் நிகழ்வனவாகும்.

(அ. சி.) வன்பு அடைத்து - உறுதி செலுத்தி. (எ)

264. கருத்துறு செம்பொன்செய் காய்கதிர்ச் சோதி
இருத்தியும் வைத்தும் இறைவனென் றேத்தியும்
அருத்தியுள் ஈசனை யாரருள் வேண்டில்
விருத்தி கொடுத்திடும் விண்ணவர் கோனே.

(ப. இ.) அன்பர் கருத்துக்குப் பொருந்துமாறு மாற்றுயர்ந்த செம்பொன்னு லமைக்கப்பெற்ற பொலிவு மிக்க இயற்கை உண்மைப் பேரொளிப் பிழம்பு சிவன். அப் பிழம்பை அருளால் இடையறு நினைவால் உள்ளத்து இருக்கச் செய்யுங்கள் அதுவே பொருளாக வைத்தும் முழுமுதற் சிவனும் இறைவனை ஏத்துங்கள். அச் சிவனைப் பேரன்பாம் காதலால் அருள்வேண்டித் தொழுங்கள். அங்ஙனம் தொழுதால் சிவலுலகத் தலைவனுகிய அவன் திருவடிப்பேற்றின்பமாகிய விருத்தியைக் கொடுத்தருள்வன்.

(அ. சி.) அருத்தி - அன்பு. விருத்தி - இன்பம். (அ)

265. நித்தலுந் துஞ்சும் பிறப்பையும் செய்தவன்[2]
வைத்த பரிசறிந் தேயு மனிதர்கள்
இச்சையு ளேவைப்பர் எந்தை பிரான் என்று
நச்சியே அண்ணலை நாடுகி லாரே.

---

1. அன்போ. திருக்குறள், எஉ.
,, கால்கொடுத். அப்பர், சு. கூஙூ - சு.
2. தோற்றமுண்டேல். ஆரூரர், எ. எ - உ.

(ப. இ.) ஆருயிரின் வினைக்கீடாக அவற்றினுக்கு நாளும் இறப்பையும் பிறப்பையும் சிவபெருமான் அமைத்தருளினன். இவ்வுண்மையினை நன்குணர்ந்தும் மக்கள் தங்கள் விருப்பத்தை மீட்டும் உலகப் பற்றுகிய அப் பிறப்பு இறப்பிலே வைப்பர். யாவர்க்கும் எந்தையும் எமக்குத் தலைவனும் ஆகியவன் சிவன் என்று நினைந்து நிறைந்த அன்பினைச் செய்திலர். அவ் வண்ணலாகிய சிவபெருமானை நாடுகின்றிலர். துஞ்சு - சாதல்: முதனிலைத் தொழிற்பெயர். இச்சை-உலகப்பற்று. (கூ)

**266.** அன்பினுள் ளான்புறத் தானுட லாயுளான்
மூன்பினுள் ளான்முனி வர்க்கும் பிரானவன்[1]
அன்பினுள் ளாகி அமரும் அரும்பொருள்[2]
அன்பினுள் ளார்க்கே அணைதுணை யாமே.

(ப. இ.) சிவபெருமான் இன்ப இயல்பினன். ஆதலின் அவன் அதுவரும் வாயிலாகிய அன்பினிடத்தான். அவ்வன்பினுக்குக் காவலாகப் புறத்துமுள்ளான். அவ்வன்பினுக்குப் புகலிடமாயிருப்பதால் அவன் உடலாகவுமுள்ளான். அன்பும் சிவமும் உடலுமுயிரும் போல் ஒன்றென்ற சருத்தால் அன்பே உடலாகவுள்ளான் எனினும் அமையும். உலகத் தோற்றத்துக்கு முன்னும் அதனுடைய மாற்றத்துக்குப் பின்னும் ஒன்றுபோல் என்றும் நின்று நிலவுபவன் சிவன். அவன் முற்றத் துறந்த முனிவர்க்கும் முதல்வன். வேறெதற்கும் அகப்படாதவன். அன்பினுள்ளாகி வீற்றிருந்தருள்வன். அவனே எய்தற்கரிய அரும் பொருளாயுள்ளவன். அவன் இறவாத இன்ப அன்புடையார்க்குத் தன் திருவடியினையினே அணைப்பன். என்றும் நீங்காப் பெருந் துணையுமாவன். புறத்தான் - அன்பின் மேலுள்ளவன். உடலாயுள்ளான்-அன்பினையே உடலாகவுள்ளவன். அணைதுணை - அணுகிய - நெருங்கிய துணை.

(அ. சி.) அன்...யுளான் - அன்பே சிவம். முன்பினுள்ளான் - உலக உற்பத்திக்கு முன்னும் அதன் அழிவுக்குப் பின்னும் உள்ளவன். (கo)

---

1. செவ்வழல். சம்பந்தர், கூ. அ - எ.
2. அன்பேயென். திருக்களிற்றுப்படியார். திரு.

# 12. அன்புசெய்வாரை அறிவன் சிவன்

267. இகழ்ந்ததும் பெற்றதும் ஈசன் அறியும்
உகந்தருள் செய்திடும் உத்தம நாதன்
கொழுந்தன்பு செய்தருள்[1] கூரவல் லார்க்கு
மகிழ்ந்தன்பு செய்யு மருளது வாமே.

(ப. இ.) அன்பினைப் பொருட்படுத்தாமல் வன்னெஞ்சினராய்த் திரிவாரையும் அவ்வன்பினைப் பெற்று மென்னெஞ்சினராய் மேவி வாழ்வாரையும் சிவன் அறிந்து அவரவர் செய்கைகட்கு ஏற்றவாறு முறையே துன்ப இன்பங்களை அளிப்பன். அத்தகைய உகப்புடன் அருள் செய்யும் தலைமைசேர் முதல்வன், ஆருயிர்கள் முதற்கண் தொடர்புடையார்மாட்டு அன்புடையராய், அப் பயிற்சி மேலீட்டால் அனைத்துயிர்கள்மாட்டும் அருளுடையராய் ஒழுகவல்லார்க்கு மகிழ்ந்தன்பு செய்வன். அதுவே அவன் திருவருளுமாகும். இகழ்ந்தது-அன்பினைப் புறக்கணித்தது. பெற்றது - மெய்யன்புற்றது.

(அ. கி.) கொழுந்தன்பு - வளரும் அன்பு. (க)

268. இன்பப் பிறவிக் கியல்வது செய்தவன்
துன்பப் பிறவித் தொழில்பல என்னினும்
அன்பிற் கலவிசெய் தாதிப் பிரான்வைத்த
முன்பிப் பிறவி முடிவது தானே.

(ப. இ.) இன்பப் பிறவி என்னும் பேரின்பத் தோற்றத்துக்கு வேண்டுவ அனைத்தினையும் அருளால் வகுத்தமைத்தவன் அப் பேரின்பத்தினை எய்துங் கருவியாகக் கொடுத்தருளிய இப்பிறவிக்கண் நேரும் துன்பம் பலவாகும் அதனைப் போக்குதற்குச் செய்யும் தொழிலும் பலவாகும். ஆயினும் அச் சிவபெருமான் திருவடிக்கண் நீங்கா அன்பு செய்து கலத்தல் வேண்டும். அங்ஙனம் கலப்பின் ஆதியாகிய அம்மையையுடைய சிவபெருமான் வைத்தளித்த திருவருள் வலிமையால் இப்பிறவி இன்பமாக நிறைவெய்தும். இன்பப் பிறவி-பேரின்பத் தோற்றம். இயல்வது-தக்கது. முன்பு - வலிமை.

(அ. கி.) இன்பப் பிறவி - முத்தியின்பம். (உ)

269. அன்புறு சிந்தையின் மேலெழும் அவ்வொளி
இன்புறு கண்ணியொ டேற்க இசைந்தன
துன்புறு கண்ணியைத் தாடுந் துடக்கற்று
நண்புறு சிந்தையை நாடுமின் நீரே.

(ப. இ.) சிவபெருமானிடத்து இடையறாது அன்பு செய்து அதனால் நிறைந்த உள்ளத்தின்கண் அவன் திருவருட் பேரொளி மேலெழுந்து

1. அருளென்னும். திருக்குறள், எதிர.

விளங்கும். சிற்றின்பம் பேரின்பமாகிய இரண்டனையும் முறையான் அருள வல்ல திருக்கண்களையுடைய அம்மையாருடன் இசைந்தனன். அன்பு செய்வாரை ஏற்றருளவே அங்ஙனம் இசைந்தனன். துன்பத்தை மிகுவிக்கும் புட்சிமிழ்க்கும் கண்ணி போன்ற ஐம்புலன் ஆட்டும் ஆட்டத்தின் படி ஆடும் பிணிப்பினை அறுத்துச், சிவபெருமான்மாட்டு நட்புக் கொள்ளும் பயன் நிறைந்தவுள்ளத்தை நீங்கள் நாடுங்கள். இன்புறுகண் - சிற்றின்பம் பேரின்பங்களை அருளுகின்ற கண்களையுடைய இறைவி.

(அ. சீ.) கண்ணி ஐந்து - ஐம்புலன். (கூ)

**270.** புணர்ச்சியுள் ஆயிழை மேல்அன்பு போலே
உணர்ச்சியுள் ஆங்கே ஒடுங்கவல் லாருக்கு
உணர்ச்சியில் லாது குலாவி உலாவி
அணைத்தலும் இன்பம் அதுவிது[1] வாமே.

(ப. இ.) கருத்தொத்த காதலரிருவர் அன்புருகிக் கூடும்போது ஆடவர் மகளிர்மாட்டுச் செய்யும் இன்ப ஏதுவாகிய அன்பு அளவிறந்தது. அதுபோன்று, சிவபெருமான்மாட்டு வைக்கும் பேரன்பாகிய உணர்ச்சியும் அளவிறந்தது. அவ்வுணர்ச்சியே தாமாக அடங்கவல்லார்க்கு உலகப் பற்றுகிய உணர்ச்சி சிறிதும் தோன்றுதவாறு சிவபெருமான் செய்தருள்வன் : அவ்வுயிருடன் இன்புறும் வண்ணம் குலாவிக் கலந்து தன்னுடன் அணைத்தருள்வன். அணைத்து இன்பமும் கொடுத்தருள்வன். அப்பொழுது 'அது' என்று சொல்லப்படும் சிவத்துள் ஒடுங்கினமையால் 'இது' என்னும் ஆவி முழுநீறு பூசிய முனிவர் போன்று சிவமாகவே காணப்படும். அணைத்தல் - தன்னோடு கூட்டல்.

(அ. சீ.) உணர்ச்சியுள் - ஈசனை அறியும் அன்பினுள். உணர்ச்சி இல்லாது - உலக உணர்ச்சி இல்லாது. (சு)

**271.** உற்றுநின் றுரோடு மத்தகு சோதியைச்
சித்தர்கள் என்றுந் தெரிந்தறி வார்இல்லை
பத்திமை யாலே பணிந்தடி யார்தொழ[2]
முத்தி கொடுத்தவர் முன்புநின் றுனே.

(ப. இ.) மேலோதியவாறு அன்பினால் அது விதுவாகிய ஆவி ஆண்டவன் திருவடியைப் பொருந்தும். அங்ஙனம் பொருந்தினவருடன் தானும் பொருந்தி நிற்கும் பேரொளி சிவன். 'காமம் எனவொன்றோ கண்ணின்றுஎன் நெஞ்சத்தை, யாமத்தும் ஆளும் தொழில்' (திருக்குறள், கஉஉ) என்றவாறு கிடைத்தற்கரிய அச்சிவபெருமானின் வேறல்லாத திருவருளைத் தம் மூனைப்பால் வேலை வாங்கும் நிலையினர் சித்தர்களாவர். அச் சித்தர்களாலும் சிவபெருமான் தேர்ந்துணரப்படுவானல்லன். ஆயினும் அளவிறந்த பத்திமையாலே பணிந்து அடிமைத் தன்மையால் அடியாராய்த் தொழுமவர்கட்குத் திருவடிப் பேரின்பப் பேருகிய முத்தியினைக் கொடுத்து அவர்கட்கு முன்நின்றருள்வன். சித்தர்கள் -

1. அதுவிது. சிவஞானபோதம், கஉ. ச - க.
2. பத்திமையும். ஆரூரர், எ. கக - க.
,, தொண்டர்காள், அ. திருப்படையெழுச்சி, உ.

தம் முனைப்பு அருதவர்கள். பத்தர்கள் - தம்முனைப்பு அற்றவர்கள். முன்புநிற்றல் - மேலோங்கி விளங்கல். அஃதாவது திருவெண்ணீறு அணிந்தார் திருமேனிக்கண் அத் திருவெண்ணீறு மேலோங்கி விளங்குவது போன்றிருக்கும். சித்தர்: இவர் சித்தருள் ஒருவகையினர். (இ)

272. கண்டேன் கமழ்தரு கொன்றையி னன்அடி
கண்டேன் கரியுரி யான்றன் கழலிணை
கண்டேன் கமல மலர்உறை வானடி
கண்டேன் கழலதென் அன்பினுள் யானே.

(ப. இ.) மணங் கமழ்கின்ற கொன்றைமாலையினைக் கண்ணியும் தாருமாகக் கொண்டருளிய சிவபெருமான் திருவடியிணையினை நிறைந்த பேரன்பால் கண்டுகொண்டேன். ஆணவச் சார்பாம் மாயையின் மருள் யானை எனப்படும் அவ்வியானையினை ஈர்ந்து அதன் தோலினைப் போர்த்து அடக்கியருளியவன் சிவபெருமான்; அவனுடைய கழலிணையைக் கண்டுகொண்டேன் அன்பர் நெஞ்சத் தாமரையின்கண் உறையும் அவன் திருவடியைக் கண்டுகொண்டேன். திருவடிபுணர்வாம் அன்பினகத்து அவன் கழலிணையினைக் கண்டுகொண்டேன். இதன்கண் வரும் 'கண்டேன்' என்னும் நான்கினுலும் முறையே சீலம், நோன்பு, செறிவு, அறிவென்னும் நானெறிப் பேறும் குறிக்கப் பெற்றவாறு காண்க;

(அ. சி.) கமலமலர் உறைவான் - மலர்மிசை ஏகினான். (சு)

273. நம்பனை நாலு விதப்பொரு ளாகுமென்
றும்பரில் வானவர் ஓதுந் தலைவனை
இம்பனை இன்பத் திடைநின் றிரதிக்கும்
அன்பனை யாரும் அறியகி லாரே.

(ப. இ.) நம்புவார்க்குப் புகலிடமாகிய நம்பனை, எல்லாமாய்க் கலந்திருக்குந் தன்மையால் பலவகையான பொருளும் ஆவன் என்று மேலிடத்துள்ள வானவர்களால் ஓதப்படும் முதல்வனை, இயற்கை உண்மை அறிவின்ப வடிவாயவனை, ஆருயிர்கட்கு அவ்வின்பத் திடமாக நின்று இனிப் பூட்டும் அன்புருவனை, அவன்மாட்டு அன்புவைத்தார் அவனருளால் அறிவர். ஏனையார் அறியமாட்டார்;

(அ. சி.) இன்பனை - ஆனந்தமயனை. இரதிக்கும் - தித்திக்கும். (எ)

274. முன்பு பிறப்பும் இறப்பும் அறியாதார்
அன்பில் இறைவனை யாம்அறி வோம்என்பர்
இன்பப் பிறப்பும் இறப்பும் இலான்நந்தி
அன்பி லவனை அறியகி லாரே.

(ப. இ.) தம் எதிரே நாளும் நடந்துகொண்டிருக்கும் பிறப்பும் இறப்பும் ஆகிய இரண்டின் உண்மையினை யறியாதார் அன்பினிடத்துக் காணப்படும் இன்ப வடிவினனாகிய இறைவனை யாமறிவோ மென்பர்.

பிறப்பும் இறப்பும் இல்லாப் பெரும் பொருள் நந்தியெங் கடவுள். அவன் பாலுள்ள இன்பத்தினை அன்புவிளையுமிடத்தே வழிபட்டுப் பெறுதல் முடியும். அத்தகைய வழிபாட்டு அன்பில்லாதார் அவனைக் காண மாட்டார். (அ)

275. ஈசன் அறியும் இராப்பக லுந்தன்னைப்
பாசத்துள் வைத்துப் பரிவுசெய் வார்களைத்
தேசுற் றழிந்து செயலற் றிருந்திடில்
ஈசன்வந் தெம்மிடை ஈட்டிநின் றானே.

(ப. இ.) இரவு பகலாக இடையறாது மறப்பும் நினைப்புமின்றி மறவா நினைவாய்ச் சிவபெருமானைத் தொழுதல் வேண்டும். அவனைத் திருவைந் தெழுத்து முறையான் ஆருயிர்கள் பேரன்புக் காதலாகிய பாசத்துள் வைத்து நேசிப்பர். அங்ஙனம் நேசிப்பவர்களே பற்றுடையவர்கள் எனப் படும் பத்தியினராவர். இத்தகைய பத்திமையுடையாரை அச் சிவன் சிறப்பாக அறிந்தருள்கின்றனன். அவர் தேசுறுதலாகிய திருவடி யுணர்வாம் சிவஞானத்தால் அச்சிவனுக்கு அடிமையாம் தம்நிலையுணர்ந்து தம்மாற் செய்யப்படும் செயலெல்லாம் சிவச் செயலென்றிருப்பர். அப்படிச்கு இருந்தால் அம் மெய்யடியாருடன் அச் சிவபெருமான் கலந்து பிரிப்பின்றி மேலோங்கி நின்றருள்வன். பாசம் - அன்பு. பரிவு - பத்தி; பற்று. ஈட்டி நின்றான் - கலந்து நின்றான்.

(அ. சி.) தேசு - சிவஞானம். (கூ)

276. விட்டுப் பிடிப்பதென் மேதகு சோதியைத்
தொட்டுத் தொடர்வன் தொலையாப் பெருமையை
எட்டுமென் னருயி ராய்நின்ற ஈசனை
மட்டுக் கலப்பது மஞ்சன[1] மாமே.

(ப. இ.) திருவாதிரை செவ்வொளியுள்ள நுண்ணிய விண்மீன். அதுபோல் திருக்கார்த்திகையும் செவ்வொளியுடையதொரு செம்மீன். இவ்விரண்டு நாட்களும் சிவபெருமானின் தனிச்சிறப்பு நாட்களாகும். திருக்கார்த்திகைத் திருநாள் சிவபெருமான் பேரொளிப் பிழம்பாய்த் தோன்றியருளிய திருநாள். இப் பிழம்பே ஒருபுடை யொப்பாக அரு வுருவத் திருமேனி[2] யைக் குறிக்கும். உருவத் திருமேனி கட்புலன் ஆவதுமட்டுமல்லாமல் கையால் தீண்டுவதற்கும் வாய்ப்புடையதாகும். அது நிலத்தையும் நீரையும் கண்ணுற் காண்பதுடன் கையால் தீண்டவும் செய்கின்றோம். ஆனால் நெருப்பினைக் காண்பதல்லாமல் கையால் தீண்ட முடியாது. தீண்ட முடியாமைபற்றி அருவுருவெனச் செப்புகின்றோம். இவ்வருவுருவத் திருமேனியினின்று உருவாக முதற்கண் தோன்றிய திரு வுரு கூத்தப் பெருமானுர் திருவுருவே. அஃதொன்றே திருவருள் மேலீட் டால் இடையீடின்றி இயற்றியருளும் எழில்மிக்க திருத்தொழில்கள் ஐந்தினுக்கும் உரிய திருமேனியாகும். அத் திருமேனியைக் குறிக்குந் திருநாள் திருவாதிரையாகும். இந்நாளே உலகத் தோற்றத்தின்

1, மறவாமை. கஉ. வாயிலார், அ.
2. செங்கணுனும். ஙி. கூடு - கக.
,, காணுத.வருவினுக்கு. கஉ. சாக்கிய - அ.

பொன்னுளாகும். இம்முறைமை கார்த்திகை மார்கழி என்ற மாதங் களிரண்டும் அடுத்தடுத்துத் தொடர்ந்து வழங்கப்படுகின்றமையானும் உணர்க. சிவபெருமான் இயற்கை அருட்பெருஞ் சோதியாய்த் திகழ்கின்றுன். சொல்லவும் கருதவும் ஒண்ணுத மேன்மைமிக்க அச் சோதியை இடையருது எண்ணுதல் வேண்டும். அவ்வாறு நினையாது இடையிடையே நினைப்பது நன்றுகாது. அடியேன் அதனைத் தொடர்ந்து நினைந்து பின்பற்றுவேன். அளவிட முடியாததும் அழிவில்லதும் ஆகிய அத் திருவருட்சுடர்ப் பெருமையை அவனருள் துணையால் உணர்வின்கண் எட்டுவன். அத்தகைய உயிருடன் கலந்து உயிருக் குயிராய் நிற்கும் இறைவனும் அவனே. அவனைக் கூடிய அளவு பேரன்பினுல் இடையறு நினைப்புடன் கலப்பதே திருமஞ்சனமாகிய வழிபாடாகும். மஞ்சனம் - திருமுழுக்கு. இச்சொல் இனம்பற்றி வழி பாட்டினையுங் குறிக்கும் (கo)

---

# 13. கல்வி

277. குறிப்பறிந் தேனுடல் உயிரது கூடிச்
செறிப்பறிந் தேன்மிகு தேவர் பிரானை
மறிப்பறி யாதவந் துள்ளம் புகுந்தான்[1]
கறிப்பறி யாமிகுங் கல்விகற் றேனே.[2]

(ப. இ.) சிவபெருமான் ஆருயிர்கட்கு வினைக்கீடாக உடலினைப் படைத்து அளித்தனன். அதன்கண் அவ்வுயிரைக் கூட்டி உலகத்துக்கு வரச் செய்த குறிப்பினை அருளால் அறிந்தேன். அஃதாவது மாறு அன்பு செய்து அதன் ஆருக அவன் திருவடியை அடைதல். அதன் பொருட்டுச் சிவபெருமானும் அவ்வுயிர்களுடன் பிரிப்பின்றிக் கலந் தியக்குகின்றுன். அப் பேருண்மையினையும் அறிந்தேன். தேவர்கோவறி யாத தேவ தேவனுய் மூவர் முதல்வனுய் யாவர்க்கும் இன்பனுய் விளங் கும் அவனை அடியேன் உள்ளத்துத் திருவைந்தெழுத்து எண்ணுமுறை யால் அடைத்துள்ளேன். அவனும் மிக்க உவப்புடன் உள்ளம் புகுந் தருளினன். அவன் உள்ளத்தை விட்டுக் கள்ளம் பண்ணுது வெளிப்பட்டு நிற்கும் அருளினைப் புரிவிக்கும் திருவைந்தெழுத்தை நெஞ்சமுத்திப் பயின்றேன். இத்தகைய நன்னெறிக் கலியே மெய்யுணர்வுக் கல்வி யாகும். அவனருளால் அக் கல்வியினை அடியேனும் கற்றுக் கொண்டேன்.

(அ. சி.) செறிப்பு . கலப்பு. மறிப்பு - மீட்சி. (க)

278. கற்றறி வாளர் கருதிய காலத்துக்
கற்றறி வாளர் கருத்திலோர் கண்ணுண்டு[3]
கற்றறி வாளர் கருதி உரைசெய்யுங்
கற்றறி காட்டக் கயலுள வாக்குமே.

---

1. மை சேர்ந்த. கூ. இசு-இ-
2. கற்றதனுல். திருக்குறள், உ.
3. தண்டியடிக· கஉ. தண்டியடிகள், க.

(ப. இ.) திருவருட் கல்வி கற்ற செந்நெறியாளர் அவ்வருளால் எண்ணிய காலத்து அவர்தம் அறிவெண்ணத்து ஓர் அகக்கண் உண்டாகும். கற்றறிவல்லார் அவற்றினைக் கருதி உரை செய்வர். அவர்கள் கற்றுள்ள அறிவு காட்டுந்தன்மை வாய்ந்த கண்ணுகும். அக்கண் பக்கத்தே உள்ளது, கற்றறி: கற்றறிவு என்பது ஈறுகெட்டு நின்றது. காட்டகயலுள: காட்டு + அக்கு + அயலுள — காட்டக் கயலுள காட்டு - காட்டுந்தன்மை. அக்கு - கண். அயல் - பக்கம். (உ)

279. நிற்கின்ற போதே நிலையுடை யான்கழல்
கற்கின்ற செய்ம்மின் கழிந்தறும் பாவங்கள்
சொற்குன்றல் இன்றித் தொழுமின்[1] தொழுதபின்
மற்றுரென் றிலாத மணிவிளக் காமே.

(ப. இ.) காலமுண்டாக என்பது போல் இளமைக் காலத்து அறிவு ஆற்றல் ஆள்வினையுடைமை முதலியன தளர்ச்சியின்றிக் கிளர்ச்சியாக விருக்கும். அதுவே தொழுதற்கு வாய்ப்புடைய காலம். என்றும் ஒருபடித்தாய் மாறு நிலையுடையனுய் நிற்பவன் சிவன். அவன் திருவடியினைச் சேர்ப்பிக்கும் மெய்யுணர்வுக் கல்வியினைக் காலம் போக்காது ஓவாது, விரைந்து கற்றலைச் செய்ம்மின். கற்றலென்பது கற்றபடி அவன் திருத் தொண்டினை அருளால் புரிவது. அத் திருத்தொண்டினுல் பாவங்கள் அற்றொழியும். அச் சிவனைப் புகழ்ந்து பாடும் திருமுறைத் திருப்பாட்டுக்களை வழுவின்றிப் பொருளுணர்ந்து ஓதி அருள் நினைவுடன் தொழுங்கள். தொழுதபின் தனக்குத்தானே ஒப்பாய் வேறோர் உயர்வும் ஒப்புமில்லாத அழியா இயற்கை மணிவிளக்காம் சிவபெருமான் திருவருள் புரிவன். பொருளுணர்ந்து சொல்லவேண்டு மென்பதைச் 'சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார், செல்வர்' என்னும் திருமறை முடிவான் உணர்க. சொற்குன்றலின்றி - சொல்லின்கண் வழுவில்லாமல்.

(அ. சி.) மற்று ஒன்று - வேறு ஒப்பு. (கூ)

280. கல்வி யுடையார் கழிந்தோடிப் போகின்றூர்[2]
பல்லி யுடையார் பாம்பரிந் துண்கின்றூர்
எல்லியுங் காலையும் ஏத்தும் இறைவனை
வல்லியுள் வாதித்த காயமு[3] மாமே.

(ப. இ.) சிவபெருமானின் திருவடியுணர்வு கைவரப் பெற்றவரே உண்மைக் கல்வியுடையாராவர். அவர் திருவருளால் திருவடியை நாடி இவ்வுடம்பினையும் மிகை என்று உட்கொண்டு தொண்டின் கண் விழைந்தோடிச் செல்கின்றனர். தொடர்பாக ஒன்றன்பின் ஒன்று பல்குவதற்கு இடனுக இருப்பதால் உடலுக்குப் பல்லி என்று பெயர். பல்குவதையுடையது பல்லி. அத்தகைய வுடற்பின்கண் பற்றுடையார் பாம்பாகிய குண்டலினியை அரிதலாகிய வருத்தத்தினைச் செய்து வாழ்கின்றூர்.

1. சொற்பாவும். அப்பர், சு. கூஎ - உ.
2. மற்றுந் தொடர்ப். திருக்குறள், நடசஞ.
3. வந்து. கஉ. சண்டேசுரர், நிசு.
.. இரும்பைக். சிவஞானசித்தியார், கக. உ-ஞ.

இரவும் பகலும் யாவர்க்கும் இறைவனும் சிவபெருமானைச் செந்தமிழ்த் திருமாமறை வழியாகத் தொழுங்கள். அங்ஙனம் தொழுதால் வல்வியாகிய திருவருளால் குளிகையால் செம்பு பொன்னுவதுபோல் தொழுவார் உடம்பும் பொன்னுகும். அஃதாவது, சண்டேசுரர் திருவுடம்பு போல் தொழுவார் உடம்பும் தூமாயை உடம்பாகத் திகழும். வல்வி - திருவருள். வாதித்த - இரசவாதம் செய்த. அரிந்து - வருத்தி. காயம் - தூமாயை உடம்பு. எல்லி : இருவகைச் சந்தியெனலுமாம்.

(அ. சி.) பல்லி - ஆதார நிராதார அறிவு. பாம்பு - குண்டவிவி. எல்லி - மாலே. வல்லி - மாயையாகிய உலகம். (சு)

281. துணையது வாய்வருந் தூயநற் சோதி
துணையது வாய்வருந் தூயநற் சொல்லாந்
துணையது வாய்வருந் தூயநற் கந்தந்[1]
துணையது வாய்வருந் தூயநற் கல்வியே.[2]

(ப. இ.) இயற்கை உண்மை அறிவின்ப உருவாகிய சிவபெருமான் எந் நிலையினும் எவர்க்கும் எல்லாவற்றினும் விளக்கத் துணைநிற்கும் பேரொளிப் பிழம்பாவன். அவன் சிவகுருவாய் வந்து திருவைந்தெழுத்தைச் செவியறிவுறுத்துவன். அம் மந்திரத்தினையே ஆகுபெயராக ஈண்டுச் சொல்லென ஓதினர் அதற்குத் துணையாக இருப்பவனும் அவனே. அவன் மலர்மணம் போல் ஆருயிர்களைத் தன் திருவடிக்கண் அடக்கி இன்புறுத்தலின் 'தூயநற் கந்தந் துணை' யென்றனர். இத்துணையும் நிகழ்வதற்கு வாயிலாகிய கல்வித் துணையாக எழுந்தருள்பவனும் அவனே. அதனுல் அச் சிவனைத் 'தூய நற்கல்வி' என்றனர்.

(அ. சி.) தூயநற்சோதி - ஞானம். தூயநற்சொல் - குரு உபதேச மொழி. (கி)

282. நூலொன்று பற்றி நுணியேற மாட்டாதார்
பாலொன்று பற்றினுற் பண்பின் பயன்கெடுங்
கோலொன்று பற்றினுற் கூடா பறவைகள்[3]
மாலொன்று பற்றி மயங்குகின் றூர்களே.

(ப. இ.) செந்தமிழ்த் திருமறையாகிய தேவார முதலிய புகழ் நூல்களும், திருமுறையாகிய மெய்கண்ட சித்தாந்த முதலிய பொருள் நூல்களும் இறைவனடி அடைவிக்கும் எழில் ஞான பூசைக்குரிய நிறை நூல்களாகும். அந்நிறை நூல்களைப் பற்றுக்கோடாகக் கொண்டு நுணி என்னும் அந்தத்தைச் செய்யும் சிவபெருமான் திருவடியில் தலைக்கூடுதல் வேண்டும். அங்ஙனம் கூடமாட்டாதார், அறுநான்கு வகையாம் கொள்கைகளுள் ஏதாவது ஒரு கொள்கையினைச் சார்ந்து அதன்கண் கடும்பற்றுக் கொண்டு நிற்பர். ஏனையாருடன் பிணங்குவர். எங்குமில்லாத இன்றமிழ்ப்

1. உற்ற அ. அதிசயப்பத்து, கூ.
2. சூற்ற. ஆரூரர், எ. திரு - கி.
3. உரை மாண்ட. அ திருத்தோணோக்கம். கசு
,, சேம்மை கஉ. சண்டேசுரர், உ

பண்பின் பயன் மங்கிக்கெடும்படி கலாம் விளைப்பர். திருவைந்தெழுத் தாகிய செம்பொருட் செங்கோலைக் கைப்பற்றினால் ஐம்புலப் பறவைகள் தம்புலமற்று முனைத்துக் கூடா. எனவே அவை அடங்கும். அடங்கவே அவர் 'தம்மை ஐந்து புலனும் பின்செல்லும் தகையோ' ராவர். இந் நன்னெறிக்கு உய்க்கும் நிலையுடைக் கல்வியினை அறியாதார் உடல் உலக இணக்களில் மயக்குற்றுப் பிறப்பு இறப்பாகிய தடுமாற்றத்தால் மயங்கித் துன்புறுகின்றார்கள்.

நூல் - வீட்டுநூல், அல்லது உச்சித்துளை. நுனி - உச்சியிடம் அல்லது வீடு. பண்பு - தலைக்குணம். கோல் - கழி; நடுநாடியாகிய பிரமதண்டம். பறவை - புலன்கள். மால் - மயக்க நூல்; பெரும்பற்று.

(அ. சி.) நூல் - தத்துவ ஏணி. பால் - சார்பு. கோல் - அஞ்செழுத்து. பறவைகள் - எண்ணங்கள். (சு)

283. ஆய்ந்துகோள் வார்க்கரன் அங்கே வெளிப்படும்
தோய்ந்த நெருப்பது தூய்மணி சிந்திடும்
ஏய்ந்த இளமதி எட்டவல் லார்கட்கு
வாய்ந்த மனமல்கு நூலேணி யாமே.

(ப. இ.) திருவருளால் திருவடியுணர்வு கொண்டு அகத்தே ஆராய் வார்க்கு அரனுகிய சிவபெருமான் அங்கு அப்பொழுதே வெளிப்பட் டருள்வன். அது கதிர்க்கல்லானது கதிரோன் முன்னிலையில் அக்கதிரை வெளியில் வரச் செய்யும் தன்மையினை யொக்கும். பொருந்திய கட்டிளந் திங்கள் புருவநடுவிற் காணப்படும் மதிமண்டலமாகும். அம்மண்ட லத்தை அங்கண் நின்று கூடற்குரிய பயிற்சி வல்லார்க்கு அமைந்த மனம் மேலோங்கிப் போவதற்குரிய படி ஏணி ஆகும். கதிர்க்கல் - சூரிய காந்தக்கல். (எ)

284. வழித்துணை யாய்மருந் தாயிருந்[1] தார்முன்
கழித்துணை யாங்கற் றிலாதவர் சிந்தை
ஒழித்துணை யாய்உம்ப ராய்உல கேழும்
வழித்துணை யாம்பெருந் தன்மைவல் லானே.

(ப. இ.) திருவடிக் கல்வி கற்றுணர்ந்தவர் செல்வன் கழலேத்துஞ் செல்வமாய செல்வம் பெற்ற சிவனடியார் ஆவர். திருவருளால் யாவர்கட் கும் நன்னெறிக்கு உய்க்கும் வழித்துணையாவர். மேலும் மம்மர் அறுக்கும் மருந்துமாவர். அத்தகைத் திருவுடையார் முன்பு மேலோதிய கல்வியைக் கற்றிலாதவர் கழித்தொதுக்கும் பழித்துணையாவர். சிவபெருமான் மன மடங்கச் செய்தருளுவன்; ஆருயிரைத் தனதிடங் கருதுமாறு கருதும் துணையாவன். விண்ணவர் முதலாகச் சொல்லப்படுகின்ற ஏழுலகத்தார்க் கும் மும்மை நலமெய்தச் செம்மை வழித்துணையாயிருப்பவனும் சிவனே. இத்தகைய பெருந்தன்மை வாய்ந்த எல்லாம் வல்ல இயல்பினனும் சிவனே. கழித்துணை - நீக்கிவிடத்தக்க நிலையினர். சிந்தை யொழித் துணை - மனம் அடங்குதற்கு உரிய துணை. மும்மை இம்மை, உம்மை, அம்மை. இவற்றை 'இம்மை எனல் இப் பிறப்பாம் உம்மை வருபிறப்பாம், அம்மை பிறவாச்சிறப்பாம் அங்கு' என விரித்துக் காண்க. (அ)

1. வானதாடனே. ஆரூரர், எ. எ0 - கூ.

285. பற்றது பற்றிற் பரமனைப் பற்றுமின்[1]
மூற்றது எல்லா முதல்வன் அருள்பெறில்
கிற்ற விரகிற் கிளரொளி வானவர்
கற்றவர் பேரின்பம் உற்றுநின் ருரே.

(ப. இ.) தூயவுள்ளத்தால் ஒன்றனைப் பற்றவேண்டுமாயின் பெரும் பொருளாய்ச் செம்பொருளாய் அரும்பொருளாய் அன்பர் உள்ளத்து வரும் பொருளாய் வயங்கும் சிவபெருமான் திருவடியிணையினையே பற்றுங்கள். அம் முதல்வனின் திருவருள் கைவரப் பெற்றால் எல்லாம் எளிதின் இனிதாய் முற்றுறும். வியப் பொருளாம் சிவபெருமான் திருவடிக்குத் தொழும்பராய் ஒழுகியுய்யுங்கள். அதற்குரிய வழிவகைகளாம் விரகினை உணர்ந்தவர் என்றும் பொன்றாச் சிவவுலகத்தவர். அவர் அவனருளால் அவன் திருவடிப் பெரும் பேற்றின்பத்தினை முற்றும் உற்று நுகர்ந்து நின்றனர். முற்றது : முற்றியதென்பதன் சிதைவு.

(அ. சி.) கிற்றவிரகு - தொழும்பனும் உபாயம். (கூ)

286. கடலுடை யான்மலை யானைந்து பூதத்
தடலுடை யான்[2] பல ஊழிதோ றூழி[3]
அடல்விடை[4] யேறும் அமரர்கள் நாதன்
இடமுடை[5] யார் நெஞ்சத் தில்லிருந் தானே.

(ப. இ.) சிவபெருமான் உடைமைப் பொருளாகக் கடலையும் மலையையும் உடையன். நன்மையின் பேரெல்லையாகக் கடலையும், அடக்கத்தின் ஒடுக்கமாக மலையையும் நாயனார் நவின்றருளியதும் நாடுக. உலகமே உருவமாக உடைய அவன் 'நிலம் நீர் நெருப்பு உயிர் (காற்று) நீள்விசும்பு' ஆகிய ஐம்பெரும் பூதத்தையும் அப் பூதச் சேர்க்கையாகிய உலகத்தையும் உடலாக வுடையன். ஊழி ஊழியாகத் தான் அழியாது நின்று புண்ணிய வண்ணமாம் அடல் விடையினை ஏறியருளும் நாரிபாகன் சிவன். அடல்விடை என்பது பாவத்தை அடும் புண்ணிய ஆனேருகும். அறப்பண்புமாகும். புண்ணியம் வளர எண்ணரிய பாவம் தேயும் என்பது உண்மை. அதற்கு ஒப்பு ஒளிவளர இருள் அடங்குவதாகும். அச் சிவனே அவன் திருவடியினை இடையருது விரும்பும் அமரர்களாகிய சிவவுலகத்தார்க்கு முதல்வன். அமரர் - விருப்புடையோர். திருவடியுணர்வாம் இடமுடையார் புனித உள்ளத்தைச் சிவன் தனிப்பே ரிட மாகக் கொள்வன். அது கருஇல்லாம் திருக்கோவில் முதலிடத்தினும் மிக்கது.

(அ. சி.) இடம் உடையார் - பேர் அறிஞர். (கo)

---

1. பற்றுக. திருக்குறள், கூஇo.
,, பறறற்றூர் சோ. அப்பர், சு. கஇ - க.
2. தானலா அப்பர், சு சுo - க.
,, உலகமே சிவஞானசித்தியார், இ உ-கூ.
3. ஊழிதோ. ஆரூரர், எ கoo-கo.
4. பொன்றுது. சம்பந்தர். உ. அo - கூ.
5. உடம்பெனு. அப்பர், சு. எஇ - சு.

# 14. கேள்விகேட் டமைதல்

287. அறங்கேட்டும் அந்தணர் வாய்மொழி கேட்டும்
மறங்கேட்டும் வானவர் மந்திரங் கேட்டும்
புறங்கேட்டும் பொன்னுரை மேனி[1] யெம் ஈசன்
திறங்கேட்டும் பெற்ற சிவகதி[2] தானே.

(ப. இ.) மறைநூலே அறம் என்று கூறுவது ஆன்றோர் வழக்கு. எனவே அறங்கேட்டும் என்பது உலகியல் ஒழுக்கங்களை உள்ளவாறு கள்ளமில் உள்ளத்து நல்லார்பால் வல்லவாறு கேட்டும் என்பதாகும். சிவனடியார் அவ் வறத்தினை உலகோர் நலமொன்றே கருதி நெடு நுகத்துப் பகல் போன்று வடுவஞ்சி வாய்மொழிவர். அத்துடன் தூய்மையராய்ச் சிவனடி நினைவும் தவ வாழ்க்கையும் பேரருளும் பூண்டு ஒழுகுவோர் அந்தணராவர். அவர் கூறும் மெய்யுணர்வுக்கு வாயிலாம் அறிவுரைகளைக் கேட்டும், அறமாகிய புண்ணியத்துக்கு மாறுகிய பாவங்களையுணர்ந்து விலகுதற் பொருட்டும் விலக்குதற் பொருட்டும் அமைதியுடன் இருந்து கேட்டும், சிவவுலகோர் கூறும் சிறப்புக்கு வாயிலாம் மறைமொழியாகிய மந்திரங் கேட்டும், பிறநூல் இயல்புகளைத் திறமுறக் கேட்டும், பொன்போலும் எனப் புகழ்ந்து சொல்லப்படும் திருமேனியையுடைய நம் ஆண்டவனுடைய திருவருள் திறங்களைப் பொருளுறக் கேட்டும் அவனருளால் பெற்றநிலை சிவநிலை ஆகும். மறம் - பாவத்தின் இயல்பு புறம் - பிறர் நூல் திறம் - தன்மை. இதன் கண் கூறப்படும் கேட்டும் என்னும் வினை எச்சம் ஆறினனும் செருக்கு, சினம், சிறுமை, இவறல், மாண்பிறந்த மானம், மாணுவுவகை என்னும் ஆறு பகையும் அறுதல் பெறப்படும். சிவன் நினைவுடையார் 'இன்பம் விழையான் வினைவிழைவான் தன் கேளிர், துன்பம் துடைத் தூன்றும் தூண்' என்பதன் எடுத்துக் காட்டாய் நிற்பர். இதுவே சிவன் நிலை இதுவே இருவினையொப்பு. (க)

288. தேவர் பிரான்தனைத் திவ்விய மூர்த்தியை[3]
யாவர் ஒருவர் அறிவார் அறிந்தபின்
ஓதுமின் கேண்மின் உணர்மின் உணர்ந்தபின்
ஓதி உணர்ந்தவர் ஓங்கிநின் றாரே.

(ப. இ.) எத்தேவரும் என்றும் நத்தும் பெருமான் சிவன். சிறந்த திருவருளுருவன் சிவபெருமான். அவனை அவனருளால் யாவர் ஒருவர் அகத்துணர்வார், அவரே கேட்பித்தற்குரியார். ஆதலால் அங்ஙனம் உணர்ந்தபின் யாவரும் தீதின்றி உய்ந்து திருவடி சேர்தற்பொருட்டு ஓதுங்கள். சைவ மாண்புடையார் கூறக்கேளுங்கள். உணர்வதாகிய நாடுதலைச் செய்யுங்கள். அதன் பின்னும் இடையறாது ஓதியுணர்ந்தவர் செந்நெறிக்கண் ஒங்கி நின்றவராவர் (உ)

---

1. பொன்னர். ஆரூரர், எ-உ-க.
2. கிண்கிணி. புறநானூறு, எஎ.
3. முன்பெலா. அப்பர், சு. உ அ - க.

289. மயன்பணி கேட்பது மாநந்தி வேண்டின்
அயன்பணி கேட்பது அரன்பணி யாலே
சிவன்பணி கேட்பவர் தேவரு மாவர்
பயன்பணி கேட்பது பற்றது வாமே.

(ப. இ.) மாநந்தி ஓதும் பொருள்நூலே ஆராய்ந்து கேளுங்கள். கேட்பின் அரனுர் திருவாணையாலே மாயன் பணிகேட்டு ஒழுகுவதும் விளங்கும். அதுபோல் அயன்பணி கேட்பதும் விளங்கும். சிவன் பணி யாகிய திருவடி வழிபாடு புரியும் முறையினைக் கேட்பவர் சிவவுலகக் கடவுளராவர். அதுவே பிறவிப் பெரும்பயன் எய்தும் திருப்பணி கேட்ப தாகும். அக் கேள்வியே திருவடிப் பெரும்பேற்றுப் பற்றுமாகும். மயன் : மாயன் என்பதன் குறுக்கம். சிவன்பணி - சிவபூசை. பயன் பணி-திருவடிப்பேற்றினுக்குரிய நானெறித் தொண்டு. நானெறி : சீலம், நோன்பு, செறிவு, அறிவு என்பன.

(அ. சி.) மயன் - மாயன். அயன் - பிரமா. (கூ)

290. பெருமான் இவனென்று பேசி யிருக்குந்
திருமா னிடர்பின்னுத் தேவரு மாவர்
வருமா தவர்க்கு மகிழ்ந்தருள் செய்யும்
அருமா தவத்[1] தெங்கள் ஆதிப் பிரானே.

(ப. இ.) முழுமுதற் சிவபெருமானே அழிவில் விழுப்பொருள் என்று தெளிவர். தெளிந்து வழி வழியாகப் புகழ்ந்து பேசுவர். அவர் தன்னெறியிலொழுகும் திருமுறைத் தொண்டர். திருமானிடர் எனச் சிறப்பித்துக் கூறப்படுபவரும் அவரே. இத் திருத்தொண்டின் பயனுல் உம்மைக்கண் சிவவுலகக் கடவுளருமாவர் இருவினை ஒப்பில் இறப்பில் தவமாம் நற்றவமுடையவர் அருமாதவராவர். அவ்வருமாதவத்தைப் புரியுமாறு உடனின்று உதவியருளுபவன் சிவன். அருமாதவப்படிமை கொண்டுணர்த்துபவன் அம்மையப்பனுகிய சிவன். மகிழ்ந்தருள் செய் வானும் அவனே. அருமாதவம் : நற்றவம் ; சீலம், நோன்பு, செறிவு, அறிவு என்பன. (ஏ)

291. ஈசன் அருளும் இறப்பும் பிறப்பையும்[2]
பேசி யிருந்து பிதற்றி மகிழ்வெய்தி
நேசமு மாகு நிகழொளி யாய்நின்று
வாச மலர்க்கந்த[3] மன்னினின் ருனே.

(ப. இ.) சிவபெருமானின் திருவருளையும் அவன் திருவாணையால் ஆருயிர்களின் இருவினைக்கீடாக வரும் இறப்பையும் பிறப்பையும் செம் பொருட்டுணிவினர் செப்புவர். அதுவே எப்போதுமுள்ள முப்பொரு ளுண்மை. இதனைத் திருவருளால் இடையருது பேசி இருங்கள். அப்

1. கண்ணி. புறம். கடவுள் வாழ்த்து.
2. அவையே. சிவஞானபோதம், உ.
3. உற்றீ. அ. அதிசயப்பத்து, கo.

பொருள் வயப்பட்டு விடாது அறிவழிந்து குழறுவதாகிய பிதற்றினைச் செய்து பெருமகிழ்வுற்றிருங்கள். நீங்கா நேசமாகுங்கள். அறிவுக்கு அறிவாய் நின்று விளங்கும் சிவபெருமான் நறுமலர் நாற்றம்போல் உயிர்க் குயிராய் நிலைத்து நின்று இன்புறுத்தியருளினன். நிகழ் ஒளி - இயற்கை அறிவு. நேசமாகு என்பது ஆகுமின் என்பதன் கடைக்தறை அல்லது ஆகு என்பதை முன்னிலை ஒருமை ஏவல் வினைமுற்றுகக் கொண்டு நீ நேசமாகுவாயாக என முடிக்க.

(அ. சீ.) வாசமலர்க் கந்தம் - பூவின் மணம் போல. (இ)

292. விழுப்பமுங் கேள்வியும் மெய்ந்நின்ற ஞானத்
தொழுக்கமுஞ் சிந்தை உணர்கின்ற போது
வழுக்கி விடாவிடில் வானவர் கோனும்
இழுக்கின்றி எண்ணிலி காலம தாமே.

(ப. இ.) மேலோதியவாறு முப்பொருளுண்மையினைத் திருவைந்தெழுத் தின்கண் வைத்து உணர்ந்தொழுகும் விழுப்பமும் சிறந்தது. நல்லார், அல்லர்ர் கண்டத்தன் அருளால் கூறும் பொருண்மொழிக் கேள்வியும் சிறந்தது. திருவடியுணர்வாம் மெய்ஞ்ஞானத்தொழுக்கமும் சிறந்தது. இவற்றின்கண் எண்ணம் இடையறுது நாடும்போது வழுக்குதலாகிய பொச்சாப்பு ஏற்படாதிருத்தல் வேண்டும். அங்ஙனம் வழுக்காதிருப்பின் தூய விண்ணுகிய சிவவுலகத்துச் சேர்வர். வேந்தனுகிய சிவபெருமான் தவறுதலின்றி அளவில்லாத வூழி உடனுய் நின்று அவ்வுயிரையும் நிலைப் பித்துத் திகழ்ந்தருள்வன். அல்லார் கண்டம்-இரவிபோன்ற நீலகண்டம்.

(அ. சீ.) வழுக்கிவிடாவிடில் - தவறு இல்லையேல். (கு)

293. சிறியார் மணற்சோற்றில் தேக்கிடு மாபோல்
செறிவால் அணுபோகஞ் சித்திக்கும் என்னில்
குறியாத தொன்றைக்[1] குறியாதார் தம்மை
அறியா திருந்தார் அவராவர் அன்றே.

(ப. இ.) சிறுமகார் சிற்றிலிழைத்துச் சிறு சோறடுவர். உற்றவிருந் துடன் இருமுது குரவர்க்கும் ஈவர். தாமும் அருந்தி உண்மையின்பம் எய்தினுர்போல் உள்ளம் நிறைவுறுவர். நிறைவுறுதல் - திருத்தியடை தல். திருத்தி - திருப்தி. அதனை உண்மையன்றென உணர்ந்த முதி யோரும் அன்றெனக் கூறுது ஆமென்றே கூறுவர். என்னை? அதுவே அப் பருவத்துக்கண் கூறும் ஒப்புரையாகலான் என்க அதுபோல் ஐம்பொறி நுகர்வால் செம்பொருட் சிவனை இம்பரில் காண்டும் என்றும் அது கைகூடுமென்றும் சிலர் கூறுவர். அங்ஙனம் கூறுவார் அச் சிவனையும் தம்மையும் அறியாதவராவர். அச் சிறுமகாரையும் ஒப்பா ராவர். ஆயின், அச் சிவபெருமான் சுட்டுணர்வாலும் சிற்றுணர்வாலும் அறியப்படாதவன். அவ்வுண்மையினைக் குறியாததொன்று எனக் குறித்

1. உணருரு. சிவஞானபோதம், சு.
,, சுட்டி. ,, , கூ. உ - உ.
,, உணர்வி. கஉ. சம்பந்தர், ககக.

தனர். அச் சிவனே அவன் திருவருளால் அகக்கண் கொண்டு உணர் வினில் குறித்தல் வேண்டும். அகக்கண் - அறிவுக்கண். அவன் மாற்றம் மனம் கழிய நின்ற மறையோன். தேக்கிடுதல் - நிறைவுறுதல். செறி வால் - ஐம்புலத் தொடர்பால்.

(அ. சி.) குறியறியாதது ஒன்று - சுட்டி அறியப்படாத சிவம். (ஈ)

294. உறுதுணை யாவ துயிரும் உடம்பும்
உறுதுணை யாவ தலகுறு[1] கேள்வி
செறிதுணை யாவது சிவனடிச் சிந்தை
பெறுதுணை கேட்கிற் பிறப்பில்லை[2] தானே.

(ப. இ.) ஆருயிர் உய்வதற்கு நேரிய பெருந்துணையாவது மக்க ளுடம்பேயாம். மேலும் உயர்ந்தோர் எனக்கொள்ளப்படும் உலகோர் திருவடியுணர்வால் கூறும் ஒற்கத்தின் ஊற்றுந்துணையாகிய நற்கேள்வி உயிர்க்கு உறுதுணையாகும். நற்கேள்வி - சிவனடியே சிந்திக்கச் செய்யும் திருப்பெருகு சிவஞானம். நம்மைவிட்டகலாது ஒட்டியுறைவதாகிய செறிதுணை சிவனடி மறவாச் சிந்தையேயாம். அதனால் பெறப்படும் அளவில் பேற்றினைக் கேட்பின் பிறப்பற்றுச் சிறப்புற்று இறப்பில் பேரின்பம் உறப்பெற்று என்றும் ஒன்றுபோல் பிரிவின்றி நின்று வாழ்வ தாம். 'உலகம் உயர்ந்தோர் மாட்டு'[3] என்பதனை வரும் தொல்காப்பிய நூற்பாவான் உணர்க:

வழக்கெனப் படுவ துயர்ந்தோர் மேற்றே
நிகழ்ச்சி யவர்கட் டாக லான. —தொல். பொருள் - சூசன. (அ)

295. புகழநின் ரூர்க்கும் புராணன்எம் ஈசன்
இகழநின் ரூர்க்குப்[4] இடும்பைக் கிடமா
மகிழநின் ரூதியை ஓதி உணராக்
கழியநின் ரூர்க்கொரு கற்பசு வாமே.

(ப. இ.) அறஞ்சொல்லும் நல்லார் புகழ அவரோடு உடனின்று அவரைத் திருவடியன்பிற் கலப்பித்து நிறைந்து நிற்கும் தொன்மைத் திருஅருட் செல்வன் சிவபெருமான். இவ்வுண்மை உணராது புறக் கணித்துச் சிலர் இகழ அவர் நல்வழிப்படுதற் பொருட்டு அவர்க்கு இடும்பைகளே நல்கி அவற்றொடு பிணிப்பிப்பவனும் நன்மைச் சிவனே. 'ஈசன் பல்கணத் தெண்ணப்பட்டு இறுமாந்திருக்கும்' பெருமகிழ்வு கொண்டு திருவருளால் அச் சிவனே ஓதியுணரும் உண்மைநெறி நில்லாது அந் நெறிக்கு விலக்காகி நின்ரூர்க்குத் துன்பமே யன்றி இன்பம் உண்

1. உலகத்தா. திருக்குறள், அடு0.
2. குறவிதோள். அப்பர், சு. சு0 - ங.
3. பண்புடையார்ப். திருக்குறள், ஙகூ.
,, உண்டாலம்ம, புறம். சஅஉ.
4. நல்லார்: சம்பந்தர், க. அசு - க0.

டாவதில்லே. அவர்கட்கு இன்ப வடிவினன் ஆன சிவன் கற்பசு - கல்லா லாகிய பசுப் போன்று காட்சியளிப்பன். கற்பசு பெயரும், உருவும், மடியும், பிறவும். பொலிவும் பசுப் போன்று தோற்றமளிக்கும். தோற்றத்தளவானும் கூடப் பாலுக்கு வாயில் ஏதும் இல்லே. அதுபோல் சிவனல் அடையப் பெறும் இன்பப் பயன் கழிய நின்ரூர்க்கு ஏதும் இல்லே. கற்பசு - கல்லா. மடி - பாற்காம்பு.

(அ. சி.) புராணன் - அநாதியாயுள்ளவன். கற்பசு - கல்லாலே செதுக்கப்பட்ட பசுவைப் போல. (கூ)

296. வைத்துணர்ந் தான்மனத் தோடும்வாய் பேசி
ஒத்துணர்ந் தான்உரு ஒன்ரேடொன் ரெவ்வாது
அச்சுழன் ரூணி கலங்கினும் ஆதியை
நச்சுணர்ந் தார்க்கே நணுகலு மாமே.

(ப. இ.) ஒருடம்பிருவராகி என்றதனுல் ஒருபால் பெண்ணும் ஒரு பால் ஆணும் ஆக ஒன்ரேடொன்று ஒவ்வாத் திருக்கோலத் திருவுரு வுடையவன் சிவன். அவனேத் திருவருளால் உள்ளத்தின்கண் வைத்துத் திருவடியுணர்வான் உணர்ந்து மனமார நினேந்து வாயாரப் புகழ்ந்து நன் னெறிக்கண் ஒழுகுவார்தம்மை அவனும் உடன் ஒத்து உணர்வன். அச் சாகிய உடம்பு தளர்ந்து உழன்ற காலத்து அதனே உரனுடன் நிறுத்தும் அச்சாணியாகிய மனம் திண்மை அழிந்து கலங்கும். அங்ஙனம் கலங்கிய இடத்தும் அந்தம் ஆதியாகிய சிவபெருமானே உள்ளன்புடன் உணர்க. அங்ஙனம் உணர்ந்தார்க்கு அவன் மிக நெருங்கி அஞ்சேலென்று அருள் செய்வன். நச்சுதல் - விரும்புதல் ஒன்ரெடொன் ரெவ்வாக்கோலம் என்பதற்கு வாழ்வுதரும் போகவடிவமும், தாழ்வுதரும் கோர வடிவமும், தவம் தரும் யோகவடிவமும் எனக் கூறுதலும் ஒன்று. அவ்வுண்மை வரும் திருப்பாட்டான் உணர்க:

"ஒன்ரெடொன் ரெவ்வா வேடம் ஒருவனே தரித்துக் கொண்டு
நின்றலால் உலக நீங்கி நின்றன னென்றும் ஒராரார்
அன்றியவ் வேட மெல்லா மருள்புரி தொழிலென் ரேராரார்
கொன்றது வினேயைக் கொன்று நின்றவக் குணமென் ரேராரார்."
—சிவஞானசித்தியார், க. உ - உக.

(அ. சி.) அச்சு-தேகம். நச்சு-விருப்பம். ஆணி-மன உறுதி. (கo)

# 15. கல்லாமை

297. கல்லா தவருங் கருத்தறி காட்சியை
வல்லா ரெனில்அருட் கண்ணுன் மதித்துளோர்
கல்லாதார் உண்மைபற் றுநிற்பர் கற்றேருங்
கல்லாதார்[1] இன்பங் காணுகி லாரே.

(ப. இ.) எழுதப் படிக்கக் கல்லாதவரும் அருளால் அன்பு கொண்டு அறிவின்கண் அறிய வேண்டுமென்று முயன்றால் அவர்க்கு அறியப்படும் காட்சித் தன்மை உடையவன் சிவன். திருவடியுணர்வு கற்று வல்ல ரெனில் அச் சிவனே அவன் திருவருளால் அறிவிற் கண்டு இன்புறுவர். அத் திருவடியுணர்வு அருளால் கல்லாதவர் அவ் வுண்மைச் சிவனே மேற் கொள்ளாது நிற்பர். அவர்கள் உலகியல் கற்றுளாராயினும் கல்லா தவரேயாவர். அவர்கள் திருவடியின்பங் காணுதவருமாவர். கருத்து - அறிவு. காட்சி - திருவருட் கண்ணுல் காணப்படும் சிவன். அருட்கண் - மெய்யுணர்வுக்கண். (க)

298. வல்லார்கள் என்றும் வழியொன்றி வாழ்கின்றூர்
அல்லா தவர்கள் அறிவு பலஎன்பார்
எல்லா இடத்தும் உளன்எங்கள் தம்இறை
கல்லா தவர்கள் கலப்பறி யாரே.[2]

(ப. இ.) திருவருட் சிறப்புச்சேர் வல்லார்கள் எஞ்ஞான்றும் யாண்டும் இடையீடின்றித் திருவடியுணர்வு சேர்வர். அதனுல் நன்னெறிக் கண் பொருந்தி நல்லாராய் வாழ்கின்றூர். செந்நெறிக்கண் வாராத ஏனே யார் மெய்யுணர்வு நூலாகிய ஞானநூல் பல என்பர். நம் இறையாகிய சிவபெருமான் எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்துளன். சிவனெறி கல்லாதவர் அவன் திருவடிச் சேர்வு கலவாதவராவர். அறிவுபல-அறிவு நூற்கள் பல.

(அ. சி.) வழி ஒன்றி - ஞான நெறியிற் பொருந்தி. (உ)

299. நில்லா நிலையை நிலையாக நெஞ்சத்து
நில்லாக் குரம்பை நிலையென் றுணர்வீர்காள்
எல்லா வுயிர்க்கும் இறைவனே யாயினுங்
கல்லாதார் நெஞ்சத்துக் காணவொண் ணுதே.[3]

(ப. இ.) உலகும் உலகத்துப் பொருளும் உடலும் நில்லாத தன் மையினே உடையன. அவற்றை நிலையாக நிற்கும் என நெஞ்சத்துக்

1. உலகத்தோ. திருக்குறள், கசo.
2. தூயானேச். அப்பர், சு, இo - சு.
3. கல்லா நெஞ்சின். சம்பந்தர், சுட. சுச - சுட.
,, கீல்லாதார். அப்பர், சு. அசு. அ.

கொள்வார் புல்லறிவினர். நில்லாத உடம்பையும் நிலை என்று நீடு நினைக்கும் பீடிலாதவர்களே! விழுமிய முழுமுதற் சிவபெருமான் எல்லா வுயிர்க்கும் இயைந்தியக்கும் அறமுறை நீங்கா இறைவனுவன். ஆயினும் திருவடியுணர்வு கல்லாதார் உள்ளத்துத் ததிநெய்போல் விளங்கிக் காண வொண்ணுது. பாலில் நெய்போல் மறைந்து நிற்பன். தயிர்-தயிர். நெய்-வெண்ணெய். குரம்பை - உடம்பு. கல்லாதார்-திருமுறை கல்லாதார்.

300. கில்லேன் வினைத்துய ராக்கு மயலானேன்
கல்லேன் அரனெறி[1] அறியாத் தகைமையின்
வல்லேன் வழங்கும் பொருளே[2] மனத்தினுட்
கல்லேன் கழியநின் முடவல் லேனே.

(ப. இ.) திருவடியுணர்வு கற்றவினும் நன்னெறி நிற்கும் பற்றி னிலும் பொருந்தும் ஆற்றல் இல்லேன். அதனால் எஞ்ஞான்றும் பிறப் பிற்கு வித்தாம் இருவினைத் துயரைப் பெருக்கும் இருள் மயக்கினுக்கு உட்பட்டேன். திருவடியைச் சேர்க்கும் சிவனெறியாகிய அரனெறியைப் புண்ணியப் பேறின்மையாற் கல்லேன். அதனால் நன்மை அறியாத் தன்மைசேர் புன்மையின்வல்லவனுனேன். ஐம்புலன் நுகர்வில் அடங்கா அவாவும் அதற்கு வேண்டும் பொருள்களைக் கூட்டும் முயற்சியில் நாட்ட மும் விடாது மனத்துள் அடைபட்டுக் கிடக்கின்றன. இவற்றை யகன்று நன்னெறி ஒழுகக் கல்லேன். நன்னெறிக்குச் சேயனுய் நின்று புன்னெறி யில் ஒழுக வல்லேன். இனி வழங்கும் பொருளை மனத்தினுட் கல்லேன் எனக் கொண்டு 'கொடுத்தலும் துய்த்தலும்' என்னும் செந்தமிழ் முறைக்கு மாருகப் பொருள்களைத் துய்த்தலே உய்வென்று ஓவாது கருதி வழங்குவதாகிய கொடுத்தலை மனத்துட் கல்லேன் எனலும் ஒன்று.

(அ. சி.) கில்லேன் - ஆற்றகில்லேன். வழங்கும்பொருள் - ஐம்புல வாயிலாய் அறியும் பொருள். (சு)

301. நில்லாது சீவன் நிலையன் றெனவெண்ணி
வல்லார் அறத்துந் தவத்துளும்[3] ஆயினர்
கல்லா மனித்தர் கயவர்[4] உலகினில்
போல்லா வினைத்துயர் போகஞ்செய் வாரே.

(ப. இ.) பிறப்பற முயலும் வல்லாராகிய அறவோர் ஆவி இவ் வுடலகத்து எந்நாளும் நிலையாக நில்லாது என்றும், இவ்வுடலும் இவ் வுலகத்து நிலையாக நில்லாதென்றும். இவ்வுலகமும் காரணத்தொடுங்குவ தல்லது நிலையாக நில்லா தென்றும் வழியளவையான் உண்மை உணர் வர். உணர்ந்து இப்மை உப்மை வாழ்வுக்குத் துணையாம் அறத்தினை யும், அப்மை வாழ்வுக்குத் துணையாம் சிவத்தைப் பேணுதலாகிய தவத்

1. கற்றிலேன். அப்பர் ச. எஅ - உ.
2. வென்றிலேன் ,, ,, ,, க.
3. பெற்ற. ,, இ. இ - உ.
4. பற்றிலா. ,, ச - ஙக - அ.
,, எற்றிற். திருக்குறள், கoஅo.

இனையும் இடையிருது பயின்று அவையே தாமாக விளங்கினர். இவ் வுண்மையினைக் கல்லா மனிதரே கயவர் எனப்படுவர். அவர்கள் இறந்தும் பிறந்தும் இருவினைக் கீடாகத் திருவாணையால் வரும் வினைத்துயரினைத் துய்ப்பதாகிய போகத்து உழந்தவராவர். வல்லார் - பிறப்பற முயலும் அறவோர். வினைத்துயர் - வினை நுகர்வுத்துன்பம். (இ)

**302.** விண்ணினின் உள்ளே விளைந்த விளங்கனி
கண்ணினின் உள்ளே கலந்தங் கிருந்தது
மண்ணினின் உள்ளே மதித்து மதித்துநின்று
எண்ணி எழுதி[1] இளைத்துவிட் டாரே.

(ப. இ.) அருள் வெளியினுள்ளே விளைந்த பண்பால் விளாம்பழத் துடன் ஒருபுடை ஒப்புமை கூறற்கு ஏற்றவன் சிவபெருமான். அவன் புறக்கண்ணினுக்குச் சார்புவாயிலாக அளிக்கும் பொதுக்காட்சியுடையன். அகக்கண்ணுகிய உணர்வினிடத்து இயற்கை உண்மை, அறிவு இன்ப வடிவாம் சார்பிலாத் தன் தன்மைவாயிலாக அளிக்கும் சிறப்புக் காட்சி யும் உடையன். இவற்றை அளித்துக் கலந்திருந்தருள்வன். இவ் வுண்மை யுணை உள்ளவாறு அருளால் உணர்தல் வேண்டும். உணராதார் உலகத்தில் சுட்டி அறியப்படும் பொருள்களே நிலைக்குமென மாறுபடக் கொள்வர். மதித்து அதன் வாயிலாகத் தம் அறிவு போனவாறு முன்னெடுபின் மூரணுய்ப் பொருந்தா நூல்கள் பலசெய்வர். செய்து கையும் கண்ணும் கருத்தும் இளைத்து ஏமங்காணுது வாளாபோயொழிந்தார் பலராவர். விளங்கனி என்பது பண்புலம ஆகுபெயராய்ச் சிவபெருமானைக் குறித்து நின்றது. வில்வம் கூவிளம் கிளுவை விளா வன்னி ஆகிய ஐந்தும் சிவ பெருமானுக்கு உவந்த ஐந்தளிர்கள் என்ப. அவற்றுள் வில்வப் பழமும் விளாம்பழமும் சிறந்த மருந்தாவதுடன் பித்தத்தை உடனே அகற்றும் மருந்துமாய்ப் பொருந்தும் உணவுமாய் விளங்குகின்றன. பித்தம் அகன்ருல் அறிவு விளங்கி நல்லவராவர். அத்தகைய விளங்கனி சிவனைத் தொழுவார் அறியாமை நீங்கிப் பேரறிவோங்கி நல்லவராதற்குப் பண்பால் ஒருபுடை யொப்பாகும். விண்-அருள்வெளி. எழுதி என்பதற்குச் செயப்படுபொருள் வருவிக்கப் பட்டது.

(அ. கி). விளங்கனி - சிவம். (ச)

**303.** கணக்கறிந் தார்க்கன்றிக் காணவொண் ணுது
கணக்கறிந் தார்க்கன்றிக் கைகூடா காட்சி
கணக்கறிந் துண்மையைக் கண்டண்ட நிற்குங்
கணக்கறிந் தார்கல்வி கற்றறிந் தாரே[2].

(ப. இ.) என்றுமுள்ள அழியாத் தொன்மையவாம் என்பது தொகை. இறையுயிர் தளை என்பன வகை. சிறப்பு, வனப்பு, யாப்பு, நடப்பு, மறைப்பு என்பனவற்றைத் தனித்தனியே முதலெழுத்தாற் குறிக்கும் 'இலயநூ' என்பது விரி. இவ்வகையாகப் பொருளுண்மைகளைக் கண்ணி

1. விரிவிலா. அப்பர். ச. கூ0 - க.
2. எவ்வடிவு - பாதகங்கள். உண்மை நெறி விளக்கம், கூ - ஈ.
,, நீற்ரு. மூதுரை, உச.

அறிதல் கணக்கெனப்படும். திருவைந்தெழுத்தை எண்ணிக் கணித்து உருவேற்றலும் கணக்கெனப்படும். ஒன்றுதலாம் தொகை வேறுதலாம் வகை, நின்றவுடனுதல் விரிநேர் என்பதனை நினைவுகூர்க. இம்முறைசேர் கணக்கினை அருளால் அறிந்தவர் சிவபெருமான் திருவடியினைக் காண்பர். இக்கணக்கினை அறியார் அவ்வடியினைக் காணார். இஃது ஒருபுடைச் சிவவுருவமாகும். அதுபோல் கணக்கறிந்தார்க்கே சிவனுண்மைக்காட்சி புலனும். சிவனுண்மைக் காட்சியென்பது திருவடிப் பேரின்பத் தினைப்பே யாம். இக்கணக்கினை யறிந்து சிவபெய்ப்பொருளை எய்ப்பில் வைப்பென அறிதலால் அண்டுதலாகிய செறிவுநிலை ஏற்படும். இதுவே சிவயோகம். சிவயோகம் என்பது தன் இழப்பாகும். இக் கணக்கினை அறிந்தாரே திருவடிப் பேரின்பம் இம்மையே துய்ப்பவராவர். அவர் செயல் அனைத்துஞ் சிவச் செயலேயாகும். இதுவே சிவபோகம். சிவபோகம் என்பது அருளுழைப்பேயாம். இதன் விரிவை உண்மைநெறி விளக்கத்து உமாபதி சிவநாயனார் ஓதியருளியவாற்றானுணர்க. இத்தகைய கணக்கினைக் கற்றறிந்தாரையே செந்நெறிச் செல்வர் - செம்பொருட் டுணிவினர், கற்றறிந்தார் எனக் கருதுவர். காட்சி - திருவடியுணர்வு; சிவஞானம். அண்ட - சேர.

(அ. சி.) கணக்கறிந்தார். அஞ்செழுத்தைக் கணிக்கும் வகை அறிந்தார். (எ)

304. கல்லாத மூடரைக் காணவும் ஆகாது[1]
கல்லாத மூடர்சொல் கேட்கக் கடன்அன்று
கல்லாத மூடர்க்குக் கல்லாதார் நல்லராம்[2]
கல்லாத மூடர் கருத்தறி யாரே.

(ப. இ.) சிவனெறிக் கல்வியினைக் கல்லாதார் மூடர் எனப்படுவர். அவரே உண்மை அறிவிலாதவரும் ஆவர். அவ்வறிவிலாதவரை நல்லார் காணவும் அஞ்சுவர், அதனுல் அம் மூடரைக் காணவொண்ணாது என்றனர். மூடர்: அறியாமையால் மூடப்பட்டவர். அவர்தம் ஒழுக்கமிலாத இழுக்கு வாயால் வரும் வழுக்குமொழிகளைச் செவி கொடுத்துக் கேட்பது முறைமை யாகாது. கடன் - முறைமை. கல்லாத மூடர்க்குத் திருமுறைக் கல்வி இல்லாதவரே நல்லாராவர். கல்லாத மூடர் ஆகுங்கருத்தினையும் அறியார்; ஆன்றோர் கருத்தினையும் அறியார். (அ)

305. கற்றுஞ் சிவஞானம் இல்லாக் கலதிகள்[3]
சுற்றமும் வீடார் துரிசறூர் மூடர்கள்
மற்றும் பலதிசை காணுர் மதியிலோர்
கற்றன்பில் நிற்போர் கணக்கறிந் தார்களே.

(ப. இ.) அளவில்லாத உலக நூற்களைக் கற்றும் அறிவுநூலாகிய சிவஞானம் கல்லாதவர் கலதிகளாகிய வீணர்களாவர். 'மறப்பித்துத் தம்மை மலங்களில் வீழ்க்கும், சிறப்பிலாதா'ராகிய தீய சுற்றத்தைவிட்டு நீங்கார். அதனுல் மும்மலத் துரிசுமறூர். இத்தகையார் மூடர்கள் எனப்

1. தறிசெறி. அ. அச்சப்பத்து, அ.
2. சிற்றினம் - திருக்குறள், சஇக.
3. கலரா - அ. திருக்கோவையார், உஇக.

படுவர். பல திசைகளிலும் திருவடியுணர்வு கைவந்த நல்லோர் மாண்பினைக் கண்டும் கேட்டும் தேறுர். இவர்கள் உய்யும் அறிவிலராவர். திருவடியுணர்வுத் திருமுறை கற்றபின் அதன்படி ஒவாது ஒழுகிக் கண்ணுதலோன் அன்பினில் உறுதியாக நிற்போரே கணக்கறிந்தாராவர். வீடார் - விட்டுநீங்கார். கணக்கு - முறைமை.

(அ. சி.) கலதிகள் - வீணர்கள். துரிசு - களங்கம். (க)

306. ஆதிப் பிரான்அம ரர்க்கும் பரஞ்சுடர்
சோதி அடியார் தொடரும் பெருந்தெய்வம்
ஓதி உணரவல் லோம்என்பர் உள்நின்ற
சோதி நடத்துந் தொடர்வழி யாரே.

(ப. இ.) யாவர்க்கும் யாவைக்கும் காரணமாய்த் திகழும் ஆதியையுடைய அப்பன் விழுப்பொருளாகிய பிரானுவன், அவனே விண்ணவர்க்கும் பண்ணமை அறிவுப் பேரொளி திருவருள் ஒளியோடு ஏன்றும் பொன்றுப் பொலிவுடன் விளங்குவர் மெய்யடியார். அவர் நன்று தொடரும் பெருந்தெய்வம் சிவபெருமானே. இவ்வுண்மைகளை அருளாள் உணராதவர் தாமே ஓதியுணரவல்லோம் என்று செருக்குறுவர். அவர்கள் சிவபெருமான் உயிர்க்குயிராய் உள்நின்று நடத்தும் அருட்பெருஞ்சோதியாம் முறைமையினை அறியாதவராவர் சோதி அடியார்த் தொடரும் - திருவடியுணர்வுள்ள நாயன்மாரைத் தொடர்ந்து முன்நிற்கும். பெரும் பொருள் - சிவபெருமான். தொடர்பு - முறைமை. பெரும்பொருள் சிவபெருமான் என்பது நடு நின்று ஆய்வார் அனைவர்க்கும் என்றும் ஒப்ப முடிந்த தொன்று. அவன். கரும்பினுமினியான், கதிர்ச்சோதியான், கடலமுதன், இறப்புப் பிறப்பு இல்லான், பெரும்பொருட் கிளவியான், அரும்பொன் ஆக்குவோன் ஆவன். இதன்கண் காணப்படும் சிவனியல்பு ஆறும் அவன் பண்பு ஆறனையும் ஒரு புடையாகக் குறிக்கும். பண்பாறு : அழிவில் செல்வம், ஆண்மை, பொருட் புகழ், அருட்செல்வம், அடியுணர்வு, அற்ற பற்று என்பன. இச்சிறப்பனைத்தும் ஒருங்கமைந்த செந்தமிழ்த் திருமறை வருமாறு :

'கரும்பினு மினியான்றன்னைக் காய்கதிர்ச் சோதியானை
இருங்கட லமுதந் தன்னை யிறப்பொடு பிறப்பிலானைப்
பெரும்பொருட் கிளவியானைப் பெருந்தவ முனிவரேத்தும்
அரும்பொனை நினைந்த நெஞ்ச மழகிதா நினைந்தவாறே.'

—அப்பர் (ச. எ-ட.)

பெரும்பொருட் கிளவி - திருவைந்தெழுத்து. (கo)

# 16. நடுவுநிலைமை

307. நடுவுநின் றார்க்கன்றி ஞானமும் இல்லை[1]
நடுவுநின் றார்க்கு நரகமும் இல்லை
நடுவுநின் றார்நல்ல தேவரு மாவர்
நடுவுநின் றார்வழி நானும்நின் றேனே.

(ப. இ.) அடியார் நடுவுள் இருத்தலே நடுவுநிலையாகும். நடுவுள் இருத்தல் என்பது அடியார் நிறையுடைக் காவலில் நாம் என்றும் முறையுற நிற்கின்றோம் என்னும் பற்றவா நினைவுடன் ஒழுகுதல். இஃது உய்யும் மெய்யடியார்க்கு வேண்டும் செய்கையாகும். வேந்தர் முதலாயினர் நடுவுள் நிற்பதென்று அறமுறையின் காவலில் அவர்கள் நிற்பதாக நினைப்பதாகும். அடியார் நடுவுள் நின்றுலன்றித் திருவடியுணர்வாகிய சிவஞானம் எய்துதல் இல்லை. நடுவுநின்றார் நன்னெறி ஒழுகுவராதலின் அவர்கட்கு நரகம் எய்துதலும் இல்லை நடுவு நின்றார் சிவவுலகத்து வாழும் தேவருமாவர். அந் நடுவுநின்றார் வழியே அடியேனும் நின்றேன். மேலும் திருவைந்தெழுத்தாகிய 'சிவயசிவ' என்னும் பொருண்மறையுள் ஆவியினைக் குறிக்கும் 'ய'கரம் வகர சிகரங்கட்கு நடுவாக இருக்கும் நன்மைத் தன்மையினை நாடி அம் மறையினை இடையறாது கணித்தலும் நடுவு நிற்றலாகும். இதுவே 'வாசி'யிடை நிற்கை வழக்கு என்னும் முறைமையுமாகும். இங்ஙனம் கூறுதலும் ஒன்று (ச)

308. நடுவுநின் றுநல்ல கார்முகில் வண்ணன்
நடுவுநின் றுவல்ல நான்மறை யோதி
நடுவுநின் றார்சிலர் ஞானிக ளாவோர்
நடுவுநின் றார்நல்ல நம்பனு மாமே.

(ப. இ.) கார்முகில் வண்ணனும் காக்குந் தன்மையால் நடுவுநின்றுன் ஆவன். மறையோதியாகிய நான்முகனும் படைக்குந் தன்மையால் நடுவு நின்றவனுவன் சிவஞானிகளாவார் சிலரும் நடுவுநின்றனர். அம் முறையான் நடுவுநின்றார் நல்ல நம்பனுகிய சிவபெருமானுகித் திகழ்வர். நம்பனுமாம் - சிவமாம் பெருவாழ்வு எய்துதலுமாம். (உ)

309. நடுவுநின் றார்சிலர் ஞானிக ளாவர்
நடுவுநின் றார்சிலர் தேவரு மாவர்
நடுவுநின் றார்சிலர் நம்பனு மாவர்
நடுவுநின் றாரோடு நானும்நின் றேனே.

(ப. இ.) நடுவு நிற்றலாகிய சிவனினைவு உடையார் சிவஞானிகளாவர். பின் சிவவுலகக் கடவுளருமாவர். சிவவுலகம் தூமாயைக் கண் உள்ளது. மேலும் அவர் சிவனும் பெருவாழ்வும் எய்துவர். அவருடன் கூடி இணைந்து அடியேனும் நின்றேன். (கூ)

1. ஊனப்பே. அப்பர், ச. கூ0 - எ.
,, உடையா. அ. கோயின்மூத்த. க.

310. தோன்றிய எல்லாந் துடைப்பன்[1] அவனன்றி
ஏன்றுநின் ரூரேன்றும் ஈசன் இணையடி
மூன்றுநின் ரூர்முதல் வன்திரு நாமத்தை
நான்றுநின் ரூர்நடு வாகிநின் ரூரே.

(ப. இ.) எக்காலத்தும் யாண்டும் எல்லாவற்றையும் ஒருங்கு துடைப்பவன் சிவன். அம்முறையான் அவன் அந்தத்தைச் செய்கின்றவன் ஆவன். அதனால் அவனே மெய்கண்டநூல் அந்தம் என ஓதிற்று. பேரொடுக்கத்தைச் செய்பவன் சிவனே. அவனேயன்றி வேறு யாரும் இலர். அவனே ஆண்டான். அவன் திருவடியை ஏன்று நின்ரூர் நடுவு நின்ரூராவர். அவன் திருப் பெயராகிய 'சிவயநம' என்னும் செந்தமிழ்த் திருவைந்தெழுத்தினைத் திருவருளால் இடையருது முயன்று உளங் கனிந்து ஓதினவரும், அவ் வைந்தெழுத்தினையே அறிவுறப் பற்றி நின்றவரும் நடுவு நின்ரூராவர். இத் திருமறை நடுவு நின்ரூர் தன்மையினை தவிலுகின்றது அவனன்றி ஏன்று என்பதனை அவன் நன்றி ஏன்று எனப் பிரித்துச் சிவபெருமான்றன் நல்ல திருவருளை எய்தி என்றலும் ஒன்று. மூன்று : முயன்று என்பதன் திரிபு. நான்று - பற்றி. (சு)

(அ. கி.) நான்று - பற்றி.

---

# 17. கள்ளுண்ணுமை

311. கழுநீர்ப் பசுப்பெறிற் கயந்தொறும் தேரா
கழுநீர் விடாய்த்துத்தங் காயஞ் சுருக்கும்
முழுநீர்க் கள்ளுண்போர் முறைமை அகன்ரூர்
செழுநீர்ச் சிவன்றன் சிவானந்தத் தேறலே.[2]

(ப. இ.) தூய பால்தரும் பசுவாகிய ஆன், செஞ்சாலி அரிசி கழுவிய நீராகிய கழுநீரை வயிரூரப் பருகப் பெற்ரூல் பின் விடாய் நீக்குதற்பொருட்டுக் குளந்தொறும் சென்று வெறும் புனலே நாடாது. என்னே ? மீண்டும் கழுநீரையே கருதிவரும் ஆகலான் என்க. கழுநீர் அன்ன சுவை மிக்க தேறலாகிய இனிய தேனைப் பருகுதற் பொருட்டு விழைவர் சிலர். அவ்வேட்கையுற்றவர் தங்கள் உடலையும் உணர்வையும் ஒருங்கு சுருக்கும் முழுமூடத் தன்மை வாய்ந்த இயற்கையும் செயற்கையுமாகிய மயல்சேர் கள்ளினை யுண்பர். அவர்கள் அறமுறையும் அருள்முறையும் அகன்று பாவநெறியிற் செல்வோராவர். செழுமை வாய்ந்த பழுதில் இன்பமும் விழுப்பொருளாம் சிவனடிப் பெருவாழ்வும் என்றுங் குன்ரூது தரத்தக்கவன் சிவன். அவன்பாலே உள்ள சிவானந்தத் தேறலாகிய மதுவினையே நடுவு நின்ரூர் உண்பர். அத் தேறலே ஆருயிரின் அன்பறிவு ஆற்றல்களை விளக்கும். இறவாத இன்பத்தழுத்தும் அறவாழி

1. அவனவன். சிவஞானபோதம், க.
,, பெருங்கடன். அப்பர், சு. ககக - எ.
2. காயத்துள். திருவுந்தியார், சக.
,, தேனள்ளத். அப்பர், இ. கக - சo.

அந்தணன்தான் தலைக்கூட்டும் கள்ளினையுண்போன் களி காணுகள் ஊட்டுவோன், வள்ளல் சிவ நாட்டங்கள் வாழ்த்து என்பதை உளங் கொண்டு 'சிவசிவ' என்னும் செந்தமிழ் மறையினையே சிவானந்தத் தேறல் எனப் பருகுக. பருகுதல் - ஓவாது உணர்வின்கண் உணர்த்த உணர்தல். (க)

312. சித்தம் உருக்கிச் சிவமாஞ் சமாதியில்
ஒத்த சிவானந்தத் தோவாத தேறலைச்
சுத்த மதுவுண்ணச் சுவானந்தம் விட்டிடா
நித்தல் இருத்தல் கிடத்தல்கீழ்க் காலே.

(ப. இ.) மேலோதியவாறுள்ள திருவடி இன்பத்தேறலைப் பருகினோர் சித்தம் சிவன்பாலே ஓவாது உருகும் காதலினராவர். ஒன்றியிருந்து நினைத்தலால் அறிவுக்கு அறிவாய் நுண்ணிதாகவுணரும் நொசிப்பு நிலையினை எய்துவர். நொசிப்பு நிலை: சமாதி நிலை. தனக்குத் தானே ஒப்பாகிய என்றும் வற்றுத திருவடியின்பத் தேறலைத் தூய உண்மை இயற்கைத் தேறல் என்பர். இத் தூய நிலையினை உயிர்ச் செயல் அற்று உடையாகிய விட்டுப் பிரிவிலா உடையாள் செயலினை உற்றுத் திகழும் நிலை என்ப. இதனையே சுத்தாவத்தை என்ப. இந் நிலையில் அத் தூய மதுவுண்டலால் சிவ இன்பமே தன்பால் திகழ்ந்து தான் அதன் வண்ணமாய்த் தனக்குரிய தணவா இன்பமாம்படி அன்பினில் சிறப்பர். இந்நிலை எய்தாது தம் நிலையினை மயக்கும் புறக் கள்ளினையுண்பார் அறிவு திரிதலின் கீழ்நிலையாகிய சகல கேவல நிலையினராவர். சகல கேவலம் என்பது ஒவ்வொரு நாளும் நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படங்கலாகிய கீழ்நோக்கும் நிலை. இந்நிலை போன்று கள் ஞ்பாரும் நிற்றல் இருத்தல் கிடத்தல் செய்யினும் தம் நிலையினை இழந்து செய்தலின் அதனைக் கீழ்நிலை என்பர். இவ்வுண்மை நாயனாரருளிய:

"கையறி யாமை உடைத்தே பொருள்கொடுத்து
மெய்யறி யாமை கொளல்' —திருக்குறள், கூஉஇ.

என்னும் செந்தமிழ்ப் பொதுமறையான் உணர்க. சகல கேவலம் - புனர் விற்புலம்பு; கருவிகள் தொழிற்படா நிலை.

(அ. சி.) கீழ்க்கால் - கீழ்ல் அவத்தை. (உ)

313. காமமுங் கள்ளுங் கலதிகட்[1] கேயாகும்
மாமல முஞ்சம யத்துள் மயலுறும்
போமதி யாகும் புனிதன்[2] இணையடி
ஓமய ஆனந்தத் தேறல் உணர்வுண்டே.

(ப. இ.) இழிகாமமும் அழிகள்ளும் தீக்குணமுடைய கலதிகளாகிய கீழோர்கட்கு உரியன. தூய வெண்ணீற்றுமேல் யாவரையும் தூய்மை யாக்கும் புனிதனுகிய சிவபெருமானின் திருவடியினையாகிய

1. கள்வன். அ. திருக்கோத்தும்பி, கக.
2. மனிதர். அப்பர்; இ. கக - எ.

சிறந்த இயற்கைவடிவமைந்த இன்பத்தேறலே உண்ணுங்கள். அத்தேறல் திருவடியுணர்வினை உண்டாக்கும். சொன்மை மலத்தையும், சமயங்களி லுண்டாகும் பெரும் மயக்கத்தையும் போக்கக் கூடிய திருவருளுணர் வினையும் உண்டாக்கும். மேலும் இழிகாமமும் அழிகள்ளும் தொன் மலத்தையும் சமய மயக்கத்தையும் உண்டாக்கும். நல்லறிவைப் போக்கும் எனவும் கொள்க. கலதி - தீக்குணமுடையார். இழிகாமம் - நல்லோரான் இழிக்கப்படும் காமம். அஃதாவது புறச் சூழலால் அறந்திறம்பி அகத்தெழும் காமம்; குறியாக் காமம் என்க. அழிகள் - ஒழுக்கமும் உணர்வும் ஒருங்கு அழிக்குங் கள். ஒ - சிறப்பு. மயம் - பெருமை போம் மதியாகும்-கெட்டுப் போவதற்காம் காரறிவுண்டாம். மயவானந்தம்-ஆனந்தமயம்; அழிவில் பேரின்பம். காரறிவு-அறியாமை.

(அ. சீ.) மாமலம் - மூலமலம். (கூ)

314. வாமத்தோர் தாமும் மதுவுண்டு மாள்பவர்
காமத்தோர் காமக்கள் ளுண்டே கலங்குவர்
ஓமத்தோர் உள்ளொளிக்[1] குள்ளே உணர்வர்கள்
நாமத்தோர்[2] அன்றே நணுகுவர் தாமே.

(ப. ஐ.) ஆற்றலாகிய சத்தியை வழிபடுவோர் வாமத்தோர் எனப் படுவர் இவர்கள் மயக்க நூல் வழிநின்று அறியாமையாற் கள்ளுண்பார் கள். அவர்கள் கள்ளுண்பது சத்திக்கு உவப்பைத் தருவதாகும் என்னும் தப்பு எண்ணமேயாகும். சத்திக்கு உவப்பைத் தருவது 'சிவானந்தத் தேறலே' யன்றி அறிவை மயக்கும் கள்ளன்று. இழிகாமமுடைய கீழோர் இனை விழைச்சு எனப்படும் உடனுறைவு அல்லது ஆண் பெண் இணக்கம் என்னும் உடலையும் உளத்தையும் உணர்வையும் தளரச் செய்யும் காமக் கள்ளுண்டு கலங்குவர். சிவ வழிபாட்டினுக்கு ஓமமும் ஒருங்கிய நீனவும் உறுப்புக்கள் எனப்படும். வழிபாடு உறுப்பி. ஓமம் தீவளர்த்தல். ஒருங்கிய நீனவு தியானம். அவ்வகையான சிவ வழிபாட்டினர் உள் ளொளியாகிய சிவனடியுள் ஒடுங்கித் தம் உணர்வில் சிவ இன்பத் தேற லினை யுண்பர். நந்தி நாமமாகிய 'நமசிவய' என்னும் செந்தமிழ்த் திரு வைந்தெழுத்தைத் திருவருளால் சிறப்புறக் கணிப்போர் அப்பொழுதே திருவடியுணர்வினை எய்துவர். காமத்தோர் - இன்ப நூலுடையார். வாமத்தோர்: சத்திக்குத் தனிப்பெரு முதன்மை கொடுக்கும் நெறி யினர். இவர் சத்தியின் திரிபே உலகமும் உயிர்களும் எனக்கொள்ளும் ஒவ்வாக் கொள்கையினர்.

(அ. சீ.) வாமத்தோர் - சத்தி பூசை யுடையோர். ஓமத்தோர் - சிவபூசை செய்பவர். நாமத்தோர் - அஞ்செழுத்தோதுவார். (சு)

315. உள்ளுண்மை ஓரார் உணரார் பசுபாசம்
வள்ளன்மை நாதன் அருளினின் வாழ்வுறார்
தெள்ளுண்மை ஞானச் சிவயோகஞ் சேர்வுறார்
கள்ளுண்ணும் மாந்தர் கருத்தறி யாரே.[3]

---

1. பால். நினைந் அ. பிடித்த பத்து, கூ.
2. ஆலிப்படு. அப்பர் கூ. இ-உ.
3. உட்கப். திருக்குறள், கூஉக.

(ப. இ.) உயிர்க்கு உயிராய் உணர்வளிக்கும் உள்ளுண்மையாகிய பதியினை ஒராா். அப் பதியினை உணராமையால் பசு பாசமாகிய உயிர் தானே என்னும் பொருள்களையும் உணரமாட்டார். 'வேண்டுவார்க்கு வேண்டுவதே' ஈயும் பெருவள்ளலாகிய சிவபெருமான் முழு முதல்வன். அவன் திருவருளின் வழிநின்று வாழுதல் செய்யார். தெளிந்த உண்மையாகிய திருவடியுணர்வு சிவஞானம் எனப்படும். அச் சிவஞானத்தால் எய்தப்பெறுவது சிவயோகம். சிவயோகம் - சிவ இணக்கம். எண்ணல் இருத்தல் இயைதல் இயங்கல் நான்கும் முறையே உருவ தரிசன யோக போகம் என்பர். இவற்றை எண்ணலிருத்தல் இயைதல் ஏற்றியங்கல் ஏருருவம், கண்காட்சி யோகபோகம் என்பதனால் நினைவு கூர்க. இச் சிறந்த சிவயோகத்தையும் சேரமாட்டார்; யாரென்றால்? அழிகள்ளுண்ணும் மாந்தர் என்க. இம் மாந்தர் சிவபெருமான் தங்களுக்குப் பிறப்பினைத் தந்தருளிய திருவுள்ளக் குறிப்பினையும் உணராதவராவர்.

(அ. சி.) உள் உண்மை - உள்ளத்தின்கண் இருக்கும் இயல்பு. தெள் உண்மை - தெளிந்த. (இ)

316. மயக்குஞ் சமய மலமண்ணு மூடர்
மயக்கு மதுவுண்ணு மாமூடர் தேரார்
மயக்குறு மாமாயை மாயையின்[1] வீடு
மயக்கில் தெளியின் மயக்குறும் அன்றே.

(ப. இ.) அறிவினைக் கெடுத்து அல்லற் படுத்தும் எதுவும் ஆன்றோரால் கள்ளென்றே கொள்ளப்படும். ஆதலால் தெளிவும் விரிவும் இல்லாத அறிவினர் மலம் நிறைந்த மூடராவர். அவர்கள் எரிவினால் ஏற்படுத்தும் சமயம் மயக்கந்தரும் வாய்மையில்லாத பொய்ச்சமயமாகும். இச் சமயப் புன்மையினையும் நன்மையினைப்போல் மேற்கொண்டு ஆயாது நிற்கும் தீயார் அறிவைக் கெடுக்கும் மதுவினையுண்ணும் மாமூடரோடொப்பர். அவர் தெளிவித்தாலும் தெளிந்து கொள்ளமாட்டார். சமயப் பொய்ப் பற்றும் ஒருவகை மதுவென்றே சொல்லப்படும். இத்தகைய பெரிய மயக்கங்களில் நின்று அருளால் தெளிந்தவர் தூவாமாயையினின்றும் விலகுவர். தூவாமாயையினை அசுத்த மாயை என்பர். இது நிலமுதல் மாயையீறாக முப்பத்தொரு தத்துவங்களையுடையது. இம் மாயை விலகுவதுபோன்று தெளிவுடையார்க்கு மாமாயை என்று சொல்லப்படும் தூமாயையும் விலகும். தூமாயை ஐந்து தத்துவங்களை யுடையது. அஃது ஆசான் முதல் அத்தன் ஈறாகக் கூறப்படும். இதனைச் சுத்த வித்தை முதல் சிவம் ஈறாக எனவும் கூறுவர். மாயையின் - தூவாமாயையைப் போல. இன் : ஐந்தன் உருபு ஒப்புப் பொருள். மாமாயை - தூமாயை. வீடும் - விலகும். சமய மலமண்ணும் மூடர் : மலத்தொடர்பான நெறியொழுகும் அறிவிலார். (ஈ)

317. மயங்குந்[2] தியங்குங்கள் வாய்மை அழிக்கும்
இயங்கும் மடவார்தம் இன்பமே எய்தி
முயங்கும் நயங்கொண்ட ஞானத்து முந்தார்
இயங்கும் இடையரு ஆனந்தம் எய்துமே.

1. மாயைமா. சிவப்பிரகாசம், எ. உ.
2. தாயினு. அப்பர், இ. கoo - கo.

(ப. இ.) மெய்ம்மையினையும் மெய்ப்பொருள் உண்மையினையும் அழித்தொழிக்கும் பழிபடு கள்ளினை யுண்பார் வழி குழி தெரியாது வீழ்ந்து மயங்குவர் தீராப் பெருந்துன்பம் எய்தித் தியங்குதலாகிய கலக்கமுற்றுக் கவலைகூர்வர். மேலும் அவர் பிறப்பு இறப்பு ஆகிய பெருந்துன்பத்துள் வீழ்த்தி இயக்கும் இழிகாமமும் கழிகாமமும் மாறுப் பெண்ணியலாரை நண்ணுவர். அம்மடவார் தரும் சிற்றின்பமே முற்றின்ப மாகக் கொண்டு முயங்குவர். இறைவன் திருவடியுணர்வாகிய சிறந்த நயமிக்க சிவஞானஞ் சேர்ந்து முதன்மையடையார். இந் நிலையினுல் பிறழா நிகழ்ச்சியாய் என்றும் நிகழும் இடையறு இன்பமாம் திருவடிப் பேற்றினைக் கள்ளுண்பான் எய்தான். எய்துமே: ஏகாரம் எதிர்மறை முந்தார்-முதன்மையடையார். இயங்கும் மடவார்: இயங்கும் பிறவினைப் பொருளில் வந்த தன்வினை; பிறப்பு இறப்புக்களில் உழலச்செய்து இயக்கும் பெண்ணியலார். (எ)

**318.** இராப்பகல் அற்ற இடத்தே இருந்து
பராக்கற ஆனந்தத் தேறல் பருகார்
இராப்பகல் அற்ற இறையடி[1] இன்பத்
திராப்பகல் மாயை இரண்டிடத் தேனே.

(ப. இ.) மறப்பும், நினைப்பும். இருளும். ஒளியும், புலம்பும், புணர்ப்பும், பாவமும், புண்ணியமும் இராப்பகல் என்று உருவகிக்கப்படும். இராப்பகல் அற்ற இடம் உள்ளுணர்வாய்த் திகழும் திருவருள் வெளி நிலையம். அவ்விடத்தே மறவா நினைவுடன் இருந்து பிற பொருள்களை எண்ணியுழலும் எண்ணமும் நீங்கத் திருவடிப்பேறும் பேரின்பத் தேனினை மடக்கும் கள்ளுண்பார் ஒருஞான்றும் பருகார். சிவபெருமான் இரவு பகல் என்று கணிக்கப்படும் கால மெய்யினைக் கடந்தவன் அக்கால மெய்யினையும் நடத்துபவன். அதனுல் அவன் கால காலன் எனச் சிறப்பித்து அழைக்கப்படுவன். அதனுல் இரவு பகலற்ற இறை என ஓதினர். அவ்விறைவன் திருவடியின்பத்தினை அவன் திருவருளால் புணர்விற் புலம்பு புணர்விற் புணர்வு (சகல கேவலம் சகல சகலம்) என மாயைக்கண் நிகழும் ஈரிடத்தும் உழலும் யான் எய்தினேன். எய்தினேன் என்னும் ஒருசொல் சொல்லெச்சமாக வருவித்து முடிக்க. மெய் - தத்துவம்.

(அ. சி.) பராக்கு - வேறு ஞாபகம். (அ)

**319.** சத்தியை வேண்டிச் சமயத்தோர் கள்ளுண்பர்
சத்தி அழிந்தது தம்மை மறத்தலால்
சத்தி சிவஞானந்[2] தன்னில் தலைப்பட்டுச்
சத்திய ஞான ஆனந்தத்திற் சார்தலே.

(ப. இ.) அன்னை மெய்யென்று சொல்லப்படும் சத்தி தத்துவத்தினுள்ள ஓர் ஆவியாற் செய்யப்பட்டது கலப்பிலாச் சத்தி நெறியாகிய

1. ஆ ந். ஆரூரர், எ. கூ-க.
,, சுழலார். அப்பர், சு. கூ-கூ.
2. சத்திதன். சிவஞான சித்தியார், க. கூ-உ.

சுத்த சாத்தம். இந்நெறி ஒரும் அறிவில் பொருள் ஒங்கும் அறிவுயிர், சாரும் அருள் மாறல் சாத்தம் என்பதனுல் உலகமும் உயிரும் சக்தியின் திரிபெனக் கூறும். அச் சக்தியின்கண் ஒடுங்குவதே வீடுபேறென்ப. இக் கருத்துடையார் சித்தர். இந் நெறியினர் வாம மதத்தர் எனவும் அழைக்கப்படுவர். இவர்கள் சத்தி வழிபாட்டிற்குக் கள்ளினே மேற் கொள்வர். இவர்கள் மயக்கும் கள்ளினேயுண்டு தியக்கமுறலால் தம்மை மறக்கின்றனர். மறக்கவே சத்தியழிகின்றது. அஃதழியவே கருதிய சத்தி வழிபாடும் உடன் அழிகின்றது. இய மயக்கும் கள்ளினேயுமுண்ணுது சத்தியைச் சிவனுக்கு வேறுகவும் கருதாது சத்தியருளால் சிவஞானம் கைவரப் பெற்றவர். இயற்கை உண்மை அறிவு இன்ப உணர்வுருவாம் திருவடிப் பேற்றில் சாரும் சிறப்பினை எய்துவர். சத்தியே சிவஞானம் என்றலும் ஒன்று. அது 'சத்தியின் வடிவே தென்னில் தடையிலா ஞானமாகும்' என்னும் தமிழாகமத்தா னுணர்க.

(அ. சி.) சமயத்தோர் - வாம மதத்தார். (கூ

320. சத்தன் அருள்தரிற் சத்தி அருளுண்டாஞ்
சத்தி அருள்தரிற் சத்தன் அருளுண்டாஞ்[1]
சத்தி சிவமாம் இரண்டுந்தன் னுள்வைக்கச்
சத்தியம் எண்சித்தித் தன்மையு மாமே.

(ப. இ.) சத்தனே அத்தன் என்றும் சத்தியை அன்னையென்றும் அழைப்பர். அத்தன் அன்னையைத் தன்னுள் பேரொடுக்கப் பேரூழியில் ஒடுக்கிக் கொள்வன். பின்பு உலகத் தோற்றமாம் மார்கழித் திருவாதிரையின்போது அவ்வன்னே வெளிப்படுத்தப்படுவள். இதுவே சத்தன் அருள்தரில் சத்தி அருளுண்டாம் என்பது. சத்தி அருள் என்பது வனப்பாற்றல் அல்லது பரை எனப்படும். இவ் வனப்பாற்றலாகிய சத்தி சிறந்த அருளைத் தரும். அவ்வருள் நடப்பாற்றல் எனப்படும். நடப்பாற்றல் ஆருயிர்களை வினைக்கீடாக உலகு உடல்களுடன் கூட்டிச் செந்நெறிக்கண் செலுத்துவது. செலுத்திச் சிறப்பாம் திருவடிப் பேற்றினை எய்துவிக்க நடத்துவிப்பது. அப்படி நடத்துவிப்பித்துக்கொண்டு சென்றுல் சத்தன் அருளாகிய திருவடிப் பேறுண்டாகும். சத்தி சிவமாகிய இரண்டும் ஆருயிர்களை ஆற்றல் அன்பு அறிவுகளாகிய தம்முள் அடக்கிக்கொள்ளும். அதனுல் முடிவிலா நிலைபேரும் வாய்மையும் எண்குணப் பேருகிய சித்தியும் எண்மையின் எய்தும் என்க. நடப்பாற்றல்: மறைப்பாற்றல்; திரோதான சத்தி. 'சிவயநம' வ: வனப்பாற்றல். ந, நடப்பாற்றல் சத்தி எனினும் ஆற்றல் எனினும் திருவருள் எனினும் ஒன்றே. அத்திருவருள் அனைத்துயிர்க்கும் அருளிப்பாட்டினைச் செய்ய வேண்டும் எனப் பொது வகையான் அறிந்தும் அறிவித்தும் நிற்கும்; அப்பொழுது அத்திருவருள் போதிவுப் பெருந்தீரு எனப் பேசப்பெறும். இதுவே தடையிலாஞானம் எனப்படும். தடையின்மை தனித் தனி உயிர்கட்குச் செவ்வி வருவித்தற் பொருட்டு ஏதும் புரியாது எல்லார்க்கும் அருள் புரிய வேண்டுமெனப் பொதுவகையால் திருவுள்ளங் கொள்ளுதல். இது, மருத்துவன் நோயாளிக்கு நோய் நீக்க வேண்டு மென வுள்ளங்கொள்ளுதலையும்

1. சிவஞ்சத்தி. சிவஞானசித்தியார் உ. ஊரி.
,, மின்னிடைச். அ. திருப்பொற்சுண்ணம், கஉ.
,, தவளத்த. அ. திருக்கோவையார், கசஉ.

மருந்தும் மருத்துவமனையும் அமைப்பித்தலையும் ஒக்கும். உள்ளங்கொள்ளுதலை அறிந்தெனவும், அமைப்பித்தலை அறிவித்தெனவும் ஓதினர். பின்பு அவ்வுயிர்களுடன் விரவி அவ்வுயிர்களின் அன்பு அறிவு ஆற்றல் களைத் தனித்தனி விளக்கியருளத் திருவுள்ளங் கொண்டநிலை பேராற்றற் பெருந்திரு என்று பேசப்பெறும். இதனையே ஆதிசத்தி என்ப. திருவள்ளுவ நாயனார் ஓதியருளிய முதல் திருக்குறளில் பேசப்பெறும் ஆதியென்பதும் இதுவே அவ்வாதி தனித்தனி ஆருயிர்களின் அறிவை இயைத்தியக்கி விளக்குங்கால் ஞானம் எனவும், அன்பை விளக்குங்கால் இச்சை எனவும். ஆற்றலை விளக்குங்கால் கிரியை எனவும் பேசப்பெறும். இம்முறையில் திருவருள் ஒன்றனையே பேரறிவுப் பெருந்திரு, பேராற்றற் பெருந்திரு, அறிவுப் பெருந்திரு, அன்புப்பெருந்திரு, ஆற்றற் பெருந்திரு என ஐவகையாக ஓதுகின்றோம். பேரறிவு பேராற்றல் அன்பறிவாற்றல் உடனுச், சேரப் பெருந்திருவைந் தோது என்பதனை நினைவுகூர்க. இவற்றை முறையே பராசத்தி ஆதிசத்தி, இச்சாசத்தி. ஞானசத்தி, கிரியாசத்தி எனக் கிளத்துவர். ஆருயிர்களின் அன்பறிவாற்றல்களை விளக்கும் நிலை தனித்தனி நிலையாதலின் இந்நிலை தடைசெய்ஞானம் எனப்பட்டது. அது கதிரொளி யாண்டும் ஒரு பெற்றித்தாய் விளக்கிச் செல்லுதலையும பொருள்களின் மேற் சாய்வாய்ப்பட்டு நிழலாய்த் தடை யுண்டு செல்லுவதனையும் ஒக்கும்.

தடையுண்ணும் நிலை மருத்துவன் 'நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும், வாய்நாடி வாய்ப்பச் செயல்' (கூசஅ) என்னும் செந்தமிழ்ப் பொதுமறையில் ஓதியாங்குத் தனித்தனி துணைபுரியும் நிலையாகும். இதன்கண் ஓதப்பெறும் நாடுதல் மூன்றும் முறையே அன்பால் அறிவால் ஆற்றலால் கொள்ளும் ஆய்வாகவும், வாய்ப்பச் செயல் பேராற்றற்பெருந்திருவின் திருவுள்ளப் புரிவாகவும் ஒரு புடையாகக் கொள்க.

(அ. சி.) சத்தன் - சிவன். (கஅ)

**321.** தத்துவம் நீக்கி மருள்நீக்கித் தாளுகிப்
போய்த்தவம் நீக்கிமெய்ப் போகத்துட் போகியே[1]
மெய்த்த சகமுண்டு விட்டுப் பரானந்தச்
சித்திய தாக்குஞ் சிவானந்தத் தேறலே.

(ப. இ.) மாயாகாரிய மெய்யாகிய தத்துவம் முப்பத்தாறும், இம் மெய்யின் காரியமாகிய மெய்யாக்கம் என்று சொல்லப்படும் தாத்துவிகம் அறுபதும் ஆகிய தொண்ணூற்றாறு மெய்களின் தொடர்புண்மையினைத் திருவருளால் கண்டுணர்தல் தத்துவ நீக்கம் எனப்படும். அஃதாவது அத் தத்துவக் கூட்டம் ஆண்டவனுல் தரப்பட்ட அவனது உடைமைப் பொருள். அவை ஆருயிர்கட்கு இரவல் பொருள். ஆனுல் உயிர்கள் இவ்வுண்மையினை மறந்து தங்கட்கே உரிய உடைமைப் பொருள்கள் என்று பிழைபட எண்ணுகின்றன. அப் பிழையினைப் போக்கி விழைதக்க உண்மையினை நோக்கி ஒழுகுவதே தத்துவ நீக்கம். இவ்வுண்மை நாயனரருளிய 'சுவையொளி ஊருேசை நாற்றமென் றைந்தின், வகை தெரிவான் கட்டே உலகு' (உசு) என்னும் செந்தமிழ்ப் பொதுமறை

1. அங்கத்தை. அப்பர், சு. எடி - அ.
,, தன்னையா. கஉ. தடுத்தாட் - கஅஉ.

யான் உணரலாம். தத்துவ உண்மையினை உணர்வதால் காணப்படும் பொருள்களனைத்தும் நிலைக்குமென இருட்சார்பால் எண்ணும் மருள் நீங்கும். நீங்கவே எனது எனப்படும் உலகுடற் பற்று அறும். அறவே ஆருயிர்கட்கு என்றும் புகலிடமாம் அருள் துணையால் தம் நிலை தோன்றும். தோன்றவே தாளகி நிற்கும். நிற்கவே நிலையாப் பொருள்களை விரும்பிச் செய்யும் வேள்வி முதலிய, பொய்த்தவம் நீக்கப்படும். அது நீங்கவே நிலையாத பொய்ப்போகமும் கழியும். திருவடியின்பமாகிய மெய்ப் போகத்துட் செல்லும். உண்மையான திருவடியுணர்வாம் திருவருள் நினைவில் தங்குதலே மெய்யுலக நுகர்வாம். அதனை நுகர்ந்து பேரின்பப் பெருவாழ்வினைக் கைகூடச் செய்யும் நிலை ஏற்படும். இவை அனைத்தும் சிவானந்தத் தேறல் பருகுவதால் ஏற்படுவன. உண்டுவிட்டு: தோன்றுமலடங்கச் செய்து என்பதும் ஒன்று.

(அ. சி.) தத்துவம் - கசு தத்துவங்கள். (கக)

322. யோகிகள் கால்கட்டி ஒண்மதி ஆனந்தப்
போத அமுதைப் பொசித்தவர் எண்சித்தி
யோகியர் கள்ளுண்டு மூடராய் மோகமுற்று
ஆகும் மதத்தால் அறிவழிந் தாரே.[1]

(ப. இ.) அருளால் அகத்தவம் புரியும் யோகிகள் காலாகிய உயிர்ப்பினை நடுநாடி வழியாகச் செலுத்திப் புருவ நடுவாகிய மதி மண்டலத்திற்கு ஏற்றுவர். ஏற்றி ஆங்குத் தோன்றும் இயற்கை உண்மை அறிவு இன்பமாகிய திருவடியுணர்வமிழ்தை நுகர்வர். அங்ஙனம் நுகர்ந்தவர் சிவபெருமானது எண்குணச் சித்தியும் எய்துவர். எய்துவர் என்பது அவாய் நிலையான் வந்தது. அறிவழி கள்ளினை உண்டு பின்னும் உண்ணப் பெருவேட்கை கொண்டு உண்டுண்டு உழலும் மோகியர் மூடராவர். மோகம் பெருகிய மதத்தால் அறிவழிந்தவராவர்.

(அ. சி.) கால்கட்டி - பிராணவாயுவை அடக்கி, போத அமுது - ஞான அமுது. ஆறு மதத்தார் - அறு சமயத்தவர். (கஉ)

முதல் தந்திரம் முற்றும்.

---

1. கள்ளுண்ணுப். திருக்குறள், கூஉ0.

# இரண்டாம் தந்திரம்

[காமிகாகமம்]

## 1. அகத்தியம்

323. நடுவுநில் லாதிவ் வுலகஞ் சரிந்து
கெடுகின்ற தெம்பெரு மானென்ன ஈசன்
நடுவுள அங்கி அகத்திய[1] நீபோய்
முடுகிய வையத்து மூன்னிரென் ருனே.

(ப. இ.) பெரும்பூதம் ஐந்தினும் நடுவாக வுள்ளது தீ. அத் தீயின் நடுவுள் அதற்கு ஒளியும் சூடும் ஈந்து விளங்கிக் கொண்டிருப்பவன் சிவ பெருமான். அவன் 'அவ்வெரியினை உருவருக்கங்களில்' ஒன்றாகக் கொள்பவன். அதனால் விண்ணவர் ஒருங்கு திரண்டு சிவபெருமான்பாற் சென்று "தீயின் நடுவுள் விளங்கும் ஆண்டவனே! உலகம் தென்பா லுயர்ந்து வடபால் தாழ்ந்து நடுவிழந்து நிற்கின்றது, காத்தருள வேண்டும்," என்று வேண்டினர். சிவபெருமான் அவ் வேண்டுகோளைத் திருச்செவி ஏற்றுத் தக்க அகத்தியனை நோக்கி, "அகத்தியனே படிப் பினாலும் பண்பாட்டினாலும் உண்மை உயர்வைத் தென்னாடு எந்நாளும் எய்தி நிற்கின்றது. அத்தென்பால் நீ சென்று அவற்றை ஆய்ந்து கைக்கொண்டு முன்னுவாயாக" என்றருளினன். முன்னுதல்-அடைதல்.

இதற்கு வழங்கும் பழங்கதை வருமாறு: முன்னொரு காலத்துத் திருக் கைலாய மலையில் இறவாப் பிறவா நிலைசேர் சிவபெருமானுக்கும் அத் தகைய மலைமகளார்க்கும் திருமணம் நிகழ்ந்தது. அத் திருமணங்கண்டு பேறு பெறுதற்பொருட்டு விண்ணவரும் மண்ணவரும் ஒருங்கு கூடினர். அதனால் நிலவுலகம் தென்பால் உயர்ந்து வடபால் தாழ்ந்து தடுமாற லாயிற்று. அதுகண்டு விண்ணவர் நடுங்கினர். சிவபெருமான் அவ் விண்ணவரை நோக்கித் தென்பால் என்னை ஒப்பவன் ஒருவன் சென்றுல் வடபாலுள்ள தாழ்வு தீரும் என்றருளி அகத்தியனை அழைத்துப் போகக் கட்டளையிட்டருளினன். அகத்தியனும் அச் சிவபெருமானைப், பணிந்து வணங்கி "எம்பெருமானே! 'தென்பாண்டிநாடே சிவவுலகம், ஆதலின் ஆண்டு வாழ்வார் உண்மையான் உன்னையுணர்த்துவதும், என்றும் உனக்கு உவப்பாயுள்ளதும், இருவழக்கினும்நின்று நிலவுவதும், இனிமையும் சுருக்கமும் தெளிவும் சிறப்பும் இயற்கையும் நயனும் ஒருங் கமைந்ததும் ஆகிய கன்னிச் செந்தமிழ் மொழியின் மன்னிய புலமையர் என்ப. அவர்களுடன் அளவளாவி உறவுபூண்டு உறைவதற்கு அறந்தவாத் திறம் அமைந்த அத்தண்டமிழ்மொழியின் அமைதியினை அடியேற்கு அருளுதல் வேண்டு"மென விண்ணப்பித்தனர். சிவபெருமானும் முதன் மையும் மூன்மையும் நன்மையும் இயல்பாக அமைந்த நற்றமிழ் அமை தியினை அறிவுறுத்தருளி நண்ணுவித்தனன். இவ்வுண்மை வரும் பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணச் செய்யுளான் உணர்க:

---

1. அன்ருவின். அப்பர், கூ. 60 -கூ.
,, மற்றவர்தா. கஉ. திருமூலர், உ.

'விடைகொடு போவான் ஒன்றை வேண்டினுன் ஏகும் தேயம்
தொடைபெறு தமிழ்நா டென்று செல்லுப அந்த நாட்டின்
இடைபயில் மனித்த ரெல்லாம் இன்றமிழ் ஆய்ந்து கேள்வி
உடையவ ரென்ப கேட்டார்க் குத்தரம் உரைத்தல் வேண்டும்.'

'சித்தமா சகல வந்தச் செந்தமிழ் இயல்நூல் தன்னே
அத்தனே அருளிச் செய்தி என்றனன் அனையான் தேற
வைத்தனே முதனூல் தன்னே மற்றது தெளிந்த பின்னும்
தித்தனே அடியேன் என்று நின்னடி காண்பன் என்ருன்.'

—திருவிளையாடல். கீரனுக்கு - கக, கஉ.

இப் பழங்கதை பெரியதோர் உண்மையினே நிலைநாட்டும் அரிய உருவக மாம். அது மும்மல காரியமாகிய முப்புர மெரித்த கதை. உருவகம் போன்ருகும். திருமணக் காலத்தில் ஒன்று கூடினர் என்றமையால் வடபுலத்தார் ஐம்புலநுகர்வின் பொருட்டு ஒரோவழிச் சிவபெருமானே எண்ணுவது அவர்கள் இயல்பு என்பது புலனுகும். என்னே, திருமணம் ஒருவற்கு இடைவிடாது நிகழ்வது அன்மையான் என்க. மணம் என் பது மனம் பொருந்துவ தென்பதாகும். தென்பால் உயர்தல் என்பது என்றுமுள்ள தென்றமிழ்வாணர் 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' நன்றே நினைமின்' என்னும் செந்தமிழ்த் திருமுறைநெறி வழுவாது ஒழுகும் செறிவினர். பிறவாயாக்கைப் பெரியோனுகிய சிவபெரு மானையே முழுமுதற் கடவுளாகக் கொண்டு கனவினும் நனவினும் வழு வாது வழிபடுவோர். சிவமணி திருவெண்ணீறு திருவைந்தெழுத்து மூன்றினையும் முறையே உடை உடல் உயிராகப் பூண்டு ஒழுகுபவர். சிவ பெருமானுக்குத் தம்மை முழுதும் ஒப்புவித்தவர். அதற்குத் துணை யாகிய செந்தமிழ்த் திருமறை திருமுறையாகிய வேதாகமங்களே ஓது பவர். 'எம்பெம்மாற்கு அற்றிலாதவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சுமாறே' என்று அஞ்சுபவர். இருள்மூனப்பு அற்றவர். அருள் மூனப்பு உற்றவர். பிறப்பற்றவர். சிறப்புற்றவர் பெருமையால் தம்மை ஒப்பவர். அனைத்துயிரையும் சிவத்தொடர்பால் பேணுதலால் சிவனேப் பெற்றவர். ஒருமை என்று சொல்லப்படும் சிவனினேவால் உலகை வென்றவர். வரும் பிறப்பற்றவர். அருமையாம் நிலையில் நிற்ப வர். அன்பினுல் இன்பமார்பவர். இம்மை உம்மையாகிய இருமையும் கடந்தவர். இவர்கள் உறையும் தென்திசை 'மாதவஞ் செய் தென்திசை' என்று சிறப்பித்துச் சொல்லப்படும். எங்கணும் சிவபெருமான் முதன் மைத் திருக்கோவில்களே காணப்படும். அவனேயே முழுமுதலாக உணர்த் தும் செந்தமிழ்த் திருமறை ஒதுதலே எங்கணும் காதில் விழுவதும் நீயைக் காதுவதுமாகும். இன்னும் பல நலங்களும் உடையது தென்னுடு. அதனுலேயே 'தென்னு டுடைய சிவனே போற்றி' என்னும் செந்தமிழ் மறை முடிவும் எழுவதாயிற்று. அதனேயடுத்து 'எந்நாட்ட வர்க்கும் இறைவா போற்றி' எனவும் எழுந்தது. அஃது அச் சிவபெரு மானே எல்லா நாட்டவர்க்கும் இறைவன் என்னும் மாரு இயற்கை உண்மையை உணர்த்துகின்றது. 'சிவன்' என்பது இயற்கை உண்மை வண்மை இன்பச் சிறப்பு நிலையாகும். இறை என்பது அறமுறை செய் யும் சார்புப் பொது நிலையாகும். இதனுல் தென்தமிழ்ச் சிவனெறி யாளர் எல்லாவுலகினரையும் புறக்கணிக்காது சிறப்புச்செய்து இணைத்து ஒற்றுமை கொள்ளும் வெற்றியினர் என்பதும் புலனுகும், இத்தகைய

பண்பாட்டினர் வாழ்கின்றமையால் தென்திசை உயர்ந்தது என ஓதப் பட்டது. சிவபெருமானே அகத்தியர் ஒப்பார் என்பது, சிவனே நினை வுறுத்தும் திருவைந்தெழுத்து திருவெண்ணீறு சிவமணி என்னும் மூன்றினையும் முறையே உயிர் உடல் உடை எனக் கொண்டு ஒழுகுவ தாலும், அவனையே முழுமுதலாக வழிபடுவதாலும், அனைத்துயிர்கள் மாட்டும் அன்புபூண்டு நடப்பதாலும் பெறப்படும். இஃது இடத்துநிகழ் பொருளின் தொழில் இடத்தின் மேல் நிற்பதொரு முறை, ஐந்தெழுத் தேயுயிர்வெண் ணீறுடலாம் ஆர்ந்தவுடை, முந்து சிவமணியாம் முன்.

வடபுலம் இவற்றிற்கு முற்றும் நேர்மாறுனது. அவர்கள் மேற் கொள்ளும் அருமறை பல கடவுள் உண்மை கூறுவது ; சாதிமத வேறு பாடு சாதிப்பது. கொலைபுலை வேள்வியை நிலைநிறுத்துவது. செத்துப் பிறக்கும் தெய்வத்திற்கு முதன்மை கொடுப்பது. சிவனே மறப்பது. ஓரோவழி மறுப்பது. வேற்றுமை போற்றுவது இவை போன்ற பல தீய ஒழுக்கங்களால் பண்பாடற்றது. பண்பாட்டில் தாழ்ந்ததனையே மக் கட் பழுவால் தாழ்ந்தது என்று மறைத்து ஓதப் பெற்றது. இதுவும் இடத்து நிகழ் பொருளின் தொழில் இடத்தின்மேல் நின்றது. தீப் பண்பினரே நிலம் பொறுக்கலாற்றாப் பழுவினராவர். இஃது 'அற னொக்கி ஆற்றுங்கொல் வையம் புறனொக்கிப், புன்சொ லுரைப்பான் பொறை'[1] என்னும் நாயனாருளிய செந்தமிழ்ப் பொதுமறையான் உணர்க. அவ் வடபுலத்தாரை உயர்த்துதற் பொருட்டுச் செந்தமிழ்ப் பண்பாட்டினைக் கற்று ஒழுகி ஒழுகுவிக்கும் ஆற்றல் வாய்ந்த அகத்திய னாரைத் தென் திசைக்கு வரவிடுத்தனர். அவர் தென்பால் வந்து பண் பாட்டுடன் செந்தமிழைக் கற்றுத் திருவைந்தெழுத்தை ஓதிச் சிவவழி பாட்டை முற்றுறச் செய்து என்றுமுள தென்றமிழ் இயம்பி இசை கொண்டு வாழ்ந்தனர். தென்தமிழ்ப் பண்பாட்டினை வடபால் பரப்பத் தம்முடைக் கேண்மையராம் திருமூலர் பரஞ்சோதியார் முதலிய தமிழ்ச் சான்றோரை விடுத்தனர். அவர்கள் வந்து வடபால் பரப் பினர். அதனாலேயே தமிழாகமங்கள் வடவெழுத்தால் பொறிக்கப்பட் டன என்னும் உண்மை நடுநின்று உய்த்துணர்வார்க்கு நன்கு விளங்கும். மேலும் அத்தொடர்பால் வடபாலுள்ள தென் தமிழ்ச்சான்றோர் தென் பால் பொதியமலை வந்து மீள்வதும் செய்கின்றனர். பண்பாடனைத்தும் ஏட்டுப்படிப்பால் எய்துவதில்லை ; வீட்டுப் பழக்கத்தாலேயே எய்துவ தாகும். வீட்டுப் பழக்கத்தால் மேவும்பண் பாடதூஉம், ஏட்டுப் பழக்கத் தேய்தாது என நினைவு கொள்ளுங்கள் இதுகாறுங் கூறியவற்றை வரும் இணர்பாக்களால் நினைவு கூரத் தருகின்றும் :

செந்தமிழின் மெய்யுணர்வு சேரா வடபுலத்தார்
தந்தமணப் பந்தர்க்கண் தாம்தாழ்ந்தார்—செந்தமிழைக்
கற்றுத் துலையொக்கக் கண்ணுதலோன் போக்குவித்தான்
தெற்ற அகத்தியனைத் தெற்கு.

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் எனநவில்வார்—என்றும்
வடவர்பா லில்லை மறையில்லை நூலோர்
கடன்மாந்தர் வேந்தறிவர் இல்.

1. வஞ்சயிலா. திருக்குறள், உகக.

தென்னு டுடைய சிவனூர் அகத்தியரைத்
தென்னுட்டுப் போக்கித் தெளிதமிழைப்—பன்னுவித்து
மெய்கண்டார் தம்மால் விரித்தார் வடபுலத்தம்
மெய்கண்டார் மீள்வர்தென் பால். (க)

**324.** அங்கி உதயம் வளர்க்கும் அகத்தியன்
அங்கி உதயஞ்செய் மேல்பா லவனெடு
மங்கி உதயஞ்செய் வடபால் தவமுனி
எங்கும் வளங்கொள் இலங்கொளி தானே.

(ப. இ.) நாள்தொறும் சிவபூசைக்கு உறுப்பாகிய அகம் புறத் தீகூத் தவருது திருவைந்தெழுத்தாகிய சிறந்த செந்தமிழ் மந்திரம் ஓதி நாடு வளம்பெற வளர்ப்பவன் அகத்தியன் உள்ளொளியாய்ப் பேரொளியாய் அறிவொளியாய் இயற்கை ஒளியாய் விளங்கிக்கொண் டிருக்கும் சிவபெருமான் வடபாலுள்ள திருவெள்ளி மலையில் அங்கியாய் வீற்றிருந்தருள்கின்றனன். அங்கு அவனே வழிபட்டுக்கொண்டு இருந் தவன். அகத்தியன். அவன் சிவபெருமான் திருவாணைப்படி தென்றல் தவழும் மேல்பால் மலை என்று சொல்லப்படும் மேற்குத் தொடர்ச்சி மலையில் தென்பால் விளங்கும் பொதியிலின்கண் வந்து உறைந்தனன். அவனெடும் எல்லா இடங்களிலும் வளங்கொழிக்க அருள்புரிவது சிவ வேள்வியில் தோன்றும் இலங்கொளி என்க. மங்கி: மயங்கி - கலந்து.

(அ. சீ.) அங்கி உதயம்செய் - சிவ பூசையில் உதயத்தில் அக்கினி காரியம் செய்கின்ற. (உ)

---

# 2. பதிவலியில் வீரட்டம் எட்டு

**325.** கருத்துறை அந்தகன் தன்போல் அசுரன்[1]
வரத்தின் உலகத் துயிர்களே யெல்லாம்
வருத்தஞ்செய் தானென்று வானவர் வேண்டக்
குருத்துயர் சூலங்கைக் கொண்டுகொன் றனே.

(ப. இ.) கூற்றுவனே ஒத்துக் கொடுமையே நிறைந்த கருத்துடைய அந்தகப் பெயர் சேர் அசுரன் சிவபெருமான்பால் பெற்ற வரப் பேற்றால் உலகத்துயிர்களே எல்லாம் வருத்துவானுயினன். நற்பண்பென்று சொல்லப்படும் வானவர் அக்கொடுமை பொறுக்கலாற்றாது இறைவன் பால் முறையிட்டு வேண்டினர். சிவபெருமானும் வெண்மையும் கூர்மையு மிக்க முத்தலை வேலாம் சூலங் கைக்கொண்டு கருத்தால் அடக்குத லாகிய கொலைத் தொழிலைச் செய்தருளினன்.

(அ. சீ.) அந்தகன் - அந்தகாசுரன். குருத்து - கூர்மை. (க)

---

1. அயனே. அ. திருச்சாழல், ச.
,, அந்தகனே. அப்பர், கூ. கஉ - இ.

326. கோலியிற் பிழைத்த பிரசா பதியைத்
தலையைத் தடிந்திட்டுத் தானங்கி யிட்டு
நிலையுல குக்கிவன் வேண்டுமென் றெண்ணித்
தலையை யரிந்திட்டுச் சந்திசெய் தானே.[1]

(ப. இ.) நான்முகன் மகளுகிய தக்கன் என்னும் வானவன் சிவனைப் புறக்கணித்துச் செத்துப் பிறக்கும் திருமாலுக்கு முதன்மை ஈந்து வேள்விசெய்தனன். முதன்மையை மறுத்தலாகிய கொலைக்குற்றம் செய்த பிரசாபதியாகிய தக்கனைச் சிவனடியார்கள் சினந்தனர். அச் சினம் வாயிலாகச் சிவபெருமான் மற ஆற்றலால் அவன் தலையினைத் தடிந்தருளினன். அத் தலையினை அவன் வளர்த்த தீயினில் இட்டருளினன். பின்பு ஏனையாரும் இங்ஙனம் மருளா திருத்தற் பொருட்டும், வேள்வியிற் கொல்லப்படும் விலங்கினங்களாக வேள்வி செய்வோர் பிறந்து கொல்லப் படுவர் என்பதை அறிவுறுத்தற் பொருட்டும் அத் தக்கன் உடலில் ஆட்டுத் தலையினைப் பொருத்தியருளினன்.

(அ. கி.) பிரசாபதி-தக்கன். சந்தி செய்தான் - பொறுக்கிறுன். (உ)

327. எங்கும் பரந்தும் இருநிலந் தாங்கியுந்
தங்கும் படித்தவன் தாளுணர் தேவர்கள்
பொங்கும் சினத்துள் அயன்தலை முன்னற
அங்கச் சுதனை உதிரங் கொண்டானே.[2]

(ப. இ.) சிவபெருமான் திருவடி எங்கும் நிறைந்து பெரிய உலகங்களையும் நிலைபெறச் செய்தலாகிய தாங்குதலைச் செய்து நீக்கமற நிற்குந் தன்மைத்து. அதனையுணரும் சிவலுகத் தேவர்கள் நான்முகன் கல்விச் செருக்கினைக் கண்டு சினங் கொண்டனர். அவர்தம் சினத்துக்கு உள்ளாகிய அயன் தலையை வைரவக் கடவுளால் அறுப்பித்தனன் சிவன். அதுபோல் செல்வச் செருக்குக் கொண்ட அயன் தந்தையாகிய அச்சுதன் எனப்படும் அரியின் குருதியினை அத்தலையில் ஏற்கச் செய்தனன். (கூ)

328. எங்கும் கலந்துமென் உள்ளத் தெழுகின்ற
அங்க முதல்வன் அருமறை யோதிபாற்
போங்குஞ் சலந்தரன் போர்செய்ய நீர்மையின்
அங்கு விரற்குறித் தாழிசெய் தானே.[3]

(ப. இ.) சிவபெருமான் எல்லா இடங்களினும் எல்லா உயிர்களினும் கலப்பால் ஒன்றுய்க் கலந்து இருக்கின்றனன். என் உள்ளத்திலும் எழுந்தருளி யிருக்கின்றனன். அவன் அறுசமயங்களாகிய அங்கங்கட்கு முதல்வனுவன். நான்கு மறைகளை ஓதியருளிய நாதனுவன்.

---

1. தக்கனையும். அ. திருச்சாழல் இ.
2. ஆமயந்தீர்த். அப்பர், கூ. ககூ - க.
3. தடமல. ,, சு. கசு. - கo.
,, நெருப்புருவு. ,, கூ. கo - கூ.

அவன் முதன்மையை யுணராது வஞ்சனையே உருவாகிய சலந்தரன், அவனுடன் போர்க்கு வந்தனன். சிவபெருமான் எல்லாத் தொழில் களையும் கருவியின்றிக் கருத்தளவானே செய்பவன். ஆதலால் சலந்தரன் உடல் தடிதற் பொருட்டு நிலத்தே திருவடி விரலால் ஆழியமைத்தனன். அவ்வாழியே சலந்தரன் உடலைத் தடிந்ததென்க. தடிதல் - கொல்லுதல். ஆழி - சக்கரப்படை. (அவ்வாழிப்படையினையே திருமால் கண்ணிடந்து வழிபட்டுப் பெற்றனன் என்ப.) (சு)

329. அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்
மூப்புரஞ் செற்றனன்[1] என்பர்கள் மூடர்கள்
மூப்புர மாவது மும்மல காரியம்
அப்புரம் எய்தமை யாரறி வாரே.

(உ. இ.) சலந்தாங்கு செஞ்சடையினையும், ஆதியாகிய அன்னையையும் உடைய முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம் பொருளாகியும் தொல்லோன் சிவபெருமான். ஆருயிர் உய்தற் பொருட்டு அவ்வவ் வுயிர்களைச் சார்ந்த மும்மல காரியங்களை அவ்வுயிர்களால் செவ்வியுறச் செய்து அச் சிவபெருமான் திருவருள் நோக்கத்தால் சுட்டெரித்தருள்வன். இவ் வுண்மையினை எளியவர்கட்கு உணர்த்தும் பொருட்டு உருவகக் கதையாக உயர்ந்தோர் அமைத்து உருவகமெனவே கூறி யுணர்த்தினர். பின்னுள்ளோர் அவ்வுண்மையினை மறந்து கதையை மெய்யாக்கி விட்டனர். அத்தகையோர் அறியாமைக்கு இரங்கித் திருமூல நாயனார் அவர்களை மூடர்கள் எனக் கூறுகின்றனர். கூறி 'மூப்புர மாவது மும்மல காரியம்' எனவும் ஓதுகின்றனர். அதனை மறுப்பாரை நோக்கிப் பின்னும் இரங்கி, 'அப்புரம் எரித்தமை யாரறி வாரே' என வினவுகின்றனர். ஏகாரம் எதிர்மறையாதலின் ஒருவரும் அறியாரென்பது பொருள். மூப்புரம் - மூன்று கோட்டை. அவை, இரும்பு வெள்ளி பொன்னுலாயவை. இவற்றின் நடுவுள்ளிருப்பது உயிர். அஃது அன் பறிவு ஆற்றல்களாகிய முப்பண்புகளோடு கூடியது. அம்முப்பண்புகளை உய்ந்த மூவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளன: ஏனை மடிந்தவர்கள் அனைவர்களும் திய பண்புகளாகும். இரும்பு என்பது ஆணவ காரியத்தையும், வெள்ளி என்பது மாயா காரியத்தையும், பொன் என்பது வினையின் காரியத்தையும் குறிப்பனவாம். இவையே உண்மை. இது போன்று ஏனையவற்றையும் உருவகப் பண்புகளாகக் கொள்ளுவதே ஏற்புடைத்து.. அன்பு அறிவு ஆற்றல்களாகிய முப்பண்புகளுள் அன்பு பின்னின்று குடமுழா முழக்குதற்கும், அறிவு முன்னின்று வலப்பக்கங் காவற்கும், ஆற்றல் இடப்பக்கங் காவற்கும் இயைபுடைத்தா மென்க. (இ

330. மூத்தீக் கொளுவி முழங்கெரி வேள்வியுள்
அத்தி யுரியர னுவ தறிகிலர்[2]
சத்தி கருதிய தாம்பல தேவரும்
அத்தீயின் உள்ளெழுந் தன்று கோலையே.

---

1- மூவெயில். ஆருரர், எ. திரி - அ.
2. அம்பனைய. சம்பந்தர், ந. எஎ - ந
,, சொற்பிரிவி. சம்பந்தர், க - எஅ - உ.

(ப. இ.) காட்டுத் தீ வீட்டுத் தீ ஏட்டுத் தீ என்று சொல்லப்படும் ஆகவனீயம், காருகபத்தியம், தென் திசை அங்கியாகிய முத்தியினையும் எழுப்பி வடபால் முனிவர்கள் தீ வேள்வி ஒன்று புரிந்தனர். அதன்கண் நின்று அவர்தம் செருக்குருவாம் யானை ஒன்று வந்தது. யானை என்பது யான் + ஐ எனப் பிரிந்து யானை தலைவன் என்று பொருள் தரும். ஐ - தலைவன். அத்தி - யானை. அந்த யானையைச் சிவபெருமான் உமையம்மையார் நடுங்க நகத்தால் உரித்துப் போர்த்தனர். இவ்வியானையின் அழிவு முன் ஓதிய தக்கன் வேள்வியில் வேள்வி உணவால் உடலுரம் உண்டாமென வந்து புகுந்த தேவர்கள் பலரும் அழிந்தமையை ஒக்கும். உமையம்மையார் அஞ்சுவது செருக்குறும் உயிர்கள் துன்பப்படுகின்ற தன்னை நோக்கியே அன்றித் தன்னை நோக்கி அன்றென்க. முத்தீயினையும் முறையே கல்வி கற்பு கடவுட் காதல் எனவும் கூறலாம்.

(அ. சி.) முத்தீ...வேள்வி - நேமி வனத்தார் செய்த யாகம். நேமி வனத்தார் - ஆரியர். (சு)

331. மூலத் துவாரத்து மூளும் ஒருவனை
மேலைத் துவாரத்து மேலுற நோக்கிமுற்
காலுற்றுக் காலனைக் காய்ந்[1] தங்கி யோகமாய்
ஞாலக் கடவூர் நலமாய் இருந்ததே.

(ப. இ.) மூலாதாரத்திலுள்ள நடுநாடி வழியாக உயிர்ப்பினை ஏற்றி மேலைத்துவாரமாகிய உச்சித்துளையிற் செலுத்துதல் அகவழி பாட்டின் அடிப்படை. அதன் பின்னரே புறவழிபாடு நிகழ்த்தல் வேண்டும். உச்சித் துளையிற் செலுத்தி நோக்கின் திருவருள் வெளியில் ஒப்பில் ஒருவனும் சிவபெருமான் காட்சி கொடுத்தருள்வன். அங்ஙனம் வழிபட்ட மாணியின் ஆருயிரைக் கொள்ள வந்த காலனை உதைத்துக் காய்ந்தனன் சிவன். அங்கு 'அவனேதானே ஆகிய அந்நெறி. ஏகனெகி' நிற்கும் முறையால் சிவபெருமானுக மாணி நின்றனன். அக்குறிப்பு யோகமாய் என்பதனால் பெறப்படும். அவ்வருளிப்பாட்டினைச்செய்து நலமாய் எழுந்தருளியிருக்கும் திருவூர் கடவூர் என்ப. எவராலும் கடக்கவொண்ணுத காலனைக் கடப்பதற்கு நிலைக்களமான இடமாதலால் அவ்வூர் கடவூர் என்று பெயர் பெற்றது. கூற்றுவனை உதைத்தது, சிவனடியார்பால் அவன் அணுக நினைப்பதும் உய்தியில்லதொரு பெருங்குற்றம் என்பதனை உணர்த்துதற் பொருட்டு[2] என்க. (எ)

332. இருந்த மனத்தை இசைய இருத்திப்
போருந்தி இலிங்க வழியது போக்கித்
திருந்திய காமன் செயலழித்[3] தங்கண்
அருந்தவ யோகங் கொறுக்கை அமர்ந்ததே.

(ப. இ.) மால்மகனுகிய காமன் சிவபெருமான் அறம் போதிக்குங் கால் காமத்திறம் எழுப்ப உன்னினன். உன்னிவந்து பூங்கணை தொடுத்

1. நீற்றினை. அப்பர். ச சக - உ.
2. வேலைமலி. உ. சஅ - கு.
3. விளவு - சம்பந்தர், உ. க சo - உ.
., கீண்ணுதல். சிவஞான சித்தியார், க - உ - உஇ.

தனன். சிவபெருமான் நெற்றிக் கண்ணால் அவனை அடக்கினன். எவர்க்கும் காமத்திறம் புறச்சூழ்வால் விளைதல் கூடாது. புறச் சூழ்வால் விளைதல் என்பது வினைக்கு இடையூறுகப் புறப்பொருள்களைக் கண்ட காரணத்தால் மனநோக்கம் எழுதல் என்பதாம். வினைமுடித்து மனநோக்குவது அனைவர்க்கும் விழையத்தக்கது. அதற்கிடையே தோன்றும் காம நினைவை அறிவுக் கருத்தால் அகற்றுதல் வேண்டும். அவ்வுண்மையினைச் சிவ பெருமான் காமனை உருவிலனுக்கி உணர்த்தியருளினன். நாமெல்லாம் எவ்வாறு காமத்தை அடக்குவதென்பதை ஒதுகின்றனர். எடுத்துக் கொண்ட வினை முடியுங்காறும் அவ்வினைமேல் வைத்த மனத்தை அதன் கண்ணே பொருந்த இருத்துதல் வேண்டும். அங்ஙனம் பொருந்திய உள்ளத்தைக் குறிக்கோளாகிய இலிங்க வழியே செலுத்துதல் வேண்டும். அங்ஙனம் செலுத்தினுல் காமன் செயலை அடக்குதல் கூடும் சிவபெருமான் காமனை அடக்கி அருந்தவ யோகத்தமர்ந்தது கொறுக்கைத் திருவூர் என்ப. இறைவன் செய்தருளிய ஆண்மைச் செயல்கள் எட்டினையும் குறிக்கும் பழம்பாடல் ஒன்று வருமாறு :

> பூமன் சிரங்கண்டி அந்தகன் கோவல் புரமதிகை
> மாமன் பறியல் சலந்தரன் விற்குடி மாவழுவூர்
> கர்மன் கொறுக்கை யமன்கட வூரிந்தக் காசினியில்
> தேமன்னு கொன்றையும் திங்களும் சூடிதன் சேவகமே.

மேலோதிய ஆண்மைச் செயல் எட்டினையும் ஒருபுடையாகக் கருதுங்கால் கீழ்வருமாறு கொள்ளலாம் அந்தகன் : உடலுருது உயிர் மலத்துடன் மட்டும் ஒட்டியிருக்கும் தொல்புலம்பு. தக்கன்: ஆணவச் செருக்கு; இஃது உடலுடன் கூடியபின் தோன்றுவது. அயன் அரி: யான் எனது என்னும் செருக்கு. சலந்தரன்: கொடுவினை. தக்கன் ஆணவச் செருக்கினையும், அயன் அரி, யான் எனதென்னும் செருக்கினையும், சலந்தரன் கொடுவினையையும் குறிக்கும் குறிப்பாதலால், இவை முறையே ஆணவம் மாயை கன்மக் காரணமாகும். முப்புரம்: மும்மல காரியம். அத்தியாகிய யானை: மயக்கம். காலன் : வெகுளி. காமன் : காமம் இவ்வெட்டினையும் நினைவூட்டும் வெண்பா வருமாறு :

> தொல்புலம் பந்தகன் சொல்லா ணவம்தக்கன்
> மல்யான் எனதயன்மால் வன்மைவினை—வல்ல
> சலந்தரனும் மும்மைபுரம் அத்திசாலம் காமன்
> மலம்வெகுளி காமம்எண் வீறு.

மேலும் போர் இருவகைப்படும். அவை புறப்போர் அகப்போர் என்பன. புறப்போர் எதிரியுடன் பன்முறை பொருதுவெல்லல். இது திருவாணைபெற்ற கண்ணன் முதலாயினர் மாட்டுக் காண்க. அகப்போர் எதிர்ப்பும் பொருதலுமின்றி அறியாது வந்த பகைமை அடங்கி ஒடுங்கி அழிவது. அது முழுமுதற் சிவபெருமான் காட்டியருளிய மேலோதிய 'பதிவலியில் வீரட்டம் எட்டு' என்னும் அருளிப்பாட்டால் உணரலாம். புறப்போரை ஆற்றற்போரென்றும், அகப்போரை அறிவுப்போரென்றும் கூறுப. ஆற்றல்புறப் போரெதிர்ப்புண் டாமறிவுட் போரெதிர்ப்பில், ஆற்றுசிவ வீரெட்டகம். எதிர்ப்பிலாப்போரை 'இரும்புமுகம்' என்னும் புறநானூற்று (கூ0கூ)ப் பாட்டானுணர்க. சிவஞானாற்றியது எதிர்ப்பில் போரென்க. எதிர்ப்புள் போரைச் சிலப்பதிகாரத்து நீர்ப்படைக் காதையுள் வரும் குறிப்பாலுணரலாம்.

இ. "செறிதழல் வேந்தன் தென்றமி ழாற்றல்
அறியாது மலைந்த ஆரிய மன்னரைச்
செயிர்த்தொழில் முதியோன் செய்தொழில் பெருக
உயிர்த்தொகை யுண்ட வொன்பதிற் றிரட்டியென்று
யாண்டும் மதியும் நாளும் கடிகையும்
கo ஈண்டுநீர் ஞாலங் கூட்டி யெண்கொள." (அ)

---

# 3. இலிங்க புராணம்

333. அடிசேர்வன் என்னஎம் ஆதியை நோக்கி
முடிசேர் மலைமக ளார்மக ளாகித்
திடமார் தவஞ்செய்து தேவர் அறியப்
படியார அர்ச்சித்துப் பத்திசெய் தாளே.[1]

(ப. இ.) நிலவுலகமே சிவனுர் திருவழிபாட்டிற்குச் சிறந்த இட மாகும். ஒரு செய்கையால் உலகுக்குப் பயன் ஏற்படுமானல் அது சிறந்த செய்கையாகும். நிலத்தே திருக்கோவிலில் சிவபூசைசெய்தால் செய்வார்க் கும் அப் பூசையினைக் கண்டு வழிபட்டு உய்வார்க்கும் பயன் உண்டாகும். வானுலகத்தும் அவரவர் மனையகத்தும் பூசை செய்தால் பிறர்க்குப் பயன்படுவதில்லை. அதனலேயே சிவபெருமான் பயனருளும் இடமாக நிலவுலகத்துத் திருக் கோவில்களைக் கொண்டருள்கின்றனன். இதனை 'வானிடத்தவரும் வந்து மண்மேல் அரன்றனை அருச்சிப்பர்' என்று தமிழாகமம் சாற்றுவதாயிற்று. தமிழாகமம் சிவஞான சித்தியார். அம் முறையில் திருவருளம்மை சிவபெருமான் திருவடியைச் செந்தமிழ்த் திருமுறையால் திருவைந்தெழுத்தால் அவன் அருவுருவத் திருமேனியில் வைத்து வழிபட்டுச் சார்வேன் என்று உன்னினள். உன்னி உலகத்தி லேயே உயர்ந்த உச்சியினையுடைய வட எல்லையாகிய பனிமலையின் மகளாராய்த் தோன்றினர். தோன்றி அனைத்திற்கும் ஆதிகாரணமாக விருக்கும் எம் சிவனை நோக்கித் தவக்கோலம் பூண்டு மருதவளஞ்சோர் காஞ்சியை அடைந்து திருவுரு அமைத்து விண்ணவரும் மண்ணவரும் கண்டுய்ய நிரம்ப அருச்சித்து வழிபட்டுக் காதன் முதிர்ச்சியாகிய பத்தியினைச் செய்தனள் என்க. (க)

334. திரிகின்ற முப்புரஞ் செற்ற பிரானை
அரியனென் றெண்ணி அயர்வுற வேண்டா
புரிவுடை யாளர்க்குப் பொய்யலன் ஈசன்
பரிவோடு நின்று பரிசறி வானே.[2]

(ப. இ.) உழன்று கொண்டு வரும் முப்புரங்களைச் செம்மை செய் யும் பொருட்டுச் சிரித்து எரித்தவன் சிவபெருமான். அவன் அணுகு

1. எள்கலின்றி. ஆரூரர், எ. சுக - கo.
,, பூதியாகிய. கஉ, திருக்குறிப்பு, சுசு.
2. அருக்கன்நேர். சிவஞானபோதம், கக. உ - க.

வதற்கு அருமையானவன் என்று நினைந்து யாரும் மனத்தளர்வு கொள்ளுதல் வேண்டா. பேரன்பாகிய காதல் உடையார்க்கு அவர் வேண்டிய வாறு திருவுருக்கொண்டுவந்து அருளுதலில் ஒருஞான்றும் அவன் தவறுதலைச் செய்யான். அவனே அழியாச் செல்வநிறை ஆண்டவன். அவன் அன்புடன் உயிர்க்கு உயிராய் நின்று வேண்டுவன அறிந்து ஆங்காங்கு அறிந்து ஆங்காங்கு அவ்வப்பொழுதே அருள் செய்கின்றனன். திரிபுரம் - திரியும்புரம் ; உடல். (உ)

335. ஆழி வலங்கொண் டயன்மால் இருவரும்
ஊழி வலஞ்செய்ய ஒண்சுட ராதியும்
ஆழி கொடுத்தனன் அச்சுதற் கவ்வழி
வாழி பிரமற்கும் வாள்கொடுத் தானே.[1]

(ப. இ.) அறிவுப் பேரொளியாய் ஒளிக்குள் ஒளியாய் நின்றருளும் ஆதியாகிய சிவபெருமானே எல்லை காணவொண்ணாத கடல் போன்ற வெற்றியினையுடைய அயன் மால் ஆகிய இருவரும் நெடுங்காலம் வலம் வந்து வழிபாடு செய்தனர். அச் சிவபெருமானும் அவ்வழிபாட்டை ஏற்றருளி அச்சுதனுகிய திருமாலுக்கு ஆழிப்படை அருளினன். ஆழி - சக்கரம். அதுபோல் பிரமனுகிய நான்முகனுக்கும் வாள் கொடுத்தருளினன். ஆழி ஆற்றற்கருவியாகவும் வாள் அறிவுக் கருவியாகவும் கொள்க. (ஊ)

336. தாங்கி இருபது தோளுந் தடவரை
ஓங்க எடுத்தவன் ஒப்பில் பெருவலி
ஆங்கு நெரித்தம ராவென் றழைத்தபின்
நீங்கா அருள்செய்தான் நின்மலன் தானே.[1]

(ப. இ.) இயற்கைத் திருவெள்ளி மலைக்கண் செயற்கைக் கைலாய மலையை இருபது தோளுடைய இலங்கையர் வேந்தன் தாங்கி எடுக்க லுற்றனன். சிவபெருமான் விரல் நுதியால் சிறிது அழுத்தினன். அதனால் இராவணன் நைந்து குருதி கொப்புளிக்கப் பெரிதும் வருந்தினன். அவன் தன் கைந்நரம்பெடுத்து யாழமைத்துத் திருவைந்தெழுத்தையோதிக் கீதம்பாடி வழிபட்டனன். அவ் வழிபாட்டிற்கு மகிழ்ந்து சிவபெருமான் அவனுக்கு நாளும் வாளும் கொடுத்தருளினன். அமரா - ஈறிலா இறையே. (எ)

337. உறுவ தறிதண்டி ஒண்மணற் கூட்டி
அறுவகை ஆன்ஐந்தும் ஆட்டத்தன் தாதை
செறுவகை செய்து சிதைப்ப முனிந்து
மறுமழு வால்வெட்டி மாலேபெற் றானே.[2]

---

1. கரத்தினர். கடுத்த. சம்பந்தர், கூ. உஅ, அ. கூ. ககக - அ.
,, கடுகிய அப்பர், ச. கச - ககூ.
,, பரக்கும். சம்பந்தர், க எ0 - அ.
2. தழைத்ததோ. அப்பர், ச. சகூ - கூ.
,, அண்டர். கஉ. சண்டேசுரர், திரு.
,, கடிசேர்ந்த. சம்பந்தர், கூ. திஙி - அ.

(ப. இ.) திருவருளால் மிக்கதும் தக்கதுமாகிய சிவபூசையினைத் தண்டேசுரர் தம் முன்தொடர்பால் அறிந்தனர். மண்ணியாற்றிடைக் குறையை நண்ணினர். தழைத்ததோர் ஆத்தியின்கீழ் தாபரம் மணலாற் கூப்பினர். பிறப்பறும்வகை அங்கே ஆவினை அழைத்து ஐந்தும் நிரம்பிய பாலினைக் கறந்து சிவபெருமானுக்கு ஆட்டி, திருவைந்தெழுத் தோதி நற்றவமாகிய வழிபாட்டினைப் புரிந்தனர். அவர்தம் உடற்றந்தையாகிய எச்சதத்தன் தீ வேள்வியினைப் பெரிதென்று எண்ணும் எண்ணத்தன். அதனால் சினங்கொண்டு பகைத்துச் சிவ வழிபாட்டினைச் சிதைத்தனன்.[1] சிவனருளால் மாடு மேய்க்கும் கோல் மழுவாக மாறியது. அதனைக் கொண்டு தந்தையின் தாளைத் தந்தை செய்த திருவடிப்பாவம் அறும்படி வெட்டினர். சிவபெருமான் அவர்க்குத் தொண்டர் தலைமையும் மாலையும் கொடுத்து ஆட்கொண்டருளினன். மறுமழு: மாறுமழு; கோல் மழுவாக மாறியது; மாறு என்பது மறு எனச் செய்யுளால் குறுகி நின்றது.

(அ. சி.) உறுவது - சிவபூசையால் வருவது. (இ)

338. ஓடிவந் தேல்லாம் ஒருங்கிய தேவர்கள்
வாடி முகமும் வருத்தத்துத் தாஞ்சென்று
நாடி இறைவா நமஎன்று கும்பிட
ஈடில் புகழோன் எழுகவென் றனே.[2]

(ப. இ.) வெவ்வேறு காலங்களில் நஞ்சு முதலிய வெவ்வேறு துன்பங்கள் மால் முதலிய விண்ணவர்களுக்கு நேர்ந்தன. அவர்கள் அப் பொறுக்கலாற்றாத் துன்பத்தால் உயிருக்கு அஞ்சி வருந்தினர். காக்கும் மூழுமுதலாம் சிவபெருமானிடம் ஒருங்கு கூடி வந்து ஓலமென்று மொழிந்து முறையிட்டனர். அத் தேவர்களது முகவாட்டங் கண்டு சிவ பெருமான் இரங்கினன். ஒப்பில்லாத புகழையுடைய அவன் எழுக என்று அருளினன் அத் தேவர்கள் மீண்டும் இறைவாநம என்று கும்பிட்டனர். இத் தலைப்பின்கீழ் முறையே அம்மை, அன்பர், அயன்மால் இராவணன், தண்டேசுரர், அமரர்கள் ஆகிய அறுவரும் சிவபெருமானை வழிபடும் தவத்தால் நற்பேறு பெற்றனர். ஒருபுடையொப்பாக மேலோதிய அறுவர் நிகழ்ச்சியாலும் இறைவன்தன் ஆறு குணங்களையும் நினைவு கூர்க. அக் குணங்கள் வருமாறு: மெய்ப்பொருள், ஆண்மை, புகழ், திரு, ஞானம், பற்றறுதி. பற்றறுதி - வைராக்கியம். இக் குறிப்பை வரும் வெண்பாவால் நினைவு கூர்க: இவற்றை ஐசுவரியம், வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம் எனவும் கூறுப.

மெய்ப்பொருளாம் அம்மை மிளிராண்மை மெய்யன்பர்
வெய்யபுகழ் மாலயன் மேவுதிரு—ஐந்நான்கு
தோளான் சிவஞானம் சண்டேசர் பற்றறுதி
மாளாமற் காக்கவிழை வான். (ஈ)

வான் - வானவர்; தேவர்கள்.

---

1. ஏத நன்னில. எ. திரி - கூ
2. ஸ்ரீருங்களி. சம்பந்தர், க. சகூ - ஸ.

# 4. தக்கன் வேள்வி

339. தந்தைபி ரான்வெகுண் டான்தக்கன் வேள்வியை
வெந்தழல் ஊடே புறப்பட விண்ணவர்
முந்திய பூசை முடியார் முறைகேட்டுச்
சிந்தினர் அண்ணல் சினஞ்செய்த போதே.[1]

(ப. இ.) தக்கனின் தந்தையாகிய நான்முகனுக்கும் முதல்வன் சிவபெருமான். தக்கன் பிழைபடச் செய்த புலைவேள்வியினை யுன்னி மனத்திற் கொள்ளும் பொல்லாங்குச் சூடாகிய வெகுளியைச் சிவன் கொண்டனன். அவ் வெகுளி முகத்துத் தோன்றிஞல் சினம் அது சொல்லாக வெளிப்பட்டால் சீற்றம். செயலாஞல் செற்றம். மாருதிருந்தால் வன்மம். அண்ணலாகிய சிவபெருமான் சினங்கொண்டபோதே வேள்வித் தீயினைச் சூழவிருந்த விண்ணவர்கள் நடுங்கினர். முந்திய பூசையாகிய தகர் தின்னும் தொழில் முற்றும் முடியாதிருக்கும்போதே ஒருவர் போன இடம் ஒருவர்க்குத் தெரியாமலே ஓட்டெடுத்தனர். (க)

340. சந்தி செயக்கண் டெழுகின் றரிதானும்
எந்தை யிவனல்ல யாமே உலகினிற்
பந்தஞ்செய் பாசத்து வீழ்ந்து தவஞ்செய்ய
அந்தமி லானும் அருள்புரிந் தானே.

(ப. இ.) வயனங்கள் மாரு வடுவாகிய தண்டனை பெற்றுத் துன்புறும் விண்ணவருள் தலைமைப்பாடமைந்த அரியாகிய மால் மன்னிப்பு வேண்டுதலாகிய சந்தி செய்வாஞயினன். 'எந்தையாகிய சிவபெருமானே! இத் துன்பத்திற்குக் காரணம் புல்லறிவு படைத்த தக்கன் மட்டுமல்லன். யாங்களும் மலமயக்கால் உலகினில் பிணிப்புண்ணும் பாசத்தில் வீழ்ந்து (துன்புறுவோமாயினம்). எங்களைக் காத்தருள வேண்டு'மென்று தவஞ் செய்தனர். என்றும் முடிவிலாது ஒன்றுபோல் நின்று நிலவும் சிவபெருமானும் அத்தவத்திற்கு இரங்கி அருள் புரிந்தனன். வீழ்ந்து அழுந்தி. (உ)

341. அப்பரி சேயய ஞர்பதி வேள்வியுள்
அப்பரி சேயங்கி அதிசய மாகிலும்
அப்பரி சேயது நீர்மையை யுள்கலந்து
அப்பரி சேசிவன் ஆலிக்கின் ருனே.

(ப. இ.) மேலோதியவாறு அயன் மகனும் தலைமைப்பாடும் உடைய தக்கன் செய்த தீ வேள்வியுள் வியக்கத்தகுந்ததாக விளங்கும் அங்கியாகிய தீயும் வேண்டிக்கொள்ளச் சிவபெருமான் அதனையும் ஏற்றுக் களித்து அருள் செய்தனன். (கூ)

1. சாலமுன். அ. இருச்சதகம், ச.

342. அப்பரி சேஅயன் மால்முதல் தேவர்கள்
அப்பரி சேயவ ராகிய காரணம்
அப்பரி சங்கி யுளாளும் உள்ளிட்
டப்பரி சாகி அலர்ந்திருந் தானே.

(ப. இ.) மேலோதியவாறே மால் முதல் தேவர்கள் தனித்தனியே அக் கொலைவேள்விக்கண் வந்த தங்கள் அறியாமையைப் பொறுக்க வேண்டுமென்று மன்றுடிக் கேட்டுக்கொண்டனர். சிவபெருமானும் முகமலர்ந்தேற்று அருள் புரிந்தனன். (ச)

(அ. சி.) கதுவ - தண்டிக்க.

343. அலர்ந்திருந் தானேன் றமரார் துதிப்பக்
குலந்தருங் கீழங்கி கோளுற நோக்கிச்
சிவந்த பரமிது சென்று கதுவ
உவந்த பெருவழி யோடிவந் தானே.

(ப. இ.) எல்லாப் பொருளுடும் விரவி நின்று இயக்கும் சிவபெருமான் முகமலர்ச்சியுடன் இருந்தருளினன் எனக் கண்டு வானவர் தொழுதனர். தூய்மை முதலிய அனைத்து வகையானும் மேம்பட்டு ஏனைய வற்றையும் தூய்மைப்படுத்தும் தன்மையவாகிய உயர்ந்த குலமுடையது தீ. அது புன்மை வாய்ந்த தக்கன் சார்பாய்க் கீழ்மையாகிய குற்றத்தை அடைந்தது. அக் குற்றம் நீங்கும் பொருட்டுச் சிவபெருமான் சினந்து தண்டித்தனன். அத்தகைய சிவபெருமானைத் தீக் கடவுள் மன்னிப்பு வேண்டி அவன் திருவடிபற்றித் தொழுதனன். சிவபெருமான் அதற்கு உவந்தனன். சிவபெருமான்மாட்டு அன்பு வைப்பதே பெருவழி. அவனும் அப் பெருவழி வாயிலாக விரைந்தோடி வந்து அருள் புரிந்தனன். 'கீழங்கி' என்பதற்கு வேதத்துட் கருமகாண்டத்தின் 'விண்டுபரமன், அங்கி அவமன், அவ்விருவர்க்கும் இடையே எல்லாத் தேவரும்' எனச் சொல்லப்படுவதைக் கூறுதலும் ஒன்று. சிவந்த - சினந்த. பெருவழி - பெருமையுள்ள அன்பின் வழி. (இ)

344. அரிபிர மன்தக்கன் அருக்க னுடனே
வருமதி வாலி வன்னிநல் இந்திரன்
சிரமுக நாசி சிறந்தகை தோள்தான்
அரனருள் இன்றி அழிந்தநல் லோரே.

(ப. இ.) சிவனைப் புறக்கணித்து அவன் திருவருளினை இழந்து தக்கன் புலைவேள்வியில் உழந்தவர் மால், அயன், தக்கன், ஞாயிறு, திங்கள், வாலி, தீ, வானவர்கோன் முதலாயினர் ஆவர். சிவபெருமானிடத்துத் தோன்றிய சினம் தக்கன் வேள்வியினை அழித்தற்கு மிக்க வெவ்வுருவாய்த் தோன்றிற்று. அவ்வுருவினையே வீரபத்திரக் கடவுள் என்ப. அவர் சென்று வேள்வியிற் கூடிய வானவர்களைத் தனித்தனியே தலை, முகம், மூக்கு, கை, தோள் முதலியவற்றை அறுத்து ஒறுத்தனர். சிவனுர் அருளின்றி அவ்வானவர்கள் அனைவர்களும் அழிந்தொழிந்தனர். நல்லோர் என்பது குறிப்புமொழியாக அல்லோர் என்று பொருள்படும். வாலி

என்பது தக்கன் மனைவியின் பெயர். இனம் பற்றி வேள்விக்கு வந்துள்ள ஏனைத் தேவ மாதரையும் குறிக்கும். வாலை - இளம்பெண். இவ் வொறுத்தல் முறைவிளக்கத்தினை ஆளுடைய அடிகளருளிய திருவாசகத் திருவுந்தியாரின்கண் காண்க. (கூ)

345. செவிமந் திரஞ்சொல்லுஞ் செய்தவத் தேவர்
அவிமந் திரத்தின் அடுக்களை கோலிச்
செவிமந் திரஞ்செய்து தாமுற நோக்குங்
குவிமந் திரங்கொல் கொடியது வாமே.

(ப. இ.) செவித்தலாகிய உருவேற்றத்தக்க மந்திரத்தைச் சொல்லும் தவப்பேற்றினையுடைய தேவர், வேள்வியில் கொடுக்கும் அவிக்கு இடமாகிய அடுக்களை என்று சொல்லப்படும் குண்டத்தினை அமைத்தனர். வேள்விக்கண் செவிக்கும் வெவ்வேறு மந்திரங்கள் ஐம்புலன்களை விரியச் செய்யும் தன்மைய. அவற்றைவிடக் கணிப்பாரை அகமுகப் படுத்திப் புலன்களை ஒடுக்குவித்து உயர்த்து மந்திரம் செந்தமிழ்த் திருவைந்தெழுத்து. அதுபோலாகா, புலன்களை விரிவித்து நலங்களை இழப்பித்துப் பொலங்களில் உழப்பித்துத் துன்புறுத்தும் இயல்பு வாய்ந்த வேள்வியில் செவிக்கும் அக் கொடிய மந்திரங்கள். குவிமந்திரம் - மனம் ஒடுங்குதற்கு வாயிலாகிய மந்திரம். செவித்தல் - செபித்தல்.

(அ. கி.) தவி - தவ்வி ; அகப்பை (சிருக்கு, சுருவம்) ; அவிசொரியும் பாத்திரம். (எ)

346. நல்லார் நவகுண்டம் ஒன்பதும் இன்புறப்
பல்லார் அமரர் பரிந்தருள் செய்கென
வில்லாற் புரத்தை விளங்கெரி கோத்தவன்[1]
பொல்லா அசுரர்கள் பொன்றும் படிக்கே.

(ப. இ) நன்மையமைந்த புதுமையிக்க வேள்விக் குண்டம் ஒன்பதும் இடையூறின்றி யாங்கள் இயற்றி இன்புற வேண்டும். அதற்கு விடாது இடையூறினைக்கும் முப்புரத்தாரை அகற்றி எங்களைக் காத்தருளவேண்டுமென்று மாலுள்ளிட்ட வானவர்களனைவரும் சிவபெருமானைத் தொழுது வேண்டினர். சிவபெருமானும் பொன் வில்லினுல் அத் திரிபுரத்தைச் சிரித்து எரித்தனர். ஆங்குள்ள பொல்லாப் பண்பினராகிய அசுரர்கள் பொன்றினர். பொல்லாத பண்பனைத்தும் பொன்றப் புரமெரித்தார், நல்லார்க் கருள் செய்ய நாடென்பதே அதன் உள்ளுறையாகும். உள்ளுறை - தாற்பரியம். 'பெரியாரைப் பேணுதொழுகின் பெரியாரால், பேரா இடும்பை தரும்' (அகூ) என்னும் நாயனார் திருமறையும் ஈண்டு நினைவு கூர்க. (அ)

347. தேளிந்தார் கலங்கினும் நீகலங் காதே
அளிந்தாங் கடைவதெம் ஆதிப் பிரானை
விளிந்தானத் தக்கன்அவ் வேள்வியை வியச்
சுளிந்தாங் கருள்செய்த தூய்மொழி யாளே.

1. வெம்மைமிகு. சம்பந்தர், க. ககூக - ஈ.

(ப. இ.) உடலும் உளமும் உணர்வும் உயிரும் திருவருளேயாதலின், அனைத்தும் எப்பொழுதும் தூய்மையேயாம். அத்தகைய உமையம்மையார் அருண்மொழி என்றும் தூய்மையும் வாய்மையும் நன்மையும் அமைந்ததாகும். அத்துணைச் சிறப்பு வாய்ந்த திருமொழியினையுடைய அம்மையே! நின்னால் தெளிவுபெற்று நின்னையடைந்த தெளிவினர் பயிற்சி வயத்தால் கலங்குவர். அதன் பொருட்டு நீயும் கலங்கற்க. ஆணவச் செருக்கால் தக்கன் செய்த புலைவேள்வியினைச் சினந்து அழித்து அவனையும் கொன்றனன் சிவன். அத்தகைய எம் ஆதிப் பிரானை ஆருயிர் அடைவதற்கு வழி கனிந்த அன்பேயாகும்.

(அ. சி.) அளித்து - குழைந்து. சுளிந்தாங்கு - கோபித்து. தூய் மொழியாள் : உமை. (கூ)

---

# 5. பிரளயம்

348. கருவரை முடிக் கலந்தெழும் வெள்ளத்[1]
திருவருங் கோவென் றிகல இறைவன்
ஒருவனும் நீருற ஓங்கொளி யாகி
அருவரை யாய்நின் றருள்புரிந் தானே.

(ப. இ.) நீரூழிக் காலத்துத் திருவாணையால் கடல் பொங்கிப் பெரிய மலையையும் மூடி எங்கணும் ஒரே வெள்ளமாய்ப் பெருகிற்று. அதனைக் கண்டு அயனும் அரியும் ஆகிய பெருந்தேவர் இருவரும் ஏனைச் சிறுதேவரோடொப்பக் கோவென்றலறினர். ஒப்பில்வாத சிவபெருமான் ஒருவனுமே அந் நீரின்மேல் பேரொளிப் பிழம்பாய்த் தோன்றினன். அளத்தற்கரிய பெரிய மலைபோல் நின்றனன். அவ் விருவரையும் நோக்கி அஞ்சற்க என்று அருள் செய்தனன். நீர் திருவருள் அம்மையைக் குறிப்பதாகும். தீ பெரும்பொருட் சிவபெருமானைக் குறிப்பதாகும். அம்முறையில் சிவபெருமான் திருவருளம்மையினையே திரு உடலாகக் கொண்டருளுகின்றனன். அதனால் 'சிவபெருமான் நீருற ஓங்கொளியாகி நின்றனன்' என்று ஓதினர்.

(அ. சி.) இருவர் - அயன், மால். (க)

349. அலைகடல் ஊடறுத் தண்டத்து வானோர்
தலைவன் எனும்பெயர் தான்றலை மேற்கொண்டு
உலகார் அழற்கண் டுள்வீழா தோடி
அலைவாயில் வீழாமல் அஞ்சலென் றானே.

(ப. இ.) ஊழியாகிய அலைகடலின் நடுவாக ஊடறுத்துச் சென்று அண்ட முதல்வன் தானே என்பதனை மேற்கொண்டுணர்த்தினன். உலகெங்கணும் நிறைந்து விளங்கும் தழற் பிழம்பினைக் கண்டு ஓடும் ஏனையாரை அக் கடலின் நடுவுள் நின்று வீழ்ந்து மாளாமல்

1. பெருங்கடன். அப்பர், ஈ. ககக - எ.

அஞ்சல் என்று அருள் செய்தனன். அவன் யார் என்னில் ? அவனே விழுமிய முழுமுதற் சிவபெருமான் என்க. (உ

350. தண்கடல் விட்ட தமரருந் தேவரும்
எண்கடல் சூழேம் பிரானென் றிறைஞ்சுவர்
விண்கடல் செய்தவர் மேலெழுந் தப்புறங்
கண்கடல் செய்யும் கருத்தறி யாரே.

(ப. இ.) சிவபெருமானின் திருவாணையால் விண்ணளவும் நண்ணி எல்லாரையும் அச்சுறுத்திய பெருவெள்ளமாகிய குளிர்ந்த கடலும் அடங்கிற்று. வானவர்களாகிய அமரரும் தேவரும் அளவில்லாத கடல் போலும் அன்பர்தம் காதல் எண்ணங்களால் சூழப்பட்ட இன்பவடிவினராகிய எம்பெருமானே என்று இறைஞ்சுவாராயினர். கடலின் பெருக்கினை விண்ணளவும் வரச் செய்த சிவபெருமான் அதன்மேல் பேரொளியாய் எழுந்தருளினன். அவன் ஆருயிர்கட்குத் திருவடியுணர்வாகிய சிவஞானத்தை அருள்புரிந்தனன். இத்தகைய அவன் திருவுள்ளத்தை யாரும் அறியார். கண்கடல் - கடல்போன்ற சிவஞானம். கருத்து - திருவுள்ளம்.

(ஞ. சி.) எண்கடல் - கடல்போன்ற எண்ணங்கள். விண்கடல் - விண்ணை எட்டும்படியான வெள்ளப் பெருக்கு. கண்கடல் - பெரிதாகிய ஞானக்கண். (கூ)

351. சமைக்கவல் லானைச் சயம்புவென் றேத்தி
அமைக்கவல் லாரிவ் வுலகத்து ளாரே[1]
திகைத்ததெண் ணீரிற் கடலோலி ஓசை
மிகைக்கோள அங்கி மிகாமைவைத் தானே.

(ப. இ.) எல்லாவற்றையும் திருவுள்ளத்தான் சமைக்கவல்லவன் சிவபெருமானே. அவனைத் தானே தன்னருளால் தோன்றியருளும் தனிமுதலாகிய சயம்பு என்பர். சயம்பு - தான்தோன்றி. அச் சிவபெருமானை முன்னை நற்றவத்தாலன்றித் தனி முதலென்றேத்தித் தம் நெஞ்சத் தாமரையில் அமைக்கவல்லார் வேறு யாருளர் ? அனைவரும் கலக்கமெய்தி அஞ்சி ஓடும்படி ஊழிக்காலத்து மிக்கெழும் ஓவா தொலிக்கும் ஓசையோடு கூடிய கடலை ஏனைக் காலத்து மிக்கு எழா திருக்கும்படி அக் கடலின் நடுவாக வடவைத் தீயைச் சிவபெருமான் அமைத்தருளினன். வடவைத்தீ - பெருந்தீ. வடம் - பெரிது. 'ஆழாழி கரையின்றி நிற்க இலையோ' என்பதும் திருவாணையின் சிறப்பேயாகும். 'நீரே அருளாகும் நீருள் ஓடுங்குந்தீச் சீரே சிவபெருமான் தேருங்கால்—பாரேயும், ஆவிகளைக் காக்க அடங்குந்தி ஆணையினால், மேவுமேல் போக்க விரைந்து' என்பதனை நினைவு கூர்க.

(அ. சி.) சமைக்க வல்லான் - ஆக்கி அளித்துத் துடைக்கவல்லான். அமைக்கவல்லார் - மனத்தில் இருத்தித் துதிக்கவல்லார். (ச)

1. என்ன புண்ணியஞ். சம்பந்தர், உ. கoசு - க.

352. பண்பழி செய்வழி பாடுசென் றப்புறங்
கண்பழி யாத கமலத் திருக்கின்ற
நண்பழி யாளனே நாடிச்சென் றச்சிரம்
விண்பழி யாத விருத்தி கொண் டானே.[1]

(ம. இ.) வானவர்கள் தாம்வாழ வாழ்த்தும் பண்பினர். அதனால் அவர்கள் செய்யும் வழிபாடு ஆசைவழிபாடாகும்; அன்புவழிபாடாகாது; ஆதலால் நற்பண்பை அகற்றிய வழிபாடு என்று ஒதப்பட்டது. அத்தகைய வழிபாட்டைச் செய்து கண்ணுக்கு ஒப்பாகப் புகழ்ந்து கூறப்படும் செந்தாமரையில் இருக்கும் நான்முகன் உடனெத்த மாலுடன் நண்பு கொள்ளாது செருக்கால் நண்பைக் கெடுத்தவனுமாகின்றனன். இருவரும் திருவாணை பின்வழிப் படைத்தல் காத்தல்களே முறையே செய்யும் பண்பினர். அதனால் உடனெத்தவராவர். அங்ஙனம் செருக்குக் கொண்ட நான்முகன் தலை ஒன்று அறுக்கப்பட்டது. தலையறுப்ப தென்பது தலைமை யறுப்பதென்பதாகும். அத் தலைமண்டையில் ஏனை விண்ணோரும் செருக்குற்று மாளாது பண்புற்று வாழும் வண்ணம் அவர்தம் குருதிப் பலியினை ஏற்றனன் சிவன்.

(அ. கி.) பண்பழிசெய் வழிபாடு - தகுதி அற்ற வணக்கம். நண்பழியாளன் - அயன். விருத்தி - ஐயம். (இ)

---

# 6. சக்கரப் பேறு

353. மால்போ தக[2]னென்னும் வண்மைக்கிங் காங்காரங்
கால்போதங் கையினே டந்தரச் சக்கர
மேல்போக வேள்ளி மலைஅம ராபதி
பால்போக மேலும் படைத்துடை யானே.

(ப இ.) தூமாயையின்கண் வாழும் முக்குணம் கடந்த அரியும் அயனும் வேறுவர். மூலப்பகுதியிலுறையும் முக்குணம் அடர்ந்த அரியும் அயனும் வேறுவர். அரி அயனே முறையே மால் அயன் எனவுங் கூறுவர். முக்குணம் கடந்த மால் முக்குணம் அடர்ந்த மாலுக்கு முதல்வனுவன். பெயரொற்றுமையால் உலகோர் மயங்குவதன்றி அந்த மாலே மயங்கிச் செருக்குறுகின்றனன். சிவ வழிபாட்டினர் அருளோன் அனந்தன் மணிகண்டன் அம்மை, பொருட்சேய் அரி அயன்தாள் போற்றிச் சிவகுருவாகக் கொண்டு சிவபூசை புரிவர். முக்குணம் அடர்ந்த அம்மால் நம்மைப் போதக ஆரியனுக உலகங் கொள்கின்றது. இத்தகைய வண்மை வேறு யாவர்க்குளது? எனப் பிழைபட நினைத்தனன். இந் நினைப்பால் அம் மாலுக்குப் போக்குவொண்ணாச் செருக்கு மூடிவிட்டது. அச்செருக்குத் தலைக்கு மேலேறி விண்ணிலே பரந்தது. அதனால் அம் மாலின் சக்கரம் தானிருந்த அம் மாலின் கையோடு விண்ணிலே பறந்தது. 'சக்கர நெறிநில்லாதார் கையில் சக்கரம் எவ்வாறு இருக்கும்? சக்கரம் மறைந்த

1. ஆமயந்தீர்த். சு - ஈஈ - கீ.
2. ஆரண. சிவஞான சித்தியார், க. உ - ஈஅ.

தும் திருமாலுக்குச் செருக்கும் மறைந்தது. மால் சிவபெருமானைத் தொழுது வேண்டினன். திருவெள்ளிமலையில் வீற்றிருக்கும் ஆப்பதியாகிய பசுபதி ஏழுலகத்தாருக்கும் நல்வாழ்வு அருளினன். அவ்விடத்து மாலுக்கும் அவனிழந்த சக்கரத்தையருளினன். கால்போது - மேலிட்ட காலத்து. காலுதல்-வெளிவருதல். ஆப்பதி என்பதற்கு ஆனேற்றை ஊர்கின்ற சிவன் எனலும் ஒன்று. நாம் சிவபூசையிற் கொள்ளும் மாலும் அயனும் தூமாயையிலுள்ளவர்.

(ஜ. சி.) போதகன் - குரு ஏழு குருக்களில் ஒருவர் மால். ஏனையோர்:—சதாசிவன் - அநந்தன் — நீலகண்டன் — அம்பிகை — கந்தன் — அயன். (க)

354. சக்கரம் பெற்றுநல் தாமோ தரன்தானும்
சக்கரந் தன்னைத் தரிக்கவ்வாண் ணுமையால்
மிக்கரன் தன்னை விருப்புடன் அர்ச்சிக்கத்
தக்கநற் சத்தியைத் தான்கூறு செய்ததே.

(ப. இ.) சிவபெருமான் திருவருளால் மாலின் கையில் சக்கரம் வந்தமர்ந்தது. அச் சக்கரத்தைத் தாங்கும் வலிமை திருமாலுக்கு இல்லை. அதனால் யாவர்க்கும் மிக்கானகிய தக்க சிவபெருமானை வலிமை வேண்டி மால் அன்புடன் பூசித்தனன். தாங்கும் வலிமையையும் உதவியருளினன் சிவன். அச் சத்தி சிவனின் வேறல்லாத் திருவருளே. தக்க நற்சத்தி—தனக்குரிய வலிமையை. கூறு செய்தது - பகுந்து கொடுத்தது. தாமோதரன்—கடைக்குணம் நிரம்பிய வயிற்றினன். (உ)

355 கூறது வாகக் குறித்துநற் சக்கரங்
கூறது செய்து கொடுத்தனன் மாலுக்குக்
கூறது செய்து கொடுத்தனன் சத்திக்குக்
கூறது செய்து தரித்தனன் கோலமே.[1]

(ப. இ.) சிவபெருமான் தனது ஆற்றலின் கூருகச் சக்கரத்தைப் படைத்தருளினன். கூறு - அமிசம். அச் சக்கரத்தை மாலுக்கு உரிமை செய்து கொடுத்தருளினன் கூறு - பங்கு. தன் திருவருள் ஆற்றலுக்குத் தன்னையே கூறுசெய்தளித் தருளினன் சிவன் அத்திருவருளையே தனக்குப் படைக்கலமும திருவுருவுமாகக் கொண்டருளினன். சிவபெருமான் தன் திருமேனியில் ஒருகூறு திருவருளுக்குக் கொடுத்தருளினன் என்றலும் ஒன்று. கோலம், படை எனக் கூறுதலும் ஒன்று. (கூ)

356. தக்கன்றன் வேள்வி தகர்த்தநல் வீரர்பால்
தக்கன்றன் வேள்வியில் தாமோ தரன்தானுஞ்
சக்கரந் தன்னைச் சசிமுடி மேல்விட
அக்கி உமிழ்ந்தது வாயுக் கரத்திலே.

(ப. இ.) செருக்குற்றுப் புலிவேள்வி செய்த தக்கன் வேள்வியை அழித்தொழித்த வாட்கைவீரர் வீரபத்திரர் என்ப. அவ் வாட்கை

1. உருவருள். சிவஞான சித்தியார், க. உ. கூ.

வீரர் சிவபெருமானின் படையாள் ஆதலின். சிவபெருமானின் அடையாளம் முற்றும் அவருக்கு ஏற்றிக் கூறுவர். தக்கன்வேள்வியில் தலைமையாகச் செருக்குடனிருந்த மால் வாட்கைவீரர்[1] பிறைமுடிமேல் சக்கரத்தினை வீசினன். வாட்கை வீரர் முடியில் பிறை விளங்கியும் அதனைக் கண்டும் தாமோதரனுகிய மாலும் அஞ்சினுனில்லை. அதனைக் சுண்ணுற்ற வாட்கைவீரர்[1] வாயிலிருந்து எழுந்த தெறுமொலியாகிய உங்கார அதட்டுதலைச் செய்தனர். அச் சக்கரம் அடங்கி வலியிழந்து கீழ்வீழ்ந்தது. உங்காரம் - உட்கொலி; அச்சுறுத்தும் தெறலோசை. தாமோதரன் - கடைக் குணமாகிய தாமத குணப்பொருள்கள் நிறைந்த வயிற்றினையுடையவன். வீரபத்திரர் திருமுடிமேல் பிறை காணப்படும் உண்மை சிவபெருமானின் வலையாள் இவர் என்பதை உணர்த்துவதாகும் இவ்வீரபத்திரரால் தக்கன் வேள்விக்களம் மின்றேன்றி மறையும் பொழுதினுள் நன்காட்டுக்களமாக மாறியவுண்மை விளக்கம் ஆளுடைய அடிகளார் ஓதியருளிய திருவுந்தியார்த் திருப்பாட்டு ஐந்து முதல் பதினுறு முடியவுள்ள பன்னிரு திருப்பாடல்களானும் உணர்க.

(அ. சி.) சசிமுடி - சந்திரனைச் சூடிய வீரபத்திரர். (ச)

---

# 7. எலும்பும் கபாலமும்

357. எலும்புங் கபாலமும் ஏந்தி எழுந்த
வலம்பன் மணிமுடி வானவ ராதி
எலும்புங் கபாலமும் ஏந்திய ஞகில்
எலும்புங் கபாலமும் இற்றுமண் ணுமே.

(ப. இ.) விளக்கமிக்க பேரொளி ததும்பும் மணிமுடி தாங்கியவன் சிவபெருமான். அவனே வானவர் முதல்வன். ஆதி முதல்வன். அயன் அரி என்னும் இருவர்தம் எலும்பினையும் மண்டையோட்டினையும் ஏந்தினவன் சிவனே. அவன் அவ்வாறு ஏந்துதல் தான் ஒருவனுமே அழிவில் முழுமுதல் என்பதைக் காட்டுவதாகும். ஏனை மண்ணவர் விண்ணவர் அனைவர்களும் பிறந்திறக்கும் பீடிலா உயிரினங்களே என்பதையும் அதுவே காட்டும். அச் சிவபெருமான் அவ் வெலும்பினையும் மண்டையோட்டினையும் ஏந்தா தொழிந்தால் அவை இற்று மண்ணோடு மண்ணுய்ப் போயழியும். அழியும் மாயா காரியப் பொருள்களும் சிவபெருமான் கையதேல் அழிவினை எய்தாவென்க. இதன் குறிப்பு காரணமாயை என்றும் அழிவினை எய்தாது சிவபெருமான் தாங்குதலில் நிற்கும் என்பதாம்.

(அ.சி.) வலம்...ராதி - ஒளிபொருந்திய அழகிய முடியை உடைய சிவன். (க)

---

1. தக்கன்றன் சிரமொன்றினை. க. கூ - ச.
,, எச்சனினைத். சு. கூக - க.

# 8. அடிமுடி தேடல்

**358.** பிரமனும் மாலும் பிரானேநான் என்னப்
பிரமன்மால் தங்கள்தம் பேதைமை யாலே
பரமன் அனலாய்ப் பரந்துமுன் நிற்க
அரனடி தேடி அரற்றுகின் றாரே.[1]

(ப. இ.) சிற்றுயிரினமாகிய பிரமனும் மாலும் தவப்பேற்றால் முறையே படைத்தல் காத்தல்களாகிய தொழிலைப் புரிகின்றனர். அதுவும் சிவபெருமானின் திருவருளாணையே யாகும். அதனால் அவர்கள் இருவரும் அத்தொழில் மேம்பாடு தங்கள் வன்மையாலாயதென்று அகந்தையும் கெடுக்கும் புல்லறிவால் நீணெஞ்சத்தனர். அதனால் அறன்கடை நின்ற பேதையராயினர். அப் பேதைமைச் செருக்கால் மாலும் நான்முகனும் தனித்தனியே தாந்தாம் முதற்பொருளென்று வழக்கிட்டனர். அவர்தம் பேதைமைக்கிரங்கிய சிவபெருமான் அவர்கள் நடுவில் மண்ணுக்குக் கீழும் விண்ணுக்கு மேலும் இடையிடின்றி ஒன்றாய் முளைத்து வளர்ந்து தோன்றித் திகழும் பேரொளிப் பிழம்பாய் நின்றனன். நிற்க மாலும் அயனும் முறையே அடியும் முடியும் தேடித் தங்கள் முதன்மையை நிலைநாட்ட அரற்றுவாராயினர். வழக்கிடுதல் : வாதாடுதல். (க)

**359.** அடிமுடி காண்பார் அயன்மால் இருவர்
படிகண் டிலர்மீண்டும் பார்மிசைக் கூடி
அடிகண் டிலேன்என் றச்சுதன் சொல்ல
முடிகண்டேன் என்றயன் பொய்ம்மொழிந் தானே.

(ப. இ.) அடிமுடி காணும் பொருட்டு மாலும் அயனும் முயன்றனர். முயன்று இழிவாகுங் கருவிலங்கும் பறவையுமாய்த் தோன்றினர். கருவிலங்கு - பன்றி. பறவை - அன்னம். கருமை : மயக்கும் மாயையின் அறியாமை நிறம். வெண்மை : இயக்கும் மாயையின் அறிவின் நிறம். பன்றி உருவெடுத்த அச்சுதனுகிய மால் அடிதேடப்போயினன். அன்னவுரு வெடுத்த அயன் முடிதேடப் போயினன். இருவரும் ஆற்றலழிந்து துன்புற்றுத் தேடமுடியாது வாடி நிலத்தே மீண்டனர். அச்சுதன் அடிகண்டிலேன் என உண்மை உரைத்தனன். ஆனால் அயனோ முடி கண்டுள்ளேன் என்று படுபொய் யுரைத்து வடுவுற்றனன். நன்றியில் செல்வரினும் கன்றிய புல்லறிவாளர் பொய்ம்மொழிக் கஞ்சாக் கையர் ஆவர்போலும். படிகண்டிலர் - கருதிய வண்ணம் பார்த்திலர். மயக்கும் மாயை - மூலப்பகுதி. இயக்கும் மாயை - தூவரமாயை. (உ)

**360.** ஆமே மூலகுற நின்றஎம் அண்ணலுந்
தாமே மூலகீல் தழற்பிழம் பாய்நிற்கும்
வானே மூலகுறும் மாமணி கண்டனே
நானே அறிந்தேன் அவன்ஆண்மை யாலே.[2]

---

1. பிரம. அ. திருத்தோணோக்கம், ஈஉ.
2. மேவிய. கக. பட்டினத். திருவிடை, மும் - கஈ.

(ப. இ.) ஏழுலகமும் ஒன்றுபோல் பொருந்துமாறு தழற்பிழம்பாய் நின்றருளியவன் எம் அண்ணலாகிய சிவபெருமான். அவன் இயற்கையிலேயே உலகமே உருவமாக நிற்பவன். வானத்துக் கூறப்படும் ஏழுலகங்களிலும் பொருந்தி நிற்கும் திருநீலகண்டத்தை யுடையவனும் சிவனே. அச் சிவபெருமான் அடியேன் அவன் திருவடிக்கண் வைத்த காதலால் என்னை ஆட்கொண்டருளினன். அதனால் அவனருளாலே அவன் திருவடியிணையினை யானறிந்தேன். ஆண்மை - திருவாணை; திருவருள். ஏழுலகம் என்பதற்கு எழுவகைத் தீவுகள் என்றலும் ஒன்று. அவை வருமாறு: நாவல், இறலி, கிரவுஞ்சம், குசை, இலவம், தெங்கு, புட்கரம் என்பன. 'முதலது நாவலந் தீவே யுடைய, திறலியின் தீவே கிரவுஞ்சத் தீவே, குசையின் றீவு யிலவந் தீவே, தெங்கந் தீவே புட்கரத் தீவென், றேத்திய பெருந்தீ வேழிற்கும் பெயரே' (பிங்கலம், சகுஉ.) வளர்தல்: கீழ் மேலும் செல்லச்செல்ல வளர்ந்து கொண்டே போதல். (கூ)

361. ஊனுய் உயிராய் உணர்வுங்கி யாய்முன்னஞ்
சேணுய்வா னேங்கித் திருவுரு வாய்அண்டத்
தாணுவும்[1] ஞாயிறுந் தண்மதி யுங்கடந்து
ஆண்முழு தண்டமு மாகிநின் றானே.

(ப. இ.) கலப்பால் மாயாகாரிய உடம்பாய். அவ்வுடம்பகத்து வினைக்கீடாக வுறையும் உயிராய், அவ்வுயிரின் உணர்வாய் நீக்கமற நின்று காத்தருளுபவன் சிவன். தீயாய் இருப்பவனும் அவனே. முன்னம் அறியாமை மிக்குத் தம்முள் சண்டையிட்ட அயனும் அரியும் தெளியும் வண்ணம் தீப்பிழம்பாய் அண்டமுற நிமிர்ந்து நின்றவனும் சிவனே. அண்டங்களைத் தாங்கும் கற்றூணும் அவனே. ஞாயிற்றையும் திங்களையும் பொருள்தன்மையால் கடந்து நிற்பவனும் சிவனே. உதவுதல் தன்மையால் அனைத்து அண்டங்களையும் ஆளும் அண்ணலாய் நின்றருள்பவனும் சிவனே. இத் திருப்பாட்டு முதல் 'ஊழிவலஞ் செய்' என்னும் திருப்பாட்டு முடியச் 'சர்வோபாதானம்' எனச் சில ஏடுகளிற் காணப்படுவதாகக் கூறுவாருமுளர். தாணு - தூண். (ச)

362. நின்றுன் நிலமுழு தண்டத்துள் நீளியன்[2]
அன்றே யவன்வடி வஞ்சின ராய்ந்தது
சென்றூர் இருவர் திருமுடி மேற்செல
நன்றுங் கழலடி[3] நாடவொண் ணுதே.

(ப. இ.) சிவபெருமான் அவன் பொருள்சேர் புகழைப் புணர்ந்த மெய்யடியார் புகழும்போது நீண்டு கொண்டே செல்வதுபோல் பேரொளிப் பிழம்பாய்த் தோன்றிய ஞான்று நீண்டுகொண்டே சென்றனன். இது சிவ அண்டமுற நீண்ட இயல்பு. இப் பிழம்பினைக் கண்டு அறியாமையாற் கலாய்த்த அயனும் அரியும் அஞ்சினர். அவ்விருவரும் அதனை ஆராய்ந்து சென்றனர். முடியையும் அடியையும் முறையே இருவரும் அளக்கச் சென்றனர். காணவொண்ணுது நாணி மீண்டனர்.

---

1. பொற்றூணைப். அப்பர்: கூ. கூஅ - க.
2. ஈசற்கு. அ. திருக்கோவையார், கடக.
3. சுற்றத்தவ. திருக்குறள், உ.

மேற்செல : ஆராய்ந்து செல்லுந்தோறும் மேலும் மேலும் வளர்ந்து செல்ல. நன்ருங் கழலடி - பிறவிப் பிணிக்கு மருந்தாய நற்ருள். (இ)

363. சேவடி ஏத்துஞ் செறிவுடை வானவர்
மூவடி தாவென் ருனும் முனிவரும்
பாவடி யாலே பதஞ்செய் பிரமனுந்
தாவடி யிட்டுத் தலைப்பெய்து மாறே.

(ப. இ.) எங்கும் நிறைந்து நீக்கமின்றி விளங்கும் சிவபெருமான் திருவடியை ஏத்துகின்ற வானவக் கூட்டத்தாரும், மாவலிபால் வஞ்சனையாகக் குறுகிச் சென்று மூவடி மண்ணிரந்த மாலும், முனிவரும், வேதம் பாடும் நான்முகனும், தேடியலைந்தும் முடிவு காணுது எய்த்தனர். பாவடி - கீதவடிவான வேதம். தாவடியிட்டு - அலைந்து திரிந்தும். தலைப்பு - ஒளிப்பிழம்பின் கீழும் மேலும் ஆகிய முடிவிடம்.

(அ. சி.) செறிவுடை - கூட்டமாகிய. மூவடிதா என்ருன் : வாமனன். பாவடி...செய் - வேதமோதும. தாவடி...மாறே - அடியையும் முடியையும் எய்துமாறு. (சு)

364. தானக் கமலத் திருந்த சதுமுகன்
தானக் கருங்கட லாழித் தலைவனும்
ஊனத்தின் உள்ளே உயிர்போல் உணர்கின்ற
தானப் பெரும்பொருள் தன்மைய தாமே.

(ப. இ.) செந்தாமரையை உறைவிடமாகக் கொண்டு தங்கும் நான்முகனுக்கும், அதுபோல் கருங்கடலே உறைவிடமாகக் கொண்டு தங்கும் மாலுக்கும் ஆழித் தலைவனுகிய உருத்திரனுக்கும், அவரவர்தம் உடம்பினுள் உயிர் உறைவது போல் அவரவருயிர்க்கு உயிராய் உறைதலைச் செய்வதான பெரும்பொருள் சிவபெருமான் ஆவன். அனைவரும் அவன் தன்மையராய் அவன் ஆட்டுவித்தவண்ணம் ஆடும் உயிரினத்தவராவர். கருங்கடல் ஆழித் தலைவன்; கருங்கடல் தலைவன் - அரி. ஆழித் தலைவன் - அரன். (எ)

365. ஆலிங் கனஞ்செய் தெழுந்த பரஞ்சுடர்
மேலிங்ங்ன் வைத்ததோர் மெய்ந்நெறி முன்கண்டு
ஆலிங் கனஞ்செய் துலகம் வலம்வருங்
கோலிங் கமைஞ்சருள் கூடலு மாமே.

(ப. இ.) சிவபெருமான் உயிர்ப்பொருள் உயிரல் பொருள் எல்லாவற்றுடனும் இயற்கை உண்மைப் புணர்ப்பாய் வேறற நிறைந்து நிற்கின்றனன். இந்நிலையைச் சுத்தாத்துவிதம் என்ப. இதனையே ஆலிங்கனம் என்ப. இங்ஙனம் திகழும் அச் சிவன் இயற்கைப் பேரறிவுப் பேரொளிப் பெரும் பொருளாவன். அவன் ஆருயிர் தன் திருவடியைச் சார்தற்பொருட்டுச் செந்நெறியாகிய மெய்ந்நெறியை அமைத்தருளினன். அந்நன்னெறியினைத் திருவருளால் மூனைத்துக் கண்டு தழுவி உயர்ந்தோர் வலம் வருவர். சிவபெருமான் திருவடியைத் தலைக்கூடுதற்குச் சிறந்த செந்தமிழடையாளமாகிய 'சிவயநம' என்னும் திருவைந்தெழுத்து

உண்மையால் மீளா அடிமையாய்க் கூடுதலுமாகும். கோலிங்கம் - சிறந்த அடையாளம்.

(அ. சீ) ஆலிங்கனம் செய்து - கலந்து. மெய்ந்நெறி - சுத்த அத்துவிதம். கோலிங்கம் ஐஞ்சு - பஞ்ச லிங்கங்கள். (அ)

366. வாள்கொடுத் தாணை வழிபட்ட தேவர்கள்
ஆள்கொடுத் தெம்போல் அரணை அறிகிலர்
ஆள்கொடுத் தின்பங் கொடுத்துக்கோ ளாகத்
தாள்கொடுத் தானடி சாரகி லாரே.

(ப.இ.) தாம் வாழ்வான் வானவர்கள் முழுமுதற் சிவனைத் தொழுது போர் வெல்லும் வாளை சிரெனக் கொண்டு வேண்டினர். சிவபெருமானும் 'வேண்டுவார்க்கு வேண்டுவதே ஈயும்' பெருவள்ளலாதலின் அவ்வாறே வாள் கொடுத்தருளினன். அத் தேவர்கள் வாள் கொடுத்த வள்ளலை அந்த அளவில் நிற்நந்து வழிபட்டனர். அவர்கள் நம்மைப்போல் தம்மைச் சிவபெருமானுக்கு அடிமையாகக் கொடுத்து அவன் திருவருளால் அவன் திருவடியை உணர்கிலர். அந் நோக்கத்துடன் அவனை வழிபட்டால் அவன் ஆளாக வேண்டுமென்னும் நல்லெண்ணத்தை நம்பால் எழுப்பியருள்வன். அடிமையானதும் திருவடியின்பத்தைக் கொடுத்து வாழ்வித்தருள்வன். மேலும் நீங்காத் துணை வலியாக அத் திருவடியையே தந்தருள்வன். இத்தகைய சிவபெருமான் திருவடியைச் சாராது வாழ்நாட்களெல்லாம் வீழ்நாளாக்குவர் வானவர். வாள்கொடுத்து என்பதற்கு அறிவு கொடுத்து எனலும் ஒன்று. என்னை? நாளுடனே வாளும் நயந்து சிவனருளல், ஆளுளத்துத் தாளெழுப்பலாம் ஆதலின் என்க. ஆள் கொடுத்தல்-அடிமையாம் எண்ணத்தை எழுப்பல்,

(அ. சீ.) வாள் கொடுத்தான் - அறிவாகிய ஒளியைக் கொடுத்தான். ஆள் கொடுத்து - அடிமைப்பட்டு. கோளாக - வலிமை உண்டாக. (க)

367. ஊழி வலஞ்செய்தங் கோரும் ஒருவற்கு
வாழி சதுமுகன் வந்து வெளிப்படும்
வீழித் தலைநீர் விதித்தது தாவென
ஊழிக் கதிரோன் ஒளியைவென் றானே.

(ப. இ.) பல்லூழி காலம் சிவபெருமானை நல்லறிவுடன் வழிபட்டு வலம் வந்து இடையறாது நாடினன். அங்ஙனம் நாடிய மெய்யன்பினனாகிய ஒருவனுக்குப் படைக்குந் தொழிலை மேற்கொண்டு அருளோன் மெய்க்கண் சிவபெருமான் நான்கு திருமுகங்களுடன் தோன்றியருளினன். அவன் ஆலப்விழுதொத்துக் காணப்படும் திருச்சடையின்கண் விளங்கும் திருவருளாகிய வான்புனலைத் தந்தருள வேண்டுமென்று விண்ணப்பித்தனன். எல்லாவொளிகளையும் வென்று பேரொளியாய்ப் பேரூழிக் கதிரவனும் விளங்கும் சிவபெருமான் அவ்வாறே அருள்புரிந்தனன். அருளோன்மெய் - சதாசிவ தத்துவம். தலைநீர் - தலையில் விளங்கும் அந்தண்மை வாய்ந்த திருவருள.

(அ. சீ.) சதுமுகன் - கர்த்திருசாதாக்கியத்திலுள்ள நான்கு முகங்களை உடைய சிவன். (கo)

# 9. படைப்பு

368. ஆதியோ டந்தம் இலாத பராபரம்
போதம தாகப் புணரும் பராபரை[1]
சோதி யதனிற் பரந்தோன்றத் தோன்றுமார
தீதில் பரையதன் பால்திகழ் நாதமே.

(ப. இ.) தொடக்கமும் ஈறும், பிறப்பும் இறப்பும், எழுவாயும் இறுவாயும் ஆகிய ஆதியோடு அந்தமும் இலாத விழுமிய முழுமுதற் பெரும் பொருள் சிவபெருமான். அச் சிவபெருமானுக்குத் திருவுடலாய்ப் புணரும் பேரறிவுப் பெரும் பொருள் பராபரை எனப்படும். பராபரை என்பதும் பராசத்தி என்பதும் ஒன்றே. அதுவே வனப்பாற்றலெனப்படும். அவ் வனப்பாற்றல் அளவில் பேரொளியாய்த் திகழும். அப் பேரொளியினின்றும் அப்பாலாம் சிவம் தோன்றும். அப்பாலாம் சிவம் துரியாதீத சிவன் எனப்படும். அதனையே பரம் என்பர். அச் சிவன் தோன்றுதற்கு நிலைக்களமாக முதற்கண் ஓசையாகிய நாதம் தோன்றும். பரை-திருவருளாணை. (க)

369. நாதத்தில் விந்துவும் நாதவிந் துக்களில்
தீதற் றகம்வந்த சிவன்சத்தி என்னவே
பேதித்து ஞானங் கிரியை பிறத்தலால்
வாதித்த விச்சையில்[2] வந்தெழும் விந்துவே.

(ப. இ.) மேலோதிய ஓசையாகிய நாதத்தினின்றும் ஒளியாகிய விந்து தோன்றும். ஓசை செவிக்குப் புலனாவது. ஒளி கண்ணுக்குப் புலனாவது. அது வரிவடிவம். நாதவிந்துக்களாகிய இருமெய்களினின்றும் முறையே சிவன் சிவை என்னும் மெய்கள் தோன்றும். சிவன் பால் நின்று பேரறிவும். சிவையாகிய சத்தியினின்று பேராற்றலும் வெளிப்படும். பேரன்பு எனப்படும் இச்சை, என்றும் ஒன்றுபோல் நிற்பதென ஆய்ந்து நிலைநிறுத்தப்பட்டது. அவ் விச்சை விந்துவில் தின்றும் தோன்றும். 'இச்சையில் வந்தெழும் விந்துவே' என்பதில் விந்துவில் இச்சை வந்தெழும் என மாறுக. தீதற்றகம் வந்த என்பதற்கு மலமாசகன்ற அன்பர் உள்ளத்தில் தோன்றிய என்றலும் ஒன்று. (உ)

370. இல்லது சத்தி இடந்தனில் உண்டாகிக்
கல்லோளி போலக் கலந்துள் ளிருந்திடும்
வல்லது ஆக வழிசெய்த அப்பொருள்
சொல்லது சொல்லிடில் தூராதி தூரமே

(ப. இ.) உலகு உடல் உண்பொருள்களாகிய காரியம் தோன்றுதற்கு இடமெனப்படும் இல்லாயுள்ளது மாயை. உள்ளதாகிய அம் மாயை சக்தியால் காரியப்படும். அதனால் அம் மாயையினைச் சத்தியிடந்தனில் உண்டாகி என்றனர். சத்தியும் சிவனும் மணியும் ஒளியும்போலக்

1. சத்திதன். சிவஞான சித்தியார், க. கூ - கூ.
2. ஞானமே. ,, ,, ,, சி.

கலந்துள் இருந்திடும். கல் - மணி : அம் மாயையினை இத்தகைய உறுதிப் பொருள்களாகச் சத்தியின் இடமாக நின்று ஆக்கியருளிய அப்பெரும் பொருள் புகழ்ச்சி மொழிகளுக்கு எட்டாத தொலைவிலுள்ளதாகும். இல்லது - மாயை : அது முதற்பொருளீறு. 'இல்லே எனும் மாயையி லிட்டென்னே' என்பதுங் காண்க. வல்லது - உறுதியானது.

(அ. சி.) இல்லது - மாயை. வல்லது வழி ஆக - மாயை மூலமாக. சொல்லது - புகழ். தூராதி தூரம் - விரிவுடையது. (கூ)

371. தூரத்திற் சோதி தொடர்ந்தொரு சத்தியாய்
ஆர்வத்து நாதம் அணைந்தொரு விந்துவாய்ப்
பாரச் சதாசிவம் பார்முதல் ஐந்துக்கும்
சார்வத்துச் சத்திஓர் சாத்துமா னமே [1]

(ப. இ.) மாற்றம் மனங்கழிய நின்ற, மறையோன் சிவன். அவன் தொலைவில் தோன்றும் சுடர்ச் சோதியாயுள்ளான். அன்பினுல் அவனைத் தொடர்ந்தொரு சத்தி தோன்றிற்று அச் சத்தியின் ஆர்வத்தால் நாதந் தோன்றும். அந் நாதத்தின்பின் விந்து தோன்றும். அதன்பின் அறிவும் ஆற்றலும் ஆகிய சிவம் சத்தி என்னும் இரண்டும் ஒப்ப நிற்கும் நிலையாகிய அருளோன்மெய் சதாசிவம் எனப்படும். பெருமை மிக்க அச் சதாசிவ மெய் அதன்பின் தோன்றும். நிலமுதலாகிய பூதம் ஐந்திற்கும் சார்பிடமாய் நிற்பது சத்தியென்னும் பேரறிவுப் பெரும்பொருள். அச் சத்தியையுடைய பெரும் பொருள் ஒப்பிலாத சிவன் எனப்படும் சாத்து மான் என்க. இதுவரையும் தூமாயையாகிய, விந்துவின் நிலைவேறு பாட்டு நிகழ்ச்சி முறைகளாகும். இம்முறை ஒன்றினின்று ஒன்று தோன்றுவதன்று. வீட்டில் பல அறைகள் தடுக்கப்படுவதுபோல் அமைப்பதாகும். இதனைப் பகுப்பமைப்பு என்ப. இதுவே விருத்தி யென வும் படும். படம் குடிலானுற்போல என்பதும் இது. பாரம் - பெருமை. சாத்து - பொருள்.

(அ. சி.) சத்தி ஓரா வத்து மானும் - ஆராய்ந்தறியப்படாத பரம் பொருளைச் சத்தி ஒக்கும். (சு)

372. மானின்கண் வாளுகி வாயு வளர்ந்திடும்
கானின்கண் நீருங் கலந்து கடினமாய்த்
தேனின்கண் ஐந்துஞ் செறிந்தைந்து பூதமாய்ப் [2]
பூவின்கண் நின்று பொருந்தும் புவனமே [3]

(ப. இ.) மோகினி என்பது தூவாமாயைக்கு ஒரு பெயர். அத் தூவா மாயையில் கலை தோன்றும். அக் கலையினின்று மூலப்பகுதி தோன்றும். இம் மூலப்பகுதிக்கு மான் என்று பெயர். பின் மூலப் பகுதியில் தோன்றும் இறுப்பு மெய்யாகிய புத்தி தத்துவத்திற்கும் மான்

1. சிவஞ்சத்தி. சிவஞான சித்தியார், உ. ச. உ.
2. வருங்குண—சாற்றிய ,, உ. கூ-எ-கஞி.
,, கலையொளி, திருக்குறள், உஎ.
3. சாந்தியா. சிவஞானசித்தியார், அ. க சு

என்று பெயர். இம் மானின்கண் நின்று எழுச்சியாகிய ஆங்காரம் தோன்றும். இவ் வெழுச்சி மூவகைப்படும். அவை உணர்வு உழைப்பு உலகம் என்பன. இவற்றுள் உலக எழுச்சியினின்றும் பூதமுதலாகிய நுண்மை ஐந்தும் தோன்றும். நுண்மை - தன்மாத்திரை. நுண்மையினின்று வான் வளி வளர்ந்து தோன்றும். கானலாகிய தீயும், நீரில் எல்லாங் கலந்து கடினமாக இருக்கும் நிலமும் தோன்றும். முறையே இவற்றின் நிலைக்களமாகிய நுண்மையினை ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் எனக் கூறுப. கானல் என்பது கான் எனச் சடை குறைந்து நின்றது. தேவனுகிய திருவருள் ஆற்றலின்கண் இவ்வைந்தும் கூடி உலகத்திலும் உடலிலும் பூதமாகப் பொருந்தும். பூதம் - பருமையாகத் தோன்றுவது. இவ்வைம் பூதக் கூட்டரவே புவனமாகும். பலவுலகத் தொகுப்பு புவனம் என்ப. புவனங்கள் இருநூற்று இருபத்து தான் கென்ப.

(அ. சி.) மான் - அசுத்த மாயை. (நி)

373. புவனம் படைப்பான் ஒருவன் ஒருத்தி
புவனம் படைப்பார்க்குப் புத்திரர் ஐவர்[1]
புவனம் படைப்பானும் பூமிசை யானுய்ப்
புவனம் படைப்பானப் புண்ணியன் தானே[2].

(ப. இ.) ஒருவன் ஒருத்தியாய் ஓர் உடம்பின்கண்ணே தோற்றுவித்துத் திகழும் சிவபெருமான் புவனம் முழுவதையும் படைப்பவனுவன். பேரறிவும் பேராற்றலும் சீராக ஒருங்கமைந்த இவர்க்கு மக்களாயுள்ளவர் ஐவர். அவ் வைவரும் முறையே அருளோன், ஆண்டான், அரன், அரி, அயன் என்பவராவர். இவ்வைவரும் முறையே சதாசிவன், மாஈசன், உருத்திரன், மால், அயன் எனவும் கூறப்படுவர். புவனத்தைப் படைக்கின்ற செந்தாமரை மேலுறை அயனும் சிவபெருமான் திருவாணை பெற்றவனுதலின் அவனுடன் கலப்பால் சிவன் ஒன்றுயிருப்பதால் அவனையும் சிவபெருமான் என்பர். பூமிசையான் - நான்முகன். நிலவுலகத்தினின்று புண்ணியப் பயனளிக்கும் புண்ணியனுயுள்ள சிவபெருமான் அயனுடன் நின்றும் புவனத்தைப் படைத்தருள்வன். புண்ணியன் - அம்மையோடு அப்பனுய்த் திகழ்ந்து ஆருயிர்கட்கு வழுவில் நலமருளும் முழுமுதற்சிவன்.

(அ. சி.) ஒருவன் ஒருத்தி - சிவம் சத்தி. புத்திரர் ஐவர் - சதாசிவன் - மகேசன் - உருத்திரன் - மால் - அயன். (சு)

374. புண்ணியன் நந்தி பொருந்தி உலகெங்கும்
தண்ணிய மானே வளர்த்திடுஞ் சத்தியுங்
கண்ணியல் பாகக் கலவி முழுதுமாய்
மண்ணியல் பாக மலர்ந்தெழு பூவிலே.[3]

1. வெஞ்சத்தி. சிவஞான சித்தியார், உ. சு - உ.
2. வைத்தானே அப்பர், சு. சகூ - அ.
3. சாற்றிய. சிவஞான சித்தியார், உ. கூ - கஞ்.

(ப. இ.) புண்ணியனாகிய நந்தி என்று ஓதப்பெறும் சிவபெருமான் பொருந்துதலினாலே திருவருளாற்றலாம் சத்தியும் உலகமெங்கணும் தண்ணளியுடன் பொருந்தி நிற்பள். பொருந்தி மாறுகிய உடல்மெய் யினை வளர்த்தருள்வள். கண்ணுதலாகிய திருவுள்ளங் கொண்ட இயல் பினாலே ஐம்பூதம் முதலிய தத்துவங்கள் ஒன்றோடொன்று கலந்து நிலம் நீர் நெருப்பு உயிர் நீள்விசும்பு முதலாகிய உலகங்களாக விரிந்து தோன்றும். இப்பூதங்கள் அகத்தும் புறத்தும் காணப்படும். புறத்துக் காணப்படுவது அண்டம் எனவும், அகத்துக் காணப்படுவது பிண்டம் எனவும் கூறுப. கண்ணுதல் - கருதுதல். உடல்மெய் - ஆன்ம தத்துவம். (எ)

375. நீரகத் தின்பம் பிறக்கும் நெருப்பிடை
காயத்திற் சோதி பிறக்கும்அக் காற்றிடை
ஓர்வுடை நல்லுயிர்ப் பாதம் ஒலிசத்தி
நீரிடை மண்ணின் நிலைப்பிறப் பாமே

(ப. இ.) ஐம்பூதங்களுள் மண்ணானது எல்லாவற்றையும் தாங்கி நிலைப்பிக்கச் செய்யும் தன்மை வாய்ந்தது. அதனுள் மண்ணின் நிலைப் பிறப்பாம் என்றனர். அதன் மேல் விளங்கும் நீரகத்துச் சுவைஇன்பம் தோன்றும். அதன்மேல் நெருப்பினிடத்து ஒளி தோன்றும். அதன் மேல் காற்றினிடத்து உயிர்ப்புப் பிறக்கும். அதன்மேல் வானத்தி னிடத்து ஒலி தோன்றும். காயம்: ஆகாயம்; முதற்குறை, வானம். உயிர்ப்பு - மூச்சு. நல்லுயிர்ப்பு - அனைத்துயிர்க்கும் ஒத்த நன்மைதரும் காற்று. ஓர்வுடை ஒலி - ஆராய்வதற்கும் நினைவுறுதற்கும் துணையாம் ஓசை. ஆதம் - ஒளி: ஆதபம் என்பதன் இடைக்குறை. இத் திருப் பாட்டு ஐம்பூதங்களின் தோற்றமுறை கூறுகின்றது. ஐம்பூதங்களும் ஐந்து தன்மாத்திரைகளினின்றுந் தனித்தனித் தோன்றுவன. ஒரு பூதத்தி னின்று மற்றொரு பூதம் தோன்றுவதன்று. அங்ஙனம் தோன்றுவன வாகச் சொல்லுவது ஏற்றுரையே. ஏற்றுரை - உபசாரம். வானத்தி னின்றும் காற்றுத் தோன்றும் என்பதற்குரிய காரணம் காற்றினிடத்து அதன் இயற்கைப் பண்பாகிய ஊறுமட்டு மன்றிச் செயற்கையாகிய வானத்தின் பண்பாம் ஓசையும் விரவியிருப்பதால் அச் சிறப்பு நோக்கி வானத்தினின்றும் காற்றுத் தோன்றிற்று என்பதாம். இது தலைவி யைச் செவிலி பெற்ற மகளென நற்றாய் நவில்வதை ஒக்கும். நற்றாய் மகளென்றல் நண்ணும் இயல்பாகும், உற்ற செவிலிக்காம் சிறப்பு என் பதை நினைவிற் கொள்க. உண்மையான் நோக்குவார்க்குக் காற்று ஊற்றுத் தன்மாத்திரையினின்றுந் தோன்றும் என்பதே வாய்ப்புடைத் தாம். ஊற்றுத் தன்மாத்திரையில் ஓசைப் பண்பும் விரவியிருக்கும். அங்ஙனம் ஊற்றுத் தன்மாத்திரையில் விரவியிருக்கும் ஓசையோடு சிறப் புற்று நிற்கும் ஊற்றுத் தன்மாத்திரையினை ஆகாயம் எனக் கூறுவர். அவ்வாகாயத்தினின்றுங் காற்றுத் தோன்றும் என்பர். மேலும் வேற்றுப் பண்பிடமாய் விளம்புவரால், தாவில் சிறப்புணர்த்துதற்கு. ஆதலால் அமையும் என்க. இப்படியே மற்றைப் பூதங்களும் தோன்றும் என்ப. இத் திருப்பாட்டில் காணப்படும் உயிர்ப்பு, ஆதம், ஒலி, சத்தி, நிலை என்பன முறையே காற்று, தீ, வானம், நீர், நிலம் என்னும் பூதங்களின் பண்புகளாம். (அ)

1. இரந்தர. சிவஞான சித்தியார், உ. கூ - சூ.

376. உண்டுல கேழும் உமிழ்ந்தான் உடனுகி
அண்டத் தமரர் தலைவனும் ஆதியுங்
கண்டச் சதுமுகக் காரணன் தன்னெடும்
பண்டிவ் வுலகம் படைக்கும் பொருளே.[1]

(ப. இ.) ஏழுலகினையும் ஒருகாலத்து உண்டு உமிழ்ந்தவன் மாயன். அதனால் உலகோர் அவனே மண்ணுண்ட மாயன் என்பர். கண்ணுக்கும் கருத்துக்கும் முறையே தோன்றும் பருவுடல் நுண்ணுடலாகிய உடல் மெய் இருபத்து நான்கினையும் காப்பவன் மாயன். அதனால் அவன் மண்ணுண்ட மாயன் எனப்படுவன். அத்தகைய அரியும், அவனுடனுகி அவனுக்கு மேற்பட்டு நிற்கும் அண்டத்தமரர் தலைவனுகிய அரனும், திருவாணையால் ஆதியாகிய படைத்தல் தொழிலைச் செய்யும் இயற்றுதற் காரணமாகிய அயனும் பல பொருள்களுடன் ஐந்தொழிற்கும் காரணனுகிய முழுமுதற் கடவுளாம் சிவபெருமானால் முன்னே படைக்கப்பட்டவராவர். இச் சிவன் நாலாம் நிலைக்கண் உள்ள சிவன் என்ப. நாலாம் நிலை - துரியநிலை ; சதுரன். ஆதி - காரணம். (கு)

377. ஓங்கு பெருங்கடல் உள்ளுறு வாளெடும்[2]
பாங்கார் கயிலைப் பராபரன் தானும்
வீங்குங் கமல மலர்மிசை மேலயன்[3]
ஆங்குயிர் வைக்கும் அதுவுணர்ந் தானே.

(ப. இ.) உயர்ந்த பெரிய கடல் மேல் தங்கியிருக்கும் அரியுடனும், பெரிய செந்தாமரை மலர்மேலுறையும் அயனுடனும், முறையே காத்தல் படைத்தல்களாகிய தொழிலினை அவர்கள் வாயிலாக இயற்றவுன்னினன் சிவன். சிறந்த திருக்கயிலையின்கண் எழுந்தருளியுள்ள 'யாவர்க்கும் மேலாம் அளவிலாச் சீருடையா'னுகிய அவன் அவர்கள்பால் திருவாணையினை வைத்தருளத் திருவுள்ளங் கொண்டருளினன். உயிர் - திருவாணை. உணர்ந்தான் - திருவுள்ளங்கொண்டான். (கo)

378. காரணன் அன்பிற் கலந்தெங்கும் நின்றவன்
நாரணன் நின்ற நடுவுட லாய்நிற்கும்[4]
பாரணன் அன்பிற் பதஞ்செய்யும் நான்முகன்
ஆரண மாய்உல காயமர்ந் தானே.[5]

(ப. இ.) அனைத்துயிர்க்கும் அனைத்துடற்கும் அனைத்துணர்விற்கும் இனமுதற் காரணனுயுள்ளவன் சிவபெருமான். அன்பாகிய திருவருளுடன் கலந்து எங்கும் நீக்கமற நின்றவன் சிவன். நாரணனுகிய திருமாலின் நடுவுடல் என்று சொல்லப்படும் நெஞ்சிடங்கொண்டானும்

1. தாங்கரும். சம்பந்தர், கூ. ககக - ச.
2. பேயாயின. ,, க. கநி - கூ.
3. எண்ணுர்தரு. ,, க. கஙூ - டி.
4. பாராழி சம்பந்தர், கூ. டிச - க
5. அவையே. சிவஞான போதம், உ.

சிவனே. அனைத்துயிர்களாலும் அன்பினால் ஓதப்படும் ஒண்பொருளும் அவனே. நான்முகன் நிலையினைத் தந்தருள்பவனும் அவனே. ஆருயிர்களை அறவழியில் நடத்தும் ஆரணமாகிய மறையாய் விளங்குபவனும் அவனே. உலகமே உருவமாகக் கொண்டு திகழ்பவனும் சிவபெருமானே. ஆரரணம்: ஆர் + அரணம் = ஆரரணம்; ஆரணம் என மரீஇயிற்று; ஒழுக்கக்காவலாயுள்ளது. உடல்நடு - நெஞ்சம். பாரணன் - வழுத்தப் படுவோனுகிய சிவன் - பதஞ்செய்வன் - நிலையை அளிப்பன். ஆரணம் - சொல்லுலகு. (கக)

379. பயன்எளி தாம்பரு மாமணி செய்ய
நயன்எளி தாகிய நம்பன்ஒன் றுண்டு
அயன்ஒளி யாயிருந் தங்கே படைக்கும்
பயனேளி தாம்வய ணங்தெளிந் தேனே.

(ப. இ.) செம்மையாகிய திருவடியின்பத்தினை எளிதாக அளித்தருளும் தம்பன் சிவபெருமான். அவனே மெய்யன்பர்கட்கு எல்லாப் பயனையும் யாண்டும் எளிதாகத் தந்தருளுவன். அதனால் விலைவரம்பில்லாப் பெரிய சிறந்த செம்மணியாக வுள்ளவனும் அவன் ஒருவனே. அவனுடைய அறிவிற்கு அறிவாய்க் கலந்து நின்று படைப்புத் தொழிலை நடப்பித்தருள்பவனும் அவனே. இவ்வாறாக எல்லாப் பயனையும் எளிதில் ஈந்தருளுவதற்குக் காரணம் சிவபெருமானின் பேரருளுடைமையே எனத் தெளிந்தேன். சிவபெருமான் ஆருயிர்களுள் சிலவற்றைத் தகுதியுடையனவாக ஆக்கி, அவற்றைக்கொண்டு ஏனை உயிர்களுக்கு வேண்டும் துணை புரிவிக்கின்றனன். இம்முறைதான் அவன் உன்முகமாய் நின்று செய்தருள்வதாகும். செம்மணி - மாணிக்கம். நயன் = இன்பம். (கஉ)

380. போக்கும் வரவும்[1] புனிதன் அருள்புரிந்
தாக்கமுஞ் சிந்தைய தாகின்ற காலத்து
மேக்கு மிகநின்ற எட்டுத் திசையோடுந்
தாக்குங் கலக்குந் தயாபரன்[2] தானே.

(ப. இ.) அனைத்தையும் ஒடுக்கும் அரனே முழுமுதலாகலின் போக்காகிய பேரொடுக்கத்தைச் செய்பவனும் சிவபெருமான். ஆண்டவன் அருளால் மீண்டும் உலகுள ஆதலின் வரவாகிய உலகப் புதுப்படைப்பினைச் செய்தருள்பவனும் அவனே. அவ்வுயிர் உலகங்கட்கு ஆக்கமாகிய காத்தலைச் செய்தருள்பவனும் சிவனே. இவையனைத்தும் சிந்தையாகிய திருவுள்ளக் குறிப்பான் நிகழ்வன. அக் காலத்துச் சிறப்பு மிகும்படியாக நின்ற எட்டுத் திசையோடும் சிவபெருமான் வேறறக் கலந்து நின்றும் தொடக்குருன். அவன் அங்ஙனம் கலந்து நிற்பதற்குக் காரணம் அவனது எல்லையில்லாத பேரருளாகிய தயா என்க போக்கு - அந்தம்; பேரொடுக்கம். வரவு - ஆதி; மீண்டுலகப் படைப்பு. ஆக்கம் - காப்பு, மேக்கு - உயர்வு; சிறப்பு. (கங)

1. அவையே. சிவஞானபோதம், உ.
2. குலங்கொடுத்துக். கூ. உ0 - கூ.
,, நினந்திருத்துஞ். கூ. ச0 - கூ.

381. நின்றுயி ராக்கு நிமலன்என் ஞருயிர்
ஒன்றுயி ராக்கும் அளவை உடலுற
முன்துய ராக்கும் உடற்குந் துணையதா
நன்றுயிர்ப் பானே நடுவுநின் ருனே.[1]

(ப. இ) உயிர்க்கு உயிராய் நின்று எல்லாவற்றையும் இயைந்து இயக்கும் சிவபெருமான் இயல்பாகவே பாசங்களினின்றும் நீங்கியவன். அவனே என் ஆருயிராக உள்ளான். ஆருயிர்களை அன்பு செய்தற்குக் கருவியாகிய உடலுடன் ஒன்றும்படி பொருத்துபவனும் அவனே. அக் காலத்து அவ்வுயிர்கள் முன் செய்துகொண்ட வினைகளிடாகப் 'பேறு, இழவு, இன்பம், பிணி, மூப்புச் சாக்காடு' என்னும் ஆறும் அவ்வுயிர் களுக்குக் கருவினுள் அமையப் படைத்தருள்வன். இவையே அவ்வுயிர் களைத் துன்புறுத்தும் உடலுக்குத் துணையாவன. அச் சிவபெருமான் ஆருயிர்களின் 'உயிர்ப்பாய்ப் புறம்போந்து புக்கு' நின்றருள்வன். அவன் அனைத்திற்கும் காவலாய் நடுவு நின்றருளினன். உயிர்ப்பான் - உயிர் மூச்சாய் விளங்குவான்.

(அ. சி.) ஒன்று...உடலுற - உயிரை உடலோடு சேர்க்கும்போது. முன் துயராக்கும் உடற்கு - ஊழின்படி படைக்கும் உடலுளி. (கச)

382. ஆகின்ற தன்மையில் அக்கணி கோன்றையன்
வேகின்ற செம்போனின் மேலணி மேனியன்
போகின்ற சீவன் புகுந்துட லாய்உளன்
ஆகின்ற தன்மைசெய் ஆண்டகை யானே.[2]

(ப. இ.) சொல்லுலகும் பொருளுலகும் ஆகிய அனைத்தும் சிவ பெருமான் திருவருளால் மீண்டும் தோன்றும். அக் காலத்து அவன் சிவமணியும் கொன்றை மாலையும் அணிந்தவனுய்த் திகழ்வன். அவன் திருமேனி புடமிட்டு எடுத்த-செவ்விப் பொன்போலும் மிக்க அழகு வாய்ந் தது. பேரொடுக்கக் காலத்து உலகினையும் உடம்பினையும் ஒருங்கு நீங்கிச் செல்லும் ஆவிகளுக்கு நிலைக்களமாகிய உடலாகவுள்ளவனும் சிவபெரு மானே எக் காலத்தும் யாண்டும் ஆருயிர்கட்கு ஏர்மிக்க சீர்சிறப்புச் செய்வித்தருளும் ஆளும் தன்மை வாய்ந்த அண்ணலும் சிவபெருமானே. ஆகின்ற தன்மையில் - உலகம் உண்டாதற் பொருட்டு. அக்கு - சிவமணி; உருத்திராக்கம்; எலும்பெனலுமாம். மேலணி - மேலான அழகிய. (கஇ)

383. ஒருவன் ஒருத்தி விளையாடல் உற்றுர்
இருவர் விளையாட்டும் எல்லாம் விளக்கும்[3]
பருவங்கள் தோறும் பயன்பல வான
திருவொன்றிற் செய்கை செகமுற்று மாமே.

1. என்னி அப்பர், தி. உக - க.
2. அழிப்பிளைப். சிவஞானசித்தியார், க. உ - கஏ.
3. ஏற்றவிவை. சிவப்பிரகாசம், க. கூ.
,, சத்தியும். சிவஞான சித்தியார், க. கூ - கo.

(ப. இ.) ஒருவன் ஒருத்தியாகிய சிவபெருமானும் சிவையும் ஆருயிர்கள் உய்யும் பொருட்டுக் 'காத்தும் படைத்தும் கரந்தும் வினையாடு, தலாகிய திருவருளைப் புரிவர் வினையாடுதல் - தற்பயன் கருதாது பிறர் பயன் நாடி எளிதாகவும் இனிதாகவும், விழைவுடனும், தொடக்குணுதும், பகையாதும் புரியும் வெற்றிச் செயல். இவ் வினையாட்டினை அருளிப் பாடு என்று கூறுதலே அமைவுடைத்து. இவ்விருவர் அருளிப் பாட்டினால் பருவங்கள் தோறும் பயன் பலவாக வினையும் அனைத்தும் நிகழ்வனவாகும். திருவாகிய நடப்பாற்றல் மாயையுடன் திருவுள்ளம் ஒன்றுதலாகிய உன்முகத்தைச் செய்தருளின் உலகமெலாம் தோன்றி நின்று நிகழும் என்க.

(அ. சி.) திரு ஒன்றில் - சத்தி சிவத்தோடும் கூடில். (கசு)

384. புகுந்தறி வான்புவ னபதி அண்ணல்
புகுந்தறி வான்புரி சககரத் தண்ணல்
புகுந்தறி வான்மலர் மேலுறை புத்தேள்
புகுந்தறி யும்முடிக் காகிநின் றாரே.

(ப. இ.) புவனபதி அண்ணலாகிய அரனிடமாகச் சிவபெருமான் உயிர்க்கு உயிராய்ப் புகுந்து நின்று அவன் தொழிலை உணர்த்தியும் உணர்ந்தும் அருள்வன். அதுபோல் சக்கரத் தண்ணலாகிய அரியினிடமாக நின்றும் அருள்வன். அதுபோல் செந்தாமரைமேல் உறைவானாகிய அயனிடத்தும் அவ்வாறே நின்றருள்வன். இம் முத்திறத்தோரும் புகுந்தறிந்து முடிப்பிக்கும் சிவபெருமானின் முடித்தலாகிய நிறைவேற்றுதற்குக் கருவியாகி நின்றனர். புவனபதி - உலக முதல்வியின் முதல்வன் என்றலுமாம்.

(அ. சி.) புவனபதி அண்ணல் - உருத்திரன். உழக்கு - அளவு கருவி (கள)

385. ஆணவச் சத்தியும் ஆம்அதில் ஐவருங்
காரிய காரண ஈசர் கடைமுறை
பேணிய ஐந்தொழி லால்விந்து விற்பிறந்து
ஆணவம் நீங்கா தவரென லாகுமே.

(ப. இ.) ஆணவ ஆற்றல் அகன்றாலும் பயிற்சி வயத்தான் ஏற்படும் வாசனையாகிய பசையாற்றலையே ஆணவச் சத்தி என்றனர். அப் பசையாற்றலகலத் தூமாயையில் தோன்றும் நிலைக்களம் ஐந்தாகும். அவற்றின்கண் வாழும் உயர்ந்த உயிரினத்தவரும் ஐவராவர் இவர்களை இயைந்தியக்கும் காரணக் கடவுளரும் ஐவராவர். இவ்விருவகையினரையும் முறையே உயிர்ப்பால் உடையான்பால் எனக் கூறுவர். உயிர்ப்பால்-அணுபக்கம், உடையான்பால் - சம்புபக்கம். இவ்வைவருள் அருளோனாகிய சதாசிவ நிலையிலுள்ள உயிர்ப்பாலார், நுகர்வுப் பசையுடையர், நுகர்வுப் பசை - போகவாசனை. அதன்பின் ஆண்டான் மெய்யாகிய ஈசுரதத்துவத்து ஆட்டுதற் பசையாகிய அதிகார மலவாசனையுடைய உயிர்ப்பாலார் உறைவர். ஆசான் மெய்யாகிய சுத்தவித்தியா தத்துவத்து மலவாசனையுடையராய்க் கீழுள்ள குணதத்துவத்திருந்து திரு

1- சிவஞ்சத்தி. சிவஞானசித்தியார், உ. சு. கு.

வாணவழி படைத்தல், காத்தல், துடைத்தல்களைப் புரியும் அயன் அரி அரன் வானவர்கோன் முதலாயினரைத் தூண்டித் தொழிற்படுத்தும் அரன் அரி அயன் வேந்தன் முதலியோராகிய உயிர்ப்பாலார் உறைவர். இந் நிலைகளனைத்தும் முழுமுதற் சிவபெருமான் புரிந்தருளும் ஐந் தொழிலால் தூமாயையாகிய விந்துவினின்றும் அமைப்புமுறைப் பகுப்பாம் விருத்தியாய்த் தோன்றும். இவர்களனைவரும் மலப்பசை யுடையவரே. அக் கருத்தால் ஆணவம் நீங்காதவரென்றனர். அமைப்பு முறைப் பகுப்பு - விருத்தி ; பகுப்பமைப்பு.

(அ. சீ.) ஆணவ...ஐவர் - ஆணவமலம் ஒன்றுடைய அணுபட்ச சதாசிவராதி ஐவர். காரிய காரண ஈசர் - அணுபட்ச சம்புபட்சத்தார். விந்து - சுத்த மாயை. (கஅ)

386. உற்றமுப் பாலொன்று மாயாள் உதயமா
மற்றைய மூன்று மாயோ தயம்விந்து
பெற்றவன் நாதம் பரையிற் பிறத்தலால்
துற்ற பரசிவன் தோல்வினை யாட்டிதே.

(ப. இ.) அருஞ்சைவர் தத்துவம் முப்பத்தாறனுள் நிலமுதல் மாயையீறுகிய தத்துவம் முப்பத்தொன்று இம் முப்பத்தொன்றும் தூவாமாயை என்று சொல்லப்படும். இக் கருத்தினுக்குப் பாடம் 'முப்பா லைஞ்று' என்றிருத்தல் வேண்டும். அங்ஙனம் கொண்டால், மற்றை மூன்றுகிய ஆசான்மெய் ஆண்டான்மெய் அருளோன்மெய் என்னும் மூன்றும் தூமாயையின் விளக்கங்களாகும். அதன்மேல் விந்து. இவ் விந்து நாதத்தில் தோன்றும். நாதம் பரைநிறைவில் காரணமாயையில் தோன்றும். இவை அனைத்தும் சிவபெருமான் பரையில் பொருந்துவ தால் தோன்றுவன. இனி முப்பால் படைத்தல் காத்தல் துடைத்தல் ஆகிய தொழிலுக்குரிய முப் பண்புகளென்றலும் ஒன்று. இம் முப் பண்பு கள் மூலப்பகுதியில் தோன்றுவன. இவை அமைதி ஆட்சி அழுந்தல் எனக் கூறுப. இவற்றை முறையே சத்துவம் இராசதம் தாமதம் என்ப. இம் மாயையின் குணம் காரியக் கடவுளர்க்கு உள்ளன. உணர்த்து மெய், உணர்வு மெய் உடன்மெய் ஆகிய மூன்றும் காரண மாயையில் தோன்றுவன. இம் மூன்றும் முறையே விந்து மோகினி மான் என்று சொல்லப்படும். விந்து - தூமாயை. மோகினி - தூவாமாயை. மான் - மூலப்பகுதி. விந்து நாதத்தில் தோன்றும். நாதம் திருவருள் நிறைவில் காரண மாயையில் தோன்றும். இவையனைத்தும் நீக்கமறக் கலந்து வேறற நிற்கும் பரசிவத்தின் தொன்மைத் திருவிளையாட்டென்ப. காரியக் கடவுளர் உயிர்ப் பகுதியினர். பரையில் - திருவருளாணை இயைந்தியக்கலால். (கக)

387. ஆகாய மாதி சதாசிவ ராதியென்[1]
போகாத சத்தியுட் போந்துடன் போந்தனர்
மாகாய ஈசன் அரன்மால் பிரமனும்
ஆகாயம் பூமி காண அளித்தலே.

1 குறிகள்வச. சிவஞான சித்தியார், உ. கூ - கஅ.

(ப. இ.) வான் வளி தீ நீர் நிலம் என்னும் ஐம்பூதங்களும், அவற்றை முறையே இயைந்தியக்கும் கண்காணித் தெய்வங்கள் அருளோன், ஆண்டான், அரன், அரி, அயன் என்னும் ஐவரும் தோற்றக் கேடில்லாத திருவருளினுற்றலுடன் போந்தனர். இத் தோற்றத்தை அருள் வெளியாகிய மாகாயத்தில் தோன்றியதென்ப. அருளோன் ஆண்டான் அரன் அரி அயன் என்னும் இவர்களால் நாம் காணும் பருமையான வான்முதல் ஐந்தும் தோன்றின. அருளோன் - சதாசிவன். ஆண்டான் - ஈசுரன்.

(அ. சி.) காண அளித்தல்-புலனுக்குத் தோன்றுமாறு உண்டாக்கல். (உ0)

388. அளியார் முக்கோணம் வயிந்தவந் தன்னில்
அளியார் திரிபுரை யாம்அவள் தானே
அளியார் சதாசிவ மாகி அமைவாள்
அளியார் கருமங்கள் ஐந்துசெய் வாளே.[1]

(ப. இ.) தூமாயையின்கண் திருவருள் நிலைக்களமாம் முக்கோணம் தோன்றும். அதன்கண் வீற்றிருப்பவள் திரிபுரை என்று சொல்லப்படுந் திருவருளம்மை. அவள் அருளோனுகிய சதாசிவத்திற்கு உடலாய் அமைவாள். அவள் படைத்தல் காத்தல் துடைத்தல் மறைத்தல் அருளல் என்னும் ஐந்தொழிலையும் புரிவள். அவ்வைந்தொழிலும் அருளால் புரியப்படுவனவே.

(அ. சி.) அளி - கருணை. முக்கோணம் வயிந்தவம் - முக்கோணச் சக்கரத்தில் உள்ள பீஜ எழுத்து. (உக)

389. வாரணி கொங்கை மனேன்மணி மங்கலி
காரணி காரிய மாகக் கலந்தவள்
வாரணி ஆரணி வானவர் மோகினி
பூரணி போதாதி போதமு மாமே.[2]

(ப. இ.) தன் கண்ணை மறைக்கும் தன்மை வாய்ந்த கச்சுப்பூண்டு விளங்கும் திருவருள் அருளோன் நிலையில் மனேன்மணி எனப்படுவள். சிவன் நிலையில் மங்கலி எனப்படுவள். மங்கலம் : மாண்கலம் என்னும் சொல்லின் மரூஉ. மாண்கலம் பூட்டுவாரும் காப்பாரும் நலக்குரியாராவர். மாண்கலம் பூண்பார் நல்லாராவர். நல்லார் சிவஞானமுடையார். திருவருளம்மையே அனேத்திற்கும் வினேமுதற் காரணியாவள். காரியப் பொருள்களிற் கலந்து இயக்கலால் கலந்தவளும் ஆவள். இது படைத்தல். வாரணி - காத்தலைப் புரிபவள் ஆரணி - துடைத்தலைப் புரியும் காளி. வானவர் மோகினி - மறைத்தலைப் புரியும் ஆதி. பூரணி - அருள்தலைப் புரியும் திருவருள். போதம் - ஆருயிரின் சிற்றறிவினைப் புணர்ந்தியக்கும் அறிவுத் திருவருள். அதிபோதம்-இயற்கைப் பேரறிவுப் பெரும் பொருள். இங்ஙனம் எல்லாமாய் நிற்பவள் திருவருளம்மை. போதாதி போதம். போதம்+அதிபோதம். போதம் - சிற்றறிவு. அதிபோதம் - பேரறிவு. (உஉ)

1. படைப்பாதித். சிவஞானசித்தியார், க. உ - ங.
2. சத்தியாய் - சிவஞான சித்தியார், உ. ச - ஙு.

**390.** நின்றது தானுய் நிறைந்த மகேசுரன்
சென்றங் கியங்கும் அரன்திரு மாலவன்
மன்றது செய்யும் மலர்மிசை மேலயன்
என்றிவ ராக இசைந்திருந் தானே.[1]

(ப. இ.) திருவருளுடன் தானுய் நின்றுநிறைந்த ஆண்டானும், திருவாணைவழி இயக்க இயங்கும் அரன் அரி அயன் என்னும் மூவரும் கலப்பால் சிவபெருமானே யாவர். திருவினைப் பெருவாழ்வெனக் கொண்டு விளங்குபவன் திருமால். மணம் கமழும் செந்தாமரை மேலுறைபவன் திசைமுகனுகிய அயன். இசைந்திருத்தல்-திருவருளால் பொருந்தியிருத்தல். (உக)

**391.** ஒருவனு மேஉல கேழும் படைத்தான்
ஒருவனு மேஉல கேழும் அளித்தான்
ஒருவனு மேஉல கேழும் துடைத்தான்
ஒருவனு மேஉல கோடுயிர் தானே.

(ப. இ.) ஒப்பில்லாத விழுமிய முழுமுதற் சிவபெருமானுகிய ஒருவனே உலகங்கள் ஏழினையும் படைத்தருளினன். அவனே காத்தல் துடைத்தல் முதலியவற்றையும் புரிந்தருளினன். அவனே கலப்பினுல் உலகமாய் உயிராய்த் திகழ்கின்றனன். உயிரினங்களாகிய அரன் அரி அயன் என்னும் மூவரும் சிவபெருமான் திருவாணை பெற்றுத் தத்தம் தொழில்களை இயற்றுவோராதலின் ஏவுதற் கருத்தாவாகிய சிவபெருமானுலேயே அவைகளும் செய்யப்படுவன. படைத்தல் காத்தல் துடைத்தல் களாகிய முத்தொழிலையும் முழுமுதற் சிவன் திருவுள்ளமாகிய திணைப் பளவானே செய்தருள்வன். அம்மட்டோ? உயிரின் வேண்டுகோளை ஏற்று அவ்வுயிர்களைக் கொண்டும் புரிவித்தருள்வன். இஃதன்றே விழுமிய கடவுட்டன்மை என்பது! நினைப்பு - கண்ணுதல். (உச)

**392.** சேந்தா மரைவண்ணன் தீவண்ணன் எம்இறை
மைந்தார் முகில்வண்ணன் மாயஞ்செய் பாசத்தும்
கோந்தார் குழலியர் கூடிய கூட்டத்தும்
அந்தார் பிறவி அறுத்துநின் ருனே.

(ப. இ.) எம் இறையாகிய சிவபெருமான் திருவடித் தோற்றத்தால் செந்தாமரை வண்ணமும், திருவடியுணர்வால் தீவண்ணமும் பொருந்தி யுள்ளவன். வலிமை மிக்க முகில் வண்ணனுகிய மாயன் வினைக் கூடாகச் செய்யும் மயக்க ஆசையால் மணங்கமழும் பூங்கொத்து நிறைந்த மாலை சூடிய கூந்தலையுடைய பெண்களும் ஆடவரும் கூடிய கூட்டத்து இருள் நீங்கா ஆருயிர்கட்குப் பிறவி வந்து எய்தும். அப் பிறவியினை நற்றவத்தால் அறுத்து அருள் புரிபவன் சிவபெருமான். பிறப்பறுத்தலும் சிறப்புறுத்தலும் சிவபெருமான் ஒருவனுக்கே உரிய ஒப்பில் திருவருட் செயலாகும். அந்தார் : அந்தம் + ஆர், என்பது அந்தார் என நின்றது. அந்தம் - இருள். ஆர் - நிறைந்த. (உஞ)

1. எண்ணில. சிவஞான போதம். சு. க - சு.

393. தேடுந் திசைஎட்டுஞ் சீவன் உடல்உயிர்
கூடும் பிறவிக் குணஞ்செய்த மாநந்தி
ஊடு மவர்தம தள்ளத்தின் உள்நின்று[1]
நாடும் வழக்கமும் நான்அறிந் தேனே.

(ப. இ.) எட்டுத் திசைகளிலும் வாழ்வின் பொருட்டு ஆருயிர்கள் உடலே நாடுகின்றன. அந் நாட்டத்தை வினைக்கீடாக உடலோடு கூட்டி நிறைவேற்றியருள்பவன் மாநந்தியாகிய சிவபெருமான். குணஞ்செய்தல் என்பது அவ்வுயிர்கள் வேண்டியதையே அளித்து நலம்புரிதல். பிறவி எடுத்தவுயிர்கள் சிவனே அடைய வேண்டிய ஒழுக்க நெறியில் நில்லாது ஊடுதலாகிய மாறுபாட்டைப் புரிகின்றன. அம் மாறுபாட்டைப் புரியும் அவ்வுயிர்களின் உள்ளத்துள் மறைந்து நின்று அதனை ஆராயும் முறைமையினையும் மேற்கொண்டுள்ளான் சிவன். அவனருளால் அதனையும் அறிந்துள்ளேன். கூடும் குணம் - கூடும் தன்மை என்றலும் ஒன்று. நாடும் - நாடச் செய்யும் என்றலும் ஒன்று. இதற்குப் பிறவினை தன்வினையாய் நின்றதென்க. (உசு)

394. ஓராய மேஉல கேழும் படைப்பதும்
ஓராய மேஉல கேழும் அளிப்பதும்
ஓராய மேஉல கேழும் துடைப்பதும்
ஓராய மேஉல கோடுயிர் தானே.[2]

(ப. இ.) சிவனும் சிவையும் கூடும் கூட்டத்தாலேயே உலகங்கள் காரியப்படுகின்றன. உடலோடு உயிர் கூடி வாழ்கின்றன. சிவனும் சிவையும் ஒன்றே இருநிலைப்பட்டுக் கூடி நிற்றலின் ஓராயம் என்றனர். ஓராயம் ஒப்பில்லாத கூட்டம். இதனை அதுதானுதல் என்னும் தாதான்மியம் என்ப. அவ்வாறே சிவனும் சிவையும் கூடியே ஓராயத்தால் உலகம் ஏழினையும் காத்தருள்கின்றனன். அது போல் துடைத்தும் அருள்கின்றனன். அதுபோல் உலகுடனும் உயிருடனும் கலந்து வேறற நின்றியக்குவதும் ஓராயமேயாம். உலகோடுயிர் தானே : உலகுயிர்களை இயைந்தியக்கும் சிவனே.

(அ. சி.) ஓராயம் - சிவமும் சத்தியும் கூடிய கூட்டம். (உஎ)

395. நாதன் ஒருவனும் நல்ல இருவருங்
கோது குலத்தொடுங் கூட்டிக் குழைத்தனர்
ஏது பணியேன் றிசையும் இருவருக்
காதி இவனே அருளுகின் றானே.

(ப. இ.) எல்லாரானும் நத்தப்படும் முதன்மையுடையவன் நாதன். அவன் ஒருவனுகிய சிவபெருமானே ஆவன். நன்மைக்குரிய அரியும் அயனும் ஆகிய இருவரும் குற்றம் பொருந்திய தூவாமாயை ஆக்கப்பாடு

1. விள்ளத்தா. அப்பர், சு. எசு - எ.
,, வஞ்ச. திருக்குறள், உஎக.
2. சத்தியுஞ். சிவஞானசித்தியார், க. கூ - கக.

களாகிய முப்பத்தொரு தத்துவங்களுடனும் கூட்டிக் குழைக்கப்பட்ட உடம்பினையுடையர். நிலமுதல் அசுத்தமாயை ஈறுகிய தத்துவங்கள் மூப்பத்தொன்றென்ப. அவ்விருவரும் அடியேங்கட்குக் கட்டளையிடும் பணி ஏதென்று சிவபெருமானிடத்து இரந்து பின்னிற்பர். ஆதியாகிய நடப்பாற்றலோடு கூடிய சிவபெருமான் அவ்விருவர் வேண்டுகோளையும் ஏற்றருளி அவர் செய்ய வேண்டிய காத்தல் படைத்தல்களை முறையே அவர்கட்கு அருள்புரிவன். (உஅ)

396. அப்பரி சேண்பத்து நான்கு நூ றுயிரம்[1]
மெய்ப்பரி செய்தி விரிந்துயி ராய்நிற்கும்
போய்ப்பரி செய்திப் புகலும் மனிதர்கட்
கிப்பரி சேஇருள் மூடிநின் றனே.[2]

(ப. இ.) சிவபெருமான் அருளிய திருவாணையினால் அயன் நால்வகைத் தோற்றத்து ஏழ்வகைப் பிறப்பினுள் எண்பத்து நான்கு நூறுயிர வேறுபாட்டோடு கூடிய உடம்புகளை ஆருயிர்கட்குப் படைத்தளித்தனன். சிவபெருமான் அம்மையப்பராக விளங்கும் தொன்மை மெய்ப்பரிசினால் ஆருயிர்கள் இங்ஙனம் விரிந்து நின்றன. இவ்வுண்மையினை யுணராது பாழ்ங்கோளராகிய நாத்திகர்கள் இப் படைப்பினைப் பொய்த்தன்மை என்று புகல்வர். சிவபெருமான் அவர் தம் ஆணவ ஆற்றல் தொழிற்பட்டு அகலும் பொருட்டு அவர்களை அவ் வாணவ வல்லிருள் மூடுதலிலேயே வைத்து நின்றனன். (உக)

397. ஆதித்தன் சந்திரன் அங்கிஎண் பாலர்கள்
போதித்த வாஞெலி போங்கிய நீர்புவி
வாதித்த சத்தாதி வாக்கு[3] மனுதிகள்
ஓதுற்ற மாயையின் விந்துவின் உற்றதே.

(ப. இ.) தூவாமாயையின் காரியமாகிய மூலப்பகுதியின் காரியங்களாக ஞாயிறு, திங்கள், தீ ஆகிய முச்சுடர்களும் எண்புலக் காவலர்களும் தோன்றினர். எண்புலக் காவலராவர்: இந்திரன், தீ, எமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசனன் என்போராவர். போதத்திற்கு வாயிலாகிய எழுத்தோசைக்கு இடனாக இருப்பது வான். அவ் வானும், ஒலியாகிய காற்றும், பெருகும் தன்மை வாய்ந்த நீரும், நிலமும் ஆகிய பூதங்களும் தூவாமாயையின் காரியங்களே. அளவையான் ஆராய்ந்து முடித்தலாகிய வாதித்த சத்தாதி எனப்படும் ஓசை ஊறு ஒளி சுவை நாற்றம் எனப்படும். தன்மாத்திரை ஐந்தும் அதன் காரியங்களே. வாக்காதியாகிய செய்தற்கருவிகள் எனப்படும் வாய், கால், கை, எருவாய், சருவாய் என்னும் ஐந்தும் அதன் காரியங்களே. மனுதிகள் எனப்படும் உட்கலனாகிய எண்ணம், மனம், எழுச்சி, இறுப்பாகிய நான்கும் அதன் காரியங்களே. இவற்றை முறையே சித்தம் மனம் அகங்காரம் புத்தி எனவுங் கூறுப. இனம்பற்றிச் செவி, கண், மெய், நாக்கு, மூக்கு என்னும் அறிதற் கருவிகள் ஐந்தும் அதன் காரியங்களே யாம். சித்தாந்த சைவ

1. உரைசேரு. சம்பந்தர், க. கஉ.உ.
2. பொன்னே. அப்பர், ச. கo.உ.
3. ஒன்றணையா. சிவஞானபோதம், சூ. கூ.

தூற்கண் பேசப்படுகின்ற தூவாமாயையின் கீழாய் அடங்கிய மூலப்பகுதி யின்கண் நின்று முறையாகத் தோன்றியனவே மேற்கூறியவைகள். உற்றதே - திருவருளாணையால் தோன்றியது. ஏ: ஈற்றசை. (கூ)

---

# 10. காப்பு

398. புகுந்துநின் ருன்வெளி யாய்இரு ளாகிப்
புகுந்துநின் ருன்புகழ் வாய்இகழ் வாகிப்
புகுந்துநின் ருன்உட லாய்உயி ராகிப்
புகுந்துநின் ருன்புந்தி மன்னினின் ருனே.

(ப. இ.) வெளியாகிய சிற்றறிவினை விளக்குதற் பொருட்டு நடப் பாற்றல் வாயிலாக அச் சிற்றறிவுடன் கலந்து நின்றனன் சிவபெருமான். அதுபோல் இருளாகிய அறியாமையைத் தொழிற்படுத்தும் பொருட்டு அதனுடனும் தோய்ந்தும் தோயாது நிற்கின்றனன். வெளி - ஒளி; சிற்றறிவு. சிற்றறிவுள்ளவர் சிவனைத் தொழுது புகழ்வர். அறியாமை வயப்பட்டவர் பழுதுரைத்து இகழ்வர். இது 'நல்லார் அறஞ்சொல்லப் பொல்லார் புறங்கூற' (கo அச - கo) என்னும் ஆளுடைய பிள்ளையார் அருளிய செந்தமிழ்த் திருமறையான் உணரலாம். அவ்வவர் புகழ் இகழ் மொழியினுள்ளும் புகுந்து நின்றனன் சிவன். ஆருயிர்கட்கு உடலாகவும் உயிர்க்கு உயிராகவும் புகுந்து நின்றனன். அங்ஙனம் நின்றருளிய சிவன் ஆருயிர்களின் அறிவுக்கு அறிவாய் அவ்வறிவினை விளக்கி நிலை பெற்று நின்றனன். மன்னுதல் - நிலைபெறுதல். புந்தி - அறிவு. (க)

399. தானே திசையோடு தேவரு மாய்நிற்குந்
தானே உடலுயிர் தத்துவ மாய்நிற்குந்
தானே கடல்மலை யாதியு மாய்நிற்குந்
தானே உலகில் தலைவனு மாமே.[1]

(ப. இ.) சிவபெருமான் கலப்பினால் பத்துத் திசையும் பற்றுடைத் தேவருமாய்த் தானுகவே நிற்பன். அதுபோல் உடலாய் உயிராய் ஏனைய தத்துவங்களுமாய் நிற்பன். அதுபோல் கடலும் மலையும் முதலாகிய னல்லாப் பொருள்களுமாய் நிற்பன். பொருள் தன்மையால் அச்சிவ பெருமான் இவை அனைத்திற்கும் முதல்வனுமாய் நிற்பன். (உ)

400. உடலாய் உயிரர்ய் உலகம தாகிக்
கடலாய்க் கார்முகில் நீர்போழி வானுய்
இடையாய் உலப்பிலி எங்குந்தா னுகி
அடையார் பெருவழி அண்ணலரின் ருனே.

(ப. இ.) முழுமுதல் விழுப்பொருளாம் சிவபெருமான் கலப்பான் உடன் உயிர் உலகமாகவும் நின்றனன். கடலாய், அக் கடனீரைப் பருகிக்

1. உலகெலா. சிவஞான சித்தியார், உ.

கருக்கொண்ட கருமுகிலாய் நின்றனன். அம் முகிலால் பொய்யாது பெய்யப்படும் நீர் நிறை வாளகவும் நின்றனன். இவை அனைத்தினும் இடையென்று சொல்லப்படும் உள்ளுறைபவனுய் நிற்பவனும் அவனே. என்றும் ஒரு படித்தாய் அழிவின்றி நிற்பவனும் சிவனே. எங்குந் தானுகி நிற்பவனும் அவனே. தன் திருவடியைப் புகலிடமாக் கொண்டு வந்து சாரும் மெய்யடியார்கள் என்றும் இன்புற்று வாழும் வண்ணம் அவனருளால் பெருவழி வகுத்தருளினன். பெருவழி சித்தாந்தச் சைவத் திருநெறி. அவனே யாவர்க்கும் யாவைக்கும் அண்ணலாகிய முழுமுதல்வனுய் நின்றருளினன். (கூ)

**401.** தானொரு காலந் தனிச்சுட ராய்நிற்குந்
தானொரு கால்சண்ட மாருத மாய்நிற்குந்
தானொரு காலந் தண்மழை யாய்நிற்குந்
தானொரு காலந்தண் மாயனு மாமே.

(ப. இ.) சிவபெருமான் ஒரு காலத்து ஒப்பில்லாத பேரறிவுப் பெருஞ்சுடராய் நிற்பன் ஒரு காலத்துப் பெருங்காற்றுகவும் நிற்பன். ஒருகாலத்துக் குளிர்ந்த பெருமழையாய் நிற்பன். ஒருகாலத்துத் தொழிலின் பொருட்டுத் தலைக்குணத்தை மேற்கொண்ட குளிர்ந்த மாயவனு மாய் நிற்பன். தலைக்குணம் - அமைதிக்குணம்; சாத்துவிக குணம். இத் திருப்பாட்டான் சிவபெருமான் எல்லாமாய் இயைந்து நின்று அவற்றை இயக்கும் எழில் ஒதப்படுகின்றது. (ஈ)

**402.** அன்பும் அறிவும் அடக்கமு மாய்நிற்கும்
இன்பமும் இன்பக் கலவியு மாய்நிற்கும்[1]
முன்புறு காலமும் ஊழியு மாய்நிற்கும்
அன்புற ஐந்தில் அமர்ந்துநின் ருனே.[2]

(ப. இ.) அனைத்துயிர்கள் மாட்டுங் கொள்ளும் அன்பால் ஒருவர்க்கு உண்மையறிவு உண்டாகும். அவ்வுண்மை அறிவினுல் ஒழுக்கத் தனிச் சிறப்பாம் அடக்கமுடைமை உண்டாகும். எனவே அப் பண்புகளினிட மாக நின்றருள்பவன் சிவபெருமான். அதனுல் அப் பண்புகளே சிவபெருமான் என ஓதப்பட்டன. அதுபோல் நல்லறக் காதலர் தம்முள் சிவநிலையுடன் எய்தும் இன்பமும், அவ்வின்பத்தின் பொருட்டுக் கூடும் கூட்டத்துணையும், சிவபெருமானே யாவன். பேரூழிப்பின் உலகங்களனைத்தையும் திருவருளால் ஒருங்கு தோற்றுவிக்கும் பெரும் பொருள் சிவபெருமானே. அங்ஙனம் தோற்றுவித்து நிலைநிறுத்திப் பின் பேரொடுக்கம் செய்யும் ஊழிப்பெருமானும் சிவனே. இது 'தொல்லூழி தடுமாறித் தொகல் வேண்டுங்காலத்தால், பல்வயின் உயிரெல்லாம் படைத்தான்கட் பெயர்ப்பான்' (கலித்தொகை. கஉக) என்பதனுல் விளங்கும். யாவரும் எண்மையாக வழிபட்டு ஈடேறும் பொருட்டு அன்பு செய்தல் வேண்டும். அதற்கேற்றவாறு ஐம்பெரும்பூதவருவாய் அமர்ந்து நிற்பவனும் சிவனே. ஆய்நிற்கும் · காதலர் தம் கூட்டம் நிகழ்வதற்குக் காரணமாய் அருளும்

1. தென்பால். அ. திருச்சாழல், கூ.
2. படைப்ப. உண்மை விளக்கம், கூ.
,, போகியா. சிவஞான சித்தியார், க. உ - கூ.

சிவனும் அவ்வுயிர்களுடன் உடனாய் நிற்பன். ஐந்தில் அமர்ந்து நின்றான் என்பதற்குத் திருவைந்தெழுத்திலமர்ந்து நின்றான் எனலுமொன்று. (இ)

**403.** உற்று வினைவான் அவனே உலகினைப்
பெற்று வினைவான் அவனே பிறவியைச்
சுற்றிய சாலும் குடமுஞ் சிறுதூதை
மற்றும் அவனே வினையவல் லானே.[1]

(ப. இ.) மாயா காரியமாகிய உலகினைத்தையும் பொருண் முதற் காரணமாம் மாயையினின்றும் படைத்தருள்வன் சிவன். ஆயின் சிவபெருமான் வினைமுதற் காரணன் என்பது குறிப்பெச்சம். ஆருயிர்களுக்கு வினைக்கீடாகப் பிறவியைப் பலவாறு படைத்தருள்பவனும் அவனே. 'பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும்' என்பது ஒரறிவு முதல் ஆறறிவு ஈறுகவுள்ள உயிர்கள் என்னும் பாகுபாடு பருவுடலைப் பற்றியனவே ஆகும்; இந் நிலை எய்துவதற்கு முன் ஆண்டவன் படைத்தருளும் எட்டுறுப்புக்களோடு கூடிய நுண்ணுடம்பினையேயாம். நுண்ணுடம்பு மலத்தைப் பற்றிப் படைத்தளிக்கப்பட்ட யாவர்க்கும் ஒன்றுபோல் அமைந்த இயற்கைப் பிறப்புடம்பாகும். அதனலும் அஃது எல்லாவுயிர்க்கும் ஒன்றுபோலமைந்த இயற்கையுடம்பாகும். சிறப்புடம்பு நால்வகைத் தோற்றத்து வினைக்கீடாக அமையும் உடம்புகளேயாம். அக் குறிப்புச் 'சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்' என்பதனல் பெறப்படும். ஈண்டுச் சிறப்பு, வினைக்கீடாகச் செய்யவேண்டிய தொழிலுக்கு வாய்ப்புடைய உடம்பு. இது செயற்கையுடம்பாகும். இவ்வுடம்புகள் இருவினைக்கீடாகப் பல வேறு வகையாகக் கொடுக்கப்படுகின்றன. அதற்கு ஒப்புகுயவன் சிறிய குடும்பம் பெரிய குடும்பம் முதலியவற்றுக்கு வேண்டும், சால், குடம் சிறு தூதை முதலியவற்றைப் படைத்துக் கொடுப்பதாகும். தூதை - சிறு முட்டி. சால் குடம் முதலியவற்றை உருவகமாக உடம்புகளுக்குக் கொள்க. இவற்றைப் படைத்தருளும் வல்லான் சிவபெருமான் ஒருவனே. (சு)

**404.** உள்ளுயிர்ப் பாயுட லாகினின் ருன்நந்தி
வெள்ளுயி ராகும் வெளியாய் நிலங்கொளி
உள்ளுயிர்க் கும்உணர் வேயுட லுட்பரந்
தள்ளுயி ராவண்ணந் தாங்கினின் ருனே.

(ப. இ.) உயிர் மூச்சாகவும், அம் மூச்சின் நிலைக்களமாகிய உடம்பாகவும் கலப்பு முறையில் நின்று நிறையும் பெருமை மிக்கவன் நந்தியாகிய சிவபெருமான். மலம் நீங்கிய உயிர் வெள்ளுயிர் எனப்படும். அவ்வுயிர்க்கு இடம் கொடுத்தருளும் வெளியாய் நிற்பவனும் சிவனே. வெளி - திருவருள் வெளி. உயிருள் உணர்வாய் நிற்பவனும் சிவனே. உயிரை உடலாகக் கொண்டுவீற்றிருந்தருளும் விழுப்பொருளும் சிவனே. பரம் - விழுப்பொருள். தள்ளுயிர் உயிராக வண்ணம் தாங்கி நின்றவனும் சிவனே என்பதற்குத் தள்ளப்படும் உயிர் மேலாகும் வண்ணம் அவ்வுயிரினைத் தாங்கி நிற்பவனும் சிவனே என்றலும் ஒன்று. (எ)

1. காரிய, சிவஞானசித்தியார். க. க - கஅ.

**405.** தாங்கருந் தன்மையுந் தானவை பல்லுயிர்
வாங்கிய காலத்து மற்றோர் பிறிதில்லை
ஓங்கி எழுமைக்கும் யோகாந்த மவ்வழி
தாங்கிநின் றுணும்அத் தாரணி தானே.

(ப. இ.) சிவபெருமான் பல்லுயிர்களையும் வேறறக் கலந்து தாங்குவதாகிய காத்தலைப் புரியும் அரிய இயல்பு வாய்ந்தவன். அவ்வுயிர்களை ஒடுக்கும் பேரொடுக்கக் காலத்துக் காப்பதும் அவனே; மற்றோர் எவரும் இலர். மிகச் சிறந்து தோன்றும் தலைமைப் பாட்டினை எய்துவதற்குரிய செறிவு நெறியைக் காப்பவனும் அவனே. செறிவு வழியாற் பெறப்படும் அறிவுநெறியைக் காப்பவனும் சிவனே. அவ்வுலக இன்பநிறைவும் தானே ஆவன். தாங்கல் - காத்தல். அவ்வழி - அச் சிறந்த அறிவு நெறி. அத் தாரணி - வீட்டுலகு. செறிவு நெறி-யோகநெறி. அவ்வழி - அந்த யோக நெறியாக வரும் அறிவுநெறி - ஞானநெறி.

(அ. சீ.) தாங்கருந் தன்மை - காக்கும் தன்மை. (அ)

**406.** அணுகினுஞ் சேயவன் அங்கியிற் கூடி
நணுகினும் ஞானக் கொழுந்தொன்று நல்கும்
பணிகினும் பார்மிசைப் பல்லுயி ராகித்
தணிகினும் மண்ணுடல்[1] அண்ணல்செய் வானே.

(ப. இ.) சிவபெருமான் ஆருயிர்களுடன் கலப்பால் ஒன்றுய்க் கூடியிருப்பினும் அவ்வுயிர்களின் சுட்டறிவிற்கும் சிற்றறிவிற்கும் எட்டாத செய்மையன். இது, கற்பாரொடு கலந்து கற்பிப்பார் காண்குறினும், கற்பார் காணுவறிவர்காண், என்பதனுல் விளங்கும். அவ்வுயிர்கள் உயிர்ப்புப் பயிற்சியால் மூலத்தியுடன் ஒன்றித் திருவருளால் மேல் நோக்கிச் செல்லுதல் வேண்டும். சென்றுல் திருவடியுணர்வாகிய ஞானக் கொழுந்தினைச் சிவபெருமான் நல்கியருள்வன். பல்லுயிர்களையும்-அவ்வவ் வுயிர்களுக்கேற்ற பணியிற் செலுத்தி உடனுய் நிற்பினும், அவ்வுயிர்களால் காணுதற்கு அரியன். அவ்வுயிர்களுடன் கலந்து தங்கினும் பொருள் தன்மையால் வேருயுள்ளவன். அவனே மலங்கழுவி நலங் கெழுவுவதற்கு வாயிலாகிய உடலினைப் படைத்தளித்தருளினன். அவன் அருள்வழி நிற்பார்க்கு மலம் கழுவப்படும். மலங்கழுவப்படவே அவ்வுயிர் தலைமைப்பாடமைந்த சிவபெருமான் திருவடியிணையினைத் தலைக்கூடும். கூடவே அதுவும் தலைமைப்பாடெய்தும். இதுவே அண்ணல் செய்தானே என்னும் கருத்தாகும். இதற்குஒப்பு திருமண வீட்டில் கூடினர் அனை வரும் திருமண வீட்டுப் பெயரும் பொருந்தும் மகிழ்ச்சியும் கொண்டு திகழ்வதாகும். மண்ணுடல்: மலங்கழுவுவதற்குரிய கருவியாகிய உடல். மண்: முதனிலைத் தொழிற்பெயர்: மண்ணுதல் - கழுவுதல்.

(அ. சீ.) அணுகினும் - சிவனுடன் இருந்தாலும். (கூ)

---

1. எழுமுடல். சிவஞான சித்தியார், உ. கூ - உ.

# 11. அழிப்பு

**407.** அங்கிசெய் தீசன் அகலிடஞ் சுட்டது
அங்கிசெய் தீசன் அலைகடற் சுட்டது
அங்கிசெய் தீசன் அசுரரைச் சுட்டது
அங்கியவ் வீசற்குக் கைஅம்பு தானே

(ப. இ.) சிவபெருமான் அங்கியாகி மெய்யுணர்வுத் தீயினை அளித்தருள அத் தீயினைக் கொண்டே அகலிடத்தைச் சுட்டருளினன். சுட்டருளினன் என்பது பேரொடுக்கத்தைச் செய்தருளினன் என்பதாம். அதுபோல் அலைகடலையும் ஒடுக்கியருளினன். அதுபோல் முப்புரத் தசுரரையும் ஒடுக்கியருளினன். அதனால் அம் மெய்யுணர்வுத் தீ சிவ பெருமானுக்குக் கைக்கனையாகும். கைக்கணை என்பது எப்பொருளும் அவன் நிலைக்களத்தே தங்குமென்பதாகும். என்னை? பிறிதொரு நிலைக் களம் இன்மையான் என்க கை அம்பு - செயற்கருவி. (க)

**408.** இலயங்கள் மூன்றினும் ஒன்றுகற் பாந்த
நிலையண் றழிந்தமை நின்றுணர்ந் தேனால்
உலைதந்த மெல்லரி போலும் உலகம்
மலைதந்த மானிலந்[2] தான்வெந் ததுவே.

(ப. இ.) இலயங்கள் என்று சொல்லப்படும் ஒடுக்கங்கள் மூவகைப் படும். அவை நாளொடுக்கம், ஊழியொடுக்கம், பேரூழியொடுக்கம் என்பன. அவற்றுள் ஊழி முடிவின் நிலைமை ஒருகாலத்து அழிந்தமையை அவனருளால் நின்றுணர்ந்தேன். உலைப்பானையிலிட்ட மெல்லிய அரிசி செவ்வியுற ஆக்கப்பெறும். அரி - அரிசி. அதுபோல் உலகம் உயிர்கள் செவ்வியுற அமைக்கப் பெறுவதற்கு நிலைக்களமாகும் சிற்றூழி முடிவில் மான் என்று சொல்லப்படும் மூலப்பகுதியால் தரப்படும் சில மண் ணுலகங்கள் அழியும். அம் மூலப்பகுதி மலைவாகிய மருளைத் தரும் தூவாமாயையினின்றும் தோன்றியது. மூலப் பகுதி தூவா மாயையில் தோன்றிய கலையினின்றும் தோன்றுவதாகும். கலையினை உழைப்புமெய் என்ப. மூலப்பகுதியே மூக்குண உறையுள். மூலப்பகுதியால் காமம் வெகுளி மயக்க வினைவுகள் ஆகும். கலை மலவாற்றலிற் சிறிது நீக்குதலும் உயிராற்றலை விளக்குதலும் ஒருங்கு செய்யும். மலை - தூவா மாயை. அலைதந்த மானிலம் என்று கொள்ளின் சுவைத் தன்மையும் சேர்ந்த நாற்ற நுண்மையினின்று தோன்றிய நிலமென்க. நுண்மை - தன் மாத்திரை.

(அ. சி.) இலயங்கள் மூன்று:—தினப்பிரளயம் - கற்பாந்தப் பிரள யம் - கடைப் பிரளயம். உலை தந்த மெல்லரி - உலையிலிட்ட அரிசி. அலை தந்த மானிலம் - அப்புவிலிருந்து உண்டான உலகம். (உ)

---

1. இரும்பைக். சிவஞான சித்தியார், உ. உ - கூ.
,, நிலையிலா. அப்பர், கூ. கூஉ - ச.
2. வருங்குண. சிவஞான சித்தியார், உ. கூ - எ.

**409.** பதஞ்செய்யும் பாரும் பனிவரை எட்டு
முதஞ்செய்யும் ஏழ்கடல் ஓதம் முதலாங்
குதஞ்செய்யும் அங்கி கோளுவியா காசம்
விதஞ்செய்யும் நெஞ்சில் வியப்பில்லை[1] தானே.

(ப. இ.) ஆருயிர்கள் பிறப்பற்றுச் சிறப்புற்று என்றும் ஒருபடித் தாய் வாழ்தற்குத் துணை செய்யும் இந் நிலவுலகம் பதஞ் செய் பார் எனப் பட்டது. பதம் - இனிய செவ்வி. அத்தகைய இவ்வுலகும் குளிர்ந்த மேகங்கள் தங்கும் பெருமலைகள் எட்டும், ஓசைசேர் ஏழ்கடலும், இவை முதலாம் பிறவும் திருவருள் இயக்கத்தால் தோன்றுவனவாகும். இவற்றைக் காணுந்தோறும், கேட்குந்தோறும் கேட்பிக்குந்தோறும், சேண்மையுறுந்தோறும், நுகருந்தோறும் அளவிலா மகிழ்ச்சி அனைத் துயிர்க்கும் இனைத்தெனக் கூறவொண ணுதவாறு என்றும் மிகுகின்றது. இவற்றைப் பேரொடுக்கக் காலத்துப் பெரும்பொருட் கிளவியாஞகிய சிவபெருமான் சிவஞான அனல் கொளுவி ஒடுக்குகின்றனர். அவ் வொடுக்கம் ஆகாச விதஞ்செய்வதாகும். அஃதாவது வான் உய்த்துணர் வார்க்கு உள்ளதாய்க் கட்புலனுகாததாய் இருப்பதாகும் அதுபோல், மாயாகாரியமாகிய உலகம் தன் காரணமாகிய மாயையில் உள்ளதாய் ஒடுங்கித் தோற்றமில்லதாய் இருக்கும். திருவருளால் இவ்வுண்மை உணரலாகும். அங்ஙனம் உணர்ந்தார் நெஞ்சில் உலக வியப்பு எஞ் ஞான்றும் உறுவதில்லை. உதம் செய்யும் - உதயம் செய்யும்; உதயம் என்பதன் கடைக்குறை. பார் - உலகம். பனி - குளிர்ந்த மேகம். அங்கி - தீ.

(வி. சி.) பதம் செய்யும் பார் - ஆன்மாக்களுக்கு இன்பத்தைக் கொடுக்கும் உலகம். முதம் - மகிழ்ச்சி. குதம் - மிகுதி. ஆகாசவிதம் - தோற்றுதபடி. (கூ)

**410.** கொண்டல் வரைநின் றிழிந்த குலக்கோடி
அண்டத்துள் ஊழி யிருந்தேண் டிரையாகி
ஒன்றின் பதஞ்செய்த ஓம்என்ற அப்புறக்
குண்டத்தின் மேல்அங்கி[2] கோலிக்கொண் டானே.

(ப. இ.) திருவருளால் இயக்கப்படும் கொண்டலாகிய மழை திரு வருளென்றே கூறப்படும். அம்மழை குலக்கொடி யென்றும் உருவகிக்கப் படும். ஒன்று உயர்ந்த பெருமலையினின்று ஆருயிர் உய்ய அருவியாக வழிந்தோடிய பெருமழை அண்டத்துள் நிரம்பிற்று. மீண்டும் அண்டத் துள் நின்று ஊற்றெடுத்தது. பெரிய தெளிந்த திரையையுடைய கடலாய், யாருய், பிற நீர்நிலைகளாய்ப் பொருந்திற்று. பொருந்தி எல்லாப் பொருள்களையும் யாவர்க்கும் பயன்படுமாறு இனிய செவ்வி வாய்க்கச்

1. இருநிலனது. சம்பந்தர், க. உஉ - எ.
,, கத்து. அப்பர், இ. ஈஅ - இ.
,, வான்கெட்டு. அ. திருத்தெள்ளேணம், கஅ.
,, சுவையொளி. திருக்குறள், உஎ.
2. மண்கடின. உண்மை விளக்கம், கo.

செய்தது. அதன் மேற்புறத்து வேள்விக் குண்டத்து ஓமென மொழிந்து வளர்க்கப்படும் அழல் தோன்றிற்று. அவ் வழலினைச் சிவபெருமான் வாரிக் கை ஏற்றுக் கொண்டனன். இரும் தெண்டிரையாகி - பெரிய தெள்ளிய திரைகளை உடையவாகி ஒன்றின் பதஞ்செய்து - பொருந்தி இனிய செவ்வியை உண்டாக்கி. ஒன்று + இன்பதம் = ஒன்றின்பதம். ஒன்று: ஒன்றுதல்; முதல் நிலைத் தொழிற்பெயர். பதஞ்செய்தல் - செவ்வியுண்டாக்குதல். தலையில் விழுப்புனலும் கையில் மழுத்தீயும் சிவபெருமான் மாட்டுக் காண்கின்றோம். இஃதோர் உண்மையைப் புலப் படுத்தும் உருவகமாகும். விழுப்புனலாகிய கங்கை படைத்தற்காம் ஆதிப் பெருந்திரு. மழுப்படையாகிய தீ அந்தப் பெருந்திரு. ஆதிப் பெருந்திரு படைத்தலைப் புரியும் திருவருள். அந்தப் பெருந்திரு துடைத்தலைச் செய்யுந் திருவருள். நிலைப்பினைச் செய்வதைப் பெண்பாலாகவும் நீக்கத்தைச் செய்வதை ஆண்பாலாகவும் உருவகிப்பது மரபு. அம்முறை பற்றியே திருவள்ளுவ நாயனாரும் 'ஆதிபகவன்' என இருபால் ஈற்றாலும் ஓதியருளினர். நிலமும் நீரும் பெண்பாலாகவும் தீ ஆண்பாலாகவும் கொள்ளப்படும். தலை என்பது இடத்தைக் குறிப்பதுபோல் கை, என்பதும் இடத்தைக் குறிக்கும். அது 'கைப்பொருள் தன்னில் மெய்ப்பொருள் கல்வி' என்பதனால் விளங்கும். ஆதி யருள் தலையில் அப் புனலாய்த் தோன்று மந்தம், தீதில் திருக்கையகத்தாம் தீ எனக் கொள்க. குலக் கொடி - புனல்மகள்.

(அ. சி.) ஒன்றின் - மாயையின். ஓம் என்ற அப்புறக் குண்டம் - பிரணவம். கோலிக் கொண்டான் - திரட்டிக் கொண்டான். (ச)

**411.** நித்தசங் காரம் உறக்கத்து நீள்மூடம்
வைத்தசங் காரமுஞ் சாக்கிரா தீதமாஞ்
சுத்தசங் காரந் தொழிலற்ற கேவலம்
உய்த்தசங் காரம் பரன்அருள் உண்மையே.

(ப. இ.) நித்த சங்காரமாகிய நாளொடுக்கம் ஒவ்வொரு நாளும் நிகழ்வது. அஃது உறக்கத்து அறிவு அடங்கியிருப்பது. இதனை நீள் மூடம் என்ப. இவ்வுறக்கம் பேருறக்கம் எனலாம். இதுபோல் ஒவ் வொரு நாளும் நிகழும் கனவு, உறக்கம். பேருறக்கம், உயிர்ப்படங்கல் என்பனவும் அவ்வத் தலைப்புக் கூட்டி நாளொடுக்கம் என்ப. ஆருயிர்கள் இளைப்பாறுதற் பொருட்டுத் தொன்மையிலேயே அமைக்கப்பட்ட ஒடுக்கம் சாக்கிரா தீதமாகிய அப்பால் நிலை. இஃது ஐவகை நிலைகளுக்கும் அப்பாற்பட்ட நிலை. ஆருயிர் கருவிகளுடன் கூடித் தொழிலுறுது அறி யாமையுடன் மட்டும் ஒட்டியிருக்கும் தொழிலற்ற ஒடுக்கநிலை. இதுவே சுத்த சங்காரம் என்ப. உய்த்த சங்காரம் என்பது திருவருள் நோக் கத்து ஒடுங்கியிருக்கும் ஒரு நிலை. அது தூவாமாயையின் விரிவினைத்தும் எண்கூற்றுப் பேரால் முடிக்கப்படும். தூவாமாயை முப்பத்தொரு மெய்களையுடையது. அவை நிலமுதல் மாயை ஈறுகக் கூறப்படும். இவற்றின் எண் கூறுவன 'பூதமொன்று, பூதமுதலொன்று, அறிதற் கருவி ஒன்று, செய்தற் கருவி ஒன்று, அகக்கலன் ஒன்று, குணம் ஒன்று, மூலப்பகுதி ஒன்று, போர்வை ஒன்று' என்பன. போர்வை யினைக் கலாதி என்ப. இப் பாகுபாட்டினைக் காரணவுடம் பெனவும், பரதேக மெனவும் கூறுப. இவ்வுடம்போடு கூடித் திருவருளில் ஒடுங்கி யிருப்பதாகும். இவை யனைத்தையும் திருவுள்ளத்தான் இயற்றி அப்பால்

நிற்கும்நிலை பரன் உண்மையாகும். உய்த்த சங்காரம்: ஆருயிர்களை அருளில் செலுத்தும் ஒடுக்கம். (இ)

412. நித்தசங் காரம் இரண்டுடல் நீவுதல்
வைத்தசங் காரமும் மாயாசங் காரமாஞ்
சுத்தசங் காரம் மனுதீதந் தோய்வுறல்
உய்த்தசங் காரஞ் சிவன்அருள் உண்மையே.

(ப. இ.) நாளொடுக்கத்துள் நுண்ணுடல் பருவுடல்களாகிய இரண்டிடத்தும் ஆருயிர்கள் பற்றின்றி யிருக்குமாறு செய்தலும் ஒன்று. நீவுதல் - கடத்தல். நிலைப்பித்த ஒடுக்கம் மாயைப்பற்றகற்றி ஒடுக்குதல். மாயா சங்காரம் என்பதும் இது. ஆருயிர் தன்னளவில் நிற்கும் நிலை சுத்த ஒடுக்கம் என்ப. இது மனத்தைக் கடந்து நிற்கும் நிலை. மனத்தைக் கடந்து நிற்றல் என்பது மனத்தொழில் அகன்று நிற்றல். தோய்வுறல் மனமகன்று நிற்றல், அருளிலொடுங்கல் உய்த்த சங்காரம், அப்பால் நிலை சிவன் உண்மை. முன்னதும் இதுவும் ஆகிய இரண்டு திருப்பாட்டும் கீழ்ப்பாடு என்று கூறப்படும் கீழாலவத்தையை ஓதுகின்றன. இக் கீழாலவத்தையே நாளொடுக்கம் என்ப.

(அ. சி.) இரண்டு உடல் - தூலம், சூக்குமம். (கு)

413. நித்தசங் காரங் கருவிடர்[1] நீக்கிஞல்
ஒத்தசங் காரம் உடலுயிர் நீவுதல்
சுத்தசங் காரம் அதீதத்துட் டோய்வுறல்
உய்த்தசங் காரம் பரனருள் உண்மையே.

(ப. இ.) நாளொடுக்கத்துள் பிறவிப் பெருந் துன்பமாகிய கருவிடர் நீக்குதல் மேலானது. அது நீக்கினுல் உயிர் உடலோடு கூடி வாழினும் அவ்வுடலில் பற்றின்றி வாழும். இது தோய்வுறு நிலை, அகன்ற நிலை, கழன்ற நிலை எனவும் கூறப்படும். நீவுதல்-கழலுதல். தோய்வுறுநிலை-தாக்கற்று நிற்கும் நிலை. நிலைப்பிக்கும் ஒடுக்கம் ஆருயிர் ஒன்றுடனும் கலவாது தனித்து நிற்கும் அப்பால் நிலை. அருளுட் செலுத்தி யொடுக்குதல் உய்த்த சங்காரம். அதன் மேல் பரன் உண்மையாகும்.

(அ. சி.) உடல் உயிர் நீவுதல் - கருவி கரணங்கள் கழன்று நிற்றல். (எ)

414. நித்தசங் காரமும் நீடிஞைப் பாற்றலின்
வைத்தசங் காரமும் மன்னும் அனுதியிற்
சுத்தசங் காரமுந் தோயாப் பரன்அருள்
உய்த்தசங் காரமும் நாலாம் உதிக்கிலே.

(ப. இ.) நாளொடுக்கம் என்று சொல்லப்படுவதனுள் என்றும் நிலைத்த ஒடுக்கமாவது நீண்ட இளைப்பாறுதலாகும். இது படைப்போ ஞகிய அயனுர் நாள்முடிவின்கண் நிகழ்வதாகும். ஆருயிர்களை

1. கருவாகிக். அப்பர், கு. உடு - கு.

இனைப்பாற்றுதற் பொருட்டுத் தொன்மையிலமைத்த இடைநிலை ஒடுக்கம் நீண்ட வொடுக்கமாகும். இடைநிலை - அவாந்தரம் சுத்தசங்காரம் எனப்படும் பேரொடுக்கம் மாரு ஒடுக்கமாகும். நாளொடுக்கம் இடை நிலை ஒடுக்கம். பேரொடுக்கம் என்பனவற்றின் மேல் திருவடியிற் கூடு தல் நாலாம் நிலை என்ப. (அ)

**415.** பாழே[1] முதலா எழும்பயிர் அப்பயிர்
பாழாய் அடங்கினும் பண்டைப்பாழ் பாழாகா
வாழாச்சங் காரத்தின் மாலயன்[2] செய்தியாம்
பாழாம் பயிராய் அடங்கும்அப் பாழிலே.

(உ. இ.) பாழாகிய குணங்குறியற்ற வினையினீங்கி விளங்கிய அறி வினையுடைய, உண்மை அறிவு இன்ப வடிவினன் சிவபெருமான். அவனே வினைமுதலாகக் கொண்டு மாயா காரியமாகத் தோன்றியது இவ்வுலகம். வினைமுதற் காரணம்-நிமித்த காரணம். பயிர்-உலகம். இவ்வுலகத்துத் தோன்றிய உயிர்கள் உலகு உடல்களைக் கடந்து பாழில் ஒடுங்கும். அங் ஙனம் ஒடுங்கினும் அப் பாழ் பண்டைப் பாழாகா. பண்டைப் பாழென் பது மலம் நீங்காத நிலையில் ஊழிகள்தோறும் ஒடுங்குமிடம். அது போன்று அன்று என்பது மல நீங்கியபின் நிலைத்த பேரொடுக்கம் என்ப தைக் குறிப்பது. நிலைத்த சிவ வாழ்வினைக் கொடுக்காத வொடுக்க மென்பது அயன் அரி என்னும் இருவர் ஆட்சிக்குள் நிகழும் ஒடுக்க மாகும். இவ் விருவர் ஊழிகளிலும் உயிர் திருவடிப் பேறு எய்தாது ஒடுங்கிக் கிடக்கும் நிலை பாழ் நிலை என்க. மாலயன் செய்தி - திருவரு ளாணையினைத் தவமிருந்து பெற்ற காப்போன் படைப்போன் செய்தி களாம்.

(அ. சி.) பாழ் - சிவம். பயிர் - உலகம். வாழாச் சங்காரம்-வாழ் வினைக் கொடாத அழிப்பு. (க)

**416.** தீயவைத் தார்மின்கள் சேரும் வினைதனை
மாயவைத் தான்[3] வைத்த வன்பதி ஒன்றுண்டு
காயம்வைத் தான்கலந் தெங்கும் நினைப்பதோர்
ஆயம்வைத் தானுணர் வாரவைத் தானே.[4]

(உ. இ.) எஞ்சுவினைத் தொகுப்பாகக் கிடக்கும் வினைகளைச் சிவ குருவின் திருக்கடைக்கண் திருநோக்கத்தால் எரிசேர் வித்துப்போல் பயனழியுமாறு தீய வையுங்கள். ஊழ்வினையினை இடையருத் திருவடி நினைப்பால் குளிர்தாங்கும் போர்வை பூண்டார் அக்குளிரினைப் பற்றிச் சிறிதும் எண்ணுமை போன்று நுகரவைத்தான். நுகர வைத்தல் உடலோடமைத்து உள்ளத்தை ஒட்டாது தடுத்து உடலுழாய்க் கழிய வைத்தல். உள்ளம் சிவன் நினைவில் மூழ்கியிருத்தலால் ஊழ்வினை அவர்

---

1. பாழெனக். பரிபாடல், கூ. வரி - எஎ.
2. வான்கெட்டு. அ. திருத்தெள்ளேணம், கஅ.
3. சார்ந்தாரைக். சிவஞானபோதம், க0. உ - உ.
4. தன்னுணர. சிவஞானபோதம், கூ. ங. கூ.

களைத் தெறுதலில்லை. நிறைந்த நீர் நிழலையடைந்து இன்புறுவார் எவ் வகைச் சூட்டாலும் தெறப்படாமை இதற்கு ஒப்பு. இவ்வருளிப் பாட் டினையே மாயவைத்தான் என ஓதினர். சேரும் வினை என்பது ஆகு பெயராய் எஞ்சு வினையைக் குறித்தது. அங்ஙனம் வைத்தருளிய சிவ பெருமானின் திருக்கோவில் ஒன்றுண்டு. ஆருயிர்கட்கு உடம்பினையும் அளித்தருளினன். அம்மட்டோ? அவ்வுயிர்களைத் தனக்கு உடம்பாகவும் கொண்டருளினன். காயம்-உடம்பு. எல்லாவற்றுடனும் நீக்கமறக் கலந்து நின்று அவற்றை இயக்கி அருளுகின்றனன். மேலும் சிவனை நினைந்து பிறப்பற்றுத் திருவடிச் சிறப்புற்று வாழ்தற்கு வழியாகச் சிவனடியார் கூட்டத்தையும் வைத்தருளினன். திருவடி யுணர்வு நுகருமாறுந் திரு வருள் வைத்தருளினன். சேரும் வினையினை ஏறுவினை என்றலும் ஒன்று. அது தீய வைத்தலின்மையாற் பொருந்தா தென்க.

(அ. சி.) சேரும் வினை - ஆகாமியம். ஆர்மின் -- ஊழ்வினையைப் புசியுங்கள். மாயம்...உண்டு-புருவமத்தி. ஆயம்-சிவம் சத்தி கூட்டம். ஆய் உணர்வு - அறியும் அறிவு. (கo)

---

# 12. மறைப்பு

**417.** உள்ளத் தொருவனை உள்ளுறு சோதியை
உள்ளம்விட் டோரடி நீங்கா ஒருவனை
உள்ளமுந் தானும் உடனே இருக்கினும்
உள்ளம் அவனை உருவறி யாதே.[1]

(ப. இ.) உயிருக்கு உயிராய் உள்ளத்தே நீங்காது நிற்கின்ற ஒப் பில் முழுமுதலாம் சிவபெருமானை உள்ளத்து ஒருவன் என்பர். அவனே உள்ளுறு சோதியாவன். அவன் ஒவ்வோர் உள்ளந்தோறும் ஓரடிச் சிற்றளவேனும் விலகாது நின்றருள்கின்றனன். உள்ளமும் சிவமும் வேறறக் கலந்து உடனுக இருப்பினும் உள்ளமாகிய உயிர் தன் சிற்றறிவி னினும் சுட்டறிவினினும் அச் சிவனைக் காணமாட்டாது. முற்றறிவினுல் காணுமாயினும் அம் முற்றுணர்வினை அவன் வெளிப்படுத்தியருளுதல் வேண்டும். அவன் வெளிப்படுத்தாமலிருப்பதே மறைப்பருள் என்று கூறப்படும். அந்நிலையில்—அவன் தன்னைக் காட்டாத நிலையில்-ஆருயிர் கள் அவனது உண்மை நிலையினை அறியமாட்டா என்க. உரு - சிவ பெருமானின் உண்மை நிலை. (க)

**418.** இன்பப் பிறவி[2] படைத்த இறைவனுந்
துன்பஞ்செய் பாசத் துயருள் அடைத்தனன்[3]
என்பிற் கொளுவி இசைந்துறு தோற்றசை
முன்பிற் கொளுவி முடிகுவ தாமே.

---

1. விள்ளத்தா. அப்பர்; சு. எஅ-எ.
2. மானுடப். சிவஞான சித்தியார். உ. சு-உo.
3. இறைவனிங். ,, உ. உ-கக.

(ப. இ.) திருவடியின்பம் பெறுவதற்கு வாயிலாகக் கொடுக்கப் பட்டது மக்கட்பிறவி. அதனுல் அப்பிறவி இன்பப் பிறவி என ஓதப் பெற்றது. அஃதாவது பேரின்பம் எய்துதற்கு ஏதுவாகிய பிறவி. அத் தகைய பிறவியைத் தண்ணருளால் படைத்துத் தந்த சிவபெருமானும் துன்பத்தை மிகுவிக்கும் பாசத் தொடர்ச்சியினையும் அடைத்தருளினன். இதுவே 'மால்கொடுத்து ஆவிவைத்தார்' என்பதன் வாய்மையாகும். இவ் வுடம்பு என்புகளைப் பொருத்தித் தசைகளை இசைத்து, வலிமையுடைய நரம்புகளாற் பிணித்துத் தோலால் மூடி முடித்தமைத்த தொன்மூகும். (உ)

**419.** இறையவன் மாதவன் இன்பம் படைத்த
மறையவன் மூவரும் வந்துடன் கூடி
இறையவன் செய்த இரும்பொறி யாக்கை[1]
மறையவன்[2] வைத்த பரிசறி யாதே.

(ப. இ.) துடைத்தலைச் செய்யும் இறையவனுகிய அரனும், காத்தலைச் செய்யும் மாதவனுகிய அரியும், படைத்தலைச் செய்யும் மறை ஓது பவனுகிய அயனும் முழுமுதற் சிவபெருமான் படைத்தளித்தருளிய சிறந்த பொறிகளமைந்த உடம்பின்கண் வந்து கூடினர். அங்ஙனம் கூடு மாறு அவர்கள் செய்தவத்துக் கீடாக அமைத்தருளியவன் சிவபெரு மான். அவன் அவ்வாறு உடற்கண் பொருத்தியருளிய திருவுள்ளக் குறிப்பினை இம் முத்தேவரும் அறியார். அச் சிவன் கடைசிவரியிற் காணப்பெறும் மறையவன் என்பது வினைப்பயனை நுகர்வித்தற் பொருட்டுத் தன்னை மறைத்துவைக்கும் திருவருளினையுடையோன் என்பது பொருள். முத்தேவரும் மறைப்பினுட்படுவர் ஆதலின் அவர் களும் சிவனை அறியார். இரும்பொறி யாக்கை—மாயாவியந்திரதனு. சிவபெருமானை நோக்கிப் பெருந்தவத்தைச் செய்து காத்தற்றொழிலைப் பெற்றவன் மாயன். அதனுல் அவன் மாதவன் என்று அழைக்கப் பட்டனன்.

(அ. சி.) இறையவன் - உருத்திரன். மாதவன் - மால். இன்பம் படைத்த மறையவன் - அயன். (கூ)

**420.** காண்கின்ற கண்ணெளி காதல்செய் தீசனை
ஆண்பெண் அலியுரு வாய்நின்ற ஆதியை[3]
ஊண்படு நாவுடை நெஞ்சம் உணர்ந்திட்டுச்
சேண்படு போய்கைச் செயலறை யாரே.

(ப. இ.) சிவபெருமான் ஆருயிர்கள் தன்னைக் கண்டு காதல் செய்யும் பொருட்டுக் கண்ணெளியை அளித்தருளினன். காணும் ஆண் பெண் அலி என்னுந் திருவுருவங் கொண்டருளினன். அலி என்பது சுண்டு அருவுருவத் திருமேனி. அவன் ஆதியாகிய அம்மையையுடைய

1. உளதில. சிவஞானபோதம், கூ.
2. மோகமில. சிவப்பிரகாசம், கச.
,, அயன்றனை. சிவஞானசித்தியார், க. கூ. க.
,, கந்தமல. சிவப்பிரகாசம், ஞ.
3. ஆணுகிப். அப்பர், சு. கஅ - உ.

விழுமிய முழுமுதற் பெரும் பொருளாம் சிவபெருமானுவன். தவ வாழ்க்கைக்குத் தகுதியமைந்த தூயவுணவினைச் சிவ நினைவுடன் சுவைத்துண்ணும் நாவே ஊண்படு நன்னுவாகும். அத்தகைய உண வினை உட்கொண்ட நெஞ்சமே நன்னெஞ்சமாகும். அத்தகையார் திரு வருளால் சிவனை உணர்வர். உணரவே பிணிப்புக்களெல்லாம் மிகுந்த தொல்லைவில் அகன்று விடும். நிலையில்லாத உலக நிகழ்ச்சிகள் அவர்களை அணையா. பொய் + கை + செயல் - நிலையில்லாத செய்கை முறைகள். அத்தகையாரும் அச் செய்கைக்கண் நெருங்கார். (ச)

**421.** தெருளும் உலகிற்குந் தேவர்க்கும் இன்பம்
அருளும் வகைசெயும் ஆதிப் பிரானுஞ்
சுருளுஞ் சுடருறு தூவெண் சுடரும்
இருளும் அறநின் றிருட்டறை யாமே.[1]

(ப. இ.) திருவருளால் தெளிவினையடைந்த உலகத்தோர்க்கும், சிவவுலகத் தேவர்க்கும் இன்பத்தினை அருளும்வகை செய்தளிப்பவன் அம்மையப்பனுகிய சிவபெருமான். வளர்தலும் தளர்தலுமாகிய தன்மை சுருள் எனப்படும். அத்தகைய தன்மையினையுடைய திங்களும். மிக்க சுடராகிய ஞாயிறும், தூய வெப்பமிக்க தீயும், இவற்றால் போக்கப்படும் புற இருளும் முற்றும் அடங்கத் திருவருள் தோன்றும். ஆயினும் செவ்வியில்லார்க்குத் தன்னைக் காட்டாமையால் அவ்வருள் இருட்டறை போன்று மறைப்பினைச் செய்து நிற்கும். இருட்டறை என்பது, அக இருளாகிய ஆணவத்தை அறுக்கும் பொருள் என்பதாகும். அகவிருட்டு ஆணவ வல்லிருள். (கி)

**422.** அரைக்கின் றருள்தரும் அங்கங்கள் ஓசை[2]
உரைக்கின்ற ஆசையும் ஒன்றோடொன் றோவ்வாப்
பரக்கும் உருவமும் பாரகந் தானுய்க்
கரக்கின் றவைசெய்த காண்டகை யானே.

(ப. இ.) நடப்பாற்றலாகிய ஆதி வினைக்கீடாகத் துன்புறுத்தும் அருள் என்ப. அவ்வருள் மாயா காரியமாகப் படைக்கும் பொருள் பல. அவற்றுள் ஓசை ஊறு ஒளி சுவை நாற்றம் என்னும் ஐந்தும் புலன்கள் என்று சொல்லப்படும். இவற்றை நுண்மை எனவும், பூதமுதலெனவும், தன்மாத்திரை எனவும் கூறுப. அவைபோல் புறப்பொருள் வாயிலாக வரும் ஓசை ஊறு ஒளி சுவை நாற்றம் என்னும் ஐந்தும் புலன் என்றே சொல்லப்படும். இவ்விரண்டும் புலன்கொளி புலன் என்று முறையே வழங்கப் பெறும். புலன்கொளியானது புலனுகிய பொருளுடன் கலந்து பற்றிப் பொன்னுரைக்கும் கட்டளை அப் பொன்னை ஏற்றுத் தான் பொன் வண்ணமாயிருப்பதுபோல் புலன் கொளியும் கொண்ட புலத்தின்வண்ண மாக இருக்கும். அவ்வாறு இருப்பதற்கு அவாவினை எழுப்புவது மனம். எனவே ஐம்புலன்கொளியும் மனமும் ஒன்றோடொன்று ஒவ்வாத ஐம் பூத உடம்பகத்து உருவமாகப் பரந்திருக்கும். அதுபோல் நிலவுலகத்

1. அருக்கனேர். சிவஞானபோதம், ககஉ - க.
2. உன்னுருவிற். அப்பர், கூ. உஎ - ச.

தினும் பரந்திருக்கும். இவையனைத்தையும் தொழிற்படுத்தும் ஆதியருள் இவற்றுடன் கலந்து மறைந்துநின்று அருள்புரியும். இவற்றைத் திருவுள்ளத்தால் சிவபெருமான் கண்டருள்வன்.

(அ. சி.) அரைக்கின்ற அருள் - மறைப்பு. (சு)

423. ஒளித்துவைத் தேனுள் ளூறவுணர்ந் தீசனை
வெளிப்பட்டு நின்றருள் செய்திடு மீண்டே
களிப்பொடுங் காதன்மை என்னும் பெருமை
வெளிப்பட் டிறைஞ்சினும் வேட்சியு மாமே.

(ப. இ.) முழுமுதற் சிவபெருமான் திருவடியிணையினைத் திருவருளால் உணர்ந்தேன். அகத்தே வைத்து, திருமுறைவழியாகத் தொழுதேன். அகவழிபாடு அறிவிற்கு அறிவாய் விளங்கும் அவனை உணர்ந்து வழிபடுவ தென்க. அச் சிவபெருமானைப் புறத்து வழிபட நேர்ந்தால் அருளோன், கூத்தப் பெருமான், அம்மை, ஆலமர் செல்வன், அம்மையப்பபிள்ளை, மூத்தபிள்ளையார், இளையபிள்ளையார் என்னும் திருவுருவம் ஏழும், மெய்யடியார் திருவுரு வகைகள் ஒன்றும் ஆகிய எண் பெருநிலைகளும் வழிபடற் குரிய வடிவங்களாம். அவ்வடிவங்களுள் அருளால் மனம்பற்றிய[1] தொன்றை முறைமுறையாக வழிபடுதல் வேண்டும். அவ்வழிபாட்டை ஏற்று அச் சிவபெருமானும் அங்கங்கே வெளிப்பட்டு அருள்வன். அளவிறந்த களிப்பினலும் பெரும்பேரன்பாகிய காதன்மையாலும் மீண்டும்மீண்டும் வழிபட வழிபடப் பெருமை விளங்கித் தோன்றும். தோன்றலும் தொழுந்தோறும் தொழுந்தோறும் பழுதில் வேட்கையும் மிகும் என்க. வேட்சி - வேட்கை.

(அ. சி.) வேட்சி - விருப்பம். (எ)

424. ஒருங்கிய பாசத்துள் உத்தம சித்தன்
இருங்கரை மேலிருந் தின்புற நாடி
வருங்கரை ஓரா வகையினிற் [2]கங்கை
அருங்கரை பேணில் அழுக்கற லாமே.

(ப. இ.) செறிவுடைத்தாய் ஆருயிரும் பாசமும் வேறு என்று சொல்லமுடியாதபடி நிற்கும் பாசத்துள் ஆருயிரின் பொருட்டுக் கலந்தும் தோய்வின்றி நிற்பவன் சிவன். அவன் சார்ந்தார் அனைவரையும் காத்தருளுந் தன்மையால் தலையானவன் ஆவன் அத்தலையாய பேரறிவுப் பொருளாம் சிவபெருமானின் நிலைபேருகிய அழிவில் புகலிடம் இருங்கரை எனப்படும். அப்புகலிடத்து உறைந்து பேரின்பம் துய்ப்பதற்கு நாடுங்கள். அங்ஙனம் நாடுவதால் எல்லையின்றி வரும் பிறவிக் கடலினை எண்ணிப் பார்ப்பதற்கே இடன் இல்லாமல் போகும் அங்ஙனம் போகத் திருவருளாகிய புனல்மகள் ஏற்றருளினள். அவளின் திருவருளால் மல அழுக்கு முதலிய எல்லா அழுக்கும் அகலும். நாடி - நாடுக என்று பொருள்படும் இகரவீற்று வியங்கோள். இஃது 'அருந்துயர்க் குரம்பையின் ஆன்மா நாடி' எனனும் மெய்கண்டார் திருமொழியான் உணர்க. கங்கை அருங்கரை - திருவருளின் எல்லையில்லாத் துணை. உத்தம சித்தன் - தலையாய சிவபெருமான். (அ)

1. மனமீது நினைய. சிவஞானசித்தி உ. உ - உக.
2. காமம் திருக்குறள், நகூ0.

425. மண்ணென்று தான்பல நற்கல மாயிடும்
உண்ணின்ற யோனிகட் கெல்லாம் ஒருவனே[1]
கண்ணென்று தான்பல காணுங் தனைக்காணு[2]
அண்ணலும் இவ்வண்ண மாகிநின் றானே.

(ப. இ.) மண் ஒன்றுதானே பொருள் முதற்காரணமாய் நின்று பானை, சட்டி, கலயம், குடம் முதலிய பலவேறு வடிவமாகத் திரியும். அத்திரிபும் அதனைப் பெற்றுப் பயன்பெறுவார் தகுதிக்கு ஏற்றவாறு அமைந்ததாகும். அவ்வமைவும் வினைமுதற் காரணனுகிய ஒரு குயவனுல் ஆகும் ஈண்டு இரட்டுற மொழிதலான் மண் இடவாகு பெயராகக் குயவனையுங் குறிக்கும். அவாய்நிலையான் தண்ட சக்கர முதலிய துணைக் காரணங்களும் பெறப்படும். இதுபோல் ஆருயிர்கட்கு உயிருக்கு உயிராய் என்றும் பிரிப்பின்றி நின்றருளும் முழுமுதற் சிவபெருமான் ஒருவனே. அவனே வினைமுதற் காரணன் ஆவன். அவன் நால்வகைத் தோற்றத்து எழுவகைப் பிறப்பினுள் எண்பத்து நான்கு நூருயிர வடிவ வேறுபாட்டோடு கூடிய உடம்புகளைப் பொருள் முதற்காரணமாகிய தூவர் மாயையினின்றும் படைத்தருள்கின்றனன். அவனுக்குத் துணைக் காரணம் அவனின் வேறல்லாத திருவருளும் அதன் வழித்தாய ஆருயிர்களின் இருவினைகளுமாம் என்க. பொருள்முதற் காரணம்-முதற்காரணம். வினைமுதற் காரணம் - நிமித்தகாரணம். கண்ணிரண்டும் ஒன்றனையே காண் என்பதுபோலக் கண்ணென்றே பல பொருள்களையும் உயிர் கலந்து காட்டக் காணும், ஆனல் காட்டிய உயிரையும் காணுது காணும் தன்னையுங் காணுது. இதுபோல் ஆருயிர்கட்குக் கட்டு ஒட்டு என்னும் சரிடத்தும் அண்ணலாகிய சிவபெருமான் உடனுய் நின்று முறையே சுட்டுப்பொருள்களையும் சுட்டிறந்து நின்ற முற்றுப் பொருளாகிய தன்னையும் காட்டுவன் அவ்வுயிர் கட்டு நிலையில் காட்டுகின்ற சிவனையும் காண்கின்ற தன்னையும் காணமாட்டாது. ஒட்டுநிலையில் தன்னையும் தலைவனையும் அன்னவன் துணையால் கண்டின்புறும். யோனிகள்-உடல்கள், இவ்வண்ணம் - கண்போல் உயிர்களும் தமக்குக் காட்டும் துணையாம் சிவ பெருமானைத் தம் மூனைப்பால் காணு என்பதாம்.

(அ. சீ.) யோனிகள் - நால்வகைப் பிறப்புக்கள்; அண்டசம் முதலியன. (க)

---

1. காரிய. சிவஞானசித்தியார், க. க - கஅ:

"உரைசேரு மெண்பத்து நான்குநூ
ருயிரமாம் யோனிபேத
நிரைசேரப் படைத்தவற்றி னுயிர்க்குயிரா
யங்கங்கே நின்ருன் கோயில்
வரைசேரு முகின்முழவ மயில்கள்பல
நடமாட வண்டுபாட
விரைசேர்பொன் னிதழிதர மென்காந்தள்
கையேற்கு மிழலையாமே." - க. கஉ - ச

2. காட்டிய. சிவஞானபோதம், க. க - உ.

# 13. அருளல்

426. எட்டுத் திசையும் எழிகின்ற காற்றோடு
வட்டத் திரையனல் மாநிலம் ஆகாயம்
ஒட்டி உயிர்நிலை என்னும்இக் காயப்பை
கட்டி அவிழ்ப்பன் கண்ணுதல் காணுமே.

(ப. இ) எண்புலமாகிய எட்டுத் திசைகளிலும் ஆருயிர்கட்கு இன்பம் எய்துதற் பொருட்டு வழங்குவது வளி. அவ்வளியே காற்றெனப் படும். அது வீசும் காற்றென ஓதப்பெற்றது. உலகை வட்டமாக ஆடை போல் சூழ்ந்திருக்கும் கடல் ஈண்டு வட்டத்திரை எனப்பட்டது. திரை சினையாகு பெயராகக் கடலைக் குறிக்கும். அஃது ஈண்டு நீர் என்னும் பொதுமையைக் குறிப்பதாகும். அனல் - தீ. மாநிலம் - பெரிய நிலம். ஆகாயம் - விசும்பு. எனவே, காற்று, நீர், தீ, நிலம், வானம் என்னும் ஐம்பெரும் பூதக் கூட்டரவால் ஆயது உயிர் நிலை. இதனைக் காயப்பை என்ப. ஆருயிர்கட்கு வினைக்கீடாக இவ்வுடல்களைப் படைத்தளித்து அருளால் கட்டிப் பிணைத்து அமைப்பவன் சிவபெருமான். இருவினை யொப்பு உற்ற காலத்து அப் பெரும் கட்டினை அவிழ்த் தருள்பவனும் அவனே. அவன் அருள் வடிவாம் நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமான் என்க. ஒட்டு - திருவடிப்பேறு. கண்ணுதல்: நினைப்பளவானே ஐந்தொழில் புரியும் அண்ணலெனலுமாம். (க)

427. உச்சியில் ஒங்கி ஒளிதிகழ் நாதத்தை
நச்சியே இன்புங்கொள் வார்க்கு நமன்இல்லை
விச்சும் விரிசுடர் மூன்றும் உலகுக்குத்
தச்சும் அவனே சமைக்கவல் லானே.[1]

(ப. இ.) அருஞ்சைவர் மெய் முப்பத்தாறனுள் முடிந்த முடிபாக வினங்கும் முப்பத்தாறும் மெய் ஒலி என்ப. அஃது ஒளிவண்ணமாக விருக்கும். அது மெய்களின் உச்சியில் சிறந்திருக்கும். உச்சி - அந்தம். மெய் - தத்துவம். ஒலி - நாதம். அவ் வொளிவண்ணமாம் ஒலியினை நேரே அருள்வழி இயக்கும் சிவபெருமானை முழுவிருப்பத்துடன் வழிபட்டு இன்பங்கொள்வார்க்கு வரும் பிறப்பில்லை. அதனால் அவர்தம் இறப்புக் காலத்தும் கூற்றுவனுக்கு அவர்பால் வேலையில்லை. இவ்வுண்மை வரும் திருநாவுக்கரசர் திருமறைத் திருப்பாட்டானுணர்க:

"இன்னங் கேண்மின் இளம்பிறை சூடிய
மன்னன் பாத மனத்துடன் ஏத்துவார்
மன்னும் அஞ்செழுத் தாகிய மந்திரம்
தன்னில் ஒன்றுவல் லாரையுஞ் சாரலே,"—தி. கூ - க.

அஞ்செழுத்தாகிய மந்திரம் தன்னிலொன்று என்பதற்கு நமசிவய, சிவயநம, சிவயசிவ, சிவசிவ என்னும் வகை நான்கில் ஏதாவது ஒன்று

1. சென்றருளும். அப்பர், கூ. கச - க.
,, நலமலி. அப்பர், சு. கச - அ.

எனவும் கோடிக்கணக்கான எண்ணிக்கை வகைகளுள் ஏதாவது ஒன்று எனவும், காலமும் எண்ணும் மிகச் சிறியவாகவுள்ள ஒன்று எனவும் பொருள்படும். உலகுக்கு என்றும் பொன்றுப் புகலிடமாய் உள்ளவன் சிவபெருமான். உலகினுக்குப் பல்லக விளக்காக விஞ்சும் ஞாயிறு திங்கள் தீ என்னும் மூன்றினையும் படைத்தமைத்தவனும் அவனே. அவனே எல்லாம் வல்ல முடிவிலாற்றலையுடையவன். ஒளி திகழ் நாதத்தை: அப்பாற்பட்ட ஒளிமெய்யைத் தொழிற்படுத்தும் ஒளி வண்ணமாய்த் திகழும் சிவபெருமானே. இந் நிலையினைப் பரநாதம் என்ப. நச்சி - விரும்பி. தச்சுமவன் - புகலிடமாயுள்ளவன் (தச்சும்: தஞ்சம்). விச்சும்: விஞ்சும். இவை எதுகை நோக்கி வலித்தல் திரிபு எய்தின.

(அ. சி.) விச்சும் - மேலான. சுடர் மூன்று - சூரியன் - சந்திரன் - அக்கினி. (உ)

**428.** குசவன் திரிகையில் ஏற்றிய மண்ணைக்
குசவன் மனத்துற்ற தெல்லாம் வனைவன்
குசவனைப் போல்எங்கள் கோல்நந்தி வேண்டில்
அசைவில் உலகம் அதுஇது வாமே.[1]

(ப. இ.) கலம் பல படைக்கும் வேட்கோவாகிய குயவன் தகுதியாம் மண்ணைச் செய்வன செய்து திரிகையில் ஏற்றுவன். ஏற்றிய மண்ணை அக்குயவன் நல்லுள்ளத்தில் எண்ணியவாறே பல்வேறு வகைக் கலங்களாக்குவன். அங்ஙனம் ஆக்குவதும் தன்பொருட்டு அன்று. ஆருயிர்களின் நன்மையின் பொருட்டேயாம். அவ்வுயிர்களின் வளர்ச்சி முறைக்கு ஏற்றவாறு பல்வேறு கலங்கள் வேண்டப்படுவவாயின. அக்குயவனைப்போல் எங்கள் பேரறிவுப் பெருந் தலைவராம் நந்தியடிகள் உன்முகமாய்த் திருவுள்ளங் கொள்ளவே காரணத்தில் அசைவில்லாத தன் வைப்பாற்றலாம் மாயையினின்று அதுஇது என்று சொல்லப்படும் பல வகையான உடல் உலகம் உண்பொருள்கள் தோன்றுவவாயின. நந்தி யெங்கடவுளாகிய சிவபெருமானும் இப்படைப்புத் தொழிலினை ஆருயிர்களின் நன்மையின் பொருட்டே செய்தருள்கின்றனன். அவ்வுயிர்களின் பொருட்டே அவையும் பல்வேறு வகையாக அமைந்துள்ளன.

(அ. சி.) அதுவிதுவாமே - பலவகை. (கூ)

**429.** விடையுடை யான்விகிர் தன்மிகு பூதப்
படையுடை யான்பரி சேஉல காக்குங்
கொடையுடை யான்குணம் எண்குண[2] மாகுஞ்
சடையுடை யான்சிந்தை சார்ந்துநின் றானே.

(ப. இ.) ஆனேற்றை ஊர்தியாகவும் உயர்த்துங்கொடியாகவும் உடையவன் சிவன். ஒருவரால் படைக்கப்படாது தானே திருவருளால்

1. உள்ளதே. சிவஞானபோதம் உ. உ-க.
,, படைத்ததொரு. சிவப்பிரகாசம், சு.
2. கோளில். திருக்குறள், கூ.
,, எட்டு. அப்பர், இ. அகூ - அ.

தோன்றும் பல்வேறு தோற்றத்தன்; பூதப்படைகளை யுடையவன். ஆருயிர்கள் உய்யும் பரிசாக உலகு உடல்களைப் படைத்தருளும் பெருங் கொடையுடையான். எட்டு வான் அருட் குணத்தையுடையவன். இவ் வெட்டு வான்குணமும் பின்னல் சடையாகவுடையவன். பின்னல் - புணர்ப்பு; அத்துவிதம். ஆருயிர்களின் எண்ணமாகிய சிந்தையினைப் பேரருளால் சார்ந்து நின்றனன்: பூதம் - உயிர்கள். சடை - தாங்கல். (ச)

430. உகந்துநின் றேபடைத் தான்உல கேழும்
உகந்துநின் றேபடைத் தான்பல ஊழி
உகந்துநின் றேபடைத் தான்ஐந்து பூதம்
உகந்துநின் றேஉயிர் ஊன்படைத் தானே.

(ப இ.) 'யாவர்க்கும் மேலாம் அளவிலாச் சீருடையான்' சிவபெருமானுதலின், அவன் உயர்ந்தவன் ஆகின்றான். உகப்பு - உயர்வு. சிவபெருமான் உயர்ந்துநின்றே ஏழுலகங்களையும் படைத்தருளினன். அதுபோல் பல ஊழிகளையும் படைத்தனன். அதுபோல் ஐம்பெரும் பூதங்களையும் படைத்தருளினன். அதுபோல் ஆருயிர்கட்கு வேண்டும் உடல்களையும் படைத்தருளினன். ஏழுலகு: எழுவகைப் பிறப்புயிர்களும் உய்யப் படைத்தளிக்கும் உடல்கள் என்றலும் ஒன்று. எழுவகைத் தீவுகள் என்றலும் ஒன்று. ஊழி - காலவரையறை. உயிர்ஊன் - ஆருயிர் உறைதற்காம் உடல். ஊன்: ஆகுபெயர். உகப்பு: உயர்வு. 'உகப்பே யுயர்தல் உவப்பே யுவகை.'—தொல். சொல் - ஈ0டு. (இ)

431. படைத்துடை யான்பண் டுலகங்கள் ஏழும்[1]
படைத்துடை யான்பல தேவரை முன்னே
படைத்துடை யான்பல சீவரை முன்னே
படைத்துடை யான்பர மாகிநின் றானே.

(ப. இ.) தொன்மைக் காலத்தே முழுமுதற் சிவபெருமான் ஆருயிர்கள் உய்வதன்பொருட்டு உடல் கலன் உலகம் உணு முதலியவற்றை உள்ளதாகிய மாயையினின்றும் படைத்து உயிர்களுடன் பொருத்தியருளினன். இதுவே படைப்பு. உயிர்கள் என்றும் உள்ளன. படைக்கப்பட்டன அல்ல; அதுபோல் முன்னமே மல ஆற்றல் குறைந்த அளவில் பற்றியுள்ள உயிர்களைத் தேவராகப் படைத்தருளின. இத் தேவர்கள் பிறப்புத் தேவர் ஆவர். இவர்கள் நிலையினை மக்களாய்ப் பிறந்தாரும் எய்துவர். அவர்கள் சிறப்புத் தேவர் என்று அழைக்கப் பெறுவர். பிறப்புத் தேவர் மலவாற்றல் மிகுந்த அளவில் பற்றியுள்ள ஆருயிர்கட்குத் துணைசெய்யவே ஆண்டவனால் படைக்கப்பட்டனர். அதுபோல் பல சீவர்களாகிய உயிர்களுக்கும் உடல் முதலியவற்றைப் படைத்தருளினன். எல்லாவற்றையும் படைத்து உடையான் என்னும் திருப்பெயர் தாங்கியுள்ளவன் சிவன். எல்லாவற்றுடனும் கலந்து நிற்பவனும் அவனே. எல்லாவற்றையும் கடந்து நிற்பவனும் அவனே. அவன் கலப்பு நிலையில் இறைவன் என்று அழைக்கப்படுவன். கடந்த நிலையில் பரமன் என்று அழைக்கப்படுவன், பரம் - மேல்; விழுப்பொருள். (சு)

1. ஏழுஞ்டையான். அ. திருக்கோவையார் எ.

**432.** ஆதி படைத்தனன் ஐம்பெரும் பூதம்
ஆதி படைத்தனன் ஆசில்பல் ஊழி
ஆதி படைத்தனன் எண்ணிலி தேவரை
ஆதி படைத்தவை தாங்கிநின் ருனே.

(ப. இ.) எவற்றிற்கும் வினைமுதற்காரணமாயுள்ள சிவபெருமான் ஆதியென்று அழைக்கப்படுவன், அத்தகைய ஆதி ஐம்பெரும் பூதங்களையும் படைத்தருளினன். அவனே ஆருயிர்களின் மலகன்ம மாயைக் குற்றங்கள் நீங்குதற்கு வாயிலாகிய பல ஊழிகளையும் படைத்தருளினன். அவனே 'நால்வே றியற்கைப் பதினெரு மூவரொடு' கூடிய அளவில்லாத தேவர்களையும் படைத்தருளினன். இங்ஙனம் படைத்தவை அனைத்தையும் தாங்கிக் காத்தருள்பவனும் அவனே. படைத்தலென்பது உயிர்களுக்கு உடல்கலன் உலகுகளைப் படைத்து அவ்வுயிர்களை அவற்றுடன் பொருத்தி வினைக்கீடாக நடத்துவதேயாகும். ஆதி - அம்மை; அம்மையுடன் கூடிய சிவபெருமான்; ஆதிபகவன். (எ)

**433.** அகன்ருன் அகலிடம் ஏழுமோன் ருகி
இவன்ரு னெனநின் றெளியனும் அல்லன்
சிவன்ருன் பலபல சீவனும் ஆகி
நவின்ருன் உலகுறு நம்பனு[1] மாமே.

(ப். இ.) சிவபெருமான் கலப்பினுல் விரிந்த உலகங்கள் ஏழுடனும் ஒன்ருகி, நீக்கமற நிறைந்து நின்றனன். அகலுதல் - செறிதல்; நிறைதல். இறைவன் அங்ஙனம் கலந்து நிற்பினும் இவன்தான் இறைவன் என்று சுட்டியுணர்த்தப்படக் கூடிய அத்துணை எளியனும் அல்லன். அதுபோலவே அவன் கலப்பினுல் ஆருயிர்களுடன் ஒன்ருகி நீக்கமற நிற்கின்றனன். அதனுல் பல சீவனும் ஆகி என்றனர். சிவபெருமானே சிவகுருவாய் வந்தருளி வழிவகைகளை நவின்றருளினன். சீவனுமாகி என்பது உயிர்க்குத் துணையாய் உடனுகி நின்றருளி என்பதாகும். நம்பன் - சிவபெருமான். நம்புவார்களுடைய நம்பிக்கைக்கு முழு உரிமை வாய்ந்தவன் நம்பன். நம்புதல் - விரும்புதல். (அ

**434.** உண்ணின்ற சோதி உறநின்ற ஒருடல்
விண்ணின் றமரர் விரும்பும் விழுப்பொருள்
மண்ணின்ற வானோர் புகழ்திரு மேனியன்
கண்ணின்ற மாமணி[2] மாபோத மாமே.

(ப. இ.) அனைத்துயிர்க்கும் உயிராய் உள்நின்று ஊக்கும் சிவபெருமான் அவ்வுயிர்களைத் தாங்குகின்றனன். அதனுல் அவன் ஒப்பில்லா உடல் போன்றவனுகின்றனன். அவன் பேரொளியாய்த் திகழ்கின்றனன். யாவரும் யாவையும் தன்பால் நிலவ நின்றருளினவனும் சிவபெருமானே. விண்ணின்கண் வாழும் அமரர்களும் விரும்பும். விழுத்துணைப் பெரும் பொருள் சிவபெருமான். நிலவுலகத்துவாழும் சித்தாந்த சைவப்

1. நம்பு. சம்பந்தர், கூ. சகூ - உ.
,, நம்பு மேவு நசையா கும்மே. தொல் சொல். கூ. உகூ.
2. திருவேயென். அப்பர், கூ. சஎ - க.

பெருமை மிக்க சான்றோர் அன்புடன் புகழும் பொருள்சேர் புகழ்த் திருமேனியை உடையவன் சிவன். கண்ணுள் நிலைத்து நிற்கும் கருமணி போன்றவன் சிவன். மா - கருமை. சிவகுருவினுல் போதிக்கப்பெறும் விழுப்பொருள் சிவபெருமான். கண்ணின்ற என்றதற்குக் கருத்துள் நின்ற என்றலும் ஒன்று. இப்பொருட்கு மாமணி என்பதற்குத் திருவைந்தெழுத்து எனக் கொள்க. (கூ)

435. ஆரும் அறியாத அண்டத்[1] திருவுருப்
பார்மூத லாகப் பயிலுங் கடத்திலே
நீரினிற் பால்போல நிற்கின்ற நேர்மையைச்
சோராமற் காணுஞ் சுகம்அறிந் தேனே.

(ப. இ.) மக்கள் தேவர் மூவர் முதலிய யாவராலும் அறியவொண்ணுத அண்டத் திருவுருவை உடையவன் சிவன். உலகங்களுள் உயிர்க்கு உயிராய் நிற்கின்ற ஒப்பில் திருவுருவன் சிவன். நிலமுதலாகச் சொல்லப்படும் பெரும் பூதங்களுள் பயின்று விளங்குபவனும் சிவனே. தக்க கலத்தில் தூயநீரில் கலந்துள்ள பால்போல் சிவபெருமான் கலந்து நிற்கும் சிறந்த தன்மையை உடையவன். பால் தன் வண்ணத்தையும் சுவையினையும் நீருக்கு நல்கி நீரென்னும் பெயரினை மாற்றிப் பால் என்னும் தோற்றமும் பெயரும் பெறச் செய்கின்றது. அதுபோலவே சிவபெருமான் ஆருயிர்களைத் தூய்மையாக்கித் தன் எண்குணங்களையும் பதிவித்துச் சிவமாம் பெருவாழ்வை அருளுகின்றனன். அதனுல் அவ்வுயிர்கள் திருவடிப் பேரின்பத்தைத் துய்க்கின்றன. சிவனெனவே அழைக்கப் பெறுகின்றன. இதுவே புறத்தும் அகத்தும் புலனுகும் சிவ இன்ப மாகும். இவ்வுண்மையினைத் திருவருளால் அறிந்து தீரா இன்புற்றேன் என்க. நேர்மையை - உண்மைத் தன்மையை. சோராமல் - மறந்து விடாமல். காணும் - நுகரும். சுகம் - பேரின்பம். (கo)

# 14. கரு உற்பத்தி

436. ஆக்குகின் ருன்முன் பிரிந்த இருபத்தஞ்
சாக்குகின் ருனவ ஞதிஎம் ஆருயிர்
ஆக்குகின் ருன்கர்ப்பக் கோளகை யுள்ளிருந்து
ஆக்குகின் ருன்அவன் ஆவ தறிந்தே.[2]

(ப. இ.) உயிர்கள் இறந்தபின் வினைக்கீடாக அச்சுமாறிப் பிறக்கும். அச்சுமாறுதல் - பருவுடம்பு மாறுதல். பருவுடம்பு மாறுதலாவது ஆண் பெண்ணுகை மாறலாம்; பெண் ஆணுகை மாறலாம்; அம்மட்டோ? உயர்திணை அஃறிணையாகவும் மாறலாம்; இவ்வகை மாறுதல் என்க. திணைபால்கள் சேரும் வினைக்கீடா மாறி, அணைபிறப்பாம் மக்கட் கறி. இறந்தவுயிர் நுண்ணுடம்பாகிய புரியட்ட வடிவத்துடன் மீண்டும் கருவில் பிறக்கும். புரியட்டவடிவம்; தன்மாத்திரை என்று சொல்லப்

1. அண்டமா யாதியா. அப்பர். ச. எ-சை.
2. கண்ட நனவைக். சிவஞானபோதம். உ. கூ-க.

படும் ஒசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் என்ற ஐந்து, மனம், எழுச்சி இறுப்பு என்ற மூன்று ஆகிய எட்டுங்கூடிய வடிவம். இவ்வடிவம் படைப்புக் காலந்தொட்டுப் பேரொடுக்கக் காலம் வரை எவ்வகை மாறுதலும் எய்தாது. எல்லாவுயிர்க்கும் வேறுபாடின்றி ஒன்றுபோல் உள்ளது. இதனையே திருவள்ளுவ நாயனார் 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்று அருளினர். பின்னர் வழங்கப்படுவதும் மாறப்படுவதுமாகிய பருவுடம்பே செய்யும் வினைக்கீடாக வேறுபடும். அதனையே திருவள்ளுவ நாயனார் 'சிறப்பொவ்வா, செய்தொழில் வேற்றுமை யான்' என்று அருளினர். இவ்வேற்றுமையுடம்பு பெரும்பூதம் ஐந்து, அறிதற் கருவி ஐந்து, செய்தற் கருவி ஐந்து, வளிபத்து ஆகிய இருபத்தைந்து பொருள்களாலாயது. அவை திருவருளால் அமைக்கப்பெறுவன. அவற்றைத் தான் முன் பிரிந்த இருபத்தைந்தென்று ஓதினர். இவ்விருபத்தைந்துந் தான் பருவுடம்பு ஆகும். இறப்பும் பிறப்பும் பருவுடம்பிற்கேயாம். இப்பருவுடம்பின்கண் முன் நுண் உடம்புடனே பிரிந்து சென்ற ஆருயிரை வினைக்கீடாகப் புகச் செய்கின்றனன். இவற்றைத் திருவருள் கருப்பையினுள் உயிர்க்குயிராய் நின்று அமைக்கின்றது. அதுவே சிவபெருமான் ஆவதறிந்து அமைக்கின்றான் என்பதாகும்.

(அ. சி.) இருபத்தைந்து - பூதம் நி, புலன் நி, ஞானேந்திரியம் நி, கன்மேந்திரியம் நி, கரணம் ச, புருடன் க, ஆக உரு. (க)

437. அறிகின்ற மூலத்தின் மேல்அங்கி அப்புச்
செறிகின்ற ஞானத்துச் சேர்ந்தாள் கொளுவிப்
போறைநின்ற இன்னுயிர் போந்துற நாடிப்
பறிகின்ற பத்தெனும் பாரஞ்செய் தானே.[1]

(ப. இ.) நுண்ணுணர்வான் அறியப்படுகின்ற மூலாதாரத்துக்கு மேல் அகட்டுத் தீயும் நீரும் நிறைந்துள்ள கருப்பையில் அறிவோடு கூடிய அருயிர் தங்கிய கருவுடன் செவ்விய இளங்காலே முடக்கித் தலையுடன் சேர்த்து ஓம் வடிவமாய் அமைக்கின்றனன். கருப்பையினுள் சுமையாக நின்ற அவ்வுயிர் வெளிப்போமாறு திருவுளங்கொண்டு முந்தித் தவங்கிடந்து தாங்கிய அன்னை வயிற்று முந்நூறு நாளாகிய பத்துத் திங்களும் நீங்கும் சுமையாக வைத்தருளினன். பறிகின்ற - நீங்குகின்ற. பாரம் - சுமை.

(அ. சி.) அங்கி அப்பு-உதராக்கினியும், நீரும். செந்தாள் கொளுவி-சிவந்த பாதங்களைக் கட்டி. ஓம்துறை - பிரணவக் கரை. பறிகின்ற - விட்டு நீங்குகின்ற. பத்து - பத்து மாதம். (உ)

438. இன்புறு காலத் திருவர்மூன் பூறிய
துன்புறு பாசத் துயர்மனை வானுளன்
பண்புறு காலமும் பார்மிசை வாழ்க்கையும்
அன்புறு காலத் தமைத்தொழிந் தானே.[2]

---

1. முந்தித். பட்டினத்தடிகள், தாயாருக்கு, உ.
2. மனையறத்தில். கஉ. சம்பந்தர் - கசு.
,, பேறிழ. சிவஞான சித்தியார், உ. உ-சு.

(ப. இ.) எக்காலத்தும் நீங்காது மிக்குறும் எழில் இன்பம் மக்கட் பேறு ஒன்ருன்மட்டும் உண்டாம். அதனே எய்துதற்கு மனேயறம் பேணும் இயல்புடையிருவராகிய கணவனும் மனேவியும் விரும்பிக் கடவுளேக் கைதொழுது அவ்வழி முயலுதல் வேண்டும். அங்ஙனம் முயலுங்கால் இருவர்மாட்டும் ஒருவாப் பேரன்பு உண்டாகும் அவ்வன்பின் பெருக்கால் இருவரும் அகம்புறம் ஒத்துச் கூடுவர். அக் கூட்டத்துறுபயனுல் கருவுறும். அக்காலத்து அருள்வெளியாகிய வானத்து வீற்றிருந்தருளும் சிவபெருமான் ஆருயிர் கருவிற் புகுமாறு திருவுள்ளங் கொள்வன். தொன்மையிலேயே ஊறிப் பொருந்திப் பொதிந்துள்ள துன்பவாயிலாம் ஆணவத்தை அறவே அகற்றுதற்கு ஆக்கிக்கொடுத்தருளும் உடல் அருவுடல். அருவுடல் என்ருலும் நுண் உடல் என்ருலும் ஒன்று. மாறிப் பிறக்கும் உயிர்கட்கு அவ்வுயிர்களின் வினேக்கீடாகப் பொருந்தும் பண்பும், வாழ்நாளும், நிலவுலக வாழ்க்கையில் ஏற்படும் செல்வ வறுமைக்கும், கருவினுள் பதித்தருளினன்.

(அ. சி.) முன்பு ஊறிய - அநாதியே ஆன்மாவைப் பற்றியுள்ள. (கூ)

439. கருவை ஒழிந்தவர் கண்டநால் மூவேழ்
புருடன் உடலில் பொருந்துமற் ருேரார்
திருவின் கருக்குழி தேடிப் புகுந்தது
உருவம்இரண் டாக ஓடி விழுந்ததே.

(ப. இ.) பிறவாப் பெருநெறிபற்றிய திருவடியுணர்வு கைவந்த சிவனடியார் கருவை ஒழிந்தவராவர். அவர்கள் பருவுடலுக்கெனக் கண்டறிந்த (436) இருபத்தைந்து பொருள்களும் அவ்வுண்மையினேக் காணுதாரைப் பொருந்தும். அவர்களே மற்ருேரார் என ஓதப்பட்டவராவர். திருமகளனேய வாழ்க்கைத் துணேவியின் கருவில் துணேவனது வெண்ணீர் ஓடி விழுந்தது, ஆங்குள்ள செந்நீருடன், அது கலப்புற்றது. அதனுல் ஆண்பெண் என்னும் இரண்டாகிய வடிவங்களுள் ஒன்ருகத் திரிபுற்று வளர்ந்தது. வெண்ணீர் - சுக்கிலம். செந்நீர் - சுரோணிதம்.

(அ. சி.) கருவை ஒழிந்தவர் - சத்திநி பாதர். நால் மூவேழ் - உற்பத்துவங்கள். (சு)

440. விழுந்தது லிங்கம் விரிந்தது யோனி
ஒழிந்த முதல்ஐந்தும்[1] ஈரைந்தோ டேறிப்
போழிந்த புனல்பூதம் போற்றுங் கரணம்[2]
ஒழிந்த நுதல்உச்சி உள்ளே ஒளித்ததே.

(ப. இ.) வாழ்க்கைத் துணேவராங் காதலர் அன்புற்று இன்புறும் வாயிலாம் மகப்பெறுதற் பொருட்டுக் கூடிய கூட்டத்து இலிங்கமாகிய உருவுடம்புக்கு வாயிலாம் வித்துப் புகுந்தது. அதனே ஏற்றுக்கொள்ளும் பொருட்டுக் கருவழியாகிய யோனி விரிந்தது. நுண்ணுடலில் தங்கியிருந்த ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் என்னும் நுண்மை ஐந்தும்

1. சூக்குமம். சிவஞான சித்தியார், உ-உ-சஞ்.
2. கர்ணங்க, அ. திருக்கோத்தும்பி, க.

அறிதற் கருவி ஐந்து, செய்தற் கருவி ஐந்து ஆகப் பத்தினுடன் கூடிய மழையாகப் பொழியும், நீர்முதலாகச் சொல்லப்படும் பூதங்கள் ஐந்தும் தோன்றின. அவற்றுல் போற்றப்படும் கரணங்களும் கூடின. புருவ நடுவிலும் உச்சியிலும் நின்று உணரும்தொழிலும் இடையருது நிகழ்வதா யிற்று. அறிதற் கருவி : செவி, மெய், கண், நாக்கு. மூக்கு. செய்தற் கருவி; வாய், கால், கை, எருவாய், கருவாய். கரணம்: எண்ணம், மனம், எழுச்சி, இறுப்பு. அறிவு நிகழ்தற்கு நிலைக்களம் புருவநடுவும் உச்சியும் என்ப. (இ)

441. பூவின் மணத்தைப் பொருந்திய வாயுவுந்
தாவி உலகில் தரிப்பித்த வாறுபோல்
மேவிய சீவனில் மெல்லநீள் வாயுவுங்
கூவி அவிழுங் குறிக்கொண்ட போதே.

(உ. இ.) பூவினகத்துத் தங்கியிருக்கும் நறுமணத்தை ஓவாது சுழலும் காற்று வெளிப்படுத்தி உலகத்தில் கொண்டுவந்து பரப்பி நிலைப்பிக்கும். அதுபோல் அருவுடம்புடன் கருவிற் கூடிய ஆருயிரை அங்குப் பொருந்திய காற்றுக்கள் பத்தினுள் சிறிது சிறிதாக வளர்ந்து பெருகும் மென்மையமைந்த உயிர்க்காற்று பிறக்கும் குறிப்பு ஏற்பட்டதும் உடனெத்துப் பொருந்தி வெளிக்கொணரும்.

இதற்கு உயிர் பிரியுங்காலத்துத் தொழிற்காற்று என்று கூறுவாரு முளர். கருவுற்பத்தி நிலைக்களத்து அங்ஙனம் கூறுதல் பொருந்தா தென்க.

(அ. சி.) நீள் வாயு - தனஞ்சயன். கூவி அவிழும் - இரைந்து கொண்டு செல்லும். (கூ

442. ஏற எதிர்க்கில் இறைவன் முனகும்
மாற எதிர்க்கில் அரியவன் முனகும்
நேரோக்க வைக்கின் நிகர்போதத் தானுகும்
பேரோத்த மைந்தனும் பேர சாளுமே.

(உ. இ.) சிவனே மறவாத்திருவுடைக் காதலிருவர் கலந்து கூடுங் கால் தோன்றும் வித்தாகிய விந்து நடுநாடி வழியாக ஒலியாற்றல் என்னும் நாதசத்திக்கு மேற்பட்டு எதிர்த்துச் செல்லுதல் சிறப்புடைத்து. அங்ஙனம் செல்லின் அது வாயிலாகப் பிறக்கும் பிள்ளை சிவ வடிவாகத் தோன்றும். அதுபோலன்றி அமைதியாக எதிர்த்தால் செயற்கருஞ் செய்கை செய்யும் சீரியோனுகத் தோன்றும். சமமாகச் சென்முல் தனக்குத்தானே ஒப்பாகிய பேரறிவுப் பிள்ளையாகத் தோன்றும். மேற் கூறிய முறையில் ஒத்த பெருமைவாய்ந்த மைந்தனும் சிவவுலகப் பேரரசு திருவருளால் ஆளும் பெற்றியனுவன். நிகர்போதம் - சிறந்த அறிவு ; திருவடியுணர்வு.

(அ. சி.) ஏற எதிர்க்கில்-விந்துவைச் சுழுமுனையில் ஏற்றி நாதத்தை எதிர்த்துச் சென்முல். ஆற எதிர்க்கில் - நிதானமாக எதிர்க்கில். (எ)

**443.** ஏயங் கவந்த இருவர்தஞ் சாயத்துப்
பாயுங் கருவும் உருவா மெனப்பல
காயங் கலந்தது காணப் பதிந்தபின்
மாயங் கலந்த மலேலய மானதே.

(ப. இ.) அண்டங்கள் பலவற்றையும் பொருந்தி **வினைக்கீடாக** உழன்று வருந்திய உயிர் இருவராய்க் கலந்து இல்வாழ்க்கையராய் நல்லறம் பேணுகின்றனர். அவ்விருவருடைய அரும்பெரும் பண்புகளால் தோன்றும் கருவும் உருவாகும். அங்ஙனம் உருவாவதற்குத் தாயினுடைய உணவுச் சாரமும் வேண்டும். அவ்வுணவுச் சாரம் மருந்தினுள பல மசாலே எனப்படும் காயம் கலந்ததனுல் ஆகும். அவ்வுணவு உடலாந் தன்மையுண்டாகப் பதிந்தபின் சொல்லொணுப் பெருவேட்கையுடன் கூடி இருவர் உள்ளமும் ஒன்றுபட்ட பெறுபேறே அறிவறிந்த மக்களாகும். சாயத்து - நிறத்தால்; ஈண்டுப் பண்பால். காண - சாரமாய்த் தோன்ற. பதிந்தபின் - தங்கியபின். மாயம்கலந்த - பெருவேட்கை சேர்ந்த. மலேலயம் - உள்ளத்தொருமை.

(அ. சி.) ஏய் அங்கு அலந்த - பல அண்டங்களில் பிறந்திறந்து அலைந்து வருந்தின. மாயங் கலந்த - மோக வலைப்பட்ட. (அ)

**444.** கர்ப்பத்துக் கேவல மாயாள் கிலேகூட்ட
நிற்குந் துரியமும் பேதித்து நினேவெழ
வற்புறு காமியம் எட்டாதல் மாயேயஞ்
சொற்புறு தூய்மறை வாக்கினுஞ் சொல்லே.[1]

(ப. இ.) ஆருயிர் கருப்பையினுள் அருவுடம்போடு மட்டும் இருக்கும். பல்வேறு கருவிகளாக விரியும் மாயாகாரியக் கருவிக் கூட்டங்களேத் தொழிற்படுத்துவது நடப்பாற்றல். உயிர் கருவினுள் அருவுடம்போடு மட்டும் இருக்கும் நிலேயினேப் புலம்புநிலே என்பர். புலம்பு - கேவலம். நடப்பாற்றல் மாயா கருவிகளேக் கூட்டப் புலம்புப் பேருறக்கம் ஆகும். அவ்வுறக்கத்தினின்றும் வேறுபடுத்தி அந்நடப்பாற்றல் நினேவெழச் செய்யும். அதன்மேல் காமிய இன்ப நுகர்வுக்குரிய அன்பு எழும். அதனுல் மாயேயமாய்ப் புறத்துத் தோன்றும் ஓசை முதலிய பொருள்கள் அகத்தை எட்டும். அங்ஙனம் எட்டச் செய்வதற்குத் தூண்டுங் கருவியாக நிற்பது அகப்புறக் கலனுகிய எண்ணம், மனம், எழுச்சி, இறுப்பு என்னும் நான்குமாம். அவற்றைத் தூண்டித் தொழிற்படுத்துங் கருவி நால்வகை ஓசையாகும். இவ்வோசை தூமாயையினின்றும் வெளிப்படுவன. எட்டாதல் - கிட்டும்படியாக. எட்டு : முதனிலேத் தொழிற் பெயர். அதனே எண்ணுப் பெயராகக் கொள்ளின் எண்வகை நுகர்வுப் பொருள்கள் எனக் கொள்க.

(அ. சி.) கிலேகூட்ட - தத்துவங்களேக் கூட்ட. (க)

---

1. அகார. சிவஞானபோதம், சூ. க - கூ.
,, நிகழ்ந்திடும். சிவஞான சித்தியார், க. க.உ.சி.

**445.** என்பால் மிடைந்து நரம்பு வரிக்கட்டிச்
செம்பால் இறைச்சி திருந்த மனைசெய்து
இன்பால் உயிர்நிலை செய்த இறையோங்கும்
நன்பால் ஒருவனை நாடுகின் றேனே.

(ப. இ.) எலும்புகளால் நெருங்கப்பெற்று, நரம்பினைக்கொண்டு வரிந்துகட்டித் தசையினைக் குருதி நீரால் இணைத்தமைத்துத் திருந்திய மனை செய்தருளினன் சிவன். அம் மனை உடம்பெனப்படும். அவ்வுடம் பகத்து உயிர் தங்கியிருக்கும். அதனால் அஃது உயிர்நிலை என்று அழைக்கப் படும். உயிர் உடலகத்துத் தங்குவது இன்பம் எய்துவதற்கேயாம். அதனால் இன்பால் உயிர்நிலை என்று ஓதப்பெற்றது. இவ்வாறு செய் தருளியவன் சிவன். அவனே இறைவனுவன். அவனே சிறந்த நன்மைப் பகுதி முழுவதும் ஒருங்கமைந்த முழுமுதல்வனுனவன். அவனே ஒப்பில்லாத ஒருவனுவன். அவன் திருவடியினைச் சேர்ந்து உய்யுமாறு செந்தமிழ்த் திருவைந்தெழுத்தால் சீர்பெற வழுத்துகின்றேன். நன்பால்- நன்மைப்பகுதி. குருதிநீர் - செந்நீர்.

(அ. சி.) செம்பால் - உதிரம். (கo)

**446.** பதஞ்செய்யும் பால்வண்ணன் மேனிப் பகலோன்
இதஞ்செய்யு மோத்துடல் எங்கும் புகுந்து
குதஞ்செய்யும் அங்கியின் கோபந் தணிப்பான்
விதஞ்செய்யு மாறே விதித்தொழிந் தானே.

(ப. இ.) உடலுக்கு உறுதியாம் அழகினைத் தரும் பால்போன்று வெண்மை நிறம் பொருந்திய நெற்றியமிழ்து பால்வண்ணன் மேனிப் பகலோன் எனப்படும். அவ்வமிழ்து இனிமையாக்குதற் பொருட்டு உடலெங்கும் ஒத்துப் புகுந்து நிறைந்து நின்றது. குதமாகிய மூலத் திடமாக நின்று தோன்றும் தீயின் வெப்பத்தினைத் தணிவிக்கும் பொருட்டு இவ்வமிழ்தினை அமைத்தருளினன் சிவன்.

(அ. சி.) குதம் செய்யும் அங்கி - மூலச்சூடு. (கக)

**447.** ஒழிபல செய்யும் வினையுற்ற நாளே
வழிபல நீராடி வைத்தெழு வாங்கிப்
பழிபல செய்கின்ற பாசக் கருவைச்
சுழிபல வாங்கிச் சுடாமல்வைத் தானே.

(ப. இ.) ஆருயிர்கட்கு வினைத்துய்ப்பு முடிந்த நாளில் பலமுறை நீங்கிய இறப்பாகிய ஒடுக்கத்தினைச் செய்தருள்வன். பலவழியினலும் திருவருள்புரிந்து எழுவகைப் பிறப்பினுள் வினைக்கீடாக ஒன்றிற் பிறக்கு மாறு அருள்புரிவன். அங்ஙனம் அருள்புரிந்து தோற்றுவித்தலால் பாவமும் பழியும் பலவாகச் செய்யும் பிணிப்பாகிய கருவில் ஆவி புகுந்த தென்க. கருப் பையில் காணும் பலவகையான துன்பங்களே நீங்கச் செய்தனன். மூலத் தீ சுட்டுவிடாவண்ணம் அமைத்து வைத்தருளினன், ஒழிபல - நீங்குதல் பல. நீராடி - திருவருள்வைத்து இன்புறுத்தினன்.

வாங்கி என்பது வாங்க என்னும் எச்சத்தின் திரிபு. வாங்க - நீங்கச் செய்ய. (கூ)

448. சுக்கில நாடியில் தோன்றிய வெள்ளியும்
அக்கிர மத்தே தோன்றுமவ் வியோனியும்
புக்கிடும் எண்விரல் புறப்பட்டு நால்விரல்
அக்கரம் எட்டும்[1] எண் சாணது வாகுமே.

(ப. இ.) நடுநாடி வழியாக வருவதும் வெள்ளியாகிய **வித்து**: வித்து என்பதே விந்து என மருவியது. அம்முறையே தோன்றும் செந் நீராகிய சுரோணிதம். இச் சுரோணிதம் இங்கு யோனி எனக் குறிக்கப் பெற்றது. எட்டுவிரல் புறப்பட்டுச் செம்பாதியாகிய நான்கு விரல் உட்புகும் எழுத்தெட்டும் எண்சாண் உடம்பெனக் கூறப்படும். எழுத் தெட்டாவன: ஓங்காரத்துள் அமைந்த அகரவுகர மகரங்கள் மூன்றும், நிலம் நீர், நெருப்பு, உயிர் (காற்று) விசும்பு ஆகிய பெரும்பூதங்கள் ஐந்தினுக்கும் முறையே லகார, வகார, ரகார, யகார, அகார எழுத் துக்கள் ஐந்தும் கூடிய எட்டுமாகும். இவ்வெட்டினையுமே வித்தெழுத் துக்கள் எட்டென்ப. வித்து எனினும் பீசம் எனினும் ஒன்றே. சுக்கில நாடி - வெண்ணீர் வரும் நாடி. (கூ)

449. போகத்துள் ஆங்கே புகுந்த புனிதனுங்
கோசத்துள்[2] ஆகங் கோணர்ந்த கோடைத்தோழில்
ஏகத்துள் ஆங்கே இரண்டேட்டு மூன்றைந்து[3]
மோகத்துள் ஆங்கொரு மூட்டை[4] செய் தானே.

(ப. இ.) சிவபெருமான் ஆருயிர்கள் போகந் துய்த்தற்பொருட்டுப் போகியாக இருந்தருளுகின்றனன். அங்ஙனம் அருள்வதால் அவன்தன் தூய்மையாகிய புனிதத் தன்மையில் எதுவும் குறைபாடின்று உயிர்களைக் கருவாகிய முட்டையிற் புகச் செய்தற்பொருட்டு இயல்புடைய இருவ ராகிய காதலர்மாட்டுப் பெருவேட்கையினை எழுப்பியருள்கின்றான். ஆங்குப் புகுந்த வுயிர் ஐவேறு வகையான் ஒன்றன்பின் ஒன்றுகப் பொருந்திய பின்னல் உடம்பினைச் சாரும். ஐவேறு உடம்புகளாவன: உருவுடம்பு, வளியுடம்பு, மனவுடம்பு, அறிவுடம்பு, இன்பவுடம்பு என்பன. இவற்றை முறையே அன்னமய கோசம், பிராணமயகோசம், மனோமய கோசம், விஞ்ஞானமய கோசம், ஆனந்தமய கோசம் என்ப. இவற்றை ஒருபுடை யொப்பாகப் பூதம் எழுச்சி மலம்இறுப்பு மூலம்வழி, ஆதலுடம் பைந்தாம் அறி, எனக் கூறலாம். கோசம் - உடம்பு. இத் தகைய கொடைத் தொழிலைச் செய்து அருள்புரிபவன் சிவபெருமான். இத்தகைய உடம்பு ஒன்றுகக் காணப்படுகின்றது. இவ்வுடம்பு தூவா மாயையினின்றும் ஆக்கப்படுவது. இவ்வுடம்பு முப்பத்தொரு மெய்களை யுடையது. அவை உடல் மெய் இருபத்துநான்கு, உணர்வு மெய் ஏழு

1. மண்புனல். சிவஞானசித்தியார், உ. கூ-கஎ.
2. மருவானந்தம். ,, சு. உ. கஅ.
3. தத்துவ மெண்மூன். ,, உ. கூ-உஉ.
4. குடம்பை. திருக்குறள், கூகூஅ.

என்ப. இவற்றை முறையே ஆன்மதத்துவம் வித்தியாதத்துவம் எனவும் கூறுப. அங்கு இரண்டெட்டுப் பதினாறு, மூன்றைந்து பதினைந்து ஆக முப்பத்தொன்று கூறிய குறிப்பினால் உணரலாம்.

(அ. சி.) கோசம் - பஞ்சகோசம். இரண்டெட்டு மூன்றைந்து - முப்பத்தொரு தத்துவங்கள். (கச)

450. பிண்டத்தில் உள்ளுறு பேதைப் புலன்ஐந்தும்
பிண்டத்தின் ஊடே பிறந்து மரித்தது
அண்டத்தின் உள்ளுறு சீவனும் அவ்வகை
அண்டத்து நாதத் தமர்ந்திருந் தானே.

(ப. இ.) பிண்டமாகிய உடம்பினகத்து ஐம்பொறிகளினூடே புலப்படும் பொருளை ஏற்றுக் கொள்ளும் புலன்கள் ஐந்து. அவை ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் என்பன. இவற்றைப் புலன் எனவும் தன்மாத்திரை எனவும் கூறுப. இப்புலன்கள் முறையே செவி மெய், நோக்கு, நாக்கு, மூக்கு என்னும் பொறிகளை இடமாகக்கொண்டு திகழும் மெல்லிய நரம்புகள் என்ப. இப்புலனைந்தும் அறிவுடையனபோல் காணப்படினும் உண்மையாளைக்குவார்க்கு அவை அறிவில்லன என்பது புலனாகும். அதனால் ஈண்டுப் 'பேதைப்புலன்' என்று ஓதப்பெற்றது. இப் புலன்கள் உடம்பினுள் தோன்றி உணருந்தன்மையை உடையவாயின. மரித்தல்: எண்ணுதல்; உணர்தல். இது மருவுதல் என்னும் அடியாகத் தோன்றியதாகும். இச்சொல் வடமொழியில் ஸ்மரித்தல் என்றுயிற்று. கருப்பை முட்டையாகிய அண்டத்தினுள் அருளால் பொருந்திய ஆருயிரும், ஆங்கு உயிர்ப்பாகிய நாதத்திலோடு விரும்பிப் பொருந்தியிருக்கும்.

(அ. சி.) பேதைப்புலன் - அறிவற்ற புலன். (கரி

451. இலைப்பொறி யேற்றி யெனதுடல் ஈசன்
துலைப்பொறி யிற்கரு ஐந்துடன் ஆட்டி
நிலைப்பொறி மூப்பது[1] நீர்மை கொளுவி
உலைப்பொறி ஒன்பதில் ஒன்றுசெய் தானே.

(ப. இ.) சிவபெருமான் எனக்களித்த உடலும் அதன்கண் காணப்படும் பொறிகளும் நிலையுடையனவல்ல. இலைஎன்பது இல்லை என்பதன் நடுக்குறை. அச்சொல் அவாய் நிலையான் நிலையுதல் என்னும் சொல்லைப்பெற்று நிலையுதல் இல்லை என்று ஆயிற்று. தூண்டித்தொழிற் படுத்தும் துணைப்பொறியாம் உணர்த்துமெய் ஐந்தென்ப. அவற்றுடன் ஆருயிர்களை இணைத்து வினைக்கீடாக ஆட்டுபவன் சிவன். நிலைப் பொறியாகவுள்ள மெய்கள் மூப்பது. தனித்தனித் தன்மைவாய்ந்த அம் மூப்பது மெய்களையும் உடற்கண் இணைத்தருளினன். உலைதலை யுடைய உடலகத்துக் காணும் பொறிகளும் உலைதலையுடையன. உடலகத்து இல்லிகளாகிய ஒட்டைகள் ஒன்பதுள்ளன. இல்லி என்பது கடைக்குறைந்து இல்லெலவ நின்றது. இவ்வளவு தன்மை யோடுங்கூடிய உடம்பொன்றைப் படைத்தருளினன். உணர்த்து

1. சுத்ததத். சிவஞானசித்தியார், உ. கூ - கக.

மெய் ஐந்து: அத்தன், அண்ணே, அருளோன், ஆண்டான், ஆசான் என்பன. உணர்வுமெய் ஆறு: காலம், ஊழ், உழைப்பு, உணர்வு, விழைவு, மருள் என்பன. உடல் மெய் இருபத்து நான்கு: மூலப் பகுதி, இறுப்பு, எழுச்சி மனம், அறிதற்கருவி ஐந்து, செய்தற்கருவி ஐந்து, பூத முதலாம் நுண்மை ஐந்து, பூதம் ஐந்து என்பன. பூதமுதல் என்பது பூதத்திற்குக் காரணம் என்பதாகும். முதல் - காரணம்; தன்மாத்திரை.

(அ. சி.) ஐந்துடன் - சிவ தத்துவங்கள் ஐந்துடன். உலைப்பொறி - சரீரம். (கசு)

452. இன்புற் றிருவர் இசைவித்து வைத்தமண்
துன்பக் கலசம் அணைவான் ஒருவனே
ஒன்பது நீர்ச்சால் கலசம் பதினேட்டு[1]
வெந்தது சூலை விளைந்தது தானே.

(ப. இ) மனையறத்தில் இன்பமுறும் மகப்பெறுவான் வேண்டிச் சிவபெருமானை நோக்கித் தவமுயறல் இயல்புடைய இருவரும் ஆண்டவன் திருவுள்ளத்தால் இசைந்து உடல் இசைவிப்பதன் பொருட்டுக் கருவாக வைத்த மண் ஒன்று. உடம்பு இடும்பைக்கு இலக்கம்; அதனால் இடும்பைக்கே கொள்கலமாகிய துன்பக்கலசம் என்றனர். அவ் வுடல் உருயிர் அணைதற்பொருட்டு அமைந்தது. அவ் வுடற்கலசத்துக்கு ஒன்பது தொளைகள் உள்ளன. அவ்வொன்பதும் நீர்ச்சால் எனப்படும். மேலும் அதன்கண் பத்துப்பொறிகள் உள்ளன. அப் பத்தும் அறிதற் கருவியும் செய்தற்கருவியும் என்ப. இவை டத்தும் புறக்கருவியாகும். மேலும் அகக்கருவி எட்டென்ப. அவை, நுண்மை ஐந்து, மனம் எழுச்சி இறுப்பு மூன்று என்பன. இவற்றை அருவுடம்பெனவும் புரியட்டரூபம் எனவும் கூறுப. இவ்வுடற்கலசம் மூலத்தியாகிய சூலையில் வெந்ததாகும். திருவருளாணையால் நிகழ்வதால் எளிதில் விளைந்ததென ஒதுவார்தானே விளைந்தது என்றனர்.

(அ. சி.) துன்பக்கலசம் - சரீரம். ஒன்பது நீர்ச்சால் - ஒன்பது கழிவாய். கலசம் பதினெட்டு - கஅ பக்க எலும்பு. (கள)

453. அறியீ ருடம்பினி லாகிய வாறும்
பிறியீ ரதனிற் பெருகுங் குணங்கள்
செறியீ ரவற்றினுட் சித்திகள் இட்ட
சழியவீ ரைந்தினு ளானது பிண்டமே.

(ப. இ.) முன்னிலைக்கிடாகக் கருவினுள் அமைக்கப்பட்ட பேறு, இழவு, இன்பம், பிணி, மூப்பு, சாக்காடு என்னும் ஆறினுக்கும் ஏற்ற வாறு ஆருயிர்கட்குக் குணங்கள் உண்டாகும். அவ்வுண்மையினைத் திருவருள் நாட்டத்தால் அறியாதிருக்கின்றீர் அங்ஙனம் பெருகும் குணங்களில் அல்லதைவிட்டுப் பிறியீர். நல்லதைப் பிறித்து அறியுங்கள் என்பதும் ஒன்று. அவ் வழியாகக் கைவரும் சித்திகளில் நல்லதன்கண் செறிந்து நிறைந்து பயன்கொள்ளீர். கருவினுள் வித்து இட்டது

1. ஒன்றணையா. சிவஞானபோதம், சூ. கூ - க.
,, சாக்கிர. சிவஞானசித்தியார், சூ. கூ - உ.

முதல் அப் பிண்டம் பத்துத் திங்கள் காறும் வளர்ச்சியுறும். சித்திகள் நிறைவேற்று முறைகள். பிண்டம் - உடல். பேறு - செல்வம். இழவு வறுமை. மூப்பு - உயர்வு. சாக்காடு - இழிவு. பிணி - துன்பம்.

(அ. சி.) உடம்பினிலாகிய ஆறு - பேறு, இழவு, நரை, திரை, மூப்பு, சாக்காடு. பிறியீர் - பிரித்து அறிவீர். (கஅ)

454. உடல்வைத்த வாறும் உயிர்வைத்த வாறும்
மடைவைத்த ஒன்பது வாய்தலும் வைத்துத்
திடம்வைத்த தாமரைச் சென்னியுள் அங்கிக்
கடைவைத்த[1] ஈசனைக் கைகலந்[2] தேனே.

(ப. இ.) சிவபெருமான் முன் ஓதியவாறு உடல் வைத்தருளினன். அதனுடன் ஆருயிர்களை வினைக்கீடாக இணைத்து வைத்தருளினன். மடை போல் அமைக்கப்பட்ட ஒன்பது வாயில்கள் இணைத்தருளினன். உச்சியி னுள் ஆயிர இதழ்த்தாமரை நிலைக்களமும் அமைத்தருளினன். பேரொடுக் கத்தைச் செய்யும் பெரும்பொருளாகிய சிவபெருமான் அந்தம் என்று அழைக்கப்படுகின்றனன். அதுவே இங்குக் கடைவைத்த ஈசன் என்று ஓதியருளினர். திருவருளால் அச் சிவபெருமானை இடையருது நினையும் நற்றவ ஒழுக்கத்தை மேற்கொண்டனன். இதுவே இங்குக் கைகலந்தேன் என்று ஓதப்பெற்றது. (கக)

455. கேட்டுகின் றேன்எங்குங் கேடில் பெருஞ்சுடர்
மூட்டுகின் றுன்முதல் யோனி மயனவன்
கூட்டுகின் றுன்குழம் பின்கரு வையுரு
நீட்டிநின் றுகத்து நேர்பட்ட வாறே.

(ப. இ.) நூலுணர்வாரும் நுண்ணுணர்வாரும் ஓதும்முறையைக் கேட்டு நின்றேன். அவர்கள் கூற்று வருமாறு: எஞ்ஞான்றும் யாண்டும் கேடில்லாது நின்று விளங்குபவன் பெருஞ்சுடராகிய சிவபெருமான். அவன் ஆருயிர்களை வினைக்கீடாக உலகு உடல்களிற் பொருத்தும் வினைமுதற் காரணன் ஆவன். குழம்புபோன்ற கருவைக் கூட்டி வைக் கின்றனன். அதனை உருவாக்குகின்றனன். உடலை வளர்க்கின்றனன். அவ்வுடலுடன் கலப்பால் ஒன்றுக இயைந்து நின்றருளினன். சேர்ந் திருக்கும் தன்மையினை நேர்படல் என்ப. முதல் யோனி: வினைமுதற் காரணம். (உ0)

456. பூவுடன் மொட்டுட் பொருந்த அலர்ந்தபின்
காவுடைத் தீபங் கலந்து பிறந்திடும்
நீரிடை நின்ற குமிழி நிழலதாய்ப்
பாருடல் எங்கும் பரந்தெட்டும் பற்றுமே.

(ப. இ.) பூவாகிய கருப்பையினுள் மொட்டாகிய விந்துக்குறி பொருந்த அப் பூ விரியும். விரிந்தபின் சுமையாயுள்ள குடும்ப விளக்குப்

1. அவனவ. சிவஞான போதம் க.
2. கருவாய்க். அப்பர், ச. கடி-சு.

போலும் கருத்தோன்றிப் பிறந்திடும். அக்கரு நீரிடை நிற்கும் நீர்க் குமிழியின் நிழல்போன்று நிற்கும். இதுவே பூதம் ஐந்தும் பொறி பத்தும் ஆகிய பதினேந்து(ச்சக) கருவிகளாலாகிய பருவுடல். இதன் கண் யாண்டும் நிலைத்துள்ள நுண்மை ஐந்து, மனம் எழுச்சி, இறுப்பு என்னும் மூன்று ஆக எட்டும் நுண்ணுடல் என்ப. அவ்வுடலுடன் ஆருயிர் பருவுடற்கருவிற் புகும். காவுடை - சுமையாயுள்ள. நிழல் - சாயல். பாருடல் - மூவைந்தாலாகிய உருவுடல். எட்டு - அருவுடலாகிய நுண்ணுடற்கருவிகள் எட்டு.

(அ. சி.) பூ - யோனி. மொட்டு - இலிங்கம். காவுடைத் தீபம் - கரு. (உக)

457. எட்டினுள் ஐந்தாகும் இந்திரி யங்களுங்
கட்டிய மூன்று கரணமு மாய்விடும்[1]
ஒட்டிய பாச உணர்வென்னுங் காயப்பை
கட்டி அவிழ்த்திடுங் கண்ணுதல் காணுமே.

(ப. உ.) அருவுடலாகிய நுண்ணுடல் ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் என்னும் புலன்கள் ஐந்தும் அகப்புறக்கலன்களாகிய மனம் எழுச்சி இறுப்பு என்னும் கரணங்கள் மூன்றும் ஆகிய எட்டினுலாயது. இது படைப்புக் காலந்தொட்டுப் பேரொடுக்கக் காலம் வரையில் அழியாதிருக்கும். (இடையே திருவடிப்பேறெய்தும் செவ்வி வாய்ப்பின் அக்காலத்து இந்நுண்ணுடல் ஒடுக்கப்படும்.) இந் நுண்ணுடலுடன் கூடிப் பருவுடலிற் புகுந்ததும் ஆருயிர்க்குச் சுட்டுணர்வு ஏற்படும். சுட்டுணர்வைப் பாசவுணர்வெனக் கூறுப. உருவுடலைக் காயப்பை என்ப. அக் காயப்பையினுள் நுண்ணுடலுடன் கூடிய உயிரைப் புகச் செய்பவன் கண்ணுதற் பெருங்கடவுளாகிய சிவபெருமானுவன். அந் நிலையில் அவன் கட்டுவித்தோனுவன். பின்பு செவ்வி வந்துற்றபோது அக் கட்டினை அவிழ்த்துத் தன் திருவடியில் ஒட்டுவிப்போனும் அவனே. அருவுடலிற் காணப்படும் ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் ஐந்தும் புலன் என்ப. இவ்வைந்தும் உணர்வெழுச்சியினின்றும் தோன்றுவன. இவை நிகழ்தற்கு இடன் செவி, மெய், கண், நாக்கு, மூக்கு என்ப. இஃது, உள்ள புலன் ஐந்தும் உணர்வெழுச்சியிற் றேன்றும், கொள்ளு செவி மெய்கண் நா மூக்கு என்பதனுல் அறியலாம். இவற்றை இந்திரியம் எனவும் கூறுப. பாசவுணர்வு - கண் முதலிய கருவிகள் வழியாக வரும் உணர்வு. இதனைச் சுட்டுணர்வு எனவும் பாசம் வாயிலாக உணரும் உணர்வு எனவும் கூறுப. சிவபெருமான் ஆருயிர்களை அவற்றின் வினைக் கீடாகத் திருவருளால் உடலுடன் கூட்டி வினைக்கழிவின்கண் உடலை ஒழித்திடுவன். (உஉ)

458 கண்ணுதல் நாமங் கலந்துடம் பாயிடப்[2]
பண்ணுதல் செய்து பசுபாசம் நீங்கிட
எண்ணிய வேதம் இசைத்த பரப்பினை
மண்முத லாக வகுத்துவைத் தானே.

---

1. ஒசைசேர். சிவஞானசித்தியார், உ. கூ - கச.
" பிறப்பொக்கும். திருக்குறள், கூஎ.
2. அகார. சிவஞான போதம், சூ. க - கூ.

(ப. இ.) நெற்றிக் கண்ணையுடைய நற்றமிழ்ச் சிவபெருமான் திருப்பெயர் 'நமசிவய' என்ப. இத் திருவெழுத்தைந்தும் ஒருபுடை ஒப்பாக அந்தக்கரணங்கள் நான்கும் ஆள் ஒன்றும் ஆகிய ஐந்தினையும் இயைந்தியக்குவதாகக் கூறலாம். அங்ஙனம் கூறுமிடத்து நகரம் இறுப்பு மெய்யினையும், மகரம் மனத்தையும், சிகரம் ஆளையும், வகரம் எண்ணத் தினையும், யகரம் எழுச்சியினையும் இயக்குவதாகும். இஃது, இறுப்பே மனம் ஆளோ டெண்ணம் எழுச்சி, உறுப்பாம் நமசிவய ஒது எனக் கொள்க. இதுவே கண்ணுதலோன் நாமம் கலந்து உடம்பாய்ப் பண்ணு தல் என்பதாகும். திருவைந்தெழுத்தின் தொகையாகக் கூறப்படும் அகர உகர மகரம் நாதம் விந்து என்னும் ஐந்தும் முறையே, எழுச்சி இறுப்பு மனம் ஆள் எண்ணம் என்பனவற்றை இயைந்தியக்கும் என்பதும் ஒன்று. இவற்றுள் திருவடி யுணர்வு கைவந்து பசு பாசம் நீங்கப்பெறும். பசு : சிற்றுணர்வு. பாசம் : சுட்டுணர்வு. அங்ஙனம் நீங்குதற்பொருட்டுத் திருவைந்தெழுத்தின் விரியாகிய செந்தமிழ்த் திருமறை திருமுறை ஆகிய வேதாகமங்களை ஆக்குவித்தருளினன். அவற்றை அன்பியலும் அருளியலும் என இரண்டாகப் பகுத்தருளினன். அன்பியல் உலகிய லாகிய அறம் பொருள் இன்பம் ஆகும். அருளியல் வீடாகும். இனம்பற்றி அடியியல் திருவடிப் பேறாகும். இது மண்முதலாக வகுத்து வைத்தான் என்பதனுல் பெறப்படும். மண்முதல் என்பது அன்பியலுக்கு நிலவுலக வாழ்க்கை முதல் எனப் பொருள்படும். அருளியல் என்பது மண்முதல் சிவம தீறுகச் சொல்லப்படும் முப்பத்தாறு மெய்களும் கொள்க. உடம் பாயிட : உள்ளுறுப்புக்களைச் செலுத்த. உடம்பு : உள்ளுறுப்பிற்கு முதலாகு பெயர். பசு - பிணிப்பி, பசுத்தன்மை - பிணிப்புமை ; பிணிப்புத் தன்மை. வேதம் - மறை. இசைந்த - இயற்றுவித்த. பரப்பினை - எங்கும் நீக்கமின்றிச் செறிந்த பரப்பினையுடையாய்.

(அ. சி.) கண்ணுதல் நாமம் - நமச்சிவாய. (உக)

459. அருளல்ல தில்லை அரனவன் அன்றி
அருளில்லை யாதலி னவ்வோர் உயிரைத்
தருகின்ற போதிரு கைத்தாயர் தம்பால்
வருகின்ற நண்பு வகுத்திடுந் தானே.[1]

(ப. இ.) அருளும் அரனும் மரமும் காழ்ப்பும் போலப் பிரிவிலா இரு நிலை ஒரு பொருள். ஒருநிலை அறிவுநிலை மற்றொருநிலை ஆற்றல் நிலை. அறிவு நிலையைக் கடந்த நிலையென்றும் ஆற்றல் நிலையைக் கடந்து நிலை என்றும் கூறுப. அருளின்றி அவனும் இல்லை ; அவனன்றி அருளும் இல்லை. ஆதலின் சிவபெருமான் ஆருயிர்களை உடலுடன் இணைப்பதாகிய படைத்தலைச் செய்யுங்கால் வளப்பாற்றல் நடப்பாற்றலாகிய இருவகை ஒழுக்கத் தாயர்பால் ஒப்புவித்து அவ்விருவரையும் விழுத்திணைத்துணைப் பொருளாக்கினன். அவ்விருவராலும் சுரக்கின்ற திருவருளாகிய அன்பினைத் தன் பால் - நண்பாகத்தானே சுரந்தருள அமைத்தனன். கைத்தாயர் : ஒழுக்கத்தாயர், செவிலித்தாயர் ; வளர்ப்புத்தாயர் ; கை. ஒழுக்கம். சீர்சிவமும் பேரருளும் செப்பிற்கடந்த நிலை, பார்கடத்துந் நிலையாம் பண்பு. (உச)

1. அருளுண்டாம். சிவஞானபோதம், இ.உ - கூ.
" செறிகழலும். அப்பர், சு. கஅ - அ.
" பரந்தபா. சிவப்பிரகாசம், காப்பு - உ.

460. வகுத்த பிறவியை மாதுநல் லாளுங்
தொகுத்திருள் நீக்கிய சோதி யவனும்
பகுத்துணர் வாகிய பல்லுயிர் எல்லாம்
வகுத்துள்ளும் நின்றதோர் மாண்பது வாமே.

(ப. இ.) நடப்பாற்றலாகிய ஆதி மாதுநல்லாள் எனப்படுவள். அவள் ஆருயிர்கட்கு வினைக்கீடாகப் பிறவியை வகுத்தருளினன். வனப்பாற்றலாகிய திருவருள் சோதி நல்லாளாகும். அவள் வழியாக அருட்பெரும் சோதியாகிய சிவபெருமான் ஆருயிர்களின் இருளாகிய அறியாமையை நீக்கியருள்வன். அச்சிவபெருமான் பலவாகிய உயிரினங்களே மாதுநல்லாளாகிய ஆவியாற்றல்வழிப் பகுத்துணரச் செய்தருள்வன். அங்ஙனம் அமைத்தருளின சிவபெருமான் உயிருக்குயிராய் உண்ணின்றுணர்த்திச் சிறப்பருளினன் என்க. (உடு)

461. மாண்பது வாக வளர்கின்ற வன்னியுங்
காண்பது ஆண்பெண் அலியெனுங் கற்பனை
பூண்பது மாதா பிதாவழி போலவே
ஆம்பதி செய்தானச் சோதிதன் ஆண்மையே.[1]

(ப. இ.) மூலத் தீயின் சார்பாக வளர்கின்ற கருவினை வெளிப்படுமுன் ஆண் பெண் அலியெனக் காண்பது கற்பனையாகும். பேரொளிப் பிழம்பாம் அருட்பெரும் சோதி தன் அறிவாண்மையால் கருவுற்ற உயிரின் தாய்தந்தை வழி நிழல்போல் அமைத்தருளினன். தாயைப் போன்று பிள்ளை என்பதனால் உடலமைப்பு பெரும்பாலும் தாயுடம்பைப் போன்றதாகும். 'தந்தையறிவே மகனறிவு' 'தந்தைய ரொப்பர் மக்க'ளென் பதனால் உணர்வின் வளர்ச்சியமைப்புப் பெரும்பாலும் தந்தையின் உணர்வினைப் போன்றதாகும். தீப்பிழம்பாம் இறைவனை ஆண் பெண் அலி என்றல் கற்பனையாகும் என்றலும் ஒன்று. இங்ஙனம் குறிப்பது சார்புத்தன்மையாகும். சார்பு - தடத்தம்; பொது. ஆம் பதி- அமைத்தவுடம்பு. ஆண்மை - காக்குந்தன்மை. தடத்தம் - நீங்குநிலை, சொரூபம் - நீங்கா நிலை. (உசு)

462. ஆண்மிகில் ஆணுகும் பெண்மிகில் பெண்ணுகும்
பூணிரண் டொத்துப் பொருந்தில் அலியாகும்
தாண்மிகு மாகில் தரணி முழுதாளும்
பாணவ மிக்கிடில் பாய்ந்ததும் இல்லையே.

(ப. இ) காதலிருவரும் மருவிப் பொருந்துங்கால் ஆண் ஆகிய வலப்பால் மூச்சு மிகுந்து சென்றால் கருவுற்றுப் பிறக்குமுயிர் ஆணுகப் பிறக்கும். பெண்ணாகிய இடப்பால் மூச்சு மிகுந்து சென்றால் பிறக்குமுயிர் பெண்ணுகப் பிறக்கும். இரண்டு மூக்கின் வழியாகவும் வரும் மூச்சு ஒத்திருந்தால் பிறக்குமுயிர் அலியாக இருக்கும். ஆள்வினை முயற்சியில் கருத்து மிகுதியாகவிருந்தால் பிறக்குமுயிர் சிறப்பாகப்

---

1. மண்ணல்லை. அப்பர். சு. சரி - கூ,
,, நல்லாண்மை. திருக்குறள், கஅஉசு,

பிறக்கும். அச்சிறப்புடன் பிறந்த உயிர் 'உழையார் புவனம் ஒரு மூன்று' மொருங்குடன் ஆளும். அகப்பயிற்சியால் விந்து கட்டுப்பட்டுத் திண்மை ஏற்படின் மருவி இன்புறினும் விந்து வெளிச் செல்லுவதில்லை. ஆதலால் பாய்ந்ததும் இல்லை என்றனர். பாணவம்: பண்ணவம் என்பதன் செய்யுள் திரிபு. பண்ணவம் - திண்மை. தாள் - ஆள்வினை. (உஎ)

463. பாய்ந்தபின் னஞ்சோடில் ஆயுளும் நூறுகும்
பாய்ந்தபின் னுலோடில் பாரினில் எண்பதாம்
பாய்ந்திடும் வாயுப் பகுத்தறிந் திவ்வகை
பாய்ந்திடும் யோகிக்குப் பாய்ச்சலு மாமே.

(ப. இ.) காதலர் இருவரும் மருவிக் கூடியபின் வாரசரம் (மூன்றும் தந்திரம், கசு. வாரசரம்) முறைப்படி உயிர்ப்பு ஐம்பூதங்களிலும் பரந்து ஒடினுல் பிறந்த உயிர்க்கு அகவை நூறு ஆகும். நான்கு ஓடினுல் அகவை எண்பதாகும். இம் முறையாகச் செல்லும் மூச்சினைப் பகுத்தறிந்து காண்க. யோகமுறையில் கூடுபவர் உயிர்ப்பினை யுணர்ந்து வேண்டியவாறு செலுத்துதலும் கூடும். மேலும் தந்தையின் உயிர்ப்பு ஐந்துமுறை ஓடினுல் மகவுக்கு அகவை நூறெனவும், தான்குமுறை ஓடினுல் என்பது எனவும் கூறுதலும் ஒன்று. (உஅ)

464. பாய்கின்ற வாயு குறையிற் குறளாகும்
பாய்கின்ற வாயு இளைக்கின் முடமாகும்
பாய்கின்ற வாயு நடுப்படிற் கூனுகும்
பாய்கின்ற வாயுமா தர்க்கில்லை பார்க்கிலே.

(ப. இ.) சர ஒட்டஞ் செல்கின்ற உயிர்க்காற்று அளவிற் குறைந்தால் பிறக்கும் மகவும் குறுகிய வடிவமாகப் பிறக்கும். அம் மூச்சு நெடுந் தொலைவு ஓடி இளைத்தவன் மூச்சுப்போல் இளைத்துப் போனுல் பிறக்கும் மகவு முடமாகும். அம் மூச்சு இடைநிலைப்பட்டிருந்தால் கூனுகும். இவ்வாராய்ச்சி அனைத்தும் ஆண்பாலார்க்கே அன்றிப் பெண்பாலார்க்கு இல்லை. (உக)

465. மாதா உதரம் மலமிகில் மந்தனும்
மாதா உதரம் சலமிகில் மூங்கையாம்
மாதா உதரம் இரண்டொக்கில் கண்ணில்லை
மாதா உதரத்தில் வந்த குழவிக்கே.

(ப. இ.) இருவரும் மருவுங்கால் தாயார் வயிற்றில் மலம் துப்புரவாகக் கழியாமல் தங்கி மிக்கிருந்தால் பிறக்கும் மைந்தன் மந்தனுவன். அதுபோல் நீரல் நீராகிய சிறுநீர் மிகுந்திருந்தால் பிறப்பது ஊமையாகும். இரண்டும் ஒப்ப இருக்குமானுல் குருடாகும். இங்ஙனம் நேர்வது தாய் வயிற்றுத் தோன்றும் சேய்க்கு என்க, (மகப்பேறு ஆண்டவன் திருவருட் பேரும் தவறிலை. அதனுல் இருவரும் தூயராய்ச் சிவனினை வுடன் உடனுறைவின்பத் துய்த்தல் வேண்டும்.)

(அ. சி.) இரண்டு - மலமும் சலமும். (கூ0)

466. குழவியும் ஆணும் வலத்தது வாகில்
குழவியும் பெண்ணும் இடத்தது வாகில்
குழவியும் இரண்டாம் அபானன் எதிர்க்கில்
குழவி அலியாகுங் கொண்டகால் ஒக்கிலே.

(ப. இ.) உயிர்ப்பு இருவரும் மருவுங் காலத்து வலமூக்கின்வழி வந்துகொண்டிருந்தால் பிறக்கும் மகவு ஆணாகும். அஃது இட மூக்கின் வழி வந்துகொண்டிருந்தால் பெண்ணாகும். மலக்காற்றாகிய அபானன் எதிர்த்துவருமானால் இரட்டைப் பிள்ளைகள் பிறக்கும். இருமூக்கின் வழியாகவும் ஒத்துவருமானால் பிறப்பது அலியாகும். (கக)

467. கொண்டநல் வாயு இருவர்க்கும் ஒத்தெழில்
கொண்ட குழவியுங் கோமள மாயிடுங்
கொண்டநல் வாயு இருவர்க்குங் குழறிடில்
கொண்டதும் இல்லையாங் கோல்வளை யாட்கே.

(ப. இ.) மருவிப் புணரும் காதலர் இருவருக்கும் வருகின்ற உயிர்ப்பு ஓர் அளவாக வருதல் வேண்டும். அங்ஙனம் ஒத்து எழுந்தால் திரு வருளால் கருவுற்றுத் தோன்றும் குழவியும் நனிமிகு வனப்புடையதாக விருக்கும். வனப்பு - அழகு. அவ் வுயிர்ப்பாகிய மூச்சுத் தடுமாறுமே யானால் அழகிய வளையலையணிந்த காதலி வயிற்றில் கருத்தங்கியது ஏதும் இல்லையாகும். அந்தோ மூச்சுப் பயிற்சியின்மையானும், மூச்சின் அருமையினை உணராமையானும், காலமும், இடனும், காதலும், கருத் தும் நீதற உணராது காமம் மேலிட்டபொழுதெல்லாம் முறையின்றி மருவி உரனும் இழந்து வரனுடை மக்கட் பேற்றையும் அழித்துவிடு கின்றனர். சிற்றுயிர்களுக்கு உள்ள இயற்கை அடக்கம்தானும் ஆறறி வுயிராகிய நம்மனோர்க்கு அமையாவிடின் ஆன்றோர் என்ன கூறுவர்? எங்ஙனம் மதிப்பர்? சிற்றுயிர்கள்மாட்டு யாண்டேனும் வேண்டும் கரு வீணுய் மாண்டதெனக் கண்டதும் கேட்டதும் உண்டோ? இனியேனும் உண்மை யுணர்ந்து ஒழுகுவோமாக.

(அ. சி.) குழறினால் - தடுமாறினால். (கஉ)

468. கோல்வளை உந்தியிற் கொண்ட குழவியுந்
தால்வளை யுள்ளே தயங்கிய சோதியாம்
பால்வளர்ந் துள்ளே பகலவன் பொன்னுருப்
போல்வளர்ந் துள்ளே பொருந்துரு வாமே.

(ப. இ.) அழகிய வளையலணிந்த பெண்களின் உந்தியளவாம் அடி வயிற்றில் கருவுற்றுத் தங்கிய அரும்பெறற் குழந்தையும் அண்ணக்குத் தொளைவயிற் காணும் பேரொளிப் பிழம்பொக்கும். தால் - நாக்கு; அண்ணக்கு. வயிற்றில் முறைமுறையாக வளர வேண்டிய வுறுப்புக்கள் அனைத்தும் செவ்வையுற வளர்ந்து பகலவனின் பொன்னுருவாம் தன்மை யினை எய்தும். இந் நிலைமையினையே பிள்ளை சிவசூரியன்போல் இருக் கின்றதென்று செப்புவர். எனவே, வயிற்றகத்துச் சேய் சிவந்த உரு வாக விளங்கும். பொன்னுரு - காலையே போன்றிலங்கும் பொன்னிறம்.

உந்தி - கொப்பூழ்; ஈண்டு, அடிவயிறு. தால்வளை - அண்ணத்தின் கண்ணதாம் தொளை. பகலவன் - கதிரவன். (கூகூ)

469. உருவம் வளர்ந்திடும் ஒண்டிங்கள் பத்திற்
பருவம தாகவே பாரினில் வந்திடும்
மருவி வளர்ந்திடு மாயையி னுலே
அருவம தாவதிங் காரறி வாரே.

(ப. இ.) தாய் வயிற்றில் தக்க தவப் பேற்றால் தோன்றிய மக்கட் கரு பத்துத் திங்கள் நிறைந்ததும் திருவருளால் நிலவுலகத்துத் தோன்றும். தோன்றி ஈன்று புறந்தருதல் தாயின் தலையாய கடனுதலின் அம் மகவும் தாயால் வளர்க்கப்பெறும். வளருங்காலத்து இருட்சார்பாம் மருளின் மயக்கத்தினுலே தன் உண்மையறியாது வளரும். அவ்வாறு வளரும் தன்மையினை அறிவார் யார்? மாயை - இருட்சார்பாம் மருள். அருவம் - கட்புலனுகாமை; அறியாமை. (கூச)

470. இட்டான் அறிந்திலன் ஏற்றவள் கண்டிலள்
தட்டான் அறிந்தும் ஒருவர்க் குரைத்திலன்
பட்டாங்கு சொல்லும் பரமனும் அங்குளன்
கெட்டேன் இம் மாயையின் கீழ்மையெவ் வாறே.[1]

(ப. இ.) காதலால் மருவித் தம்வயம் இழந்து இன்புற்றார் இருவருள் வித்தாகிய விந்துவினை இட்ட தலைவனும் பிள்ளை பிறக்கும் அல்லது பிறக்கும் வாய்ப்பில்லாது போகும் என்று உணரான். ஒரு வேளை பிறந்தாலும் அஃது ஆணு பெண்ணு என்று அறியும் அறிவும் உண்டாகாது. அதுபோல் அவ்வித்தினை ஏற்ற தலைவியும் ஏதும் அறிந்திலள். தட்டான் ஆகிய சிவபெருமான் அறிந்திருந்தும் ஒருவருக்கும் உணர்த்தான். தட்டான்: காரணத்தினின்றும் காரியப்பாட்டினை ஆக்கியருள்வோன்; மனம் வாக்குக்கு எட்டாதவன்; மாற்றம் மனங்கழிய நின்ற மறையோன். பட்டாங்காகிய உண்மை உணர்த்தும் முழுமுதற் சிவனும் உயிருக்கு உயிராய் ஆங்கு உள்ளான். அந்நிலையில் அம் மாயையானது ஆவியின் அறிவினைக் கீழ்ப்படுத்திப் பிறப்பு இறப்புக்களில் உழலச் செய்கின்றது. இத்தகைய தாழ்நிலையை அம் மாயை எவ்வாறு செய்கின்றது என்று நினைக்க நினைக்க மிக்க வியப்பினைத் தருவதாகின்றது.

(அ. சி.) இட்டார் - தந்தை. ஏற்றவர் - தாயார். தட்டான் - சிவன். (கூகி)

471. இன்புற நாடி இருவருஞ் சந்தித்துத்
துன்புறு பாசத்தில் தோன்றி வளர்ந்தபின்
முன்புற நாடி நிலத்தின்முன் தோன்றிய
தொன்புற நாடிநின் றேதலு மாமே.

(ப. இ.) காதலரிருவரும் இன்பம் எய்தும்படி விரும்பி மருவிச் கூடுவர். அங்ஙனம் கூடிய கூட்டத்தில் கருவுண்டாகும். அக் கருவி

1. கைக. கூ. திருமலைச் சிறப்பு உ.

லுறும் ஆருயிர், துன்பமாகிய பாசப்பிணிப்பில் கட்டுண்டு வரும். வந்து பிறக்கும்; பிறந்து முறையே வளரும். அங்ஙனம் வளர்ந்தபின் மேலோங்கி வாழ முயலும். அங்ஙனம் முயலும்போது, பழைமையாகிய வினைக்கீடாக வரும் பிறவியினை நாடுதல் வேண்டும். அப்படி நாடித் திருவைந்தெழுத்தை அகங்குழைந்து அன்புடன் இடையறாது ஓதுதல் வேண்டும். பாசம் - மாயை. முன்புற - மேலா இருக்க. தொன்பு. புவ்வீறு பெற்ற பண்புப் பெயர்; பழைமை.

(அ. சி.) தொன்பு - பழைமையாகிய பிறவி. (கூசு)

472. குயிற்குஞ்சு முட்டையைக் காக்கைக்கூட் டிட்டால்[1]
அயிர்ப்பின்றிக் காக்கை வளர்க்கின் றதுபோல்
இயக்கில்லை போக்கில்லை ஏனென்ப தில்லை
மயக்கத்தால் காக்கை வளர்க்கின்ற வாறே.

(ப. இ.) காக்கைக் கூட்டில் குயில் முட்டையிட அதனை அக் காக்கை சிறிதும் ஐயம் கொள்ளாது அடைகாத்து வெளிப்படுத்துவதுபோல, இறைவன் ஆவிகளின் வினைக்கீடாக அவ் ஆவிகளை அருவுடலோடு (உளமணுவாய) உருவுடல் பெறத் தந்தை கருவில் இரண்டு திங்களும் தாய் கருவில் பத்துத் திங்களும் புகுத்தியருளுகின்றனன். அதனால் அனைத்துயிரும் ஆண்டவன் மக்களே. அவ்வுண்மை யுணராது பெற்றோர் தம் மக்களே எனத் திரியக் கொள்வது மயக்கத்தால் ஆவது. உண்மை யுணர்ந்தார் ஆசான் மாணாக்கரை ஓம்புவதுபோல் தம் மக்களையும் பிறர் மக்களையும் ஏனைச் சிற்றுயிர்களையும் சிவனினைவுடன் ஒப்பப் பேணுவர். அங்ஙனம் பேணின் அதுவே இறைபணியாகும். சிறந்தது பயிற்றலு மாகும். அயிர்ப்பு - ஐயம். சிறந்தது - திருவடிப்பேறு. (கூள)

473. முதற்கிழங் காய்மூல யாய்அம் மூலப்பின்
அதற்புத லாய்ப்பல மாய்நின் றளிக்கும்
அதற்கது வாய்இன்ப மாவது போல
அதற்கது வாய்நிற்கும் ஆதிப் பிரானே.

(ப. இ.) முதற் கிழங்காய் - காரணமாகிய வித்தாய். மூலப்பின் - மூலத்த பின்பு. அதற்புதலாய்ப் பலமாய் - அதன் வளர்ச்சியிற் செடியாய் அரும்பு மலர் காய்கனி முதலிய பயனுய். நின்றளிக்கும் - நிலைத்து நின்று கைம்மாறு கருதாது பயனுதவும். அதற்கதுபோல - ஓரறிவுயிர்கள் பிற வுயிர்கட்குத் தாம் பயன்படுவதே இன்பமாகக் கொள்வது போன்று. அவ் வோரறிவுயிர்க்கும் சிவபெருமான் இன்பருள்வன். ஆதிப்பிரான் - ஆதியையுடைய முழுமுதற் சிவபெருமான்.

(அ. சி.) அதன் புதலாய் - அதன் செடியாய். (கூஅ)

474. பரத்திற் கரைந்து பதிந்தநற் காயம்
உருத்தரித் திவ்வுடல் ஓங்கிட வேண்டித்
திரைக்கடல் உப்புத் திரண்டது[2] போலத்
திரித்துப் பிறக்குந் திருவரு ளாலே.

---

1. கண்மூன்று. நாலடியார், ச00.
2. சிவனெனவே. திருக்களிற்றுப்படியார், கூச.

(ப. இ.) திருவருளால் பதினேந்து மெய்களால் விளங்கும் பருவுடல் உணவின் காரியமாகும். அது வேண்டுமளவு கரைந்து கருவில் சேர்ந்து பதியும். பின்னர் அஃது உருவாய்த் திரண்டு ஒங்கும். அங்ஙனம் திரண்டு உருவாவதற்குக் கடல் நீரிலுள்ள உப்புத் திரண்டு வேருகுவதே ஒப்பாகும். அங்ஙனம் திரித்துப்பிறப்பிக்கும் செயல் அனைத்தும் திருவருளின் திருவுள்ளத்தால் நிகழ்வன. திருவுள்ளம் - சங்கற்பம்.

(அ. சி.) திரித்து - மீண்டு. (நக)

---

# 15. மூவகைச் சிவவர்க்கம்

475. சத்தி சிவன்வினே யாட்டால் உயிராக்கி
ஒத்த இருமாயா[1] கூட்டத் திடைபூட்டிச்
சுத்தம தாகுந் துரியம் பிரிவித்துச்
சித்தம் புகுந்து சிவமய மாக்குமே.

(ப. இ.) திருவருட் பெருந்திருவாம் சத்தியுடன், அத் திருவினை விட்டு நீங்கா மரமுங் காழ்ப்பும்போல் உரம்பெற்று என்றும் வரமருளும் சிவபெருமானும் ஆருயிர்கள் உய்தற்பொருட்டு ஐந்தொழில் புரியத் திருவுள்ளங் கொண்டருளினன். இத் திருக்குறிப்பே விளையாட்டென ஓதப் பெற்றது. ஆருயிர்கட்கு மல மகற்ற உடலைப் படைத்தருளினன். அவ்வுடலுடன் உயிரை இணைத்தருளுவதையே உயிராக்கி என ஓதினர். அழுக்ககற்றத் துணைபுரியும் தன்மையிலும் அகற்றவேண்டுந் தன்மையிலும் ஒத்த பான்மையுடையன மாயைகள். அம் மாயை தூமாயை எனவும், தூவாமாயை எனவும் இருவகைப்படும். மல கன்மங்களுடன் விரவியது தூவாமாயை. மல கன்மங்களுடன் விரவாதது தூமாயை. இவ் விருமாயைகளும் சேர்ந்ததே அரும்சைவர் தத்துவமாகிய முப்பத்தாறு மெய்களும். அவற்றுள் முப்பத்தொரு மெய்களும் தூவாமாயை எனப்படும். இவை உருவுடல் அருவுடல் மருவுடல் கருவுடல் என நால் வகைப்படும். இவற்றைத் தூலவுடல் சூக்குமவுடல் கஞ்சுகவுடல் காரண வுடல் எனக் கூறுப. உருவே அருமரு வொண்கருமெய் நான்கும் பருமைநுண் போர்வைமுதற் பாப்பு என நினைவு கூர்க. இவ்விரு மாயையும் பகுப்பால் இரண்டுபட்டதேனும் பொருளால் ஒன்றேயாம். இவற்றுடன் இணைத்து நடப்பாற்றலால் ஊட்டி நடத்துவிப்பன். தூய்மை எனக் கூறப்படும் பேருதக்கமாகிய துரிய நிலையில் மலமகற்றிச் சித்தமாகிய எண்ணத்தின்கண் சிவபெருமான் புகுந்தருள்வன். புகுந்து அவ்வுயிரைத் தன் வண்ணம் ஆக்கியருள்வன். விளையாட்டு - எண்ணத் தாலியற்றும் எளிமை. ஊட்டி - வினைப்பயனை நுகர்வித்து. சிவமயம் - சிவநிறைவு.

(அ. சி.) இருமாயா - சுத்தமாயை - அசுத்த மாயை. (க)

---

1. மலமாயை. சிவஞானசித்தியார், உ. ச - ககூ.
,, செறிகழலும். அப்பர், சு. கஅ - அ.

476. விஞ்ஞானர் நால்வரு மெய்ப்பிரள யாகலத்
தஞ்ஞானர் மூவருந் தாங்கு சகலத்தின்
அஞ்ஞானர் மூவரு மாகும் பதின்மராம்
விஞ்ஞான ராதியர் வேற்றுமை தானே.[1]

(ப. இ.) இத் திருப்பாட்டு ஒருமலமுடையார் நால்வகையினர், இரு மலமுடையார் மூவகையினர், மும்மலமுடையார் மூவகையினர் ஆகப் பதின்மரென ஓதுகின்றது. ஒரு மலமுடையார் - விஞ்ஞானகலர். இரு மலமுடையார் - பிரளயாகலர். மும்மலமுடையார் - சகலர். (உ)

477. விஞ்ஞானர் கேவலத் தாரது விட்டவர்
தஞ்ஞானர் அட்டவித் தேசராஞ் சார்ந்துளோர்
எஞ்ஞானர் ஏழ்கோடி மந்திர நாயகர்
மெய்ஞ்ஞானர் ஆணவம் விட்டுநின் ருரே.

(ப. இ.) கேவலத்து ஆராதுவிட்டவர்: மும்மலத்து அழுந்தாத ஆட்டும் முதன்மை மலமட்டுமுடையவர். (முதன்மை - அதிகாரம்.) தஞ்ஞானர் - முழுச் செவ்வி வாயாதவர். அவர் ஆவியருளோன் எனப் பெயர் பெறுவர். (ஆவியருளோன்: அணுசதாசிவர்.) இவர்கள் அருளோன் மெய்க்கண் உறைவர். (அருளோன் மெய்: சதாசிவ தத்துவம்.) அட்டவித்தேசர்-அறிவுக்கடவுளர் எண்மர். இவ்வெண்மரும் ஆண்டான் மெய்யின்கண் உறைபவர். (ஆண்டான் மெய்: மகேசுர தத்துவம்.) எஞ்ஞான...நாயகர் - எண்மை ஞானத்தராய செவ்வியர் ஏழுகோடி மந்திரத் தலைவராவர். இவர்கள் ஆசான் மெய்யின்கண் உறைபவர். இம் மூவரும் முழுச்செவ்வி வாயாதவர். (ஆசான்மெய் - சுத்த வித்தியா தத்துவம்) மெய்ஞ்ஞானர்-முழுச் செவ்வி வாய்ந்தவர்; ஆட்டு முதன்மை மலமுமில்லாதவர். ஆணவம் விட்டு - மலப்பசையற்று. நின்ருர் - சிவ பெருமான் திருவடியிற் கலந்து பிரிவற நின்று பேறுபெற்ருர். இந் நால்வரும் அறிவிற் சீலம், அறிவின் நோன்பு, அறிவிற் செறிவு, அறிவின் அறிவு என்னும் நானெறிப் பேற்றினராவர். (இந் நான்கும் ஞானத்திற் சரியை முதலனவாகக் கூறப்படும்) இவர்களை ஒருமலமுடையார் எனக் கூறுவது மலப்பசையருமை பற்றி என்க. (மலப்பசை - மலவாசனை.) கேவலத்தாராது விட்டவரென்பது தாரது எனக் குறைந்து நின்றது. (கூ)

478. இரண்டா வதில்முத்தி எய்துவர் அத்தனை
இரண்டாவ துள்ளே இருமல பேத்தர்
இரண்டாகு நூற்றெட்டு ருத்திரர் என்பர்
மூரண்சேர் சகலத்தர் மும்மலத் தாரே.[2]

(ப. இ.) முன் திருப்பாட்டில் ஓதப்பட்ட முழுச் செவ்வி வாயாத ஒரு மலமுடைய மூவகையினரும், மற்ருேர் படைப்புக்குப் பின் அத்தனுகிய சிவ பெருமான் திருவடிக்கீழ் வீடுபேறு எய்துவர். இரண்டாவ...பெத்தர்— இரண்டாவது வகையினராகிய இருமலமுடையார் இருவகையினராவர்.

1. உரைதருமிப். சிவஞானசித்தியார், அ. க - க.
2. தானமியா. சிவஞானசித்தியார், அ. உ - கஇ.

அவர் நிறைசெவ்வியும் குறைசெவ்வியும் உடையார் என இருவகைப் படுவர். இவருள் நிறைசெவ்வியுடையாரும் விழுப்பேற்றினர் வழிப் பேற்றினர் என இருவகையினராவர். இம்முறையில் குறை செவ்வியுடை யார், விழுப்பேற்றினர், வழிப்பேற்றினர் என இருவகைப்படுவர். நிறை செவ்வி - பக்குவம். குறைசெவ்வி - அபக்குவம். விழுப்பேறு - பரமுத்தி. வழிப்பேறு - அபரமுத்தி. ஆண்டான்மெய்க்கண் உறையும் அறிவுக் கடவுளரை வழிபட்டு அவர்நிலை எய்திய முனிவர் ஒரு நூற்றெண்மரும் இவ்விருமலமுடையார் நிலையினராவர். முனிவர் - உருத்திரர். (சிகண்ட உருத்திரரும் இந்நிலையினரேயாவர்.) முரண்சேர்...தாரே—வலிமை மிக்க எல்லாக் கட்டும் உடையார் மும்மலத்தாராவர். (ச)

479. பெத்தத்த சித்தொடு பேண்முத்தச் சித்தது
ஒத்திட் டிரண்டிடை யூடேற்ரூர் சித்துமாய்
மத்தது மும்மலம் வாட்டுகை மாட்டாதார்
சத்தத் தமிழ்ந்து சகலத்து ளாரே.

(ப. இ.) முதன்மை மலப்பசை அறிவொடு தங்கிய ஒரு மலமுடை யார் விழுமிய முழுமுதற் சிவனேயாவர். சித்தது : அது முதற் பொருள் ஈறு ; பகுதிப் பொருள் விகுதி. முதற் பொருள் - பகுதிப் பொருள். ஈறு-விகுதி. ஒத்திட்...சித்துமாய்—இருமலப் பிணிப்பினர் மெய்யுணர்வின ராய், குறைசெவ்வியுடையராய்; மத்தத்து...மாட்டாதார்—மருளுடைய ராய் மும்மலத்தை அடக்கும் வலியில்லாராய் ; சத்தத்...ளாரே—அரு வுடலோடுறைந்து மும்மலக் கட்டுடையாராவர். மத்தத்து-உன்மத்தத்து; மருள் (தலைக்குறை) சத்தம்-ஓசை. இஃது அருவுடலைக் குறிக்கும். (இ)

480. சிவமாகி ஐவகைத் திண்மலஞ்[1] செற்றோர்
அவமாகார் சித்தர்முத் தாந்தத்து வாழ்வார்
பவமான தீர்வோர் பசுபாசம் அற்றோர்
நவமான தத்துவம்[2] நாடிக்கண் டோரே.

(ப. இ.) சித்தர் - இறைவிளங்கும் நிறையுள்ளம் உடையார். முத்தாந்தம் - விழுப்பேறு ; சாயுச்சியம். பவம் - பிறப்பு. நவமான தத்துவம் - ஒன்பதாகிய மெய். அவை : அறிவு, (அத்தன்), ஆற்றல் (அன்னை), நுண்ணுசை (நாதம்), நிலைவோசை (விந்து), அருளோன், ஆண்டான், அரன், அரி, அயன் என்னும் ஒன்பது மெய்கள். நாடிக் கண்டார் - திருவருட்கண்ணுல் ஆய்ந்துணர்ந்தார். (க)

481. விஞ்ஞானர் ஆணவ கேவல மேவுவோர்
விஞ்ஞானர் மாயையில் தங்கும் இருமலர்
அஞ்ஞானர் அச்சக லத்தர் சகலராம்
விஞ்ஞான ராதிகள் ஒன்பான்வே றுயிர்களே.

---

1. முன்புதிருக். கஉ. கண்ணப்பர், கடிச.
2. சிவஞ்சத்தி. சிவஞானசித்தியார், உ : ச . உ.

(ப. இ.) மலப்பசை ஒன்று மட்டும் பொருந்துவோர் மெய்யுணர் வினராவர்; அவர் மூவகையினர். (ஆவியருளோன், அறிவுக் கடவுளர் எண்மர், எழுகோடி மந்திரத் தலைவர்.[1]) விஞ்ஞான...இருமலர்— தூமாயையில் தங்கும் இருமலத்தாரும் மூவகையினர். (குறைசெவ்வி யுடையார், விழுப்பேற்றினர், வழிப்பேற்றினர்.) அஞ்ஞான...சகலராம்— தூவாமாயையில் உள்ள மும்மலமுடையாரும் மூவகையினர். (மட்ட மானவர், விரைவானவர், மிகுவிரைவானவர்; மந்தர், தீவிரர், தீவிரதரர்.) விஞ்ஞான...உயிர்களே—மேலே கூறிய மூவகை ஒன்பது பிரிவாம் உயிர்கள். விஞ்ஞானர் - தூமாயையினர். அஞ்ஞானர் - தூவாமாயை யினர். (எ)

482. விஞ்ஞான கன்மத்தால் மெய்யகங் கூடிய
அஞ்ஞான கன்மத்தி னல்சுவர் யோனிபுக்
கேஞ்ஞான மெய்தீண்டி யேயிடை யிட்டுப்போய்
மெய்ஞ்ஞான ராகிச் சிவமேவல் உண்மையே.

(ப. இ.) விஞ்ஞான கன்மத்தர் - மேலான ஞானகன்மத்தைப் புரிபவர். அஞ்ஞானகன்மத்தால் - அந்த ஞானகன்மம் புரிவதாலே. சுவர்யோனி - தேவப் பிறப்பு. எஞ்ஞானம் - மேலெழும் ஞானம். (எஞ் ஞானம் என்பது எவ்வுஞானம் என்பதன் குறைவாகும்.) எவ்வுதல் - மேலெழுதல். மெய்யுணர்வு கைவந்த தவத்தோர் அறிவுநிலையினராய்ச் சிவன் திருவடியைக் கூடுதல் மெய்ம்மையே. (அ)

483. ஆணவந் துற்ற வவித்தா நனவற்றோர்
காணிய விந்துவா நாத சகலாதி
ஆணவ மாதி யடைந்தோ ரவரன்றே
சேணுயர் சத்தி சிவதத் துவமாமே.

(ப. இ.) ஆணவத்தால் பொருந்திய மறைப்பு நனவில்லாதார் காணும் பொருட்டு விந்துநாதம் ஆணவமாதி அடைத்தோராவர். எல்லாவற்றுக்கு மேலாக அன்னை மெய்யும் அத்தன் மெய்யும் உள்ளன: அன்னை-சத்தி. அத்தன்-சிவன். ஆணவந்துற்ற-ஒட்டாய்ப் பொருந்திய பழமலம். துற்ற-அடைந்த; பொருந்திய. அவித்தாம் நனவு-மறைபட்ட நனவு. (அவித்து - மறைவு). அற்றோர் - மருள் நனவு நீங்கினோர். சகலாதி - புணர்வாகிய உடல் கலன் உலகம் ஊண் முதலியன. ஆணவ மாதி அடைந்தோர் - ஆணவமுதலியன நீங்கினோர். சேணுயர் - மிகத் தொலைவாகிய.

(அ. சி.) அவித்து ஆம் நனவு - மண்பட்ட அறிவு. விந்து ஆம் நாதம் - விந்துவைப் படைக்கின்ற நாதம். (கு)

---

1. மந்திரங்க ளெழுகோடி, திருமுறை கண்ட புராணம்-உ அ.

# 16. பாத்திரம்

484. திலமத் தனையே சிவஞானிக் கீந்தால்
பலமுத்தி சித்தி பரபோக மூந்தரும்
நிலமத் தனைபொன்னை நின்மூடர்க் கீந்தால்
பலமுமற் றேபர போகமுங் குன்றுமே.[1]

(ப. இ.) திலமத்...குன்றுமே - எள்ளளவு பொருள் அகனமர்ந்த அன்பினராய் மிகக் கனிந்த மொழியினராய், முகமலர்ந்த நகையினராய், தலைகுனிந்த நிலையினராய், குறிப்புணர்ந்த அறிவினராய்ச் சிவஞானிகளுக்குப் பணிவுடன் கொடுத்தால் அளவில்லாத அழிவில்லாத செல்வ வாழ்வும், அறமும், அருளும், திருவடிப் பெருவாழ்வும் எளிதின்வந் தெய்தும். முப்பொருளுண்மை கொள்ளா மைப்படிந்த மனத்தர் செப்பும் முழுமூடராவர். அறிந்தோ அறியாமலோ அம் மூடர்க்கு ஈயுமாறு நேர்ந்துவிட்டால் அந்தோ பயனிழந்து மேலாம் திருவடியின்பமும் கிட்டாது குன்றிப்போம். அம்மட்டோ! அம்மூடர்க்கு ஈந்த தானப் பயனல் இழிப்பிறப்பு அடைந்து, அழிவில் அல்லலுழப்பர். திலம் - எள். பலம்-கிட்டும் பேறு. முத்தி - வீடு. சித்தி-சிவவுலக வாழ்வு. பரபோகம்-திருவடிப்பேறு. நின்மூடர்-சிவனினைவு அற்றோர். பரபோகமும் குன்றும்-திருவடிப் பேற்றினுக்கு உரிய வழியும் கிட்டாது. (க)

485. கண்டிருந் தாருயிர் உண்டிடுங் காலனைக்
கொண்டிருந் தாருயிர் கொள்ளுங் குணத்தனை
நன்றுணர்ந் தார்க்கருள் செய்திடு நாதனைச்
சென்றுணர்ந் தார்சிலர் தேவரு மாமே.[2]

(ப. இ.) உயிரைத் துன்புறுத்திக் கொண்டு செல்லும் கூற்றுவன் செயலை உலகோர் நேரே கண்டிருந்தனர். கொண்டிருந்...குணத்தனை—தன்னை வழிபட்டார் பொருட்டுக் கூற்றுவன் உயிரைக் கொள்ளைகொண்ட எண்குணக் கடவுளை. நன்றுணர்ந்தார் - நானெறியின் நன்மையினை உணர்ந்தவர். தேவருமாவர் - சிவவுலகத்து வாழும் தேவரும் ஆவர். மாற்றருங் கூற்றுவனை மாற்றும் ஆற்றல் சிவபெருமான் ஒருவனுக்கேயுள தென்பது. அப்பெருமை தங்களைச் சாரவேண்டும் என்னும் அவாவினுல் பாடிய 'புக்கடிமையினுல்' என்ற பாட்டால் விளங்கு மென்ப. (உ)

486. கைவிட்டி லேன்கரு வாகிய காலத்து[3]
மெய்விட்டி லேன்விகிர் தன்னடி தேடுவன்
பொய்விட்டு நானே புரிசடை யானடி
நெய்விட் டிலாத இடிஞ்சிலு மாமே.

---

1. சிவஞானச். சிவஞானசித்தியார், அ : உ - கசு.
,, நெஞ்சின். திருக்குறள், உஎசு.
,, அடங்கலர்க். சிவகசிந்தாமணி, முத்தி.உஎ.
2. கூற்றங். திருக்குறள், உசுக.
,, புக்கடிமையினுல். திருவாய்மொழி - கூகஙக.
3. கருவாய்க். அப்பர், ச : கூடு - ஈ.

(ப. இ.) கருவாய்க் கிடைக்கின்ற காலத்தும் சிவபெருமான் கழலே நினையும் கருத்துடைய திருநெறி ஒழுக்கத்தை நெகிழவிட்டேன் அல்லன். மெய்விட்டிலேன்-உடம்பினிடத்துள்ள எனது என்னும் பற்றை விட்டவன் அல்லன். விகிர்தன் - பல்வேறு திருமேனிகொள்ளும் சிவபெருமான். பொய்விட்டு - உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று செய்யும் அன் பிலாப் பொய்ச்செயல் செய்து. நானே...னடி—பின்னற் சடையினை யுடைய சிவபெருமான் திருவடியினை யானே (தேடுவன்) நெய்விட்... மாமே—நெய்விடாது எரிக்க விரும்பிய விளக்குப்போல் பயனில்லதாகும். இடிஞ்சில் - அகல்; இட ஆகுபெயராய் விளக்கைக் குறித்தது. எண்ணெய் இல்லா விளக்குப் பயன் பெருமை போலச் சிவ நினைவு இல்லாதவரும் பயன்பெறார்.

(அ. சி.) இடிஞ்சில் - அகல். வறடு - மலட்டுப் பசு. (கூ)

487. ஆவன ஆவ அழிவ அழிவன
போவன போவ புகுவ புகுவன
காவலன் பேர்ந்தி காட்டித்துக் கண்டவன்[1]
ஏவன செய்யும் இளங்கிளை யோனே.

(ப. இ.) கருவினுள் ஆணையான் அமைத்த 'பேறு இழவு' முதலி யனவும் பிறவும் ஆம். காவலன்...யோனே. சிவபெருமான் காட்டிக் காண்பவன்; அவன் திருவுள்ள ஆணை வழிப்பட்டு அவன் ஏவின செய் வோரே புத்தடியாராவர். இளங்கிளை - புத்தடிமை. (ஈ)

---

# 17. அபாத்திரம்

488. கோல வறட்டைக் குனிந்து குளகிட்டுப்
பாலைக் கறந்து பருகுவ தேயொக்கும்[2]
சீலமும் நோன்பும்[3] இலாதவர்க் கீந்தது
காலங் கழிந்த பயிரது ஆகுமே.[4]

(ப. இ.) தகுதியல்லாதார்க்கு ஈவது வறட்டுப் பசுவைப் பேணிப் பால் கறந்து குடிப்பதை ஒக்கும். குனிந்து - வணங்கி. வறட்டை - கன்றீனுக் கறவை. காலம் கழிந்த - பருவம் நீங்கிய. சீலம் - சரியை. நோன்பு - கிரியை.

(அ. சி.) குளகு - தழை. (க)

---

1. காணுங். சிவஞானபோதம், ௧௧.
,, பன்னியசெந். அப்பர், சு, ௧௧ - க.
,, ஞானங். டு. ,, உசு - ஙூ.
,, இளமை, ,, டு கூள - உஅ.
2. பப்போதிப். அப்பர், சு. டு - சு.
3. சீலமின்றி. அ. ஆனந்தமாலை. கூ.
4. முன்பெலா, அப்பர், சு. உஅ - க.

**489.** ஈவது யோக இயம நியமங்கள்
சார்வ தறிந்தன்பு தங்கு மவர்க்கன்றி
ஆவ தறிந்தன்பு தங்கா தவர்களுக்
கீவ பெரும்பிழை யென்றுகொ லீரே.

(ப. இ.) யோகவுறுப்பாகிய இயம நியமங்களே செந்நெறியிலேச் சார்வதற்குரியன என்று அறிந்து அன்புடன் அவற்றைக் கைக்கொண் டார்க்கே ஈவது தக்கது ஆகும். யோகம் - மனவொருக்கம்; அஃவு. இயமம் - தீமையகற்றல். நியமம் - நன்மை ஆற்றல். அன்றி...னீரே— இவ்வுண்மை அறிந்து அன்புகொண்டு அவற்றை மேற்கொள்ளாதவர் கட்குக் கொடுப்பது பெருங்குற்றமாகும். (உ)

**490.** ஆமா றறியான் அதிபஞ்ச பாதகன்
தோமாறும் ஈசற்குந் தூய குரவற்குங்
காமாதி விட்டோர்க்குந் தரல்தந்து கற்பிப்போன்
போமா நரகிற் புகான்போதங் கற்கவே.

(ப. இ.) பஞ்சபாதகன் - பொய், கொலை, களவு, காமம், பொருள் நசை ஆகிய ஐந்து பாவமும் அஞ்சாது நெஞ்சாரச் செய்தவன். தோமா றும் - ஆணவமலக் குற்றத்தை மாற்றும். குரவன் - ஆசான். காமாதி - காமம் வெகுளி மயக்கம். விட்டோர்-தவத்தோர். தரல்-தரவேண்டிய நற்பொருள்கள். தந்து - அன்புடன் அளித்து. கற்பிப்போன் - தன்னை யும் பிறரையும் அவ்வழி நிறுத்துவோன். போதம் - திருவடியுணர்வு. கற்க - ஏற்றுக்கொள்க. (நற்சார்பில் வந்து தோன்றுவன்.) (ஊ)

**491.** மண்மலி யத்தனை மாதனம் ஈயினும்
அண்ணல் இவனென்றே யஞ்சலி யத்தனுய்
எண்ணி யிறைஞ்சாதார்க் கீந்த இருவரும்
நண்ணுவர் ஏழா நரகக் குழியிலே.

(ப. இ.) உண்மை உணர்வுடன் இரவலர் இறைவர் திருவடியைத் தொழாராயின் அவர்க்கு : ஈந்தவர் - கொடுத்தவர். (அதுபோல் புரவ லரும் தொழாஅராயின்) மண்மலி...மீயினும் - மண்ணும் மலியும் போல் பரப்பும் செறிவும் உயர்வுமாகிய பெரும் பொருள் தந்தாலும். (ஏற் போர்) இருவரும்...குழியிலே - ஈந்தவர் ஏற்றவர் ஆகிய இருவரும் கடு நரகக் குழி வீழ்வர். (ஏற்போர் என ஒரு சொல் வருவிக்க) எனவே, இரவலரும் புரவலரும். இறைவணக்கமுடையராய்த் தங்களே ஆண்டவ னுக்கு அடிமை என்றும் தங்கள்பாலுள்ள அறிவு செல்வங்களே அவன் உடைமை என்றும் அருளால் உளங்கொண்டு ஒருவருக்கொருவர் ஈந்தும் ஏற்றும் உதவியாய் வாழ்வதே திருநெறி என்பது பெறப்படும். (எ)

# 18. தீர்த்தம்

**492.** உள்ளத்தின் உள்ளே உளபல தீர்த்தங்கள்
மேள்ளக் குடைந்துநின் முடார் வினைகெடப்
பள்ளமும் மேடும் பரந்து திரிவரே
கள்ள மனமுடைக் கல்வியி லோரே.[1]

(ப. இ.) தீர்த்தங்கள் - ஆண்டவனை மறவாமையாகிய அன்பும், அவன் பெருந்துணையாகிய அருளும், அவ் வருளால் கணிக்கும் 'சிவய சிவ' என்னும் திருவைந்தெழுத்தும், அம் மறை வண்ணமாகிய நாயன் மார் திருவுரு முதலியவற்றில் நிறைந்துநிற்கும் சிவனருளும் உள்ளத்து ஓவா துன்னத் தீர்த்தங்களாகும். மெள்ளக்...வினை கெடப் - பிறப்பிற்கு ஏதுவாகிய வினையும், அதற்கேதுவாகிய மலமும்அகல மேற்கூறிய உள்ளத்துள்ள தீர்த்தங்களை நன்மனத்துடன் கைக்கொண்டால், அவ்வாறு முடியும்; அங்ஙனம் செய்யார். பள்ளமும்.. லோரே - காடும் மலையும் சுற்றித் திரிவோர் திருமுறைக் கல்வியில்லாதவராவர். (க)

**493.** தளியறி வாளர்க்குத் தண்ணிதாய்த் தோன்றுங்
குளியறி வாளர்க்குக் கூடவும் ஒண்ணுன்
வளியறி வாளர்க்கு வாய்க்கிலும் வாய்க்குந்
தெளியறி வாளர்தஞ் சிந்தையு ளானே.

(ப. இ.) தண்ணிது - குளிர்ந்தது; இன்பம். ஒண்ணுன் - பொருந்தான். வளி - காற்று; உயிர்மூச்சு. (ஈண்டு மன ஒருக்கமாகிய யோகப் பயிற்சி) வாய்க்கினும் வாய்க்கும்: நானெறியு ளொன்றுகிய சிவயோகத்தால் வாய்க்கச்செய்யும். தெளியறி...ளானே - திருவடி யுணர்வுடையார் தம் தூயவுள்ளத்துறையும் சிவபெருமான்.

(அ. சீ.) தளி - இரக்கம். குளி - உலக அறிவு. (உ)

**494.** உள்ளத்தின் உள்ளே உணரும் ஒருவனைக்
கள்ளத்தி னருங் கலந்தறி வார் இல்லை
வெள்ளத்தை நாடி விடுமவர் தீவினைப்
பள்ளத்தி லிட்டதோர் பந்தருள் ளானே.[2]

(ப. இ.) மெய்யடியார்தம் அன்புடலாகிய பள்ளத்தில் அமைத்த இறைபணியாகிய பந்தர் நிழலில் உள்ள சிவபெருமான். உள்ளத்தின்... ஒருவனை - மலம்நீங்கிய அன்பர் உள்ளத்தில் உணர்வுக்கு உணர்வாய் உணரப்படும் ஒப்பில் ஒருவனும் சிவபெருமானை. கள்ளத்தி...வார் இல்லை - தீநெறிக்கண் செல்வார் யாரும் கலந்துநிற்கும் சிவனை அறியமாட்டார். வெள்ளத்தை...தீவினை - அவர் தீவினை எஞ்சுவினையாகிய வெள்ளத்தை நாடிச்சென்று கூடிவிடும் வெள்ளம் - அளவிறந்த தொகை. திருத்தநீராகிய வெள்ளத்தை எனினும் அமையும். இப் பொருட்கு வெள்ளத்தை நாடவிடுமவர் தீவினை என்க. நாடி: எச்சத் திரிபு. (கூ)

---

1. கோடி தீர்த்தங். அப்பர். தி. கூக - கூ.
2. உள்ள முள்கலந். ,, ,, அஉ - சு.

495. அறிவார் அமரர்கள் ஆதிப் பிராஞைச்
சேறிவா னுறைபதஞ் சென்று வலங்கோள்
மறியார் வஞைக்கை வருபுனற் கங்கைப்
பொறியார் புனல்முழ்கப் புண்ணிய ராமே.

(ப. இ.) ஆதிப்பிராஞகிய சிவபெருமாஞை மறவாநெஞ்சினராய் உறவான பேரன்பர் விழைதக்க அமரர் எனப்படுவர். அத்தகைய அமரர் அவஞை அவனருளால் உள்ளவாறு உணர்வார்கள். அமர்தல் - விரும்புதல். எங்கும் நீக்கமற நிறைந்துள்ள சிவபெருமான் அடியார்பொருட்டு ஆண்டாண்டு வெளிப்பட்டருளிய இடங்கள் உறைபதங்களாகும். அப் பதங்களே திருவூர்கள் எனவும், திருக்கோவில்களெனவும் சிறப்பித்துச் சொல்லப்படும். அடுக்கினுலும் நெகிழ்வினுலும் மறிந்துவீழும் அழகு சேர் வஞைக்கையினையுடைய உலக அன்னையையொத்த கங்கை என்னும் தீர்த்தத்தில் 'என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே முன்னை நீபுரி நல்விஞைப் பயனிடை' என்பதுபோன்று முன்னைப் புண்ணியப் பேறுடையார் பொறியார் ஆவர். அவர் இப்பொழுது முழுகுவதால் மேலும் மிக்க புண்ணியப் பேற்றினராவர். மறியார் வஞைக்கையைக் கங்கைக்கு அடையாக்கலும் ஒன்று. வலங்கொள் - வெற்றிகொள்ளுதல். அறிவார் - திருவருளால் உணர்வார். பொறியார்புனல் - புண்ணிய நீர். (சு)

496. கடலிற் கெடுத்துக் குளத்தினிற் காண்டல்
உடலுற்றுத் தேடுவார் தம்மையோப் பாரிலர்
திடமுற்ற நந்தி திருவரு ளாற்சென்
றுடலிற் புகுந்தமை ஒன்றறி யாரே.[1]

(ப. இ.) திருவருளுடன் மாறுற்றுச் சிவபெருமாஞைத் தேடப் புகுவார் கடலில் போகட்ட பொன்ஞைக் குளத்தில் தேடி எடுக்கத் துணிந்து குளத்தில் இறங்கி முயல்வாரோடு ஒப்பர். திருவருள்வழி நிற்பார்க்குச் சிவபெருமானுகிய நந்தி அத் திருவருள் வழியாக உடலிற் புகுந்து நின்றருளுவன். இவ் வுண்மை ஒன்றும் அறியாராகவும் சிலருளர். உடலுற்று - மாறுபாடுற்று. திடமுற்ற - ஆருயிர்க்கு நிலைத்த சார்பான. நந்தி - சிவபெருமான். (டு)

497 கலந்தது நீர நுடம்பிற் கறுக்குங்
கலந்தது நீர நுடம்பிற் சிவக்குங்
கலந்தது நீர நுடம்பில் வெளுக்குங்
கலந்தது நீர்நிலங் காற்றது வாமே.

(ப. இ.) உடம்பு ஐம்பூதக் கூட்டம். அவற்றுள் நிலம் பொன்மை ; நீர் வெண்மை ; தீ செம்மை ; காற்று கருமை ; வானம் புகைமை. இத் திருப்பாட்டில் குறிக்கப்படும் கறுப்பு, சிவப்பு வெளுப்பு ஆகிய மூன்றும் முக்குணங்களைக் குறிப்பன. இவற்றைத் திருவருள் துணையால் சிவ நினைவால் தூய்மைப்படுத்துவதே தீர்த்தமாடுவதாகும். (சு)

---

1. தோற்றப். அப்பர், ச. கஅ - சு.
,, நீற்றழகர். கஉ. ஏயர் கோன், கஙக.
2. பொன்பார். உண்மை விளக்கம், சு.

# 19. திருக்கோயில்

498. தாவர லிங்கம் பறித்தோன்றில் தாபித்தால்
ஆவதன் முன்னே அரசு நிலைகெடுஞ்
சாவதன் முன்னே பெருநோய் அடுத்திடும்
காவலன் பேர்நந்தி கட்டுரைத் தானே.[1]

(ப. இ.) 'தழைத்தோ ராத்தியின்கீழ்த் தாபரம் மணலாற் கூப்பி' என்பதனுல் செந்தமிழ்ச் செந்நெறியாளரின் சீரிய வழிபாடு நாரிபாகன் தன் சிறந்த திருவுருவமாகிய செந்தழல் அடையாளமாம் சிவக் கொழுந்தின் வழிபாடாகும். இதுவே அருவுருவத் திருவுரு. இதன்கண் எத் திருவுரு நினைவினையும் ஏற்றித் தொழுதற்கிடனுண்டாம். மாவா யிருப்பின் அவரவர் மனமிசைந்த உருவுடைப் பண்டமாக்கி யுண்பதும், பொற்கட்டியாயிருப்பின் வேண்டியவாறு உருவு வேறுபட்ட அணியமைத் தணிந்து அகமகிழ்தலும் இதற்கொப்பாகும். எல்லா நினைவுக்கும் நிலைக் களமாக நிலையுற்றதென்னும் பொருளில் தாவரம் என்றனர். வேற்று நெறியாளர் ஆற்றுப் பகைமையால் அத் தாவரத்தைப் பறித்தெடுத்து ஆண்டு வேருென்றைக்கொண்டு நிலைநாட்டுவர். அங்ஙனம் செய்வதனை வேந்தன் முன்னறிந்து ஆந்துணையும் தடுத்தல்வேண்டும். தடாது ஒழியின் புதிதாக நாட்டப்புகுந்தவுருவு நாட்டி முடிவதன் முன்னம், வேந்தனும் வேந்து இடைமுரிந்து கெடும். அவர்களும் மாண்டு மடிவதன்முன்னே தீண்டற்கும் காண்டற்கும் ஒவ்வாத் தொழுநோயராய்ப் பெருந்துன்பத் தழுந்துவர். அனைத்துலக நன்மைக்கும் நினைப்பரிய காவலனுய் நீடு விளங்கும் நந்திப்போர்சேர் நமச்சிவயத்தன் கட்டுரையாய் நவின் றருளினன். பறித்து - பிடுங்கி. ஒன்றில் - வேருென்றை. தாபித்தால் - அங்கே நிலைநாட்டினுல். ஆவதன் முன்னே - அப்படி நாட்டிய உருவம் நிலைப்படுவதன் முன்னே. பெருநோய்- அருவருக்கத்தகுந்த தொழுநோய். பேர் நந்தி - முழுமுதற் பெருங்கடவுள். (க)

499. கட்டுவித் தார்மதிற் கல்லொன்று வாங்கிடில்
வெட்டுவிக் கும்அபி டேகத் தரசரை
மூட்டுவிக் கும்முனி வேதிய ராயினும்
வெட்டுவித் தேவிடும் விண்ணவன் ஆணையே.

(ப. இ) கட்டுவித்து ஆர் மதில் - செந்நெறிச்செல்வர்களால் கட்டு விக்கப்பெற்று உயர்வு அகலம் திண்மை அருமை என்னும் நான்கினுலும் சிறந்து காட்சிக்கு இனிமையாக என்றும் நின்று நிலவும் திருக்கோயில் திருமதில். வாங்கிடில்-அதில் ஒரு சிறு துண்டுக்கல் நீக்கப்பட்டால், வெட்டு விக்கும் - நீக்கியவர்களே அழிவிக்கும். அபிடேகத்தரசர் - திருமுடி சூடிய வேந்தர். மூட்டுவிக்கும் - இடருறச்செய்யும், விண்ணவன் - பரவெளி யாகிய சிவபெருமான். (உ)

500. ஆற்றரு நோய்மிக் கவனி மழையின்றிப்
போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர்
கூற்றுதைத் தான்திருக் கோயில்க ளெல்லாஞ்
சாற்றிய பூசைகள் தப்பிடில் தானே.

---

1. வாயிருந். அப்பர். இ. இஅ - க.
,, ஆனை. கஉ. திருநாவுக்கரசர், உகக.

(ப. இ.) கூற்றுதைத்த சிவபெருமான் திருக்கோவில்களில் எல்லாம் நெறிநூலும் துறைநூலுமாகிய செந்தமிழ் வேத ஆகமங்களில் விளம்பிய படி நாள்வழிபாடு சிறப்புவழிபாடுகள் முட்டாது செய்தல் வேண்டும் செய்யத் தவறுமாஞல் உலகத்துக்கு அளவில்லாத கொடிய நோய்கள் பெருகும்: வேண்டுங்காலத்து மழைபெய்யாது. சிறப்புடை மன்னரும் போர்வலி குன்றி மறமும் மானமும் இழந்து சீரழிவர். (கூ)

501. முன்னவ னூர்கோயில் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரி வளங்குன்றுங்
கன்னங் களவு மிகுத்திடுங் காசினி
என்னரு நந்தி எடுத்துரைத் தானே.

(ப. இ.) கூற்றுதைத்த கடவுள் எட்டுவான் குணத்துச் சிவபெருமான் ஒருவனே. அவன் எழுந்தருளியிருக்கும் திருக்கோவில்கள் இரண்டு ஒன்று ஆருயிர்கள், மற்றொன்று திருக்கோயில். இவ் விரண்டிடங்களும் விழுமிய முழுமுதற் சிவபெருமானே முறையே சென்று நிலைபேறுடுவதும். நின்று நிலைபேறுடுவதும் ஆகிய திருவடையாளங்களாம். இவற்றின் வழியாக இவற்றை வழிபடும் மெய்யன்பினர்தம் தூய திருவுள்ளத்துச் சிவன் எழுந்தருள்வன். இவ் விரண்டிடங்களிலும் செய்யும் பூசை. 'முன்னவனூர் கோயில் பூசையாகும்.' அதற்கு முட்டு ஏற்பட்டால் ஆளும் வேந்தர்க்கு நாளும் தீங்குண்டாகும். வேண்டுங்காலத்து மழை பெய்யாது. உலகத்தில் கன்னங்களவு அளவில்லாமல் பெருகும் இங்ஙனம் நந்தியருள் செய்தனன். வாரி - வருவாய்; மழை. கன்னம் - களவெடுப்பதற்காகச் சுவரில் தோண்டுங் கருவி. மிகுத்திடும் - அளவின்றிப் பெருகும். காசினிக்கு (என்னும் பாடத்திற்கு) - உலகத்தில் வாழும் மக்களுக்கு (ஆகுபெயர்). முட்டிடின் - சிறப்பொடு பூசனை[1] செய்யத் தடைப்பட்டு நடவாமற் போனால். (சு)

502. போர்கொண்ட பார்ப்பான் பிரான்தன்னை அர்ச்சித்தால்
போர்கொண்ட வேந்தர்க்குப் போல்லா வியாதியாம்
பார்கொண்ட நாட்டுக்குப் பஞ்சமு மாம்என்றே
சீர்கொண்ட நந்தி தெரிந்துரைத் தானே.

(ப. இ.) இயற்கைச் செந்தமிழ் அந்தணாளர் பார்ப்பார் எனப் படுவர். திருவடியே குறிக்கோளாக மீளா அடிமையாய் வாழ்வதே பெரும்பேற்றின்பாக அகமும் புறமும் ஒத்துப் பார்ப்பார் ஒழுக்கமிக்க விழுத்திணைப் பார்ப்பாராவர். அவர்களே பூசைக்கு உரியவர். தமிழ் நாட்டில் வெளியிலிருந்து வருவாரும் உயர்நிலைப் பெயரை மயலாய் வைத்துக்கொள்வர். அவர்கள் போர்கொண்ட பார்ப்பார் எனப்படுவர். அவர்கள் திருக்கோவில் பூசைசெய்யும் தக்கவராகார். அவர்களைக் கொண்டு பூசைசெய்வித்தால் நீமைகளைப் போர் செய்தகற்றும் வேந்தற்கு நீங்காக் கொடுநோய்கள் வீங்கும். முறைசேர் திருநாட்டில் வற்கடமாகிய பஞ்சமும் உண்டாகும். (ஙி)

---

1. பிறப்போடிறப்பென்று. கூ. கூ0 - இ.

# 20. அதோமுக தெரிசனம்

503 எம்பெரு மான்இறை வாமுறை யோஎன்று
வம்பவிழ் வானோர் அசுரன் வலிசொல்ல
அம்பவள மேனி அறுமுகன் போயவர்
தம்பகை கோல்லென்ற தற்பரன் தானே.[1]

(ப. இ.) நறுமணம் கமழும் வாடாக் கற்பகமாலை யணிந்த பீடார்மால் உள்ளிட்ட நால்வேறியற்கை முப்பத்து முக்கோடி தேவர்களும் சிவபெருமானிடம் வந்து முறையிட்டனர். 'எம்பெருமானே சூரபன்மன் முதலிய அசுரர் செய்யும் கொடுமை பொறுக்கமுடியவில்லை : எங்களை மாண்டொழியாவண்ணம் ஆண்டருள வேண்டும்' என்று முறையிட்டனர். சிவபெருமான் அறுமுகக் கடவுளைச் சென்று சூரனை அடக்கி விண்ணவரைக் காத்தருளப் பணித்தருளினன். திருவைந் தெழுத்தால் நாளும் நிகழும் திருக்கூத்து ஐந்தொழில் அருட்கூத்து அவ்வைந்தொழிற்குரிய முகங்கள் ஐந்து. சிறப்பாக நடக்கும் போர் முதலியவை தன் ஆற்றலாகிய சத்தியினால் நிகழ்த்தப்படுவன. அதன் பொருட்டுக் கொள்ளும் திருமுகம் ஒன்றுஞ்சேரத் திருமுகங்கள் ஆறுகும். ஐம்முக அருளோனும் அறுமுகப் பொருளோனும் ஒன்றே என்பது திகழ் உருவின் எண்ணிக்கையானும் உணரலாம். அவ்விரு வர் முகம்விழி மலர்க்கை மூன்றும் தனித்தனி முப்பது. செந்தமிழ்க் குரிய இயற்கைச் சீரிய எழுத்தும் முப்பதே. இவ்வுண்மையை விளக்கும் திருப்பாட்டு வருமாறு :

"முகம்விழி மலர்க்கை மூன்று முப்பது முன்பு நாம்செய்
மகவினைக் கருள வந்த வள்ளலுக் கீண்டுச் சாடப்
புகுமிறைக் கவைகள் மூன்றும் முப்பதே பொலிவும் அற்றே
திகழுரு வானும் சேயைச் சிவனெனத் தெளிய லாமே."

—தணிகைப்புராணம். சீபரிபூரண நாமப்படலம், கஅகூ.

இதனாலன்றே 'திருமுருகன்' அறுமுகச்சிவன் என்று அழைக்கப் படுகின்றனன். அவனுக்குரிய ஆறெழுத்து அருமறையும் ஓம்சிவாயநம என்று வழங்கப்பெறுகின்றது. வம்பவிழ் - மணதிறைந்த மாலையணிந்த. அசுரன் - சூரபன்மன். அவர்தம் பகை - தேவர்பகை தற்பரன் - தானே முழுமுதல் ; சிவபெருமான். பொருளோன் - மகன்.

' தம்பொரு ளென்பதம் மக்கள் அவர்பொருள்
தந்தம் வினையான் வரும்' —குகூ.

என்னும் செந்தமிழ்ப் பொதுமறையின்கண் மக்களைப் பொருளென வழங்கியிருப்பதாலும் காண்க.

மேலும் இவ்வுண்மை வரும் நம்பிஆரூரர் திருப்பாட்டானும் உணர்க :

"பொரும்பலம துடையசுரன் சூரகனைப் பொருது
பொன்றுவித்த பொருளினைமுன் படைத்துகந்த புனிதன்
கரும்புவிலின் மலர்வாளிக் காமனுடல் வேவக்
கனல்விழித்த கண்ணுதலோன் கருதுமூர் வினவில்

---

1. சமர. அப்பர், இ. சுச-கo.

இரும்புனல்வெண் டிரைபெருகி யேலமில வங்கம்
இருகரையும் பொருதலைக்கு மரிசிலின்றென் கரைமேல்
கரும்பூவெண் முத்தரும்பிப் பொன்மலர்ந்து பவளக்
கவின்காட்டுங் கடிபொழில்சூழ் கலயநல்லூர் காணே.''

—எ. கஉ - கூ.

(அ. சி.) அசுரன் - சூரபன்மன். (க)

504. அண்டமோ டெண்டிசை தாங்கும் அதோமுகங்
கண்டங் கறுத்த கருத்தறி வாரில்லை
உண்டது நஞ்சென் றுரைப்பர் உணர்விலோர்
வெண்டலை மாலை விரிசடை யோற்கே.

(ப. இ.) அண்டங்களையும், எட்டுத்திசைகளையும் முட்டின்றிக் காத்தருளும் சிவபெருமானின் நிலவறையாகிய கீழ்நோக்கிய திருமுகம் அதோமுகம். அம் முகத்தின் கண்டங்கறுத்தது குற்றம் பொறுத்ததே யாம். மற்றுக் கூறப்படும் புராணக்கதைகள் உருவகமேயாம். கண்டங் கறுத்த கருத்து : திருப்பாற்கடல்-ஆருயிர் நன்முய்வாழச் சிவபெருமான் திருவருளால் நல்கிய உலகு உடல் உடைமைகளாம். கடைதல் - சிவனை மறந்து யான் எனதுஎன்னும் செருக்கொடு வானவர் தானவர் எனப்படும் இருவினைக்கண் முயலுதல். நஞ்சு - சிவபெருமானை மறந்ததாகிய குற்றம். அதுவே கறையாகும். அக் குற்றத்தை ஏற்றுப் பொறுத்ததே கண்டம் கறுத்ததாகும். இதுவே உண்மைக்கருத்து. நஞ்சு - வெறுப்பு. கண்டம் - வரம்பு; திருவருளாணை.

(அ. சி.) அதோமுகம் - பிரகிருதிமாயை. (உ)

505. செய்தான் அறியுஞ் செழுங்கடல் வட்டத்துப்
பொய்யே யுரைத்துப் புகழும் மனிதர்கள்
மெய்யே யுரைக்கில் விண்ணோர் தொழச்செய்வன்
மைதாழ்ந் திலங்கு மிடறுடை யோனே.

(ப. இ.) பொருள்சேர் புகழுக்குரிய இறைமைக்குணம் இலராயினுரை மயக்கத்தால் இறையென்று கொண்டு முறையின்றிப் புகழும் பொய்யுரை மனிதர்களை மெய்ப்பொருளாம் சிவபெருமான் அறிவன். அச் சிவபெருமானை மெய்ப்புகழ் புகழ்ந்து வழிபடுவாரைத் தொழப்படும் தேவர்தம்மால் தொழுவிப்பன். இவ் வுண்மை வருமாறு :

''முழுத்தழல் மேனித் தவளப் பொடியன் கனகக்குன்றத்
தெழிற்பரஞ் சோதியை எங்கள்பிரானை இகழ்திர்கண்டீர்
தொழப்படுந் தேவர் தொழப்படு வானைத் தொழுதபின்னைத்
தொழப்படுந் தேவர்தம் மாற்றொழு விக்குந்தன் தொண்டரையே.''

—அப்பர், சு : ககஉ : டு.

செய்தான்...வட்டத்து - உலக நிகழ்ச்சிகளை அவ்வுலகை ஆக்கி நீக்கமற நிற்கின்ற சிவபெருமானே அறிவன். மெய்யே உரைக்கில் - மெய்ப்பொருளாகிய சிவபெருமானைப் புகழ்ந்து வழுத்தினால். மை - மேகம்போலும் கருமை. (கூ)

1. பருவரை. அப்பர், சு. கச - க.

506. நந்தி எழுந்து நடுவுற ஓங்கிய
செந்தீக் கலந்துட் சிவனென நிற்கும்
முந்திக் கலந்தங் குலகம் வலம்வரும்
அந்தி இறைவன் அதோமுக மாமே.

(ப. இ.) நந்தியாகிய சிவபெருமான் செந்தீப் பிழம்பாக எழுந் தருள்வன். அவனுடன் தொன்மையிலேயே வேறன்றி நிற்கும் திருவரு ளாற்றல் நடப்பாற்றலாக நின்று உலகுயிர்களை வினைக்கீடாக ஆட்டும். அதுவே வனப்பாற்றலாய் நின்று நடப்பாற்றல் நிலையில் செவ்விபெறச் செய்த ஆருயிர்களைச் சிவத்துடன் கூட்டும். இதுவே வலமாகிய வெற்றி யாகும். இத் திருமுகமே கீழ்நோக்கிய திருமுகமாகும். வலம்வரும் - வெற்றிகொள்ளும். அந்தி இறைவன் - அந்திபோலும் திருச்சடையினை யுடைய சிவபெருமான். அதோமுகம் - திருவருளாற்றல். (சு)

507. அதோமுகங் கீழண்ட மான புராணன்
அதோமுகத் தன்னெடும் எங்கு முயலுஞ்
சதோமுகத் தோண்மலர்க் கண்ணிப் பிரானும்
அதோமுகன் ஊழித் தலைவனு மாமே.

(ப. இ.) கீழ்நோக்கிய திருமுகம் பூத்த சிறப்பினைக் கேண்மின். தொல்லோனுகிய சிவபெருமான் அத்திருமுகத்துடன் கலந்து எல்லாம் முயல்வன். மெய்யாயுள்ள ஓம் என்னும் வைப்பாற்றலின் மேன்முகம் ஒளிசேர் தூமாயையாகிய விந்து. கீழ்முகம் தூவாமாயையாகிய மோகினி. இந் நிலை தூண்டித் தொழிற்படுத்தும் கலப்பும், சிவகுருவாக எழுந் தருளும் நிலைக்களமும் குறிப்பனவாகும். இத்திருமுகத்துக்குரிய முழு முதலே ஊழித்தலைவனுவன். ஒமொழி சொல்லப்படவே தூமாயை யாகிய விந்துவும், தூவாமாயையாகிய மோகினியும், கீழ்மாயையாகிய மூலப்பகுதியும் பெறப்படும். புராணன் - காக்கும் பழையோன். அதோ முகத்தன் - அறுமுகன். அதோமுகன் - மாயையைக் காரியப்படுத்து பவன். ஊழித்தலைவன் - அனைத்தையும் ஒடுக்கும் தலைவன்.

(அ. சி.) சதோமுகம் - சத் ஓம் முகம் ; சத்தாகிய பிரணவ சொரூப மான முகம். (ஞ)

508. அதோமுக மாமல ராயது கேளும்
அதோமுகத் தாலொரு நூறுய் விரிந்து
அதோமுக மாகிய அந்தமில் சத்தி
அதோமுக மாகி அமர்ந்திருந் தானே.

(ப. இ.) கீழ்நோக்கிய திருமுகத்துடன் கூடிய மாயாகாரியங்களைத் திருவுள்ளத்தால் தொழிற்படுத்தி அமர்ந்திருந்தனன் சிவன். அந்தமில் சக்தி - அளவில்லாத மாயையின் ஆற்றல்கள். (ஆறுகோடி மாயா சக்திகள். செருக்கு, சினம், சிறுமை, இவறல், மாண்பிறந்த மானம், மாணு வுவகை என்பன.) அமர்ந்திருந்தான் - திருவுள்ளக்குறிப்பால் இயக்கி நின்றனன். அதோமுகம் - ஆதியாற்றல். (ஈ)

# 21. சிவநிந்தை

509. தெளிவுறு ஞானத்துச் சிந்தையின் உள்ளே
அளிவுறு வாரம ராபதி நாடி
எளியனென் றீசனே நீசர் இகழில்
கிளியொன்று பூனையிற் கீழது வாகுமே.

(இ. இ.) திருவடி யுணர்வுடையார் நல் உள்ளத்தினுள்ளே சிறந்து விளங்கும் சிவபெருமானே விண்ணவர் முதலியோர் தொழுது அவன் திருவருளைப் பெறுவர். எளியனென்...வாகுமே - திருவடியுணர்விலாக் கீழோர் சிவபெருமானே மூவரொடும் ஒருவனாக எளிமையாக எண்ணிப் புறக்கணிக்கின்றனர். அதனால் அவர்கள் பிறவித்துன்பத்தில் உழல் கின்றனர். அவர்கள் நிலை பூனையால் கிழிக்கப்பட்ட கிளிபோலாகின்றது.

(அ. கீ.) கீழது - கிழிபட்டது. (க)

510. முளிந்தவர் வானவர் தானவர் எல்லாம்
விளிந்தவர் மெய்ங்கின்ற ஞானம் உணரார்
அளிந்தமு தூறிய ஆதிப் பிரானைத்
தளிந்தவர்க் கல்லது தாங்கரொண் ணாதே.

(ப. இ.) கன்மனமுடைய வானவர் தானவரெல்லாம் விழுமிய முழு முதற் சிவபெருமானைக் கெழுமித் தொழாது 'பெருநோய்கள் மிக நலியப் பெயர்த்துஞ் செத்துப் பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்ற னர்.'[1] சிறந்த திருவடியமிழ்தை யருளும் சிவபெருமானைத் தளிர்கொண்டு வழிபட்டாரே அப் பேரின்பத்தைத் தாங்கும் பெற்றியராவர். தளிந் தவர் - தளிர்கொண்டு வழிபட்டவர். விளிந்தவர் - மீண்டும் பிறக்க இறந்தவர். அளிந்து - கனிந்து, தாங்குதல் - அணைதல்.

(அ. கீ.) முளிந்தவர் - வாடிய சரீரத்தை உடையவர். (உ)

511. அப்பகை யாலே அசுரருந் தேவரும்
நற்பகை செய்து நடுவே முடிந்தனர்
எப்பகை யாகிலும் எய்தார் இறைவனைப்
பொய்ப்பகை செய்யினும் ஒன்றுபத் தாமே.[3]

(ப. இ.) அறியாமையால் விளையும் செருக்காகிய பகையினாலே அசுரரும் தேவரும் பிறப்புப் பகைவராய்ப் பெரும்போர் செய்து மாண் டழிந்தனர். இறைவனைச் சென்தமிழ் மறையால் வழிபடுபவர் எப்பகை யும் கொள்ளார்; விள்ளார்; சிவனே அவர்தம் பகையினை நீக்கியருள்வன். காவலர் மேவலரை நீக்கித் தாவில் குடிகளைத் தப்பாமற் காக்கும் வாய்மை

---

1. ஏனை வெண்மருப். அப்பர், தி. ஈ, ஈ.
2. திருநாம மஞ்செழுத்துஞ். சு. கூடி - சு.
3. உடைத்தம். திருக்குறள், அஎக.
" பகைஎன்னும். ,, அஎக.

இதற்கொப்பாகும். விளையாட்டிடத்தும், பொய்ம்மையாகவுங்கூடப் பகையென்னும் சொல்லைக் கேட்டலும் நன்றன்று. அப்பகை - பிறப்புப் பகை.[1] இறைவனே - முழுமுதற் சிவனே. மேவலர் - பொருந்தாதவர்; பகைவர். (கூ)

512. போகமும் மாதர் புலவி யதுநினைந்
தாகமும் உள்கலந் தங்குள ஞதலில்
வேதிய ராயும் விகிர்தனும் என்கின்ற
நீதியுள் ஈசன் நினைப்பொழி வாரே.[2]

(ப. இ.) மாதருடன் கூடியும் ஊடியும் அவர்களையே விடாமல் நினைந்துருகும் மயக்கமுள்ளவராதலால். வேதிய...வாரே—மெய்யுணர்வு கைவந்த தவத்தோர் உணரும் முறையுள் நிலைபெற்று நிற்கும் இறைவனை நினையும் தவப்பேறில்லாது கழிவர். மெய்யுணர்ந்தார் மாதரொடு கூடி மகிழினும் 'போதொடு நீர்சுமந்தேத்திப் புகுவார் அவர்பின் புகு'வோராதலால் சிவனடியைத் தப்பாது சேர்ந்து இன்புறுவர். (சு)

---

# 22. குருநிந்தை

513. பெற்றிருந் தாரையும் பேணுர் கயவர்கள்
உற்றிருந் தாரை உளவன சொல்லுவர்[3]
கற்றிருந் தார்வழி உற்றிருந் தாரவர்
பெற்றிருந் தாரன்றி யார்பெறும் பேறே.

(ப. இ.) கீழானவர் தம்மைப் பெற்ற தாய் தந்தையரையும், பேணமாட்டார். நெருங்கிய உறவினரையும் மிகவும் வருந்தும்படி கடுமொழி கூறி நீக்குவர். கற்றிருந்...பேறே - உண்மைநூற் கல்வியுடைய ஆசானை அடுத்து அவர்வழி ஒழுகும் மேலானவர் பெற்ற தாய் தந்தையர்க்கு மட்டும் அல்லாமல் எல்லார்க்கும் நல்ல முறையாக நடந்து அவரவர்களும் தங்கள் தங்கள் பாக்கியம் என்று சொல்லும் நிலையினராவர். பேறு - பாக்கியம். (க)

514. ஓரெழுத் தொருபொருள் உணரக் கூறிய
சீரெழுத் தாளரைச் சிதையச் செப்பினோர்
ஊரிடைச் சுணங்கனாய்ப் பிறந்தங் கோருகம்
வாரிடைக் கிருமியாய் மாய்வர் மண்ணிலே.

(ப. இ.) திருவைந்தெழுத்து ஓதிவரும் வன்மை மிக்க சிவனடியாரை மனம் வருந்தும்படி நினைவாலும் சொல்லாலும் செயலாலும் புரிபவர், ஈழிக்காலம் நாயாய்ப் பிறந்து உழன்று துன்புறுவர். பலஈழிக் காலம்

---

1. உடன்பிறந்தார். மூதுரை, உ.
2. நாடுகளிற். சிவஞானசித்தியார், சூ. உ - இ.
3. பகச்சொல்லிக். திருக்குறள், சுஅஎ.

புழுவாய்ப் பிறந்து பழுதுற்றுத் துன்புறுவர். ஒரெழுத்து ஓர்ந்து உணரப் படும் ஐந்தெழுத்தாலாகிய ஆதி மந்திரம். ஒரு பொருள் - அம் மந்திரத்தால் பெறப்படும் ஒப்பில்லாத விழுமிய முழுமுதலாம் சிவ பெருமான். உணரக் கூறிய - அம் மறையினை உணரச் செவியறிவுறுத்த. சிரெழுத்தாளர் - மெய்யுணர்வளித்த ஆசான். சிதைய - சொல்லாலும் செயலாலும் கேட்டாரும் கண்டாரும் மனம் வருந்தும்படி. செப்பினேர் முறையின்றிப் பேசினர். சுணங்கன் - நாய், ஒருகம் - ஒரூழி. வார் - நீர். இருமி - புழு. செவியறிவுறூஉ - உபதேசம். (உ)

515. பத்தினி பத்தர்கள் தத்துவ ஞானிகள்
சித்தங் கலங்கச் சிதைவுகள் செய்தவர்
அத்தமும் ஆவியும் ஆண்டொன்றில் மாண்டிடுஞ்
சத்தியம் ஈது சதாநந்தி ஆணையே.

(ப. இ.) ஒழுக்கநெறி யிழுக்காக் கற்புடைப் பெண்டீராவார் நம் மங்கையர்க்கரசியார் போன்று சிவனே மறவாச் சீரிய கற்பினராவர், ஈன்று புறந்தரும் தாயார் சான்றோனுக்குவர். ஏன்று கொண்ட மனைவிமார் ஆன்ற தெய்வமாக்குவர். தெய்வமாக்குதல் சிவன் நினைவை உண்டாக்கிச் சிவனடியினைக் கணவன் சேர்ந்தின்புறத் துணைநிற்றல். இதுவே வாழ்க்கைத் துணைவியின் சிறந்த குறிக்கோள். தெய்வத்துக்குரிய எண் பேருருவங் களில் ஆருயிர் வடிவே சீருஞ்சிறப்பும் ஒருங்கமைந்தது. ஏனைய வடிவங்கள் கடந்தேறும் வகுப்புமுறை போன்றன. பிற தெய்வம் தொழா ளென்பது முன் பயிற்சியாகத் தொழுது மேற்போந்தபின் மீண்டும் அப் பயிற்சியினை மேற்கொள்ளா ளென்பதாம். நாம் தெய்வ நினைவுடன் ஒரு பொருளை எவ்வாறு பார்க்கின்றோமோ அவ்வாறே அப்பொருள் அருளால் ஆகிவிடும். அவ்வுண்மை வரும் குமரகுருபர அடிகள் வாய் மொழியான் உணர்க :

''செய்தவ வேட மெய்யிற் றூங்கிக்
கைதவ வொழுக்கமுள் வைத்துப் பொதிந்தும்
வடதிசைக் குன்றம் வாய்பிளந் தன்ன
கடவுள் மன்றிற் றிருநடங் கும்பிட்
இ. டுய்வது கிடைத்தனன் யானே யுய்தற்
கொருபெருந் தவமும் உளுற்றிலன் உளுற்றது
எளிதினிற் பெற்ற தென்னெனக் கிளப்பின்
கூடா வொழுக்கம் பூண்டும் வேடம்
கொண்டதற் கேற்பதின் தொண்டரொடு பயிறலிற்
க0. பூண்டவவ் வேடங் காண்டொறும் காண்டொறும்
நின்னிலை என்னிடத் துன்னி யுன்னிப்
பன்னுள் நோக்கின ராகலின் அன்னவர்
பாவனை முற்றியப் பாவகப் பயனின் யான்
மேவரப் பெற்றனன் போலு மாகலின்
கஇ. எவ்விடத் தவருனை யெண்ணினர் நீயுமற்
றவ்விடத் துளையெனற் கையம்வே றின்றே.''

—எ. சிதம்பர மும்மணிக் கோவை, கக

நம் மங்கையர்க்கரசியார் தம் கணவராகிய நின்றசீர் நெடுமாற ரைர[1] ஆளுடைய பிள்ளையாரைக் கொண்டு ஈண்டு மீண்டும் சிவ னெறிக்கு ஆக்குவித்தது போன்று ஆண்டுச் சிவனர் திருவடிக் கண்ணும் அவரோடுங் கூட அமர்ந்திருக்க அருள் பெற்று அவரைத் திருவடிக் கண் ஆக்குவித்தார். அவ்வுண்மை சேக்கிழாரடிகள் அருண்மொழி யான் உணரலாம். அது வருமாறு :

"பூசுரர்சூ ளாமணியாம் புகலி வேந்தர்
போனகஞா னம்பொழிந்த புனித வாக்கால்
தேசுடைய பாடல்பெறுந் தவத்தி னரைச்
செப்புவதியா மென்னறிந்து தென்னர் கோமான்
மாசில்புகழ் நெடுமாறன் தனக்குச் சைவ
வழித்துணையாய் நெடுங்காலம் மன்னிப் பின்னை
ஆசில்நெறி அவரோடுங் கூட ஈசர்
அடிநிழற்கீழ் அமர்ந்திருக்க அருளும் பெற்றார்."

கஉ. மங்கையர்க்கரசியார், உ.

இத்தகைய பத்தினிப் பெண்களையும், (திருவடி ஞானத்தின்மேல் விளையும் அன்பு பத்தியெனப்படும் ; அத்தகைய) பத்திசேர் பத்தர்களையும், மெய் யுணர்வு கைவரப் பெற்றரையும் சித்தங் கலங்கத் தீமைகள் செய்த கொடியோர் பொருளும் உயிரும் ஓராண்டினுக்குள் நீங்க நரகத்தின் கண்ணே ஆழ்வர். இஃதுண்மை. நந்தியின் ஆணை. ஆளுடைய பிள்ளை யாரின் திருவுள்ளம் கலங்கச் செய்த அமணரும் வரும்வழி தடுத்த புத்தரும் அப்பொழுதே வாழ்விழந்தமை இதற்கொப்பாகும். பத்தினிப் பெண்களின் சிறப்பு, கண்ணகி வரலாற்றாலும் காணலாம்.
அது,

"கோவல னுயிற் கூறிய மந்திரம்
பாய்கலைப் பாவை மந்திர மாதலின்
வானசா ரணியான் மயக்கம் செய்தேன்
புனமயிற் சாயற்கும் புண்ணிய முதல்விக்கும்
உ00. என்திறம் உரையா தேகென் றேகத்."

—சிலம்பு. கக. காடுகாண் காதை.

(தவத்தினும் கற்புச் சிறந்த தாகலின், முற்கூறினர். இவர் சாயலும் அறனும் உடையரேனும் தவறுகண்டுழிக் கணத்தின் வெகுண்டு சவிப்ப ரென்றஞ்சி அவர்க்கு உரையாதொழியென்றிரந்தா ளென்க.—அடி யார்க்கு நல்லார்.) தத்துவ ஞானிகள்-சித்தாந்த மெய்யுணர்வு கைவந்த நாயன்மார். அத்தமும் - பொன்னும் பொருளும். (கூ)

516. மந்திரம் ஓரெழுத் துரைத்த மாதவர்
சிந்தையில் நொந்திடத் தீமைகள் செய்தவர்
நுந்திய சுணங்களுய்ப் பிறந்து நூறுரு
வந்திடும் புலையராய் மாய்வர் மண்ணிலே.

1. திரைசெய்கட. கஉ. நின்ற சீர்நெடுமாறர், கூ.

(ப. இ.) ஒப்பில்லாத திருவைந்தெழுத்து மந்திரத்தைச் செவியறிவுறுத்திய மிக்க தவத்தையுடைய சிவகுருவைச் சிந்தை நோவும்படி தீமை செய்தவர்கள் வருந்தியலையும் நாயாகப் பிறப்பர். அளவில்லாத பிறப்புப் புலையராய்ப் பிறப்பார்கள். நூறு-அளவில்லாமை. நுந்திய-பசி தூண்டுதலால் வருந்தியலைகின்ற; (இழிவென்று ஒதுக்கப்பட்ட.) (சு)

517. ஈச னடியார் இதயங் கலங்கிடத்
தேசமும் நாடுஞ் சிறப்பும் அழிந்திடும்
வாசவன் பீடமும் மாமன்னர் பீடமும்
நாசம தாகுமே நந்நந்தி யாணையே.

(ப. இ.) சிவபெருமான் ஒருவனே ஈசன் எனத் தக்கான். நூல் வழக்கல்லாமல் உலக வழக்கிலும் ஈசன் கோயில் என்பது சிவபெருமான் திருக்கோவிலையே குறிக்கின்றது. சிவபெருமானின் அடியார் உள்ளங் கலங்கும்படி செய்யும் தீயோர் ஒருவர் உளராயினும் அத் தேசம் பாழாகும். அந் நாடும் பாழாகும். பல நாடுகள் கொண்டது நகரம். பல நகரங்கள் கொண்டது தேசம். பல தேசங்கள் கொண்டது கண்டம். பல கண்டங்கள் கொண்டது உலகம். பல உலகங்கள் கொண்டது அண்டம். பல அண்டங்கள் கொண்டது புவனம். இந்திரன் நிலையும் கெடும். ஏனைப் பெருமன்னர் நிலையும் கெடும். இது நம் நந்தி ஆணை. (இ)

518. சன்மார்க்க சற்குரு சந்நிதி போய்வரின்
நன்மார்க்க முங்குன்றி ஞானமுந் தங்காது
தொன்மார்க்க மாய துறையும் மறந்திட்டுப்
பன்மார்க்க முங்கெட்டுப் பஞ்சமு மாமே.

(ப. இ.) சிவகுருவின் திருமுன் ஒருவனிடமிருந்து பொய் வருமானால் நன்னெறியும் கெடும்; மெய்யுணர்வும் தங்காது, பழைமை தொட்டு வருகின்ற செந்தமிழ்த் துறையாகிய ஆகமமும் மறைந்தொழியும். செந் தமிழ் நெறியாகிய வேதமும் கெடும். பஞ்சமும் உண்டாம். (சு)

519. கைப்பட்ட மாமணி தானிடை கைவிட்டு
மெய்ப்பட்ட கல்லைச் சுமப்போன் விதிபோன்றும்
கைப்பட்ட நெய்பால் தயிர்நிற்கத் தானறக்
கைப்பிட்டுண் பான்போன்றும் கன்மிஞா னிக்கொப்பே.

(ப. இ.) தன் கையகத்து அருமையாகக் கிடைக்கப்பட்ட விலைவரம் பில்லாப் பெருமணி யொன்றை அறியாமையால் கீழே புறக்கணித்துப் போகவிட்டு எல்லாரும் உண்மையாகவே விலைமதிப்பில்லாப் பயனில்லாக் கல்லென்று இகழவும் நாணமின்றி அக்கல்லைச் சுமப்பவன் விதி போன்றும், மேலும் கையகத்துக் கிடைத்த நெய் பால் தயிர் இவற்றை யுண்ணாது கடுவனைய கசப்பினை யுண்ணுமவன் கன்மம் போன்றும் ஆவர், 'பசித் துண்டு பின்னும் பசிப்பானை யொக்கும் இசைத்து வருவினையை' இயற்றும் கன்மிகள். இசைத்த, இருவினை யொப்பில் இறப்பில் தவத்தான், மருவும் ஞானி'கள் மாமணியினைச் சுமப்பவராவர். (எ)

# 23. மாகேசுரர் நிந்தை

520. ஆண்டான் அடியவ ராார்க்கும் விரோதிகள்
ஆண்டான் அடியவர் ஐயமேற் றுண்பவர்
ஆண்டான் அடியாரை வேண்டாது பேசினோர்
தாந்தாம் விழுவது தாழ்நர காகுமே.

(ப. இ.) சிவனடியார்கள் மலப்பிணிப்புடைய மற்றையவர்கட்குப் பெரும் பகைவராவர். அவர்கள் பிச்சையெடுத்துண்பது தெருவிலும் ஊரிலுமன்று. தம் வீட்டிலேயே தாம் உழைத்த உழைப்பினையே உடையவன் உடைமை என்னும் உண்மை யுணர்ந்தவராதலால் அவ் வுடையவன் திருமுன் வைத்து முதற்கண் அவனுக் குழைத்துப் பின்பு தாம் அதனை அவன்பால் பிச்சையாக ஏற்று உண்பர். இதுவே அவர் கொள்ளும் பிச்சையாகும். நாம் அமைத்த படைப்பமுதாயினும் அது கடவுட்டிருப் பெயரால் வழங்கப்படுவதூஉம் காண்க. இஃது, 'இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து, கெடுக உலகியற்றி யான்' (கஎஇஉ)[1] என்னும் திருக்குறளுக்கு மாறுனதன்று. உடையான் - சிவபெருமான். அத்தகைய சிவனடியாரை ஏனை ஆன்றோரும் பொறுக்க முடியாத தீச் சொற்களைச் சொல்லித் துன்புறுத்த முயன்றோர் அவர்தம் தீவினையால் நரகத்தழுந்துவர். ஆர்க்கும் - கட்டும்; மலம். விரோதிகள் - எதிர்த்துச் செல்லும் தவத்தினர். (ஆர்க்கும் காரிய ஆகுபெயராக மலத்தினைக் குறிக்கும்.) ஐயமேற்று உண்பவர் - உண்ணும் உணவினை இறைவன் உடைமை எனக் கருதித் திருவடியை மறவா நினைவுடன் உண்பவர். ஐ - இறைவன். தாந்தாம் - தாமே செய்து கொண்ட தீவினையால். தாழ்நரகு - நீங்காப் பெருந்துன்ப இருளிடம். குழைத்தல் - நைவேதித்தல் ஐயம் - அடியார்க் கடிபணிந்தளிக்கு மமுதவையம். (க)

521. ஞானியை நிந்திப் பவனும் நலனென்றே
ஞானியை வந்திப் பவனுமெய் நல்வினை
யான கொடுவினை தீர்வா ரவன்வயம்
போன போழுதே புகுஞ்சிவ போகமே.

(ப. இ.) திருவடியுணர்வு பெற்ற சிவஞானியாகிய சிவனடியார்களை அறிந்தோ அறியாமலோ நிந்திப்பதாகிய வசைகூறுவோர் நல்வினைப் பகுதியினின்றும் நீங்கித் துன்புறுவர். வந்தித்தலாகிய இசை கூறுவோர் தீவினைப் பகுதியினின்றும் நீங்கி இன்புறுவர். நம்மைச் சிவனடியார் களுக்கு முற்றுக ஒப்புவித்து நின்ற அப்பொழுதே திருவடியின்பத்தை நாம் எய்துவம். மெய்ப்பொருள் நாயனாரும் ஏனாதிநாத நாயனாரும் பொய்க் கோலத்தையே மெய்யெனக் கொண்டு தம்மை அவர்கள்பால் ஒப்புவித்து அப்பொழுதே திருவடிப்பேறு பெற்றமை இதற்கொப்பாகும். தீர்வர் - ஞானியை நிந்திப்பவர் நல்வினையினின்றும் நீங்குவர். வந்திப் பவர் தீவினையினின்றும் நீங்குவர். (உ)

---

1. ஆயசெயல். கஉ. கணம்புல்லர், இ.

# 24. பொறையுடைமை

522. பற்றிநின் ரூர்நெஞ்சிற் பல்லிதான் ஒன்றுண்டு
முற்றிக் கிடந்தது மூக்கையும் நாவையுங்
தெற்றிக் கிடந்து சிதைக்கின்ற சிந்தையுள்
வற்ரு தொழிவது மாகமை யாமே.[1]

(ப. இ.) அறுவகைக் குற்றத்துள் ஒன்ருகிய இவறன்மை என்னும் பற்றுள்ளத்தார்பால் பொருமை என்னும் பல்லி பற்றிக் கிடந்தது. பெரும்பாலும் உண்பதும் உடுப்பதும் காண்பதனுலேயே பொருமை விளைகின்றது. அதனுல் அப் பொருமை வித்து மூக்கையும் நாக்கையும் பின்னிக் கிடந்ததென்றனர். உடுப்பது மூக்குக்கும் உண்பது நாக்குக்கும் தனித்தனி எடுத்துக் காட்டாகும். இவை நம்மைப் பற்ருமலிருக்க வேண்டுமானுல் பெரிய பொறுமையை உயிரினும் சிறப்பாகக் கைக்கொள்ளுதல் வேண்டும். பல்லி - உடும்பு. (உவமை ஆகுபெயராய்ப் பொருமையைக் குறிக்கின்றது.) மூக்கையும் - மண்ணுல் வரும் பெருமையையும், நாக்கையும் - மண்ணும் நீரும் சேர்ந்ததால் வரும் வளத்தையும், தெற்றிக் கிடந்தது - இரண்டையும் இணைத்துக் கிடந்தது (பொருமை). வற்ரு தொழிவது - உறையாது நீங்குவது. மாகமை - பெரிய பொறுமை.

(அ. சி.) பல்லி - பொருமை கமை - பொறுமை, (க)

523. ஞானம் விளைந்தவர் நம்மிட மன்னவர்
சேனை வளைந்து திசைதொறும் கைதொழ
ஊனை விளைத்திடும் உம்பர்தம் ஆதியை
ஏனை வளைந்தருள் எட்டலு மாமே.

(ப. இ.) மன்னவர் சேனையுடன் சூழ்ந்து கைதொழும்படியாகத் திருவடியுணர்வு முற்றியவர் நம்மிடமாதற் பொருட்டு அவரை வழி படுவோமாக. ஊனை...மாமே - உலகுடல்களைப் படைத்தருளும் சிவ பெருமானைத் தவத்தால் கைவரப்பெற்ற அம்மெய்யுணர்வினர் துணையால் வணங்கித் திருவருளை எய்துதல் எளிது ஆகும். (உ)

524. வல்வகை யாலும் மனையிலும் மன்றிலும்
பல்வகை யாலும் பயிற்றிப் பதஞ்செய்யுங்
கொல்லையி னின்று குதிகொள்ளுங் கூத்தனுக்
கெல்லையி லாத இலயமுண்[2]டாமே.

(ப. இ.) சிறந்த முறையால் வீட்டிலும் நாட்டிலும் பொறுமையைக் கைக்கொண்டால், அப் பயிற்சி நல்ல செவ்வியை உண்டாக்கும். கொல்லையி...டாமே-மேலும் பேரொடுக்கப் பெருவெளியில் கூத்தியற்றும் சிவபெருமான் திருவடியில் கூடி இன்புறுதல் உண்டாகும். மன்று - நாடு. கொல்லை - பேரொடுக்கப் பெருவெளி. இலயம் - ஒடுக்கம்; கூட்டம்.

(அ. சி.) கொல்லை - இடுகாடு. (கூ)

---

1. பொருந்தலாற். சீவக, கஅகஙி.
2. நிறையுடைமை. திருக்குறள், கஙிசு.

# 25. பெரியாரைத் துணைக்கோடல்

525. ஓடவல் லார்தம ரோடு நடாவுவன்
பாடவல் லாரொலி பார்மிசை வாழ்குவன்
தேடவல் லார்க்கருள் தேவர்பி ராலெடுங்
கூடவல் லாரடி கூடுவன் யானே.[1]

(ப. இ.) திருவருள் நிலவால் எவ்வகைத் தொண்டினுக்கும் உவப்புடன் முன்னிற்கும் ஒருவர் ஓடவல்லாராவர். அவரே சில நெறியில் நிற்கும் சீரியோராவர். பாடவல்லார் நோன்பு நெறியினிற்கும் பண்பினராவர். திருமுறைத் திருப்பாட்டுக்களை ஓதியே வழிபாடாகிய பூசையினை நடாத்துதல் வேண்டும். அருச்சனை என்னும் மலர் தூவிப் போற்றுதலும் திருமுறைத் திருப்பாட்டாலேயே நடத்துதல் வேண்டும். அருச்சனைக்கு வேண்டும் போற்றித் தொடர்கள் ஆறு. அவை முறையே தனித்தனி ஐந்தொழிற்கும், ஐந்தொழிலும் சேர்ந்த ஒரு பெருநிலைக்கும் ஆகும். திருநாவுக்கரசு நாயனார் பாடியருளிய போற்றித் திருத்தாண்டகம் ஐந்து. மணிமொழிப் பெருமானார் பாடியருளிய போற்றித் திரு அகவல் ஒன்று ஆக ஆறும் அருளால் அமைந்த பேறு என்க. ஐந்தொழிற்கும் முறையே திருவுருவங்கள் மூத்த பிள்ளையார், இளைய பிள்ளையார், ஆலமர் செல்வன், அம்மை, அருளோன், என்ப. இவை அனைத்தும் ஒருங்கமைந்த திருவுருவம் அம்பலவாணர். இவற்றிற்கு வேண்டும் போற்றித் தொடர்த் திருப் பதிகங்களின் முதனினைப்பு: க. பொறையுடைய. உ. எல்லாஞ். ங. பாட்டான. ச. வேற்றுரு. ஞ. கற்றவர்க, சு. நான்முகன் என்ப. அருளோன் - சதாசிவன். தேடவல்லார் அகத் தவமாகிய செறிவு நெறியின் நிற்கும் செம்மையினராவர். கூடவல்லார் மீளா ஆளாய்க் கொய்ம்மலர்ச் சேவடியினையே குறுகு நிலையினவாகிய அறிவு நெறியின் நிற்கும் அன்பினராவர். நம் திருக்கோவில்களில் இத்தகைய பயிற்சி முறைகள் பண்டு நடந்து வந்தன. இடையே மயலுணர்த்தும் அயலவர் சூழ்வால் மறைந்தொழிந்தன போலும். இனியேலேனும் முன்போன்று அவை புத்துயிர் பெற்றுத் திகழ்தல் வேண்டும். இவ்வுண்மை வரும் சேக்கிழாரடிகள் வாய்மொழியான் உணரலாம்;

"நல்ல நந்தன வனப்பணி செய்பவர்
நறுந்துணர் மலர்கொய்வோர்
பல்ப ணித்தொடை புனைபவர் கொணர்திரு
மஞ்சனப் பணிக்குள்ளோர்
அல்லு நன்பக லுந்திரு வலகிட்டுத்
திருமெழுக் கமைப்போர்கள்
எல்லி யில்விளக் கெரிப்பவர் திருமுறை
எழுதுவோர் வாசிப்போர்." — கஉ. கணநாதர், கூ

(இதன்கண் எண்பெருந்தொண்டு இயம்பப்படுகின்றன. இவற்றுள் சிவபெருமானின் எண் பெருங்குணமும் எளிதின் எய்தும்.) செயற்கரிய

---

1. பெருமையால். கஉ. தடுத்தாட்கொண்ட, ககூ,
,, பத்தராய்ப். ஆரூரர், எ. நகூ - கo.
,, மறப்பித்துத். சிவஞானபோதம், கஉ. உ - க,

செய்யும் செந்நெறியாளரே பெரியார். செயற்கரியன சிலம் நோன்பு செறிவு அறிவு என்னும் நானெறித் தொண்டு. இவற்றை முறையே சரியை கிரியை யோகம் ஞானம் எனவும் கூறுவர். இத்திருப்பாட்டின் கண் குறித்த நானெறிவல்லார் பணிகள் முறையே நவிலப்படுகின்றன. அவருடன் நடத்தல், வாழ்தல், தேடல், கூடல் செய்வாரே பெரியாரைத் துணைக்கோடற்கு உரியராவர்.

(அ. சி.)ஓடவல்லார் - மூர்த்தி - தலம் - தீர்த்தம் முறையாக வணங்குவோர் பாடவல்லார்-சிவன் புகழ் பாடுவார். தேடவல்லார் - யோகிகள். கூடவல்லார் - ஞானிகள். (க)

526. தாமிடர்ப் பட்டுத் தளிர்போல் தயங்கினும்
மாமனத் தங்கன்பு வைத்த தில்லையாகும்
நீயிடர்ப் பட்டிருந் தென்செய்வாய் நெஞ்சமே
போமிடத் தென்னெடும் போதுகண் டாயே [1]

(ப. இ.) பெரியோர் மிகத் துன்புற்று வாடினும் அத் துன்பத்தின் கண் தங்கள் மனத்தினைச் செலுத்தார். நீயிடர்ப்...டாயே—நெஞ்சமே! வருந்தி என்ன பயன்? அவ்வருத்தம் நீங்க அப் பெரியாரிடத்து யான் போம்போது என்னுடன் வருவாயாக. (உ)

527. அறிவார் அமரர் தலைவனை நாடிச்
செறிவார் பெறுவர் [2]சிலர்த்த துவத்தை
நெறிதான் மிகமிக நின்றருள் செய்யும்
பெரியா ருடன்கூடல் பேரின்ப மாமே. [3]

(ப. இ.) சிலர் தேவர்க்கும் மூவர்க்கும் யாவர்க்கும் மேலாம் சிவ பெருமானைத் திருவருளால் உள்ளத்தே நாடி அறிவர். அவன் திருவடி யொடுக்கத்தால் மெய்யுணர்வு கைவரப் பெறுவர். தத்துவம் - மெய் மெய்யுணர்வு. நெறிதான்...மாமே—நானெறிக்கண் படிப்படியாக உயர்த்தும் அப் பெரியாருடன் கூடி வாழ்வதே பேரின்பமாம். (கூ)

528. தார்சடை யான்றன் தமராய் உலகினிற்
போர்புக ழானெங்தை பொன்னடி சேருவர்
வாயடை யாவுள்ளந் தேர்வார்க் கருள்செய்யுங்
கோவடைந் தந்நெறி கூடலு மாமே. [4]

(ப. இ.) சிவபெருமானுக்கு உரியவராய் மத்ப்போரை விரும்பாமல் வாய்வாளாது உள்ளத்தே நிறைவோர் பெரியர். அவர்க்கு அருள்

1. உற்றநோய். திருக்குறள், சசஉ.
,, இடுக்கண்பட். அப்பர், ச. கக - ச.
2. (பாடம்) சிவதத் துவத்தை.
3. அரியவற்று. திருக்குறள், சசஈ.
4. ஞமனென். அப்பர், கு. கூஎ - கஅ.
,, தம்மிற். திருக்குறள், சசஈ.

செய்யுமுதல்வன் சிவன். பெரியோரைச் சார்ந்தால் அவன் திருநெறி கூடலாம். தார் - மாலை. அடையா: செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம்; அடைத்து.

(அ. சி.) போர்புகழான் - மதச்சண்டையிடாமல். வாயடையா - மவுனமாக. (சு)

529. உடையான் அடியார் அடியா ருடன்போய்ப்
படையா ரழன்மேனிப் பதிசென்று புக்கேன்
கடையார நின்றவர் கண்டறி விப்ப
உடையான் வருகென ஓலமென் றாரே.[1]

(ப இ.) எல்லாம் உடையானுகிய நல்ல சிவபெருமானின் அடியார்கள் பண்டைப் பழவடியாருடன் கூடிப்புகுவர். அடியேனும் அவர்களுடன் முத்தலை வேற்படை நிறைந்தவனும், தழல் போலும் செம்மேனி உடையவனும் ஆகிய சிவபெருமானின் திருவெள்ளி மலைக்குப்போனேன். அங்குக் கடைகாவற் பெரிய தேவர் உடையானுக்கு அறிவிப்ப, அவன் அருள் தர உட்புக்கு அவர்கள் ஓலமென்றனர். ஆரழல் மேனிப்பதி - தீப் போலும் திருமேனியனுகிய சிவ பெருமானது திருவெள்ளிமலை. கடை - கடைவாயில். ஓலம் - அடைக்கல மொழி. (இ)

530. அருமைவல் லான்கலை ஞானத்துள் தோன்றும்
பெருமைவல் லோன்பிற விச்சுழி நீந்தும்
உரிமைவல் லோன்உணர்ந் தூழி யிருக்குந்
திருமைவல் லாரோடு சேர்ந்தனன் யானே.

(ப. இ.) மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனுகிய அருமை வல்லோன் கலைஞானத்துள் தோன்றியருள்வன், அவனைத் தினைத்தனைப் பொழுதும் மறந்துய்யேனென்னுந் திண்ணிய நெஞ்சினராய் உள்ளார் பிறவிப் பெருஞ்சுழி நீந்துவர். சிவனடியாராம் உரிமை வல்லார் தம்மையும் தமையுடைய தன்னையும் உணர்வார். அருளால் ஊழிக்கு வாழ்வார். இத்தகைய வல்லார் (திருமை - சிவ்மை - திருத்தன்மை) சிவத் தன்மையுடையவராவர் அவருடன் சேரும் அருட்பேறு பெற்றனன். அருமைவல்லான் என்பதனை அடியாராகவே கொண்டு அவர் சித்தாந்தக் கலைஞானியாக இருப்பரென்றலும் ஒன்று. கலைஞானம் - திருமுறை யுணர்வு. திருமை - திருவருள் தன்மை. தன்னையும் - தலைவனையும்.

கலைஞானத்துள் தோன்றுவோன் அருமைவல்லோன். சிவஞானத்துள் தோன்றுவோன் பெருமைவல்லோன். இவன் பிறவிச்சுழியை நீந்துவோன் என ஓதியருளினர். இவ்வுண்மை வரும் சேக்கிழாரடிகள் திருமொழியான் உணரலாம்:

---

1. நின்ற. கஉ. வெள்ளானைச் சருக்கம், சுசு.
,, மன்றி ,, சேரமான், கசுஞ.
,, விடுமின். அ. எண்ணப்பதிகம், ஙு.

''சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை யறமாற்றும் பாங்கினிலோங் கியஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார் அந்நிலையில்.''

—கஉ. சம்பந்தர், எo.

**இதன்கண்** ஓதப்பெறும் 'உவமையிலாக் கலைஞானம்' புகழ் நூலாகிய திருமுறைகளும் பொருள்நூலாகிய மெய்கண்ட நூல்களுமாகும். 'உணர்வரிய மெய்ஞ்ஞானம்' நுண்ணுணர்வாகிய திருவடியுணர்வாகும். இதுவே 'உணர்வின் நேர்பெற வரும் சிவபோகம்.' இதனை 'ஒழிவின்றி யுருவின்கண், அணையும் ஐம்பொறி யளவினுமெளிவர வருளினை எனப் போற்றுதல்' நூலுணர்வாகிய 'உவமையிலாக் கலைஞான' மாகும். நுண்ணுணர்வெனினும் தன்னுகர்வெனினும் ஒன்றே. நுண்ணுணர்வு 'மாற்றம் மனம்கழிய நின்ற மறை'. அது சொல்லொணு நிலைமைத்து. எனினும், ஒருவகையாகத் 'தீருச்சிற்றம்பலம்' என்னும் பெரும்பொருள் மறையால் ஓதியருளினர். இம்மறைக்கண் எழுத்து ஆறாகும். இம் மறையினை முதலும் முடிவும் ஓதும் மரபினால் பன்னிரண்டெழுத்தாகும். இத்திருக்குறிப்புத் திருமுறை பன்னிரண்டென்பதனைத் திருவருளான் உணர்த்தும் சிவக்குறிப்பாகும். திருச்சிற்றம்பலம் அருளறிவுப் பெருவெளி. இப் பெருமறை திருமுறை பதினென்றின் முதல் நடு இறுதியாகத் திகழ்ந்து செந்தமிழ்த் திருமாமறையின் திருவருட் பெற்றியினை உணர்த்துகின்றது. வரும் திருப்பாட்டு இவ்வுண்மையை யுணர்த்துவதாகும்.

''பெருமதில் சிறந்த செம்பொன்மா ளிகைமின்
பிறங்குபே ரம்பல மேரு
வருமுறை வலங்கொண் டிறைஞ்சிய பின்னர்
வணங்கிய மகிழ்வொடும் புகுந்தார்
அருமறை முதலி னடுவினிற் கடையி
லன்பர்தஞ் சிந்தையி லலர்ந்த
திருவள ரொளிசூழ் திருச்சிற்றம் பலமின்
றிருவணுக் கன்றிரு வாயில்.''

—கஉ. தடுத்தாட், கoச.

**இரண்டாம் தந்திரம் முற்றும்**

# மூன்றாம் தந்திரம்

[விராகமம்]

## 1. அட்டாங்க யோகம்

(அகத்தவம் எட்டு)

531. உரைத்தன வற்கரி ஒன்று மூடிய
நிரைத்த இராசி நிறைமுறை எண்ணிப்
பிரைச்சதம் எட்டும் பேசியே நந்தி
நிறைத்த இயமம் நியமஞ்செய் தானே.

(ப. இ.) விடுத்தலும் எடுத்தலும் தடுத்தலுமாகிய உயிர்ப்புப் பயிற்சியுடையார் பதினாறு விடுத்துப் பன்னிரண்டு உள்ளிழுக்கும் ஏனையார் போலன்றிப் பதினாறுமே உள்ளிழுக்கப் பழகிவிடுவர். அதன்மேல் விடுத்தலும் எடுத்தலுமின்றித் தடுத்தலாகவே நிற்பர். எண்பெரும் யோக முறைகளையும் எடுத்தியம்பிய நந்தி தீதகற்றலும் நன்மாற்றலும் ஆகிய செய்ம்முறைகளே அறநெறியொழுக வகுத்தருளினன். விடுத்தல் - இரேசகம். எடுத்தல் - பூரகம். தடுத்தல் - கும்பகம். வற்கரி: வற்கம் - குதிரைக் கடிவாளம் முதலியன. அது வற்கரி என நின்று ஆகுபெயராய் உயிர்மூச்சைக் குறிக்கின்றது. இராசி - ஈண்டுப் பன்னிரண்டு என்னும் எண்ணுப்பெயர் விளக்கிநின்றது. இயமம் - தீதகற்றல். நியமம் - நன்மாற்றல்.

(அ. சீ.) வற்கரி - மூச்சு. நிரைத்த இராசி - கஉ. பிரைச்சதம் - யோகம். (க)

532. செய்த இயம நியமஞ் சமாதிசென்
றுய்யப் பராசத்தி உத்தர பூருவ
மெய்த கவச நியாசங்கள் முத்திரை
எய்த வுரைசெய்வன் இங்நீலை தானே.

(ப. இ.) திருவருளால் இயமமாகிய தீதகற்றலும், நியமமாகிய நன்மாற்றலும் செய்து போந்தவர் நொசிப்பாகிய சமாதியை எய்துவர். திருவருள் உத்தரமாகிய பின்னும், பூருவமாகிய முன்னும் நடப்பாற்றல் வனப்பாற்றலாக மாறுதல் வேண்டும். அப்பொழுது 'சிவயநம' என நின்றது சிவயசிவ எனவரும். உறுப்புத் தொடுதற்குரிய திருமுறைத் திருப்பதிகம் 'தீநெறிமாலே' திருப்பதிகமாகும். சமாதி - நொசிப்பு. பராசத்தி - வனப்பாற்றலாகிய திருவருள். உத்தரம் - பின்பு: நடப்பாற்றல். பூருவம் - முதல்; நடப்பாற்றல் முன்னிலையாகிய வனப்பாற்றலாக மாறுதல்; இஃது எவ்வாறெனின் சிவயநம என்பது சிவயசிவ எனக் கணித்தல். கவசம் - போர்வை. நியாசம் - [நெஞ்சு, தலை, குடுமி, கண், போர்வை, கருவி (1713) என்னும் உறுப்புப் பொருள்களைச்

சிவனுடைமை என்று கருதித்] தொடுதல். இஃது இரண்டு வகை. ஒன்று உடப்பு. மற்றொன்று கை எனப்படும். அதனுல் நியாசங்கள்[1] எனக் கூறப்பட்டன. முத்திரை - கைவிரல்களால் பொருள் குறிக்கும் அபை யாளங்கள். இந்நிலை - இந்த முறைப்படி. (உ)

533. அந்நெறி இந்நெறி என்னுதட் டாங்கத்
தன்னெறி சென்று சமாதியி லேநின்மின்
நன்னெறி செல்வார்க்கு ஞானத்தி லேகலாம்
புன்னெறி யாகத்திற் போக்கில்லை யாகுமே.

(ப. இ.) அந்நெறி இந்நெறி என்று தடுமாறிக் கூறுது. அகத்தவ மாகிய எட்டுறுப்புக் கொண்ட யோகநெறியே சென்று சமாதியாகிய நோசிப்பின்கண் நிலைபெற்று நில்லுங்கள். இத்தகைய நன்னெறிக்கண் செல்வார்க்கு ஞானமாகிய திருவடியுணர்வு எளிதினெய்தும். அத்தகை யோர் ஊனடைந்த உடம்பிற் புகுதார். அந்நெறி இந்நெறி என்னுது அகத்தவமாகிய யோகத்துக்கு வேறுபட்ட வழிகளைப் பயன் தருவன என்று கொள்ளாமல். நன்னெறி - நல்ல அகத்தவம். ஆகத்திற் போக் கில்லை - மீட்டும் ஒருடம்பிற் புகும் பிறப்பில்லை. (கூ)

534. இயம நியமமே எண்ணிலா ஆதனம்
நயமுறு பிராணயா மம்பிரத் யாகாரஞ்
சயமிகு தாரணை தியானஞ் சமாதி
அயமுறும் அட்டாங்க மாவது மாமே.

(ப. இ.) தீதகற்றல், நன்ருற்றல், அளவிலா இருக்கை, வளிநிலை, தொகை நிலை, பொறை நிலை, நினைதல், நோசிப்பு என்னும் வழிமுறைத் தவநிலை பயிலுதல் வேண்டும். இயமம் - தீதகற்றல். நியமம் - நன்ருற்றல். ஆதனம் - இருக்கை. பிராணயாமம் - வளிநிலை. பிரத்தியாகாரம் - தொகை நிலை. தாரணை - பொறைநிலை. தியானம் - நினைதல். சமாதி - நோசிப்பு. இவ்வகத் தவக்குறிப்பு ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியத்தின்கண் வாகைத் திணைவிரிவில் 'நாலிரு வழக்கில் தாபதப் பக்கமும்' என நவிலப் பட்டுள்ளது.—தொல். புறத்திணை - உ0. (ச)

---

1. அஞ்செழுத்தா. சிவஞானசித்தியார். கூ. கூ - உ.

# 2. இயமம்

(நீதகற்றல்)

535. எழுந்துநீர் பெய்யினும் எட்டுத் திசையுஞ்
சேழுந்த ணிபமங்கள் செப்மினென் றண்ணல்
கொழுந்தண் பவளக் குளிர்சடை யோடே
அழுந்திய நால்வர்க் கருள்புரிந் தானே.[1]

(ப. இ.) தலைமைப்பாடுடைய திருவருட்டண்ணளிப் பவழக்குன் றனைய குளிர்சடையோன் சிவபெருமானவன். அவன் ஆலமர் செல்வனை வீற்றிருந்தருளித் திருவடியில் அழந்திய நால்வர்க்குத் திருவருள் புரிந்தனன். எண்பெரும் திசையிலும் மேகங்கள் கடல்நீரை முகந்து பெய்யினும் அதற்குக் காரணம் முன்பு நீங்கள் செய்துபோந்த நிபமங்களாகிய நன்முற்றுதலேயாம். ஆதலால் மேலும் தொடர்ந்து நன்முற்றுதலைப் புரியுங்கள் என்றருளினன். நல்லுழைப்பால் பெற்ற நல்லூதியம் தீதின்றி வந்த பொருளாகும். அப்பொருள் அறத்தையும் இன்பத்தையும் உறச் செய்யும். ஆதலி அவ்வறமும் இன்பமும் தொடர்ந்து நிகழ்வதற்கு நடைமுறையில் அப் பொருளை மேன்மேலும் ஈட்டுதல் வேண்டுமல்லவா? அஃது இதற்கு ஒப்பாகும். எழுந்து - முகில்கள் கடல்நீரையுண்டு விண்ணில் எழுந்து. தண் - அமைதி. அழந்திய - திருவடியன்பில் உறுதியாய. நால்வர் நன்னெறியாகிய சீலம் நோன்பு, செறிவு, அறிவு என்னும் நிலை நான்கினையும் கைக்கொண்டோர்.

(அ. சி.) அழுந்திய நால்வர் - நந்திகள். நால்வர் - சனகர் - சனந்தனர் - சனாதனர் - சனற்குமாரர். (க)

536. கோல்லான்பொய் கூறான் களவிலான் எண்குணன்
நல்லான் அடக்க முடையான் நடுச்செய்ய
வல்லான் பகுந்துண்பான் மாசிலான் கட்காமம்
இல்லான் இயமத் திடையின்கின் ருனே.

(ப. இ.) பதினோர் அருஞ்செயல்கள் இதன்கண் ஓதியருளப் பட்டன. இவற்றை விழுமிய உயிரினும் விழுமியதாய்க் கைக்கொண்டு ஒழுகும் நீதகற்றலாகிய இயமத்து நின்றோன் ஒதும் நன்னெறியாளன் ஆவன். உயிரை உடம்பினின்றும் பிரிப்பதே வெளிப்படத் தெரிந்த கொலையாகும். உண்மையான் நோக்குவார்க்கு ஓரறிவுமுதல் ஆறறிவு ஈறுகச் சொல்லப்படும் எவ்வகையுயிர்க்கும் சிறிய துன்பம் இழைப்பதும் கொலையேயாம். துன்ப இழைப்புக்கு நேர்முகமாகவோ மறைமுகமாகவோ துணைபுரிவதும் கொலையேயாம். அதனாலேயே திருவள்ளுவ நாயனாரும் புலாலுண்டலும் கொலையே என்று அருளினர். 'கொல்லப் பயன்படுங் கீழ்': பெருந் துன்பமே கொலை என்னும் சொல்லால் ஆளப்படும். இவ் வழக்கு நோக்கின் அந்தோ உயிர் நீக்கும் கூற்றுச் செயற்கு மாற்றமும் இன்றுபோலும். வெகுளிப் பொருளாவரும் மெய்ப்பாட்டிற் குரிய பொருள் நிலைக்களம் நான்கு வருமாறு: மாற்றம் - சொல்.

"உறுப்பறை குடிகோ ளலைகொலை யென்ற
வெறுப்பின் வந்த வெகுளி நான்கே."

—தொல். பொருள்: உரி. ச.

1. கெடுப்பதூஉம். திருக்குறள், கஎ.

இதனுள், 'கொலை யென்பது, அறிவும் புகழும் முதலாயினவற்றைக் கொன்றுரைத்தல்.'

எண்குணன் - எண்ணத்தக்க சிறந்த குணமுள்ளவன். பகுத்துண்பான் - எல்லாமுடையவன் சிவன்; நம்பாலுள்ள பொருளும் அவனுக்கே உரிய உடைமை; எல்லா உயிர்களும் அவன் மக்கள் என்னும் இவ் வுண்மையுணர்ந்து தன்பாலுள்ளனவற்றை அன்புடன் குறிப்பறிந்து முகமலர்ந்து இன்மொழி புகன்று நன்முற்றிக் கொடுத்துவந்தோன் பகுத்துண்பான்[1] எனப்படுவன்.

(அ. சி.) எண்குணன் - எண்ணும் குணன் - எல்லாராலும் மதிக்கப் படும் குணமுடையவன். (உ)

---

# 3. நியமம்

(நன்முற்றல்)

537. ஆதியை வேதத்தின் அப்பொரு ளாஞைச்
சோதியை அங்கே சுடுகின்ற அங்கியைப்
பாதியுள் மன்னும் பராசத்தி யோடுடன்
நீதி யுணர்ந்து நியமத்த ஞமே.[2]

(ப. இ.) எல்லாவற்றுக்கும் முழுமுதலாய்க் காரணமாயிருப்பவன் ஆதி. செந்தமிழ் மறையும் அந்தமில் பொருளுமாய் விளங்குபவன் சிவன். அசன்ற அறிவுப் பேரொளியாகவுள்ளவன் அவனே. சுடுந்தியாகவுள்ளவனும் அவனே. திருமேனி யொருகூறு பெண்கூருகத் திகழ்பவனும் அவனே. திருவருளால் இவ்வுண்மையுணர்ந்தோன் நீதியுணர்ந்தோனவன். பாதியுள் - திருமேனிச்சண் ஒரு பாதியில். நீதியுணர்ந்தான் - திருவருளான் முறைப்படி கண்டு வணங்கினவன். நியமத்தான் - நன்முற்றும் அகத்தவத்தோன். அகத்தவம் - யோகம். (க)

538. தூய்மை அருளுண் சுருக்கம் பொறைசேவ்வை
வாய்மை நீலமை வளர்த்தலே மற்றிவை
காமங் களவு கொலையெனக் காண்பவை
நேமியீ ரைந்து நியமத்த ஞமே.[3]

(ப. இ.) அகப்புறம் தூய்மை, அருள், ஊண் முதலியன சுருக்கிச் சிக்கனவாழ்வு, டொறுமை, செப்மை, வாய்மை, நீலமை (மானம்), காமமகற்றல், களவகற்றல், கொலையகற்றல் ஆகிய பத்தும் நன்முற்றும் பண்பாகும். ஊண் சுருக்கம் வரும் திருவள்ளுவர் திருப்பாட்டாஞுணர்க:

" இழிவறிந் துண்பான்சண் இன்பம்போல் நிற்கும்
கழிபேர் இரையான்சண் நோய்." —திருக்குறள், கூசஙூ.

---

1. பகுத்துண்டு. திருக்குறள், ஙூஉஉ.
2. ஆதியஃ. அப்பர். டு. கூச - கூ.
3. சஃ ஐசஃசல். சிவஞான சித்தியார், கஉ. உக.
,, உல்ஙைத்தான். திருக்குறள், உ0க.

ஈண்டுக் காமம் - பன்மனைவியரை மணத்தலும், ஒரு மனைவிமாட்டும் (ஒத்த நிலையினராய்ச் சிவன் நினைவினராய் மகப்பேற்றின் பொருட்டுக் கூடுவதே காதற்கூட்டம்.) காதன்முறையின்றிக் கூடுவதும் காமக்கூட்டமாகும். அருவப்பொருளில் அன்பு செல்வது காதல். உருவப்பொருளில் அன்பு செல்வது காமம். காதல் உயிரின்மாட்டும் காமம் உடம்பின்மாட்டும் செல்வன. காதற்கூட்டமின்றிக் காமக்கூட்டம் கூடுதலும் காமம் ஆம். களவு: தான் ஒழுகவேண்டிய ஒழுக்கமுறைகளைக் காலந்தவிர்ந்தும், நினைப்பூட்டியும் செய்வனவும், தன் தேவைக்குமேல் பண்டங்களைத் தொகுத்துவைத்தலுமாம். பண்டங்கள் ஊண் உடை, உறையுள் முதலியன- கொலை: தன்னுயிர் பிறப்பற்றுச் சிறப்புற முயலாது முயலும் முயற்சி கொலையாகும். நிலைமை - உறுதியுடைமை. காமம் கொலை களவு - இம்மூன்றும் அகற்றல். ஈரைந்தும் - குறித்த பத்தும்.

(அ. சி.) நேமி - நியமத்தை உடையவன். (உ)

539. தவஞ்செபஞ் சந்தோடம் ஆத்திகந் தானஞ்
சிவன்றன் விரதமே சித்தாந்தக் கேள்வி
மகஞ்சிவ பூசையொண் மதிசொல்லீர் ஐந்து
நிவம்பல செய்யின் நியமத்த னுமே.

(ப. இ.) 'உற்றநோய் நோன்றல் உயிர்க்கு உறுகண் செய்யாமை' யாகிய தவமும், திருவைந்தெழுத்தைக் கணித்தலாகிய செபமும், சிவனை நினைத்தலாகிய மகிழ்வும். முப்பொருளுண்மை கைக்கொள்வதாகிய மெய்ப்பொருள் ஆத்திகமும், சிவனடியார்களுக்குப் பணிந்து உள்ளன உவந்து கொடுக்கும் தானமும், சிவனை வழிபடும் விரதமும். செந்தமிழ்த் திருமுறைச் சித்தாந்த நூல்களை ஓதலும், ஓதுவித்தலும், கேட்பித்தலும், கேட்டலும், நாடலும் முதலிய நயனுர் மெய்யுணர்வு வேள்வி ஐந்தும் செய்தலும், திருவைந்தெழுத்தால் ஓம்பும் அகத்தழலும், திருவைந்தெழுத்தால் புரியும் அகப்பூசையும், அருளால் சிவனை மறவா நினைவால் உறவெனக் கொள்ளும் ஒண்மதியும் என்று சொல்லப்படும் பத்தும் நத்தும் நன்முற்றலின் வித்தாகும். சந்தோடம் - மகிழ்ச்சி. ஆத்திகம் - கடவுட் கோள். சிவஞ் செய்தலென்னுஞ் சீரிய சொல் செபஞ் செய்தலென மருவிற்று.

(அ. சி.) சித்தாந்தக் கேள்வி - சைவ சித்தாந்த நூல்களிற் கூறும் பொருளைக் கேட்டல். மகம் - விருந்து முதலிய ஐம்பெரு வேள்வி. நிவம் - நிபம். இவை போன்ற நற்செயல்கள். (கூ)

---

1. ஞானநூ. சிவஞானசித்தியார், அ : உ - கக.
,, பொய்யாத. எ. கூ0 - சு.

# 4. ஆதனம்

(இருக்கை)

540. பங்கய மாதி பரந்தபல் ஆதனம்
அங்குள வாம்இரு நாலும் அவற்றினுள்
சோங்கில்லை யாகச் சுவத்திக மெனமிகத்
தங்க இருப்பத் தலைவனு மாமே.

(ப. இ.) தாமரை இருக்கை முதலாக இருக்கை பலதிறப்படும், அவற்றுள் எண்பேரிருக்கை நனிமிகச் சிறந்தன. அவ்வெட்டனுள்ளும். குற்றங்குறை ஏதும் இல்லாத இருக்கை, எல்லாரானும் ஒல்லும் வகை கைக்கொள்ளப்படும் இருக்கை சுவத்திகம் என்ப. சுவத்திகம் என்பது தொடைக்கும் முழங்காற்கும் நடுவே இரண்டு உள்ளங்காலையும் செலுத்தி இறுமாந்திருப்பது. சுவத்திக ஆதனம் - இறுமாப்பிருக்கை. பங்கயமாதி- தாமரை இருக்கை முதலாக. இருநாலு மவற்றினுள் - அவற்றினுள் இருநாலுமென மாறிப் பொருள்கொள்க.

(அ. சி.) சொங்கு - சொக்கு என்பதன் மெலித்தல்; குற்றம். சுவத்திகம் - எது சரிப்படுகிறதோ அது; சுகமானது. (க)

541. ஓரணை யப்பத மூருவின் மேலேறிட்
டார வலித்ததன் மேல்வைத் தழகுறச்
சீர்திகழ் கைகள் அதனைத்தன் மேல்வைக்கப்
பார்திகழ் பத்மா சனமென லாகுமே.

(ப. இ.) பத்மாதனமாகிய தாமரை இருக்கை: இரண்டு கால்களையும் மாற்றித் தொடைமேல் உள்ளங்கால் மலர்ந்திருக்குமாறு வலித்திழுத்து வைத்தல் வேண்டும். பின்பு அம் மலர்ந்த கால்களின்மேல் இருகைகளும் கோத்து மலர்ந்திருக்குமாறு வைத்தல் வேண்டும். நன்றாய் நிமிர்ந்திருந்து நேர்முகமாக நோக்குதல் வேண்டும். இதுவே பத்மாசனமாகும். அணை - ஓரம். (உ)

(அ. சி.) ஊரு - தொடை.

542. துரிசில் வலக்காலைத் தோன்றவே மேல்வைத்து
அரிய முழந்தாளி லங்கையை நீட்டி
உருசி யொடுமுடல் செவ்வே யிருத்திப்
பரிசு பெறுமது பத்திரா சனமே.

(ப. இ.) பத்திராசனமாவது: குற்றமற்ற வலக்காலை வெளித் தோன்றுமாறு இடத்தொடையின்மேல் வைத்து இரண்டு முழந்தாள்களிலும் அங்கைகளை மேனோக்குமாறு அமைத்து நீட்டி, உடம்பைச் செவ்வையாக நிமிர்ந்திருக்குமாறு செய்து பயிறல் பத்திராசனமாகும். இவ்விருக்கையால் உடல் தளர்ச்சியின்றிக் கிளர்ச்சியுடனிருக்கும்.

(அ. சி.) துரிசில் - குற்றமற்ற. உருகியிடும் உடல் - தெகிழும் உடல். (ஊ)

543. ஒக்க அடியிணை யூருவில் ஏறிட்டு
மூக்கி யுடலை முழங்கை களில்ஏற்றித்
தொக்க அறிந்து துளங்கா திருந்திடிற்
குக்குட ஆசனங் கொள்ளலு மாமே

(ப. இ.) பாதங்கள் இரண்டையும் மாற்றித் தொடையின்மேல் ஏறுமாறு செய்தமைத்து, உடம்பின் பளுவை முழங்கை தாங்குமாறமைத்து அசைவின்றியிருத்தல் கோழியிருக்கையாகும். மூக்கி - அழுத்தி; முங்கியென்னும் திசைச்சொல்லின் திரிபு. குக்குட ஆசனம் - கோழி இருக்கை.

(அ. சி.) துளங்காது - அசையாமல். (ச)

544. பாத முழந்தாளிற் பாணி களைநீட்டி
ஆதர வோடும்வாய் அங்காந் தழகுறக்
கோதில் நயனங் கொடிமூக்கி லேயுறச்
சீர்திகழ் சிங்கா தனமெனச் செப்புமே.

(ப. இ.) முழந்தாளின்மேல் பாதத்தை வைத்து அவற்றின்மேற் கைகளை நீட்டி, விருப்புடன் மேல்நோக்கி, குற்றமற்ற கண்கள் மூக்கின் நுனியை நோக்குமாறு இருப்பது சிங்காதனமாகும். சிங்காதனம் - அரிமா இருக்கை.

(அ. சி.) பாணி - கை. கொடி மூக்கு - மூக்கு நுனி. (சி)

545. பத்திரங் கோமுகம் பங்கயங் கேசரி
சொத்திரம் வீரஞ் சுகாதனம் ஓரேழும்
உத்தம மாமுது ஆசனம் எட்டெட்டுப்
பத்தொடு நூறு பலஆ சனமே.

(ப. இ.) பத்திரமுதல் சுகாதனம் வரைக் சொல்லப்படும் இருக்கை ஏழும் மேலானதாகச் சொல்லப்படும், மாமுது ஆசனமும் சேர எட்டாகும். மாமுது ஆசனம் - சுவத்திகம். இவற்றுடன் சொத்திரம் சுகாசனம் கூட்டப் பத்தாகும். இப்படியே எட்டெட்டு ஆய அறுபத்து நான்கு, நூறு முதலிய இருக்கைகள் அளவில்லன. திருமூலநாயனார் தியருளிய இருக்கை எட்டேயாம். எனினும் பிறர் கொள்கைகளைக் கூறும் முறையில் பிறவும் கொள்ளப்பட்டன. இஃது எழுவகை மதங்களுள் ஒன்றாகிய 'உடம்படல்' என்னும் முறையாகும். (சு)

# 5. பிராணயாமம்

(வளி நிலை)

546. ஐவர்க்கு நாயகன் அவ்வூர்த் தலைமகன்
உய்யக்கொண் டேறுங் குதிரைமற் றொன்றுண்டு
மெய்யர்க்குப் பற்றுக் கொடுக்குங் கொடாதுபோய்ப்
பொய்யரைத் துள்ளி விழுத்திடுந் தானே.[1]

(ப. இ.) ஐவர்களாகிய ஐம்பொறிகட்கும் தலைவன் ஆருயிராகும். ஐம்பொறிகளையும் உறுப்பாகக்கொண்டு உடல் உறுப்பியாகத் திகழ்கின்றது. அதனால் அவ் வுடலை ஐவர் வாழும் ஊரென்றனர். அவ்வூர்க்குத் தலைமகன் மனம். அத் தலைமகன் நாயகனாகிய ஆருயிராம் தலைவன் உய்யுமாறுகொண்டு ஊரும் குதிரை ஒன்று உண்டு. குதிரை ஈண்டு உயிர்ப்பு. உயிர்ப்பு எனினும் பிராணவாயு எனினும் ஒன்றே. மெய்ம்மையாக அகத்தவப்பயிற்சி யுடையார்க்கு அம் மனமாகிய குதிரை அடங்கிப் பற்றுக்கொடுத்து ஒழுகும். முறையான பயிற்சியில்லாத பொய்யர்க்குப் பற்றுக்கொடாது துள்ளி எழுந்து அவரைக் கீழே வீழ்த்தித் தான் வேண்டியவாறு ஆர்வத்துடன் சென்றுவிடும்.

(அ. சி.) ஐவர் - ஐம்பொறிகள். ஊர் - உடல். தலைமகன் - மனம். குதிரை - பிராணவாயு. பற்றுக்கொடுக்கும் - வசப்படும். துள்ளி விழுத்திடும் - வசப்படாது. (க)

547. ஆரிய னல்லன் குதிரை இரண்டுள
வீசிப் பிடிக்கும் விரகறி வாரில்லை
கூரிய ஞானந் குருவின் அருள்பெற்றால்
வாரிப் பிடிக்க வசட்படுந் தானே.

(ப. இ.) குதிரையைச் செலுத்தும் ஆரியனாகிய மனத்தோன் நல்லவன். குதிரையாகிய உயிர்ப்பு இருவகை. ஒன்று வலப்பால் நாடி; மற்றொன்று இடப்பால் நாடி. இவற்றை முறையே பிங்கலை இடைகலை என்ப. அவ் வுயிர்ப்பினை விடுத்தலும் எடுத்தலும் ஆகிய செயலைப் போன்று தடுத்தலைச் செய்வதாகிய வீசிப்பிடிக்கும் வழி யறியாது மயங்குகின்றனர். திருவருள் வலத்தால் நன்னெறி நான்மைவழி யொழுகினால் சிவகுரு எழுந்தருளிவந்து ஆட்கொள்வர். அவரின் திருவருட் பேற்றால் அக் குதிரையாகிய உயிர்ப்பினை வயப்படுத்துதல் எளிதாகும். ஆரியன் - பெருமைமிக்க மனம். விரகு - உபாயம்; முறைமை. கூரிய - நுண்ணிய அறிவுள்ள. வாரி - சேர்த்து.

(அ. சி.) ஆரியன் - மிலேச்சன். குதிரை இரண்டு - இடைகலை பிங்கலை. விரகு - உபாயம். (உ)

548. புள்ளினும் மிக்க புரவியை மேற்கொண்டாற்
கள்ளுண்ண வேண்டாம் தானே களிதருந்
துள்ளி நடப்பிக்குஞ் சோம்பு தவிர்ப்பிக்கும்
உள்ளது சொன்னேம் உணர்வுடை யோருக்கே.[2]

---

1. உயிரா. அப்பர், கூ. உடு - க.
" ஞானி. சம்பந்தர், கூ. உஉ - கூ.
2. காயத்துள். திருவுந்தியார். சகூ.

(ப. இ.) புள்ளாகிய பறவையினும் மிக்க விரைவாகச் செல்லும் குதிரையினைச் சிவகுருவினருளால் மேற்கொண்டால் புறத்தே காணப் படும் கள்ளுண்டு களிப்பெய்துதல் வேண்டா. (319) தானே அகத்தின் கண் அளவில்லாத களிப்புண்டாகும். மேற்கொள்ளுதல் - அடக்குதல். உயிர்ப்புப் பயிற்சியுடையாரைத் துள்ளிநடக்கும் பீடுசேர் நடையினை ராக்கும். சோம்பல் வராமல் தடுக்கும். திருவடியுணர்வு கைவரப்பெறும்- செந்நெறியாளர்க்கு மெய்ம்மை எடுத்துரைத்தனம். உயர்ந்த குதிரைக்கு ஒப்புப் புள்ளென ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியரும் அருளினர். அது வருமாறு :

"வினையயிற் பிரிந்தோன் மீண்டுவரு காலை
இடைச்சுர மருங்கிற் றவிர்த லில்லை
உள்ளம் போல வுற்றுழி யுதவும்
புள்ளியற் கலிமா வுடைமை யான."

—தொல். பொருள் : ககச.

கலிமா - குதிரை.

புள்ளென்பது ஈண்டுப் பறவைப் பொதுவன்று. பறவையின் ஓர் இனம் புள்ளெனப்படும். அப் புள் முட்டையினின்றும் வெளிவந்த அப்பொழுதே பறக்கும் இயற்பண்பு வாய்ந்தது. அஃது ஈண்டைக்கு தனிமிகு பொருத்தமாகும். ஆருயிரும் நிலத்தில் பிறந்ததும் ஏதொரு துணையும் இன்றித் தாமாகவே மூச்சு விட்டுவாங்குகின்றதைக் காண் கின்றோமன்றே ? ஆதலால் முட்டையினின்றும் வெளிவந்தவுடன் பறக்கும் புள்ளே ஒப்பாகும். இவ் வுண்மை தேர்ந்து தெளிந்தே திருவள்ளுவநாயனாரும்,

"குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு" —கூகஅ.

என்று ஓதியருளி முட்டையினின்றும் வெளிவந்தவுடன் பறந்துபோகும் புள்ளே உடம்புடன் வந்த வுயிர் அவ் வுடம்பைவிட்டுப் போவதற்கு ஒப்பாகும் என ஓதியருளினர். நிலாமுகிப்புள், தளியுணவுப்புள் முதலியவை போன்று வியத்தக்க இயற்கைவாய்ந்த முட்டையினின்றும் வெளி வந்ததும் பறக்கும் பண்பினவாய புள்ளொன்று உளதெனக் கோடலும் பொருந்தும். நிலாமுகிப்புள் - நிலவை உணவாகக் கொள்வது. தளி யுணவுப்புள் - மழையை உணவாகக் கொள்வது. இதனை வானம்பாடி யெனவும், சாதகப்புள் எனவும் கூறுப. இவ் வுண்மை வருமாறு .

"வானம் பாடி வறங்கூர்ந் தாஅ
தழிதுளி தலைஇய புறவிற் காண்வர
வானர மகளோ நீயே
மாண்முலை யடைய முயங்கி யோயே."

—ஐங்குறுநூறு, சகஅ.

புள்ளினுமிக்க-வேகத்தால் பறவையினும் சிறந்த. மேற்கொண்டால்- அடக்கிக் கொண்டால். துள்ளி நடப்பிக்கும் - நடனமிட்டு நடத்தலைச் செய்விக்கும். சோம்பு - மடி.

(அ. சி.), புள் - பறவை. புரவி - பிராணவாயு. (கூ)

549. பிராணன் மனத்தோடும் பேரா தடங்கிப்
பிராண னிருக்கிற் பிறப்பிறப் பில்லை
பிராணன் மடைமாறிப் பேச்சறி வித்துப்
பிராண னடைபேறு பெற்றுண்டீர் நீரே.

(ப. இ.) பிராணனுகிய உயிர்ப்புச் சிவகுருவினருளால் மனத்துடன் பொருந்தி அடங்கி இருக்குமானால் பிறப்பு இறப்பு இல்லை. உயிர்ப்பானது வலப்பால் இடப்பால் நாடிகளாகிய பிங்கலை இடைகலைகளில் மாறிமாறிப் போய் வருமானால், பேச்சுமுண்டாகும். அதனால் இறப்பும் பிறப்பும் இறவாது வந்துகொண்டிருக்கும். பேராது - பிரியாது. நடை பேறு - போதல், வருதல் (இறத்தல் பிறத்தல்). இறவாது - நீங்காது.

(அ. சி.) மடைமாறி - இடைகலை - பிங்கலைகளை மாறிமாறி. (சு)

550. ஏறுதல் பூரகம் ஈரெட்டு வாமத்தால்
ஆறுதல் கும்பம் அறுபத்து நாலதில்
ஊறுதல் முப்பத் திரண்டதி ரேசகம்
மாறுதல் ஒன்றின்கண் வஞ்சக மாமே.

(ப. இ.) வளிநிலையாகிய மூச்சுப்பயிற்சி முறை இதிற் காணப்படுகிறது. ஏறுதல் - பூரகம். ஆறுதல் - கும்பகம். ஊறுதல் - இரேசகம். பூரகம்-உள்ளிழுத்தல். கும்பகம்-அடக்குதல். இரேசகம்-வெளிவிடுதல். வாமம் - இடகலை, இடமூக்கு. ஈரெட்டு - பதினறுமாத்திரை, அறுபத்து நாலு மாத்திரை, முப்பத்திரண்டு மாத்திரை. இப் பயிற்சிக்குச் 'சிவசிவ' என்னும் செந்தமிழ்த் திருமாமறை முடிவினை நான்கு முறை கணித்துக் காற்றை உள்வாங்குதல் வேண்டும். அதுபோல் சிவசிவ' என்பதனைப் பதினறுமுறை கணித்து இரண்டு மூக்கையும் அடைத்து உள் நிறுத்துதல் வேண்டும். பின் 'சிவசிவ' என எட்டுமுறை கணித்து வல மூக்கைத் திறந்து வெளிவிடுதல் வேண்டும் இம்முறையே இடமூக்கிலும் பயிலுதல் வேண்டும். இவ்வாறு மாறிமாறி இயன்ற அளவு செய்தல் வேண்டும். சிவசிவ என்பது நான்கு மாத்திரை.

(அ. சி.) மாறுதல் - மடைமாறுதல். (இ

551. வளியினை வாங்கி வயத்தில் அடக்கில்
பளிங்கொத்துக் காயம் பழுக்கினும் பிஞ்சாம்
தெளியக் குருவின் திருவருள் பெற்றால்
வளியினும் வேட்டு வளியனு மாமே.

(ப. இ.) அகத்தவப் பயிற்சியால் உயிர்ப்பினை வாங்கி உந்திக்கண் அடக்கி வயப்படுத்தினால் உடம்புக்குக் காலவரையறைப்படி ஏற்படும் முதுமை புறத்துக் காணப்படினும் அகத்து முதுமைப்பண்பு ஒரு சிறிதும் காணப்படமாட்டாது அதற்கு மாறாக இளமைப்பண்பு கிளர்ந்தெழுந்து கொழுந்துவிடும். அதனையே பளிங்கொத்துக் காயம் பழுக்கினும் பிஞ்சாம் என்று ஓதினர். அகத்துப்பண்பு இளமையாகப் புறத்துப் பொலிவு முதுமையாவது எதன்பொருட்டெனின் ? அவர்தம் பயிற்சியின் சிறப்பும்

அகவையின் முதிர்வும் ஒருங்குணர்த்தும் உண்மை எண்மையர்ள் என்க. அவையே ஏனையாரையும் அப் பயிற்சிக்கண் தூண்டித் தொழிற்படுத்தும் வண்மையுள்ளனவாகும். இந் நெறியால் தெளிவு பெறச் சிவகுருவின் திருவருள் எய்தும். அத் திருவருட்டுணையால் வேண்டுமேல் காற்றினும் விரைவாய் விண்ணிடைப் பறக்கும் அளியனும் ஆவன். அளியன் - மென்மைத்தன்மையுடையன். இஃது எண்பெரும் பேறுகளுள் ஒன்றுகிய மென்மையாகும். எண்பெரும் பேறு : நுண்மை, பருமை, விண்டன்மை, மென்மை, விரும்பிய தெய்தல், நிறைவுண்மை, ஆட்சியுறுதல், கவர்ச்சி என்பன. இவற்றை முறையே அணிமா, மகிமா, கரிமா, இலகிமா, பிராப்தி, பிராகாமியம், ஆட்சியுறுதல், கவர்ச்சி எனலுமாம். வளியினும்-காற்றைவிட. வேட்டு-விரும்பத்தக்க. அளியனும் - மென்மைத்தன்மை யுடையனும். ஆம் - ஆவன். (விண்ணிற் பறக்கும் தன்மையுடையன் ஆவன் என்பது கருத்து.)

(அ. சி.) வயம் - வசம் (சகரத்துக்கு யகரம் போலி). பழுக்கினும் - மூதுமைப் பருவம் எய்தினுலும். பிஞ்சாம் - இளமைத் தன்மையை எய்தலாம். (சு)

552. எங்கே இருக்கினும் பூசி இடத்திலே
அங்கே யதுசெய்ய ஆக்கைக் கழிவில்லை
அங்கே பிடித்து விட்டள வுஞ்செல்லச்
சங்கே குறிக்கத் தலைவனு மாமே.

(ப. இ.) எங்குத் தங்கநேரினும் அங்கெல்லாம் இடமூக்கு வழியாக (இடைகலை) உயிர்ப்பினைப் பதினறுமாத்திரையளவு எடுத்தலாகிய பூரகத்தைச் செய்வாயாக. செய்தபின் அங்கே தடுத்தலாகிய கும்பகத்தை அறுபத்துநான்கு மாத்திரையளவு செய்க. பின் விடுத்தலாகிய இரேச கத்தை முப்பத்திரண்டு மாத்திரையளவு செய்க. அங்ஙனம் செய்யவே அகத்தவப் பயிற்சியால் உணர்வினுள் ஒலிக்கும் சங்கு முதலிய ஒலிகள் பத்தும் (586) உண்டாகும். அகத்தவம் - சிவயோகம்.

(அ. சி.) பூரி இடத்திலே இடைகலை வழியாய்ப் பிராணவாயுவைப் பதினறு மாத்திரை உள்ளே வாங்கு. அங்கே பிடித்து - கூச மாத்திரை கும்பித்து. விட்டளவுஞ்செல்ல - கூஉ மாத்திரை இரேசகம் செய்ய (அஃதாவது வெளியேவிட). சங்கே குறிக்க - சங்கு முதலிய நாதங்கள் கேட்க. தலைவனுமாமே - பிராணயாமப் பயிற்சியில் தலைசிறந்தவன் ஆகலாம். (எ)

553. ஏற்றி இறக்கி இருகாலும் பூரிக்குங்
காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாரில்லை
காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாளர்க்குக்
கூற்றை யுதைக்குங் குறியது வாமே.

(ப. இ.) உயிர்ப்பினை அகத்தவப்பயிற்சியால் மேலே ஏறும்படி செய்து இடப்பால் மூக்கு வலப்பால் மூக்கு வழியாக இரு கால் - இரு முறை எடுத்தலாகிய பூரித்தலைச் செய்க. அங்ஙனம் செய்யும் காற்றை அளவால் தடுத்தலாகிய கும்பகத்தைச் செய்யும். மேலோதிய (552)

முறைமைக் கணக்கினைக் கைக்கொண்டொழுகுவார் அரியர். அவ் வருமைப்பாடாம் 'காற்றைப்பிடிக்கும் கணக்கறி' வாருக்குச் சிவபெரு மான் திருவருளால் கூற்றையுதைக்கும் குறிநிலையுண்டாம். உயிர்ப்புப் பயிற்சிசெய்வார் அவ்வினையால் சிவவினையாக்கிக் கோடற்பொருட்டுச் 'சிவசிவ' என்னும் நான்கு மாத்திரையுள்ள நம்பன் நற்றிருடரை நாவழுத்திப் பயில்வர். அஃதாவது உயிர்ப்பினை விடுத்தற்கு நான்கு முறையும், எடுத்தற்குப் பதினாறு முறையும், தடுத்தற்கு எட்டுமுறையும் ஆக நவின்று பயில்வர். அம் மறைக்கணிப்பினால் வரும் நற்றவம் இயல் பாகவே உயிர்ப்புப் பயிற்சியால்தானே எய்துகின்றது. இதுவே திருவள்ளுவநாயனார் அருளிய,

"வினையான் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையாத் தற்று" —குளக.

என்னும் செந்தமிழ்ப் பொதுமறையின் சிரியபொருட்கு நேரிய எடுத்துக் காட்டாகும். மேலும் திருமுறைத் திருவாசகவழித் திருவைந்தெழுத்து ஓதுவார்முன் நமன்றமர் நணுக அஞ்சுவர். அவ்வைந்தெழுத் துள்ளும் ஓப்பில் ஒன்றாய்நின்று சிறப்பது 'சிவசிவ' என்னும் இருதலை மணியாம் செழுமறையே. இதனை வழுத்துவாரை நமன்தூதர் நாடவும் அஞ்சுவர். இவ்வுண்மை வரும் அப்பர் வைப்பாம் அருள்மொழியான் உணர்க :

"இன்னங் கேண்மின் இளம் பிறைசூடிய
மன்னன் பாத மனத்துடன் ஏத்துவார்
மன்னு மஞ்செழுத் தாகிய மந்திரம்
தன்னி லொன்றுவல் லாரையும் சாரலே." —தி : கo.கூ.

ஒன்று : ஒப்பிலாச் 'சிவசிவ' என்னும் ஒன்று. (அ)

554. மேல்கீழ் நடுப்பக்க மிக்குறப் பூரித்துப்
பாலாம் இரேசகத் தாலுட் பதிவித்து
மாலாகி யுந்தியுட் கும்பித்து வாங்கவே
ஆலாலம் உண்டான் அருள்பெற லாமே.

(ப. இ.) மேல் எனப்படும் தலை, கண், காதுகளும் ; கீழ் எனப்படும் கால், பெருவிரல் முதலியவைகளும், நடு எனப்படும் நெஞ்சம், கொப்பூழ் முதலியவைகளும் நிறையுமாறு உயிர்ப்பினை உள்ளிழுத்தல் · எடுத்தல் செய்தல் வேண்டும். இதுவே பூரித்தல் எனப்படும். அங்ஙனம் எடுத்தல் செய்த உயிர்ப்பினை அளவுக்குமேல் வெளிவிடுத்தல் செய்யாது உட்பதி வித்தலாகிய அளவுடை விடுதலைச் செய்தல் வேண்டும். விடுத்தல் - இரேசகம். சிவபெருமான்பால் பேரன்புடையவராய் அடிவயிற்றினுள் தடுத்தலாகிய கும்பகத்தைச் செய்து வாழ்ந்து வந்தால் நனிமிக எளி தாய்ப் பிழை பொறுக்கும் விழைதகு பெருமானுகிய சிவபெருமான் திருவருளைப் பெறலாகும். ஆலமுண்டான் - மாலால் விளையும் மேலாம் பிழையென்னும் நஞ்சினையுண்டவன். மேல் · தலை, கண், காது முதலியன. கீழ் - கால் பெருவிரல் முதலியன. நடு - நெஞ்சம், கொப்பூழ் முதலியன. (இது பொறைநிலை என்கின்ற வாயுத்தாரணை முறையாம்).

(அ. சி.) இரேசகத்தால் உட்பதிவித்து அளவுக்கு மீறி வாயுவை வெளியே விடாமல். (க)

555. இட்ட தவ்வீ டிளக்கா திரேசித்துப்
புட்டிப் படத்தச நாடியும் பூரித்துக்
கோட்டிப் பிராணன் அபானனுங் கும்பித்து
நட்டம் இருக்க நமனில்லை தானே.

(ப. இ.) வீடாகிய உடல் தளர்ச்சியுறுது வளர்ச்சியுறுமாறு அளவாக உயிர்ப்பினை விடுத்தல் செய்து உடலுக்குச் செழுமையும் கொழுமையும் வழுவின்றிக் கெழுமப் பத்துவகை நாடியினும் உயிர்ப் பினை எடுத்தல்வேண்டும். அங்ஙனம் எடுத்து வீணுகக் கழியும் உயிர்ப் பினையும் மலக்காற்றினையும் தடுத்து நிலைநிறுத்தலாகிய நட்டத்தினைப் புரிவோர்க்குப் பண்டு எழுதிய கணக்கின்படி நமன் வருவதற்கில்லை. ஒருவன் மூலபண்டாரத்தைச் செலவு செய்யாது தான் தேடி உண்பித்தும் உண்டும் வருகின்றனன் அம்மட்டுமன்றி மூலபண்டாரத்தின்கண் நாளும் சிறுகச்சிறுகத் தன் ஊதியத்திலிருந்து பொருள் கூட்டித் தொகுத்தும் வருகின்றனன். இவ்வுண்மையோராது மூலபண்டாரம் இது காறும் செலவாகி முடிந்திருக்கும் என்று ஒருவன் கணக்குக்கூட்டினுல் எவ்வளவு பிழையோ அவ்வளவு பிழையாகும் அகத்தவமாகிய யோகப் பயிற்சியுடையார்பால் கூற்றுவன் வாழ்நாட்கு அலகிடுதல். நாடிபத்து: இடப்பால் நரம்பு, வலப்பால் நரம்பு, நடு நரம்பு, உள்நாக்கு நரம்பு, வலக்கண் நரம்பு, இடக்கண் நரம்பு, வலச்செவி நரம்பு, இடச் செவி நரம்பு, கருவாய் நரம்பு, எருவாய் நரம்பு என்பன.

(அ. சீ.) வீடு இளகாது - சரீரம் தளராது. புட்டிபட - பருக்கும்படி. கொட்டிய - வீணுக்கழியும். நட்டம் இருக்க - நிலைநிறுத்த. (கo)

556. புறப்பட்டுப் புக்குத் திரிகின்ற வாயுவை
நெறிப்பட வுள்ளே நின்மல மாக்கில்
உறுப்புச் சிவக்கும் உரோமங் கறுக்கும்
புறப்பட்டுப் போகான் புரிசடை யோனே.

(ப. இ.) உள்ளிருந்து புறப்பட்டு வெளிப்போந்து மீண்டும் உட்புக்குத் திரிகின்ற உயிர்ப்பினை மூச்சுப்பயிற்சி முறைப்படி தடுத்து உள்நிறுத்தி அருளால் தூய்மையாக்கி ஒழுக வல்லார்க்கு உடம்பு பொன் மேனியாகும். உயிர்க்குயிராய் உடன் நின்று விளங்கும் பின்னற்சடைசேர் பெருமானும் மன்னிநிற்பதன்றிப் புறப்பட்டுப் போகான். அவன் போகானுகவே அவனுக்கு உடலாகிய ஆருயிரும் போகாது. ஆருயிர் நிற்கவே உடலும் அழியாது. நெறிப்பட - முறைப்படி. உறுப்புச் சிவக்கும் - (உறுப்பு இனை யாகுபெயராய் உடம்பைக் குறித்தது.) உடம்பு பொன்னிறமாம். (கக)

557. கூடம் எடுத்துக் குடிபுக்க மங்கையர்
ஓடுவர் மீளுவர் பன்னிரண் டங்குலம்
நீடுவர் எண்விரல் கண்டிப்பர் நால்விரல்
கூடிக் கொளிற்கோல அஞ்செழுத் தாமே.

(ப. இ.) கூடமாகிய உடலின்கண் குடிபுகுந்த மங்கையராகிய பிங்கலை இடைகலை என்னும் வலப்பால் இடப்பால் நாடிகள் வாயிலாக உயிர்ப்புப் பன்னிரண்டுவிரல் அளவு ஓடுதலும் மீளுதலும் புரியும். அப் பன்னிரண்டு விரலுள் எண்விரல் அளவு எடுத்துக்கொண்டு நான்குவிரல் அளவு வீணாக வெட்டி அவை வாணாளென்று எண்ணுது போக்கிவிடுவர். அந் நால் விரலளவும் நாளும் அகத்தே கூடிக்கொள்ளின் மிகப்பெரும் வைப்பாகத் திகழும். அதன்மேல் பயிற்சியால் பெருகி மூலபண்டாரம் சாலமிகும். மிகவே அவ்வுயிர் திருநீறு சிவமணி அணிந்தார்தம் புறக் கோலம் போன்று உணர்வின்கண் 'சிவசிவ' என்னும் செந்தமிழ் மறைக் கோலமாய் உறையும். உறையவே கூற்றுவனும் நாட அஞ்சுவன். அஞ்செழுத்தாமே - உயிர்க்கிழவன் 'சிவசிவ' என்னும் திருவுருவனுவன்.

(அ. சி.) கூடம் - சரீரம். மங்கையர் - இடைகலை; பிங்கலை. எண் விரல் கண்டிப்பர் - பிராணவாயுவைப் பன்னிரண்டங்குலமுள்ள பொரு ளாகக் கொண்டால் பூரகம் எட்டங்குலப் பிரமாண முள்ளதாகும். நாலங்குலம் வந்து கூடாது. கால்விரல் - 16 மாத்திரையுள்ள பூரகத்தின் கால்பாகமாக உள்ள நாலங்குலம். கூடிக்கொளின் - 64 மாத்திரை அளவுள்ள குப்பகத்தாலும் 32 மாத்திரை அளவுள்ள இரேசகத்தாலும் நாலங்குலம் கூடிக்கொண்டால். (கஉ)

558. பன்னிரண் டாணை பகல்இர வுள்ளது
பன்னிரண் டாணையைப் பாகன் அறிகிலன்
பன்னிரண் டாணையைப் பாகன் அறிந்தபின்
பன்னிரண் டாணைக்குப் பகல்இர வில்லையே.

(ப. இ.) வெளிச்செல்லும் உயிர்ப்பு மாத்திரை பதினறனுள் இயல் பாகவே நான்குமாத்திரை உயிர்ப்புப் புறமே வீணாகக் கழிந்துபோக அகத்தே பன்னிரண்டு மாத்திரை தங்குகின்றது. அதுதானும் பின்னும் உயிர்ப்பினைக் கழிப்பதற்கே காரணமாகத் தங்குகின்றது. இப் பன்னி ரண்டு மாத்திரை உயிர்ப்பினைப் பன்னிரண்டாணை என்றனர். இவை பாகனுகிய ஆருயிர்க்கு அடங்குதல் நன்றாகும். அங்ஙனம் அடங்கின் நாளெல்லை, விழிப்பு உறக்கம், தோற்ற ஒடுக்கம், அறிவு அறியாமை எனப்படும் பகல் இரவுகள் இல்லை. அவ்வியாணையினை அடக்கு முறை யினைப் பாகனுகிய உயிர் அறிந்திலது. அதனை ஆருயிர் அறிந்தபின் அவ்வுயிர்ப்பு அகத்தே தங்கி மிகப்பல்கி முழுவளர்ச்சியினை எய்தும். எய்தவே மேலோதிய பகல் இரவுகளில்லை. பாகன் - இயைந்தியக்கு வோன்.

(அ. சி.) பன்னிரண்டாணைக்கு - 16 மாத்திரையில் நாலு மாத்தி ரையை விட்டு விட்டு 12 மாத்திரையை மாத்திரம் பூரிப்பவருக்கு. பாகன் - ஆன்மா. (கஊ)

# 6. பிரத்தியாகாரம்

(தொகை நிலை)

559. கண்டுகண் டுள்ளே கருத்துற வாங்கிடிற்
கொண்டுகொண் டுள்ளே குணம்பல காணலாம்
பண்டுகந் தெங்கும் பழமறை தேடியை
இன்றுகண் டிங்கே இருக்கலு மாமே.

(ப. இ.) பிரத்தியாகாரமாகிய தொகைநிலைக்கண் அஃதாவது 'பொறியுணர் வெல்லாம் புலத்தின் வழாமல், ஒருவழிப் படுப்பது தொகைநிலையாம்' ஆகலின் அகத்தவப் பயிற்சிமுறையான் சிவபெருமானே உணர்வின்கண் கருத்துள்வைப்பது தொகைநிலை. அங்ஙனம் சிவ பெருமானே அகத்தே கொள்ளக் கொள்ள அவன்றன் எண்குணப் பெருக் கமும் எண்மையிற் காணலாம். பழங்காலத்தே நனிமிகு கனிவுடன் செந்தமிழ்ப் பழமறை தேடித் திரிக்கும் சிவபெருமானே இந்நாள் நாமும் அகத்தே கண்டு இன்புற்று இருக்கலுமாகும். பண்டு-பழைமை; தொன்மை. தேடியை - தேடப்பட்ட சிவபெருமானே. பழமறை - செந்தமிழ்த் திருநான்மறை. இருக்கலும் - மெய்யடிமையாய் வாழ்தலும்.

560. நாபிக்குக் கீழே பன்னிரண் டங்குலம்
தாபிக்கு மந்திரந் தன்னை அறிகிலர்
தாபிக்கு மந்திரந் தன்னை அறிந்தபின்
கூவிக்கொண் டீசன் குடியிருந் தானே.[1]

(ப. இ.) கொப்பூழுக்குப் பன்னிரண்டுவிரல் அளவின் கீழுள்ளது மூலாதாரம். அம் மூலாதாரத்தைத் தூண்டித் தொழிற்படுத்தும் மந்திரம் இயற்கைச் செந்தமிழ் மறையாகிய 'ஓம்'. இம் மறையினையே ஆண்டு வரைசெய்து நிலைநிறுத்தல் வேண்டும். அதனைப் பலரும் அறிகிலர். திருவருளால் அதனையறிந்தபின் சிவபெருமானே அன்பால் அழைத்துக்கொள்ளுதல் வேண்டும். அழைக்கவே அவனும் வெளிப் பட்டு எழுந்தருளிக் குடியிருந்தருள்வன். மூலாதார எழுத்துக்கள் வ, ச, ஷ, ஸ என்பன என்றலும் ஒன்று. தாபிக்கு மந்திரம் - நிலை நிறுத்தும் ஓங்காரம். கூவி - அழைத்து. கொண்டு - அடிமைகொண்டு.

561. மூலத் திருவிரல் மேலுக்கு மூன்நின்ற
பாவித்த யோனிக் கிருவிரல் கீழ்நின்ற
கோலித்த குண்டலி யுள்ளெழுஞ் செஞ்சுடர்
ஞாலத்து நாபிக்கு நால்விரற் கீழதே.

(ப. இ.) மூலாதாரத்திற்கு இரண்டுவிரல் மேலும், குறிக்கு இரு விரற் கீழும் உள்ள இடம் பாப்பிருக்கையாகிய வட்டக் குண்டலியாகும். அக் குண்டலியாற்றல் மிக்க அழகுள்ளதாய் உணர்வினுள் எழும் செஞ்

1. அடியேன். அ. குழைத்தபத்து, உ.
,, தேடுவன் றேடுவன். எ. சதி - க.

சுடராகும். அச் சுடர் உச்சித்துளைவழிச் செல்லும். மேலும் அச் சுடர் கொப்பூழுக்குக்கீழ் நான்குவிரல் எல்லையிலும் பரவியிருக்கும். அது பற்றியே மெய்கண்ட நாயனரும் 'அஞ்செழுத்தால் குண்டலியிற் செய்தோமம்' என்றருளினர். யோனி - குறியிடம். செஞ்சுடர் - உச்சித் துளைவழி (பிரமரந்திரமார்க்கம்).

(அ. சி.) பாலித்த - பிறப்பைத் தருகின்ற. கோலித்த - வட்டமாயுள்ள. (கூ)

562. நாசிக் கதோமுகம் பன்னிரண் டங்குலம்
நீசித்தம் வைத்து நினையவும் வல்லையேல்
மாசித்தி மாயோகம் வந்து தலைப்பெய்தும்
தேகத்துக் கென்றுஞ் சிதைவில்லை யாமே.[1]

(ப. இ.) மூக்கின்கீழ்ப் பன்னிரண்டுவிரல் அளவின் எல்லையிற் காணப்படும் இடம் நெஞ்சகமாகும். அவ்விடத்துச் சிவபெருமானை இவர்தந்தூரும் இறையென முறையுற நாடிக் கொல்லாமை முதலிய எண்பூக்கொண்டு திருவைந்தெழுத்தால் விழுமிய வழிபாடு ஆற்றுதல் வேண்டும். ஆற்றின் மாசித்தி மாயோகம் வந்து கைகூடும். மா - நனிமிகு பெருமை. இவ் வழிபாடுடையார்தம் உடம்பினுக்கு எந்நாளும் எவ்வகை யூறும் உண்டாகாதென்க. 'செந்தமிழார் தெய்வமறை நாவர் செழுநற்கலை தெரிந்தவரோ, டந்தமில் குணத்தவர்க ளர்ச்சனைகள் செய்யு' முறைமையினை நம் மெய்கண்டநாயனார் அருளுமுறை வருமாறு:

"அஞ்செழுத்தால் உள்ளம் அரனுடைமை கண்டபினை
அஞ்செழுத்தால் அர்ச்சித் திதயத்தில்—அஞ்செழுத்தால்
குண்டலியிற் செய்தோமங் கோதண்டஞ் சானிக்கில்
அண்டனுஞ் சேடனும் அங்கு."

—சிவஞானபோதம், கூ: கூ - க.

'கொல்லாமை ஐந்தடக்கல் கொள்பொறுமை யோடிரக்கம், நல்லறிவு மெய்தவம் அன்பெட்டு'ம் ஞானமலராகும். பன்னிரண்டங்குலம்-பன்னிரண்டங்குல இடமாகிய நெஞ்சு (அநாகதம்). (இந்த நெஞ்சிடமே அகவழிபாட்டிற்குரியது. அகவழிபாடு - மானதபூசை.

(அ. சி.) அதோமுகம் - கீழ். (சு)

563. சோதி இரேகைச் சுடரொளி தோன்றிடிற்
கோதில் பராநந்தம் என்றே குறிக்கொண்மின்
நேர்திசழ் கண்டத்தே நிலவொளி எய்தினுல்
ஓதுவ துண்ணுடல் உன்மத்த மாமே.

(ப. இ.) அகத்தே பிறைக்கீற்றுப்போலும் சுடரொளி தோன்றும். தோன்றினுல் அதுவே குற்றமற்ற நற்றவப் பேரின்பமாகும். அதனைத் திருவருள் நினைவால் குறிக்கொண்டு ஒழுகுங்கள். ஒழுகவே மிடறுசிய விசுத்தியினிடத்து நிலவொளி தோன்றும். அந் நிலவொளி தோன்றி

1. மாணமா. சம்பந்தர், கூ. உசு-எ.

ஞல் புகழ்ந்து சொல்லப்பெறும் உன் பொன்மேனி சிவன் வயமாகும். அஃதாவது உன் நுகர்வினைத்தும் சிவன் நுகர்வாகும். கண்டத்தே - கழுத்திடமாக (விசுத்தி). பரவசம் - தன்னிழப்பும் தலைவன் உழப்பும். உழப்பு - இறைபணி. சிவன் நுகர்வு - சிவன் ஏற்றல்.

(அ. சி.) இரேகைச் சுடரொளி - கீற்றுப்போன்ற ஒளி. (இ)

564. மூலத் துவாரத்தை முக்கார மிட்டிரு
மேலைத் துவாரத்தின் மேல்மனம் வைத்திரு
வேலொத்த கண்ணே வெளியில் விழித்திரு
காலத்தை வெல்லுங் கருத்தது தானே.

(ப. இ.) செவ்வே நிமிர்ந்து நன்முயிருந்து அயிர்ப்பின்றி உயிர்ப்பினை அடக்கி மூலத்துளையை வாலிதின் அழுத்தி அடைத்திருப்பாயாக. அதன்பின் உச்சித்துளையாகிய நடுநாடியின் முடிவிடமாம் மேலைத் துவாரத்தின்மேல் மனம் வைத்திருப்பாயாக. இம்முறையால் வித்தமிழ்தாகிய இந்திரியம் உடம்பெங்கணும் செறியும் வேல்போலும் கூரிய அமர்க்கண்ணை விழித்திருப்பாயாக. விழித்திருத்தல் என்பது புற நாட்டமுமின்றி உறக்கமுமின்றி அகநாட்டமுற்றிருத்தல். அங்ஙன மிருப்பதே வாழ்நாட்கு அலகாய் வயங்கொளி மண்டிலக்காலத்தை வெல்லும் கருத்தென்பதாகும். விடுமுறை நாட்களைச் சேர்த்துவைத்துள்ள பணியாளர் பின் ஆண்டுக்கணக்காகப் பணியின்றி ஊதியம் பெற்றுக் காலத்தை நீட்டிப்பிப்பது இதற்கு ஒப்பாகும். மேலைத்துவாரம் - புருவ நடுவிலுள்ள நடுநாடித் துளை. புருவநடு - ஆக்கினை சக்கிரம். நடு நாடி - சுழுமுனை.

(அ. சி.) முக்காரமிட்டிரு - நிமிர்ந்து உட்கார்ந்து, மூச்சடக்கி அழுத்தி இரு. மேலைத்துவாரம் - மூலத்துக்கு மேல் உள்ள துவாரத்தின் மேல்; இந்திரியம் தேகத்திற்குள் பரவும் வழி. (ஈ)

565. எருவிடும் வாசற் கிருவிரன் மேலே
கருவிடும் வாசற் கிருவிரற் கீழே
உருவிடுஞ் சோதியை உள்கவல் லார்க்குக்
கருவிடுஞ் சோதி கலந்துநின் ருனே.

(ப. இ.) எருவிடும் வாசலாகிய கழிவாய்க்கு இரண்டுவிரல்மேலும் கருவிடும் வாசலாகிய குறிக்கு இரண்டுவிரற் கீழும் உள்ள நிலைக்களம் பாப்பிருக்கையாகிய குண்டலிநிலையாகும். அந்நிலைக்கண் திருவருளே திருவுருவாகக்கொண்டு திகழும் பேரறிவுப் பேரொளிப் பெரும்பிழம்பு ஒன்று ஒருருவாய்த் தோன்றும். அப்பிழம்பினை அருளால் உணர்விற் கண்டு ஓவாது நினைக்கவல்லவர்கட்குக் கருவாகிய பிறப்பினை விடுவிக்கும் அச் சிவப்பிழம்பு வெளிப்படக் கலந்துவிளங்கிநின்றருளினன். கருவிடும் சோதி - வினைமுதற்காரணமாய் நின்ற சிவன்.

(அ. சி.) எருவிடும் வாசல் - மலத்தைக் கழிக்கும் மூலம். கருவிடும் வாசல் - இந்திரியம் வெளிப்படும் வழி. உருவிடு சோதி - பிறப்பினை ஒழிக்கும் சிவபெருமான். (எ)

1. இவனுலகில். சிவஞான சித்தியார், 60 ஆம் நூற்பா.

566. ஒருக்கால் உபாதியை ஒண்சோதி தன்னைப்
பிரித்துணர் வந்த உபாதிப் பிரிவைக்
கரைத்துணர் வுன்னல் கரைதல்உள் நோக்கல்
பிரத்தியா காரப் பெருமைய தாமே.

(ப. இ.) திருவருளால் துன்புறுத்தும் உபாதியாகிய மாயையை, அளவிடப்படாத ஒள்ளிய பேரொளியாக விளங்கும் சிவபெருமானை வேறு பிரித்துணரும் ஆருயிரை, மாயையினின்றும் பிரித்துச் சிவத்துடன் சேர்க்க நினைத்தல், சேருமாறு அகத்தவத்தால் கரைதல். உணர்வினுள் நோக்கல், ஆகிய அருஞ்செயல்கள் தொகைநிலையாகிய பிரத்தியாகாரம் என்ப பிரத்தியாகாரம்-தொகைநிலை. (ஆவியை ஆண்டானை இயைபினைத் தொகுத்துக்காண்டல்.) கரைத்து - தெளிந்து. உன்னல் - நினைதல். கரைதல் - புணர்தல். உள்நோக்கல் - அழுந்தல்.

(அ. சி.) உபாதி - மாயையுடன் கூடிய உயிரை. ஒண்சோதி தன்னை - சிவத்தை. (அ

567. புறப்பட்ட வாயு புகவிடா வண்ணங்
திறப்பட்டு நிச்சயஞ் சேர்ந்துடன் நின்ரூல்
உறப்பட்டு நின்றது உள்ளமும் அங்கே
புறப்பட்டுப் போகான் பெருந்தகை யானே.

(ப. இ.) நான்குவிரல் அளவு உயிர்ப்பு விடுத்தல் முறையான் வெளிச்சென்றது கழிந்துபோகாவண்ணம் உறுதிப்பட மெய்ம்மையாக எடுத்தன்முறையான் உள்வந்து நின்ரூல் உள்ளமாகிய ஆருயிரும் அங்கே பொருந்தி நிலைபெற்று நின்றதாகும். பெருந்தகையோனாகிய சிவபெருமானும் நீங்கிப்போகான். உள்ளம் உறப்பட்டு நின்றதென்பதற்கு மனம் வயப்பட்டு நின்றதென்றலும் ஒன்று. திறப்பட்ட நிச்சயம் - கடைப்பிடித்த உறுதி. உறப்பட்டு நின்றது - வயப்பட்டிருந்தது.

(அ. சி.) புறப்பட்ட வாயு - வெளிச்செல்லும் நால்விரல் அளவுள்ள வாயு. புகவிடா (போகவிடா) வண்ணம் - கழியாவண்ணம். (க)

---

# 7. தாரணை

(பொறை நிலை)

568. கோணு மனத்தைக் குறிக்கொண்டு கீழ்க்கட்டி
வீணுத்தண் டேடே வெளியுறத் தாணேக்கிக்
காணுக்கண் கேளாச் செவியென் றிருப்பார்க்கு
வாணுள் அடைக்கும் வழியது வாமே.[1]

1. வீழ்நாள் திருக்குறள். கூ அ.
.. கேட்டாயோ. அ. திருவம்மானை, கூ.

(ப. இ.) பொறைநிலையாகிய தாரணை என்பது மனத்தினை ஒருவழி (தொல். புறம், உ0. வாகைதானே என்பதன் மேற்கோள்) நிறுப்பதாகும். ''மனத்தினை யொருவழி நிறுப்பது பொறைநிலை'' என்பதாலுங் காண்க. புலன்களைப் பற்றிக்கொள்ளும் பண்புவாய்ந்த மனத்தினைத் திருவருள் நினைவால் புலன்வழிப் புகவிடாதும் கீழ் நோக்கவிடாதும் புரிந்துகட்டுவதாகிய அடக்குதலைச் செய்தல் வேண்டும். அங்ஙனம் அடக்கியபின் உணர்வுக்கண் கொண்டு நடுநாடி வழியாகத் திருவருள் வெளியினை உற்று நோக்குதல் வேண்டும். நோக்கினால் அகத்தே அறிவின்கண் கண் காது முதலிய கருவிகளின்றியே காண்டலும் கேட்டலும் ஆகும். அவற்றையே ஈண்டுக் காணுக்கண் கேளாச்செவி என ஓதப்பெற்றது. இம் முறையையே வாழ்நாளின் முடிவு பெறுமல் தடுக்கும்வழி யென்றோதப்பட்டது. கோணுமனத்தை - புலன்வழியிற் போகா மனத்தை. கீழ்க்கட்டி - கீழ் நோக்காதபடி தடுத்து; அல்லது கால் முதலான இடங்களில் நிறுத்தி. வீணைத்தண்டு - நடுநாடி. நோக்கி - பரவெளியை உற்றுப்பார்த்து. வாணுள் - அகவை (வயது). அடைக்கும் வழி - கழியாது தடுக்கும் வழி.

(அ. சி) கோணு மனம் - எப்பொழுதும் கோணும் தன்மையுள்ள மனம் குறிக்கொண்டு கீழ்க்கட்டி - மூலத்துவாரத்தை முக்காரமிட்டு. வீணைத் தண்டுதே வெளியுற - வீணைத்தண்டின் துவாரத்தின் ஊடே வெள்ளியாகிய சுக்கிலம் உற. (க)

569. மலையார் சிரத்திடை வானீர் அருவி
நிலையாரப் பாயும் நெடுநாடி யூடே
சிலையார் பொதுவில் திருநட மாடுஞ்
தொலையாத ஆனந்தச் சோதிகண் டேனே.

(ப. இ.) நடுநாடியாகிய மேருமலையின் உச்சிக்கண் அருள்வெளி வாயிலாக வரும் தூய அமிழ்தம் ஆருயிர் உடம்பின்கண் அவ்வுயிர் வேண்டும் நாள்முழுவதும் இருத்தற்பொருட்டு நிலையாகப் பொழியும். நடுநாடி வழியாகச் சென்று திருவருள் வெளிக்கண் நிகழ்த்தும் சிவ பெருமானின் திருக்கூத்தைக் காண்டல் எளிதாகும். கண்டனன் எனவும் ஓதினர். மலை - மேரு: நடுநாடி. வான்நீர் அருவி - பரவெளிக் கண்ணுள்ள திங்கள் மண்டிலத்திருந்து ஒழுகும் அமிழ்தம். சிலையார் பொது - பலவகை இயங்களின் இன்னொலி கேட்கப்படும் பரவெளி.

(அ. சி.) மலையார் சிரத்திடை - உச்சியிலுள்ள. வான்நீர் - ஆகாய அருவி என்கிற ஆனந்தக்கண்ணீர். நிலையார - தேகம் நிலைத்து நிற்க. நெடுநாடி - நீண்டு பரந்து கிடக்கும் நாடிகள். சிலையார் பொது - உயிருள்ள இடம், அஃதாவது உள்ளம். தொலையாத - விட்டகலாத. (உ)

570. மேலை நிலத்தினுள் வேதகப் பெண்பிள்ளை[1]
மூல நிலத்தில் எழுகின்ற மூர்த்தியை
ஏல எழுப்பி இவளுடன் சந்திக்கப்
பாலனும் ஆவான் பார்நந்தி ஆணையே.

1. மூன்புதிருக். கஉ. கண்ணப்பர். கஙிச.

(ப. இ.) ஆறுநிலைகளுக்கும் அப்பாற்பட்ட அருள் வெளிக்கு உரியவள் மேலே நிலத்திலுள். இதுவே பற்றுக்கோடில்லா நிலே. இதனேச் சார்பில் நிலே எனவும் கூறலாம். இதுவே நிராதாரம். அவளே மெய்யுணர்வுச் செல்வி. மூலாதாரத்திலுள்ள திருவருளின் திருவுருவினேயுடையவன் சிவன். அத் திருவருளேத் திருமேனியாகவுடைய சிவபெருமானே எழுப்புதல் வேண்டும். எழுப்பித் திருவருளுடன் கூடச் செய்தல் வேண்டும். அங்ஙனம் செய்யவே அவ் வுயிர் என்றும் இளமையாகவே இருக்கும். 'என்றும் இளேயாய் அழகியாய் ஏறூர்ந்தான் ஏறே' என்றழைக்கப்படுதற்கும் உரிமையுண்டாகும். வேதகப் பெண்பிள்ளே என்பதற்கு வேறுபாட்டினேச் செய்கின்றவள் என்றலும் ஒன்று. மூர்த்தியை எழுப்பி என்பதற்குப் பாப்பிருக்கைக் குண்டலியை எழுப்பி என்றுரைத்தலுமாம். இவளுடன் சந்திக்க என்பதற்கு அவள் செல்லும் உச்சித்துளேவழிச் சென்று சிவபெருமானேக் கண்டு கும்பிட எனலுமாம். வேதகப் டெண்பிள்ளே - (இருப்பைப் பொன்னுக்கும்) வேறுபாட்டினேச் செய்யும் திருவருள். மூர்த்தியை ஏல எழுப்பி - (பாம்பின் வடிவமாகிய குண்டலி) ஆற்றலே முறைப்படி துயிலினின்றெழுப்பி. இவளுடன் சந்திக்க - அவள் செல்லும் உச்சித்துளேவழிச் சென்று முழுமுதற் சிவனேக் கும்பிட.

(அ. சி.) மேலே நிலத்திலுள் - நிராதாரத் தானத்திற்குரிய மனஉன்மனி. வேதகப்பெண் - வேதத்தைக் கைக்கொண்ட சத்தி. மூல நிலத்தில் எழுகின்ற மூர்த்தி - விநாயகர் அல்லது அந்தமில் சத்தி. (கூ).

571. கடைவாச லேக்கட்டிக் காலே எழுப்பி
இடைவாசல் நோக்கி இனிதுள் இருத்தி
மடைவாயிற் கோக்குப்போல்[1] வந்தித் திருப்பார்க்கு
உடையாமல் ஊழி இருக்கலு மாமே.

(ப. இ.) உயிர்ப்புப் பயிற்சியால் மூலவழியினே அடைத்து உயிர்க்காற்றை எழுப்பி, புருவநடுவாகிய இடைவாசலே இனிது நோக்கித் துனியின்றியிருத்தல் வேண்டும். இருக்கவே நனிமிகு இன்பம் உண்டாம். பின் செவ்விவருந் தூணேயும் கொக்குப்போல் குறிக்கொண்டு நிற்றல் வேண்டும். செவ்வி வாய்த்ததும் திருவருள் வீழ்ச்சியாகும். அதன் பொருட்டு இவ் வுடலகத்துப் பலவூழிகள் நிலேயாக இருக்கலுமாகும். கால் - உயிர்க்காற்று (பிராணவாயு). கொக்குப்போல் - தக்ககாலம் பார்க்கும் கொக்கைப்போல. வந்தித்திருப்பார்க்கு - செவ்வி (மலபரிபாகம்) வருந்தூணேயும் திருவருளேயுன்னி இடையறாது திருவைந்தெழுத்தையெண்ணி வணங்கியிருப்பார்க்கு. உடையாமல் - இறவாமல். ஊழி - பலகோடி ஆண்டுகள். துனி - துன்பம். (சு).

572. கலந்த உயிருடன் காலம் அறியில்
கலந்த உயிரது காலின் நெருக்கங்
கலந்த உயிரது காலது கட்டிற்
கலந்த உயிருடல் காலமும் நிற்குமே.

---

1. கொக்கொக்க. திருக்குறள், சகூ
" அடக்கமுடையார். மூதுரை, கசு.

(ப. இ.) திருவருள் ஆருயிர்களுடன் கலந்துநிற்கும் நிலைமை யினைக் காலத்துடன் பார்த்துணர்தல் வேண்டும். உணரவே பொறி புலன்களுடன் கலந்துழலும் தன்மை கைவிடும். கைவிடவே கடை வாசலைக்கட்டி இடைவாசல் நோக்கி இனிதிருக்க (571)ச் சிவபெருமான் உள்ளத்துள் கலந்து வெளிப்பட்டருள்வன். அருளவே சிவத்துடன் கலந்தவுயிர் அவ் வுடற்கண் நெடுநாள் நிற்கும்

(அ. சி.) கலந்த உயிர் - கடைவாசலைக் கட்டி, இடைவாசல்நோக்கி. இனிய உள்ளத்திலிருக்கும் சிவத்துடன் கலந்த உயிர். காலமும் நிற்கும் - ஆயுள் நிலைத்து நிற்கும். (இ)

573. வாய்திற வாதார் மனத்திலோர் மாடுண்டு
வாய்திறப் பாரே வளியிட்டுப் பாய்ச்சுவர்
வாய்திற வாதார் மதியிட்டு மூட்டுவர்
கோய்திற வாவிடிற் கோழையு மாமே.[1]

(ப. இ.) மேன்மை ஞானமாகிய வாய்வாளாமை என்று சொல்லப் படும் மோனநிலையுடையார் வாய்திறவாதவராவர். அத்தகையார் தூய வுள்ளத்துச் சிவபெருமான் என்னும் விலைவரம்பில்லா உலைவில் செம்மணி ஒன்றுண்டு. செம்மணி உவமை யாகுபெயராகச் சிவனைக் குறிக்கும். வாய்திறத்தலாகிய உலகிடை உழல்வார் உயிர்ப்பினை வெளிபிட்டுக் கழிப்பர். பேச்சற்றார்க்கு மூச்சு அறுது ஆகலின் சிவபெருமானை அறிவின் கண்ணமைத்து இன்பத்தை எழுப்புவர். செம்மணி அடங்கி யுள்ள கோயாகிய மணிப்பேழையினைத் திறத்தல் வேண்டும். அப் பயிற்சி யின் நின்று திறவாது ஒழியின், பிறவிப்பயன் எய்தாத கோழையராவர். மாடு - செம்மணி யொப்பாம் சிவபெருமான். வளியிட்டுப் பாய்ச்சுவர் - மூச்சையடக்காது சிவபெருமானை மறப்பர். மதியிட்டு மூட்டுவர் - திருவடியுணர்வுகொண்டு சிவனை நினைவர். கோய்-அணிகலச்செப்புமாம். இது நடுநாடி எனவும் கொள்ளப்படும். திறவாவிடில் - சிவனை அகத்தே உணராவிடில். கோழை - பிறவிபெறுங் குற்றத்தோன். வாள் - சொல்.

(அ. சி.) வாய்திறவாதார் - மோன நிலையில் உள்ளவர். மாடு - பெருமை. கோய் - பரணி ; (பரணி மும்மீன் அடுப்புப்பீபால) மூன்று கண்கள் : இரு கண்களுடன் ஞானக்கண்ணும் சேர்ந்தது. ஞானக்கண் திறந்ததற்கு அடையாளம் ஆனந்தக் கண்ணீர். (உ)

574. வாழலு மாம்பல காலும் மனத்திடைப்
போழ்கின்ற வாயு புறம்படாப் பாய்ச்சுறில்
ஏழுசா லேகம் இரண்டு பேருவாய்தல்
பாழி பேரியதோர் பள்ளி அறையே.[2]

(ப. இ.) உள்ளத்தினின்றும் புறப்பட்டு ஆங்காரத்தாற் செலுத்தப் படும் உயிர்ப்பைப் புறம்போகவொட்டாது தடுத்தல்வேண்டும். அங்ஙனம்

---

1. என்னி. அப்பர். இ. உக - க.
,, விள்ளத்தான். '' சு எசு - எ.
2. கால்கொடுத். '' சு. ஈஉ - சு.
,, கருமுதற். கக. பட்டினத்துப் பிள்ளையார், திருக்கழு. சு.

தடைசெய்யாவழி அவ்வுயிர்ப்பு மனத்தைப் புலன்களிற் செலுத்தித் தூன்புறச்செய்யும். உயிர்ப்பினைத் தடுத்து நிறுத்தும் உரங்கொண்ட நெஞ்சகத்தார் அவ்வுடம்பின்கண் பலவூழி வாழ்தலும் செய்வர். ஏழு சாளரங்களும் இரண்டு பெருவாயில்களுமுடைய இவ்வுடம்பு காமம் வெகுளி மயக்கங்களாகிய குப்பை மிகுந்த பாழியறையினையுடையது. அப் பாழியறையினை 'அன்புகொடு மெழுகி அருள் விளக்கேற்றித், தூல்பவிருளைத் துரந்து முன்புற. மெய்யெனும் விதானம் விரித்துப்' பள்ளியறை ஆக்குதல் வேண்டும். (சிவன் திருக்கோவில்களில் நாளும் நிகழ்ந்துவரும் திருப்பள்ளியறைக் காட்சியின் நிருக்குறிப் பிதுவாம்) ஆக்கவே சிவபெருமான் எழுந்தருளி விளங்கி எங்குமிலாததோர் இன்பம் நம்பாலதாக ஆகியருளவன். போழ்கின்ற வாயு - மனத்தைப் புலன்கடோறும் அலையச் செய்யும் உயிர்மூச்சு. புறம்படா - புறத்திற் செல்லாதபடி. பாய்ச்சுறில் - நடுநாடியிற் செலுத்தினால். பாழி - தூய நிலைக்களமாகிய உடல். பள்ளியறை - சிவனெழுந்தருளும் சிற்றம்பலம்; (ஆயிர இதழ்த் தாமரை)

(அ. சி.) ஏழு வாயில்கள் (செவி 2, கண் 2, மூக்கு 2, வாய் 1 ஆக 7) பள்ளியறை - உயிரும் சிவமும் ஒன்றிநிற்கும் இடமாகிய உள்ளம். (எ)

575. நிரம்பிய ஈரைந்தில் ஐந்தைவ போலை
இரங்கி விழித்திருந் தென்செய்வை பேதாய்
வரம்பினைக் கோலி வழிசெய்கு வார்க்குக்
குரங்கினைக் கோட்டை[1] பொதியலு மாமே.

(ப. இ.) ஆங்காரத்தாற் செலுத்தப்பட்டு உடம்பகத்து நிறைந்திருக்கும் காற்றுக்கள் பத்து. அவை வருமாறு: க. உயிர்க்காற்று. உ. மலக்காற்று, ங. தொழிற்காற்று. ச. ஒலிக்காற்று, ஞ. நிரவுகாற்று. ஙு. துய்மற்காற்று, எ. விழிக்காற்று, அ. கொட்டாவிக் கார்ற்று. க. இமைக்காற்று, கo. வீங்கற்காற்று. இவற்றுண்மையை வருமாறு நினைவுகூர்க:

"உயிர்மலம் தொழிலொலி நிரவுதும் மல்விழி
செயிர்கொட் டாவியிமை வீங்கற்கால் ஈரைந்து."

இவ் வீரைந்தில் உயிர்க்காற்று, மலக்காற்று, தொழிற்காற்று, ஒலிக் காற்று, நிரவுகாற்று என்னும் ஐந்தும் ஜயுயிர்ப்பு என அறையப்படும். உயிர்ப்புப்பயிற்சியின்றி இவை வீணுக வெளியிற் கழிந்தால் உய்யும் உணர்வில்லாத பேதாய் விழித்திருந்து என்செய்குவை. உயிர்ப்புப் பயிற்சியான் இவை வரம்பீனுட்பட்டுத் திருவருள் வழியினைச் செய் வார்க்குக் குரங்காகிய மனத்தினை அடக்கிக் கோட்டையாகிய உடம் பகத்துப் பொதியவைத்தலும் உண்டாம். பொதியவைக்கவே திருவரு வின்பம் நீங்காதோங்கும். பொதியல் - அடக்கல்.

(அ. சி.) ஈரைந்து - தசவாயு. ஐந்து - பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன். குரங்கு-மனம். கோட்டை-தேகம். (அ)

1. (பாடம்) கொட்டை.

576. முன்னம் வந்தனர் எல்லாம் முடிந்தனர்
பின்னை வந்தவர்க் கென்ன பிரமாணம்
முன்னுறு கோடி உறுகதி பேசிடில்
என்ன மாயம் இடிகரை நிற்குமே.

(ப. இ.) தொன்றுதொட்டுப் பிறந்திறந் துழல்வாருள் முன்னம் பிறந்தவர் அனைவரும் இறந்தொழிந்து 'தோற்றமுண்டேல் மரண முண்டு துயர மனைவாழ்க்கை' (எ. எ. உ) என்பதனை நிலைநாட்டினர். இவ் வறிவுரை யருண்மொழி திருவடிப் பேற்றைக் கனவினும் கருதாது நனவினும் கனவினும் மீண்டும் மீண்டும் பிறந்து மனைவாழ்க்கையிற் சிறந்து வாழ வேண்டுமென்னும் புல்லறிவாளர்க்கே புகன்றருளப்பட்டதாகும். நல்லறிவாளர் மனைவாழ்க்கைக்கண் நின்றே திருவடிப்பேறு பெறுவர். அவர்கள் மீண்டும் பிறக்க மறந்தும் வேண்டார். அவர்களை நோக்கின் மனைவாழ்க்கை புனையும் புனையாகும். பின்பிறந்து வந்தார்கள் இறவார் என்பதற்கு ஏதும் அளவையுண்டா? ஆவிபிரிந்தார் மேவியுறும் நிலை அளவில்லன. அந்த நிலைகளையும் பேசிடில் அவையனைத்தும் நிலைபேறின்மையாகவே முடியும். இடிகரைபோன்ற வுடல் யாண்டும் நிலை பெறாது.

(அ. சி.) முன்னமே...முடிந்தனர் - இதற்குமுன் பலபேர் இறந்தொழிந்தார்கள். பின்...பிரமாணம்-பின்னுல் வருபவர் இறக்கமாட்டார் என்பதற்கு ஆதாரம் இல்லை. இடிகரை - அழியும் தேகம். (க)

577. அரித்த வுடலைஐம் பூதத்தில் வைத்துப்
பொருத்தைஐம் பூதஞ்சத் தாதியிற் போந்து
தெரித்த மனாதிசத் தாதியிற் செல்லத்
தரித்தது தாரணை தற்பரத் தோடே.[1]

(ப. இ.) ஆற்றுவெள்ளம் கரையினை அரித்துப் பாழாக்குவது போன்று புலப்பொருள்வெள்ளம் உடம்பினை அரித்துப் பாழாக்குகின்றது. மெய்கள் ஒன்றினின்று ஒன்று தோன்றியதுபோல் முறையே ஒடுங்கும். அவ் வொடுங்குமுறை உணர்வினில் உணர உண்மை புலனும். உண்மையாவது உலகம் நிலையாது; உடையானுகிய சிவன் நிலைப்பன். இவை புலனுகவே உலகப்பற்று அறும். உடலைப் பூதத்தில் ஒடுக்குதல் வேண்டும் இணைத்த ஐம் பூதத்தை எண்ண முதலிய அகப்புறக்கலன்களில் ஒடுக்குதல் வேண்டும். சொல்லப்பட்ட மனாதிகளை மூலப்பகுதியில் ஒடுக்குதல் வேண்டும். ஆருயிரைப் பேருயிராகிய சிவத்தில் ஒடுக்குதல் வேண்டும். இம்முறையான் நினைவதே பொறைநிலையாகிய தாரணை எனப்படும். சத்தாதி - சுவை முதலிய பூதமுதல்கள். போந்து - ஒடுங்கி. சத்தாதி - குணம் முதலிய மாயைகள். தற்பரம் - தானே மேல் சிவபெருமான்.

(அ சி) தாரணை - மண்முதல் தத்துவங்களை ஒன்றினொன்று ஒடுக்கிச் சிவத்தைச் சிந்தித்தல். பூதங்கள் ஐந்தைப் புலன்களில் ஒடுக்கி, புலன்களை அந்தக்கரணம நான்கில் ஒடுக்கி, அந்தக்கரணங்களை மாயையில் ஒடுக்கி, மாயையை ஆன்மாவில் ஆன்மாவைச் சிவத்தில் ஒடுக்கல். (கo)

1. தத்துவ. சிவஞானசித்தியார், உ. கூ - உஉ.

# 8. தியானம்

(நினைதல்)

578. வருமாதி யீரேட்டுள் வந்த தியானம்
பொருவாத புந்தி புலன்போக மேவல்
உருவாய சத்தி பரத்தியான மூன்னுங்
குருவார் சிவத்தியானம் யோகத்தின் கூறே.

(ப. இ.) ஆருயிர் நீங்கா நினைவுடன் ஒங்கும் பண்பு தியானமாகும். இந் நினைவிற்போந்த பூதம்ஐந்து, புலன்ஐந்து, கரணம் நான்கு, மாயை ஒன்று. ஆருயிர் ஒன்று ஆகப் பதினெறு மெய்களையும் நினைவது ஆருயிர்த் தியானம். இறுப்பு மெய்யாகிய புந்தி யியல்பாகவே புலன்களைப் பற்று தலை விட்டுக் கடந்துநிற்றல் வேண்டும். இந் நிலை அன்னை அத்தனுகிய சத்தி பரத்தியான நினைவாகும். கருதப்படும் சிவகுருவை நினைதல் சிவத்தியானமாகும். இவ் விரண்டும் முறையே உருவத்தியானமும் அருவத்தியானமுமாகும். இவை அகத்தவமாகிய யோகத்தின் கூறுகும். உருவாய சத்தி. பரத்தியானம் - அம்மையப்பராம் அருளுருவ அன்புவழி பாடு. உன்னும் - நினைக்கும். குருவார் சிவத்தியானம் - நிறையருட் குருவாம் சிவனடி நினைக்கும் அறிவுவழிபாடு. யோகத்தின் - அகத்தவத் தின். கூறு - இருவகை.

(அ. சி.) ஈரெட்டு - பூதங்கள் 5. புலன்கள் 5. அந்தக்கரணங்கள் 4. மாயை 1. சீவன் 1. ஆக 16. புந்தி புலன் போக - புலன்கள் எல்லாம் புந்தியில் ஒடுங்க. (ச)

579. கண்ணுக்கு மூக்குச் செவிஞானக் கூட்டத்துட்
பண்ணுக்கி நின்ற பழம்பொருள் ஒன்றுண்டு
அண்ணுக்கின் உள்ளே அகண்ட ஒளிகாட்டிப்
புண்ணுக்கி நம்மைப் பிழைப்பித்த வாறே.[1]

(ப. இ.) நோக்கு, நாக்கு, மூக்கு, காது (உடம்பு) என்னும் அறிதற்கருவி ஐந்தன் கூட்டத்தால் பண்ணுகிய ஓசையை எழுப்பிச் சொல்லாக்கிப் பொருளுணர்த்தும் பழம்பொருள் ஒன்றுண்டு. அப் பொருள் திருவருள். அதனை நினைந்தால் அண்ணுக்கின் உள்ளாக எல்லையின்றி எங்கும் பரந்த பொங்குபேரொளியினைக் காட்டும். அப் பயிற்சியான் நம்மை வருத்திப் பிறப்பு இறப்புக்களினின்றும் நம்மை உய்வித்து அருளியதும் அப் பழம்பொருளே. ஞானக்கூட்டம் - அறிதற் கருவி (ஞானேந்திரியம்) கூடுமிடம். புண்ணுக்கி - வருத்தி.

(அ. சி) பண்ணுக்கி - நாதத்தை ஒலிக்கச்செய்து. (உ)

580. ஒண்ணு கயனத்தில் உற்ற ஒளிதன்னைக்
கண்ணுரப் பார்த்துக் கலந்தங் கிருந்திடில்
விண்ணுறு வந்து வெளிகண் டிடவோடிப்
பண்ணுமல் நின்றது பார்க்கலு மாமே.

1. கண்ணவன்காண். அப்பர், க. உ - க.

(ப. இ.) புருவநடுவினை உற்றுற்றுப்பார்த்தலால் மெய்யுணர்வு ஒளி வெளிப்படும். அகக்கண்ணால் பார்த்துக் கலந்திடுதல் வேண்டும். அங்ஙனம் வெளிப்படவே திருவருள் வெள்ளப்பெருக்குப் பள்ள மடையாப் பெருகும். அவ்வருள்வெளியினைக் கண்டு ஆர்வத்துடன் ஓடிச்சென்றால் ஆக்கப்பாடாகிய காரியநிலை எய்தாது என்றும் காரண மாய் முழுமுதலாய் நிற்கும் சிவபெருமானைக் காணுதலும் பேணுதலும் பேரின்பம் பூணுதலும் உண்டாம். பண்ணுமல் தின்றது - தானேயாம் தூயசிவம். பார்க்கலும் - உணர்த்த வுணர்ந்து வழிபடலும்.

(அ. சி.) ஒண்ணும் நயனம் - ஞானக்கண். விண்ணுறு - ஆனந்தக் கண்ணீர். (கூ)

581. ஒருபொழு துன்னுர் உடலோ டுயிரை
ஒருபொழு துன்னுர் உயிருட் சிவனை
ஒருபொழு துன்னுர் சிவனுறை சிந்தையை
ஒருபொழு தூன்னுர் சந்திரப் பூவே.

(ப. இ.) திருவருள் நாட்டத்தில் ஒருபொழுதேனும் உடலுயிர்ப் பண்பை நினையார். அதுபோல் உயிர்க்கு உயிராய் உயிருள் விளங்கும் சிவனை நினையார். ஒரு பொழுதேனும் அச் சிவனுறை தவமார் உள்ளத்தை நினையார். அதுபோல் உச்சித்துளைமேல் தோன்றும் திருவருள் வெளிக் கண் காணப்படும் திங்களனைய தூய வெண்ணிறத் தாமரைப்பூத் தோன்றும்; அதனையும் நினையார்.

(அ. சி.) சந்திரப்பூ - ஆஞ்ஞையிலுள்ள சந்திரன் போன்ற வெண் ணிற ஒளி. (சு)

582. மனத்து விளக்கினை மான்பட ஏற்றிச்
சினத்து விளக்கினைச் செல்ல நெருக்கி
அனைத்து விளக்குந் திரியோக்கத் தூண்ட
மனத்து விளக்கது மாயா விளக்கே.[1]

(ப. இ.) திருவருள் நினைவால் மனத்து விளக்கினை மயக்கமாகிய மான்பட ஏற்றுதல் வேண்டும். அதனால் வெகுளியைக் கண்டு விலகுமாறு செய்தல் வேண்டும். ஏனைக் கருவி கரணங்களை வழிப்படுத்தி நன்றாய் விளங்குமாறு தூண்டுதல் வேண்டும். தூண்டவே காமம் அகலும். மான் - மூலப்பகுதி; அறியாமை. இவற்றால் 'காமம் வெகுளி மயக்கங்கள்' நீங்கும். அப்பொழுது மனத்துவிளக்கு மாயாவிளக்காகும். மான் - மூலப் பகுதி (ஈண்டு அவித்தை) அனைத்துவிளக்கும் - அறிதற்காம் புலன் கலன்கள். (புலன் - கருவி. கலன் - கரணம்) மாயாவிளக்கு - அணையா விளக்கு.

(அ. சி.) மான் - அவிச்சை. திரி - அறிவு. (எ)

583. எண்ணு யிரத்தாண்டு யோகம் இருக்கினும்
கண்ணுர் அமுதனைக் கண்டறி வாரில்லை
உண்ணுடி உள்ளே ஒளிபெற நோக்கிற்
கண்ணுடி போலக் கலந்துநின் ருனே.

---

1. இல்லக. அப்பர். ச. கக - அ.

(ப. இ.) சிவனிஷ்டையின்றி அளவில் காலமாகிய எண்ணூயிரத் தாண்டு யோகம் இருந்தாலும் கண்ணுள் மணியும், அம் மணியுளர் அமிழ்தும் அனைய சிவபெருமானைக் கண்டறியவொண்ணாது. அகத்தே நாடி அருள் ஒளிபெற்று நோக்கினால் சிவபெருமானாகிய அழல்வண்ணன் நிழல்தரு பளிங்கொத்துக் கலந்து காட்டியும் கண்டும் இருந்தனன் என்பது புலனாகும். கண்ணுடியைப் பார்க்குங்கால் பார்க்கும் கண் தன்னையும் அக் கண்ணுடியையும் காணும். அதுபோல் ஆருயிர் பேருயிராகிய சிவபெருமானைக் காணும் வாயிலாகவே தன்னையும் காணும். 'கண்ணுடியைக்காணும் கண்ணே தன்னைக்காணும். பெண்ணூர் தாள் காணவுயிர் பேசு' என்பதை நினைவுகூர்க. எண்ணுயிரத்தாண்டு யோகவுறுப்பு எட்டினையும் குறிக்கும் குறிப்புமாகும். கண்ணுடிபோல - கண்ணுடியில் தோன்றும் பாவைபோல. (ஆடிப்பாவை - திழலுரு) நெஞ்சத்தில் சிவனை நினைந்தால் சிவன் விளங்குவன். அவனை மறந்தால் ஆவியின் முனைப்பு விளங்கும். (க)

584. நாட்டம் இரண்டும் நடுமூக்கில் வைத்திடில்
வாட்டமும் இல்லை மனைக்கும்[1] அழிவில்லை
ஓட்டமும் இல்லை உணர்வில்லை தானில்லை
தேட்டமும் இல்லை சிவனவ னுமே.

(ப. இ.) நாட்டம் இரண்டினையும் புருவநடுவிற்கு நேராம் மூக்கு நுனியில் வைத்தல் வேண்டும். அங்ஙனம் வைத்து உயிர்ப்படக்கி அசை வறநிற்கத் திருவருள் ஒளி அகத்தே காணப்படும். ஒளி காணப்படவே உடம்புக்கு எவ்வகை வாட்டமுமில்லை. மனையாகிய உடம்பிற்கும் அழிவு ஏற்படாது. உயிர்ப்புப் புறஞ்செல்வதாகிய ஓட்டமும் இல்லை. புறப் புலன்கள் மாட்டுச் செல்லும் உணர்வுமில்லை. தன்னுணர்ப்பில்லை. எவ் வகை வேட்கையுமில்லை. அவனே சிவனுவன். நடுமூக்கு - புருவநடுவாம் மூக்கின் நுனி. ஓட்டம் - உயிர்மூச்சின் இயக்கம். உணர்வு - உலக நாட்டம். மனை - உடல்.

(அ. சி.) நடுமூக்கு - புருவமத்தி. தேட்டம் - ஆராய்ச்சி. (எ)

585. நயனம் இரண்டும் நாசிமேல் வைத்திட்
டேர்வொரா வாயுவை உள்ளே அடக்கித்
துயரற நாடியே தூங்கவல் லார்க்குப்
பயனிது காயம் பயமில்லை தானே.

(ப. இ.) நயனமாகிய நாட்டமிரண்டினையும் நடுமூக்கின்மேல் வைத்துச் சிவனை நாடுக. உயிர்ந்தெழுந்து புறத்துப்போகும் உயிர்ப்பினை உள்ளே ஒடுக்குக. பிறப்புத்துன்பம் நீங்குமாறு சிவனை நீங்கா நினைவுடன் தூங்கவல்லார்க்கு அத் துன்பம் நீங்கும்; அதுவே பெரும்பயன். உடம்பினுக்கும் அழிவில்லை துயரற நாடி - துயரறநின்ற நடுநாடி. தூங்க வல்லார்க்கு - நிலைத்து நிற்கவல்லார்க்கு. பயமில்லை - கூற்றுவனுக்கு அஞ்சவேண்டுவதில்லை. (அ)

1. உடம்பெனும். அப்பர், தி. எடு-தி.
,, ஊனிலு. சம்பந்தர், கூ. உஉ - கூ.

586. மணிகடல் யானை வார்குழல் மேகம்
அணிவண்டு தும்பி வளைபே ரிகையாழ்
தணிந்தெழு நாதங்கள் தாமிவை பத்தும்
பணிந்தவர்க் கல்லது பார்க்கவொண் ணுதே[1].

(ப. இ.) அகத்தவத்தால் உள்ளெழும் தெள்ளிய பண்ணுரை இன்னிசை பத்தென்ப. அவை: மணி, கடல், யானை, புல்லாங்குழல், மேகம், வண்டு. தும்பி, சங்கு, பேரிகை, யாழ் எனபன. இப் பத்தினையும் ஒத்த ஓசை அகத்தே பயிலப்பெறும். அகத்தவத்தால் சிவனைப் பணிந்தவர்க்கே இவ்வோசை உண்டாகும். இதுவே திருச்சிலம்போசை என்ப. ஏனையார்க்கு இவை காண்டல் இல்லை என்க. வளை - சங்கு. தணிந்து - ஒத்து. தும்பி - ஆண்வண்டு. நாதம் - ஓசை. பணிந்தவர் - இறைபணி நிற்பவர். அல்லது - அல்லாமல். பார்க்கவொண்ணுது - திருவடியுணர்வு பெற்றவொண்ணுது. (க)

587. கடலொடு மேகம் களிறுடும் ஓசை
அடவெழும் வீணை அண்டரண் டத்துச்
சுடர்மன்னு வேணு சுரிசங்கின் ஓசை
திடமறி யோகிக்கல் லாற்றெரி யாவே.

(ப. இ.) அண்டரண்டமாகிய அருட்பெரும்வெளியில் என்றும் பொன்றுது நின்று நிலவும் அறிவுப்பேரொளி சிவபெருமான். அவன் திருவருளால் அகத்தவம் கைவந்த யோகிகளுக்கே கடல், யானை, புல்லாங்குழல், சங்கு இவையொத்த ஓசை உணர்வினில் உண்டாகும். அண்டரண்டத்து - பெருவெளியில். சுடர்மன்னு - (மன்னுசுடர்) என்றும் நிலைபெற்றுள்ள சிவம். சுரிசங்கு - சுழிந்துள்ள சங்கு. (கo)

588. ஈசன் இயல்பும் இமையவர் ஈட்டமும்
பாசம் இறங்கப் பரிந்துயி ராய்நிறகும்
ஓசை யதன்மணம் போல விடுவதோர்
ஓசையாம் ஈசன் உணரவல் லார்க்கே.

(ப. இ.) உலகவிரிவும் இயக்கமும் ஓசையால் ஆனவை. உலகம் ஆணவ மலத் தேய்வின்பொருட்டு ஆண்டவனால் முதற்காரணமாகிய மாயையி னின்று படைக்கப்பட்டது. இவ்வுண்மை உணரவல்லார் ஆண்டவனை உணரவல்லாராவர். ஈசன் - சிவபெருமான். இமையவரீட்டமும் உயிரினங்களே.

(அ. சி.) பாசமிறங்க - பாசம் கெட. (கக)

589. நாத முடிவிலே நல்லாள் இருப்பது
நாத முடிவில்நல் யோகம் இருப்பது
நாத முடிவிலே நாட்டம் இருப்பது
நாத முடிவிலே நஞ்சுண்ட கண்டனே.

---

1. திருச்சிலம். திருவுந்தியார், கள.
,, தம்பி. கூ. சேரமான், இள.

(ப. இ.) ஓசை முடிந்த இடமே திருவருள் வெளிப்படும் இடம். அதுவே அகத்தவம். அத் தவப்பேறே திருவடியுணர்வு. ஆண்டுத் திருநீலகண்டச் சிவபெருமான் வெளிப்படுவன். (கூ)

590. உதிக்கின்ற ஆழினும் உள்ளங்கி ஐந்துங்
துதிக்கின்ற தேசுடைத் தூங்கிருள் நீங்கி
அதிக்கின்ற ஐவருள் நாதம் ஒடுங்கக்
கதிக்கொன்றை ஈசன் கழல்சேர லாமே.[1]

(ப. இ.) அகத்தே மூலமுதற்றொன்றும் ஆறுநிலைகளிலும். அதுபோல் அகத்தே காணப்படும் திங்கள் முதலிய ஐந்து விளக்கங்களிலும் புகழப் படுகின்ற பேரொளி உண்டாகும். அவற்றுல் ஆணவ வல்லிருள் அகலும். புலன் எனப்படும் பூத முதலாகிய தன்மாத்திரை ஐந்தனுள் சிறந்தது ஓசை. அஃது ஒடுங்குதல் வேண்டும். ஒடுங்கவே திருவடிப் பேரூழிய கதியினையருளும் கொன்றைமாலையணிந்த சிவபெருமான் திருவடியினைச் சேர்தல் உண்டாகும். புறவோசை யொடுங்கினவிடத்தே அகவோசை தோன்றும். ஆறினும்: க. மூலம். உ. கொப்பூழ், ங. மேல்வயிறு. ச. நெஞ்சம், ஞ. மிடறு, சு. புருவநடு என்னும் ஆறு நிலைகளினும், உள்ளங்கி - அகஒளி. ஐந்து - திங்கள், ஞாயிறு, தீ, விளக்கு, பரவெளி என்னும் ஐந்து நிலைக்களங்களிலும் விளங்கும் ஒளி. அதிக்கின்ற ஐவருள் நாதம்: ஐவருள் அதிக்கின்ற நாதம். பூத முதலாகிய தன்மாத்திரையுள் யிக்கதாகிய ஓசை. கதி - திருவடிப்பேறு (அருளும்). (கங)

591. பள்ளி அறையிற் பகலே இருளில்லை
கொள்ளி அறையிற் கொளுந்தாமற் காக்கலாம்
ஒள்ளி தழியிலோ ரோசனை நீளிது
வெள்ளி அறையில் விடிவில்லை தானே.

(ப. இ.) பள்ளியறையாகிய ஆயிரவிதழ்த் தாமரைக்கண் எப் பொழுதும் பேரொளிப் பெருவிளக்கு ஒளிர்ந்துகொண்டிருக்கிறது. அதனல் இருளில்லை. அத்திருவருள் விளக்கினைக் கண்டவர் யோகியரும் ஞானியரும் ஆவர். ஞானத்தில் ஞானங் கைவந்தவரே நாயன்மார். இத்தகையோர் உடல்கள் ஏனையார் உடல்கள்போன்று சுடுகாட்டில் எரிக்கப்படுதலோ, இடுகாட்டில் புதைக்கப்படுதலோ. கல்லறையில் அடக்கப்படுதலோ இலவென்க. அக் குறிப்புத் திருத்தொண்டத் தொகையில் ஒதப்பெறும். நாயன்மார் யார்க்கும் யாண்டும் கற்குகை (சமாதி) இன்மையே தெள்ளிதின் விளக்கும். ஒண்மையுடைத்தாகிய இதனையறியின் வேண்டுமேல் அவவின்றி அகவையும் நீளலாம், பேரொளி வண்ணமாம் பெருமானடியில் பேரின்ப முடிவு என்றும் இன்று. பகலே - எப்பொழுதும் திருவருள் விளக்கம். இருளில்லை - அகவிருள் புறவிருள் இரண்டும் இல்லை. கொள்ளி அறை - சுடுகாடு. கொளுந்தாமல் - உடம்பு எரிபடாமல்; பூதங்கள் ஐந்தும் தத்தம் இனமாகிய உலகப் பூதங்களுடன் கலந்து விடும். வெள்ளி - பேரொளிவண்ணம்.

(ச. தி.) பள்ளி அறை உள்ளம். கொள்ளி அறை - சுடுகாடு. (கச)

1. ஓசையெலா. திருக்களிற்றுப்படியார், கூ.

592. கொண்ட விரதங் குறையாமற் றானென்றித்
தண்டுடன் ஓடித் தலைப்பட்ட யோகிக்கு
மண்டல மூன்றினும் ஒக்க வளர்ந்தபின்
பிண்டமும் ஊழி பிரியா திருக்குமே.

(ப. இ.) உயிர்ப்புப்பயிற்சியாம் அகத்தவ நோன்பு குறைவுறாது கைக்கொண்டு அருளுடன் ஒன்றியபின், உயிர்ப்பு நடுநாடிவழியாக மேலேறிச் செல்லும். அது செல்லும் நிலையினரே அகத்தவ யோகியராவர். அவர்கட்கு ஞாயிறு, திங்கள், தீ ஆகிய மூன்றும் ஒப்ப வளரும். வளரவே உயிரினுக்கு அழிவில்லை. உடம்பும் ஊழி ஊழியாக நீங்காது. ஒருபுடை யொப்பாக ஒளிமண்டலம் மூன்றும் முறையே வளியும், ஐயும், பித்தமும் ஒப்ப நிற்பிக்கும் குறிப்பாகும். வளி - வாதம். ஐ - சிலேத்துமம். மண்டலம் மூன்று - ஞாயிறு, திங்கள், தீ என்னும் ஒளி நிலைக்களங்கள் மூன்று. பிண்டமும் - உடலும். ஊழி - உலகப் பேரொடுக்க எல்லை.

(அ. சி.) தண்டுடன் - வீணைத்தண்டுடன். (கஞ)

593. அவ்வவர் மண்டல மாம்பரி சொன்றுண்டு
அவ்வவர் மண்டலத் தவ்வவர் தேவராம்
அவ்வவர் மண்டலம் அவ்வவர்க் கேவரில்
அவ்வவர் மண்டல மாயமற் றோர்க்கே.

(ப. இ.) புறத்தும் அகத்தும் காணப்படும் அவ் வொளிமண்டலங்கள் மூன்றினுக்கும் துச்சில்போன்று அவ்வவரே கட்டிக் காக்கும் உரிய தேவராவர். அவ் வொளிமண்டலங்கள் அத் தேவர்கட்கு உரிமையும் ஏனையார்க்குத் துணைக்கருவிக் கூட்டமுமாகும். அவ் வவர் மண்டலம்-ஞாயிறு திங்கள் தீ இவற்றின் நிலைக்களங்கள். ஆயம் - ஏனைய உலக வுயிர்கட்குச் சுற்றுத் துணைக்கருவிக் கூட்டம். (கக)

594. இகோக்கின்ற நெஞ்சத் திருட்டறை உள்ளே
மூகோக்கின்ற மண்டலம் மூன்றினும் ஒன்றித்
தகோப்பெறும் பாசத் துருவிடு மாகில்
இகோப்பின்றி மார்கழி ஏற்றம தாமே.

(ப. இ.) ஆணவவல்லிருள் முனைப்பதற்கிடமாகிய உடம்பகத்து நெஞ்சம் இகோக்கின்றது. தோன்றும் ஒளிமண்டலம் மூன்றினும் ஒற்றுமைப்பட்டு அன்பினுல் துருவி ஆராய்வார்களாலுல் இகோப்பகலும். திருவருள் பெருவெளிக்கண் ஆராய்தல் வேண்டும். திங்களுள் மார்கழி ஏற்றமதாகும். எதனுலென்றுல் மார்கழித்திங்கள் திருவாதிரைத் திருநாளாகும். திருவாதிரைச் செம்மீன் சிவபெருமானுக்குச் சிறப்புரிமையுடையது. உலகத் தோற்றத் தொழில்கள் முற்றுற்று விடிந்ததும் உலகந் தோற்றலுறும் அதனுலென்க. அதுபோல அகத்தவம் உடையராயினுர்க்கு அகதுதே புதிய நிகழ்ச்சிகள் உண்டாகும். மார்கழி - மா + கழி(ர் : எழுத்துப்பேறு.) [1]மா - கருமை. கழிதல் - நீங்குதல். இதுவே தோற்றப்பெருநாளாகும். இருட்டறை- ஆணவவல்லிருள் வண்ணமாம்

1. பேரற்றி யருளுகநின். அ. திருவெம்பாவை, உ0.

உடல். துளை - நடுநாடி. பாசத் துருவிடுமாகில் - (பாசத்துத் துருவிடு மாகில்) அன்பிலுல் தேடுவாளுயின், மார்கழி ஏற்றமதாம் - மார்கழி என்று கூறப்படும் உலகத் தோற்றத் திருவாதிரைத் திருநாள் முதன் மையதாகும். (கஎ)

595. முக்குண மூடற வாயுவை மூலத்தே
சிக்கென மூடித் திரித்துப் பிடித்திட்டுத்
தக்க வலமிடம் நாழிகை சாதிக்க
வைக்கும் உயிர்நிலை வானவர் கோனே.

(ப. இ.) முக்குணமும் ஆருயிரை மூடியிருக்கும் மூடுதலினின்றும் அகல, உயிர்ப்பை மூலத்திடத்து முறைப்படச் சிக்கெனப்பிடித்தல் வேண்டும். பின்பு வலப்பால் இடப்பால் நாடிவழியாக மாறிமாறிப் பயிறல் வேண்டும். குறித்தநாழிகை வரை அகத்தே தடுத்தல் வேண்டும். அங்ஙனம் பயில உயிர்நிலையாகிய உடம்பைச் சிவபெருமான் நிலைப்பித் தருள்வன். முக்குண மூடற - அமைதி ஆட்சி அழுந்தல் என்னும் தொழிற்பண்பாம் மூன்றின் மறைப்பும் அகல. சிக்கென - உறுதியாக. திரித்து - மாறிமாறிச் செலுத்தி. நாழிகை - குறித்த நாழிசைவரை. சாதிக்க - அகத்தவம் பயில உயிர்நிலை - உடல். வானவர்கோன் - சிவ பெருமான். வைக்கும் - நிலைப்பிக்கும். (கஅ)

596. நடலித்த நாபிக்கு நால்விரன்[1] மேலே
மடலித்த வாணிக் கிருவிரல் உள்ளே
கடலித் திருந்து கருதுவல் லார்கள்
சடலத் தலைவனைத் தாமறிந் தாரே.

(ப. இ.) சீர்பெற்ற கொப்பூழுக்கு நான்குவிரல் மேலும், இதழ் விரிந்த வாணியாகிய ஓசைபிறக்கும் இடத்திற்கு இருவிரல் கீழுமாக அலையற்ற கடல்போல் அசைவற்றிருக்கப்பெற்றுச் சிவபெருமானைக் கருதுதல் வேண்டும். அப்பொழுது கருதுவார் சிவனையும் தம்மையும் அறிந்தாராவர். கடலித்து - கடலின்றன்மையாய். நடலித்த: (நடல மென்பதன் அடியாகப் பிறந்த பெயரெச்சம்) சீர்பெற்ற. மடலித்த - இதழ்பொருந்திய. வாணி - ஓசை தோன்றுமிடம்; கொப்பூழ்.

(மு. சி) மடலித்த வாணி - அனுகதம். கடலித்து - அலையற்ற கடல் போல் இருந்து. சடலத் தலைவன் - சிவன். (கக)

597. அறிவா யசத்தென்னு மாறு றகன்று[2]
செறிவான மாயை சிதைத் தருளாலே
பிறியாத பேரரு ளாயிடும் பேற்றி
நெறியான அன்பர் நிலையறிந் தாரே.

(ப. இ.) திருவருளால் மெய்யுணர்வு கைவந்தார் முப்பத்தாறு மெய்களும் நிலையுள்ளனவல்ல என்னும் மெய்ம்மையை யுணர்வர். உணரவே மாயைப் பற்றினின்றும் விலகுவர். தம்மைவிட்டு நீங்காத

1. தேடுவன் றேடுவன். எ. சஞ் - கூ.
2. உணருரு- சிவஞானபோதம், கூ.

பேரருளில் சாரும் தன்மையை அறிவர். இவர்களே முறையானுணர்ந்த முழுநிலை யன்பராகுவர். அறிவாய் - திருவருள் துணையால் திருவடி யுணர்வாய். அசத்தென்னும் - நிலையில்லாததென்று சொல்லப்படும். ஆறு - அருஞ்சைவர்கள் கொள்ளும் முப்பத்தாறு (2139) தத்துவங்களும் அகன்று - அருளால் வேறென உணர்ந்து பற்று நீங்கி. செறிவானபிணித்திருக்கின்ற. அருள் - சிவபெருமானின் திருவருளாற்றல். பெற்றி - தன்மை.

(அ. சி.) அசத்தென்னும் ஆறு - 36 தத்துவங்கள். (८०)

---

# 9. சமாதி

(நொசிப்பு)

598. சமாதி யமாதியிற் ருன்செல்லக் கூடும்
சமாதி யமாதியிற் ருனேட்டுச் சித்தி
சமாதி யமாதியில் தங்கினேர்க் கன்றே
சமாதி யமாதி தலைப்படுந் தானே.

(ப. இ.) நீதகற்றல் நன்ருற்றல் ஆகிய இயமநியம முறைகளால் செயலறலாகிய சமாதியுண்டாகும். அதன் இயல்பினைக் கூறக் கேட்கில், அவற்ருன் எட்டுச்சித்தியும் உண்டாகும். அந் நிலையின் நின்றவர்க்கே சமாதி முதலியன கைகூடும் என்க. சமாதி - நொசிப்பு.

(அ. சி.) சமாது இயமம் ஆதியில்தான் - இயமம் ஆதிசாதனையால் உண்டாகும் சமாதி. (க)

599. விந்துவும் நாதமும் மேருவில் ஓங்கிடிற்
சந்தியி லான சமாதியிற் கூடிடும்
அந்த மிலாத அறிவின் அரும்பொருள்
சுந்தரச் சோதியுந் தோன்றிடுந் தானே.

(ப. இ.) நடுநாடியாகிய மேருவின்கண் விந்துநாதங்கள் நிலைபெற்று விட்டால் திருவருள் வெளிப்படுதலாகிய சமாதி கைகூடும். முடிவு பேறில்லாத அறிவினையுடைய அரும்பொருளாகிய சிவபெருமானின் எல்லையில்லாத வனப்புப்பேரொளி வயங்கித் திகழும். விந்து - உடலுர அமிழ்து. நாதம் - உயிர்ப்போசை. ஓங்கிடில் - நிலைத்திடில். சந்தியிலான - திருவருள் வெளிப்படுதலான. சமாதி - திருவடியுணர்வில் ஒடுக்கம்; நொசிப்பு.

(அ. சி.) மேரு - புருவமத்தி. (உ)

600. மன்மனம் எங்குண்டு வாயுவும் அங்குண்டு
மன்மனம் எங்கில்லை வாயுவும் அங்கில்லை
மன்மனத் துள்ளே மகிழ்ந் திருப்பார்க்கு
மன்மனத் துள்ளே மனோலய மாமே.

(ப. இ.) மனம் அருவுடற்கண் நின்று புறத்துப் பொறியிற் பொருந்தலும் அகத்திற் கரணத்திற் பொருந்தலும் புரியும். அதனால் அது பொருந்துமனம் எனப்பட்டது. அத்தகைய மனம் எங்குண்டு அங்கெல்லாம் உயிர்ப்புப் புடை பெயர்ச்சியும் உண்டு மனத்தின் அசைவு இல்லாத இடத்து உயிர்ப்பின் அசைவும் இல்லை. சிவபெருமான் திருவடியைப் பற்றுமனம் அசைவின்றி நிலைபெற்ற மனமாகும். அந்நிலைவுடன் மகிழ்ந்திருப்பார்க்குச் சிவபெருமானும் அம் மனம் ஒடுங்கும் இடமாகத் தன் திருவடியை அருள்வன். அருவுடல் - நுண்ணுடல். வாயுவும் - உயிர்மூச்சும். மன்மனத்துள்ளே - சிவனை மறவாமனம். மனோலயம் - மனமொடுங்குமிடம். (திருவடி).

(அ. சி.) மன்மனம் - மன்னும் மனம்; தூலசூக்கும சரீரங்கள் இரண்டினும் பொருந்தும் மனம். (கூ)

601. விண்டலர் கூபமும் விஞ்சத் தடவியுங்
கண்டுணர் வாகக் கருதி யிருப்பர்கள்
சென்டு வெளியிற் செழுங்கிரி யத்திடை
கொண்டு குதிரை குசைசெறுத் தாரே.

(ப. இ.) மலையும் விரிந்த அலரும் சேர்ந்துள்ள பெரிய கூபம் போலும் திருவருள் விளக்கத்தும், எல்லையில்லாத பெருவெளியும் கண்டு அவையே மெய்யுணர்வாகக் கருதியிருப்பார்க்கு உயிர்ப்புப் புறப்பட்டுச் சென்று புருவநடுவின் உச்சியில் நிற்கும். ஆங்குக் கடிவாளத்தை இழுத்துக் கட்டுவதுபோல் அங்கேயே நிற்கச்செய்வன். விண்டு - மலை. அலர் - விரிவான. கூபம் - கிணறு; வற்றுத் திருவருள் ஊற்று. விஞ்சு - மிகுதியாகிய. அத்து - அழகு. வெளி - பேரருள்வெளி. செழுங்கிரி - புருவநடுமூனை; ஆக்கினையினுச்சி. குசை செறுத்தார் - கடிவாளத்தை இழுத்துக் கட்டினர். குசை - கடிவாளம். (சு)

602. மூல நாடி முகட்டல குச்சியுள்
நாலு வாசல் நடுவுள் இருப்பிர்காள்
மேலை வாசல் வெளியுறக் கண்டபின்
காலன் வார்த்தை கனவிலும் இல்லையே.[1]

(ப. இ.) மூலாதாரத்திலுள்ள நடுநாடியில் முக்கட்டு உண்டாம். விரிவான புருவநடுவின் உச்சியில் கண் நாக்கு மூக்குச் செவி என்னும் நான்கு வாயில்களும் ஒன்றுகூடும். அவற்றின் நடுவுள் திருவருள் நிலைவுடன் இருப்பீர்களாயின் உச்சித்துளை வாயிலை வெளியுறக் காண்பீர்கள். அம் மேலைவாசலை வெளியுறக் கண்டவனுக்குக் கனவிலும் காலன் வருவான் என்னும் நினைவு உண்டாகாது. சிவவொளிமுன் ஆணவவல்லிருள் மூளாமை இதற்கொப்பாகும். முக்கட்டு-படைப்போன் காப்போன் துடைப்போன் ஆகிய மூவரின் சுடர்உருவி. இவற்றை முறையே பிரமக்கிராந்தி விட்டுணுக்கிராந்தி. உருத்திரக்கிராந்தி. என்ப. இப்படிப் பொருள் கொள்வாரும் உண்டு. மேலைவாசல் - உச்சித்துளை வழி எனலுமாம்.

1. துஞ்சும். அப்பர், தி. கூஉ - அ.

(அ சி.) முகட்டலகுச்சி - புருவமத்தி. நாலுவாசல் - கண், மூக்கு, செவி, வாய் நான்கு வாசல்களும் கூடும் இடம். மேலிவாசல் - நாற் சந்திக்கு மேலுள்ள வாசல். (இ).

603. மண்டலம் ஐந்து வரைகளும் ஈராறு
கொண்டிட நிற்குங் குடிகளும் ஆறெண்மர்
கண்டிட நிற்குங் கருத்து நடுவாக
உண்டு நிலாவிடும் ஓடும் பதத்தையே.

(ப. இ.) மண்டலம் ஐந்து, வரைகள் பன்னிரண்டு இவற்றை இடமாகக்கொண்டு நிற்கும் தெய்வங்கள் குடிகள் எனப்படும். அவர்களும் அறுவரும் எண்மரும் ஆவர். இவற்றைக் கண்டிட நிற்கும் கருத்துள்ளாகத் திருவடியின்பம் உண்டு நிலாவும். பதநிலைகளை விலக்கிவிடும். மண்டலம் ஐந்து - நிலம், நீர், தீ, காற்று, வானம் என மண்டலங்கள் ஐந்து. இவற்றிற்கு முறையே மூலம், கொப்பூழ், மேல்வயிறு, நெஞ்சம், மிடறு என்பன நிலைக்களங்கள். வரைகள் - மூலமுதற் கூறப்படும், பன்னிரண்டு இடங்கள். ஆறு நிலைக்களத்தெய்வங்கள் அறுவர் : பிள்ளையார், அயன், அரி, அரன், ஆண்டவன். (புருவநடு) அன்னையத்தன் அன்னையத்தன் - சதாசிவன். எண்மர் : மண்டலத்தெய்வங்கள் ஐவர் ; ஞாயிறு, திங்கள், ஆற்றலாகிய மூவர். மண்டலத்தெய்வங்கள் அயன், அரி, அரன், ஆண்டவன், அன்னையத்தன். ஆற்றல் - நடப்பாற்றல். (கு)

604. பூட்டொத்து மெய்யிற் பொறிப்பட்ட வாயுவைத்
தேட்டற்ற வங்நிலஞ் சேரும் படிவைத்து
நாட்டத்தை மீட்டு நயனத் தீருப்பார்க்குத்
தோட்டத்து மாம்பழந்[1] தூங்கலு மாமே.

(ப. இ.) உடம்பகத்துப் பூட்டப்பெற்றதொத்து அடக்கப்பட்ட உயிர்ப்பை மேற்செல்லவொட்டாது கொப்பூழின்கண் அடக்கிவைத்தல் வேண்டும். எண்ணத்தை அதன்கண்ணே செலுத்திக்கொண்டிருப் பார்க்குத் தோட்டத்து மாம்பழம்போல் (2922) இனிக்கும் திருவருளுடன் ஒற்றுமைப்பட்டிருத்தலுமாகும். தேட்டற்ற-மேற்செல்லுதலற்ற. அந்நிலம் - அந்தப் பேருறக்க இடமாகிய கொப்பூழ் (துரியத்தானம்). (மாம்பழம் இனிமைபற்றி வந்த உவம ஆகுபெயர்.) நாட்டத்தை - நாடுதலை. மீட்டு - புறஞ்செல்லவொட்டாது. அகமுகப்படுத்தி. நயனத் திருப்பார்க்கு - இடையருது எண்ணியிருப்பார்க்கு. தோட்டத்து - திருவருள் வெளியில். தூங்கல் - உண்டுறைதல். (எ)

605. உருவழி யும்பரி சொன்றுண்டு வானோர்
கருவரை பற்றிக் கடைந்தமு துண்டார்[2]

---

1. உழப்பின். கக. பட்டினத்தார். திருவி - நா. கo.
2. வெற்புறுத்த. அப்பர், சு. உசு - உ.
,. பொங்கி. அப்பர், கி. கூக - சு.
,, துண்ணென். சிலப்பதிகாரம், கஉ. வேட்டுவவரி.

அருவரை யேறி அமுதுண்ண மாட்டார்
திருவரை யாமனந் தீர்ந்தற்ற வாறே.

(ப. இ.) ஆருயிர்களுக்குத் திருவருள் நாட்டத்தால் உயர்ப்புப் பயிற்சியால் தம் உண்மைநிலையினை அறியும் தன்மையொன்றுண்டாம். வானோர் இவ் வுண்மையுணராது அமிழ்துண்டால் நீண்டநாள் வாழலா மென்று பெரிய மலைபற்றிக் கடல்கடைந்தனர்: அமுதுண்டனர்; பயனின்றி மாண்டனர். உயிர்ப்புப் பயிற்சியால் நடுநாடிவழியாக அரு வரையாம் உச்சித்துளை ஏறித் திருவடியமிழ்துண்ணமாட்டாதார் அத் தேவர்கள். அத் திருவடியமிழ்துண்பார்க்கு எல்லையில்லா அருட் பெருமையுடைய உயிர்ப்புப்பயிற்சியால் மனம் அடங்கிற்றென்க. உரு - ஆவியின் உண்மைநிலை (தற்சொரூபம்). கருவரை - நடுநாடி எனலுமாம்.

(அ. சி.) கருவரை - கருங்கல்லால் ஆகிய வரை. அருவரை - வீணுத் தண்டு. திருவரையா மனம் - அளவிடப்படாத பெருமையுள்ள மனம். (அ)

606. நம்பனை யாதியை நான்மறை யோதியைச்[1]
செம்பொனின் உள்ளே திகழ்கின்ற சோதியை
அன்பினை யாக்கி யருத்தி ஒடுக்கிப்போய்க்
கொம்பேறிக் கும்பிட்டுக் கூட்டமிட் டாரே.

(ப. இ.) ஆருயிர்கள் அனைத்தும் நம்புதற்கிடமாகிய நம்பனை, ஆதி யாகிய நடப்பாற்றலையுடைய சோதியை, நான்மறைகளையும் உள்ளிருந் தெழுப்பி ஒதுவிக்கும் ஒதியை. செம்பொன்னகத்துத் திகழும் வனப் பாற்றலாகிய திருவருட்சோதியை, சார்தற்பொருட்டு அவன் திருவடிக் குப் பேரன்புபூணுதல் வேண்டும். வேட்கைகளையொடுக்கிப்போதல் வேண்டும். அங்ஙனம் செல்வார் நடுநாடிவழி ஏறித் திருவடிக்கண் கலந் திருப்பார். வீணுத்தண்டு - நடுநாடி. கூட்டமிட்டார் - கலந்திருந்தார். (கு)

607. மூலத்து மேலது மூச்சது ரத்தது
காலொத் திசையிற் கலக்கின்ற சந்தினில்
மேலைப் பிறையினில் நெற்றிநேர் நின்ற
கோலத்தின் கோலங்கள் வெவ்வேறு கொண்டதே.

(இ. இ.) மூலத்துக்கு மேலாக முக்கோணமும் நாற்கோணமும் உள்ளன. உயிர்ப்புக்கள் ஒத்துப்பொருந்தினால் கூடுகின்ற பொருத்தில் திங்கள்மண்டிலத்தினின்றும் காணப்படும் அழகிய திருக்கோலங்கள் வெவ்வேறாகும். மூலத்து - எருவாய்க்கு முச்சதுரத்தது முக்கோணமும் நாற்கோணமும் உள்ளன. கால் - உயிர்மூச்சு. ஒத்து இசையில் - உயிர் மூச்சுக்கள் பொருந்திச் சேரில். சந்தினில் - பொருத்தில். மேலைப் பிறை மேலேயுள்ள திங்கள்மண்டிலம். நெற்றிநேர் நின்ற - புருவநடுவில் வெளிப்பட்டுநின்ற. கோலத்தின் கோலங்கள் - அழகிய அருள்வடிவத் தோற்றங்கள். உயிர்மூச்சு - உயிர்ப்பு: பிராணவாயு (கூ)

1. சொற்பிரிவி. சம்பந்தர், கூ. எஅ - உ.
,, ஒழுகலரி. ,, ,, சுஅ - கஉ.
,, மண்முதலாம் துகளறுபோதம், உ.

608. கற்பனை யற்றுக் கனல்வழி யேசென்று
சிற்பனை எல்லாஞ் சிருட்டித்த பேரொளிப்
பொற்பினை நாடிப் புணர்மதி யோடேற்றுத்
தற்பர மாகத் தகுந்தண் சமாதியே.

(ப. இ.) ஒருவர் வீண் எண்ணங்களாகிய கற்பனையற்று மூலத்தழல் வழியே சென்றால் திருவுள்ள நோக்கத்தால் எல்லாவற்றையும் படைத்தருளிய சிவபெருமானைக் காணலாம். அப் பேரொளிப் பொற்பினைக் கூடும் திருவடியுணர்வு கைகூடும் கூடவே, சிவபெருமானுக வீற்றிருக்கும் திருவடிப்பேறு உண்டாகும். சிற்பன் - உள்ளத்திருக் குறிப்பால் உலகைப் படைத்தருளும் முழுமுதல். தற்பரமாக - ஆவிகள் முழுமுதற் சிவமாயிருக்க. தகுந்தண் சமாதி - பிரிவிலாத் திருவருள் நிட்டையாகும். சிவமாயிருக்க - திருவடியிற் புணர்ந்திருக்க.

(அ. சி.) கற்பனை - வீண் சிந்தனைகள். கனல் - மூல அக்கினி. புணர்மதி - சிவத்தோடு கலக்கும் அறிவு. (கக)

609. தலைப்பட் டிருந்திடத் தத்துவங் கூடும்
வலைப்பட் டிருந்திடும் மாதுநல் லாளுங்
குலைப்பட் டிருந்திடுங் கோபம்[1] அகலுந்
துலைப்பட் டிருந்திடுந் தூங்கவல் லார்க்கே.

(ப. இ.) தலைப்பட்டிருந்திட - திருவருள் வழிநின்றிட. வலைப்பட்டிருந்திடும் மாதுநல்லாளும் - வலைபோல உயிர்மூச்சை நடுநாடியிற் செலுத்தாது தடுத்து நிற்கும் குண்டலிசத்தி. குலைப்பட்டிருந்திடும் - மறைத்தலை நீங்கிநிற்கும். கோபமும் முனமருவு மறைப்பாற்றலின் சினம். அகலும் - திருவருளாய் விளங்கும் துலைப்பட்டிருந்திடும் - தராசுமுனை போன்று நேர் நிற்கும் இவையனைத்தும் திருவருள்வழிநிற்கும் ஒரு பெரு செந்நெறிச் செல்வர்க்கே யுண்டாம்.

(அ. சி.) தத்துவம் - மெய்ப்பொருளான சிவம். தூங்கவல்லார் - யோகம் செய்பவர். (கஉ)

610. சோதித் தனிச்சுட ராய்நின்ற தேவனும்
ஆதியும் உள்நின்ற சீவனு மாகுமால்[2]
ஆதிப் பிரமன் பெருங்கடல் வண்ணனும்
ஆதி அடிபணிந் தன்புறு வாரே.

(ப. இ.) இயற்கைப் பேரொளிப்பிழம்பாய் நிற்கும் முழுமுதற் சிவபெருமானும், ஆதியும் - பிரிவிலாத் திருவருளும், உள்நின்ற - இருவர் நடுவாக நின்ற (சிவயசிவ) சீவனும் ஆவியும். ஆகுமால் - தானே தானுஞ் செய்தமையால் சிவமாகும். ஆதிப்.....வாரே - படைப்போனும் காப்போனும் முழுமுதற் சிவபெருமான் திருவடியைப் பணிந்து இடையறு அன்புசெய்வர். (கஙூ)

1. இனையபல. சிவப்பிரகாசம், கூ0.
2. தன்னுணர. சிவஞானபோதம், கஉ. கூ-க,

**611.** சமாதிசெய் வார்க்குத் தகும்பல யோகஞ்
சமாதிகள் வேண்டாம் இறையுட னேகிற்
சமாதி தானில்லை தானவ னாகிற்
சமாதியில் எட்டெட்டுச் சித்தியும் எய்துமே.[1]

(ப. இ.) சமாதி - நிட்டை. பலயோகம் - பலதழுவல்: மந்திரத் தழுவல், பத்தித்தழுவல், ஞானத்தழுவல், கருமத்தழுவல் முதலியன. இறையுடன் ஏகில் - திருவடி நிறைவில் அடங்கில். தானவனாகில் - ஆவியும் முழுமுதற் சிவனருளால் சிவமாக்கப்பெற்ற நிலையில். சமாதியில் - நிட்டையின்றியே. எட்டெட்டுச்சித்தியும் - உவமையிலாக் கலைஞானம் அறுபத்துநான்கும். எய்தும் - திருவருளால் தாமே வந்து பொருந்தும்.

(அ. சி.) சமாதியில் எட்டும் எட்டுச் சித்தி - அணிமா முதலிய எட்டுச் சித்திகள். (சசு)

---

# 10. அட்டாங்கயோகப் பேறு

## இயமம்

### (நீதகற்றல்)

**612.** போதகந் தேறும் புரிசடை யானடி
யாதுகந் தாரம ராபதிக் கேசெல்வர்
ஏதுகந் தானிவன் என்றருள் செய்திடு
மாதுகந் தாடிடு மால்விடை யோனே.[2]

(ப. இ.) அம்மை உவப்ப ஐந்தொழிற் பெருங்கூத்தியற்றுகின்ற சிவபெருமான் ஆவியின் விழைவினை அறிந்து விரும்பியவாறு முடித்தருளுவன். அமராபதி - (அமர் + ஆ + பதி) அமரரை ஆளும் நிலை.

(அ. சி.) அமராபதிக்கே செல்வர் - இயமம் முதலிய எட்டு யோகங்களில் சித்தி பெற்றவர் அமராபதியாகிய இந்திர உலகினை எய்துவர். (க)

## நியமம்[3]

### (நன்றுற்றல்)

**613.** பற்றிப் பதத்தன்பு வைத்துப் பரன்புகழ்
கற்றிருந் தாங்கே கருது மவர்கட்கு
முற்றெழுந் தாங்கே முனிவர் எதிர்வரத்
தெற்றுஞ் சிவபதஞ் சேரலு மாமே.[4]

---

1. ஞானபதில். சிவஞானசித்தியார், அ : உ-உ.
2. ஓங்கொளியாய். சிவப்பிரகாசம் உ.
3. ஆதி. அப்பர் இ : கசு - சு.
4. இந்திரன். ஆரூரர், எ : க00 - கூ.

(ப. இ.) சிவபெருமான் திருவடியிணையினை அவன் திருவருளாலே பற்றிப் பேரன்பு பூண்டு கற்றதனால் ஆயபயன் அதனைத் தொழுதலென்றே தொழுது, பொருள்சேர் புகழ் புகன்று இடையறாது எண்ணிக்கொண்டிருப்பார்க்குச் சிவமுனிவர்கள் ஒன்றுகூடி எழுந்து எதிர்வரத் தெளிவினையுடைய சிவவுலகம் எய்தலும் ஆகும். பரன்புகழ் - நந்திநாமம் நமசிவய என்னும் சந்தத்தமிழ். முற்றெழுந்.....ரெதிர்வர - சிவமுனிவரனைவரும் எழுந்து எதிர்கொண்டேற்க. முற்றும் (உம்) - அனைவரும். தெற்றும் - தெளிவினை அளித்தருளும். சிவபதம் - சிவன்திருவடி. (உ)

## ஆதனம்

(இருக்கை)

614. வருந்தித் தவஞ்செய்து வானவர் கோவாய்த்
திருந்தம ராபதிச் செல்வன் இவனெனத்
தருந்தண் முழவங் குழலும் இயம்ப
விருந்தின்பம் எய்துவர் ஈசன் அருளே.

(ப. இ.) அகத்தவத்திற்கு வேண்டும் எட்டுறுப்பினுள் ஒன்றுகிய இருக்கைப்பேறு பெற்றுர் வருந்தித் தவஞ்செய்துள்ளாரை யொப்பர். வானவர் கோவையும் சிவவுலகத்திருந்து ஆளும் அமராபதிச் செல்வருமாவர். அந்நிலையினை யாவரும் எடுத்தியம்பிப் புகழ்வர். மிக்க இனிமை தரும் முழவமாகிய தண்ணுமையும், புல்லாங்குழலும் பொருந்தி இசைப்பச் சிவபெருமான் திருவருள் விருந்தின்பத்தினைப் பொருந்தி அருந்திக் கழிமகிழ் எய்துவர். அருளால் முயன்று இருக்கைத் தவம்செய்த பேற்றுல் வானவர் கோவையும் ஆளும் ஆசான் மெய்வேந்தன் இவனென்று புகழ வாழ்வர். தண்முழவம் - தண்ணுமை; மத்தளம். குழல் - புல்லாங்குழல். ஆசான்மெய் - சுத்தவித்தை.

(அ. சி.) விருந்தின்பம் - புதிய இன்பம். (கூ)

## பிராணயாமம்

(வளிநிலை)

615. செம்பொற் சிவகதி சென்றெய்துங் காலத்துக்
கும்பத் தமரர் குழாம்வந் தெதிர்கொள்ள
எம்பொற் றலைவன் இவனு மெனச்சொல்ல
இன்பக் கலவி இருக்கலு மாமே.

(ப. இ.) அகத்தவப்பயிற்சியின் உறுப்பாம் உயிர்ப்பு (வளிநிலை) முறை கைவந்தவர் செம்பொற் சிவகதி சென்றெய்துவர், எய்துங் காலத்துக் கும்புகும்பாகக்கூடிய அமரர்கூட்டம் வந்து எதிர்கொள்ளும். அவர்கள் எம் பொற்றலைவன் இவன் என்று புகழ்ந்தேத்திப் புகல்வர். சிவபெருமானுடன் இன்பக்கலப்பில் இருக்கலுமாம். செம்பொற் சிவகதி சிவனெனும் நாமம் தனக்கேயுடைய செம்மேனி எம்மான் உலகம். எம் பொற்றலைவன் - எம்செல்வம்போலும் சிறந்த தலைவன். (ச)

## பிரத்தியாகாரம்

### (தொகை நிலை)

**616.** சேருறு காலந் திசைநின்ற தேவர்கள்
ஆரிவன் என்ன அரனும் இவனென்ன
ஏருறு தேவர்கள் எல்லாம் எதிர்கொள்ளக்
காருறு கண்டனே மெய்கண்ட வாறே.[1]

(ப. இ.) தொகைநிலையாகிய பிரத்தியாகாரவழி நிற்பார், சிவபெருமானின் திருவுருவினை எய்துவர். எய்திச் சிவலுலகம் புகுவர். புகுங்கால் எண்புலக்காவலர் இவன் யார் என்பர். மற்றுமுள்ள தேவர்கள் உண்மையுரைத்து உவப்புடன் எதிர்கொண்டு வழிபடுவர். மழைபோலும் கருத்த கண்டனே அருளால் மெய்ம்மையாக உணர்வினில் கண்ட ஒண்மையசிவராவர். அரனும் - சிவபெருமான் ஆட்கொண்டருளித் தன் உருவைத் தான் கொடுத்தலால் அரன் திருவுருவாய் விளங்கினர் ஆவர். மெய் கண்டவாறு - நேரே கண்டமுறையாம்.

(அ. சி.) தேவர்கள் ஆர் இவர் என்ன - பிரத்தியாகாரப் பலத்தால் சிவசாரூபம் பெற்றுச் செல்லும் இவர் யார் என்று தேவர்கள் கேட்க. (இ)

## தாரணை

### (பொறை நிலை)

**617.** நல்வழி நாடி நமன்வழி[2] மாற்றிடுஞ்
சொல்வழி யாளர் சுருங்காப் பெருங்கோடை
இல்வழி யாளர் இமையவர் எண்டிசைப்
பல்வழி எய்தினும் பார்வழி யாமே

(ப. இ.) பொறைநிலையாகிய தாரணைவழிச் செல்வார் நல்வழி நாடினவராவர். நமன்வழி மாற்றினவராவர். ஆருயிர்கட்கும் வேறுறு தேவர்கட்கும் வேண்டுவகொடுக்கும் அயன் அரி நிலையினருமாவர். ஏனையமையவர்கள் பல வேறிடங்களில் உறையினும் பிறப்பு இறப்புக்கட்கு உட்புகுந்து பார்வழி வருபவரே யாவர். நல்வழிநாடி : நல்வழிநாட, எச்சத் திரிபு. சுருங்காப்பெருங்கொடை வழியில் ஆளர் - குறையாத பெரும் செல்வம் அருளுதலே முறைமையாகப்பெற்ற ஆசான்மெய்க்கண் வீற்றிருக்கும் அயன் அரி என்னும் ஆட்சியாளர். பல்வழி - பல இடங்கள். பார்வழியாகும் - நிலத்தில் நடப்பதாகும். ஆசான்மெய் - சுத்தவித்தை.

(அ. சி.) சொல்வழி - நூல்கள் கூறும் தாரணை மார்க்கம். சுருங்... ஆளர் - பிரம விட்டுணுக்கள். (சு)

---

1. சகமார்க்கம். சிவஞானசித்தியார், அ; உ - கக.
,, அங்க. கஉ. திருமூலச் சிறப்பு, கசு.
,, சம்பு. ,, ,, ககு.
,, குடியடியாரிவர், திருவாய் மொழி, கஎசுஉ.
2. நமன்வரின். ஞானவான் - கo. உகுஉஎ.

## தியானம்

### (நினைதல்)

618. தூங்கவல் லார்க்கும் துணையேழ் புவனமும்
வாங்கவல் லார்க்கும் வலிசெய்து நின்றிட்டுத்
தேங்கவல் லார்க்கும் திளைக்கும் அமுதமுந்
தாங்கவல் லார்கட்கும் தன்னிட[1] மாமே.

(ப. இ.) நினைவுநிலையாகிய தியானவழியே சிவபெருமான் திரு வடியினையினைத் தவத்தால் நினைந்து அவன்றன் அருளாணை பெற்றுப் படைத்தல், காத்தல், துடைத்தல், அடைத்தல் ஆகிய நிலையினராவார். அயன், அரி, அரன், ஆயிரங்கண்ணன் என்பவர். அடைத்தல் - அமிழ் தடைத்தல். இந் நால்வரும் முறையே ஏழ்புவனம் படைக்கவல்லார், பாற்கடல் தூங்கவல்லார், துடைத்து அசையாது நிற்கவல்லார், அடைத்து அமுதம் தாங்கவல்லாராவர். இவர்கள் நிலைகளும்: கடவுள் நினைவின் வன்மையால் கிடைத்தன. தூங்கல் - பாற்கடலில் துயிலுதல். வாங்கவல்லார் - மீண்டும் படைக்கவல்லார். தேங்கவல்லார் - அசையாது நிற்கவல்லார். முனிவன் - (உருத்திரன்); அரன். தன்னிடம் - எண்ணிய கைகூட இடையருது நினைக்குமிடம். (எ)

## சமாதி

### (நொசிப்பு)

619. காரிய மான உபாதியைத் தான்கடந்
தாரிய காரணம் ஏழுந்தன்[2] பாலுற
வாரிய காரண மாயத் தவத்திடைத்
தாரியல் தற்பரஞ் சேர்தல் சமாதியே.

(ப. இ.) நொசிப்புநிலையாகிய சமாதியினைத் தலைப்பட்டார் மூல மலத்தின் காரியமாகிய எழுவகைத் துன்பங்களையும் நீங்கியவராவர். வினை முதற்காரணம் ஏழும் தன்பால் எய்தியவராவர். நீண்டகாரணத் துன்ப நிலைகளைக் கெடுத்தவராவர். தவப்பேற்றுல் தற்பரமாகிய சிவபெருமானைச் சார்தல் சமாதி என்ப. காரியமான உபாதி (ஏழு - மூலமலத்தின் காரிய மாகிய துன்பம் ஏழு, அவை: மயக்கம், மதம், அவா, கவலை, உட்சூடு, வாட்டம், வியப்பு என்பன. காரண உபாதி - அத்துன்பத்தைப் போக்கும் வினைமுதற் காரணநிலை. ஏழு - திருவருளாற்றல் ஏழு. அவை: திருவரு ளாற்றல், தொழிலாற்றல் அன்னை, ஆள்வி, துடைப்போள் காப்போள், படைப்போள் என்ப. வாரிய - நீண்ட. காரணமாய - துன்பவாயிலாகிய ஏழும் கெட. உபாதி என்பது காரணம் என்பதனைடும், ஏழென்பது காரியம் என்பதனைடும் இயைந்து நின்றன.

(ச. தீ.) காரியமான உபாதி ஏழு - சிவனுடைய உபாதி 7. ஆரிய காரண (உபாதி) ஏழு - ஈசனுடை உபாதி 7. தார் - ஒழுங்கு. (அ)

---

1. முழுத்தழன். அபபா, சு: ககக - நி.
2. சத்தியாய். சிவஞானசித்தியார், உ: சு - கூ.
,, கருணை. தாயுமானவர், கசு. பன்மாலை, உ.

# 11. அட்டமாசித்தி

## (எண் பெரும்பேறு)

### பரகாயப்பிரவேசம்

**620.** பணிந்தேண் திசையும் பரமனே நாடித்
துணிந்தேண் திசையுந் தொழுதேம் பிரானே
அணிந்தேண் திசையினும் அட்டமா சித்தி[1]
தணிந்தேண் திசைசென்று தாபித்த வாறே.

(ப. இ.) சிவபெருமான் திருவடியிணையினைப் பணிந்து எண்பெரும் பேறும் பெற்றவர்கள் அட்டமாசித்தியராவர். அவர்கள் சிவபெருமான் ஒருவனையே முழுமுதலாகக் கொள்ளும் பழுதில் விழுமியோராவர். அவர்கள் எண்புலன்களிலும் சென்று எண்பெரும் பேற்றினை நிலை நாட்டியவராவர். சிவபெருமானை யாண்டும் பணிந்து தொழுதல் கூறுவார் எண்திசையும் என்றார். அணிந்தேண்.....தாபித்தவாறே - தொழுத பேற்றால் எண்வகைச் சித்தியும் கைவரப்பெற்று[2] எட்டுப் புலன்களிலும் நிலைநிறுத்தியவாறும். பரகாயப் பிரவேசம் - வேற்றுடல் துழைவு[2]. (க)

**621.** பரிசறி வானவர் பண்பன் அடியெனத்
துரிசற நாடியே தூவெளி கண்டேன்
அரிய தெனக்கில்லை அட்டமா சித்தி
பெரிதருள் செய்து பிறப்பறுத் தானே.[3]

(ப. இ.) வானவர் உள்ளிட்ட அனைத்துயிர்களின் தன்மைகளையும் இருந்தாங்கு அறிபவன் சிவபெருமான். அவன் திருவடியைத் திருமுறை வழியாகத் தொழுதேன். திருச்சிற்றம்பலமென்னும் செந்நறி மன்றம் கண்டேன். காமம் வெகுளி மயக்கமென்னும் முக்குற்றமும் அகன்றன. அட்டமாசித்தியும் கைவந்தன. மேலும் பேசவொண்ணாப் பேரருளும் பெற்றேன். பிறப்பும் இறப்பும் அறுத்தருளி ஆட்கொண்டனன். பரிசறி வானவர் பண்பன் - எல்லார் தன்மைகளையும் இருந்தாங்கு இருந்து அறிந்தருளும் மேலோர் முதல்வன். துரிசற - காமம் வெகுளி மயக்க மாகிய முக்குற்றம் நீங்க. தூவெளி - தூயபரவெளி; திருச்சிற்றம்பலம். பிறப்பறுத்தான் - இறவாத இன்ப அன்பு தந்தருளிப் பிறப்பினை நீக்கினன். (உ

**622.** சூரன் அருளிற் குறிவழி மூலன்
பரையின் மணமிகு சங்கட்டம் பார்த்துத்
தெரிதரு சாம்பவி கேசரி சேரப்
பெரிய சிவகதி பேறெட்டாஞ் சித்தியே.

---

1. அட்டமாசித்திக. கூ. கூசு - கக.
2. இவனுயிர்பெற் கஉ. மூலர் - கஉ.
3. செயற்கரிய. திருக்குறள், உசு.

(ப. இ.) சிவகுருவானவர் செவியறிவுறுத்திய வழியே, மூலத்திடத்து இயங்கும் திருவருளாற்றலின் துணைகொண்டு உயிர்ப்பு நடுநாடியிற் செல்லும் துன்பினை யுணர்க. அதனைத் தெரியவுணர்த்தும் சாம்பவி கேசரி முத்திரை மேற்கொண்டு சிவநிலையும், எண்சித்தியும் ஒருங் கெய்துவ துண்மை. குரவன் - ஆசான். குறிவழி - குரவன் அறிவுறுத்திய நெறி. மூலப்பரையின் - மூலத்திடத்தியக்கும் திருவருளாற்றலால். சங்கட்டம் பார்த்து - (உயிர்மூச்சு நடுநாடியிற் செல்லும்) வருத்தத்தை யறிந்து. சாம்பவிகேசரி சேர - சாம்பவி கையடையாளப் பயிற்சியுடன் கேசரிக் கையடையாளப் பயிற்சி பொருந்த (கையடையாளம் - முத்திரை). சாம்பவி - சப்புவின் தொடர்பு எய்துதற்குரிய கையடையாளம். இது நெஞ்சச்சக்கரத்திலிருக்கும் சிவத்தினிடம் எண்ணத்தையும் உயிர் மூச்சை யும் ஒடுக்கி, அடங்கியிருக்கச்செய்யும் மாண்புடையது. நெஞ்சச் சக்கரம்- அநாகதம். கேசரி - வெளியெலாம் அடங்கியிருக்கும் புருவ நடுவில் எண்ணத்தையும் உயிர்மூச்சையும் ஒடுங்கியிருக்கச்செய்யும் வன்மை யுடையது. புருவநடு - ஆக்கினை.

(அ. சி.) சாம்பவி, கேசரி - இருவகைத் தீக்கைகள்; முத்திரைகள் என்றுங் கூறுப. (கூ)

623. காயாதி பூதங் கலிகால மாயையில்[1]
ஆயா தகல அறிவோன் றனதியே
ஓயாப் பதியதன் உண்மையைக் கூடினல்
வீயாப் பரகாயம் மேவலு மாமே.

(ப. இ.) காயமுதலாகச் சொல்லப்படும் பூதம் கலி காலம் மாயை முதலியவற்றின்கண் நுணுகிப் பற்றுக்கொள்ளாது அகலச் சிவபெருமா னிடத்து அறிவொன்றும் தொன்மை முதலாக என்றும் ஒருபடித்தாகிய சிவபெருமான் திருவடியைக்கூடினல் திருவருள் வெளியிற்சேர்தல் எளிது. அறிவு ஒன்று - (ஒன்று அறிவு) ஒருபடித்தாய அறிவு. பரகாயம்-திருவருள் உடல். மேவல் - பொருந்தல்.

(அ. சி.) காயாதி - காயம் ஆதி. அறிவொன்று - ஒருமுகப்பட்ட சித்தம். ஓயா - முடிவு இல்லாத. வீயா - இறவாத. (ச)

624. இருபதி னாயிரத் தெண்ணூறு பேதம்
மருவிய கன்ம மாமந்த யோகந்
தருமிவை காய உழைப்பாகுந் தானே
அருமிரு நான்காய் அடங்குமா சித்திக்கே.

(ப. இ.) வேண்டி வினைதழுவல் கன்மயோகம் எனப்படும். அஃது இருபதினாயிரத்தெண்ணூறு வேறுபாடுகளைக் கொண்டது. இவ்வியோகம் உடம்பினல் செய்யப்படும் அருமைமிக்க வுழைப்பினல் நிறைவுறும். இவையனைத்தும் எண்வகை யோகத்துள் அடங்கும். கன்மயோகம் - வேண்டி வினைதழுவல்.

---

1. கலியாதி. சிவஞானபோதம், கூ. எ - க.

(அ. சி.) இருபதி...யோகம்-பலதிறப்பட்ட கன்மயோகங்கள். காய உழைப்பு - தேகத்திற்கு வருத்தம். அரு...அடங்கும் - எட்டு யோகங்களுள் அடங்கும். (இ)

625. மதிதனில் ஈராறுய் மன்னுங் கலியின்
உதய மதுநா லொழியவோ ரெட்டுப்
பதியும்ஈ ராறுண்டு பற்றறப் பார்க்கில்
திதமான ஈராறு சித்திக ளாமே.[1]

(ப. இ.) திங்கட்கலியாகிய இடப்பால் மூக்கின்வழியும், இனம் பற்றி ஞாயிற்றின்கலியாகிய வலப்பால் மூக்கின்வழியும் விடுத்தலாகிய உயிர்ப்புப் பன்னிரண்டு விரலளவு வெளியிற்செல்லும். சென்ற அவ்வுயிர்ப்பில் நால்விரல் அளவு வெளியின்கண்ணேயே வீணுகச் சென்று விடும். எஞ்சிய எட்டுவிரலளவே அகத்துத் தங்கும். அங்ஙனமன்றி அப் பன்னிரண்டு விரலளவு உயிர்ப்பும் அகத்தே தங்கமுயன்று அவை முற்றுகத் தங்கினுல் உறுதிப்பாடான எண்சித்திகள் எய்தும். பற்றற: அறப்பற்ற - முற்றுந்தங்க. ஈராறு: இரண்டு + ஆறு = எட்டு; உம்மைத் தொகை. இனம் பற்றி வலப்பாற் (பிங்கல) கலியும் கொள்க. உதயம் - வெளிப்படுதல். திதமான - அழியாமல் நிலையாக இருக்கக்கூடிய.

(அ. சி.) மதிதனில் - இடகலை. மன்னுங்கலி - பன்னிரண்டங்குல மாய்ப் பொருந்தும் பிராணகலை. நால் ஒழிய - 12 அங்குலத்தில் 4 அங்குலம் ஒழிய. ஈராறு - இரண்டும் ஆறும்; எட்டு. (சு)

626. நாடும் பிணியாகு நஞ்சனஞ் சூழ்ந்தக்கால்
நீடுங் கலைகல்வி நீள்மேதை கூர்ஞானம்
பீடொன்றி னல்வாயாச் சித்திபே தத்தின்
நீடுந் துரங்கேட்டல் நீண்முடி வீராறே.

(ப. இ.) 'எம்மாடு சும்மாடாம் ஏவர் நல்லார்' என்பதனுல் நம் முடைய இன சனங்கள் கூடினுல் எண்ணத்தக்க நோய்போன்ற பிறப் பினுக்குக் கட்டுத்துணையாகும். நிலைநிற்கும் கலியுணர்வுகளும், அவ் வுணர்வினைத் தரும் கல்விகளும் அவற்றுல் வரும் தெளிவுணர்வும், தெளிவால் பெறப்படும் நுண்ணுணர்வும், ஆகிய பெருமையினுல் வாய்ப் பனவல்ல சித்திவேறுபாடுகள். அவை ''உற்றநோய் நோன்றல் உயிர்க் குறுகண் செய்யாமை' என்னும் பொறையினுலும் சிவகுரு அறிவுறுக்கும் செவியறிவுறுத்தலாலும் சேர்வன. இத்தகைய யோகப்பயிற்சியின் பேரெல்லை பன்னிரண்டு ஆண்டாகும். மேதை - மறைவிலா அறிவு. கூர்ஞானம் - நிறையறிவு. வாயா - கிட்டா. கேட்டல் - செவியறிவுறுத்தப் பெறுதல். செவியறிவுறுத்தல் - உபதேசம். அகத்தவமாகிய சிவயோகத் தால் ஏற்படும் நலமார் சித்திகள் சிந்தையினீங்காச் சிவனினைவினர்க்கே யுண்டாம்.

(அ. சி.) நஞ் சனம் - உறவினர். வாயா - கிட்டா. துரம் - பொறுத்தல். நீண் முடிவு ஈராறு - யோகாப்பியாச காலம் 12 வருடங்கள். (எ)

1. ஆகா. திருக்குறள், சஎஅ.

627. ஏழா னதிற்சண்ட வாயுவின் வேகியாந்
தாழா நடைபல யோசனை சார்ந்திடுஞ்
சூழான ஓரேட்டில் தோன்ரு நரைதிரை
தாழான ஒன்பதிற் ரூன்பர காயமே.

(ப. இ.) அகத்தவமாம் யோகப்பயிற்சி ஏழு ஆண்டுகள் செய்யின் பெருங்காற்றினும் விரைவாகத் தங்காது அளவிலாக்கல் தொலைவு நடத்தல் கூடும். எட்டாண்டுப் பயிற்சியில் நரைதிரைகள் தோன்ரு. ஒன்பதாண்டுப் பயிற்சியில் 'ஊன் உடல் வேறு செய்தான்' என்பதற் கிணங்கத் தூமாயை உடம்பாகும். (அ)

628. ஈரைந்திற் பூரித்துத் தியான உருத்திரன்[1]
[2]ஏர்வொன்று பன்னெஞ்ஞில் ஈராரும் எண்சித்தி
சீரொன்று மேலேழ் கீழேழ் புவிச்சென்று
[3]ஏரொன்று வியாபியாய் நிற்றல்ஈ ராறே.

(ப. இ.) பத்தாண்டுப் பயிற்சியில் திருமுறைச் சிவதீக்கை வாயி லாகத் திருநெறி நுழைவினரால் வழிபடப்பெறும் தீருநீலகண்டப் பெருமானுக்கு ஒப்பாவர். பன்...சித்தி - பதிஞ்ரொண்டுப் பயிற்சியில் எண்பேறு பெறுவர். சீரொன்று.....ராறே - பன்னிரண்டு ஆண்டுப் பயிற்சியில் சிறப்புப்பொருந்திய மேல் ஏழுலகும் கீழ் ஏழுலகும் ஆண்டான் மீநிறைவில் ஆவி வீழ் நிறைவாகும் மீநிறைவு - வியாபகம். வீழ்நிறைவு - வியாப்பியம். மிடைநிறைவு - வியாத்தி எண் பேறு (எண் சித்தி) - க. அணிமா, உ. மகிமா, ங. இலகிமா, ச பிராத்தி, ஞ. பிராகாமியம். ஙு. ஈசத்துவம், எ. வசித்துவம், அ. கரிமா. இம்முறை சிவஞானபோத நூற்பா இரண்டன் பேருரைக்கண் மாதவச் சிவஞான முனிவரஞரால் ஓதப்பட்டதாகும்.

க. அணுவினும் மீநுண்மை வடிவுற்று நிற்றல் அணிமா என்னும் செல்வம்.

உ. மேருவினும் மிகப்பெரிய வடிவுற்றுநிற்றல் மகிமா என்னும் செல்வம்.

ங. சேறு மூதலியவற்றில் இயங்கினும் அழுந்துதலின்றிக் காற்றி னும் கடுநடைத்தாய் மெல்லிய வடிவுற்று நிற்றல் இலகிமா என்னும் செல்வம் (இம் மூன்றும் உடம்பால் எய்துவன.)

ச. மனத்தான் விழையப்பட்டன அனைத்தும் விழைந்தவாறே பெறுதல் பிராத்தி என்னும் செல்வம்.

ஞ. எண்ணமாத்திரையான் ஆயிரம் மகளிரைப் படைத்து அவ ரனைவரோடும் ஆயிரம் வடிவாய் நின்று விளையாடல் பிராகாமியம் என்னும் செல்வம்.

---

1. ஆய. கஉ. உருத்திரபசுபதி, ச.
(பாடம்.) 2. நேரொன்று. 3. ஓரொன்று

சு. பிரமன் முதலியோர்மாட்டும் தன் ஆணைசெலுத்தி அவராலும் பூசிக்கப்படுதல் ஈசத்துவம் என்னும் செல்வம்.

எ. உலகமுழுவதையும் தன்வயமாக்குதல் வசித்துவமென்னும் செல்வம்.

அ. புலன்களை நுகர்ந்தும் அவற்றில் தொடக்குண்ணுமை கரிமா என்னும் செல்வம். (இவ் வைந்தும் மனத்தால் எய்துவன). இவற்றை முறையே, க. நுண்மை, உ. பருமை. ங. மென்மை, ச. விரும்பிய தெய்தல் ஞ. நிறைவுண்மை. சு. ஆட்சியுறுதல், எ. கவர்ச்சி, அ. விண்டன்மை என்ப. கரி - சான்று. மா - செல்வம். (க)

629. தானே அணுவுஞ் சகத்துத்தன் [1]நோய்ம்மையும்
மாலுக் [2]கனமும் பரகாயத் தேகமுங்
தானுவ தும்பர காயஞ்சேர் தன்மையும்
ஆனை வுண்மையும் [3]வியாபியு மாம்எட்டே.

(ப. இ) இத் திருப்பாட்டு மேற்குறித்த எண் பெரும்பேறுகளையும் முறையே ஓதுகின்றது.

(அ. சி) அணு - அணிமா (1). சகம் - மகிமா (2). நோன்மை - கரிமா (3) ககனம் - லகிமா (4). பரகாயத்தேகம் - பிராப்தி (5). தானுவது - பிராகாமியம் (6). ஆனை உண்மை - ஈசத்துவம் (7). வியாப்பியம் - வசித்துவம் (8). இவை அட்டசித்திகளாகும். (கo)

630. தாங்கிய தன்மையுந் தானணுப் பல்லுயிர்
வாங்கிய காலத்து மற்றோர் குறையில்லை
யாங்கே எழுந்தோம் அவற்றுள் எழுந்துமிக்
கோங்கிய வாமுத்தி முந்திய வாறே.

(ப. இ.) ஆவி யோகப்பயிற்சியால் அணுவாக நின்று பல வுயிர்களொடும் செறிந்து அவைகளைத் தாங்கியகாலத்தும் அவற்றை அழித்த காலத்தும் அதற்கொரு மாறுதலில்லை. எல்லா இடங்களிலும் உயிர்களிலும் கலந்து தோன்றினும் ஒப்புயர்வில்லா வீடுபேற்றுக்கு முன்னேறும் வழியாம். செறிவு - வியாபகம். முந்தியவாறே என்பதற்கு முன்னிருந்த படியே என்றுமாம் (திருவிகாரம்). (கக)

631. முந்திய முந்நூற் றறுபது காலமும்
வந்தது நாழிகை வான்முத லாயிடச்
சிந்தை செயச்செய மண்முதல் தேர்ந்தறிந்
தந்தியுள் நின்று வுதித்தெழு மாறே.[4]

(ப. இ.) ஒரு நாழிகைக்கு விநாடி அறுபது. ஒரு நாளுக்கு நாழிகை அறுபது. ஒரு பகலுக்கு நாழிகை முப்பது. அம் முப்பது நாழிகையையும்

(பாடம்.) 1. நோன்மையும். 2 ககனமும். 3. வியாப்பியு. 4. சித்திப்பார். அப்பர், ஞ. கவ, க-கூ.

வெளி, வளி, ஒளி, நீர். நிலம் என்னும் ஐம்பெரும் பூதங்களுக்கும் முறையே பகுக்கப்படின் காலைமுதல் அவ்வாறு நாழிகைகளாகும். ஆறு நாழிகைக்கும் விநாடி முந்நூற்று அறுபதாகும். எனவே ஒவ்வொரு பூதங்கட்கும் முந்நூற்றறுபது விநாடி உரிய காலமாகும். அக் காலம் அவ்வப்பூதப்பெயரான் வழங்கப்படும். எடுத்துக்காட்டாகக் காலை ஆறு நாழிகையும் வெளியாகிய வான்காலம் எனப்படும். அப்படியே மற்ற வற்றையும் கூறிக்காண்க. இது தோற்றமுறை. எண்ணி மண் முதலாகத் தேர்ந்தறியின் அஃது ஒடுக்கமுறையாகும். இம் முறையாகவே இரவு மூப்பது நாழிகையையும் அமைத்துக்கொள்க. நாளுக்கும் நாழிகைக்கும் ஒவ்வொன்றுக ஒதியுய்ய அப்பரடிகள் அருளிய 'சித்தத்தொகைத் திருக் குறுந்தொகை'த் திருப்பாட்டு முப்பதும் காண்க. இஃதும் அகரவரிசை யின் அமைந்துளது.

(ச. சி) காலம் - விநாடி. 60 விநாடி - ஒரு நாழிகை. 360 காலம்- 360 விநாடி; ஆறு நாழிகை. ஒரு பகலுக்கு 30 நாழிகை, அதனை 5 பங்கு ஆக்க. ஒவ்வொரு பங்கையும் முறையே வான் முதலாகக் கொள்க. வான்-வளி, தீ. நீர், நிலம். 'வான் முதலாயிட' என்றார். இது தோற்ற முறை. நிலம் முதலாகக் கொள்ளின் ஒடுக்கமுறை என்க. இதனை, "மண்முதற் றேர்ந்தறிவார்" என்றார். இவ்வாறே இரவையும் 5 பங்கு ஆக்கிக்கொள்க. (கஉ)

§32. சித்தந் திரிந்து சிவமய மாகியே
முத்தந் தெரிந்துற்ற மோனர் சிவமுத்தர்
சுத்தம் பெறலாம் ஐந்தில் தொடக்கற்றோர்
சித்தம் பரத்தில் திருநடத் தோரே.

(ப. இ.) எண்ணமாகிய சித்தம் புலன்களாகிய சுவையொளி ஊறு ஓசை நாற்றங்களிற் பற்றுமல் மடங்கிச் சிவத்தின்பாற் பற்றுமேல் அது சிவமயமாகும். இங்ஙனம் அமைவதற்கு எண்மையும் திண்மையும் உண்மையும் ஆயவழி செம்பொருளின் இம்பரிடைக்காணும் உம்பரும் உணராத் திருவுருவ வழிபாடேயாம். அத் திருவுருவ வழிபாட்டினுள்ளும் அம்பலவாணர் வழிபாடே ஐம்புல நுகர்வுக்குப் பெரிதுமொத்த திருக் குறிப்போடு பொருந்திய திருவுருவமாகும். அது வலது திருக்கையில் காண்பது உடுக்கையாகிய துடி. இது படைத்தல், வான்நிலை காதுப் பொறி. வலப்பால் அமைவுத் திருக்கை காத்தல், வளிநிலை, தோற் பொறி. இடப்பால் திருக்கையில் அங்கி துடைத்தல், தீநிலை; நோக்குப் பொறி. ஊன்றிய வலப்பால் திருவடி மறைத்தல், மண்நிலை; மூக்குப் பொறி. தூக்கிய திருவடி அருளல். நீர்நிலை. நாக்குப்பொறி. இம்முறை யான் ஐம்பொறியளவினும் 'கண்டு கேட்டு உண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும், ஒண்டொடி கண்ணே உள' (குறள்-கஉ0) என்பதுபோன்று நுகர்வுடையாகும். அவ் வுண்மை வரும் சேக்கிழாரடிகளின் வாய்மொழி யான் உணர்க, திருவுருவம் - படிமை; விக்கிரகம்.

"உணர்வி னோர்பெற வரும்சிவ
போகத்தை யொழிவின்றி யுருவின்கண்
அணையும் ஐம்பொறி யளவினும்
எளிவர அருளினை எனப்போற்றி

இணையில் வண்பெருங் கருணையே
யேத்திமுன் னெடுத்தசொற் பதிகத்திற்
புணரும் இன்னிசை பாடின
ராடினர் பொழிந்தனர் விழிமாரி."

—கஉ. சம்பந்தர், கஙக.

செம்பு பொன்னுவது போன்று மேனிலை எய்திய உள்ளத்தார் திருவருளால் திருவடிப்பேறு தெரிந்து பொருந்திய மோனத்தராவர். மோனம்-மேன்மைஞானம். அவரே சிவப்பேற்றினராவர். இங்ஙனம் பேறு பெற்றூர் ஐம்மலத்தொடக்கற்ற செம்பொருட்டுணிவினராவர். சித்தமாகிய எண்ணம் திருநடம்புரியும் செம்பொருளில் சேர்ந்தோராவர். சித்தம்பரமாகிய தில்லைச் சிற்றம்பலத்தின் திருநடங்கண்ட திருவினராவர் என்றலும் ஒன்று. சுத்தம் என்பதற்கு மலமிலாத் தூய்மை எனவோ தூநிலைப்பாடு எனவோ கூறலும் ஒன்று. சுத்தம் - மாசின்மை (தூயநிலை). ஐந்து - ஐம்மலம். எண்பேறுள் மனத்தாலெய்துவன (628) ஐந்துமாம். தொடக்கு - பிணிப்பு.

(அ. சீ.) திரிந்து - புலன் வழியினின்றும் திரிந்து. முத்தம் - முத்தி. சித்தம்பரம் - சிதம்பரம், சிதாகாயம். (கஙட)

633. ஒத்தஇவ் வோன்பது வாயுவும் ஒத்தன
ஒத்தஇவ் வோன்பதின் மிக்க தனஞ்சயன்
ஒத்தஇவ் வோன்பதில் ஒக்க இருந்திட
ஒத்த உடலும் உயிரும் இருந்தவே.

(ப. இ.) ஒன்பதிலொக்க இருந்திட - பத்து நாடிகளுள் நடுநாடி ஒழித்து ஒன்பது நாடிகளிலும் ஒன்பது காற்றுக்களும் முறையே கூடியிருக்க. நரம்பு என்றலும் நாடி என்றலும் ஒன்று. பத்து நாடியும் முறையே காண்க: இடப்பால் நரம்பு, வலப்பால் நரம்பு, நடுநரம்பு, உள்நாக்கு நரம்பு வலக்கண் நரம்பு, இடக்கண் நரம்பு. வலச்செவி நரம்பு, இடச்செவி நரம்பு கருவாய் நரம்பு, எருவாய் நரம்பு என்பன. இவற்றை முறையே: இடகலை. பிங்கலை. சுழுமுனை, சிகுவை, புருடன், காந்தாரி, அத்தி. அலம்புடை சங்கினி. குரு என்ப. இவற்றுள் வீங்கற் காற்றுகிய தனஞ்சயன் நடுநரம்பி(சுழுமுனையி)ல் தங்குவது. ஒத்த உடலும் உயிரும்-(தம்முள்) ஒத்துவாழும் உடலும் உயிரும் நெடுநாள் நீங்காது ஓங்கி வாழும்.

(அ. சீ.) ஒன்பது வாயு - தனஞ்சயன் ஒழிந்த ஒன்பது வாயு. (கச)

634. இருக்குந் தனஞ்சயன் ஒன்பது காலில்
இருக்கும் இருநூற் றிருபத்து நான்கில்
இருக்கு மூடலி லிருந்தில வாகில்
இருக்கும் உடலது வீங்கி வெடித்ததே.

(ப. இ.) வீங்கற்காற்று ஏனைக்காற்று ஒன்பதும்போல் இருக்கும். இருக்கு.....வெடித்ததே - இருநூற்று இருபத்துநான்கு உலகங்களிலும் வாழும் உயிர்களின் உடலில் வீங்கற்காற்றுப் பாங்குறநிற்கும். இக்காற்று வெளிப்பட்டுவிட்டால் உடல் வீங்கி வெடித்திடும்.

(அ. கீ.) கால் - வாயு. இருநூற்றிருபத்து நான்கு - புவனங்களின் தொகை. (கஜ)

635. வீங்குங் கழலே சிரங்கோடு குட்டமும்
வீங்கும் வியாதிகள் சோகை பலவதாய்
வீங்கிய வாதமுங் கூனு முடமதாம்
வீங்கும் வியாதிகள் கண்ணில் மருவியே.

(ப. இ.) வீங்கற்காற்றின் திரிபால் இதில் குறித்த பல நோய்கள் உண்டாகும். (கசு)

636. கண்ணில் வியாதி யுரோகந் தனஞ்சயன்
கண்ணிலிவ் வாணிகள் காச மவனல்லன்
கண்ணினிற் கூர்மன் கலந்தில ஞதலாற்
கண்ணினிற் சோதி கலந்ததும் இல்லையே.

(ப. இ.) வீங்கற்காற்றின் திரிபால் பலநோய்கள் கண்ணிலுண்டாம். விழிக்காற்றின் திரிபால் கண்நோய்கள் பலவும் உண்டாம்; கண்ணொளியும் விளங்காது. (கள)

637. நாடியின் ஓசை நயனம் இருதயந்
தூடி யளவுஞ் சுடர்விடு சோதியைத்
தேவருள் ஈசன் திருமால் பிரமனும்
ஓவற நின்றங் குணர்ந்திருந் தாரே.

(ப. இ.) நடுநாடியிற் கேட்கப்படும் ஓசையினைக் கண்ணொளியாய் நெஞ்சத்துடிப்பாய் உணரலாம். இவ்வோசையினை ஆண்டான் அரிஅயன் முதலியோரும் இடையறாது உணர்ந்திருந்தனர் இவர்கள் தூமாயையிலுள்ளவர். துடி என்பது முதல் நீண்டு தூடி என்றுயிற்று.

(அ. கீ.) தூடி - துடி; எட்டு விநாடி. (கஅ)

638. ஒன்பது வாசல் உடையதோர் பிண்டத்துள்
ஒன்பது நாடி யுடையதோ ரோரிடம்
ஒன்பது நாடி ஒடுங்கவல் லார்கட்கு
ஒன்பது காட்சி யிலைபல வாமே.[1]

(ப. இ) ஒன்பது தொளைகளையுடைய இப் பிண்டமாகிய உடம்பகத்து வீங்கற்காற்று ஒழிந்த ஏனை ஒன்பது காற்றும் புகும். ஒன்பது நாடிகளையும் ஒடுக்கவல்ல யோகப்பயிற்சியுடையார் வல்லாராவர். அவர்கள் இந் நாடிகள் சேரும் நாற்சந்தியிடத்தை அருளால் காண்பர். அவர்கள் அகத்தே கேட்கப்படுவன பல்வேறு ஓசைகளாகும். ஒன்பது வாசல் செவிமுதலிய ஒன்பது தொளைகள். பிண்டம் - உடல். ஒன்பது

1. அருந்தின்பத். சிவஞானசித்தியார், அளவை எ.

காட்சி - வாயில்கள் ஒன்பதானும் பெறும் உணர்வுகள். இலைபலவாமே - அவ் வுணர்வுகள் அத்துணையன்றி அளவிறந்து தோன்றும்.

(அ. சி.) ஒன்பது...இடம் - நாற்சந்தி. (கக)

639. ஓங்கிய அங்கீக்கீழ் ஒண்சுழு னைச்செல்ல
வாங்கி இரவி மதிவழி ஓடிடத்
தாங்கி உலகங்கள் ஏழுந தரித்திட
ஆங்கது சொன்னேம் அருவழி யோர்க்கே.

(ப. இ.) இம் மந்திரம் திரிபுக்கரணியைக் கூறுகின்றது. ஓங்கி... யோர்க்கே - மூலத்தியின் கீழ்ச்செல்லுமாறு நடுநாடியைச் செலுத்தி வலப்பால் நரம்பின்வழி வரும் உயிர்மூச்சினை இடப்பால் நரம்பின்வழி யோடச்செய்யின், அங்ஙனம் செய்யும் அகத்தவ அறிஞர் உலகேழுஞ் செறிந்த ஒண்மையராவர். (உ0)

640. தலைப்பட்ட வாறண்ணல் தையலை நாடி
வலைப்பட்ட பாசத்து வன்பிணை மான்போல்
துலைப்பட்ட நாடியைத் தூவழி செய்தால்
விலைக்குண்ண வைத்ததோர் வித்தது வாமே.

(ப. இ.) அகத்தவத்தோர் சிறந்த சிவபெருமான் திருவருள் துணையால் கட்டுற்ற பிணைமான்போல் தராசு நுனிபோல் உயிர் மூச்சைச் சமனுற வைப்பின் தமக்கும் பிறர்க்கும் பயன்பட்டோராவர். இதற்கு ஒப்பு விலைக்குக் கொடுக்கவும் உண்ணவும் அமைந்த வித்தாகும். உண்ணல்- தமக்குப் பயன்படுதல்; கொடுத்தல் - பிறர்க்குப் பயன்படல். (உக)

641. ஓடிச்சென் றங்கே ஒருபொருள் கண்டவர்
நாடியு ளுள்ளாக நாதம் எழுப்புவர்
தேடிச்சென் றங்கே தேனை முகந்துண்டு
பாடியுள் நின்ற பகைவரைக் கட்டுமே.

(ப. இ.) திருவருள் துணையால் அகத்தவப்பயிற்சியால் உணர்வினுள் ஓடிச்சென்று ஒப்பில்லா ஒரு பெரும்பொருளைக் காணுதல் வேண்டும். அங்ஙனம் கண்டவர் தம் நாடியினகத்து அகவொலியை எழுப்புவர். அவர் நெற்றிப்புருவ நடுவின்கட் காணப்படும் தேனமிழ்தினைத் தேடிச் சென்று முகந்து உண்பர். பாடியாகிய உடம்பகத்து அறுபகையும். செறு புலன் ஐந்தும் நீங்காது நின்றுகொண்டு பெருந் துன்பத்தினை ஓவாது புரிகின்றன. அவற்றை ஆண்டவன்மாட்டுக் கொள்ளும் 'அகனமர்ந்த அன்பி'னால் வெல்லுதல் வேண்டும். அவ்வன்பினர் அப் பகைவரை வென்றடக்குவர். நாடியின் - நடுநாடியின் வாயிலாக. தேன் - நெற்றிப் புருவமதியமிழ்து. பாடி - பகைவர் தங்குமிடம் (உடம்பு). பகைவர் - அறுபகையும் ஐம்புலனும். கட்டும் - அடக்கும்.

(அ. சி.) ஒரு பொருள் - குண்டலினி. பகைவர் - ஐந்து இந்திரியங்கள். (உஉ)

642. கட்டிட்ட தாமரை ஞாளத்தில் ஒன்பது
மட்டிட்ட கன்னியர் [1]மாதுடன் சேர்ந்தனர்
[2]தட்டிட்டு நின்று தளங்களி னூடுபோய்ப்
பொட்டிட்டு நின்று பூரண மானதே.

(ப. இ.) கட்டமைந்த தாமரை நாளத்தையொத்த நடுநாடி வழியாகச் செல்லும் உயிர்ப்புடன் உனர்வுசெல்லும். சென்றக்கால் ஒன்பதென்னும் அளவையினைக்கொண்ட திருவருளாற்றலுடன் கூடுவர். அவ் வாற்றல்களுடன் மேலேறிப் புருவநடுவின்கட் செல்லுதல் வேண்டும். செல்லவே ஆங்குள்ள நிறைந்த தேனமிழ்து நுகர்ந்து இன்புறலாம். இஃது ஒரு நிறைவுமாகும். ஞாளம் - நாளம்; தண்டு. கன்னியர்-ஒன்பது திருவாற்றல்: சிவை, பண்ணவி, திருவருளறிவாற்றல், தொழிலாற்றல், அன்னை, ஆள்வி, துடைப்போள், காப்போள், படைப்போள். சிவை - சத்தி. பண்ணவி - விந்துசத்தி. அன்னை - மனோன்மனி. தளங்களி னூடு - மூலநிலை முதலிய ஆறு (603) நிலைகளின்வழி. பொட்டு - நெற்றிப் புருவநடு.

(அ. சி.) ஒன்பது கன்னியர் - ஒன்பது சத்திகள். தளம் - ஆதாரம். (உக)

643. பூடண சத்தி எழுமூன் றறையாக
ஏரணி கன்னியர் எழுநூற்றைந் தாக்கினர்
நாரணன் நான்முக ஞதிய ஐவர்க்குங்
காரண மாகிக் கலந்து விரிந்ததே.

(ப. இ.) முழுநிறை ஆற்றல் நிலைக்களத்தை இருபத்தோர் அறையாக்கினர். அவற்றுள் தங்குங்கன்னியர் அவற்றை எழுநூற்றைந் தாக்கினர். இக் கன்னியர் நாரணன் முதலாகச் சொல்லப்பெறும் ஐந்தொழிற் கடவுளருடனும் கலந்து அவர்களே இயக்கி எங்கும் விரிந்து நின்றனர். எழுமூன்று அறையாக - இருபத்தொரு வகுப்பாக. ஐவர்க்கும் - அன்னை அத்தன் (சதாசிவன்) ஆண்டான், அரன், அரி, அயன் ஆகிய ஐங்கடவுளர்க்கும். காரணமாகி - தோற்றத்துணையாகி. கலந்து - ஒன்றுப்பின்னி. விரிந்தது - உடனாய் இயக்கிற்று. (உச)

644. விரிந்து சுவிந்து [3]விளைந்தஇம் மங்கை
கரந்துள் எழுந்து கரந்தங் கிருக்கிற்
பரந்து குவிந்தது பார்முதற் பூதம்
இரைந்தெழு வாயு விடத்தினில் [4]ஒடுங்கே.

(ப. இ.) திருவருளாற்றல் உலகுயிர்கட்குத் தாரகம் எனப்படும் மீநிறைவாய் இருப்பள். இந் நிலை உலகினை இயக்கும் நிலையாகும். இந் நிலையினும் அத் திருவருள் சிவனிடத்து வீழ் நிறைவாய் நிற்பள். அதனால் 'விரிந்தும் குவிந்தும் விளைந்த இம்மங்கை' எனப்படுவள். அவ்

1. சிவஞ்சத்தி. சிவஞானசித்தியார், உ: சு - உ.
,, அருந்தின்பத். ,, அளவை, எ.
(பாடம்.) 2. கட்டிட்டு நின்று களங்கனி யூடுபோய்.
3. விரிந்தானைக். அப்பர், சு: அசு - சு. 4. (பாடம்) ஒங்கே.

வருள் மீண்டும் வெளிப்பட்டால் உலகந்தோன்றும். அவ் வருள் சிவத்தின்கண் ஒடுங்கும். அருள் ஒடுங்கினால் பூதங்களும் ஒடுங்கும். விரிந்து - (திருவருளாற்றல்) உலகு உயிர்கட்கு மீதிறைவாய். குவிந்து - உடையானிடத்து வீழ்நிறைவாய். மீநிறைவு - வியாபகம். வீழ்நிறைவு - வியாப்பியம். (வீழ்தல் - ஒத்தல். சமம்.) கரந்து...ஒடுங்கே - திருவருளாற்றல் சிவத்தில் ஒடுங்கி மீண்டும் எழுந்து வெளிப்பட்டால் பார் முதலிய பூதங்கள் வெளிப்படும். அவ் வாற்றல் சிவத்தில் ஒடுங்கினால் பூதங்கள் ஒடுங்கும். இரைந்தெழு வாயு-ஓசையுடன் மேலெழும் உயிர்ப்பு. ஒடுங்கே - ஒடுங்குமே. உயிர்ப்பு - பிராணவாயு. (உடு)

**645.** இடையோடு பிங்கலை என்னும் இரண்டும்
அடைபடு வாயுவும் ஆதியே நிற்குந்
தடையவை [1]யாறெழுந் தண்சுட ருள்ளே
மிடைவளர் மின்கொடி தன்னில் ஒடுங்கே.

(ப. இ.) இடப்பால் வலப்பால் மூக்குகளிரண்டாலும் உள்ளுறை உயிர்ப்பும், ஆறியே நிற்கும் - அடங்கியே நிற்கும். தடையவை ஆறு - குற்றமாகத் தடுக்கும் தீப்புண் ஆறு: செருக்கு, சினம், சிறுமை, இவறல், மாண்பிறந்த மானம், மாணுவுவகை. எழும்.....வொடுங்கே - புருவ நடுவில் தோன்றும் குளிர்ந்த நிலாமண்டலத்தின் ஒளியுள்ளே அடங்கி வளர்கின்ற மின்னற்கொடியாம் ஆற்றலில் ஒடுங்கும். மிடை - அடக்கம்.

**646.** ஒடுங்கி ஒருங்கி உணர்ந்தங் கிருக்கில்
மடங்கி அடங்கிடும் வாயு வதனுள்
மடங்கி அடங்கிடு மன்னுயி ருள்ளே
நடங்கொண்ட கூத்தனே நாடுகின் றேனே.

(ப. இ.) ஒடுங்கி-அடங்கி. ஒருங்கி-ஒருதன்மைப்பட்டு. உணர்ந்து-அழுந்தியறிந்து. அங்கு-திருவருளாற்றல். இருக்கின்-உறைத்து நின்றால். மடங்கி.....அதனுள் உயிர்ப்பும் அதனுள் அடங்கித் தங்கிடும். மடங்கி .....றேனே. உயிர்ப்படக்கத்தால் புறத்துப்புலன் செல்லாது அகத் தடங்கும். உயிரினுள்ளே திருக்கூத்துக்கொண்டருளும் கூத்தப் பெருமானை நாடுகின்றவனுவேன். (உஎ)

**647.** நாடியின் உள்ளே நாதத் தொனியுடன்
சேடி யுடன்சென்றத் திருவினைக் கைக்கொண்டு
பாடியுள் நின்ற பகைவரைக் கட்டிட்டு
மாடி ஒருகை மணிவிளக் கானதே.

(ப. இ.) நடுநாடியினுள்ளே அருளொலியுடன் ஆராய்ந்து ஒருங்கு சென்று அவ் வருளை மேற்கொண்டு, பாடியு...கானதே - உடம்பினுள் பகையாய்[2] நின்ற மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐவரையும் அருளால் அடக்க அவ் வுடம்பு அளவில் பெருமையினையுடைய சிறந்த தூண்டாவிளக்கு ஆயது. மணிவிளக்கு - தூண்டாவிளக்கு. (உஅ)

(பாடம்) 1. யாறேழுந்.
2. இவ்வரும் பிறவிப். கூ. கருவூர் - கோயில் - உ.

**648.** அணிமர்தி சித்திக ளானவை கூறில்
அணுவில் அணுவின் பெருமையில் நேர்மை
இணுகாத வேகார் பரகாய மேவல்
அணுவத் தனையெங்குந் தானுத லென்றெட்டே.

(ப. இ.) இத் திருப்பாட்டு எண்பேறுகளைத் தொகுத்துக் கூறுகின்றது. அணுவில் அணுவின் நேர்மை - நுண்மை. பெருமையின் நேர்மை-பருமை. நேர்மை-விண்தன்மை. இணுகாத நேர்மை-மென்மை. வேகார் நேர்மை - விரும்பியதெய்தல். பரகாயமேவல் - நிறைவுண்மை. எங்குமாம் நேர்மை - ஆட்சியதனால். தனையொக்கும் தானுதல்-கவர்ச்சி.

(அ. சி.) அணுவில் அணுவின் நேர்மை - அணுவுக்கணுவாக - பெருமையின் நேர்மை-பெரிதில் பெரிதாதல். வேகார்-வேகாத. (உக)

**649.** எட்டா கியசித்தி யோரெட்டி யோகத்தாற்
கிட்டாப் பிராணனே செய்தாற் கிடைத்திடும்
ஒட்டா நடுநாடி மூலத்த னல்பானு
விட்டான் மதியுண்ண வும்வரு மேலதே.

(ப. இ.) எண்வகை யோகத்தால் - எண்பேறு பெற்று உயிர்ப்பை அடக்கிக்கொண்டால், கிடைத்திடு.. ...விட்டால் - கிடைத்தற்கரிய மாண்பினையுடைய நடுநாடி வழியாக மூலத்தியைச் சூரியமண்டலமாகிய நெஞ்சத்தாமரையின்மேற் செலுத்திஞல், மதி...மேலதே - புருவ நடுவாகிய திங்கள் மண்டிலத்தமிழ்துண்ணும் மேன்மையுண்டாம்.

(அ. சி.) கிட்டா - அடக்கமுடியாத. (ஙo)

**650** சித்திக ளெட்டன்றிச் சேரெட்டி யோகத்தாற்
புத்திக ளானவை எல்லாம் புலப்படுஞ்
சித்திகள் எண்சித்தி தானுந் திரிபுரை
சத்தி அருள்தரத் தானுள வாகுமே.

(ப. இ.) அகத்தவமாம் எண்வகை யோகத்தால் சித்தியாம் எண்வகைப் பேறுகள் பெறுவதுமட்டும் அல்லாமல் பலவகை அறிவுகளும் புலப்படும். சித்திகள் எண்சித்தி எண்பேறுகளும் இட வேறுபாட்டால் ஒவ்வொன்றும் எவ்வெட்டாக அறுபத்துநான்காம், "பேய்களுக்கு இவ்வெட்டும் நிலவுலகத்தை வியாபித்துக் கூறியவாறே யுள்ளன. அரக்கருலகத்துள்ளார்க்கு நீருலகத்தையும் வியாபித்து இருமடங்கும், இயக்கருலகத்துள்ளார்க்குத் தீயுலகத்தையும் வியாபித்து மும்மடங்கும், காந்தருவ வுலகத்துள்ளார்க்கு வாயுவுலகத்தையும் வியாபித்து நான்மடங்கும், இந்திரவுலகத்துள்ளார்க்கு ஆகாயவுலகத்தையும் வியாபித்து ஐந்துமடங்கும், சோமலோகத்துள்ளார்க்கு மனத்தினையும் வியாபித்து ஆறுமடங்கும், பிரசாபதியுலகத்துள்ளார்க்கு ஆங்காரத்தையும் வியாபித்து ஏழுமடங்கும், பிரமலோகத்துள்ளார்க்குப் புத்தியையும் வியாபித்து எட்டுமடங்கும் ஏற்றமா யுள்ளனவாகலான், எண்வகைச் செல்வ

மும் இங்ஙனம் ஒரோவொன்று எவ்வெட்டாய் விரியான் அறுபத்து நான்காம் எனக்கொள்க" சிவஞானபோதம், உ-உ. சிவஞான முனிவரஞர் பேருரை. எழுத்திலக்கண முதலாக நீலை (அவத்தை) யிற் செலுத்துதல் ஈறுகக் கூறுபட்ட அறுபத்துநாலு சித்திகளும் எனக் கூறுவாரும் உளர். தாஞந்திரிபுரைசத்தி - தானுகவே யிருக்கின்ற முப்புரச்செல்வி. நெய் வோரும் தைப்போரும் நேர்ந்த பலதரல்போல் ஐயனருள் சித்தர்க் கும் ஆரமரர் - கையுரர், பேயர் முதலோர்க்கும் பெட்பப் படைத்தளிக் கும், ஆயதனுல் வேண்டுவவாம் அங்கு. (உக)

அணிமா

(நுண்மை)

651. எட்டிவை தன்னே டெழிற்பரங் கைகூடப்
பட்டவர் சுத்தர் பரலோகஞ் சேர்தலால்
இட்டம துள்ளே இறுக்கல் பரகாட்சி
எட்டு வரப்பு மிடந்தானின் றெட்டுமே.

(ப. இ.) எழில்பரம் - அன்பறிவாற்றல்கள் மூன்றும் இயல்பாகவே விளங்கும் முழுமுதற்சிவம். (அன்பறிவாற்றல் - இச்சாஞானக்கிரியை) கைகூட - இடையரு நிஜப்பால் மிக்குவிளங்க. பட்டவர் சித்தர் - கைகூடிய அத்தகையவரே மேலான சித்தராவர். பரலோகம்-சிவவுலகம். இட்டம்...பரகாட்சி - விரும்பப்படும் பொருளாகிய சிவத்தினுள் ஒடுங் குதல் சிவக்காட்சி. இறுக்கல் - ஒடுங்குதல். எட்டுவரப்பும் - எண்பேறு களும், இடந்தானின் றெட்டும் : நின்ற இடந்தான் எட்டும் - இருக்கும் இடத்தே எளிதாக வந்து எய்தும். (உஉ)

652. மந்தர மேறு மதிபானு வைமாற்றிக்
கந்தாய்க் குழியிற் கசடற வல்லார்க்குத்
தந்தின்றி நற்காய மியலோகஞ் சார்வாகும்
அந்த வுலகம் அணிமாதி யாமே.

(ப. இ.) மந்தரம் - புருவநடு; மேரு. ஏறும் மதி பானுவை மாற்ற - மேலே ஏறுகின்ற திங்கள் ஞாயிறுகிய இடப்பால் வீலப்பால் உயிர்ப்பை மேலது கீழது, கீழது மேலதாய் மாற்றிவைக்க. குழியில் - அமிழ்த ஊற்றினுல். கந்தாய் - அடித்த முஹாபோல் அசைவற்றிருக்க. தந்து ; தந்தது என்பதன் திரிபு. இன்றி - தந்தபடியேயல்லாமல். நற்காயம் - யோகப்பயிற்சியால் சிறந்து விளங்கும் உடல். இவை நுண்மையாகிய அணிமா என்னும் சித்தியால் கிடைக்கும்.

(அ. சி.) கந்து - அடித்த முஹா. குழி...ர்க்கு - அமுத ஊற்றினுலே குற்றம் அற்று இருக்க வல்லார்க்கு. (உந)

653. முடிந்திட்டு வைத்து முயங்கிலோ ராண்டில்
அணிந்த அணிமாகை தானும் இவனுங்
தணிந்தவப் பஞ்சினுந் தானெய்ய தாகி
மேலிந்தங் கிருந்திடும் வெல்லவொண் ணுதே.

(ப. இ.) (பானுவில் விடுதல் : அமுதத்தை இணைவிழைவுச் சூட்டால் வெளிப்படுத்தல்.) முயங்கில் - அகத்தவமாம் யோகத்தில் பொருந்தியிருந்தால். அணிந்த - புகழ்ந்து கூறப்பட்ட. அணிமா - நுண்மை. கைதானும்-தானுக எளிதாகக் கைகூடும். தணிந்த - மெலிந்த. நொய்யதாகி - மெலிவாகி. மெலிந்தங்கிருந்திடும் - இலேசாயங்கிருப்பன். இந்நிலை ஓராண்டில் கைகூடும்.

(அ. சி.) முடிந்திட்டு வைத்து - அமுதத்தைப் பானுவில் விடாமல் அடக்கிவைத்து. (கச)

## இலகிமா

### (மென்மை)

654. ஆகின்ற வத்தனி நாயகி தன்னுடன்
போகின்ற தத்துவம் எங்கும் புகலதாய்ச்
சாகின்ற காலங்கள் தன்வழி நின்றிடின்
மாய்கின்ற தையாண்டின் மாலகு வாகுமே.

(ப. இ.) திருவருள் துணையுடன் முதல்நிலையாகிய மூலாதாரத்தினின்றும் மேலேறும் எல்லா நிலைகளிலும், அத் திருவருளாற்றலே துணையாக. சாய்கின்ற.....வாகுமே - ஐந்தாண்டுப்பயிற்சியில் மிக்க மென்மையாகிய இலகிமா கைகூடும்.

(அ. சி.) போகின்ற தத்துவம்-மூலாதாரத்தினின்றும் தான் போகும் தத்துவங்கள். புகலதாய் - அச் சத்தியே ஆதாரமாக. (கடு)

655. மாலகு வாகிய மாயனைக் [1]கண்டபின்
தானெளி யாகித் தழைத்தங் கிருந்திடும்
பாலொளி யாகிப் பரந்தெங்கு நின்றது
மேலொளி யாகிய மெய்ப்பொருள் காணுமே.

(ப. இ.) மாலகுவாகிய - பெருமையுள்ள மென்மை வடிவினனை. மாயனை - முழுமுதற்சிவனை. தானெளியாகி - இயற்கைப் பேரொளியாய். மேலொளி - பரவெளியிலமர்ந்த. மெய்ப்பொருள் - முழுமுதற்சிவம். அச்சிவம் ஆண்டுக் காணப்படும். (கசு)

## மகிமா

### (பருமை)

656. மெய்ப்பொருள் சொல்லிய மெல்லிய லாளுடன்
தற்பொரு ளாகிய தத்துவங் கூடிடக்
கைப்பொரு ளாகக் கலந்திடு மோராண்டின்
மைப்பொரு ளாகு மகிமாவ தாகுமே.

---

1. மாயனுய் மாலனுகி. ச. சகூ - சு.

(ப. இ.) மெய்ப்பொருளாகிய முப்பொருளே முறையுறச் சொல்லியருளிய திருவருளுடன் சிவபெருமான் கூடிட ஓராண்டினுள் மகிமா நிலையினர்க்கு அழிவில் திருவடியுணர்வை அறிவுறுத்தருளிய அந்நிலை கைகூடும். தற்பொருள்-தன்பொருள்: முழுமுதற்சிவமாகிய மெய்ப் பொருள். மைப்பொருளாகும் மகிமா-மறைந்த பொருளான மகிமா. (கஎ)

657. ஆகின்ற காலொளி யாவது கண்டபின்
போகின்ற காலங்கள் போவது மில்லையாம்
மேனின்ற காலம் வெளியுற நின்றன
தானின்ற காலங்கள் தன்வழி யாகுமே.

(ப. இ.) ஆகின்ற கால்-வாழ்நாட்குத் துணையாகின்ற உயிர்ப்பாகிய பிராணவாயு. ஒளியாவது-உள்ளடங்கியதால் அஃது ஒளிவண்ணமாகும். கண்டபின்-அகத்தும் புறத்தும் ஒப்பக்கண்டபின் போகின்ற... இல்லையாம்-கழிந்து போதற்குரிய வாழ்நாட்காலமாகிய (அகவை) ஆயுட்காலம் நீங்குவதில்லை. மேல்நின்ற காலங்கள்-மேன்மையுள்ளதாய் விளங்கும் காலமெய். (மெய்-தத்துவம்.) வெளியுற நின்றபின்-தான் செய்யும் துணைத்தொழிலைவிட்டு அமைந்தபின். தானின்ற காலங்கள்-கழிதற்கென வரையறுக்கப்பட்ட வாழ்நாட்கள். தன் வழியாகும்-அந்நாட்கள் அகத்தவமுடையார் நினைந்தவண்ணமாம். (கஅ)

658. தன்வழி யாகத் தழைத்திடு ஞானமும்
தன்வழி யாகத் தழைத்திடும் வையகம்
தன்வழி யாகத் தழைத்த பொருளெலாம்
தன்வழி தன்னரு ளாகிநின் றனே.

(ப. இ.) தன்வழியாக-ஆவியின் வயமாக. ஞானமும் தழைத்திடும்-திருவடியுணர்வு திகழ்ந்துவிளங்கும். வையகம்...றனே-திருவருள் வழியின் ஆவி நிற்கும். அத்தகைய ஆவியின்வழி உலகம் செல்லும். உலகத்துப் பொருள்கள் அனைத்தும் அவன்வழியே செல்லும்.

(அ. சி.) தன் வழியாக . தன் வசமாக. (கக)

## பிராத்தி

## (விரும்பியதெய்தல்)

659. நின்றன தத்துவ நாயகி தன்னுடன்
கண்டன பூதப் படையவை யெல்லாங்
கொண்டவை யோராண்டு கூட இருந்திடில்
விண்டது வேநல்ல பிராத்திய தாமே.

(ப. இ.) மாயகாரியமெய்களே இயக்கும் மறைப்பாற்றலுடன் நின்றனவாய், கண்டன...தாமே-காணப்படும் பூதக்கூட்டங்களெல்லாம் பொறைநிலையுடன் கூடவிருந்தால் ஓராண்டுப்பயிற்சியுள் எண்ணியன திண்ணமாகக் கைகூடும். பொறைநிலை-தாரணை. பூததாரணை-பூதங்

1. பண்புடையார்ப். திருக்குறள், கஙசு.

களின் ஆற்றலே யோகப்பயிற்சியால் வெல்லுதல். படை - கூட்டம். விண்டதுவே - வெளிப்பட்டதேயாம்.

(அ. சி.) கூட இருந்திடில் - பூத தாரணையோடுகூட இருந்தால். (சo)

## கரிமா

## (விண்தன்மை)

**660.** ஆகின்ற மின்னொளி யாவது கண்டபின்
பாகின்ற பூவிற் பரப்பவை காணலா
[1]மேகின்ற காலம் வெளியுற நின்றது
போகின்ற காலங்கள் போவது மில்லையே.

(ப. இ.) ஆகின்ற மின்னொளி - அகத்தவமாகிய யோகப்பயிற்சியிற் காணப்படும் மின்னல்போலும் ஒளி. பாகின்ற...காணலாம் - இருந்த இடத்திலிருந்தே உலகப்பரப்பு முழுவதும் ஒருங்கு காணலாம். புருவ நடுவுக்குமேற் காணப்படும் ஆயிரம் இதழ்த் தாமரைப்பரப்பு முழுவதும் ஒருங்கு காணலாம் என்பதும் ஒன்று. மேகின்ற...நின்றது - நாழிகை நாள் முதலவாகக் காரியப்படுத்தப் பொருந்துகின்ற காலமெய் வெளிப் பட்டுத் தனித்துநின்றது. மேகின்ற: மேவுகின்ற என்பதன் திரிபு. போகின்ற...மில்லையே - கழியவேண்டிய வாழ்நாட்கள் கழிவனவுமில்லை.

(அ. சி.) பூவின் பரப்பு - சகசிர அறைகள். (சக)

**661.** போவதோன் றில்லை வருவது தானில்லை
சாவதோன் றில்லை தழைப்பது தானில்லை
தாமத மில்லை தமரகத் தின்னொளி
யாவது மில்லை யறிந்துகோள் வார்க்கே.

(ப. இ.) உயிர்ப்புப் புறம் போவதும் அகம் புகுவதும் என்னும் நிலையில்லை. சாவ...தானில்லை - இறப்பும் பிறப்பும் இல்லை. தாமத... வார்க்கே - முக்குணத்துள் ஒன்றுகிய அழுந்தல் என்னும் கடைக்குண மில்லை. எனவே முக்குணத் துன்பமும் இல்லை. நடுநாடியிலுள்ள உட் டொளி உயிர்ப்பு நிறைந்திருப்பதால் ஒளியாவதும் இல்லை. இவை யனைத்தும் உண்மையறியும் பண்பினர்க்குப் புலனும். தாமதம்-அழுந்தல், இனக்கோளால் ஏனை அமைதி (சாத்விகம்) ஆட்சி (இராசதம்) இவற்றின் துன்பங்கள் இல. தமர் - தொளி. (சஉ)

**662.** அறிந்த பராசத்தி யுள்ளே அமரில்
பறிந்தது பூதப் படையவை யெல்லாங்
குறிந்தவை யோராண்டு கூட இருக்கில்
விரிந்தது பரகாய மேவலு மாமே.

(ப. இ.) பராசத்தி - வனப்பாற்றலாகிய திருவருள். பறிந்தது... யெல்லாம் - பூதக்கூட்டங்களின் தொடக்கனைத்தும் அகன்றது. இவ்

(பாடம்) 1. மேனின்ற.

வோராண்டுப் பயிற்சியால் எங்கும் செறிதலும் எவ் வுடற்கண் புகுத லும் எய்தும். உடற்கண் புகுதல் - கூடுவிட்டுக் கூடுபாய்தல்.

(அ. சி.) அறிந்த பராசத்தி-யோகத்தாற் கண்ட சிற்சத்தி. குறிந் தவை - குறித்தவை. (சசு)

## பிராகாமியம்

### (நிறைவுண்மை)

**663.** ஆன விளக்கொளி யாவ தறிகிலர்
மூல விளக்கொளி மூன்னே யுடையவர்
கான விளக்கொளி கண்டுகொள் வார்க்கு
மேலை விளக்கொளி வீடொளி தானின்றே.[1]

(ப. இ.) ஆனவிளக்கொளி - எப்பொருளையும் விளக்கும் முழுமுதற் சிவத்தின் இயற்கையொளி. கானவிளக்கொளி - புருவநடுவிலுள்ள உயிர்க்கு உயிராய் உதவும் சிவவொளி. மேலை விளக்கொளி-வானோர்க்கு உயிர்ந்த உலகத்துறையும் சிவவொளி. இவ்வொளிகளைக் காணும் பயிற்சி யுடையார்க்குத் திருவடிப்பேறு எளிதாநின்று இன்பந்தரும். இவரே மூல விளக்கொளி முன்னேயுடையவர்.

(அ. சி.) மூல விளக்கொளி - சீவனுடைய இயற்கை ஒளி. கான விளக்கொளி - ஆஞ்ஞையிலுள்ள ஒளி. (சச)

## ஈசத்துவம்

### (ஆட்சியுறுதல்)

**664.** நின்ற சதாசிவ நாயகி தன்னுடன்
கண்ட னை பூதப் படையவை எல்லாங்
கொண்டவை யோராண்டு கூடி யிருந்திடிற்
பண்டை பவ் வீசன் தத்துவ மாகுமே.

(ப. இ.) நுண்பை ஐம்பூதங்களையும் இயைந்தியக்கும் தெய்வங்கள் முறையே அயன், அரி, அரன், ஆண்டான், அன்னேஅத்தன் என்ப. இவர்கள் முறையே நாற்றமுதல் ஐந்திற்குமாம். அன்னேஅத்தன் - சதா சிவம். இவ் வுண்மை உணர்ந்து அவ்வப் பூதங்களின் தன்மையை அவ்வவ் விடங்களில் அமைத்துக்கொண்டிருந்தால், பண்டைய...மாகுமே - தொன்மை ஆண்டான் முறையில் ஆட்சியுறும். (சஙி)

**665.** ஆகின்ற சந்திரன் தன்னொளி யாயவன்
ஆகின்ற சந்திரன் தட்பமு மாயிடும்
ஆகின்ற சந்திரன் தன்கலை கூடிடில்
ஆகின்ற சந்திரன் தானவ னுமே.

(ப. இ.) இங்கள் மண்டிலச் சிறப்புணர்ந்தவன் நிலவொளியாய், நிலவின் குளர்ச்சியாய், நிலவின் கலைவளர்ச்சியாய், நிலவாய் விளங்குவன்.

1. இல்லக. அப்பர், ச : கக - அ.

**666.** தானே படைத்திட வல்லவ னுயிடும்
தானே யளித்திட வல்லவ னுயிடும்
தானே சங்காரத் தலைவனு மாயிடும்
தானே யிவனெனுந் தன்மைய னுமே.

(ப. இ.) படைத்தல் காத்தல் துடைத்தல்களாகிய உடம்பின்கண் செய்யப்படும் முத்தொழில்களையும் எளிதாக இயற்றும் வலிமையுடைய வன் ஆவன். முழுமுதற் சிவனே இவன் என மொழியவும்படுவன். (சஎ)

**667.** தண்மைய தாகத் தழைத்த கலையினுள்
பன்மைய தாகப் பரந்தஐம் பூதத்தை
வண்மைய தாக மறித்திடில் ஓராண்டின்
மென்மைய தாகிய மெய்ப்பொருள் காணுமே.

(ப. இ.) குளிர்ச்சியாக விளங்கும் திங்கள் கலையினுள், மாறுபட்ட பல தன்மைகள் பொருந்திய பரந்து திரியும் ஐம்பூதங்களைத் திருவருள் துணையால் வளப்பம்பொருந்திய நன்னெறிக்கு வாயிலாக மாற்றிக் கொள்ளுதல் வேண்டும். அங்ஙனம் கொண்டால் ஓராண்டுப்பயிற்சியில் எப்பொருட்கும் சார்பாம் இயற்கை மென்மைத்தன்மை வாய்க்கும்: வாய்ந்த பெரும் பேற்றால், மெய்ப்பொருளாம் முழுமுதற் சிவத்தைக் கண்டு வழிபடுதல் கூடும். (சஅ)

## வசித்துவம்

### (கவர்ச்சி)

**668.** மெய்ப்பொரு ளாக விளைந்தது வேதெனின்
நற்பொரு ளாகிய நல்ல வசித்துவங்
கைப்பொரு ளாகக் கலந்த உயிர்க்கெலாந்
தற்பொரு ளாகிய தன்மைய னுகுமே.

(ப. இ.) திருவருள் துணையால் உண்மைப்பொருளாக விளைந்தது எதுவென்றால், அருட்பொலிவாம் கவர்ச்சி என்று சொல்லக்கூடிய வசித்துவமாம். அதுவே தூய நற்பொருள். கைப்பொரு...னுகுமே - எல்லாவுயிர்க்கும் இயைந்தியக்கும் பொருளாகக் கலந்த முழுமுதற் சிவமாம் தன்மையனுகிய பெரும்பொருளே தற்பொருள். தற்பொருள் - தானே முழுமுதல்; சிவபெருமான்.

(அ. சி.) கைப்...எல்லாம் - காணப்படும் உயிர் வருக்கங்களுக்கு எல்லாம். (சக)

**669.** தன்மைய தாகத் தழைத்த பகலவன்
மென்மைய தாகிய மெய்ப்பொருள் கண்டிடின்
பொன்மைய தாகப் புலன்களும் போயிட
நன்மைய தாகிய நற்கொடி காணுமே.

(ப. இ.) திருவருள்துணை மேலிட்ட பருவத்தில் மெய்ப்பொருளாகிய சிவபெருமானை அவன் அருட்கண்ணுல் கண்டவிடத்து. பொன்மை... போயிட - உடம்பு முழுவதும் பொன்வண்ணமாகத் திருவடிப்பேருகிய நன்மை மேலிட, நற்கொடிபோலும் அருள் வீழ்ச்சியுண்டாகும். நன்மை-திருவடிப்பேறு. நற்கொடி - திருவருள்.

(அ. சி.) தழைத்த பகல் - சிறப்புற்ற அந்நாள். (இ0)

**670.** நற்கோடி யாகிய நாயகி தன்னுடன்
அக்கோடி யாகம் அழிந்திடில் ஓராண்டு
போற்கோடி யாகிய புவனங்கள் போய்வருங்
கற்கோடி யாகிய காமுக னுமே.

(ப. இ.) திருவருளாற்றலை ஓராண்டுப் பயிற்சியில் தம்முள்ளத்தே இடையருது நினைப்பாம் தியானத்தால் பெற்றவர் பொற்கொடி...னுமே. அத் திருவருளால் இயக்கப்பெறும் இருநூற்று இருபத்து நான்கெனும் உலகங்களெல்லாம் எளிதாகப் போய்வருவர். அப்படிப் போய்வந்தாலும் அம் மாயைக்கண் தொடக்குருர். கற்கொடி - கல்லின்கொடிபோன்ற உரனுடைய உள்ளம். காமுகன் அவ் வுரனுடை யுள்ளத்தை அருளால் விரும்புபவன். (இக)

**671.** காமரு தத்துவ மானது வந்தபின்
பூமரு கந்தம் புவனம தாயிடும்
மாமரு [1]வுன்னிடை மெய்த்திடு மானனுய்[2]
நாமரு வும்ஒளி நாயக மானதே.

(ப. இ.) அழகிய உண்மைப் பொருளானது கைகூடியபின், மாமரு... மெய்த்திடும்-நினைத்த இடம் செல்லத்தக்க பேரருள் ஆற்றல் தானேவந்து பொருந்தும். மானனுய்...மானதே - திருவருளால் சிவமாம் பெருவாழ்வு பெற்றேய்! நாம் அடைதற்குரிய உணர்வொளிப் பெரும்பிழம்பு அச் சிவ பெருமானேயாம். மான் - பெரியோன். மா - பெருமை. (இஉ)

**672.** நாயக மாகிய நல்லொளி கண்டபின்
தாயக மாகத் தழைத்தங் கிருந்திடும் .
போயக மான புவனங்கள் கண்டபின்
பேயக மாகிய பேரொளி காணுமே.[3]

(ப. இ.) நமக்கு என்றும் மாருத்தலிலவனும் சிவபெருமான் திருவருள் உணர்ந்தபின், தாயக...திடும் - இவ்வுயிர்கள் அவ் வருள்வெளியாம் திருச்சிற்றம்பலமே நிலைத்த உறைவிடமாகக்கொண்டு வாழும். போயக...கண்டபின் - சென்று விரிந்துகிடக்கும் உலகங்களைக் கண்டபின், பேயக...காணுமே - தன்வழிச்செலுத்தும் பேய்போன்ற திருவருளாற்ற

(பாடம்) 1. வுன்னிட மெய்திடு.
2. தன்னை. சிவஞானபோதம், கஉ. ச - ஙு.
3. ஞாலமதின். சிவஞானசித்தியார், அ : உ - உஉ.

லின் பேரொளி விளங்கும். பேயகம் - புகழ்ந்து பேசப்படும் இடம் என்று கூறுவாருமுளர், அப்பொருளுக்குப் பேசகம் என்பது சகரத்துக்கு யகரம் போலியாக வந்ததாகும்.

(அ. சி.) தாயகம் - சொந்த இடம். போயகமான - அகலமான. பேயகம் - பேசகம்; புகழ்ந்து பேசும் இடம். (ஙஉ)

673. பேரோளி யாகிய பெரியஅவ் [1]வேட்டையும்
பாரோளி யாகப் பதைப்பறக் கண்டவன்
தாரோளி யாகத் தரணி முழுதுமாம்
ஓரோளி யாகிய காலோளி காணுமே.

(ப. இ.) மிக்க ஒளியாகிய நெஞ்சத்தாமரையை அகவொடுக்கத்தால் பார்க்கும் சுடரொளியாகக் கண்டவன். தாரொளி...காணுமே - உலக முழுவதும் நேரொளியாகவும், ஒருங்குகாணும் ஒளியாகவும் உயிர்ப் பொளியால் காணுவன்.

(அ. சி.) பெரிய அவ் ஏடு - பெரிய இதழுள்ள தாமரை. தார் ஒளி - நேர்மையான ஒளி. கால் ஒளி - பிராணவாயுவின் ஒளி. (ஙசு)

674. காலோ டுயிருங் கலக்கும் வகைசொல்லிற்
காலது அக்கோடி நாயகி தன்னுடன்
காலது ஐஞ்ஞூற் றிருபத்து மூன்றையுங்
காலது வேண்டிக் கொண்டஇவ் வாறே.

(ப. இ.) உயிர்ப்பினுடன் ஆவி இயைந்து இயக்கும் வகையினைச் சொல்லின், காலது...தன்னுடன் - எங்கும் நிறைந்த திருவருளாற்றல் நிறைவினுள், காலது...மூன்றையும் - எழுபத்தீராயிரம் நாடிகளில் பெருத்த நாடிகளாகிய ஐஞ்ஞூற்றுப் பதின்மூன்றையும். காலது...வாறே- விரவி இயங்கும் உயிர்ப்பினைத் திருவருள் தன் ஆற்றலில் அடக்கித் தன் வழிச் செலுத்தும்.

(அ. சி.) காலது 513 - பிராணவாயு வியாபிக்கும் நாடிகளின் தொகை. பெண் - சத்தி. (ஙஙி)

675. ஆறது வாகும் அமிர்தத் தலையினுள்
ஆறது ஆயிர முந்நூற்றெ டைந்துள
ஆறது வாயிர மாகு மருவழி
ஆறது வாக வளர்ப்ப திரண்டே.

(ப. இ.) (அலை அதுவாகும் அமிர்தத்து ஆறினுள்) அலைவீசுகின்ற அமிழ்த ஆற்றிலே (அது முதற்பொருள் ஈறு). ஆறது...டைந்துள—; ஆறது...மருவழி - (ஆயிரம் - அளவின்மை) எழுபத்தீராயிரம் நாடிகளாகும் நுண்ணிய செம்மையான வழிகளே. ஆறது...திரண்டே - நன்னெறிக்குய்க்கும் செவ்விய வழியாக நிலைப்பிப்பது இறைவனும் இறைவியுமாகிய அத்தனும் அன்னையும் செய்யும் ஆரருள் என்க.

---

(பாடம்) 1. வெட்டையும்.

(அ. சி.) ஆறதுவாகும் அமிழ்தத் தலையினுள் - அமுத ஆறு பெருகும் தலையினுள். ஆறது... அருவழி - அமுதம் பெருகும் வழிகள் 1305. வளர்ப்பதிரண்டே - விருத்தியாக்குவது சத்தியும் சிவமும். (இக)

676. இரண்டினின் மேலே சதாசிவ நாயகி
இரண்டது கால்கொண் டெழுவகை சொல்லில்
இரண்டது ஆயிரம் ஐம்பதோ டொன்றுய்த்
திரண்டது காலம் எடுத்ததும் அஞ்சே.

(ப. இ.) நெருப்பு மண்டிலம் பகலோன் மண்டிலம் என்னும் இரண்டிற்கும் மேலதாய் விளங்கும் சதாசிவநாயகி என்னும் வேந்துத் தலைவி இரண்...சொல்லில் - இடதுமூச்சு வலதுமூச்சு என்னும் உயிர்ப்பு நிறைந்து நிற்கும் நாடிகளே ஆய்ந்து சொல்லுங்கால். இரண்...டொன்றுய் - இரண்டான்வரும் உயிர்ப்பு முதன்மையான ஆயிரத்து ஐம்பத்தொன்றும் நாடிகளில், திரண்டது - நிறைந்து செறிந்தது. கால்...அஞ்சே - கால அளவையைக் கொள்ளத்தக்கது ஐம்பூதத் தொடர்பால் ஐவகைப்பட்ட (677) உயிர்ப்பென்னும் பிராணவாயுவேயாம். (இஎ)

677. அஞ்சுடன் அஞ்சு முகமுள நாயகி
அஞ்சுடன் அஞ்சது வாயுத மாவது
அஞ்சது வன்றி இரண்டது வாயிரம்
அஞ்சது காலம் எடுத்துளும் ஒன்றே.

(ப. இ.) புலம்பத்தாகலின் திருவருளாற்றலுக்கும் முகம் பத்தாயிற்று; அத்தகைய பத்துத் திருமுகங்களையுடைய அம்மை முதல்வியாவள். புலம் - திசை. அஞ்சுதலுடன் கூடிய திருமுகம் ஐந்தென்றலும் ஆம். அஞ்சுடன் அஞ்சது - பத்துக் காற்றுக்கள். ஆயுதமாவது அப்பத்துக் காற்றுக்களும் படைக்கருவிகளாகும். அஞ்சது வன்றி - தும்மல் வழி, கொட்டாவி, இமை, வீங்கற்காற்றுக்கள் ஐந்தும் நீங்கிய உயிர்வளி, மலக்காற்று, தொழிற்காற்று, ஒலிக்காற்று, நிரவுகாற்று ஆகிய உயிர்ப்பு ஐந்தனுள், இரண்டது - இடப்பால் வலப்பால் உயிர்ப்பு இரண்டு; ஆயிர...மொன்றே - ஐயாயிர ஆண்டுகள் பயின்று நடுநாடியின்கண் அடங்கியுள்ள உயிர்ப்பு ஒன்றேயாம். (இஅ)

678. ஒன்றது வாகிய தத்துவ நாயகி
ஒன்றது கால்கொண் டோ்வகை சொல்லிடில்
ஒன்றது வெண்ழ்கொள் ஆயிரம் ஆயிரம்
ஒன்றது காலம் எடுத்துளு முன்னே.[1]

(ப. இ.) திருவருளாற்றல் நடுநாடி உயிர்ப்பினைக்கொண்டு செலுத்தும் வகையினைச் சொன்னுல், ஊர்வகை - உடனுய்நின்று நடத்தும் முறை, ஒன்றது...முன்னே - அளவிடப்படாத காலங்களுக்குமுன் நடத்தும் என்பதைக் கருதுவாயாக. ஊர்வகை: ஆருயிர்களுடன் பேருயிர் உடனுய் நின்று செலுத்தும் புணர்ப்புப் பண்பு மூன்றனுள் ஒன்றாகும். இதுவே 'இவர்தந்தூர்தல்.' (இக)

1. இவர்தந்தார். திருக்குறள், ககஅ

679. முன்னெழும் அக்கலை நாயகி தன்னுடன்
முன்னுறு வாயு முடிவகை சொல்லிடின்
மூன்னுறும் ஐம்பத் தோன்றுடன் அஞ்சுமாய்
முன்னுறு வாயு முடிவகை யாமே.

(ப. இ.) திருவருள் ஆற்றலுடன் மேலோங்கும் உயிர்ப்பு ஐம்பத் தாறு என்னும் கால அளவையைக்கொண்டு முடியும் என்க. (கo)

680. ஆய்வரும் அத்தனி நாயகி தன்னுடன்
ஆய்வரு வாயு அளப்பது சொல்லிடில்
ஆய்வரும் ஐஞ்ஞூற்று முப்பதோ டொன்பதும்
ஆய்வரு வாயு வளப்புள் ளிருந்ததே.

(ப. இ.) உயிர்ப்பின் அளவினைக் கூறுங்கால் அஃது ஐஞ்ஞூற்று முப்பத்தொன்பதாகும். இவை ஒப்பில்லாத திருவருள் முதல்வி தன்னுடன் வரும். (கக)

681. இருநிதி யாகிய எந்தை யிடத்து
இருநிதி வாயு இயங்கு நெறியில்
இருநூற்று முப்பத்து மூன்றுடன் அஞ்சாய்
இருநிதி வாயு இயங்கும் எழுத்தே.

(ப. இ.) சங்கம் என்னும் எண்ணும் தாமரை என்னும் எண்ணும் கொண்டுள்ள செல்வங்களினும் மிக்குள்ளதாகிய உயிர்ப்பு, 'செல்வன் கழலேத்தும் செல்வமே' மிக்க சிவபெருமான் ஆணையின்வழிச் செல்வது. அவ் வுயிர்ப்பு இயங்கும் சிறந்த நாடுகள் இருநூற்று முப்பத்துமூன்று. அவ் வுயிர்ப்பினை இயக்கும் எழுத்து ஐந்து. எழுத்து ஐந்தும் முறையே நாதம் விந்து, அகர உகர மகரங்கள் நாதத்தை முதல் ஒலி எனவும், விந்துவை ஒலிமுதல் எனவும் கூறுவர் இவற்றை ஒலிவடிவம் வரி வடிவம் எனக் கூறுதலுமாம். (கூ)

682. எழுகின்ற சோதியுள் நாயகி தன்பால்
எழுகின்ற வாயு இடமது சொல்லில்
எழுநூற் றிருபத்தோன் பானது நாலாய்
எழுந்துடன் அங்கி இருந்ததிவ் வாறே.

(ப. இ.) திருவருளாற்றலால் தோன்றுகின்ற உயிர்ப்பின்நாடிகள் எழுநூற்றிருபத்தொன்பது. அது பலவாரூய் விரிந்து மேற்பட்டு ஒளி மண்டிலங்களுடன் ஒன்றியிருந்தது. நாலாய் - பலவாரூய். (கூ)

683. ஆறது கால்கொண் டிரதம் விளைத்திடும்
ஏழது கால்கொண் டிரட்டி இறக்கிட
எட்டது கால்கொண் டிடவகை யோத்தபின்
ஒன்பது மாநிலம் ஒத்தது வாயுவே.

---

1. சங்குநிதி. அப்பர், கூ. கூஇ - கo.

(ப. இ.) மூலமுதற் சொல்லப்படும் ஆறு நிலைகளில் முறைப்படி உயிர்ப்பினை அமைத்தால் உணர்வின்பமாகிய அகச்சுவை தோன்றும். ஏழது...இறக்கிட - உயிர்ப்பினை ஓர் அளவுக்குட்படுத்தி உள்ளிழுத்து இழுத்ததற்கு இரண்டு மடங்கு உள்ளடக்கினால்; எட்டது...யேற்றபின் - அமிழ்த மண்டிலத்தைப் பொருந்தும்படியாக மேற்செலுத்தின், ஒன்பது...வாயுவே - ஒன்பான் ஆற்றல்களாகிய நவசத்திகளும் நின்றியக்கும் நிலைக்களத்தைப் பொருந்தும் உயிர்ப்பு என்க. மேலும் 675 முதல் இது முடிய வுள்ளனவும் இவைபோல்வனவும் ஆசான் வாயிலாக ஆசறத்தெரிதல் அனைவர்க்கும் அமையும் நன்றென்ப. (சுசை)

684. சந்திரன் சூரியன் தற்பரன் தாணுவிற்
சந்திரன் தானுந் தகைப்படுந் தன்மையைச்
சந்தியி லேகண்டு தானுஞ் சகமுகத்
துந்திச் சமாதி யுடையோளி யோகியே.

(ப. இ.) தானும் சகமுகத்து - ஒற்றுமைநயத்தான் தானுகவே கருதும் உடலின்கண்ணும், அதற்கு வேண்டும் ஊண் உறையுள் முதலியவற்றிற்கு நிலைக்களனும் உலகின் கண்ணும். உந்தி - (உள்ள பற்றை) நீக்கி மேல்நோக்கி. சமாதி...யோகியே-இறைநிறைவில் அடங்கி அதனால் விளங்கும் திருவருள் ஒளியுடையார் யோகியராவர்.

(அ. சி.) சந்திரன் சூரியன் - சந்திர கலை; சூரியகலை. தாணுவின் சந்திரன் - பரம ஆகாயத்திலுள்ள பரமசிவத்துக்குரிய சந்திரன். சந்தியிலே கண்டு - சந்திக்கும் போது தரிசித்து. (சுஞ)

685. அணங்கற்ற மாதல் அருஞ்சன நீவல்
வணங்குற்ற கல்விமா ஞான மிகுத்தல்
சிணுங்குற்ற வாயர் சித்திதாங் கேட்டல்
நுணங்கற் றிருத்தல் [1]கால் வேகத்து நுந்தலே.

(ப. இ.) இறைவன் நற்றாள் தொழுதற்காம் கல்வியும் அதனால் எய்தும் திருவடியுணர்வாம் பெரிய ஞானம் மிகுதிப்படுதலும். சிணுங்குற்...கேட்டல் - அருமறை பேசும் வாயினர் தம்சித்தியினைக் கேட்டலும், நுணங்...நுந்தலே - அசைவற்றிருத்தலும் உயிர்ப்பினை விரைந்து மேலேற்றுதலினாலாம் பயன்.

(அ. சி.) அணங்கற்றமாதல் - ஆசை ஒழிதல். சிணுங்குற்ற வாயர்-சித்தர். (சுசு)

686. மரணஞ் சரைவிடல்[2] வண்பர காயம்
இரணஞ்சேர் பூமி இறந்தோர்க் களித்தல்
அரணன் திருவுற வாதன்மூ வேழாங்
கரனுறு கேள்வி கணக்கறிந் தோனே.

(ப. இ.) இறப்பினையும் முதுமையினையும் ஒழித்தல், தன்னுடம்பைத் தானே நீத்து ஆவிநீத்த வேரோர் உடம்பினுள் புகுதல், இரணம்...

(பாடம்) 1. திரோதல். 2. சிறைவிடல்.

களித்தல் - பொன்வண்ணமான விண்ணுலகத்தை ஆவி நீத்தோர்க்கு அருளுடனளித்தல் ஏற்படும். அரணன் திருவுருவாதல் - புகலிடமாம் சிவபெருமானின் திருவுருப்பெறுதல். மூவேழாங்...தோனே - வெண்மை செம்மை கருமை என்னும் மூப் பண்புகளும் ஞாயிற்றின் ஏழுநிறத்துடன் உறழ இருபத்தொரு நிறமாகும்; அவ்வகையான இருபத்தொரு நிறங் களினும் விரவி மறைந்து நின்றியக்கும் சிவபெருமானே அடைதற்காம் மெய்யுணர்வுக் கேள்வியுடையவர் செந்நெறி வழக்குணர்ந்தவராவர். கரன் - உயிர்தொறும் மறைந்து நிற்கும் கள்வன்; கரப்போன்.

(அ.-சி.) சிறை - சரீரம். இரணம் சேர் பூமி - செல்வம்பொருந்திய நாடு. அரணன் - பரமசிவன். மூவேழாங்கரன்-சூரியன்; சிவன். (கூஎ)

687. ஓதம் ஒலிக்கும் உலகை வலம்வந்து
பாதங்கள் நோவ நடந்தும் பயனில்லை[1]
காதலின் அண்ணலைக் காண இனியவர்
நாதன் இருந்த நகரறி வாரே.

(ப. இ.) அலையொலிக்கும் கடலாற் சூழப்பெற்ற உலகமெலாம் சூழ்ந்து கால்நோவ வலம்வந்தாலும் நிறைந்த பயனில்லை. காதலி... வாரே - பேரன்பாகிய காதலினுல் முழுமுதற் சிவபெருமானைக் காணத் தக்க இனிய மெய்யடியா ரகமுகநாட்டம் செய்வோராவர். அத்தகை யோர், ஆருயிர்த்தலைவனும் சிவபெருமான் அமர்ந்து விளங்கும் அகத் திருக் கோவிலை உணர்வர். நகர் - திருக்கோவில். (கூஅ)

688 மூலமுதல் வேதா மாலரன் முன்னிற்கக்
கோலிய ஐம்முகன் கூறப் பரவிந்து
சாலப் பரநாதம் விந்துத் தனிநாதம்
பாலித்த சத்தி பரைபரன் பாதமே.

(ப. இ.) ஆறுநிலைகளுக்கும் ஒங்கார முதல்வராம் ஆனைமுகன் (பிள்ளையார்) அயன், அரி, அரன், ஆண்டான், ஐம்முகன் என ஆறு கடவுளர் சொல்லப்படுவர். ஆண்டான் - மகேசன். ஐம்முகன் - அரு ளோன்; சதாசிவன். பரவிந்து...பாதமே - நிறைந்த திருவருள், தொழி லும் அறிவும் ஒளியும் ஓசையும் முடிவிடத்தில் நின்று இயக்கும். அதுவே அருளாற்றல். அதுவே பரை; அதுவே பரன் திருவடி. பரவிந்து - அரு ளொளி. பரநாதம் - அருளோசை. (கூக)

689. ஆதார யோகத் ததிதே வோடுஞ்சென்று
மீதான தற்பரை மேவும் பரஞ்ஜோ
மேதாதி யீரேண் கலைசேல்ல மீதொளி
ஓதா அசிந்தமீ தானந்த யோகமே.

(ப. இ.) நிலைக்களம் ஆறினையும் காணும் மனவொருக்கமாகிய யோகத்தினுல் அதனைத் தூண்டித் தொழிற்படுத்துந் தெய்வங்களாகிய

1. கானநாடு. அப்பர், நி: கூக - சு

ஆனேமுகன், அயன், அரி, அரன், ஆண்டான், ஐம்முகன் என்னும் இவர்கள் துணையுடன் சென்று; மீதான...செல்ல - மேலான இடத்தில் விளங்கும் திருவருளாற்றல் ஒரு கூரும்ப் பொருந்தியிருக்கும் சிவத்துடன் பதினறு கலைகள் பொருந்திய திங்கள் மண்டிலத்தையடைய; மீதொளி... யோகமே - மாற்றம் மனம் கழியநின்ற பரவெளி மேலிடத்து ஒடுக்கம் உண்டாம் என்க. யோகம் - ஒடுக்கம். (எ0)

690. மதியமும் ஞாயிறும் வந்துடன் கூடித்
துதிசெய் பவரவர் தொல்வா னவர்கள்
விதியது செய்கின்ற மெய்யடி யார்க்குப்
பதியது காட்டும் பரமன்நின் ருனே.

(ப. இ.) இடமூச்சு வலமூச்சுக்களே முறைப்படி ஒடுக்கிச் செய்கின்ற அகத்தவத்தோரைத் தொன்மையான வானவர் வணங்குவர். மெய்யடி... ருனே - அவரே மெய்யடியாராவர். அவர்க்குத் திருவடி காட்டும் முழு முதற்சிவனும் முன் நின்ருன் என்க.

(அ. சி.) மதியமும் ஞாயிறும் - இடகலே பிங்கலே. (எக)

691. கட்டவல் லார்கள் கரந்தெங்குந் தாளுவர்
மட்டவிழ் தாமரை யுள்ளே மணஞ்செய்து
போட்டெழக் குத்திப் பொறியெழத் தண்டிட்டு
நட்டிடு வார்க்கு நமனில்லே தானே.[1]

(ப. இ.) உயிர்ப்பினே ஒடுக்குந் திறலினர்க்கு எங்கும்ஆம் உணர்ச்சி எய்தும். அதனுல், அவர் எங்குந் தாமாவர். மட்டவிழ்...செய்து-மணம் கமழ்கின்ற பரவெளியில் தோன்றும் ஆயிரவிதழ்த் தாமரையின்கண். அன்னே அத்தனேகிய சத்திசிவங்களேக் கலந்துறச் செய்து; பொட்டெழ... தானே - உச்சித்தொளேவழி திறக்கும்படியாக உயிர்ப்பினுல் மோதி ஐம் பொறிகள் புறஞ்செலாமல் அகத்தே புலன் கொள்ளுமாறு தண்டாகிய நடுநாடியிற் செலுத்தி நின்றிடுவார்க்குக் கூற்றுத்துன்பம் எய்தாது.

(அ. சி.) கட்டவல்லார்கள் - பிராணவாயுவைக் கட்டவல்லவர்கள். மட்...குத்தி - சகசிர அறைக்குள்ளே பிரமரந்திர வழி திறக்கும்படி மோதி. பொறி எழ-பொறிகள் விடயங்களில் செல்லாமல், நட்டிடுவார்-நின்றிடுவார். (எஉ)

---

1. ஹனி. சம்பந்தர், கூ : உஉ - கூ.
,, நாலு. கஉ. பெருமிழலேக்குறும்பர், க0.

# 12. கலை நிலை

692. காதல் வழிசெய்த கண்ணுதல் அண்ணலைக்
காதல் வழிசெய்து கண்ணுற நோக்கிடிற்
காதல் வழிசெய்து கங்கை வழிதருங்
காதல் வழிசெய்து காக்கலு மாமே.

(ப. இ.) நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமான் தன் திருவடியை எளிதிற்கூட அமைத்தருளிய அன்பு நெறிப்படி அவனை அகக்கண்ணால் நோக்கும் மெய்யடியார்களுக்கு நெற்றியமிழ்தமாகிய கங்கை பெருகும்; அவ் வழியாக ஆட்கொள்ளுதலுமாம். கண்ணுதல்: கருதுதலானே எல்லாம் புரிந்தருள்பவன் என்றலுமொன்று.

(அ. சி.) காதல்வழி - அன்புநெறி. (க)

693. காக்கலு மாகுங் கரணங்கள் நான்கையுங்
காக்கலு மாகுங் கலைபதி ஞறையுங்
காக்கலு மாகுங் கலந்தநல் வாயுவுங்
காக்கலு மாகுங் கருத்துற நில்லே.

(ப. இ.) அகக்கலன் நான்கையும், அமிழ்தகலை பதினுறையும், உயிர்ப்பினையும் திருவருள் துணையால் அடக்கவல்லார் திருவடியுணர்வில் கருத்தூன்றி நிற்பர். அகக்கலன்: எண்ணம் மனம் எழுச்சி இறுப்பு.

(அ. சி.) கலை பதினுறு - அமுதகலை 16. (உ)

694. நிலைபெற நின்றது நேர்தரு வாயு
சிலைபெற நின்றது தீபமும் ஒத்துக்
கலைவழி நின்ற கலப்பை அறியில்
மலைவற வாகும் வழியிது வாமே.

(ப. இ.) நடுநாடிவழியாகச் செல்லும் உயிர்ப்பு ஒடுங்கிநின்றது. அது தூண்போன்று அசையாமலும் ஒளிபோன்று விளக்கமாயும் அமைய அமுத கலையிடத்து அம்மையும் அப்பனும் (சத்திசிவம்) இயைந்தியக்கும் எழிலை உணர்ந்தால், மருளானது தெருளாக மாறும். இதுவே தாள் தலைக்கூடும் வழியாகும். கலப்பு: புணர்ப்பு, அத்துவிதம்.

(அ. சி.) கலை...கலப்பை - அமுத கலையினிடத்துச் சிவம் சத்தி நின்ற கலப்பை. மலைவு - மயக்கம். (ரு)

695. புடையொன்றி நின்றிடும் பூதப் பிராணை
மடையொன்றி நின்றிட வாய்த்த வழியுஞ்
சடையொன்றி நின்றஅச் சங்கர நாதன்
விடையொன்றி லேறியே வீற்றிருந் தானே.

(ப. இ.) எங்கும் செறிந்துறையும் உயிர்த்தலைவனும் சிவபெருமானை, புருவநடுவில் ஊறும் அமிழ்தம் பொங்கிவழியும் வழி, வாய்ப்பாகக்

கிடைத்தவிடத்தும், அனைத்தையும் தாங்கும் அருட்சடையோடு விளங்கும் பேரின்பத்தலைவன் அறத்தின் வடிவாம் ஆனேற்றின்மீது வீற்றிருந்தருள்வன் அவ் விறைவனே அகம் புறம் ஒத்து வழிபடுதல் வேண்டும். சடை - திருவாதிரைநாள்; தாங்குமிடம். புடை - செறிவு. (சு)

696. இருக்கின்ற காலங்கள் ஏதும் அறியார்
பெருக்கின்ற காலப் பெருமையை நோக்கி
ஒருக்கின்ற வாயு வொளிபெற நிற்கத்
தருக்கொன்றி நின்றிடுஞ் சாதக னுமே.

(ப. இ.) மக்கள் தம் வாழ்நாட்களுள் இதுகாறும் சென்ற நாட்கள் போக எஞ்சி இருக்கின்ற நாட்கள் இவ்வளவு என்றும் அறியார்; மூச்சுப் பயிற்சியினால் வாழ்நாட்களை மிகுதிப்படுத்துதற்குரிய வழியின் பெருமையைப் பார்த்து, வாழ்நாளை அழிக்கும் புறத்துச்செல்லும் உயிர்ப்பினை அடக்கினால் செருக்கற்ற நன்னெறியில் செல்லும் தொண்டனாவன். ஒருக்குதல் - அழித்தல். சாதகன் - தொண்டன்.

(அ - சி.) இருக்கின்ற காலம் - இனி வாழுங்காலம். (டு)

697. சாதக மானஅத் தன்மையை நோக்கியே
மாதவ மான வழிபாடு செய்திடும்
போதக மாகப் புகலுறப் பாய்ச்சினால்
வேதக மாக வினைந்து கிடக்குமே.[1]

(ப. இ.) தொண்டுநெறியான அத் தன்மையை நோக்கிப் பெருந்தவமாகிய அகவழிபாடு செய்திடுக. பரவெளியில் காணப்படும் ஆயிரம் இதழ்த் தாமரையின்கண் உயிர்ப்பினைச் செலுத்துக. செலுத்தினால் செம்பு முதலியன குளிகையினால் பொன்னாவதுபோல் ஆவியும் சிவனாக விளங்கும். வேதகம் - செம்புபொன்னாதல்.

(அ. சி.) போதகமாக - சகசிர அறையில். (சு)

698. கிடந்தது தானே கிளர்பயன் மூன்று
நடந்தது தானேஉள் நாடியுள் நோக்கிப்
படர்ந்தது தானே பங்கய மாகத்
தொடர்ந்தது தானே அச் சோதியுள் நின்றே.

(ப. இ.) மேலாம் அறம் பொருள் இன்பம் என்னும் மூன்று பயனும் விளங்கிக் கிடந்தன. நடந்தது...நோக்கி - உயிர்ப்பு நடுநாடியை நோக்கி நடந்தது. படர்ந்தது...மாக - பரவெளியில் விளங்கும் ஆயிர இதழ்த்தாமரையைச் சார ஆவி இடைறாது நினைந்தது. தொடர்ந்தது... நின்றே-பேரொளி அறிவுப் பிழம்பாம் சிவமுதல் உயிர்க்குயிராய் நின்று தொடர்ந்தது என்க. (எ)

1. செம்பிரத. சிவஞானசித்தியார், சக : உ - ங.

699. தானே எழுந்தஅத் தத்துவ நாயகி
ஊனே வழிசெய்தேம் உள்ளே யிருந்திடும்
வானோர் உலகீன்ற அம்மை மதித்திடத்
தேனே பருகிச் சிவாலய மாகுமே.[1]

(ப. இ.) தானே முழுமுதலாகத் தோன்றிய முதல்வி, மெய்யாகிய தத்துவங்களைத் தூண்டித் தொழிற்படுத்தும். ஊனே...யிருந்திடும் - அம் முதல்வி அடியேன் நெஞ்சத்து விளங்க அந் நெஞ்சினை அடியேனைக் கொண்டு தூய்மைசெய்து ஆண்டு விளங்கி வீற்றிருப்பள். வானோர்... மதித்திட-விண்ணும் மண்ணும் ஒருங்கீன்ற அம்மை திருவடியின்பத்தைக் கடைந்துதர. மதித்திட என்பது மத்தித்திட என்பதன் இடைக்குறை. மத்தித்தல் - கடைதல். தேனே...மாகுமே - சிந்திப்பவர்க்குச் சிறந்து செந்தேன் முந்திப்பொழியும் முதல்வன் திருவடியின்பம் நிறைந்த சிவன் திருக்கோவிலாகும். (அ)

700. திகழும் படிறே செறிதரு வாயு
அழியும் படியை அறிகில ராரும்
அழியும் படியை அறிந்தபின் நந்தி
திகழ்கின்ற வாயுவைச் சேர்தலு மாமே.

(ப. இ.) பரந்து செல்லும் உயிர்ப்பினை (பிராணவாயு) அடங்கும்படி செய்யுமுறையினை யாரும் அறிகிலர். அறிந்தபின் சிவபெருமான் அவ் வுயிர்ப்பின் மேலதாய்த் திகழ்ந்து விளங்குவன். (கூ)

701. சோதனை[2] தன்னில் துரிசறக் காணலாம்
நாதனும் நாயகி தன்னிற் பிரியுநாள்
சாதன மாகுங் குருவழிப் பட்டு
மாதன மாக மதித்துக்கொள் ளீரே.

(ப. இ.) ஆவிகளின் உண்மைநிலையினை ஆண்டவன் அளத்தல் இருளறற் பொருட்டேயாம் சிவபெருமான் அமிழ்தவண்ணன். அவன் மறைப்பாற்றலாகிய் ஆதியின்கண் வீழாது குருவாய் வெளிப்படுவன். அக் குருவின் வழிப்பட்டு ஒழுகினுல் திருவடிப் பெரும்பேறு எய்துவர். அறிந்துகொள்வீராக. சோதனை - அளத்தல். மாதனம் - திருவடிப்பேறு.

702. ஈராறு கால்கொண் டெழுந்த புரவியைப்
பேராமற் கட்டிப் பெரிதுண்ண வல்லிரேல்
நீரா யிரமும் நிலமாயி ரத்தாண்டும்
பேராது காயம் பிரான்நந்தி ஆணையே.

---

1. நெஞ்சினைத். அப்பர், ச. உங - கூ.
,, காயமே. ,, ,, எஉ - ச.
2. பெர்ன்னிமையப். கஉ. திருக்குறிப்புத் தொண்டர், கசடு.

(ப. இ.) இயல்பாக உயிர்ப்புப் பதினறுமாத்திரை ஓடிக்கொண் டிருக்கும். அவற்றுள் நான்கு அகமும், முந் நான்கு புறமுமாய் இருக்கும். இப் பன்னிரண்டும் அகமாய் அடங்கிவிட்டால் அஃது உயிர்ப்பின் (பிராணயாமம்) பெறுபேறுகும். அப் பேறுபெற்றூர் அளவில் லாத காலம் நீருள் மூழ்கி யிருந்தாலும் நிலத்தினுள் புதையுண்டிருந் தாலும் உடம்பழியாது வாழ்வர். இது முழுமுதற் சிவனூர் அருளாணை யாகும். (கக)

703. ஓசையில் ஏழும் ஒளியின்கண் ஐந்தும்
நாசியின் மூன்றும் நாவில் இரண்டுங்
தேசியும் தேசனுந் தன்னிற் பிரியுநாள்
மாசறு சோதி வகுத்துவைத் தானே.

(ப. சி.) இயல்பாகவே கட்டற்ற முழுமுதற் சிவம் மீண்டும் உலகைப் படைக்க வுன்னினன். அப்பொழுது தன் அருள்வெளியில் தங்கியுள்ள மாயையும் திருவருள் ஆற்றலும் வெளிப்போந்து தொழிற் படுவனவாயின இம் முறைகளை அவனே வகுத்து வைத்தனன். நாவில் இரண்டு - பேச்சுஞ் சுவையும்.

(அ. சி.) ஓசையில் 7 - சத்தம், பரிசம், உருவம், இரசம், கந்தம், சரித்தல் சேர்த்தல். ஒளியில் 5 - இரசம், உருவம், கந்தம், வெம்மை, தகித்தல். நாசியில் 3 - கந்தம், இடைகலை, பிங்கலை. தேசி - பிராண வாயு. தேசனு - சந்தி. (கஉ)

---

# 13. காயசித்தி உபாயம்

704. உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே.

(ப. இ.) நம் உடம்பு திருவடியுணர்வு பெறுதற்பொருட்டே தரப் பட்டது. அவ் வுடம்பை மெய்யுணர்வு வழியில் பழக்கி அத் திருவடி யுணர்வினைப் பெறுதல் வேண்டும். அதனை வீணே அழியவிட்டால் உயிர் பயனடையாது. அது பாற்கலத்தைப் பாலைப் பருகுவதன்முன் அழிய விடுவதை ஒக்கும். அவ் வுடம்பை வளர்க்கும் வழிவகை திருவைந் தெழுத்தென்னல். அதனை இடையருது கணித்துக்கொண்டிருப்பதே உடம்பை வளர்க்கும் உபாயம். அதனலேயே உயிர் வளர்ச்சியுண்டாம். உயிர்வளர்ச்சி - மெய்யுணர்வு. உபாயம் - வழிவகை. உடம்பார் உயிரார் அவற்றின் சிறப்புநோக்கி உயர்திணை வாய்பாட்டால் கூறப்பட்டன. இஃது அஃறிணை உயர்திணையில் வந்த திணைவழுவமைதி. (க)

705. உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண் டானென்
றுடம்பினை யானிருந் தோம்புகின் றேனே.

(ப. இ.) பாற்கலத்தைப் பால்நோக்கிப் பேணுவதுபோல் உடம்பினுள் சிவபெருமான் உயிர்க்குயிராய்க் கோவில்கொண்டருளினன் என்னும் உண்மையுணர்ந்து அதனை அவனுடைமை என்று பேணுகின்றேன். இவ் வுண்மையுணராதகாலத்து அதனை இழுக்குடையதென்று எண்ணினேன். (உ)

706. சுழற்றிக் கொடுக்கவே சுத்தி கழியுங்
கழற்றி மலத்தைக் கமலத்தைப் பூரித்து
ஊழற்றிக் கொடுக்கும் உபாயம் அறிவார்க்கு
அழற்றித் தவிர்ந்துடல் அஞ்சன மாமே.

(ப. இ.) உயிர்ப்பினை உள்ளிழுத்து வெளிவிடும் முறைமைச் செயலால் சுடச்சுடரும் பொன்போல் அருள்ஒளி மிகும். அதனால் மலம் கழலும். மலங்கழல நெஞ்சத் தாமரை பொலிவுறும். எழுபத்தீராயிர நாடிகளிலும் சுழன்றுவரும் வழியை அறிபவர்க்கு உடல் துன்பம் தருவதைவிட்டுத் திருவடி இன்பத்தைத் தரும் மந்திர மைப்போல் ஆகும். சுழற்றி-சுழித்து. சுத்தி - புடம். உழற்றி-சுழன்றுவரச் செய்து. அஞ்சனம் - மந்திரமை.

(அ. சி.) சுழற்றிக் கொடுக்க - பூரித்து இரேசிக்க. அஞ்சனம் - மறைபொருளாகிய சிவத்தைக் காட்டும் மை. (ரு)

707. அஞ்சனம் போன்றுட லேயறு மந்தியில்
வஞ்சக வாத மறுமத் தியானத்திற்
செஞ்சிறு காலையிற் செய்திடிற் பித்தறும்
நஞ்சறச் சொன்னேம் நரைதிரை நாசமே.[1]

(ப. இ.) மூச்சுப் பழக்கத்தால் நுண்மை காட்டும் மைப்போல் உடல் தூய்மையுறும். காலைப்பயிலும் மூச்சுப்பழக்கத்தால் பித்தம் தீங்கும் நடுப்பகலிற் பயில்வதால் வாதம் நீங்கும். மாலையிற் பயில்வதாங் ஐ(கோழை, கபம்) அறும். இம் மூன்றின் வேறுபாட்டால் உடற்கண் நிகழும் நஞ்சாம் நோய் அணுகாது அறும். அதனால் உடற்கண் நரை திரை தோன்றா.

(அ. சி.) ஐ - கபம். நஞ்சு அற - விசம் நீங்க. (ச)

708. மூன்று மடக்குடைப் பாம்பிரண் டேட்டுள
ஏன்ற வியந்திரம் பன்னிரண் டங்குலம்
[2]நான்றவிம் முட்டை யிரண்டையுங் கட்டியிட்
டேன்றி யிருக்க உடம்பழி யாதே.

(ப. இ.) உச்சுவாசம் - மூச்சை உள்ளிழுத்தல். நிச்சுவாசம் - மூச்சை ஒடுக்குதல். இந் நிகழ்ச்சியைக் குறிப்பால் உணர்த்தும் எழுத்துக்கள் இரண்டு. அவற்றை உவமையில் காட்டும் பாம்பின் நிலை இரண்டு. எழுத்து உகரமும் அகரமும். பாம்பின் நிலை சிறிது தலைநிமிர்தலும்,

1. மிகினும். திருக்குறள், ூசக. (பாடம்) 2. நான்றவிழ்.

மண்டலித்திருத்தலுமாம். இவற்றைத் தமிழ் வரிவடிவ அமைவே காட்டுவ தாகவும், இவற்றை மறைமொழியாக வுணர்த்துவார் பாம்பு இரண்டு எட்டு என்றனர். தமிழ் இரண்டு, உ. எட்டு, அ. இயல்பாகவே உள்ளமைய வேண்டிய மூச்சுப் பன்னிரண்டங்குலம் என்ப. இடப்பால் வலப்பால் வழிச்செல்லும் மூச்சை அடக்கின் உடலழியாது.

(அ. சி.) மூன்று மடக்கு - இரேசகம், பூரகம், கும்பகம். பாம்பிரண் டெட்டு - உகார அகர வடிவான உச்சுவாசம் - நிச்சுவாசம். இயந்திரம் - பிராணவாயு. முட்டை யிரண்டு - இடகலை பிங்கலை. (இ(

709. நூறும் அறுபதும் ஆறும் வலம்வர
நூறும் அறுபதும் ஆறும் இடம்வர
நூறும் அறுபதும் ஆறும் எதிரிட
நூறும் அறுபதும் ஆறும் புகுவரே.

(ப. இ.) உயிர்ப்பு நூற்றறுபது மாத்திரை இடமூக்கு வலமூக்கு வழியாக உள்ளிழுக்க. ஆறு - ஆறுநிலைகள் ; (ஆருதாரம்) - இவற்றின் வழியாக உயிர்ப்பு உள்ளமைதல். நூறும்...எதிரிட - நடுநாடி வழியாக உயிர்ப்பு மேஞ்சுக்கிச் செல்ல. எதிரிட - மேஞ்சுக்கிச் செல்ல. நூறும்... புகுவரே - வரையறுக்கப்பட்ட நூருண்டினையும் மாறும்படி நீண்டநாள் எய்துவர். (சு)

710. சத்தியார் கோயி லிடம்வலஞ் சாதித்தான்
மத்தியா னத்திலே வாத்தியங் கேட்கலாம்
தித்தித்த கூத்துஞ் சிவனும் வெளிப்படும்
சத்தியஞ் சொன்னேஞ் சதாநந்தி ஆணையே.

(ப. இ.) திருவருளாற்றல் உறைந்திருக்கும் உடம்பாகிய கோயிலில் உயிர்ப்பினை வலமூக்கின்வழி நிறுத்தினால் ; மத்தி...கேட்கலாம் - புருவ நடுவில் பரவெளி ஒலி(நாதம்)யினைக் கேட்கலாம். மத்தியத்தானம் ; மத்தியானமென்றுயிற்று. வாத்தியம் - நாதம் தித்தித்...வெளிப்படும் - தித்தித்தா என இசைக்கப்பெறும். தாளத்துக்கேற்பத் திருக்கூத் தியற்றும் சிவனும் வெளிப்படுவன் ; சத்தியம்...ஆணையே - ஆண்டவன் அருளாணைவழி உண்மை கூறினேம் என்க. தித்தித்த கூத்து என்பதை இனித்த கூத்தென்றலும் ஒன்று. (எ)

711. திறத்திறம் விந்து திகழு மகார
முறப்பெற வேநின்ற தோதுஞ் சகார
மறிப்பது மந்திர மன்னிய நாத
மறப்பெற யோகிக் கறநெறி யாமே.

(ப. இ.) விந்துவாகிய தூமாயையினின்று தோன்றும் அகரமும் அதனுடன் பொருந்தும் சகாரமும் (அச : அசபை) மெய்ப்பொருள் நினைந்து ஓதலும் ; மறிப்பது...யாமே - மீண்டும் மீண்டும் இடையறாது அவ் வொலியை மறப்பின்றி நினையின் அஃது அகத்தவத்தோர்க்கு அறமுறையாகும். (அ)

712. உந்திச் சுழியி னுடனேர் பிராணனைச்
சிந்தித் தெழுப்பிச் சிவமந் திரத்தினுல்
முந்தி முகட்டின் நிறுத்தி அபானனைச்
சிந்தித் தெழுப்பச் சிவனவ னுமே.

(ப. இ.) கொப்பூழின்கண் தோன்றுகின்ற உயிர்ப்பினைச் 'சிவசிவ' என நினைந்து உச்சித்தொளையில் நிறுத்திக் கீழ்நோக்கிச் செல்லுங் காற்றைச் செல்லவொட்டாது மேல்நோக்கிச் செலுத்தின், அங்ஙனம் செலுத்துபவனே சிவனும்தன்மை எய்துவன். முகடு - உச்சித்தொளை. சிவமந்திரம் என்பதனை, முன்மொழி (ஓம்) அல்லது அம்சம் எனவும் கூறுவர். அம்சம் என்பது ஆவியின் மறை என்ப. இம் மறையுணர்ச்சி காணும் வகை : உயிர்ப்பு உள்ளிருந்து வெளிவருங்கால் அம் என்னும் ஓசை உண்டாகும். வெளியிலிருந்து உள்வருங்கால் சம் என்னும் ஓசை கேட்கும். மறை - மந்திரம். (கூ)

713. மாரு மலக்குதந் தன்மே லிருவிரற்
கூரு இலிங்கத்தின் கீழே குறிக்கொண்மின்
ஆரு உடம்பிடை அண்ணலும் அங்குளன்
கூரு உபதேசங் கொண்டது காணுமே.

(ப. இ.) நீங்கா மலம்பொருந்திய எருவாய்க்கு மேல் இருவிரலும் குறிக்குக் கீழும் உள்ள இடத்தை உன்னிப் பார்மின்; ஒழியாத உடம்பினுள் முழுமுதல் தலைவனும் அங்கு வெளிப்படுவன். ஊமை எழுத்து அல்லது பேசா எழுத்தினைக்கொண்டு காண்மின். குதம் - எருவாய். இலிங்கம் - குறி. ஆரு - ஒழியாத. கூரு - பேசா. (கo)

714. நீல நிறனுடை நேரிழை யாளோடுஞ்
சாலவும் புல்லிச் சதமென் றிருப்பார்க்கு
ஞாலம் அறிய நரைதிரை மாறிடும்
பாலனு மாவர் பராநந்தி ஆணையே.[1]

(ப. இ.) திருவருளையே புகலிடமாகக் கைக் கொண்டிருப்பார்க்கு உலகறிய நரை திரை மாறிடும். அருளாகிய தாய்வழி நிற்கும் பொருட் சேய் ஆவர். பாலன் - முருகன்; இவர் சூர்மா கொன்றவர். ஆவிப் பாலர் அருள் துணையால் இருண்மா கொல்வர். (கச)

715. அண்டஞ் சுருங்கில் அதற்கோ ரழிவில்லை
பிண்டஞ் சுருங்கிற் பிராணன் நிலைபெறும்
உண்டி சுருங்கில் உபாயம் பலவுள
கண்டங் கறுத்த கபாலியு மாமே.[2]

---

1. பொரும்பல. ஆரூரர், எ : கசு - கூ.
2. அற்ருல். திருக்குறள், கூசகூ.
,, இழிவறிந். ,, கூசச.

(ப. இ.) விதை (பீசம்) வாயிலாம் உடனுறைவு (புணர்ச்சி) குறையில் உயிர்ப்புமிகும். அதனுல் உடம்புக்கு அழிவில்லை. உணவு அளவிற் சிறிது குறைத்துண்ணின் உயிர்ப்பு மிகுதியாகத் தங்கும். அதனுல் சிவ இன்பம் மிகும். பொதுவாக மக்கட்கு உள்ளே போகும் உயிர்ப்புப் பத்து விரல். வெளியே போகும் உயிர்ப்புப் பன்னிரண்டு விரல். இம் முறை, முறையே நடக்கும்போது இருபத்துநான்கு விரல், ஓடும்போது நாற்பத்திரண்டு விரல். உண்ணும்போது பதினெட்டு விரல், உறங்கும் போது ஐம்பது விரல், உடனுறைவின்போது அறுபது விரல், உயிர்ப்பு வெளிச்செல்லும். விரல்-அங்குலம். உடனுறைவு - இன்பம்.

அ. சி.) அண்டம் - பீசம். பிண்டம் - தேகம். (கஉ)

716. பிண்டத்துள் உற்ற பிழக்கடை வாசலை
அண்டத்துள் உற்று அடுத்தடுத் தேகிடில்
வண்டிச் சிக்கு மலர்க்குழல் மாதரார்
கண்டிச் சிக்குநற் காயமு மாமே.

(ப. இ.) மூலத்திடத்துள்ள குண்டலியாற்றலை எழுப்பி நடுநாடி வழியாக அடுத்தடுத்துச் செலுத்தினுல் உடம்பு பொன்னியலும் மேனியாகும். அம்மேனியினைப்போல் தம் மேனியும் ஆகவேண்டும் என்னும் எண்ணம் வண்டுகள் விரும்பும் மலர்மாலையைச் சூடிய கூந்தலையுடைய பெண்களுக்குக் கண்டதும் உண்டாகும். பிழக்கடை - புழக்கடை.

(அ. சி.) பிழக்கடை - குதம், குய்யம் இரண்டிற்கும் இடையிலுள்ள வாயில். அண்டத்துள் உற்று - அண்டத்து உள்ளிருந்து வெளிப்படும் வெள்ளியை வீணுத்தண்டுள் விட்டு. (கக)

717. சுழலும் பெருங்கூற்றுத் தோல்லைமுன் சீறி
அழலும் இரதத்துள் அங்கியுள் ஈசன்
கழல்கொள் திருவடி காண்குறில் ஆங்கே
நிழலுளுந் தெற்றுளும் நிற்றலு மாமே.

(ப. இ.) யாவரும் மனமருளும்படி தொன்றுதொட்டே சிற்றத்துடன் வரும் கூற்றுவனைத் தன்னையடைந்தார் பொருட்டுச் சிவபெருமான் சிறியருளுவன். அச் சிவன் நெற்றிநடுவிற் காணப்படும் முக்கோண மாயுள்ள தீயினுள் விளங்குவன். முக்கோணம் தேர்போல் காணப்படுதலால் இரதம் என்று குறிக்கப்பட்டது. கழல்...மாமே - சிவபெருமான் திருவடித்துணைகொண்டு நோக்கினுல் அங்கு நிழல்செய்கின்ற அழகிய மண்டபத்துள் என்றும் சிவன் விளங்குவன். (கச)

718. நான்கண்ட வன்னியும் நாலு கலையேழுந்
தான்கண்ட [1]வாயுவும் சரீர முழுதோடும்
ஊன்கண்டு கொண்ட உணர்வு மருந்தாக
மான்கன்று நின்று வளர்கின்ற வாறே.

(பாடம்) 1. வாயுச் சரீர.

(ப. இ.) நெற்றிநடுவில் முக்கோண வடிவிற்ருய்ச் சிவபெருமான் வீற்றிருப்பது அவனருளால் அடியேனுல் காணப்பட்டதாகும். மேலும் கலே நான்கும் உயிர்ப்பு ஏழும் காணப்பெற்றேன். அதனுல் திருவடி யுணர்வே உய்யு மருந்தாக உடம்பகத்துக் கண்டுகொண்டேன். மான் கன்றனேய ஆவி உடம்பகத்து நின்று வளருகின்றது.

(அ. சீ.) நான் கண்ட வன்னி - சிவன். நாலு கலே - ஒமரூபி, அநந்தை, நாதை, அநாதை. ஏழு - வாயு ஏழு ; பஞ்சப் பிராணனேடு இடகலே பிங்கலே. மான்கன்று - சீவன். (கஞ்)

719. ஆகுஞ் சனவேத சத்தியை அன்புற
நீகோள்ளின் நெல்லின் வளர்கின்ற நேர்மையைப்
பாகு படுத்திப் பலகோடி களத்தினுல்
ஊழ்கோண்ட மந்திரந் தன்னுல் ஒடுங்கே.

(ப. இ.) ஆவிகளே நன்னெறிப்படுத்த உடனுயுறைந்து நடத்து விக்கும் மறைப்பாற்றலினிடத்து அவ்வாற்றல் வனப்பாற்றலாக மாறும் படி அவ் வாவிகள் அன்புசெய்தால், நெல்வித்து ஒன்று ஆயிரக்கணக்காகப் பல்குவதுபோன்று மீட்டும் மீட்டும் விஞக்கீடாகப் பெருகிவரும் உடம்பு களின் எல்லே முடிவு எய்தும். திருவைந்தெழுத்தின் முதலெழுத்தாகிய பேசா எழுத்தின்கண் ஆவி ஒடுங்குதல் முறையாம். பேசா எழுத்து - சிகரம். இதனேயே அசபை என்பர்.

(அ. சீ.) சனவேதசத்தி - திரோதாயி. நெல்...மையை-ஒரு நெல்லி னின்றும் பல நெல் உற்பத்தியாதல் ஒப்ப. ஊழ்கொண்ட மந்திரம் - அசபா மந்திரம். (கக)

---

# 14. கால சக்கரம்

720. மதிவட்ட மாக வரையைந்து நாடி
இதுவிட்டிங் கீரா றமர்ந்த அதனுற்
பதிவட்டத் துள்நின்று பாலிக்கு மாறு
மதுவிட்டுப் போமாறு மாயலுற் றேனே.

(ப. இ.) பன்னிருவிரல் பெருவெளியாகிய மதி எல்லேயாகப் புருவ நடுவிலுள்ள மேருவின்கண் ஐந்துநாடிகள் கூடுமிடத்தினின்று நீங்கி நெஞ்சின்கண் பன்னிரண்டுவிரல் உயிர்ப்புடன் கூடியிருந்ததனுல், சிவன் எழுந்தருளியிருக்கும் பெருவெளியில் தோன்றும் மாறு இன்பத்தேனேப் பருகினேன் ; பருக உலகப் பழக்கம் நீங்கிற்று ; நீங்கச் சிவனடிக்கீழ் மறைந்தேன்.[1]

(அ. சீ.) மதிவட்டம் - சகசிர அறை. வரை - புருவமத்தி. பதி வட்டம் - சிவம் இருக்கும் இடம். மது - அமுதம். (க)

---

1. முருகார் நறுமலர். சு. ககசு-உ.

721. உற்றறி வைந்தும் உணர்ந்தறி வாறேழுங்
கற்றறி வெட்டுங் கலந்தறி வோன்பதும்
பற்றிய பத்தும் பலவகை நாழிகை
அற்ற தறியா தழிகின்ற வாறே.[1]

(ப. இ.) தம்கண் உற்றவற்றைத் தனித்தனியுணரும் ஐம்புலவுணர்வின் உண்மையறிந்தவர் நற்குணப் பெருக்கம் ஏழும் நன்கறிவர்; மெய்யுணர்வின் முதல் எட்டையும் பொருந்துவர்; சிவனிலே ஒன்பதையும் சேர்வர். மூன்றத்துச் செலுத்தும் காற்றுக்கள் பத்தினையும் அடக்குவர். பலகாலங்கள் ஒடுங்கியிருப்பர். அக் காலங்கள் சென்றமையும் அறியார். ஐந்து: நாற்றம், சுவை, ஒளி, நற்காற்று, வெளி. நற்குணம் ஏழு: ஆட்சி, ஆண்மை, அரும்புகழ், அழியாத் திரு, திருவடியுணர்வு, பற்றின்மை, பரனடிப்பற்று. மெய்யுணர்வுமுதல் எட்டு: "உம்மையின் வாசனைபற்றி முன்னெடுபின் மலிவின்றிப் பொருந்துமாற்றுற் பொருள்களை ஆராய்ச்சி செய்து உய்த்துணரும் ஞானம் ஒன்று, தன்னைப்பற்றி வருவன, பிற வுயிர்களைப்பற்றி வருவன, தெய்வத்தைப்பற்றி வருவன என்னும் வாயில்களான் வரும் மூவகைத்துக்கத்தான் மடிவுவந்துழி நிகழ்வனவாகிய ஞானம் மூன்று, நாட்டோர் கூறும் வாயுறை மொழியான் வரும் ஞானம் ஒன்று. மெய்ப்பொருள் நூல்களைத் தானே ஓதி உணர்தலானும், ஆசிரியனை வழிபட்டு ஓதியுணர்தலானும் வரும் ஞானம் இரண்டு. தான முதலிய நல்வினைகளான் வரும் ஞானம் ஒன்று" (சிவஞானபோதப் பேருரை. உ. உ - கூ.) சிவனிலே ஒன்பது: அறிவு, ஆற்றல், ஓசை, ஒளி, அருளோன், ஆண்டான், அழிப்போன். அளிப்போன், அமைப்போன். அறிவு - சிவம், ஆற்றல் - சத்தி, ஓசை - நாதம். ஒளி - விந்து. உயிர்ப்பு: பத்து (கூ00ஆம் பக்கம் காண்க). பூத நுண்மையாகிய தன்மாத்திரையின் உண்மையினை யுணர்ந்தவர் உலகுடற் பொருள்களில் மயங்கார்.[2] (உ)

722. அழிகின்ற ஆண்டவை ஐயைந்து மூன்று
மொழிகின்ற முப்பத்து மூன்றென்ப தாகுங்
கழிகின்ற காலறு பத்திரண் டென்பது
எழுகின்ற ஈரைம்ப தெண்ணற் றிருந்தே.

(ப. இ.) இத் திருப்பாட்டில் உலகோர் கூறும் உடற்கு உறும் கண்டங்கள் கூறப்படுகின்றன. அவற்றின் ஆண்டுக்கணக்கு இருபத்தைந்து முதல் இருபத்தெட்டு, முப்பது முதல் முப்பத்து மூன்று, அறுபது முதல் அறுபத்திரண்டு, நூறு என்ப. மேலும் பலவுள. அவற்றைக் கோள்நூற்களுட் காணலாம்.

(அ. சி.) அழிகின்ற ஆண்டு - கண்டங்கள்: ஐயைந்து மூன்று - 28-வது வயது ஒரு கண்டம். முப்பத்து மூன்று - 33-வது வயது ஒரு கண்டம். அறுபத்திரண்டு - 62-வது வயது ஒரு கண்டம். ஈரைம்பது - 100-வது வயது ஒரு கண்டம். (கூ)

1. சிவஞ்சத்திநாதம். சிவஞானசித்தியார், உ. ச - உ.
2. சுவையொளி. திருக்குறள், உஎ.

723. திருந்து தினமத் தினத்தி லைடுநின்று
இருந்தறி நாளோன் றிரண்டேட்டு மூன்று
பொருந்திய நாளோடு புக்கறிந் தோங்கி
வருந்துத லின்றி மனைபுக லாமே.

(ப. இ.) ஆகாநாள்கள்: பிறந்த கிழமை, நாள்மீன் (நட்சத்திரம்), பிறந்தநாள் மீனிலிருந்து ஒன்று, இரண்டு, மூன்று, எட்டாம்நாள் மீன்கள். (சு)

724. மனைபுகு வீரும் மகத்திடை நீடி
எனவிரு பத்தஞ்சும் ஈரா றதனுல்
தனையறிந் தேறட்டுத் தற்குறி யாறு
வினையறி யாறு விளங்கிய நாலே.

(ப. இ.) உடம்பினுள் புகுந்த உயிர்நிலை கூறப்படுகிறது. உடல் மெய் இருபத்துநாலு, ஆள் ஒன்று ஆக இருபத்தைந்து மெய். இவற்றுடன் கூடிய வுயிர் பன்னிரண்டு விரல் உயிர்ப்புமுறையினுல் தன்னை யுணரும். அங்ஙனம் உணர்ந்தோர் உயிர்ப்பினை அடக்குவர். மூலம் முதலாகிய ஆறுநிலைகளையும் உணர்வர். கட்டுறுத்தும் வினைகாணுர். வெளிச்செல்லும் உயிர்ப்பு நான்கினுலேயே உயிர் நீங்கும். மெய் - தத்துவம். ஆறுநிலை: மூலம், கொப்பூழ், மேல்வயிறு, நெஞ்சம், மிடறு, புருவநடு. ஆறுநிலை - ஆறுதாரம்.

(அ. சி.) இருபத்தைந்து-ஆன்ம தத்துவம் 24-ம் சிவனும். ஈராறு-பன்னிரண்டங்குல சுவாசம். அட்டு - விலக்கி. நாலே - நால்விரல் அள வுள்ள சுவாசம். (கி)

725. நாலுங் கடந்தது கால்வரும்[1] நாலைந்து
பாலங் கடந்தது பத்திப் பதினைந்து
கோலங் கடந்த குணத்தாண்டு மூவிரண்டு
ஆலங் கடந்ததொண்[2] ணூறறி வாறே.

(ப. இ.) உட்கலன் நான்கையும் செலுத்துவோர் நால்வர். உட்கலம்: அகங்காரம், புத்தி, மனம், எண்ணம் (சித்தம்.) நால்வர் முறையே அயன், அரி, அரன், ஆண்டான் எனப்படுவர். நாலைந்து - ஒன்பது: சிவனிலை ஒன்பது[2] பத்திப்பதினைந்து - பதினஞ்சு பத்தி: தேய்பிறை வளர் பிறைகள். பாலம் - ஆணை. ஆலமுண்ட கண்டத்து அரனுர் ஆறுநிலை களின் திருவுருவமுங் கடந்து ஆவிகளுக்கு எண்குணம் அளித்து அருள் பவராவர். அகங்காரம் - எழுச்சி. புத்தி - இறுப்பு.

(அ. சி.) நாலும் - கரணங்கள் நாலும். நால்வரும் - பிரமனுதி நால்வரும். நாலைந்து - நவவடிவங்களும். பத்தி பதினைந்து - வளர்பிறை, தேய்பிறை நாட்கள் 15. ஆலங்கடந்ததொன்று - சிவன். (சு)

---

1. எண்ணிலை. சிவஞானபோதம், சூ. க-சூ.

2. சிவஞ்சத்தி நாதம். சிவஞானசித்தி. உ. சூ-உ.

726. ஆறும் இருபதுக் கையைந்து மூன்றுக்குந்
தேறு மிரண்டு மிருபத்தோ டாறிவை
கூறு மதியோன் றினுக்கிரு பத்தேழு
வேறு பதியங்க ணுள்விதித் தானே.[1]

(ப. இ.) அகத்தவப்பயிற்சி யுடையார்க்கு உலகியல் நாட்கள் போன்று அமையாமல் இருபதும் இருபத்தைந்தும் உழற ஐஞ்ஞூறு ஆகும். இவற்றை ஆருல் உறழ மூவாயிரமாகும். நமக்கு மூவாயிரம் நாட்கள் சென்றால் அவர்கள் நிலைக்கு ஆறுநாட்களா யமையுமீ போலும். இத்தகைய நிலையினர் ஒருசாரார். வேறு ஒருசாராருக்கு நமக்கு நூற் றறுபத்தாறு நாள்கள் ஒருநாளாகும். மதிவட்டம் வரும் இருபத்தேழு நாட்களும் இவ்வாறு விதித்தனன் என்க. (எ)

727. விதித்த இருபத்தெட் டொடுமூன் றறையாகத்
தொகுத்தறி முப்பத்து மூன்று தொகுமின்
பதித்தெறி பத்தெட்டும் பாரா திகணல்
உதித்தறி மூன்றிரண் டொன்றின் முறையே.

(ப. இ.) இதில் குறித்து ஓதப்பட்டுள்ள எண்முறைகளும் மேலது போன்றே வேறே விளங்கவில்லை. இவ் விரண்டு திருப்பாட்டுக்களின் பொருள் நுட்பங்கள் வல்லார்வாய்க் கேட்டுணர்வதே வாய்ப்பாகும். (அ)

728. முறைமுறை யாய்ந்து முயன்றில ராகில்
இறையிறை யார்க்கும் இருக்க அரிது
மறையது காரண மற்றேன்று மில்லை
பறையறை யாது பணிந்து முடியே.

(ப. இ.) உடலோடு கூடி நெடுநாள் இருக்க முயல்வார் முறை முறையாக உயிர்ப்படக்குவதில் பழகுதல் வேண்டும். அங்ஙனம் முயலா விட்டால் உலகக்கணக்கின்படி வாழ்நாள் முடிவில் ஒருசிறிதும் கூடுதலாக இருக்கமுடியாது. இம் மறைபொருளைப் பறைபோல் வெளிப்படுத்தாது பணிவுடன் பயின்று வாழ்நாளைப் பெருக்குக.

(அ. சி.) இறை - கொஞ்சம். மறை - மறைந்த. பறை அறையாது - வெளிப்படுத்தாது. (க)

729. முடிந்த தறியார் முயல்கின்ற மூர்க்கர்
இடிஞ்சில் இருக்க விளக்கெரி கொண்டு
கடிந்தனன் மூளக் கதுவவல் லார்க்கு
நடந்திடும் பாரினில் நண்ணலு மாமே.

(ப. இ.) உடம்பை நிலைத்திருக்கச் செய்யும் முறைகளை மறைத்து வைத்துள்ள தன்மையை அறியாது முயல்கின்றவர் மூர்க்கர் எனப் படுவர். உடம்பு நிலைத்திருக்க விரும்புவோர் மூலத்தீயின்கண்

1. தூறு. அப்பர், இ. கo0-கூ.

உயிர்ப்பினை அடக்குதல் வேண்டும். நில்லாவுலகில் அவ் வுடல் நீலிக்கும் வழியதுவே. இடிஞ்சில்: விளக்கின் அகல் - உவமை. ஆகுபெயராக உடம்பினைக் குறிக்கும். விளக்கெரி: விளக்குப்போலும் மூலத்தீ. கதுவல்- (உயிர்ப்பினை) அடக்குதல். நடந்திடும் பாரினில் - நில்லாவுலகினில். நண்ணலுமாம் - (அழியாமல்) இருப்பதும் கூடும்.

(அ. சி.) முடிந்தது - மறைத்து வைத்தது. இடிஞ்சில் - அகல்; ஈண்டுத் தேகம். இருக்க - அழியாது இருக்க. விளக்கெரி - மூலாக்கினி, கதுவல் - (கது - வெடிப்பு) வீணுத்தண்டின் கடைவாசலைத் திறத்தல். நடத்திடும் பார் - அழியும் உலகம். நண்ணல் - நிலைபெறுதல். (८०)

730 நண்ணு சிறுவிர லுணுக மூன்றுக்கும்
பின்னிய மார்பிடைப் பேராமல் ஒத்திடுஞ்
சென்னியின் மூன்றுக்குஞ் சேரவே நின்றிடும்
உன்னி யுணர்ந்திடும் ஓவியந் தானே.

(ப. இ.) நெற்றிநடுவில் தோன்றும் மும்முடிச்சும், தலையின்கண் உள்ள திங்கள் ஞாயிறு தீ என்னும் மூன்றுக்கும் தொடர்பாகும். இவற்றை ஓவியம் போன்று உள்ளத்துக் கருதுதல் அருள்நினைவாகும். விரல்: விரலம் என்பதன் திரிபு; நெற்றி. ஓவியம்: சித்திரம். அஃது உவமையாகு பெயராய் உன்மனியைக் குறிக்கும். உன்மனி: உன்மனி என்னும் திருவருளாற்றல்.

(அ. சி.) சிறு...மூன்று முக்கட்டு - பிரம, விண்டு, உருத்திரக் கட்டுகள் அல்லது கிரந்திகள் அல்லது சுவாதிட்டானம், மணிபூரகம், அனுகதம். சென்னியின் மூன்று - சந்திரன், சூரியன், அக்கினி. உன்னி...ஓவியம் - உன்மனி. (८८)

731. ஓவிய மான வுணர்வை அறிமின்கள்
பாவிக ளித்தின் பயனறி வாரில்லை
தீவினை யாமுடன் மண்டல மூன்றுக்கும்
பூவில் இருந்திடும் புண்ணியத் தண்டே.

(ப. இ.) உயிர்ப்படங்கி அசைவற்றிருக்கும் உணர்வை அறிமின்கள். மீண்டும் பிறப்பதற்கு வாயிலாக இறக்கும் உடம்பினைப் பெற்ற கொடியோர் இவ்வுண்மையினை உணரார். ஞாயிறு திங்கள் தீ என்னும் மண்டிலம் மூன்றும் பரவெளி மண்டிலத்தோடியைபுடையன. பரவெளி மண்டிலம் - ஆயிரம் இதழ்த்தாமரை. இம் மூன்றினையும் தாங்கிநிற்பது நடுநாடி. நடுநாடி: சுழுமுனை.

(அ. சி.) பூவில்...தண்டே - சகசிர அறையிலிருந்து வெளிப்பட்டுள்ள வீணுத்தண்டு. (८८)

732. தண்டுடன் ஓடித் தலைப்பெய்த யோகிக்கு
மண்டல மூன்று மகிழ்ந்துடல் ஒத்திடுங்
கண்டவர் கண்டனர் காணுர் வினைப்பயன்
பிண்டம் பிரியப் பிணங்குகின் றூரே.[1]

1. கீரும்பாட்டிக். நாலடியார், கூடு.

(ப. இ.) உயிர்ப்பினை வீணைத்தண்டென்னும் நடுநாடி வழியாகச் செலுத்திப் பிரமரந்திரமாகிய உச்சித்தொளைக்கண் நிறுத்திய அகத்தவத் தோர்க்கு ஞாயிறு திங்கள் தீ என்னும் மூன்றுமண்டிலமும் முரணின்றி ஒத்திருக்கும். இம் முறைமையினை உணர்ந்தவரே மெய்யுணர்ந்தோ ராவர். இவற்றை யுணராதார் ஊழ்வினைவயப்பட்டுப் பிண்டமாகிய உடல் பிரியப்போகிறதே என்று இறப்புக்காலத்து மிக்க துன்பம் உறுகின்றனர்.

(அ. சி.) தலைப்பு எய்த யோகி - சகசிர அறையை அடைந்த யோகி. மண்டலம் மூன்று - சந்திரன், சூரியன், அக்கினி. வினைப்பயன் - ஊழ், வல்வினை ; பிண்டம் - தேகம். (கக)

733. பிணங்கி அழிந்திடும் பேறது கேள்நீ
அணங்குட னுதித்த ஞாறு[1] விரியின்
வணங்குட னேவந்த வாழ்வு குலைந்து
சுணங்கனுக்[2] காகச் சுழல்கின்ற வாறே

(ப. இ.) இறப்புக்காலத்துப் பெரும்துன்பம் அடைவோர் தம்வாழ் நாளே ஞாயிறு நாள்தோறும் அளந்துசெல்லும் விரிந்த வழியென்று உணராதவராவர். அவ் வுணர்வின்மையால் மதிக்கும்படி வந்த வாழ் வும் பாழாய் உடல் நாயுண்ணச் சுமந்து திரிந்த தன்மையராய் மாள்வர். (கச)

734. சுழல்கின்ற வாறின் துணைமலர் காணுன்
தழலிடைப் புக்கிடுந் தன்னு ளிலாமற்
கழல்கண்டு போம்வழி காணவல் லார்க்குக்
குழல்வழி நின்றிடுங் கூத்தனு மாமே.

(ப. இ.) இடையறாது ஆவிகளைப் பிறப்பு இறப்பாகிய துன்பச் சுழலிற்படுத்தும் செருக்கு, சினம், சிறுமை, இவறல், மாண்பிறந்த மானம், மாணுவுவகை என்னும் ஆறுபகையாகிய குற்றங்களும் அடங் கினால் இறைவன் திருவடித்துணையைக் காண்பர். காணுதவர் தீயிடை வீழ்ந்து அழிவர். தம்முடம்பில் பற்றற்று நில்லாமல் திருவடி கண்டு அவ் வழியில் ஒழுகவல்லார்க்கு உயிர்ப்பு உச்சித்தொளைவழி விரும்பிய போது செலுத்தும் அருள் ஏற்படும்.[3] (கடி)

735. கூத்தன் குறியிற் குணம்பல கண்டவர்
சாத்திரந் தன்னைத் தலைப்பெய்து நிற்பர்கள்
பார்த்திருந் துள்ளே அனுபோக நோக்கிடில்
ஆத்தனு மாகி யலர்ந்திடு மொன்றே.

(ப. இ.) சிவபெருமானது உண்மைத்தன்மைக் காட்சியால் பல தன்மைகளைக் கண்டவர் மெய்ப்பொருள் நூலாகிய சாத்திரத்தை ஓதி

1. நாளென. திருக்குறள், கூடுச.
2. எரியெனக் : பட்டினத்தார், பொது - உசு.
3. நாலுகரணங். கஉ. பெருமிழலை - க0.

அதன்வழியில் நிற்பவராவர். திருவருள்கண்ணுக அறிவினிடத்து உணர்தலாகிய அனுபவம் பார்த்திடில், ஆத்தனுகிய சிவபெருமான் அறிவிற்கறிவாய் ஒன்றுய்நிற்கும் நிலையில் அவன் பரப்பெங்கும் ஆவி நிற்றலால் அவ் வாவி சிவனும் ஆகும். ஒன்று ஏ அலர்ந்திடும் : எங்தனும் ஒன்றுய்ச் செறிந்திடும். அலர்ந்திடும் - செறிந்திடும் ; வியாபகமாகும்.

736. ஒன்றில் வளர்ச்சி உலப்பிலி கேளினி
நன்றென்று மூன்றுக்கு நாளது சென்றிடுஞ்
சென்றிடு முப்பதுஞ் சேர இருந்திடிற்
குன்றிடைப் பொன்திகழ் கூத்தனு மாமே.

(ப. இ.) நடுநாடி ஒன்றில் உயிர்ப்புச் செல்வதாகிய அழிவிலாநிலை எய்தின் மூன்று நாடிகளிலும் செல்லுவதால் குறைந்தும் கூடியும் வரும் வாழ்நாள் பெருகும். முப்பத்தாறுமெய்களும் பற்றற்றநிலையில்உற்றிடின் பொன்மலைக்கண் விளங்கியருளும் கூத்தனுகிய சிவனு மாவன். பொன் மலை ஈண்டு நடுநாடியாகும். முப்பதும் சேர என்பதன்கண் உள்ள உம்மையால் எஞ்சிய ஆறும் கூட்டி முப்பத்தாறு மெய்களெனக் கொள்ளப்பட்டது. மெய் - தத்துவம்.

(அ. சி.) ஒன்றில் - சுழுமுனை நாடி ஒன்றில். மூன்றுக்கு - மூன்று நாடிகளுக்கு. நாள் - வாழ்நாள். (கள)

737. கூத்தவன் ஒன்றிடுங் கூர்மை அறிந்தங்கே
ஏத்துவர் பத்தினில் எண்டிசை தோன்றிடப்
பார்த்து மகிழ்ந்து பதுமரை நோக்கிடிற்
சாத்திடு நூறு தலைப்பெய்ய லாமே.

(ப. இ.) சிவபெருமான் நெஞ்சமாகிய அனுகதத்தின்கண் இடையறுது இயற்றும் திருக்கூத்தின் உண்மைகண்டு தொழுவார், மெய் யுணர்ந்தோராவர். அவர் பத்தெழுத்துச் சேர்ந்திருக்கும் இடமாகிய அந் நெஞ்சத்திடமாக நின்று அறிவான் நோக்குவர். அவர்க்கு எட்டுத் திசைப்பொருள்களும் இயல்பாகத் தோன்றும். அவற்றைக் கண்டு களிகூர்ந்து, ஆயிர இதழ்த்தாமரை என்று சொல்லப்படும் பரவெளியில் விளங்கும் சிவபெருமானை அருளால் காண்பர். கண்டால் நூல்கள் கூறும் அகவை நூறும் எய்துவர்.

(அ. சி.) பத்தினில் - பத்து அக்கரங்கள் கூடும் அனுகதத்தில். பதுமர் - சிவபெருமான். நூறு தலைப்பெய்தலாம் - நூறு வயது இருக்கலாம். (கஅ)

738. சாத்திடு நூறு தலைப்பெய்து நின்றவர்
காத்துடல் ஆயிரங் கட்டுறக் காண்பர்கள்
சேர்த்துடல் ஆயிரஞ் சேர இருந்தவர்
மூத்துடன் கோடி யுகமது வாமே.

(ப. இ.) மேற்கூறியபடி நூறு ஆண்டுகள் வாழ்ந்தவர் அம் முறையானே ஆயிரம் ஆண்டுகள் வாழ்வர். ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்தவர் அறிவு மூதிர்ந்து ஊழியும் காண்பர். ஊழி - உகமுடிவு; உலகமுடிவு.

(அ. சி.) காத்து...காண்பர் - பல ஆயிர ஆண்டுகள் காண்பர். மூத்து - அறிவில் முதிர்ந்து. (கக)

739. உகங்கோடி கண்டும் ஒசிவற நின்று
அகங்கோடி கண்டு ளயலறக் காண்பர்கள்
சிவங்கோடி விட்டுச்[1] செறிய இருந்தங்
குகங்கோடி கண்டங் குயருறு வாரே.

(ப. இ.) ஊழிகளைக் கோடிகோடியாகக் கண்டும் தளர்வின்றி நிற்றலால் உள்ளத்திடத்துச் சிவபெருமானே வேறறக் காண்பர். முடிந்த இடமாகிய சிவபெருமானைக் கண்டவர்கள் தம்முனைப்பற்றுச் சிவ பெருமானுடன் புணர்ந்துநின்று அளவில் கோடி உகங்கண்டு உயர்வற உயர்நலம் எய்துவர். நின்று என்பது நிற்ப எனத் திரிந்து நின்றது.

(அ. சி.) சிவங்கோடி - சிவமே முடிந்த இடமாக. (உ0)

740. உயருறு வாருல கத்தோடுங் கூடிப்
பயனுறு வார்பலர் தாமறி யாமற்
செயலுறு வார்சிலர் சிந்தையி லாமற்
கயலுறு கண்ணியைக் காணகி லாரே.

(ப. இ.) உயர்ந்தோர் சிலர் உலகோர்போலத் தம்மிழப்புடன் செயல் செய்வர்; (அதனுல் வினைப்பயனுல் கட்டுண்ணூர்.) பலர் இம்மை மறுமையில் எண்ணமில்லாமல் உலகத்தோடும் கூடிய பிறப்புப்பயனையே அடைவர். அவர் அங்கயற்கண்ணியாம் அம்மையை உணரமாட்டார். தம்மிழப்பு : சிவனுக்கடிமையாஞ் சிறப்பு நிலை. (உக)

741. காணகி லாதார் கழிந்தோடிப் போவர்கள்
நாணகி லாதார் நயம்பேசி விடுவர்கள்
காணகி லாதார் கழிந்த பொருளெலாங்
காணகி லாமற் கழிகின்ற வாறே.

(ப. இ.) திருவருளைக் காணப்பெறுதார் மீண்டும் பிறத்தற் பொருட்டு மாள்வர். பிறவி எடுப்பதில் நாணங்கொள்ளாதவர் உலக நயங்களைப் பேசிக் கழிவர் (நூல்நயங்கள் எனினும் அமையும்). மெய்ப் பொருளுண்மை காணமாட்டாதார் கழிந்த பொருள்களின் நிலை யாமையை அறியாத்தன்மையரே யாவர். (உஉ)

742. கழிகின்ற அப்பொருள் காணகி லாதார்
கழிகின்ற அப்பொருள் காணலு மாகுங்
கழிகின்ற வுள்ளே கருத்துற நோக்கிற்
கழியாத அப்பொருள் காணலு மாமே.

---

1. நசித்தொன்றின். சிவஞானபோதம், கக. உ - நு.

(ப. இ) உடலிலிவிட்டுச் செல்லும் ஆவித்தன்மையின் உண்மை உணராதார், திருவருள் துணையால் அதனைக் காணுதலுமாகும். கழியும் உடம்பினுள்ளே ஆழ்ந்து அசைவறநின்று நோக்கின் என்றும் யாண்டும் நீங்காது உடனுறையும் சிவமுதலைக் காணுதலுமாகும்.

(அ சி.) கழிகின்ற...பொருள் - சிவன். கழியாத...பொருள் - சிவன். (உட).

743. கண்ணன் பிறப்பிலி காணந்தி யாயுள்ளே
எண்ணுந் திசையுடன் ஏகாந்த ஞடிடுங்
திண்ணென் றிருக்குஞ் சிவகதி யாநிற்கும்
நண்ணும் பதமிது நாடவல் லார்கட்கே.

(ப. இ.) முக்கண்ணனாகிய சிவபெருமான் என்றும் பிறவாதவன். ஆவியினகத்துள் புணர்ந்துநிற்பவன். எல்லாத் திசைகளிலும் ஒன்றி யிருப்பவன். அவனே உறுதியாக எண்ணின் ஆவி சிவன்நிலையாகவே நிற்கும் இதுவே எவர்க்கும் முடிந்த முடிபாகிய நிலையாகும். இவ் வுண்மை நாடவல்லார் அரியர் என்ப. சிவன்நிலை சிவனுக்கு அடிமையாம் நிலை. முக்கண்ணன்: அன்பறிவாற்றல்கள் இயல்பாக விளங்கும் சிவன்.

(அ. சி.) கண்ணன் - முக்கண்ணன், சிவன். (உசு).

744. நாடவல் லார்க்கு நமனில்லை கேடில்லை
நாடவல் லார்கள் நரபதி யாய்நிற்பர்
தேடவல் லார்கள் தெரிந்த பொருளிது
கூடவல் லார்கட்குக் கூறலு மாமே.

(ப. இ.) திருவருள் துணையால் அறிவுக்கு அறிவாம் சிவனை இடை யறாது நினைக்கும் நினைப்பாகிய நாட்டமுள்ளார்க்கு இறப்பில்லை; பிறப் பில்லை. அம் மெய்யுணர்வுத் திருவினர் வையத்து வாழும் தெய்வமாகக் கொள்ளப்பெறுவர். மெய்ப்பொருள் நாடவல்லார் அறுதியிட்டு ஆய்ந்த பொருளிதுவாகும். சிவபெருமானுடன் இரண்டறக்கூடும் திருவருள் பெற்ற திறலினர் எய்தும் பேரின்பப் பெருவாழ்வு சொல்லில் அடங்குவ தன்று.[1] (உடு).

745. கூறும் பொருளி தகார வுகாரங்கள்
தேறும் பொருளிது சிந்தையுள் நின்றிடக்
கூறு மகாரங் குழல்வழி யோடிட
ஆறும் அமர்ந்திடும் அண்ணலு மாமே.

(ப. இ.) மெய்ப்பொருள் நூற்களில் கூறும் பொருள் அகரம் சிவபெருமானாகும். உகரம் ஆவி ஆகும். தெளியவேண்டிய உண்மைப் பொருளும் இவையாகும். இப் பொருள்நாட்டம் நெஞ்சத்து உரம் பெற்று நிற்க, மகரமாகிய (நாதம்) ஓசை நடுநாடி வழியாக வெளிப்பட, உடம்பகத்துள்ள தாங்கல் ஐந்தொழில் சார்தலாம் நிலைக்களம் ஆறின்

1. சொல்லும் இடமன்று. திருவுந்தியார், உக.

கண்ணும் உறைந்திடும் சிவபெருமான் திருவருள் புரிவன். ஆவிகள் அவனுக விளங்கும். தாங்கல் - ஆதாரம். (உசு)

746. அண்ணல் இருப்பிட மாரும் அறிகிலர்
அண்ணல் இருப்பிடம் ஆய்ந்துகொள் வார்களுக்
கண்ணல் அழிவின்றி உள்ளே அமாந்திடும்
அண்ணலைக் காணில் அவனிவ னாகுமே.[1]

(ப. இ.) அண்ணலாகிய சிவபெருமான் ஆவியுடன் கலந்துறையும் உண்மைநிலையை யாரும் தம்மறிவால் தெளிந்திலர். திருவருள் துணையால் அவ் வுண்மைநிலையைத் தெளிவார்க்கு அண்ணல் மறைவின்றி அறிவுக் கறிவாய் விளங்கி வெளிப்படுவன். அங்ஙனம் வெளிப்படின் சிவன் நிறைவி னுள் கோடத்தினுள் கோலங்கொள்வார் அடங்குமாறுபோல ஆவி யடங்க அச் சோதமே கோலியாகத் திகழ்வதுபோல் ஆவியாகிய இவன் சிவனுகவே திகழ்வன். அழிவின்றி - மறைவின்றி. உள்ளே அமர்ந்திடும் - அறிவுக்கு அறிவாய் வெளிப்படும். (உள)

747. அவனிவ னாகும் பரிசறி வாரில்லை
அவனிவ னாகும் பரிசது கேள்நீ
அவனிவ னைசை ஒளியினுள் ஒன்றிடும்
அவனிவன் வட்டமு தாகிநின் றானே.

(ப. இ.) சிவன் ஆவியாய்நிற்கும் மெய்ந்நிலையை அறிவார் அரியர். அவனிவனுகும் பரிசினைக் கேட்பாயாக. ஓசையும் ஒளியும்போல் சிவனும் ஆவியும் கலந்து நிற்கும். அஃது ஓ மொழியின்கண் அகரம், உகரம், மகரம், ஒளி (விந்து), ஓசை (நாதம்) கலந்து வட்டமாய் நிற்பதை யொக்கும். அவனிவனுகும் தன்மை ஒட்டில் உண்டாகும். ஒட்டு - திருவடிப்பேறு. கட்டில் இவன் அவனுகும். இது 'கட்டுங்கால் நார் மூன்னும் கண்ணிக்கால் பூமுன்னும், ஒட்டிலிறை முன்னுயிர்பின் ஓது' என்பதனுல் உணர்க. நார் - ஆர்உயிர். பூ - பேர் உயிராம் சிவன். (உஎ)

748. வட்டங்க ளேழு மலர்ந்திடும் உம்மூள்ளே
சிட்டன் இருப்பிடஞ் சேர அறிகிலீர்
ஒட்டி யிருந்துள் உபாயம் உணர்ந்திடக்
கட்டி[2] இருப்பிடங் காணலு மாகுமே.

(ப. இ.) நிலைகள் ஆறும் மேலுள்ள திங்கள்மண்டிலமும் ஆகிய ஏழு வட்டங்களும் ஆவியினுள் மலர்ந்திடும். ஆண்டு ஏழுந்தருளியுள்ள சிவன் நிலை யுணராகிலீர். திருவருளோடு உடனுய் நின்று உணர்ந்திடக் கட்டி யாகிய சிவபெருமான் நிலையினைக் காணலாகும்.

(ச. சி.) வட்டங்கள் ஏழு-ஆதாரங்கள் ஆறும் சகசிர அறையாகிய மதிமண்டலமும் ஆக ஏழு. கட்டி-கருப்புக்கட்டி போன்ற சிவம் (உக)

1. இவனுகி. சிவஞானசித்தியார், கo.
2. கனியினுங்கட்டி. தி. கசு - கo.

749. காணலு மாகும் பிரமன் அரியென்று
காணலு மாகுங் கறைக்கண்டன் ஈசனைக்
காணலு மாகுஞ் சதாசிவ சத்தியுங்
காணலு மாகுங் கலந்துடன் வைத்ததே.

(ப. இ.) சிவபெருமானைப், படைப்போனாகவும், காப்போனாகவும், துடைப்போன் மறைப்போன் அருள்வோனாகவும் காணுதல் ஆகும். இத் திருவுருவங்கள் திருவருளாற்றலுடனும் ஆவியுடனும் சிவபெருமான் உடங்கியைந்து தோற்றினவாகும். கறைக்கண்டன் - துடைப்போன்-ஈசன் - மறைப்போன். சதாசிவம் - அருள்வோன். சத்தி - திருவருளாற்றல். (௬0)

---

# 15. ஆயுள் பரிட்சை

750. வைத்தகை சென்னியில் நேரிதாய்த் தோன்றிடில்
உத்தம மிக்கிடில் ஓராறு திங்களாம்
அத்த மிகுத்திட் டிரட்டிய தாயிடில்
நித்தல் உயிர்க்கொரு திங்களில் ஓசையே.

(ப. இ.) உயிர்ப்போசையானது உச்சிக்கு நேரே அளவாய்த் தோன்றிடில் முதன்மை நிலையாகும். அளவின் மிகுமானால் ஆறு திங்களில் அகவை முடிவெய்தும். அதுவும் இரண்டுமடங்காயின் ஒரு திங்களில் அகவை முடிவெய்தும் என்க. அகவை - வயது.

(அ. சி.) அத்தம் - கை. (௬)

751. ஓசையும் ஈசனும் ஒக்கும் உணர்வின்கண்
ஓசை யிறந்தவர் ஈசனை உள்குவர்
ஓசை யிறந்தவர் நெஞ்சினுள் ஈசனும்
ஓசை யுணர்ந்த வுணர்விது வாமே.

(ப. இ.) அறிவுருவாகிய சிவபெருமான் உயிர்ப்பின்கண்ணும் திருவுருவின்கண்ணும் ஒப்ப விளங்குவர். உயிர்ப்பை அடக்கியவர் இறைவனை எண்ணுவர். அங்ஙனம் உயிர்ப்படக்கியவர் நெஞ்சினுள் இறைவனும் ஆவியறிவுடன் ஒன்றித்து மேம்பட்டு விளங்குவன். ஓசை - உயிர்ப்பு. இறந்தவர் - உயிர்ப்பை அடக்கியவர்.

(அ. சி.) ஓசை இறந்தவர் - மனம் அடங்கப்பெற்றவர். (உ)

752. ஆமே அழிகின்ற வாயுவை நோக்கிடில்
காமே லுறைகின்ற நன்மை யளித்திடும்
பூமேல் உறைகின்ற போதகம் வந்திடும்
தாமே யுலகில் தலைவனு மாமே.

(ப. இ.) உயிர்ப்பினர்க்கு வெளியில் புறப்பட்டுச் சென்று அழிகின்ற நால்விரல் உயிர்ப்பையும் அடக்கின், அஃது அண்ணாக்கு மேலேக்கி எழுந்து மூக்குவழியினை அடைக்கும் நன்மையினைத் தரும். பரவெளி ஆயிர இதழ்த்தாமரைமேல் விளங்கும் திருவடியுணர்வு கைகூடும். அவ் வுணர்வு கைகூடியவர் செந்நெறித் தலைவருமாவர். போதகம் - திருவடி யுணர்வு. (கூ)

753. தலைவ னிடம்வலஞ் சாதிப்பார் இல்லை
தலைவ னிடம்வல மாயிடில் தையல்
தலைவ னிடம்வலந் தன்வழி யஞ்சில்
தலைவ னிடம்வலந் தன்வழி நூறே.

(ப. இ.) தலைவனருளால் உயிர்ப்பினை இடமூக்கு வலமூக்கு வழி யாகச் செலுத்தவேண்டிய முறைப்படி செலுத்திப் பயிற்சிசெய்யின் நெடுநாள் வாழலாம். அங்ஙனம் செய்வார் அரியர். அப் பயிற்சி செய் வார்க்குத் திருவடி கைகூடும். இம்முறைப் பயிற்சி நாடொறும் ஐவைந்து நாழிகைகள் பயிலின் அகவையும் நூறுகும். அஞ்சில்-ஐந்து நாழிகையில். உயிர்ப்பும் ஐவிரலின் அளவினதாகும்.

(அ. சி) இடம் வலம் சாதிப்பார் - பிராணயாமத்தைச் சரியாய்ச் செய்து முடிப்பவர். (ச)

754. ஏறிய வாழினில் எண்பது சென்றிடுங்
தேறிய ஏழிற் சிறக்கும் வகையெண்ணில்
ஆறேரு பத்தாய் அமர்ந்த இரண்டையுங்
தேறியே நின்று தெளியிவ் வகையே.

(ப. இ.) அவ் வுயிர்ப்பு ஆறு விரலளவாக ஓடினால் அகவை எண்ப தாகும். ஏழாஞல் அறுபதாண்டு வாழ்வர். (இ)

755. இவ்வகை எட்டும் இடம்பேற ஓடிடில்
அவ்வகை [1]ஐம்பதே யென்ன அறியலாஞ்
செவ்வகை ஒன்பதுஞ் சேரவே நின்றிடின்
மூவ்வகை யாமது முப்பத்து மூன்றே.

(ப. இ.) அவ் வுயிர்ப்பு எண்விரலளவாக ஓடினால் ஐம்பதாண்டு வாழ்வர். ஒன்பது விரலளவாக ஓடினால் முப்பத்துமூன்றாண்டு வாழ்வர். (ஈ)

756. மும்மூன்றும் ஒன்றும் முடிவுற நின்றிடில்
[2]எண்மூன்றும் நாலும் இடவுகை யாய்நிற்கும்
ஐம்மூன்றும் ஓடி அகலவே நின்றிடிற்
பன்மூன்றே டாறாறு பார்க்கலு மாமே.

(பாடம்) 1. யையொன்ப தேயன்ன : யொன்பதே யென்ன.
,, 2. எண்மூன்றி னாலும்.

(ப. இ.) சரவோட்டம் பத்து எண்வரை நின்று முடிவுபெறில் இருபத்தெட்டு ஆண்டு அகவை என்பர். பதினைந்து ஓடி அகன்று நிற்பின் அகவை இருபத்தைந்தென்ப. (எ)

757. பார்க்கலு மாகும் பகல்முப் பதுமாகில்
ஆக்கலு மாகுமவ் வாறிரண் டுள்ளிட்டுப்
போக்கலு மாகும் புகலற ஒன்றெனில்
தேக்கலு மாகுந் திருத்திய பத்தே.

(ப. இ.) பகல் முப்பது நாழிகையும் பன்னிரண்டு கூறிட்டுச் சரவோட்ட எண்ணை மேலோதியவாறு பகுத்து ஒழுகுதல் வேண்டும். ஒற்றைப்பட எண் வருமானால் அவற்றை இரட்டைப்பட வருமாறு அமைத்துக்கொள்ளுதல் வேண்டும். (அ)

758. ஏயிரு நாளும் இயல்புற ஓடிடிற்
பாயிரு நாளும் பகையற நின்றிடும்
தேய்வுற மூன்றுந் திகழவே நின்றிடில்
ஆயுரு வாவென் றளக்கலு மாமே.

(ப. இ.) பொருந்திய நாட்கள் இரண்டிலும் இயற்கை முறையாக ஓடினால் அந்நாட்கள் அகப்பகை புறப்பகை இல்லாதகலும், ஒட்டம் இளைத்து மூன்றெண்ணுக்கு வருமானால் ஆராயப்படும் உருவகையென்று ஆராய்ந்து கூறலுமாம். (கூ)

759. அளக்கும் வகைநாலும் அவ்வழி யேஓடில்
விளக்கும் ஒருநாலு மெய்ப்பட நிற்கும்
துளக்கும் வகையைந்துந் தூய்நெறி ஓடில்
களக்க மறமூன்றிற் காணலு மாமே.

(ப. இ.) ஆராயும் அவ் வோட்டம் நான்காக ஓடினால் விளக்கமுற அவ்வொரு நான்கும் மெய்க்கண் பொருந்திநிற்கும். அவ் வசைவு ஐந்தாக ஓடினால் குற்ற மூன்றில் முடிவதையும் காணலாம். (க0)

760. காணலு மாகுங் கருதிய பத்தோடிற்
காணலு மாகுங் கலந்த இரண்டையும்
காணலு மாகுங் கலப்பற மூவைந்தேற்
காணலு மாகுங் கருத்துற ஒன்றே.

(ப. இ.) அவ் வோட்டம் பத்தாயின் பகை உறவு இரண்டினையும் காணலாம். பதினைந்து ஓடின் கருத்திற் பொருந்த உறவொன்றே காணலாகும். (கக)

761. கருதும் இருபதிற் காணஆ றுகும்
கருதிய ஐயைந்திற் காண்பது மூன்றும்
கருதும் இருப துடனைது காணிற்
கருதும் இரண்டெனக் காட்டலு மாமே.

(ப. இ.) இருபது ஒடிஞல் அறுவகை நிலேகள் காணலாகும். இருபத்தைத்தேல் மூவகை நிலேகளாகும். இருபத்தாறேல் இரண்டு நிலேகள் காணலாகும். (கஉ)

762. காட்டலு மாகுங் கலந்திரு பத்தேழில்
காட்டலு மாகுங் கலந்தெழும் ஒன்றெனக்
காட்டலு மாகுங் கலந்திரு பத்தெட்டிற்
காட்டலு மாகுங் கலந்தஈ ரைந்தே.

(ப. இ.) இருபத்தேழில் கலந்து தோன்றும் ஒருநிலே காணலாம். இருபத்தெட்டில் எழுநிலேகள் காணலாம். (கஊ)

763. ஈரைந்தும் ஐந்தும் இருமூன்றும் எட்டுக்கும்
பாரஞ்சி நின்ற பகைபத்து நாளாகும்
வாரஞ்செய் கின்ற வகையாறஞ் சாமாகில்
ஓரஞ்சோ டொன்றேறன் றெனவொன்று நாளே.

(ப. இ.) இருபத்தொன்பதாஞல் பத்துநாட்களுக்குள் பகையாகும். மூப்பதாகில் ஏழுநாட்களுள் பகையாகும். (கச)

764. ஒன்றிய நாள்கள் ஒருமுப்பத் தோன்றுகிற்
கன்றிய நாளுங் கருத்துற மூன்றுகுஞ்
சென்றுயிர் நாலெட்டுஞ் சேரவே நின்றிடின்
மன்றியல் பாகு மனேயில் இரண்டே.

(ப. இ.) பொருந்திய நாட்களில் முப்பத்தொன்றுகில் மூன்று நாட்களுள் கன்றுதல் ஏற்படும். முப்பத்திரண்டு நின்றிடில் இரண்டு நாட்களுக்குள் பொதுமை ஏற்படும். (கடி

765. மனேயில்ஒன் றுகும் மாதமு மூன்றுஞ்
சுனேயில்ஒன் றுகத் தோனிச்தனன் நந்தி
வினேயற வோங்கி வெளிசெய்து நின்றுல்
தனேயுற நின்ற தலேவனு மாமே.

(ப. இ.) முப்பத்து மூன்றுஞல் அருளில் ஒன்றுபடும் என நந்தி அருளினன். தற்செயலற்று அருள்வழி நின்றுல் தலேவனேச் சாரும் தனி இயல்புண்டாகும். மாதமும் - முப்பதும்: இது தொகைக்குறிப்பு. (கசு)

766. ஆரு மறியார் அளக்கின்ற வன்னியை
ஆரு மறியார் அளக்கின்ற வாயுவை
ஆரு மறியார் அழிகின்ற அப்பொருள்
ஆரு மறியா அறிவழிந் தேனே.

(ப. இ.) அகத்துக் காணப்படும் தீயை அளப்பதும்; காற்றையளப்பதுமாகிய நிலேகளே யாரும் அறியார். அப் பொருள்கள் அழிவு

பாடுடைய்ன என்றும் யாரும் அறியார். அடியேன் திருவருள் துணையால் அவற்றையறியும் அறிவறிந்தேன். (கள)

767. அறிவது வாயுவோ டைந்தறி வாய
அறிவா வதுதான் உலகுயி ரத்தின்
பிரிவுசெ யாவகை பேணியுள் நாடிற்
செறிவது நின்று திகழு மதுவே.

(ப. இ) காற்றெலாம் ஒடுங்கி அவற்றுடன் ஏனைய நான்கு பூதமும் கூட ஐந்தனையும் அருளால் உணர்தல் வேண்டும், வேரறநிற்கும் சிவ பெருமானை அகத்தே பேணிநாடுதல் வேண்டும். அப்பொழுது அச்சிவன் செறிந்து விளங்குவான். செறிந்து - நிறைந்து. (கஅ)

768. அதுவரு ளும்மரு ளான துலகம்
பொதுவரு ளும்புக ழாளர்க்கு நாளும்
மதுவரு ளும்மலர் மங்கையர் செல்வி
இதுவருள் செய்யும் இறையவ னுமே.

(ப. இ.) அகத்திருள் நீங்க வினைக்கிடாக மருளான உலகைப் படைத்தருளும், திருவடியைப் புகழ்வார்க்குப் பொதுநிலை அருளப்படும். தேன்நிறைந்த மலர் சூடிய மங்கையர் செல்வி வாய்க்கும். இதை யருள்வது இறைவனுகும். (கக)

769 பிறப்பது சூழ்ந்த பெருந்தகை நந்தி
குறிப்பது கூடிய கோலக் குரம்பைப்
பழப்பதி யாவது பற்றறும் பாசம்
அழப்படி செய்வார்க் ககலு மதியே.

(ப. இ.) ஆருயிர்கள் பிறத்தல்வேண்டும் என நந்தி திருவுள்ளக் குறிப்புக் கொண்டருளினன். அக் குறிப்பினால் மாயாகாரியமாகிய குரம்பையை ஒத்த இவ் வுடம்பு ஆருயிர்கட்கு அமைந்தது. இவ்வுடன் தொன்றுதொட்டு வருவது. பாசப்பற்றறுக்கக் கருவியாவதும் இதுவே. பாசங்கள் அழுதுவிலகும்படி செய்வார்க்கு மெய்யுணர்வு பெருகும். (உ0)

---

# 16. வார சரம்

770. வெள்ளிவெண் திங்கள் விளங்கும் புதனிடம்
ஒள்ளிய மந்தன் இரவிசெவ் வாய்வலம்
வள்ளிய பொன்னே வளரும் பிறையிடந்
தெள்ளிய தேய்பிறை தான்வல மாமே.

(ப. இ.) உயிர்ப்பின் ஒட்டத்தைச் சரமென்பர். அது, வெள்ளி திங்கள் புதன் கிழமைகளில் இடமூக்கின் வழியாகச் செல்லுதல் வேண்டும்.

சனி ஞாயிறு செவ்வாய்க் கிழமைகளில் வலமூக்கின்வழியாக ஒடுதல் வேண்டும். வியாழக்கிழமைக்கு வளர்பிறையில் இடமூக்கும் தேய்பிறை யில் வலமூக்குமாக ஒடுதல் வேண்டும். (உ)

771. வெள்ளிவெண் திங்கள் விளங்கும் புதன்மூன்றுந்
தள்ளி இடத்தே தயங்குமே யாமாகில்
ஒள்ளிய காயத்துக் கூன மிலையென்று
வள்ளல் நமக்கு மகிழ்ந்துரைத் தானே.

(ப. இ.) வெள்ளி, திங்கள். புதன் ஆகிய மூன்று நாட்களிலும் இயல்பாகவே பயிற்சிவயத்தால் வலமூக்கைவிட்டு இடமூக்கின் வழி யாகவே ஒடின் சிறந்த உடம்பினுக்கு அழிவில்லை என்று வள்ளலாகிய சிவபெருமான் மகிழ்ந்தருளிச் செய்தான். (ஊ)

772. செவ்வாய் வியாழஞ் சனிஞாயி றேஎன்னும்
இவ்வா றறிகின்ற யோகி இறைவனே
ஒவ்வாத வாயு வலத்துப் புரியவிட்டு
அவ்வா றறிவார்சகறி வானந்த மாமே.

(ப. இ) செவ்வாய், வியாழம், சனி, ஞாயிறு ஆகிய கிழமைகளில் முற்கூறிய முறைப்படி ஒட்டம் அறிபவர் வலமூக்கின் வழியாகச் செலுத்தி அழியாவின்பம் எய்துவர். இவ்வா றறிகின்ற என்ற பாடத்திற்கு இவ் + ஆர் எனப் பிரித்து இவ் வகையான நிறைந்த மறை எனக் கொள்க. மறை - இரகசியம். இனி வார், வாரம் என்பதன் கடைக்குறை எனினும் ஒக்கும். (கூ)

773. மாறி வருமிரு பான்மதி வெய்யவன்
ஏறி இழியும் இடைபிங் கலையிடை
ஊறுமு உயிர்நடு வேயுயி ருக்கிரந்
தேறி அறிமின் தெரிந்து தெளிந்தே.

(ப. இ.) திங்கட்கிழமை ஞாயிற்றுக்கிழமைகளில் மூச்சு ஒட்டம் நடக்கவேண்டிய முறைக்கு மாறுக (770) நடந்து ஏறி இறங்குவதும் நடு நாடியிற் புகுவதும் கண்டால் உயிருக்கு இடர்வரும் 'என எண்ணுதல் வேண்டும். ஊறும் உயிர் - வளருமுயிர். (எ)

774. உதித்து வலத்திடம் போகின்ற போது
அதிர்த்தஞ்சி யோடுத லாமகன் ருரும்
உதித்தது வேமிக வோடிடு மாகில்
உதித்த விராசி யுணர்ந்துகோ ளுற்றே.

(ப. இ) அவ்வக் கிழமைகட்குக் கூறிய முறைப்படி தோன்றி மூச்சு ஒடும்போது சிதறி ஒடினல் இறப்பு நெருங்கும் என்று அஞ்சுக. அவ் வுயிர்ப்பு அளவில்லாமல் ஒடினல் உடன் இறப்பர் என்க. அதிர்த்து - சிதறி. இராசி - ஒழுங்கு. (ஏ)

775. நடுவுநில் லாமல் இடம்வலம் ஓடி
அடுகின்ற வாயுவை அந்தணன்[1] கூடி
இடுகின்ற வாறுசென் றின்பணி சேர
மூடிகின்ற தீபத்தின் முன்னுண்டென் ருனே.

(ப. இ.) உயிர்ப்போட்டம் நடுநாடியில் நிற்றல்வேண்டும். அப்படி நில்லாமல் இடம் வலம் ஓடினால் அதனால் இறப்பு நேரும். அவ்வாறு இறப்பினைத் தரும் மூச்சோட்டத்தைச் சிவபெருமான் திருவடிக்கீழ் நிறுத்தில் மூலவாற்றல் எழும்பும். திருவருள் ஒளி ஆவியுடன் விளங்கும். அந்தணன் கூடின் : சிவபெருமான் சேரின்; இது, திருவடி மறவா நெறியான் வருவது.

(அ. சி.) நடுவுநில்லாமல் - சுழுமுனையில் நில்லாமல். அந்தணன் - சிவபெருமான். பணி - குண்டலி சத்தி. தீபம் - பிராணன் சென்று அடங்கும் சோதி. (சு)

776. ஆயும் பொருளும் அணிமலர் மேலது
வாயு விதமும் பதினு றளவலி
போய மனத்தைப் பொருகின்ற வாதாரம்
ஆயுவு நாளு முகுர்த்தமு மாமே.[2]

(ப. இ.) அகத்தவத்தோராகிய யோகிகள் ஆராயும் பொருள் பர வெளித்தாமரையில் விளங்கும் முழுமுதற் சிவனேயாம். அதற்காகப் பயிலும் மூச்சுப்பயிற்சியும் பதினறு (550) மாத்திரை என்ப. மன வொடுக்கத்தை யருளும் காரணப்பொருளும் அச் சிவனேயாம். வாழ் நாட்களைக் கூறுபடுத்தி வழங்கும் நாள், கிழமை, திங்கள். ஆண்டு, முழுத்தம் முதலியவற்றின் காரணப்பொருளும் சிவபெருமானேயாம். அதனால் அகவை (ஆயுள்) மிகும் என்பதாம். மலர்-தாமரை, ஆதாரம்-ஒடுக்கும் சிவம். முகுர்த்தம் - முழுத்தம். (எ)

---

# 17. வார சூலம்

777. வாரத்திற் சூலம் வரும்வழி கூறுங்கால்
நேரோத்த திங்கள் சனிகிழக் கேயாகும்
பாரோத்த சேய்புதன் உத்தரம் பானுநாள்
நேரோத்த வெள்ளி குடக்காக நிற்குமே.

(ப. இ.) மறைப்பாற்றலின் கைப்படையாகிய முத்தலைவேல் (சூலம்) வரும் வழி வருமாறுரும்: திங்கட்கிழமையும் சனிக்கிழமையும் கீழ்புலம் (திசை) ஆகும். செவ்வாய்க்கிழமையும் புதன்கிழமையும் வடக் காகும். ஞாயிற்றுக்கிழமையும் வெள்ளிக்கிழமையும் மேற்காகும்.

---

1. அறவாழி அந்தணன், திருக்குறள். அ.
2. ஊழியு. சம்பந்தர், கூ. 60ஏ-எ.

பாரொத்த - நிலத்துக்குப் பொருந்திய. சேய் - செவ்வாய். உத்தரம் - வடக்கு. குடக்கு - மேற்கு. (உ)

778. தெக்கண மாகும் வியாழத்துச் சேர்திசை
அக்கணி சூலமு மாமிடம் பின்னுகில்
துக்கமும் இல்லே வலமுன்னே தோன்றிடின்
மிக்கது மேல்வினே மேன்மேல் விளையுமே.

(ப. இ.) வியாழக்கிழமை தென்புலமாகும். எலும்புமாலே சூட்டம் பெற்ற முத்தலேவேல் இடப்பக்கத்தும் பின்பக்கத்தும் உறுதுணேயாய் நிற்பின் முயலும் செயல் அனேத்தும் இன்பமாய் இயலும். வலப்பக்கத்தும் முன்பக்கத்தும் தோன்றுமாஞல் செயல் துன்பமாய் முடியும். எடுத்துக் காட்டாக: வெள்ளி, ஞாயிறு, செவ்வாய், புதன் ஆகிய நான்கு நாட்களும் கிழக்குநோக்கிச் செல்லலாம். திங்களும் சனியும் வியாழனும் மேற்கு நோக்கியும், வியாழனும் வெள்ளியும் ஞாயிறும் வடக்குநோக்கியும், செவ்வாயும் புதனும் திங்களும் சனியும் தெற்குநோக்கியும் போதல் நன்மையாம். (உ)

---

# 18. கேசரி யோகம்

779. கட்டக் கழன்று கீழ்நான்று வீழாமல்
அட்டத்தைக் கட்டி அடுப்பை அணேகோலி
விட்டத்தைப் பூட்டி மேற்பையைத் தாட்கோத்து
நட்ட மிருக்க நமனில்லே தானே.

(ப. இ.) இன்பமிழ்தமாகிய விந்துவை உச்சித்தொளேக் குகைக்கண் நிரப்பி வைத்தல் வேண்டும். ஒரோவழி அது கீழ்நோக்கால் ஒழுகிவிடாமல் மேல் வாயாகிய அண்ணத்தின்கண் தடுத்து, அடுப்பாகிய (இடகலே பிங்கலே சுழுமுனே) மூன்று நாடிகள் கூடுமிடத்து உண்ணுக்காஞ் அணேகோலி விட்டமாகிய புருவ நடுவின்கண் நிறுத்தி, கருமூலப்பையாகிய விதையுட் புகாமல் அடைத்து நடுநாடியில் உறைத்து நிற்பதனல் நமன் தணுகான் என்க. அட்டம் - அண்ணம். பை - விதை. நட்டம் - நடு. மூன்று நாடி கூடுமிடத்தைத் தீமண்டிலமென்பாருமுளர்.

(அ. சீ.) கட்ட - விந்துவைக் கட்ட. கழ...விழாமல் - வெளிப்படாமல். அட்ட...கோலி - வீணுத்தண்டின் கடைவாயிலேத் திறந்துவிட்டம் - வீணுத்தண்டு. மேற்பை - சகசிர அறை. நட்டம் இருக்க - நாடி இருக்க. (உ)

780. வண்ணன் ஒலிக்குஞ் சதுரப் பலகைமேற்
கண்ணுறு மோழை படாமற் கரைகட்டி
விண்ணுறு பாய்ச்சிக் குளத்தை நிரப்பினுல்
அண்ணுந்து பார்க்க அழுக்கற்ற வாறே.

(ப. இ.) உயிர் வெளிச் செல்லும் சிறந்த வாயில்களாகிய கண், செவி மூக்கு, வாய் என்னும் அறிகருவி நான்கும் ஒன்றுகூடும் அண்ணத்திடத்து, அதன்மேலிருக்கும் அமிழ்த ஆறு வரும் தொளை கீழ்நோக்கி ஒழுகும். அவ்வொழுக்கு ஆருயிர் வீணுகாது, உச்சித்தொளைக் குகையில் நிரப்பி அத்தொளையை நாநுனியால் அடைக்க அதை நடுநாடி வழியாகச் செலுத்தி அக்குளத்திலே நிரப்பிஎல் மேல்நோக்கும் எண்ணம் தோன்றும். தோன்றவே இருட்சார்பாம் மருள்மயக்க அழுக்கு அகலும்.

(அ. சீ.) வண்ணன் - பிரானன். சதுரப் பலகை - நாற்சந்தி. மேற் கண்ணுறு - அமுதம் வரும் மேலேத்துவாரம். மோழைபடாமல் - வீண்போகாமல். குளம் - கபாலக்குகை, மனம். (உ)

781. இடக்கை வலக்கை இரண்டையும் மாற்றித்
துதிக்கையால் உண்டார்க்குச் சோரவும் வேண்டாம்
உறக்கத்தை [1]நீக்கி உணரவல் லார்கட்கு
இறக்கவும் வேண்டாம் இருக்கவு மாமே.

(ப. இ.) இடநாடி வலநாடி வழியாகக் கீழ்நோக்கும் அமிழ்தினை மாற்றி, உள்நாக்கை வளைத்துத் துதிக்கைபோலமைத்து அத்தொளைகளை அடைத்து நடுத்தொளை வழியாக நுகர்வார்க்கு இறப்பிற்கு அஞ்சிச் சோர்வடைதல் ஏற்படாது. (உயிர்ப் பண்பாகிய உண்டி, உறக்கம், பயம், இன்பம் ஆகிய நான்களுள் உறக்கமட்டும் சொல்லப்பட்டுள்ளது; இனம்பற்றி ஏனையவும் சேர்த்துக்கொள்ளுதல்வேண்டும்.) உறக்க முதலிய உயிரின் பொதுக்குணம் கொள்ளாது சிவபெருமான் திருவடியை இடையறாது எண்ணும் திண்ணிய சிறப்புக் குணம் கொள்ளும் மெய்யடியார்கட்கு இறப்பும் நேராது. விழைந்த நாளெல்லாம் உடம்போடு வாழுதலும் கூடும். துதிக்கை: நுதிக்கை; முனையுள்ள கை.

(அ. சீ.) இடக்கை, வலக்கை - இடகலை, பிங்கலை. துதிக்கை - சுழுமுனை. (கூ)

782. ஆய்ந்துரை செய்யில் அமுதநின் றூறிடும்
வாய்ந்துரை செய்யும் வருகின்ற காலத்து
நீந்துரை செய்யில் நிலாமண் டலமதாய்ப்
பாய்ந்துரை செய்தது பாலிக்கு மாறே.

(ப. இ.) செந்தமிழ்த் திருமாமறை முதலியவற்றை நன்கு ஆராய்ந்து கூறுமிடத்து, நெற்றியமிழ்து நிலைபெற்று ஊறுந்தன்மை கைகூடி மிகுதிப்படும் செவ்வி வரும் என்பது புலனும். அது வரும்பொழுது, மிகுதியாகக் கூறப்படும் மதிமண்டலத் திருந்து திருவடியை நினையுமாறும் அவ்வமிழ்தை ஒம்புமாறும் நவில்வதுண்டாகும். அங்ஙனம் நவிலுவதே இப்பகுதியின் நோக்கமாகும். நவிலுதல் - சொல்லுதல். வாய்ந்து - கைகூடி. துரை - மிகுதி. நீந்துரை - மிகுதி. நிலா மண்டலம் - நெற்றிநடு. பாய்ந்து - பாவித்து; நினைத்து பாலிக்கும் - ஒம்பும்.

---

1. புழுவுக். அப்பர், தி. கூக-ச.

2. உரைமாண்ட. அ. திருத்தோணோக்கம், கூ.

(அ. சி.) வாய்ந்து - சித்திபெற்று. நீந்து - மிகுதியாக. பாலிக்கு மாறு - காப்பாற்றுமாறு. (ச)

783. நாவின் நுனியை நடுவே சிவிறிடிற்
சீவனும் அங்கே சிவனும் உறைவிடம்
மூவரு முப்பத்து மூவருந் தோன்றுவர்
சாவதும் இல்லை சதகோடி யூனே.

(ப. இ.) நாக்கின் நுனியால் அண்ணமுகட்டில் காணப்படும் உச்சித் தொளை வழியைத் துருத்திபோல் குவித்துவைத்து அடைத்தால், அங்கு உயிரும் உயிர்க்குயிராம் சிவனும் உடங்கியைந்துறைவர். திருவருட் கண்ணால் காணுதலின் ஆவி முத்தேவரையும், முப்பத்துமுக்கோடி தேவரையும் எளிதிற் காண்பர். உடலுக்கு நூறுகோடி ஊழியாயினும் அழிவில்லை என்க. சிவிறிடல் - விசிறியின் அடிப் பகுதியில் விரிந்து குவிதல். மூவர்: அயன், அரி, அரன். முப்பத்துமூவர்: பகலவர் பன்னிருவர், முனிவர் (உருத்திரர்) பதினொருவர், வசுக்கள் எண்மர், மருத்துவர் இருவர் என்ப. சதம் - நூறு. ஊன் - உடல். (இ)

784. ஊனூறல் பாயும் உயர்வரை உச்சிமேல்
வானூறல் பாயும் வகையறி வாரில்லை
வானூறல் பாயும் வகையறி வாளர்க்குத்
தேனூறல் உண்டு தெளியலு மாமே.[1]

(ப. இ.) உயர்விடமாகிய நெற்றிநடுவில் உடலமிழ்து ஒழுகு இவ்வமிழ்தினை விந்து என்பர். இதனைக் கீழ்நோக்கிச் செல்லவிடாமல் மூச்சுப் பயிற்சியால் உச்சித்தொளைக்கு ஏற்றின் அது வானமிழ்து என்னும் பெயர் பெறும். உச்சி உயர்ந்த இடமாதலின் வான் எனப் பெயர் பெற்றது. ஊறல் - இடையறு ஊற்றுடைய புனல். இதனை ஆகாயக் கங்கையென உருவகித்தனர். திருவருள் துணையால் இந்நிலை எய்தினர்க்குத் தேனூறலாகிய திருவடியின்பம் உண்டு; திருவடி யுணர்வாகிய தெளிவும் உண்டு. (கங்கை மதி பாம்பு கடுக்கை என்னும் நான்கும் இறைவன் முடிமேல் உள்ளன. ஈண்டு ஒப்புநோக்குங்கால் கங்கை: வானூறல். மதி; ஊனூறல். பாம்பு: குண்டலியாற்றல், கடுக்கை: தேனூறல் - என்ப.)

(அ. சி.) ஊன் ஊறல் - சுக்கிலம். வான் ஊறல் - அமுதம். தேன் ஊறல் - அமுதத்தின் சுவை. (க)

785. மேலையண் ணுவில் விரைந்திரு காலிடிற்
காலனும் இல்லை கதவுந் திறந்திடும்
ஞாலம் அறிய நரைதிரை மாறிடும்
பாலனு மாவான் பராகந்தி ஆணையே.

(ப. இ.) மேல்வாய் அகத்துக் காணப்பெறும் அண்ணுக்காகிய உள் நாக்கில் இரு மூக்கின் வழியாகவும் வரும் உயிர்ப்பி (பிராணவாயு)னை

1: கங்கையும். கூ. தடுத்தாட்கொண்ட புராணம், க.

வேகமாகச் சென்று பொருந்தும்படி பயிலின், பயின்றூர்க்குக் காலன் செயலாகிய இறப்பில்லை. உச்சித்தொளை வாயிலும் திறந்திடும். உலகம் அறிய நரை திரை முதலிய உடல் தன்மைகள் மாறிவிடும். முழுமுதற் சிவத்தின் ஆணையாகும் இது. பராநந்தி - முழுமுதற் சிவம்.

(அ. சீ.) அண்ணு - அண்ணுக்கு. (எ)

786. நந்தி முதலாக நாமேலே யேறிட்டுச்
சந்தித் திருக்கில் தரணி முழுதாளும்
பந்தித் திருக்கும் பகலோன் வெளியாகச்
சிந்தித் திருப்பவர் தீவினை யாளரே[1].

(ப. இ.) முழுமுதற்சிவம் காட்டும் ஆசானுக; அவன் காட்டிய வழியே உள்நாக்கினை மேலே ஏறிட்டு அடைத்து இருந்தால் நெடுநாள் உலகினை ஆளலாம். வலமூக்கின் வழிவரும் உயிர்ப்பு நெற்றியமிழ்து. முற்றுதபடி தடைப்படுத்தும் அத் தடை நீங்கி வெளியாகும்படி இடையருது எண்ணுமவர்க்கு எளிதாக மேலது கைகூடும். இப்பயிற்சியிலாதார் பிறப்பு இறப்புத் துன்புக்கு ஆட்படும் தீவினையராவர். முதலாக - ஆசானுக.

(அ. சீ.) பந்தி...பகலோன் - அமுதம் பெருகாதபடி அதனைத் தன்னுள் அடக்கிக்கொண்டிருக்கும் சூரியகலை அல்லது பிங்கலை. (அ)

787. தீவினை யாடத் திகைத்தங் கிருந்தவர்
நாவினை நாடின் நமனுக் கிடமில்லை
பாவினை நாடிப் பயனறக் கண்டவர்
தேவினை யாடிய தீங்கரும் பாமே.

(ப. இ.) பாவச் செயல்களைச் செய்ததனால் பிறப்பு இறப்புக்கு உட்பட்டுத் திகைப்புற்றிருந்தவர். நாவின் நுனியால் உண்ணுக்குத் தொளையை அடக்கும் பயிற்சியாகிய கேசரியோகத்தைப் பயின்றால் நெடுநாள் வாழ்வர். அவர்களிடத்து நமனுக்கு வேலையில்லை. செந்தமிழ் மறைப்பாட்டினை ஆராய்ந்து இடையருது ஓதி அதன் முழுப் பயனையும் மேற்கொண்டவர் சிவத்துடன் கூடிப் பேரின்பமுறுவர். பாவினை - திருமறைத் திருப்பாட்டை. பயனற. (அறபயன் என்பன முன்பின்னாகத் தொக்கன.) முழுப்பயனையும். அற - முழுவதும்.

(அ. சீ.) தீவினையாட - தீய கருமங்களாலே. நாவினை நாடில் - நாவின் நுனியை அண்ணுக்கில் சிவிறிடில் (இதுதான் கேசரி யோகம்.) பாவினைப் பாடி - மறைப்பாட்டுக்களைப் பாடி. தேவினை - நன்மைதரும் கருமங்களாலே. (கூ)

788. தீங்கரும் பாகவே செய்தொழி லுள்ளவர்
ஆங்கரும் பாக அடையநா வேறிட்டுக்
கோங்கரும் பாகிய கோணை நிமிர்த்திட
ஊன்கரும் பாகியே ஊனீர் வருமே.

---

1. ஊரிலா. அப்பர், இ. கஎ . எ.

(ப. இ.) கேசரியோகப் பயிற்சியால் வெறுக்கத் தகுந்த உடம்பினை விரும்பத் தகுந்த கரும்புபோல் ஆக்கிக்கொண்டவர் பூவரும்புபோன்ற நாவின் நுனியை மேலேக்கிக் குவித்துச் செலுத்திப் பாம்பின் தலை போன்று காணப்படும் கோங்கரும்பை ஒத்த குண்டலியின் வளைவை நேராக்கினால், உடல் கரும்புபோன்று இனிமையுடையதாய் மதிமண்டலத் தமிழ்தும் நுகரவரும். கோணை - வளைவை. ஊனீர் - உடலமிழ்து.

(அ. சி.) கோங்கு அரும்பு - பாம்பின் தலை. குண்டலி. (கo)

789. ஊனீர் வழியாக வுண்ணுவை யேறிட்டுத்
தேனீர் பருகிச் சிவாய நம[1] வென்று
கானீர் வருவழி கங்கை தருவிக்கும்
வானீர் வருவழி வாய்ந்தற் வீரே.

(ப. இ.) மதிமண்டலத் தமிழ்தாகிய ஊனீர் வழியாக உண்ணுக்கை மேற்செலுத்திப் பின்தோன்றுந் திருவருளின்பினைத் துய்த்து 'சிவாயநம' என்னும் செந்தமிழ்த் திருமறை ஐந்தினையும் இடையருது கணித்தாம் உச்சித்தொளை அமிழ்தமாகிய பேரின்பம் வருவழியைத் திருவருள் அமைத்தருளும். இதுவே பரவெளிப் பேரின்பம் வரும் வழி என்று அறிந்து கொள்வீராக.

(அ. சி.) ஊனீர் - அமுதம். கான் - மேல்வீடு. கங்கை - இடைகலை. (கக)

790. வாய்ந்தறிந் துள்ளே வழிபாடு செய்தவர்
காய்ந்தறி வாகக கருணை பொழிந்திடும்
பாய்ந்தழிந் துள்ளே படிக்கத வொன்றிட்டுக்
கூய்ந்தறிந் துளளுறை கோயிலு மாமே.

(ப. இ.) முற்கூறிய முறைப்படி அமைந்துணர்ந்து அகவழிபாடு செய்தவர்க்குச் சிவபெருமான் அவர்களுடைய கார் அறிவாம் அறி யாமையை எரிப்பர். அவ் வுயிர் திருவடியுணர்வில் அடங்கி அவ்வுணர் வாகவே நிற்கும்படி திருவருள் புரிவர். அத் திருவடி யுணர்வுப் பரப்பில் நிறைந்து. சிவனை உணர்ந்து கேசரியோக அடையாளமாகிய தடையினை அமைத்து அதனால் மலமகன்று திருவடியை ஒவாது உணர்ந்தாருள்ளம் சிவனுறை திருக்கோயிலுமாகும்.

(அ. சி.) காய்ந்து - அஞ்ஞானத்தை எரித்து. படிக்கதவு - கேசரி மூத்திரையாகத் தடை. கூய்ந்து - நிர்மலமாகி. (கஉ)

791. கோயிலின் உள்ளே குடிசெய்து வாழ்பவர்
தாயினும் நல்லார் தரணி முழுதுக்குங்
காயினும் நல்லவர் காய்ந்தவர் தம்முளுந்
தீயினும் தீயரத் தீவினை யாளர்க்கே.[1]

(ப. இ.) உள்ளக்கோயிலினுள்ளே சிவபெருமான் குடியிருந்து வாழ்வர். எல்லாவுலகங்களுக்கும் திருவருள் செய்வதில் தாயினும் நல்லவராவர்: நோய்க்கு மருந்துபோல் தீவினையாளர் தம் தீவினையைத்

1. பால்நினைந். அ. பிடித்தபத்து, கூ.

துன்பம் தந்து காய்வர். அங்ஙனம் சினந்தாலும் சினக்கப்பட்டவர் களுக்கும் அவர்களே நன்மைப்படுத்தி நல்லருள் புரிவர். தீவினையாளர் களைத் துன்பப்படுத்துவதில் தியினும் கொடியராவர். (கசு)

792. தீவினை யாளர்[1] தஞ் சென்னியி னுள்ளவன்
பூவினை யாளர்தம் போற்பதி யானவன்
பாவினை யாளர்தம் பாவகத் துள்ளவன்
மாவினை யாளர் மதியிலுள் ளானே.[2]

(ப. இ.) பூவினையாளராகிய சீலநெறியினர்க்கு அவர் வாழும் திரு வாரூராய்ப் பொலிவர். தீவினையாளராகிய நோன்பு நெறியினர்க்கு அவர் வழிபடும் அருவுருவாய்த் திகழ்வர். மாவினையாளராகிய செறிவு நெறி யினர்க்கு அவர்தம் மதிமண்டிலத் தமிழ்தாய் மன்னுவர். பாவினையாகிய அறிவு நெறியினர்க்கு அவர்தம் பாவிளங்கும் உணர்வுக்கு உணர்வாய் உறைந்து உவகையூட்டுவர். பாவினை - திருப்பாட்டாகிய கீதத்தொண்டு. இம்முறைமை 'பத்தராய்ப் பணிவார்கள்' என்னும் திருப்பாட்டா னுணர்க.

(அ. சி) தீவினையாளர் - சிவாக்கினி வளர்த்துப் பூசனை புரிபவர். பூவினையாளர் - பூவால் பூசனை புரிபவர். பாவினையாளர் - தோத்திரப் பாக்களால் பூசனை புரிபவர். மாவினையாளர் - யோக முயற்சியுடையவர். (கச)

793. மதியி னேழுங்கதிர் போலப் பதினுரும்
பதிமனை நூறுநூற் றிருபத்து நாலாய்க்
கதிமனை யுள்ளே கணைகள் பரப்பி
எதிர்மலை யாமல் இருந்தனன் தானே.

(ப. இ-) அகத்தவத்தோர் உடம்பகத்துத் திங்களினிடத்து எழுங் கலைக் கதிர்கள் பதினுரும் அதுபோல் பதினுறு இதழ்களுள்ள மிடற் (விசுத்தி)றிடம் பனையொக்கும். மூலம். கொப்பூழ், மேல் வயிறு. நெஞ்சம் வரையிலுள்ள ஞாயிறு தீ இவற்றின் கதிர்கள் இருநூற்று இருபத்து நான்காகும் இவை ஊரொக்கும். புருவநடுவில் காணப்படும் அருட் கதிர்கள் அளவில. அவற்றைப் பரப்பி ஆவி மயங்காவண்ணம் ஆண்டவன் இருந்தனன். அதனுல் ஆவியும் மயங்காதிருந்தது. கதிமனை - மேல் வீடு. கணைகள் : உவமையாகுபெயராய் அருட்கதிர்களைக் குறிக்கும்.

(அ. சி.) மதி...பதினுரும் - சந்திரகலை பதினுறுபோல 16 இதழ் களுள்ள விசுத்தி. நூறு நூற்றிருபத்து நாலாய் - மூலாதாரம் முதல் அனாகதம் வரை ஒளிபரப்பும் கிரணங்கள் 224. (கஇ)

794. இருந்தனள் சத்தியு மக்கலை சூழ
இருந்தனள் கன்னியு மங்கடு வாக
இருந்தனள் மானேர் முகநில வார
இருந்தனள் தானும் அமுதம் பொழிந்தே.

---

1. அஞ்செழுத்தா. சிவஞானபோதம் கூ. கூ - க.
2. விளக்கினுர். அப்பர், ச. வ - கூ.
,, தோத்தை. சம்பந்தர், உ. சகூ - இ.

(மு. இ.) சத்தியும் கன்னியும் ஆகிய திருவருளம்மை அருட்கதிர்கள் சூழ மிடற்றின் நடுவாக இருந்தனள். மான்போலும் விழிகளும் மதி போலுந் திருமுகமும் உள்ள அவ்வம்மை அருளமுதம் பொழிந்து இருந்தனள். விசுத்தி - மிடறு, அக்கலை - அந்த அருட்கதிர்கள்.

(அ. சி.) அந்த நடு - விசுத்தியின் நடு. மானேர்முக திலவார - மான் நேர் முகம் நிலவு ஆர என்று பிரிக்க. (கசு)

795. பொழிந்த இருவெள்ளி பொன்மண் ணடையில்
வழிந்துள் ளிருந்தது வான்மூத லங்குக்
கழிந்தது போகாமற் காக்கவல் லார்க்குக்
கொழுந்தது வாகுங் குணமது தானே.

(ப. இ.) (திருவருளால்) சொரியப்பட்டு விளங்கும் வெண்ணிற மான அமிழ்து, பொன் நிறமான மண்போல் தாங்கும் மூலத்திடத்தில் சேரின், அங்குப் பெருகிவழிந்து உடம்பெங்கும் நிறைந்திருந்து உறுதி தரும். வான் முதலாகிய ஐம்பூதக் கூட்டுறவாலாகிய உடம்பில் கழிவு ஏற்படாது. அப்படிக் காக்க வல்லார்க்கு உடம்பு கொழுந்துபோல் என்றும் பொலிவுடன் இருக்கும். இதுவே கைக்கொள்ளத் தகுந்த உயர்ந்த பண்பாகும்.

(அ. சி.) பொழிந்து அவிரும் வெள்ளி - சத்தியால் சொரியப்படும் அமுதம். பொன்மண் - பூதலம்; மூலாதாரம். வான்முதல் - ஆகாயம் முதலிய பூதங்கள். (கஎ)

796. குணமது வாகிய கோமள வல்லி
மணமது வாக மகிழ்ந்தங் கிருக்கில்
தனமது வாகிய தத்துவ ஞானம்
இனமது வாக இருந்தனன் தானே.

(ப. இ.) பசுங்கொடிபோலும் இறைவி இறைவனுடன் கலத்தலாகிய மணம் எய்தி ஆவியகத்திருந்தால், இறைவனும் அத் திருவருளுடன்கூடி ஆவிக்குப் பேரின்பப் பெருஞ்செல்வம் நல்கியருள எழுந்தருள்வன். வல்லி - இறைவி. மணம் - கலப்பு. தனம் - பேரின்பச் செல்வம். தத்துவ ஞானம் - இறைவி.

(அ. சி.) மணமதுவாக - ஈசனுடன் கூடி. (கஅ)

797. இருந்த பிராணனும் உள்ளே எழுமாம்
பரிந்தஇத் தண்டுடன் அண்டம் பரிய
விரிந்தஅப் பூவுடன் மேலெழ வைக்கின்
மலர்ந்தது மண்டலம் வாழலு மாமே.

(ப. இ.) மூலத்திடத்து இருந்த உயிர்ப்பு (பிராணன்) நடுநாடியினுள் மேலெழும். அப்படி எழுந்து அண்டமாகிய ஆயிர இதழ்த் தாமரை என்னும் பரவெளியில் செல்ல நோக்கும். அங்ஙனம் செலுத்திப்

பூவுடன் பொருந்தவைத்தால் மதிமண்டலம் மலரும். நெடுநாள் உடலகத்து வாழ்தலும் உண்டாம். அண்டம் - பரவெளி.

(அ. சீ.) பரிந்த - பரித்த சரீரத்தைத் தாங்கி நிற்பதாகிய. தண்டு - வீணைத்தண்டு. அண்டம் பரிய - ஆகாயம் செல்ல. பூ - சகசிர அறை. மண்டலம் - மதிமண்டலம். (கக)

798. மண்டலத் துள்ளே மனவோட்டி யாணத்தைக்
கண்டகத் தங்கே கருதியே கீழ்க்கட்டிப்
பண்டகத் துள்ளே பகலே ஒளியாகக்
குண்டலக் காதனுங் கூத்தொழிந் தானே.

(ப. இ.) தீ மண்டிலமாகிய மூலத்திடத்து உயிர்ப்புச் சேர ஒட்டியாணக்கட்டு என்னும் உண்மையினை ஆசான் அறிவிக்கும் முத்திரை வழியாக, உள்ளே கண்டு கீழ்ப் பகுதியினை அடைத்தல் வேண்டும். அப்படி அடைத்தால், மேல் வீடாகிய பரவெளிக்குள்ளே பகலின்கண் ஞாயிற்றின் ஒளியினும் சிறந்த அருள்ஒளி தோன்றும். தோன்றவே, ஐந்தொழிற் கூத்தனும் அவ் வாவிக்கு அருட்காப்பு ஒன்றே புரிவன். அதனால் ஏனைத் தொழிலில் நீங்கி இருந்தனன் என்ப. மன : மன்ன என்பது இடைகுறைந்து நின்றது; சேர. பண்டகம் - பரவெளி. குண்டலக்காதன் - கூத்தப்பெருமான்.

(அ. சீ.) மண்டலத்துள்ளே - மண் தலத்துளே; உலகிலே. ஒட்டியாணம் - மூலத்துவாரத்தை முக்காரமிட்டிருத்தல். பண்டகம் - மேல் வீடு; சகசிர அறை. (கo)

799. ஒழிகின்ற வாயுவும் உள்ளே அமருங்
கழிகின்ற வாயுவுங் காக்கலு மாகும்
வழிகின்ற காலத்து வட்டக் கழலைப்
பழிகின்ற காலத்துப் பையகற் றீரே.

(ப. இ.) வெளிச்செல்லும் உயிர்ப்பும் செல்லாது அகத்தே தங்கும். உயிர்ப்புச் செல்லாமையால் வீணைக் கழியும் வாணாள் உறுப்பாகிய உயிர்ப்பினைக் காத்தல் கூடும். மதியமிழ்தம் மூலத்திடத்து வழியாமல் நடுநாடியின் உட்டுளைவழிச் செல்லின், பயிற்சியில்லாது பழிக்கப்படுகின்ற குண்டலிப் பாம்பின் படத்தினை அடைத்தல் கூடும். அதனைச் செய்வீர்களாக.

(அ. சீ.) ஒழிகின்ற-வீணைப் போகின்ற. கழிகின்ற வாயு-வராமல் இருக்கின்ற 4 விரல் அளவுள்ள சுவாசம். வட்டக்கழல் - பிரமரந்திரம். பை - குண்டலியின் தலை. (உக)

800. பையினி னுள்ளே படிக்கத வொன்றிடின்
மெய்யினி னுள்ளே விளங்கும் ஒளியதாங்
கையினுள் வாயுக் கதித்தங் கேழுந்திடின்
மையணி கோயில் மணிவிளக் காமே.

(ப. இ.) பையாகிய உடம்பினுள்ளே படி என்னும் நிலமெய்யினுக் குரிய முத்திரையாகிய கதவினால் அடைத்தால், உடம்பினுள்ளே நன்றாக விளங்கும் ஒளியுடையதாகிய உயிர்ப்பு நம் வரைத்தாகும். வரை-வசம். அவ்வுயிர்ப்பு ஒலித்துக்கொண்டு மேலெழும். மேலெழுந்தால், அருள் மழை தவழும் பரவெளிக் கோயிலின் செம்மணி விளக்கமாகிய இறைவன் காணப்படுவன். கையினுள் வாயு - கைவயப்பட்ட உயிர்ப்பு. கதித்து - ஒலித்து. நிலமெய் - பிருதுவி தத்துவம்.

(அ. சி.) பை - சரீரம். படிக் கதவு - கேசரி யோகம். (உஉ)

801. விளங்கிடும் வாயுவை மேலெழ உன்னி
நலங்கிடுங் கண்டத்து நாபியி னுள்ளே
வணங்கிடு மண்டலம் வாய்த்திடக் கும்பிச்
சுணங்கிட நின்றவை சொல்லலு மாமே.

(ப. இ.) ஒடுங்குகின்ற கழுத்தினிடத்தும் கொப்பூழினிடத்தும் விளங்குகின்ற உயிர்ப்பை மேல்நோக்கி எழுமாறு நினைந்து, கழுத்தினைச் சுருக்குதலாகிய சாலந்திரை முத்திரை ஒட்டியாணப் பிணிப்பு முத்திரை களை ஆக்குதல் வேண்டும். அங்ஙனம் ஆக்கினால் சாலந்திரையால் மெய்யமிழ்து கீழ் ஒழுக ஒட்டாது தடைப்படும். ஒட்டியாணப் பிணிப் பால் உயிர்ப்பு மடங்கும். இவை வாய்க்கவே நெற்றிமண்டிலம் வாய்த்து அமிழ்து நிறையும். நிறைந்து வாட்டிடுதலால் நிலைபெற்று நிற்குமென்பது கூறுதலாகும். நலங்கிடுதல் - ஒடுங்குதல். கும்பிச்சு - நிறைந்து. (உங)

802. சொல்லலு மாயிடு மாகத்து வாயுவுஞ்
சொல்லலு மாகு மண்ணீர்க் கடினமுஞ்
சொல்லலு மாகும் இவையஞ்சுங் கூடிடிற்
சொல்லலு மாந்தூர தெரிசனந் தானே.

(ப. இ.) மண், நீர், தீ, காற்று, விண் என்னும் ஐம்பூதங்களும் உடம்பகத்து ஒருமுகப்பட்டுக் கூடினால் உயிர்ப்பும் கைவயப்படும். உயிர்ப்பாகிய பிராணவாயு வயப்பட்டால் பரவெளி முழுமுதற் சிவத்தை அருட்கண்ணால் கண்டு கும்பிடுதலாகும். மாகம் - விண். கடினம் - கண்டுத் தீ. தூரம் - பரவெளி. தெரிசனம் - கண்டு கும்பிடுதல்.

(அ. சி.) மாகம் - ஆகாயம். அஞ்சு - பூதங்கள் அஞ்சும். தூர தரிசனம் - பரம்பொருள் தரிசனம். (உச)

803. தூர தெரிசனஞ் சொல்லுவன் காணலாங்
காராருங் கண்ணி கடைஞான முட்பெய்திட்
டேராருந் தீபத் தெழிற்சிந்தை வைத்திடிற்
பாரா ருலகம் பகன்முன்ன தாமே.[1]

(ப. இ.) பரவெளி வணக்கமாகிய கும்பிடுதலைச் சொல்லப்புகின் மழைபோலும் திருக்கண்ணையுடைய திருவருளால் முடிஞானம் எனப்

1. முத்தன்ன. அ. திருவெம்பாவை, கூ.

படும் அறிவில் அறிவாம் (ஞானத்தின் ஞானம்) திருவடியுணர்வை உணர்வுட் கொண்டால், அவ்வுணர்வு உள்ளத்தினிடத்து அழகு மிக்க ஒளிவடிவாகும். உள்ளமும் அழகுநிறை உள்ளமாகும். இவ்வுள்ளம் அமைந்தோர்க்கு உலகமும் உலகியல் துய்ப்பும் பகலிற் காணப்படும் பொருள்போல் நன்முக விளங்கும். கண்ணி - கண்ணையுடையாள்; திருவருள். பார் - உல்கம். ஆர்உலகம் - உலகியல் துய்ப்பு.

(அ. சீ.) கடைஞானம் - முடிந்த ஞானம். (உஇ)

804. முன்னெழு காபிக்கு முந்நால் விரற்கீழே
பன்னெழு வேதப் பகலொளி யுண்டென்னும்
நன்னெழு நாதத்து நற்றீபம் வைத்திடத்
தன்னெழு கோயில் தலைவனு மாமே.[1]

(ப. இ.) விளங்கித் தோன்றும் கொப்பூழின்கீழ்ப் பன்னிரண்டு விரல் அளவினதாகிய மூலத்திடத்து மறைகள் முதற்கண் ஒதும் ஒமொழி யுண்டாம். உடம்பின் நடுவிடமாகிய நெஞ்சிடத்து ஒளிப்பிழம்பு தோன்றும். நன்மையாகத் தோன்றும் அவ் வொளிப்பிழம்பினிடத்து நல்லக விளக்காகிய 'நமச்சிவாய ஐந்தெழுத்தை' இடையருது ஓதி (உன்னடியேன் செய்பணிகள் உன்தொண்டே உன்னருளே, உன்னடிக்கே ஒப்புவித்தேன்.) ஒப்புவித்தல் வேண்டும். ஒப்புவிக்கவே தலைவனுகிய சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் திருக்கோயிலாக அவ்வுடல் அமையும். அதுவே கேசரியோகத்தின் பயனும். (உசு)

---

# 19. பரியங்க யோகம்

805. பூசு வனவெல்லாம் பூசிப் புலர்த்திய
வாச நறுங்குழல் மாலையுஞ் சாத்திக்
காயக் குழலி கலவி யொடுங்கலந்து
ஊசித் துலையுறத் தூங்காது போகமே.

(ப. இ.) அகத்தவமாகிய யோகப்பயிற்சியைக் கைவிட்டு இன்பத் துறையாகிய போகப் பயிற்சியிற் சென்றால் அஃது ஒரு ஞான்றும் நிறைவுறாது. மனத்தை மாற்றும் பெண்கள், கூந்தலுக்குப் பூசத் தகுந்த மயிர்ச்சாந்து முதலியன பூசியும், அகிற்கட்டை முதலியவற்றால் அவற்றை உலரவைத்தும் அவற்றால் நறுமணம் என்றும் மாறாத கூந்தலையும். மாலை சூடிய குழல் போன்ற இனிய மொழியையும் உடையவராய் இருப்பர். அப் பெண், விரும்புவார் உள்ளத்தை வெதுப்புவள். அதனால் ஏற்படும் நிலையில் இன்பம் ஊசியின் தொலை போன்று சிறியதாகும். ஆயினும் தளர்வு ஏற்படாமல் மயக்கும். காயக் குழலி; காய்+அக் குழலி. காய்தல் - வெதுப்புதல்.

---

1. யாதே. அப்பர், இ. திo - சு.
" அன்றே. அ. குழைத்தபத்து, எ.
" அஞ்செழுத். கஉ. சிறப்புலி நாயனார், இ.

(அ. சி.) காயக்குழலி - மனத்தை வெதுப்புகின்ற அப்பெண் (காய்; அக் குழலி). ஊசித்துளை - ஊசிக் காதுபோன்ற துளை. (க)

806. போகத்தை யுன்னவே போகாது வாயுவு
மோகத்தை வேள்ளியு மீளும் வியாழத்தில்
சூதோத்த மென்முலை யாளுநற் சூதனுந்
தாதிற் குழைந்து தலைகண்ட வாறே.

(ப. இ.) இன்பத்துறையாகிய போகத்தை நினைத்தால் உயிர்ப்பு நடுநாடி வழியாற் செல்லாது. பெருவேட்கையால் வெள்ளியாகிய விந்துவும் வியாழமாகிய நாதத்தில் மீளும். சூதுக்காயை ஒத்த மெல்லிய முலையை உடையவளும், நன்மைக்குரிய ஆடவனும் தம்மிற்கூடி நாத விந்துக்களின் குழைவால் இன்பத்தலைகண்ட முறைமையாகும். சூதம் - வாதரசம்; குளிகை. பரிபாசை - குறியீடு.

(அ. சி.) வெள்ளி - விந்து. வியாழம் - நாதம். சூது-சூதாட்டத்தில் உபயோகப்படும் கருவி. சூதன் - ஆடவன். விந்துவை இரசம் என்றும் நாதத்தைக் கந்தகம் என்றும் கூறுவது சித்தர்களுடைய பரிபாசை. (உ)

807. கண்டனுங் கண்டியுங் காதல்செய் யோகத்து
மண்டலங் கொண்டிரு பாலும் வெளிநிற்கும்
வண்டியை மேற்கொண்டு வானீர் உருட்டிடத்
தண்டொரு காலுந் தளராது அங்கமே.

(ப. இ.) சாலந்திரத்தால் ஒடுக்கப் (801) பட்ட கழுத்தையுடைய ஆடவனும் அம்முறையே ஒடுக்கப்பட்ட கழுத்தையுடைய மகளிரும் காதலித்துப் பயிலும் பரியங்கயோகப் பயிற்சி வயத்தால் ஞாயிறு திங்கள் மண்டிலங்களாகிய முறையே மிடற்றினிடத்தும் உச்சியினிடத்தும் உயிர்ப்பினைச்செலுத்தி உரித்தாக்கிக் கொண்டால், அவர்கள் இரண்டு பக்கமும் வெளியிற் காணும் இடமூக்கும் வலமூக்கும் ஆகிய வண்டியை மேற்கொண்டு மேலாந் தன்மை வாய்ந்த ஓசை ஒளியென்னும் நாதவிந் துக்கள் திரண்டுருண்டு கைவருமாறு செய்வர். அப்படிச் செய்தால் முதுகந்தண்டு ஒருகாலும் தளராது. தளராதாகவே உடலுக்கும் அழி வில்லை. பரிதியாகிய ஞாயிற்று மண்டிலம். கொப்பூழ் முதல் மிடற்று வரையுள்ள இடமாகும். மதியாகிய திங்கள் மண்டிலம், மிடறு முதல் ஆயிர விதழ்த்தாமரைக்களமாகிய உச்சிவரையுள்ள இடமாகும். வானீர்: உயர்ந்த தன்மை வாய்ந்த நாதவிந்துக்கள். அங்கம் : உடல். வான் - உயர்வு.

(அ. சி.) கண்டனும் கண்டியும் - கண்டத்தைக்கொண்டு கருமம் முடித்த ஆடவனும் மாதும். வண்டி - இடகலை, பிங்கலை. வானீர் - அமுதம். தண்டு - தேகம். (கூ)

808. அங்கப் புணர்ச்சியு மாகின்ற தத்துவம்
அங்கத்தில் விந்து வருகின்ற போகத்துப்
பங்கப் படாமற் பரிகரித் துத்தம்மைத்
தங்கிக் கொடுக்கத் தலைவனு மாமே.

(ப. இ.) அங்கப் புணர்ச்சியாகிய பரியங்க யோகப் பயிற்சியால் உடம்பின்கண் அழியாது தங்கும் நாதவிந்துக்கள். விந்து நுகர்வு நினைவால் கீழ்நோக்கி வீணுகாமல் மேல் நோக்கிச் செலுத்தி நெற்றி நடுவில் தங்கும்படி அமைப்பர். அப்படி அமைத்தவர் பொறி புலன்களைத் தம் வழிப்படுத்தும் தலைவருமாவர். தத்துவம் - அழியாதது. போகம் - நுகர்வு நினைப்பு. பரிகரித்து - நீக்கிச் செலுத்தி.

(அ. சி.) அங்கப்புணர்ச்சி - பரி அங்கி யோகம். பங்கப்படாமல் - நாதவிந்துக்கள் கெடாமல். (சு)

809. தலைவனு மாயிடுந் தன்வழி ஞானந்
தலைவனு மாயிடுந் தன்வழி போகந்
தலைவனு மாயிடுந் தன்வழி யுள்ளே
தலைவனு மாயிடுந் தன்வழி அஞ்சே.[1]

(ப. இ.) ஒருமைப் (யோகம்) பயிற்சியால் புலன்களை (பொறி)த் தன் வழிப்படுத்தினால் அப்படிச் செய்தவர் ஐம்பொறிகளுக்கும் தலைவராவர். மேலும் உட்கலன்களோடு கூடிய நுண்ணுடற்கும் தலைவராவர். அதனால் போகமாகிய நுகர்வும் அவர் வழிப்படும். படவே திருவடியுணர்வாகிய மெய்ஞ்ஞானத்துக்கு உரிமையாம் தலைமை எய்துவர்.

(அ. சி.) தன்வழி அஞ்சு - ஐம்புலன்களும் தன் வசமே. (இ)

810. அஞ்சு கடிகைமேல் ஆறுங் கடிகையில்
தஞ்சுவ தொன்றத் துணைவி துணைவன்பால்
நெஞ்சு நிறைந்தது வாய்கொளா தென்றது
பஞ்ச கடிகை பரியங்க யோகமே.[2]

(ப. இ.) பரியங்க யோகம் பயில்வார் ஐந்து நாழிகை அளவு பயிலுதல் வேண்டும். அதற்குமேலும் பயிலப்புகின் ஆறுவது நாழிகையில் துணைவி துணைவன்பால் கொள்ளும் புலவியினை நீளவிட்டால் நெஞ்சு நிறைந்தது வாய் சோர்வதுபோல் விந்து வெளியாகும். ஆதலால் பரியங்க யோகம் ஐந்து நாழிகையேயாம். கடிகை - நாழிகை. (சு)

811. பரியங்க யோகத்துப் பஞ்ச கடிகை
அரியஇவ் வியோகம் அடைந்தவர்க் கல்லது
சரிவகை முன்கைச்சி சந்தனக் கோங்கை
உருவித் தழுவ ஒருவற்கொண் ணுதே.

(ப. இ.) ஐந்து நாழிகை அளவு இப் பரியங்க யோகம் பயின்றவரே திருவருட் பேற்றைச் சேர்வர். ஏனையோர்க்கு, அப் பேறு கிட்டாது

1. அனுச. அப்பர், இ. சுஇ-சு.
,, அன்பமா. திருக்களிற்றுப்படியார், சசு.
,, இந்திரிய. சிவஞான சித்தியார், உ - க.
2. உப்பமைந். திருக்குறள், கசுஐ.

திருவருளே இங்குப் பெண்ணுக உருவகித்தார். சரிவளே முன்கை: அகத்தவமாகிய யோகப் பயிற்சி. சந்தனக் கொங்கை: தவப் பயனும் விந்து எனப்படும் ஒளியமிழ்து. கைச்சி - கையை உடையவள். (எ)

812. ஒண்ணுத யோகத்தை உற்றவ ராரெனில்
விண்ணுர்ந்த கங்கை[1] விரிசடை வைத்தவன்
பண்ணுர் அமுதினைப் பஞ்ச கடிகையில்
எண்ணு மெனவெண்ணி இருந்தான் இருந்ததே.

(ப. இ.) அரிய பெரியவர்கட்கல்லாமல் ஏனையார்க்கு இயற்ற ஒண்ணுத இப் பரியங்க யோகத்தைப் பயின்று வெளிப்படுத்தியவர் சிகண்ட முதல்வராவர். [''சிகண்ட உருத்திரன் அயன்மால் போலச் சகலரின்றிப் பிரளயாகலரிற் பக்குவமுடையோனுய்க் கட்டு நீங்கி முத்தி பெற்ற கடவுளாகலானும், பரமசிவனுக்குரிய எல்லாப் பெயர்களும் வடிவமும் தொழிலும் பெற்றுடையன்.'' மெய்கண்டார் தமிழ், சூத்திரம், க. சிவஞான முனிவரனர் பேரு ரை] இவர் நடப்பாற்றலாகிய சலமகளே (கங்கை)த் திருச்சடையில் வைத்தவர். வேருென்றும் எண்ணுது ஐந்து நாழிகை பரியங்கம் பயின்றவர் இருந்தபடியே இருந்து இன்புறுவர். கங்கை - சலமகள்; (திரோதான சத்தி) நடப்பாற்றல். (அ)

813. ஏய்ந்த பிராயம் இருபது மூப்பதும்
வாய்ந்த குழலிக்கு மன்னர்க்கு மானந்தம்
வாய்ந்த குழலியோ டைந்து மலர்ந்திடச்
சோர்ந்தன சித்தமுஞ் சோர்வில்லே வெள்ளிக்கே.[2]

(ப. இ.) இப் பரியங்க யோகப் பயிற்சிக்குரிய அகவை பெண்களுக்கு இருபதும், ஆண்களுக்கு மூப்பதுமாகும். இந்த யோகம் கைவந்தவர் இடையருப் பேரின்பம் எய்துவர். இவர்கள் உடனுறைந்து வாழினும் ஐம்புலன் மலர எண்ணம் (சித்தம்) இடம் பெறினும் வேள்விக்குச் சோர்வில்லே என்க. வெள்ளி - விந்து. திருநீலகண்டக் குயவனரும் அவர்தம் கற்புறு மனேவியாரும் பிரிவின்றி உடனுயிருந்தும் உடனுறை வின்மையராய்ச் சிவயோகியராய் வாழ்ந்தனர். அம்மட்டோ, 'அற்புறு புணர்ச்சியின்மை அயலறியாமை வாழ்ந்தார்.' அவர்தம் செப்பரும் வாழ்க்கையின் வாய்மைச் சிறப்பு இதற்கு எடுத்துக்காட்டாகும்.

(அ. சி.) ஏய்ந்த...மூப்பதும்-பரியங்கி யோகம் பயில் பெண்களுக்கு 20 வயதும் ஆடவர்க்கு மூப்பது வயதும் ஆம். வெள்ளி - விந்து; சுக்கிலம். (கு)

---

1. இனிய பல. சிவப்பிரகாசம், கூ0.
,, மலிகனேப். அப்பர், சு. எஅ-உ.
,, மலிமகனே. அ. திருச்சாழல், எ.

2. கற்புறு, இளமையின், இந்நெறி. கூஉ. திருநீலகண்டக் குயவர், அ-கo.
,, தென்னுவ. கூஉ. தடுத்தாட், கஅக.

814. வெள்ளி யுருகிப் பொன்வழி ஓடாமே
கள்ளத்தட் டானுர் கரியிட்டு மூடினுர்
கொள்ளி பறியக் குழல்வழி யேசென்று
வள்ளியுண் ணுவில் அடக்கிவைத் தாரே.[1]

(ப. இ.) இப் பரியங்க யோகப் பயிற்சி கைவராதவர் சிலர் கைவந்தார் போன்று நடிப்பர். அவர்கள் கள்ளத்தட்டார் எனப் பெயர் பெறுவர். அவர்களுக்கு வெள்ளி உருகிப் பொன்னுகிய நாதவழி ஓடும். இதனே அவர்கள் மனச்சான்று நன்குணர்த்தும்; என்றாலும் அவர்கள் அதனே மறைத்து வைப்பர். அவர்கள் வஞ்சனேயாகக் கொண்ட அக்கொள்கை வெளிப்படக் குழலாகிய குறிவழியே சென்று ஒழுகிவிடும். இதனேப் பிறர்குற்றமாகிய அற்றமறைக்கும் பெரியவர் வெளிப்படுத்தாது தங்கள் அழகிய நாவில் அடக்கி வைத்துக்கொள்வர். வள்ளியுண் - அழகு பொருந்திய.

(அ. சி.) வெள்ளி - விந்து. பொன் - நாதம். கள்ளத்தட்டான் - யோகிபோல் நடிப்பவன். கரிய - சாட்சியான மனம். குழல் - இலிங்கம்; ஆண் குறி. (८०)

815. வைத்த இருவருந் தம்மின் மகிழ்ந்துடன்
சித்தங் கலங்காது செய்கின்ற ஆனந்தம்
பத்து வகைக்கும் பதினேண் கணத்துக்கும்
வித்தக ஞய்நிற்கும் வெங்கதி ரோனே.

(ப. இ.) இப் பரியங்க யோகப் பயிற்சி கைவந்த இருவரும் எண்ணம் சிறிதும் கலங்காது செய்கின்ற வாழ்க்கை இன்பம் ஏனேயோர்க்கு விளக்கந் தருவதாகும். அதனுல் அவர்கள் புறவிருள் போக்குகின்ற வெங்கதிரவன்போல் பத்துப் புலன்களில் உள்ளவர்க்கும் பதினெட்டுக் குழுவினுள்ளவர்க்கும் ஒட்டிய அகவிருளகற்றும் செயற்கரிய ஒண்மையராய்த் திகழ்வர். பத்துப்புலம் - பத்துத்திசை. வித்தகன் - செயற்கரிய செய்வோன்.

(அ. சி.) பதினெண் கணம் - உலகிலுள்ள 18 வகைத்தொழிலாளர் கூட்டங்கட்கும். (८८)

816. வெங்கதி ருக்குள் சனிக்கும் இடைநின்ற
நங்கையைப் புல்லிய நம்பிக்கோ ரானந்தந்
தங்களிற் பொன்னிடை வெள்ளிதா ழாமுனந்
திங்களிற் செவ்வாய் புதைத்திருந் தாரே.

(ப. இ.) பகலவ மண்டிலப் பண்ணவனுகிய அருளோன் - சதாசிவனுக்கும், அவர்தம் கீழ்நோக்கிய பகுதியிற் காணும் சனிக்கும் இடையே நின்ற நங்கையாகிய மனேன்மனியைக் கண்டு கலந்து ஆண்டாற்கு ஒப்பிலாத பேரின்பம் உண்டாம். தங்களுள் பொன்னுகிய

1. அற்றம் திருக்குறள், ८८०.
,, அநவ. அப்பர், தி. ८-உ.

நாதத்தினிடத்து வெள்ளியாகிய விந்து கீழ்நோக்கித் தங்குவதன் முன்னம், திங்களாகிய மதிமண்டிலத்துக்கண் அவ் விந்து செவ்வாயாகிய நாதத்துடன் கலந்து அங்குத் தங்கப் பயின்றோராவர். வெங்கதிர் : உவம ஆகுபெயராக முழுமுதற்சிவன் என்றலும் ஒன்று. நம்பி - ஆண்டான்.

(அ. சி.) வெங்கதிர் - சூரிய மண்டல அதிபதியாகிய சதாசிவம். சனி-அதோமுக மண்டலமாகிய சனி. நங்கை-மன உன்மனி. வெள்ளி : திங்கள்; விந்து. பொன் - செவ்வாய்; நாதம். (கஉ)

817. திருத்திப் புதுனைத் திருத்தல்செய் வார்க்குக்
கருத்தழ காலே கலந்தங் கிருக்கில்
வருத்தமு மில்லையா மங்கைபங் கற்குந்
திருத்தியுள் வெள்ளியுஞ் சோரா தெழுமே.

(ப. இ.) பரியங்க யோகத்தால் உள்ளத்தைத் தூய்மை செய்து அதனுல் புதனுகிய அறிவைத் திருவடியில் வைப்பதாகிய நன்மையைச் செய்வார்க்கு எண்ணிப் பார்க்கும் சிறந்த அழகோடு மேனிலேயிற் கலந்திருக்கில் உடலுறு வருத்தம் ஏதும் இன்றும். மங்கைபங்கனுகிய முழுமுதற் சிவனருளால், துருத்திபோன்ற நெற்றி நடுவண் வெள்ளி போன்ற திங்கள் ஒளியும் தளர்ச்சியின்றிக் கிளர்ச்சியுடன் எழும். ஏதும் - ஒரு சிறிதும்.

(அ. சி.) புதன் - அறிவு. வெள்ளி - சந்திர ஒளி. (கங)

818. எழுகின்ற தீயைமுன் னேகொண்டு சென்றிட்டால்
மெழுகுரு கும்பரி செய்திடும் மெய்யே
உழுகின்ற தில்லே ஒளியை அறிந்தபின்
விழுகின்ற தில்லே வெளியறி வார்க்கே.

(ப. இ.) கொழுந்துவிட்டு எரிகின்ற தீயின்முன் கொண்டு போனதும் மெழுகு உருகுவது போன்று பயிற்சியில்லார்க்கு உடல் அழியும். அதனுல் அஞ்சி எல்லாராலும் விரும்பப்படுகின்றதில்லே. அருள் ஒளியைப் பரியங்க யோகப் பயிற்சியால் நெஞ்சத்தின்கண் அருளால் உணர்ந்தபின், பர வெளி தோன்றும். அவர்கட்கு உடம்பும் அழிவதில்லே. விழுகின்ற - விரும்பப்படுகின்ற.

(அ. சி.) உழுகின்றது - அழிகின்றது. (கச)

819. வெளியை அறிந்து வெளியி னுடவே
ஒளியை அறியி னுளிமூறி யாமே
தெளிவை அறிந்து செழுஞந்தி யாலே
வெளியை அறிந்தனன் மேலறி யேனே.[1]

1. காலமுண். அ. திருப்பாண்டிப் பதிகம், இ.
,, வேண்டினுண். திருக்குறள், கஉஉ.
,, முன்பெலா. அப்பர், ச. உ அ-க.

(ப. இ.) பரியங்க யோகப்பயிற்சியால் பரவெளியை அறிந்து அருள் ஒளியை உணர்தல் வேண்டும். உணர்ந்தால் உணர்வோர் உள்ளம் அவ் வொளிக்கு அடிமையாகும். இதன் துணையால் திருவடி யுணர்வு தலைப் படும். அது தலைப்பட எல்லாம்வல்ல நந்தி வெளிப்படும். நந்தியருளாலே உணர்வு வெளியை - திருச்சிற்றம்பலத்தை உணர்தல் கூடும். அதுவே பேரின்பம். இப் பேரின்பினைக் காலமுண்டாக எய்தாமல் போனேனே என அவ் வாவி வருந்தும். தெளிவு - திருவடி யுணர்வு. வெளி - திருச் சிற்றம்பலம்.

(அ. சி.) உளி - மனம். முறி-அடிமை. மேல்-முன்னமேயே. (கஇ)

820. மேலாந் தலத்தில் விரிந்தவ ராரெனின்
மாலாந் திசைமுகன் மாநந்தி யாயவர்
நாலா நிலத்தி னடுவான வப்பொருள்
மேலா யுரைத்தனர் மின்னிடை யாளுக்கே.

(ப. இ.) மேலாந்தலமாகிய சிவ உலகத்திலே அருளால் சென்று பொருந்தியவர் யாரென்றால்? ஆசான் மெய் (சுத்தவித்தை)க்கண் தங்கி இருக்கும் திருமால், நான்முகன், நந்தியங் கடவுள் என்பவராவர். நாலாம் நிலம் என்று சொல்லப்படும் பேருறக்கமாகிய துரியதிலையின் நடுவில் செம்பொருளாகிய சிவம் தோன்றும். அச் சிவன் மின்னிடையா ளாகிய திருவருளுக்கு முதல்வனவன்.

(அ. சி.) நாலாநிலம் - துரியம். (கசு)

821. மின்னிடை யாளுமின் னளனுங் கூட்டத்துப்
பொன்னிடை வட்டத்தின் உள்ளே புகப்பெய்து
தன்னொடு தன்னைத் தலைப்பெய்ய வல்லாரேன்
மண்ணிடைப் பல்லூழி வாழலு மாமே.

(ப. இ.) மின்னிடையாளாகிய திருவருளும் மின்னளனாகிய சிவ பெருமானும் ஒன்றியைந்து பொன்னிடை வட்டமாகிய ஆயிரஇதழ்ப் பரவெளியில் எழுந்தருளுவன். அதற்காம் தவப்பயிற்சியைக் கைக்கொண் டவர், தம்முடனே தன்ஐ ஆகிய தலைவனைக் கூடியவராவர். அத்துணை வல்லார் இம் மண்ணிடைப் பல்லூழி வாழலுஞ் செய்வர்.

(அ. சி.) பொன்னிடை வட்டம்-பொன்போலும் ஒளியுள்ள சகசிர அறை. (கள)

822. வாங்க லிறுதலை வாங்கலில் வாங்கிய
வீங்க வலிக்கும் விரகறி வாரில்லை
வீங்க வலிக்கும் விரகறி வாளரும்
ஓங்கிய தன்னை உதம்பண்ணி னூரே.

(ப. இ.) உள்ளுக்கு உயிர்ப்பினை இழுத்தலாகிய பூரகமும், வெளி விடுதலாகிய இரேசகமும், உள்ளடக்கலாகிய கும்பகமும் முறையாகச் செய்யும் வழிவகை அறிவாரில்லை. அம் முறை அறிவார்கள் அதனால்

சிறப்பு எய்திய தம்மை உய்யும்வழி செய்தவராவர். விரகு - வழிவகை (உபாயம்).

(அ. சி.) வாங்கல் - பூரித்தல். இறுதல் - இரேசகம். வீங்கல் - கும்பித்தல். உதம்பண்ணல் - உய்யும் வழி அறிதல். (கஅ)

823. உதமறிந் தங்கே ஒருசுழிப் பட்டாற்
கதமறிந் தங்கே கபாலங் கறுக்கும்
இதமறிந் தென்றும் இருப்பாள் ஒருத்தி
பதமறிந் தும்முளே பார்கடிந் தாளே.

(ப. உ.) உய்யும் வழியறிந்து அவ்விடத்து ஒப்பில்லாத சிவமும் சிவையும் ஒருங்கியைந்து விளங்கும் சுழி தோன்றின், அதன் வழியாக மண்டை கருமையாகும். திருவருளம்மையாகிய சிவசத்தி செவ்வியறிந்து எக் காலத்தும் திகழ்ந்து விளங்குவள். அத் திருவருள் மென்னிலை யறிந்து நிலைக்களங்களாகிய ஆதாரங்களைக் கடந்து ஆண்டருள்வள். சுழி - பிரமக்கிரந்தி. இதம் - செவ்வி. கபாலம் - மண்டை.

(அ. சி.) கதம்-மார்க்கம். பதம்-பக்குவம். பார்-ஆதாரங்கள். (கக)

824. பாரில்லை நீரில்லை பங்கயம் ஒன்றுண்டு
தாரில்லை வேரில்லை தாமரை பூத்தது
ஊரில்லை காணும் ஒளியது ஒன்றுண்டு
கீழில்லை மேலில்லை கேள்வியிற் பூவே.[1]

(ப. உ.) ஐம்பூதங்களுள் பூவினுக்கு வேண்டப்படும் நிலமும் நீரும் இல்லை. ஆனால் இவைகளுக்கு அப்பால் ஒரு தாமரையுண்டு. அது தான் திருவருள் தோற்றமாகிய ஆயிரஇதழ்த் தாமரை என்ப. அத் தாமரைக்கு அரும்பும் இல்லை; வேரும் இல்லை. ஆனால் அத் தாமரை மலர்ந்துள்ளது. அங்கு ஓர் ஊருமில்லை. கீழாகிய ஆதியும் மேலாகிய அந்தமும் இல்லாத கேள்வியென்று சொல்லப்படும் மெய்யுணர்வாகிய பூவாகும் அது. அப் பூவின்கண் ஒப்பில்லாத சிவ ஒளி ஒன்றுண்டு.

(அ. சி.) பங்கயம் - சகசிர அறை. தார் - அரும்பு. கேள்வி - ஞானம். (உ0)

---

1. சித்தை. அப்பர், இ. சஅ - இ.

# 20. அமுரிதாரணை

825. உடலிற் கிடந்த வுறுதிக் குடிநீர்க்
கடலிற் சிறுகிணற் றேற்றமிட் டாலோக்கும்
உடலில் ஒருவழி ஒன்றுக் கிறைக்கில்
நடலைப் படாதுயிர் நாடலு மாமே.[1]

(ப. இ.) உடலின் கண் காணப்படும் திருவருள் துணையால் ஊறும் சிவக்குடிநீர் ஒன்றுண்டு. அது கடல் அருகே தோன்றும் சிற்றூறல் போல் இனிப்புடையதாக இருக்கும். அவ் வூறலுள் ஏற்றமிட்டு இறைப்பது ஒப்ப உடலின்கண் ஒருவழியாகிய நெஞ்சத்திடத்துத் திருவடிமறவாது நினைப்பாகிய சிவநீரை இறைத்தால் உடலுக்கு நடலையாகிய கலக்கம் ஏற்படாது. இஃது உயிர்க்குப் பெருங்காவலுமாகும். நாடல் - காத்தல்.

(அ. சி.) கடலிற் சிறுகிணறு - கடலுக்கருகிலுள்ள நன்னீர்க் கிணறு. உடலில் ஒருவழி - பிரமரந்திரம். நடலை - கலக்கம். (க)

826. தெளிதரும் இந்தச் சிவநீர் பருகில்
ஒளிதரு மோரண்டில் ஊனமொன் றில்லை
வளியுறும் எட்டின் மனமும் ஒடுங்கும்
களிதருங் காயங் கனகம தாமே.

(ப. இ.) தெளிவைத் தருகின்ற இந்தச் சிவநீராகிய அமிழ்தைப் பருகுதல் ஓராண்டுப் பயிற்சியில் சிவவொளி மேலோங்கும். உயிர்ப்பாகிய அகாரத்தில் மனமும் ஒடுங்கும். சிவஇன்பத்திற்குரிய இவ்வுடல் பொன்மேனியாகும். அமுரி சிறுநீருக்கும் பெயராகும். அதனுல் அதனையுடைய உடலைக் கடல் என முற்பாட்டில் உருவகித்தார். கடல்நீர் மேகத்தால் மொண்டு உவர்நீக்கி நன்னீராவதுபோல் இவ்வுடம்பின்கண் உயிர்ப்புப் பயிற்சியால் மாறு இனிய சிவநீர் கடலருகே தோன்றும் சிற்றூறல் போன்றதெனவும் கூறப்பட்டது. இப் பாட்டில் அதன் நன்மை கூறப்படுகின்றது. எட்டு - அகரம்: இது தமிழெண்.

(அ. சி.) சிவநீர் - அமுரி, அமுத நீர். வளியுறு எட்டின் - எட்டின் குறியாகிய அகர உருவாகியவர் கலந்துள்ள (சீவப்) பிராணவாயு. (உ)

827. நூறு மிளகு நுகருஞ் சிவத்தினீர்
மாறும் இதற்கு மருந்தில்லை மாந்தர்கள்
தேறில் இதனைத் தெளியுச்சி கப்பிடின்
மாறும் இதற்கு மறுமயி ராமே.

(ப. இ.) நூறுமிளகு அளவு சிவத்தினீரைப் பருகுவார்க்கு உடல் முன்னிலையினும் சிறந்து பொன்மேனியாக மாறும். இதற்கு மேற் சிறந்த சாவாமருந்து வேறொன்றும் இல்லை. மக்கள் இதனைத் தெளிந்து இச்சிவநீரை உச்சித்தொளைக்குக் கொண்டுசேர்ப்பின் உடல் ஒளியுடலாக மாறும். வெள்ளை நரைமயிரும் மிக்க கருமையாக மாறும் (சிவநீருடன்

---

1. விண்ணின்று. திருக்குறள், ௬௬.
2. நடலை. அப்பர், இ. ௬0 - ச.

ஒருநாளைக்கு ஒரு மிளகு விழுக்காடு நூறுநாளைக்கு உண்ணுதல் வேண்டும் எனவும் கூறுவர்). உச்சி - பிரமரந்திரம். (கூ)

828. கரையரு கேநின்ற கானல் உவரி
வரைவரை என்பர் மதியிலா மாந்தர்
நுரைதிரை நீக்கி நுகரவல் லார்க்கு
நரைதிரை மாறு நமனுமங் கில்லையே.[1]

(ப. இ.) கொப்பூழின்கீழ்க் கரை அருகே நின்ற பிருகலாகாத் தோற்றமுடன் கூடிய உப்புநீர். (சிறுநீர்) பயிற்சியிலா மாந்தர் அதனைக் கழி கழி என்று கரைவர். சாரமற்றதாகிய நுரையும் பித்தப்பாங்காகிய திரையும் அகற்றி அமிழ்தாக்கி மேலேற்றுதலாகிய நுகர்தலைச் செய்ய வல்லார்க்கு நரைதிரை ஏற்படாது. அவர்கட்குக் கூற்றுவன் வருதலாகிய இறப்பும் இல்லை.

(அ. சி.) உவரிக்கரையருகே நின்ற கானல் - உப்பு நீர்ப்பையருகே உள்ள விந்து. வரை வரை - ஒழி ஒழி. கழி கழி. (ஈ)

829. அளக நன்னுத லாயோ ரதிசயங்
களவு காயங் கலந்தஇந் நீரிலே
மிளகு நெல்லியும் மஞ்சளும் வேம்பிடில்
இளகும் மேனி இருளுங் கபாலமே.

(ப. இ.) எழில் வாய்ந்த இருங்கூந்தலையுடைய பெண்ணே! வியத்தகு புதுமையொன்று விளம்புவேன் கேட்பாயாக. உடம்பகத்து மறைந்து விரவிய இச் சிறுநீரிலே புறத்து மருந்து முறையாக மிளகு நெல்லி மஞ்சள் வேம்பு ஆகிய நான்கும் கலந்து கைக்கொண்டால் உடம்பு மென்மைப்பொலிவு எய்தும். மண்டைமயிரும் கொண்ட லொத்துக் கருமையாகும். இருங்கூந்தல் - கரிய கூந்தல். இருமை - கருமை.

(அ. சி.) களவு - களவு, கற்பு என்னும் இருமுறைகளில் ஒன்று. மிளகு...வேம்பு - இந் நான்கும் அரைத்து, பாலுடன் கலந்து, தலைக்குத் தேய்த்து முழுகுவது கற்பமுறை. (ஙி)

830. வீர மருந்தென்றும் விண்ணோர் மருந்தென்றும்
நாரி மருந்தென்றும் நந்தி அருள்செய்தான்
ஆதி மருந்தென் றறிவார் அகலிடஞ்
சோதி மருந்திது சொல்லவொண் ணாதே.

(ப. இ.) சிறந்த மருந்தென்றும், தெய்வமருந்தென்றும், திருவருள் மருந்தென்றும் நந்தியங்கடவுள் நவின்றனர். உண்மையுணர்வார் இதனை ஆதிமருந்தெனவும் அகன்ற உலகினை விளக்கும் உடலொளி விளக்கு இதுவாகும் எனவும் மொழிந்தார். இம் மருந்தின் பெருமை இயம்புவதற்கரிது. விண்ணோர் - தெய்வம் நாரி - திருவருள். (சு)

---

1. வேலைமலி. உ. சஅ - இ.

# 21. சந்திர யோகம்

831. எய்து மதிக்கலை[1] சூக்கத்தி லேறியே
எய்துவ தூலம் இருவகைப் பக்கத்துள்
எய்துங் கலைபோல ஏறி இறங்குமாம்
துய்யது சூக்கத்துத் தூலத்த காயமே.

(ப. இ.) திங்களுடைய தேய்தலும் வளர்தலுமாகிய இருவகைப் பக்கத்துமுள்ள கலைகள் நுண்மையிலிருந்து பருமையாய் விளங்கற்கும், பருமையிலிருந்து நுண்மையாய் ஒடுங்கி மறைதற்கும் எடுத்துக்காட்டாக இருப்பனபோல் மாந்தர் உடம்பும் நுண்மையிலிருந்து பருமையாய் விளங்குதலும் பருமையிலிருந்து நுண்மையாய் ஒடுங்குதலும் கொள்ளுதல் வேண்டும். உடம்புகள் மலநீக்கத்துக்குத் துணையாக அளித்தருளப்பட்ட விளக்கினைய தூய்மையது; காலவரையறைக்கு உட்பட்டது. (உ)

832. ஆகின்ற சந்திரன் சூரியன் அங்கியுள்
ஆகின்ற ஈரெட்டோ டாறிரண் டீரைந்துள்
ஏகின்ற வக்கலை யெல்லா மிடைவழி
ஆகின்ற யோகி அறிந்த அறிவே.

(இ. இ.) திங்களுக்குரிய கலைகள் பதினாறு. ஞாயிற்றுக்குரிய கலைகள் பன்னிரண்டு. தீயினுக்குரிய கலைகள் பத்து இவைகளை அகமுகப்பயிற்சியால் தெளிந்து நடுநாடியின் வழியாக மேல்நோக்கிச் செலுத்துவர். இதன் பயனை உடம்பு எழிலுடன் விளங்கும்.

(அ. சி.) சந்திரன் ஈரெட்டு - சந்திரகலை 16. சூரியன் ஆறிரண்டு - சூரியகலை 12. அங்கி எட்டெட்டு - அக்கினிகலை 64. (உ)

833. ஆறுற தாங்கலை ஆதித்தன் சந்திரன்
நாறு கலங்கினுள் ஞாலங் கவர்கொளப்
பேறுங் கலைமுற்றும் பேருங்காலில் ஈரெட்டு
மாறுக் கதிர்கொள்ளு மற்றங்கி கூடவே.

(ப. இ.) ஞாயிற்றினுடைய பன்னிரண்டு கலைகளும் திங்களின் வெளியாகச் செலுத்தப்பயின்றவர் உலகோர் உவக்கும் பேற்றினை எய்துவர். உயிர்ப்பினில் இடமூக்கு வலமூக்குகளுக்குரிய பதினாறு கலைகளும் தீயின் கலையுடன் கூடப் புறத்துச் செல்லுவதற்கு மாறுக நடுநாடி வழியிற் செல்லும். பெருங்கால் - உயிர்ப்பு; பிராணவாயு. இடமூக்கு - இடகலை. வலமூக்கு - பிங்கலை. மாறு - மாறுக.

(அ.சி.) ஆறு ஆறு அதாம் கலை - 12 கலை அளவாகிய். (ரு)

---

1. மாயா சிவஞானபோதம், சு. உ - க.
,, விதிப்படி. சிவஞான சித்தியார், உ. உ - சுக.
,, சேற்றுவளர். புறநானூறு, உஎ.

834. பத்தும் இரண்டும் பகலோன் உயர்கலை
பத்தினெ டாறும் உயர்கலை பான்மதி
ஒத்தநல் அங்கிய தெட்டெட் டுயர்கலை
அத்திறன் நின்றமை ஆய்ந்துகோள் வீரே.

(ப. இ.) பகலோனுகிய ஞாயிற்றின் உயர்வாகிய கலைகள் பன்னிரண் டாகும். அதுபோல் பால்போல் விளங்கும் திங்களின் கலைகள் பதினறுகும். தீயின் கலை அறுபத்துநான்காகும். இவை மூன்றும் இம் முறையாக விளங்குவதை ஆராய்ந்துகொள்வீர்களாக. அங்கி - தீ. (சு)

835. எட்டெட் டனலின் கலையாகும் ஈராறுட்
சுட்டப் படுங்கதி ரோனுக்குஞ் சூழ்கலை
கட்டப் படுமீ ரெட்டா மதிக்கலை
ஒட்டப் படாஇவை ஒன்றேடொன் றுவே.

(ப. இ.) மேற்கூறிய முறைப்படி அறுபத்துநான்குடன் ஒட்டி யிருக்கின்ற தீயும், பன்னிரண்டுடன் கூடிய ஞாயிறும், பதினறுடன் ஒட்டிய திங்களும் தனித்தனி விளங்கிக்கொண்டிருக்கின்றன. இவை ஒன்றேடொன்று ஒட்டுதல் கூடா. (இ)

836. எட்டெட்டும் ஈராறும் ஈரேட்டுத் தீக்கதிர்
சுட்டிட்ட சோமனில் தோன்றுங் கலையெனக்
கட்டப் படுந்தார கைக்கதிர் நாலுள
கட்டிட்ட தொண்ணூற்றே டாறுங் கலாதியே.

(ப. இ.) மேற்கூறிய் முவ்வகையான கலைக்கதிர்களுள், மறையுவா வாகிய அமாவாசையில் திங்களின் கதிர் ஒடுங்கியிருப்பதால் சுட்ட சோமன் எனக் கூறப்படும். சோமன் - திங்கள். அந்நாளில் திங்களி னிடத்தில் விண்மீன்போல் காணப்படும் கதிர்கள் நான்குள. இவை அடங்கியிருப்பன. இவை தொண்ணூற்றுறு மெய்களுடன் கலந்து நிற்கும். மெய்கள் - தத்துவங்கள். கலைகள் ஞாயிறு கூ, திங்கள் கசு, தீ சுசு, நாள் சு. ஆகக் கலைகள் தொண்ணூற்றுறு. (சு)

837. எல்லாக் கலையும் இடைபிங் கலைநடுச்
சொல்லா நடுநாடி யூடே தொடர்மூலஞ்
செல்லா எழுப்பிச் சிரத்துடன் சேர்தலால்
நல்லோர் திருவடி நண்ணிநிற் போரே.

(ப. இ.) ஞாயிறு திங்கள் தீ இவற்றின் கலைகளெல்லாம் இடநாடி வலநாடி, சிறப்பாகச் சொல்லப்படும் நடுநாடி இவற்றின் வழியாகக் கீழ் நோக்கி மூலத்திற் செல்லாது, மேலெழுப்பி உச்சிக்குச் செல்லுமாறு செலுத்தச் சேர்தலால் அங்ஙனம் சேரும் பேறுபெற்றவர் நல்லோராவர், அத்தகையோர் சிவபெருமான் திருவடியை நண்ணி நிற்பர். இடநாடி - இடகலை. வலநாடி - பிங்கலை. நடுநாடி - சுழுமுனை. (எ)

838. அங்கியிற் சின்னக் கதிரிரண் டாட்டத்துத்
தங்கிய தாரகை யாகுஞ் சசிபானு
வங்கிய தாரகை யாகும் பரையோளி
தங்கு நவசக்ர மாகுந் தரணிக்கே.

(ப. இ.) தீயினின்று வெளிப்படும் நுண்கதிர்கள் இரண்டும், ஞாயிறு, திங்கள், விண்மீன்கள் எல்லாவற்றுடனேயும் விரவி விளக்கும். திருவருள் பரவெளியில் திளைத்தலும், புதிய மறைவழி (நவசக்கரம்) ஆதலும் ஆகும். சின்னக்கதிர் - நுண்கதிர். ஆடல் - விளக்கல். தாரகை - ஒழுங்கு. வங்கிய தாரகை - கூட்டமான விண்மீன்கள். (அ)

839. தரணி சலங்கனல் காற்தக்க வானம்
அரணிய பானு அருந்திங்கள் அங்கி
முரணிய தாரகை முன்னிய ஒன்பான்
பிரணவ மாகும் பெருநெறி தானே.[1]

(ப. இ.) நிலம், நீர், தீ, காற்று இந் நான்கற்கும் இடங்கொடுத்துக் கொண்டிருக்கும் தக்க வானம், அழகிய ஞாயிறு, ஞாயிற்றின் ஒளிபெற்று விளங்கும் திங்கள், சிவவேள்வித்தீ, வலிமைமிக்க விண்மீன்கள் ஆகிய ஒன்பதும் பிரணவமாகிய ஒங்காரத்துள்ளொளியாம் சிவபெருமானின் சார்புருவமாகும். இவற்றை மேற்கொண்டொழுகுவது சித்தாந்த சைவப் பெருநெறியாகும். தரணி - நிலம். சலம் - நீர். கனல் - தீ. அரணிய - அழகிய. அங்கி - சிவ வேள்வித்தீ; காட்டுத்தீ, வீட்டுத்தீ, பாட்டுத்தீ (இம் மூன்றும் முறையே ஆகவனீயம், காருகபத்தியம், தெக்கணக்கினி என்ப). முரணிய-வலிமைமிக்க: பாட்டு - ஞானம். (கூ)

840. தாரகை மின்னுஞ் சசிதேயும் பக்கத்துத்
தாரகை மின்னுச் சசிவளர் பக்கத்துத்
தாரகை பூவிற் சகலத்தி யோனிகள்
தாரகைத் தாரகை தானுஞ் சொரூபமே.[2]

(ப. இ.) தேய்பிறையில் விண்மீன்கள் விளங்கி மின்னும். அது போல் வளர்பிறையில் அவைகள் மின்னு.[1] உலகவுயிர்கள் அனைத்தும் உடலெடுக்கும் பிறப்பு விண்மீனைக்கொண்டே காணப்படுகின்றது. அதனால் உலகனைத்தும் விண்மீன்களின் உருவமே என்று உருவகம் செய்வது பொருந்தும். ஒவ்வொருவருக்கும் பிறந்தநாள் என்றே வழங்குகின்றோம். நாள் - நட்சத்திரம். (இத் திருமந்திரம் ஆவி அறியாமை வயப்பட்டுத் தன்முனைப்போடுள்ள காலத்துத் தேய்பிறையில் விண்மீன் வெளிப்படுவதையும், திருவடி யுணர்வு வெளிப்பட்டுத் தன்முனைப்பற்று அருள்வழியில் ஆவி அடங்கி நிற்கும் நிலையின்கண் விண்மீன் வெளிப்பாட்டாமையினையும் குறிப்பிற் புலப்படுப்பதாகும்.)

1. சிவஞ்சத்தி. சிவஞானசித்தியார், உ. சு: உ.
,, ஒருசுடரா. அப்பர். கூ. நகூ - கo.
,, ஆய்ந்த. மெய்ப்பொருள். கஉ, நீலநக்கர், நு.
2 வெய்யோ. சிவஞானபோதம். இ, உ - உ.

(அ. சி.) தாரகைபூவில் சகலத்தியோனிகள்-தாரகைகளே உலகில் சகல உற்பத்திக்குங் காரணம். (கo)

841. முற்பதி னேந்தின் முகூத்துப் பெருத்திடும்
பிற்பதி னேந்திற் பெருத்துச் சிறுத்திடும்
அப்பதி னேந்தும் அறியவல் லார்கட்குச்
செப்பரி யான்கழல் சேர்தலு மாமே.[1]

(ப. இ.) திங்களின் கலைகள் முதற் பதினேந்தில் முகூத்து முறை முறையாகப் பெருத்திடும். பிற்பதினேந்தில் பெருத்த அவை முறை முறையாகக் குறைந்து சிறுத்திடும். இத்தகைய மாறுதலை உற்றுநோக்க வல்லார் சுட்டி யுணரப்படும் பொருள் அனைத்தும் தோன்றி மறையும் அழிபொருள்கள் என்னும் உண்மை தெளிவர். தெளிந்து மாற்றம் மனம் கழியநின்ற மறையோனுகிய சிவபெருமான் திருவடியைச் சேர்வர்.

(அ. சி.) முன்பதினஞ்சு - வளர்பிறை. பின்பதினஞ்சு - தேய்பிறை. (கக)

842. அங்கி எழுப்பி யருங்கதிர் ஊட்டத்துத்
தங்குஞ் சசியால் தாமம்ஐந் தைந்தாகிப்
போங்கிய தாரகை யாம்புலன் போக்கறத்
திங்கள் கதிரங்கி சேர்கின்ற யோகமே.

(ப. இ.) மூலத் தீயை எழுப்பி மதிமண்டிலத்துக் காணப்படும் திங்கட் கதிருடன் சேர்த்தால், அங்குக் காணப்படும் திங்களால் அக் கதிர்கள் அமைவுற்று ஐந்தாக விரியும். திங்கட் கதிர் விரிந்த காலத்து விண்மீன்களாகிய தாரகைகள் மடங்குவதுபோன்று ஐம்புலன்களும் அகத்திங்கள் கதிர் விரிந்த காலத்து மடங்கும். இந் நிலைக்குத் திங்கட் கதிர் அங்கி விரவுகின்ற யோகம் என்று பெயர். மதிமண்டிலம் : மிடறு முதல் ஆயிர இதழ்த் தாமரை வரையாகும். ஆயிர இதழ்த் தாமரையை வெளி என்றும் உச்சித்தொளையென்றும் கூறுவாருமுளர். வெளி என்பதே பெருவழக்கு. ஊட்டத்து - கொடுப்பதில். சசி - திங்கள். தாரகை - விண்மீன். போக்கற - புறம்போதல் மடங்க.

(அ. சி.) ஊட்டத்து - கொடுப்பதிலே. (கஉ)

843. ஒன்றிய ஈரேண் கலையும் உடலுற
நின்றது கண்டும் நினைக்கிலர் நீதர்கள்
கன்றிய காலன் கருத்துழி வைத்தபின்
சென்றதில் வீழ்வர் திகைப்பொழி யாரே.[2]

(ப. இ.) திங்களின் பதினெறு கலையும் உடம்பின்கண் புறம் போகாது அகத்தே பொருந்த நிற்கின்ற ஒளிநிலை கண்டு தாழ்வானவர்கள் உண்மையை நினைக்கின்றிலர். அதனால், அவர்கள் சினந்து உடலைக்

1. சேற்றுவளர். புறநானூறு, உஎ.
2. திருநாமம். அப்பர், கூ. கஇ - கூ.

காலம்நோக்கிப் பிரிக்கக் கருத்துக்கொள்ளும் காலனின் கருத்தின்படி சென்று பிறப்பு இறப்பு என்னும் மாறுபெருஞ் சுழலில் விழுவர். இத் தடுமாற்றமாகிய மயக்கத்தினின்றும் விடுபடார். நீதர்கள்-நீசர்கள்: தாழ்வானவர்கள். கன்றிய - சினந்த. கருத்துழி - கருத்தின்படி. இகைப்பு-மயக்கம். (கக)

844. அங்கி மதிகூட வாகும் கதிரோளி
அங்கி கதிர்கூட வாகு மதியோளி
அங்கி [1]சசிகதிர் கூடவத் தாரகை
தங்கி யதுவே சகலமு மாமே.

(ப. இ.) மூலத் தீயும் திங்கட் கதிரும் கலந்த இடத்துப் பகலவன் கதிரொளி விளங்கும். மூலத்தீயும் பகலவன் கதிரும் விரவிய இடத்து மதியொளி திகழும். மூலத்தீ திருவடியுணர்வோடு கலப்புறலால் விண்மீன் ஒத்த ஆவிகளின் ஒருநிலைத்தங்குதல் ஏற்படும். அந்நிலையே எல்லாம் ஆகும் நிலையாம். தாரகை - விண்மீன்; நட்சத்திரம். (கச)

845. ஈராறு பெண்கலே எண்ணிரண் டாண்கலே
பேராமற் புக்குப் பிடித்துக் கொடுவந்து
நேராகத் தோன்றும் நெருப்புற வேபெய்யில்
ஆராத ஆனந்தம் ஆனந்த மானதே.

(ப. இ.) பெண்கலையாகிய திங்கட்கலை பதினைறும், ஆண்கலையாகிய பகலவன் கலை பன்னிரண்டும் உயிர்ப்புப் பயிற்சியால் உடம்பை விட்டகலாமல் உடம்பினுள்ளே மூலத்தினிடம் நிற்றல் வேண்டும். அங்ஙனம் நிற்கப்பெற்றால் தெவிட்டாத திருவடியின்பம் நிலைத்த இன்ப மாம். நெருப்பு - மூலத்தீ. பெய்தல் - அதன்கண் நிலைப்பித்தல். (கடி)

846. காணும் பரிதியின் காலை இடத்திட்டு
மாணும் மதியதன் காலை வலத்திட்டுப்
பேணியிவ் வாறு பிழையாமற் செய்விரேல்
ஆணி கலங்காதவ் வாயிரத் தாண்டே.

(ப. இ.) வலமூக்காகிய பருதியின்வழி இயங்கும் உயிர்ப்பை (மூச்சுக் காற்றை) இடமூக்கின்வழி வாங்கியும், இடமூக்காகிய திங்களின் வழி இயங்கும் உயிர்ப்பை வலமூக்கின் வழி வாங்கியும், இம்முறை யாக அம் மூச்சைத் தவறுதலில்லாது பழகி வந்தால், அளவில்லாத ஆண்டுகள் ஆணியாகிய உயிர் உரனுடன் அவ்வுடலில் வாழும்.

(அ. சி.) பருதி - பிங்கலை. மதி - இடகலை. ஆணி - சிவன். (கசு)

847. பாலிக்கும் நெஞ்சம் பறையோசை ஒன்பதில்
ஆலிக்கும் அங்கே அமரர் பராபரன்
மேலிக்கு முன்னே விளக்கொளி யாய்நிற்குங்
காலிக்குச் சங்கு கதிரவன் தானே.

---

(பாடம்) 1. சிவத்தினிற்.

(ப. இ.) உடம்பகத்துள்ள ஒன்பது தொளைகள் வழியாகவும் தண்ணுமையாகிய பறையோசை முழங்கும். அங்குத் தேவர்க்கும் மூவர்க்கும் மற்று யாவர்க்கும் மேலாம் சிவபெருமான் இன்பக் கூத்தியற்றுவன். திருவடிப் பேற்றிற்கு முன்செல்லும் மெய்யுணர்வு விளக்கொளியாய் விளங்கும். அவ் விளக்கத்தால் காலத்தோன்றும் கதிரவன்ஒளி சங்கின் நிறமும் திங்களின் நிலவும்போன்று காணப்படும்.

(அ. சி.) ஆலிக்கும் - ஒலிக்கும். ஒன்பதில் - ஒன்பது துவாரங்களையுடைய தேகத்தில். காலிக்குச் சங்கு கதிரவன் - சூரியன் சங்கின் நிறமுள்ள சந்திரன் போன்று தோன்றுவன். (கஎ)

848. கதிரவன்[1] சந்திரன் காலம் அளக்கும்
போதிர வுள்ளே பொழிமழை நிற்கும்
அதிர வண்டப் புறஞ்சென் றடர்ப்ப
எதிர வனீச னிடமது தானே.

(ப. இ.) ஆருயிரின் அகவைக் காலத்தை அளக்குங் கருவிகள் ஞாயிறும் திங்களும் ஆகும். அகவை - வயது. உள்ளங்கவர்கள்வனை ஒளித்து உடன்நிற்கும் சிவனுக்குள் திருவருள் பொழிமழைபோன்று அமிழ்தாய்த் திகழும். அண்டத்தப்பாலும் சென்று முழங்க நடிக்கும் சிவன் நெஞ்சத்துச் செறிந்து நிற்பன். அதனால் அந் நெஞ்சிடமே எழுந்தருளி முன்தோன்றும் இறைவன் இருப்பிடமாகும்.

(அ. சி.) பொதிர் - ஒளித்தல். மழை - அமுதம். (கஅ)

849. உந்திக் கமலத் துதித்தெழுஞ் சோதியை
அந்திக்கு மந்திர மாரும் அறிகிலார்
அந்திக்கு மந்திர மாரும் அறிந்தபின்
தந்தைக்கு முன்னே மகன்பிறந் தானே.[2]

(ப. இ.) மூல முதல் புருவநடு ஈருகவுள்ள நிலைக்களங்கள் ஆறும், அடியே படைப்புடன் காப்புத் துடைப்பு முடியே மறைப்பருளாம் முன் என்ப. அவற்றுள் படைப்புக்களமாம் கொப்பூழின்கண் தோன்றிச் சுடர்விட்டெழும் ஒளிப்பிழம்பை வணங்கி வழிபடும்' மறையினை ஆரும் அறிகிலர். வழிபடும் அம் மறையினை யாவரும் அறிந்தபின் தந்தையாகிய சிவத்திற்குமுன் ஆவியாகிய மகன் தோன்றினன் என்ப. இது 'சிவயசிவ' என்னும் செந்தமிழ்த் திருவைந் தெழுத்தின் மறையின்கண் சிகரத்துக்குமுன் யகரம் நிற்கும் நிலையினையே தந்தைக்குமுன் மகன் பிறந்தான் என்பதைக் குறிக்கும். எனவே நிலைக்களமாகிய ஆதார வழிபாட்டுக்குரிய மறை திருவைந்தெழுத்தே என்க. கொப்பூழுக்கு முன்னிடமாகிய மூலத்தில் ஓம் மொழிப் பிள்ளையார் தோன்றியதைக் கூறுதலும் ஒன்று. இம்முறையில் ஆறிடங்களுக்கும் முறையே க. ஓம்

1. நாளென. திருக்குறள், கூகூ.
2. அஞ்செழுத்தா. சிவஞானபோதம், கூ. கூ - க.
,, தஞ்சலும். சம்பந்தர், கூ. உஉ - உ.

உ. ஓம் நமசிவய், ஊ. நமசிவய, ச. சிவயநம, டு. சிவயசிவ, சு. சிவசிவ என்ப. அந்திக்க - வந்திக்க; வணங்க. (ஈக)

**850** ஊதியம் ஏதும் அறியார் உரைப்பினும்
ஓதியும் ஏதும் அறியாத ஊமர்கள்
ஆதியும் அந்தமும் அந்திக்க வல்லிரேல்
வேதியன் அங்கே வெளிப்படுந் தானே.[1]

(ப. இ.) பகற குருடாம் கோட்டான் போன்ற அறிவில்லார் தாங்களாக ஓதியும் பிறர் உரைப்பக்கேட்டும் அடைதற்காம் பேற்றினை அறியார். அவர்கள் உயிர்ப்பின் துவக்கமும் முடிவும் உணர்ந்து அடக்கும் வன்மை பெற்றவரானால் அறிவுருவாம் சிவபெருமான் அங்கு அப் பொழுதே வெளிப்பட்டருளுவன். அந்திக்க - அடக்க.

(அ. சீ.) ஆதியும் அந்தமும் - சுவாசம் உதித்தலும் ஒடுங்குதலும். (உ0)

**851.** பாம்பு மதியைத் தினலுறும் பாம்பினைத்
தீங்கு கதிரையுஞ் சோதித் தனலுறும்
பாம்பு மதியும் பகைதீர்த் துடன்கொளீஇ
நீங்கல் கோடானே நெடுந்தகை யானே.[2]

(ப. இ.) முதலிடமாகிய பாப்பிருக்கை (குண்டலி) புருவநடுவாகிய மதியமிழ்தைக் கீழிழுத்துத் தின்ன முயலும். வெப்பஞ் செய்கின்ற கதிரையும் அக் குண்டலித் தீ வாட்டும். இவற்றைத் திருவருள் துணையால் அவ்வவற்றினிடத்தில் மாறுபாடின்றி அமையும்படி பயின்றுள் நெடுந்தகையனுகிய சிவனும் மதியும் பாம்பும் பகைதீர்ந்து உறவாய் உடன் வாழும்படி செய்தருள்வன்.

(அ. சீ.) பாம்பு - குண்டலினி. மதி - அமுதம். (உக)

**852.** அயின்றது வீழ்வள வுந்துயில் இன்றிப்
பயின்ற சசிவீழ் போழுதில் துயின்று
நயந்தரு பூரணை உள்ள நடத்தி
வியந்தரு பூரணை மேவுஞ் சசியே.

(ப. இ.) பாம்பினால் விழுங்கப்பட்ட திங்கள் அப் பாம்புவிட்டு விலகுகின்றவரையும் உறக்கமின்றி இருந்து, விட்டு விலகியதும் விரும்பத் தகுந்த பூரணையாகிய நடுநாடி வழியாக உயிர்ப்புப் பயிற்சியைப் பயின்று புறநாட்டமின்றியிருந்து மேற்கொள்வார்க்குச் சசியாகிய புருவநடுவின் கண் விளையும் திங்கள் அமிழ்தம் கைகூடும் என்க. பூரணை - நடுநாடி. (உஉ)

---

1. பகல்வெல்லும். திருக்குறள், சஅக.
2. தேனும். கஉ. கூற்றுவநாயனர், கூ.
,, சாம்பரகலத். கூ : டு - ச.
,, நாகத்தை. ச. டுகூ - உ.

**853.** சசியுதிக் கும்அள வுந்துயி லின்றிச்
சசியுதித் தானேல் தனதுரண் அருந்திச்
சசிசரிக் கின்றள வுந்துயி லாமற்
சசிசரிப்[1] பின்கட் டன்றுயில் கொண்டதே.

(ப. இ.) புருவநடுவில் தோன்றும் மதியமிழ்தம் புலனுகும் வரை உயிர்ப்புப்பயிற்சியை விடாது பயின்று, அம் மதியமிழ்தம் புலனுயதும் அம் மதியமிழ்தினைத் துய்த்து, அம் மதியமிழ்து உடம்பின்கண் எல்லா இடங்களிலும் பரவும் வரையில் பயிற்சிவிடாது செய்க. அீம் மதியமிழ்து எங்கணும் பரவியபின் புறநாட்டம் அறவே நீங்கிற்றுகும். சசி - மதி; உதித்தல் - (உணர்வில்) புலனுதல். துயிலின்றி - மடியில்லாமல்; முயற்சியுடன். தனதுண் - தன் நெற்றிக்கண் காணப்படும் மதியமிழ்து. துயிலாமல் - புறநாட்டமில்லாமல்; அகநாட்டத்துடன். சரிப்பின் - பரவினுல். துயில்கொள்ளுதல் - புறநாட்டமுற்றுக நீங்குதல். (உக)

**854.** ஊழி பிரியா திருக்கின்ற யோகிகள்
நாழிகை யாக நமனே அளப்பார்கள்
ஊழி முதலாய் உயர்வார் உலகினில்
தாழவல் லார்இச் சசிவன்ன ராமே.[2]

(ப. இ.) ஊழாகிய உடம்பின் கால அளவையைப் பொருந்தாமல் இருக்கின்றவர் அகத்தவத்தோராவர். அகத்தவம் - யோகம். கால அளவையைப் பொருந்தாமையாவது: அகத்தவம் இல்லாதார்க்குக் காலம் கணக்கிடுவது நாழிகை, நாள், கிழமை, திங்கள், ஆண்டு எனஞாயிற்றைக் கருவியாகக்கொண்டு அளப்பது. அகத்தவத்தோர்க்கு உயிர்ப்பை - பிராணவாயுவைக் கருவியாகக்கொண்டு அளப்பது ஒவ்வொரு நாளும் நாம் விட்டுவாங்கும் மூச்சு வாங்குவதைவிட விடுவதே அளவிறப்ப ஆகின்றது. அதனுல் வரவுக்கு மிகுதியாகச் செலவு செய்யும் ஒருவரைப்போல் விரைவில் காலத்தை அளக்கும் காலன் - கூற்றுவன் முன் சென்று விடுகின்றோம். அகத்தவமுடையோர் உயிர்ப்புப் பயிற்சியால் மூசசை அளவாசவிட்டுக் கூடுதலாக உள்ளே தங்கவைத்துக் கொள்கின்றனர். மேலும் ஆயிரக்சணக்கான ஆண்டுசளுக்கு மூச்சை வெளியில் ஒரு சிறிதுப்விடாமல் உள்ளேயே அடக்கிவைத்துங் கொள்கிறார்கள். அதனுல் அவர்சள் காலம் அளவின்றி நீள்கின்றது. சுருங்கச் சொன்னுல் அவாகள் தாமாகவே வேண்டும்போது தம் ஆவியை நீத்துக் கொள்வர். அதனுல் அவர்கள் தங்கள் பயிற்சியாகிய நாழியால் நமனை அளக்கின்றனர். நமனை அளப்பதாவது சிவனை இடையருது எண்ணும் வங்சள் பால் ஏ நமனே! உனக்கு வேலையில்லை என்பதே: மேலும், பலவூழிகள் மாளாது அவ்வவ்வூழிக் காலங்களில் தூய பரவெளியில் நினைத்திருந்து மீண்டும் அவ்வுடம்புடனே தோன்றுவர். அதனுல் அவர்கள் ஊழிமுதல்வரும் ஆகின்றனர். இம் முதன்மை அவர்கட்குச் சிவனருளால் கிடைக்கப்பெற்றதாகும். இவ் வுண்மை 'யோகியாயிருந்

(பாடம்) 1. பின்கட்டன் கண்டுயில்.
2. தோற்றஞ்சால். நாலடியார், எ.
,, மண்ணிற், நாலு. கூ. பெருமிழலைக் குறும்பர், க'. கo.

துயிர்க்கு யோகத்தைப் புரிதல் ஒரார்' என்னும் தமிழாகம விரிவாகிய சிவஞான சித்தியார் திருப்பாட்டான் உணர்க. நாழி - அளக்கும் கருவி; படி. தாழ - தங்க. ஊழி - கற்பம். உடம்பில் அகத்தவமுயற்சியால் நெடுநாள் தங்கவல்லார் மதியமிழ்தப் பயிற்சியுடையாராவர். இவரைச் சசிவன்னர் எனக் கூறுவர். நாழிகையாக என்பதை, நாழி + கையாக என்று பிரித்து நாழி - படி, கையாக - அளக்கும் கருவியாக எனப் பொருள் கொள்க.

(அ. சி.) ஊழி தரியாது - விதியை அடையாமல். (உச)

855. தண்மதி பானுச் சரிபூமி யேசென்று
மண்மதி காலங்கள் மூன்றும் வழிகண்டு
வெண்மதி தோன்றிய நாளில் விளைந்தபின்
தண்மதி வீழ்வள விற்கண மின்றே.[1]

(ப. இ.) குளிர்ந்த திங்களும், ஞாயிறும் உச்சி வழியாகிய நிலத்தே சென்று நிலைப்பின் உலகத்தாரால் மதிக்கப்படுகின்ற இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னும் மூன்று கால நிகழ்ச்சியையும் ஒருகாலத்து ஓரிடத்தே இருந்து கண்டு கொள்வர். நிறைமதி தோன்றிய நாளில் மதியமிழ்தம் விளையும். விளைந்தபின் அக் குளிர்ந்த மதியமிழ்தம் உடல்முழுவதும் நிறைவதற்குரிய அளவிற்கு எண்ணில்லை என்க. உச்சிசரி - உச்சித் தொளைவழி. உச்சி சரி என்பது உச்சரி என நின்றது செய்யுட்டிரிபு. வீழ்வு - நிறைவு. அளவிற்கு—, அணம் இன்றே - எண்ணில்லை.

(அ. சி.) மண்மதி - உலகத்தாரால் மதிக்கப்பட்ட. (உஇ)

856. வளர்கின்ற ஆதித்தன் தன்கலை யாறுந்
தளர்கின்ற சந்திரன் தன்கலை யாறும்
மலர்ந்தெழு பன்னிரண் டங்குலம் ஓடி
அலர்ந்து விழுந்தன்மை யாரறி வாரே.

(ப. இ.) ஞாயிற்றின் விளக்கமிக்க கலை ஆறும், திங்களின் தேய்பிறைப்பக்கக் கலை ஆறும் உயிர்ப்புப் பன்னிரண்டு விரலளவு ஓடி விரிந்து உள்ளடங்குந் தன்மையை அறிந்தவர் நெடுநாள் வாழும் தன்மையை அறிவர். அல்லாதார் எவரும் அறியார். (உக)

857. ஆமுயிர்த் தேய்மதி நாளே யெனல்விந்து
போம்வழி எங்கணும் போகாது யோகிக்குத்
காமுற இன்மையிற் கட்டுண்ணு மூலத்தில்
ஓமதி யத்துள்விட் டுரையுணர் வாலே.

(ப. இ.) உயிர்க்கு மதியமிழ்தம் கீழ்நோக்கிக் கழியுமாஞல் தேய்வுபக்கம் எனக் கூறுக. அகத்தவமுடையார்க்குக் காம வேட்கை இன்மையால் அவ்வமிழ்து (விந்து)போம் இடமெல்லாம் போகாது கட்டுப்படும். அவ்வாறு கட்டுப்படுவதற்கு மூலத்திடத்துத் தோன்றும் ஓ மொழி மறையினை இடையருது புருவநடுவில் எண்ணுதல்வேண்டும். எண்ணுதல்

1. அருந்தின்பத். சிவஞானசித்தியார், அளவை - எ.

தல் - தியானித்தல். அவ்வாறு எண்ணும் உணர்வினால் மதியமிழ்து தடுநாடிவழியாக மேற்செல்லும். எனல் - எனக் கூறுக. இது 'பயனில் சொல் பாராட்டு வானே மகனெனல், மக்கட் பதடி எனல்' (குறள்-கக்கு) என்பதனால் விளங்கும். எனல் : அல்லீற்று வியங்கோள்.

(உ. சி.) உயிர்த் தேய்மதி - சீவனுக்கு அபரபக்கம். விந்து.... போலிது-சாதாரணமாகச் செல்லும் வழியில் செல்வது விந்து. காமுறவு-ஆசையுறுதல். மூலத்தில் கட்டுண்ணும் - மூலாதாரத்தில் உள்ள வினைத் தண்டின் வேடே செல்லும். (உஎ)

858. வேறுறச் சேங்கதிர் மெய்க்கலை யாறுடுஞ்
சூறுற நான்குந் தோடர்ந்துற வேநிற்கும்
ஈறிலி னன்கலை யீரைந்தோ டேமதித்
தாறுட் கலையுள் அகலுவா வாமே.

(ப. இ.) சிறப்பாகத் தியின் கலை ஆறுடனும் கீழ்ப் பகுதியிற் காணும் கலை நான்கும் தொடர்வுபட்டேநிற்கும். அழிவில்லாத ஞாயிற் றின்கலை பத்துடன் திங்களின் கலை அடங்கியே நிற்கும். அந்நாளே விரிந்த உவாநாளாகும். சூறு - கீழ்ப்புறம். இனன் - ஞாயிறு. மதித் தாறுள் - திங்களின் கலையுட்பட்டிருக்க. (உஅ)

859. உணர்விந்து சோணி உறவினன் வீசும்
புணர்விந்து வீசுங் கதிரிற் குறையில்
உணர்வும் உடம்பும் உவையோக்க நிற்கில்
உணர்வும் உடம்பும் ஒருகால் விடாவே.

(ப. இ.) உணர்விற்கு வாயிலாகிய ஒளிவிந்து, நாதமாகிய சோணி தத்து - நாதத்தின்கண் கலக்க ஞாயிற்றின் ஒளி மிக்குக் காணப்படும். ஞாயிற்றின் கதிர் குறையுமானால் விந்து மேலே விளங்கித் தோன்றும். ஒளியாகிய உடம்பும் உணர்வும் ஒரளவாகித் தோன்றின் அத்தகைய யோகியர்க்கு உடம்பும் ஒரு காலத்தும் விட்டு நீங்காது. சோணி - சோணிதம் : நாதம். உவை - அவ்விரண்டும்.

(உ. சி.) சோணி-சோணிதம் ; நாதம். இனன்-சூரியன். உவை - அவை இரண்டும். (உக)

860. விடாத மனம்பவ னத்தோடு மேவி
நடாவு சிவசங்கின் நாதங் கொளுவுக்
கடாவிடா ஐம்புலன் கட்டுண்ணும் வீடு
படாதன இன்பம் பருகார் அமுதமே.

(ப. இ.) இடையருத ஓடுக்கமனமும் உயிர்ப்பும் ஒன்றுகூடிப் பொருந்தி அனைத்தையும் என்றும் பிரிப்பின்றி இயைந்து இயக்கும் சிவ பெருமானின் தனிப்பெரு மறையாம் 'சிவ' என்னும் அருளொலி முழக்கத்தை எழுப்பினால் கட்டுப்படாது முருட்டுத் தன்மையாய் இழுத்துச் செல்லும் ஐம்புலன்களும் கட்டுக்கு அடங்கும். விடுதலில்லாது என்றும் நிலைத்திருக்கும் திருவடியின்பம் துய்க்கும் தெவிட்டாத நிறை இன்பம்

ஆகும். விடாத - நீங்காத. பவனம் - உயிர்ப்பு. நடாவு - இயக்குகின்ற. சங்கநாதம் . சங்கொலிபோலும் ஒலி. கடா - முருட்டுத் தன்மை. விடா - நீங்காத. கட்டுண்ணும் - அடங்கும். வீடுபடாதன - விடுபடாதன, நீங்காத. விடு . வீடு என முதல் நீண்டது. சங்கு - வெண்ணிறம் பொருந்திய சிறந்த முதன்மை வாய்ந்த இசைக் கருவி. பருகாரமுதம் : பருகு + ஆர் + அமுதம்.

(அ. சி.) மனபவனம் - மனமும் பிராணனும். கடா - முரட்டுத் தனம். வீடுபடாதன - நீங்காத. (கூ0)

861. அமுதப் புனல்வரு மாற்றங் கரைமேற்
குமிழிக் குட்சுட ரைந்தையுங் கூட்டிச்
சமையத்தண் டோட்டித் தரிக்கவல் லார்க்கு
நமன்இல்லை நற்கலை நாள்இல்லை தானே.

(ப. இ.) மதியமிழ்தப் பெருக்கு மிக்குவரும் ஆற்றங்கரையாம் புருவ நடுவின்மேல் தோன்றும் குமிழியகத்து அறிவு, ஆற்றல் ஓசை, ஒளி (சிவம், சத்தி நாதம், விந்து) ஆவி என்னும் சுடர் ஐந்தினையும் ஒருங்கு கூட்டி நடுநாடிவழியாக உயிர்ப்பினைச் செலுத்தி உறைப்புடன் நிற்க வல்லார்க்கு உடம்பினின்று உயிரைப் பிரிக்கும் நமனுக்கு உட்படும் நலி வில்லை; கலை நாள் முதலியன கட்டுறுத்தும் பிணிப்பில்லை, அழியாது உடம்புடன் என்றும் இருப்பர். சமைய - பொருந்த. தண்டு - நடுநாடி. ஓட்டுதல் - செலுத்துதல். தரித்தல் - நிலைத்தல். கலை - கட்டு. நாள் - நாள்கோள்.

(அ. சி.) தற்சுடர் ஐந்து - சிவம், சத்தி, நாதம், விந்து, சீவன். சமைய - பொருந்த. [கூக)

862. உண்ணீ ரமுத முறுமூ றலைத்திறந்
தெண்ணீர் இணையடித் தாமரைக் கேசெலத்
தெண்ணீர் சமாதி யமர்ந்துதீ ராநலங்
கண்ணுற் றுடேசென்று கால்வழி மாறுமே.

(ப. இ.) உண்ணீரமுதமாகிய மதியமிழ்தத்தின் பொருந்திய ஊற்றினைத் திருவருளின் துணைப் பயிற்சியால் திறத்தல் வேண்டும். திறந்து தெளிந்த அருட்குணம் வாய்ந்த திருவடியாகிய தாமரையை இடையருது எண்ணுதல் வேண்டும். எண்ணி இன்புற அலைவின்றி உளம் தெளிந்த நிட்டையிருத்தல் வேண்டும். நிட்டையிருந்து, என்றும் நீங்காது நிலைத்துள்ள ஏற்றமாம் உணர்வு எனப்படும் திருவடியுணர்வாகிய கருத்து வழிச் சென்று உறைத்தல் வேண்டும். உறைக்கின் உயிர்ப்பானது பொதுவாகச் செல்லும் வலமூக்கு இடமூக்குவழி அகன்று நடுநாடி வழியாக மாறும் என்க. தெண்ணீர் - தெளிந்த அருட் பண்பு. தெண்ணீர்ச் சமாதி - அலைவில்லாத தெளிந்த நிட்டை. தீரா நலங்கண் . திருவடியுணர்வு. கால் - உயிர்ப்பு.

(அ. சி.) தீரா நலக்கண் - ஞானக்கண். (கூஉ)

**863.** மாறு [1]மதியுமா தித்தனு மாறின்றித்
தாறு படாமல்தண் டோடே தலைப்படில்
ஊறு படாதுடல் வேண்டும் உபாயமும்
பாறு படாஇன்பம் பார்மிசைப் பொங்குமே.

(ப. இ.) உடம்பகத்துக் காணப்படும் ஞாயிற்று மண்டிலம் திங்கள் மண்டிலம் இயற்கையில் மாறுடையதாயினும் பயிற்சியால் மாறில்லாமல் பிரிவில்லாமல் இயைந்து நடுநாடியாகிய தண்டுடன் கூடினால் உடலுக்கு அழிவில்லை நிலத்தின்மீது அழிவில்லாத திருவடிப் பேரின்பம் அளவின்றிப் பெருகும். அதற்குரிய வழிவகையும் இதுவே. ஊழையும் தம்மடியார்க்குச் சிவபெருமான் மாற்றியருளும் சீர்மையன், அவ்வுண்மை வருமாறு காண்க :

காலநிலைத் துன்பத்தைக் காக்கும் கருவிபோல்
ஞாலத்தூழ் நீக்கும் நமசிவய—பாலொத்த
நீறும் அருள்மருந்தாய் நீங்கா தகம்புறநின்
றேறுவினை ஏன்றவினை ஏன்று.

(அ. சீ.) மாறும் - மாறுபட்டிருக்கின்ற. தாறுபடாமல் - பிரிவில்லாதபடி. தண்டோடு - வீணைத்தண்டோடே. ஊறுபடாது-கெடாது. பாறுபடா - அழிவில்லாத. (கூ கூ)

மூன்றும் தந்திரம் முற்றும்.

---

(பாடம்) 1. மதியும் மதித்திரு.
,, பொருந்தாத. கூ : எ-அ.
,, செறுவிப் பார்சிலை. இ. கூ-ச.

# நான்காம் தந்திரம்

[சிந்தாகமம்]

## 1. அசபை

(பேசா எழுத்து)

**864.** போற்றுகின் றேன்புகழ்ந் தும்புகல் ஞானத்தைத்
தேற்றுகின் றேன்சிந்தை நாயகன் சேவடி
சாற்றுகின் றேன்அறை யோசிவ யோகத்தை
ஏற்றுகின் றேன்நம் பிரான்ஓர் எழுத்தே.[1]

(ப. இ.) அடிமையாம் அனேத்துயிர்க்கும் என்றும் விட்டு நீங்காப் புகலிடமாயுள்ள திருவடியுணர்வைத் தமிழாகமவழிப் போற்றுகின்றேன். தனிப்பெருந் தலைவனும் சிவபெருமான் திருவடியை உள்ளத்துணர்வால் ஓவாது தெளிகின்றேன். அதனால் திருவடியைக் கூடுதலாகிய சிவயோகத்துக்கு வேண்டத்தக்க சக்கரத்தையும் ஓங்காரமாம் ஒண்மறையினையும் அருளால் கூறுகின்றேன். எம்பிரானுரது கணிக்கப்படாத - பேசா எழுத்தாம் சிகரத்தினைக் கணியாது உணர்வால் ஒதுகின்றேன். அசபை என்பது செபிக்கப்படாதது என்று பொருள்படும். அதற்குரிய எழுத்தைப் பிறவாறு கூறுவாருமுளர். பேசும் எழுத்து 'ல' எனவும், பேசா எழுத்து 'சி' எனவும் கூறுவது தமிழாகம மரபு. 'சிவ' என இணைத்தே ஓதுவதியற்கை. அதனால் ஈண்டுச் 'சி' எனக் கூறப்பட்டது.

(அ. சி.) அறை + ஓர் - சக்கரமும் பிரணவமும். அறை - வீடு. ஓரெழுத்து - அசபா மந்திரம். (க)

**865.** ஓரெழுத் தாலே உலகெங்குந் தானுகி
ஈரெழுத் தாலே இசைந்தங் கிருவராய்
மூவெழுத் தாலே முளைக்கின்ற சோதியை
மாவெழுத் தாலே மயக்கமே உற்றதே.[2]

(ப. இ.) ஓ என்னும் முன்னெழுத்தாலே உலகம் எல்லாம் கலப்பால் தானுகி ; ஓ என்பதைப் பிரித்தால் அ + உ, என்று ஈரெழுத்தாகும். அவ்விரண்டும் சிவன் சிவை என்னும் இரு பொருள்களைக் குறிக்கும். (எழுத்தின்படி பார்த்தால் அறிவோன் உடையாள் என்று பொருள் வரும்.) இவற்றை உயிர்க்குயிர் (பரமான்மா) உயிர் (சீவான்மா) எனவும் உரைப்பர். மூன்றெழுத்தாகிய அ + உ + ம் என்பனவற்றுள் தோன்றுகின்ற பேரொளியினை, மாயையினைக் குறிக்கும் 'ம்' என்னும் எழுத்தால் (சலமகள் - நடப்பாற்றல் 'ம' எனக் குறிக்கப்படுகின்றது.) உயிர்க்கு மயக்கம் வந்து பொருந்தும்.

---

1. அஞ்செழுத்தும். கொடிக்கவி, ச.
2. நித்தமா. சிவஞானசித்தியார், உ, கூ - கூ.

(அ. சி.) ஓர் எழுத்து - ஓ என்னும் எழுத்து. ஈர் எழுத்து - அ + உ. இருவராய் - சிவன் + சிவன் or சத்தி + சிவன். மூவெழுத்து - அ + உ + ம். மா எழுத்து - ம் or மாயை. (உ)

866. தேவ ருறைகின்ற சிற்றம் பலம்என்றுந்
தேவ ருறைகின்ற சிதம்பர மேன்றுந்
தேவர் உறைகின்ற திரு அம் பலமேன்றுந்
தேவர் உறைகின்ற தென்போது வாமே.

(ப. இ.) தேவர்க்கும் மூவர்க்கும் மற்று யாவர்க்கும் பெருமானுகிய முழுமுதற் சிவன் என்றும் உறைகின்ற திருவிடம் சிற்றம்பலம் என்ப. இதனையே சிதம்பரம் எனவும் கூறுவர். இதனையே திருவம்பலம் எனவும் கூறுவர். இவை எல்லாம் அழகிய அம்பலம் என்னும் தென் பொதுவேயாம் (தென் - அழகு ; திருவடி.) (கூ)

867. ஆமேபொன் னம்பலம் அற்புதம் ஆனந்தம்
ஆமே திருக்கூத் தனவரத தாண்டவம்
ஆமே பிரளய மாகும்அத் தாண்டவம்
ஆமேசங் காரத் தருந்தாண்ட வங்களே [1]

(ப. இ.) எல்லையில் புகழ்சேர் தில்லைப் பொன்னம்பலத்தின்கண் என்றும் இடையறாது நிகழும் திருக்கூத்து ஐவகைக் குறிப்பாகும். தாண்டவம் என்பது ஆவிகளை முன்னேற்றப் புரியும் அருட்செயலாகும். அவை : அற்புதக்கூத்து. ஆனந்தக்கூத்து, அனவரதக்கூத்து, ஊழிக் கூத்து, பேரொடுக்கக் கூத்து என்பன. அற்புதம் - வியப்பு. ஆனந்தம் பேரின்பம். அனவரதம்-இடைவிடாமை. தாண்டவம்: தாண்டு + அவம். அவம் - பிறப்பு. தாண்டு - கட. பிறப்பறச் செய்யுங் கூத்து.

(அ. சி.) பொன்னம்பலம்-பொன்னம்பலத்தாண்டவம். அற்புதம் - அற்புதத் தாண்டவம். ஆனந்தம் - ஆனந்தத் தாண்டவம். அனவரதம் - அனவரதத் தாண்டவம். பிரளயம் அல்லது சங்காரம் - பிரளயத் தாண்டவம் ; எனத் தாண்டவங்கள் 5. (எ)

868. தாண்டவ மான தனியெழுத் தோரெழுத்
தாண்டவ மான தனுக்கிர கத்தொழில்
தாண்டவக் கூத்துத் தனிநின்ற தற்பரந்
தாண்டவக் கூத்துத் தமனியந் தானே.

(ப. இ.) இத் திருக்கூத்துக்கள் ஒப்பில்லாத திருவைந்தெழுத்தின் அருள்கூத்து ஆகும். அவை அனைத்தும் ஆவிக்கு அருளும் அருளிப் பாடேயாகும். அக் கூத்தினை அருளுபவன், முழுமுதற் சிவபெருமானே. அது நிகழும் இடம் ஆருயிர்களின் நெஞ்சகம் - பொன்னம்பலம், இவ் வுண்மை 'உண்மை விளக்க'த் திருப்பாட்டான் உணரலாம். அது :

1. அழிப்பிலைப். சிவஞான சித்தியார், க. உ - கூ.

"தோற்றம் துடியதனில் தோயும் திதியமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்—ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தே உற்றதிரோ தம்முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு" —உண்மை விளக்கம், ஈசு.

(அ. கி.) தாண்டவமான தனி எழுத்து ஓர் எழுத்து - ஐந்தெழுத்து நடனம். தொழில் - அது தொழில்நடனம். ஆக்கல் - அளித்தல் - அழித்தல்-மறைத்தல்-அருளல். தற்பரம்-தற்பரக்கூத்து. தமனியம் - பொன். (இ

869. தானே பரஞ்சுடர் தத்துவ மாய்நிற்குந்
தானே அகார உகாரம தாய்நிற்குந்
தானே பரஞ்சுடர் தத்துவக் கூத்துக்குத்
தானே தனக்குத் தராதலந் தானே.

(ப. இ.) ஒப்பில்லாத பேரொளிப் பிழம்பும் தானேயாம். என்றும் அழிவின்றி ஒன்றுபோல் யாண்டும் செறிந்து நிற்கும் மெய்ப்பொருளும் தானேயாம். அகர உகரமாகிய அறிவோனும் உடையாளுமாக விளங்குவதும் தானேயாம். அருட்பெருங் கூத்துக்குத் தனிமுழுமுதலாய் விளங்குவதும் தானேயாம். தனக்கு நிலைக்களமாக இருப்பதும் தானேயாம். தராதலம் - நிலைக்களம்; தாங்கும் இடம்.

(அ. கி.) தத்துவம்-மெய்ப்பொருள். அகார உகாரமதாய் - அக்கர உருவமாய். தராதலம் - பூமி ஆதாரம் என்பது. (சு)

870. தராதல மூலக்குத் தற்பர மாபரன்
தராதலம் வெப்பு நமசி வாயவாந்
தராதலஞ் சொல்லிற் றுன்வா சியவாகுந்
தராதல யோகந் தயாவாசி யாமே.

(ப. இ.) தாங்கும் ஆறு நிலைக்களங்களுள் மூலையாகிய மூலாதாரத்துக்கு நிலைக்களத் தெய்வம் மூத்தபிள்ளையாகும். வெப்புத் தன்மையவாகிய தீமண்டிலத்துக்கு நிலைக்களத் தெய்வம் (அநி தெய்வம்) நகரமாகிய சலமகளாகும். சலமகள்-மறைப்பாற்றல். அம் முறை நமசிவாய என்னும் ஐந்தெழுத்தும் கூத்தப் பெருமான் வடிவமாகும். இவ் வடிவம்:

"சேர்க்கும் துடிசிகரம் சிக்கனவா வீசுகரம்
ஆர்க்கும் யகரம் அபயகரம்—பார்க்கிலிறைக்
கங்கி நகரம் அடிக்கிழ் முயலகனூர்
தங்கும் மகரமது தான்" —உண்மை விளக்கம், கூசு.

என ஓதும் தமிழாகம முறைப்படியாம். இத் திருப்பாட்டின்படி ந, ம, சி, வ, ய என அமைத்தால் ஏறத்தாழக் கீழ்நோக்கிய முக்கோணமாகும். அதுமட்டுமன்று, நம் நாவலந்தீவின் நல்லமைப்பையும் ஒக்கும். மூக்கோணம் தீயின் அடையாளம். இந் நிலைக்குரிய தமிழ்மறை நமசிவய. இம் முறையாகக் கண்ணிப்பார்க்கு எளிதாக உயிர்ப்படங்கும். அது சிறந்த பயிற்சியாகும். தராதலம் - உலகம். வாசி - உயிர்ப்பு. வாசி - சிறந்த பயிற்சி. (எ)

871. ஆமே சிவங்கள் அகார உகாரங்கள்
ஆமே பரங்கள் அறியா விடம்என்ப
ஆமே திருக்கூத் தடங்கிய சிற்பரம்
ஆமே சிவகதி ஆனந்த மாமே.

(ப. இ.) அகரம் சிவமாகவும், உகரம் சிவை யாகவும் ஆகும். இவை இரண்டும் சுட்டறிவுக்கு எட்டாத துணைப் பொருள்கள். ஆதலால் அறியா இடமென்ப. அறிவுருவாம் முழுமுதல் ஐந்தொழில் திருக்கூத் தடங்கிய பெரும்பொருள் ஆகும். இறவாத இன்ப நிலையமாக இலங்குவது சிவகதியேயாம். பரங்கள் - மேலாம் மெய்ப்பொருள்கள். சிற்பரம் - மேலாம் அறிவு ; சிவகதி - இன்ப நிலையம் (அ)

872. ஆனந்த மூன்றும் அறிவீரண் டோன்றுகும்
ஆனந்தஞ் சிவாய அறிவார் பலரில்லை
ஆனந்த மோடும் அறியவல் லார்கட்கு
ஆனந்தக் கூத்தாய் அகப்படுந் தானே.[1]

(ப. இ.) இறவாத இன்ப நிலையம் அகர உகர மகரங்களென்னும் மூன்றுமாம். அறிவாற்றல், அறிவு என அறிவு இரண்டாம். அறிவாற்றல்-ஆணை; சத்தி. அறிவு - சிவம். இவற்றுடன் யகரம் ஒன்று கூட்ட அறிவு (சிவய) மூன்றுகும். இம் மூன்றனையும் திருவருட்டுணையால் அறிவார் பலரில்லை சிலரே யாவர். இறவாத இன்பத்தினை அதனுடன் புணர்ந்து. அறியவல்லார்க்கு அவ் வின்பம் ஒளியாது வெளிப்பட்டு அகப்படும் என்க. கூத்தாயகப்படுதல் - இன்பாய் நுகர்தல்.

(அ. சி.) ஆனந்தம் மூன்று - அ. உ. ம். அறிவு இரண்டு - சத்தி - சிவம். ஒன்றுகும் ஆனந்தம் சிவாய - சத்தி - சிவம் - ஆன்மா. (க

873. படுவ திரண்டும் பலகலை வல்லார்
படுவதோங் காரம் பஞ்சாக் கரங்கள்
படுவது சங்காரத் தாண்டவப் பத்தி
படுவது கோணம் பரந்திடும் வாறே.

(ப. இ.) இணைந்திருக்கும் அம்ச மந்திரம்(சிவ)இரண்டும் புரிவார் பல்கலை வல்லாராவர். அம்சமந்திரம் இரண்டும் அறிவும் ஆணையுமாகக் கூறலாம். அறிவே சிவம். ஆணையே சத்தி. இவ்விரண்டின் விரிவே ஓங்கார பஞ்சாக்கரங்கள். இம் முறை குறிப்பதே சங்காரத் தாண்டவம். இத் தாண்டவத்தின் முறைமையால் எல்லா இடங்களிலும் சிவப் பேறு பரவும் என்க. பரவும் - வியாபகமாகும். பத்தி - முறைமை. கோணம் - புலம் ; திசை. வாறு - பேறு ; சிவப்பேறு. சங்காரம் - பேரொடுக்கம்.

(அ. சி.) இரண்டும் - அம்ச மந்திரங்கள் இரண்டும். படுவது - சொல்லப்படுவது. (கo)

1. நெடிதுபோ. கூ. கண்ணப்பர், கoக.

**874.** வாறே சதாசிவ மாறிலா ஆகமம்
வாறே சிவகதி வண்டுறை புன்னையும்
வாறே திருக்கூத்து ஆகம வசனங்கள்
வாறே போதுவாகு மன்றின் அமலமே.

(ப. இ.) பெரும் பேருகிய சதாசிவ நாயனரருளிய முன்னெடு பின் முரண்பாடில்லாத இறைவன் நூலாம் ஆகமம் முப்பொருள் நூலாகும். அவ் வாகமத்தின் வளப்பமிக்க துறையே மலமகற்றிச் சிவப் பேருக்குக். அனைவர்க்கும் பொதுவாம் அம்பலத்தின்கண் நடிக்கும் திருக் கூத்தும் ஆகமவுயிராம் திருவைந் தெழுத்தாகும். கூத்தியற்றுவோனும் இயல்பாகவே பாசங்களினின் நீங்கிய இறைவனுகும். மாறிலா - முரண் பாடில்லாத. வண்டுறை - வளப்பமிக்க துறை. புன்னையும் - புல் + நையும்—புல்லுமலமாகிய ஆணவம், தேயும். அமலம் - இயல்பாகவே பாசமின்மை. நெறிநூல் - வேதம். துறைநூல் - ஆகமம்.

(அ. சி.) சதாசிவம் மாறிலா ஆகமம் - சதாசிவ நாயனர் வெளி யிட்ட மாறுபாடில்லாத ஆகமங்கள். அமலம் - சிவம்; நின்மல சிவம். (கக)

**875.** அமலம் பதிபசு பாசங்கள் ஆகமம்
அமலந் திரோதாயி யாகுமா னந்தமாம்
அமலஞ்சொல் ஆணவ மாயை காமியம்
அமலந் திருக்கூத்தங் காமிடந் தானே.[1]

(ப. இ.) ஆவியின்மாட்டு முழுமுதற் சிவன் செய்யும் திருக்கூத் தைத் தமிழாகமமாம் திருவைந்தெழுத்தின் சீரிய முறையில் வைத்துக் கண்டால் பசு பாசங்கள் பதியின் நாட்டத்தால் முறையே பிணி வீடும் பிணியாமையுமாகிய தன்மையால் தூய்மையாகும். பிணிவீடு—கட்டி னின்றும் விடுபடுதல். பிணியாமை—தம் வழியீர்க்கும் மலம் மாயை கன் மங்களில் மலம் அடங்கி விடுதலும் மாயை கன்மங்கள் ஆவியின் வழி யொழுகுதலுமாம். மறைப்பாற்றலாகிய திரோதாயியும் திருவடியின்பம் கூட்டுவிக்கும் அருளாற்றலாக வனப்பெய்தும். ஆணவம் மாயை காமியம் என்னும் மூன்றும் மலம்மாயை கன்மங்களின் காரியங்களாகும். (கஉ)

**876.** தானே தனக்குத் தலைவியு மாய்நிற்கும்
தானே தனக்குத் தனமலை யாய்நிற்குந்
தானே தனக்குத் தனமய மாய்நிற்குந்
தானே தனக்குத் தலைவனு மாமே.

(ப. இ.) முழுமுதற் சிவன் தானே தனக்கு ஆற்றலென்று ஓதப்படும் தலைவியுமாய் நிற்பன். தானே தனக்கு அழிவில் பெருஞ் செல்வமுமாக நிற்பன். தானே தனக்குச் சிவமயமாய் நிற்பன். தானே தனக்கு எல்லாம் வல்ல முதன்மையனுகவும் நிற்பன். தனம் - திருவடிச்செல்வம்.

(அ. சி.) தனமலை - பெருஞ் செல்வம். தலைவன் - பதி. (கஊ)

1. மாயா. சிவஞான போதம், சூ. உ - க.

877. தலைவனு மாய்நின்ற தற்பரக் கூத்தனைத்
தலைவனு மாய்நின்ற சற்பாத் திரத்தைத்
தலைவனு மாய்நின்ற தாதவிழ் ஞானத்
தலைவனு மாய்நின்ற தாளிணை தானே.

(ப. இ.) அடிமையாகிய உயிருலகம், உடைமையாகிய உயிரல் உலகம் அனைத்திற்கும் என்றும் பொன்றுத் தலைவனுமாய் நின்றருள்பவன் தற்பரக்கூத்தன். அவனே என்றும் ஒன்றுபோல் விளங்கும் நிலைப் பொருளாகிய சற்பாத்திரமாவன். மணத்தூளாகிய பேரூணர்வுத் தாளிணை என்னும் தாமரை போலும் திருவடியை உடையவ்ஞக விளங்கு பவனும் அவனே யாவன். (கசை)

878. இணையார் திருவடி எட்டெழுத் தாகும்
இணையார் கழலிணை யீரைந்த தாகும்
இணையார் கழலிணை ஐம்பத்தோன் ருகும்
இணையார் கழலிணை ஏழா யிரமே.[1]

(ப. இ.) தமக்குத் தாமே ஒப்பாகிய திருவடிகள் இரண்டும் எட்டெழுத்தாகும். எட்டெழுத்து : ஓம், அம், உம், நமசிவய. அத்தகைய கழலிணைகள் இரண்டும் இருவகை ஐந்தெழுத்தாகும். இருவகை ஐந் தெழுத்து : சிவயநம; சிவயசிவ. அவையே ஐம்பத்தோரெழுத்துமாகும். பண்டைக் காலத்தில் தமிழ் எழுத்துக்கள் ஐம்பத்தொன்றுக வழங்கி வந்தன. பின் உயிர்ப்புச் செட்டு நோக்கி முப்பதாக அமைத்தனர். ஏனைய ஒலிகளை ஒலிப்பிக்க நேரின் ஒலிப்பிக்கும் வாய்ப்பாக ஆய்தம்(ஃ) என்னும் கருவி எழுத்தொன்றும் அமைத்துக்கொண்டனர். அத்தகு கழலிணைகள் ஏழாயிரமாகும். ஏழாயிரம் என்பது எழுவகைத் திருவரு ளாற்றலாகும். ஆற்றல் ஏழு : கலைமகள், அலைமகள், உலைமகள், சலமகள், மலைமகள், நிலைமகள், தலைமகள் என்ப. இவ் வெழுவகை ஆற்றல்களின் தொழில்கள் முறையே படைத்தல், காத்தல், துடைத்தல், மறைத்தல், அருளல், கலப்பித்தல், களிப்பித்தல் என்பன. இவ் வெழுவகை யாற்றல் களும் முறையே வாணி, திரு, உமை, மகேசை, மனோன்மனி, விந்து, சத்தி[1] என்று கூறப்பெறும். ஐம்பத்தோரெழுத்தை ஓதும் ஆசிரியர் முப்ப தெழுத்து வழங்கத் துவங்கிய காலத்தவராதலான் முப்பதெழுத்தே வழங்குகின்ற தொல்காப்பியர் காலத்துக்குச் சற்று முன்னுவரென எண்ணுதல் தவருகாது. (கஞ)

879. ஏழா யிரமாய் இருபதாய் முப்பதாய்
ஏழா யிரத்தும் எழுகோடி தானுகி
ஏழா யிரத்துயிர் எண்ணிலா மந்திரம்
ஏழா யிரண்டாய் இருக்கின்ற வாறே.

---

1. சத்தியாய். சிவஞான சித்தியார், உ - சு - கூ.
,, இணையார், அ. திருப்பூவல்லி, க.
,, வானநாடரும். ,, ஆனந்தாதீதம் - ஙி.
,, ஊன நடனம். திருவருட்பயன், கூ. ஐந். க.

(ப. இ.) திருவருளாற்றல்கள் ஏழானும் செலுத்தப்படும் எழுத்துக்கள் ஐம்பதாகும். மந்திரங்கள் ஏழு முடியினே உடையன எனவும் கூறுவர். முடிபு - கோடி. பயனே உடனே கைகூடச் செய்யும் உயிர் மந்திரங்கள் பலவாகும். (வியாகிருதி மந்திரம் ஏழு, அம்ச மந்திரம் இரண்டு எனவும் கூறுவர்.) திருவருளாற்றல் மந்திரம் ஏழு; சிவ என்னும் மந்திரம் இரண்டனுள் எல்லாம் அடங்கும். (கசு)

880. இருக்கின்ற மந்திரம் ஏழா யிரமாம்
இருக்கின்ற மந்திரம் எத்திறம் இல்லை
இருக்கின்ற மந்திரஞ் சிவன்திரு மேனி[1]
இருக்கின்ற மந்திரம் இவ்வண்ணந் தானே.

(ப. இ.) ஏழுகோடிப் பெருமந்திரங்களினுள்ளும் இந்த அசபா மந்திரத்துக்கு ஒப்பானது ஏதும் இல்லை. மந்திரங்கள் எல்லாம் சிவன் திருமேனியாகும். (கஎ)

881. தானே தனக்குத் தகுநட்டங் தாஞ்சும்
தானே அகார உகாரம தாய்நிற்கும்
தானே இரீங்காரத் தத்துவக் கூத்துக்குத்
தானே உலகில் தனிநடங் தானே.

(ப. இ.) சிவ என்னும் ஈரெழுத்தும் ஒப்பில்லாத சிறந்த திருக்கூத்தாகும். அவையே அகர உகரங்களாகவும் நிற்கும். மேலும் உலகத் தோற்ற ஒடுக்கங்களுக்கு முதற்காரணமாயுள்ள மாயைக்கு அடிப்படை மந்திரமாயுள்ள இரீங்கார மந்திரமும் அதுவேயாம்.

(அ. சி.) ரீம் - மாயையின் பீச மந்திரம். (கஅ)

882. நடமிரண் டொன்றே நளினம தாகும்
நடமிரண் டொன்றே நமன்செய்யுங் கூத்து
நடமிரண் டொன்றே நகைசெயா மந்திரம்
நடஞ்சிவ லிங்கம் நலஞ்சேம்பு பொன்னே.

(ப. இ.) ஆருயிர்கள்மாட்டுப் பொருந்திப் புரியும் திருக்கூத்திரண்டாகும். அவை முறையே மருட்கைக் கூத்தும் இன்பக் கூத்துமாகும். மருட்கை - வியப்பு; அற்புதம். இவை உயிர்கட்கு நீங்கா இன்பம் அளித்தற்பொருட்டேயாம். ஊழி முடிவும் உலக முடிவும் ஆகிய இரு வேறு கூத்துக்களும் நிகழும். இக் கூத்தினை நமன் கூத்து என்பர். ஊழி முடிவு-பிரளயம். உலகமுடிவு சங்காரம். மகிழ்ச்சிக்கு ஏதுவாய் அகத்தும் புறத்தும் ஆடும் கூத்துக்கள் இரண்டு. அகக் கூத்தை, அனவரதக் கூத்தென்பர். புறக்கூத்தை, பொதுக்கூத்து என்பர். செம்பு போன்று மலத்தோடுள்ள உயிரை மல நீக்கிப் பொன்னுக்கிப் போற்றித் திருவடியில் வாழ்விக்கும் திருக்கூத்து ஒன்று.

---

1. மந்திர. சிவஞானசித்தியார், க. உ - கூக.
,, ஆடும், சேர்க்குந், ஓங்கார, உண்மை விளக்கம், கூஙு - கூடு.
,, அஞ்செழுத்தே. ,, சஅ

(அ. சி.) நடம் இரண்டு - அற்புதம் ஆனந்தம். நளினம் - இன்பம். நடம் இரண்டு நமன் செய்யும் - பிரளயம் - சங்காரம், நமன் செய்யும் கூத்து. நடம் இரண்டு - பொது, அனவரதம். நகைசெயும் - சிவத்துவம் ஒழித்துச் சிவத்துவத்தை விளங்கச் செய்யும். செம்பு பொன்னே - செம்பைப் பொன்னுக்குதல் போன்றது. (கக)

883. செம்புபொன் னாகுஞ் சிவாய நமவென்னிற்
செம்புபொன் னாகத் திரண்டது சிற்பரஞ்
செம்புபொன் னாகும் சிரீயுங் கிரீயுமெனச்
செம்புபொன் னான திருவம் பலமே.[1]

(ப. இ.) 'சிவய நம' என்னும் தமிழ் மந்திரமாம் திருவைந் தெழுத்தை இடையருது நாடினால் செம்பு பொன்னுவதுபோல் உயிர் சிவமாகும். சிவமாதல்: சிவனுல் ஆட்கொள்ளப்படுதல். அங்ஙனம் திருவருள் கூர்ந்தது சிவனருள். சிவனருள் மந்திரவித்து சிரீயும் கிரீயும் ஆகும், இதுவே திருவம்பலமாகும்.

(அ. சி.) சிரீயும் கிரீயும் - சத்தி பீச மந்திரங்கள். (உ0)

884. திருவம் பலமாகச் சீர்ச்சக் கரத்தைத்
திருவம் பலமாக ஈராறு கீழித்
திருவம் பலமாக இருபத்தைஞ் சாக்கித்
திருவம் பலமாகச் செபிக்கின்ற வாறே.

(ப. இ.) சிறந்த திருவம்பலச் சக்கரத்தைத் திருவருள் திகழ்ந்து விளங்கும் பொருட்டு நீட்டத்தில் ஆறுவரையும் குறுக்கே ஆறுவரையு மாகக் கீறினுல் இருபத்தைந்து அறைகள் உண்டாகும். அவ் விருபத் தைந்து அறைகளிலும் திருவெழுத்தைந்தையும் முறையாக அமைத்து அவற்றைக் காதலாற் கணித்தல் வேண்டும். கணித்தல் - செபித்தல்.

(அ. சி.) ஈராறு - குறுக்கு ஆறுவரை நெடுக்கு ஆறுவரை கீற திரு வம்பலச் சக்கரமாம். இருபத்தஞ்சாக்கி - இருபத்தைந்து அறைகளாக்கி. திருவம்பலமாகச் செபிக்கின்றவாறு - பஞ்சாக்கரங்களை மாறியிட்டுச் சிற்றம்பலச் சக்கரமாகக்கொண்டு செபிக்கின்ற விதம். (உக)

885. வாறே சிவாய நமச்சி வாயநம
வாறே செபிக்கில் வரும்பேர் பிறப்பில்லை
வாறே அருளால் வளர்கூத்துக் காணலாம்
வாறே செபிக்கில் வருஞ்செம்பு பொன்னே.

(ப. இ.) 'சிவயநம' என்னும் நுண்ணிய திருவெழுத்தைந்தையும் இடையருது கணித்துக்கொண்டேயிருந்தால், அத்தகையோர்க்குப் பிறப் பில்லை, பெறுபேறுகிய திருவருளின் வலியால் திருவம்பலக் கூத்துக் காணலாம். கணிப்பின் பயனுக உயிர் திருவடியை அடையும். வாறு - பேறு. வாறு - வலிமை. வாறு - ஆறு. (உஉ)

1. முன்னம். அப்பர், கூ. உடி - எ.

886. பொன்னென மந்திரம் புகலவும் ஒண்ணுது
பொன்னென மந்திரம் பொறிகிஞ்சு கத்தாகும்
பொன்னென மந்திரம் புகையுண்டு பூரிக்கிற்
பொன்னகும் வல்லோர்க் குடம்புபோற் பாதமே.

(ப. இ.) பொன்போலும் சிறந்த திருவைந்தெழுத்து மந்திரத்தின் பெருமையினை அளவிட்டுக் கூறமுடியாது. அம்மந்திரத்தை இரண்டாம் பயிற்சிநிலையாகிய உதட்டளவில் கணித்தல் வேண்டும். அம்மந்திரத்தினை உயிர்ப்புப்பயிற்சியுடன் கணித்தால் உடம்பு பொன் வண்ணமாகும். அதன்கண் உறைத்து நிற்பார்க்கு அருள்விளக்கத்தால் அவர் உடல் அருளுடல் ஆகும்.

*(அ. சி.) கிஞ்சுகம் - உதடு. புகை - சுவாசம். (உக)

887. போற்பாதங் காணலாம் புத்திரர்[1] உண்டாகும்
போற்பாதத் தாணையே செம்புபொன் னாயிடும்
போற்பாதங் காணத் திருமேனி யாயிடும்
போற்பாத நன்னடஞ் சிந்தனை சொல்லுமே.

(ப. இ.) சீலத்தொண்டால் திருவடிக் காட்சியும், நோன்புத் தொண்டால் திருமேனி தீண்டலும் உண்டாகும். திருவடியாணையால் செம்புபொன்னாவதுபோல் மலமகன்று தூய்மையுறும். செறிவுத்தொண்டால் சிவனுருவெய்தும். அறிவுத்தொண்டால் திருவைந்தெழுத்தானும் திருவருட்கூத்தின் நாட்டம் உண்டாகும். இவ்வுண்மையினைச் செவ்வி வாய்ந்தவர்க்கு ஒதுங்கள். புத்திரர்-நோன்புத் தொண்டர்.

(அ. சி.) திருமேனியாயிடும் - சிவசாரூபம் கிட்டும். (உச)

888. சொல்லு மொருகூட்டிற் புக்குச் சுகிக்கலாம்
நல்ல மடவார் நயந்துட னேவருஞ்
சொல்லினும் பாசச் சுடர்ப்பாம்பு நீங்கிடுஞ்
சொல்லுந் திருக்கூத்தின் சூக்குமந் தானே[2].

(ப. இ.) திருவைந்தெழுத்தைக் கணிக்கும் சிறப்பால் மற்றோர் உடம்பிற் புகுந்து அவ்வுடம்பின் சார்பால் துன்புறும் சிற்றுயிர்கட்குத் துன்பம் நீங்கி இன்புறும் வழியை ஆக்கலாம். திருவருள் துணையும் விருப்புடன்வந்து சொல்லிலும் செயலிலும் கைகூடும். குண்டலியானது தடுநாடியினைவிட்டு நீங்கும். இவையே ஐந்தெழுத் தருட்கூத்தின் அருமறையாகும். சூக்குமம் - அருமறை ; இரகசியம். 'ஆறறி யந்தணர்க்கு அருமறை பலபகர்ந்து' (கலித்தொகை, கடவுள் வாழ்த்து) என்பதனால் இவ் வுண்மை யுணரலாம். இத் திருமூலர் திருவரலாறும் காண்க.[3]

(அ. சி.) ஒரு கூட்டில் புக்கு-இன்னொரு சரீரத்தில் புகுந்து. (உஇ)

---

1. சன்மார்க்கம். சிவஞானசித்தியார். அ, உ-அ.
2. ஊன நடன. திருவருட்பயன், கூ. ஐந்-க.
3. பாயத்தியபின். கஉ திருமூலர், கச.

இ.—24

889. சூக்குமம் எண்ணு யிரஞ்செபித் தாலுமேற்
சூக்கும மான வழியிடைக் காணலாஞ்
சூக்கும மான வினையைக் கெடுக்கலாஞ்
சூக்கும மான சிவனதா னந்தமே.

(ப. இ.) நெஞ்சகத்து வஞ்சமின்றி எண்ணத்தக்க நுண் ஐந்தெழுத்தை எண்ணினுல் உம்மேலுள்ள நுண்ணுடல் வினையை நீங்கச் செய்யலாம். மேலும் உச்சித்தொளவழியையும் காணலாம். உணர்வுக்கு உணர்வாய்த் திகழும் சிவன் திருவடியின்பமும் சிறந்து விளங்கும்.

(அ. கீ.) சூக்குமமான வழி - பிரமரந்திரம். (உசு)

890. ஆனந்தம் ஒன்றென் றறைந்திடம் ஆனந்தம்
ஆனந்தம் ஆ-ஈ-ஊ-ஏ-ஓமென் றைந்திடம்
ஆனந்தம் ஆனந்தம் அஞ்சும தாயிடம்
ஆனந்தம் அம்- ஹ்ரீம்-அம் க்ஷம்-ஆம்-ஆகுமே.

(ப. இ.) அஞ்செழுத்து மூறையில் ஆவி சிவனுக்கு அடிமை என்று ஓர்ந்து சிவனிறைவில் அடங்கிச் சிவனே எனும்படி நிற்பதாகிய ஒன் றென்று சொல்லப்படும் நிலை எய்தினுல் திருவடிப்பேற்றின்பம் ஆகும். அதுவே ஆ, ஈ, ஊ, ஏ, ஓம் என ஐந்திடத்து வரைதலும், அம், கி (க்ஷி) ரீம், அம், ச(க்ஷ)ம், ஆம் என ஐந்திடத்து வரைதலும் நிலைத்த பேரின்பம் தரும். திருஅம்பலச் சக்கரத்தின் வித்தெழுத்தாகும்-இப்பத்தெழுத்துமே அச் சக்கரத்துக்குரிய வித்தெழுத்தாம் என்க. வித்தெழுத்தைப் பீசாக்சரம் என்ப.

(அ. கீ.) ஆனந்தம்...ஆமே,-ஆ, ஈ, ஊ, ஏ. ஓ என்ற ஐந்தெழுத்துக்களும், அம் ஹ்ரீம், அம் க்ஷம் ஆம் என்ற 5 பீச அக்கரங்களும் சிதம்பரச் சக்கரத்திற்கு உரியவை. (உஎ)

891. மேனி யிரண்டும் விலங்காமல் மேல்கொள்ள
மேனி[1] யிரண்டே மிக்கார் விகாரியா
மேனி யிரண்டும்-ஊ-ஆ-ஈ-ஏ-ஓ-என்னும்
மேனி யிரண்டும்-ஈ-ஓ-ஊ-ஆ-ஏ-கூத்தாமே.

(ப. இ.) விழுமிய முழுமுதற் சிவபெருமானின் நிஜைப்படையாள நீரூருவம் இருவகைப்படும். ஒன்று சொல்லுருவம்; மற்றொன்று பொருளுருவம். சொல்லுருவம் என்பது மந்திர உருவம். பொருளுருவம் என்பது திருமுகம் திருக்கை திருவடி முதலான திருவுறுப்புக்களோடு கூடிய திருவுருவம். திருவுருவங்களின் அடியில் திருச் சக்கரமாகிய மந்திரவுருவங்கள் எல்லாத் திருக்கோவில்களிலும் இன்றும் உள்ளன. அத்திருமேனி இரண்டினும் மிக்கு விளங்கித் தோன்றுவன் சிவன். அங்ஙனம் தோன்றினும் திரிபு எய்தாச் செம்பொருளாவன். திரிபு - விகாரம். நெட்டெழுத்தேழனுள் ஐ, ஔ என்னும் இரண்டெழுத்தும் நீங்கலாகிய ஐந்தெழுத்தும் வித்தெழுத்தெனப்படும். இவை இருவேறு

(பாடம்) 1. யிரண்டு மிகார விகாரியா.

வகையாக எழுதப்பட்டுச் சிவயநம, நமசிவய என்பதும் இவற்றுடன் இணைத்து வரையப்படும் முறையும் காண்கின்றோம். இவையே திருக்கூத்தின் உட்பொருள்களாவன. (உஅ)

892. கூத்தே சிவாய நமமசி வாயிடுங்
கூத்தே-ஈ-ஊ-ஆ-ஏ-ஓம்-சிவாயநம வாயிடுங்
கூத்தே-ஈ-ஊ-ஆ-ஏ-ஓம்-சிவயநம வாயிடுங்
கூத்தே-ஈ-ஊ-ஆ-ஏ-ஓம்-நமசிவாய கோனொன்று மாமே.

(ப. இ.) சிவயநம என்னும் செந்தமிழ்த் திருமறை ஐந்தெழுத்தாலாகிய திருக்கூத்து ஆருயிர்களை உருகிக் குழைவிக்கும். இக் குழைவினையே ஆவியின் ஒப்படைப்பாகிய ஆத்தும நிவேதனம் என்ப. சிவயநம, நமசிவய என்னும் நுண்மையும் பருமையும் ஆகிய இருவகைத் திருவைந்தெழுத்தினுடன் மேற்கூடிய நெட்டெழுத்து ஐந்தினையும் இணைத்துக் கணித்து வழிபடுதலே செந்நெறிக்கொள்கை என்க. (உக)

893. ஒன்றிரண் டாடவோ ரொன்று மூடனை
ஒன்றினின் மூன்றுட ஓரேழும் ஒத்தாட
ஒன்றினு லாடவோர் ஒன்பதும் உடனுட
மன்றினில் ஆடினன் மாணிக்கக் கூத்தே.[1]

(ப. இ.) திருச்சிற்றம்பலச்சிவனார் செய்தருளும் திருவைந்தெழுத்தானும் திருக்கூத்தினுள் மாணிக்கக் கூத்தென்பதும் ஒன்று. அக்கூத்தானே உலகுயிர்கள் ஆடும் உண்மை இதன்கண் காணப்படும். ஒன்றிரண்டென்னப்படும் நிலம் நீர் இரண்டும் ஆடும். ஒரொன்று என்பது ஒப்பில்லாத ஒன்றுகிய சிவம்; அஃது உடனுட என்பது திருவருளுடன் விரவி நின்றுட என்பதாம். ஒன்றினின் மூன்று ஒளிப் பொருளாம் ஒன்று தீ. அதுபோல் ஒளியுடை இருபொருள்கள் ஞாயிறும் திங்களுமாகும். இம் மூன்றும் ஆட, (ஓரேழ் என்பன உலகங்கள் ஏழும், உயிரின் பிறப்புவகை ஏழும் குறிப்பவாகும். இவ்விருவகை) ஏழும் ஆடும், ஒரொன்பது என்பது இணையார் - (878) - இல் காணப்படும் ஏழுவகைத் திருவருள் ஆற்றல்களுடன் காண்டல் காட்டல் இரண்டும் கூடி ஒன்பதாகும். இவற்றை முறையே அறிவு, ஆற்றல், ஒளி, ஒலி, அருள், ஆண்டான், அரன், அரி, அயன் என்னும் அருவம் நாலு, அருவுருவம் ஒன்று, உருவம் நாலு என்பதாகிய மெய்நிலைகள் என்ப. இவையும் ஆடும் இவைகளெல்லாம் இடையீடின்றி ஆடும்படி பொன்னம்பலத்தின்கண் ஆடினன் என்க. மெய்நிலைகள் - தத்துவநிலைகள். அசபை கூறப்புகுந்த இதன்கண் அஞ்செழுத்தருட்கூத்தும் திருவம்பலச் சக்கர அடிப்படையும் விளக்கியருளினார். அசபையும் ஐந்தெழுத்தும் முறையே நுண்மையும் பருமையும் என்னும் இணைவாலென்க.

(அ. சி.) ஒன்று இரண்டு - பிருதிவி, அப்பு பூதங்கள். ஒன்றினில் மூன்று - அக்கினி பூத வேறுபாடாகிய சூரியன், சந்திரன், அக்கினி. ஏழும் - ஏழு உலகங்கள். ஒன்பது - ஒன்பது சிவவடிவங்கள். இவைகளெல்லாம் ஆட ஆடுவது மாணிக்கக்கூத்து. (கo)

---

1. சிவம்சத்தி. சிவஞானசித்தியார், உ. சு-உ.
,, மண்டுளங்க வாடன். கூ. இ-ரு.

# 2. திருவம்பலச் சக்கரம்

894. இருந்தஇவ் வட்டங்கள் ஈராறி ரேகை
இருந்த இரேகைமேல் ஈரா றிருத்தி
இருந்த மனைகளும் ஈராறு பத்தோன்று
இருந்த மனையோன்றில் எய்துவன் ருனே.

(ப. இ.) எண்ணூற்றெண்பத்து நான்காம் பாட்டில் ஒதிய திருவம்பலச்சக்கர அறைகள் இருபத்தைந்து. இதன்கண் மேலும் பன்னிரண்டு வரைகள் வரைந்தால் பதினெரு அறைகள் வரும். ஆக மொத்தம் அறைகள் முப்பத்தாருகும். இவற்றுள் இடையிலுள்ள ஓர் அறையில் சிகர முதல்வன் வீற்றிருந்தருள்வன். இஃது அருஞ்சைவர் மெய்கள் ஆருறு என்பதை நினைப்பிக்கும் குறிப்புமாகும்.

(அ. சி.) வட்டங்கள் - 25 அறைகள். ரேகை - வரை. ஈராறு பத்தோன்று - 12 ம் 11 - ம். (க)

895. தானொன்றி வாழிடந் தன்னெழுத் தேயாகுந்
தானொன்று மந்நான்குந் தன்பே ரெழுத்தாகுந்
தானொன்று நாற்கோணந் தன்னைந் தெழுத்தாகுந்
தானொன்றி லேயொன்று மவ்வரன் தானே.

(ப. இ.) மேற்கூறிய இருபத்தைந்து அறைகளிலும் நடுவாகத் தோன்றும் எழுத்துச் சிறப்பென்னும் செம்பொருளாகும். அதுவே சிவம். மற்றைய 'வ, ய, ந, ம' என்னும் நான்கெழுத்துக்களும் சேர்ந்து ஆண்டவனுடைய பொன்னுப் புகழ்சேர் திருப்பெயராகும். 'நந்திநாமம் நமசிவய' என்னும் திருமுறையான் உணரலாம். 'நாற்கோணம்' உள்விட்ட நான்கு பெருந்திசைகளும் இந் நான்கெழுத்தும் ஆகும். இந்நான்கெழுத்திலும் சிகரம் யாண்டும் உடனுய் நிற்கும். சிவபெருமான் திருப்பெயரெழுத்து ஐந்தாகும். நமசிவய : நமச்சிவாய.

(அ. சி.) தன்னெழுத்து - சி. நான்கு - சிகரம் ஒழிந்த நாலு. (உ)

896. அரகர என்ன அரியதோன் றில்லை
அரகர என்ன அறிகிலர் மாந்தர்
அரகர என்ன அமரரும் ஆவர்
அரகர என்ன அறும்பிறப் பன்றே.[1]

(ப. இ.) மலஆற்றலை வினை அரத்தால் தேய்ப்பித்தலின் அரனென்னப்பட்டனன். மாயாகாரியத்தை நடப்பாற்றலால் ஒடுக்குதலின் கரன் என்னப்பட்டான். கரன் : கரப்பவன். கரத்தல் - ஒடுக்குதல். இவ் வுண்மை "காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி" என்னும் வட்டாம் திருமுறையான் உணரலாம். எனவே, இருசொற்களின்

1. மற்றவர்க. கஉ. சம்பந்தர், ககo.

மூதனிலைகள் சேர்ந்து அரகர என்றுயிற்று. அதனை அரகர என்று உள்ளன்புடன் ஓதுவார்க்குத் திருவருள் துணை முன்னிற்பதால் செயற்கரிய செயலென்று ஒன்றும் இல்லை. இவ் வுண்மையினைப் பலர் உணர்ந்திலர். அரகர என்று ஓதச் சிவவுலகப் பெரும்பேற்றினராவர். அரகர என்று ஓதப் பிறப்பற்றுச் சிறப்புற்றுப் பெருவாழ்வு வாழ்வர். (கூ)

897. எட்டு நிலையுள எங்கோன் இருப்பிடம்
எட்டினில் ஒன்றும் இருமூன்றும் ஈரேழும்
ஓட்டிய விந்துவும் நாதமும் ஓங்கிடப்
பட்டது மந்திரம் பான்மொழி பாலே.

(ப. இ.) நடுவீட்டைச் சூழ இருக்கும் எட்டுவீடும் எட்டுநிலை எனப்படும். இவ் வமைப்பில் ஒன்று உலகின் முதலாகிய ஓம் எனப்படும் ஓம் நமசிவய என்னும் ஆறெழுத்து அருமறையும், பதினான்கு உலகங்களும், ஒளியும் ஒலியும் ஆகிய எல்லாம் திருவருள் தாங்குதலினின்று தோன்றின. ஒட்டு - அமைப்பு. பான்மொழி - திருவருள்.

(அ. சி.) எட்டுநிலை - நடுவீட்டைச் சூழ இருக்கும் எட்டுவீடு. ஓட்டினில் - இந்த அமைப்பில். ஒன்று - பிரணவம். (ச)

898 மட்டவிழ் தாமரை மாதுநல் லாளுடன்
ஓட்டி இருந்த உபாயம் அறிகிலர்
விட்ட எழுத்தை விடாத எழுத்துடன்
கட்டவல் லாருயிர் காக்கவல் லாரே.

(ப. இ.) சிவனும் சிவையும் பிரிப்பின்றி ஒட்டியுறையும் வழிவகையறியின், விட்ட எழுத்தாகிய 'வ' விடாத எழுத்தாகிய 'சி' இவ் விரண்டினையும் மாமுதல் என்னும் உண்மை வெளியாகும். மாமுதல் - மகாகாரணம். இவ் விருபெரும் எழுத்தாகிய சிவ என்னும் செந்தமிழ்த் தனிமறையினை இடையருது கணிக்கவல்லார் தம்முயிர் திருவடியிற் கூடிப் பேரின்பம் எய்தும் நிலையினைப் பேணவல்லாராவர். கட்டல் - இடையருது கணித்தல். காத்தல் - பேணுதல்.

(அ. சி.) விட்ட எழுத்து - வ. விடாத எழுத்து - சி. (ஞ)

899. ஆலய மாக அமர்ந்தபஞ் சாக்கரம்
ஆலய மாக அமர்ந்தவித் தூலம்போய்
ஆலய மாக வழிகின்ற சூக்குமம்
ஆலய மாக அமர்ந்திருந் தானே.

(ப. இ.) செந்தமிழ்த் திருவைந்தெழுத்தாலாகிய திருக்கோவில் அம்பலவாணர் அருள் உறையுளாகும். இவ் வைந்தெழுத்துப் பருமை: நுண்மை, மீநுண்மை, முதல், மாமுதல் என ஐவகைப்படும். பருமை, நமசிவய. நுண்மை: சிவயநம. மீநுண்மை: சிவயசிவ. முதல்: சிவசிவ. மாமுதல்: சிவ. இவற்றுள் பருமையாகிய நமசிவய என்பதன்மேல் நுண்மையாக அறிகின்ற சிவயநம, என்னும் அதுவே திருக்கோவிலாக

அமர்ந்திருந்தான் என்க. இந் நிலை இரண்டும் முறையே உலகியலில் பெரிதாகவும் வீட்டியலில் பெரிதாகவும் கொள்ளும் குறிப்பினவாம்.(கு)

**900.** இருந்தஇவ் வட்டம் இருமூன்றி ரேகை
இருந்த வதனுள் இரேகையைந் தாக
இருந்த அறைகள் இருபத்தைந் தாக
இருந்த அறையொன்றில் எய்தும் அகாரமே.[1]

(ப. இ.) எண்ணூற்று எண்பத்துநான்காம் திருப்பாட்டில் ஓதிய வாறு திருவம்பலச்சக்கரம் அமைத்த இடத்து அதன் ஓர் அறையின்கண் அகரம் அமையும். அகரம் சிவபெருமானின் அடையாள எழுத்தாகும்.

(அ. சீ.) அகரம் - அகர உருவனுகிய சிவன். (எ)

**901.** மகார நடுவே வளைத்திடுஞ் சத்தியை
ஓகாரம் வளைத்திட் டும்பிளந் தேற்றி
அகாரந் தலையாய் இருகண் சிகாரமாய்
நகார வகாரநற் காலது நாடுமே.

(ப. சீ.) இதன்கண் திருவம்பலச்சக்கரம் எழுத்துமுறை அமைப் பினுல் தலை, கண், கால் முதலிய உறுப்புக்களோடமைந்த ஓர் ஆள் வடிவமாகத் தோன்றுமுறை ஓதப்பெற்றுள்ளது.

(அ. சீ.) மகாரம் - நாதம். சத்தி - சத்திபீசம். ஓகாரம் வளைத் திட்டு - ஓ எழுதி. உம் பிளந்து - உம் என்பதை நீக்கி. அகரம் தலையாய் - அகரம் சிரசாக. இருகண் சிகாரமாய் - சிகரம் கண்களாய். நகாரம் வகாரம் - நகரம், வகரம் கால்களாய். இது சிதம்பரச் சக்கர நடுவில் சகல மனித உருவமாகக் காணும் முறை கூறியது. (அ)

**902.** நாடும் பிரணவ நடுவிரு பக்கமும்
ஆடு மவர்வாய் அமர்ந்தங்கு நின்றது
நாடு நடுவுண் முகநம சிவாய
வாடுஞ் சிவாயநம புறவட்டத் தாயதே.

(ப. இ.) இதன்கண் ஓங்காரநடுவில் சிவமும், நடுவட்டத்தில் நமசிவய முகமுமாக அமைத்தல் ஓதப்படுகின்றது. சிவபெருமான் "ஒருகுடராய் உலகேழு மானுன்கண்டாய், ஓங்காரத்துட் பொருளாய் நின்றான் கண்டாய்" எனத் திருத்தாண்டகத் திருப்பதிகத்தின்கண் வருவதுங் காண்க.

(அ. சீ.) பிரணவநடு இருபக்கமும் - பிரணவ நடுவில் இருபக்கத் திலும். அவர் - அந்த சத்தி சிவங்களின். ஆடும் வாய் - பேசும் வாய். நடுவுள் - நடுவட்டத்தில். முகம் நமசிவாய - நமசிவாய என்பது முகமாக. புறவட்டம் - மேல்வட்டம். (க)

1. அகரமென. விநாயகபுராணம், வாழ்த்து.

903. ஆயுஞ் சிவாய நமமசி வாயந
வாயு நமசிவா யயநம சிவாய[1]
வாயுமே வாய நமசியெனு மந்திரம்[2]
ஆயுஞ் சிகாரந் தோட்டந்தத் தடைவிலே.

(ப. இ.) இதன்கண் செந்தமிழ்த் திருமறையாம் திருவைந்தெழுத்தினுள் நுண்மையதாய 'சிவயநம' என்னும் மந்திரத்தினை நான்கு முறை எழுத்துக்களை மாற்றியமைக்கும் நிலை ஓதப்படுகின்றது. அந் நான்கும் ஈற்றிலிருந்து முறையே ஒவ்வோர் எழுத்தும் முதலெழுத்தாக எழுதுதல் வேண்டும். அங்ஙனம் எழுதின் திருவம்பலச்சக்கரம் இருபத்தைந்திலும் திருவைந்தெழுத்து அமைந்திருக்கும் உண்மை புலனாகும். மேலும் தொடக்கத்திலும் முடிவிலும் சிகரம் தோன்றும் சிறப்புங் காண்க. முதல் வரியின் கடைசியில் காணப்படும் 'ய ந' என்னும் இரண்டெழுத்தால் ஆயும் உயிரும் அதற்குத் துணையாம் நடப்பாற்றலாகிய திருவருள் துணையும் சிறப்பாகத் தோன்றுமுறை ஓதப்படுகின்றன. அடைவிலே - முறையிலே.

(அ. சி.) சிகாரந்...விலே - சிகரம் முதலாக இட்டுக் கடைசிவரையில் மாறும் முறை கூறியது. (கo)

904. அடைவினில் ஐம்பதும் ஐயைந் தறையின்
அடையும் அறையொன்றுக் கீரேழுத் தாக்கி
அடையு மகாரத்தில் அந்தமாம் கூஷவ்வும்
அடைவின் எழுத்தைம்பத் தொன்றும் அமர்ந்ததே.

(ப. இ.) இதன்கண் ஐந்தெழுத்துக்கு அமைந்த இருபத்தைந்து அறைகளுள் ஐம்பதெழுத்தும் அமைக்குமுறை ஓதப்படுகின்றது.

(அ. சி.) ஐம்பது - கூஷகரம் நீங்கிய 50 எழுத்துக்கள். ஐயைந் தறையில் அடையும் - அறை ஒன்றுக்கு இரண்டு அக்கரங்களாக 50 அக்கரங்கள். மகாரத்தில் அந்தமாம் கூஷவ்வும் அடையும் - கூஷகரத்தைப் பிரணவ வட்டத்து அமைந்த மகரத்தோடும் சேர்த்திடுக. (கக)

905. அமர்ந்த அரகர வாம்புற வட்டம்
அமர்ந்த அரிகரி யாமத னுள்வட்டம்
அமர்ந்த அசபை யாம்அத னுள்வட்டம்
அமர்ந்த இரேகையும் ஆகின்ற சூலமே.

(ப. இ.) மூன்று வட்டங்களுள் அமைக்கப்பெறும் மந்திரங்கள் இதன்கண் ஓதப்பெறுகின்றன.

(அ. சி.) புறவட்டம் - வெளிவட்டம்; இதற்கு அரகர என்றும், அதனுள் வட்டம் - புறவட்டத்தை அடுத்துள்ள வட்டம்: அதற்கு

1. (பாடம்) சிவாயந.
2. பதத்தெழு. அப்பர், சு. கoஎ - உ.
,, அந்தியுநண். ஆரூரர். எ. அக - க.

அரிகரி என்றும் ஆம். அதனுள் வட்டம் - அவ் வுள் வட்டத்தை அடுத்துள்ள வட்டம்; அதற்குரியது அசபா மந்திரம். ரேகையும் - வரைகளின் முனைகளில். சூலமே - சூலம்போன்ற குறிகள் கிறுக. (கஉ)

906. சூலத் தலையினில் தோற்றிடுஞ் சத்தியுஞ்
சூலத் தலையினிற் சூழ்ம்ஓங் காரத்தால்
சூலத் திடைவெளி தோற்றிடும் அஞ்செழுத்
தாலப் பதிக்கும் அடைவது வாமே.

(ப. இ.) முத்தலை வேலாகிய சூலத்தின் முனையில் சிவையின் எழுத்தாகிய வகரம் அமைத்தல் வேண்டும். அச் சூலத்தைச் சூழ ஓங்காரம் அமைத்தல் வேண்டும். சூலத்தின் இடைவெளியில் திருவைந்தெழுத்தும் அமைத்தல் வேண்டும். அதுவே இறையாகிய சிவத்தின் நிலைக்களமாகும். இறை: பதி. ஆல்: அசை.

(அ. சி.) சூலத்தலை - சூலத்தின் முனை. சத்தி - சத்திபீசம். சூலத் ...வாமே - சூலத்தைச் சூழ ஓங்காரம் இட்டு அமைத்துச் சூல இரேகைகளுக்கு இடையிலே பஞ்சாக்கரங்களை அமைக்க என்றது. (கஊ)

907. அதுவாம் அகார இகார உகாரம்
அதுவாம் எகாரம் ஒகாரம தைந்தாம்
அதுவாகுஞ் சக்கர வட்டமேல் வட்டம்
போதுவாம் இடைவெளி போங்குநம் பேரே.

(ப. இ.) முன்னைப்பாட்டில் ஓதப்பெற்ற திருவைந்தெழுத்துத் தமிழ் மொழியின் உயிர்க்குறிலாகிய அ, இ, உ, எ, ஒ என்னும் ஐந்தெழுத்தாகும். இவையே இங்குக் குறிக்கப்பெற்றன. இவற்றைச் சக்கர வட்டங்களிலும் மேல்வட்டங்களிலும் வரைக. நடுவாகிய நமக்கு நலமெலாம் பொங்குவிக்கும் பெயர் 'நமசிவய' என்க.

(அ. சி.) அதுவாம் - அப் பஞ்சாக்கரமாவன அ, இ, உ, எ, ஒ. (கச)

908. பேர்பெற் றதுமூல மந்திரம் பின்னது
சோர்வுற்ற சக்கர வட்டத்துட் சந்தியின்
நேர்பெற் றிருந்திட நின்றது சக்கரம்
ஏர்பெற் றிருந்த இயல்பிது வாமே.

(ப. இ.) திருப்பெயராகப்பெற்ற 'நமசிவய' என்பதே சிவமூல மந்திரமாகும். மற்றை எழுத்துக்கள் உள்வட்டம் வெளிவட்டங்களில் முன்னைத் திருப்பாட்டில் கண்ட முறைபோல் திகழ்வனவாகும். (கடி)

909. இயலுமிம் மந்திரம் எய்தும் வழியின்
செயலும் அறியத் தெளிவிக்கு நாதன்
புயலும் புனலும் பொருந்தங்கி மண்விண்
முயலும் எழுத்துக்கு முன்னு இருந்ததே.

(ப. இ.) மேற்கூறிய முறையானே அமைக்கப்படும் திருவம்பலச் சக்கரத்தின்கண் நில முதல் வானம் ஈறுகக் கூறப்படும் பூதங்கள் ஐந்தினுக்கும் உரிய ல, வ, ர. ய, அ (சிவஞானசித்தியார். மண்புனல்) ஏற்ற இடத்து அமைத்தல் வேண்டும். (கசு)

910. ஆறேட் டெழுத்தின்மே லாறும் பதினொரும்
ஏறெட் டதன்மேலே விந்துவும் நாதமுஞ்
சீறிட்டு நின்று சிவாயநம வென்னக்
கூறிட்டு மும்மலங் கூப்பிட்டுப் போமே.

(ப. இ.) ஐம்பதெழுத்தாக அமைக்கப்படும் காலத்து உயிரினத்தில் ஆறுவதெழுத்து 'ஊ' பதினொன்காவதெழுத்து 'ஒள' எட்டு என்பது அகர எழுத்தாகும். அதன்மேல் ஒளியும் ஒலியும் கணிக்குமாறு கூட்டுதல் வேண்டும். சீறிட்டு - கணிக்குமாறு கூட்டியிட்டு. 'சிவயநம' என இடையருது கணித்துக் கொண்டிருந்தால் மும்மலங்களும் பிளவு பட்டு இன்னலுற்றுப் புலம்பியகலும். பிளவுபடுதல் - ஆற்றலடங்குதல். (கஎ)

911. அண்ணல் இருப்ப தவளக் கரத்துளே
பெண்ணினல் லாளும் பிரானக் கரத்துளே
எண்ணி இருவர் இசைந்தங் கிருந்திடப்
புண்ணிய வாளர் பொருளறி வார்களே.[1]

(ப. இ.) சிவபெருமான் இயைந்தியைக்கும் சிவையின் எழுத்தாகிய வகரத்தோடு பிரிப்பின்றி நிற்பன். சிவையும் சிவபிரான் எழுத்துடன் அவ்வாறு நிற்கும். சிவபெருமான் எழுத்து 'சி' சிவனும் சிவையுமாகிய இருவரும் ஆவியின் நடுவுள் இருத்தலான் அவ் வுயிர் திருவடியுணர்வை யுணரும். அவ் வுணர்வுடையார் புண்ணியவாளர் எனவும் பொருளறி வாளர் எனவும் பேசப்பெறுவர். அதுவே 'சிவயசிவ.' இப்பெருமறையின் குறிப்பு வருமாறு:

'நாடும் நமசிவய நாப்பண்சி நாப்பண்ய
கூடும் சிவயநம கூறுங்கால்—நேடும்
சிவயசிவ நாப்பண் சிறப்பிருவர் சேர்வாம்
சிவசிவ தாடலியாம் சேர்ப்பு.'

(அ. கீ.) அவளக்கரம் - சத்திபீசம். பிரானக்கரம் - சிவபீசம். (கஅ)

912. அவ்விட்டு வைத்தங் கரவிட்டு மேல்வைத்து
இவ்விட்டுப் பார்க்கில் இலிங்கம தாய்நிற்கும்
மவ்விட்டு மேலே வளியுறக் கண்டபின்
தோம்மிட்டு நின்ற சுடர்க்கொழுந் தாமே.

(ப. இ.) திருவருட்குறியாம் சிவலிங்கத்தின் சிறப்புச் சாக்கிய நாயனர் திருவரலாற்றினுள் அருவம் உருவம் என்னும் இரண்டற்கும்

1. உடையா. அ. கோயின் மூத்த திருப்பதிகம், க.
,, மண்ணினல். கூ. உ - க.

காரணமாம் அருவுருவத் திருவுரு என்று ஓதப்பெற்றுள்ளது.[1] இத் திருவுரு அடி நடு முதல் என மூப்பகுப்பினையுடையது. அடிப்பகுதியில் 'அ' எனவும், நடுப்பகுதியில் 'அர' எனவும், முடிப்பகுதியில் 'இ' எனவும் எழுத்துருவில் அமைத்துக்கொள்ளுதல் வேண்டும். அ என்பது அறிவினையும், அர என்பது தொழிலினையும், இ என்பது இன்பத்தினையும் குறிக்கும், மகரத்தையிட்டு உச்சித் தொளையின்கண் உயிர்ப்புச் செல்லுவதை யுணர்ந்தபின் அவ்விடத்துத் தொம்தோம் என்று திருக்கூத்தியற்றும் சுடர்க்கொழுந்தினைக் காணுதலாகும். மேல் - உச்சித்தொளை வளி - உயிர்ப்பு ; பிராணவாயு. தொம் : ஒலிக்குறிப்பு. தோம் என்பது குறுகிய தெனக்கொண்டால் தமிழின் அடையாளமாகிய தகரத்தின்மேல் நின்ற ஓங்காரம் எனக் கொள்ளுதல் வேண்டும். இது திரு முறை பன்னிரண்டும் 'தோ' எனத் துவங்கி 'ம்' என முடியும் சிறப்பினை ஒத்ததாகும். தோம் என்பது தமிழ் ஓம் என்றாகும்.

(அ. சி.) அவ்விட்டு - அகரத்தை எழுதி. அரவிட்டு - அதன்மேல் அர என்பது எழுதி. இவ்விட்டு - அதன்மேல் இ எழுதிப் பார்க்கில் சிவலிங்கமாம். தொம் - தகர ஓகரம். (கக)

913. அவ்வுண்டு சவ்வுண் டூனத்துமங் குள்ளது
கவ்வுண்டு நிற்குங் கருத்தறி வாரில்லை
கவ்வுண்டு நிற்குங் கருத்தறி வாளர்க்குச்
சவ்வுண்ட சத்தி சதாசிவன் தானே.

(ப. இ.) அகரமும் சகரமும் அங்குண்டு. இவ் விரண்டும் சிவம் சிவை என்னும் அத்தன் அன்னையைக் குறிக்கும். ஈண்டுக் கூறப்படும் அகரம் அடியையும், சகரம் சடையையும் குறிக்கும். இவ் விரண்டும் ஆருயிர்களுடன் பின்னிக்கொண்டு நிற்கும் திருவுள்ளப்பெற்றி அறிவாரில்லை. அத் தன்மையின் மெய்ம்மையினை அறியும் அடியவர்க்கு அச் சகரத்தின் வண்ணமாம் சதாசிவன் தோன்றும்.

(அ. சி.) சவ்வுண்ட சத்தி - ச என்னும் பீசமந்திரத்துள்ள சத்தி. (உ0)

914. அஞ்செழுத் தாலே அமர்ந்தனன் நந்தியும்
அஞ்செழுத் தாலே அமர்ந்தபஞ் சாக்கரம்
அஞ்செழுத் தாகிய வக்கர சக்கரம்
அஞ்செழுத் துள்ளே அமர்ந்திருந் தானே.[2]

(ப. இ.) நந்தியாகிய சிவபெருமான் திருஐந்தெழுத்தாகவே அமர்ந்திருளினன். அஞ்சு சொற்களின் முதலெழுத்துக்களாகிய அஞ்செழுத்தாலாகியது பஞ்சாக்கரம். இவ் வைந்தெழுத்துக்களாலேயே சக்கரங்கள் அமைக்கப்படும். அதனுள் அமர்ந்துறைபவன் விழுமிய முழுமுதற்சிவன், அஞ்செழுத்தின் விரிவாம் அஞ்சும் அஞ்சுசொல் : சிறப்பு (சி) வனப்பு (வ) யாப்பு (ய) நடப்பு (ந) மறைப்பு (ம). (உக)

1. காணுத. கூ. சாக்கிய நாய்னர், அ.
2. அஞ்செழுத்தே. உண்மை விளக்கம், சூடி.

915. கூத்தனைக் காணுங் குறிபல பேசிடிற்
கூத்த னெழுத்தின் முதலெழுத் தோதினர்
கூத்தனெ டொன்றிய கோள்கைய ராய்நிற்பர்
கூத்தனைக் காணுங் குறியது வாமே.

(ப. இ.) கூத்தனுகிய சிவபெருமானைக் காணும் நெறிகள் நான் காகப் பேசப்படினும், அவன் திருவைந்தெழுத்தின் முதலெழுத்தாகிய சிவ என்பதனைச் சிறந்து எடுத்து ஓதும் மெய்யடியார் கூத்தப் பெரு மானுடன் பிரிவின்றிக் கலந்த புணர்ப்பினராவர். இதுவே திருவடி சேரும் பெரு நெறியாகும். சிம் என ஒலிக்கின் ஆறுதலாகிய கும்பக முறை என்ப.

(அ. சி) கூத்தன் எழுத்து - பஞ்சாக்கரம். முதலெழுத்து - சி. (உஉ)

916. அத்திசைக் குள்நின்ற அனலே எழுப்பியே
அத்திசைக் குள்நின்ற [1]நவ்வெழுத் தோதினல்
அத்திசைக் குள்நின்ற அந்த மறையனை
அத்திசைக் குள்ளுற வாக்கினன் தானே.

(ப. இ.) மூல நிலைக்களத்துத் தோன்றும் அனலை எழுப்பி ஆங்கு ஒலிக்கவேண்டிய ஒங்காரத்தை ஓதினல், ஆங்கு உறைகின்ற மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனுகிய சிவபெருமான் ஆருயிரை அவ்விடத்து உள்ளுற ஆக்கியருளினவனுவன். திசை - உயிர்ப்புச் செல்லும் இடமாகிய மூலம்.

(அ. சி.) அவ் வெழுத்து - ஓங்காரம். (உக)

917. தானே யளித்திடுந் தையலை நோக்கினல்
தானே யளித்திட்டு மேலுற வைத்திடுந்
தானே யளித்த மகாரத்தை ஓதிடத்
தானே யளித்ததோர் கல்லொளி யாகுமே.[2]

(ப. இ.) சிவபெருமான் தானுகவே அளித்தருளும் தூமாயை என்னும் குண்டலியினை ஆராய்ந்தால், சிவம் தானுகவே மேல்நிலையில் வைத்திடும். அதுபோல் மகரமாகிய ஒலி (நாதம்) யினை ஓதிட முழு மாணிக்க ஒளியாகிய சிவபெருமான் தோன்றுவன். கல் - மாணிக்கம்.

(அ. சி.) தையல் - குண்டலினி. மகாரம் - நாதம். கல்லொளி - மாணிக்கச்சோதி. (உச)

918. கல்லொளி யேயென நின்ற வடதிசை
கல்லொளி யேயென நின்றனன் இந்திரன்[3]
கல்லொளி யேயென நின்ற சிகாரத்தைக்
கல்லொளி யேயெனக் காட்டிநின் ருனே.

(பாடம்). 1. தவ்வெழுத்
2, வித்தையோ. சிவஞானசித்தியார். க. கூ - எ.
3. ஓன்னனி. அப்பர், டி சக - டி.

(ப. இ.) வடபெருங்கல் எனச் சிறப்பிக்கப்படும் திருக்கைலாய மலையை உறைவிடமாகக் கொண்டவன், ஆங்குப் போகமருளும் புண்ணிய வேந்தன் சிவபெருமான். அவனுக்குரிய செந்தமிழ் மந்திர ஐந்தெழுத்தின் முதலெழுத்துச் சிகரம். இது வைரவொளிபோன்று திகழ்வது. குணக்குன்றின்மேல் இட்ட விளக்கெனக் காட்டினன். இந்திரன் - வேந்தன்; சிவபெருமான்; மருத நிலக்கடவுள்.

(அ. சி.) கல் - பனிக்கட்டி (கல்மழை என்னும் வழக்கில் காண்க). வடதிசை - கயிலாயம். கல் - வயிரக் கல்; இந்திரன் - இந்திரியத்தை அவித்தவன்; பொறி வாயிலைந்தவித்தவன்; சிவன். கல் - வயிரம். கல் - நீலமான. (உஇ)

919. தானே யெழுகுணங் தண்சுட ராய்நிற்குந்
தானே யெழுகுணம் வேதமு மாய்நிற்குந்
தானே யெழுகுண் மாவதும் ஓதிடில்
தானே யெழுந்த மறையவ னுமே.

(ப. இ.) எழுத்துக்கள் தோன்றுவதற்குரிய பண்பமைந்த ஒளியாகிய அருட்சுடரும் சிவனே. அவ் எழுத்துக்களாலாகிய அறிவு நூலாம் மறையும் அவனே. எல்லா நற்பண்புகளுமாய் நிற்பவனும் அவனே. தானுகத் தோன்றிய உள்ளங்கவர் கள்வனும் அவனே. மறையவன் - கள்வன்.

(அ - சி.) தானே எழு குணம் - நாதம். (உக)

920. மறையவ னுக மதித்த பிறவி
மறையவ னுக மதித்திடக் காண்பர்
மறையவன் அஞ்செழுத் துண்ணிற்கப் பெற்ற
மறையவன் அஞ்செழுத் தாமது வாகுமே.

(ப. இ.) ஆண்டவன் ஆருயிரினத்தையும் தன்வண்ணம் ஆக்குவன். அதன் பொருட்டு மானுடப்பிறவியை மதித்து அருளினன். அவ்வுண்மையை உணர்ந்து செந்நெறி ஒழுகி மறையவனுக மதித்திடக் காண்பர். அந் நிலை எய்துவதற்குத் திருவைந்தெழுத்தின் உள்ளீடாய் நிற்பவன் சிவன். அவ் அஞ்செழுத்தோதுவார் சிவமாகி வாழ்வர். ‹ அஞ்செழுத்து-சிவயநம. சிவமாதல் - சிவனுக் கடிமையாதல்.

(அ. சி.) மறையவன் அஞ்செழுத்தாம் - தமிழ் நான்மறைகள் எல்லாம் அஞ்செழுத்தின் பெருமையை விளக்குவவாம். (உஎ)

921. ஆகின்ற பாதமு மங்நவாய் நின்றிடும்
ஆகின்ற நாபியுள் அங்கே மகாரமாம்
ஆகின்ற சீயிரு தோள்வவ்வாய்க் கண்டபின்
ஆகின்ற வச்சுடர் யவ்வியல் பாமே.[1]

1. ஆடும், உண்மை விளக்கம், கூடு.
,, தவ்விரண்டு. சிவவாக்கியர், கூ0.

(ப. இ.) அன்பாகிய உலகியலும் அருளாகிய வீட்டியலும் சிவன் திருவடியாலாகுவன. அத் திருவடிக்கண் நகரம். கொப்பூழின்கண் மகரம். இருதோளின்கண் சிகரம். வாயின்கண் வகரம். திருமுடியின் கண் யகரம். இம் முறையாக அம்பலவாணரின் அருமறைத் தமிழ்த் திருவுரு அமைப்பர். சுடர் - திருமுடி. சிஇரு என்பது நீட்டும் வழி நீட்டலாய்ச் சீ என்றுயிற்று. சி : சியென நீட்டல் திரிபு.

(அ. சி.) பாதமுமந் நவ்வாய் - நகரம் திருவடி. நாபியுளங்கே மகாரமாய்-மகரம் நாபிக்கமலம். சி இருதோள். சிகரம் இருதோள்கள். வவ் வாய்-வகரம் வாய். அச் சுடர் யவ் வியல்பு-யகரம் சுடர் அல்லது புருவமத்தி. (உஅ)

922. அவ்வியல் பாய இருமூன் றெழுத்தையுஞ்
சேவ்வியல் பாகச் சிறந்தனன் நந்தியும்
ஒவ்வியல்[1] பாக ஒளியுற நோக்கிடிற்
பவ்வியல் பாகப் பரந்துநின் றனே.

(ப. இ.) மேல் ஓதிய திருவைந்தெழுத்தின் செவ்விய தன்மையாகச் சிவனும் சிறந்தனன். ஓங்கார இயல்பாகப் பேரொளி எங்கணும் ஓங்கும். திருப்பாட்டாகத் திகழும் தமிழ்த்திரு நான்மறையாக நிறைந்து நின்றனன் சிவபெருமான். இருமூன்று : உ + கூ-இ-திருவைந்தெழுத்து. ஒவ்வியல்பு : ஓங்கார இயல்பு. மந்திரங்களே உய்த்துணருமாறு எழுத்துக்களே மாத்திரை கூட்டியும் குறைத்தும் வழங்குவர். கூட்டி வழங்குவது சிவ என்பது சிவா என நீள்வதாம். குறைத்து வழங்குவது ஓங்காரத்தை ஒவ்வாக வழங்குவதாம். (யா ; ய என்பதுமது.)

(அ. சி.) இரு மூன்று எழுத்து - பிரணவமும் ஐந்தெழுத்துக்களும். ஒவ் வியல்பு-பிரணவத்தின் இயல்பு. பவ் வியல்பு - பர இயல்பு ; செய்யுள் வடிவமான தமிழ் நான்மறைகளின் இயல்பு. (உக)

923. பரந்தது மந்திரம் பல்லுயிர்க் கெல்லாம்
வரந்தரு மந்திரம் வாய்த்திட வாங்கித்
துரந்திடு மந்திரஞ் சூழ்பகை போக
உரந்தரு மந்திரம் ஓமென் றெழுப்பே.

(ப. இ.) அவ்வுண்டு (913) என்பது முதல் இதுவரையும் சிவ மந்திரங்கள் விளக்கப்பெற்றன. இவை எல்லா உயிர்கட்கும் வேண்டும் வரந்தரு மந்திரமாகும். அம் மந்திரம் பிறவியாகிய பெரும் பகையை நீக்கும். ஓமென்று உள்ளன்புடன் கணிக்கத் திருவருளாற்றல் கைகூடும். எழுப்பவே என்பது எழுப்பே என்றீ திரிந்துநின்றது. துரந்திடும் - நீக்கும்.

(அ. சி.) பரந்தது மந்திரம் - மந்திரங்கள் இவ்வாறு பரவின. சூழ் பகை-பிறப்புக்குக் காரணமான இன்ப துன்பங்கள். (உட)

---

1. அவ்வுட. சிவஞானசித்தியார், ஈ. க-உ.

924. ஓமென் றெழுப்பித்தன் உத்தம நந்தியை
நாமென் றெழுப்பி நடுவெழு தீபத்தை
ஆமென் றெழுப்பியவ் வாறறி வார்கள்
மாமன்று கண்டு மகிழ்ந்திருந் தாரே.

(ப. இ.) ஓம் என முதற்கண் ஓசையை எழுப்புதல் வேண்டும். பின்பு நமசிவய என்னும் தமிழ் மந்திரத்தை நவிலுதல்வேண்டும். இதன் கண் நடுவெழு திருவிளக்குச் சிகரம் சிவயநம என்று ஓதுவதே திருவடி சேர வழியாகும். இவ்வுண்மை அறிவார்கள் திருச்சிற்றம்பலம் கண்டு என்றும் இன்புற்றிருப்பார்கள். மாமன்று-திருச்சிற்றம்பலம்.[1] (கூக)

925. ஆகின்ற சக்கரத் துள்ளே எழுத்தைந்தும்
பாகொன்றி நின்ற பதங்களில் வர்த்திக்கும்
ஆகின்ற ஐம்பத் தோரெழுத் துள்நிற்கப்
பாகொன்றி நிற்கும் பராபரன் தானே.[2]

(ப. இ.) 904 - இல் ஓதியபடி திருவம்பலச் சக்கரத்தில் அமைக்கப் படும் எழுத்துத் திருவைந்தெழுத்தாகும். இவ்வைந்தெழுத்தும் ஐந்து சொற்களின் முதலெழுத்தாகும். அவை அச் சொற்களின்மாட்டு விளக்க முறும். இவ் வைந்தெழுத்தின் பொருளாக விரிவனவேயாம் ஐம்பத்தோர் எழுத்தும். இவ் வனைத்தினையும் உண்ணின்றுய்க்கும் முழுமுதல் சிவ பெருமான் ஒருவனேயாம். பாகொன்றி - பகுத்தல்பொருந்தி. இத் திருப்பாட்டு அகவழி பாட்டைக் குறிப்பதாகும். 904-ஆம் திருப்பாட்டுப் புறவழிபாட்டைக் குறிப்பதாகும். (கூஉ)

926. பரமாய அஞ்செழுத் துள்நடு வாகப்
பரமாய நவசிம பார்க்கில் மவயநசி
பரமாய சியநம வாம்பரத் தோதிற்
பரமாய வாசி மயநமாய் நின்றே.

(ப. இ.) எவ்வகை மந்திரங்களுக்கும் முதன்மை வாய்ந்ததாய்த் தாயாய்த் திகழும் திருவைந்தெழுத்துள் நடுவாய் விளங்குவது 'ய'கர மாகும். இவ்வைந்தெழுத்து : யநவசிம, மவயநசி, சியநமவ, வசிமயந - என நான்குவகையாகக் கணிக்கப்படும். இங்ஙனம் எழுத்துக்களே நிலை மாறிக் கணித்தல் பொருளுண்மை நன்கு புலனுய்ப் பதிதற்கேயாம்.

(அ. சி.) அஞ்செழுத்துள் நடு - யகரம். (கூக)

927. நின்ற எழுத்துக்கள் நேர்தரு பூதமும்
நின்ற எழுத்துக்கள் நேர்தரு வண்ணமும்
நின்ற எழுத்துக்கள் நேர்தர நின்றிடில்
நின்ற எழுத்துள்ளும் நின்றனன் தானே.[3]

1. பெருமதில் சிறந்த. கூ. தடுத்தாட் கொ.
2. அஞ்செழுத்தே. உண்மை விளக்கம், சடு.
3. பொன்பார். ,, கூ.

(ப. இ.) என்றும் நின்று நிலவும் திருவைந்தெழுத்தாலேயே ஐம் பூதங்களும் நிகழ்வன. ஐம்பூதங்களுக்குரிய ஐந்து நிறங்களும் அவ்வைந் தெழுத்தாலேயே விளங்குவன. இவ்வைந்தெழுத்துக்களும் முதன்மை பெற நின்றஇடத்து அவ்வெழுத்துக்களின் உள்ளீடாய்நின்று செலுத்து பவன் சிவபெருமான்.

(அ. சி.) நின்ற...தானே - அவ்வாறு நின்ற ஐந்தெழுத்துக்களே 5 பூதங்களும் 5 வண்ணங்களும் ஆகப் பொருந்தி நின்றன. (கச)

928. நின்றது சக்கரம் நீளும் புவியெல்லாம்
மன்றது வாய்நின்ற மாயநன் ஞடனைக்
கன்றது வாகக் கறந்தனன் நந்தியுங்
குன்றிடை நின்றிடுங் கொள்கைய னுமே.

(ப. இ.) அழிவில்லாத திருவம்பலச் சக்கரத்தினுல் எல்லா வுலகமும் நிலைபெறுகின்றன. இத் திருவம்பலச் சக்கரத்து நிலைபேறுகவுள்ள சிவ பெருமானே அச் சக்கரவழிபாட்டினுல் நந்தியெம் பெருமான் ஆன் கன்றின் வாயிலாகப் பால்பெறுவதுபோல் பெற்றுக்கொண்டனன் இந் நிலை குன்றிடை நிற்பார் நிலைத்த கொள்கைபோல் திருவம்பலச் சக்கரத் தின் பெறுபேறு நிலைத்தபேருகும். மாயநன்ஞடன்-மாயா காரியமாகிய தல்ல நாட்டின் தலைவனும் நடத்துவோனும் ஆகின்றவன்.

(அ. சி.) நின்றது...னுமே - இத் திருவம்பலச் சக்கரத்தைப் பூசித்து நந்திதேவர் கயிலையில் காவற்றலைமை எய்தினர் என்பது. (கஇ)

929. கொண்டஇச் சக்கரத் துள்ளே குணம்பல
கொண்டஇச் சக்கரத் துள்ளே குறியைந்து
கொண்டஇச் சக்கரங் கூத்தன் எழுத்தைந்துங்
கொண்டஇச் சக்கரத் துள்நின்ற கூத்தே.

(ப. இ.) திருவம்பலச் சக்கரத்தால் பெறப்படும் நன்மைகள் பல அவற்றுள் சிறந்தன படைத்தல், காத்தல், துடைத்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழிற் பெயருமாகும். மேலும் கூத்தப்பெருமான் தன் திருவுருவினைக் கீழிருந்து மேல்நோக்கின் 'நமசிவய' எனவும், மேலிருந்து கீழ்நோக்கின் 'சிவயநம' எனவும் வழங்கும் செந்தமிழ்த் திருவைந்தெழுத்தின் சீருமாகும். குறி - பெயர். இவ்வுண்மை உண்மை விளக்கத்திற் காணப்படும். 'சேர்க்கும்' (கூ) 'தோற்றம்' (கூ) என்னும் (பக்கம் கூகூ) திருவெண்பாக்களான் உணர்க.

(அ. சி.) குறியைந்து - மூலாதாரத்தைத் தவிர்த்து ஆதாரச் சக்கரங்கள் ஐந்து. எழுத்தைந்து-அச் சக்கரங்களின் நடுவில் விளங்கும் எழுத்துக்கள் ஐந்து. (கஈ)

930. வெளியி லிரேகை யிரேகையி லத்தலை
சுளியில் உகாரமாஞ் சுற்றிய வன்னி
நெளிதரு கால்கோம்பு நேர்விந்து நாதந்
தெளியும் பிரகாரஞ் சிவமந் திரமே.

(ப. இ.) திருவம்பலமாகிய பரவெளியில் சக்கரக் கீற்றுக்களில்லை. திருவம்பலச் சக்கரத்துள் கீற்றுக்கள் உண்டு. குற்றமற்ற உகரம் தியின் அடையாளம். நெளிவு சேர்ந்த கோடு ஒளியாகிய விந்துவாகும், நெளிவில்லாத நேர்கோடு ஒலியாகிய நாதமாகும். இவற்றைத் தெளியும் போது 'சிவ' என்னும் மந்திரமாகும்.

(அ. சி.) இரேகை-திருவம்பலச் சக்கரத்தின் கீற்றுகள். (கூஎ)

931. அகார வுகார சிகார நடுவாய்
வகாரமோ டாறும் வளியுடன் கூடிச்
சிகார முடனே சிவன்சிந்தை செய்ய
ஓகார முதல்வன் உவந்துநின் றனே.[1]

(ப. இ.) அகர உகரம் ஓங்காரத்தைக் குறிக்கும். சிகரவகரம் திருவைந்தெழுத்தைக் குறிக்கும். இவை ஓம் நமசிவய எனவாகும். இவற்றை ஆறெழுத்து மந்திரம் என்ப. சிவசிவ என்று இடையருது உயிர்ப்புடன் எண்ணிக்கொண்டிருக்க ஓங்கார முதற்பொருளாகிய சிவபெருமான் தோன்றியருள்வன்.

(அ சி.) அகரம்...ஆறும் - பிரணவத்தோடு கூடிய ஐந்தெழுத்து; சடாக்கரம். வளி...செய்ய - சிகரத்துடன் தொடங்கிக் காற்றைப் பிடிக்கும் கணக்கறிந்து சிவன் சிந்தனைசெய்ய. (கூஅ)

932. அற்ற விடத்தே அகாரம தாவது
உற்ற விடத்தே யுறுபொருள் கண்டிடச்
செற்றம் அறுத்த செழுஞ்சுடர் மெய்ப்பொருள்
குற்றம் அறுத்தபொன் போலுங் குளிகையே.[2]

(ப. இ.) துயிலற்ற இடமாகிய புருவநடுவின்கண் வெளிப்பட்டுத் தோன்றுவது அகரமாகும். அந்த அகரம் நேர்ந்த இடத்து முழுமுதற் சிவத்தைக் கண்டிடச் செய்யும். ஆருயிர்களின் மாசகற்றிய விழுச்சுடர் மெய்ப்பொருளாகிய சிவன் செம்பின் குற்றமாகிய களிம்பகற்றிப் பசும் பொன்னாக்கும் குளிகையை ஒப்பன். போலும்: ஒப்பில்போலி.

(அ. சி.) அற்றவிடம் - புருவத் திடைவெளி. (கூக)

933. அவ்வென்ற போதினில் உவ்வெழுத் தாலித்தால்
உவ்வென்ற முத்தி யுருகிக் கலந்திடும்
மவ்வென்றன் னுள்ளே வழிப்பட்ட நந்தியை
எவ்வணஞ் சொல்லுகேன் எந்தை இயற்கையே.[3]

(ப. இ.) அகரத்துடனே உகரத்தையும் ஒலித்தால் அடியார் நடுவுள்ளிருக்குங் குறிப்பினை உணர்த்துவதாகிய உவ்வென்ற வீடுபேறு

1. போற்றியோ. அ. காருணியத்திரங்கல், கூஉ.
" ஒருகுடராய். கூ. கூ.கூ.
2. செம்பிரத. சிவஞானசித்தியார், கூக. உ-கூ.
3. எங்ஙன். திருவுந்தியார், ச

பிரிவின்றி எய்தும். மகர நிலையாகிய மனத்தின்கண் விளங்கும் நந்தியாகிய சிவம் என்னை முன்னின்று வழிப்படுத்தும். எம் தந்தையாகிய சிவ பெருமான் புரியும் அருளிப்பாட்டை எச்சொல்லால் எடுத்து இயம்பு வேன். உவ் : நடு இடத்தைக் குறிக்கும் அடையாளம்.

(அ. சீ.) பிரணவத்தின் உச்சரிப்பைக் குறிக்கின்றது இப் பாடல். (சு0)

934. நீரில் எழுத்திவ் வுலக ரறிவது
வானில் எழுத்தொன்று கண்டறி வாரில்லை
யாரிவ் வெழுத்தை அறிவா ரவர்கள்
ஊனில் எழுத்தை உணர்கிலர் தாமே.[1]

(ப. வ்.) 'பிறப்பதற்கே தொழிலாகி இறக்கும்' உலகவர்கள் நீர் மேல் எழுத்துப்போல் நிலையில்லாத உலகியற் சுட்டுப்பொருள்களையே உணர்வர். திருச்சிற்றம்பலமாகிய பரவெளியில் ஒலிக்கும் ஓங்கார நிலை எழுத்தை உள்ளபடி ஒலித்துணர்வாரில்லை. இவ்வோங்கார எழுத்தை உணர்கின்ற மெய்யடியார்கள் தலையெழுத்தென்று சொல்லப்படும் ஊழை உள்ளத்துணரார் (அவ்வூழ் உடலூழாய்க் கழியும்.)

(அ .சீ.) நீரில் எழுத்து - நிலையற்றது. உலகர் அறிவது - உலகத்தில் பெரும்பாலோர் உச்சரிப்பது. வானில் எழுத்து - ஆகாய தத்துவத்தினிடத்து முதல் முதல் தோன்றிய பிரணவம். யாரிவ் வெழுத்தை யறிவார்-ஒருவரும் அறியாதவர். அவர்கள்-அப்படி அறியமாட்டாதார். ஊனில் எழுத்து - ஊன் அகத்துள்ள நெஞ்சத்தினிடம் பொறிக்கப்பட்ட எழுத்துக்கள். (சக)

935. காலை நடுவுறக் காயத்தில் அக்கரம்
மாலை நடுவுற ஐம்பது மாவண
மேலை நடுவுற வேதம் விளம்பிய
மூல நடுவுற முத்திதந் தானே.[2]

(ப. இ.) உயிர்ப்பு ஆறுநிலைக்களங்களுள் நடுவாகிய நெஞ்சத்தின் கண்நிற்ப, பெருவெளியில் தோன்றிய ஓங்காரம், ஐம்பத்தோரெழுத்துக்களாகிய சொன்மாலையின் நடுமணியாக விளங்கும் மேலும் மறைகளின் நடுவாக விளங்கும் திருவைந்தெழுத்தே சிவமூல மந்திரமாகும். அதனை இடையருது நாட வீடுபேறுகும். நாட - சிந்திக்க.

(அ. சீ.) காலை நடுவுறக் காயத்தில் - உடம்பில் இருகாலின் இடுக்கின் நடுவுதொட்டு உள்ள மூலாதாரம் தொடங்கி ஆறு ஆதாரங்களில். அக்கரமாலை...ஆவன - ஐம்பத்தோரக்கரங்களும் மாலைபோன்று உள்ளன. மேலும்...மூலம்-அம் மாலையில் பதக்கங்கள் போன்று உள்ள ஆதாரத்தானங்களின் நடுவில் இருக்கும், வேதத்தில் சொல்லப்பட்ட ஐந்தெழுத்து. (சஉ)

1. நாமல்ல. சிவஞானபோதம், க0. உ-க.
2. மந்திர. சம்பந்தர், உ. கசச-உ.

936. நாவியின் கீழது நல்ல எழுத்தொன்று
பாவிக ளத்தின் பயனறி வாரில்லை
ஓவிய ராலும் அறியவொண் ணாதது
தேவியுந் தானுந் திகழ்ந்திருந் தானே.

(ப. இ.) கொப்பூழின்கீழ் மூலத்திடத்துத் திகழும் ஒன்று நல்ல எழுத்தாகிய ஓங்காரம். சிவசிவ என்கிலாத் தீவினையாளர் இதன்பயனை அறிகின்றிலர். இது படைப்போன் முதலாகிய தேவர்களாலும் அறிதற்கரியது. அம்மையோடு சிவபெருமான் ஆண்டுச் சிறந்திருந்தனன். நாவி-நாபி; கொப்பூழ். பாவிகள் - தீவினையாளர். ஓவியர் - படைப்போன் முதலிய தேவர். (சஉ)

937. அவ்வொடு சவ்வென் றரனுற்ற மந்திரம்
அவ்வொடு சவ்வென்ற தாரும் அறிகிலர்
அவ்வொடு சவ்வென்ற தாரும் அறிந்தபின்
அவ்வொடு சவ்வும் அனுதியு மாமே.

(ப. இ.) அகரமும் சகரமும் அரனுக்குரிய மந்திரமாகும். மகரத்துடன் கூடிய சகரம்-சம். இதனை யாரும் அறிகிலர். அகரத்துடன் கூடிய சகரமாகிய 'ச' என்னும் மறையினை எல்லாரும் அறிந்தபின், அகர சகரங்கள் தொன்மையனவாகும். அனுதி - தொன்மை. இதனை அசபை என்பர். அசபை-அசபா-சபிக்கப்படாதது (அசம்.) (சஊ)

938. மந்திரம் ஒன்றுள் மலரால் உதிப்பது
உந்தியி னுள்ளே உதயம்பண் ணுநிற்குஞ்
சந்திசெய் யாநிற்பர் தாம தறிகிலர்[1]
[2]நந்தி தொழுதுபோ யார்த்தகன் றார்களே.

(ப. இ.) திருவைந்தெழுத்தே வழிபாட்டு முதன்மை மந்திரம். அதனை நெஞ்சத்தினிடத்து உயிர்ப்புடன் கணிக்க மலர் வழிபாடு - அருச்சனை யாகும்.[3] கொப்பூழின் உள்ளே உயிர்ப்புடன் கணிக்க ஓம வேள்வியாகும்.[4] புறத்தே சந்தி செய்கின்றவர் இவ் வுண்மையினை உணரார். நந்தியாகிய சிவபெருமானைத் தொழுததாக எண்ணி ஆரவாரித்து நீங்குவர். உள்மலர்-நெஞ்சத்தாமரை; அநுகதம். கொப்பூழ் - சுவாதிட்டானம். அந்தி என்ற பாடத்திற்குப் பேர் கொண்ட பார்ப்பார்க்கு அந்தி வழிபாடே சிறந்ததென்ப என்க.

(அ. சி.) உந்தி...நிற்கும் - மனத்தை மணிபூரகத்தில் நாட்டி, கும்பகத்தில் இருந்து மந்திரங்களை விதிப்படி உச்சரித்தால் மந்திரங்கள் பலனைக் கொடுக்கும். சந்தி செய்யா நிற்பர் - இம்மாதிரி உச்சரிக்க அறிகிலாதார். ஆர்த்து - ஆர்ப்பாட்டம் செய்து. (சஙி)

---

1. அஞ்செழுத்தா. சிவஞான்போதம், கூ. கூ - கூ.
(பாடம்) 2. அந்தி.
3. பொய்யாத. எ. கூ0 - சு.
4. பூமென்கோதை. இ. கஅ - அ

939. சேவிக்கு மந்திரஞ் செல்லுந் திசைபெற
ஆவிக்குள் மந்திரம் ஆதார மாவன
பூவுக்குள் மந்திரம் போக்கற நோக்கிடில்
ஆவிக்குள் மந்திரம் அங்குச மாமே.[1]

(ப. இ.) தொழுகை மந்திரம் யாண்டும் கணிக்கப்படும். அம் மந்திரத்துக்கு உரிமைப் போன்றுநிற்பது ஆறு நிலைக்கள மந்திரமாகும். நெஞ்சத் தாமரைக்குள் நிலைபெறு மந்திரம் எது என்று குற்றமற ஆராயின் ஆருயிருக்கு உயிராகிய திருவைந்தெழுத்தாகும். அவை தொண்டர் அஞ்சுகளிரும் அடக்கும். அங்குசம் - தோட்டியாகும்.

(அ. கீ.) பூவுக்குள் - ஆறு ஆதாரங்களாகிய பூவிற்குள். ஆவிக்கு - உயிருக்கு. அங்குசம் ஐம்பொறிகளாகிய மதயானைகளை அடக்க அங்குச மாகும். (சசு)

940. அருவினில் அம்பரம் அங்கெழு நாதம்
பெருகு துடியிடை பேணிய விந்து
மருவி யகார சிகார நடுவாய்
உருவிட வூறு முறுமந் திரமே.

(ப. இ.) கண்ணுக்குப் புலனாகாத பரவெளியில் தோன்றுவது ஒலி. அவ்வொலி வெளித் தோன்றுங் கருவி துடியிடைபோன்று விரிந்தும் குவிந்தும் விரிந்தும் நிலவுவது ஒளியாகிய விந்து. இதனை உகாரம் என்ப. இவ் விந்துவை மருவிய நாதம் அகாரம் என்ப. இவ் விரண்டும் கலந்த தோற்றம் ஓங்காரம் என்ப. மந்திரங்களுள் தலையாயது நமசிவய என்ப. இதன்கண் சிகரம் நடுவாக[2] இருப்பது காண்க,

(அ. கீ.) விந்து - உகாரம். விந்து மருவிய அகாரம் - பிரணவம். சிகார நடுவாய் - நமசிவாய என்னும் தூல பஞ்சாக்கரம். (சஎ)

941. ஆறெழுத் தோதும் அறிவார் அறிகிலர்
ஆறெழுத் தொன்றுக ஓதி உணரார்கள்
வேறெழுத் தின்றி விளம்பவல் லார்கட்
கோரெழுத் தாலே உயிர்பெற லாமே.

(ப. இ.) ஓம் நமசிவய என்பது ஆறெழுத்து மந்திரம். இம் மந்திரத்தினை நமசிவய எனவும், சிவயநம எனவும் ஓதுவர். அப்பொழுது இவ்விரண்டினையும் முறையே பருமை ஐந்தெழுத்து, நுண்மை ஐந்தெழுத் தென்பர். சிவயசிவ என்பது மீநுண்மை ஐந்தெழுத்து. சிவசிவ என்பது முதல்நிலை ஐந்தெழுத்து, முதல்நிலை : காரணம் ஒரெழுத்து-ஒப்பில்லாத சிவ என்னும் எழுத்து. இஃதிரண்டெழுத்தாயினும் உடலுயிர்போன்று ஓரெழுத்தேயாம்.

---

1. தொண்டரஞ்சு. சம்பந்தர். உ. ககசு-க.
,, உரனென்னும். திருக்குறள், உசு.
2. நமழ்சி வாயவே. தி. கo-உ.

(அ. சி.) ஆறெழுத்து-பிரணவத்தோடுங் கூடிய தூல பஞ்சாக்கரம். ஆறெழுத்தொன்றுக - தூலத்தைச் சூக்குமத்திலும், சூக்குமத்தைக் காரணத்திலும், காரணத்தை மகா காரணத்திலும், மகா காரணத்தை மூத்தி பஞ்சாக்கரத்திலும் ஒடுக்கி ஏகமாகும்படி. வேறு எழுத்து-வைகரி வடிவாய் விகாரப்பட்ட எழுத்துக்கள். (சஅ)

**942.** ஓதும் எழுத்தோ டுயிர்க்கலை மூவைந்தும்
ஆதி எழுத்தவை ஐம்பதோ டொன்றென்பர்
சோதி எழுத்தின் நிலையிரு மூன்றுள
நாத எழுத்திட்டு நாடிக்கொள் ளீரே.

(ப. இ.) மந்திரங்கட்கெல்லாம் முதலாக ஓதப்படும் ஓங்காரத்துடன் ஏனை உயிரெழுத்துப் பதினைந்துங் கூட மொத்தம் உயிரெழுத்துப் பதினாறு. மெய்யெழுத்து முப்பத்தைந்து. ஆகமொத்தம் எழுத்து ஐம்பத்தொன்று. சோதியாகிய ஒளி எழுத்துச் சிவம். அகத்தே மூலமுதல் புருவநடு ஈறாகவுள்ள ஆறு நிலைக்களங்கள் உள்ளன. அவற்றின் கண் பரவெளி எழுத்தாகிய ஓம் என ஒலித்துக் கண்டுகொள்க.

(அ. சி.) ஓது...மூவஞ்சு - உயிர் 16 (திருமூலர் காலத்தில் தமிழ் மொழியில் உயிர் 16 உண்டு என்பது இதனால் அறிகின்றோம்) ஆதி... என்பர்-மெய்யெழுத்துக்கள் 35-ம் சேர்ந்து (16 + 35) 51 எழுத்துக்கள் என்று புலவர் கூறுவர். (செந்தமிழ்க் காலத்துக்கு முந்திய தமிழ்மொழி நிலை இது). சோதி எழுத்து, நாத எழுத்து - சி. (சக)

**943.** விந்துவி லுஞ்சுழி நாதம் எழுந்திடப்
பந்தத் [1]தலைவி பதினறு கலையதாய்க்
கந்தர வாகரங் காலுடம் பாயினள்
அந்தமும் இன்றியே ஐம்பத்தொன் றுயதே.

(ப. இ.) சுழியாகிய விந்துவினின்று எழுத்தோசை தோன்றும். அவ் வெழுத்து ஐம்பத்தொன்று என்ப. அவ்வெழுத்துக்களின் முதல்வி திருவருளாற்றலாகும். அவள் பதினறு கலையாக விளங்குவள். இவ்வைம்பத்தோரெழுத்தும் அம்மையின் வடிவமாக அமைக்கப்படும்.

(அ. சி.) விந்து...திட - 51 எழுத்துக்களும் விந்துவினின்றும் உற்பத்தி...எழுத்துக்கள் எல்லாம் சத்தி உருவமாகும். (கo)

**944.** ஐம்ப தெழுத்தே அனைத்துவே தங்களும்
ஐம்ப தெழுத்தே அனைத்தாக மங்களும்
ஐம்ப தெழுத்தேயு மாவ தறிந்தபின்
ஐம்ப தெழுத்தும்போய் அஞ்செழுத் தாமே.[2]

(ப. இ.) ஓங்காரத்துடன் கூடிய ஐம்பத்தோரெழுத்துக்களாலாகியதே பொதுவும் சிறப்புமாகக் கூறப்படும் தொன்மைத் தமிழ்மறையும்

1. (பாடம்) தலையிற்.
2. பாசளூர சிவஞானசித்தியார், கூ.
,, அஞ்செழுத்தே. உண்மை விளக்கம், சஇ.

முறையும் என்ப. மறையை வேதம் எனவும், முறையை ஆகமம் எனவும் கூறுப. இவ்வெழுத்துக்களாலாகிய பயனே உணர்ந்தபின் இவையனைத்தும் ஒடுங்கி ஐந்தெழுத்தே நின்று நிலவி முதன்மையுறும் என்க.

(அ. சீ.) ஐம்...தாமே - 51 எழுத்துக்களாலேயே எல்லா வேதங்களும் ஆகமங்களும். 51 எழுத்துக்களும் அஞ்செழுத்தில் அடங்கின. (இக)

945. அஞ்செழுத் தாலைந்து பூதம் படைத்தனன்
அஞ்செழுத் தாற்பல யோனி படைத்தனன்
அஞ்செழுத் தாலிவ் வகலிடந் தாங்கினன்
அஞ்செழுத் தாலே அமர்ந்துநின் ருனே.[1]

(ப. இ.) திருவைந்தெழுத்தினுள் மகர அடையாளத்தால் உலகம் படைக்கப்பட்டது விளங்கும். அதுபோல் யகர அடையாளத்தால் உடலுடன் உயிரினை இணைத்தது விளங்கும். யோனி-உயிர். நகர அடையாளத்தால் விரிந்த வுலகத்தை இயைந்தியக்கிக் காக்கும் நடு நிலைமை விளங்கும். சிகரவகர அடையாளங்களால் எல்லாமாய் அமர்ந்த விழுமிய முழுமுதற் சிவமாம் பெருந்தன்மை விளங்கும். (இஉ)

946. வீழ்ந்தெழ லாம்விகிர் தன்திரு நாமத்தைச்
சோர்ந்தொழி யாமல் தொடங்கும் ஒருவற்குச்
சார்ந்த வினைத்துயர் போகத் தலைவனும்
போந்திடும் என்னும் புரிசடை யோனே.

(ப. இ.) திருவருள் துணையால் திருவைந்தெழுத்தை முறையாக இடைவிடாது கணித்தால் உலகியல் நுகர்வுடன் அதன்கண் தொடக்கின்றி வாழ்தலுமாகும்.[2] பிறவிப் பெருந்துயர் நீங்கத் தம்முதல் குருவுமாய் வந்தருள்வன். அவனே புரிசடையோனுவன். புரிசடையோன்: புரி + சடையோன் - திருவாதிரை நாளை விரும்புவோன். புரிதல் - விரும்புதல். சடை: திருவாதிரைநாள். நாள் - நட்சத்திரம். சடை: பின்னல். ஒன்றும், வேறும், உடனும் விரும்பியுறையும் புணர்ப்பினேன் புரிசடையோன் எனப்படும். புணர்ப்பு: பின்னல்; அத்துவிதம்.

(அ. சீ.) வீழ்...யோனே - அஞ்செழுத்தை விதிப்படி உச்சரிக்கும் ஒருவன் பந்தத்தினின்றும் விடுபடலாம். சிவனும் (இக)

947. உண்ணு மருந்தும் உலப்பிலி காலமும்
பண்ணுறு கேள்வியும் பாடலு மாய்நிற்கும்
விண்ணின் றமரர் விரும்பி அடிதொழ
எண்ணின் றெழுத்தஞ்சு மாகிநின் ருனே.

---

1. பொன்பார். உண்மை விளக்கம், சு
,, அஞ்செழுத்தே. ,, சஇ.
2. ஒழுக்கத்து நீத்தார். திருக்குறள், உக.
,, சாக்கிரத்தே. சிவஞானசித்தியார். அ. உ - உஇ.

(ப. இ.) முழுமுதற் சிவன் அவன் திருவருளால் அடியவர் உண்ணும் மூடிவிலா அமிழ்து மாவன்; எந்நாளும் பண்ணெடு பொருந்திய முறைப் பாடலும் ஆவன். மெய்கண்ட நூற்கேள்வியுமாய் விளங்குவன். தூய விண்ணுரிய சிவவுலகத்தில் வாழும் அழிவில் காதலர்கட்குத் திருவடிவு தொழத் திருவைந்தெழுத்துமாகி நின்றனன். (இச)

948. ஐந்தின் பெருமையே அகலிட மாவது
ஐந்தின் பெருமையே ஆலய மாவது
ஐந்தின் மேருமையே யறவோன் வழக்கமும்
ஐந்தின் வகைசெயப் பாலனு மாமே.

(ப. இ.) திருவைந்தெழுத்தின் அளவிலாப் பெருமையினாலேயே எல்லாவுலகமும் ஒழுங்காக நடைபெற்று வருகின்றன. திருவைந் தெழுத்தின் சிறந்த திருக்குறிப்பே சிவபெருமான் திருக்கோவிலாகும். அது, சிவக்கொழுந்தாகிய சிவலிங்கம் காணப்படும் கருவறை நிலை சிகரம். அதன் அடுத்த மண்டபத்தில் காணப்படும் மனோன்மனி நிலை வகரம்; ஆனேற்று நிலை யகரம். அம்பலவாணர் நிலை நகரம் பலிபீட நிலை மகரம். (2372) அறவோன் ஆகிய சிவபெருமான் அருளும் வழக்கமும் திருவைந்தெழுத்தேயாம். திருவைந்தெழுத்தை முறையாகக் கணிப்பாரைக் காக்கும் காவலன் சிவபெருமானுவன். பாலன் - காவலன். (இஇ)

949. கோரெழுத் தாய்விண்ணுய் அப்புற மாய்நிற்கும்
நீரெழுத் தாய்நிலந் தாங்கியும் அங்குளன்
சீரெழுத் தாய்அங்கி யாயுயி ராமெழுத்
தோரெழுத் தீசனும் ஒண்சுட ராமே.

(ப. இ.) ஓசையின் மூலமாகிய ஓங்காரமாய், ஐம்பெரும் பூதங்களின் எழுத்தாய், அவற்றிற்கு அப்பாலுமாய் விண்ணெழுத்து வ. நீரெழுத்து ம. நிலந்தாங்கும் எழுத்து ந. தீ யெழுத்து சி. காற்றுகிய உயிரெழுத்து ய. ஒப்பிலாத ஓர் எழுத்து சிவன். இவ் வெழுத்துக்களாக நின்றியக்கும் சிவபெருமான் பேரொளிப் பிழம்பினன் ஆவன்.

(அ. சீ.) வேர் எழுத்து - மூல எழுத்தாகிய பிரணவம் (ஆணிவேர்) ஆகிய. எழுத்து எழுத்தாணி என்றுங் கூறுப. விண் எழுத்து - வ. நீர் எழுத்து - ம. நிலந்தாங்கி எழுத்து - ந. அங்கி எழுத்து - சி. உயிராம் எழுத்து - ய. ஓர் எழுத்து - சி. (இக)

950. நாலாம் எழுத்தோசை ஞாலம் உருவது
நாலாம் எழுத்தினுள் ஞாலம் அடங்கிற்று
நாலாம் எழுத்தே கவிலவல் லார்கட்கு
நாலாம் எழுத்தது நன்னெறி தானே.

---

1. கவித்துக் கலந்ததொர். ச. கஉ - எ.

(ப. இ.) சிவய்நம என்னும் திருவைந்தெழுத்தின் நான்காவது எழுத்து நகரம். இந் நகரமே உலகை உருவாகக் கொண்டு இயக்குவது. அவ் வெழுத்தினுள் உலகம் அடங்கி அதன் ஆணைவழிநடக்கும். நாலா மெழுத்தை முதலாகக் கொண்டு நமசிவய என ஓதவல்லார்கள் நன் னெறிச் செல்லும் செல்வர்களாவர்.

(அ. சீ.) நாலாம் எழுத்து - வ- (இஎ)

951. பட்ட பரிசே பரமஞ் செழுத்ததின்
இட்ட மறிந்திட் டிரவு பகல்வர
நட்டம தாடு நடுவே நிலையங்கொண்
டட்டதே சப்பொரு ளாகிநின் ருனே.

(ப. இ.) சிறப்பும் சீரும் அனைத்திற்கும் மேலாய அஞ்செழுத்தே யாம். அன்பு சேர் ஆருயிர்கட்கு அஞ்செழுத்தின்கண் விழைவு உண்டாக வேண்டி மறப்பும் நினைப்பும் உண்டாக, அம்பலவாணர் திருக் கூத்தியற்றுவர். திருவருள் நடுவே, ஆருயிர் நடுவே. அனைத்துலகின் நடுவே இடங்கொண்டு எண் பெரும் பொருளாய் நின்றருள்பவன் சிவன். எண் பொருள் : நிலம், நீர், தீ, காற்று, வான், திங்கள், ஞாயிறு, ஆருயிர் என்பன.

(அ. சீ.) இட்டம் - தியான உறைப்பு. (இஅ)

952. அகாரம் உயிரே உகாரம் பரமே
மகார மலமாய் [1]வருமுப் பதத்திற்
சிகாரஞ் சிவமாய் வகாரம் வடிவமாய்
யகாரம் உயிரென் றறையலு மாமே.

(ப. இ.) உயிரெனக் குறிப்பதாய உடல்மெய் இருபத்து நான்கும் அகாரமாகும். பரமெனக் குறிப்பதாய உணர்த்து(சிவ)மெய் ஐந்தும், உகரமாகும். மலமெனக் குறிப்பதாய உணர்வு மெய் ஏழும் மகாரமாகும். இம் முப்பத்தாறு மெய்களுள் சிகரம் சிவமாகிய உயிர்க்குயிராய், வகரம்[2] சிவபெருமானின் திருமேனியாய், யகரம் திருவருளின் கைப்படும் உயிராய்த் திகழுமென்க. (இக)

953. நகார மகார சிகார நடுவாய்
வகாரம் இரண்டும் வளியுடன் கூடி
ஓகார முதற்கொண் டோருகால் உரைக்க
மகார முதல்வன் மனத்தகத் தானே.[3]

(ப. இ.) நமசிவய என்பதன்கண் சிகரம் நடுவாகும். இரண்டு வளி என்பது இடப்பால் வலப்பால் மூச்சு. இஃது உயிர் அடையான

(பாடம்) 1. வருமுப்பத் தாறிற்.
2. மாயைதான். சிவஞான சித்தியார், க. உ - உக.
3. மோற்றியோ. அ. காருணியத், உ.

மாகிய யகரத்தைக் குறிக்கும். இவ் வைந்துடன் ஓமொழியை முதற் கொண்டு உள்ளன்புடன் ஒருமுறை ஓதினால், மகாரமாகிய நாதமெய்க்குத் தலைவனுகிய சிவபெருமான் ஓதுவார் நெஞ்சை இடமாகக்கொண்டு எழுந்தருள்வன். (கூ0)

954. அஞ்சுள வாணை அடவியுள் வாழ்வன
அஞ்சுக்கும் அஞ்செழுத் தங்குச மாவன
அஞ்சையுங் கூடத் தடுக்கவல் லார்கட்கே
அஞ்சாதி யாதி அகம்புக லாமே.[1]

(ப. இ.) காடனைய தொண்ணூற்றாறு மெய்க்கூட்டத்தாலாகிய இவ் வுடம்பினுள் ஐம்புல யானைகள் தம் மனம் போல் திரிகின்றன. அவற்றைத் தடுத்து நேர்வழியிற் செலுத்த வேண்டுமானால் தோட்டியாகிய கருவி வேண்டும். அக் கருவியே சிவயநம என்னும் திருவைந்தெழுத்தாகும். அவ் வைந்தெழுத்தை இடையருது நாடுவார்க்குத் திருவைந் தெழுத் திற்கு முதல்வனுகிய சிவபெருமானின் ஆதி என்று ஓதப்பெறும் திருவரு ளாற்றலின் திருவடி புகுதலாகும். இடையருது நாடுதல் - விடாது சிந்தித்தல்.

(அ - சி.) அஞ்சுள ஆணை - ஐம்புலன்கள். அடவி - தத்துவக் கூட்டத் தாலாய தேகம். அஞ்சையும் கூடத்தடுக்க வல்லார்கட்கு - காற்றைப் பிடிக்கும் கணக்கு அறிவார்கட்கு. அஞ்சாதி யாதி அகம் - அஞ்செழுத் ததிபனுகிய சிவன் இருப்பிடம். (கூக)

955. ஐந்து கலையில் அகராதி தன்னிலே
வந்த நகராதி மாற்றி மகராதி
நந்தியை மூலத்தே நாடிப் பரையோடுஞ்
சந்திசெய் வார்க்குச் சடங்கில்லை தானே.

(ப. இ.) நீக்கல், நிலைப்பித்தல், நுகர்வித்தல், அமைதியாக்கல், அப்பாலாக்கல் ஆகிய ஐந்து திருவருள் ஆற்றல்களால் செலுத்தப்படுவன அகர முதலிய எழுத்துக்கள், நமசிவய என்பதைச் சிவயநம எனக் கணித்தல் வேண்டும். மகர முதல்வனுகிய நந்தியை மூலத்திடத்து நாடித் திருவருளோடும் சேர்த்து வழிபடுவார்க்குப் புறச் சடங்குகள் இன்றியமை யாதனவன்று. மேற் கூறிய நீக்கல் முதலிய ஐந்து திருவருள் ஆற்றல்களை யும் நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தி அதீதை என்னும் ஐந்து கலைகள் எனவும் கூறுப.

(அ. சி.) ஐந்து கலை - நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியாதீதை, அகராதி - கலைகளால் காரியப்பட்ட அகர முதலிய வர்ணங்களில். நகராதி மாற்றி - சிகர முதலாக உச்சரித்து. சடங்கு - கன்மம். (கூஉ)

1. தொண்டரஞ்சு. சம்பந்தர், உ. ககசு - க.
,, படைக்கல. சு. அக. அ.

956. மருவுஞ் சிவாயமே மன்னும் உயிரும்
அருமந்த [1]யோகமும் ஞானமு மாகுங்
தெருள்வந்த சீவனுர் சென்றிவற் றுலே
அருள்தங்கி யச்சிவ மாவது வீடே.

(ப. இ.) பொருந்திய சிவய என்னும் மூன்றெழுத்துக்களும் மூறையே அறிவும் செறிவும் ஆவியுமாகும். அறிவு - ஞானம். செறிவு - யோகம். ஆவி - உயிர். யோகம் என்பது உயிர் திருவருளுடன் கூடுதல். அஃதாவது முழுமுதற் சிவத்தை அகத்தே திருவருவிற் கண்டு வழி படுதல். இந்நிலே அருமருந்தன்ன நிலேயாகும். திருவடியுணர்வு கைவரப் பெற்ற உயிர் இம்முறை யுணர்ந்து வழிபடத் திருவருளுடன் உயிர் கூடிய நிலேயில் அவ் வுயிர் சிவம் என்று அழைக்கப்படும். அதுவே வீடாகும் (பின் பேறு என்பது சிவத்துடன் கூடுதலாகும்.)

(அ. சி.) அருள்தங்கி ய சிவமாவது - திருவருட் சத்தி பதிந்து ய ஆகிய ஆன்மா சிவமாகி அநுபவிக்கக்கூடியது முத்தி இன்பம், (சுங)

957. அஞ்சுக அஞ்செழுத் துண்மை அறிந்தபின்
நெஞ்சகத் துள்ளே நிறையும் பராபரம்
வஞ்சக மில்லே மனக்கும் அழிவில்லே
தஞ்ச மிதுவென்று சாற்றுகின் றேனே.

(ப. இ.) ஐந்து மலங்களும் நீங்குதற்குத் திருவைந்தெழுத்தின் உண்மையறிந்து ஒதி ஒழுகுதல் வேண்டும். அப்பொழுது சிவபெருமான் நெஞ்சத்திடத்து நிறைந்து வெளிப்படுவன். அந் நெஞ்சத்தில் பிறவிக்கு வித்தாகிய தீய நினேவுகள் தோன்ரு. இவ்வுடம்பும் விரும்பும் நாள் வரையும் அழியாதிருக்கும். இந் நிலேயே நமக்கு நிலேத்த புகலிடமாகச் சொல்லப்பெறும். உக - நீங்க. அம் + சுகம் என்பது அஞ்சுகம் என்ரு கும்; அப்பொழுது மிகவும் இன்பம் தரும் என்று கொள்ளுதலும் ஒன்று.

(அ. சி.) அஞ்சு உக - அஞ்சு மலங்கள் நசிக்க. (சுச)

958. சிவாயவோ டவ்வே தெளிந்துளத் தோதச்
சிவாயவோ டவ்வே சிவனுரு வாகுஞ்
சிவாயவோ டவ்வுந் தெளியவல் லார்கள்.
சிவாயவோ டவ்வே தெளிந்திருந் தாரே.[2]

(ப. இ.) சிவய என்பதனேடு முதலாய சிவ என்னும் அவ் விரண் டெழுத்தையும் கூட்டிச் சிவயசிவ எனத் தெளிந்து உள்ளன்புடன் ஒதுதல் வேண்டும். சிவயசிவ என்பதே சிவபெருமானின் மந்திர வுருவாகும். இவ் வுண்மையினேத் தெளியவல்லார்கள் சிவசிவ என்று சிறந்திருப் பார்கள். (சுஇ)

1. (பாடம்) போகமும்.
2. நானேயோ. அ. திருவேசறவு, ச0.

959. சிகார வகார யகார முடனே
நகார மகார நடுவுற நாடி
ஒகார முடனே ஒருகா லுரைக்க
மகார முதல்வன் மதித்துளின் றனே.

(ப. இ.) சிவயநம என்னும் திருவைந்தெழுத்தையும் ஓமொழியுடன் ஓதுதலும் உண்டு. அங்ஙனம் ஓதுவாரையும் உலகமே உருவமாகக் கொண்டு நடத்தும் சிவபெருமான் திருவுளங்கொண்டு நிற்பன். 953 ஆம் திருப்பாட்டில் ஓம் நமசிவய என உலகியலும், இத் திருப்பாட்டில் ஓம் சிவயநம என வீட்டியலும் ஓதப் பெறுகின்றன. உலகியலே வேத நெறி யெனவும், வீட்டியலே ஆகம நெறியெனவும் கூறுவர்.

(அ. சி.) 953 ஆம் மந்திரத்தில் நகார முதலாக உச்சரிப்பதையும் இதில் சிகார முதலாக உச்சரிப்பதையும் கூறியுள்ளார். (சுசு)

960. நம்முதல் ஓரைந்தின் நாடுங் கருமங்கள்
அம்முதல் ஐந்தில் அடங்கிய வல்வினை
சிம்முத லுள்ளே தெளியவல் லார்கட்குத்
தம்முத லாகுஞ் சதாசிவந் தானே.

(ப. இ.) நமசிவய என்னும் திருவெழுத்து ஐந்தினுள் படைத்தல் காத்தல் துடைத்தல் மறைத்தல் அருளல் என்னும் ஐந்தொழில்களும் நிகழ்வனவாம். சிவபெருமானின் சிறந்த விரிநிலைகள் பிள்ளையார் சிவமுருகன், ஆலமர் செல்வன், அம்மை, அறிவாற்றலாம் அழற்பிழம்பு ஆகிய ஐந்துதிருவுருவங்களாம். திருத் தொழிலைந்தும் சிவன்தானே செய்தும் உயிர்களைக் கொண்டு செய்வித்தும் வருதலின் அது வல்வினை என்று சொல்லப்படும் பெருஞ் செயலாகும். சிவயநம எனத் தெளிய வல்லார்க்குச் சதாசிவன் என்று சொல்லப்படும் அறிவாற்றலினை சிவன் தம் முதலாக வெளிப்பட்டருள்வன்.

(அ. சி.) நம்...கருமங்கள் - உலகத்தில் காரியங்கள் கைகூட ந முதலாக ஓதவேண்டும். சிம்...றனே - சி முதலாக ஓதினால் முத்தி யின்பம் கிட்டும். (சுஎ)

961. நவமுஞ் சிவமும் உயிர்பர மாகுந்
தவமொன் றிலாதன தத்துவ மாகுஞ்
சிவமொன்றி யாய்பவ ராதர வால்அச்
சிவமென்ப தானும் எனுந்தெளி வுற்றதே.

(ப. இ.) நகர முதலாய நமய என்ற மூன்றும் நவமாகும்; சிகர முதலாய சிவ என்ற இரண்டும் சிவமாகும். இப் பிரிவு இரண்டும் முறையே உயிரும் இறையுமாகும். இவ்வைந்தெழுத்துக்கள் பயனைத் தந்து கழியும் தவத்துடன் ஒப்பாவன வல்ல. நிலைபெற்ற திருவடிப் பேற்றைத் தரும் மெய்யுணர்வை நல்கும் மெய்ம்மையன. சிவத்துடன் பொருந்தித் திருவைந்தெழுத்தின் உண்மையால் பேரன்பு பூண்டவர் சிவனே தானாகத் திகழ்வர். (பளிக்கு மணியகத்துள்ள வெண்ணூல் பளிக்கு மணியாகவே திகழும்). (சுஅ)

962. கூடிய எட்டும் இரண்டுங் குவிந்தறி
நாடிய நந்தியை ஞானத்துள் ளேவைத்து
ஆடிய ஐவரும் அங்குற வாவர்கள்
தேடி அதனைத் தெளிந்தறி யீரே.

(ப. இ.) எட்டும் இரண்டும் அகர உகரம். இவை உயிரும் இறையு மென்று கூறப்படும். எட்டும் இரண்டும் கூடுங்கால் பத்தாகும். பத்தென்பது யகரம். அஃதுயிர். உயிர் சிவத்துடன் ஒன்றி ஒருமனப் பட்டு நாடப்படும் நந்தியை நாடித் திருவடியுணர்வினுள் வைத்தால் வாடுதலைச் செய்விக்கும் ஐம்புலனும் சிவத்தைத் தேடுதலுக்குத் துணை செய்யும். இங்ஙனம் தேடு நிலையைத் தெளிந்துணர்க.

(அ. சி.) எட்டும் இரண்டும் - அகரமும் உகரமும். (ஊஊ)

963. எட்டும் இரண்டும் இனிதறி கின்றிலர்
எட்டும் இரண்டும் அறியாத ஏழையர்
எட்டும் இரண்டும் இருமூன்று நான்கெனப்
பட்டது சித்தாந்த சன்மார்க்க பாதமே.

(ப. இ.) எட்டு மிரண்டும் பத்து. இதன் அடையாளம் ய. யகரம் உயிர். உயிரின் அடையாளக் குறி. இவற்றை யாவரும் இனிதறிய மாட்டார். இதை யறியவல்ல அறிவிலார், இரு மூன்று நான்கு கூட்டும் கணக்குப்போல் பத்தென்பர். சிவபெருமான் திருவடியே பத்தென்ப தாகும். செந்நெறியில் கூறப்படும் பருமை நுண்மையாகிய திருவைந் தெழுத்துப் பத்தாகும். சிவக்குறி - சிவக்கொழுந்து ; சிவலிங்கம்.

(அ. சி.) எட்டு...பட்டது - அகரம் உகரம் என்று அறியாதவர் எட்டுமிரண்டும் பத்து (இருமூன்று நான்கு) எனக் கூறுவர். (எ0)

964. எட்டு வரையின்மே லேட்டு வரைகீறி
இட்ட நடுவுள் இறைவன் எழுத்தொன்றில்
வட்டத்தி லேயறை நாற்பத்தெட் டுமிட்டுச்
சிட்டஞ் செழுத்துஞ் செபிசீக் கிரமே.

(ப. இ.) குறுக்கும் நெடுக்குமாக எட்டு வரைகள் கீறப்பட்டால் அதன்கண் அறைகள் நாற்பத்தொன்பது அமையும். இதன்கண் நடுவரையில் சிகரம் பொறிக்கப்படுதல் வேண்டும். மேலும் கீழும் பக்கமும் ஒவ்வோர் அறைகள் தள்ளப்பட ஐவைந்தறைகளாகும். இவற் றின்கண் திருவைந்தெழுத்தை அமைத்து நனிமிக விரைந்து எண்ணுக.

(அ. சி.) எட்டுவரை மேலும் கீழும் வரைந்தால் 49 அறைகள் உண்டு. இறைவன் எழுத்து - சி. (எக)

965. தானவர் சட்டர் சதிரர் இருவர்கள்
ஆனஇம் மூவரோ டாற்றவ ராதிகள்
ஏனப் பதினேந்தும் விந்துவும் நாதமுஞ்
சேனையுஞ் செய்சிவ சக்கரந் தானே.[1]

1. பரிர்த்தனுக். அப்பர், ச. ஊஉ - சி.

(ப. இ.) ஊர்காவலராம் ஐயனும், நகர் காவலராம் வைரவரும், திருக்கோவிற் காவலராம் பிள்ளையார் முருகரும், திருவாயிற் காவலரிரு வரும், விந்து நாதம் முதலாகக் கூறப்படுந் தூமாயை ஐவரும், சிவகணத் தலைவர்களும் சிவசக்கரத்துள் நாட்டப்படுபவராவர். தானவர்-ஐயனர்; சாத்தனர்.

(அ. சி.) தானவர் - ஐயனர். சட்டர்-வயிரவர். சதிரர்-விநாயகர், முருகர். ஆற்றவர் - வாயில் காப்போர். சேனை - சிவகணங்கள். (எஉ)

966. பட்டன மாதவ மாறும் பராபரம்
விட்டனர் தம்மை விகிர்தா நமஎன்பர்
எட்டனை யாயினும் ஈசன் திறத்திறம்
ஒட்டுவன் பேசுவன் ஒன்றறி யேனே.

(ப. இ.) சிவசக்கரத்தினுள்ளே சீலம் நோன்பு செறிவு அறிவு என்னும் நானெறி நற்றவம் ஆற்றுவிக்கும் சிவபெருமான் திருவடிக்குத் தம்மை ஒப்புவித்தவர்கள் முழுமுதலே நமசிவய என வழுத்துவர். எள்ளளவு காலமும் சிவன் திறமே பேசுவர். அவன் திருவடியினையே உணர்வர். இவையன்றி வேறொன்றும் அறியார்.

(அ. சி.) பட்டனம் - சிவசக்கரம். (எக)

967. வித்தாஞ் சகமய மாக வரைகீறி
நத்தார் கலைகள் பதினாறு நாட்டிப்பின்
உத்தாரம் பன்னிரண் டாதி கலைதொகும்
பத்தாம் பிரம சடங்குபார்த் தோதிடே.

(ப. இ.) விந்துவின் காரியமாகிய உலகத்துள் மண்ணின் வடிவு போன்று நாற்கோண வரைகீறி விருப்பமுள்ள திங்கள் மண்டிலத்தின் கலை பதினாறும் நாட்டுக. அதன்பின் ஞாயிற்று மண்டில வேறுபாடாகிய் பன்னிரண்டும் அமைக்க. பத்தாம் கலையாகத் தொகும் தீ மண்டிலமும் அமைக்க. வித்து: விந்து. நத்தார் : நத்து + ஆர் = விருப்பம் பொருந்திய.

(அ. சி.) வித்து - விந்து. நத்தார் - விருப்பமுள்ள. கலைபதினாறு - சந்திரமண்டலம். பன்னிரண்டாதி - சூரியமண்டலம் : கலைதொகும் பத்தாம் - அக்கினிமண்டலம். (எச)

968. கண்டெழுந் தேன்கம லம்மல ருள்ளிடை
கொண்டெழிந் தேன்உடன் கூடிய காலத்துப்
பண்பழி யாத பதிவழி யேசென்று
நண்பழி யாமே நமவென லாமே.[1]

(ப. இ.) நெஞ்சத் தாமரையினிடத்துச் சிவபெருமானைக் கண் டெழுந்தேன். அகத்துள் ஒற்றித்து ஒன்மை கொண்டுள்ளேன். சிவ சக்கரத்தின் பண்பகலாது அம் முறையைக் கைக்கொண்டு அடிமையாம் உறவெய்தி 'நமசிவய வாழ்க' என வாழ்த்துவோமாக.

1. உயிரா. அப்பர், கூ. உஇ - க.

(அ. சி.) கமலமலருள் - உள்ளக்கமலத்திடை, பண்பழியாத பதி வழி - குணம் கெடாத சிவசக்கரத்தினுல். (எஇ)

969. புண்ணிய வானவர் பூமழை தூவிநின்[1]
றெண்ணுவர் அண்ணல் இணையடி மந்திரம்
நண்ணுவர் நண்ணி நமஎன்று நாமத்தைக்
கண்ணென உன்னிக் கலந்துநின் ருரே.

(ப. இ.) சிவ உலகத்தில் வாழும் சிவ புண்ணியப் பேறு பெற்ற வானவர்கள் அகமலர்ந்த அன்பின் அடையாளமாக முகமலர்ந்து மணம் கமழும் முழுநெறி மலர்கள் தூவி நின்று தொழுவர். சிவபெருமான் திரு வடிபீணைச் சிவசிவ என இடையருது வழுத்திச் சேர்வர். நமசிவய என்னும் திருவெழுத்தைக் கண்போன்று சுருதிக் கணிப்பர். கணித்துக் கலந்து நின்று களிப்பர். கணித்தல் - செபித்தல். (எசு)

970. ஆறெழுத் தாவ தாறு சமயங்கள்
ஆறுக்கு நாலே இருபத்து நாலென்பர்
சாவித் திரியில் தலையெழுத் தொன்றுள
பேதிக்க வல்லார் பிறவியற் ருர்களே.

(ப. இ.) ஆறு எழுத்துக்களாலாயது ஆறு சமயங்கள் என்பர். ஒவ்வோர் எழுத்தையும் நான்கு பாகுபாடு செய்ய ஆறுக்கும் இருபத்து நான்கெழுத்தாகும். இவ் விருபத்து நான்கு எழுத்தும் காயத்திரி என்ப. காயத்திரியின் முன் சேர்ந்து மொழியும் எழுத்து ஓங்காரம். அவ் வோங்காரத் தறிவதாகிய உண்மைகாண வல்லார் பிறவாப் பெருவாழ்வு எய்துவர். சாவித்திரி : காயத்திரி.

(ப. இ.) சாவித்திரி - காயத்திரி 24 எழுத்துக்கள் கொண்டது. தலை எழுத்து - பிரணவம். பேதிக்க - பிரித்தறிய. (எஎ)

971. எட்டினில் எட்டறை யிட்டோ ரறையிலே
கட்டிய ஒன்றேட்டாய்க் காண நிறையிட்டுச்
சுட்டி இவற்றைப் பிரணவஞ் சூழ்ந்திட்டு
மட்டும் உயிர்கட் குமாபதி யாணுண்டே.

(ப. இ.) 963 இல் கூறியபடி அறையமைத்து, ஓர் அறையின்கண் எட்டு வீடமைத்து, இவ் வீடுகளைச் சூழ ஓ மொழியமைத்து வழிபடின் உயிர்கள் எய்தும் முடிந்த எல்லையாகிய பெருமுதல் அங்கு வெளிப்படும். மாபதியான் - பெருமுதல். பெரும்பதியாகிய சிவவுலகத்தான் என்பதும் ஒன்று. மாபதியான் : உயிர்க்குயிராயுள்ளான் என்பதும் ஒன்று.

(அ. சி.) மட்டும் - யந்திர பூசைசெய்து தியானம் செய்பவர்கட்கு. (எஅ)

---

1. பொருந்தாத செய்கை. சு. எ - அ.

972. நம்முதல் அவ்வோடு நாவின ராகியே
அம்முத லாகிய எட்டிடை யுற்றிட்
டும்முத லாகவே உணர்பவர் உச்சிமேல்
உம்முத லாயவன் உற்றுநின் ருனே.

(உ. இ.) நகர முதலாக உயிர் அடையாளமாகிய அகாரம் (953) ஈருக இடையருது ஓதும் நாவினராகி, பின் கூறப்பட்ட எட்டறைகளுள் உகரத்தை முதலாகக்கொண்டு உணர்பவரின் தலைமேல் அவ்வுகரமாகிய (கஎஉக) திருவருளாற்றற்குரிய முதல்வனுகிய சிவன் திருவடி சூட்டுவன். இத் திருப்பாட்டில் நமசிவய என எழுதவும் ஓதவும் கூறப்பட்டுள்ளன. அகரம் உயிரடையாளம் என்றுல் எழுதும்போது யகரம் எழுதுதல் வேண்டும்.

(அ. சீ.) நம்முதல் - நகர முதலாகக்கொண்டு. எட்டிடை - எட்டு அறைகளில். உம்முதலாயவன் - சத்தி முதல்வனுகிய சிவன். ("பாரும் உகாரம் பரந்திட்ட நாயகி") என்பது காண்க. (எக)

973. நின்ற அரசம் பலகைமேல் நேராக
ஒன்றிட மவ்விட்டு ஓலையிற் சாதகந்
துன்று மெழுகையுள் பூசிச் சுடரிடைத்
தன்ற வெதுப்பிடத் தம்பனங் காணுமே.

(உ. இ.) மெய்யுணர்வு விளங்குவதற்கு நிலைக்களமாக நிற்கும் அரச மரத்தின் பலகையில் திருவைந்தெழுத்தை மகர முதலாக வரையமைத்து எழுதுதல் வேண்டும். அம்மந்திரத்திருவுருவினுக்குப் பூவும் புனலும் புகையும் ஒளியும் பாவும் பிறவும் கொண்டு வழிபாடு செய்க. ஓலையின் கண்ணும் அத் திருவைந்தெழுத்தினை வரைந்து அதன்மேல் மெழுகுபூசி அதைச் சிறிது வெப்பமுறக் காட்டி அப் பலகையின் மேல் வைத்தல் நிறுத்துதல் என்ப. நிறுத்துதலைத் தம்பனம் என்ப. 926 இல் மாறி எழுதும் முறை காண்க.

(அ. சீ.) அரசம்பலகை - அரசமரத்துப் பலகையில் யந்திரத்தைச் செதுக்கி. மவ்விட்டு - மகரமுதலாக அஞ்செழுத்தை மாறி. சாதகம் - உருவேற்றுதல். (அ0)

974. கரண விரளிப் பலகை யமன்றிசை
மரணமிட் டேட்டின் மகார வெழுத்திட்டு
வரணமி லைங்காயம் பூசி யடுப்பிடை
முரணிற் புதைத்திட மோகன மாகுமே.

(உ. இ.) பயன் கைகூடச் செய்தற்குத் துணையாங் கருவியினைக் கரணம் என்ப. கரணம் அமைத்து என்பது இரளியாகிய கொன்றை மரப்பலகை செய்தலாகும். யமன் திசையாகிய தென்திசை முகமாக அப் பலகையினை அமைத்துத் தீமையாகிய பகையை ஒழிப்பதன் பொருட்டு எட்டறையில் மகர முதலாக மாறி மாறி வரைந்து, வரணமாகிய மறைப் பில்லாத ஐங்காயம் பூசி அடுப்பினகத்துத் தலைகீழாகப் புதைத்திடல் மோகனமாகிய மயக்கமுறை என்ப.

(அ. சி.) கரணம்-சாதனத்துக்கு. இரவி - கொன்றை. யமன் திசை-தெற்கு. மரணமிட்டு - மாரக அக்கரம் இட்டு. எட்டின் மகாரமிட்டு-எட்டறைகளிலும் மகரத்தை மாறி இட்டு. வரணம் - மறைப்பு. ஐங்காயம் : சுக்கு - மிளகு - கடுகு - உள்ளி - பெருங்காயம். (அக)

975. ஆங்கு வடமேற்கில் ஐயனூர்[1] கோட்டத்திற்
பாங்கு படவே பலாசப் பலகையிற்
காங்கரு மேட்டிற் கடுப்பூசி விந்துவிட்டு
ஓங்காரம் வைத்திடும் உச்சா டனத்துக்கே.

(ப. இ.) வடமேற்குப் புலமாகிய வாயு மூலையில் அரி அரர் மகனாகிய ஐயனுர் கோவிலில் அழகுறப் புரசுப் பலகையில் வெப்பமுள்ள கரிய தகட்டில் நஞ்சு பூசி விந்துவாகிய வட்டம் அமைத்து அதன்மேல் ஓங்காரம் அமைத்துப் பூசித்தலே உச்சாடனம் ஆகிய ஏவுதல் என்ப.

(அ. சி.) கோட்டம்-கோவில். காங்கு அரு மேட்டில்-வெப்பமுள்ள கரிய தகட்டில். கங்கு-கந்துள் ; நெருப்போடு கூடிய கரிக்கட்டி. (அஉ)

976. உச்சியம் போதில் ஒளிவன்னி மூலையிற்
பச்சோலை யிற்பஞ்ச காயத்தைப் பாரித்து
முச்சது ரத்தின் முதுகாட்டில் வைத்திடு
வைச்சபின் மேலோர் மாரணம் வேண்டிலே.

(ப. இ.) நண்பகற்போதில் ஒளியுடைத்தாகிய வன்னி மூலையென்று சொல்லப்பெறும் தென்கிழக்கு மூலையில் பச்சையான பனை ஓலையில் (974) சுக்கு, கடுகு, மிளகு, உள்ளி, வெள்ளுள்ளி என்னும் ஐந்தினையும் அரைத்துப் பூசி முச்சதுரமாக அமையும் சந்திகளிலும், சுடுகாட்டிலும் புதைத்துவைத்திடுக. வைத்த பிறகு பகையை அழிக்கும் மாரணமாக அஃது அமையும். மாரணம் : ஏவலாற் செய்யுங்கொலை. வெள்ளுள்ளி நீக்கிப் பெயுள்ளி கொள்ளலுமாம்.

(அ. சி.) வன்னிமூலை - அக்கினிமூலை - தென்கிழக்கு. பஞ்சகாயம் - ஐங்காயம் (மேலே கூறியபடி). பாரித்து - பூசி. முதுகாடு - சுடுகாடு. (அஉ)

977. ஏய்ந்த வரிதார மேட்டின்மே லேபூசி
ஏய்ந்த வகாரம் உகாரம் எழுத்திட்டு
வாய்ந்ததோர் வில்வம் பலகை வசியத்துக்
கேய்ந்தவைத் தெண்பதி னாயிரம் வேண்டிலே.

(ப. இ.) 973 இல் ஓதியபடி நகர முதலாக வரைந்து ஐந்தெழுத்து ஏட்டின்மேல் அரிதாரமாகிய மருந்து பூசி ; (அரிதாரமென்பது : கட்டியரிதாரம், காட்டரிதாரம், கனத்தீ அரிதாரம் தகட்டரிதாரம், தாளகம், பொன்னரிதாரம், மடலரிதாரம், வைப்பரிதாரம் என எண் வகைய.) அதன்மேல் அகார உகாரங்களை எழுதி, வாய்ப்புடைய வில்வ

1. சேநர் காவலர். கஉ. வெள்ளாளை - ஙஉ.

மரப் பலகையின் மேலும் மகர முறையாக வரைந்து, முன்னெழுதிய ஏட்டினையும் அதன்மேல் வைத்து வசியமென்னும் கவர்ச்சி அமைதற் பொருட்டு அம் மந்திரத்தினை எண்பதினாயிரம் எண் திருவுரு ஏற்றுதல் வேண்டும். திருவுரு ஏற்றுதல் என்பது சிவம் பண்ணுதல் என்பதாகும். இதனைச் செபம் பண்ணுதல் எனவும் கூறுவர்.

(அ. சி.) வில்லம் - வில்வம். (அசு)

978. எண்ணுக் கருடனே ஏட்டின் [1]யகாரமிட்
டெண்ணுப் [2]பொன்னெளி எழுவெள்ளி பூசிடா
வெண்ணுவற் பலகையி லிட்டுமேற் கேநோக்கி
எண்ணு வெழுத்தோடெண் ணாயிரம் வேண்டிலே.

(ப. இ.) கருடனை என்று சொல்லப்பெறும் ஒப்பாம் நிலைமை எய்துதற்கு வழி யாதென நாடின் ஓலையில் யகார முதலாக மாறி அமைத்து அவ் வைந்தெழுத்தினையும் எழுதி, கருதுதற்குரிய வியாழக் கிழமையில் அவ்வோலைமேல் வெண்ணிறமான ஒருவகைப் பொடியினைப் பூசி வெண்நாவல் பலகையின்மேல் அதனை வைத்து மேற்குநோக்கி யிருந்துகொண்டு, நெஞ்சின்கண் ஒருமிக்க எண்ணாயிரம் எண் உரு வேற்றுதல்வேண்டும். எண்ணுதல் - சிந்தித்தல்; நாடுதல். 973 நின்ற என்பது முதல் இத் திருமந்திரம் முடியத் தம்பனமுதலாகக் கருடனை ஈருக ஓதப்பெற்றுள்ளன.

(அ. சி.) யகாரமிட்டு - யகரத்தை மாறி. பொன்னாள் - வியாழம். எழுவெள்ளி - வெள்ளிபற்பம். (அஇ)

---

## 3. அருச்சனை

979. அம்புய நீலங் கழுநீ ரணிநெய்தல்
வம்பவிழ் பூகமும் மாதவி மந்தாரந்
தும்பை வகுளஞ் சுரபுன்னை மல்லிகை
சேண்பகம் பாதிரி செவ்வந்தி சாத்திடே. [3]

(ம. இ.) தாமரை, கருங்குவளை, செங்கழுநீர், நெய்தல், பலா, மாதவி, மந்தாரம், தும்பை, மகிழ், சுரபுன்னை, மல்லிகை, செண்பகம், பாதிரி, செவ்வந்தி ஆகிய பதினைந்து வகையான நறுமணமிக்க பூக்களைக் கொண்டு வழிபாடு செய்வாயாக. மாதவி - குருக்கத்தி. வகுளம் - மகிழ். அருச்சனை வழிபாடு. ('ஆரா தனையே வழிபா டருச்சனை' பிங்கல நிகண்டு, களகூ.) (க)

1. (பாடம்) அகாரமிட்.
,, உகாரமிட்.
2. பொன்னளில்.
3. எட்டு நாண்மலர். ஞ. ஞச - க.
,, ஆக்கை யாற்பயனென் : - ச. கூ-அ.

980. சாங்கம தாகவே சந்தொடு சந்தனந்[1]
தேங்கமழ் குங்குமங் கர்ப்பூரங் காரகிற்
பாங்கு படப்பனி நீராற் குழைத்துவைத்
தாங்கே அணிந்துநீர் அர்ச்சியும் அன்பொடே.

(ப. இ.) புழுகு, கத்தூரி முதலிய சாந்துடன், சந்தனம், மண மிகுந்த குங்குமம், பச்சைக் கருப்பூரம், வயிரம் ஏறிய அகில், ஆகிய இவற்றினுடன் அளவாகப் பனிநீர் சேர்த்துக் குழைத்து அவற்றை அணியவேண்டிய இடங்களில் முறையாக அணிந்து அன்புடன் வழிபடு வாயாக. புழுகு - புனுகு. குங்குமம் - குங்குமப்பூ; செஞ்சாந்து. சாங்கம் - முறைமை. சந்து : சாந்து - மணக்கூட்டு.

(அ. சி.) சாங்கம் - முறைமை. கர்ப்பூரம் - பச்சைக்கர்ப்பூரம். (உ)

981. அன்புட னேநின் றமுதமும் ஏற்றியே
பொன்செய் விளக்கும் புகைதீபந் திசைதோறுந்
துன்பம் அகற்றித் தொழுவோர் நினையுங்கால்
இன்புட னேவந் தெய்திடும் முத்தியே.

(ப. இ.) உள்ளன்புடன் படைப்பினைக் குழைத்து, விளக்கம் மிக்க திருவிளக்குகள் எல்லாப் பக்கங்களிலும் ஏற்றுக. புகையும் ஒளியும் காட்டி வழிபடுக. இனம்பற்றி மணியும் இயமும் இயம்புக. செந்தமிழ் மாமறைத் திருமுறை யோதுக. இத்தகைய தொழுகையினர் நினையுங்கால் திருவடிப் பேற்றின்பம் உடனே கைகூடும். அமுதம் - படைப்பு. நிவேதனம் - குழைத்தல்; ஊட்டல். வழிபாட்டுக்குரிய உறுப்புக்கள் ஐந்து; அவை, பூவும் புகையும், புனலும் படைப்பும், விளக்கும் ஒளியும், பாவும் பண்ணும், மணியும் இயமும் என்ப. பா - திருமுறை. இயம் - வாத்தியம்; வாழ்த்தியம் - மேளதாளம். 'திருநீற்றுப் பதிகம்' ஒதித் திருநீறு எடுத்தல் வேண்டும். 'பாராழி வட்டத்தார்' என்னும் திருப்பாட்டு ஒதிப் புகையினை எடுத்தல் வேண்டும். 'எல்லா வுலகமும்' என்னும் திருப்பாட்டு ஒதி ஒளியினை எடுத்தல்வேண்டும். 'ஓசையொலியெலாம்' என்னும் திருப் பாட்டு ஒதி பாவும் இயமும் இயம்புதல் வேண்டும். 'நமசிவய' எனக் கீழிருந்து மேல்நோக்கியும், 'சிவயநம' என மேலிருந்து கீழ்நோக்கியும், ஓம் என வட்டமிட்டும் முறையே 'ஆடும், சேர்க்கும், ஓங்கார' என்னும் உண்மை விளக்கத் திருவெண்பா ஒதிப் புகையொளி காட்டி வழிபடுக.

(அ. சி.) அமுதம் - தளிகை. (கூ)

982. எய்தி வழிப்படில் எய்தா தனவில்லை
எய்தி வழிப்படில் இந்திரன் செல்வமும்
எய்தி வழிப்படில் எண்சித்தி உண்டாகும்
எய்தி வழிப்படில் எய்திடும் முத்தியே.

(ப. இ.) மேல் ஒதப்பெற்ற பொருள்களெல்லாம் அன்பினால் தொகுத்துக்கொண்டு மெய்ம்மையாக வழிபாடு செய்யின் இவ்வுலகின் கண் எய்தவேண்டுவன அனைத்தும் எய்தும், மேலும் தேவவுலக வாழ்வும்

1. ஆளான. அப்பர், கூ. சுவ·க.

உண்டாகும். எண்வகையான சித்திகளும் கைகூடும். எளிதிற் கிடையாத வீடுபேறும் கிடைக்கும். வழிப்படில் என்பது செந்நெறிச் செல்வர்கள் சென்ற நெறிப்படியே சென்று வழிபடுதல் என்றுரும். (சு)

983. நண்ணும் பிறதார நீத்தார் அவித்தார்
மண்ணிய நைவேத் தியமனு சந்தான
நண்ணிய பஞ்சாங்க நண்ணுஞ் செபமென்னு
மன்னு மனபவ னத்தொடு வைதுமே.

(ப. இ.) ஐம்புலனும் அடக்கியவர்கள் என்று சிறப்பித்துச் சொல்லப் படுவார் பிறன்மனை நோக்காத பேராண்மையர். அஃதாவது அயலான் மனைவியை மறந்தும் கனவிலும் மனத்தினும் நினைந்தாத அருங்கற்புடைய ஆடவராவர் என்பதாம். செம்மையாக அமைக்கப்பட்ட இடைவிடா நினைப்போடு கூடிய படைப்பும், முழங்கை இரண்டு முழந்தாளிரண்டு, நெற்றி ஒன்று ஆக ஐந்துறுப்பும் நிலத்தே படும்படி புரியும் வணக்கமும், செபமும் வழிபாட்டுக்கு இன்றியமையாதனவாகும். அத்துடன் இடைவிடா நினைப்பாகிய தியானமும், அதற்குவேண்டும். உயிர்ப் படக்கமும் வேண்டும். மனம் - விடாநினைப்பு. பவனம் - உயிர்ப்பு. பிறன்மனை என்பதற்கு மனையை உடம்பாக்கி இன்னமோர் உடம்பெடுக்கும் பிறப்பு என்றலும் ஒன்று. தியானம் - உள்குதல்.

(அ. சீ.) அவித்தார்-ஐம்புலன்களை அடக்கியவர். மண்ணிய-நன்றாய்ச் சமைத்த. பஞ்சாங்கம்-ஐந்து அங்கங்கள் பூமியில் படும்படி கும்பிடுதல். மனபவனம் - மனமும் பிராணவாயுவும். (இ)

984. வேண்டார்கள் கன்மம் விமலனுக் காட்பட்டோர்
வேண்டார்கள் கன்ம மதிலிச்சை யற்றபேர்
வேண்டார்கள் கன்மம் மிகுசிவ யோகிகள்
வேண்டார்கள் கன்மம் மிகுதியோ ராய்ந்தன்பே.

(ப. இ.) சிவபெருமானுக்கு மீளா அடிமையானவர்கள் முனைப்பொடு செய்யும் இருவினைகளையும் வேண்டார். பயன் வேண்டிச் செய்யும் கன்மங்களையும் விரும்பார். சிவயோகமாகிய செறிவுநிலையிலுள்ளார் எவ்வினையும் விரும்பார். தலையன்பு வாய்ந்தவராகிய அறிவு நிலையிலுள்ளாரும் பணியே அன்றிப் பிறப்புக்கு வித்தாகிய வினைகளை விரும்பார். பின் இரண்டடியும் செறிவும் அறிவும் குறிப்பதால் முன்னிரண்டடியும் முறையே சீலமும் நோன்பும் குறிப்பனவாகக் கொள்க. (அ)

985. அறிவரு ஞானத் தெவரும் அறியார்
பொறிவழி தேடிப் புலம்புகின் றார்கள்
நெறிமனை யுள்ளே நிலைபெற நோக்கில்
எறிமணி யுள்ளே இருக்கலு மாமே.

(ம. இ.) அருட்கண்ணுல் நோக்கும் மெய்யுணர்வில்லார் சிவனை அறியவரும் ஞானவழியாலுணரார். நெறியல்லாநெறியாகிய ஐம்பொறி வழியாகச் சிவனைக் காணலாம் என்று தேடி இளைப்பர். முறையாகச் சிவனுக்கு நிலைபெற்ற எட்டாம் இடமாகிய உயிரின்கண் இடைவிடாது

அவனருளால் உணரின் ஒளி வீசுகின்ற திருவடியாகிய மாமணியினுள் நிலைத்திருத்தலுமாகும். இடம் எட்டு: ஐம்பூதம், ஞாயிறு, திங்கள் ஆருயிர் என்பன. (எ)

986. இருளும் வெளியும்போல் இரண்டாம் இதய
மருளறி யாமையும் மன்னு மறிவு
மருளிவை விட்டேறி யாமை மயங்கு
மருளுஞ் சிதைத்தோ ரவர்களா மன்றே.[1]

(ப. இ.) வெளியும் இருளும்போல் நெஞ்சமும் மயக்கந் தருவதாய அறியாமையும் உயிரிற் கலந்திருக்கும். ஆருயிரின் அறிவு அறியாமையை விட்டொழிக்கும் ஆற்றலுடையதன்று. அதனால் மயங்கும். திருவருள் துணையால் அறியாமையை அகற்றியவர் சிவ வழிபாட்டினராவர்.

(அ. சி.) இருளும் வெளி - இருளொடு கூடிய ஆகாயம். எறியாமை - நீங்காமை. (அ)

987. தானவ னுக அவனேதா னுயிட[2]
ஆன இரண்டில் அறிவன் சிவமாகப்
போனவ னன்பிது நாலா மரபுறத்
தானவ னுகுமோ [3]ராதித்த தேவரே.

(ப. இ.) ஆருயிர்கள் கட்டுநிலையில் முனைத்துநிற்கும்; அப்பொழுது உடனுய் நிற்கும் இறைவன் அவ்வுயிரின்வழி நிற்பன். ஆதலால் உயிர் அவனுகவே நிற்கின்றது. வீட்டுநிலையாகிய ஒட்டுநிலையில் திருவருள் முனைத்துநிற்கும்; அப்பொழுது உயிர் ஆண்டவன்வழி நிற்கும். அந்நிலையில் அவனே - ஆண்டவனே உயிரைத் தன்னுள்ளடக்கித் தானுக நிற்பன். ஆண்டவன் அவ்வுயிராகவே நிற்கு நிலை இஃதென்ப. இவ்விரு நிலையினுள்ளும் சிற்றறிவாகிய உயிர் சிவமாக விளங்கும் ஒட்டுநிலையே உயர்ந்ததாகும். அங்ஙனம் உயிர் சிவமாவதற்குப் பேரன்பாகிய காதல் வேண்டும். அக் காதலின் பயனுக எய்துவது தானுதல் என்று சொல்லப்பெறும் சாயுச்சியமாம். நெறிநான்கால் எய்தும் பயன் நான்கென்பர். அவை சிவனுலகிருத்தல், சிவன் அண்மையி லிருத்தல், சிவனுருப் பெறுதல், சிவனுதல் என்ப. தான் எனினும் சிவன் எனினும் ஒன்றே. அந்நிலையருளும் சிவனைப் பேரொளிப்பிழம்பென்னுந் தகைமைபற்றி ஆதித்த தேவர் என்பர். ஆதித்த தேவர் - சிவசூரியர்.

(அ. சி.) அறிவன் - சிவன். நாலாம் மரபு - சாயுச்சியம். (கூ)

988. ஓங்கார மூந்திக்கீழ் உற்றிடும் எந்நாளும்
நீங்கா வகாரமும் நீள்கண்டத் தாயிடும்
பாங்கார் நகாரம் பயில்நெற்றி யுற்றிடும்
வீங்காகும் விந்துவும் நாதமே லாகுமே.

---

1. நாமல்ல. சிவஞானபோதம், கஉ. உ-க.
2. அவனே. சிவஞானபோதம், க0.
3. (பாடம்) ராசித்த.

(ப. இ.) ஓங்காரமானது கொப்பூழின் கீழிடத்தாய மூலத்திடத்தாம். எஞ்ஞான்றும் சிவனேவிட்டு நீங்காது அச் சிவனே தானும் வனப்பாகிய திருவருள் எழுத்துவகரம். அது கழுத்தினிடத்ததாகும்.[1] ஆருயிர்களைப் பண்படுத்தும் நடப்பாகிய ஆதியருள் நகரம். அது நெற்றியினிடத்ததாகும். மிக்க பெருமையையுடைய ஒளியாகிய விந்து அதற்கும் மேலதாகும். ஓசையாகிய நாதம் அதற்கும் அப்பாலாகும். வீங்காகும். பெருமையுடையதாகும்.

(அ. சீ.) ஓங்காரம் உந்திக்கீழ்-மூலாதாரத்தில் பிரணவம். வகாரம் நீள்கண்டம் - கண்டத்தானத்தில் வ எழுத்து. பாங்கார் யகாரம் பயில் நெற்றி-புருவ மத்தியில் ய எழுத்து. (கo)

**989.** நமவது வாசன மான பசுவே
சிவமது சித்திச் சிவமாம் பதியே
நமவற வாதி நாடுவ தன்ருஞ்
சிவமாகு மாமோன ஞ் சேர்தல்செய் வீடே.

(ப. இ.) சிவக்கொழுந்தாகிய சிவலிங்கத்தின் இருக்கையாகிய ஆவுடையார், நம என்னும் எழுத்துக்களாகும். அவ்விருக்கை உயிரே. (உயிர் அடையாளம் ய) ஆவுடையார்க்கு மேலுள்ள தூண் ஒத்துக் காணும் ஒளிப்பகுதி சிவ என்னும் எழுத்துக்களாகும். இச் சிவமே வேண்டும் சித்திகளை அருள்வதாகிய இறையாகும். இறை - பதி. நம என்னும் எழுத்துக்களுக்குரிய உலகியல் நீங்குதலும் ஆதியாகிய நடப்பாற்றலை நாடுவதாகிய சிந்தித்தல் இன்றும் என்பது நமசிவய எனச் சிவம் பண்ணுவதின்று. சிவயநம எனக் கணிப்பது உண்டு. இதுவே முற்றப் பற்றறக் கழியும் வழியாகும். அதனல் பெறப்படுவது திருவடிப் பேறு. மாமோனம் - பெரிய விடுதலை.

(அ. சீ.) ஆசனம் - ஆவுடையார். (கக)

**990.** தெளிவரு நாளிற் சிவஅமு தூறும்
ஒளிவரு நாளில் ஓரேட்டில் உகளும்
ஒளிவரும் அப்பதத் தோரிரண் டாகில்
வெளிதரு நாதன் வெளியாய் இருந்தே.

(ப. இ.) திருவருள் துணையால் திரு அடியுணர்வாகிய தெளிவு வந்த காலத்துச் சிவ அமுதாகிய பேரின்பம் ஊறும். அப்பொழுது எட்டாகிய அகரத்தின்கண் ஆருயிர் ஒளி விளங்கும். அகர நிலையின்கண் இரண்டொலியுண்டானுல் அருள் வெளியில் திகழும் முழுமுதற் சிவன் வெளிப்படுவன். இரண்டொலி : யகரம். இஃது உயிரடையாளம். இதன்கண் அகர ஒலியும் யகர ஒலியும் உள்ளன. நாதன் - சிவபெருமான்.

(அ. சீ.) சிவ அமுது - சிவத்தின் இன்பம். எட்டில் உகளும் ஒளி - அகாரத்தில் விளங்கும் ஆன்மஒளி. (கஉ)

---

1. அண்டங் கடந்த. சு. கஎ - க.

# 4. நவகுண்டம்

**991.** நவகுண்ட மானவை நானுரை செய்யின்
நவகுண்டத் துள்ளெழு நற்றீபந் தானும்
நவகுண்டத் துள்ளெழு நன்மைகள் எல்லாம்
நவகுண்ட மானவை நானுரைப் பேனே.

(ப. இ.) அனல் ஓம்பும் குண்டங்கள் ஒன்பது. அதன் தன்மையைச் சொல்லுமிடத்து அதன்கண் சிவமாகிய பேரொளிப்பிழம்பு தோன்று தற்கும். எல்லா நன்மைகளும் அவ்வனல் ஓம்புதலால் உண்டாகும். அதன் விளக்கத்தை இனிக் கூறுவாம். நவம் - ஒன்பது. (க)

**992.** உரைத்திடுங் குண்டத்தின் உள்ளேமுக் காலும்
நகைத்தெழு நாற்கோண நன்மைகள் ஐந்தும்
பகைத்திடு முப்புரம் பாரங்கி யோடே
மிகைத்தெழு கண்டங்கள் மேலறி யோமே.

(ப. இ.) இவ் வனற்குண்டத்துள் மூன்று வரைகளாயுள்ள முக்கோணமும், அதைச்சூழ்ந்துள்ள நாற்கோணமும் அமைத்து அனல் ஓம்புக. அதனுல் விளையும் நன்மைகள் ஐந்து. அவை, படைத்தல், காத்தல் துடைத்தல், மறைத்தல், அருளல் என்ப. மேலும் அவ்வனலான் பருமை, நுண்மை, முதன்மை என்னும் மும்மையுடல்களும் அகலும். மும்மையுடல்கள்: பூதம் ஐந்து, அறிகருவி ஐந்து. செய்கருவி ஐந்து. இப் பதினேந்தாலாயது பரியவுடம்பு. பூதமுதல் (தன் மாத்திரை) ஐந்து, மனம், எழுச்சி, இறுப்பு ஆகிய உட்கருவி மூன்றும் கூடிய எட்டும் நுண்ணுடம்பு. அவற்றோடு குணம் அல்லது மூலப் பகுதி ஒன்றுங்கூடி இருபத்துநான்கு மெய்யும் உடன் மெய்யாகும். பூதமொன்று, பூதமுதல் ஒன்று, அறிகருவி ஒன்று, செய்கருவி ஒன்று, அகக்கலன் ஒன்று, குணம் ஒன்று, மூலப் பகுதி ஒன்று, கலாதி ஒன்று ஆகிய எண்வகையாலாகியது முதன்மையுடல். முதன்மை எனினும் முதல்நிலை எனினும், காரணம் எனினும் ஒன்றே. மூவகையுடற் பற்றுக்கள் அகலும். அகல மிகுதியும் துன்புறுத்தும் வினைக் கட்டுக்களும் அறும். அறவே அவற்றை யறியாது சிவமே அறிந்திருப்பர். முக்காலும் என்பதை இறப்பு, நிகழ்வு எதிர்வு, எனக் கூறுதலும் உண்டு.

(அ. சி.) முக்கால் - முக்கோணம். நன்மைகள் ஐந்து - ஆக்கலாதி ஐந்தொழில்கள். முப்புரம் - முச் சரீரம் (தூலம், சூக்குமம், காரணம்).

**993.** மேலெறிந் துள்ளே வெளிசெய்த வப்பொருள்
காலறிந் துள்ளே கருத்துற்ற செஞ்சுடர்
பாரறிந் தண்டஞ் சிறகற நின்றது
நானறிந் துள்ளே நாடிக்கொண் டேனே.

(ப. இ.) மேனிலை அறிந்து - ஆருயிர்க்குள்ளேயே வெளி செய்தருளிய சிவனை, உயிர்ப்பாகிய மூச்சுப் பழக்கத்தால் உள்ளேயே நாடுக. அப்பொழுது சிவமாகிய செஞ்சுடர் விளங்கும். தாங்கும் நிலக்களங்களை

ஆராய்ந்தால் பரவெளி என்னும் ஆகாயம் ஏதொரு தாங்குதலுமின்றி நின்றது. இவ் வுண்மைகளை அருளால் நானறிந்து அகத்துள் நாடிக் கொண்டேன்.

(அ. சி.) கால் - பிராணவாயு. அண்டம் - ஆகாயம். சிறகது - ஆதாரம் இன்றி. (கூ)

**994.** கொண்டஇக் குண்டத்தின் உள்ளெழு சோதியாய்
அண்டங்கள் ஈரேழு மாக்கி அழிக்கலாம்
பண்டையுள் வேதம் பரந்த பரப்பெலாம்
இன்றுசொல் நூலாய் எடுத்துரைத் தேனே.

(ப. இ.) இக் குண்டத்தினுள் அனலோம்பும் அந்தணர், அவ்வாற்றலால், உள்ளெழும் ஒளியாய்த் திகழ்வர். அத் தன்மையால் பதினான்கென்னும் எண்ணுள் அடங்கிய உலகங்களெல்லாவற்றையும் ஆக்கி நிறுத்தி அழிக்கும் வலிமை உண்டாகும். விரிந்த அண்டங்கள் எங்கணும் விரிந்து நிலவியுள்ள பண்டைச் செந்தமிழ் அறிவுநூல்களின் பொருளெல்லாம் திருவருள் துணையால் இந் நாள் இந்நூலாக எடுத்துரைத்தேன். பரந்த பரப்பெலாம் என்பதனைப் பரப்பெலாம் பரந்த என மாறுக. நூல்- திருமந்திரம்.

(அ. சி.) அண்டங்கள் ஈரேழு - 14 உலகங்கள். பண்டையுள - முன்னிருந்து இறந்துபோன. வேதம் பரந்த பரப்பு - வேதங்களிற் கண்ட பொருள்களை விளக்கிநின்ற ஆகமங்கள் கூறிய பொருள்களை எல்லாம். இன்றுசொல் நூல் - தமிழ் மூவாயிரம். (ச)

**995.** எடுத்தவக் குண்டத் திடம்பதி னெறிற்
பதித்த கலைகளும் பாலித்து நிற்குங்
கதித்தனல் உள்ளெழக் கண்டுகொள் வார்க்கே
கோதித்தெழும் வல்வினை கூடகி லாவே.

(ப. இ.) முறையான் அமைக்கப்பட்ட அனற்குண்டத்துள் பதினாறிதழ்களில் உரிய எழுத்துக்கள் வரையப்படும். கொழுந்துவிட்டெரியும் அச் சுடரினைக் காணும் பேற்றினர்பால், மிக்க கொதிப்புடன் தோன்றும் தீவினைகள் சேரமாட்டா.

(அ. சி.) பதினெறு - பதினாறு இதழ். கலைகள் - அக்கரங்கள். (இ)

**996.** கூடமுக் கூடத்தின் உள்ளெழு குண்டத்துள்
ஆடிய ஐந்தும் அகம்புறம் பாய்நிற்கும்
பாடிய பன்னீ ராசியும் அங்கெழ
நாடிக்கொள் வார்கட்கு நற்சுடர் தானே.

(ப. இ.) முந்திச் சந்திப்புக்களோடு கூடிய முக்கோணத்துள் கூத்தப் பெருமான் ஆற்றியருளும் ஐந்தொழிலும் அகம்புறமாய் நிற்கும். சிறப்பித்துச் சொல்லப்படும் பன்னிரண்டு கலையுள்ள உயிர்ப்பும் அங்குத் தோன்றும். அந் நிலையினை எண்ணிப் பார்ப்பார்க்குச் சிவவொளி தோன்றும்.

(அ. சி.) முக்கூடம் - புருவமத்தி. ஆடிய ஐந்து - ஐந்தொழில்கள். பன்னீரிராசி - தேகத்தின்கண் உள்ள பன்னிரண்டு இராசித் தானங்கள். (இது நேபாள சுவாமிகள் வரைந்து அளித்த படத்தை நோக்க வெளியாம்). (சு)

997. நற்சுட ராகுஞ் சிரமுக வட்டமாங்
கைச்சுட ராகுங் கருத்துற்ற கைகளிற்
பைச்சுடர் மேனி பதைப்புற் றிலிங்கமும்
கூற்சுட ராயெழு நல்லதென் ருளே.

(ப. இ.) நல்ல அனற்சுடர் உச்சியும் முகமும் வட்டமாக அமைந் திருக்கும். அச் சுடரே கைமேல் பயன்தருதற்குரிய ஒன்றாகும். அதனை இடையறாது கருதுவார்க்கு; அழகிய உடம்பு அசைவற்று இருக்கும். அவ்வாறிருப்பார்க்குச் சிவலிங்கம் ஒளிப்பிழம்பாக விளங்கும். இதுவே நன்னெறி யென்றருளினள்.

(அ. சி.) சிரமுகவட்டம் - புருவமத்தி (இதுதான் சிற்றம்பலம்). கருத்துற்ற கை - தியானிப்பவர் கையில். (சு)

998. கல்லதென் ருளே நமக்குற்ற நாயகஞ்
சொல்லதென் ருளே சுடர்முடிப் பாதமா
மெல்லநின் ருகூ வினவகில் லாதவர்
கல்லதன் ருகூயுங் கற்றும்வின் ஞளே.

(ப. இ.) நம் உயிருக்கு உயிராக விளங்கும் திருவருள் அம்மை அனலோம்பும் முறைமை நல்லதென்றருளினள்...திருவைந்தெழுத்துமே அருமறையாகிய உபதேசம் என்றருளினள். அவளே திருவடி நிலையாக மென்மையுற்று நின்றனள். அவ்வம்மையின் உண்மைத் தன்மையை உணராதவர் கலைகளையும் அதற்கு அடியாகிய மறைகளையும் உணர்ந்தவ ராயினும் 'கல்லார் நெஞ்சில் நில்லான் ஈசன்' ஆதலால் அம்மையும் வேருகவே நிற்பள். நாயகம் - அம்மை. சொல் - உபதேசம். கல் - கலை. தாள் - அடியான மறை. வின்னுள் - வேருனவள்.

(அ. சி.) நாயகம் - தேவி. மெல்ல நின்ருள் - திருவருட் சத்தி. (அ)

999. வின்ன விளம்பிறை மேவிய குண்டத்துச்
சொன்னல் இரண்டுஞ் சுடர்நாகந் திக்கெங்கும்
பன்னலு நாகம் பரந்த பரஞ்சுடர்
என்னகத் துள்ளே இடங்கொண்ட வாறே.

(ப. இ.) ஒளியையே நாவாகவுடைய இளம்பிறைபோல் அமையப் பெற்ற அனற்குண்டத்துச் சிறப்பித்துச் சொல்லப்படும் சிவனும் சிவையும் எல்லாத் திசைகளிலும் சுடர்விட்டு விளங்குவர். முதுகந்தண்டாகிய மேருவினிடத்தில் அச் சிவச்சுடர் பல்வகையாகத் தோன்றும். அச் சுடர் ஆருயிரின் அகத்து நிலைகொண்டு விளங்கும். வில் - ஒளி. இரண்டும் - சிவனும் சிவையும். சிவை - சத்தி. நாகம் - மேரு. (சு)

**1000.** இடங்கொண்ட பாதம் எழிற்சுட ரேக
நடங்கொண்ட பாதங்கள் [1]நண்ணீ ரதற்குச்
சகங்கொண்ட கையிரண் டாறுந் தழைப்ப
முகங்கொண்ட செஞ்சுடர் முக்கண னுர்க்கே.

(ப. இ.) அனற்குண்டத்தை இடமாகக்கொண்ட அழகிய திருவடிச் சுடர் ஒப்பில்லாத என்றும் மாறுத திருக்கூத்தியற்றும் தன்மையதாகும். அத் திருவடிகளே அவ்வனலுக்கு உயிர்த் தன்மையாகும். உலகெலாம் விளங்கும் பன்னிரண்டு கலைகளும் நாளும் பெருகத் திருமுகம் கொண்டருவிய செஞ்சுடர் முக்கணப்பராகும்.

(அ. சி.) கை - கலை. இரண்டு ஆறு - பன்னிரண்டு. செஞ்சுடர் - சூரியன். (கo)

**1001.** முக்கணன் முனே முழுச்சுட ராயவன்
அக்கணன் முனே அகிலமும் உண்டவன்
திக்கண னுகித் திகையெட்டுங் கண்டவன்
எக்கணன் முனுக்கும் எந்தை பிரானே.[2]

(ப. இ.) இயற்கைப் பேரன்பு அறிவு ஆற்றல்களுடைய சிவன் முக்கண்ணன் என்று அழைக்கப்படுவான். முக்கண் - திங்கள் ஞாயிறு தீ. திங்கள் என்பது அன்பாகிய இடக்கண். ஞாயிறென்பது ஆற்றலாகிய வலக்கண். தீ என்பது அறிவாகிய நெற்றிக்கண். அம் முக்கண்ணன் எப்பொருட்கும் அந்தத்தைச் செய்பவன், அதனால் அகிலமும் உண்டவன் எனப்படுவன். அவனே எட்டுத்திசைகளிலும் நீக்கமற நிறைந்து நிற்பவன். இஃது 'எண்தோள் முக்கண் எம்மானே' என்னும் திருமுறையான் உணரலாம். உலகோர் கண்ணன் என்று எவனைக் கூறுகின்றனரோ அவனுக்கும் இறைவனுவன். அவனே எந்தை என்க. தான்: அசை.

(அ. சி.) அகிலமும் உண்டவன் - பெரு ஊழியில் உலகங்களை எல்லாம் தன்னிடம் ஒடுக்கிக்கொண்டவன். திக்கண...கண்டவன் - எட்டுத் திசைகளிலும் வியாபித்தவன். எக்கணன்முனுக்கு - திருமாலுக்கு. (கக)

**1002.** எந்தை பிரானுக் கிருமூன்று வட்டமாய்த்
தந்தைதன் முன்னே சண்முகந் தோன்றலாற்
கந்தன் சுவாமி கலந்தங் கிருத்தலான்
மைந்தன் இவனென்று மாட்டிக்கோள் ளீரே.[3]

(ப. இ.) எம் தந்தையாகிய கடவுளுக்குச் சுடரே திருவுரு. அவ்வுரு ஆறுவட்டமாகத் திகழ்ந்து நின்றது, அவ் வட்டத்தினின்றும் அறுமுகக் கடவுள் தோன்றினன். அவனைக் கந்தக் கடவுள் என்றும் வழங்குவர். கந்தக் கடவுளும் சிவபெருமானும் பிரிப்பின்றிக் கலந்து விளங்கு

1. (பாடம்) நன்னீ.
2. அவனவள். சிவஞானபோதம், க,
3. ஆறுகொ. அப்பர், சு. கஅ-சு.

இன்றனர்: அதனால் தந்தையும் மைந்தனும் ஒருபுடை பொப்பு [1]முறை சாற்றுவர். கந்தன்சுவாமி - கந்தக்கடவுள். (கஉ)

**1003.** மாட்டிய குண்டத்தின் உள்ளெழு வேதத்துள்
ஆட்டிய காலொன்றும் இரண்டும் அலர்ந்திடும்
வாட்டிய கையிரண் டொன்று பதைத்தெழ
நாட்டுஞ் சுரரிவர் நல்லொளி தானே.

(ப. இ.) ஓமகுண்டத்தில் ஓமம் செய்யுங்கால் ஒதப்பெறும் ஓமொழி மந்திரத்தின் அகர, உகர, மகரமாகிய மூன்றும் வெளிப்பட்டிலங்கும். தீவினையை வாட்டும் தன்மை வாய்ந்த ஞாயிறு திங்கள் தீ ஆகிய முச்சுடரும் அத் தீவினைகள் பதைத்தெழும்படி நாட்டப் பெறும். அங்ஙனம் நாட்டப் பெறுவார் ஒளியுருவினராவர். சுரர் - ஒளியுருவினர். இவர்க் குண்டாம் ஒளி திருவருள் ஒளியே. வேதம் என்னும் தமிழ்ச்சொல் வித்தம் என்னும் அடியாகத் தோன்றுவது. வித்தம்: வைத்தியம், வைதிகம், வேதம் என வழங்குவதாயிற்று.

(அ. சி.) காலொன்றும் இரண்டும் - பிரணவபாதங்கள் மூன்றும். கை இரண்டு ஒன்று - சூரியன் சந்திரன் அக்கினி மண்டலங்கள் மூன்று. (கக)

**1004.** நல்லொளி யாக நடந்துல கெங்கும்
கல்லொளி யாகக் கலந்துள் இருந்திடும்
சொல்லொளி யாகத் தொடர்ந்த உயிர்க்கெலாங்
கல்லொளி கண்ணுளு மாகிநின் [2]ருளே.

(ப. இ.) திருவருள் ஒளி உலகமெங்கும் நடந்து நன்மையருளும் உயிர்க்குயிராய் உணர்வொளியாகக் கலந்து உள்ளுறையும் ஆசான் அருளிய குருமொழி கொண்டு ஒழுகுவார்க்கு நிலைபெற்ற ஒளியாய்க் கண்ணுள்ளும் நிற்கும். அதுவே திருவருள் என்க. சொல்லொளி - குருமொழி. கல்லொளி - உணர்வொளி.

(அ. சி.) கல்லொளி - நிலைபெற்ற ஒளி. (கச)

**1005.** நின்றஇக் குண்டம் நிலையாறு கோணமாய்
பண்டையில் வட்டம் பதைத்தெழு மாறுறுங்
கொண்டஇத் தத்துவம் உள்ளே கலந்தெழ
விண்ணுளும் என்ன எடுக்கலு மாமே.

(ப. இ.) ஓம குண்டம் அறுகோணமாய் அமைக்கப்படும். இவ் வமைப்பு மூலாதாரம் முதலாகச் சொல்லப்படும் ஆறு நிலைக்களங்களையும் குறிக்கும். ஒலியுலகுக்கு முன் முதலாய வட்டம் ஓ மொழி என்க. தொடர்ந்து தோன்றுவனவும் சேர்ந்து தத்துவங்கள் முப்பத்தாறெனிப. இவைகள் கலந்தெழப் பெருவெளியிலும் உள்ளதாம்படி காண்டலு மாகும். ஒலியுலகு - சத்தப் பிரபஞ்சம். (கஞ)

---

1. முகம்விழி. தணிகைப் புராணம், சிவரி. கஅக.
2. (பாடம்) ருனே.

**1006.** எடுக்கின்ற பாதங்கள் மூன்ற தெழுத்தைக்
கடுத்த முகம்இரண் டாறுகண் ணுகப்
படித்தெண் ணுநாவெழு கோம்பொரு நாலும்
அடுத்தெழு கண்ணுன தந்தமி லாற்கே.

(ப. இ.) சிவ என்னும் மந்திரமொழியால் ஆருயிர்களை எடுத்தருளும் வகைகள் மூன்று. அவை, தன்மை முன்னிலை படர்க்கை என்பன. தன்மையில் அருளுதல் ஒருமலமுடையார்க்கு. முன்னிலையில் அருளுதல் இருமலமுடையார்க்கு. படர்க்கையில் அருளுதல் மும்மலம் உடையார்க்கு. சிவ என்னும் எழுத்திரண்டினையும் ஒத்துத் துலங்கும் அம்மையப்பர் திருமுகங்கள் இரண்டு. ஒவ்வொரு முகத்திலும் கண்கள் மூன்று. ஆகக் கண்கள் ஆறு. மெய்யுணர்வினர் நாவின்கண் இடையருது படிந்தெழு கொழுகொம்பாகவுள்ளது 'சிவசிவ' என்னும் நாலெழுத்தாகும். முடிவு பேறில்லாத முழுமுதற் சிவனை அடையும் திருவடிப்பேற்றினர்க்கு அதுவே மெய்யுணர்வுக் கண்ணுகும்.

(அ. சி.) கடுத்த - ஒத்த. முகம் இரண்டு - சத்தி, சிவங்களின் முகங்கள் இரண்டு. படித்தெண்ணும் - இப்படியாகக் கருதுக. (கசு)

**1007.** அந்தமில் லானுக் ககலிடந் தானில்லை
அந்தமில் லாஇன அளப்பவர் தாமில்லை
அந்தமில் லானுக் கடுத்தசொற் றுணில்லை
அந்தமில் லாஇன அறிந்துகொள் பத்தே.

(ப. இ.) முடிவுபேறில்லாத சிவனைப் போன்று ஆவியும் முடிவு பேறில்லாததே. அவ் ஆவிக்கு உரியதாகக் கொள்ளப்படும் இடம் ஒன்றும் இல்லை. அவ் ஆவிகள் அளவிறந்தன. அவ் ஆவிகளைத் தனி முறையில் குறிக்கும் சொல் ஏதும் இல்லை. சார்பு முறையில் யகரம் என்ப ; யகரம் என்பது யாப்பு என்றுகும், யாப்பு - கட்டு. இஃது உடலுடனும் அருளுடனும் பிணிப்புறும் தன்மையாகும். பத்து என்பது தமிழ் எண்ணுல் எழுதினுல் யகரமாகும்.

(அ. சி.) அந்தமில்லான் - ஆன்மா. அடுத்த சொல் - குறித்த சொல். பத்து - ய. (கள)

**1008.** பத்திட்டங் கெட்டிட் டாறிட்டு நாலிட்டு
மட்டிட்ட குண்டம் மலர்ந்தெழு தாமரை
கட்டிட்டு நின்று கலந்தமெய் யாகமும்
பட்டிட்டு நின்றது பார்ப்பதி பாலே.

(ப. இ.) பத்து, எட்டு, ஆறு, நாலு முதலிய இதழ்களையுடைய தாழரைபோல் அமைக்கப்படுவது மூலம் முதலிய நிலைகள். அதற்குமேல் இமகுண்டத்து மலர்ந்தெழு தாமரை கட்டுற்று நின்ற கலந்த உடம்பென்ப: இவ் வுடம்பகத்து நின்ற உயிர் திருவருளாகிய பார்ப்பதியைப் பொருந்தியுள்ள தென்க. எட்டு - அகர மெனவும் கூறுதலுமுண்டு ; இமகுண்டத்தின் மேல் விரிந்துள்ள தீமண்டலம் எனவும் கூறுப.

(அ. சி.) பத்து, எட்டு, ஆறு, நாலு - ஆதார இதழ்கள். (கஅ)

**1009.** பார்ப்பதி பாகன் பரந்தகை காலிந்து
காற்பதி பத்து மூகம்பத்துக் கண்களும்
பூப்பதி பாதம் இரண்டு சுடர்முடி
நாற்பது சோத்திரம் நல்லிரு பத்தஞ்சே.

(ப. இ.) அம்மையப்பராய் விளங்கும் சிவபெருமான் ஐந்து திரு முகங்களுடன் விளங்குங்கால் அவனை விட்டுவிலகாத அம்மையும் ஐந்து திருமுகங்களுடன் விளங்குவள். இவ் இருவர்க்கும் திருவுடம்பு ஒருடம் பாய்த் திகழும். அப்பொழுது முகம் பத்து, கண் முப்பது, செவி இருபது. கை இருபது, திருமுடி பத்து, திருவடி இரண்டு என்னும் (கூட) எண்களை இத் திருப்பாட்டுக் குறிக்கின்றது. இறுதியிலுள்ள இருபத் தஞ்சே என்பதை இருபது தஞ்சே எனப் பிரித்தல் வேண்டும். ஆருயிர் கட்கு இத் திருவுருவே தஞ்ச மென்க. தஞ்சே - தஞ்சம். இருபது - இருவகை ஐமுகம்.

(அ. சி.) பார்ப்பதி - மனோன்மனி. பாகன் - சதாசிவன். (ககு)

**1010.** அஞ்சிட்ட கோலம் அளப்பன ஐயைந்தும்
மஞ்சிட்ட குண்ட மலர்ந்தங் கிருத்தலால்
பஞ்சிட்ட சோதி பரந்த பரஞ்சுடர்
கொஞ்சிட்ட வன்னியைக் கூடுதல் முத்தியே.

(ப. இ.) ஐந்து திருமுகங்களோடு கூடிய அருளோன் நிலையாகிய சதாசிவத் திருமேனியும், அதன் விரிவாகிய இருபத்தைந்து என்னும் ஏனைச் சிவத் திருவுருவங்களும், அழகு மிக்கதாகிய ஓமகுண்டங்களும் மலர்ந்துள்ளன. அதன்கண் எழும்பரஞ்சுடர் செம்பஞ்சு போலும் ஒளி மிக்கதாகிய பேரொளிப் பிழம்பாகும். அத்தகைய அருமையான ஒளிப் பிழம்பினைக் கூடுவதே வீடுபேறாகும்.

(அ. சி.) அஞ்சிட்ட கோலம் - சதாசிவ உருவம். ஐயைந்து - இருபத்தைந்து ஈச உருவங்கள். கொஞ்சிட்ட - அருமையான. வன்னி - சோதி. (உ0)

**1011.** மூத்திநற் சோதி முழுச்சுட ராயவன்
கற்றற்று நின்றூர் கருத்துள் இருந்திடும்
பற்றற நாடிப் பரந்தொளி யூடுபோய்ச்
செற்றற் றிருந்தவர் சேர்ந்திருந் தாரே.

(ப. இ.) வீடுபேற்றை அருள்பவனும், என்றும் ஒருபடித்தாய பேரொளிப் பிழம்பாயுள்ளவனுமாய சிவன் ஐயந்திரிபறச் செந்தமிழ் திருமுறையும் சித்தாந்தமும் ஓதியுணர்ந்து ஒழுகும் மெய்யடியார் உள்ளத் துள் மிக்கு விளங்குவன். உற்ற பற்றறும் வழிவகைகள் யாதென்று எண்ணி, அதன்வழி ஒழுகுதல் வேண்டும். அவ் வழியாவது செய்யுஞ் செயலெல்லாம் சிவன் செயல் என்னும் உண்மை கண்டு நடத்தல். அது வழி நடப்பார் வெளிச்சத்தின் துணையாக நடக்கின்றோம் என்று எண்ணுவதை யொக்கும். இறைவனை மறவாது காமம் முதலிய குற்றங் கடிந்திருந்தவர் அவன் திருவடியிற் கலந்து இன்புறுவர்.

(அ. சி.) முத்தன் - முத்தியைப் பயப்பவன். கற்று அற்று நின்ஞர்-கலைகள் அனைத்தும் கற்று, சந்தேக விபரீதம் அற்று உணர்ந்து அடங்கி நின்ஞர். செற்று - சினம். (உக)

1012. சேர்ந்த கலையஞ்சுஞ் சேருமிக் குண்டமும்
ஆர்ந்த திசைகளும் அங்கே அமர்ந்திடும்
பாய்ந்தஐம் பூதமும் பார்க்கின்ற வண்ணியைக்
காய்ந்தவர் என்றுங் கலந்தவர் தாமே.

(ப. இ.) நீக்கல், நிலைப்பித்தல், நுகர்வித்தல், அமைதியாக்கல், அப்பாலாக்கல் என்று சொல்லப்படும் ஐங்கலையும் சேர்ந்தது ஆகும் ஓமகுண்டம். ஐங்கலை என்பது ஐவகைத் திருவருளாற்றல்கள். நிறைந்த திசை விளக்கமும் அங்கே காணப்பெறும். பரந்த நிலமுதலிய ஐம்பூத வுண்மையும் அங்கே புலனுகும். இவற்றைத் திருநோக்கம் செய்வது செஞ்சுடர்ச் சிவபெருமான். உலகவுண்மையுணர்ந்து பற்றற்றவர் அச் சிவபெருமான் திருவடியிற் கலந்து இன்புறுவர்.

(அ சி.) பாய்ந்த - பரந்த. காய்ந்தவர் - உலகத்தை வெறுத்தவர். (உட)

1013. மெய்கண்ட மாம்விரி நீருல கேழையும்
உய்கண்டஞ் செய்த ஒருவனைச் சேருமின்
செய்கண்ட ஞானந் திருந்திய தேவர்கள்
பொய்கண்டம் இல்லாப் பொருள்கலந் தாரே.

(ப. இ.) புலனும்படி வரையறை செய்யப்பட்ட கடலாற் சூழப்பட்ட உலகங்கள் ஏழு. அவ் வேழையும் உய்யுமாறு வரையறை செய்த ஒப்பில்லா முழுமுதலைச் சேருங்கள். வரையறை செய்யப்பெற்ற அறிவினு லுணர்வார் தேவரே யாவர். அவர்கள் நிலையில்லாததும் எல்லைப் படுத்தப்பட்டது இல்லாததுமாகிய மெய்ப்பொருளாம் சிவத்துடன் கலந்திருப்பர்.

(அ. சி.) பொய்கண்டம் இல்லா - அகத்தும் கண்டமும் இல்லா, அஃதாவது சத்தாயும் எங்கும் வியாபித்தும் உள்ள. (உக)

1014. கலந்திரு பாதம் இருகர மாகும்
மலர்ந்திரு குண்ட மகாரத்தோர் மூக்கு
மலர்ந்தெழு செம்முக மற்றைக்கண் நெற்றி
உணர்ந்திரு குஞ்சியங் குத்தம லுர்க்கே.

(ப. இ.) ஓமகுண்டத்து விளங்கும் இறைவன் திருவுருவினை வருமாறு கருதுதல் வேண்டும். செம்மை நிறம் பொருந்திய திருமுகமும், குழிந்த குங்கும நிறமாகிய மூக்கும், நெற்றிக் கண்ணோடு கூடிய முக்கண்ணும், நீண்டகரிய தலைமயிரும், இரண்டு திருக்கைகளும், இரண்டு திருவடிகளும் உடைய ஒரு பெரும் பொருளாகக் கருதுக. மகாரம் - மகரம்: குங்கும நிறம்.

(அ. சி.) இம் மந்திரம் தவகுண்டநாதன் உருவத்தியானம் கூறுகின்றது. (உச)

1015. உத்தமன் சோதி உளனொரு பாலனுய்
மத்திம னாகி மலர்ந்தங் கிருந்திடும்
பச்சிம திக்கும் பரந்து குழிந்தன
சத்திமா னாகத் தழைத்த கோடியே.

(ப. இ.) பெரியோனாகிய சிவபெருமான் பேரொளியாயிருப்பான். அவன் கட்டிளைஞனும், காளையாய், விளங்கித்தோன்றுவன். மேற்குத் திக்கிலும் பரந்து குழிந்த விடத்துத் திருவருள் உருவாய்த் திகழ்வன். அச் சிவனுக்குத் திருவுருவாய் அம்மையும் அமைவள். பாலன்-இளைஞன். மத்திமன் - காளை. சத்திமான் - திருவருள் உருவாக - உடையவன். கோடி - திருவருளாகிய அம்மை.

(அ. சி.) மத்திமன் - குண்டத்தின் நடு. பச்சிமம் - மேற்கு. (உடு)

1016. கோடியாறு சென்று குலாவிய குண்டம்
அடியிரு கோணமாய் அந்தமும் ஒக்கும்
படியே மூலகும் பரந்த சுடரை
மடியாது கண்டவர் மாதன மாமே.

(ப. இ.) ஓமகுண்டத்தின்கண் வரையப்பட்ட கோட்டின் வழியே சென்று விளங்கும் அடிப்பகுதியில் இருகோணம் முதலும் முடிவும் ஒத்துள்ள பான்மையாக வரைக. முறையாக ஏழுலகும் நிறைந்திருக்கும் பேரொளிப் பிழம்பாகிய சிவனைச் சோர்வறுது அகக்கண் கொண்டு நோக்குவோர் செல்வன் கழலேத்தும் செல்வம் எய்தியவராவர். கோடி-கோடு. படி - முறைமை. மாதனம் - திருவடிச் செல்வம். (உசு)

1017. மாதன மாக வளர்கின்ற வன்னியைச்
சாதன மாகச் சமைந்த குருவென்று
போதன மாகப் பொருந்த உலகாளும்
பாதன மாகப் பரிந்தது பார்த்தே.

(ப. இ.) இறவாப் பெருஞ் செல்வமாக விளங்கும் ஓமத் தீயினைப் பயிற்சி முறையாகச் சமைந்த அறிவிப்பு முறையென்று கொள்ள உல கெலாம் ஆளும் சிவபெருமான் பேரருளோடு ஆழ்ந்து நோக்கியருள்வன். போதனம் - அறிவிப்பு. பார்த்துப் பரிந்தது எனக் கூட்டுக.

(அ. சி.) வன்னி - நவகுண்ட அக்கினி. பாதனமாக - ஆழ்ந்து. (உஎ)

1018. பார்த்திடம் எங்கும் பரந்தெழு சோதியை
ஆத்தம தாகவே யாய்ந்தறி வாரில்லை
காத்துட லுள்ளே கருதி இருந்தவர்
மூத்துடல் கோடி யுகங்கண்ட வாறே.

(ப. இ.) எல்லா இடங்களிலும் நிறைந்து விளங்குகின்ற பேரொளியை நமக்கு எஞ்ஞான்றுமுள்ள திருவருள் துணை என்று அறிவாரிலர்.

அப் பேரொளியினை ஓமகுண்டத்து அவியாது காத்து அதன் வழியாகச் சிவபெருமானை எண்ணியிருந்தவர் மெய்யுணர்வு பழுத்து உடல்கெடாது கோடிக்கணக்கான ஊழிகள் கண்டு வாழ்வர். ஆத்தம்-துணை. மூத்து - பழுத்து. உகம் - ஊழி.

(அ. சி.) ஆத்தமதாக - உபகாரம் உள்ளதாக. காத்து-நவகுண்ட அக்கினியைக் காப்பாற்றி. பூசித்து. (உஅ)

1019. உகங்கண்ட ஒன்பது குண்டமும் ஒக்க
அகங்கண்ட யோகியுள் நாடி எழுப்பும்
பயங்கண்டு கொண்டஇப் பாய்கரு வோப்பச்
சகங்கண்டு கொண்டது சாதன மாமே.[1]

(ப. இ.) தொன்மை தொட்டுப் போற்றிவருகின்ற ஒன்பது திருவருள் ஆற்றலைக் குறிக்கும் ஒன்பது (நவசக்தி) ஓமகுண்டமும் அகத்துவத்தாராகிய யோகிகள் அகத்தே வளர்த்துப் பயிலுவர். கருவுக்கு அஞ்சி வாழும் அவர்களின் பிறப்பு நீங்குவது ஒப்ப இவ்வுலகப் பிணிப்பும் நீங்கும்; ஆங்ஙனம் நீங்க இவ் வோமப் பயிற்சி துணையாகும்.

(அ. சி.) உகங் கண்ட-பழமையான. (உக)

1020. சாதனை நாலு தழல்மூன்று வில்வயம்
வேதனை வட்டம் விளையாறு பூநிலை
போதனை போதைஞ்சு போற்கய வாரண
நாதனை நாடு நவகோடி தானே.[2]

(ப. இ.) செந்நெறிச் செல்வர்கள் பயிலும் நிலை சீலம், நோன்பு, செறிவு, அறிவு என்னும் நான்காகும். ஞாயிறு திங்கள் தீ என்னும் மூன்றும் தழல் வண்ணன் முக்கண்ணையும் குறிக்கும். இம் மூன்றன் அடையாளம் முறையே வட்டம், பிறை, முக்கோணம் என்ப. அத்தழல் அழகிய வட்டக் குண்டத்தின்கண் நாற்புறமும் வீசும் ஒளித்தன்மை வாய்ந்தது. மேலும் அகத்தே விளையும் ஆறு நிலைக்களத்தைக் கொண்டது. மெய்யுணர்வுப் போதனையுமாகும். ஐம்பூதங்களுக்குச் சொல்லப்படும் ஐந்து பொழுதுமாகும். பொன்வண்ணமான பெரிய ஐராவணமென்னும் யானைக்குரிய முதல்வன் சிவபெருமான். அவனை நாடுமவர் பல ஊழிகள் பயன்பெற்றுய்வர். சாதனை - பயில்வு. வேதன் – ஈண்டு நான்கு என்னும் எண்ணில் வந்தது. ஐ - அழகு. கயவாரணம் யானை எனக்கொண்டு அதன் முகம்போன்ற மூத்த பிள்ளையார் என்றலும் ஒன்று. ஐராவணம்-ஈராயிரம் கொம்புகளையுடைய வெள்ளையானை. இது சிவபெருமானுக்குரியது. பொன் வண்ணம் - சிறந்த வண்ணம்.

(அ. சி.) தழன்மூன்று - கொடிநிலை, கந்தழி, வள்ளி. ஆறு பூநிலை-ஆறு ஆதாரங்கள். போதஞ்சு பொற்கயம் - ஐம்பூதங்கள். வாரண நாதன்-விநாயகன். (கo)

---

1. நல்லார். திருமந்திரம், 346.
2. உயிரா. அப்பர், சு. உடு - க.

# 5. சத்திபேதம் – திரிபுரை சக்கரம்

**1021.** மாமாயை மாயை வயிந்தவம் வைகரி
ஓமாயை உள்ளோளி ஓராறு கோடியில்
தாமான மந்திரஞ் சத்திதன் மூர்த்திகள்
ஆமா யலவாந் திரிபுரை யாங்கே.[1]

(ப. இ.) காரிய உலகு உடல் பொருள்களுக்குக் காரணமாகிய மாமாயையும், அக் காரியமாயையும், ஒளியாகிய வைந்தவமும், செவி ஓசையும், ஓமொழியும், அதன் உள் ஒளியாகிய எழுத்துக்களும், செருக்கு, சினம், சிறுமை, இவறல், மாண்பிறந்த மானம், மாணவுவகை என்னும் அறுவகைக்கு உடனுகும் ஆறுகோடி மாயையின் ஆற்றல்களும் தாமே இயங்கும் தன்மையவல்ல. மந்திர உருவாகிய திருவருளாற்றல் இவற்றை இயைந்தியக்குகின்றது. அதனால் அவை இயக்க இயங்கும் பொருளாகும். அவ்வாற்றலே திரிபுரை என்று வழங்கப்படும். அவ்வாறு இயைந்தியக்கினும் அவ்வாற்றல் பொருள்தன்மையால் வேறுகும். ஆறுகோடி வகையாயுள்ள மந்திரங்களென்றலும் ஒன்று, சத்திதன் மூர்த்திகளாம் என்பதற்குச் சத்தியின் எழுத்துருவங்கள் என்றலும் ஒன்று.

(அ. சி.) வயிந்தவம் - விந்து. ஓ மாயை-பிரணவம். ஆறுகோடியிற் ரூமான மந்திரம் - ஆறு ஆதார மந்திர எழுத்து, (க)

**1022.** திரிபுரை சுந்தரி அந்தரி சிந்துரப்
பரிபுரை நாரணி யாம்பல வண்ணத்தி
இருள்புரை ஈசி மனோன்மணி என்ன
வருபல வாய்நிற்கு மாமாது தானே.

(ப. இ.) மூன்று பிரிவுகளாயுள்ள வட்டத்துக்குரியவள் திரிபுரை என்பர். அழகருளும் அழகினள் : உள்வெளியாயுள்ள அந்தரி ; செந்நிற மூள்ள அனைத்துலகுங் காக்கும் பரிபுரை ; ஆருயிரைக் காக்கும் நாரணி ; பால்போலும் தூய வெண்ணிறத்தள் ; இருள் போலும் கருநிறத்தள் ; ஆருயிர் மனத்து உன்னித்து நின்றருளும் பெருமை வாய்ந்த மனோன்மணி; இத்தகைய சிறப்புடன் இன்னும் பலவாய் நிற்கும் முழுமுதற்றலைவி அம்மையேயாகும். மாமாது - முழுமுதற்றலைவி. இதன் கண் வரும் ஒன்பது திருப்பெயரும் ஒரு புடை யொப்பாக ஒன்பான் ஆற்றல்களையும் குறிப்பனவாகும்.

(அ. சி.) திரிபுரைசுந்தரி - மும்மலம் நீங்க அருள்செய்யும் சத்தி. இருள்புரை ஈசி - கரியநிறமுள்ள சத்தி. (உ)

**1023.** தானை அமைந்தவம் மும்புரந் தன்னிடைத்
தானை மூவுரு வோருருத் தன்மையள்
தானை பொன்செம்மை வெண்ணிறத் தாள்கல்வி
தானை போகமும் முத்தியும் நல்குமே.[2]

---

1. மாயைமா. சிவப்பிரகாசம், எ - உ.
2. பொன்னு. ஆரூரார், எ. இக - க.

(ப. இ.) மூப்புரமாவது இரும்பு, பொன், வெள்ளி என்னும் மூன்று பொருள்களான் இயல்பாயமைந்த கோட்டை. [இவற்றை மும்மல காரியம் (கூஉக)என்பர். மும்மலம்: ஆணவம், கன்மம், மாயை. இவற்றை திறமாகக்கொள்ளின் ஆணவம் இரும்பு, கன்மம் பொன், மாயை வெள்ளி என்ப. முக்குண நிறத்தைக் கூறுங்கால் தலைக்குணம் வெண்மை என்றும், இடைக்குணம் பொன்மை என்றும், கடைக்குணம் கருமை என்றும் கூறுப] அக் கோட்டை யகத்துக் கருமை செம்மை வெண்மை என மூன்றுரு. அம்மூன்றன் கண்ணும் திகழும் ஒருருத் தன்மையள் குறித்த மூந்நிறமும் தானே யானவள். கல்வியும் வாழ்வும் பேறும் தானுகந் திற்பவள். அம் மூன்றையும் நல்கியருள்வள். போகம் - வாழ்வு. முத்தி - பேறு. 'நாகத்தணையானும் நளிர்மாமலரானும் போகத்தியல்பினுற் பொலிய' அருள்வதூஉம் திருவருளம்மையேயாகும்.

(அ. சி.) ஒருத்த - ஒடு உற்ற. (கூ)

**1024.** நல்குந் திரிபுரை நாதநா தாந்தங்கள்
பல்கும் பரவிந்து பாரண்ட மானவை
நல்கும் பரைஅபி ராமி அகோசரி
புல்கு மருளுமப் போதந்தந் தாளுமே.

(ப. இ.) குறித்த மூன்றையும் அளித்தருளும் அம்மை நாத நாதாந் தங்களாகிய முப்பத்தாறு மெய்களும் பரவி நிலைப்பதற்கு நிலைக்களமாகி மேலொளியாகும். மேலொளி - பரவிந்து. நிலவுலக முதலிய எல்லா அண்டங்களையும் படைத்தருளும் பரை அழகும் விருப்பும் நிறைந்த அபிராமி. புலனுணர்வுக்கு எட்டாதவள். பொருந்திய அருளையும் அழகிய திருவடி யுணர்வையும் தந்தருளிக் காப்பவளாவள். ஆளும் - காக்கும். (சு)

**1025.** தாளணி நூபுரஞ் செம்பட்டுத் தானுடை
வாரணி கோங்கை மலர்க்கன்னல் வாளிவில்
ஏரணி அங்குச பாசம் எழில் முடி
காரணி மாமணிக் குண்டலக் காதிக்கே.[1]

(ப. இ.) நீருண்ட கரிய மேகம் போலும் அழகிய அம்மை திருவடி யின்கண் சிலம்பணிந்தவள். செம்மைநிறம் பொருந்திய பட்டுடை உடுத் தவள். கச்சுப்பூண்ட மார்பினள். நான்கு திருக்கைகளினும் முறையே கரும்பு வில்லும், பூவாளியும், அழகிய தோட்டியும், கயிறும் உடையவள். அழகிய திருமுடியும் உடையவள். சிறந்த மணி அழுத்திய குண்டலக் காதினையுடையவள். இத்தகைய வடிவமாக அம்மையை நினைக்க. நினைத் தல் - தியானித்தல். அங்குசம் - தோட்டி. பாசம் - கயிறு. கன்னல் - கரும்பு. வாளி - கணை.

(அ. சி.) இது தியான உருவம் கூறியது. மலர்வாளி, கன்னல் வில், அங்குசம், பாசம் கொண்ட நான்கு கரங்கள். (இ)

1. மின்தொத். அ. திருக்கோவையார், உசக

**1026.** குண்டலக் காதி கோலிவிற் புருவத்தள்
கொண்ட அரத்த நிறமன்னு சோலத்தள்
கண்டிகை யாரங் கதிர்முடி மாமதிச்
சண்டிகை[1] நாற்றிசை தாங்கிநின் றாளே.

(ப. இ.) ஆருயிர்கள் உய்தற்பொருட்டு அம்மைகொண்ட திருக்கோலம் வருமாறு : குண்டலக்காதும், கொல்லும் தகுதி வாய்ந்த வில் போலும் புருவமும், ஆடை அணி பூச்சு முதலிய அனைத்தும் செம்மை நிறம் வாய்ந்தனவும், சிவமணி மாலையும், ஒளிமணி முடியும் ஆகும். அவள் தானே விளங்கும் இயற்கையுணர்வினையும் உடையவள். சண்டிகை என்னும் திருப்பெயரினள். எப் புலத்துள்ளவர்களும் அம்மையை வழிபடும் பொருட்டு அவள்பால் வேண்டிப்பெற்ற வரப்பேற்றால் அம்மைகொண்ட திருக்கோலம் இதுவாகும். (க)

**1027.** நின்ற திரிபுரை நீளும் புராதனி
குன்றலில் மோகினி மாதிருக் குஞ்சிகை
கன்றறி கண்டிகை நாற்காற் கரீடணி
துன்னிய நற்சுத்த தாமரைச் சுத்தையே.

(ப. இ.) உயிருய்யக் கலந்துநிற்கும் அம்மை திரிபுரை என்று சொல்லப்பெறுவள். நிலைபெற்ற தொன்னமயள். நிலைபெற்ற - ஒரு தன்மையாயுள்ள, குறையாத அழகுடையவள். அழகுமிக்க கூந்தலையுடையவள். சிவனெறி அடையாளமாம் சிவமணி பூண்டவள். நான்கு உரல் போலும் கால்களையுடைய பிடியானையை ஊர்பவள். நெருங்கிய பல இதழ்களையுடைய தூய தாமரையில் வீற்றிருக்கும் தூயவுடம்பினள். குன்றலில் - குறைதலில்லாத மோகினி - அழகினையுடையவள். மாது- அழகு.

(அ. சி.) குன்றலில் மோகினி - குறைதல் இல்லாத அழகினை உடையவள். நாற்காற் கரீடணி - யானை வாகனம் உடையவள். (எ)

**1028.** சுத்தவம் பாரத் தனத்தி சுகோதயள்
வத்துவ மாயா ளுமாசத்தி மாபரை
அத்தகை [2]யாவும் [3]அணைரணி தானுமாய்
வைத்தவக் கோல மதியவ ளாகுமே.

(ப. இ.) தூய கச்சினையும் முத்துமாலையினையும் அணிந்த மார்பினையுடையவள். இன்ப வூற்றும் இயல்பினள் மாயையைத் தொழிற்படுத்தும் பொருளாயுள்ளவள். உமையவள், ஆற்றலள், பெரும்பொருட் செல்வி, முதலிய சிறப்புப் பெயரினள் அன்பருள்ளத்துறையும் அழகினள். இத்தகைய கோலங்களோடு கூடிய அம்மை மெய்யுணர்வு உருவினளா

1. அண்டர் பிரானுந். கூ. சண் - இசு
(பாடம்) 2. யான.
3. ,, மனைரணி.

கும். வம்பு - கச்சு. ஆரம் - முத்துமாலை, தனத்தி முலையாகிய மார்பினள். சுகம் - இன்பு. மதி - மெய்யுணர்வு.

(அ. சி.) வம்பார கச்சு, மாலை அணிந்த. சுகோதயள்-சுக உற்பத்திக்குக் காரணம் ஆனவள். வத்துவம் - மாயை. (அ)

1029. அவனே யறியா அமரரும் இல்லை
அவளன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை
அவளன்றி ஐவரால் ஆவதொன் றில்லை
அவளன்றி யூபுகு மாறறி யேனே.[1]

(ப. இ.) திருவருளாற்றலை உணராத தேவர்களும் இலர். திருவருள் துணையின்றிச் செய்யும் சீரிய தவமுமில்லை. அவள் துணையின்றி அருந்தவப்பேற்றால் படைத்தல் முதலிய ஐந்தொழில்களைச் செய்யும் ஐங் கடவுளராலும் ஆவதொன்றில்லை. அவள் தன் அருள் துணையில்லாமல் திருவடிப்பேறு கைகூடச் செய்யும் செந்நெறியும் இல்லை.

(அ சி.) ஐவர் - ஐந்து ஆதார மூர்த்திகள். ஊர் - முத்தி உலகம். (கு)

1030. அறிவார் பராசத்தி ஆனந்தம் என்பர்
அறிவா[2] ரறிவரு காமவள் என்பர்
அறிவார் கரும மவளிச்சை என்பர்
அறிவார் பரனு மவளிடத் தானே.[3]

(ப. இ.) திருவடியுணர்வு கைவந்த மெய்கண்டார் அருளம்மையின் திருவுருப்பேரின்பம் என்பர் அறிவரு எனவும் கூறுவர். ஐந்தொழிலும் அவளது விழைவாகிய திருவுள்ளம் என்பர். விழுமிய முழுமுதற்சிவனும் அவளிடமாகக் கொண்டு திகழ்பவன் என்பர். ஆனந்தம் - பேரின்பம். இச்சை - விழைவு. மெய்கண்டார் : செம்பொருட்டுணிவினர்.

(அ. சி.) சத்தி, சிவம் வேறின்றி உள்ள நிலையைக் கூறிற்று இம் மந்திரம். (கo)

1031. தான்எங் குளன்அங் குளள்தையல் மாதேவி
ஊன்எங் குளதங் குளன்உயிர்க் காவலன்
வானெங் குளதங் குளமந்த மாருதம்
கோனெங்கும் நின்ற குறிபல பாரே.[4]

(ப. இ.) தான் என்று சொல்லப்படும் அச் சிவபெருமான் எங்கெலாம் உளன் அங்கெலாம் தையல் மாதேவியாகிய திருவருளம்மையும்

1. அயன்நீ. சிவஞானசித்தியார், க. கூ - க.
(பாடம்) ரருவுரு.
3. சத்திதன். ,, க. கூ - கூ.
,, அருளுண்டாம். சிவஞானபோதம், இ. உ - கூ.
4. அல்லல். திருக்குறள், உசடு.

அவனேவிட்டுப் பிரியாது அங்கெல்லாம் (1030) உளள். இயங்கு திணை நிலைத்திணையாகிய இருசார் உடம்புகள் எங்கெலாம் உள அங்கெலாம் பொருந்திய உயிர்க்குயிராய்க் காவலனுயுளன் சிவன். வெளி எங்கெலாம் உள்ளது அங்கெலாம் ஆருயிர்க்கு இன்பந்தரும் தென்றற் காற்றுயுளன். இவையே எல்லா இடங்களிலும் நீக்கமறச் சிவபெருமான் நிறைந்து நிற்கும் பலவேறு குறியாம் என்பர். மந்தமாருதம் - தென்றற்காற்று. 'வானெங்குளவங் குளேவந்து மப்பாலாம்' என்னும் பாடத்திற்கு வானுள்ள இடமெல்லாம் சிவன் வந்து நிறைந்தும் அதற்கு அப்பாலும் உளன் என்று பொருள் கூறுக.

(அ. சி.) சத்தியும் சிவமும் உலகில் பிரிவின்றி நின்ற நிலையைக் கூறிற்று இம்மந்திரம். (கக)

1032. பராசத்தி மாசத்தி பல்வகை யாலுந்
தராசத்தி யாய்நின்ற தன்மை யுணரா
உராசத்தி ஊழிகள் தோறும் உடனே
புராசத்தி புண்ணிய மாகிய போகமே.

(ப. இ.) மேலாகிய ஆற்றலும் பெரிதாகிய ஆற்றலும் உடையவன் அம்மை. பலவகையாலும் உலகு உடல் உயிர்களைத் தாங்கும் ஆதார ஆற்றலுடையவளும் அவளே. மெய்யுணர்வு வடிவமாக இருப்பவளும் அவளே. இவைகளே அவள்தம் திருவுருவங்கள். யாவர்க்கும் விருப்பத்தை அருள்பவளும் அவளே. எல்லாவூழிகளிலும் ஆருயிர்களைப் புரக்கும் ஆற்றல் உடையவளும் அவளே. புண்ணியப்பயனைத் தந்தருளும் வாழ்வும் அவளே. வாழ்வு - போகம். பராசத்தி மாசத்தி என்பன அடையடுத்துநின்ற பண்புப் பெயர்கள். தராசத்தி - தாங்கும் ஆற்றல். உணரா உராசத்தி: உணராவுரு, ஆசத்தி என்று பிரித்தல்வேண்டும். புரா - புரக்கும்.

(அ. சி.) பராசத்தி - எங்கும் வியாபித்துள்ள சத்தி. தராசத்தி - ஆதாரசத்தி. உராசத்தி - பொருந்தும் சத்தி. புராசத்தி - திரிபுரை சுந்தரி. (கஉ)

1033. போகஞ்செய் சத்தி புரிகுழ லாளோடும்
பாகஞ்செய் தாங்கே பராசத்தி யாய்நிற்கும்
ஆகஞ்செய் தாங்கே அடியவர் நாள்தொறும்
பாகஞ்செய் ஞானம் படர்கின்ற கோம்பே.

(ப. இ.) ஆருயிர்க்கு விஞக்கிடாக விரும்பிய வாழ்வினையருளும் நகரப் பொருளாகிய நடப்பாற்றல் அவ்வுயிர்களுடன் இணைந்து கன்ம ஒப்பு வரச் செய்து அவ்விடத்தே வகரப் பொருளாகிய வனப்பாற்றலாக நிற்பள். போகஞ் செய்சத்தி 'ந,' பராசத்தி 'வ'. ஆருயிர்களின் நெஞ்சிடத்து நின்று அடியவர்களுக்கு நாளும் திருவடி யுணர்வு பெருகச் செய்யும் கொழுகொம்பொத்த செல்வியாவள்.

(அ. சி.) ஆகம்செய்து - மனத்தில் இருத்தி. பாகம்செய் - முதிர்ச்சி பெறும். (கஉ)

1034. கொம்பனை யாளைக் குவிமுலை மங்கையை
வம்பவிழ் கோதையை வானவர் நாடியைச்
செம்பவ ளத்திரு மேனிச் சிறுமியை
நம்பிஎன் உள்ளே நயந்துவைத் தேனே.

(ப. இ.) கொம்புபோன்று துவளும் இடையினை உடையாளை, குவிந்த அழகிய மார்பினையுடைய மங்கையை, மணங்கமழ்கின்ற மலர் சூடிய கூந்தலையுடையாளை, சிவலோகத்துள்ளார் இடையருது சிந்தித்துத் தொழும் செவ்வியை, செம்மையான பவழம்போலும் திருமேனியை உடைய இளநங்கையை, மும்மைக்கும் பெருந்துணையென்று உறுதியாக நம்பி மிக விரும்பி என் உள்ளத்துள்வைத்தேன். சிறுமி - கௌரி: எட்டு அல்லது பத்து ஆண்டுப் பருவப்பெண். வானவர் நாடியை என்பதற்குத் தேவ வாழ்வினையுடையாளை என்றும் கூறுவர்.

(அ. சி.) வானவர் நாடி - தேவர்களால் விரும்பிப் பூசிக்கப்படுபவள். (கசு)

1035. வைத்த பொருளும் மருவுயிர்ப் பன்மையும்
பத்து முகமும் பரையும் பராபரைச்
சித்தக் கரணச் செயல்களுஞ் செய்திடுஞ்
சத்தியும் வித்தைத் தலையவ ளாமே.

(ப. இ.) அருளால் தோற்றுவித்துள்ள உலகுடல் உண்பொருள்களும் அப் பொருள்களுடன் இணைத்து வைக்கப்பெற்ற அழிவில்லாத பலவுயிர்களும், பத்துத்திசையிலும், நிறைந்து நின்றியக்கும் பான்மையால் பத்துமுகமுடையவளும், நடப்பாற்றலாகிய பரையும் வனப்பாற்றலாகிய பராபரையும், அகக்கரணமாகிய எண்ணம், மனம், எழுச்சி, இறுப்பு என்னும் நான்கினையும் செயல்படுத்துபவளும், எல்லாவற்றையும் இயக்கும் முதல்வியும் ஆகிய உலகின்ற அம்மை திருவடியுணர்வின் தலைவியாவாள். வித்தை - திருவடியுணர்வு; மெய்யுணர்வு; பதிஞானம்; பிரம வித்தை. (கஞ)

1036 தலைவி தடமுலை மேல்நின்ற தையல்
தொலைவில் தவஞ்செயுந் தூய்நெறித் தோகை
கலைபல வென்றிடுங் கன்னியென் உள்ளம்
நிலைபெற இங்கே நிறைந்துநின் றாளே.[1]

(ப. இ.) திருவருளம்மை அண்ணந்து ஏந்திய வனமுலையினையுடைய தையலாகிய தலைவி. அவளே கெடாத நற்றவஞ்செய்யும் செந்நெறித்தோகை. மறைமுறை முதலாகிய உறுதி நூல்களும், இலக்கண இலக்கிய முதலிய எழில் நூல்களும் உலகுய்ய உள்நின்று உணர்த்தியருளிய என்றும் ஒருபடித்தாம் கன்னியாவாளும் அவளே. அவ் அம்மை

1. உண்ணுமுலை. சம்பந்தர். க. கo - க.
,, சிவஞ்சத்தி. சிவஞானசித்தியார், உ. ச - ஞ.
,, தெய்வச். அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ், வாராணை-சு.

கன்னியானமையால் அவள்தம் திருமூலை கை வாய்ப்படாதது. அவன் பிறவாப் பிறவியள் ஆதலின் அவளும் முலையுண்ணாதவள், என்னுள்ளம் அவள்பால் நிலைபெற்று நிற்பதன்பொருட்டு வெளிப்பட்டு நிறைந்து நின்றனள். மறை - வேதம். முறை - ஆகமம்.

(அ. சி.) கலைபல வென்றிடுங் கன்னி - வேதங்கள் ஆகமங்கள் வல்ல சத்தி. (கக)

1037. நின்றவள் நேரிழை நீள்கலை யோடுற
என்றன் அகம்படிந் தேழுல குந்தொழ
மன்றது வொன்றி மனோன்மணி மங்கலி[1]
ஒன்றலே டொன்றிநின் றுத்தடைந் தாளே.

(ப. இ.) நிறைந்து நின்ற அத் திருவருளம்மை சிறந்த அணிகலன் களையுடையவள். அழிவில்லாத நிறைந்த முழுக் கலைகளுடன் என் நெஞ்சகத்து வீற்றிருந்தனள். அவளே எல்லாவுலகினரும் வந்து எளிதாகத் தொழும்படி பொன்னம்பலத்தின்கண் பொருந்தி நின்றனள். மனோன்மணி எனவும், மங்கலம் உடையவளெனவும் அழைக்கப்படுபவளும் அவளே. அவள் சிவத்துடன் வேறற ஒன்றிநின்று யாண்டும் ஒத்து உறைந்தனள் என்க. மங்கலம் : மாண்கலம் என்பதன் மருவாகும். (கஎ)

1038. ஒத்தடங் குங்கும லத்திடை யாயிழை
அத்தகை செய்கின்ற வாய பெரும்பதி
மத்தடை கின்ற மனோன்மணி மங்கலி
சித்தடைக் கும்வழி தேர்ந்துண ராரகளே.

(ப. இ.) சிவத்துடன் யாண்டும் மரமும் காழ்ப்பும்போல உடனொத்து அடங்கிநிற்கும் தாமரை யிருக்கையினையுடைய செல்வி தகுதி வாய்ந்த அருட்செயல் புரிகின்ற பெருமுதல்வி. களிப்படையச் செய்யும் மனோன்மணி, மங்கல மாண்பினள் என்னும் திருவருள் தன்னை வழி படுவார்க்குப் பல்வேறு சித்திகளையும் எளிதாக அடைவிக்கும் நன்னெறியினைச் சிலர் உணராதிருக்கின்றனர். மத்து - களிப்பு.

(அ. சி.) சித்தடைக்கும் வழி - சித்துக்களை அடையும் மார்க்கம். (கஅ)

1039. உணர்ந்துட னேநிற்கும் உள்ளொளி யாகி
மணங்கமழ் பூங்குழல் மங்கையுந் தானும்
புணர்ந்துட னேநிற்கும் போதருங் காலைக்
கணிந்தெழு வார்க்குக் கதியளிப் பாளே.

(ப. இ.) ஆருயிர்கட்கு விளக்கும் கருவியாக அமைந்து சிவத்துடன் கூடி உடனுயிர்நிற்பள். அகவொளியாய் விளங்குவள். மலர்சூடிய கூந்தலையுடைய மங்கையும் அத் திருவுருவுள் விளங்கும் சிவமுடன் ஒன்றாய் வெளிப்பட்டு அருள்வர். அப்பொழுது அவ் அம்மையைத் தூய

1. மன்னவன் காண்மலி. இ. கக - ச.

மனத்துள் நாடிமுயல்வார்க்கு அவள் நன்னிலையை நல்கியருள்வள். கணிந்தெழுதல் - நாடிமுயலுதல் ; சிந்தித்து முயலுதல். சுதி - நன்னிலை.

(அ. சீ.) உடனே - சிவத்துடனே. கணிந்து - சிந்தித்து. (உக).

1040. அளியோத்த பெண்பிள்ளை ஆனந்த சுந்தரி
புளியுறு புன்பழம் போலுள்ள நோக்கித்
தெளியுறு வித்துச் சிவகதி காட்டி
ஒளியுற வைத்தென்னை உய்யவுண் டாளே.[1]

(ப. இ.) அனைத்துயிர்களிடத்தும் சமமான தலையளி செய்யும் பெண்பிள்ளை. பேரின்பப் பேரழகி. மெய்யடியார் உள்ளம் புளியம் பழமும்தோடும் ஒன்றுபோலிருந்தும் ஒட்டுப்பற்றின்றி நிற்பதுபோல் உலகியலில் பற்றின்றிநிற்கும். அந்நிலையினை நோக்கி உண்மையினைத் தெளிவிப்பள். உயிரின் அழியாத் தன்மையினையும் சிவனுடன் கூடும் பேரின்ப நிலையினையும் காட்டுவள். அதன்பின் திருவடியுணர்வு வண்ணமாய் நம்மை ஆக்குவள். அம் முறையில் அடியேனையும் உய்யக்கொண்டாள் என்க. சித்து - அறிவு. திருவடியுணர்வு - சிவஞானம். (உ0).

1041. உண்டில்லை என்ற துருச்செய்து நின்றது
வண்டில்லை மன்றினுள் மன்னி நிறைந்தது
கண்டிலர் காரண காரணி தன்னொடு
மண்டல மூன்றுற மன்னிநின் றாளே.

(ப. இ.) கண்ணுக்கும் கை முதலிய புலன்கட்கும் புலனாவது உருவம். கண்ணுக்குப் புலனாகாத உருவம் அருவம். இவ்விரண்டினைப் படைத்தருள நிலையாக நின்றனள் அம்மை. தில்லைச்சிற்றம்பலத்தின்கண் என்றும் நீங்காது அருட்கூத்து நோக்கி உறைபவளும் அவளே.[2] காரணப் பொருள்கள் அனைத்தினுக்கும் காரணமாய் நிற்கும் முதல்வி. உடல்மெய், உணர்வுமெய், உணர்த்துமெய் என்னும் மாயாகாரியதத்துவ மண்டலம் மூன்றினும் நிலைபெற்று இயக்கிநின்றனள். உடல்மெய் ஆன்மதத்துவம் இருபத்துநான்கு உணர்வுமெய் - வித்தியா தத்துவம் ஏழு. உணர்த்துமெய் - சிவதத்துவம் ஐந்து.

(அ. சீ.) உண்டு, இல்லை என்றது உரு - உரு, அரு (உக).

1042. நின்றரு ளவன்றன் உடலும் உயிருமாய்ச்
சென்றருள் சிவகதி சேரும் பராசத்தி
ஒன்றுக எண்ணுட் புகுந்துணர் வாகியே
நின்றருள் பரஞ்சுடர் ஏடங்கை யாளே.

(ப. இ.) சிவபெருமானின் உடலும் உயிருமாக என்றும் நிற்பவள் திருவருளம்மை. மெய்யடியார்களைச் சிவனிலையில் சேர்ப்பிக்கும் வனப்பாற்றலாகிய அருளம்மை, என் நெஞ்சத்தில் கலப்பால் ஒன்றுய்ப், பொருட்டன்மையால் வேறுய், உயிர்க்குயிராதல் தன்மையால் உடனுய்ப்

1. அளிபுண். அ. ஆசைப்பத்து, இ.
அந்தமுமாதியு. க. கூக - க.

புகுந்து நின்றனள். பேருணர்வாகவே நின்றனள். பேரொளியாகவு நின்றனள். - செந்தமிழ் மறையும்முறையும் வரைந்த திருஏடு அங்கை யிலுள்ளவள். அவன் - சிவபெருமான். பராசத்தி - வனப்பாற்றல். (உஉ)

**1043.** ஏடங்கை நங்கை இறைஎங்கள் முக்கண்ணி
வேடம் படிகம் விரும்பும்வெண் தாமரை
பாடுந் திருமுறை பார்ப்பனி டாதங்கள்
சூடுமின் சென்னிவாய்த் தோத்திரஞ் சொல்லுமே.[1]

(ப. இ.) செந்தமிழ் மறைமுறை ஏட்டைத் திருக்கையிலுடைய தங்கை தலைமைப் பாடமைந்த மூன்று திருக்கண்களையுடைய நம்தலைவி. படிகம்போலும் தூயவெண்ணிறத்தள். வெண்டாமரை இருக்கையை விரும்புபவள். திருமுறை பாடும் திருவாயினள். பேரருள் வாய்ந்த அந்தணட்டி. அப் பெருமாட்டியின் திருவடிகளே நும்தலையின்கண் சூடுவீர்களாக. சூடலே, அவளுடைய பொருள்சேர் புகழை நும்வாய் பாடும் வேடம் - கோலம் பார்ப்பனி - அந்தணட்டி. சென்னி - தலை. தோத்திரம் - புகழ். ஏடு தொடங்குவித்து இறையருளால் எழுத்தறிவிக்கும் ஆசான் இதனை ஓதியும் ஓதுவித்தும் எழுத்தறிவிப்பன் எழுத்தறிவித்தல் - ஏடு தொடங்குதல்.

(அ. கி.) ஏடங்கை நங்கை - வேதம் ஆகமங்களைச் சுவடி உருவமாகக் கையில் வைத்துள்ள மனோன்மனி. [இதனால் சதாசிவ தத்துவம் ஆரம்பத்திலேயே வேதாகமங்கள் எழுதப்பட்டுச் சுவடி உருவமாய்ச் சத்தி கையில் இருந்தன என்று ஏற்படுவதாலும். வடமொழி எழுத்தில்லாத மொழியானதாலும், எழுதும் மொழி தமிழ் ஆனபடியாலும், வேதாகமங்கள் தமிழ் மொழியிலேயே இருந்தன என்றும், அது பிற்காலத்தில் தமிழ்நாடாகிய இந்தியாவுக்கு ஆரியர்கள் வந்த காலத்தில் தமிழ் எழுத்துக்களாகிய கிரந்தத்திலும், தமிழின் வழிமொழியாகிய பஞ்ச திராவிடத்தில் ஒன்றான மராட்டிய (தேவநாகரம்) எழுத்துக்களிலும் எழுதப்பட்டன என்பதும் தெளிவாகின்றன.] (உஉ)

**1044.** தோத்திரஞ் செய்து தொழுது துணையடி
வாய்த்திட ஏத்தி வழிபடு மாறிரும்
பார்த்திடு மங்குச பாசம் பசுங்கரும்பு
ஆர்த்திடும் பூம்பிள்ளை யாதமாம் ஆதிக்கே.

(ப. இ.) திருமுறைகளை ஓதிப்புகழ்ந்து தொழுக. இரண்டு திருவடிகளையும் பேறு வாய்க்குமாறு ஏத்தி என்றும் வழிபடுநெறியில் உரைத்து திற்க. தோட்டியும் கயிறும், கரும்பு வில்லும் பூங்கணையும் உடையவள் அம்மை. சிவமெய்யினின்றும் சிலவமெய் தோன்றினமையால் அவள் பிள்ளை முறையுமாம். நடப்பாற்றலாகிய ஆதித் திருவருளுக்கு என்க. சிவை - சத்தி. மெய் - தத்துவம்.

(அ. கி.) வழிபடும் ஆறு இரும் - வழிபாடு செய்யும் நெறியில் நில்லுங்கள். (உச)

1. பூரி. அப்பர், நி. எஎ - க.
,, துணையி அப்பர், இ. கடு - ச.
,, தெய்வச். அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ், வாராணை - சு.

**1045.** ஆதி விதமிகத் தண்டடந்த மால்தங்கை
நீதி மலரின்மேல் நேரிழை நாமத்தைப்
பாதியில் வைத்துப் பலகாற் பயில்விரேல்
சோதி மிகுத்துமுக் காலமுந் தோன்றுமே.[1]

(ப. இ.) சிவபெருமானின் ஆதித் தொழிலாகிய படைப்புப்பெருக, பேரளியாகிய பெருங்கருணை புரிந்தவள் திருமாலின் தங்கை. அந்நேரிழை யின் திருப்பெயராகிய நமசிவய என்னும் தமிழ் ஐந்தெழுத்து அருள் மந்திரத்தை முறையாக எட்டிதழ்த் தாமரை வரைந்து அதன் மத்தியில் அமைக்க. பலமுறை உருவேற்றத் திருவருள்ஒளி பெருகும். அது பெருக, அகக்கண் திறந்து முக்காலவுணர்ச்சியும் ஏகூடும். இதனை யோகக் காட்சி என்ப. திருமால் - பேரன்பு வாய்ந்த பித்தனுர்; சிவ பெருமான், மூக்காலம்: இறப்பு, நிகழ்வு, எதிர்வு. தண் - பெருங்கருணை. சிவபெருமான் காத்தற்றொழிலைக் கண்ணுங்கால் திருமாலாவன். (உஇ)

**1046** மேதாதி ஈரேட்டு மாகிய மெல்லியல்
வேதாதி நூலின் விளங்கும் பராபரை
ஆதார மாகியே ஆய்ந்த பரப்பினள்
நாதாதி நாதத்து நல்லரு ளாளே.

(ப. இ.) உணர்த்துமெய் ஐந்தும், உணர்வுமெய் ஏழும், உட்கலன் நான்கும் ஆகப் பதினுறுமெய்களும் அம்மையால் இயக்கப்படுகின்றன. அதனுல் அம் மெய்யினை அவளாகவே கூறுவர். உலகுயிர்கட்கு ஆதார மாய் எங்குஞ் செறிந்தவள். ஒலியும் அப்பால் ஒலியுமாகிய நாதநாதாந்தத் தள். அவள் நமக்கு நல்லருள் புரிவாள். மேதை - அறிவு; சுத்தவித்தை. (உக)

**1047.** அருள்பெற் றவர்சொல்ல வாரீர் மனிதர்
பொருள்பெற்ற சிந்தைப் புவனு பதியார்.
மருளுற்ற சீந்தையை மாற்றி யருமைப்
பொருளுற்ற சேவடி போற்றுவன் நானே.[2]

(ப. இ.) குருவருள்பெற்றுத் திருவைந்தெழுத்து ஓதும் நிறையருள் பெற்றவரே! உண்மை சொல்ல வாரீர். நன்னெறி எய்தாத ஏனை மக்கள் திருவருள் பெற்று மேலுலகங்களில் தலைமையாக இருப்பவரை யும் முத்தொழில் புரிவோரையும் மெய்த்தேவரெனவே மயங்கி வழி பட்டு மருள்நிறைந்த சிந்தையராகின்றனர். அவர்தம் மனமயக்கத்தை மாற்றிப் பேரின்பப் பெருவாழ்வை நல்கியருளும் சிவபெருமான் ஒருவனே பிறப்பு இறப்பில்லாத பெருங்கடவுளென்போம்.

---

1. அருந்தின்பத். சிவஞானசித்தியார். அளவை - எ.
,, மின்னிடைச், அ. திருப்பொற் சுண்ணம், கஉ.
2. தாயினு. அப்பர், கு கஅ - கூ.
,, செத்துச். , ,, ,, உ.
,, தூறு. ,, ,, ,, கூ.

(அ. சீ.) சொல்ல - பிறர்க்கு எடுத்துரைக்க. பொருள் - இன்பப் பொருள். புவனபதியார் - பிரமன் முதலிய பதவியாளர்கள். மருளற்ற சிந்தை புவனபதிகளைப் பரம்பொருள் எனக் கருதும் மயக்க உணர்வு. அருமைப்பொருள் - முத்திச் செல்வத்தை நல்கும். (உஎ)

1048. ஆன வராக முகத்தி பதத்தினள்
ஈன வராகம் இடிக்கும் முசலத்தோ
டேனை யுழுபடை ஏந்திய வேண்ணகை
ஊன மறவுணர்ந் தாருளத் தோங்குமே.

(ப. இ.) இயற்கை உழுபடை போன்ற வெண்பன்றி முகத்தினள். அதற்கொத்த திருவடியினள். நன்னெறிச் செல்லாது புன்னெறிச் செல்லும் புரையோரை நன்னெறிப்படுத்தும் பொருட்டு அவர்தம் உடம்பினை இடித்து ஒறுக்கும் இருப்புலக்கையினையுடையவள். நன்மைக்கு அடையாளமாகிய உழுபடையாகிய ஏரினைக் கைக்கொண்டவள் பால் நிலவு போலும் வெள்ளிய நகையினையுடையவள் திருவடியுணர்வு கைவந்த செந்நெறிச் செல்வர்கள் உள்ளத்துப் பிறப்புக்கு வித்தாம் மலப்பசை வந்து பொருந்தாது நீங்க வீற்றிருந்து உணர்வொளியாக ஓங்குவள். ஈனவர் - புன்னெறிச் செல்வோர். முசலம்-இருப்புலக்கை. புரையோர்-கீழோர். ஊனம் - மலப்பசை. ஆன...தி : நன்னெறியாளர் உள்ளத்து விரும்பியிருப்பவள் என்றலும் ஒன்று.

(அ. சீ.) வராகமுகத்தி-வராகி. ஈனவர்-இழிகுணம் உடையோர். முசலம்-இருப்புலக்கை. (உஅ)

1049. ஓங்காரி என்பா ளவளொரு பேண்பிள்ளை
நீங்காத பச்சை நிறத்தை யுடையவள்
ஆங்காரி யாகியே ஐவரைப் பெற்றிட்டி
ரீங்காரத் துள்ளே யினிதிருந் தாளே.

(ப. இ.) ஒமொழிக்கு உரியாளாகிய ஒப்பில்லாத பெண்பிள்ளை, என்றும் நீங்காத மரகமாகிய பச்சை நிறத்தினையுடையவள். எழுச்சியுடையவளாய் அருளோன், ஆண்டான், அரன், அரி, அயன் என்னும் ஐவர் நிலைகளையும் படைத்து ஐவரையும் தொழிற்படுத்தும் ஆற்றலள். இரீங்காரத்துள்ளே இனிதிருந்தனள் என்க. இரீங்காரம் மாயையின் வித்தெழுத்தென்ப. தேனுண்டு மயங்கி வீழும் வண்டொலியை ஒத்திருப்பதுங் காண்க. ஆங்காரி - எழுச்சியுடையவள்.

(அ. சீ.) ஐவர் - சதாசிவன், மகேசன், உருத்திரன், மால், பிரமன், ரீங்காரம் - ரீம் என்பது மாயையின் பீச எழுத்து. (உக)

1050. தானே தலைவி யெனநின்ற தற்பரை
தானே யுயிர்வித்துத் தந்த பதினலும்
வானோர் தலமும் மனமும்நற் புத்தியுந்
தானே சிவகதி தன்மையு மாமே.

(ப. இ.) தானே தலைவியென வெளிப்பட்டு உலகியலில் நின்றருளும் திருவருள் தீற்பரை யாவள். இவள், நமசிவய என்பதன்கண் முதலிற்

காணப்படும் நடப்பாற்றலாகிய நகரத்தின் முதல்வியாவள். ஆருயிர்கள் வினைக்கீடாகப் பிறந்துழலும் உலகங்கள் பதினாலும் அவளுடைய அருளாணைவழி நிகழ்கின்றன. ஆதலால் அத் திருவருளையே உயிர்வித் தாகக்கொண்டுரைப்பர். சிவவுலகங்களும் மனமும் இறுப்பாகிய நற்புத்தி யும் அத் திருவருள் ஆணை வழிநின்று நிகழ்கின்றன. அத்திருவருளே சிவ நிலைத்தன்மையுமாகும். இது சிவயநம என்பதன்கண் இரண்டாம் எழுத் தாகக் காணப்படும் வனப்பாற்றலாகிய வகரத்தின் முதல்வி யாகும். உலகியலில் உயிர்களைத் தான் முன்நின்று நடத்துவதால் தான் முதலில் விளங்குகின்றனள். வீட்டியலில் ஆருயிர்களைச் சிவத்துடன் கூட்டி இன் புறுத்தலின் இன்பம்தரும் சிகரத்துக்குப்பின் இரண்டாவது விளங்குகின் றனள். இதற்கொப்பு உலகியலில் விருந்தினரை அழைத்து வருங்கால் முன்னும், ஊட்டுங்கால் செல்விருந் தோம்பும் செய்முறையால் பின்னும் இல்வாழ்வார் நின்று சிறப்புச் செய்வதாகும். (சூ0)

# 6. வயிரவி மந்திரம்

1051. பன்னிரண் டாங்கலை யாதி பயிரவி
தன்னில் அகாரமு மாயையுங் கற்பித்துப்
பன்னிரண் டாதியோ டந்தம் பதினலுஞ்
சொன்னிலை சோடச மந்தமென் றோதிடே.

(உ. இ.) பன்னிரண்டு கலைவடிவான ஆதி வயிரவி இடமிருந்து அகாரமாகிய ஒசையும் மாயையாகிய ஒளியும் கூட்டி நிறைந்து நோக்கக் கலைபதினான்காகும்; இப் பதினான்கும் புகழ்ந்து சொல்லப்படுகின்ற அம்மையின் இருப்பிடம். திங்களின் கலை பதினாறும் செல்வியின் சிறந்த இருப்பிடமாகும். ஒசை - ஒலி வடிவம். ஒளி - வரி வடிவம். சோடசம்- பதினாறு.

(அ. சி.) பன்...ரவி-ஆதி பயிரவியின் கலை 12. அகாரமும் மாயை யும் - அகரகலையும் மாயையின் கலையும் சேர்ந்து 14 கலைகள். (க)

1052. அந்தம் பதினலும் அதுவே வயிரவி
மூந்து நடுவும் முடிவும் முதலாகச்
சிந்தைக் கமலத் தெழுகினற மாசத்தி
அந்தமும் ஆதியு மாகிநின் ருளே.[1]

(உ. இ.) வயிரவியின் இருப்பிடம் முன் ஓதிய பதினான்கு கலையாகும். முதல் நடு இறுதியாகத் திகழ்பவள். நெஞ்சத் தாமரையிடத்து விளங் கும் பேராற்றல். அந்தமும் ஆதியும் ஆகிநின்றனள். இம்மு. ஒடுக்கத்தை யும், தோற்றத்தையும் செய்விக்கும் உரிமை உடையவள் என்பதாம்.

1. அவனவள். சிவஞான போதம், க.

(அ. சி.) அந்த...வயிரவி - வயிரவிக்குக் கலைகள் பதினாறு. சித்தைக் கலசம் - சித்தமாகிய தத்துவம். (உ)

**1053.** ஆகின்ற மூவரும் அங்கே அடங்குவர்
போகின்ற பூதம் பொருந்து புராதரர்
சார்கின்ற சார்வழிச் சாரார் சதிர்பெறப்
போகுந் திரிபுரை புண்ணியத் தோரே.

(ப. இ.) வயிரவியாகிய பேராற்றலினிடத்துப் படைப்போன் காப்போன் துடைப்போனுகிய மூத்தேவரும் அடங்குவர். தோன்றி மறையும் மண்முதற் பூதங்கள் அங்கே ஒடுங்கும். இப் பூதங்களுடன் இயைந்து விளக்கிடாக உலவும் தொன்மை வாய்ந்த ஆருயிர்கள் உண்மை யுணர்ந்து இப் பிறப்பினிற் சாராது அம்மையாகிய வயிரவியைச் சார்தல் வேண்டும். உடலைச் சாராது வயிரவி அம்மையின் திருவடியைச் சார்வோர், புண்ணியப் பேற்றினையுடைய பெரியாராவர். சதிரர் - செயற்கரிய செய்த பெரியோர். புண்ணியம் - நற்றவம்.

(அ. சி.) ஆகின்ற மூவர் - பிரமன், மால், உருத்திரர். (கூ)

**1054.** புண்ணிய நந்தி புனிதன் திருவாகும்
எண்ணிய நாட்கள் இருபத்தேழ் சூழ்மதி
பண்ணிய வன்னி பகலோன் மதியீறு
திண்ணிய சிந்தைதன் தென்னனு மாமே.

(ப. இ.) ஆருயிர்களுக்கு இன்ப வாழ்வு நல்கும் இயல்பினால் புண்ணியன் என்பர். ஆக்க நிலைக்களமாதலின் நந்தி என்பர். இயற்கைத் தூயோனுதலின் புனிதன். குறைவிலா நிறைசெல்வன் ஆதலின் திருவாகும் என்பர். விண்மீனுகிய நாட்கள் இருபத்தேழும், அவை சூழ்ந்த நடுவில் திகழும் திங்களும், விறகு முதலியன பற்றி ஒளிதரும் தீயும், ஞாயிறும் ஆகிய இப்பொருள்கள் முடிந்தமுடிவாக விளங்கும் பேரறிவுப் பொருளாகிய தென்னன்[1] என்று சிறப்பித்துச் சொல்லப்படும் சிவபெருமான் திருவுள்ளத்தால் ஆக்கப்பெற்றன.

(அ. சி.) திரு ஆகும் - எல்லாச் செல்வங்களும் ஆகும். நாள் - மீன். தென்னன் - சிவன்; தென்பாண்டி நாட்டான். (இப் பெயரை மாணிக்கவாசகர் எடுத்து ஆண்டுள்ளார்). (ச)

**1055.** தென்னன் திருநந்தி சேவகன் தன்னெடும்
பொன்னங் கிரியிற் பூதலம் போற்றிடும்
பன்னும் பரிபிடி யந்தம் பகவனே
டுன்னுந் திரிபுரை ஓதிநின் ரூனுக்கே.

(ப. இ.) அழகிய சிவபெருமான், திருநந்தியாகிய காவலனுவான். அவனெடும் திருவெள்ளிமலையில் அனைத்துலகும் காத்தருளும் பெண்ணாணையனைய அம்மை வீற்றிருக்கின்ருள். திருவடிப்பேருன்னித் திரு

1 மூன்னே விணையிரண்டும். அ. திருவெண்பா ச.

முறைகளே நாளும் இடையருது ஒதிநிற்பார்க்கு அந்தம் ஆகிய பகவன் என்னும் அண்ணலோடு உறைந்து திரிபுரை ஆருள் புரிவள்.

(அ. சி.) சேவகன் - வீரன். பொன்னங்கிரி - திருக்கயிலாயம். பன்னும் - கூறப்படுகின்ற. பரிபிடி - இரக்கமுள்ள. (இம் மந்திரத்தில் சிவனே "அந்தம் பகவனே" என்றும் வேறோர் இடத்தில் 'ஆதிபகவன்' என்றும் வழங்கியிருப்பதை நோக்குக). (இ)

1056. ஓதிய நந்தி உணருந் திருவருள்
நீதியில் வேத நெறிவந் துரைசெய்யும்
போதம் இருபத் தெழுநாள் புணர்மதி
சோதி வயிரவி சூலம்வந் தாளுமே.

(ப. இ.) மறைநூல் அருளால் ஓதியருளிய சிவபெருமானே அவனருளால் உணருங்கள். மறைவழியே முறை அருளினன். நாண் மீன் இருபத்தேழையும் பொருந்தும் திங்களேயிடமாகக்கொண்டு அதற்கு அறிவு விளக்கியருள்வன். அம்மையாகிய வயிரவியும் தன் கையில் திகழும் முத்தலைவேலாகிய சூலத்தால் உலகனைத்தையும் காத்தருள்வள்.

(அ. சி.) நீதியில் - நெறிமுறையில். (க)

1057. சூலங் கபாலங்கை ஏந்திய சூலிக்கு
நாலங் கரமுள நாகபா சாங்குச
மாலங் கயனறி யாத வடிவுக்கு
மேலங்க மாய்நின்ற மெல்லிய லாளே.

(ப. இ.) சூலத்தையும், விண்ணோர் தலைமண்டை ஓட்டையும், ஏந்தி விளங்கும் சூலியாகிய சிவபெருமானுக்கு அழகிய திருக் கைகள் நான்குள. சூலமும் கபாலமும் தாங்கிய இரு திருக்கைகள்போக எஞ்சிய திருக்கைகள் இரண்டிலும் முறையே பாம்பாகிய கயிறும் தோட்டியும் உள்ளன. மாலும் அயனும் அளந்தறியமுடியாத அனற்பிழம்பாய்த் தோன்றிய முழுமுதற் சிவபெருமான் தன் திருவுருவின்கண் செம்பாக வடிவம் தனதாக்கொண்டு திகழும் அம்மை காத்தருள்வள்.

(அ. சி.) நாலங்கரமுள - நான்கு கைகள் உள. மால...மேலங்க மாய் - மாலயன் அறியாத சிவனுக்கு அங்கமாய். (இதனைத்தான் மாணிக்கவாசகர் "உடையாள் நடுவுள் நீயிருத்தி" என்றார். (எ)

1058. மெல்லியல் வஞ்சி விடமி கலைஞானி
சொல்லிய கிஞ்சுக நிறமன்னு சேயிழை
கல்லியல் ஒப்பது காணுங் திருமேனி
பல்லிய லாடையும் பன்மணி தானே.

(ப. இ.) இயற்கையாகவே பேரிரக்கம் வாய்ந்த மெல்லியலாவள். ஆருயிர்களின் வினைக்கீடாக வஞ்சித்தலும் தண்டித்தலும் உடையவள். எனினும் உண்மையாளேக்கும் திருவடியுணர்வுசேர் கலைஞானிகள்

ஒதுகின்ற முள்முருக்கம்பூ நிறம்போன்ற நிலைத்த செம்மை நிறமுடையவள் அவள். மாணிக்க மணியொத்த செந்நிறம் வாய்ந்த திருமேனியுடையவளும் அவளே. அவள் கரையிற் பல மணிகள் சேர் பொன்னுடையுடையவள். விடமி தண்டிப்பவள். கல்லியல் - மாணிக்கவண்ணம். பன்மணித்தானை - பலமணிகளாலமைந்தன.

(அ. சி.) விடமி-நியாயத்தைக் கடைப்பிடித்தவள். கல்-மாணிக்கக் கல். இயல் - வண்ணம். பல் இயல் ஆடை - பலவிதமான ஆடைகள்; மேகலை, இடைகலை, கச்சு முதலியன. (அ)

**1059.** பன்மணி சந்திர கோடி திருமுடி
சொன்மணி குண்டலக் காதி யுழைக்கண்ணி
கன்மணி சூரிய சோம நயனத்தள்
பொன்மணி வன்னியும் பூரிக்கின் றாளே.

(ப. இ.) பல மணிகள் அழுத்திய ஒளிமிக்க பல உறுப்புக்களையுடைய திருவடியும், புகழ்ந்து சொல்லப்படும் மணிகள் இழைத்த குண்டலம் அணிந்த காதும் உடையவள். மான்போலும் கண்ணையுடையவள். நல்ல விளக்கமுள்ள ஞாயிறு திங்கள் தீ என்னும் மூன்றையும் கண்ணாக வுடையவள். பொன்போல் விளங்குகின்ற நீலவண்ணத் தம்மை மிகவும் களிப்புறுகின்றாள். கோடி - ஒருவகை முடியுறுப்பு. உழை - மான். நயனம் - கண். வன்னி - தீ. பூரித்தல் - களிப்புறுதல்

(அ. சி.) உழை - மான். வன்னி - அக்கினி. (க)

**1060.** பூரித்த பூவிதழ் எட்டினுக் குள்ளேயோர்
ஆரியத் தாளுண்டங் கேண்மார் கன்னியர்
பாரித்த பெண்கள் அறுபத்து நால்வருஞ்
சாரித்துச் சத்தியைத் தாங்கள் கண் டாரே.

(ப. இ.) செழிப்பான தாமரை இதழ் எட்டினுக்குள் அருமை மிக்க தாளுண்டு. அங்கே மாறு ஆற்றலும் அருளும் மிக்க கன்னியர் எண்மருறைவர். அவர்கள்பால் தோன்றும் கலை முதல்வியர் அறுபத்து நால்வராவர். அவர்கள் அனைவரும் திருவருளாற்றலைச் சார்ந்து உண்மையுணர்ந்து திகழ்பவராவர்.

(அ. சி.) ஆரியத்தாள் - தாமரை இதழ்கள் நடுவில் உள்ளதோர் உறுப்பு. (கo)

**1061.** கண்ட சிலம்பு வளைசங்கு சக்கரம்
எண்டிசை யோகி இறைவி பராசத்தி
அண்டமோ டெண்டிசை தாங்கும் அருட்செல்வி
புண்டரி கத்தினுட் பூசனை யாளே.

(ப. இ.) ஆராய்ந்து எடுக்கப்பெற்ற சிலம்பும், வலம்புரிச் சங்கும், சக்கரமும் உடையவள். எட்டுத் திசைகளிலும் நிறைந்திருப்பவள். முதல்வி; திருவருளாற்றல்; பலவேறு அண்டங்களையும் பலவேறு திசை

களையும் படைத்து ஆருயிர்களுக்கு அளித்துக் காக்கும் திருவருட்செல்வி. அன்பர்களின் நெஞ்சத் தாமரையின்கண் அவர்கள் ஆர்வமுடன் செய்யும் வழிபாட்டை ஏற்றுக்கொள்ள எழுந்தருளும் அம்மை. வளை - வலம்புரி. யோகி - நிறைந்திருப்பவள் புண்டரீகம் - தாமரை.

(அ. சி.) கண்ட - பொறுக்கி எடுத்த. (சக)

1062. பூசனை கந்தம் புனைமலர் மாகோடி
யோசனை பஞ்சத் தொலிவந் துரைசெய்யும்
வாசமி லாத மணிமந் திரயோகந்
தேசந் திகழுந் திரிபுரை காணே.

(ப. இ.) வழிபாட்டிற்கு வேண்டிய மணப் பொருள்களும், அழகிய மணமுள்ள பூக்களும், சிறந்த புதிய ஆடைகளும், நெடுந்தொலைவுக்குக் கேட்கும் ஐவகையான இயக்கமுழக்கமும், சொல்லுதற்கரிய தலையான திருவெழுத்தைந்தாகிய மந்திரமும் கூடிச் செய்யும் பூசையினை ஏற்றருளும் ஒலி மிகுந்த திரிபுரையாவள். பஞ்சத்தொலி - ஐவகை இயங்களின் ஓசை. இயம் வாத்தியம். ஐவகையியங்களாவன: தோற்கருவி, தொளைக் கருவி, நரம்புக்கருவி, தாளச்கருவி, மிடற்றுக்கருவி. வாசமிலாத: வசமிலாத என்பதன் நீட்டம். மணி - தலையான. யோகம் - கூட்டம். கோடி - புத்தாடை.

(அ. சி.) யோசனை - காததூரம். பஞ்சத்தொலி - மணி, கடல், யாழை, வளை சங்கு ஆகிய ஐந்து ஒலிகள். வாசமிலாத - சொல்லற்கரிய, தேசம் - ஒளி. (கஉ)

1063. காணும் பலபல தெய்வங்கள் வெவ்வேறு
பூணும் பலபல பொன்போலத் தோற்றிடும்
பேணுஞ் சிவனும் பிரமனும் மாயனும்
காணுந் தலைவிநற் காரணி காணே.

(ப. இ.) உலகத்தில் படைத்தல் காத்தல் துடைத்தல்களின் பொருட்டு அயன் அரி அரன் என்னும் முத்தேவர்களும் அம்மையருளால் தவமுடைய ஆருயிர்களினின்றும் தோன்றுவர். அது பொன்னினின்றும் பல அணிகள் தோன்றுவதையொக்கும். இங்கே அம்மையின் ஆணை பொன்னொக்கும். அதனால் பலபல தெய்வங்கள் என்று கொள்ளற்க. சிவன், பிரமன், மாயன் என்று சொல்லப்படும் முத்தேவர்களுக்கும் காரணமாகிய முதல்வி அம்மையாகும். சிவன் - அரன். பிரமன் - அயன். மாயன் - அரி. இவர்கள் அம்மையின் நிலைவகையர்.

(கங)

1064. காரணி மந்திரம் ஓதும் கமலத்துப்
பூரண கும்ப விரேசம் பொருந்திய
நாரணி நந்தி நடவங் குரைசெய்த
ஆரண வேதநூல் அந்தமு மாமே.

(ப. இ.) ஆதிமந்திரம் அஞ்செழுத்து என்னும் உண்மையால் அக் காரண மந்திரத்தை இடையறாது ஓதும் மெய்யடியார்களது நெஞ்சத் தாமரையின்கண், உட்கொளல் நிறுத்தல் விடுதல் என்னும் உயிர்ப்புப் பயிற்சிக்குத் துணையாகத் திருவருளம்மை எழுந்தருள்வள். அங்ஙனம் எழுந்தருளும்போது நாரணி என்று பெயர்பெறுவள். சிவபெருமான் அருளிச் செய்த மறை நூலின் முதலும் முடிவுமாய் விளங்குவதும் திருவருளம்மையேயாம். பூரணம் - மூச்சை உட்கொளல். கும்பம் - நிறுத்தல். இரேசம் - வெளி விடுதல். நந்தி - சிவபெருமான். பூரகம், கும்பகம் இரேசகம் என்பன பூரணம், கும்பம், இரேசம் என நின்றன.

(அ. சி.) பூரணம் - பூரகம். (கச)

**1065.** அந்த நடுவிரல் ஆதி சிறுவிரல்
வந்த வழிமுறை மாறி யுரைசெய்யுஞ்
சென்தமி ழாதி தெளிந்து வழிபடு
நந்தி இதனை நவமுரைத் தானே.

(ப. இ.) அந்தத்தைச் செய்யும் கடவுளாகிய சிவபெருமான் நடு விரலாகவும், படைத்தலைச் செய்யும் ஆதியாகிய நடப்பாற்றல் சிறு விரலாகவும் கொண்டு ஓதும் உலகியல் 'நமசிவய' என்று ஆகும். இம் முறையினை ஊனநடனம்[1] என்ப. இதனை மாற்றி யுரைசெய்தலாவது சிறு விரல்முதல் பெருவிரலீருகச் 'சிவயநம' என்று ஆகும் இது ஞான நடம் என்ப. இம்முறையில் முன் சிறப்பாகிய சிகரம் நின்ற நடுவிரலிடத்து யாப்பாகிய யகரம் நிற்கின்றது. இதுவே அடியார் நடுவுள் என்னும் குறிப்பாகும். இவ்வைந்தெழுத்தும் இம்முறைவைப்பும் செந்தமிழுக்கே உடைய சிறப்பென்பது விளங்கச் 'செந்தமிழாதி தெளிந்து' என்று ஓதி யருளினர். அங்ஙனமிருந்தும் ஆரியமொழிமயலினர் ஐந்தெழுத்து ஆரிய மொழியென்று சீரியலழித்துக் கூறுவர். இவ்வைந்தெழுத்தால் வழிபடு முறையினைச் சிவபெருமான் அடியேன்வழியும் புதுப்பித்து உரைத் தருளினன். இதனை - வழிபடு இம்முறையினை. நவம் - புதுமை. இத் தமிழ்மறை ஏனைய மந்திரங்கள் போலாது நடுவிரலைத் தொட்டு ஆழி விரல் சிறுவிரல் பெருவிரல் சுட்டுவிரல் வரை ஐந்தெழுத்து மறைகூறித் தொடுதலென்பாரும் உளர்.

(அ. சி.) இம் மந்திரம் "அஞ்செழுத்து" தமிழ் என்றும், சமயம் முதலிய தீக்கைகளைப் பெற்றவர்கள் நடுவிரல் அடி முதற்கொண்டு சுண்டுவிரலுக்கு வந்து ஓங்கார உருவமாய் விரல்களின் வரைகளைக் கொண்டு ஐந்தெழுத்தைக் கணிப்பதைக் கூறுகின்றது நடுவிரல். ஆதி - நடுவிரல் அடி. (கஇ)

**1066.** உரைத்த நவசத்தி ஒன்று மூடிய
நிரைத்த விராசி நெடுமுறை எண்ணிப்
பிரைச்சதம் எட்டுமுன் பேசிய நந்தி
நிரைத்து நியதி நியமஞ்செய் தானே.

---

1. ஊனு. திருவருட்பயன், ஐந்தெழுத்தருள்நிலை, கூ
2. உடையா. அ. கோயின்மூத்த, க.

(ப. இ.) ஆறுதாரத்தின் அப்பாற்பட்ட ஆதார சத்திகள் ஒன்பதும் ஒன்றுகூடி வரிசையாகத் தத்தம் இடங்களில் நிலைபெறு முறையை ஆராய்ந்து பிரைச்சதம் எட்டையும் முன்னருளிய சிவபெருமான் கோவை செய்து அமைத்தனன் என்க. நியமம்-ஏற்பாடு; அமைவு. (கக)

**1067.** தாமக் குழலி தயைக்கண்ணி உள்நின்ற
வேமத் திருளற வீசும் இளங்கொடி
ஓமப் பெருஞ்சுடர் உள்ளெழு நுண்புகை
மேவித் தமுதோடு மீண்டது காணே.

(ப. இ.) மணம் கமழும் மலர் சூடிய நீண்ட கூந்தலையுடையவள். பேரருள் வாய்ந்த கண்ணையுடையவள். ஆருயிர்களின் அகஇருளைக் கடிந்தோட்டும் பேரொளிப்பிழம்பாம் இளங்கொடிக் கன்னி. அகத்தே கொப்பூழில் கண் அஞ்செழுத்தால் வளர்க்கப்படும் ஓமப் பெருஞ்சுடர். அதன் அகத்தெழும் நறுமண நுண்புகை. அத்தகைய திருவருளாற்றல் தமக்குவேண்டும் எல்லா நலமும் மேவுவித்து அருளமுது ஊட்டிக் காத்தது என்க. வீசும் - ஒட்டும்.

(அ. சி.) உண்ணின்ற ஏமத்திருள் - அஞ்ஞானம். ஓமப் பெருஞ்சுடர் - நாபி. உள்ளெழு நுண்புகை - பிராணன். (கள)

**1068.** காணும் இருதய மந்திரமூங் கண்டு
பேணு நமவென்று பேசுந் தலைமேலே
வேணு நடுவு மிகநின்ற வாகுதி
பூணு நடுவென்ற வந்தஞ் சிகையே.

(ப. இ.) உள்ளத்தைப் பெருங்கோவிலாகக் கண்டு மனமணி இலிங்கத்தை நமசிவய என்று வழிபட்டு நடுநாடிவழியாக உயிர்ப் படக்குதலே அவியாக்கி முடிவில் கொண்டைபோல் கருதுக. மந்திரம்-திருக்கோவில். தலை - முடி. வேணு - நடுநாடி; சுழுமுனை. (கஅ)

**1069.** சிகைநின்ற வந்தக் கவசங்கொண் டாதிப்
பகைநின்ற வங்கத்தைப் பாரென்று மாறித்
தொகைநின்ற நேத்திர மூத்திரை சூலம்
வகைநின்ற யோனி வருத்தலு மாமே.

(ப. இ.) முதன்மையாய் விளங்கும் கவசமாகிய காப்புச் சட்டையை ஓதி உடம்பினைக் காத்தருளென்று வேண்டுக. மீட்டும் அறிவுப் பொறியை மீக்கக் காட்டுக அறிவுப்பொறி-சின்முத்திரை பெருவிரலுய ஆள்காட்டி விரலும் ஒன்றுய்ப் பிரிப்பின்றிப் புணர்ந்தமைந்துநிற்க மற்றைய மூன்று விரல்களும் அகன்று நிற்பது. பெருவிரல் ஆண்டானுகவும் ஆள்காட்டி விரல் அடிமையாகிய ஆருயிராகவுங் கொள்ப. நடுவிரல் வினையாகவும், ஆழிவிரல் மாயையாகவும் சிறுவிரல் ஆணவமாகவும் கொள்ப. சூலம், யோனி என்னும் இரண்டும் வருத்தலும் கூறப்படும்.

அறிவுப் பொறியினைக்காட்டி-காட்டுக என்பது உறுப்புத்தொடுதல். காட்டி : இகர ஈற்று வியங்கோள். உறுப்புத் தொடற்காம் ஒண்டமிழ் மறை திருவங்கமாலைத் (தலையே, சு. கூக - கூஉ.) திருப்பதிகம்!

(அ. சி.) இவ்விரு மந்திரப் பாட்டுக்களிலும் ஆறங்க மந்திரங்களைப் பற்றிக் கூறப்பட்டிருக்கின்றன. இருதயம், நம என்று - இருதயாயநம. பேசுந் தலைநம சிரசேநம. சிகையே - சிகாயநம கவசம்கொண்டு - கவசாயநம. நேத்திரம் - நேத்திராய நம. பகைநின்ற அங்கம்-அத்திராய நம. (ககூ)

1070. வருத்த மிரண்டுஞ் சியவிரன் மாறிப்
பொருத்தி அணிவிரற் சுட்டிப் பிடித்து
நெரித்தோன்ற வைத்து நெடிது நடுவே
பெருத்த விரலிரண் டுள்புக்குப் பேசே.

(ப. இ.) சூலம் யோனி என்னும் முத்திரைகள் இரண்டும் கைவிரல்களைச் சிறிது வருத்தத்துடன் அமைத்தல் வேண்டும். சிறுவிரல்களை ஒன்றின்மேலொன்றாக மாறிவைத்து, அணிவிரலை நீட்டிப்பிடித்து அமைப்பது சூலமுத்திரையாகும் இவற்றுடன் நடுவிரலிரண்டும் உட்புகுமாறு அமைப்பது யோனி முத்திரையாகும். (உ0)

1071. பேசிய மந்திரம் இகாரம் பிரித்துரை
கூச மிலாத சகாரத்தை முன்கொண்டு
வாசிப் பிராணன் உபதேச மாகைக்குக்
கூசிய விந்து வுடன்கொண்டு கூவே.

(ப. இ.) சிறப்பித்துக் கூறப்படும் சிகார மந்திரத்தில் இகரத்தைப் பிரித்தால் சகரமாகும். இம் மெய்யெழுத்து மேற்சேரும் எழுத்தின்மையால் கூசமிலாத சகரம் என்றுயிற்று. அச் சகரத்தின்மேல் இகரத்தையும் கூசிய விந்துவாகிய மகரத்தையும் கூட்டினால் (ச்+இ+ம்) சிம் என்று ஆகும். இஃது உயிர்ப்புப் பழக்கத்திற்குரிய மந்திரமாகும்.

(அ. சி.) பேசிய மந்திரம் - சி. இகாரம் பிரித்து - ச்+இ. கூசிய விந்து - ம் சகாரத்தை முன்கொண்டு கூவினால் சிம் என ஆகும். இது பிராணயாமம் சித்திக்கும் முறை. (உக)

1072. கூவிய சீவன் பிராணன் முதலாகப்
பாவிய சவ்வுடன் பண்ணும் யகாரத்தை
மேவிய மாயை விரிசங்கு முத்திரை
தேவி நடுவுள் திகழ்நதுரின் ருளே.

(ப. இ.) ஒதப்பெறும் மந்திரக்கிழவன் உயிர்ப்புப் பயிற்சிக்குக் கொள்ளும் சிம் என்பவற்றுள் பரந்து செல்லும் ஒசையுடைய சகரத்துடன் மகரமும் சேரச் சம் என்றாகும். இதனைச் சங்கு முத்திரை என்ப. இம் முத்திரை அருளம்மையாரின் இருப்பிடமாகும். இதன்கண் அம்மை எழுந்தருளி விளங்குவள்.

(அ. சி.) கூவிய - சொன்ன; உருப்போட்ட. சவ்வுடன் பண்ணும் மகரம் - சம். (உட)

1073. நின்ற வயிரவி நீலி நிசாசரி
ஒன்றும் இரண்டும் ஒருங்கிய உள்ளத்துச்
சென்றருள் நாயகி தேவர் பிரானுக்கே
நன்றருள் ஞாலத்து நாடிடுஞ் சாற்றியே.

(ப. இ) நிலைபெற்று நின்றருளும் வயிரவி நீலநிறம் அமைந்தவளாதலின் நீலி. அன்பறிவாற்றல்களாகிய மூன்றும் இறைவியின் திருவடியில் முறையே ஒடுங்கப்பெற்ற மெய்யடியார்கள் தம் உள்ளத்து விரைந்து சென்றருளும் முதல்வி. பேரொடுக்கத்தின் பின்னும் நிலைத்திருப்பவளாதலின் அப்பேரிருட்காலத்தும் விளங்கும் நிசாசரி. சிவபெருமானே விட்டு நீங்காத நன்மையருளும் திருவருளம்மை. உலகோர் அவ்வம்மையின் திருவடியைப் புகழ்ந்து நாடித்தொழுவாராக. ஒன்றுமிரண்டு - மூன்று ; அன்பறிவாற்றல்கள் (இச்சை ஞானம் கிரியை). நிசாசரி-இருளிலும் நடப்பவள்.

(அ. சி.) நிசாசரி-பேர் ஊழிக்காலத்து, இருளில் உள்ளவள். (உகூ)

1074 சாற்றிய வேதஞ் சராசரம் ஐம்பூதம்
நாற்றிசை முக்கண்ணி நாடும் இருள்வெளி
தோற்றும் உயிர்ப்பன்மை சோதி பராபரை
ஆற்றலொ டாய்நிற்கும் ஆதி முதல்வியே.[1]

(ப. இ.) உலகியல் ஒழுக்கம் செம்மையாகப் போதிக்கும் தமிழ் மறையகத்து விளங்கும் தனிப்பெரு முதல்வி திருவருளம்மை இயங்குதிணை நிலைத்திணை என்னும் இருவகை இடங்களிலும் இயைந்தியக்குபவளும் அவளே. ஐம்பூதங்களுடன் விரவி அவற்றைச் செலுத்துபவள். தான்கு புலத்தினும் நிறைந்திருப்பவள். மூன்று திருக்கண்களையுடையவள். கருதப்படும் இருளையும் வெளியையும் இயக்குபவள். தோன்றியுள்ள பல்வேறு உயிர்களுக்கும் வேண்டுவ அருளும் பேரொளிப்பிழம்பி, முடிவிலாற்றலுடன் விளங்கும் முதல்வி, எல்லாம் அவளேயாவள்.

(அ. சி.) உலகின்கண் உள்ள சரம் அசரம் முதலிய பொருள்களும் வேதங்களும் ஆகமங்களும் உலகங்களும் உயிர்களும் எல்லாம் சத்தி செ.ரூபம் என்று இப்பாட்டில் கூறப்பட்டிருக்கிறது. (உஅ)

1075. ஆதி வயிரவி கன்னித் துறைமன்னி
ஓதி யுணரில் உடலுயிர் ஈசனும்
பேதை உலகிற் பிறவிகள் நாசமாம்
ஓத வுலவாத கோலமொன் றாகுமே.[2]

(ப. இ.) நடப்பாற்றலைச் செய்யும் வயிரவி. எல்லாம் ஈன்றெடுத்தும் என்றும் கன்னியாயிருப்பவள். சிவபெருமானுக்கு உடலுயிராயவள். அறிவாமை நிறைந்த உலகினர் அவளை அன்புடன் வழிபட்டால் பிறவி அகலும். ஓதுதற்கரிய மெய்யுணர்வே திருமேனியாக உடையவள்.

1. விளம்பிய. சிவஞானபோதம், இ.
,, எங்குந்திருமேனி. க0 உசுஎச.
2. பாதாளம். அ. திருவெம்பாவை, க0.

(அ. சீ.) ஆதி வயிரவி - சக்கரத்துடன் கூடிய வயிரவி மந்திரத்தை. கன்னித்துறை - விசுத்தி. உடல் உயிர் ஈசனும் - உடலில் உள்ள உயிர் ஈசனது தன்மையை அடையும். உலவாத கோலம் - அழிவற்ற தேகம். (உஇ)

1076. கோலக் குழலி குலாய புருவத்தள்
நீலக் குவளை மலரன்ன கண்ணிணுள்
ஆலிக்கும் இன்னமு தானந்த சுந்தரி
மேலைச் சிவத்தை வெளிப்படுத் தாளே.

(ப. இ.) அழகிய கூந்தலையும் புருவத்தையும் உடையவள். குவளை மலரையொத்த கண்ணையுடையவள். நீங்கா மகிழ்ச்சியைத் தருகின்ற பேரழகினள். சிவபெருமான் எல்லாங் கடந்தவர். நாமுய்யும் பொருட்டுத் தடையிலா ஞானமாகிய அம்மையை உருவாகக்கொண்டு எழுந்தருளுவர். அதனால் அவரை வெளிப்படுத்தியது திருவருளாற்றல் என்பர்.

(அ. சீ.) ஆலிக்கும் - மகிழ்ச்சி பயக்கின்ற. சிவத்தை வெளிப் படுத்தாள். அருவமாயுள்ள சிவத்தின் தன்மையை உணரும்படி செய்வள். (உஈ)

1077. வெளிப்படு வித்து விளைவறி வித்துத்
தெளிப்படு வித்தென் சிந்தையி னுள்ளே
களிப்படு வித்துக் கதிர்ப்படு சோதி
ஒளிப்படு வித்தென்னை உய்யக்கொண் டாளே.

(ப. இ.) ஊழ்வினைப்பயன் உண்மையினை நடப்பாற்றலாக நின்று வெளிப்படுவித்து, அதன் விளைவாக ஏறுவினைத்தொடர்ச்சியை அறி வித்து, அடிமை என்னும் நாட்டத்தால்முயலின் ஏறு வினைத்தொடர்பு இன்றென்பதையும் தெளியப்படுத்தி, உய்விப்பள். தெளியப்படுத்துங்கால் நடப்பாற்றல் வனப்பாற்றலாம் நிலை எய்தும். அதனால் திருவடியுணர்வு கைவரும். அதனால் திருவடிப் பேறெய்தும். சிவப்பேரொளியை மிகவும் விளக்குவித்து என்னை உய்யக்கொண்டருளினள். தெளியப்படுத்தி என்பது தெளிப்படுத்தி எனக் குறைந்துநின்றது.

(அ. சீ.) விளைவு - பயன். களிப்படுவித்து - களிப்பைச் செய்து. கதிர்ப்படு சோதி - பரையாகிய இரணங்களைக் கொண்ட சிவசோதியை. ஒளிப்படுவித்து - உயிர் தரிசிக்கும்படி செய்து. (உஎ)

1078. கொண்டனள் கோலங் கோடி அநேகங்கள்
கண்டனள் எண்ணெண் கலையின்கண் மாலைகள்
விண்டனள் மேலை விரிகதிர் மூன்றையுந்
தண்டலை மேல்நின்ற தையல்நல் லாளே.

(ப. இ.) உலகுய்தற்பொருட்டு அருளம்மையார் கொண்டருளிய திருக்கோலத் திருவுருவங்கள் பலகோடி என்பர். அறுபத்துநாலு கலை களையும் தோற்றுவித்தனள். அவற்றுள் வெளிப்பட்ட நூற்சுவடி வரிசை களையும் வெளிப்படுத்துவித்தனள். அதுபோல் ஞாயிறு திங்கள் தீ என்னும் மூன்று ஒளியுடைய பொருள்களையும் படைத்தருளினள்.

உச்சித்தொளியின் மேலுள்ள அருள் வெளியும் தானேயாம். அவள் தையல் நல்லாளாவள்.

(அ சி.) கொண்...கள் - வயிரவி என்கிற மனோன்மனி சத்தி யானவள் வேண்டும் கோலம் பூண்டு. கண்டனள் உண்டாக்கினுள். எண்...மாலைகள் - 64 கலைகளின் பதிகங்கள் அல்லது கோவைகள். விண்ட...மூன்றை-காலதத்துவ காரணராகிய சோமன்-சூரியன்-அக்கினி இவற்றை ஆக்கினுள். தண் தலை மேல் நின்ற - குளிர்ச்சி பொருந்திய சகசிர அறையுள் நின்ற. (உஅ)

**1079.** தையல்நல் லாளைத் தவத்தின் தலைவியை
மையலை நோக்கும் மனோன்மணி மங்கையைப்
பையநின் றேத்திப் பணிமின் பணிந்தபின்
வேய்ய பவமினி மேவகி லாவே.

(உ. இ.) எல்லாவற்றையும் படைத்துக் காக்கும் நல்லாளை, சீலம் நோன்பு செறிவு அறிவு என்னும் மெய்த்தவம் நான்மையின் தலைவியை, ஆருயிர்களின் மயக்கங்கள் அத் தவப்பேற்றுல் அகலும்படி திருக்கடைக் கண் நோக்கருளும் மனோன்மணி மங்கையை, அமைதியாய் அமர்ந்து திருமுறை ஓதி வழிபாடியற்றிப் பணியுங்கள். பணிந்த பிற்பாடு கொடிய பிறவிநோய் அற்று, ஒருகாலும் மீண்டும் பொருந்தாதகலும்.

(அ. சி.) தவத்திற் றலைவி - சகசிர அறைத் தலைவியை. (உக)

**1080.** வேயன தோளி விரையுறு மென்மலர்
ஏய குழலி இளம்பிறை ஏந்திழை
தூய சடைமுடிச் சூலினி சுந்தரி
ஏயென துள்ளத் தினிதிருந் தாளே.[1]

(உ. இ.) மூங்கில்போலும் தோளையுடையவள்; மணமுள்ள பூவை அணிந்தவள்; பிறையும் அணியும் பூண்டவள்; தூய சடைமுடியையுடை யவள், சூலத்தையுடையவள். அழகினள், அடியேன் உள்ளத்தும் பொருந்தி எனக்கும் இன்பந் தந்துகொண் டிருக்கின்றனள். (உ0)

**1081.** இனியதென் மூலை இருக்குங் குமரி
தனியோரு நாயகி தானே தலைவி
தனிப்படு வித்தனள் சார்வு படுத்து
நனிப்படு வித்துள்ளம் நாடிநின் றூளே.

(உ. இ.) புறத்தும் அகத்தும் தென்மேல் மூலையில் வீற்றிருந் தருள்வள். என்றும் ஒருவடிவாயிருத்தலின் குமரி எனும் திருப்பெயர் பூண்டனள். ஒப்பிலாத முதல்வி, தானே தலைவி. மாயாகாரியமாகிய உடல் உலகு முதலியவற்றின் நிலைமையுணர்த்தி நீ இவற்றின் வேறு எனத் தனிப்படுத்தினள் சிவபெருமான் திருவடிச் சார்பே நிலையான சார்பெனச் சார்வித்தனள். என்னை நாடி என்னகம் உறைந்து என்னை யாகவும் மேற்படுத்தியருளினள்.

1. வேயனை. சம்பந்தர், கூ. கூக - ச.

(அ. கீ.) தென்மூலை - சகசிர அறையில் உள்ள தென்மூலை. தனிப் படுவித்து - தத்துவங்களினின்றும் பிரித்து. (கூ)

1082. [1]நாடிகள் மூன்று நடுவெழு [2]ஞாளத்துக்
கூடி இருந்த குமரி குலக்கன்னி
பாடகச் சீறடிப் பைம்போற் சிலம்போலி[3]
ஊடக மேவி உறங்குகின் றாளே.

(ப. இ.) வலப்பால் இடப்பால் நடுநாடி மூன்றனுள்ளும் நடுநாடி வாயிலாகத் தோன்றுகின்ற திருவடியுணர்வுடன் கூடியிருந்த குமரி யம்மை. சிறந்த முதல்வி; பாடகமணிந்த சிறிய திருவடியையுடையவள். மாற்றுயர்ந்த பொன்னாலாகிய சிலம்பை அணிந்தவள்; அச் சிலம்பொலி யுடன் அடியேன் அகத்துப் பொருந்தித் தங்கியருளுகின்றனள்.

(அ. கீ.) நாடி...ஞாளத்து - புருவமத்தியில் உள்ளம் என்னும் கூடத்தில். (கூ)

1083. உறங்கு மளவின் மனோன்மனி வந்து
கறங்கு வினைக்கைக் கழுத்தாரப் புல்லிப்
பிறங்கொளித் தம்பலம் வாயில் உமிழ்ந்திட்டு
உறங்கலை யாவென் றுபாயஞ்செய் தாளே.[4]

(ப. இ.) அடியேன் உறங்கிக்கொண்டிருக்கும்போது ஒலிக்கின்ற வினையலணிந்த திருக்கையால் நெஞ்சமுதல் கழுத்துவரை குளிரத்தடவி ஒளிக்கும் ஒளியருளும் தம் பேரொளியாகிய திருவருளாற்றலை, என் அறி வினிடத்தில் புகப்பெய்து ஐயா உறங்குதலாகிய மறவியைக் கொள் ளாதே. பிறப்பற்றுச் சிறப்புற்று வாழ்வதற்கு இது வழிவகையாகும் என்று அருளினள். அவளே மனோன்மனி யாவள். புல்லி - தடவி. பிறங் கொளி - மிக்க ஒளி. தம்பலம் - அம்மையின் திருவருளாற்றல். உறங்கல்- உறங்காதே; மறவாதே. உபாயம் - வழிவகை. தம்பலம்: தாம்பூல மென்று. கூறுவது ஏற்புடைத்தாகாது தம்பலம் - தம் பயன்; திருவருள் வாயில் - அறிவினிடத்தில். உமிழ்ந்திட்டு - புகப்பெய்து. (கூ)

1084. உபாயம் அளிக்கும் ஒருத்தியேன் உள்ளத்து
அபாயம் அறக்கெடுத் தன்பு விளைத்துச்
சுவாவை விளக்குஞ் சுழியகத் துள்ளே
அவாவை அடக்கிவைத் தஞ்சலென் றாளே.[5]

(ப. இ.) ஆருயிர் அனைத்திற்கும் உய்யும் வழிவகைகளை அருளிச் செய்யும் ஒப்பில்லாத முழுமுதல்வி எளியேனுடைய ஈரமில்நெஞ்சகத்து

(பாடம்) 1. நாடிய கண்மூன்று.
,, 2. ஞானத்துக்
3. ஆடற் சிலம்பின். கஉ. சேரமான் - சசு.
4. துஞ்சுங்கால். திருக்குறள், கஉகஅ.
5. அவாவினே. திருக்குறள், கூகுஎ.

இடர் அனைத்தும் இல்லாமல் நீக்கி, அருளின் வித்தாகிய ஆண்டவன் அன்பினை விளைவித்து, நாயனைய மனத்தை விளக்குவதாகிய சுழியகம் எனப்படும் புருவநடுவாகிய நனவு நிலைக்களத்து நிலையிலாப் பொருள்களிலும் பிறருடைமைகளிலும் செல்லும் பற்றுகிய அவாவை அடக்கி வைத்து அஞ்சாதே என்று அருளினள். சுவா : நாய். உவம ஆகுபெயராக மனத்தைக் குறிக்கின்றது. சுழியகம் - நனவுக்களம் ; விழிப்புநிலை ; சாக்கிரத்தானம்.

(அ. சி.) சுவாவை - மனத்தை. சுழியகம் - சக்கரம் (ஆதார சக்கரம்). (சுசு)

1085. அஞ்சொல் மொழியாள் அருந்தவப் பெண்பிள்ளை
செஞ்சொல் மடமொழி சீருடைச் சேயிழை
தஞ்சமென் றெண்ணித்தன் சேவடி போற்றுவார்க்
கிஞ்சொல் அளிக்கும் இறைவியென் றூரே.

(ப. இ.) உயிரை உய்விக்கும் அழகிய 'நமசிவய' என்னும் குரு மொழியினை அருள்பவள் திருவருளம்மை. அவளே அதற்குரிய நானெறியாம் நற்றவப்பேற்றினை நல்குபவள். புகழ்மொழி தரும் பொற்பினள். சிறந்த மாறுத பண்புகளாம் அணியருள்பவள். தன் திருவடியே புகல் என்று கருதிப் போற்றும் புண்ணியர்க்கு என்றும் பேரின்பம் பயக்கும் இனிய சொல்லையருளும் இறைவி அவளென்று நவின்றனர். இன்சொல் என்பது எதுகை நோக்கி இஞ்சொல் என்றுயிற்று. அளிக்கும் - அருளும். இறைவி - தலைவி. அளி - கருணை. (சுடு)

1086. ஆருயி ராயும் அருந்தவப் பெண்பிள்ளை
காரியல் கோதையள் காரணி நாரணி
ஊரும் உயிரும் உலகும் ஒடுக்கிடுங்
கோரியென் உள்ளங் குலாவினின் றூளே.

(ப. இ.) ஆருயிர்களின் நிலைமைகளை இடையறாது நோக்கிக்கொண்டிருக்கும் தவமுடைய பெண்ணணங்கு. மழைபோன்ற கரிய பெரிய கூந்தலையுடையவள். உலகம் அனைத்திற்கும் அன்பாயிருப்பவள், பேரூழிக் காலத்து ஊர் உடல் உலகு அனைத்தினையும் ஒடுக்கும், உட்குருவத்தை உடையவள், அவள் என் உள்ளம் புகுந்து வீற்றிருந்தருளினள். கோரம் - அச்சம் ; உட்கு. கோரி - அச்சப்படுத்தும் திருவுருவுடையவள். நாரணி - அன்புடையவள். நார் - அன்பு. நாரணன் : சிவன்பெயர்.

(அ. சி.) கோரி - ஒடுக்குங் காலத்து எடுக்கும் கோர உருவம் உடையவள். (சுசு)

1087. குலாவிய கோலக் குமரியென் னுள்ளம்
நிலாவி யிருந்து நெடுநாள் அணைந்தும்
உலாவி இருந்துணர்ந் துச்சியி னுள்ளே
கலாவி யிருந்த கலைத்தலை யாளே.

(ப. இ.) எளியேனுடன் அளவளாவியருளும் அழகிய கன்னி என் னுள்ளத்துத் திகழ்ந்து தொன்றுதொட்டுக் கலந்து (புணர்ந்து) வீற்றிருந் தருளி, செவ்வியினை உணர்ந்து, உச்சித்தொளியினுள் கலந்து நிற்கும் கலைமுதல்வியாவள். செவ்வி - பரிபாகம்.

(அ. சி.) கலாவி - கலந்து. கலைத்தலை - சந்திரகலை அணிந்த தலை அல்லது 64 கலைகளை விரித்தவள். (கூஎ)

1088 கலைத்தலை நெற்றியோர் கண்ணுடைக் கண்ணுள்
மூலைத்தலை மங்கை முயங்கி இருக்குஞ்
*சிலைத்தலை யாய தெரிவினை நோக்கி
அலைத்தபூங் கோட்பினள் அங்கிருந் தாளே.

*(ப. இ.) வாலறிவாம் திருவுருவில் அறிவடையாளமாகிய நெற்றிக் கண்ணையுடையவன் சிவன். அவன் ஆருயிர்களுக்குக் கண்போன்றவன். அவன் இடப்பால் வீற்றிருந்து அருளும் முலைமங்கை திருவருளம்மை. அவளுடன் சிவன் கலந்துநிற்கின்றனன். பொன்மலையை வில்லாகக் கொண்டவன். அவனது நாட்டத்தையே அம்மைநோக்கியருளித் துவ ளும் அழகிய இடையினையுடையள். அவ்வம்மை உள்ளத்துறைந்தனள். கண் - கண்போன்ற சிவன். அலைத்த - துவண்ட. பொன்மலை வில் : பொன்மலையிற் பிறந்த மூங்கிலை வில்லாக உடையவன். மலை இடவாகு பெயராக மூங்கிலைக் குறிக்கும். 'இமையவில்' (கலி. கூஅ) என்பதற்கு நச்சினார்க்கினியர் வரைந்த உரை காண்க. (கூஅ)

1089. இருந்தனள் ஏந்திழை என்னுள்ள மேவிப்
[1]பொருந்திய நால்விரல் புக்கனள் புல்லித்
திருந்திய தாணுவிற் சேர்ந்துடன் ஒன்றி
அருந்தவ மெய்தினள் ஆதியு ளாளே.

(ப. இ.) முதல்வி என்னுள்ளம் பொருந்தி நால்விரல் அளவின தாகிய உயிர்ப்புடன் சேர்ந்து, மூலக்கனலை எழுப்பிப் பயிற்சியால் செம்மையுற்ற நடுநாடியிற் சேர்ந்து உடன்கலந்து இருந்தனள். அவளரு ளால் அருந்தவத்தை எய்துவித்தனள், அவளே ஆதி என்னும் இறைவி யாவள். உயிர்ப்பு - பிராணன்; தாணு - நடு நாடி ; வீணைத்தண்டு.

(அ. சி.) பொருந்தினள் நால்விரல் - நால்விரல் அளவுள்ள பிராண வாயு. (கூக)

1090. ஆதி யனாதி யகாரணி காரணி
சோதிய சோதி சுகபர சுந்தரி
மாது சமாதி மனோன்மணி மங்கலி
ஓதியென் னுள்ளத் துடனியைந் தாளே.[2]

(ப. இ.) தொடக்க நடப்பாற்றலாகிய ஆதியும், தொன்மை வினப் பாற்றலாகிய அனாதியும், தனக்கொரு காரணம் இல்லாதவளும் தான்

(பாடம்) 1. பொருந்திரு.
2. அந்தணர். திருக்குறள், கிசகூ.

எல்லாவற்றுக்கும் காரணமாயுள்ளவளும், ஒளிக்குள் ஒளியாய்த் திகழ் பவளும், பேரின்பமருளும் அழகிய முதல்வியும், இனிய அமைதி தருபவ ளும், மனத்தின்கண் சிவநினைப்பை நிலைபெறச் செய்பவளாகிய மனோன் மனியும், மங்கல குணமுடையவளும் ஆகிய இறைவி திருவைந்தெழுத்தை உயிருக்கு உயிராய்நின்று ஓதுவித்து உடனாக இருந்தருளினள். அகாரணம் - காரணமின்மை. உடனியைதல் - இயைந்து இயக்கு வித்தல்.

(அ. சி.) அகாரணகாரணி - தனக்கொரு காரணம் இல்லாதவள்.

**1091.** இயைந்தனள் ஏந்திழை என்னுள்ள மேவி
நயந்தனள் அங்கே நமசிவ என்னும்
அயன்றனை யோரும் பதமது பற்றும்
பெயர்ந்தனள் மற்றும் பிதற்றறுத் தாளே.

(ப. இ.) முதல்வி என்னுள்ளம் பொருந்தி எளியேன் 'நமசிவ' என்னும் தமிழ்மறையை மேற்கொண்டு ஒழுகும் பரிபாகமாகிய செவ் வியை விழைந்தனள். அதனை ஓதுவித்தனள். அப்பொழுதே நிலையிலாப் பொருள்களின் பற்றுக்களையும் நீக்கியருளினள். மேலும் பிறப்புத் துன்பத்தையும் அறுத்தருளினள். நமசிவ: என்பது முறையே அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு பொருள்களையும் குறிக்கும் மறை மொழிக் குறிப்பாகும். "நமசிவய' என்றிருப்பின் அறம்பொருள் இன்பம் வீடு பேறு என்னும் ஐந்து பொருள்களையும் குறிக்கும் குறிப்பாகும். அயன்: ஈண்டு மறையினை ஆகுபெயராகக் குறிக்கும். பெயர்ந்தனள்: பிறவினை தன்வினையாக நின்றது. (சக)

**1092.** பிதற்றிக் கழிந்தனர் பேதை மனிதர்
முயற்றியின் முத்தி அருளும் முதல்வி
கயற்றிகழ் முக்கண்ணுங் கம்பலைச் செவ்வாய்
முகத்தருள் நோக்கமும் முன்னுள்ள தாமே.[1]

(ப. இ.) உண்மை அறிவு இல்லாத மாந்தர் பயனிலவாகிய சொற் களைப் பிதற்றி வாழ்நாளை வீழ்நாள் ஆக்கினர். நானெறியில் விடாது முயல்வார்க்கு வீடுபேற்றையருளும் முதல்விக்கு அருள்பொழியும் முக் கண்ணும், முதல் ஒலியாகிய நாதத்துக்கும் ஒலியருளும் செவ்விய திரு வாயும், இன்பத் திருவருள் பொழியும் திருமுகமும், இயல்பாகவே தொன்மையவாய் உள்ளன.

(அ. சி.) முயற்றி - முயற்சி. கம்பலை - ஒலி. (சஉ)

**1093.** உள்ளத் திதயத்து நெஞ்சத் தொருமூன்றுள்
பிள்ளைத் தடமுள்ளே பேசப் பிறந்தது
[2]வள்ளற் றிருவின் வயிற்றினுள் மாமாயைக்
கள்ள ஒளியின் கருத்தாகுங் கன்னியே.

---

1. அரும்பய. திருக்குறள், ககஅ.
,, தொழுது. அப்பர், நி. உக - அ.
2. (பாடம்) வள்ளத் திருவினை

(ப. இ.) எண்ணம் மனம் இறுப்பு என்னும் மூன்றும் முறையே சித்தம் மனம் புத்தி என வழங்கப்படும். இம்மூன்றும் முதல்வி இயைந்தியக்க இயங்குவன. அதனுல் ஆண்டு உறைகின்றனள் என்ப. இடப்பால் வலப்பால் நடுநாடி என்னும் மூன்றனுள் பிள்ளைத் தடமெனப் பேசப் பெறும் நடுநாடியினுள் அகவொளி தோன்ற அருளியவளும் அவளே. வள்ளலாகிய சிவபெருமான் திருவடியுணர்வாகிய அகத்தினுள் காரண மாயையின்கண் மறைந்துநின்று அதைக் கொண்டும் ஒளியருளும் திருவுள்ளம் சேர் அம்மை கன்னித் தெய்வமாகும்.

(அ. சீ.) ஒரு மூன்று - இடகலை, பிங்கலை, சுழுமுனை. பிள்ளைத் தடம் - சுழுமுனை. (சஉ)

1094. கன்னியுங் கன்னி அழிந்திலள் காதலி
துன்னியங் கைவரைப் பேற்றனள் தூய்மொழி
பன்னிய நன்னூற் பகவரும் அங்குள
என்னேஇம் மாயை இருளது தானே.[1]

(ப. இ.) ஆணைசேர் தெய்வங்களைப் படைத்தும் அருளம்மை கன்னித் தன்மை நீங்கிலள். அஃதாவது அம்மை திருவுள்ளத்தால் - நினைப்பால் படைக்கின்றமையின் எவ்வகை மாறுதலும் எய்திலள் என்பதாம், ஆருயிர்களிடத்துத் துன்பம் துடைக்கும் பெருங்காதலுடைய அம்மை ஆருயிர்களுடன் ஒன்றுய்க் கலந்து அயன், அரி, அரன். ஆண்டான். அருளோன் என்னும் ஐவரை (அயன் அரி, அரன், ஈசுரன். சதாசிவன்) ஈன்றருளினள். தூய்மை நிறைந்த மொழிகள் அடங்கிய மறையும் முறையும் என்னும் தமிழ்வேதாகமங்களை மெய்யடியார்கள்வழி அருளிச்செய்தனள். இத்தகைய இடத்தே விளக்கடியில் இருள் இருப்பதுபோல் செருக்கு, சினம், சிறுமை, இவறல், மாண்பிறந்த மானம். மாணுவகை என்னும் அறுவகை மாயை ஆற்றலும் நமக்குப் பகையாய் நம்முடனிருக்கின்றன, அறியாமையாகிய இருளும் ஆண்டுள்ளது. இருளுடன் கூடியதனுல் ஒளிக்குத் துணையாம் மாயையும் இருளாய் நிற்கின்றது.

(அ. சீ.) ஐவர் - அயன், அரி, அரன், ஈசன். சதாசிவன். நன்னூல் - 64 கலைகள். பகைவர் - காமக் குரோத முதலியவைகள். (சச)

1095. இருளது சத்தி ஒளியதெம் அண்ணல்
பொருளது புண்ணியர் போகத்துள் இன்பம்
தெருளது சிந்தையைத் தெய்வமென் றெண்ணில்
அருளது செய்யும்எம் ஆதிப் பிரானே.

---

1. சிவஞ்சத்தி. சிவஞான சித்தியார், உ. சு-இ.
,, நோக்காது. சிவஞானபோதம், க. உ - கூ.
,, நீடு. விஞ வெண்பா, க.
,, ஒளிக்கு. கொடிக்கவி, க.
,, பாலனே, அப்பர், சு. அஅ - க,
,, ஏயி ,, இ. கூக - க.

(ப. இ.) அறிவிலாற்றலாகிய மாயையினைத் தொழிற்படுத்தும் திருவருளம்மையின் தன்மை நிறம் இருளாகும். நம் அண்ணலாகிய சிவபெருமான் வெளிச்சம் தருவதாகிய ஒளிப்பொருளாவர் புண்ணியப் பேறுடையார்க்குப் பொருளாகிய பயனுவது திருவடிப் பேரின்பம். மெய்யுணர்ந்த நாட்டத்தை (சிந்தை)ச் சிவபெருமான் இருப்பிடமாகக் கொண்டு ஒழுகுபவர் உள்ளத்துள் ஆதிப்பிராளுர் நிறைந்த அருளினைப் புரிந்தருளுவர்.

(அ. சி.) இருளது சத்தி - சத்தியின் நிறம் கறுப்பு. (சஇ)

1096. ஆதி அளுதியும் ஆய பராசத்தி
பாதி பராபரை மேலுறை பைந்தோடி
மாது சமாதி மளேன்மனி மங்கலி
ஓதுமென் னுள்ளத் துடன்முகிழ்த் தாளே.

(ப. இ.) தொடக்கமும் தொன்மையும் ஆகிய திருவருள் செம்பொருளாம் சிவனுடன் செம்பாதி உடம்பினள் ஆவள். சிவவுலகத்து வீற்றிருப்பவள்; அழகும் அமைதியும் மனத்தை இயைந்தியக்கலும் நல்மைப்பாடும் உடைய அம்மை, 'நமசிவய' என்று நாவழுந்த ஓதும் தம்மகத்து உடனுறைந்தருள்வள். முகிழ்த்தல் - தோன்றல்; உறைதல்.

(அ. சி.) பாதிபராபரை - சிவத்தில் பாதி ஆனவள்; இடப்பாகம் பெற்றவள். (சக)

1097. ஓதிய வண்ணங் கலியின் உயர்கலி
ஆதியில் வேதமே யாமென் றறிகிலர்
சாதியும் பேதமுந் தத்துவ மாய்நிற்பள்
ஆதியென் ருேதினள் ஆவின் கிழத்தியே.

(ப. இ.) நல்லார் உளத்தினின்று ஓதியருளிய முறைப்படி நூல்களிலெல்லாம் சிறந்த நூல் தொடக்கமாகிய அறநூலாகும். இவ்வுண்மையினைச் சிலர் அறியாதிருக்கின்றனர். இனங்களும் அவற்றின் வேறுபாடுகளும் அகன்று மெய்ம்மையாய் நிற்பவள் ஆதி என்னும் அருளம்மையாகும். இவ் வுண்மையினை உயிர்க்குயிராகிய திருவருளம்மை ஓதியருளினள். ஆவின் கிழத்தி - உயிர்க்குயிராகிய அம்மை. கிழத்தி - உரிமையுடையவள். ஆ - உயிர். (சன)

1098. ஆவின் கிழத்திநல் லாவடு தண்டுறை
நாவின் கிழத்தி நலம்புகழ்ந் தேத்திடுந்
தேவின் கிழத்தி திருவாஞ் சிவமங்கை
மேவுங் கிழத்தி விளைகடிந் தாளே.

(ப. இ.) ஆருயிர் அனைத்தையும் அடிமையாகக் கொண்டருளும் உடையாள்; நாவுக்கரசியார்; ஆவடுதுறையில் எழுந்தருளியிருப்பவள். பொருள்சேர் புகழாம் நன்மையினை மெய்யன்பர்கள் போற்றும் அருளோளுகிய சதாசிவக் கடவுளின் அருளாற்ற (மனைவி)லாம் அம்மை. திருவடிப் பேரின்பத்து நல்லாரைக் கூட்டுவிக்கும் சிவமங்கை. எங்கும்

பொருந்தி உரிமை பூண்டருளும் முதல்வி. இவளே ஆருயிர்களின் வினையை அகற்றினள்.

(அ. கீ.) ஆவின் கிழத்தி - உயிர்களின் தலைவி. நாவின் கிழத்தி - வாணி. தேவின் கிழத்தி - சதாசிவ பத்தினி. (சஅ)

1099. வினைகடிந் தாருள்ளத் துள்ளொளி மேவித்
தனையடைந் தோர்க்கெல்லாந் தத்துவ மாய்நிற்பள்
எனையடி மைகொண்ட ஏந்திழை ஈசன்
கணவனைக் காண அருளியு மாமே.[1]

(ப. கீ.) இருள்சேர் இருவினையும் சேராத நல்லார் உள்ளத்து உணர்வொளியாய்த் திகழ்பவள் திருவருளம்மை. அவளே தன் திருவடியைத் தலைக்கூடினுர்க்கெல்லாம் சென்றடையாத் திருவாகிய தத்துவமாகு நிற்பள். அவளே எளியேனை அடிமைகொண்டருளிய திருவார் செல்வி. சதாசிவக் கடவுளாகிய அருளோனையும் ஈன்றவள். அவ்வருளோனைக் கணவனுகக் கொண்டவள் (1154). அத்தகைய அம்மை தொன்மைய ளாவள். தொன்மை - அனுதி.

(அ - கீ) கண...மே-தன் கணவனுகிய சதாசிவம் முதல் ஐவரைப் பெற்றதால் அநாதியும் ஆவள். (சக)

1100. ஆதி அனுதி அகாரணி காரணி
வேதம தாய்ந்தனள் வேதியர்க் காய்நின்ற
சோதித் தனிச்சுடர் சொரூப மாய்நிற்கும்
பாதி பராபரை பன்னிரண் டாதியே.

(ப. இ.) அம்மை தொன்மையும் தொடக்கமாய்த் தனக்கொரு காரணமில்லாதவளும் தான் எல்லாவற்றுக்குங் காரணமாயுள்ளவளு மாவள். அறவோர் பொருட்டு அறநூலை ஆய்ந்தருளினள். நிலைபெற்று நிற்கும் ஒப்பிலாப் பேரொளிச்சுடராய் நிற்பவள். பன்னிரு கலையாகத் திகழும் சிவபெருமானுக்குப் பாதித் திருமேனியாகவுடையவள். அவளே நடப்பாற்றலாகிய ஆதியாவள். வேதம்-அறநூல். வேதியர் - அறவோர்.

(அ. கீ.) பன்னிரண்டு-ஆதாரம் 6, நிராதாரம் 6 ஆக 12 (இ0)

---

1. மாலினை மாலுற. சு. அஅ - க.
,, ஏயி லானென். இ. கக - க.
,, மின்னிடைச். அ, திருப்பொற்சுண்ணம், கஉ.
,, கூவளத்த. அ, திருக்கோவையார், ககஉ.

# 7. பூரண சத்தி

**1101.** அளந்தேன் அகலிடத் தந்தமும் ஆதியும்
அளந்தேன் அகலிடத் தாதிப் பிரானை
அளந்தேன் அகலிடத் தாணெடு பெண்ணும்
அளந்தேன் அவனருள் ஆய்ந்துணர்ந் தேனே. (க)

(ப. இ.) திருவருள் துணையால் விரிந்த நிலவுலகத்துக்குரிய ஒடுக்கமும் தோற்றமும் சார்பளவையான் அளந்தேன். அதுபோல் ஒருவனே தேவன். அவனே ஆதிப்பிரான். அவனையும் உணர்ந்தேன். ஆண் பெண் என்னும் இரண்டின் தன்மைகளையும் ஆய்ந்தேன். அவன் திருவருளாகிய சிவசத்தியின் உண்மையினையும் உணர்ந்தேன். (க)

**1102.** உணர்ந்திலர் ஈசனை ஊழிசெய் சத்தி
புணர்ந்தது பூரணம் புண்ணியர் தங்கள்
கணங்களைத் தன்னருள் செய்கின்ற கன்னி
கொணர்ந்த வழிகொண்டு கும்பக மாமே. (உ)

(ப. இ.) ஆண்டவனைத் தோற்றுவிக்கும் அருளாற்றலாகிய சத்தியின் மெய்ம்மையை உணர்கிலர். அவ்வாண்டவனை அம்மைகூட அவர் எங்கும் நிறைந்தருளினர். சிவவழிபாடியற்றும் சிவபுண்ணியப் பேறுடையாரின் திருக்கூட்டங்களைத் தன் திருவருள் பேற்றில் ஆழ்த்தியருளிய கன்னியாவள். கொண்டுவந்த முறையே உள்ளத்தால் ஒடுக்கமும் செய்வள்.

பூரணம் - நிறைவு. கும்பகம் - ஒடுக்கம்.

**1103.** கும்பக் களிறைந்துங் கோலொடு பாகனும்
வம்பில் திகழும் மணிமுடி வண்ணனும்
இன்பக் கலவி இனிதுறை தையலும்
அன்பிற் கலவியு ளாயோழிந் தாரே. (கூ)

(ப. இ.) மத்தகம் பொருந்திய யானையை ஒத்த புலன்களைந்தும் அப் புலன்களை அடுத்துச் செலுத்தும் மனமும் அவற்றைக் கருவியாகக் கொண்டு ஒற்றித்துக் காணும் ஆவியும், திருவடி அன்பினுற் கலந்து அடங்கின. புதுமையாகக் காணப்படும் மணிதிகழ்கின்ற திருமுடியினையுடைய சிவபெருமானும், அவனுடன் ஆருயிர் இன்புறுதற் பொருட்டுக் கலந்துஇன்புற்றுறையும் தையலாகிய திருவருளம்மையும் ஆருயிர் புரிந்துள்ள அன்பினுல் அவ்வுயிர்களுடன் வேறறக் கலந்து நின்றனர்.

(ச. சி.) கும்பக் களிறு - இந்திரியம். கோல் - மனம். பாகன் - ஆன்மா. மணிமுடி வண்ணன் - பரமசிவன். இனிதுறை தையல் - பூரணசத்தி. (கூ)

**1104.** இன்பக் கலவியில் இட்டெழு கின்றதோர்
அன்பிற் புகவல்ல னும்எங்கள் அப்பனும்
துன்பக் குழம்பில் துயருறும் பாசத்துள்
என்பிற் பராசத்தி என்னம்மை தானே.

(ப. இ.) கருவாய்க் கிடந்து கருக்குழியில் துன்புறுங் காலத்து நடுநாடியின்கண் நடப்பாற்றலாகிய அம்மை கலந்திருந்து காத்தருளு கின்றனள். பின் திருவடியின்பில் கலத்தற்பொருட்டு ஆவிகளின் அன் பினை எழச் செய்து அவ்வன்பு வாயிலாக நம் ஆருயிர்த் தந்தையாகிய சிவபெருமானும் எழுந்தருள வல்லனுவன். நடப்பாற்றல் - திரோதான சத்தி; ஆதி.

• (அ. சி.) துன்பக் குழம்பு - கருப்பாசயம். பாசம் - சரீரம். (சு)

**1105.** என்னம்மை என்னப்பன் என்னுஞ் செருக்கற்
றுன்னம்மை ஊழித் தலைவனும் அங்குளன்
மன்னம்மை யாகி மருவி யுரைசெய்யும்
பின்னம்மை யாய்நின்ற பேர்நந்தி தானே.[1]

(ப. இ.) நிலையாத உடலின் தொடர்பாக என் அம்மை எனவும் என் அப்பன் எனவும் கூறப்படும் சொல் செருக்கினை உண்டாக்கும். அது பிறப்புக்கு வித்தாகும். ஆதலால் அதனை அறுத்தல் வேண்டும். அம்மையும் அப்பனும் நம்போன்ற உயிரினங்களே. நமக்கும் அவர்கட்கும் அனைத்துயிர்க்கும் நிலைபெற்ற உயிர்த்தொடர்பாம் அம்மையும் அப்பரும் அங்கு உளர் அவ் விருவரும் உன்னித்து (தியானித்து)த் தொழும் ஊழித் தலைவராவர். ஆருயிரின்கண் மருவிப் புகழ்ந்து சொல்லப்படும் புணர்ப்பாம் திருவடிப்பேறுய் நின்ற பெரும்பொருள் சிவபெருமானுகும். பின்: பின்னல் (முதனிலைத் தொழிற்பெயர்). எல்லார்க்கும் அம்மை யப்பர் எண்குணஞ்சேர் முக்கண்ணர், நில்லா வுடலுறவு நீக்கு. (இ)

**1106.** தார்மேல் உறைகின்ற தண்மலர் நான்முகன்
பார்மேல் இருப்ப தொருநூறு தானுள
பூமேல் உறைகின்ற போதகம் வந்தனள்
நீமேல் உறைகின்ற நாயகி ஆணையே.

(ப. இ.) உலகினைப் படைத்தற்பொருட்டுத் திருமாலின் குளிர்ந்த கொப்பூழ்த் தாமரையின்கண் தோன்றியவன் நான்முகன். அத் தாமரை நிலை ஆவிகளிடத்து மூலத்துக்குமேல் கூறப்படும். அதற்கு நூறு இதழ்கள் உண்டு. நெஞ்சத் தாமரைமேல் உறைகின்ற உணர்வுச் செல்வி எழுந் தருளினள். அவள் எழுந்தருள்வதும் தூய நாவின்கண் உறைகின்ற நாவரசியின் ஆணையேயாம். போதகம் - ஞானம்; திருவடி உணர்வு. நாவரசி - வாகீசுவரி. • (சு)

---

1. முன்னம். அப்பர், சு. உடு - எ.
,, அம்மையப்ப. திருக்களிற்றுப்படியார், க.
,, அன்னே. பட்டினத்தடிகள். சo.

1107. ஆணைய மாய்வருந் தாது ளிருந்தவர்
மாணைய மாய மனத்தை ஒருக்கிப்பின்
பாணைய மாய பரத்தை அறிந்தபின்
தாணைய மாய தலைதனன் தானே.

(ப. இ.) மெய்ம்மையாக அன்பர் அகத்தாமரையின்கண் வீற்றிருப் பவர் அம்மையப்பராவர். மிகுதியாகத் தோன்றும் ஐயம்திரிபு முதலிய குற்றங்களே அகற்றி மனத்தை ஒருமுகப்படுத்தி முதலோசையின் உயிர்ப் பாய் விளங்கும் முழுமுதலே உணர்ந்தபின் திருவடி இன்பங் கிடைக்கப் பெறும். அது கிடைக்கப்பெற்றூர் அத் திருவடிக்கு இருக்கையாவர்.

(அ. சி.) ஆணையம் - உண்மை. தாதுள் - ஆதாரத் தாமரையுள். மாணையமான - ஐயம், விபரீதம் முதலிய குற்றங்கள் பொருந்திய. பாணைய மாய - இனிய நாதவடிவனை. தாணையமாய தன் ஆதனம் - திருவடி இன்பம்.
(எ)

1108. தானே எழுந்தஇத் தத்துவ நாயகி
வானோர் எழுந்து மதியை விளக்கினள்
தேனோர் எழுகின்ற தீபத் தொளியுடன்
மானே நடமுடை மன்றழி யீரே.

(ப. இ.) தன்பாலுள்ள அளவிலாப் பேரருளால் மாயாகாரியத் தொகுதிகளாகிய தத்துவங்களே நடத்தும் தலைவி, திருவருள் வெளியில் செவ்விதாக எழுந்து அறிவை விளக்கியருளினள். பேரின்பத்தேனைத் தருதற்பொருட்டுத் திருவடியுணர்வுடன் தோன்றும் பேரொளியைத் தாங்கி உயிருணர்வை மன்றமாகக்கொண்டு ஆடுங்கூத்தின் உண்மை உணரீர்.
(அ)

1109. அறிவான மாயையும் ஐம்புலக் கூட்டமும்
அறிவான மங்கை அருளது சேரிற்
பிறியா அறிவறி வாருளம் பேணும்
நெறியாய சித்த நினைந்திருந் தாளே.

(ப. இ.) உணர்வுமெய்யெனப்படும் அறிவாயமெய் ஏழும், ஐம்புலக் கூட்டமாகிய உடல்மெய் இருபத்துநான்கும் ஆவி பேரறிவே உருவான பெருமாட்டியைச் சேர்ந்தபொழுது, அத் திருவருளின் திருவுள்ளப்படி தன்னெறிப்பட்டுச் செல்லும். சேர்ந்தார் பிரிவிலாத அறிவு அறிவாம் திருவினராவர். அவர்களைத் திருவருள் சிறப்பாக நன்னெறிப்படருமாறு திருவுள்ளம் கொள்ளும். அறிவான மாயை - அறிவை விளக்குவதற்குக் கருவிபான அசுத்த தத்துவம்.[1] ஐம்புலக் கூட்டம் : பிரகிருதிமாயை.

(அ. சி.) அறிவான மாயை - மனம். அறிவான மங்கை அருள் - திருவருட் சத்தி.
(கூ)

1. மாயா தனுவிளக்கா. சிவஞான போதம், சூ. உ - கி.
.. விடிவா மளவும். திருவருட் பயன். கூ. இருள் - கo.

1110. இரவும் பகலும் இலாத இடத்தே
குரவஞ்செய் கின்ற குழலியை நாடி
அரவஞ்செய் யாமல் அருளுடன் தூங்கப்
பருவஞ்செய் யாததோர் பாலனு மாமே.[1]

(ப. இ.) நினைப்பும் மறப்பும் இல்லாமற் செய்யும் திருவடியுணர் விடத்து, அருள் விளையாட்டு நிகழ்த்தும் ஆருயிர்க் குழவியை ஆராயின் அவ்வுயிர் ஐந்தெழுத்துணர்வேயாக நிற்கும். வேறு எவ்வகை ஓசையும் எழாது. அருளுடனே தங்கிநிற்கும் அவ்வுயிர் என்றும் இளமைநீங்காது ஒருபடித்தாக இருக்கும். அதனால் பருவம் செய்யாத பாலன் என்றார்.

(அ. சி.) இரவு...தே - நினைப்பு மறப்பு இல்லாமல். குரவம் - விளையாட்டு. அரவம் செய்யாமல் - உதடு அசையாமல். பருவம். .தோர் - பாலன், குமரன் முதலிய பருவங்கள் இல்லாததோர். (கo)

1111. பாலனு மாகும் பராசத்தி தன்னொடு
மேலணு காவிந்து நாதங்கள் விட்டிட
மூலம தாமெனும் மூத்திக்கு நேர்படச்
சாலவு மாய்நின்ற தற்பரத் தாளே.

(ப. இ.) நீங்கா இளமைபெற்ற ஆருயிர் திருவருளம்மையுடன் நாத விந்துக்கள் என்று பேசப்பெறும் ஓசையும் ஒளியுமாகிய முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்துசெல்ல முழுமுதற் சிவபெருமான் திருவடியைத் தலைக்கூடும். அவ்வாறு நிறைந்த திருவருளைச் செய்யும் அம்மை முழுமுதல்வி. தற்பரத்தாள் - முழுமுதல்வி. (கக)

1112. நின்ற பராசத்தி நீள்பரன் தன்னொடு
நின்றறி ஞானமும் இச்சையு மாய்நிற்கும்
நன்றறி யுங்கிரி யாசத்தி நண்ணவே
மன்ற னவற்றுள் மருவிடுந் தானே.[2]

(ப. இ.) முழுமுதற் சிவனை விளக்கமுறச் செய்யும் தொழிலாற்றல் வெளிப்பட, கூத்தப்பெருமானுகிய சிவன் அவ்வாற்றலுடன் கலந்தருள்வன். நிலைபெற்ற திருவருளாற்றல் அச்சிவத்துடன் அறிவாற்றலாக விழைவாற்றலாக அமைந்துநிற்கும். அறிவாற்றல் - ஞானசத்தி. விழைவாற்றல் - இச்சாசத்தி.

(அ. சி.) நன்று...சத்தி - ஈசனை நன்கு புலப்படுத்தும் கிரியாசத்தி. மன்றன் - கூத்தப்பெருமான். (கஉ)

1113. மருவொத்த மங்கையுந் தானும் உடனே
உருவொத்து நின்றமை ஒன்றும் உணரார்
கருவொத்து நின்று கலக்கின போது
திருவொத்த சிந்தைவைத் தெந்தைநின் றானே.

1. மன்றுளே. கஉ. திருநீலகண்டக் குயவனார், ஊஉ.
2. ஒன்றதா. சிவஞான சித்தியார், க. கூ - ச.

(ப. இ.) மலர் மணம்போன்று[1] அடங்கித்தோன்றும் சிவனும் அருளும் ஒருருவாய் ஒத்துநிற்கும் உண்மையினை உணரார். கருவுக்கு உயிராய் நின்று அக் கருவினைத் தொழிற்படுத்தியபோது எந்தையாகிய சிவபெருமான் அவ்வுயிர் தன் திருவடியைச் சேரவேண்டுமென்று திருவுள்ளங்கொண்டு நின்றனன். தவமிருந்து மகப்பெறுவார் பெற்ற ஞான்றே தக்க மணவாளரை நாடுதல் இதற்கு ஒப்பாகும்.

(அ. சி.) மரு . வாசனை. உரு ஒத்து - உருவ வேறுபாடு இல்லாமல். கருஒத்து - கருவிலேயே உள்புகுந்து. திரு ஒத்த - முத்தி அடையவேண்டும் என்ற. (கக)

1114. சிந்தையின் உள்ளே திரியுஞ் சிவசத்தி
விந்துவும் நாதமு மாயே விரிந்தனள்
சந்தர பூமி சடாதரி சாத்தவி
அந்தமொ டாதிய தாம்வண்ணத் தாளே.[2]

(ப. இ.) திருவருள் சிவபெருமான் திருவுள்ளத்து அன்பாகிய விழைவாற்றலாய் ஒருபடித்தாய்த் திகழ்வள். ஒளியும் ஓசையுமாகிய விந்து நாதங்களைத் தொழிற்படுத்தி அவை தானாகவே நின்றனள். திங்கள் மண்டிலத்தும் வீற்றிருப்பள், திருச்சடையை உடையவள். தலைமைப் பண்பாம் அறிவாகவே அமைந்தவள், முடிவும் முதலுமாய் உலகம் விளங்குதற்கு நிலைக்களமாகவுள்ளவள்.

சடாதரி - திருச்சடையை உடையவள். சாத்தவி - தலைக்குணம் வாய்ந்தவள். (கச)

1115. ஆறி யிருந்த அமுத பயோதரி
மாறி யிருந்த வழியறி வாரில்லை
தேறி யிருந்துநல் தீபத் தொளியுடன்
ஊறி யிருந்தஅள் உள்ளுடை யார்க்கே.

(ப. இ.) திருவடியுணர்வு நிறைந்து அடங்கியிருந்த திருமுலையை உடையவள். சிவனும் சிவையும் பொருளால் ஒன்றாய், தோற்றத்தால் பிரிப்பில்லாத வேறுபாடற்ற இரண்டாய்விளங்கும் நிலைமையை அறிபவர் இல்லை. திருவடியே நிலைபேறுள புகலென்று தெளிந்திருந்து மெய்யுணர்வு விளக்கமாய்த் திகழும் ஆருயிர்கட்குப் பேரின்பமாம் இன்னமிழ்தாய் அதுவும் வற்றூறூற்றாய் அருளம்மை வீற்றிருப்பள்.

(அ. சி.) ஆறி இருந்த சிவத்துள் அடங்கி இருந்த. அமுத பயோதரி - அமிழ்தக் கடல் போன்றவள். (கஜ)

1116. உடையவன் அங்கி உருத்திர சோதி
விடையவன் ஏறி விளங்கி யிருக்குங்
கடையவர் போயிடுங் கண்டவர் நெஞ்சத்
தடையது வாகிய சாதகர் தாமே.

1. உற்ற ஆக்கையின், அ. அதிசயப் பத்து, க.
2. அவனவள். சிவஞானபோதம், க.

(ப. இ.) உலகியற் பொருள்களே உடைமையாகவும் ஆருயிர் இனங்களே அடிமையாகவும் என்றும் உடையவன் சிவன். அவனே தீயினுக்கும் ஒளிகொடுக்கும் அரனுக வுள்ளவன். ஆனேருகிய அறத்தினே ஊர்பவன்; சிறந்து மேனிலத்து விளங்கும் மெய்ப்பொருள். அறிவாற்றல் அன்புகளில் கடையவராயுள்ளார் இவ்வுண்மையினே அறியார். திருவருள் துணையால் அருட்கண்ணே கண்ணுகக்கொண்டு சிறப்புறக் காணும் நல்லார் தூயநெஞ்சத்துள் அவன் விளங்கியருள்வன். இவ் விளக்க முடையாரை அடியோகப் பயிற்சியினர் என்பர். நல்லார் - ஞானிகள். சாதகர் - பயிற்சியினர்.

(அ. சி.) அங்கி உருத்திரன் - தேயு தத்துவ அதிபதியாகிய உருத்திரன். விடையவன் - இடப இலக்கினத்துக்கு உரியவன். கடையவர் போயிடும் - அறிந்துகொள்ளாதவர் தவறிவிடுவர். நெஞ்சத்...சாதகர் - அடியோகர். (கசு)

1117. தாமேல் உறைவிடம் மாறித ழானது
பார்மேல் இதழ்பதி னேட்டிரு நூறுள
பூமேல் உறைகின்ற புண்ணியம்[1] வந்தனள்
பாமேல் உறைகின்ற பைங்கொடி யாளே.

(ப. இ.) திருவருளாற்றல் திங்கள் மண்டிலத்தும் ஞாயிற்று மண்டிலத்தும் உறையும் நிலையினே மேலிடத்து உறைவென்பர். திங்கள் மண்டிலத்தின் இதழ் கீழ்நோக்கியும், ஞாயிற்று மண்டிலத்தின் இதழ் மேல் நோக்கியும் நிற்பன. இவையே மாறிதழ்கள் என்று சொல்லப் பெறுவன. நிலத்தின்மேல் அத் திருவருள் தங்குவதற்குப் பதினெட்டிதழும் இருநூறிதழ்களும் ஆகிய தாமரைகள் உள்ளன. அப் பூமேலுறைவதற்குப் புண்ணியமாக எழுந்தருளினள், முறைமேல் நின்று நிறையும் பைங்கொடிபோன்ற அருளம்மை. பார்: முன்னது நிலம், பின்னது முறை.

(அ. சி.) மாறிதழ் - இதழ்கள். கீழ்நோக்கியும் மேல்நோக்கியும் இருப்பது. (கள)

1118. பைங்கொடி யாளும் பரம னிருந்திடத்
திண்கொடி யாகத் திகழ்தரு சோதியாம்
விண்கொடி யாகி விளங்கி வருதலாற்
பெண்கொடி யாக நடந்த துலகே.

(ப. இ.) அழகிய கொடிபோன்ற அருளம்மையும் சிவன் திருவுருக்கொண்டு விளங்கும் பொருட்டு ஆற்றல்மிக்க தொடர்ந்த பேரொளிப் பிழம்பாவள். அவள் விண்ணிலே காணப்படும் மின்னற்கொடிபோன்று விளங்கி வருகின்றனள். அதனுல் உலகனேத்தும் பெண்கொடி வண்ணமாய் நடந்து பிறங்குவவாயின. பிறங்குதல் - பொலிந்து விளங்குதல்.

'பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததை எண்ணில்,
மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதும் ஐயுறவில்லே'

என்னும் தமிழ்மறை இதனே நன்கு உணர்த்தும் (கூ. உசா-க). (கஅ)

1. விண்ணி. அப்பர், தி. சசு - இ.

1119. நடந்தது வம்மலர் நாவுடன் அஞ்சாய்
இருந்தனர் கன்னிகள் எட்டுடன் ஒன்றுய்ப்
படர்ந்தது தன்வழி பங்கயத் துள்ளே
தொடர்ந்தது உள்வழிச் சோதி யடுத்தே.

(ப. இ.) திருவருளால் நடந்துவரும் உலகத்து இதழ் ஒன்பது கொண்ட தாமரையுளது. அதன்கண் வீற்றிருப்பார் ஒன்பதின் ஆற்றலர்கள். இவரை நவ (878,893.) சத்தி என்பர். அகத் தாமரை ஆகிய நிலைக்களங்களில் நிகழும் நிகழ்ச்சிகள் திருவருள் ஆணைவழி நிகழ்வன. உச்சித் தொளைவழி ஒள்ளொளியைத் தொடர்வதுமாகும். 'சோதி உள்வழி' எனக்கொண்டு சிவனிருக்குமிடம் எனினுமாம். (கக)

1120. அடுக்குந் தாமரை ஆதி யிருப்பிடம்
எடுக்குந் தாமரை இல்லகத் துள்ளது
மடுக்குந் தாமரை மத்தகத் தேசெல
முடுக்குந் தாமரை முச்சது ரத்தே.

(ப. இ.) ஆருயிரை அடுத்திருக்கும் நெஞ்சத்தாமரை (அனாகதம்) ஆதியையுடைய சிவபெருமானின் உறைவிடம். நெஞ்சினின்றும் மேலுயர்த்தும் நிலைக்களம் இல்லகமாகிய மிடறாகும். உயிரமிழ்தாகிய வித்துமடுக்கும் தாமரை புருவநடுவாகும். அப் புருவநடுவிலே ஆருயிரைச் செல்லுமாறு முடுக்கும் தாமரை மூலமாகும். மூலம் - மூலாதாரம். இது முச்சதுரம் உடையது. சதுரம் எனினும் சதிரம் எனினும் ஒன்றே.

(அ. சி.) அடுக்குந் தாமரை-ஆஞ்ஞை. எடுக்குந் தாமரை-விசுத்தி. மடுக்குந் தாமரை - அனாகதம். முடுக்குந் தாமரை - மணிபூரகம் (Solar Pluxes). (உ0)

1121. முச்சது ரத்தே எழுந்த முளைச்சுடர்
எச்சது ரத்தும் இடம்பெற ஓடிடக்
கைசசது ரத்துக் கடந்துள் ஒளி பெற
எச்சது ரத்தும் இருந்தனள் தானே.

(ப. இ.) முச்சதுரமாகிய மூலத்திடத்து எழுந்த சுடர் எங்கும் இடம்பெற்று விளங்கும்படி செல்லவும், அழகிய பெருமை மிக்க இவ் வொளி எய்தும்படியும் எல்லா இடங்களிலும் திருவருளம்மை நிறைந் திருந்தனள்.

(அ சி.) முச்...சுடர் - மணிபூரகத்தினின்றுமே எவ்விடத்துக்கும் சத்திபரவுதலால் முளைச்சுடர் எனப்பட்டது. எச் சதுரம் - எல்லா இடத்திலும் கைச் சதுரம் - பிரமரந்திரம். (உக)

1122. இருந்தனள் தன்முகம் ஆறுடு நாலாய்ப்
பரந்தன வாயு திசைதிசை தோறுங்
குவிந்தன முத்தின் முகவொளி நோக்கி
நடந்தது தேறல் அதோமுகம் அம்பே.

(ப. இ.) புலம் பத்தாகலின் அம்மையும் பத்துத் திருமுகங்களுடன் வீற்றருளினள். அம்மையின் உயிர்ப்பே[1] ஆருயிர்க்குக் காற்றுக வழங்கலின் காற்றுக எங்கும் விரவி இருந்தனள். அருளொளி அத்திரு முகத்தின்கண் ஒருங்கு திரண்டு பொலிந்து விளங்கிற்று. அத் திருமுகத்து ஒளியின் துணையால் அம்புபோல் விரைவாய் இன்பம் பொழியும் கீழ்முக நோக்கி ஆருயிர் நடந்தது. புலம் திசை.

(அ. சி.) தன்...நாலும் - முகங்கள் பத்து. வாயு - சத்தி உயிர்ப்பு. அதோமுகம்-கீழ்முகம். (உஉ)

1123. அம்பன்ன கண்ணி அரிவை மனேன்மனி
கோம்பன்ன நுண்ணிடை கோதை குலாவிய
செம்பொன்செய் யாக்கை செறிகமழ் நாடொறும்
நம்பனே நோக்கி நவிலுகின் றளே.

(ப. இ.) கணையொத்த கண்ணையும் கொம்பொத்த இடையையும் பிற அழகுகளையும் உடைய திருவருளம்மை, நறுமணங்கமழ்கின்ற செம்பொன் திருமேனியுடன் சிவபெருமானே நோக்கி ஆருயிர்கட்காம் இன்பமொழி நயமுற நாடொறும் நவில்கின்றனள். அம்மை சிவபெருமானுடன் ஆருயிர்கட்கு அருமறை பகர்கின்றனள் என்பதும் ஒன்று. (உக)

1124. நவிலும் பெருந்தெய்வம் நான்மறைச் சத்தி
துகிலுடை யாடை நிலம்போதி பாதம்
அகிலமும் அண்ட முழுதுஞ்சேம் மாந்து
புகலுமுச் சோதி புனையநிற் பாளே.

(ப. இ.) எல்லாராலும் புகழ்ந்து பேசப்பெறும் பெரும்பொருள் கடவுள் - தமிழ் நான்மறையின் உள்ளுறையாற்றல். அவள் திசைகளையே மெல்லுடை ஆடையாகவுடையவள். இருநிலமே திருவடியாகவுடையவளும் அவளே. அண்டமுதலாகச் சொல்லப்பெறும் எல்லா இடங்களிலும் ஓங்கிநிமிர்ந்து சிறப்பித்துச் சொல்லப்படும் ஞாயிறு திங்கள் தீ என்னும் மூன்றினுக்கும் ஒளியருளும் அழகிய பேரொளிப் பிழம்பாய்த் திகழ்பவளும் அவளே. செம்மாந்து - ஓங்கிநிமிர்ந்து.

(அ. சி.) நான்மறை-தமிழ் நான்மறைகளை வெளிப்படுத்திய. (உச)

1125. புனையவல் லாள்புவ னத்திறை எங்கள்
வனையவல் லாள்அண்ட கோடிகள் உள்ளே
புனையவல் லாள்மண்ட லத்தோளி தன்னைப்
புனையவல் லாளையும் போற்றியென் பேனே.[2]

(ப. இ.) எங்கள் அம்மை இருநூற்றிருபத்துநான்கென இயம்பப்பெறும் புவனங்களுக்கு முழுமுதல்வனுகிய சிவபெருமானைத் தன் ஒரு

1. எண்ணி. அப்பர், தி. உக - க.
" விள்ளத்தா. ,, சு. எசு - எ.
2. செழுந்தண். உ. கo-அ.

கூற்றிலே பொருத்தவல்லாள். அவளே அளவிறந்த அண்டகோடி களைத் திருவுள்ளத்தால் படைக்கவும் வல்லள். அவ்வம் மண்டலத்துள்ள ஒளிகொடுக்கும் பொருள்களுக்கும் ஒளியருளவல்லாளும் அவளே. எல்லாவற்றையும் அழகுபடுத்தி நிலைப்பிக்க வல்லாளுமாவாள். அவள் திருவடிகளையும் போற்றி வணங்குவேன். போற்றி: போற்றி மந்திரம் (44) புகன்று. (உடு)

1126. போற்றியேன் பேன்புவ னுபதி அம்மையேன்
ஆற்றலுள் நிற்கும் அருந்தவப் பெண்பிள்ளை
சீற்றங் கடிந்த திருநுதற் சேயிழை
கூற்றங் துரக்கின்ற கோள்பைந் தொடியே.

(ப. இ.) எல்லாப்புவனங்கட்கும் முதல்வியாக விளங்குகின்ற அருளம்மையைப் போற்றித் தமிழ் மந்திரம் புகன்று வணங்குகின்றேன். அவள் ஆருயிர்களின் அன்பறிவாற்றல்களுள் அவற்றை இயைந்தியக்க இடையருது நிற்கின்றனள். அதனால் அருந்தவப் பெண்பிள்ளை என்று வழங்கப்பெறுவள். சினமகற்றிய[1] அழகிய நெற்றியை உடைய அம்மை. கூற்றத்தை மாற்றும் முடிவிலாற்றல் அமைந்த வடிவினள்.

(அ. சி.) ஆற்றல் - அறிவு ஆற்றல். கூற்...கோள் - கூற்றுவனைத் துரத்துகின்ற வல்லமையுள்ள. (உசு)

1127. தொடியார் தடக்கைச் சுகோதய சுந்தரி
வடிவார் திரிபுரை யாமங்கை கங்கை
செடியார் வினைகெடச் சேர்வரை என்றென்று
அடியார் வினைகெடுத் தாதியு மாமே.

(ப. இ.) அழகிய வளையலணிந்த திருக்கையையுடையாள் திருவருளம்மை. அவளே இன்பவூற்றாந் திருவினள். அழகிய திரிபுரை; மங்கை; சலமகள்; அவளே திருவடி சேர்வார் துன்பவினைகளை எல்லாம் அகற்றியருள்பவள். ஞாயிற்றுக்கும் ஒளிகொடுப்பவளும் அவளே. அவள் அடியார் வினைகளை அறக்கெடுத்து அவர்களைத் திருவடியுணர்வில் என்றென்றும் நிலைக்கச் செய்யும் நடப்பாற்றலாகிய ஆதியாவள்.

(அ. சி.) செடி - துன்பம். என்று என்று - சூரியன் என்று. (உஎ)

1128. மெல்லிசை[2]ப் பாவை வியோமத்தின் மென்கொடி
பல்லிசைப் பாவை பயந்தரு பைங்கொடி
புல்லிசைப் பாவையைப் போகத் துரந்திட்டு
வல்லிசைப் பாவை மனம்புகுந் தாளே.

(ப. இ.) இயல்பாகவே பண்ணும் தோற்கும் மென்மையும் இனிமையும் வாய்ந்த திருமொழியினை உடையவள், அருள்வெளியில் விளங்கும் மெல்லிய பூங்கொடி, பல உயிர்களோடும் இயல்பாகவே இயைந்து

1. நீருகி நீறுமிழு. சு. அ0 - டு.
2. இன்சொல். திருக்குறள், கூ.

இயக்கும் எழிலினள் நற்பயன்தரும் நல்லாள், புன்னெறியுள் செல்லும் போக்கினை விலக்கி, மேலாம் நன்னெறிக்கு உய்க்கும் நங்கை திருவருளம்மை. அவள் எளியேன் உள்ளத்தும் வீற்றிருந்தனள்.

(அ. சி.) வியோமம் - ஆகாயம். பல்...பாவை - இசைக்கும் நாயகிபுல்-புன்மையான. இசைப்பாவை வல்மனம் என்று கொள்க. (உஅ)

1129. தாவித் தவப்பொருள் தானவன் எம்மிறை
பாவித் துலகம் படைக்கின்ற காலத்து
மேவிப் பராசத்தி மேலொடு கீழ்தொடர்ந்
தாவிக்கு மப்பொருள் தானது தானே.

(ப. இ.) எம்மிறைவனுகிய சிவபெருமான் உலகுடல்களைப் படைத்தருள உறுதிசெய்தபொழுது பாவித்தலாகிய திருவுள்ளங்கொண்டனன். உடனே திருவருள் அவனுடன் பொருந்தி முனைத்துநின்றனள். மேலொடு கீழாக, இறைவனுடன் தொடர்ந்ததுபோல் ஆவியிலும் பொறிபுலன் கரணங்களிலும் தொடர்ந்து நின்றனள். பாவித்து - திருவுள்ளம் கொண்டு. பராசத்தி - வனப்பாற்றலாகிய திருவருள்.

(அ. சி.) தாவித்த - நிச்சயித்த. பாவித்து - நினைத்துப் பார்த்து. ஆவிக்கு - உயிர்களுக்கு. அப்பொருள் - கருவிகள். (உக)

1130. அதுவிது என்பார் அவனை அறியார்
கதிவர நின்றதோர் காரணங் காணார்
மதுவிரி பூங்குழல் மாமங்கை நங்கை
திதமது உன்னார்கள் தேர்ந்தறி யாரே.[1]

(ப. இ.) முழுமுதற் சிவனை அது இது எனச் சுட்டுப்பொருள் போல் கூறுவார் அப்பெரும் பெயர்ப் பொருளை உணரார். பெரும் பெயர் : 'நமசிவய.' திருவடிப் பேரின்பம் துய்ப்பதற்குரிய மெய்யுணர்வு கைவரப் பெறார். பேரின்பப் பெருவாழ்வைக் கைவரச் செய்யும் திருவருளினிடத்துத் தம்மை அடைக்கலமாக ஒப்புவிப்பார், இன்பத் தேன் நிறைந்த மணம் கமழும் பூச்சூடிய கூந்தலினையுடைய அம்மையின் செம்மை தேர்ந்தவராவர். ஆதலால் அவர் ஏனை நிலைமைகளை ஒருசிறிதும் கருதார். காரணம்-மெய்யுணர்வு; மூதறிவு; சிவஞானம்.

(அ. சி.) கதி - முத்தி. திதம் - தன்மை. (கo)

---

1. அதுவிது. சிவஞானபோதம், கூ. ச - க.

# 8. ஆதார வாதேயம்

**1131.** நாலிதழ் ஆறில் அவிர்ந்தது தொண்ணூறு
தானித ழானவை நாற்பத்து நாலுள
பாலித ழானவள் பங்கய மூலமாய்த்
தானித ழாகித் தரித்திருந் தாளே.

(ப. இ.) நாலிதழ்கொண்டது மூலம். ஆறிதழ்கொண்டது கொப்பூழ். தொண்ணூறு இதழ்கொண்டது மேல்வயிறு. நாற்பது இதழ்கொண்டது நெஞ்சகம். பதினலு இதழ்கொண்டது மிடறு. பத்திதழ் கொண்டது புருவநடு. இலையனைத்தும் தாமரைப் பூவாக உருவகிக்கப் படும். திருவருளம்மை இவ்விடங்களில் நின்று இயக்குவள். மால் - பக்கம்; பத்து.

(அ. சீ.) ஆறு ஆதாரங்களின் இதழ்களையும் அவற்றின் பீச எழுத்துக்களையும் பற்றி இப்பாட்டுக் கூறுகின்றது. ஆறில் அவிர்ந்தது தொண்ணூறு - தொண்ணூற்றுறு புறத் தத்துவங்கள். தானிதழாகி - இதழ்காளாயுள்ளவை ஆதார சத்திகளாகி. (க)

**1132.** தரித்திருந் தாளவள் தன்னொளி நோக்கி
விரித்திருந் தாளவள் வேதப் பொருளைக்
குறித்திருந் தாளவள் கூறிய ஐந்து
மறித்திருந் தாளவள் மாதுநல் லாளே.[1]

(ப. இ.) திருவருளம்மை தன் உயிர்க்கு உயிராய் ஒளியாய் விளங்கும் செம்பொருளாம் சிவனையே நோக்கிநின்றனள். அவன் திருவுள்ளப்படி மறையும் முறையுமாகிய தமிழ் வேதாகமப் பொருள்களை விரித்தருளினள். படைத்தல், காத்தல், துடைத்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்து தொழில்களையும் உள்ளக் குறிப்பால் ஊற்றியருளினள். தோற்றுவித்தருளினமை போன்று ஒடுக்குங்காலத்து அவற்றை முறையே ஒடுக்கியருளினள். அதனால், அவ்வம்மை மாதுநல்லாள் என வழுத்தப் படுவாளாயினள்.

(அ. சீ.) தன்னொளி - சத்தி தங்கிய சிவ ஒளி. விரித்திருந்தாள், வெளிப்படுத்தினள். மறித்திருந்தாள் - ஒடுக்கி இருந்தாள். (உ)

**1133.** மாதுநல் லாளும் மணாளன் இருந்திடப்
பாதிநல் லாளும் பகவனு மானது
சோதிநல் லாகாத் துணைப்பெய்ய வல்லிரேல்
வேதனை தீர்தரும் வெள்ளடை யாமே.[2]

(ப. இ.) மாது நல்லாளாகிய திருவருள் தன் மணாளனாகிய சிவன் தன்மெய்யினில் செம்பாதிகொள்ள இடங்கொடுத்துப் பாதிநல்லாளா

1. வான்கெட்டு. அ. திருத்தெள்ளேணம், கஅ.
,, இருநிலனதுபுன. சம்பந்தர், க. உக - எ.
2. பாடுவார். ஆரூரர், எ. உக - நு.
,, அகரமுதல. திருக்குறள், க.

யினள். சிவனும் பசுப்புடையான் என்னும் பொருளில் பகவனுயினன். அத்தகைய அறிவுப் பேரொளி நல்லாளேத் தம் ஆருயிர்த் துணையாகக் கொள்ள வல்லாரின் பிறவித் துன்பம் தீரும். அவ்வம்மை அருட்பெரும் வெளியாகும். வெள்ளடை - அருட்பெரும்வெளி. (கூ)

1134. வெள்ளடை யானிரு மாமிகு மாமலர்க்
கள்ளடை யாரக் கமழ்குழ லார்மன
மள்ளடை யானும் வகைத்திற மாய்நின்ற
பெண்ணொரு பாகம் பிறவி பெண்ணுமே.

(ப. இ.) திருவருள்வெளியில் உறைபவன் சிவன். அவன் மிக்க கருமையும் தேனும் மணமும் நிறைந்த பூவும் விளங்காநின்ற மருள் மாதர் உள்ளத்தால் அள்ளிக்கொள்ளும் தன்மையன் அல்லன். ஆயினும் அச்சிவனும் அருள்மாதரால் தோற்றுவிக்கப்பட்டோன். அருள் மாதருக்கு அரையுடம்பு நல்கிய அப்பன். (ஆடவர் அருள்நாட்டமுடைய மாதர் துணையாற் சிவனே அடைந்து சிறப்புறுவர். மருள்நாட்டமுடைய மாதர் துணையாற் சிவனே அடையாது பிறப்புறுவர். இவ்வுண்மை மூறையே வாழ்க்கைத்துணைநலம் பெண்வழிச் சேறல்[1] என வள்ளுவர் வரை செய்த வாய்மையான் உணரலாம்.)

(அ. சி.) வெள்ளடை-பரமஆகாயம் கமழ்...அடையான்-மாதரால் கவரப்படும் தன்மையில்லாத சிவம். பிறவி பெண்ணும் - பிறவி பெண்ணிடத்திலேயே உண்டாம். (ச)

1135. பெண்ணொரு பெண்ணைப் புணர்ந்திடும் பேதைமை
பெண்ணிடை ஆணும் பிறந்து கிடந்தது
பெண்ணுடை ஆணென் பிறப்பறிந் தீர்க்கின்ற
பெண்ணுடை ஆணிடைப் பேச்சற்ற வாறே.

(ப. இ.) திருவருளாற்றலாகிய பெண் திருவருளேயே திருவுருவாகக் கொண்டு திகழும் சிவனுகிய பெண்ணைக் கலந்திடும். (இஃது அறிவு அறிவொடு கலக்கும் குறிப்பு.) ஆருயிர்களின் அறியாமையாகிய பேதைமையை யகற்றும் திருவருளாற்றலாகிய பெண்ணின் எண்ணமாகிய நடுவுள் அவ்வாற்றலேத் திருமேனியாகவுடைய ஆணுகிய சிவனும் தோன்றிநின்றனன். (பேணுதலால் பெண் ; ஆளுதலால் ஆண் ; பேணுதல் : ஏற்பித்தல். ஆளுதல் - இன்புறுத்தல்.) என் பிறப்பகற்றும் செவ்வியறிந்து தன் திருவடிக்கு ஆக்குகின்ற அருளே திருமேனியாகவுடைய சிவபெருமானின் உண்மையுணர்ந்தால் குறியால் உணரப்படும் பெண் ஆண் என்னும் பேச்சு அற்றுவிடும். ஈர்க்கின்ற-சேர்க்கின்ற.

(அ. சி.) பெண் - சத்தி. ஒரு பெண்ணை - பேணப்பட்ட ஒருவளுகிய சிவத்தை. (பெண் : பேண் என்பதின் குறுக்கம்) பெண்ணிடை யாணும் பிறந்து இருத்தல் - "உடையாள் நடுவுள் நீயிருத்தி" என்ற வாக்கின் பொருள்; பெண்ணுடை ஆண்-மாதொருபாகன். (இ)

---

1. எஞ்சேர்ந்த. திருக்குறள், கூகo.

1136 பேச்சற்ற நற்பொருள் காணும் பெருந்தகை
மாச்சற்ற சோதி மலேன்மனி மங்கையாங்
காச்சற்ற சோதி கடவு ளுடன்புணர்ந்
தாச்செற்றென் உட்புகுந் தாலிக்குந் தானே.

(ப. இ.) சிவன் 'மாற்றம் மனம்கழிய நின்ற மறையோ' ஞதலின் பேச்சற்ற இடத்தில் உணரும் நற்பொருளாவன். அப்பெருந்தகை இயல் பாகவே மாசகன்ற பேரறிவுப் பேரொளி. மலேன்மனி மங்கையாகிய பகையற்ற பேராற்றற் பேரொளி அச்சிவனே மணந்தனள். அவள் எளியேனுட்புகுந்து தானே களிப்பிக்கச் செய்வாளாயினள். மீசு : மாச் சென‌த் திரிபாயிற்று. ஆலித்தல் - களித்தல்.

(அ. சி.) மாச்சற்ற - மாசு அற்ற. காச்சற்ற-பகைமை அற்ற. (சு)

1137. ஆலிக்குங் கன்னி அரிவை மலேன்மனி
பாலித் துலகிற் பரந்துபெண் ணாகும்
வேலைத் தலைவியை வேத முதல்வியை
ஆலித் தொருவன் உகந்துநின் றானே.[1]

(ப. இ.) ஆருயிர்களின் அன்பிற் கீடாகக் களிப்பிக்கச் செய்யும் கன்னி அரிய மலேன்மனி. அவள் உலகிற் பெரும்பயன் அருளி நீக்கமற நிறைந்துநிற்கும் பெண்ணாவள். அவளே ஐந்தொழில் புரியும் அருட் டலைவி. அவளே மறை முதல்வி. அவளே இடப்பாகத்துப் பெற்று ஒப் பில்லாத சிவன் உயர்ந்து நின்றனன். உகப்பு - உயர்வு.

(அ. சி.) வேலைத் தலைவி - ஐந்து தொழில்களுக்கும் முதல்வி. (எ)

1138. உகந்துநின் றுன்நம்பி ஒண்ணுதற் கண்ணே
டுகந்துநின் றுன்நம் முழைபுக நோக்கி
உகந்துநின் றுன்இவ் வுலகங்கள் எல்லாம்
உகந்துநின் றுன்அவன் தன்றோள் தொகுத்தே.

(ப. இ.) நம்பியாகிய சிவன் அழகிய நெற்றிக் கண்ணுடன் உயர்ந்து நின்றனன். அவன் ஆருயிர்கள் தன் திருவடியில் புகவேண்டும் என்னும் அருள் நோக்கத்தால் அவ்வுயிர்களிடத்தும் முதன்மைபெற்றிருந்தனன். அனைத்துலகங்களுக்கும் அவனே தலைவனாய் நின்றனன். இவையனைத்தும் திருவருளம்மையின் திருத்தோள் புணர்ந்தமையால் வந்தன. அதனால் அம்மையை அணைந்து உயர்ந்துநின்றான் என்பர். 'உகப்பே உயர்தல் உவப்பே உவகை.' தொல். சொல்-கூ0டு.

(அ. சி.) அவள் தன் தோள் தொகுத்து - புணர்ந்து. (அ)

---

1. பெண்ணிற். திருக்குறள், டுசு.
,, கற்றார். அப்பர், சு. க0சு - உ.
,, தென்பால் - அ. திருச்சாழல், கூ.
,, உடுத்துந். குறுந்தொகை, உகடு.

1139. குத்து முலைச்சி குழைந்த மருங்கினள்
துத்தி விரிந்த சுணங்கினள் தூமொழி
புத்தகச் சீறடிப் பாவை புணர்வினைத்
தொத்த கருத்தது சொல்லகி லேனே.[1]

(ப. இ.) ஆருயிர்கட்கு அறிவமிழ்தம் அளவறிந்து ஊட்ட ஏந்தும் திருமுலையினையும், அவ்வுயிர்களை உளங்கொண்டு சுமத்தலால் துவளும் திருமருங்கினையும் உடைய அருளம்மை, பொறியமைந்த தேமலையுடையவள். அவளே தூய திருமொழியினையுடையவள். அவளே மெய்யுணர்வு நூல் கைவரச் செய்யும் சிறிய திருவடியையுடையவள். அவளே உயிரோவியத்தள். அவள் மறவா நினைவுடன் ஆருயிரோடு ஒன்றுய் வேறுய் உடனுய்ப் புணர்ந்து நிற்கும் பழைமையான திருக்குறிப்பினைப் புகலும் ஆற்றலில்லேன். குத்தல்-அளவாய் வார்த்தல். புத்தகம்: ஆகு பெயராக மெய்யுணர்வைக் குறிக்கும். தொத்த - பழைமையான.

(அ சி.) துத்தி - பொறிகளை உடைய. சுணங்கினள் - தேமலை உடையவள். புத்தகம் - மயிலிறகு போன்ற மென்மையான. (கூ)

1140. சொல்லவொண் ணுத அழற்பொதி மண்டலஞ்
சொல்லவொண் ணுது திகைத்தங் கிருப்பர்கள்
வெல்லவொண் ணுத வினைத்தனி நாயகி
மல்லவொண் ணுத மனேன்மனி தானே.

(ப. இ.) சொல்லமுடியாத பேரொளிப்பிழம்பு சூழ்ந்த சிவவுலகு பெற்றூர் பேற்றினைக் கண்டு பேறுபெறும் செவ்வியில்லார் சொல்லவும் முடியாதபடி திகைத்திருப்பர். அங்ஙனமிருப்பதும் மாற்றமுடியாத நடப்பாற்றலின் மறைப்பருளேயாகும். அவள் அத் துறையின்கண் தனிப்பெரும் தலைவியாவள். அவள் மனேன்மனி எனப்படுவள் - அவளை வெல்லுதல் எவருக்கும் இயலாததொன்று செவ்வி - தகுதி.

(அ. சி.) வினை - மறைத்தல் தொழில். மல்ல - வெற்றிகொள்ள. (கo)

1141. தானே இருநிலந் தாங்கிவிண் ணுய்நிற்குந்
தானே சுடும்அங்கி ஞாயிறுந் திங்களுந்
தானே மழைபொழி தையலு மாய்நிற்குந்
தானே வடவரைத் தண்கடற் கண்ணே.[2]

(ப. இ.) திருவருளம்மையே இருநிலமாகவும், பூதங்களைத் தாங்கும் விண்ணுகவும், தீ ஞாயிறு திங்கள் என்னும் முச்சுடர்களாகவும், நீருக்கு

1. போதையார். சம்பந்தர், உ. கசசு - உ.
., எண்ணரி. கஉ. ,, சுஅ.
., கல்லாதான். திருக்குறள், சoஉ.
2. இருநிலனுய். அப்பர், சு. கூசு - க.
மஞ்ஞுகி. ,, ,, ,, உ.

முதலாம் மழையாகவும் நிற்பள். அவளே பண்டு தமிழ்நாட்டின் வட எல்லையாக அமைந்த இமயமலையாக நிற்பள். இம் மலை அதற்கு முன் கடலின்கண் அமிழ்ந்திருந்தது. அது தென்கடற்கோளால் மேலெழுந்தது.

(அ. சீ.) வடவரை - தமிழ் நாட்டின் வடக்கின்கண்ணேயுள்ள இமயம். தண் கடற்கண்ணே - தண்கடலாயிருந்த இடத்தின் கண்ணே மேலே கிளம்பிய (வடவரை என்று கொள்க). (கக)

1142. கண்ணுடை யாளைக் கலந்தங் கிருந்தவர்
மண்ணுடை யாரை மனித்தரிற் கூட்டோணாப்
பண்ணுடை யார்கள் பதைப்பற் றிருந்தவர்
விண்ணுடை யார்களு மேலுறக் கண்டே.

(ப. இ.) நெற்றிக்கண்ணுடைய திருவருளம்மையைச் சார்ந்திருந்தவர். செந்நெறி மாண்புடையர். அவரே சிவவுலகஞ் சேர்ந்தவர், தடுமாற்றமின்றி ஒரு நிலைப்பட்டு உயர்ந்திருப்பது கண்ட உண்மையாளர். அவரே அருட்பண்புடையராவர். அவர்களும் தடுமாற்றமாகிய தடுக்கற்றிருப்பர்.

(அ. சீ.) கண்ணுடையாள் - மலேன்மனி. மண்ணுடையாரை - (மண் - மாட்சிமை) திருவருட் சத்தி கலந்த மாட்சிமை உடையவரை. பண்ணுடையார் - மணி கடல் முதலிய பத்துவித நாதங்களைக் கேட்டவர். விண்ணுடையார் - முத்தியுலகை உடையவர். (கஉ)

1143. கண்டெண் டிசையுங் கலந்துவருங் கன்னி
பண்டெண் டிசையும் பராசத்தி யாய்நிற்கும்
விண்டெண் டிசையும் விரைமலர் கைக்கொண்டு
தொண்டெண் டிசையுந் தொழுநின்ற கன்னியே.

(ப. இ.) திருவருள் எட்டுத் திசைகளிலுமுள்ள உலகுடல் கருவிகளைக் கருதியவளவானே தோற்றமுறக் கண்டு அவற்றுடன் கலந்தியக்கும் கன்னி. அவள் உலகத் தோற்றத்துக்குமுன் கருவுற்ற தாய்போல் சூலியாக நிற்பள். அப்பொழுது அவள் வனப்பாற்றல் என்று பெயர் பெறுவள். அவள் திருவடியை எண்புலத்துள்ளாரும் நறுமலர் கைக் கொண்டு திருமுறைப் போற்றிமாமறை யோதி மலர்தூவித் திருத் தொண்டியற்றித் தொழுவர். அவர் தொழுகையை ஏற்றுத் துணையருள் புரிய இணையிலாக் கன்னியாக அவள் நின்றனள்.

(அ. சீ.) கன்னி - நினைப்புமாத்திரையில் எல்லா உலகங்களையும் உடம்புகளையும் கருவிகளையும் போகங்களையும் ஆக்குவதால் கன்னி எனப் பட்டார். (கங)

1144. கன்னி ஒளியென நின்றவிச் சந்திரன்
மன்னி யிருக்கின்ற மாளிகை சேர்ந்நிறஞ்
சென்னி யிருப்பிடஞ் சேர்பதி னறுடன்
பன்னி யிருப்பப் பராசத்தி யாமே.

(ப. இ.) திங்கள்போன்ற நெற்றியையுடைய பேரொளிசேர் திருவருளம்மை. நீலிபெற்றிருக்கும் வளமான ஆருயிர்களின் நெற்றியாகும். அவள் நிறம் செந்நிறம் ஆகும். கலை பதினாறுகும். பாராட்டிப் புகழ எழுந்தருளியிருப்பவள் திருவருளம்மையே.

(அ. சி.) சந்திரன் - மதிபோன்ற நெற்றியையுடைய மனோன்மணி. சென்னி இருப்பிடம் - மனோன்மனிக்கு இருப்பிடம் சென்னியில். பதினாறு - பதினாறு கலைகள். (கச)

1145. பராசத்தி யென்றென்று பல்வகை யாலுந்
தராசத்தி யான தலைப்பிர மாணி
இராசத்தி யாமள வாகமத் தாளாகுங்
குராசத்தி கோலம் பலவுணர்ந் தேனே.

(ப. இ.) திருவருளம்மை எக்காலத்தும் பலவகையாலும் அனைத்தையும் தாங்கும் ஆற்றலளாவள். அவளே முதன்மையான அருள்நூல் அளவையளாவள். அவளே பேரரசியாவள். அவளே யாமளவாகமத்தளாவள். இத்தகைய திருக்கோலங்களெல்லாம் செவ்வி முதிர்ந்த வழித் தம் முதல் குருவுமாய் எழுந்தருளும் திருவருளம்மையின் திருக்கோலங்களாகும். இவ்வுண்மை திருவருள் துணையால் உணர்ந்தனன்.

(அ. சி.) தராசத்தி - தாங்கும் சத்தி. தலைப்பிரமாணி - முக்கியமான தமிழ்நான்மறையையுடையவள் இராசத்தி.....ஆகும் - ஒன்பது ஆகமங்களில் ஒன்றுகிய வியாமள ஆகமத்தில் சிறப்பித்துக் கூறப்படாநின்ற சத்தி. குராசத்தி - குருவாக நின்ற சத்தி (குரு + ஆசத்தி). (கஞ)

1146. உணர்ந்துல கேழையும் யோகினி சத்தி
உணர்ந்துயி ராய்நிற்கும் உன்னதன் ஈசன்
புணர்ந்தொரு காலத்துப் போகம தாதி
இணைந்து பரமென் றிசைந்தது தானே.

(ப. இ.) சிவனும் அருளுடன் ஒரு காலத்து இணைந்து ஆருயிர் வாழ்வுறப் போகநிலையாகிய வாழ்வு நிலையில் பரமென்றிருந்தனன். அப் பரத்துடன் இசைந்த பராசத்தி தன் ஈசன் ஆகிய சிவம் திருவுள்ளம்கொள்ள யோகினிசத்தியாகிய நடப்பாற்றலால் ஏழுலகங்களையும் உணர்ச்சியால் தோற்றுவித்தது. தோற்றுவித்த ஏழுலகங்களாகிய எழுவகைப் பிறப்புயிர்கட்கும் உயிர்க்குயிராய் நின்றதும் அவ்வாற்றலுக்குரிய அம்மையாகும்.

(அ. சி.) முன்னதன் - ஆக்கல் தொடங்குமுன். (கசு)

1147. இதுவப் பெருந்தகை எம்பெரு மானும்
பொதுவக் கல்வியும் போகமு மாகி
மதுவக் குழலி மனோன்மனி மங்கை
அதுவக் கல்வியுள் ஆயுழி யோகமே.

(ப. இ.) இஃது என்று சுட்டப்பெறும் அம்மையும், பெருந்தகையாகிய சிவனும் கல்வியும் அதன் பயனும் போன்று பொருந்தியிருந்தனர்.

தேன் நிறைந்த மலர்சூடிய மனோன்மனிமங்கை என்னும் அம்மை ஆருயிர்கள் கற்கும் கல்வியும் அதன் பயனுமாய் நிற்பள். ஆயுழி-ஆராயுமிடத்து. யோகம் - கூடியிருக்கும் பயன்.

(அ. சி.) இது - சத்தியும் சிவமும் சேர்ந்த காட்சி. (கள)

1148. யோகநற் சத்தி ஒளிபீடந் தானகும்
யோகநற் சத்தி ஒளிமுகந் தெற்காகும்
யோகநற் சத்தி உதர நடுவாகும்
யோகநற் சத்திதாள் உத்தரந் தேரே.[1]

(ப. இ.) சிவனுடன் விட்டுப்பிரியாத திருவருளாற்றல் ஒளி விளங்கும் இருக்கையாகிய பீடமாகும். அவ்வாற்றலே திருவுருவின் திருமுகமாகும். அம் முகம் தென்முகம் நோக்கியதாகும். அவ்வாற்றலே வயிறாகும். அதுவே நடுவாகும். அவ்வாற்றலே திருவடியாகும். அத்திருவடியே உயர்வற உயர்ந்த சிறப்பாகும். உத்தரம்-உயர்வு. இதனை அறிவாயாக.

1149. தேர்ந்தெழு மேலாஞ் சிவனங்கி யோடுற
வார்ந்தெழு மாயையு மந்தம தாய்நிற்கும்
ஓர்ந்தெழு விந்துவும் நாதமும் ஓங்கிடக்
கூர்ந்தெழு கின்றனள் கோல்வளை தானே.[2]

(ப. இ.) திருவருளம்மை (சத்தி) பேரொளிப்பிழம்பாம் சிவத்தினுள் ஒடுங்கும். அதுவே பேரொடுக்கநிலை. அந்நிலையில் மாயாகாரியங்களும் தம் முதற்காரணமாகிய மாயையின்கண் ஒடுங்கும். அம் மாயை திருவருள் ஆற்றலின்கண் ஒடுங்கும். இதுபோல் உலகத்தோற்றத்தின்கண் சிவத்தின் நின்றும் அருளாற்றல் வெளிப்படும். அது வெளிப்பட்டதும் மாயையின்கண் சொல்லுறுப்பாகத் தோன்றும் ஓசையும் ஒளியுமாகிய நாதவிந்துக்கள் அம்மையின் நினைவாற்றலால் தோன்றும். அவை தொழிற்படுமாறு, அழகிய வளையலணிந்த அம்மையும் அப்பனிடமாக நின்று முனைத்தெழுகின்றனள். (ககூ)

1150. தானன வாறெட்ட தாம்பரைக் குண்மிசை
தானன வாறுமீ ரேழுஞ் சமகலை
தானன விந்து சகமே பரமெனுந்
தானும் பரவா தனையெனத் தக்கதே.

(ப இ) பரையாகிய திருவருள் மூலமுதலாகும் ஆறு நிலைக்களங்களும், அகத்தவமாகிய எட்டுயோக நிலைகளும் தனக்கு இடம் என்று கொண்டருள்வள். அதுபோல் அறுவகை வழிகளும் பதினான்கு உலகங்களும் தானாகக் கலந்திருப்பள். கலைவடிவாகச் சமையப்பட்ட உலகிற்கு முதலாம் விந்துவும் தானாக நிற்பள். பரமனாகிய நாதமும் தானும். இத்

1. தொல்லூழி. கலித்தொகை. கஉக.
,, கண்ணி. புறநானூறு, கடவுள் வாழ்த்து.
,, உருவருள். சிவஞானசித்தியார், க. உ - உஎ.
2. தோலுந். அ. திருக்கோத்தும்பி, கஅ.

திருவருள் திருவடிப்பேற்றை அப்பொழுது காட்டாது மறைத்தலின் மறைப்பாற்றல் எனத் தக்கதென்றனர். பரவாதனே - மேற்றடை - மேனிலையைக் காட்டாத தடை. பரம் - மேல். வாதனே - தடை.

(அ. சி.) ஆறு - ஆருதாரம். எட்டு - எட்டுயோகங்கள். ஆறு - நிராதாரம் ஆறு. ஈரேழு - பதினலு உலகங்கள். (உ0)

1151. தக்க பராவித்தை தானிரு பானேழில்
தக்கெழு மோருத் திரஞ்சொல்லச் சொல்லவே
மிக்கிடும் எண்சத்தி வெண்ணிற முக்கண்ணி
தொக்க கதையோடு தோன்மூத் திரையாளே.

(ப. இ.) மிகவும் சிறந்த திருவருளின் கலேயைப் பயிலுதற்கு ஏற்ற நாள் முக்கூட்டாகிய பரணிநாளாகும் பண்டைக்காலத்தில் கார்த்திகையை முதல்நாளாகக்கொண்டு எண்ணியுள்ளார்கள். அதனல் பரணி நாள் இருபத்தேழாம் நாளாயிற்று. அத் திருவருட்கலேயைப் பயில்வார்க்கு ஒப்பில்லாத விடைபகரவே வெளிப்பட்டுத் தோன்றுவள். அவள் எட்டுச் சத்திகளேயுடையவள். அவள் வெள்ளிய நிறமுடையவள். அவளே மூன்று திருக்கண்களேயு முடையவள். அவளே அமைந்த காரணத்துடன் அரிய பழைமையான முத்திரையையும் உடையவள். உத்திரம் விடை, சொல்லச் சொல்ல: அடுக்கு. கதை-காரணம். உருத்திரமெனக்கொண்டு திருவெம்பாவைக்கண் எண்பேராற்றல் வருமாறு கூறுதலே ஒத்துக் காண்க. நாள் - நட்சத்திரம்.

(அ. சி.) இருபானேழு - இருபத்தேழு வயதிற்குள். உருத்திரம்; உடல் உறுதியை அடையும் அஞ்செழுத்து மந்திரம் (உரு - உடல்-திரம் - உறுதி.) (உச)

1152. மூத்திரை மூன்றின் முடிந்தமெய்ஞ் ஞானத்தள்
தத்துவ மாயல்ல வாய சகலத்தள்
வைத்த பராபர னுய பராபரை
சத்தியு மானந்த சத்தியுங் கோங்கே.

(ப. இ.) அன்பு அறிவு ஆற்றல்களே விளக்கும் மூவகை முத்திரைகளுள் முடிந்த முத்திரையாகிய அறிவு முத்திரையுடையவள் அருளம்மை தத்துவமாகிய உலகுடல்களுடன் கலப்பால் ஒன்றுய், பொருள் தன்மையால் வேறுய், உதவுதலால் உடனுய் எல்லாமாயிருப்பவளும் அவளே. அவள் அருள் செய்தற்பொருட்டுச் சிவபெருமானுக்குத் திருமேனியாகவுடையவள். நடப்பாற்றலாகிய ஆதிசத்தியும், வனப்பாற்றலாகிய இன்பச் சத்தியும் சிவனேவிட்டுப் பிரிந்து நில்லாதவர். அதனல் அவ்விருவரும் சிவனே மணக்கின்றனர் என்றனர். கொங்கு: மணக்கின்றனர்.

(அ சி.) கொங்கு - வாசனே: நறுமணம். (உஉ)

1153. கொங்கீன்ற கொம்பின் குரும்பைக் குலாங்கன்னி
பொங்கிய குங்குமத் தோளி பொருந்தினள்
அங்குச பாச மெனுமகீ லங்கனி
தங்கு மவள்மனே தானறி வாயே.

(ப. இ.) அருளம்மை மணங்கமழ்கின்ற கொம்புபோலும் இடையினையுடையாள்; குரும்பைபோன்ற திருமுலையை உடையவளும் அவளே. அவளே அருள் விளக்கத்துடன் திகழும் கன்னி; குங்குமநிறத்தினை உடையவள். தோட்டியும் கயிறும் உடைய திருக்கையினையுடையவளும் அவளே. எல்லாவுலகங்களிலும் நிறைந்து நிற்பவளும் அவளே. அவள் அடியார் அகத்தாமரையின்கண் வீற்றிருப்பவள். இவற்றை அடியவர்க்கு அத் திருவருள் உணர்த்த உணர்ந்து ஒழுகும் தன்மை அவர்க்கு எய்தும். அவர்தம் நெஞ்சகமே அம்மை உறையும் உறையுளாகும். (உக)

1154. வாயு மனமுங் கடந்த மனோன்மனி
பேயுங் கணமும் பெரிதுடைப் பெண்பிள்ளை
ஆயும் அறிவுங் கடந்த அரனுக்குத்
தாயும் மகளுநல் தாரமு மாமே.[1]

(ப. இ.) மாற்றம் மனம் கழிய நின்ற மனோன்மனி அம்மை திருவடி போற்றும் பேய்களும், பூதக்கூட்டங்களும் மிகுதியாகவுடைய பெண் பிள்ளை. தேர்வும் தெளிவும் எட்டாத சிவபெருமானுக்குத் தாய் மகள் மனோவியுமென்னும் முறைமையினையுடையளாவள். முப்பத்தைந்தாம் மெய் அன்னமெய்; இதின் நின்றும் முப்பத்துநான்காவதாகிய அருளோன் மெய் தோன்றும். இந்நிலையில் தாயாவாள். முப்பத்தாறுவதாகிய அத்தன் மெய்யினின்றும் முப்பத்தைந்தாவதாகிய அன்னை மெய் தோன்றும். இந்நிலையில் மகளாவள். முப்பத்துநான்காவதாகிய அருளோன் மெய் அருளும் (சத்தி) ஆண்டானும் (சிவன்) கூடிய சதாசிவ தத்துவமாகும். இந்நிலையில் மனோவியாவள். (1099)

(அ. கீ.) பேயுங் கரையும் - உயிர்க்கூட்டங்கள். (பிறப்பு எடுப்பதற்கு முந்திய நிலை), அரனுக்குத் தாய் - சத்தி தத்துவத்தினின்றும் சாதாக்கிய தத்துவ வாசியாகிய சதாசிவமாகிய அரன் தோன்றுவதால் தாயாகியும்; மகள் - சிவதத்துவத்தினின்றும் சத்தி தத்துவம் தோன்றுவதால் சிவத்துக்கு மகளாயும்; தாரம் - ஆதி சத்தியாகி நின்று சத்தி தத்துவத்தில் சதாசிவ நாயனோடும் கூடி இருந்து உலகமும் பல் உயிர்களும் தோற்றுவதற்கு ஏதுவாயிருத்தலால் தாரமும் ஆயும் நின்ற அவசரபேதங்களை ஆய்ந்து அறிந்துகொள்க. (உச)

1155. தாரமு மாகுவள் தத்துவ மாய்நிற்பள்
காரண காரிய மாகுங் கலப்பினள்
பூரண விந்து பொதிந்த புராதனி
பாரள வாந்திசை பத்துடை யாளே.

(ப. இ.) சிவனுக்கு மனோவியாக நிற்கும் அருளம்மை, அவனுக்கு அறிவாற்றலாகவும் நிற்பள். இக் கலப்பு உலகத் தோற்றத்தின் காரண காரியத் தொடர்பாகும். அவளே தூமாயையுடன் நிறைந்து மறைந்

1. மின்னிடைச். அ. திருப்பொற் சுண்ணம், கக.
,, தவளத்த. திருக்கோவையார், ககஉ.
,, வெஞ்சத்தி. சித்தியார், உ. ச - உஎ.

தியக்கும் பொற்பினளாவள். அவளே தொன்மையளுமாவள். நில எல்லை யாகக் கூறப்படும் பத்துப்புலங்களையும் உடையவளும் அவளே. (உஇ)

1156. பத்து முகமுடை யாள்நம் பராசத்தி
வைத்தனள் ஆறங்க நாலுடன் முன்வேதம்[1]
ஒத்தனள் ஆதாரம் ஒன்றுடன் ஒங்கியே
நித்தமாய் நின்றுளோம் நேரிழை கூறே.

(ப. இ.) சிவபெருமானது கூறுகத்திகழும் திருவருள் அம்மை, புலம் பத்தாதலின் பத்துத் திருமுகங்களையுடையவள், அவள் பேரருள் என்னும் பெயருடைய பராசத்தியாவள். அவளே திருநான்மறையும் கருவியாம் ஆறு உறுப்புக்களும் ஆருயிர் உய்ய ஓதுவித்தனள். அவளே அத்தனுகிய சிவனுக்கு அருள், திருமேனியாதலால் தாங்குவதாகிய ஆதாரம் ஆகின்றனள். ஒடுங்கும்போது அருள் அத்தனுள் ஒடுங்குதலால் தாங்கப்படுவதாகின்றது. இம்முறையாகத் தானதுவாம் தன்மையில் சிவனும் அருளும் என்றும் பிரிப்பின்றி நின்று அருள்செய்வர்

(அ. சி.) பத்து முகமுடையாள்-ஆதார ஆதேய சக்தியின் முகங்கள் பத்து. வைத்தனள்-தன் கரத்திடத்துச் சுவடி உருவமாக வைத்துளாள். ஆறங்கம் - தமிழ் அங்க நூல்கள் ஆறு. நாலுடன் தான் வேதம் - தமிழ் மறைகள் நான்கு. (உசு)

1157. கூறிய கன்னி குலாய புரூவத்தள்
சீறிய ளாயுல கேழுந் திகழ்ந்தவள்
ஆரிய நங்கை யமுத பயோதரி
பேருயி ராளி பிறிவறுத் தாளே.

(ப. இ.) திருவருளம்மை என்றும் கன்னி என்று கூறப்படுவள். அவள் விளங்கும் புருவத்தள். நடப்பாற்றலாக உலகேழிலும் இயைந்தியக்குங்கால் முற்சினம் பொருந்தியவளும் அவளே. வனப்பாற்றலாக ஆருயிர்களுள் செவ்வி வாய்ந்தவற்றை அரனடிக்குச் சேர்த்தலால் நிறைந்த பேரருள் உள்ள நங்கையாகின்றனளும் அவளே. அவள் அனைத்துயிரையும் அருள்காரணமாகக் காக்கின்றனள். அவள் ஆருயிரினின்றும் பிரியவேண்டிய மலமாயை கன்மங்களைப் பிரிவித்தனள். ஆரிய-நிறைந்த. பிறிவறுத்தாள்: பிறிவு-பிரியவேண்டிய மலமாயை கன்மங்கள். சிறுதல்-சினத்தல்

(அ சி) ஆரிய நங்கை-மகிமை பொருந்திய மங்கை. பயோதரம்-பால் நிறைந்த முலைத்தடம். பேர் உயிராளி - எண்ணிறந்த உயிர் வருக்கங்களை ஆட்டுவிப்பவள். (உஎ)

1158. பிறிவின்றி நின்ற பெருந்தகைப் பேதை
குறியொன்றி நின்றிடுங் கோமளக் கொம்பு
பொறியொன்றி நின்று புணர்ச்சிசெய் தாங்கே
அறிவொன்ற நின்றனள் ஆருயி ருள்ளே.[2]

---

1. வேற்றுகி. சு. இடி. சு.
2. விளம்பிய. சிவஞானபோதம், இ.

(ப. இ.) திருவருள் ஆருயிர்களைவிட்டுப் பிரியாதுநிற்கும் பெருந் தகை அம்மை. பேதை - இரக்கமுள்ள தாய். அகவழிபாடு செய்யும் அன்பர்கள் குறிக்கும் குறிப்பில் பொருந்திநிற்கும் இளமையும் அழகும் மென்மையும் வாய்ந்த கோமளக்கொம்பும் அவளே. அறிகருவியுடன் ஒத்துநின்று அவற்றைத் தொழிற்படுத்தி ஆருயிர்கட்கு உயிர்க்குயிராய் நின்று அவ் வுயிர்களின் அறிவுக்கு அறிவாயிருப்பவளும் அவளே. (உ அ)

1159. உள்ளத்தி னுள்ளே யுடனிருந் தைவர்தங்
கள்ளத்தை நீக்கிக் கலந்துட னேபுல்கிக்
கொள்ளத் தவநெறி கூடிய இன்பத்து
வள்ளற் றலைவி மருட்டிப் புரிந்தே.[1]

(ப இ.) திருவருள் உயிர்க்குயிராய் உள்நின்று உடனுய் ஐம்புல வேடரின் கள்ளத்தைக் குருவாய் வந்து உண்மையுணர்த்தி நீக்கினள். அவளே பிரிப்பின்றி ஒன்றுய்க் கலந்து பொருந்தி, சீலம் நோன்பு செறிவு அறிவு என்னும் நற்றவம் நான்கினையும் கொள்ளுவித்து, அதனல் பெருகிய இன்பத்தைப் பெறுவித்து வள்ளல் தலைவியுமாயினள். இச் செயல் அனைத்தும் வியப்புடைய செயலாகும். மருட்சி - வியப்பு.

(அ. சி.) வள்ளற்றலைவி - உயிர் வருக்கங்களுக்குக் கைம்மாறு கருதாமல் நல்லறிவினை ஊட்டும் வள்ளற்றன்மை வாய்ந்த திருவருட் சத்தி. (உக)

1160. புரிந்தருள் செய்கின்ற போகமா சத்தி
இருந்தருள் செய்கின்ற இன்பம் அறியார்
பொருந்தி இருந்த புதல்விபூ வண்ணத்
திருந்த விலக்கில் இனிதிருந் தாளே.[2]

(ப. இ.) ஆருயிர்களுக்கு அகமிருந்த வாழ்வாகிய போகத்தை அருளும் பேரறிவாற்றல் அம்மையாவள். உணர்வில் தங்கி ஒப்பில்லா இன்பம் ஊட்டும்; இவ் வுண்மையைச் சிலரறியார். உயிர்தொறும் அமைந்துவிளங்கும் அம்மை செந்தாமரை வண்ணத் திருமேனியை யுடையவள். ஆருயிர்களை ஈடேற்றும் குறிப்புடன் பேரளிபூண்டு இனி திருந்தனள்.

(அ. சி.) பூவ... இலக்கி - செந்தாமரை ஆசனத்தி. (உ0)

1161. இருந்தனள் ஏந்திழை என்னுள மேவித்
திருந்து புணர்ச்சியில் தேர்ந்துணர்ந் துன்னி
நிரந்தர மாகிய நிரதி சயமோடு
பொருந்த விலக்கிற் புணர்ச்சி அதுவே.

(ப. இ.) அடியேன்ப் உளத்தை பொருந்தித் திருவருள் அம்மை இருந்தனள். நாமெல்லாம் ஆண்டவன் திருவடிப் பேரின்பமாகிய எல்லை யில்லாத வியத்தகு இன்பத்தைப் பெற்று என்றும் ஒன்றுபோல் வாழச்

1. ஐம்புல. சிவஞானபோதம். அ.
2. போகமார்த்த. சம்பந்தர். க. சகூ - க.

சிவபெருமானுடன் அம்மை பொருந்தியிருப்பள். அதனால் ஆருயிர்க்கும் பிரிவில்லாப் பேரின்பம் உண்டு. எல்லையில்லாத வியத்தகு இன்பம் - நிரதிசயானந்தம். (கூ எ)

1162. அதுஇது என்னும் அவாவினை நீக்கித்
துதியது செய்து சுழியுற நோக்கில்
விதியது தன்னையும் வென்றிட லாகும்
மதிமல ராள்சொன்ன மண்டல மூன்றே.[1]

(ப. இ.) உறுதிகொள்ளுதலில்லாது உய்யும் நெறி அதுவோ இதுவோ எனத் தடுமாறும் ஆசையை நீக்கி, அருளம்மையை அகத்தும் புறத்தும் ஒருங்கு வழிபட்டு, உயிர்ப்பு ஒடுங்கியிருந்து இடையருது நோக்கினால் ஊழையும் உப்பக்கம் காணலாம். இதுவே விதியை வெல்லுவதாகும். அவ் வம்மை அமிழ்தம் பொழிகின்ற திங்கள்மண்டிலத்தை இருக்கையாகக் கொண்டவள். அவள் கூறியருளிய மண்டிலம் மூன்றாகும். 'சிவயநம' எனச் சிந்தித்தலே விதியை வெல்லும் மதியாகும்.

(அ. சி.) மதிமலராள் - செந்தாமரைப் பீடத்தாள். (கூ உ)

1163. மூன்றள மண்டலம் மோகினி சேர்விடம்
ஏன்றள ஈரா றெழுகலை உச்சியில்
தோன்று மிலக்குற வாகுதல் மாமாயை
ஏன்றனள் ஏழிரண் டிந்துவோ டீறே.

(ப. இ.) மோகினியாகிய உணர்வுமெய் - அசுத்தமாயை காலம் நியதி கலை என்னும் மூன்று பிரிவினையுடையது. அவை பன்னிரண்டாகக் காணப்பெறும், கலைமுடிவிற் காணப்படும். இதற்குக் குறிக்கோளாக இருப்பது மாமாயை என்னும் தூமாயை இவற்றைப் பதினெறு கலையாகவும் பன்னிரண்டு கலையாகவும் ஏற்றனள் அம்மை. (கூ ஙூ)

1164. இந்துவி னின்றெழு நாதம் இரவிபோல்
வந்துபின் நாக்கின் மதித்தெழுங் கண்டத்தில்
உந்திய சோதி இதயத் தெழும்ஒலி
இந்துவின் மேலுற்ற ஈறது தானே.[2]

(ப. இ.) இந்துவாகிய தூமாயையினின்றெழும் முப்பத்தாறு மெய்யாகிய ஒலி - நாதம் நிறையுயிர் அகத்துப் பகலவன்போல் கதிரொளியாகத் தோன்றிச் செவியில் (வைகரி) பொருந்துமாறு நாக்கில் எழும்.

---

1. அஞ்ச. அப்பர், தி. சுடி - சு,
,, ஊழையும். திருக்குறள், சுஉ0.
,, செறிவிப் பார்சிலே, தி. ககு - சு.
,, சிவாய. நல்வழி, கடி.
2. வைகரி, உள்ளுண, வேற்றுமைப், சூக்கும, சிவஞானசித்தியார், க, க - உ0ஃ கூ.
,, உன்னலரும், சிவப்பிரகாசம், கூ,

அதன் முன்னிலையாகிய கண்டத்தில் வெளித்தள்ளும் மிடற்றே (மத்திமை) சையாக நிற்கும். அதன் முன்னிலையாகிய நினைவு (பைசந்தி) ஓசை திங்கள் நிலவொத்து இருக்கும். இதற்கு முன்னிலையாகிய நுண்ணுசை ஒன்று உண்டெனினும் இவைபோல் ஒப்பில்வைத்துக் கூற முடியாமையால் இதுவே ஈறென்றனர். (சுசு)

1165. ஈறது தான்முதல் எண்ணிரண் டாயிர
மாறுதல் இன்றி மனேவச மாயெழில்
தூறது செய்யுஞ் சுகந்தச் சுழியது
பேறது செய்து பிறந்திருந் தாளே.

(ப. இ.) முடிந்த முடிவாகிய திருவருளம்மை முதல்வியாவள். அவளிருக்கை பதினாறுயிரம் இதழ்களையுடையதாய் மாறுதலில்லாமல் அன்பர் மனத்தடங்குவதாய் அழகிய மதிமண்டலத் தாமரையாகும். இதுவே சிறந்த நறுமணம் கமழும் விந்துவாகும். இதனுல் உயிர்கட்குப் பேறருளிக் காட்சிப் புலனும் உருவுடனும் தோன்றியிருந்தனள் என்பது புலனும். பிறப்பு - காட்சியருளக் கொள்ளுமுரு. (சுஇ)

1166. இருந்தனள் ஏந்திழை ஈறதி லாகத்
திருந்திய ஆனந்தஞ் சென்நெறி நண்ணிப்
பொருந்து புவனங்கள் போற்றிசெய் தேத்தி
வருந்த இருத்தனள் மங்கைநல் லாளே.[1]

(ப. இ.) திருவருளம்மை முடிவாக மதிமண்டலத்திருந்தனள். எல்லாவுலகங்களிலும் அவரவர் விஞக்கீடாகப் பிறந்துவாழும் உயிர்கள் முயன்று வழிபட்டுச் சென்நெறி முறைப்படி ஒழுகிப் பேரின்பமெய்தி வாழ மங்கை நல்லாளும் எழுந்தருளியிருந்தனள். மங்கை நல்லாள் - திருவருளம்மை. போற்றிசெய்து - போற்றிமறை புகன்று. (சுசு)

1167. மங்கையும் மாறனும் தம்மோடு கூடிநின்
றங்குலி கூட்டி அகம்புறம் பார்த்தனர்
கொங்கைநல் லாளுங் குமாரர்கள் ஐவரும்
தங்களின் மேவிச் சடங்குசெய் தாரே.[2]

(ப. இ.) மங்கையாகிய திருவருளும் மாரனுகிய சிவனும் ஒப்பநின்று தம்மிற்கூடி உள்ளும்புறமும் உற்றுநோக்கினர். அதனுல் அருளோன், ஆண்டான், அரன், அரி, அயன் என்னும் ஐவரும் முறையே தோன்றினர். இவ்வைவரும் முறையே அருளல், மறைத்தல், துடைத்தல், காத்தல், படைத்தல் என்னும் ஐந்து தொழில்களையும் அருளாணை பெற்றுப் புரிவாராயினர். சத்தியும் சிவனும் அங்குலியாகிய மகத் (மூலப்பகுதி) தத்துவத்தைக் கேண்ட முனிவன் வாயிலாகத் தொழிற்படுத்துவர். அப்பொழுது கொங்கை நல்லாளாகிய எழுச்சிமெய் தோன்றும். அதிலிருந்தும் குமரர்கள் ஐவர்களாகிய பூதமுதல் (நுண்மை) ஐந்தும்

1. கல்லாதார். அப்பர், சு. அ - அ.
2. சிவஞ்சத்தி. சிவஞானசித்தியார், உ. சு - உ.

தோன்றும். அவற்றினின்றும் பூதங்கள் தோன்றும். பூதங்கள் உலகமாய் விரியும். இவ் வகையாகக் கூறுவாருமுளர். எழுச்சியம்மை - ஆங்கார தத்துவம், (1049)

(அ. சீ.) மாரன் - சிவன். அங்குலி...பார்த்தனர் - மாயையும் உயிர்க் கூட்டங்களும் தங்கி இருக்கும் அதோமுகத்தைப் பார்த்து அணுக் கூட்டங்களைக் கிளப்பிவிட்டும் பின்புறம் நோக்க சத்தியருள் பெற்ற சதாசிவன் முதல் பிரமன் வரை உள்ள ஐவரும். சடங்கு - ஐந்தொழில். (கஎ)

1168. சடங்கது செய்து தவம்புரி வார்கள்
கடந்தனி னுள்ளே கருதுவ ராகில்
தொடர்ந்தெழு சோதி தோளவழி ஏறி
அடங்கிடும் அன்பின தாயிழை பாலே.

(ப. இ.) புறத்தே வேள்வி முதலிய சடங்குகள் செய்து தவம் புரியும் நன்னெறியாளர் அகத்தேயும் அவ்வழிபாட்டைப் பயில்வாராயின் உயிர்க் குயிராகிய திருவருளம்மை பேரொளியாகத் தோன்றுவள். அவ்வருளொளியைத் துணையாகப்பற்றி மேற்சென்று அன்பின்கண் அடங்குதல் வேண்டும். அங்ஙனம் அன்பின்கண்ணடங்கி நிற்பார் அம்மையார் திருவடியைச் சேர்வர்.

(அ. சீ.) கடம் - தேகம். (கஅ)

1169. பாலித் திருக்கும் பணிமல ராறினும்
ஆலித் திருக்கும் அவற்றின் அகம்படி
சீலத்தை நீக்கத் திகழ்ந்தெழு மந்திரம்
மூலத்து மேலது மூத்தது வாமே.

(ப. இ.) அகநிலைக்களங்களாகிய ஆறுதாரமும் தாமரை மலர்களாக அமைத்துக்கொள்ளப்படும். அவற்றுடன் பொருந்திக் களித்திருக்கும் அந்நிலையும் திருவருளம்மையைச் சேரச் செல்வார்க்கு நீக்குதல் வேண்டும். அந்நிலையினையும் நீக்கி மேலோங்குதல் வேண்டும். அங்ஙனம் மேலோங்குதற்குத் துணையாம் மந்திரம் 'நமசிவய' என்பதாகும். இதுவே மூத்துப்போன்று தனி முதல் தமிழ் மந்திரமாகும்.

(அ. சீ.) பணிமலர் ஆறினும் - ஆதாரங்கள் ஆறினும். (கஆ)

1170. மூத்து வதனத்தி முகந்தோறு முக்கண்ணி
சத்தி சதிரி சகளி சடாதரி
பத்துக் கரத்தி பராபரன் பைந்தொடி[1]
வித்தகி என்னுள்ள மேவினின் ருளே.

(ப. இ.) மூத்துப்போலும் அருளொளி வீசும் திருமுகத்தினையுடையவள். ஒவ்வொரு திருமுகத்தும் மும்மூன்று திருக்கண்களையுடையவள். அறிவாற்றலள்; திறமைமிக்கவள். உயிர்கள் உய்யும் பொருட்டு அருளால் திருமேனிகொள்பவள். விரிந்த திருச்சடையினையுடையவள்,

1. தோலும். அ. திருக்கோத்தும்பி, கஅ.

பத்துக் கரத்தினையுடையவள், கரம் - திருக்கை. சிவபெருமான் ஒரு கூற்றிலே மாறாது விளங்கும் ஒப்பிலா வனையிலே அணிந்தவள். வியத்தகு காரணமாயுள்ளவள். அத்தகைய திருவருளம்மை எளியேன் உள்ளம் பொருந்தி நின்றருளினள். (சஅ)

1171. மேலிய மண்டலம் மூன்றுடன் கீழொரி
தாவிய நற்பதத் தண்மதி யங்கதிர்
மூவருங் கூடி முதல்வியாய் மூன்நிற்பார்
ஓவினு மேலிடும் உள்ளொளி யாமே.

(ப. இ.) பொருந்திய மண்டலங்கள் மூன்றினுக்கும் உரிய தெய்வங்களாகக் கருதப்படுவோர் தீ, திங்கள், ஞாயிறு எனப்படுவர். இம் மூவரும் முதல்வியாரின் திருமுன் அவர் திருவாணையை வேண்டி நிற்பர். அம் முதல்வியாரின் திருவருள் ஒளி இடையறாது விளங்கிக்கொண்டிருக்கும். கீழொரி : நிலத்தினின்றும் மேலோங்கும் எரி தாவிய நற்பதம் : வானம். திருவருள் ஒளி கண்மூடிய காலத்தும் அகத்து விளங்கு மாதலின் ஓவினும் என்றார். ஓவினும் : கண்மூடினும்.

(அ. சி.) ஓவினும் - விலக்கினும். (சக)

1172. உள்ளொளி மூவிரண் டோங்கிய அங்கங்கள்
வெள்ளொளி அங்கியின் மேவி அவரோடுங்
கள்ளவிழ் கோனைக் கடந்துட னேநிற்குங்
கொள்ள விசுத்திக் கொடியமு தாமே.

(ப. இ.) திருவருளம்மை அசுத்தே ஒளியோடு காணப்படும் ஆறு நிலைக்களங்களுக்கும் ஒளிகொடுத்துக் கொண்டிருக்கும் முதல்வியாகப் பொருந்துவள். பொருந்தி அந் நிலைக்களங்களுக்குரிய தெய்வங்களுடன் தேன்வழியும் கொன்றைமாலை யணிந்துள்ள சிவபெருமான்வழிக் கலந்து உடனுய்நிற்பள். அவளே, மிகவும் இயற்கைத் தூய்மை எய்தியவள். (சஉ)

1173. கொடிய திரேகை குருவுள் இருப்பப்
படியது வாருனைப் பைங்கழ லீசன்
வடிவது வானந்தம் வந்து முறையே
இடுமுதல் ஆறங்கம் ஏந்திழை யாளே.

(ப. இ.) ஒழுங்காயமைந்த சிறந்த வரைகளுள் குருவுருவாம் திருவருள் உள்ளிருத்தலால் பொருந்திய நிறம் விளங்குகின்ற பொற் கழலணிந்த சிவபெருமானின் திருவுருவம் பேரின்பமாகும். அத் திருவுருவாய் விளங்கும் அம்மை ஆறுதாரங்களுக்கு முதல்வியாவள். (சக)

1174. ஏந்திழை யாளும் இறைவர்கள் மூவரும்
காந்தார மாறுங் கலைமுதல் ஈரேட்டு
மாந்த குளத்தியு மந்திர ராயுளுஞ்
சார்ந்தனர் ஏத்த இருந்தனள் சத்தியே.

(ப. இ.) திருவருளம்மையும் அவர் ஆணவழி இயங்கும் அயன், அரி, அரன் என்னும் கடவுளர் மூவரும், அறுவகை ஓசையும், பதினாறு கலைகளும், தீநெறிச் செலுத்தாது நன்னெறிச் செலுத்தும் புருவநடு ஆணையும், மறைமொழி ஆராய்வும் கொண்டவளாய்ச் சார்ந்தவர் வழிபட்டேத்தும் தன்மையளாய் வீற்றிருந்தனள். குளம்-நெற்றி; புருவநடு. (சசு)

1175. சத்தியென் பாளோரு சாதகப் பெண்பிள்ளை
முத்திக்கு நாயகி என்ப தறிகிலர்
பத்தியைப் பாழில் உகுத்தஅப் பாவிகள்
கத்திய நாய்போற் கதறுகின் றூரே.[1]

(ப. இ.) சத்தியென்று ஓதப்பெறும் பெண்பிள்ளை தோன்றுத் துணையாவள். அவள் ஆருயிர்கள் எல்லாம் நன்னெறி நான்மை பயின்று நாயனடி தலைக்கூடப் பெறுவதற்குத் துணைபுரிபவள். அவ்வம்மை வீடு பேறளிக்கும் மேன்மையள் அவள் திருவடியில் சேர்ப்பிக்கும் பேரன்பாகிய பத்தியினைப் பாழாக உகுத்த அறிவிலாதவர் குரைக்கும் நாய் கடியாதென்பதுபோல் பயனின்றி மறைமொழிந்து கதறுகின்றூர்கள். இவர்களே 'அசிக்க ஆரியங்கள் ஓதும் ஆதர்கள்' எனத் திருமாளிகைத் தேவரால் அறையப்பட்டோராவர். மேலும் நக்கீர தேவரால் 'ஆரியப் புத்தகப் பேய்கொண்டு புலம்புற்று' எனக் கடியப்பட்டோருமாவர்.

(அ. சி.) சாதக · சாதகர்க்குரிய. (சஞ)

1176. ஆரே திருவின் திருவடி காண்பர்கள்
நேரேநின் ரேதி நினையவல் லார்க்குக்
காரேர் குழலி கமல மலரன்ன
சீரேயுஞ் சேவடி சிந்தைவைத் தாளே.[2]

(ப. இ.) செந்தமிழ்த் திருமறையும் திருமுறையும் நானெறிப் பயிற்சியில் நின்று ஓதி அம்மையின் திருவடியை நினையவல்லார்க்கு மழை நிகர் கூந்தலையுடைய அவ் வம்மை செந்தாமரையன்ன சீரும் சிறப்பும் வாய்ந்த தன் சேவடியை நல்கியருள்வள். அத்திருவடியை வைத்தற்குரிய இடம் நினையவல்லாரது உள்ளத் தாமரை. இம்முறையன்றி அத்திருவடியைக் காணும் தகுதி எவர்கட்கும் இல்லை திருமறை: நால்வர் தமிழ். திருமுறை: மூலர் தமிழ். இவற்றை முறையே அறநூல் எனவும் பொருள் நூல் எனவும் கூறுதலுமாம். நெறிநூல் துறைநூல் என்றலும் இவையே. (சசு)

1177. சிந்தையில் வைத்துச் சிராதியி லேவைத்து
முந்தையில் வைத்துத்தம் மூலத்தி லேவைத்து
நிந்தையில் வையா நினைவதி லேவைத்துச்
சந்தையில் வைத்துச் சமாதிசெய் வீரே.

1. திசைக்குமிக். கூ திருமாளிகைத் தேவர், சு. கோயில்-இ.
,, மந்திர. சம்பந்தர் கூ. உஉ-உ.
,, தவறு. கக. நக்கீரர், கோபப்பிரசாதம்.
2. தேவர். நல்வழி, சஎ.

(ப. இ.) திருவருளம்மையின் திருவடியைக் கழியாக் காதலுடன் உள்ளத்தில் வைத்தலும், தலை முதலிய உறுப்புக்களின் வைத்தலும், கண் முன் நிறுத்தலும், மூலத்துவைத்தலும் பழிபாவங்களைச் சிறிதும் நாடாத நாட்டமாகிய சிந்தையுள் வைத்தலும் செய்து திருமுறை நூல்களைப் பண்ணெடும் ஓதி அமைதி வடிவாய் இன்புற்று வாழ்வீராக. சிரசாதி என்பது சிராதி எனத் திரிந்து நின்றது. சிரம் + ஆதி = சிராதி எனக் கடை குறைந்த தெனலுமாம்.

(அ. சி.) சிராதி - சிரசு முதலிய உறுப்புக்களில். (சஎ)

1178. சமாதிசெய் வார்கட்குத் தான்முத லாகிச்
சிவாதியி லாருஞ் சிலேநுத லாளே
நவாதியி லாக நயந்தது ஓதில்
உவாதி அவளுக் குறைவில தாமே.[1]

(ப. இ.) சமாதியாகிய ஒடுக்கத்தில் பயில்வார்க்குத் திருவருளம்மையே முதல்வியாவள். அவள் விற்போலும் நெற்றியை உடையவள். அவளே சிவத்தில் பொருந்தியிருப்பவள். ஒன்பது திருவுருவங்களாகக் கோலங்கொண்டு அருள்செய்யும் அம்மையும் அவளே. அவ் வுருவில் விரும்பியதொன்றை வழிபடில் அத்திருவுருவே எவ்வகைத் திரிபு மில்லாத அம்மை அருள்புரிவதற்காக உறையுள் என்ப உறைவிலதாமே. உறைவு இல் அது ஆமே : உறையுமிடம் அது ஆகும்.

(அ. சி.) சிவாதி - சிவத்தில். (சஅ)

1179. உறைபதி தோறும் முறைமுறை மேவி
நறைகமழ் கோதையை நாடொறு நண்ணி
மறையுட னேநிற்கு மற்றுள்ள நான்கும்
இறைதினைப் போதினில் எய்திட லாமே.

(ப. இ.) திருவருளம்மை உயிர்கள் உய்தற்பொருட்டு, அகத்துப் போல் புறத்தும் திருக்கோவில் கொண்டெழுந்தருளியுள்ளாள். அத் திருக்கோவில்தோறும் முறைமுறையாகச் சென்று மணங்கமழ்கின்ற பூச்சூடியுள்ள அம்மையை நாடொறும் கும்பிட்டு 'நமசிவய' என்னும் தமிழ்மந்திரம் மறவாநினைவுடன் ஓதிக்கொண்டிருக்கும் மெய்யடியார் கட்குத் தூமாயையின்கண் ணுள்ள ஏனைய அத்தன், அருளோன், ஆண்டான், ஆசான் ஆகிய நான்கு மெய்களின்கண் உறையும் 'இறைவன் திருவருளும் தினைப்பொழுதினுள் எளிதின் எய்தும். (சக)

1180. எய்திட லாகும் இருவினை யின்பயன்
கொய்தளிர் மேனிக் குமரி குலாங்கன்னி
மைதவழ் கண்ணிநன் [2] மாதுரி கையோடு,
கைதவம் அன்றிக் கருத்துறும் வாறே.[3]

1. சத்தியாய். சிவஞானசித்தியார், உ. சு. கூ.
,, நானவனென். சிவஞானபோதம். கo. கூ - க.
(பாடம்) 2. மாரிதுர்க் கையொடு.
3. தூயானைச். அப்பர், சு. இo - சு.

(ப. இ.) மேற்கூறிய வழிபாட்டு முறையில்லாதார் இருவினையின் பயனே எய்தி இளைப்பர். மாந்தளிர்போலும் திருமேனியும், குமரிப் பருவமும், என்றும் நீங்கா இளமையும், அருள்பொழியும் கண்ணும் உடைய திருவருளம்மையை இனிய செந்தமிழ் மொழியொடு வஞ்சனை முதலியன இன்றி வழிபடுக. இஃது அருளம்மையைக் கருத்தில் எழுந்தருளப் பண்ணும் வகையாகும், வாறு - வகை ; விதம். மாரி, துர்க்கை எனப் பாடம் கொள்வாரும் உளர்.

(அ. சி.) கைதவம் - வஞ்சம் - பொய் - துன்பம். (இ0)

1181. கருத்துறுங் காலங் கருது மனமுங்
திருத்தி யிருந்தலை சேரு நிலத்து
ஒருத்தியை உன்னி உணர்ந்திடு மண்மேல்
இருத்திடும் எண்குணம் எய்தலும் ஆமே.[1]

(ப. இ.) வழிபடும் காலமுறைமையினைக் கருதுக. திருவருளம்மையின் திருவடியிணையைச் செவ்விய நெஞ்சில் நினைக. வழிபாட்டுக்குரிய இடத்தை நாடுங்கள். ஒப்பில்லாத அவ் வம்மையை உள்ளுர நினைந்து போற்றுங்கள். போற்றவே சிவபெருமானின் எட்டுக் குணங்களும் அவளருளால் உங்களை அதர்வினுய் வந்து எளிதாக இனிதாக எய்தும்.

(அ. சி.) எண்குணம் - தன் வயத்தனுதல் முதலிய எண்குணங்கள். (இக)

1182. ஆமையொன் றேறி அகம்படி யானென
ஓமஎன் றேதியெம் உள்ளொளி யாய்நிற்கும்
தாம நறுங்குழல் தையலைக் கண்டபின்
சோம நறுமலர் சூடிநின் ருளே.[2]

(ப. இ.) ஆமையைப் போன்று மெய் முதலிய அறிகருவிகளைத் திருவருள்துணையால் தீயவழியிற்போகவொட்டாமல் தடுத்து நல்ல வழியில் செலுத்துங்கள். இதுவே புலனடக்கம். யான் திருவருளுக்கு அடிமை என உறுதியாக எண்ணுக. ஓம் என்னும் தமிழ்மறையினை ஓதுக. அப்பொழுது அம்மை உள் ஒளியாக நின்றருள்வள். அத்தகைய பூச்சூடிய நறுமணங்கமழும் கூந்தலையுடைய அம்மையைக் கண்டபின் நீங்கள் சூடிநின்ற அறிவருள்நிலை தோன்றும். ஓம் என்பது ஓம எனத் திரிந்து நின்றது.

(அ. சி.) ஆமையொன்றேறி - ஐம்புலன் அடக்கி. ஓம்அ-பிரணவம். (இஉ)

1183. சூடிடும் அங்குச பாசத் தோகைவழி
கூடும் இருவகைக் கோலக்கைக் குண்டிகை
நாடும் இருபத நன்னெடு ருத்திரம்
ஆடிடுஞ் சீர்புனை ஆடக மாமே.

---

1. கோளில். திருக்குறள். ச
,, எட்டு. அப்பர், தி. அசு-அ.
,, காலையே. கக காரைக்காலம்மை அற்புதம்-கூடி.
2. ஒருமையுள் திருக்குறள், கஉசு.

(ப. இ.) தோட்டியும் கயிறும் தொனிவழியாகப் போடப்படும் பெரிய வலையல்களும், நீர்க்குரகமும், நல்லார் நாடும் இரண்டு திருவடியும் அரசன் நாமமாகிய ஐந்தெழுத்தோதும் திருவாயும்கொண்டு பொன்மன்றில் திருவருளம்மை ஆடிடும் என்ப. உருத்திரம் : ஈண்டுத் திருவைந்தெழுத்து.

(அ. சீ.) உருத்திரம் - உருத்திர மந்திரம். (இசை)

1184. ஆமயன் மாலரன் ஈசன் சதாசிவன்
தாமடி சூடிநின் றெய்தினர் தம்பதங்
காமனுஞ் சாமன் இரவி கனலுடன்
சோமனும் வந்தடி சூடநின் றாளே.[1]

(ப. இ.) திருவருள் அம்மையின் திருவடியைச் சூடி அயன், அரி, அரன், ஈசன், சதாசிவன் என்னும் தூமாயையிலிருக்கும் ஐவரும் தங்கள் தங்கள் நிலையை எய்தினர் (இவர்கள் ஆருயிர் இனத்தில் தவப்பேறுடையார்; இவர்களே அணுபக்கத்தாரென்ப.) இதுபோல் காமனும் அவன் தம்பி சாமனும், பகலவனும், தீக்கடவுளும், திங்களும் அம்மையின் அருள் பெற்றுத் தங்கள் தங்கள் நிலையினை எய்தினர். (இவர்கள் மூலப் பகுதியின்கண்ணுள்ளவர்கள்.) சாமனைப் புதன் என்பாருமுளர்.

(அ. சீ.) சாமன்-புதன்; காமன் தம்பி. (இசை)

1185. சூடும் இளம்பிறை சூலி கபாலினி
நீடும் இளங்கொடி நின்மலி நேரிழை
நாடி நடுவிடை ஞான முருவநின்
றாடு மதன்வழி அண்ட முதல்வியே.

(ப. இ.) முழுமுதல்வியாகிய அம்மை, இளம்பிறை சூடியவள். சூலத்தைக் கைக்கொண்டவள். கபாலமாகிய மண்டை ஓட்டினையும் ஏந்தியவள். என்றும் ஒருபடித்தாம் இளங்கொடி; இயல்பாகவே மலமிலாதவள். சிறந்த அணிகலன் அணிந்தவள். நடுநாடியாகவுள்ளவள் ஆனேற்றை ஊர்பவள். மெய்யுணர்வே திருமேனியாகவுடையவள். அவள் ஆட்டத்தின்வழி அண்டம் அனைத்தும் நின்றாடும் என்க. (இசை)

1186. அண்ட முதலாய் அவனி பரியந்தங்
கண்டதோன் றில்லை கனங்குழை யல்லது
கண்டனுங் கண்டியு மாகிய காரணங்
குண்டிகை கோளிகை கண்டது ளாலே.[2]

(ப. இ.) அண்டமுதலாக உலகம் ஈறுகச் சொல்லப்பட்ட அனைத்தும் அம்மையின் கலப்பின்றி இயங்குவதில்லை. அது வண்டிக்காரன் இல்லாமல் வண்டியியங்குவதில்லை என்பதையொக்கும். பிழைபொறுக்குப் பேற்றியின் அடையாளமாகிய கண்டனும் கண்டியும் ஆண் பெண் பால் இருவேறு வகைத் தோற்றம் அளிப்பது காரியவுலக உருவால்

1. மாமனும் சீவகசிந்தாமணி, சூ.
2. சத்தியும். சிவஞான சித்தியார், க. சூ - 60.

வேறுபாடு காணப்பெறும் உயிர்களின் உடம்பைப் பொறுத்தேயாம். இஃது இயற்கையாகிய மரம், நிலை கதவு எனச் செயற்கையான் இருவேறு வகைப்பட்டு இயைந்து பயனெய்துவதையொக்கும். இதுவல்லாமல் உயிரிலேனும் உயிர்க்குயிராகிய இறையிலேனும் ஆண் பெண் வேறுபாடு இல்லை இவ் வுண்மை 'காவலும்' காதலும் கண்டியைந்தின்புற. மேவும் ஆண் பெண்ணிரண்டாம் மெய்' என்பதனாலும் விளங்கும். குண்டிகை கோளிகை என்னும் ஆண்பெண் வேறுபாடுகள் நோக்குக.

(அ. சீ.) கண்ட...ளுலே - ஆண்பெண் என்னும் விதமாக உலகத்தைப் படைப்பதற்குச் சத்தியும் இரு விதமாய் நின்றுள். (இசு)

1187. ஆலமூண் டானமு தாங்கவர் தம்பதஞ்
சாலவந் தெய்துந் தவத்தின்பந் தான்வரும்
கோலிவந் தெய்துங் குவிந்த பதவையோ
டேலவந் தீண்டி இருந்தனள் மேலே.

(ப. இ.) நாடிகள் ஒருங்கு கூடிவந்து பொருந்தும் நடுநாடியுடன் அமைய வந்து சேர்ந்து உச்சித் தொளைமேல் திருவருள் அம்மை தங்கியிருக்கின்றனள். அவள் திருவருளால் ஆலமுண்டான் பாதமாகிய சிவலுலகம் மிகவும் எய்தும். அமுதுண்ட வானவர் நிலையினை விரும்பின் அதுவும் எய்தும். நானெறி நற்றவத்தின்பமும் கைகூடும். குவிந்த பதவை : சிறுவழி. நடுநாடியாகிய சுழுமுனையாகும்.

(அ. சீ.) குவிந்த பதவை - சிறு வழி. மேல் - கபாலத்தில். (இஎ)

1188. மேலாம் அருந்தவம் மேன்மேலும் வந்தெய்தக்
காலால் வருந்திக் கழிவர் கணத்திடை
நாலா நளினநின் றேத்திநட் டுச்சிதன்
மேலா மெழுத்தின ளாமத்தி னுளே.

(ம. இ.) உயர்ந்த பெருந்தவம் வந்து கைகூடவேண்டிக் காடும் மலையும், நாடும் நகரமும், யாறும் கடலும். குளமும் கூவலும், குகையும் திகையும் கால்நோவ நடந்து வீணுக் கழிவர். அவ்வாறன்றிக் கண்ணிமைப் பொழுதினுள் அருந்தவம் கைகூடும்வழி வருமாறு : இரைக்குடராகிய ஆமத்தின்கண் திருவருளம்மை தங்கியுள்ளாள். அவளை மூலமாகிய நாலிதழ்த் தாமரையின்கண் நாடி வழிபட்டு உச்சிக்குமேல் உடன்கூடி உறைத்து நின்று, ஒ மொழியை உன்னுதலே முறையாம்.

(அ. சீ.) காலால் வருந்தி - நடந்து அலைந்து. நாலாம் தளினம் - நாலிதழ்த் தாமரை. ஆமம் - ஆமாசயம். (இஅ)

1189. ஆமத் தினிதிருந் தன்ன மயத்தினள்
ஓமத்தி லேயும் ஒருத்தி பொருந்தினள்
நாம நமசிவ என்றிருப் பார்க்கு
நேமத் துணைவி நிலாவிகின் றுளே.[1]

1. அஞ்செழுத். சிவஞானபோதம், கூ. கூ - கி.

(ப. இ.) இரைக்குடரில் தங்கும் சோற்றுவண்ணத்தள். கொப் பூழின்கண் செய்யப்படும் ஓமத்தினிடத்தும்[1] பொருத்தியிருந்தனள். அவள் ஒப்பில்லாத திருவருளம்மையாவள். அவள் திருப்பெயர் 'நமசிவ' என்னும் நான்மறையாகும். அம்மறையினை மறவாநினைவுடன் வழுத்து வார்க்கு அம்மை மாறு உறுதித் துணையாவள். விட்டுநீங்காது விளங்கி நிற்பள்.

(அ. சீ.) ஓமம் - அக்கினி காரியம்; நெய்யால் செய்யும் வேள்வி.

(இக)

1190. நிலாமய மாகிய நீள்படி கத்தின்
சிலாமய மாகுஞ் செழுந்தர ளத்தின்
சுலாமய மாகுஞ் சுரிகுழற் கோதை
கலாமய மாகக் கலந்துநின் ருளே.

(ப. இ.) திருவருளம்மை நிலவும் பளிங்குக்கல்லுப் போன்ற வெண் ணிறத்தினள். வட்டமாகிய திரண்ட முத்துப் போன்றவள். நெளிந்த நீண்ட தலையையுடையவள். ஐங்கலை வண்ணமாயிருப்பவள். ஆருயிர் உலகுடல் அனைத்துடனும் கலந்துநின்றனள். ஐங்கலை: நீக்கல், நிலைப் பித்தல், நுகர்வித்தல், அமைதியாக்கல், அப்பாலாக்கல்.

(சO)

1191. கலந்துநின் ருள்கன்னி காதல னேடுங்
கலந்துநின் ருளுயிர் கற்பனை எல்லாங்
கலந்துநின் ருள்கலை ஞானங்கள் எல்லாங்
கலந்துநின் ருள்கன்னி காலமு மாயே.[2]

(ப. இ.) திருவருட்கன்னி, காதலனுகிய சிவபெருமானுடன் கலந்து நின்ருள். ஆருயிர்கள் நாடும் நாட்டத்துள் எல்லாம் கலந்து நின்ருளும் அவளே. அவளே கலைநூல்கள் மெய்யுணர்வு நூல்கள் எல்லாவற்றிலும் கலந்திருந்தனள். காலமும் ஊழியும் நாள்களுமாகிக் கலந்துநின்றவளும் அவளே.

(சக)

1192. காலவி எங்குங் கருத்தும் அருத்தியுங்
கூலவி ஒன்ருகுங் கூட லிழைத்தனள்[3]
மாலினி மாகுலி மந்திர சண்டிகை
பாலினி பாலவன் பாகம தாமே.

(ப. இ.) காலமெய்யாக நிற்கும் அம்மை ஊணுகவும் உண்பிப்பதா கவும் எங்கும் கலந்துநின்றனள். அவளே உற்றுழி உதவும் ஒருபெரும் திருவினள். ஆருயிர்கள் உலகுடல்களுடன் கூடும் தன்மையை அமைத் தவளும் அவளே. அவளே பேரன்பினள்; பெருமைசேர் குலத்தினள்; மந்திர உருவினள்; சண்டிகைப் பெயரினள். எண்டிசையும் ஓம்பும்

1. காமி யஞ்செய்து. இ, உஉ - அ.
2. காலமு. அப்பர், ச. கச - ந.
3. நீடு நெஞ்சுள், இ. அஅ - அ.

எழிலினள். பால்போலும்வெண்மை நிறம்பொருந்திய சிவபெருமானின் பங்குடையவளும் அவளே.

(அ. சி.) காலவி - கால தத்துவ முதல்வி. கூலவி - அநுகூல மானவள். குலி - மனைவி. (சுஉ)

1193. பாகம் பராசத்தி பைம்பொன் சடைமுடி
ஏகம் இருதயம் ஈரைந்து திண்புய
மோக முகமைந்து முக்கண் முகந்தோறும்
நாக முரித்து நடஞ்செய்யும் நாதர்க்கே.

(ப. இ.) திருவருளம்மை, பொன்போலும் திருச்சடைமுடியினையும், ஒன்றும் திருவுள்ளத்தினையும், பத்துத் திருத்தோள்களையும், வேட்கை விளைவிக்கும் ஐந்து திருமுகங்களையும். முகந்தொறும் மூன்று திருக் கண்களையும். யானையுரிபோர்த்த போர்வையினையும் உடையராய் எந்நாளும் நள்ளிருளில் நட்டம் செய்யும் சிவபெருமானுர்க்கு ஒருபாகம் ஆனவள். அவளே பேரறிவுப் பேராற்றல் என்னும் பராசத்தியா யிருப்பவள். (சுஉ)

1194. நாதனு நாலொன் பதின்மருங் கூடிநின்
ரோதிடுங் கூட்டங்கள் ஓரைந் துளஅவை
வேதனும் ஈரொன்ப தின்மரு மேவிநின்
ரூதியும் அந்தமு மாகிநின் ருளே.[1]

(ப. இ.) சிவபெருமானும், முப்பத்தாறு மெய் (தத்துவங்)களும், மெய்யடியார்கள் அனைவரும் கூடிநின்று நினைவுற ஓதும் இயக்கம் ஆட்சி, தடுக்கம். விளக்கம், தோன்றுவித்தல் முதலிய ஐந்தொழில்புரியும் திரு முகங்க (1705) ளைந்தும், அயனும். பதினெட்டுத் தெய்வ கணங்களும் ஆகிய யாவருடனும் திருவருளம்மை பொருந்தியிருந்தனள். அவளே எல்லா வுலகினுக்கும் ஆதியும் அந்தமும் ஆகிநின்ருள்.

(அ. சி.) நாலொன்பதின்மர் - 36 தத்துவங்கள். ஓர் ஐந்து-ஐந்து பிரமர் (ஈசானர் - தற்புருடர் - அகோரர்-வாமதேவர்-சத்தியோசாதர்.) வேதன் - அயன். ஈரொன்பதின்மர் - 18 கணங்கள். (சுச)

1195. ஆகின்ற நாள்கலை ஐம்பத் தொருவர்கள்
ஆகிநின் ருர்களில் ஆருயி ராமவள்
ஆகிநின் ருளுட னாகிய சக்கரத்
தாகிநின் ருளவன் ஆயிழை பாடே.

(ப. இ.) மாயா காரியவுலகம் தோன்றும் நாள் முதற்கண் எழுத் துக்கள் ஐம்பத்தொன்றும் தோன்றும். இவற்றுள் அகரவுயிராக நிற்பவள் அம்மையாகும் அவளுக்கு உடனும் பொறியமைப்பாகிய சக்கரமாக அமைந்துநின்ருன் சிவன். அஃது ஆயிழை பக்கமாகும்.

(அ. சி.) கலை - அக்கரம் பாடு - பக்கம். (சுஞ)

1. ஆதி. அப்பர், இ. அஉ - அ.

1196. ஆயிழை யாளோடு மாதிப் பரமிடம்
ஆயதோ ரண்டவை யாறும் இரண்டுள
ஆய மனந்தோ றறுமுக மவைதனில்
ஏயவார் குழலி இனிதுநின் ருளே.

(ப. இ.) திருவருள் அம்மையுடன் ஆதியாகிய சிவன் இடமா யிருப்பது சக்கரமாகும். சக்கரம் - யந்திரம்; அண்டவை. அச் சக்கரம் எட்டு இதழ்களையுடையதா யிருக்கும். அல்வெட்டிதழ்களுள் மனத்திற்கு வாய்த்த ஆறு இதழ்களில் மணங்கமழ்கின்ற கூந்தலையுடைய அம்மை இனிது வீற்றிருக்கின்றனள். முகம் - இதழ்.

(அ. சி.) அண்டவை - சக்கரம். ஆறும் இரண்டுள - ஏட்டிதழ்.
(கூக)

1197. நின்றனள் நேரிழை யோடுடன் நேர்பட
இன்றே னகம்படி ஏழும் உயிர்ப்பெய்துந்
துன்றிய வோரொன் பதின்மருஞ் சூழலுள்
ஒன்றுயர் வோதி யுணர்ந்துநின் ருளே.

(ப. இ.) நேரிழையாகிய திருவருளம்மை அகத்தே தேர்பட நின்றனள். அதனால், பத்துக்காற்றுகிய உயிர்ப்பினுள் உயிர்க்காற்று, மலக்காற்று, வீங்கற்காற்று மூன்றும் ஒழித்து ஒழிந்த தொழிற்காற்று ஒலிக்காற்று, நிரவுகாற்று, தும்மற்காற்று, விழிக்காற்று, கொட்டாவிக் காற்று, இமைக்காற்று ஆகிய ஏழும் இயங்கும். அம்மையுடன் நெருங்கிய ஒன்பது ஆற்றல்களும் சூழ்ந்து விளங்கும். உயர்வற உயர்ந்த ஒன்றுகிய சிவபெருமானே ஆருயிர்கட்கு உணர்த்த ஓதிநின்றனள். அருளம்மை ஓதிநின்றது தமிழ்மறையும் முறையுமாகும், மறை-வேதம். முறை-ஆகமம்.

(அ. சி.) உயிர்ப்பெய்தும் - உணர்ச்சியுறும். ஒன்பதின்மர்-ஒன்பது சக்திகள். ஒன்று - சிவம்.
(கூஎ)

1198. உணர்ந்தெழு மந்திரம் ஓமெனும் உள்ளே
மணந்தெழு மாங்கதி யாகிய தாகுங்
குணர்ந்தெழு சூதனுஞ் சூதியுங் கூடிக்
கணந்தெழுங் காணுமக் காமுகை யாமே.

(ப. இ.) அகத்தே உணர்ந்தெழு மந்திரம் ஓம் என்று சொல்லுப. அம் மந்திரத்தினுள்ளே பொருள் விளக்கமாகத் தோன்றும். ஆகும் நிலையும் கைகூடும்; மேன்மைப் பண்புகள் அனைத்தும் இயல்பாகவே அமைந்துள்ள மறைபொருளாகிய சிவனும் சிவையும் பிரிவறக்கூடி ஆருயிர்களுடன் கலந்தெழுவர். இவ்வாறு எழும்படி காண்பது உயிர்கள் மாட்டு மிக்க விருப்பமுள்ள அம்மையினால் ஆகும். காமுகை - விருப்ப முள்ளவள்.

(அ. சி.) மணந்தெழும் - பொருந்தி எழும். சூதனும் சூதியும்-சிவ மும் சக்தியும். கணந்து - கலந்து.
(கூஅ)

1199. ஆமது வங்கியும் ஆதியும் ஈசனும்
மாமது மண்டல மாருத மாதியும்
ஏமது சீவன் சிகையங் கிருண்டிடக்
கோமலர்க் கோதையுங் கோதண்ட மாகுமே.

(ப. இ) ஒளிக்கும் ஒளியருளும் பேரொளிப் பிழம்பாகிய சுடரும், நடப்பாற்றலாகிய ஆதியும். அவ் வாதியை உடலாகவுடைய ஆண்டானும், இங்கள் மண்டலமும், காற்றுமுதலாயதும், காவலாகிய உயிரெழுத்தும், உயிரெழுத்துக்கு ஒலிதரும் சிகையாகிய நாதமும், நடுநாடியாகிய கோதண்டமும் இருண்ட கூந்தலின்கண் சிறந்த மலர் சூடிய திருவருள் அம்மையான் இயங்கும்.

(அ. சி.) சீவன் சிகை - உயிர் அக்கரம். கோதண்டம் - சுழுமுனை. (கூ)

1200. ஆகிய கோதண்டத் தாகு மனேன்மனி
ஆகிய ஐம்ப தடனே அடங்கிடும்
ஆகும் பராபரை யோடப் பரையவள்
ஆகு மவள்ஐங் கருமத்தள் தானே.

(ப. இ.) நடுநாடியின்கண் விளக்கமுறும் மனேன்மனியானவள் ஐம்பத்தோரெழுத்துக்களுள் அடங்குவள். அவளே பேரறிவுப் பேராற்ற லுடன் பெரும்பொருளாவள். அவள் படைத்தல் முதலிய ஐந்தொழி லுக்கும் உரியவளாவள். பராபரை - பேரறிவுப் பேராற்றல். பரை - பெரும்பொருள்.

(அ. சி.) ஆகிய ஐம்பத்து உடன் - 51 அக்கரங்களுடன். (எ0)

1201. தானிகழ் மோகினி சார்வான யோகினி
போன மயமுடை யாரடி போற்றுவர்
ஆனவ ராவியி னுகிய வச்சிமந்
தானும் பரசிவ மேலது தானே.

(ப. இ.) திருவருள் ஆருயிர்களின் அன்பை இயக்கும் மோகினி. அவளே சார்ந்த யோகினியாகிய காளி. (காளியின் ஏவல்செய்பவளும் யோகினி எனப்படுவள்.) பிறப்பற முயலும் பெரியோர் அம்மையின் திருவடியைப் போற்றுவர். எழுவகைப் பிறப்பினுள் மேலான மக்கட் பிறப்புயிரின்கண் மிக்குவிளங்குவது சிவம். அச்சிவம் தானுக விளங்குவது பரசிவம். அதற்கும் மேலாக விளங்குவது திருவருளம்மையாகும்.

(அ. சி.) போன மயம் உடையார் - பிறப்பற்றவர். ஆவியினுகிய - உயிர்தோறும் நிறைந்த. (எக)

1202. தானந்த மேலே தருஞ்சிகை தன்னுடன்
ஆனந்த மோகினி யடபோற் றிருவோடு
மோனையில் வைத்து மொழிதரு கூறது
வானவை யோமெனும் அவ்வுயிர் மார்க்கமே.

(ப. இ.) முடிவின்கண்ணும் மேலாக விளங்கும் அம்மை, உயிரெழுத்துக்கு உயிர்ப்புநல்கும் சிகையாகிய நாதத்துடன், பேரின்பம்தரும் அன்பியாவள். அன்பி - மோகினி. அழியாத திருவடிச் செல்வத்துடன் முதற்கண்வைத்த முதல்வியாவள். சொல்லப்படும் கூறுடையதானவை ஓமெனும் எழுத்தாம். அவ்வெழுத்தின்வழிப் பயில்வார் உயிர்மார்க்கம் செல்பவராவர். (எஉ)

**1203.** மார்க்கங்கள் ஈன்ற மனேன்மனி மங்கலி
யார்க்கும் அறிய வரியா ளவளாகும்
வாக்கு மனமு மருவியோன் ரூய்விட்ட
நோக்கும் பெருமைக்கு நுண்ணறி வாமே.

(ப. இ.) உயிர்களின் நிலைமைக்கு ஏற்பப் பல நெறிகளையும் வகுத்தருளிய மனேன்மனி மங்கலக் குணத்தினையுடையாள். அவள் யார்க்கும் தங்கள் அறிவு முனைப்பால் அறிதற்கு ஒண்ணுதவள். மொழியும் நினைப்பும் ஒன்றுய் அடங்கிக் கண்ணுல் பார்க்கும் தன்மையும் நீங்கிய பெருமையுடையீவர்களுக்கு அவர்களது அறிவுக்கு அறிவாய் - நுண்ணறிவாய் விளங்குவள். நுண்ணறிவு - அறிவுக்குள் அறிவு.

(அ. சி.) மார்க்கங்கள் - தாச மார்க்கம், சற்புத்திர மார்க்கம், சக மார்க்கம், சன்மார்க்கம். (எக)

**1204.** நுண்ணறி வாகும் நுழைபுலன் மாந்தர்க்குப்
பின்னறி வாகும் பிரானறி வத்தடஞ்
சேந்நெறி யாகுஞ் சிவகதி சேர்வார்க்குத்
தன்னேறி யாமது சன்மார்க்க மாமே.[1]

(ப. இ.) நுழைபுலன் மாந்தராகிய மெய்யடியார்கட்குத் திருவருளம்மை அறிவுக்கு அறிவாகிய நுண்ணறிவாயிருப்பவள். அவர்களறிவு பிரானறிவுக்குப் பின்னுகநிற்கும். அதுவே பெருவழியாகும். அதுவே செல்லும் நெறியுமாகும். சிவ நிலையை எய்துவார்க்குத் தலைவனெறியாவதும் அதுவே. அதுவே அறிவுநெறியாகிய சன்மார்க்கமாகும். சன்மார்க்கம் (சத்+மார்க்கம்) உண்மைநெறி; மெய்ந்நெறி. (எச)

**1205.** சன்மார்க்க மாகச் சமைதரு மார்க்கமுந்
துன்மார்க்க மானவை எல்லாந் துரத்திடும்
நன்மார்க்கத் தேவரும் நன்னேறி யாவதுஞ்
சன்மார்க்கத் தேவியுஞ் சத்தியேன் பாளே.

(ப. இ.) அறிவுநெறியாக அமைந்தமுறையும் தீநெறியானவை எல்லாவற்றையும் ஓட்டிவிடும். அம்முறையே நடக்கும் நல்லொழுக்கத்தால் நன்னெறிவந்து கைகூடும். இந்நெறிக்கு முதல்வியும் திருவருளம்மையே யாகும். மார்க்கம் - முறைமை; ஒழுங்கு. (எடு)

---

1. துன்பம். அப்பர், ச. உக - கூ.
" நுண்மாண். திருக்குறள், சoஎ.

1206. சத்தியும் நானுஞ் சயம்புவும் அல்லது
மூத்தியை யாரும் முதலறி வாரில்லை
அத்திமேல் வித்திடில் அத்தி பழுத்தக்கான்
மத்தியி லேற வழியது வாமே.

(ப. இ.) சத்தியாகிய பேரறிவுப் பேராற்றலும், ஆவியும் ஆண்டாலும் ஆகிய இவை அல்லாது, முத்திக்கு யாரும் காரணமாகுவாரிலர். உடம்புக்குள் உயிரினை இணைத்துவைக்கில் அவ்வுடம்பு முதிர்ந்தால் நடுத் தண்டின் வீழியாகச் சென்று உயிர்ப்பு உயரும். உயிர்ப்பு - பிராணவாயு. அத்தி - அகரம். வித்து - மகரம். மத்தி - புருவநடு எனக் கூறலும் ஒன்று.

(அ. சி.) நானும் - சீவனும். அத்தி - சரீரம். வித்து - உயிர். அத்தி பழுத்தால் - சரீரம் பண்பட்டால். மத்தியில் - வீணைத் தண்டுபோ. (எசு)

1207. அதுவிது வென்றவ மேகழி யாதே
மதுவிரி பூங்குழல் மங்கைநல் லாளைப்
பதிமது மேவிப் பணியவல் லார்க்கு
விதிவழி தன்னையும் வென்றிட லாமே.[1]

(ப. இ.) ஒருநெறிப்படாது அது வழி என்றும், இதுவழியென்றும் மயங்கி வீண்காலம் போக்காது. தேன் வழியும் பூச்சூடியுள்ள கூந்தலை யுடைய மங்கை நல்லாளாகிய திருவருளம்மையைத் திங்கள் மண்டிலத் தமிழ்தவழியே சென்று வணங்கவல்லார்க்குப் பிறப்பு இறப்புக்கு உட் படுத்தும் விதிவழியையும் வென்றிடுதல் கூடும்

(அ. சி.) பதிமது - சந்திர மண்டலத்தமுது. விதிவழி - வல்வினை. (எஎ)

1208. வென்றிட லாகும் விதிவழி தன்னையும்
வென்றிட லாகும் வினைப்பெரும் பாசத்தை
வென்றிட லாகும் விழைபுலன் தன்னையும்
வென்றிடு மங்கைதன் மெய்யுணர் வோர்க்கே.

(ப. இ.) விதிவழியை வெல்லுவதும், இருவினைப் பாசத்தை வெல்லுவதும், நிலையாப் பொருளை விரும்பும் ஐம்புலன்களை வெல்லுவதும் இயல்பாகவே பொறிவாயில் ஐந்தவித்த பொற்புடைய திருவருளம்மையை வழிபட்டு அவளருளும் திருவடியுணர்வாகிய மெய்யுணர் வினுலாகும். 'அவனருளாலே அவன்தாள் வணங்கி' என்பது, இதற் கொப்பாகும்.

(அ. சி.) வென்றிடும் - மேன்மை பொருந்திய. (எஅ)

---

1. அனுசயப்பட். அப்பர், தி. கூடி - சு.
,, அதுவிது. சிவஞானபோதம், கஉ. சு - க.
,, கூற்றம். திருக்குறள், உகூக.

1209. ஓரையும் பதின்மருள் ஒன்றியே நின்றது
பாரம் பரியத்து வந்த பரமிது
மாரங் குழலாளும் அப்பதி தானுமுன்
சாரும் பதமிது சத்திய மாமே.

(ப. இ.) மிகப் பழங்காலத்துத் தமிழ் எழுத்துக்கள் ஐம்பத் தொன்றுக வழங்கப்பட்டன. அதற்குரிய தெய்வங்களும் ஐம்பத்தொருவ ராவர். அவருள் ஒன்றிநின்றதும் அம்மையின் மெய்யுணர்வேயாகும். இம் முறைமை வழிவழியாக வருவது. கடவுளும் அங்ஙனம் வந்ததாகும். கோடகசாலியின் மலர்சூடிய கூந்தலையுடைய அம்மையும் அவள்தன் கணவனுகிய சிவபெருமானும் வந்துபொருந்தும் நிலையும் இதுவேயாகும். இஃது உண்மையாகும். மாரம் - கோடகசாலி.

(அ. சீ.) ஓர் ஐம்பதின்மர் - 51 அக்கர அதி தேவர்கள். பாரம் பரியம் - பரம்பரை. (எசு)

1210. சத்தியி னோடு சயம்புவும் நேர்படில்
வித்தது வின்றியே எல்லாம் விளைந்தன
அத்தகை யாகி ஐம்பத் தொருவருஞ்
சித்தது மேவித் திருந்திடு வாரே.

(ப. இ.) சத்தியாகிய - முப்பத்தைந்தாம் அன்னமெய்யினை முப்பத் தாருவதாகிய அத்தன்மெய் நேர்படுதலாகிய நோக்கம்கொண்ட தனால் வேறு காரணம் ஏதும் இன்றி ஐம்பத்தோரெழுத்துக்களும் தோன்றின. தோன்றவே அவற்றிற்குரிய கடவுளரும் தோன்றினர். இக் கடவுளரும் சித்தாகிய அறிவினை மேவிச் செம்மையுறுவர். உரிய கடவுளர் - அதி தெய்வம். (அ0)

1211. திருந்து சிவனுஞ் சிலேஷ்ம லாளும்
பொருந்திய வானவர் போற்றிசெய் தேத்த
அருந்திட அவ்விடம் ஆரமு தாக
இருந்தனள் தானங் கிளம்பிறை என்றே [1]

(ப. இ.) இயல்பாகவே பாசங்களினின்றும் நீங்குதலே திருந்துத லாகும். அங்ஙனம் திருந்திய சிவனும், சிலேஷ்மமாகிய விற்போலும் நெற்றியினையுடைய அம்மையும் எழுத்தருளியிருக்கும் வெள்ளிமலையிற் சென்று வானவர்கள் போற்றி முறையிட்டுத்தொழ ஆண்டவன் அக் கொடிய நஞ்சினை எடுத்து அருந்தவும், தேவர்கள் அமிழ்தத்தையுண்ண வும் திருவருளம்மை ஆரருள் புரிந்து இனிதாகக் குளிர்வித்திருந்தனள். இளம்பிறை - இனிய குளிர். பொருந்திய : வீற்றிருக்கும் திருவெள்ளி மலை.

(அ. சீ.) அவ்விடம் - வலிய ஆலகால விடம். (அக)

1. பருவரை. அப்பர், சு. கசு - க.
,, வேத. சம்பந்தர், கூ கo அ - க.
,, ஆலமே. கஉ. சம்பந்தர், எசo.
,, பொய்யாத. எ. உo - சு.

1212. என்றும் எழுகின்ற வேரினை எய்திஞர்
அன்றது வாகுவர் தார்குழ லாளோடு
மன்றரு கங்கை மதியொடு மாதவர்
துன்றிய தாரகை சோதிநின் ருளே.

(ப. இ.) என்றும் வளர்ந்தோங்கும் திருவருள் அழகினை எய்திஞர் அப்பொழுதே அவ்வழகின் வண்ணமாகுவர். நடப்பாற்றலாகிய தார் குழலாளொடும் அவ்வாற்றலின் வெளிப்பாடாம் நிலைபெற்ற கங்கையா ளொடும், மதியொடும், வணங்கும் மாதவரோடும், தொடர்ந்து காணப் படும் பேரொளிப்பிழம்பாக அம்மை நின்றனள். ஏர் - அழகு. (அஉ)

1213. நின்றனள் நேரிழை யாளோடு கோர்பட
ஒன்றிய வுள்ளொளி யாலே யுணர்ந்தது
சென்ற பிராணிகள் சிந்தையில் வேண்டிய
துன்றிடு ஞானங்கள் தோன்றிடுந் தானே.

(ப. இ.) திருவருளம்மை நடப்பாற்றலுடன் நேர்படநின்றனள். அவ்வருள் காட்டக்காணும் உள்ளொளியாலே அஃது உணரப்படுவது. அவ்வடியின்கீழ்ச் சென்ற ஆருயிர்களின் நாட்டத்தில் வேண்டியவைகள் வந்து எளிதாகப் பொருந்தும். திருவடியுணர்வுகளும் தோன்றியிடும்.

1214. தோன்றிடும் வேண்டுரு வாகிய தூய்நெறி
சான்றிடு மாங்கவள் எய்திய பல்கலை
மான்றரு கண்ணியும் மாரனும் வந்தெதிர்
சான்றது வாகுவர் தாமவ ளாயுமே.[1]

(ப. இ.) திருவருளம்மை நன்னெறிச் செல்வார் அன்புகூர்ந்து விரும்பும் திருவுருவோடு தோன்றியருள்வள். அவள் பலவேறு கலை களையும் உணர்த்துவித்துப் படைத்தருள்வள். மான்போலும் கண்ணி யுடைய அம்மையும், மாரனுகிய சிவபெருமானும் மெய்யடியார்முன் தோன்றியருள்வர் அங்ஙனம் தோன்றியருளுவதும் சிவபெருமானும் அம்மையும் பொருளால் ஒருவராயிருக்கும் உண்மையான் என்க. (அச)

1215. ஆயும் அறிவுங் கடந்தணு வாரணி
மாயம தாகி மதோமதி யாயிடுஞ்
சேய அரிவை சிவானந்த சுந்தரி
நேயம தாநெறி யாகிநின் ருளே.

(ப. இ.) திருவருளம்மை ஆராய்வும் அறிவும் கடந்த நுண்ணியல் பானவள். அவள் கச்சுப் பூட்டப்பெற்ற கொங்கையினையுடையவள். அவளே சொல்லமுடியாத மருட்சியுடன் மதோன்மத்தியாவள். அவள் செந்நிறம் வாய்ந்த அம்மை. அவளே சிவப்பேரின்ப அழகி. அவள் அன்புநெறியில் அகப்படும் திருவாய் நின்றனள்.

(அ. சி) அணுவாரணி - அணுவுக்கணுவானவள். (அடு)

---

1. அருளுண்டா. சிவஞானபோதம், இ. உ - கூ.

1216. நெறியது வாய்நின்ற நேரிழை யாளைப்
பிழைவது செய்யாது பிஞ்ஞக னேடுங்[1]
குறியது கூடிக் குறிக்கொண்டு நோக்கும்
அறிவோடும் ஆங்கே அடங்கிட லாமே.

(ப. - இ.) திருநெறியாகிநின்ற திருவருளம்மையைப் பின்னல் திருச் சடையினையுடைய பிஞ்ஞகனேடும் பொருளால் பிரித்துப் பேசாது அம்மையின் குறிப்பின்வழிக் கூடி வேறொரு குறிப்பின்றி அதுவே குறிப் பாகக் குறிக்கொண்டு நோக்குவார் நல்லாராவர். அவர்தம் அறிவு திருவருளறிவுடன் அடங்கி அருளறிவாகவேநிற்கும். அடங்கலென்பது, ஆருயிர் தஞ்செயலற்று அருட்செயலாகவே இயங்குதல். அன்னை அஞ்ஞை என்றுவதுபோல் பின்னலன் பிஞ்ஞகன் என்றுயிற்று. நல்லார்-மெய்கண்டார் ; சிவஞானி ; திருவடியுணர்வு கைவந்தார்.

(அ. சீ.) சத்தியையும் சிவனையும் பிரித்தல் கூடாது என்றது இப் பாட்டு. (அக)

1217. ஆமயன் மாலரன் ஈசன்மா லாங்கதி
ஓமய மாகிய ஒன்பதும் ஒன்றிடத்
தேமய ஞளுந் தெளுதென என்றிடும்
மாமய மானது வந்தெய்த லாமே.

(ப. இ.) திருவருள் ஆணைபெற்றுத் தொழில்புரியும் அயன், அரி (மால்). அரன், ஆண்டான் என்னும் ஆருயிர் இனமாம் இவர்கள் விரும்பும் நிலையினை, அருளவும் மிகவும் சிறப்புத் தன்மை பொருந்திய ஒன்பது ஆற்றல்களும் ஒன்று கூடவும், தீரா இன்பவடிவினனுகிய சிவபெருமான் திருநோக்கம் கொண்டனன். கொள்ளவே தெண்ணுதென எனத் தேனுண்ணவந்து மொய்க்கும் ஆருயிர் வண்டினங்களின் நிலைக்களமாகிய ஒலிமெய் வடிவமெய்திற்று என்பர். மால் - விருப்பம். எனவே தூயமாயையின்கண் அயன்மால் முதலானேர் விரும்பும் நிலைவந்து கைகூடும். இங்குக் கூறிய அயன் மால் அரன் ஆகிய மூவரும் ஆசான் மெய் (சுத்தவித்தை) யின்கண் உறைவோர்.

(அ. சீ.) தேமயம் - இன்ப வடிவம். (அஎ)

1218. வந்தடி போற்றுவர் வானவர் தானவர்
இந்து முதலாக எண்டிசை யோர்களுங்
கொந்தணி யுங்குழ லாளோடு கோனையும்
வந்தனை செய்யும் வழிநவில் வீரே[2].

(ப. இ.) பூங்கொத்தணிந்த கூந்தலையுடைய திருவருளம்மையுடன் கோனுகிய சிவபெருமானையும் இன்பநாட்டமே மிக்குடைய வானவர் களும் பொருள்நோக்கமே மிக்குடைய தானவர்களும் திங்கள் முதலாகச்

1. அருளது. சிவஞானசித்தியார், இ. உ - கூ.
2. ஞாயிருய். அப்பர், ச. கூஉ - சு.
,, வாழ்த்துவதும். அ. திருச்சதகம், சசு.

சொல்லப்படுகின்ற எண்புலக்காவலர்களும் பயன்வேண்டிவந்து திருவடி போற்றுவர். போற்றிவழிபடும் முறைமைவரும் மந்திரத்தால் ஒதப்படும்.

1219. கவிற்றுநன் மந்திரம் நன்மலர் தூபங்
கவற்றிய கந்தங் கவர்ந்தெரி தீபம்
பயிற்றும் உலகினிற் பார்ப்பதி பூசை
அவிக்கொண்ட சோதிக்கோர் அர்ச்சனை தானே.[1]

(ப. இ.) உலகோர் பயின்று செய்யப்படும் பார்ப்பதி பூசைக்கண் நெய்யுணக்கொள்ளும் அறிவொளி அம்மையின் வழிபாட்டிற்கு உயிர் போன்று சிறந்தது நயந்துமொழியும் 'நமசிவய' என்னும் தனித்தமிழ் மந்திரமாகும். அம் மந்திரத்தின் மென்மை, அழகு மலர்ச்சி, மணம் போன்று விளங்குவன நறுமணம்சேர் மலரும் புகையும். அம் மந்திர ஒலிபோன்று திகழ்வது நறுமணம் கமழும் சுடர்விட்டெரியும் நெய் விளக்கு. கொலைபுலை நீத்தோரே அம்மையைத்தொழும் உலையா நிலைசேர் ஒண்குணத்தோராவர். (319) அவி - பாலவி. (1793)

(அ. சி.) அவிக்கொண்ட - நெய்யவியுண்ட. (அக)

1220. தாங்கி உலகில் தரித்த பராபரன்
ஓங்கிய காலத் தொருவன் உலப்பிலி
பூங்கிளி தங்கும் புரிகுழ லாளன்று
பாங்குடன் ஏற்பப் பராசத்தி போற்றே.[2]

(ப. இ.) அழகிய பசுங்கிளி மொழிவேட்டுப் பயிலத் தங்கும் திருக்கையினையும் பின்னல் திருச் சடையினையுமுடைய திருவருளம்மை பண்டே சிவபெருமானை ஒருபாகத்தே கொண்டனள். அதனால் அப் பராபரனுகிய சிவன் உலகினைத் தாங்கினன். திங்களைச் சூடினன்; ஊழிக் காலத்தும் கெடா ஒருவனுய் நின்றனன். ஓங்கிய காலம் - ஊழிக்காலம். உலப்பிலி - அழிவில்லாதவன். அத்தகைய பேரறிவுப் பேராற்றலை வழிபடுவாயாக. (கo)

1221. பொற்கொடி மாதர் புனைகழல் ஏத்துவர்
அக்கொடி மாதுமை யார்வத் தலைமகள்
நற்கோடி மாதை நயனங்கண் மூன்றுடை
விற்கொடி மாதை விரும்பி விளங்கே.

(ப. இ.) கரிய கொடிபோலும் நிறம்வாய்ந்த உமையம்மையை ஆருயிர்கள்மாட்டு நீங்கா ஆர்வம்பூண்ட முதல்வியை, நல்ல கொடி போலும் இடையினையுடைய எழிலியை, மூன்று திருக்கண்களையுடைய மூப்பியை, தோடணிந்த துணைவியைச் சூழவரும் பொன் போல் விளங்கும் பணிப்பெண்கள் திருவடிதொட்டு வழிபடுவர்,

1. அவிசொரிந். திருக்குறள், உடுக.
" நன்றுகும். " கூஉஅ.
2. பெண்ணிற். " திசை.
" கற்றூர். அப்பர், சை. கoசை - உ.

நெஞ்சமே நீயும் உணர்ந்து அன்பு பூண்டு அங்ஙனம் வழிபடுவாயாக. அற்கொடி : அல் + கொடி - கரியகொடி.

(அ. சி.) மாதர் - பரிவார சத்திகள். அற்கொடி - கரிய கொடி போன்ற விற்கொடி - ஒளி பொருந்திய சத்தி. (கக)

1222.. விளங்கொளி யாய விரிசுடர் மாலை
துளங்கு பராசத்தி தூங்கிருள் நீங்கக்
களங்கொள் மணியுடன் காம விலேதம்
உளங்கொ ளிலம்பியம் ஒன்று தொடரே.

(ப. இ.) மிக்கு விளங்குகின்ற ஒளியோடுகூடிய மலர்மாலையும், விரிசுடர்வாய்ந்த மணிமாலையும் விளங்கும் பராசத்தி, 'மாக்கள் சிந்தையுள் சார்ந்துநின்ற, பொங்கிய இருளைப்போக்'கத் திருநீலகண்டம் விளங்குகின்ற சிவபெருமானுடன் மனத்தே காம விளையாட்டுக் கொள்கையில்லாத தோணித்தன்மை ஒத்த புணையாவள் அவள் திருவடியைத் தொடர்ந்து வழிபடுவாயாக. அம்பியம் - தோணித் தன்மை. அம்பி - தோணி.

(அ. சி.) தூங்கிருள் - நிலைபெற்ற ஆணவம். இலம்பியம் - உபதேச மொழி. (கஉ)

1223. தொடங்கி உலகினிற் சோதி மணாளன்
அடங்கி இருப்பதேன் அன்பின் பெருமை
விடங்கொள் பெருஞ்சடை மேல்வரு கங்கை
ஒடுங்கி யுமையொடும் ஒருரு வாமே.[1]

(ப. இ.) உலகினில் ஒளியினைத் தொடங்குவித்து அதற்கும் ஒளி கொடுத்து விளங்கும் சிவபெருமான் திருவருளின்கண் அடங்கியிருப்பது ஏன்? அதுதான் பேரன்பாகிய காதலின் பெருமை. பரந்த அடர்ந்த பெருஞ்சடைமேல் வருகின்ற கங்கையாள் நடப்பாகிய மறைப்பாற்றலாவள் அவள் உமையாள் என்னும் வனப்பாகிய உறைப்பாற்றலின்கண் ஒடுங்குவள். ஆதலால் கங்கையும் உமையும் காணில் ஒருவளே. இவ்வுண்மை அப்பரருளிய 'செறி கழலும் திருவடியும்' என்னும் திருத்தாண்டகத்தினுள் 'மலைமகளும் சலமகளும் மலிந்து தோன்றும்' என்பதனால் விளங்கும். மலைமகள் - பராசத்தி. சலமகள் - திரோதானசத்தி. சலம் : வஞ்சனை ; மறைப்பு. விடங்கொள் - இடங்கொள் ; பரந்த (கூட)

1224. உருவம் பலவுயி ராய்வல்ல நந்தி
தெருவம் புகுந்தமை தேர்வுற நாடிற்
புரிவளைக் கைச்சியெம் பொன்னணி மாலை[2]
மருவி இறைவன் மகிழ்வன மாயமே.

---

1. செறிகழலும் மலைமகளைப். அப்பர், சு. கஅ - அ, எஉ - உ.
,, வங்கமலி. அப்பர், ச. கoச - அ.
,, ,, இணையபல - சிவப்பிரகாசம், உ-கூo.
2. எங்குமுளன். சிவஞானபோதம், உ. ச - க.

(ப. இ.) பல்லுயிர்க்கும் வினைக்கீடாகப் பல உடம்புகளைப் படைத்துக்கொடுத்தருளி அவ்வுடம்புதொறும் தானும் விரவிநிற்றற் பொருட்டுப் பலவாய் நிற்கவல்ல நந்தி அவ்வுயிர்கட்குக் காட்சி அளித்தற் பொருட்டு வெளிப்பட்டும் நின்றருளினன். அதன் உண்மையினை ஆராய்ந்து அறியின் வளையணிந்த கையினையும் பொன்னணிந்த மேனியினையும் உடைய திருவருளம்மையைக் கலந்ததனாலெனப் புலனும். அக்கலப்பால் பதியென்னும் பொருளுடைய இறையவனுவன். இங்ஙனம் கலந்து மகிழ்வனவெல்லாம் அறிதற்கரியன. மாயம்: அறிதற்கரியன.

(அ. சீ.) தெருவம் புகுந்தமை - வெளியிட்டமை. (கச்)

1225. மாயம் புணர்க்கும் வளர்சடை யானடித்
தாயம் புணர்க்குஞ் சலநதி அமலனைக்
காயம் புணர்க்குங் கலவியுள் மாசத்தி
ஆயம் புணர்க்குமவ் வியோனியு மாமே.

(ப. இ.) வளரும் திருச்சடையினையுடைய சிவபெருமான் மாயா காரியமாகிய உலகு உடல் கலன் ஊண் முதலியவற்றை இயைந்தியக்கிப் படைத்தருள்வன். அவனே திருவடிப் பேற்றைச் சாரும் கூட்டுறவை நல்கியருள்வன். மறைப்பாற்றலாகிய சலநதியை (1223) தாங்குபவனும் அவனே. இயல்பாகவே பாசங்களினின்று நீங்கிய இறைவன் உயிர்களுக்கு வினைக்கீடாக உடலையளித்துக் கூட்டுவிப்பன். இவையனைத்தும் திருவருளோடு கூடிய கூட்டங்காரணமாக நிகழ்வன. மாசத்தி - திருவருள். யோனி - காரணம். உலகு- புவனம். உடல் - தனு. கலன் - கரணம். ஊண் - போகம்.

(அ. சீ.) மாயம் புணர்க்கும்-மாயையின் பரிணமங்களாகிய உடல்-கருவி - உலக போகங்களைக் கொடுக்கும். அடித்தாயம் - திருவடி ஞான உரிமை. சுலமதி - கங்கையையும் மதியையும் தரித்த. காயம் புணர்க்கும் - உயிரை உடலுடன் கூட்டும். (கஞ)

1226. உணர்ந்தொழிந் தேனவ னுமெங்கள் ஈசனைப்
புணர்ந்தொழிந் தேன்புவ னபதி யாரை
அணைந்தொழிந் தேனெங்கள் ஆதிதன் பாதம்
பிணைந்தொழிந் தேன்றன் அருள்பெற்ற வாறே.[1]

(ப. இ.) எங்கள் ஆண்டவனை அவனருளால் உறுதியாகவுணர்ந்தேன். அவனே புவனமாகிய உலகமுதல்வன். அவனைப் புணர்ந்தேன்; அணைந்தேன். எங்கள் ஆதியையுடைய முழுமுதல்வனைப் பின்னிக்கிடந்தேன். இவையனைத்தும் திருவருள் தரப்பெற்றவாறென்க.

(அ. சீ.) பிணைந்து - கலந்து. (கக)

---

1. புல்லிக். திருக்குறள், ககஅ.
,, சூடுவேன். அ. திருவம்மானை, கஎ.

1227. பெற்றருள் பெருமை பெரிய மனோன்மனி
நற்றருள் இறைவனே நற்பய னேஎன்பர்
கற்றருன் அறியுங் கருத்தறி வார்கட்குப்
பொற்றருள் உலகம் புகல்தனி யாமே[1]

(ப. இ.) ஒன்பது திருவாற்றல்களுள் முதன்மை பெற்றவள் மனோன்மனி. அவளே அனைத்துப் பெருமையும் பெற்றவள். அவள் துணையாக இறைவன்தன் நல்ல திருவடியே அழிவிலாத நற்பயன் என்று கூறுவர். சற்றகல்வியின் பயனுகிய கருத்தை யறிவார்கட்கு அவன் திருவடியாகிய விழுப்பேற்றினை எய்துதல் எளிதாகும் - தனிச் சிறப்பாகும்.

(அ. சி.) பொற்றருள் உலகம் - முத்தி உலகம் (கூன)

1228. தனிநா யகன்றனை டேன்னெஞ்சம் நாடி
இனியார் இருப்பிடம் ஏழுல கென்பர்
பனியான் மலர்ந்தபைம் போதுகை ஏந்திக்
கனியாய் நினைவதென் காரணம் அம்மையே.[2]

(ப. இ.) குளிரால் மலர்ந்த அழகிய பூக்களைக் கை ஏந்திக் கனிந்த உள்ளத்துடன் அம்மையின் திருவடியை நினைந்து தொழுங்காரணத்தால் ஒப்பில்லாத முழுமுதல்வனை என்னெஞ்சம் நாடுவதாயிற்று. அதன் பயனுக இனியர் என்னும் பெயர் சிவபெருமானுக்கு எய்துவதாயிற்று. அவ்வினியார் உறையும் உறையுள் ஏழுலகுக்கும் அப்பால் என்பர்.

(அ. சி.) கனியாய் நினைவது - கனிந்து நினைவது. (கஅ)

1229. அம்மனை அம்மை அரிவை மனோன்மனி
செம்மனை செய்து திருமங்கை யாய்நிற்கும்
இம்மனை செய்த இந்நில மங்கையும்
அம்மனை யாகி அமர்ந்துநின் றாளே.[3]

(ப. இ.) உச்சி வீட்டுக்குரிய அம்மை மனோன்மனி என்ப. அவளே செம்பொருள் திருவடியின் உறையுளைச் செய்து திருமங்கையாய் நிற்பள். அவள் இம் மனையாகிய இவ்வுடலைத் தந்தருளிய பெருமைமிக்க நில மடந்தை என்னும் பெயர் பூண்டனள். அவளே அழகிய அன்னையாய் ஆதியாய் யாண்டும் பொருந்திநின்றனள். அவ்வருளம்மை தந்தருளிய ஒரு மனையாகிய ஒருடம்பிலேயே பிறப்பற முயலுதல்வேண்டும். வேறு பிறப்பெடுக்கும் நோக்கங்கொண்டார் பிறன்மனைநோக்கும் பேதையராவர். அவர் 'பிறன்மனை நோக்காத பேராண்மை'யராகாமை பெரிதும் வருந்தத்தக்க தொன்றாகும். மனை - பிறிதுமோருடம்பு.

(அ. சி.) அம்மனை - சகசிர அறை. இம்மனை - இவ்வுடல் (கக)

1. கற்றதனால். திருக்குறள், உ.
2. கச்சையே. அப்பர், ச.சுசு - க.
3. துறக்கப். அப்பர், ச. ககஅ - அ.
,, பிறன்மனை. திருக்குறள், கசஅ.

1230. அம்மையும் அத்தனும் அன்புற்ற தல்லது
அம்மையும் அத்தனு மாரறி வாரென்ன
அம்மையோ டத்தனும் யானும் உடனிருந்து
அம்மையோ டத்தனை யான்புரிந் தேனே.[1]

(ப. இ.) மகப்பேறு கருதி அருந்தவமிருந்து உடலுறவாம் அம்மையும் அத்தனும் என்மாட்டு அன்பு பூண்டனர். அவ்வன்பு உடலைக் கண்டேயாம்; உயிரைக் கண்டன்று. என்னை என்பது ஈண்டு உயிரை. உயிர்க்கும் உறவாம் அம்மையும் அத்தனுமாகிய சிவனும் சிவையும், அடிமையாகிய யானும் உடனுறையும் காரணத்தால் அம்மையோடத் தனுகிய சிவன் சிவை என்னும் விட்டுப்பிரிவா இருவர்களையும் அருட் கண்ணே கண்ணுகக்கொண்டு அடியேனும் தொழுதுய்ந்தேன். (க00)

---

# 9. ஏரொளிச் சக்கரம்

1231. ஏரொளி யுள்ளெழு தாமரை நாலிதழ்
ஏரொளி விந்துவி லுலெழு நாதமாம்
ஏரொளி யக்கலை எங்கும் நிறைந்தபின்
ஏரொளிச் சக்கர மங்நடு வன்னியே.

ப. இ.) முலாதாரத்துத் தோன்றுவது நாலிதழ்த் தாமரை. அத னுள்ளிருந்து உச்சித்தொளை வரை தொடர்ந்து தோன்றுவதொரு கதி ரொளி உண்டு அவ் வேரொளித்துணையால் விந்துவின் ஒளிதோன்றும். அவ் வொளியால் நாதவொலி உண்டாம். அவ்வொப்பில்லாத ஒளி எங்கும் நிறைந்தபின் நடுவாகிய வீணுத்தண்டின் இருபக்கமும் அழகிய பேரொளி தோன்றும், அதன் நடுவாகச் சுடர்ச் சக்கரம் அனற்பிழம்பாக நிற்கும்.

(அ. சி.) ஏரொளி - வீணுத்தண்டின் இருபக்கமும் உள்ள கதி ரொளி. (க)

1232. வன்னி யெழுத்தனை மாபலம் உள்ளன
வன்னி யெழுத்தனை வானுற ஓங்கின
வன்னி யெழுத்தனை மாபெருஞ் சக்கரம்
வன்னி யெழுத்திடு வாறது சொல்லுமே.

((ப. இ) சுடர்ச் சக்கரத்து எழுத்துக்கள் மிக்க வலுவைத் தருவன, அவ்வெழுத்தே வானுற ஓங்கும் வழியும் வகுத்தன. அவ்வெழுத்துக் களே மிகப்பெரும் சக்கரத்தமைந்தன. அவ்வெழுத்தமைக்கு முறையும் சொல்லப்படும்.

(அ. சி.) வன்னி எழுத்து - ஏரொளிச் சக்கர எழுத்து. (உ)

---

1. இட்டான். க0. திருமந்திரம், ஸஎ0.
,, கருவுற்றிருந்துன். ச. கஎ - இ.

1233. சொல்லிய விந்துவும் ஈராறு நாதமாஞ்
சொல்லிடு மப்பதி யவ்வெழுத் தாவன
சொல்லிடு நூறெடு நாற்பத்து நாலுரு
சொல்லிடு சக்கர மாய்வரு மேலதே.

(ப. இ.) கூறப்படும் விந்துவும் பன்னிரண்டு உயிர்ப்புக்களை யுடையது. உயிர்ப்பு - பிராணன். அதன் தலைமை எழுத்துவடிவாகிய நாதமாகும் அவ்வோசை வழியாக உலகம் தோன்றிடும் முறைமைக்குப் பன்னிரண்டும் பன்னிரண்டும் உறழ நூற்று நாற்பத்து நான்கு அறைகளுள்ள சக்கரம் தோன்றும்.

(அ. சீ.) 1233 முதல் 1238 வரை ஐம்பூதங்களின் உற்பத்தி கூறப்படுகிறது. (கூ)

1234. மேல்வரும் விந்துவு மவ்வெழுத் தாய்விடும்
மேல்வரு நாதமும் ஓங்கும் எழுத்துடன்
மேல்வரு மப்பதி யவ்வெழுத் தேவரின்
மேல்வரு சக்கர மாய்வரு ஞாலமே.

(ப. இ.) உச்சியளவுஞ் சென்ற விந்துவும் நாத ஓசையால் வெளிப்படும். அதனுல் அது நாத எழுத்தாகிய அகரமாகத் தோன்றும். அகர எழுத்துடன் கூடிச் சுழல மேற்கூறி சக்கரம் உலகமாய் விரியும். (சு)

1235. ஞாலம தாக விரிந்தது சக்கரம்
ஞாலம தாயிடும் விந்துவும் நாதமும்
ஞாலம தாயிடு மப்பதி யோசனை
ஞாலம தாக விரிந்த தெழுத்தே.

(ப. இ.) நூற்று நாற்பத்து நான்கு அறைகளோடு கூடிய சக்கரமே உலகமாக விரிந்தது. உலக முதலாக நிற்பதும் நாதவிந்துக்களாகும். ஞாலமும் யோசனையாகிய ஒரு நீட்டலளவையைக் கொண்டது. ஞாலம தாக விரிதற்குக் காரணமாக வுள்ளது ஓசை என்க. (எ)

1236. விரிந்த எழுத்தது விந்துவும் நாதமும்
விரிந்த எழுத்தது சக்கர மாக
விரிந்த எழுத்தது மேல்வரும் பூமி
விரிந்த எழுத்தினில் அப்புறம் அப்பே.

(ப. இ.) எழுத்தாக விரிந்தது விந்துவும் நாதமும். சக்கரமாக விரிந்ததும் அவ் வெழுத்துக்களே. அவ்வெழுத்தின் சுழற்சியால் நிலம் விரிந்தது. அந்நிலத்தின்மேல் தோன்றுவது நீராகும். (அ)

1237. அப்பது வாக விரிந்தது சக்கரம்
அப்பினில் அப்புறம் அவ்வன லாயிடும்
அப்பினில் அப்புறம் மாருத மாயெழ
அப்பினில் அப்புறம் ஆகாச மாமே.

(ப. இ.) நீராக விரிந்த சக்கரத்தின்மேல் அனலாய் விரிந்திடும். அனலின்மேல் காற்றுய் விரிந்திடும். காற்றின்மேல் ஆகாசமாகிய வெளியாய் விரிந்திடும். (எ)

1238. ஆகாச அக்கர மாவது சொல்லிடில்
ஆகாச அககரத் துள்ளே எழுத்தவை
ஆகாச அவ்வெழுத் தாகிச் சிவானந்தம்
ஆகாச அக்கர மாவ தறிமினே.[1]

(ப. இ.) வெளியின் அடையாளமாகிய எழுத்தைக் கூறுமிடத்து ஆகாச அக்கரத்துள்ளே நிறைகின்ற நாதவிந்துக்களாகிய வித்தெழுத்துக்களுமாகிய ஆகாச எழுத்தே சிவப்பேரின்பம் ஆவதறிக. மேல் 1233 முதல் இதுகாறுங் கூறிய திருப்பாட்டுக்களால் கூறிய ஐம்பூதங்களுக்குரிய எழுத்துக்கள் முறையே 'ல வ ர ய அ' என்ப. ('பொன்பார்' உண்மை விளக்கம். கூ.) (அ)

1239. அறிந்திடுஞ் சக்கரம் ஐயைந்து விந்து
அறிந்திடுஞ் சக்கர நாத முதலா
அறிந்திடும் அவ்வெழுத் தட்பதி யோர்க்கும்
அறிந்திடும் அப்பக லோனிகல் யாமே.

(ப. இ) அறியப்படும் சக்கரம் ஐந்தும் ஐந்தும் கூடிய பத்தும் ஆகும். அவை முறையே மூலாதாரமுதல் ஆதாரங்கள் ஆறு, ஞாயிறு திங்கள் தீ மண்டலம் மூன்று. அதீதமாகிய அப்பாலொன்று. விந்தும் நாதமும் சக்கரமுதலாம். அந்த அந்தச் சக்கரத்துக்குரிய முதன்மையோர் உளர். இம் முதன்மையோர்க்குத் தெய்வம் பகலவனுகிய சிவபெருமான். அவனே அனைத்திற்கும் நிலைக்களமாவன்.

(அ. சி.) ஐயைந்து - ஐந்து ஐந்து - 10. அப்பதியோர் - அந்தந்தச் சக்கர அதிபர்கள். பகலோன் - சிவசூரியன். (கூ)

1240. அம்முதல் ஆறுமவ் வாதி எழுத்தாகும்
அம்முதல் ஆறுமவ் வம்மை எழுத்தாகும்
[2]இம்முதல் நாலும் [3]இருநடு வன்னியே.
இம்முத லாகும் எழுத்தவை எல்லாம்.[4]

(ப. இ.) அந்த முதன்மையான ஆதாரங்கள் ஆறும் ஆதி எழுத்துக்குரியனவாகும். அவை அம்மை எழுத்தாகும். அதீத முதலான நான்கும், இருநடு என்ப. இருநடு என்பது இரண்டுக்கும் நடு என்பதாகும். எனவே, மூலம் கொப்பூழ் மேல்வயிறு என்னும் மூன்றனுள் நடுவாகவுள்ள கொப்பூழ் என்க. இது அனலுக்கிடமாகும். இக் கொப்பூழிலிருந்து எல்லா எழுத்துக்களும் தோன்றும்.

---

1. பொன்பார். உண்மை விளக்கம், கூ.

(பாடம்) 2. அம்முதல்.

,, 3. இகுந்திடு.

4. சூக்கும. சிவஞானசித்தியார், க. க - உக.

(அ. சீ.) அம்முதல் ஆறும் - அந்த முதன்மையான ஆதார எழுத்துக்கள் ஆறும். ஆதி எழுத்து - ஆக்கற்றொழிலுக்குக் காரணமான எழுத்துக்கள். இருநடு - நாபீ. (கo)

1241. எழுத்தவை நூறுரு நாற்பத்து நாலும்
எழுத்தவை யாறது வந்நடு வன்னி
எழுத்தவை யந்நடு வச்சுட ராகி
எழுத்தவை தான்முதல் அந்தமு மாமே.

(ப. இ.) மூலாதாரமுதலாகச் சொல்லப்படும் எழுத்துக்கள் நூற்று நாற்பத்துநான்கும். அவ்வச்சக்கரங்களில் அமைந்துள்ளன. நடுவாக ஆறெழுத்துமாகும். அவற்றுள் நடுவாகக் காணப்படுவது அனலாகும். எழுத்துக்கள் முதலும் முடிவும் ஆவன. (கக)

1242. அந்தமும் ஈறு முதலா னவையற
அந்தமும் அப்பதி னேட்டுடன் ஆதலால்
அந்தமும் அப்பதின் மூனில் அமர்ந்தபின்
அந்தமும் இந்துகை யாருட மானதே.

(ப. இ.) மேற்கூறிய அந்தமும் ஈறும் முதலானவை நீங்க. நெஞ்சம் மிடறு என்னும் ஈரிடத்துமுள்ள எழுத்துக்கள் பதினெட்டாகும். பன்னிரண்டாம் நிலை எனப்படும் துவாதசாந்தா நீதத்தின் எழுத்துப் பதின்மூன்றுருகும். அதன்மேல் திங்கள் மண்டலம். அதன்மேல் அறியும் நிலையுளது.

(அ. சீ.) பதினெட்டு - விசுத்தி - ஆஞ்ஞையின் எழுத்துக்கள். பதின் மூன்று - துவாத சாந்தத்தின் எழுத்துக்கள். இந்துகை - சந்திர மண்டலம். ஆருடம் - அறிதல் (கஉ)

1243. ஆவின மானவை மூந்நூற் றறுபது
மாவின மப்பதி னேந்தி னாயுறு
மாவின மப்பதி னேட்டுட னுயுறு
மாவின மக்கதி ரோன்வர வந்தே.

(ப. இ.) ஆவினம் - (அவ்வினம்) அதன் வகை. பகலவன் வகையாகத் தோன்றும் நாள்கள் மூந்நூற்றறுபது. மாதத்தின் இருகூறு பதினைந்து தினம். இது பிறையல்லது பக்கம் எனக் கூறப்படும். திங்கள் பன்னிரண்டும் கார்முதலாகச் சொல்லப்படும் பருவம் ஆறும் ஆகிய பதினெட்டு. இவையெல்லாமாகப் பொருந்துகின்ற கால எண்ணிக்கைகள், காலமெய்யினைப் படைத்தருளும் கால காலனுகிய சிவபெருமானுலாவன. அதனுல் அவன் அக்கதிரோன் எனப்படுவன். அக்கதிரோன் வர இவை எல்லாம் வந்தன் வென்க.

(அ. சீ.) ஆவினம் - அந்த வகை (கக)

1244. வந்திடும் ஆகாசம் ஆறது நாழிகை
வந்திடும் அக்கரம் மூப்பதி ராசியும்
வந்திடு நாளது மூந்நூற் றறுபதும்
வந்திடு ஆண்டு வகுத்துரை யவ்வியே.

(ப. இ.) வான்வழியாகக் கணக்கிடும் நாழிகை முப்பதும், பன்னிரு மனைகள் எனப்படும் இராசியும், இவற்றுள் வரும் நாள்கள் முந்நூற்றறுபதும். அவ்விதியின்படி கணக்கிடப்படும் என்க. அவ்விதியே என்பது அவ்வியே எனத் திகரம் குறைந்துநின்றது.

(அ. சி.) ஆகாசம் ஆறு - ஆகாய வழி. அவ்வியே - அவ்விதியே. (சச)

*1245. அவ்வின மூன்றுமவ் வாடது வாய்வரும்
[1]எவ்வின மூன்றுங் கீளர்தரு வேறதாஞ்
சவ்வின மூன்றுந் தழைத்திடுந் தண்டதாம்
இவ்வின மூன்றும் இராசிக ளெல்லாம்.

(ப. இ.) அவ்வினமாகிய மூன்றும் - ஆடாகிய மேட வீதியும், எவ்வின மூன்றும் - விளக்கமிக்க ஏறுகிய இடபவீதியும், செவ்வின மூன்றும் - தழைத்து விளங்கும் தண்டாகிய மிதுன வீதியும் எனப் பன்னிரு மனைகளும் பகுக்கப்படும். அவை வருமாறு; ''மேடவீதி யிடபவீதி, மிதுன வீதி யெனவொரு மூன்றே, அவைதாம், இருசுடர் முதலிய இயங்கும் நெறியே. இடபம் சிங்கம் மிதுனம் கடகம் இன்ன நான்கும் மேடவீதி. மீனம் மேடம் கன்னி துலாமூ, மான இடப வீதிக்கமைந்தன. வில்லு மகரங் குடமே விருச்சிகம், சொல்லிய மிதுன வீதித் துறையே'' பிங்கலந்தை, உசை - எ. ஆடு - மேடம். ஏறு - இடபம். தண்டு - மிதுனம்.

(அ. சி.) ஆடு - மேடம். (சஇ)

1246. இராசியுட் சக்கரம் எங்கும் நிறைந்தபின்
இராசியுட் சக்கர மென்றறி விந்துவாம்
இராசியுட் சக்கர நாதமும் ஒத்தபின்
இராசியுட் சக்கரம் நின்றிடு மாறே.

(ப. இ.) மூலாதார முதல் சக்கரங்கள் எங்கும் நிறைந்தபின், இதனை இராசிச் சக்கரம் என்று கூறுவர். இச் சக்கரம் விந்து என்னும் ஒளியால் நிலைபெறும். இவ்விந்துவும் நாதமும் அகவோசை புறவோசைகளால் ஒத்த இடத்து இராசியுட் சக்கரம் செவ்வே இயங்கும்.

(அ. சி.) இராசியுள் சக்கரம் - ஆறுதாரங்களும் மேடம் முதலிய 12 இராசிகளுள். (சசு)

1247. நின்றிடு விந்துவெண் ணுள்ள எழுத்தெலாம்
நின்றிடு நாதமும் ஓங்கும் எழுத்துடன்
நின்றிடு மப்பதி யவ்வெழுத் தேவரில்
நின்றிடு மப்புறந் தாரகை யானதே.

(பாடம்). 1. கெவ்வின.

(ப. இ.) விந்து முதலாகக் கூறப்படும் எழுத்துக்களெல்லாம் நாதம் உள்ளிருந்து ஒலிப்பிக்க ஒலிக்கும். அவ்வம்மணிக்குரிய எழுத்துக்கள்வரின் ஆங்கு நிற்கும். அதன்பின் தாரகை என்னும் நாள்கள் நிற்கும். மூலமுதல் நிலைகள் ஆறினுக்கும் மனைகள் இவ்விரண்டாகும். நாள்கள் (நட்சத்திரம்) நாலரையாகும். இவ்விரண்டு - இரண்டிரண்டு.

(அ. சி.) விந்து என்று உள்ள - விந்து என்று சொல்லப்படுகின்ற குறி எழுத்து எல்லாம். நாதமும் ஓங்கும் - நாதமும் கூடி எழும். அப்பதி - அந்தந்த இராசி மண்டலம். அவ்வெழுத்தே வரில் - அது அதற்குரிய எழுத்துக்களே வரில். தாரகை - நட்சத்திரங்களாம். ஆதாரம் ஒவ்வொன்றினுக்கும் இராசி இரண்டு நட்சத்திரம் 4½ ஆக இராசி 12 நட்சத்திரம் 27. (கஎ)

1248. தாரகை யாகச் சமைந்தது சக்கரந்
தாரகை மேலோர் தழைத்தது பேரொளி
தாரகை சந்திரன் நற்பக லோன்வரத்
தாரகை தாரகை தாரகை கண்டதே.

(ப இ.) சக்கரம் நட்சத்திரவடிவமாகச் சமைந்தது. அந் நட்சத்திரங்களுக்கு ஒளிகொடுத்துக்கொண்டு செழித்த சிவ ஒளி மேலாக நிற்கின்றது. இந் நட்சத்திரச் சக்கரத்தில் சந்திரனும் சூரியனும் வர, நட்சத்திர வடிவமான எழுத்து முறையாகக் காணப்பட்டது.

(அ. சி.) பேரொளி - சிவ ஒளி. தாரகை கண்டது - நட்சத்திர வடிவமான அக்கரம் காணப்பட்டது. (கஅ)

1249. கண்டிடு சக்கரம் விந்து வளர்வதாங்
கண்டிடு நாதமுந் தன்மேல் எழுந்திடக்
கண்டிடு வன்னிக் கொழுந்தன வொத்தபின்
கண்டிடு மப்புறங் காரொளி யானதே.

(ப. இ.) காணப்படும் நட்சத்திர சக்கரங்கள் விந்துவிலுள் உண்டாவதாம். அவ் விந்துவின் மேல் நாதமும் தோன்றும். அந் நாதத்தின் மேல் அழல் வண்ணமாகிய சிவ ஒளி தோன்றும். இவை அனைத்தும் ஒத்தபின் செம்மேனி எம்மானின் ஒரு பங்காகிய அம்மையின் காரொளி தோன்றும். இவ்வொளி எல்லாவற்றையும் இயக்கும்.

(அ. சி.) கண்டிடு சக்கரம் - இவ்வாறு காணப்பட்ட தாரகைச் சக்கரம். வன்னிக்கொழுந்து - ஒளிச்சுடர். காரொளி - சத்தி ஒளி. (கக)

1250. காரொளி அண்டம் போதிந்துல கெங்கும்
பாரொளி நீரொளி சாரொளி காலொளி
வானொளி ஒக்க வளர்ந்து கிடந்தபின்
நேரொளி ஒன்றுய் நிறைந்தங்கு நின்றதே.

(ப. இ.) அக் கரிய ஒளியானது அண்டத்தை உள்ளிட்டு உலகெங்கும் நிறையும். பாரொளியும் நீரொளியுமாகிய இரண்டும் அடங்குவதற்குரிய சாரொளியாகத் தீயொளியும். அதனையும் அடக்கிக் கொண்டிருக்கும் காலொளியாகிய காற்றொளியும் அதனையும் உள்ளடக்கிக் கொண்டிருக்கும் மேலொளியாகிய வானொளியும் ஆகிய இவை எல்லாமும் மூலாதார முதலாகத் தோன்றிய ஐம்பூத மண்டலங்களினும் நிறைந்து நிற்பதால் அழகிய ஒளியாய் எங்கும் நிறைந்து நிற்கும் என்பது கருத்தென்க.

(அ. சி.) சாரொளி - தீயொளி. காலொளி - வாயு ஒளி. ஏரொளி - மூலாதாரத்தினின்று ஐம்பூத மண்டலங்களிலும் நிறைந்த ஒளி. (உ0)

1251. நின்றது அண்டமும் நீளும் புவியேலாம்
நின்றவிவ் வண்ட நிலைபெறக் கண்டிட
நின்றவிவ் வண்டமு மூல மலமோக்கும்
நின்றவிவ் வண்டம் பலமது விந்துவே.

(ப. இ.) பேரண்டங்களும் விரிந்த பல உலகங்களும் நிலைத்து நிற்கின்றன. ஊழி முடிவுவரை இவைகள் நிலைபெறக் காண்கின்றோம். இவைகளும் ஒருவகையான் மூலமலத்துடன் ஒக்கும். இவ் வண்டம் முதலன நிலைநிற்பதற்கு அடிப்படை வலுவாகவுள்ளது விந்து. மெய்ததத்துவம். விந்து - முப்பத்தைந்தா மெய்.

(அ. சி.) மூலமலம் – ஆணவ மலம். அண்டம் பலம் - அண்டத்துக்குப் பலம். (உ8)

1252. விந்துவும் நாதமும் ஒக்க விழுந்திடில்
விந்துவும் நாதமும் ஒக்க விரையதாம்
விந்திற் குறைந்திடு நாதம் எழுந்திடில்
விந்துவை எண்மடி கொண்டது வீசமே.

(ப. இ.) விந்து நாதம் என்னும் இரண்டும் சமமாகக் கலந்தால் அவை அண்டத்துக்கு வித்து என்பர். விந்துவானது குறைந்து நாதமானது கூடித் தோன்றுமாஞல் அது மந்திரவித்து என்பர். கூடும் முறைமை விந்துவைவிட நாதம் எட்டு மடங்கு கூடுதலென்பர். விரை - வித்து. அது: பகுதிப் பொருள் விகுதி. வீசம்-பீசம், மந்திர வித்து.

(அ. சி.) ஒக்க - சமமாக. (உஉ)

1253. வீசம் இரண்டுள நாதத் தெழுவன
வீசமும் ஒன்று விரைந்திடு மேலுற
வீசமும் நாதமும் எழுந்துடன் ஒத்தபின்
வீசமும் விந்து விரிந்தது காணுமே.

(ப. இ.) நாதத்தில் நின்று தோன்றுவன மந்திர வித்துக்கள் இரண்டு அவற்றுள் ஒன்று மேலோங்கும்படி விரைந்து செல்லும். விந்தும் நாதமும் மேலோங்கி எழுந்து ஒத்துடன் நின்றபின், அவை பரந்து விளங்கும். (உக)

1254. விரிந்தது விந்துவுங் கேட்டது வீசம்
விரிந்தது விந்துவும் நாதத் தளவினில்
விரிந்தது வுட்கட்ட எட்டெட்டு மாகில்
விரிந்தது விந்து விரையது வாமே.

(ப. இ.) விந்து விரிந்த காலத்து வித்தாகிய பீசம் மறையும். அவ் விந்துவும் நாதத்தளவினில் விரியும். உள்ளே அடங்கும் உயிர்ப்பு அறுபத்து நான்கு மாத்திரையாகும். அவ்வாறு விரிந்த விந்து. ஆனந்துலகுக்கும் வித்துமாகும். (உசு)

1255. விரையது விந்து விளைந்தன எல்லாம்
விரையது விந்து விளைந்த உயிரும்
விரையது விந்து விளைந்தவிஞ் ஞாலம்
விரையது விந்து விளைந்தவன் தாளே.

(ப. இ.) தோன்றிய உலகங்கள் அனைத்தும் விந்து என்னும் காரணத்தின் உண்டாவன. விந்துவால் விளைந்த உடலகத்து உயிரையும் சிவன் சேர்த்து வைப்பன். விந்து காரணமாக இவை யெல்லாம் விளைந்தன என்ப. அவ் விந்து காரணமாக மேலான அறிவு உண்டாகும். மேலான அறிவு - மெய்யுணர்வு. (உஙி)

1256. விளைந்த எழுத்தது விந்துவும் நாதமும்
விளைந்த எழுத்தது சக்கர மாக
விளைந்த எழுத்தவை மெய்யினுள் நிற்கும்
விளைந்த எழுத்தவை மந்திர மாமே.

(ப. இ.) எழுத்துக்களுக்கு முதலாக விளைந்தது விந்துவும் நாதமும். அப்படி விளைந்த எழுத்தாகிய விந்துவும் நாதமும் சக்கரமாகும். அவ் வெழுத்துக்களே உடம்பினகத்தும் நிற்கின்றன. அவ் வெழுத்துக்களே மந்திரமுமாகும். உடம்பினகத்து : ஆறு நிலைக்களங்களுள்.

(அ. சி.) மெய்யினில் - சரீரத்துக்குள் இருக்கும் ஆறு ஆதாரங்கள் உள். (உசு)

1257. மந்திரஞ் சக்கர மானவை சொல்லிடில்
தந்திரத் துள்ளெழுத் தோன்றெரி வட்டமாங்
கந்தரத் துள்ளு மிரேகையில் ஒன்றில்லை
பந்தம தாகும் பிரணவம் உன்னிடே.

(ப. இ.) தந்திரமாகிய வழிவகைகளால் அகத்தே எழுந்து தோன்றி வட்டவடிவமான எரி ஒன்று உண்டு. இதுவே மந்திர சக்கரமெனச் சொல்லப்படும். கழுத்தளவிலும் அகத்தே வரிவடிவின்றி ஒலிவடிவேயாம். இவற்றிற்கெல்லாம் முன்னுக ஓமொழி பிணிப்புள்ளதாகும். அதனை முதன்மையாகக் கொண்டு அகவழிபாடாகிய தியானத்தைப் பூரிவாயாக. கழுத்திடத்தை வெளிநிலை எனவும் கூறுவர்.

(அ. சி.) தந்திரம் - ஆகமம். கந்தரம் - கழுத்து. இரேகையில் - வரைகளில். பந்தமதாகும் பிரணவம்-வரைகளைக் கொண்ட சக்கரத்தில் பத்தித் திருக்கும் பிரணவத்தை. உன்னிட - தியானிக்க. (உ எ)

1258. உன்னிட்ட வட்டத்தில் ஒத்தெழு மந்திரம்
பின்னிட்ட ரேகை பிழைப்பது தானில்லை
தன்னிட் டெழுந்த தகைப்பறப் பின்னிற்கப்
பன்னிட்ட மந்திரம் பார்க்கலு மாமே.

(ப. இ.) அகவழிபாடாகப் புரியப்படும் ஓமொழி வட்டத்தில் பொருந்தித் தோன்றும் மந்திரம். கலந்துள்ள சக்கரத்தின்கண் வரையப் படுதல் தவறுதலில்லை. அம் மந்திரத்தை ஒட்டி எழுந்த தடை நீங்க அதன்பின் நிற்கும்படி சொல்லப்பட்ட மந்திரத்தை ஆராய்தலுமாம்.

(அ. சி.) பின்னிட்ட - கலந்துள்ள. தன்னிட்டு - வரையப்பட்டு. எழுந்த - எழுந்த மந்திரம். பன்னிட்ட - சொல்லப்பட்ட. (உ அ)

1259. பார்க்கலு மாகும் பகையறு சக்கரங்
காக்கலு மாகும் கருத்தில் தடமெங்கும்
நோக்கலு மாகும் நுணுக்கற்ற நுண்பொருள்
ஆக்கலு மாகும் அழிந்துகொள் வார்க்கே.

(ப. இ.) பிறப்பு இறப்புக்களாகிய பழம்பகையை அகற்றும் தன்மை வாய்ந்த சக்கரத்தை அன்புடன் நோக்குதலும் ஆகும். விரிந்த கருத்தின் கண் அமைத்துக் காத்தலுமாகும். சோர்வின்றி அதன்பாலே நோக்கல் நோக்கமாகிய தியானத்தைப் புரிதலுமாகும். அவ் வுணர்வில் காணும் நுண் பொருளே ஆக்கலாகிய அழுந்தி அறிதலைப் புரிதலுமாகும். அழுந்தி யறிதல் - அநுபவித்தல் ; துய்த்தல்.

(அ. சி.) பகை - பிறவிப்பகை. நுணுக்கற்ற - தளருதல் இல்லாத. (உக)

1260. அறிந்திடுஞ் சக்கர மாதி யெழுத்து
விரிந்திடுஞ் சக்கர மேலெழுத் தம்மை
பரிந்திடுஞ் சக்கரம் பாரங்கி நாலும்
குவிந்திடுஞ் சக்கரங் கூறலு மாமே.

(ப. இ) மேற்கூறிய முறையான் அறியப்படும் சக்கரம் ஆதியை உடைய சிவபெருமானின் எழுத்தாகிய சிகரமாகும். அதன் மேலெழுத்து அம்மை எழுத்தாகிய வகரமாகும். மற்றைய இடங்களில் நிலம் நீர் நெருப்பு காற்று ஆகிய நான்கு பூதங்களின் எழுத்தாகும். அவை முறையே ல வ ர ய என்ப.

(அ. சி.) ஆதி எழுத்து - ஆதி சத்தியோடு கூடிய சிவன் எழுத்து. மேலெழுத்து அம்மை - அதன் மேலே சத்தி எழுத்து. பார் அங்கி நாலும்-பார், நீர், தீ, வாயு எழுத்துக்கள் நான்கும். குவிந்திடும்-கூடிய; (கo)

1261. கூறிய சக்கரத் துளளெழு மந்திரம்
ஆறியல் பாக அமைந்து விரிந்திடுந்
தேறிய அஞ்சுடன் சேர்ந்தெழு மாரண
மாறியல் பாக மதித்துக்கொள் வார்க்கே.

(ப. இ.) மேற்குறித்த சக்கரத்துள் தோன்றும் மந்திரம் ஆறு இயல்பு ஆகும். அங்ஙனம் அமைந்து விரியும் இவ்வாறனுள் மாரணம் ஒழிந்த ஐந்தும் பகைமையை வெல்லுதற்காகப் பயன் படுத்தப்படும். ஆறுவகையாவன. தம்பனம், மோகனம், உச்சாடனம், வித்துவேசணம், மாரணம், வசியம். வித்துவேசணம்-கருடணை (973-978).

(அ. சி.) ஆறியல்பு: தம்பனம், மோகனம், வசியம், மாரணம், உச்சாடனம், வித்துவேடணம். அஞ்சுடன் - மாரணம் ஒழிந்த ஏனைய அஞ்சுடன். (கக)

1262. மதித்திடும் அம்மையும் மாமாது மாகும்
மதித்திடும் அம்மையும் அங்கனல் ஒக்கும்
மதித்தங் கெழுந்தவை காரண மாகில்
கோதித்தங் கெழுந்தவை கூடகி லாவே.

(ப இ.) அனைத்துயிர்க்கும் நீங்கா அருள் புரிபவள் என மதிக்கப் படும் அம்மையும், குறித்த சக்கரத்தின் முதல்வியுமாகும். அவ் வம்மை யையே பயில்வார்க்குப் பகையை வெல்லத் துணைசெய்யும். அழகிய அனங் யொத்து அவள் காணப்படுவள். அம்மை காரணமாக உடனெழும் ஐம் பூதங்களும் தொழில்செய்யும். அம்மையின் ஆணையின்றி அவை எத் தொழிலும் செய்ய வல்லனவாகா. (கஉ)

1263. கூடிய தம்பனம் மாரணம் வசியம்
ஆடியல் பாக அமைந்து செறிந்திடும்
பாடியுள் ளாகப் பகைவரும் வந்துரூர்
தேடியுள் ளாகத் தெளிந்துகொள் வார்க்கே.

(ப. இ.) பகையை வெல்லுதற்குக் கையாளப்படும் தம்பனம், மாரணம் வசியம் முதலியவை விளையாட்டாக எளிதாக வந்து பொருந்தி யிடும். பாடிவீடொத்த உடம்பின்கண் பகைவரும் வந்து அணுகுரூர். இவ் வுண்மையினை அம்மையின் திருவருளால் தெளிந்து கொள்வார்க்குப் பகையே உண்டாகாது.

(அ. சி.) ஆடியல்பு - விளையாட்டு. பாடி-பாடி வீடு; பனை அரசர் தங்குமிடம்; இங்கே சரீரம். (கக)

1264. தெளிந்திடுஞ் சக்கர மூலத்தி னுள்ளே
அளிந்த அகாரத்தை யங்நடு வாக்கிக்
[1]குளிந்த் வரவினைக் கூடியுள் வைத்து
அளிந்தவை யங்கெழு நாடிய காலே.

(பாடம்) 1. குளிர்ந்த வரனைக்.

(ப. இ.) மூலாதாரத்தில் தெளிவாகக் காணப்படும் சக்கரத்தினுள்ளே எல்லா எழுத்துக்குந் துணைசெய்யும் அளியுடைய அகரம், நடுவாக எழுதப்படும். வட்டவடிவான குண்டலினி ஆற்றல் (பாப்பிருக்கை) அரவு வட்டமிட்டது போன்று காணப்படும். அதனை மனங்கூடி அங்ஙனம் அமைத்து வழிபடுவராயின் நாடியது எளிதாகக் கைகூடும்.

(அ. சீ.) அரவினை-குண்டலினி சத்தியை. அளிந்து-கனிந்து. (கூசை)

1265. காலரை முக்கால் முழுதெனும் மந்திரம்
ஆலித் தெழுந்தமைந் தூறி எழுந்தாய்ப்
பாலித் தெழுந்து பகையற நின்றபின்
மாலுற்ற மந்திர மாறிக்கொள் வார்க்கே.

(ப. இ.) கால் அரை முக்கால் முழுமை என்னும் மாத்திரைகளையுடைய மந்திரங்களை முறையாக ஒலிக்க, அவ்வோசை எழுந்தன. பின்பு அது சக்கரத்துக்குப் பொருந்த அமைந்தது. மேலும் ஊறித் திகழ்ந்து முழங்கும். கருதிய பயனைக் கைகூடச் செய்தபின். அம்மந்திரத்தினை முறைப்படி மாற்றி ஒலிக்க உணர்ந்தவர்களுக்கு வேறு கருதிய பயனும் கைகூடும்.

(அ. சீ.) கால்...மந்திரம் - கால் முதலிய மாத்திரையளவாக உச்சரிக்கப்பட்ட மந்திரம். மாலுற்ற - விரும்பி உச்சரித்த. (கூஞ)

1266. கோண்டஇம் மந்திரங் கூத்தன் எழுத்தாய்ப்
பண்டையுள் நாவிற் பகையற விண்டபின்
மன்றுள் நிறைந்த மணிவிளக் காயிடும்
இன்றும் இதயத் தெழுந்து நமவெனே.

(ப. இ) மேற்குறித்த மந்திரமொலித்து வேண்டுவ பெற்று அமைந்தபின் அதன் செயலறுதியாகக் கூத்தன் எழுத்தாம் சிவ என்பதை உதடு அசையாமல் உண்ணுவில் பண்டைப் பகையாகிய ஆணவம் அறும்பொருட்டு ஒலித்தபின். பொன்னம்பலத்தின்கண் விளங்கும் மணிவிளக்காய் உளீளம் பொலிவுறும். அத்தகைய உள்ளத்தில் நம எனக் கூட்டிச் 'சிவயநம' என ஒலிப்பாயாக.

(அ. சீ) கூத்தன் எழுத்து - ஆதி எழுத்து; சிவன் எழுத்து. உணுவில் - உள்ளே உள்ள நாவால் (உதடுகள் அசையாமல்.) (கூக)

# 10. வயிரவச் சக்கரம்

1267. அறிந்த பிரதமையோ டாறு மறிஞ்சு
அறிந்தவச் சத்தமி மேலிவை குற்றம்
அறிந்தவை யொன்றுவிட் டொன்றுபத் தாக
அறிந்து வலமது வாக நடவே.

(ப. இ.) வளர்பிறை ஒன்று முதல் ஆறுவரை ஆறுதாரங்களிலும் காணப்படும் திதிகள் என்க. இதனை அறிந்து மேலே ஏழாம் பிறை முதல் பொருந்தும் பிறைகளை ஒன்றுவிட்டு ஒன்றாக எண்ணுங்கால் ஏழை விட்டு எட்டும், ஒன்பதை விட்டுப் பத்தும், பதினொன்றை விட்டுப் பன்னிரண்டும், பதின்மூன்றை விட்டுப் பதினான்கும் ஆகிய நான்கும் முன்னுள்ள ஆறும் கூட்டப் பத்தாகும். இப்பத்தும் பகையை வெல்வார் புறப்பட்டுச் செல்லும் புலத்தைத் தம் வலப்பால் அமையும்படி செல்வாராக. ஏழை விட்டு எட்டு என்பது : சத்தமியைவிட்டு அட்டமி எனவும் அதுபோல் மற்றவற்றையும் கொள்க.

(அ. சி.) ஆறும் - ஆறு ஆதாரங்களினும். வலமதுவாக - வலப் பக்கம் வளர்பிறையாக. (க)

1268. நடந்து வயிரவன் சூல கபாலி
கடந்த பகைவனைக் கண்ணது போக்கித்
தொடர்ந்த வுயிரது வுண்ணும் பொழுது
படர்ந்த வுடல்கொடு பந்தாட லாமே.

(ப. இ.) மேற்கூறிய முறைப்படி நடந்து வயிரவக் கடவுளினது துணையை வேண்டி அவர் சூலத்தை யுடையவரென்றும், கபாலத்தை யுடையவரென்றும் மனங்கொண்டு பகைமேற் செல்லுதல் வேண்டும். அங்ஙனம் செல்வார் பகை வென்று பகைவன் கருத்தையும் கண்ணையும் போக்கி அவன்தன் உயிரினைத் தொட்டுண்ணும் போழ்து மிக எளிதாக அவன்தன் உடலைப் பந்தாடலொத்துப் பந்தாடலாகும்.

(அ. சி.) சூலகபாலி - சூலத்தையும் கபாலத்தையும். கடந்து - வென்று. (உ)

1269. ஆமேவப் பூண்டரு ளாதி வயிரவன்
ஆமே கபாலமுஞ் சூலமுங் கைக்கொண்டங்
காமே தமருக பாசமுங் கையது
வாமே சிரத்தோடு வாளது கையே.

(ப. இ) ஆருயிர்கள் விரும்புமாறு திருவருள் புரியும் வயிரவக் கடவுளின் திருவுருவில் காணப்படும் படைகள் முதலியன வருமாறு: மண்டையோடு, சூலம், உடுக்கை, கயிறு. தலை, வாள் என்ப.

(அ. சி.) ஆ மேவ - உயிர்கள் விரும்ப. தமருகம் - உடுக்கை. இதில் வயிரவருடைய ஆறு ஆயுதங்கள் கூறப்பட்டுள்ளன. (கூ)

1270. கையவை யாறுங் கருத்துற நோக்கிடும்
மெய்யது செம்மை விளங்கு வயிரவன்
துய்ய ருளத்தில் துளங்கு மெய் யுற்றதாய்ப்
பொய்வகை விட்டுநீ பூசனை செய்யே.

(ப. இ.) வயிரவக் கடவுளின் திருக்கைகளைக் காண்பார், அக்கைகளிற் காணும் மேற்கூறிய ஆறு பொருள்களையுங் காண்பர். அக்கடவுளின் திருமேனி செம்மைநிறம் பொருந்தியதாக இருக்கும். சிவனிணைவு மாறுத நெஞ்சினையுடைய தூயவருள்ளத்தில் வயிரவக் கடவுள் விளங்குவன். அகம் புறம் வாய்மை பெற்றமையோடு பொய்யினை அறவேவிட்டு நெஞ்சே நீ பூசை செய்வாயாக.

(அ. சி.) கையவை ஆறு - வயிரவர்க்கு ஆறு கைகள். மெய்யது செம்மை - நிறம் சிவப்பு. (ச)

1271. பூசனை செய்யப் பொருந்தியோ ராயிரம்
பூசனை செய்யு மதுவுட னுடுமால்
பூசனை சாந்து சவாது புழுகுநெய்
பூசனை செய்துநீர் பூசலை வேண்டுமே.[1]

(ப. இ.) வயிரவக் கடவுளின் வழிபாட்டிற்குத் திருமுறைப் போற்றித் தொடர் ஓராயிரம் ஓதி மலர் தூவி வழிபடுவாயாக. திருமுழுக்குக்குச் சிறந்தது தேனேயாம். சாந்து சவ்வாது புனுகு முதலிய நறுமணப் பொருள்களை அணிவிப்பாயாக. இங்ஙனம் பூசை செய்து சாத்துதலைச் செய்வாயாக. பூசல்-சாத்துதல்.

(அ. சி.) ஓராயிரம் பூசனை - ஆயிர நாமப் பூசனை. மது - தேன். பூசலை - சாத்துப்படி செய்தலை. (இ)

1272. வேண்டிய வாறு கலகமு மாயிடும்
வேண்டிய ஆறினுண் மெய்யது பெற்றபின்
வேண்டிய வாறு வகும்வழி நீநட
வேண்டிய வாறது வாகுங் கருத்தே.

(ப. இ.) நெஞ்சே நீ விரும்பியவாறு நின் பகைவர்களுக்குள் போர் மூண்டு அவர்கள் மாண்டழிவர். (1261 இல் ஓதிய) அறுவகைச் செயல்களுக்குரிய உண்மையை அடைந்தபின் நீ விரும்பியது கைகூட வேண்டியவாறு நடப்பாயாக. உன் கருத்து அவ் வழியாகவே வந்து கைகூடும்.

(அ சி.) கலகமும் - பகைவர்களுக்குள் கலகமும். மெய்யது பெற்றபின் - உண்மையை அறிந்தபின். (ஈ)

---

1. அஞ்சு. கஉ. திருக்குறிப்புத் தொண்டர், அக.
,, விரித்தபல். அப்பர், ச. எஉ-ஈ.

# 11. சாம்பவி மண்டலச் சக்கரம்

1273. சாம்பவி மண்டலச் சக்கரஞ் சொல்லிடில்
ஆம்பதம் எட்டாக விட்டிடின் மேலதாங்
காண்பதந் தத்துவ நாலுள் நயனமும்
நாம்பதங் கண்டபின் நாடறிந் தோமே.

(பு. இ.) சாம்பவி மண்டலச் சக்கரம் வரையும் முறைமையைக் கூறின் எட்டுவரை கீறுதல் அல்லது எட்டிதழ்த்தாமரை அமைத்தல் வேண்டும். அதன் சிறந்த பகுதியாகக் காணப்பெறுவன நான்காகும். அதன்கண் ஒளி ஓசை சிவ சிவம் (விந்து நாதம் சத்தி சிவம்) என்னும் தான்கு மெய்யும் காணப்பெறும். இந் நான்கனுள் கண்ணைக் கருதப் படுவது விந்துவாகும். இந் நிலையினைத் திருவருள் துணையால் நாம் உணர்ந்து ஒழுகினபின் நாம் நாட்டவர்களால் நன்கறியப்படுவோம். நாடு - உலகம்.

(அ. சி.) பதம் - வரை. தத்துவம் நாலு - விந்து, நாதம், சத்தி, சிவம். நயனம் - விந்து. (க)

1274. [1]நாடறி மண்டலம் நல்லவிக் குண்டத்துக்
கோடற வீதியுங் கோடர்ந்துள் இரண்டழி
பாடறி பத்துடன் ஆறு நடுவீதி
ஏடற நாலெங் திடவகை யாமே.

(பு. இ.) நாடறிந்த சாம்பவி மண்டலமாகிய இக் குண்டத்துத் திரிபு முதலிய வேறுபாடுகள் அகல இரண்டு பக்கங்களிலும் வீதிகள் அமைத்துச் சிறந்ததாகக் காணப்படும் எட்டிதழ்நடுவிலுள்ள பதினாறு வீதிகளுள் இதழ்கள் அகல நான்கு மூலைகளும் அவற்றின் இடை இடம் நாலும் நடு இடமும் ஆம்.

(அ. சி.) கோடற - விகாரம் நீங்க. ஏடு - இதழ். (உ)

1275. நாலெங் திடவகை யுள்ளதோர் மண்டலம்,
நாலுநல் வீதியுள் நல்ல இலிங்கமாய்
நாலுநற் கோணமும் நங்நால் இலிங்கமாய்
நாலுநற் பூநடு நண்ணலவ் வாறே.

(பு. இ.) நாலு ஐந்து இடமாகவுள்ள அம் மண்டலத்து நாலுக்கும் நடுவீதியாகக் காணப்படும் இடம் அருட்குறி (லிங்கம்) வடிவமாயும், தான்கு கோணங்களிலும் நான்கு நான்கு இலிங்கங்களாகவும், ஆறுநிலைக் களங்களுள் நான்காவது நிலைக்களமாகிய நெஞ்சத்தில் ஆண்டவன் விளங்கித் தோன்றுவன்.

(அ. சி.) நாலு நற்பூ - அநாகதம். (கூ)

(பாடம்) 1. நாடரி.

1276. ஆறிரு பத்துநா லஞ்சேழுத் தஞ்சையும்
வேறுரு வாக விளைந்து கிடந்தது
தேறி நிருமல சிவாய நமவென்று
கூறுமின் கூறிற் குறைகளும் இல்லையே.

(ப. இ.) (ஆறு + இருபது + நாலு + ஐந்து) ஆக முப்பத்தைந்தும் தொன்மைத் தமிழ் மெய்யெழுத்துக்களாகும். அவை வேறுருவாக விரியப் பட்டுக் கிடந்தன. அஞ்சையும் - திருவைந்தெழுத்தையும்; அஞ்சு + ஐயும் - ஐந்தெழுத்தையும்; ஐ ஆகிய திருவருள் வித்தெழுத்தையும். இவைகளை உணர்ந்து இவைகளுக்கு உயிராக விளங்கும் 'சிவயநம' என்னும் தமிழ் மறையினை முறையுறக் கூறுங்கள். கூறினால் எவ்வகைக் குறைகளும் உண்டாகா, இவ்வுண்மையினை அறிபவரில்லை.

(அ. சி) ஆறு இருபத்துநாலு அஞ்சு - 35 - மெய்கள். அஞ்சு - பஞ்சாக்கரம். ஐ - சத்தி எழுத்து. (ச)

1277. குறைவதும் இல்லை குரைகழற் கூடும்
அறைவதும் ஆரணம் அவ்வெழுத் தாகித்
திறமது வாகத் தெளியவல் லாருக்
கிறவில்லை என்றென் றியம்பினர் காணே.

(ப. இ.) சிவயநம எனக் கூறுவார்க்கு எவ்வகைக் குறையும் தேராது. ஒலிக்கும் வீரக்கழல் அணிந்த திருவடியைக் கூடுதலுமாகும். இவ்வுண்மையினை அறைவதும் மறைநூலாகும் அதனால் மறைநூல் முறைநூலாகிய வேதாகமங்களும் அவ்வைந்தெழுத்தால் ஆவன. இவ்வுண்மையினைத் தெளியவல்லாருக்கு இறப்பில்லை என்று செந்நெறிச் செல்வர்கள் கூறினர். இறவு: இறத்தல்; தொழிற்பெயர். (இ)

1278. காணும் பொருளுங் கருதிய தெய்வமும்
பேணும் பதியும் பெருகிய தீர்த்தமும்
ஊணும் உணர்வும் உறக்கமுந் தானுகக்
காணுங் கனகமுங் காரிகை யாமே.[1]

(ப. இ.) உலகிற் காணப்படும் உலகியற் பொருள்களும், வழிபடு கடவுளும், விரும்பும் நிலைகளும், நீர் நிரம்பிய தீர்த்தமும், உண்ணும் உணவும், உணரும் உணர்வும், உறங்கும் உறக்கமும், கருதப்படும் பொன் முதலிய செல்வங்களும் திருவருள் அம்மையால் கிடைப்பன. அதனால் அவைகளை அம்மை எனவே அன்பால் கூறுவர். (கு)

1279. ஆமே எழுத்தஞ்சு மாம்வழி யேயாகப்
போமே யதுதானும் போம்வழி யேபோனால்
நாமே நினைத்தன செய்யலு மாகும்
பார்மேல் ஒருவர் பகையில்லை தானே.

---

1. பாரவன்காண், அப்பர், சு. அ - சு
,, நின்னுவார் ,, சு. கூ - எ.

(ப. இ.) ஐந்தெழுத்தும் தோன்றுவதற்கிடனும் நாதமாகிய ஓசை வழியே வழியாகப் போகும் மேலிடமாகிய உச்சித்தொளைவழியே சென்றால் நாம் நினைத்த எச்செயலையும் மறை ஆற்றலால் செய்தலும் ஆகும். நிலவுலகில் ஒருவரும் பகையாகார். அப்பால்மேல் எனும் பாடத்தில் நிற்கு, துறக்கவுலகம் முதலிய உலகங்களிலும் பகையில்லை என்க. (எ)

**1280.** பகையில்லை என்றும் பணிந்தவர் தம்பால்
நகையில்லை நாணுளும் நன்மைக ளாகும்
வினையில்லை என்றும் விருத்தமும் இல்லை
தகையில்லை தானுஞ் சலமது வாமே.[1]

(ப. இ.) சாம்பவி மந்திரத்தை முறையாக உருவேற்றியவர்க்கு எத்திறத்தும், என்றும், பகை உண்டாகாது; யாண்டும் பிறரால் எள்ளப்படும் தன்மையும் நேராது; எந்நாளும் பெருநன்மைகளெல்லாம் பெருகும்; எக்காலத்தும் தீவினைகள் உண்டாகா வினைசெயற்கண் நிகழும் இடையூறுகிய விருத்தமும் எய்தா; எவ்வகைத் தடையும் எங்கும் நேரா. உருவேற்றியவர் தாமும் பலரறியும் நறுமணம் போன்று மேன்மையுறுவர். சலம் - மணம். சாம்பவி மந்திரம் என்பது திருவைந்தெழுத்தே.

(அ. சி.) தகைவு - தடை. சலமதுவாம் - எளிதாம். (அ)

**1281.** ஆரும் உரைசெய்ய லாமஞ் செழுத்தாலே
யாரும் அறியாத ஆனந்த ரூபமாம்
பாரும் விசும்பும் பகலு மதியதி
ஊனும் உயிரும் உணர்வது வாமே.[2]

(ப. இ.) சாம்பவி மந்திரமாம் அஞ்செழுத்தை யாரும் ஓதலாம். அத் திருவைந்தெழுத்து யாரும் தம்மறிவால் அறியவொண்ணுத பேரின்ப உருவமாகும். அதுவே, மண்ணும், விண்ணும் (945) ஞாயிறும் திங்களும், சிறந்த உடலும், உயிரும், உணர்வுமாக விரவிநிற்கும். அதி - மிகுந்த; சிறந்த. திருவைந்தெழுத்து 'நமசிவய' இத்தமிழ்மறையினைச் செந்நெறிச் செல்வர்கள் அனைவர்களும் ஓதலாம். இருபாலாரும் ஓதலாம். 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' (2066) என்பது போல் மந்திரமும் ஒன்றே. ''ஓதுசெயற் பாவுடலாம் உய்க்கு மறையுயிராம், நீதில் 'சிவயநம' செப்பு'' என்பதே 'செந்தமிழர் தெய்வமறை நாவர்' சீர்ப்பாடு. (கூ)

---

1. தக்கா. திருக்குறள். ஈசசு,
2. அஞ்செழுத்தே. உண்மை விளக்கம், கூடு,
சலமிலன் சங்கரன். கூ கக - கூ.

# 12. புவனபதி சக்கரம்

1282. ககராதி யோரைந்துங் காணிய பொன்மை
அகராதி யோரா றரத்தமே போலும்
சகராதி யோர்நான்குந் தான்சுத்த வெண்மை
ககராதி மூவித்தை காமிய முத்தியே.

(ப. இ.) திருமூலநாயனார் வட்ட எழுத்து வழங்கிய மிகப் பழங் காலத்திருந்தவர். அவர் காலத்துத் தமிழின்கண் ஐம்பத்தோர் எழுத்து வழக்கிலிருந்தன. அதனால் இங்ஙனம் ஓதியருளினார். ககர எழுத்து மூன்னம் ஐந்தினமாக வழங்கி வந்தது. இதனைக் கவ்வருக்கம் என்பர். இவ்வெழுத்துப் பொன்மைநிறம் என்பர். அகராதி ஓராறும் என்பது ஆ, ஈ, ஊ ஏ, ஐ, ஓ என்பன. இவை செம்மைநிறம் என்ப. சகர இனம் தான்கும் தூய வெண்மைநிறம் என்ப. ஈ. அ. ச. என மூவகையாகக் கூறப் படும். இம் மூவகை மந்திரமும் விரும்பிய வாழ்வினைத் தரும்.

(அ. சி.) ககராதி ஒரைந்தும் - தமிழ்மொழியில் செந்தமிழ்க் காலத்துக்கு முன் வட்டெழுத்துக்காலத்தில் இருந்த க வருக்கம் 5ஆம். (நாயனார் வட்டெழுத்துக் காலத்தவர் ஆனதால் அக்காலத்து வழக்கப்படி கூறுகின்றார்.) அகராதி ஓராறு - ஆ - ஈ - ஊ - ஏ - ஐ - ஓ. சகராதி - ச வருக்கம் நான்கு. காமிய - விரும்பப்பட்ட. (க)

1283 ஓரில் இதுவே உரையும்இத் தெய்வத்தைத்
தேரிற் பிழிதில்லை யானென்று சேப்பக்கேள்
வாரித் திரிகோண மனமின்ப மூத்தியுந்
தேரில் அறியுஞ் சிவகாயந் தானே.

(ப. இ.) மேற்கூறிய ககர, அகர, சகரமாகிய மூவெழுத்தும் கூடிச் சொல்லும் புவனபதியாகிய இத் தெய்வத்தைத் தெரியுமிடத்து இத் தெய்வத்திற்கு ஒப்பாகப் பிறிதொரு தெய்வம் எங்கும் கிடையாது. அதனால், யான் சொல்லுவது ஒன்றனைக் கேட்பாயாக. இத் தெய்வ அடையாளமாக வரைந்து கொள்ளுவது முக்கோணமாகும். இதனால் பெறும் மனம், இன்பம், பேறு, என்னும் மூன்றும் ஆராயின் அறியத்தக்க முழுமுதற் சிவத்தின் திருமேனியாகும். (உ)

1284. ஏக பராசத்தி ஈசற்காம் அங்கமே
ஆகம் பராவித்தை யாமுத்தி சித்தியே
ஏகம் பராசத்தி யாகச் சிவகுரு[1]
யோகம் பராசத்தி உண்மைஎட் டாமே.

(ப. இ.) ஒப்பில்லாத பேரறிவுப் பேராற்றலாகிய் பராசத்தி சிவ பெருமானுக்குத் திருமேனியாவள். சிவபெருமானின் திருவுரு தனை

1. ஆரண மாக. சிவஞானசித்தியார், க. உ - உக.

யிலா மெய்யுணர்வாகிய பராவித்தையாகும். அதுவே மீளாப்பேறளிக்கும் பெருநிலையாகும். அதுவே வேண்டும் சித்தியுமாகும். ஒரே திருவருளே சிவகுருவாகத் தோன்றுவள். சிவயோகம் எட்டும் அத்திருவருளேயாம்.

1285. எட்டா கிய[1]சத்தி எட்டாகும் யோகத்துக்
கட்டாகு நாதாந்தத் தெட்டுங் கலப்பித்த
தோட்டாத விந்துவுந் தானற் றழிந்தது
கிட்டா தொழிந்தது கீழான மூடர்க்கே.

(ப. இ.) திருவருளாற்றல் எட்டாகும். அதுவே சிவயோகம் எட்டாகும். உறுதியாகிய ஓசையாகிய நாதமுடிவில் எட்டு யோகங்களையும் ஒன்றுகச் செய்ததும் அத் திருவருளே. அவ்விடத்துக் கலவாத விந்துவும் தானில்லாது அடங்கிற்று. இத்தகைய பேறுகள் அறிவிலான் கீழோர்க்குக் கிடையாது ஒழிந்தன.

(அ. சி.) எட்டாகிய - அடையப்படுவன ஆகிய. கட்டாகும் - உறுதியுடையதாயிருக்கும். தொட்டாத..... மூடர்க்கே - விந்துவை வீணுகக் கீழியவிட்ட மூடர்க்கு எட்டுச் சித்திகளும் கிட்டாது ஒழிந்தது ஆகும். (இது விந்துவைக் கட்டினுல் எல்லாம் சித்திக்கும் என்றது.) (ச)

1286. ஏதும் பலமாக மிந்திரா சன்னடி
ஓதிக் குருவின் உபதேசம் உட்கொண்டு
நீதங்கும் அங்க நியாசந் தனைப்பண்ணிச்
சாதங் கெடச்செம்பிற் சட்கோணந் தானிடே.

(ப. இ.) பயனுறத் திங்கள்மண்டிலத்திறைவன் பாதம் ஓதிக் குருவின் அருமறையாகிய உபதேசத்தையும் உட்கொண்டு நீ அதற்கு வேண்டும் உறுப்புத்தொடுதல் கைவிரல் தொடுதல் முதலிய செயல்களைச் செய்து பிறப்பு நீங்கும்படி செப்புத்தகட்டில் அறுகோணம் வரைவாயாக. சிவதீக்கையிற் கண்டபடி திருவங்கமாலையினை ஓதி உறுப்புத்தொடுக. 'கொங்கலர்' (கூ. உஉ - இ.) என்னும் திருவைந்தெழுத்துத் திருப்பாட்டும் இந்நூல் (1065) 'அந்த நடுவிரல்' என்னும் திருப்பாட்டும் ஓதிக் கைவிரல் தொடுக.

(அ. சி.) இந்து இராசன் - சந்திர மண்டலத்து அதிபதி. தங்குமங்க நியாசம் - கரநியாசம் அங்க நியாசங்களை. சாதம் - பிறப்பு. செம்பில் - தாமிரத்தகட்டில். சட்கோணம் - அறுகோணம். (சடு - ஆறு.) (கி)

1287. சட்கோணந் தன்னில் சிரீம்ஹ்ரீம் தானிட்டு
வட்கோண மாறின் தலையில்ரீங் காரமிட்
டெக்கோண முஞ்சூழ எழில்வட்டம் இட்டுப்பின்
மிக்கீரேட் டக்கர மம்முதன் மேலிடே.

(பாடம்) 1. சித்தி.
2. அஞ்செழுத்தா. சிவஞானசித்தியார், கூ. கூ - உ.
,, மந்திரங்க. கஉ. சம்பந்தர், உசுசு

(ப. இ.) அவ்வறுகோணத்தில் சிரீம் கிரீம் வரைந்து, அழகிய கோண ஆறின் உச்சியில் இரீங்காரமிடுக. அதன்மேல் எல்லாக் கோணமும் உள்ளடங்கும்படி அழகிய பெரிய வட்டம் இடுக. அதன்கண் பதினுதிதழ் வரைக. அப்பதினுதிதழிலும் அகர முதலிய உயிர் எழுத்துக்கள் பதினுறையும் மேல் வரைக. வட்கோணம்: வண்+கோணம்=அழகிய கோணம்.

(அ. சி.) வட்கோணம் - அழகிய அறுகோணம். ஈரெட்டக்கரம் - உயிர் பதினுறும். (இது திருமூலர் காலத்தில் உயிர் 16-ம் மெய் 35-ம் இருந்ததைக் குறிக்கின்றது.) அம் முதல் மேலிடு - பதினுறு இதழ்களிலும் அகர முதலீ இடு. (சு)

1288. இட்ட இதழ்கள் இடையந் தரத்திலே
அட்டஹவ் விட்டதின் மேலே உவ்விட்டுக்
கிட்ட இதழ்களின் மேலே கிரோம் சிரோம்
இட்டுவா மத்தாங் கிரோங்கென்று மேவிடே.

(ப. இ.) மேற்கூறிய பதினுறு இதழ்களின் இடைவெளியில் பொருந்திய ஹவ்விட்டு அதன்மேலே உகரத்தை வரைந்து நெருங்கியிருக்கின்ற இதழ்களின் மேலே கிரோம், சிரோம் என வரைந்து இடப் புறத்திலே கிரோங்கு என்று வரைக.

(அ. சி.) அந்தரம் - வெளி. அட்ட - பொருந்திய. உவ்விட்டு - உகரத்தை இட்டு. வாமத்து - இடப் பக்கத்தில். (கிரோம் - சிரோம் என்பன பீச எழுத்துக்கள்.) (எ)

1289. மேவிய சக்கர மீது வலத்திலே
கோவை யடைவே குரோங்சிரோங் கென்றிட்டுத்
தாவில்ரீங் காரத்தாற் சக்கரஞ் சூழ்ந்து
பூவைப் புவனு பதியைப்பின் பூசியே.

(ப. இ.) அமைத்த சக்கரமீது வலப்பக்கத்தில் மாலே போன்று குரோங் சிரோங்கென்று வரைக. சக்கரத்தைச் சூழ்ந்து குற்றமற்ற ரீங்காரம் வரைக. அதன்பின் அதன்கண் நாகணவாய்ப் புள்ளினையொத்த உலக முதல்வியாகிய திருவருள் அம்மையைப் பூசிப்பாயாக.

(அ. சி.) கோவை - மாலே. பூவைப் புவனு பதியை - புவனபதி என்ற சத்தியை. (பூவை - சத்தி.) (அ)

1290. பூசிக்கும் போது புவனு பதிதன்னை
ஆசற் றகத்தினில் ஆவா கனம்பண்ணிப்
பேசிய பிராணப் பிரதிட்டை யதுசெய்து
தேசுற் றிடவே தியான மதுசெய்யே.

(ப. இ.) திருவருளம்மையைப் பூசனை செய்யும்போது செம்பொருளாம் சிவனை மறவாத செம்மனத்தில் வெளிப்படுமாறு அழைத்துப் பின், கூறிய் முறைப்படி வரையப்பட்ட சக்கரத்திலோ அமைக்கப்பட்ட

திருவுருவத்திலோ குழைத்தலாகிய (1417) பிராணப்பிரதிட்டை செய்து அருள் விளக்கம்கொண்டு அகவழிபாடு செய்க. அகவழிபாடு - தியானம். (கூ)

1291. செய்ய திருமேனி செம்பட் டுடைதானுங்
கையிற் படையங் குசபாசத் தோடபய
மெய்யில் அணிகலன் இரத்தின மாமேனி
துய்ய முடியும் அவயவத்தில் தோற்றமே.[1]

(ப. இ.) திருவருள் அம்மையின் திருமேனி செம்மை நிறம் வாய்ந்தது. பட்டுடையும் சிவப்பு நிறமே. திருக்கைகளில் தோட்டி, கயிறு, அஞ்சற்க என்னும் அடையாளம். திருமேனியின்கண் மாணிக்க அணிகள். திருமுடியும் செம்மைநிறம் வாய்ந்ததே. (கo)

1292. தோற்போர்வை[2] நீக்கித் துதித்தடைவிற் பூசித்துப்
பாற்போ னகமந் திரத்தாற பயின்றேத்தி
நாற்பால நாரதா யாசுவா காஎன்று
சீர்ப்பாகச் சேடத்தை மாற்றிப்பின் சேவியே.

(ப. இ.) அரைக்கு மேலுள்ள மேலாடையை நீக்கி முறையாகப் போற்றிவழிபட்டுப் பாற்சோறு (1793) அமைத்துக் குழைத்தலாகிய நிவேதனம் பண்ணி, நாற்புறத்தும் நாரதாயாசுவாகா என்று சிறப்புப் பொருந்தியன சாத்தி. எடுத்த மாலை முதலியவற்றை மாற்றிப் பின் தொழுவாயாக. தோல்: ஆகு பெயரால் உடம்பு.

(அ. சி.) தோற்போர்வை - மேல் வேட்டி. பாற்போனகம் - பாயசம். சீர்ப்பு - சிறப்பு. (கக)

1293. சேவிப் பதன்முன்னே தேவியையுத் வாகனத்தாற்
பாவித் திதய கமலம் பதிவித்தங்
கியாவர்க்கும் எட்டா இயந்திர ராசனை
நீவைத்துச் சேமி நினைந்தது தருமே.[3]

(ப. இ.) முன்னே வழிபடுவதன் பொருட்டு நெஞ்சத் தாமரையினின்றும் வெளிப்படுத்தி அழைத்து இழைத்த திருவருளம்மையை மீண்டும் நெஞ்சத் தாமரையுள் நுழைத்தலாகிய உத்வாகனம் செய்து, அன்புடன் நிலைந்து நெஞ்சகத்தே இழைத்தலாகிய பதிவித்தலைச்செய்து, எத்தகையார்க்கும் அடையமுடியாத இயந்திரராசனாகிய புவனபதி சக்கரத்தை நீ ஓம்பிவைத்து வழிபட்டு வருவாயாக. அச் சக்கரம் நீ கருதிய அனைத்தும் கைகூடச் செய்யும். இயந்திரம் - சக்கரம்.

(அ. சி.) உத்வாகனத்தால் - இதயத்தில் ஒடுக்குவதால். இயந்திர இராசன் - புவனபதியை. (கஉ)

---

1. மின்தொத்திடு. திருக்கோவையார், உசசு.
2. தோற்போர்வை. நாலடியார், சஉ.
3. மண்முதல் சிவஞானபோதம், கூ - கூ

# 13. நவாக்கரி சக்கரம்

**1294.** நவாக்கரி சக்கர நானுரை செய்யின்
நவாக்கரி ஒன்று நவாக்கரி யாக
நவாக்கரி எண்பத் தோருவகை யாக
நவாக்கரி யக்கிலீ சௌமுத லீறே.

(ப.•இ.) வியத்தகு தன்மை வாய்ந்த 'வ'கரமென்னும் ஒரெழுத்துக் குரியவள் திருவருளம்மை. அவளுக்குரிய நவாக்கரி சக்கரத்தை யான் ஓதப் புகுந்தால் அந்த நவாக்கரி எண்பது வகையாக எழுத்து மாறுதலால் கூறப்படும். நவாக்கரி எழுத்து முதற்கண் கிலீம் என்பதும் முடிவில் 'சௌ' என்பதும் ஆகும்.

(அ. சி.) நவாக்கரி - புதுமையான அக்கரி, நவாக்கரியாக நவக்கரி சக்கரமாக. அ - கிலி - சௌ - முதல் ஈறே - அந்தக் கிலீம் முதல் சௌ ஈறாக. (க)

**1295.** சௌமுதல் அவ்வோடு ஹௌவுட னுங்கிரீம்
கௌவு ளுமையுளுங் கலந்திரீம் சிரீமென்
றெவ்வில் எழுங்கிலி மந்திர பாதமாச்
செவ்வுள் எழுந்து சிவாய நமவென்னே.

(ப. இ.) முதற்கண் சௌ, ஔ. ஹௌ, கிரீம், கௌ, ஐ, இரீம் சிரீம், கிலீம் ஆகிய இவை ஒன்பதும், மந்திர உறுப்பாகக்கொண்டு செம்மையாக உள்ளெழுந்த முறையில் 'சிவயநம' எனக் கணிப்பாயாக. ஆதிமந்திரம் அஞ்செழுத்தென்பதும் அதனையுயிராகவும் ஏனைய மந்திரங் களை உடலுறுப்புக்களாகவும் கொண்டு வழிபடுக.

(அ. சி.) சௌ...பாதமா - சௌ - ஔ - ஹௌ - கிரீம் - கௌ - ஐ - இரீம் - சிரீம் - கிலீம் என்பன மந்திர உறுப்புக்களாக. செவ்வுள் - செவ்வையாக. (உ)

**1296.** நவாக்கரி யாவது நானறி வித்தை
நவாக்கரி யுள்ளெழும் நன்மைகள் எல்லாம்
நவாக்கரி மந்திர நாவுளே ஓத
நவாக்கரி சத்தி நலந்தருந் தானே.

(ப. இ.) நவாக்கரி என்று சொல்லப்படும் மந்திரமே யானறியும் மெய்யுணர்வுக் கலையாகும். அதனுல் நன்மைகளெல்லாம் அகத்தே தோன்றும். அம் மந்திரத்தினை வாய்திறந்து ஒலியாது நாப் புடைபெயரும் மாத்திரையான் ஒலித்துக் கணிக்க. அங்ஙனம் கணிக்கவே அதற்குரிய திருவருளாற்றலள் எல்லாநலமும் தந்தருளுவள்.

(அ. சி.) நாவுளே ஓத - வாய்திறந்து உச்சரியாது நாப்புடை பெயரும் அளவில் உச்சரிக்க. (கூ)

1297. நலந்தரு ஞானமுங் கல்வியும் எல்லாம்
உரந்தரு வல்வினை யும்மைவிட் டோடிச்
சிரந்தரு தீவினை செய்வ தகற்றி
வரந்தரு சோதியும் வாய்த்திடுங் காணே.

(ப. இ.) நானெறி நன்மையைத் தரும் திருவடியுணர்வும், ஏனைக் கல்வியுமெல்லாம் திருவருளாற்றலால் உறுதிப் பாட்டினைத் தரும். எஞ்சு வினையாகிய வல்வினை உம்மைவிட்டு நீங்கி ஒழியும். முதன்மையான ஏறுவினைதொடராது அழியும். அங்ஙனம் அழியும்படி செய்யப் பேரொளிப் பிழம்பாகிய சிவன் வந்து வாய்த்திடுவன். எரிசேர் உணக்கில்வித்துக் கள் இவை. (சு)

1298. கண்டிடுஞ் சக்கரம் வெள்ளிபொன் செம்பிடை
கொண்டிடும் உள்ளே குறித்த வினைகளை
வென்றிடு மண்டலம் வெற்றி தருவிக்கும்
நின்றிடுஞ் சக்கரம் நினைக்கு மளவே.

(ப. இ.) சக்கரத்தினை வெள்ளியினுலும் பொன்னுலும் செம்பினுலும் செய்தமைக்க. இச் சக்கரத்தினை முறையாக வழிபட்டுக் கணிக்க. கணித்த லும் அப்பொழுதே எஞ்சுவினைகள் வெல்லப்பட்டு நீங்கும் நாற்பத் தொன்பது நாளென்னும் ஒரு மண்டலம் வழிபட்டுவர. திருவருள் துணையால் வெற்றிகள் உண்டாகும். மேலும் அச் சக்கரத்தை நினைத்த அப்பொழுதே எல்லா நலமும் பெருகும்.

(அ. சி.) மண்டலம் - 49 நாள். 7 நாள் ஒரு வாரம் - (7 வாரம் ஒரு மண்டலம்.) (இ)

1299. நினைத்திடு மச்சிரீ மக்கிலி மீரு
நினைத்திடுஞ் சக்கர மாதியு மீறு
நினைத்திடு நெல்லொடு புல்லினை யுள்ளே
நினைத்திடும் அருச்சனை நேர்தரு வாளே.[1]

(ப. இ.) உண்மையன்பொடு நினைக்க. முற்கூறிய சிரீம் இலீம் என்னும் முதலும் முடிவுமாக அமைத்து அச் சக்கரத்தினை முதலும் ஈறுமாக ஓதி நினைக்க. நினைத்துச் செந்நெல்லும் வெள்ளையறுகும் கலந்து அருச்சனை புரிக. அங்ஙனம் அருச்சிப்பார் நினைந்த அப்பொழுதே திருவரு ளாற்மை செந்நின்று அருள்வள். செந்நின்று - நேர் நின்று.

(அ. சி.) நெல்லொடு புல்-அருச்சனைக்கு. மஞ்சள் அரிசியும், அறுகம் புல்லும். (சு)

1300. நேர்தரு மத்திரு நாயகி யானவள்
யாதொரு வண்ணம் அறிந்திடும் போற்பூவை
கார்தரு வண்ணங் கருதின கைவரும்
நார்தரு வண்ணம் நடந்திடு நீயே.

---

1. செம்பொ. கஉ. சம்பந்தர். ககஅகு.
,, நெல்லு மலரும். நெடுநல்வாடை, வரி - சகூ.

(ப. இ.) நேர் வந்தருளும் பராசத்தியும் ஆதிசத்தியும் ஆகிய திரு நாயகி எந்நிறத்தள் என்று அறியலுறுவார் காயாம் பூப்போலும் கரிய நிறம் என அறிவர். அந்நிறமாக நினைத்துத் தொழுவார்க்கு அவர்கள் நினைத்தன திருவருளால் கைகூடும். திருநாயகிக்கு அன்பு சுரக்கும் வண்ணம் வழிபாடும் வாழ்க்கை முறையும் சிறந்த ஒழுக்கமாகக்கொண்டு ஒழுகுவாயாக. வழிபாட்டுநூல் முறை, வாழ்க்கைநூல் மறை.

(அ. சி.) திரு - சிவசத்தி - ஆதிசத்தி. வண்ணம் - நிறம். பொற் பூவைக் கார்தரும் வண்ணம்-காயாம் பூப்போலும் நிறம். நார்-விருப்பம். (எ)

**1301.** நடந்திடும் பாரினில் நன்மைகள் எல்லாங்
கடந்திடுங் காலனும் எண்ணிய நாளும்
படர்ந்திடு நாமமும் பாய்கதிர் போல
அடைந்திடு வண்ணம் அடைந்திடு நீயே.

(ப. இ.) திருநாயகியைத் தொழுவார்க்கு உலகின்கண் அவளருளால் எல்லா நலங்களும் பெருகும். காலனும் வந்து அணுகான்; கருதியபடி வாழ்நாளும் பெருகும். எங்கணும் புகழ் ஓங்கும். பரந்த கதிர்களை யுடைய பகலவனைப்போல் நிகரின்றி விளங்கி ஒளிவிடுவர். இத் திறமெல்லாம் எய்தத் திருநாயகியை நெஞ்சே நீ நினைப்பாயாக. (அ)

**1302.** அடைந்திடும் பொன்வெள்ளி கல்லுடன் எல்லாம்
அடைந்திடு மாதி யருளுந் திருவும்[1]
அடைந்திடும் அண்டத் தமரர்கள் வாழ்வும்
அடைந்திடும் வண்ணம் அறிந்திடு நீயே.

(ப. இ.) திருநாயகி அருளால் பொன், வெள்ளி, மாணிக்கம், முதலிய எல்லாப் பொருள்களும் எளிதின் வந்தடையும். ஆதியாகிய சிவபெருமான் திருவருளும், திருவடிப்பேறும் எய்தும். விரும்பினால் அண்டங்களில் வாழும் தேவர்கள் வாழ்வும் கிட்டும். இம் முறைமைகளை யறிந்து இவையெல்லாம் கைகூடும் வண்ணம் அருளம்மை திருவடியை வழிபடுவாயாக.

(அ. சி.) திரு - முத்தி. வண்ணம் - முறைமை. (கு)

**1303.** அறிந்திடு வார்கள் அமரர்க ளாகத்
தெரிந்திடு வானோர் தேவர்கள் தேவன்
பரிந்திடும் வானவன் பாய்புனல் சூடி
முரிந்திடு வானை முயன்றிடு நீயே.

(ப. இ.) தேவர்களாமாறு அருள்செய்கின்றவன் சிவன். இதனை மெய்யுணர்ந்தார் அறிவர். விண்ணவரும், விண்ணவர் தலைவனும் வாழுமாறு அருள்செய்பவனும் சிவனே. கங்கையாற்றினை உலகுய்யச் சூடி

1. பொன்னு மெய்ப்பொரு. எ. இக-க.

பவனும், அதனை ஒடுக்குபவனும் சிவனே. அவன் திருவடியை அடைய முயல்வாயாக.

(அ. சி.) தேவர்கள் தேவன் - தேவ இந்திரன். பாய்புனல்-கங்கை. முரிந்திடுவான் - முரித்திடுவான் என்பது மெலிந்து வந்தது; அழிப்பவன். (೬೦)

**1304.** நீர்பணி சக்கரம் நேர்தரு வண்ணங்கள்
பாரணி யும்ஹரீ முன்ஸ்ரீ மீருங்
தாரணி யும்புகழ்த் தையல்நல் லாள்தனைக்
காரணி யும்போழிற் கண்டுகோள் ளீரே.

(ப. இ.) நீங்கள் தொழுது விழுப்பயன் எய்துதற்குரிய சக்கரம் நவாக்கரியாகும். அதன் எழுத்துக்கள் உலகம் புகழும் சிரீயும் ஹிரீயுமாகும். (ஸ்ரீஹரீ) மாலையணிந்து விளங்கும் புகழ்மிக்க தையல்நல்லாள் உறையும் மேகங்கள் தங்கும் அழகு மிகுந்த சோலையாற் சூழப்பட்ட கடம்பவனத் திருவூரில் சென்று அவள் திருவடியைத் தொழுவீராக. வண்ணங்கள் - வர்ணங்கள்; எழுத்துக்கள். ஸ்ரீம் ஈரும்.

(அ. சி.) நீர் பணி - நீவிர் வணங்குகின்ற. (೬೬)

**1305.** கண்டுகோள் ளுந்தனி நாயகி தன்னையும்
மொண்டுகோள் ளும்முக வசியம தாயிடும்
பண்டுகோள் ளும்பர மாய பரஞ்சுடர்
நின்றுகோள் ளும்நில பேறுடை யாளையே.[1]

(ப. இ.) ஒப்பிலாத திருநாயகி தன்னைக் கண்டுகொள்ளும் பேறுடையார் அருட்பொலி வெய்துவர். அதனால் அவர்கள் முகம் மிக்க அழகுடையதாய்க் கண்டார் அள்ளிக்கொள்ளும்படியான கவர்ச்சியைக் கொண்டிருக்கும். பழைமையாக நம்மை ஆட்கொள்ளும் பண்புடைய ஈடும் எடுப்புமில்லாப் பெருஞ்சுடர் நிலைபேறுடைய அம்மையுடன் வெளிப்பட்டு நின்று நம்மை ஆட்கொள்ளும். வசியம் - கவர்ச்சி. (೬೭)

**1306.** பேறுடை யாள்தன் பெருமையை எண்ணிடில்
நாடுடை யார்களும் நம்வச மாகுவர்
மாறுடை யார்களும் வாழ்வது தானிலை
கூறுடை யாளுங் கூறுமின் நீரே.

(ப. இ.) திருவடிப்பேற்றை யருளும் திருநாயகிதன் அளவிலா அருட் பெருமைகளை இடையறாது எண்ணினால் பெருநில வேந்தரும் நம் வயம் ஆகுவர். அறியாமையாலாவது காரணம் பற்றியாவது பகை கொண்டவர்கள் அப் பகைமைப் பண்புடன் நிலைத்து வாழார். (பகைமை நீங்கி உறவாகி வாழ்வர்.) அத்தன் ஒரு கூற்றிலே என்றும் உறைந்து எங்கும் நிறைந்து அன்னை நிற்பள். அவளை அன்புடன் தொழுவீராக.

1. சென்றவர் முனியைக். ೭೭. இயற் - ೭೮.

(அ. சி.) நாடுடையார் - அரசர். மாறுடையார் - பகைவர். கூறுடையாள் - பாகம் பிரியாள் ; பாகாயி. (கக)

1307. கூறுமின் எட்டுத் திசைக்குந் தலைவியை
ஆறுமின் அண்டத் தமரர்கள் வாழ்வென
மாறுமின் வையம் வருந்வழி தன்னையுந்
தேறுமின் நாயகி சேவடி சேர்ந்தே.[1]

(வி. இ.) எட்டுப் புலங்களிலும் ஒட்டி நிலைபெறும் முழுமுதல்வியை அன்பகத்துக் கொண்டு இடையறாது நாடுங்கள். அவள் மெய்ப் புகழையே கூறுங்கள். அதுவே பொருள் சேர் புகழ். அதனால் அவாவை அடக்குதல் எளிது. அவாவினை அடக்குங்கள். அடக்கி, அமரர்கள் வாழ்வினையும், நிலவுலகத்துப் பிறக்கும் பிறப்பினையும் மாற்றிக் கொள்ளுங்கள். திருநாயகி திருவடியே நிலைத்த புகலிடம் என்று தெளியுங்கள்.

(அ. சி.) ஆறுமின் - ஆசையை அடக்குமின். மாறுமின்...தன்னையும் - பிறவியை மாற்றிக் கொள்ளுங்கள். தேறுமின் - தெளியுங்கள். (கச)

1308. சேவடி சேரச் செறிய இருந்தவர்
நாவடி யுள்ளே நவின்றுநின் றேத்துவர்
பூவடி யிட்டுப் போலிய இருந்தவர்
மாவடி காணும் வகையறி வாரே.[2]

(ப. இ.) திருநாயகி தன் திருவடியைச் சேரும் படியான சீலம் முதலிய பெருந் தவத்தைப் புரிந்தவர்கள் 'சிவயநம' என்னும் செந்தமிழ் மறையினை உள் நாவடியில் ஒதிக் கணித்துப் போற்றுதல் வேண்டும். அங்ஙனம் போற்றுவார்க்கு வழிபாட்டின் உறைப்பு உண்டாம். அதனால் திருமுறைப் போற்றித் தாண்டகம் ஐந்து, போற்றித் திருவகவல் ஒன்று ஆக ஆறன்கண்ணும் ஓதப்பட்ட போற்றித்தொடர் புகன்று மலர்தூவி வழிபடுவர். அங்ஙனம் வழிபடும் நற்றவப் பேறுடையார் திருவடிப் பேறெய்தும் நன்னெறியினை உணர்வர்.

(அ. சி.) இருந்தவர் - பெருமையுள்ள தவசிகள். நாவடி - உள் நாவினுலே. பூ அடியிட்டு - பூக்களைக்கொண்டு அருச்சனை செய்து. மாஅடி - பெருமை பொருந்திய திருவடி ; முத்தி. (கஞ)

1309. ஐம்மூத லாக வளர்ந்தெழு சக்கரம்
ஐம்மூத லாக அமர்ந்தீரீ மீரும்
அம்மூத லாகி யவர்க்குடை யாடனை
மைம்மூத லாக வழுத்திடு நீயே.[3]

---

1. அவாவென்ப. வேண்டாமை. திருக்குறள், உஉக, உகஉட.
,, அண்டர். அப்பர்; இ. உட, - உட.
,, கொள்ளேன். அ. திருச்சதகம், உ.
2. பூவ. அப்பர், இ. கஞ-க.
3. ஆரும். திருமந்திரம். களஉக.
,, சிகரம்முகத்திற். ஆரூரர், எ. அ-எ.

(ப. இ.) ஐகாரத்தை முதலாகக் கொண்டு வளர்ந்தெழும் நவாக்கரி சக்கரம். அந்த ஐகார முதலாகவும் இரீம் ஈறுகவும் வரைவர். அகர முதலாக விளங்கும் சிவபெருமானுக்கு உடையாளாக விளங்கும் முழு முதல்வியை மையாகிய மாயைக்கு முதல்வியாக வழுத்துவாயாக.

(அ. சி.) ஐம்முதலாக - ஐ எழுத்து முதலாக. அம்முதலாகியவர் - அகரமுதலாகியவர் சிவன்; "ஆருமறியார் அகாரம் அவனென்று" என்பது காண்க. மைம்முதலாக - மாயைக்குத் தலைவியாக. (கசு)

1310. வழுத்திடு நாவுக் கரசிவள் தன்னைப்
பகுத்திடும் வேதமெய் யாகம மெல்லாந்
தொகுத்தொரு நாவிடை சொல்லவல் லாளை
முகத்திலும் முன்னெழக் கண்டுகொ ளீரே.

(ப. இ.) நாவுக்கரசியாகிய இவளைப் போற்றும் மெய்யன்பர்களது நாவினிடத்து அவள் விளங்கியருளி மெய்ப்பொருளையுணர்த்தும் செந் தமிழ் மறையாகமங்களை எல்லாம் தொகையாக ஒப்பில்லாத ஒரு நாவிடத்துச் சொல்லியருள வல்லாளாவள். அவ்வன்பர்களது திருமுகமும் அருட் பொலிவோடு முற்பட்டுத் தோன்றும். கண்டு கொள்வீர்களாக.

(அ. சி.) நாவுக்கரசு இவள் தன்னை - வாக்குக்கு அரசியை; வாகீசு வரியை. ஒரு நாவிடை - தன்னைத் துதிக்கும் ஒப்பற்ற ஒருவனுடைய நாவினுலே. முகத்துளும் - முகப்பொலிவினுல். (கஎ)

1311. கண்டஇச் சக்கரம் நாவில் எழுதிடிற்
கொண்டஇம் மந்திரங் கூத்தன் குறியதாம்
மன்றினுள் வித்தையு மானுடர் கையதாய்
வென்றிடும் வையகம் மெல்லியல் மேவியே.

(ப. இ.) திருவருளால் கண்ட இச் சக்கரம் இடையருது நாவி லெழுத்திடிற் கைக்கொண்ட இம் மந்திரமே கூத்தப்பெருமான் திருவுரு வாகும். இதுவே திருவம்பலச் சக்கரமுமாகும். இதனைப் போற்றுவார்க் குத் திருவருளம்மை விளங்கித் தோன்றுவள். அதனுல் அச் சக்கரமும் அவர்கட்குக் கைகூடும். அவர்கள் உலகியல் நிகழ்ச்சிகளையும் வெல்லுவர்.

(அ. சி.) கூத்தன் - நடராசன். மன்றினுள் வித்தை - திருவம்பலச் சக்கரம். (கஅ)

1312. மெல்லிய லாகிய மெய்ப்பொரு ளாள்தனைச்
சொல்லிய லாலே தொடர்ந்தங் கிருந்திடும்
பல்லிய லாகப் பரந்தெழு நாள்பல
நல்லியல் பாலே நடந்திடுந் தானே.

(ப. இ.) பேரிரக்கத்தான் மென்மைத் தன்மை வாய்ந்த மெய்ப் பொருள் முதல்வியைக் குருமொழிகொண்டு போற்றித் தொடர்ந்திருங் கள். அவள் திருவருளாலே உலகில் நன்மை தீமைகள் பலவாக எல்லை யின்றி மாறிமாறிப் பெருகிவரும் இயல்புகள் ஒழிந்து அளவில்லாத காலங்கள் இன்பமே தரும் நன்முறைமையோடு நடக்கும்.

(அ. சி.) சொல்லியல் - உபதேசம். பல்லியல்பாக - பல வகையாக. நல்லியல்பாலே - நன்மையாகவே. (கக)

**1313.** கூடந்திடு நாவினுள் நன்மைகள் எல்லாங்
தோடர்ந்திடுஞ் சொல்லோடு சோற்பொருள் தானும்
கூடந்திடுங் கல்விக் கரசிவ ளாகப்
படர்ந்திடும் பாரிற் பகையில்லை தானே.[1]

(ப. இ.) திருவருள் வலத்தால் குருமொழியை இடையறாது கணிக்க எல்லா நன்மைகளும் எளிதாக நடக்கும். சொல்லும் பொருளும் தொடர ஒண்ணுத சொல்லுலகுக்கு முதல்வியாகிய திருவருளம்மையை இடையறாது தோழுவார்க்கு நிலவுலகில் பசி, வறுமை, நோய், பகை முதலிய எவ்வகை இடையூறும் உண்டாகா. கணிக்க - உள்நாக்கால் ஒலிக்க. சொல்லுலகு - சத்தப்பிரபஞ்சம். குருமொழி - உபதேசம். (உ0)

**1314.** பகையில்லை கௌமுத லியது வீரு
நகையில்லை சக்கர நன்றறி வார்க்கு
மிகையில்லை சொல்லிய பல்லுரு வெல்லாம்
வகையில்லை யாக வணங்கிடுந் தானே.[3]

(ப. இ.) மேற்கூறியவாற்றுல் பகையில்லாமையுடன் கௌ முதலாக ஐ ஈறுக ஒலித்துவரின் அவர்களைப் புறக்கணிப்பார் எவரும் இலர். மேற்குறித்த சக்கரத்தை இடையறாது வழுத்துவார்க்கு நால்வகைத் தோற்றத்து எழுவகைப் பிறப்பின் எண்பத்து நான்கு நூருயிர வேறுபாடுள்ள பிறப்பினுள் எவ்வகைப் பிறப்புத் துன்பமும் இல்லையாகும். அதனுல் திருவருளம்மையை வணங்குங்கள்.

(அ. சி.) பகை...ஈறு - கௌ முதல் ஐ ஈறு உச்சரிப்பின் பகையில்லை. நகையில்லை - பிறர் பழிப்பு இல்லை. பல்லுரு - பல வகையான உயிர் வருக்கங்களுக்கு எல்லாம். மிகையில்லை - பிறப்பு இல்லை. (உக)

**1315.** வணங்கிடுந் தத்துவ நாயகி தன்னை
நலங்கிடு நல்லுயி ராவனை யெல்லாங்
கலங்கிடுங் காம வெகுளி மயக்கந்
துலங்கிடுஞ் சொல்லிய சூழ்வினை தானே.[3]

(ப. இ.) முப்பத்தாறு மெய்க்கும் முதல்வியாகிய அம்மையைத் திருவடியுணர்வு கை வந்த நல்லுயிர்களெல்லாம் வணங்கி அவள் திருவருளில் அடங்கி நிற்க, காமம் வெகுளி மயக்கங்கள் கலங்கி அகன்றொழியும். செந்நெறிக்கு வாயிலாகிய சிலம் நோன்புகள் துலங்கிக் கைகூடி விளங்கும். நலங்கிடும் - அடங்கிடும். சூழ்வினை - நற்றவம். மெய் - தத்துவம். (உஉ)

---

1. பாடுவார். ஆரூர், எ. உக - கூ.
,, அனுதியே அமல. சிவஞானசித்தியார், அளவை - கக.
2. உரைசேரும். சம்பந்தர். க. கஉ - ச.
,, உலகமே சிவஞானசித்தியார், இ. உ - சு.
3. காமம். திருக்குறள், கூசு0,

1316. தானே கழறித் தணியவும் வல்லனுய்த்
தானே நினைத்தவை சொல்லவும் வல்லனுய்த்
தானே தனிநடங் கண்டவள் தன்னையுந்
தானே வணங்கித் தலைவனு மாமே.[1]

(ப. இ.) அம்மை வழிபாட்டினன் திருவருள் வலத்தால் பேரவைக் கண் தானே எவர்க்கும் மிக்கானுய் விளங்குவன். அதனுல் தானே பேசி அமையவும் வல்லனுவன். தானே பிறர் நினைத்தவற்றை எளிதாக வுணர்ந்து, ஐயுறவின்றித் துணிந்து கூறவும் வல்லனுவன். பேரூழிக் காலத்துப் பெரும் பொருளாம் சிவபெருமான் புரியும் தனிப்பெரும் திருக்கூத்தைக், காணவும் வல்லளாய அப் பெருமானேவிட்டுப் பிரியா ஆணையாம் திருவருளைக் காணவும் வல்லனுவன். அத்திருவருளை வணங்கி அம் முதல்வி துணையால் சிவனடியிற் கூடிச் சிவமே யாகத் திகழவும் வல்லனுவன். சிவமேயாதல் - சிவனுக் கடிமையாதல்.

(சு. சி.) தானே...வல்லனுய் அவையிற் பேசும் ஆற்றல் வாய்ந்த வனுய். தனி நடம்-பெரு ஊழிக்காலத்தில் சத்தியும் சிவனும் தனித்து நிற்கும்போது சிவன் செய்யும் நடனம், (உக)

1317. ஆமே யனைத்துயி ராகிய அம்மையுந்
தாமே சகலமும் ஈன்றஅத் தையலும்
ஆமே யவளடி போற்றி வணங்கிடிற்
போமே வினைகளும் புண்ணிய னுமே.[2]

(ப. இ.) அனைத்துயிரையும் உடலுடன் சேர்த்தலாகிய படைப்பினை யருளி அவ் வுயிர்களுடன் கலப்பால் ஒன்றுயிருத்தலின் அனைத்துயிரும் ஆகிய அம்மை என்பர். அவ் வுயிர்களுக்குத் தேவேண்டும் உறையுள் உழைப்பு உணு உறவு முதலிய உதவிகளை ஈன்றவளும் அவ் அம்மையே. அவள் திருவடியைப் போற்றிடில் இருள்சேர் இருவினையும் அகலும். பொருள் சேர் புண்ணியமும் பெருகும். புண்ணியம் - இறைபணி. (உச)

1318. புண்ணிய னுகிப் பொருந்தி உலகெங்கும்
கண்ணிய னுகிக் கலந்தங் கிருந்திடுந்
தண்ணிய னுகித் தரணி முழுதுக்கும்
அண்ணிய னுகி அமர்ந்திருந் தானே.[3]

(ப. இ.) சிவபெருமான் உலகெங்கணும் புண்ணியனுகிப் பொருந்தினன். கருதி மதிக்கத்தக்க சிறப்புடையனுகி நிலைபெற்ற ஆருயிர் அனைத்தினும் கலந்துநின்றனன். திருவருட் கூறுடையனுதலின் குளிர்ந்த தண்ணளியுடையவனுயினன். தரணி முழுவதுக்கும், அதன்கண் வாழும் உயிர்களுக்கும் உயிருக்கு உயிராய் நெருங்கியிருந்து இன்புறுத்துவான் என்க.

(அ. சி.) கண்ணியன் - பெருமை உடையவன். தண்ணியன் - இரக்க முடையவன். அண்ணியன் - அருகில் இருப்பவன். (உடு)

1. பந்தமுடைய. க. எச - ங.
2. அவையே தானே சிவஞானபோதம், உ.
3. அறவாழி. திருக்குறள், அ.

1319. தானது கம்இரீம் கௌவது ஈரும்
நானது சக்கர நன்றறி வார்க்கெலாம்
கானது கன்னி கலந்த பராசத்தி
கேளது வையங் கிளரொளி யானதே.

(ப. இ.) சக்கரம் வரைபவர் எழுத்துக்களை மாற்றியும் வரைவர் அது மரபுமாகும் அம் முறையில் கிரீம் முதலாகக் கௌ ஈறுக வரைந்து வழிபடுட்ட சக்கரம் நானறிந்த முறையில் நவாக்கரி சக்கரமாகும். அதனது தன்மையை அறிபவர்கட்கெல்லாம் கடம்பவனத்து வாழும் என்றும் கன்னியாகி யாண்டும் கலந்த பேரறிவுப் பேராற்றலாம் அம்மை உறவின ளாவள். அத் திருவருளம்மையால் உலகெலாம் விளங்கும் பேரொளி யானது தோன்றிற்று. பராசத்தி - பேரறிவுப் பேராற்றலள். கேள் - உறவு. கம் + இரீம் = கிரீம்: க் + இரீம் = கிரீம்.

(அ. சி.) நான் அது - நான் அறிந்த அந்த. கான் - கடம்ப வனம். கேள் அது - உறவு ஆனது. (உசு)

1320. ஒளிக்கும் பராசத்தி உள்ளே அமரிற்
களிக்கும் இச் சிந்தையிற் காரணங் காட்டித்
தெளிக்கு மழையுடன் செல்வமுண் டாக்கும்
அளிக்கும் இவளே அறிந்துகொள் வார்க்கே.

(ப. இ.) கரவாடும் வன்நெஞ்சர்க்கு ஒளிக்கும் பேரறிவுப் பேராற் றலளாம் அம்மை அன்பருள்ளத்து வெளிப்பட்டு அமர்ந்திருப்பள். அத னால் அவ்வுள்ளம் பெருமகிழ்வு கொள்ளும். அவ்வுள்ளத்திற்கு அனைத் திற்கும் வீடுமுதற் காரணமாம் சிவபெருமானைக் காட்டுவித்து வழி படச் செய்வள். தெளிய வேண்டிய பொருள்களனைத்தையும் தெளிவித் தருள்வள். அத் தெளிவருளுடன் பெருந்திருவினையும் உடைமையாக அளித்தருள்வள். திருவருளும் புரிவள். இவளை அறிந்து வழிபடுவா யாக.

(அ. சி.) ஒளிக்கும் - வஞ்சகர்க்கு மறைந்திருக்கும். காரணம் - சிவத்தை. தெளிக்கும் - தெரிவிக்கும். அளிக்கும் - காப்பாற்றுவாள். (உஎ)

1321. அறிந்திடுஞ் சக்கரம் அருச்சனை யோடே
எறிந்திடும் வையத் திடரவை காணின்
மறிந்திடு மன்னனும் வந்தனை செய்யும்
பொறிந்திடுஞ் சிந்தை புகையில்லை தானே.[1]

(ப. இ.) அருளாலறிந்து கைக்கொண்டொழுகும் நவாக்கரி சக்கரத் தினை வழிபடுவாயாக. அஃது உலகத் துன்பங்கள் அனைத்தையும் தீர்க்கும். சிறையிலடைத்துத் தண்டம் செய்யும் மன்னனும் வலிய வந்து வழி படுமாறு செய்யும். உள்ளத்தைக் கலங்க வைக்கும் எவ்வகைத் துன்பங் களும் உளவாகா.

---

1. மூவுருவின். அப்பர், கூ. கூஅ. - கூ.
,, புல்லறிவிற். கஉ. திருநாவுக்கரசர், கசடி.

(அ. சி.) எறிந்திடும் - விலக்கும். காவல் மறிந்திடும் - சிறையில் வைத்திடும். பொறிந்திடும் - கலக்கம் உறுகின்ற. புகை - துன்பம். (உஅ)

1322. புகையில்லை சொல்லிய பொன்னொளி யுண்டாங்
குகையில்லை கொல்வ திலாமையி னாலே
வகையில்லை வாழ்கின்ற மன்னுயிர்க் கெல்லாஞ்
சிகையில்லை சக்கரஞ் சேர்ந்தவர் தாமே.

(ப. இ.) நவாக்கரி சக்கர வழிபாடு உடையவர்கட்குப் புகையாகிய துன்பம் இல்லை. அகத்தவத்தோராகிய யோகிகளுக் குண்டாகும் கடவுட் காட்சியாம் பொன்னொளி அகத்தே காணப்படும். அத்தகையோர் கொலையும் புலையும் விடுத்த சிவ நிலையினராதலின் அவர்கட்குப் பிறவியில்லை. மன்னுயிரையெல்லாம் வேறுபாடில்லாமல் ஒக்கப்பார்த்து அவர் புரியும் கடவுள் தொண்டினுக்கு முடிவில்லை.

(அ. சி.) குகை - கருப்பாசயம். சிகை - முடிவு. (உக)

1323. சேர்ந்தவர் என்றுந் திசையோளி யானவர்
காய்ந்தெழு மேல்வினை காணகி லாதவர்
பாய்ந்தெழும் உள்ளோளி பாரிற் பரந்தது
மாய்ந்தது காரிருள் மாறொளி தானே.

(ப. இ.) நவாக்கரி சக்கர வழிபாட்டினர் உள்ளொளியுடையவராதலின் எல்லாத் திசைகளினும் ஞாயிறும் திங்களும் போன்று விளங்கும் விளக்காவர். பின்னும் பிறவிக்கு வித்தாகிய சினந்தெழுகின்ற ஏறுவினை இலராவர். ஆவியெங்கணும் பரந்தெழுகின்ற சிவபெருமானின் முற்றுணர்வொளி உள்ளும் புறம்பும் ஒத்துத் திகழ்ந்தது. அதனுல் ஆணவ வல்லிருள் அகன்று ஒடுங்கிற்று. ஒப்பொளியாகிய மாயாகாரிய ஒளியும் தூய அருளொளிக்குத் துணையாகும்.

(அ. சி.) திசை ஒளி - திக்குகள் எங்கும் புகழ் பெற்றவர். மேல்வினை - ஆகாமியம். உள்ளொளி - ஞான ஒளி. காரிருள் - ஆணவ இருள். மாறு ஒளி - மயக்கம். (உ0)

1324. ஒளியது ஹௌமூன் கீரீமது ஈரூங்
களியது சக்கரங் கண்டறி வார்க்குத்
தெளிவது ஞானமுஞ் சிந்தையுந் தேறப்
டணிவது பஞ்சாக் கரமது வாமே.

(ப. இ.) ஒளியுடையதாகிய ஹௌ என்பதை முதலிலும் கிரீம் என்பதை ஈற்றிலும் வரைந்து திருவருட் களிப்பை உண்டாக்கும் அச்சக்கரத்தை வழிபடுவார்க்குத் தெளிந்த மெய்யுணர்வும், தெளிந்த நாட்டமும் கைகூடும். பின் செந்தமிழ்த் திருவைந் தெழுத்தினை இடைஉரு துருவேற்றி முழுமுதற் சிவபெருமானை வழிபாடு புரிவாயாக.

(அ. சி.) களியது - களிப்பினைத் தருவது; பஞ்சாக்கரம் அது - நவாக்கரி மந்திரமே பஞ்சாக்கரமாம். (உக)

1325. ஆமே சதாசிவ நாயகி யானவள்
ஆமே அதோமுகத் துள்ளறி வானவள்
ஆமே சுவையோளி யூறுசை [1]நாற்றம்
ஆமே யனேத்துயிர் தன்னுளு மாமே.

(ப. இ.) எல்லாவற்றையும் திருவுள்ளத்தால் படைத்தருளும் சதாசிவ நாயகியானவள் தூவாமாயையிற் காணப்படும் ஊழி, ஊழ், உழைப்பு, உணர்வு, உள்ளன்பு, உழைப்பி, உறழ்வு என்னும் ஏழு மெய்கட்கும் அறிவாயிருப்பள். ஊழி - காலம். உள்ளன்பு - விழைவு. உழைப்பி - ஆள். உறழ்வு - மருள். மூலப்பகுதியிற் காணப்படும். சுவையொளி யூறு ஓசைகட்கு இயக்கியாயுள்ளவள். எல்லாவுயிர்க்கும் உயிர்க்குயிராய் நின்று இயைந்து இயக்கும் இறைவியாவள்.

(அ. சி.) அதோமுகத்துள் ளறிவானவள் - அதோமுகத்தில் ஒடுக்கப்பட்டுக் கிடக்கும் உயிர் வருக்கங்களுக்கு அறிவாய் விளங்குபவள். (கூ)

1326. தன்னுளு மாகித் தரணி முழுதுங்கொண்
டென்னுளு மாகி இடம்பெற நின்றவள்
மண்ணுளும் நீரனல் காலுளும் வானுளுங்
கண்ணுளும் மெய்யுளுங் காணலு மாமே.

(ப. இ.) திருவருளம்மை எல்லாவுலகங்களையும் தன்னுள் அடக்கித் தானேகவே நிற்பள். எளியேன் உள்ளும் எளியேன் தங்குதற்கு இடமும் ஆகிநின்றவளும் அவளே. அவளே நிலம், நீர், நெருப்பு, உயிர், நீள் விசும்பாகவும் விரிந்து நின்றனள். அடியேன் கண்ணுளும் மெய்யுளும் கலந்து நிற்பவளும் அவளே. அவள் அருளாலே 'கண்ணுல் யானும் கண்டேன் காண்க' எனக் கட்டுரைக்குமாறு வெளிப்பட்டுக் காட்சியருள்பவளும் அவளே. மெய்ப்பொருளாகிய சிவனார் திருவுள்ளத்திருப்பவளும் அவளே என இவ்வகையாகக் கூறுதலும் ஒன்று.

(அ. சி.) தன்...நின்றவள் - அண்டமும் பிண்டமும் ஆகி நின்றவன். மண்...ஆமே-ஐம்பூதங்களிலும் ஊனக்கண்ணிலும் தேகத்துள்ளும். (கூ)

1327. காணலு மாகுங் கலந்துயிர் செய்வன
காண்லு மாகுங் கருத்து ளிருந்திடிற்
காணலு மாகுங் கலந்து வழிசெயக்
காணலு மாகுங் கருத்துற நில்லே.

(ப. இ.) திருவருள் வலத்தால் ஏனை உயிர்களுடன் நீ கலந்து அவை செய்வனவற்றைக் காணுதலும் ஆகும். அவ் வுயிர்கள் தம் கருத்தின் கண் மறைவாக வைத்திருக்கும் பொருள்களை நின்னுல் அறிதலுமீ கூடும். அவ் வுயிர்களுடன் கலந்து அவற்றைக்கொண்டு நாம் விரும்பியவாறு தொழில் செய்வித்தலும் கூடும். அதனுல் திருவருளின் திருவுள்ளப் பாங்கின்வழி ஒழுகுவாயாக. (கூ)

1. சுவையொளி, திருக்குறள், உ௭.

**1328.** நின்றிடும் ஏழு புவனமும் ஒன்றுகக்
கண்டிடும் உள்ளங் கலந்தெங்குந் தானுகக்
கொண்டிடும் வையங் குணம்பல தன்னையும்
விண்டிடும் வல்வினை மெய்ப்பொரு ளாகுமே.[1]

(ப. இ.) திருவருள் வலத்தால் ஏழாக நிலைபெறும் உலகங்களனைத்தையும் ஒருமிக்க காணலாம். எல்லா உயிர்களின் உள்ளத்தினுங் கலந்து எங்கும் தானுகக் காணலாம். மாயாகரிய உலகங்களின் உண்மைப் பண்பினை உள்ளவாறு உணரலாம். இருவினைப் பிணிப்பும் நம்மை விட்டு அகலும். மெய்வடிவாம் சிவனைச் சேர்ந்து நாம் உய்யலாம். (கூஙி)

**1329.** மெய்ப்பொருள் ஔமுதல் ஹௌவது ஈறுக்
கைப்பொரு ளாகக் கலந்தெழு சக்கரந்
தற்பொரு ளாகச் சமைந்தமு தேச்சுரி
நற்பொரு ளாக நடுவிருந் தாளே.

(ப. இ.) உண்மைப் பொருளாகச் சமைந்த அமுதேசுவரிச் சக்கரமானது 'ஔ' முதல் 'ஹௌ' ஈறுக வரையப்படுவது. திருவருளம்மையாகிய அமுதேசுவரி (நமசிவய) நடுவிலிருந்தாள் என்க. நடுவிருத்தலாவது நாடுவாரது நாட்டத்து அகமும் புறமும் ஒத்துக் காணப்படும் காட்சிப் பொருளாவது. 'உடையாளுன்றன் நடுவிருக்கும், உடையாள் நடுவுள் நீயிருத்தி, அடியேன் நடுவுள் இருவீரும் இருப்ப' தென்பது தமிழ் மறை மூடிவாம் திருவாசகம்.

(அ. சி.) ஔ முதல் ஹௌ ஈறுக் கூறின் அமுதேசுவரிச் சக்கரம் என்ப. (கூசு)

**1330.** தாளதி னுள்ளே சமைந்தமு தேச்சுரி
காலது கொண்டு கலந்துற வீசிடில்
நாளது நாளும் புதுமைகள் கண்டபின்
கேளது காயமுங் கேடில்லை காணுமே.

(ப. இ.) உச்சிக்குமேல் ஆயிர இதழ்த் தாமரை என்று சொல்லப்படும் நிலைக்களத்துக்குத் தாளாகிய நாளம் போன்று காணப்படுவது நடுநாடியாகும். நடுநாடி எனினும் சுழுமுனை எனினும் ஒன்றே. நடுநாடியில் எழுந்தருள்பவள் அமுதேசுவரி. உயிர்ப்பினை எழுப்பி அம்மையுடன் கலந்து மேலேயுள்ள முழுமுதற்சிவத்தைப் பொருந்தும்படி செய்தால், அது நாளுக்குநாள் வியத்தகு புதுமைகள் பல காணச் செய்யும். கண்டபின் உறவாகிய உடம்புக்கும் கேடில்லையாகும்.

(அ. சி.) தாள் அதினுள்ளே - தாமரைத் தாள்போன்ற சுழுமுனை யிலே. காலது கொண்டு - பிராண வாயுவுடன். உற வீசிடில் - மேல் உறச்செய்திடில். நாளது நாள் - நாளுக்கு நாள். கேளது - தெரிந்து கொள். (கூஎ)

1. 'அரக்கொடு, சிவஞானபோதம், உ. க - சு.

1331. கேடில்லை காணுங் கிளரொளி கண்டபின்
நாடில்லை காணும் நாண்முத லற்றபின்
மாடில்லை காணும் வரும்வழி கண்டபின்
காடில்லை காணுங் கருத்துற் றிடத்துக்கே [1]

(ப. இ.) கெடாது நிலைத்திருக்கும் திருவருள் ஒளியைக் கண்டபின் நாடு முதலிய வேற்றுமை இல்லை. காலவரையறையைக் கடந்தபின் முன் பின் கீழ் மேல் என்ற இடப்பாகுபாடுகளும் இல்லை. திருவருள் கை வந்து எய்தச் சில முதலிய நானெறிகளைக் கண்டபின் பிறவித் துன்பங் கள் உளவாகா. ஆதலின் திருவருளிடத்தில் உள்ளன்பைச் செலுத்து வாயாக.

(அ. சி.) நாடில்லை - தேச பேதம் இல்லை. மாடில்லை - பக்கபேதம் இல்லை. காடு இல்லை - துக்கம் இல்லை. (கூ அ)

1332. உற்றிட மெல்லாம் உலப்பில்பா ழாக்கிக்
கற்றிட மெல்லாங் கடுவெளி யானது
மற்றிட மில்லை வழியில்லை தானில்லை
சற்றிட மில்லை சலிப்பற நின்றிடே.

(ப. இ.) ஆருயிர் திருவருள் வலத்தால் சிவமாந்தன்மை எய்தும் எய்தியபொழுது பார்க்கும் இடமெல்லாம் மாயாகாரியப் பொருள்கள் பகல் விளக்குப்போல் முனைத்துத் தோன்றுது அடங்கி நிற்றலால் அவை உலப்பில் பாழாகத் தோன்றும். உலகியற் பொருள்களைப்பற்றி முன் கற்றறிந்து கைக்கொண்ட பயிற்சிகளெல்லாம் விடுபட்டமையால் வெட்ட வெளியாகும். சிவத்தொடு கலந்தமையால் அப்பொடு கலந்த உப்பு அப்பேயாய்ப் போக்கு வரத்தின்றி ஒன்றேயாய்ப் புணர்ந்திருத்தல்போல் ஆருயிரும் கலப்பால் நிறைந்து ஒன்றேயாய் நிற்கும். அப்பொடு கல் முதலிய கரையாத பிற பொருள் சேர்ந்தால் கலவாது முறையே பஞ் வானது கீழும் எளிதானது மேலுமாக இருக்கும். அப்பு - தண்ணீர். உலப்பிலா - கேடிலா. உலப்பில் பாழ் - அடங்கி நிற்கும் நிலை.

(அ. சி.) உற்...பாழாக்கி - மாயா காரியம் எல்லாம் முழுவதும் ஒழித்து. கற்ற-அறிந்த. இடம்-உலகம். கடுவெளி-இன்மை. சலிப்பற-உறுதியாக அசையாமல். (கூ க)

1333. நின்றிடும் ஏழ்கடல் ஏழ்புவி எல்லாம்
நின்றிடும் உள்ளம் நினைத்தவை தானெக்கும்
நின்றிடுஞ் சத்தி நிலைபெறக் கண்டிட
நின்றிடும் மேலை விளக்கொளி தானே.[2]

(ப. இ.) அண்டமாகிய உலகத்தின்கண், உள்ள முறைமைகள் பிண்டமாகிய உடம்பின் கண்ணும் காணப்படும். ஆதலின் ஏழ்கடலும் ஏழ்புவியும் உடலின் கண்ணும் காணலாம். திருவருள் துணையால்

1. யாதும் ஊரே. புறநானூறு, ஙகூஉ.
2. எண்ணிய. திருக்குறள், சுஙசு.
, சந்ததமும். தாயுமானவர், பரிபூரணானந்தம் - இ.

உள்ளம் கள்ளமின்றி நிலைபெற்று நிற்கும். நிற்கவே அவ்வுள்ளம் நினைப்பவை யனைத்தும் அருளால் வலிய வந்து முன்னிற்கும். திருவருள் ஆற்றல் உள்ளத்து நிலைபெற்று நிற்றலால், பார்க்குமிடமெல்லாம் திருவருட் பொலிவே காணப்படும். புருவநடுவின்கண் அளவிலாத் திருவருள் ஒளி காணப்படும்.

(அ. சீ.) நின்றி...எல்லாம் - அண்டத்திலுள்ளவற்றை எல்லாம் பிண்டத்தில் காணலாம். நின்றிடும் உள்ளம் - மனம் நிலைபெறும். நின்றிடும் சத்தி நிலைபெற-என்றுமுள்ள சத்தி இதயத்தில் வீற்றிருக்க. கண்டிடம் நின்றிடும் - எங்கும் சத்தி மயமாய்த் தோன்றும். மேலை விளக்கொளி - புருவ மத்தியிலுள்ள தீபம் போன்ற சிவ சத்தி ஒளி. (சo)

1334. விளக்கொளி சௌமுதல் ஔவது ஈரு
விளக்கொளிச் சகரம் மெய்ப்பொரு ளாகும்
விளக்கொளி யாகிய மின்கொடி யாளை
விளக்கொளி யாக விளங்கிடு நீயே.

(ப. இ.) விளக்கொளி போன்று துணையாம் நவாக்கரி சக்கரம் சௌமுதல் ஔ ஈருக வரையப்படுவதாகும். அதுவே மெய்ப் பொருளாம் சிவத்தை விளக்குவதாகும். எல்லாச் சக்கரத்திற்கும் உணவுக்கு இன்றியமையாது வேண்டப்படும் உயிர்ய உப்புப்போல் உயிர் மந்திரமாக வுள்ளது 'நமசிவய' என்பதே. ஏனை மந்திரங்களும் சக்கரத்தில் வரையும் எழுத்துக்களும் கைகூட வேண்டியவைகளைக் காதலுளம் கொள்ளக் கருதும் கருத்தின் குறியாகும். இஃது 'ஓதுசெயற் பாவுடலாம் உய்க்கு மறையுயிராம், நீதில் நமசிவய செப்பு' என்பதனால் விளங்கும். நவாக்கரி சக்கரத்தில் விளங்கும் மின்கொடிபோன்று தோன்றும் திருவருளம்மையைக் காதலுள்ளத்தாற் காண்பர். கண்ட அப் பேற்றால் கண்ட அம் மெய்யன்பரும் உலகினுக்குத் திருவருள் ஒளி விளக்காய்த் திகழ்வர். மேலும் 'எல்லாச் செயற்கும் இயம்புமறை ஐந்தெழுத்தே, வல்ல சிவய நம வாழ்த்து' என்பதனையும் நினைவுகூர்க.

(அ. சீ.) விளக்கொளிச் சக்கரம் - எல்லாவற்றையும் விளக்கும் நவாக்கரி சக்கரம். (சக)

1335. விளங்கிடு மேல்வரு மெய்ப்பொருள் சொல்லின்
விளங்கிடு மேல்லிய லானது வாகும்
விளங்கிடு மெய்ந்நின்ற ஞானப்பொருளை
விளங்கிடு வார்கள் விளங்கினர் தானே.

(ப. இ.) மேற்கூறிய நவாக்கரி சக்கரத்தினிடத்து விளங்கும் மெய்ப் பொருளாம் சிவத்தைக் கூறுங்கால், திகழும் அருளம்மையே அதுவாகும். சிவமெய்யாக என்றும் ஒருபடித்தாய் நிற்கும் மெய்யுணர்வுப் பொருளை விளங்கிக் கொண்டவர்கள். உலகத்துக்கு அப்பொருளை விளக்கும் முறைமைசேர் இறைபணியாளராவர். இறைபணியாளர் : அடிமையாய்ந் நின்றுணர்வில் ஆண்டவருள் தூண்டப், படிமிசையாற்றும் பண்பின ராவர். ஆசையற்று வீடுப் வேண்டா விறலின ரிவரே.

(அ. சீ.) விளங்கிடுவார்கள்-விளக்கியிடுவார்கள் என்பது மெலிந்து வந்தது. (சஉ)

1336. தானே வெளியென எங்கும் நிறைந்தவள்
தானே பரம வெளியது வானவள்
தானே சகலமும் ஆக்கி அழித்தவள்
தானே யனைத்துள அண்ட சகலமே.[1]

(ப. இ.) திருவருளம்மை நான்கு பூதங்களுக்கும் இடங்கொடுத்து மேலோங்கிநிற்கும் வெளியாகிய வானம்போன்று எங்கும் நிறைந்துள்ளாள். அவளே சிவவுணர்வுப் பெருவெளியாவள். நிலைத்திணை இயங்குதிணை என்னும் எல்லாவுயிர்களுக்கும் இருவினைகட்கு வேண்டியவாறு உடல்களைப் படைத்தளிப்பவளும் அவளே. அவ்வுயிர்கள் இளைப்பாறுதற் பொருட்டு அவ்வுடல்களைத் துடைத்தழிப்பவளும் அவளேயாவள். அவளே தாங்கும் கலப்பால் அண்டமும் உலகமும் அனைத்துமாகுவன்.

(அ. சி.) வெளியென - ஆகாயத்தைப் போலப் பரமவெளி ஞானகாயம். (சஉ)

1337. அண்டத்தி னுள்ளே அளப்பரி தானவள்
பிண்டத்தி னுள்ளே பெருவெளி கண்டவள்
குண்டத்தி னுள்ளே குணம்பல காணினுங்
கண்டத்தில் நின்ற கலப்பழி யார்களே.

(ப. இ.) அண்டமாகிய பேருலகின்கண் பிரிப்பின்றி நிறைந்து நிற்கும் திருவருளம்மை அளத்தற்கரிய வியத்தகு தன்மையள். பிண்டமாகிய உடலின்கண்ணும் வெளிக்கு வெளியாம் அருள்வெளி கண்டவள். ஓமம் செய்தற்குரிய இடனும் கொப்பூழின்கண் தோன்றும் நன்மைகள் பல காண்பர். கண்டாலும் மிடற்றுரைசை ஆகிய வைகரிவாக்குத் தோன்றுதலரிது. அவ்வோசை தோன்றின் அத்துடன் முழுமுதல் சிவனைக் காணுதலுங் கூடும். இவ்வுண்மையினை அறியார் பலராவர்.

(அ. சி.) குண்டம் - நாபி. கண்டம் - விசுத்தி. (சச)

1338. கலப்பழி யார்கடல் சூழுல கெல்லாம்
உலப்பழி யாருட லோடுயிர் தன்னைச்
சிலப்பழி யார்சில தேவரை நாடித்
தலைப்பழி யாகச் சமைந்தவர் தானே.[2]

(ப. இ.) முழுமுதற் சிவன் திருவருளை இடமாகக்கொண்டு எங்கணும் நிறைந்து நிற்பன். அவ்வுண்மையை அருளால் உணர்ந்தவர் உடலுடன்கூடி நெடுநாள் கேடின்றி வாழ்வர். இறந்து பிறந்து உழலும் தேவரை நாடித் தொழுவோர் ஓசையின் உண்மையினை உணராராவர். அத்தகையோர், நல்ல தலையெழுத்துப் பெறுதலராய்ப் பிறந்திறந்துழலும் தலையெழுத்துச் சுமந்தவராவர். ஓசை - திருச்சிலம் பொலி.

1. சத்தியும். சிவஞானசித்தியார், க. உ - கக.
2. செத்துச். அப்பர், இ. கoo - உ.

(அ. சி.) உலப்பு - அழிதல். சிலப்பு அறியார் - சிலம்பொலி கேளாதவர். தலைப்பொறியாக - தலைப்பொறி என்பது தலைப்பறி என வந்தது; தலை எழுத்து. சமைந்தவர் - பெற்றவர். (சஇ)

1339. தானே எழுந்தஅச் சக்கரஞ் சொல்லிடின்
மானே மதிவரை பத்திட்டு வைத்தபின்
தேனே யிரேகை திகைப்பற ஒன்பதில்
தானே கலந்த வரையெண்பத் தொன்றுமே.

(ப. இ.) திருவருள் ஆணையால் தானுகவே - இயற்கையாகவே எழுந்த நவாக்கரி சக்கரத்தைக் கூறுங்கால் இந்திரனே! மதிக்கத் தகுந்த வரைகள் குறுக்கும் நெடுக்குமாகப் பத்துக் கீறி அமைத்தபின் அழகு பொருந்திய ஒன்பது வரைகளின் அறைகளே எண்ணிப்பார்த்தால் எண்பத்தொன்றுகும். மான் : மன் என்பதன் திரிபு, இந்திரனுகிய மாணவன்; (137) இந்திரன். தேன் - அழகு.

(அ. சி.) மானே - இந்திரனே. மதிவரை பத்திட்டு - குறுக்கும் நெடுக்குமாக மதிக்கும் வரைகளைப் பத்தாகக் கீறி. தேனே...மே-அப்படி ஏற்பட்ட 81 அறைகள். (சசு)

1340. ஒன்றிய சக்கரம் ஓதிடும் வேளையில்
வென்றிகோள் மேனி மதிவட்டம் பொன்மையாங்
கன்றிய ரேகை கலந்திடுஞ் செம்மையில்
என்றிய லம்மை எழுத்தவை பச்சையே.[1]

(ப. இ.) குறித்த சக்கரத்தை முறையாக ஓதும் வேளையில் சக்கரத்தின் மேலிடும் வரை மதிவட்டம் பொன்றிருத்தல் வேண்டும். அதனைப் பொன்நிறமாக அமைத்தல்வேண்டும். அழுத்தமாக வரையப் பட்ட ஏனைய வரைகள் சிவப்பு நிறமாக அமைத்தல்வேண்டும். ஞாயிற்றினை ஒத்துத் திகழும் அம்மையின் எழுத்தாகிய 'நமசிவய' பச்சை நிறமாக அமைத்தல் வேண்டும். இந்நிறங்கள் அனைத்தும் சக்கரத்தினைத் தொழுது பயில்வார்மாட்டும் பொலிந்து விளங்கும். என்றியல் : என்று-ஞாயிறு; இயல் - தன்மை. பொன்மை செம்மை பசுமை இவற்றை முறையே அறிவு ஆட்சி அடைவு ஆகவும் கூறலாம். அடைவு - நுகர்வு.

(அ. சி.) மேனி மதி வட்டம் - சக்கரத்தின் மேல் இடும் சந்திரன் போன்ற வரை. கன்றிய ரேகை - ஏனைய வரைகள். என்...எழுத்து - அச் சக்கரத்தின் அறைகளில் இடும் எழுத்துக்கள். (சஎ)

1341. ஏய்ந்த மரவுரி தன்னில் எழுதிய
வாய்ந்தஇப் பெண்ணெண்பத் தொன்றில் நிரைத்தபின்
காய்ந்தவி நெய்யுட் கலந்துடன் ஓமமும்
ஆய்ந்தலத் தாமுயி ராகுதி பண்ணுமே.

---

1. அஞ்செழுத்தா. சிவஞானபோதம், கூ : நூ - க
,, ஓங்காரி. கo. திருமந்திரம், கoசகூ.
,, பச்சை. அப்பர், கூ. கஎ - எ.

(ப. இ.) பொருந்திய மரப்பட்டையின்கண் வரைந்த எண்பத் தோரறையிலும் அம்மையின் மந்திர எழுத்தாகிய 'நமசிவய' என்பதனை மாறிமாறி வரைந்தபின், ஓமம் நெய் முதலியவற்றுல் வளர்த்துப், பொங் கலும் படைத்து நிறை ஆகுதியும் செய்க. பெண் : ஆகுபெயராக அம்மை யின் எழுத்தைக் குறிக்கும். ஆய்ந்தலத்து : ஆந்தலத்து - தக்கதாய் அமைந்த தூய இடத்து. உயிராகுதி : அவிக்கு உயிர்போன்ற நெற் பொரியாகுதி.[1] பூரணவாகுதி : நிறையாகுதி.

(அ. சி.) மரவுரி - மரப்பட்டை. இப் பெண் - இந்த எழுத்துக்கள் அம்மை எழுத்தென்று மேற்பாட்டிற் கூறியபடி ஈண்டுப் பெண் என்றே கூறினர். • எண்பத்தொன்றின் - 81 அறைகளிலும். காய்ந்தவி - சமைத்த சோறு. ஆய்ந் தலத்து - செய்யத்தகும் இடத்தில். (சஅ)

**1342.** பண்ணிய பொன்னைப் பரப்பற நீபிடி
எண்ணிய நாட்களில் இன்பமும் எய்திடும்
நண்ணிய நாமமும் நான்முகன் ஒத்தபின்
துண்ணென நேயநற் சேர்க்கலு மாமே.

(ப. இ.) சக்கரவடிவாகச் செய்யப்பட்ட திருவருளம்மையின் திரு வுருவை உள்ளப் பதைப்பு ஒடுங்க நீ முறையாக வழிபட்டு உறுதியாகக் கைக்கொள்வாயாக. உருவேற்றுதற்கென வரையறுக்கப்பட்ட நாட் களில் இன்பமும் எய்தும். மந்திரவுருவாலும் அம்மை வழிபாட்டாலும் திருவடியுணர்வு கைவந்தவர் நான்முகனை ஒத்தவராவர். நான்முகனை ஒத்தலாவது உறுதிப்பொருள் நான்கினையும் உள்ளவாறுணர்ந்து கைக் கொண்டொழுகி உணர்த்தவல்லராய் எங்கணும் புகழ் பூசனைபெற்று விளங்குதல். திருவருள் மிக விரைவாக அவ்வுயிரைச் சிவபெருமான் திருவடிக்கீழ்ச் சேர்க்கும். நல்நேயம் - சிவபெருமான்.

(அ. சி.) பண்ணிய பொன்னை - இயந்திர வடிவமாகச் செய்த பொன்னிறத்தளான நவாக்கரிசத்தியை. பரப்பு அற - பரபரப்பு அற - நிதானமாக. நண்.....மாமே - ஆத்ம சத்திகளின் அருள் பெறலாகும். (சகூ)

**1343.** ஆகின்ற சந்தனங் குங்குமங் கத்தூரி
போகின்ற சாந்து சவாது புழுகுநெய்
ஆகின்ற கற்பூர மாகோ சனநீருஞ்
சேர்கின்ற ஒன்பதுஞ் சேரநீ வைத்திடே.

(ப. இ.) பேரறிவுப் பேராற்றலின் வகை ஒன்பது என்பர். இவற் றையே நவசத்தி என்பர். இவ் வொன்பது ஆற்றலையும் ஒருபுடையொப் பாகக் கூறப்படும் ஒன்பது பொருள்களைத் தொகையாகச் சேர்த்து வைக்கப்படும் முறைமை ஓதப்படுகின்றது. அவை வருமாறு : நன்மை யாகின்ற சந்தனம், குங்குமம், கத்தூரி, எங்கணும் நறுமணம் பரவும் சாந்து, சவாது, புனுகு, நெய், பச்சைக்கருப்பூரம், கோரோசனை கலந்த தூநீர் என்பன.

(அ. சி.) போகின்ற - வாசனை வீசுகின்ற. ஆகோசனம் - பசுவி னின்றும் எடுக்கப்படும் கோரோசனை. ஒன்பது-சந்தனம் (1) குங்குமம் (2)

1. அகன்மார்ந்த. சம்பந்தர், க. கஉ. சு.
,, பரந்தவினை. கஉ. சம்பந்தர்: எ.

கத்தூரி (3) சாந்து (4) சவ்வாது (5) புழுகு (6) நெய் (7) கற்பூரம் (8) கோரோசன நீர் (9).
(இ0)

1344. வைத்திடும் பொன்னுடன் மாதவ நோக்கிடிற்
கைச்சிறு கொங்கை கலந்தெழு கன்னியைத்
தச்சிது வாகச் சமைந்தஇம் மந்திரம்
அர்ச்சனை யாயிரம் ஆயிரஞ் சிந்தியே.[1]

(ப. இ.) பெருந்தவப்பேற்றால் பொன்தகட்டில் வரைந்த சக்கரத்தின்கண் விளங்கும் அழகிய கொங்கையுடைய கன்னியம்மையைக் கவர்ச்சியுறச் செய்யும் இம் மந்திரத்தை ஆயிரமுறை உருவேற்றினால் ஆயிரம் அருச்சனையாகும். ஆயிரமுறை உருவேற்றுக. கை - அழகு. ஆயிரம் ஆயிரம்: அடுக்கு அளவின்மை குறித்து நின்றது.

(அ. சி.) வைத்திடும் பொன்னுடன் - சக்கரத்தின்கண் தாபிக்கப் பட்டிருக்கும் பொன்மயமாகிய நவாக்கரி சத்தியுடன். கை - அழகிய. தச்சு - வசியம்.
(இக)

1345. சிந்தையி னுள்ளே திகழ்தரு சோதியாய்
எந்தை கரங்கள் இருமூன்றும் உள்ளது
பந்தமா சூலம் படைபாசம் வில்லம்பு
முந்தை கிலீமேழ மூன்னிருந் தாளே.

(ப. இ) அன்பர் உள்ளத்தின்கண் அளவிறந்த இயற்கைப் பேரொளியாய் விளங்கும் அம்மை தந்தையாகவும் தோற்றமருள்வள். அத் தோற்றத்தின்கண் திருக்கைகள் ஆறினிலும், மழு, சூலம், தோட்டி, கயிறு, வில், என்னும் ஆறு கருவிகள் காணப்படும். இவைகள் கிலீம் என்னும் வித்தெழுத்தில் தோன்றுவன. அவ் வித்தெழுத்தைச் சேர்த்தொலிக்க அம்மை முன்னிற்பள். பந்தம் - தீப்பந்தம்; மழு. படை - தோட்டி. கைகள் ஆறு ஒதுவதால் திருமுகங்கள் மூன்று கொள்ளப்படும்.

(அ. சி.) எந்தை - தந்தைபோலும் அன்புள்ள: பந்தம் - மழு. கிலீம் - பீச எழுத்து.
(இஉ)

1346. இருந்தனர் சத்திகள் அறுபத்து நால்வர்
இருந்தனர் கன்னிகள் எண்வகை எண்மர்
இருந்தனர் சூழ எதிர்சக் கரத்தே
இருந்த கரமிரு வில்லம்பு கொண்டே.

(ப. இ.) திருவருளம்மையின் விரிந்த ஆற்றல்களாவார் அறுபத்து நால்வர். மதிக்கத் தகுந்த எண்வகை ஆற்றலரும் உளர்.[2] இவர்கள் அனைவர்களும் நவாக்கரி சக்கரத்தின் சூழவும் திருமுன்பும் இருப்போராவர். திருவருளம்மையின் இரண்டு திருக்கையிலும் வில்லும் அம்பும் காணப்பெறும்.

(அ. சி.) எண் வகை - மதிக்கத்தகுந்த.
(இக)

1. பூவ. அப்பர், தி. சுந் - க.
2. போற்றிசைத்துன். அப்பர், கூ. திள - க0.

1347. கொண்ட கனகங் குழைமுடி யாடையாய்க்
கண்டஇம் முத்தங் கனல்திரு மேனியாய்ப்
பண்டமர் சோதிப் படரித ழானவள்
உண்டங் கொருத்தி உணரவல் லாருக்கே.

(ப. இ.) திருவருளம்மையின் காதணியும், திருமுடியும், ஆடையும் பொன்வண்ணமாவன. திகழ்கின்ற பெரிய முத்துக்களாலாவன அணிகள். திருமேனி தழல் வண்ணம். தொன்மையிலேயே இயற்கைச் செவ்வொளியாய் விளங்குவன உதடுகள். ஒப்பில்லாத அம்மையின் இத் திருவுருவினை அவள் அருட்கண்கொண்டு கண்டு வழிபடுக. அத்தகை வழிபாட்டினர்க்கே அம்மை வெளிப்பட்டருள்வள்.

(அ. சி.) கனகம்குழை-பொன்னாலாகிய குழை. கண்டவிம் முத்தம்-பருமுத்து. கனல் திருமேனி - கனல் நிறமேனி. சோதிபடர் இதழ் - செவ்வதரம். (திசை)

1348. உணர்ந்திருந் துள்ளே ஒருத்தியை நோக்கிற்
கலந்திருந் தெங்குங் கருணை பொழியும்
மணந்தெழும் ஓசை யொளியது காணுங்
தணந்தெழு சக்கரந் தான்தரு வாளே.

(ப. இ.) திருவருள் துணையால் சக்கரத்தில் தோன்றும் திருவுருவினை தன்னுக வுணர்ந்திருந்து உள்ளத்தின் உள்ளே நோக்கிஞல் நோக்குவார்க்கு எங்குங் கலந்து பேரருள் பொழிவள். அகத்தெழும் ஓசை மணி முதற் (586) பத்தும் புலனுகும். அம்மையும் சக்கரத்தினின்றும் போந்து வெளிப்பட்டு உருவாய்த் தோன்றி அருள்புரிவள்.

(அ. சி.) மணந்து - கலந்து. ஓசை - மணி கடல் முதலிய பத்து விதமான ஒலி. தணந்து - நீங்கி; (அஃதாவது சக்கரத்தினின்றும் தோன்றி.) (திஇ)

1349. தருவழி யாகிய தத்துவ ஞானங்
குருவழி யாகுங் குணங்களுள் நின்று
கருவழி யாகுங் கணக்கை யறுத்துப்
பெருவழி யாக்கும் பேரொளி தானே.[1]

(ப. இ.) வீடுபேற்றினைத் தருதற்குத் திருவடியுணர்வு - சிவஞானம் கைவருதல்வேண்டும். அது 'தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தக்' கைகூடும். குருவருள் கிடைத்ததும் சிவபெருமானின் எண்குணங்களுடு ஆருயிர்மாட்டு மேம்பட்டுத் திகழும். திகழவே பிறப்புக்குக் காரணமாகிய வினைத்தொடக்கு அறும். வினைத்தொடக்கறப் பெருவழியாகிய செல்லாத செந்நெறிச் செல்வர். செல்லவே திருவருட் பேரொளி முன்னிற்கும்.

(அ. சி.) தருவழி - முத்தியைத் தரக்கூடிய. கரு.....அறுத்து - பிறவி வேரை அறுத்து. பெருவழி - முத்தி. (திசு)

1. கல்லாதார், இல்லாதை. அப்பர், சு. அசு - அ: கக - கூ.

**1350.** பேரொளி யாய பெரிய பெருஞ்சுடர்
சீரொளி யாகித் திகழ்தரு நாயகி
காரொளி யாகிய கன்னிகை பொன்னிறம்
பாரொளி யாகிப் பரந்துநின் ருளே.

(ப. இ.) முச்சுடர்க்கும் ஒளிகொடுத்து மூவாப் பேரொளிச் சுடராய் விளங்குவது திருவருள் சிறந்த இயற்கை ஒளியாத் திகழும் முழுமுதல்வி நீலமேனி வாலிழையினளாவள். அவள் என்றும் திரிபிலாக் கன்னி. பொன்னிறத்தையுடைய நிலவுலகத்தில் வாழ்கின்ற ஆருயிர் அனைத்திற்கும் அறிவொளியாக உடனுக நிறைந்து நின்றனள்.

(அ. சி.) காரொளி-நீல ஒளி. பாரொளி-உலகத்துக்கு ஒளி. (இஎ)

**1351.** பரந்த கரம்இரு பங்கயம் ஏந்திக்
குவிந்த கரமிரு கோய்தளிர்ப் பாணி
பரிந்தருள் கொங்கைகண் முத்தார் பவளம்
இருந்தநல் லாடை மணிபொதிந் தன்றே.[1]

(ப. இ.) திருவருளம்மையின் நான்கு திருக்கைகளுள் மேல் நோக்கிய இருகைகளும் குவிந்த கைகள் எனப்படும். மார்பினிடத்து அடைக்கலஞ் சுட்டியும் திருவடி சுட்டியும் விளங்குந் திருக்கைகள் பரந்த கைகள் எனப்படும். குவிந்த கைகள் இரண்டிலும் நீர்ப்பூக்களாகிய தாமரையும் குமுதமும் காணப்படும். பரந்த கைகள் இரண்டிலும் விரல்கள் விரிந்து காணப்படுதலால் தளிரின் சாயல்போன்று காணப்படும். கொங்கைகளால் ஏனைத் தாயர் ஆருயிர்கட்கு உடல் வளமாம் உணவு நல்குவர். திருவருள்தாய் உயிர் வளமாம் உணர்வு நல்குவள். அதுவே திருநெறிய தமிழ்பாடும் சிருணர்வாகும். அம்மையின் அருட் கொங்கைகள் அத்தகையன. அஃது ஆளுடைய பிள்ளையார்க்கருளிய திருமுலைப்பாலின் சிறப்பால் உணரலாம். அக்கொங்கைகள் முத்தணியும், பவழவண்ணமும், அகத்தமை மணியும், தன் கண்ணே மறைக்கும் கச்சுப்பூணுதலும் உடையன. 'உடுப்பார்தம் கண்மறைக்கும் உள்ளுடை காண் பார்கண், தடுக்குமால் மேலாடை சார்ந்து' என்பதனே நினைவு கூர்க.

(அ. சி.) பரந்த கரம் - அபயகரம். (இஅ)

**1352.** மணிமுடி பாதஞ் சிலம்பணி மங்கை
அணிபவ ளன்றி யருளில்லை யாகுந்
தணிபவர் நெஞ்சினுள் தன்னரு ளாகிப்
பணிபவர்க் கன்றே பரகதி யாமே.

(ப. இ.) மாணிக்கம் பதித்த திருமுடியும் சிலம்பணிந்த திருவடியும் உடைய மங்கை செந்நிறப் பொருள்கள் அணிவதன்றிக் கருமைநிறம் வாய்ந்த பொருள்கள் அணிபவளல்லள். பேரன்பு பூண்டு ஒழுகும் மெய்யடியார் நெஞ்சினுள் அருளால் விளங்கித் தோன்றுவள். தொழுது வணங்கும் தொண்டர்க்குத் திருவடிப்பேறு நல்குவள். (இக)

1. 'சிவனடியே. கூ. சம்பந்தர். ஏ0.
,, போதையார். நூ. உ சு-உ.

1353. பரந்திருந் துள்ளே அறுபது சத்தி
கரந்தன கன்னிகள் அப்படி சூழ
மலர்ந்திரு கையின் மலரவை ஏந்தச்
சிறந்தவர் ஏத்துஞ் சிரீம்தன மாமே.[1]

(ப. இ.) சக்கரத்தினுள்ளே பரந்த இடங்களினுள்ளே ஆற்றல்கள் அறுபதும் காணப்படும். ஆற்றல்கள் - சத்திகள். திருவருட் கன்னிகள் எண்மரும் சூழ மறைந்திருப்பர். விரிந்த இருகைகளிலும் தாமரையும் குமுதமும் தாங்குவள். சிறந்த தொண்டர்கள் ஓதும் 'சிரீம்' என்னும் பீத்தெழுத்துத் திருவடிச் செல்வத்தை நல்கும். சத்திகள் - யோகினி கள். கன்னிகள் - வசினியாதி என்பர்.

(அ. சீ.) சிரீம் தனம் - செல்வத்தைக் கொடுக்கும் பீச மந்திரம். (கo)

1354. தனமது வாகிய தையலை நோக்கி
மனமது வோடி மரிக்கிலோ ராண்டிற்
கனமவை யற்றுக் கருதிய நெஞ்சந்
தினகர னரிட செய்திய தாமே.

(ப. இ) திருவருட் செல்வமாகிய அம்மையை மறவா மனத்தான் திருவைந்தெழுத்தோதி நோக்கினால் மன அடக்கம் எளிதாக வந்து வாய்க்கும். அடங்கிய மனத்துடன் ஓராண்டு பயின்றால் ஆசைப் பகுவாகிய பற்று நீங்கித் திருவருளால் எண்ணியவெல்லாம் கைகூடும். சிவச் சுடராம் தினகரனார் திருவடிப்பேறே அவர் விழையும் செய்தி யாகும். தினகரனார் : பகலவனார் ; பகல் - தினம். கரன் - செய்பவன்.

(அ. சீ.) ஓடி மரிக்கில் - அடங்கினால். கனமிவையற்று - ஆசை ஒழிந்து. தினகரன் - சூரியன். (கக)

1355. ஆகின்ற மூலத் தெழுந்த முழுமலர்
போகின்ற பேரொளி யாய மலரதாய்ப்
போகின்ற பூரண மாக நிறைந்தபின்
சேர்கின்ற செந்தழல் மண்டல மானதே.

(ப. இ.) மூலத்திடத்துத் தோன்றும் பெரிய தாமரைமலர், திருவருளாற்றலாகிய அம்மை வீற்றிருந்தருள வாய்ந்த நறுமலர். அம் மலரின்கண் ஆருயிர்புரியும் அன்பிற்குத் தக்கவாறு திருவருள் பெருகும். பெருகியபின் செந்தழல் மண்டலமாம் சிவத்தின் திருவடியைச் சேர்ப்பிக்கும். (கஉ)

1356. ஆகின்ற மண்டலத் துள்ளே அமர்ந்தவள்
ஆகின்ற ஐம்பத் தறுவகை யானவள்
ஆகின்ற ஐம்பத் தறுசத்தி நேர்தரு
ஆகின்ற ஐம்பத் தறுவகை சூழவே.

---

1. உண்ணுமுலை. சம்பந்தர், க. கo-க.
,, போதையார். ,, கூ, உசு உ.

(ப. இ.) மேற்கூறிய சிவச்சுடர் மண்டலத்துள்ளே விரும்பி உறை பவள் திருவருளம்மை. உயிரும் மெய்யுமாம் ஐம்பத்தோரெழுத்தும் வித்தெழுத்தைந்தும் ஆகிய ஐம்பத்தாறு எழுத்துக்களையும் இயக்கும் ஆணையளும் அவளே. அவற்றை இயக்க ஐம்பத்தாறு ஆற்றலளாயும் நிற்பவளும் அவளே. ஐம்பத்தாறு எழுத்துக்களையும் இயக்கும் ஐம்பத் தாறு இயக்கிகள் சூழ நடுவில் வீற்றிருப்பவளும் அவளே. இயக்கிகள் - அதிதேவதைகள். ஆற்றலள் - சத்தி.

(அ. சி.) ஐம்பத்து அறுவகை - அக்கரங்கள் 51-பீசம் 5-ஆக 56. ஐம்பத்து அறுவகை சூழ - 56 அக்கரதேவதைகள் சூழ. (கூட)

1357. சூழ்ந்தெழு சோதி சுடர்முடி பாதமாய்
ஆங்கணி முத்தம் அழகிய மேனியுந்
தாங்கிய கையவை தார்கிளி ஞானமாய்
ஏந்து கரங்கள் எடுத்தமர் பாசமே.

(ப. இ.) திருவருளம்மையை அருட்கண்ணுல் நோக்குவார்க்கு அவ் வம்மை முடிதொட்டு அடிகாறும் இயற்கைப் போரொளிப்பிழம்பாய்த் தோன்றுவள். அவள்தம் அழகிய திருமேனியும் பெருமுத்துப் போன்ற வெண்ணிறமாக இருக்கும். அம்மையின் திருக்கைகள் நான்கில் ஒன்றில் மெய்யுணர்வு அடையாளமும், மற்றொன்றில் புகல்தரு அடையாளமும், ஒன்றில் பளிங்கு மணியும், பிறிது ஒன்றில் பசுங்கிளியும் காணப்பெறும். மெய்யுணர்வு அடையாளம் - சின்முத்திரை. புகல்தரு அடையாளம் - திருவடி சுட்டுதல். இங்ஙனம் திருக்கைகள் தாங்கி நிற்றல் பேரருளாலே யாம். மாபாசம் - பேரருள்.

(அ. சி.) தாங்கிய கை - அன்பரை ஆதரிக்கும் அபயகரம். தார் - படிகமாலை. ஞானம் - சின்முத்திரை. (கச)

1358. பாசம தாகிய வேரை யறுத்திட்டு
நேசம தாக நினைத்திரும் உம்முளே
நாசம தெல்லாம் நடந்திடும் ஐயாண்டிற்
காசினி மேலமர் கண்ணுத லாகுமே.

(ப. இ.) அம்மையின் திருவருளால் பாசமாகிய பற்றுக்களனைத்தை யும் அறுத்திட்டுப் பேரன்பால் திருவடியை இடையருது நெஞ்சுளே நினைந்திரும். இப் பயிற்சி ஐந்தாண்டு நிறைவதன்முன் தீமைகளனைத் தும் தாமே அகன்றொழியும். நிலவுலகில் கண்ணுதல் திருவருள் கைவரப் பெற்று மெய்யடியாராகத் திகழ்வீர். (கஇ)

1359. கண்ணுடை நாயகி தன்னரு ளாம்வழி
பண்ணுறு நாதம் பகையற நின்றிடில்
விண்ணமர் சோதி விளங்க ஹ்ரீங்கார
மண்ணுடை நாயகி மண்டல மாகுமே.

(ப. இ.) வனப்பாற்றலாகிய கண்ணுடைய முதல்வியின் திருவருளால் பண்ணெடு பொருந்திய நாதமாகிய முதல் ஒலி ஆருயிர்க்குச் சிறப்புறுவதன் பொருட்டு உறவாக நிற்கும். நின்றபொழுது திருவருள் வெளியில் வீற்றிருக்கும் சிவன் விளங்கித் தோன்றுவன். ஹரீங்கார வித்தெழுத்துக்குரிய நடப்பாற்றலாகிய மண்ணுடை முதல்வி விழுச்சுடர்ச் சிவமண்டலத்தில் விளங்குவள். வனப்பாற்றல் பராசத்தி. நடப்பாற்றல் திரோதான சத்தி; ஆதிசத்தி; 'மறைத்துக் கொடுநிற்பது'. (கூ)

1360. மண்டலத் துள்ளே மலர்ந்தெழு தீபத்தைக்
கண்டகத் துள்ளே கருதி யிருந்திடும்
விண்டகத் துள்ளே விளங்கி வருதலால்
தண்டகத் துள்ளவை தாங்கலு மாமே.

(ப. இ.) நவாக்கரி சக்கரமாகிய ஒளிமண்டலத்துள் மிக்கு எழுகின்ற விழுச்சுடராகிய அம்மையை அருளால் கண்டு நெஞ்சுள்ளே இடையறுது நினைமின். அவ்வம்மையின் திருவருளால், களங்கமொழியும். மாசகற்றி அம்மை விளங்கிவருதலால், நடுநாடியினுள் அம்மையுடன் ஆருயிரும் விளங்கித் தோன்றும். (ஆடியைக் காணக்கண் தன்னுணரும் ஆவியருட் கூடியுண ருந்தலீயுங் கூறு.)

(அ. சி.) மண்டலத்துள்ளே - நவாக்கரி சக்கரத்துள்ளே. (கூன)

1361 தாங்கிய நாபித் தடமலர் மண்டலத்
தோங்கி எழுங்கலைக் குள்ளுணர் வானவள்
ஏங்க வரும்பிறப் பெண்ணி யறுத்திட
வாங்கிய நாதம் வலியுட னூகுமே.[1]

(ப. இ.) ஓசைக்கு இடனுகவுள்ள கொப்பூழின்கண் காணப்பெறும் தாமரைமலர் மண்டலத்து விளங்கும் கலைகளுக்கு முதலாம் ஓசைமெய்க்குள் உணர்வாய்த் திகழ்பவள் அம்மை. ஆருயிர்களே வருந்தும்படி செய்யும் பிறப்பினை எவ்வாறு அறுப்பதென்று கருதி அறுத்திடத் தோன்றும் நாதம் அருளால் மேலும் மேலும் உரத்ததாய் ஒலிக்கும். ஓசைமெய் - நாததத்துவம்.

(அ. சி.) • நாபித் தடமலர் மண்டலம் - மணி பூரகம். ஏங்க • வருத்தம் உற. (கூஅ)

1362. நாவுக்கு நாயகி நன்மணி பூணரம்
பூவுக்கு நாயகி பொன்முடி யாடையாம்
பாவுக்கு நாயகி பாலொத்த வண்ணத்தள்
ஆவுக்கு நாயகி அங்கமார்ந் தாளே.

(ப. இ.) நாவினுக்கு அருங்கலம் 'நமசிவய' ஆகலின் இதன்கண் குறிக்கப்படும் நடப்பாற்றல் நாவுக்கு முதல்வியாவள். அவள் அணிவது மணி அணியாகும். அவளே செல்வத்திற்கு முதல்வியாவள். பொன்

1- மூவகை. சிவஞானசித்தியார், க க. உசு.

முடியும் பொன்னுடையும் உடையவளும் அவளே. கல்விக்கு முதல்வி, பால்போலும் (1043) வெண்ணிறத்தள். ஆருயிர்க்கு முதல்வி, பேரறிவுப் பேராற்றலம்மை. இந்நிலைகளும் அவளே. பூவென்பதைப் பரவெளியில் காணப்படும் ஆயிர இதழ்ததாமரை எனவும் கூறுவர்.

(அ. சி. நாவுக்கு நாயகி - வாகீச்சுரி. பூவுக்கு நாயகி - இலக்குமி. பாவுக்கு நாயகி - வாணி. ஆவுக்கு நாயகி - மனோன்மனி. (அக)

1363. அன்றிரு கையில் அளந்த போருள்முறை
இன்றிரு கையில் எடுத்தவெண் குண்டிகை,
மன்றது காணும் வழியது வாகவே
கண்டங் கிருந்தவர் காரணி காணுமே.

(ப. இ.) திருவருளம்மை தொன்மையின்கண் முப்பொருளுண்மை தேற்றும் வலது திருக்கையில் மெய்யுணாவடையாளமும், இத் திருக்கையை ஒத்த இடது பக்கத்துத் திருக்கையில் சிவஞானபோதச் சுவடியும், மற்றோர் வலது கையில் பளிங்கு மணியும், அதனியைத்த இடது கையில் சிரகமாகிய கெண்டியும் அமைந்த திருக்கோலத்தள். இத் திருக்கோல வழிபாட்டின் வாயிலாகத் திருச்சிற்றம்பலமாகிய பேரறிவு வெளி காணப்பெறும். அது கண்டவர் திருவடியின்பம் துய்ப்பர். இவற்றிற் கெல்லாம் காரணகாரணியாக இருப்பவள் திருவருளம்மையே.

(அ. சி.) அன்று - சிருட்டி ஆரம்பத்தில். இருகையில் - சின் முத்திரையைக் காட்டும கையினுலும், சுவடி ஏந்திய மற்றொரு கையினுலும். அளந்த பொருணமுறை - அளவு படுத்திய ஞானப் பொருள். வெண் குண்டிகை - வெள்ளிய கமண்டலமும், படிக மாலையும். (எ0)

1364. காரணி சத்திகள் ஐம்பத் திரண்டெனக்
காரணி கன்னிகள் ஐம்பத் திருவராய்க்
காரணி சகசுரத் துள்ளே கரந்தெங்குங்
காரணி தன்னரு ளாகிநின் ருளே.

(ப. இ.) எல்லாவற்றிற்கும் காரணமாக இருப்பன எழுத்துக்களே. அவற்றிற்குரிய தெய்வங்கள் ஐம்பத்திரண்டு. அத்தெய்வங்களே இயக்கும் திருவருட கன்னியும் ஐம்பத்திருவராவர். இக் கன்னியும் நவாக்கரி சக்கரத்து மறைந்து நின்றருள்வள். எழுத்து ஐம்பதொன்று, நவாக்கரி சக்கரம் ஒன்று ஆக ஐம்பத்திரண்டுக்கும் தெய்வமும் கன்னியரும் இவர்கள் ஐம்பத்திருவராவர்.

(அ. சி.) சத்திகள் ஐம்பத்திரண்டு - அக்கர சத்திகள் 51-ம், நவாக்கரி சக்கர சத்தி 1-ம் ஆக 52. (எக)

1365. நின்றஇச் சத்தி நிலைபெற நின்றிடிற்
கண்டஇவ் வன்னி கலந்திடும் ஓராண்டிற்
கொண்ட விரதநீர் குன்ருமல் நினைடின்
மன்றினி லாடு மணியது காணுமே.

(ப. இ.) நவாக்கரி சக்கரத்து நிலேபெறும் திருவருள் ஒளி ஓராண்டுப் பயிற்சியில் உயிருடன் கலக்கும். அம்மை வழிபாடாகிய நோன்பினே மூட்டின்றிச் செய்துவந்தால் திருச்சிற்றம்பலத்தாடும் சிவபெருமானின் திருச்சிலம்பொலி கேட்கும். அது மணியொலி முதல் பத்துவகையாகக் (586) கூறப்படும். ஈண்டு மணி யொலியே கேட்கப்படும் என்றலும் ஒன்று. திருவருள் ஒளியிற் கலத்தலாற் பூதத் தீயினே வெல்லுவர்.[1] (எஉ)

1366. கண்டஇச் சத்தி இருதய பங்கயங்
கொண்டஇத் தத்துவ நாயகி யானவள்
பண்டையவ் வாயுப் பகையை யறுத்திட
இன்றென் மனத்துள் இனிதிருந் தாளே.

(ப. இ.) திருவருளம்மை நான்காம் நிலேயாகிய நெஞ்சத் தாமரையின்கண் வீற்றிருந்தருள்வள். அங்ஙனம் வீற்றிருந்தருளப்பட்டவர் அவள்தம் அருள்துணேயால் நான்காம் பூதமாகிய காற்றினே வெல்லுவர். அம்மை உள்ளத்தின்கண் உயிர்க்குயிராய் இனிதிருந்தனள்.

(அ. சி.) கண்ட இச் சத்தி - மணிபூரகத்தில் காணப்பட்ட இந்தச் சத்தி. வாயுப்பகையை அறுத்திட-பிராணுயாமம் கைகூட்டினுல். (எங)

1367. இருந்தவிச் சத்தி இருநாலு கையிற்
பரந்தஇப் பூங்கிளி பாச மழுவாள்
கரந்திடு கேடகம் வில்லம்பு கோண்டங்
குரந்தங் கிருந்தவள் கூத்துகந் தாளே[2]

(ப. இ.) திருவருள் அம்மை எட்டுத் திருக்கைகளுடன் திகழ்வள். ஆறு திருக்கைகளிலும் அறுபகை செறும் ஆறுபடைக்கலங்கள் தாங்குவள். அவை முறையே கயிறு, மழு வாள். வாள்விலக்கி. வில், அம்பு என்பன. வாள்விலக்கி - கேடகம். மற்றைய இரண்டு திருக்கைகளுள் ஒன்று அஞ்சலி அடையாளம். மற்றொன்று புகலருள் அடையாளம். அஞ்சலென்றமைப்பது சொல்லாதலின் அத் திருக்கையின் அகத்தே சொல்லுறுப்பாம் கிளியும் அமைக்கப்பெறும். ஆர்வ மேலீட்டால் ஆரவாரித்து ஆருயிர் உய்ய அப்பன் திருக்கூத்துக் கண்டருள்வள். குரந்து-குரைத்து, ஆரவாரித்து. புகல் - வரதம். அஞ்சல் - அபயம்.

(அ. சி.) இருநாலுகை-எட்டுக்கை: பாசம் - மழு - வாள்-கேடகம்-வில் - அம்பு - அபயம் - வரதம். அபயகரத்தில் கிளி. (எச)

1368. உகந்தனள் பொன்முடி முத்தார மாகப்
பரந்த பவளமும் பட்டாடை சாத்தி
மலர்ந்தெழு கொங்கை மணிக்கச் சணிந்து
தழைந்தங் கிருந்தவள் தான்பச்சை யாமே[3]

---

1. வெய்யநீற். கஉ. திருநாவுக்கரசர், கஅ.
2. தோலும். அ. திருக்கோத்தும்பி, கஅ.
3. மின்தொத்திடு. அ. திருக்கோவையார், உசகூ.
,, பச்சை. அப்பர், கூ. கள - எ.

(ப. இ.) திருவருளம்மை பொன்முடியினையும் முத்துமாலையினையும் விழைந்தவள். நிறைந்த பவழமாலையும் செம்பட்டுடையும் பூண்டவள். அண்ணந்து ஏந்திய வனமுலையின்கண் (1351) கச்சுப்பூண்டவள். ஆருயிர் இன்புற்றுய்ய மலர்ந்த திருமுகத்துடன் திகழ்ந்திருந்தனள். அவள் தம் திருமேனி பச்சை நிறமாகும்.

(அ. சி.) பச்சை - பச்சை நிறத்தி. (எடு)

**1369.** பச்சை இவளுக்குப் பாங்கிமார் ஆறெட்டு
கோச்சையார் எண்மர்கள் கூடி வருதலாற்
கச்சணி கொங்கைகள் கையிரு காப்பதாய்
எச்ச விடைச்சி இனிதிருந் தாளே.

(ப. இ.) பச்சைத் திருமேனியுடைய அம்மைக்குச் சூழ இருக்கும் பாங்கிமார் ஆறெட்டாகிய நாற்பத்தெண்மர். அணுக்கமாக இருக்கும் மழலைமொழித் தோழியர் எண்மர். இவர்களோடு கூடித் திருவுலாக் கொள்வள். இவ் விருதிறத்தினரும் இருபுறக் காவலராவர். இந்நிலையில் இனைத்தது போன்று காணப்படும் சிறிய இடையினையுடைய அம்மை இனிது வீற்றிருந்தனள். எச்ச - இனைத்த. இடைச்சி - இடையையுடை யவள். இருகை-இருபுறம், எச்ச : எய்த்தலென்பதன் மரூஉ.

(அ. சி.) பாங்கிமார் ஆறெட்டு - பரிவார சத்திகள் 48. கோச்சை யார் எண்மர் - தோழியர் 8. கையிரு - இருகை ; இருபுறம். எச்ச இடைச்சி - சிற்றிடைச்சி. (எசு)

**1370.** தாளதி னுள்ளே தாங்கிய சோதியைக்
காலது வாகக் கலந்துகொள் என்று
மாலது வாக வழிபாடு செய்துநீ
பாலது போலப் பரந்தெழு விண்ணிலே.

(ப. இ.) திருவருளம்மை தாமரை நாளம் போலும் உச்சித்தொளை யிலே விளங்கிக்கொண்டிருக்கும் திருவருட்சுடரை நடுநாடி உயிர்ப்புடன் கூடிச்சென்று வேறறக் கலந்து கொள்ளென்று அருளினள். திருவருள் அம்மையினிடத்துப் பேரன்பு பூண்டு வழிபாடு செய்வாயாக. கள்ளமில் உள்ளத்தால் அவ் வுள்ளம் பால்போலாகி, வெளியாகிய புருவ நடுவின் கண் அவ் வெளியுடன் நிறைந்திருப்பாயாக.

(அ. சி.) தாள் - பிரமரந்திரம். கால்-பிராணவாயு. மால் - விருப் பம். பாலதுபோல - களங்கம்அற்று. விண் - புருவமத்தி. (எஎ)

**1371.** விண்ணமர் நாபி இருதய மாங்கிடைக்
கண்ணமர் கூபங் கலந்து வருதலாற்
பண்ணமர்ந் தாதித்த மண்டல மானது
தண்ணமர் கூபந் தழைத்தது காணுமே.

(ப. இ.) புருவ நடுவின்கண் மதிமண்டலத்து அமிழ்தம் தங்கி யுள்ளது. அது மந்திர உருவால் மேல்வயிறு நெஞ்சம் இவ் விரண்டற்

கும் மேலிடமாகிய கழுத்தின்கண் வந்து தங்கும். அதனால் அக் கழுத்திடத்தை அமிழ்தக்கிணறு என்று அறைவர். இதனால் உட்பகத்துள்ள ஞாயிற்று மண்டலம் குளிர்ச்சி எய்தும். கூபம் - கிணறு.

(அ. சி.) கூபம் - விசுத்தி. (எழ)

1372. கூபத்துச் சத்தி குளிர்முகம் பத்துள
தாபத்துச் சத்தி தயங்கி வருதலால்
ஆபத்துக் கைகள் அடைந்தன நாலிந்து
பாசம் அறுக்கப் பரந்தன சூலமே.[1]

(ப. இ.) அமிழ்தக் கிணற்றினுள் சத்தி தண்ணளி பொருந்திய பத்துத் திருமுகங்களோடு கூடியவள். அவளால் ஞாயிற்று மண்டிலத்தின் வெப்பம் வேண்டிய அளவாக விளங்குகின்றது. ஆருயிர்கட்கு இடருற்ற பொழுதெல்லாம் அவ்விடரையகற்றி நலமுறுத்தித் திடமுடன் வாழச் செய்யும் திருக்கைகள் இருபதென்ப முத்தலை வேலாகிய சூலம் ஆவிகளது மும்மல அழுக்கை அகற்ற எங்கும் விரிந்து திகழ்கின்றது.

(அ. சி.) தாபத்துச் சத்தி - ஆதித்திய மண்டல சத்தி. (எக்)

1373. சூலந்தண் டோள்வாள் சுடர்பறை ஞானமாய்
வேலம்பு தமருகம் மாகிளி விற்கொண்டு
காலமபூப் பாசம் மழுகத்தி கைகொண்டு
கோலஞ்சேர் சங்கு குவிந்தகை எண்ணதே.

(ப. இ.) குறித்த திருக்கைகள் இருபதன்கண்ணும் கருதத்தக்க சில கருவிகள் ஈண்டுக் கூறப்படுகின்றன. அவை வருமாறு: முத்தலை வேல், கதை, விளக்கமிக்க வாள், சிறந்த பறை, அறிவொளியாய் விளங்கும் வேல், அம்பு, உடுக்கை, ஆத்தகிளி, (1367) வில், நீண்ட காம்பையும் அழகினையுமுடைய தாமரைப்பூ, கயிறு, மழு, கத்தி, அழகுமிக்க சங்கு, திருவடி சுட்டிக் கூட்டுவிக்கும் திருக்கையாகிய குவிகையும் என்க. ஆத்தயாத்த - விட்டு நீங்காத. (அ0)

1374. எண்ணமர் சத்திகள் நாற்பத்து நாலுடன்
எண்ணமர் சத்திகள் நாற்பத்து நால்வராம்
எண்ணிய பூவித மூள்ளே யிருந்தவள்
எண்ணிய எண்ணங் கடந்துநின் றாளே.[2]

(ப. இ.) விரும்பத்தகுந்த நாற்பத்து நான்கு ஆற்றல்கள் தம்மைச் சூழ வீற்றிருக்கும் அருளாற்றலர் நாற்பத்து நால்வராவர். இவர்கள் நடுவுள் கழுத்தாகிய விசுத்தியினிடமாக வீற்றிருந்தருளும் திருவருவம்மை நினைப்பைக் கடந்து நீங்காது நிற்கும் நிலையினளாவள். எண்ணம்-நினைப்பு; சங்கற்பம். சங்கற்பித்தல் - கண்ணுதல். (அக)

1. அருள்பொழியும். கூ. சிறுத்தொண்டர், கூடு.
2. சிவஞ்சத்தி. சிவஞானசித்தியார், உ. ச - டி.

**1375.** கடந்தவள் பொன்முடி மாணிக்கத் தோடு
தொடர்ந்தணி முத்து பவளங்கச் சாகப்
படர்ந்தல்குற் பட்டாடை பாதச் சிலம்பு
மடந்தை சிறியவள் வந்துநின் ருளே.

(ப. இ.) மாற்றம் மனங்கழிய நின்ற மறையவளாகிய திருவரு ளம்மை கருதுவார் கருதும் திருவுரு ஆவள். அது வருமாறு: அழகிய பன்மணி குயின்ற பொன்னூர் நன்முடியினள். மாணிக்கத் திருத்தோடு அணிந்தவள். முதுதினுலும் பவழத்தினுலும் ஆய அணி அணிந்தவள். முத்தும் பவழமும் கரையில் கோத்த கச்சுப்பூண்டவள். படர்ந்த அல்கு லினை உடையவள். அவ்வல்குலின்மேல் பட்டாடை உடுத்தவள். திருவடிக் கண் சிலம்பு பூண்டவள். அளவிறந்த பொறுமையள். என்றும் கன்னியாக இருப்பவள். கருதுவார் கருத்துக்கியைய எழுந்தருளி வந்து அருள் புரிபவள். சிறியவள் - என்றும் கன்னி. (அ2)

**1376.** நின்றஇச் சத்தி நிரந்தர மாகவே
கண்டிடு மேரு வணிமாதி தானைகிப்
பண்டை டைய வானின் பகட்டை யறுத்திட்
டொன்றிய தீபம் உணர்ந்தார்க்குண் டாமே.

(ப. இ.) என்றும் கன்னியாக நின்றருளும் பேரறிவுப் பேராற்றல ளாகிய அம்மை அசத்தவஞ்சேர் உயிர்களுடன் எப்பொழுதும் விளங்கித் தோன்றுவள் அங்ஙனம் தோன்றுதலால் மேரு என்று சொல்லப்படும் புருவ நடுவில் அணிமா முதலாகச் சொல்லப்படுகின்ற எண் வகைச் சித்தி களும் தாமாகவே வந்து கைகூடும். ஆருயிர்களினது தொன்மைப் பிணிப்பாம் மலத்தை அறுத்திடத் துணைபுரியும் திருவடி யுணர்வாம் உள் ளொளி விளக்கம் அருளாலுணர்ந்தவர்களுக்கு உண்டாகும். பகடு-மலம், பிணிப்பு; கட்டு.

(அ. கி.) மேரு - புருவமத்தி. ஆனின்பகடு - ஆன்மாவின் பாசம். தீபம் - ஒளியாகிய சத்தி. (அ2)

**1377.** உண்டோர் அதோமுகம் உத்தம மானது
கண்ட இச் சத்தி சதாசிவ நாயகி
கொண்ட முகமைந்து கூறுங் கரங்களும்
ஒன்றிரண் டாகவே மூன்றுநா லானதே.

(ப. இ.) அருளோன் என்று சொல்லப்படும் சதாசிவக் கடவுளின் கீழ் நோக்கிய திருமுகம் அம்மையின் திருமுகமாகும். அத்திருமுகமே சிறந்ததாகும். அவ்வாற்றல் சேர் அம்மையே சதாசிவ நாயகி ஆவள். இத் திருமுகத்தோடு சேர்ந்து சதாசிவக் கடவுளுக்குத் துணைவியாகிய அம்மைக்கு ஐந்து திருமுகங்கள் உண்டு. ஐந்து திருமுகங்களுக்கும் பத்துத் திருக்கைகள் உண்டு.

(அ. கி.) அதோமுக...நாயகி - அதோ முக சத்தி; சதாசிவ நாயகி யாகும். ஒன்று.....ஆனதே - 1-2-3-4-10. (அ2)

1378. கன்மணி சூலங் கபாலங் கிளியுடன்
பன்மணி நாகம் மழுகத்தி பந்தாகுங்
கன்மணி தாமரைக் கையில் தமருகம்
பொன்மணி பூணரம் பூசனை யானதே.

(ப. இ.) மேல் ஓதிய சதாசிவ நாயகியின் திருக்கைகள் பத்திலும் காணப்படும் பொருள்கள் வருமாறு அழகிய பளிங்குமாலை, முத்தமாலை, மண்டையோடு, பசுங்கிளி பல மணிகளையுடைத்தாகிய பாம்பு, மழுப்படை, கத்தி, பூப்பந்து, மாணிக்கம் போல் விளங்கும் செந்தாமரை, உடுக்கு என்பன. பொன்னாலும் மணியாலும் ஆகிய பல அணிகள் பூண்டவள். இத்தகைய திருவுருவே வழிபாட்டுக்குரிய திருவுருவமாகும். (அஇ)

1379. பூசனைச் சத்திகள் எண்மைவர் சூழவே
நேசவள் கன்னிகள் நாற்பத்து நேரதாயக்
காசினிச் சக்கரத் துள்ளே கலந்தவள்
மாசடை யாமல் மகிழ்ந்திருந் தார்களே.

(ப. இ.) பூசனைக்குரிய திருவருளம்மை கன்னிப் பெண்கள் நாற்பதின்மர் சூழவீற்றிருப்பள். இக் கன்னிப் பெண்களைச் சூழ ஆற்றல்மிக்க நாற்பதின்மர் சூழ்ந்திருப்பர். இவற்றிற்கு நடுவே உலகச் சக்கரம் அமைந்திருக்கும். அச் சக்கரத்துள் வழிபாடு செய்வார்க்குக் குற்றமடையாமல் அம்மை எழுந்தருளியிருப்பள். உலகச் சக்கரம் - காசினிச் சக்கரம்; பூப்பிரத்தான யந்திரம்.

(அ. சீ.) எண்மைவர் - நாற்பதின்மர். கன்னிகள் - பரிவார தெய்வப் பெண்கள். காசினி - பூமியில். (அசு)

1380. தாரத்தி னுள்ளே தயங்கிய சோதியைப்
பாரத்தி னுள்ளே பரந்துள் எழுந்திட
வேரது வொன்றினின் றெண்ணு மனோமயங்
காரது போலக் கலந்தெழு மண்ணிலே.

(ப. இ.) தாரம் என்று சொல்லப்படும் ஓங்காரத்தினுள் சுடரொளி விளங்கும். அச் சுடரொளியைப் பாரமாகிய உயிர்ப்பினுள் நிறைந்து எங்கும் எழும்படி செய்தல்வேண்டும் அதற்கு வேராகிய மூலத்தினின்று எண்ணுதற்குரிய மனவடிவம் விளங்குதல் வேண்டும். அவ்வடிவம் உறக்க நிலையாகிய நெஞ்சத்திடத்து உயிர் நிற்பதுபோல் அம்மை வடிவில் அடங்கிநிற்கும். பாரம் - உயிர்ப்பு - பிராணவாயு.

(அ. சீ) தாரம் - பிரணவம். பாரம் - பிராணவாயு. வேர் - மூலாதாரம். கார் - சுழுத்தி நிலை. (அள)

1381. மண்ணில் எழுந்த அகார உகாரங்கள்
விண்ணில் எழுந்து சிவாய நமவென்று
கண்ணில் எழுந்தது காண்பரி தாமுகில்
கண்ணில் எழுந்தது காட்சி தரவனே.[1]

1. சிந்திப்பார். அப்பர், இ. கள - க.

(ப. இ.) மூலாதாரத்தில் எழுந்த ஓங்காரத்தின் வகையாகிய அகர உகரங்கள் ஓங்காரத்தின் விரியாகிய அருள் வெளிக்கண் தோன்றிய 'சிவயநம' என்று திகழும். அருள்வெளியில் தோன்றி அவ் வருண்மறை உச்சித்தொளியிலும் எழுந்து விளங்கும். அது வேறெங்கும் காண ஒண்ணாதது வாய்வடிவாகக் கண்ணுக்குக் காட்சிதர வந்தது. அங்ஙனம் வந்தது அத் தமிழ் மறையினை உணர்வில் உணர்தற் பொருட்டேயாம். மண் - மூலாதாரம். விண் - அருள்வெளி. கண் - உச்சித்தொளை. காட்சி - கண்ணுக்குப் புலனாதல்.

(அ. சி.) மண்ணில் - மூலாதாரத்தில். விண்ணில் - ஆஞ்ஞையில். கண்ணில் - பிரமரந்திரத்தில். கண்ணில் எழுந்தது - தோன்றியது. (அஅ)

1382. எண்றங் கிருந்த அமுத கலையிடைச்
சென்றங் கிருந்த அமுத பயோதரி
கண்டங் கரமிரு வெள்ளிபோன் மண்ணடை
கொண்டங் கிருந்தது வண்ணம் அமுதே.[1]

(ப. இ.) புருவமத்தியில் காணப்படும் திங்கள்மண்டலத்துள் வீற்றிருந்து தருளும் அம்மை அருளமுத முலையினள். அவளுடைய திருக்கழுத்து வெண்ணிறம். திருக்கை பொன்னிறம். அத் திருக்கையினிடத்து மண்ணாலாகிய சிரகம் விளங்கும். அத் திருவருள் அம்மையின் நிறம் வெண்மை நிறமாகும். சிரகம் - கமண்டலம். அமுதம் - வெண்மை. மண்ணடை - சிரகம்.

(அ. சி.) அமுதபயோதரி - அமுதைச்சுரி. மண்ணடை - மண்ணால் செய்த கமண்டலம். (அக)

1383. அமுதம தாக அழகிய மேனி
படிகம தாகப் பரந்தெழு மூள்ளே
குமுதம தாகக் குளிர்ந்தெழு முத்துக்
கெழுதம தாகிய கேடிலி தானே.

(ப. இ.) திருவருளம்மை அமுதம் போலும் வெண்மை நிறம் பொருந்திய திருமேனியை யுடையவள். கருதுவார் கருத்தினுள் பளிங்கு போன்று வெண்நிறமாகத் தோற்றமருள்வள். குமுதம் போன்ற குளிர்ந்த பருத்த முத்துமாலை அணிந்தவள். என்றும் ஒன்றுபோல் நின்று நிலைப்பவள். அதனால் கேடிலாதவள் என்று அழைக்கப்படுவள். குமுதம் - வெள்ளாம்பல். கெழுதம்: கெழுமுதம் - பொருந்திய: இடைக்குறை. கேடிலி - அழிவிலாதவள்.

(அ. சி.) படிகம் - பளிங்கு நிறம். குமுதம் - அல்லி. (கo)

1384. கேடிலி சத்திகள் முப்பத் தறுவரும்
நாடிலி கன்னிகள் நாலொன் பதின்மரும்
பூவிலி பூவிதழ் உள்ளே யிருந்திவர்
நாளிலி தன்னை நணுகிநின் றூர்களே.

---

1. சுடர்த்தொடீஇ. கலித்தொகை, நிக.
,, சென்னியால். கஉ. திருநீல. உச.

(ப. இ.) காலவரையறையைக் கடந்த நாளிலியாகிய அம்மையின் திருவடியிணையைப் பொருந்தி நின்றவர்கட்கு அவ் வம்மை அழிவில்லாத வள் என்றும், முப்பத்தாறு சத்திகளையுடைய நாடற்கரிய முப்பத்தாறு கன்னிப்பெண்கள் தன்னைச் சூழ வீற்றிருப்பவளென்றும், பிறப்பில்லாதவ ளென்றும், இறப்பில்லாதவளென்றும், நெஞ்சத்தாமரையாகிய பூவிதழி னுள் இருந்து விளங்குகின்றவளென்றும் அருளால் உணரவரும். நாடிலி - நாடற்கரிய. பூவிலி - பிறப்பில்லாதவள் பூ - பிறப்பு. இவர் - விளங்குகின்ற. நணுகல் - பொருந்தல்.

(அ. சி.) பூவிலி - தோற்றம் இல்லாதவள். (கூச)

1385. நின்றது புந்தி நிறைந்திடும் வன்னியுங்
கண்டது சோதி கருத்துள் இருந்திடக்
கொண்டது வோராணடு கூடி வருகைக்கு
விண்டவொள காரம் விளங்கின அன்றே.

(ப. இ.) நெஞ்சத் தாமரையின்கண் எஞ்சாது விளங்கும் சிவபெரு மானும் மேலே கூறிய திருவருளம்மையைச் சுடருருவாய் அன்பர்களுள்ளத்து அமைத்திடலால் அவர்கட்கு ஓராண்டில் கைகூடி அருள்வன். அக்காலத்து ஒளகாரம் முதலிய வித்தெழுத்துக்கள் விளங்கும் என்க. புந்தி - நெஞ்சம். வன்னி சிவன் சோதி - திருவருட்சுடர்.

(அ. சி.) புந்தி...வன்னி - அனுகதத்தில் விளங்கும் உருத்திரன். கூடி வருகை - சித்தியாதல். விண்ட - மேலே சொன்ன. (கூஉ)

1386 விளங்கிடு வானிடை நின்றவை யெல்லாம்
வணங்கிடு மண்டலம் மன்னுயி ராக
நலங்கிளர் நன்மைகள் நாரண னெத்துச்
சுணங்கிடை நின்றிவை சொல்லலு மாமே.

(ப. இ.) வானத்திலுள்ள அண்டகோடிகளில் வாழும் உயிரினங்கள் அனைத்தையும் நிலவுலகில் வாழும் உயிரினங்களைப்போன்று கண்டுகூறு தலும் உண்டாகும்; தூயமாயையின்கண் வாழும் கீழுள்ள திருமாலே இயக்கும் அருளாற்றல்வாய்ந்த மாலாகிய நாரணனைப் போன்று இடைய றாது நெஞ்சுத்தாமரையில சிவனே நினையும் திருவருளுடையார்க்கு. சுணங்கு - பூந்தூள் : நெஞ்சத்தாமரை (ஆகுபெயர்.)

(அ. சி.) வானிடை...எல்லாம் - வானிலுள்ள ஏனைய அண்டங் களின் உயிர்கள் எல்லாம் மண்டலம் - பூமி. (கூசு)

1387. ஆமே அதோமுக மேலே அமுதமாய்த்
தாமே யுகாரந் தழைத்தெழுஞ் சோமனுங்
காமேல் வருகின்ற கற்பக மானது
பூமேல் வருகின்ற பொற்கோடி யானதே.

(ப. இ.) கீழ்நோக்கியுள்ள திங்கள் மண்டிலத்தின்மேல் அமிழ்தமய மாய்த் தோன்றும் எழுத்து உகரமாகும். அதன்கண் திங்களும் செழித்து

விளங்கும். முற்கூறிய கடம்பவனத்தில் எழுந்தருளியுள்ள திருவருளம்மை நெஞ்சத் தாமரையில் எழுந்தருளும் அழகிய கொடிபோலும் அம்மையாகும். கா - சோலை ; கடம்பவனம் (கூச)

1388. போற்கோடி யாளுடைப் பூசனை செய்திட
அக்களி யாகிய ஆங்காரம் போயிடும்
மற்கட மாகிய மண்டலந் தன்னுளே
பிற்கோடி யாகிய பேதையைக் காணுமே.

(மு. இ.) திருவருள் அம்மையின் வழிபாட்டினை முறைப்படி செய்திடப் பிறப்புக்கு வித்தாய்ப் பெருமயக்கம் தரும் ஆங்காரமாகிய ஆணவம் அகன்றிடும். நிலைபெற்ற பெருவெளியாகிய பேரொடுக்க நிலைக்களத்தின் கண் 'சிவசிவ' என்னும் தமிழ் நான்மறையில் பிற்கொடியாகச் சிகரித்துக்குப்பின் தோன்றும் வகரமாகிய வனப்பாற்றலாம் அருளம்மை வந்து தோன்றுவள். மற்கடம் : மன்கடம் நிலைபெற்ற பெருவெளி.

(அ. சி.) அக்களி - மயக்கம் கொடுக்கின்ற ; மற்கடம் - கடம் மன்னும். (கஇ)

1389. பேதை யிவளுக்குப் பெண்மை அழகாகுந்
தாதை யிவளுக்குத் தாணுவு மாய்நிற்கும்
மாதை யிவளுக்கு மண்ணுந் திலகமாய்க்
கோதையர் சூழக் குவிந்திடங் காணுமே.[1]

(மு. இ.) பேரிரக்கம் வாய்ந்த திருவருளம்மையாகிய இவளுக்கு அணைத்துயிரையும் பேணும் பெண்மை நிறைந்த அழகாகும். இவ்வம்மைக்குச் சிவபெருமான் தாங்குந்தூணனைய தந்தையாகும். பெண்ணரசியாகிய இவளுக்கு அழகுறுத்தும் பொட்டுப் போன்று சூழக் கன்னிப் பெண்கள் பலர் சூழ்ந்திருப்பர். அவ்விடமே அம்மை கூடியிருக்கும் அருளிடமாகும். மாதை : மாது + ஐ - பெண்ணரசி. தாணு - தூண். மண்ணுதல் - அழகுறுத்தல். கோதையர் - கன்னியர். குவிந்திடம் - கூடியிருக்குமிடம். ஐ - அரசி. பெண்மை : அறுகுணங்களுள் முதலது.

(அ. சி.) பெண்மை - பெண்தன்மை. மாது ஐ - பெண்களுக்குத் தேவி. மண்ணும் - அலங்கரிக்கின்ற. (கக)

1390 குவிந்தனர் சத்திகள் முப்பத் திருவர்
நடந்தனர் கன்னிகள் நாலெண்மர் சூழப்
பரந்தித ழாகிய பங்கயத்துள்ளே
இருந்தனள் காணும் இடம்பல கொண்டே.

(மு. இ.) கூடியிருக்கும் ஆற்றற் செல்விகள் முப்பத்திருவர். இவர் கட்கு அகமாகச் சூழ்ந்துவரும் கன்னிப் பெண்கள் முப்பத்திருவராவர்.

1. விற்றாணை. அப்பர், சு. அ - க.
,, ,ஐயபொட்டிட்ட. கு. கருவூர். சு - ச.

இவர்களனைவரும் சூழ்ந்துவர இடப்பால் திகழும் விரிந்த இதழ்களையுடைய நெஞ்சத் தாமரையின்கண் வீற்றிருந்தருளும் அம்மை மூலமுதலாகிய ஆறு நிலைக்களங்களையும் கொண்டு தோன்றியருள்வள். (கஎ)

**1391.** கொண்டங் கிருந்தனர் கூத்தன் ஒளியினைக்
கண்டங் கிருந்தனர் காரணத் துள்ளது
பண்டை மறைகள் பரந்தெங்குந் தேடுமால்
இன்றென் மனத்துளே இல்லடைந் தாளுமே.[1]

(ப. இ.) கூத்தனர் ஒளியினைக்கொண்டு அங்கு எழுந்தருளியிருக்கும் திருவருளம்மையை அகத்தவமுடையோர் கண்டிருந்தனர். கூத்தனரும் திருவருளம்மையாகிய சிவகாமியாரும் கலந்த கலப்பால் உலகுடல் பொருள்களெல்லாம் காரியப்பட்டுத் தோற்றுகின்றன. தொன்மைச் செந்தமிழ்த் திரு நான்மறைகளெல்லாம் அம்மையின் அடியினையை எங்கணும் தேடுகின்றன. அத்தகைய அம்மை என் உள்ளத்தைக் குடியிருப்பாகக்கொண்டு என்னை ஆண்டருளினள் என்க.

(அ. சி.) காரணத்துள்ளது - எவற்றிற்கும் காரணமாயுள்ளது. இல்லடைந்தாளுமே - குடியாகக்கொண்டு என்னை ஆளும். (கஅ)

**1392.** இல்லடைந் தானுக்கும் இல்லாத தொன்றில்லை
இல்லடைந் தானுக் கிரப்பது தானில்லை
இல்லடைந் தானுக் கிமையவர் தாமோவ்வார்
இல்லடைந் தானுக்கு இல்லாதில் லானையே.[2]

(ப. இ.) என்றும் நிலைத்த மாறுத இல்லாகிய திருவருளம்மையின் திருவடியைப் பெற்றவர் இல்லடைந்தவராவர். அத்தகைய திருவடியில்லடைந்தார் யாண்டும் எவரிடத்தும் ஒன்றினையும் இரவார். அத்தகையோர்க்கு விண்ணுட்டில் வாழும் விண்ணப்பயன்சேர் இமையவரும் ஒப்பாகார்; தாழ்ந்தவரேயாவர். அவர்கட்குக் கிடைத்தற்கரிய பொருள் என்று ஏதும் இல்லை. அதற்குக் காரணம், அவர்கள் புகலிடமாக ஆருயிர்க்குத் தலைவனும் சிவபெருமானையே கொண்டிருத்தலான் என்க. ஈற்றடியில் இல்லாதில்லானையே என்பதை: ஆன் + ஐ = புகல் புகும் ஆனகிய உயிர்கட்கு ஐயாகிய தலைவன் சிவபெருமானவன். இல்லாதில் - அதனால் இல்லாத பொருள் ஏதும் இல்லை

(அ. சி.) ஆன் ஐ - விடையை வாகனமாக உடைய சிவன். (கக)

**1393.** ஆனை மயக்கும் அறுபத்து நாற்றறி
ஆனை யிருக்கும் அறுபத்து நாலாளி
ஆனை யிருக்கும் அறுபத்து நாலறை
ஆனையுங் கோடும் அறுபத்து நாலிலே.

---

1. பண்டைமறை. சிவஞானசித்தியார். மெய் கண்டார் வாழ்த்து.
2. நானவனென். சிவஞானபோதம், கo. க - க.

(ப. இ.) ஆன் ஆகிய உயிருடன் கலக்கும் உச்சித்தொளைக்கு மேல் சொல்லப்படும் அருளாணையாகிய நிலைக்களத்தினின்றும் மேலுக்கி எழுந்து விரியும் கதிர்கள் அறுபத்துநான்கு. ஓமொழி உருவாகும் சிவபெருமான் ஆனை எனப்படுவன். ஆன் + ஐ = உயிர்கள் தலைவன். அவன் அவ்வொளிகட்கு உள்ளொளியாக விளங்குவன். அச் சிவபெருமான் அவ்வொளிக் கதிர்களாகிய அறையில் வீற்றிருந்தருள்வன். சிவபெருமானும் மூலமுதலா எழுந்து அப்பால் வரையும் செல்லும் திருவருளாற்றலாகிய ஒலிக் கலையும் அவ்வொலிக் கதிர்களுடு தோன்றியருளும்.

ஒன்று முதல் நான்கு தந்திரங்களும் முறையே ஒருபுடையொப்பாக 'அறம் பொருள் இன்பம் வீடு' என்னும் நாற்பொருள்களும் ஈதுவனவாகும். நாற்பொருள்களே ஆலமர் செல்வன் அருளியதாகும். அவ்வுண்மை வரும் ஆளுடைய பிள்ளையார் அருளிய தென்றமிழ்த்திருமாமறையான் உணர்க:

''சுழிந்தகங்கை தோய்ந்ததிங்கள் தொல்லராநல் லிதழி
சழிந்தசென்னிச் சைவவேடந் தாளிணைத்தைம் புலனும்
அழிந்தசிந்தை அந்தணாளர்க் கறம்பொருளின் பம்வீடு
மொழிந்தவாயான் முக்கணெந்தி மேயதுமு துகுன்றே.''

—க. நிகூ - சு

சழிந்த - கங்கை முதலிய நாற்பொருளும் பொறுத்தமையால் சப்பளித்த. அழிந்த - செம்மை வாய்ந்த.

தமிழ் நான்மறைகள் தொன்றுதொட்டே நம் தமிழகத்துப் பயின்று வந்த வாய்மை திருமறைக்காடு, திருஒத்தூர் என்னும் தூயதமிழ்த் திருப்பெயர்களான் உணரலாம். தமிழ் நான்மறைகள் அனைவராலும் சிறப்புறப் பயின்று வந்தமையானும், இத்திருவூர்களில் நூலும் நூல் வல்லார்களும் மிக்கிருந்தமையானும், இவ்வூர்கள் முதன்மையாய் அத்திருப்பெயர்கள் எய்துவவாயின. அம் மறைகளிருந்த தடமுந்தெரிய வொண்ணுதபடி அழித்தவர் போர்கொண்ட பார்ப்பார் அச் செந்தமிழ்த் திருமாமறையின் தொடர்பாயெழுந்த திருமுறைகளை அழிக்க மடிதற்று முற்படுவாரும் அவரே. இந் நாற்பொருளும் அறம் என்னும் ஒரு சொல்லால் வழங்கப்படும். மேல்வரும் ஐந்து தந்திரங்களும் பேறு, பேற்று வழி, வழிபாடு, வழிபாட்டுறுதி, மாறுவாழ்வு என்னும் 'சிவயசிவ' மந்திரப்பொருள் ஐந்தினையும் ஒருபுடை யொப்பாக உணர்த்துவனவாகும். இவ் வைம்பொருளும் அருள் என்னும் ஒரு சொல்லால் வழங்கப்பெறும்.

(அ. சி) ஆனை - ஆன்மாவை. ஆனை - பிரணவ சொரூபியான சிவன். கேடு - சத்தி.

(கOO)

நான்காம் தந்திரம் முற்றும்.

# ஐந்தாம் தந்திரம்

[வாதுளாகமம்]

## 1. சுத்த சைவம்

(இயற்கைச் சேந்நெறி)

**1394.** ஊரும் உலகமும் ஒக்கப் படைக்கின்ற
பேரறி வாளன் பெருமை குறித்திடின்
மேருவும் மூவுல காளி யிலங்கெழுந்
தாரணி நால்வகைச் சைவமு மாமே.[1]

(ப. இ.) ஊர் உலகம் உடல் உறுப்பு உண்பொருள் எல்லாம் கருவி யின் றிக் கலந்தியக்கும் கருத்தளவானே படைத்தருள்கின்றவன் சிவன். அவன் இயல்பாக விளங்கும் முற்றுணர்வுடைய பேரறிவாளனவன். அவன்றன் அளவிலாப் பெருமையை நாமறிந்த அளவில் குறிப்போமாஞல் மேருவாகிய பொன்மலையும், மூவுலகையும் ஒருங்கு ஆளும் அவன் (சிவ பெருமான்) படைத்தருளும் உலகமும், சுத்தம், மிகுசுத்தம், மார்க்கம், கடுஞ்சுத்தம் என்னும் நால்வகைச் சைவமும் ஒரு புடை ஒப்பாகச் சொல்லலாம். அசுத்தம் - மிகுசுத்தம். நால்வகைச் சைவமும் சிவ பெருமானின் நின்றே தோன்றுவன. துளக்கமில்லாத சிவபெருமானின் அளத்தற்கரிய பெருமையினுக்குப் பொன்மலையொப்பாகும். எங்கும் நீக்கமற நிறைந்து நிற்கும் இயல்பினுக்கு நிலவுலகம் ஒப்பாகும். தவருது திருவடிப்பேரும் மெய்ப்பயன் தருதற்கு நால்வகைச் சைவம் ஒப்பாகும். சுத்தம்-உண்மை; இயற்கை. நால்வகைச் சைவம் வருமாறு : இயற்கைச் செந்நெறி மீ இயற்கைச் செந்நெறி. மெய்யுணர்வுச் செந்நெறி. மெய் கண்டார் செந்நெறி என்பன இவற்றை முறையே, சுத்த சைவம், அசுத்த சைவம், மார்க்க சைவம், கடுஞ்சுத்த சைவம் எனவும் கூறுப. அசுத்தம் என்பதில் 'அ' அப்பால் என்பதன் முதலெழுத்தாகும் எனலு மொன்று. செந்நெறி எனினும் சிவனெறி எனினும் ஒன்றே.

(அ. சீ.) நால்வகைச் சைவம் - சுத்த சைவம், அசுத்த சைவம், மார்க்க சைவம், கடுஞ்சுத்த சைவம். மேரு - பூமியின் மத்திய இரேகை யும் நிரட்சர ரேகையும் சேரும் இடத்தில் இருந்து கடல் கொண் டொழிந்த மேரு மலை. சுமேரு - வடதுருவம் (North pole.) குமேரு - தென் துருவம் (South pole.) இங்கே நிலைதவருமைக்கு உவமையாக வந்தது. மூவுலகு - பரந்து விரிந்த தன்மைக்கு உவமை. சைவம் - மெய்ப் பயன் தருவதற்கு உவமை. (க)

**1395.** சத்தும் அசத்துஞ் சதசத்துந் தான்கண்டு
சித்தும் அசித்துஞ் சேர்வுறு மேநீத்த
சுத்தம் அசுத்தமுந் தோய்வுறு மேநின்று
நித்தம் பரஞ்சுத்த சைவர்க்கு நேயமே.[2]

---

1. பண்ணின். உ. சண்டேசுரர், கூ.
2. யாவையும். சிவஞானபோதம், எ.
சத்தசத். சிவஞானசித்தியார், எ. கூ-க.

(ப. இ.) நிலைத்த மெய்ப்பொருளாகிய சிவமும், நிலையாத பொய்ப் பொருளாகிய மாயாகாரிய உலகமும் திருவருட் கண்ணுல் கண்டு, தூமாயை தூவாமாயை ஆகிய இரண்டிலும் மயங்குவதாகிய பற்றுக் கொள்ளாதுநின்று சுட்டுணர்வு சிற்றுணர்வாகிய சித்தும் உணர்வில்ல தாகிய அசித்தும் தம்பால் தோன்றுமல் உள்ளம் கடந்த சுத்தமாகிய உண்மைச் சைவர்க்கு என்றும் யாண்டும் உள்ளதாகிய பெரும்பொருள் சிவன். அச் சிவன் அவர்கட்கு இறவாத இன்பவடிவாய் அன்பு செய்யப் படும் பொருளாவன். நேயம் - அன்பு செய்யப்படும் பொருள். சுத்தம் தூமாயை; அசுத்தம் - தூவாமாயை. நீத்தல் - கடத்தல். பரம் - பெரும் பொருள்.

(அ. சி.) சத்து - மெய்ப்பொருள் ஆகிய பதி. அசத்து - மாயை - உடல். சதசத்து - உயிர். சித்து - ஞானம். அசித்து - அஞ்ஞானம். சுத்தம் - சுத்தமாயை. அசுத்தம் - அசுத்த மாயை. நித்தம் - நித்தியம். பரம் - சிவம். (உ)

1396. கற்பன கற்றுக் கலிமன்னு மெய்யோகம்
முற்பத ஞான முறைமுறை நண்ணியே
சொற்பத மேவித் துரிசறறு மேலான
தற்பரங் கண்டுளோர் சைவசித் தாந்தரே.[1]

(ப. இ.) திருமுறை மெய்கண்ட நூல்களாகிய மெய்யுணர்வு நூல் களைத் திருவருள்சேர் நல்லாசான்பால் கற்று, அக் கல்விப் பேற்றுன் எய்தக்கூடிய மெய்ப்பொருட் சேர்க்கையாம் சிவயோகத்துக்கு முன்னிலை சீலம் நோன்பு எனப்படுவன. அவ்விரண்டன் உணர்வும் பயிலப்பயிலக் கைகூடும். அம்முறையால் முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளாகிய சிவத்தைப் பொருந்துவர். அதனுல் மலமாயாகன்மங்களாகிய குற்றம் அறும். குற்றமறலும் தற்பரமாகிய விழுமிய முழுமுதற் சிவனைக் காண்பர். அங்ஙனம் கண்டுளோரே சைவ சித்தாந்தர் எனப்படுவர். தொல்பதம் - பழம்பொருள். தற்பரம் - தானே பெறும் பொருள்.

(அ. சி.) கலிமன்னு மெய்யோகம் - நூல்களில் கண்ட உண்மையான யோகம். முற்பதம் - யோகத்திற்கு முந்திய சரியை, கிரியை. தொற் பதம் - தொல்பதம் ; சமாதி நிலை. (கூ)

1397. வேதாந்தஞ் சுத்தம் விளங்கிய சித்தாந்த
நாதாந்தங் கண்டோர் நடுக்கற்ற காட்சியர்
பூதாந்த போதாந்த மாசப் புனஞ்செய்ய
நாதாந்த பூரணர் ஞானநே யத்தரே.[2]

(ப. இ.) மெய்ப்பொருளை ஐயம் திரிபற விளக்கும் சைவசித்தாந்தமே உண்மை வேதாந்த (2139) மாகும். சித்தாந்தப் பெருநெறி நிற்பாரே, நாதமுடிவாகிய சிவனைக் கண்டு இன்புறுவோராவர் : பிறப்பிறப்பாகிய தடுமாற்றம் இலராவர் ; பூதமுடிவும் அறிவு முடிவும் கைவரத் தத்துவ

1. புறச்சமய. சிவஞானசித்தியார். அ. உ-க.
2. ஃவையொளி. திருக்குறள், உஎ.

மாகிய மெய்க்கூட்டங்களை அடக்குதலாகிய செம்மை நிலையினை எய்துவர்; இவர்களே தத்துவங் கடந்த நிறைபெரும் பொருளைச் சேர்ந்தோராவர். இவர்களே பேரறிவுப்பிழம்பாம் பெரும்பொருட் சிவனை உணர்ந்து உணர்ந்து ஒப்பிலா இன்பமுறும் ஒண்மையராவர். நேயத்தர்-உணரப் படும் பொருளை உணர்ந்தடைந்தவர்.

(அ. சி.) வேதாந்தம்...சித்தாந்தம் - சுத்த சைவ சித்தாந்தமே வேதங்களின் முடிவு. பூதாந்தம் - பூதங்களின் முடிவு. போதாந்தம் - ஞான முடிவு. புனம் செய்ய-ஐம்புலக் காட்டினைப் பண்படுத்த. (ச)

---

# 2. அசுத்த சைவம்

(மீஇயற்கைச் சேருநெறி)

1398. இணையார் திருவடி ஏத்துஞ்சீ ரங்கத்
திணையார் இணைக்குழை யீரணை முத்திரை
குணமா ரிணைக்கண்ட மாலையுங் குன்ற
தணைவாஞ் சரியை கிரியையி னூர்க்கே.[1]

(ப. இ) தமக்குத் தாமே ஒப்பாகிய நூலுணர்வு நுகர்வுணர்வு களாகிய இரண்டு திருவடிகளையும் தொழுந் தன்மையருடம்பு சிறப்புடம் பாகும். அவர்கட்கு இரண்டு குண்டலங்கள் காதணியாகக் காணப் பெறும். திருநீறும், திருவைந்தெழுத்தும், அறிவடையாள அங்கையும், நற்பண்பு வாய்ந்த தலையினும் மார்பினுமாகிய இரண்டு சிவமணி மாலை களும் குறையாது என்றும் பொருந்துவனவாகும். இத்தகையோர் சிலத்தர் நோன்பினர் என்றழைக்கப் பெறுவர். சீரங்கம் - சிறப்புடம்பு.

(அ. சி.) சீரங்கம் - சிறப்புற்ற சரீரம். ஈரணை முத்திரை - விபூதி அணிந்து அஞ்செழுத்தைச் செபித்துச் சின்முத்திரையுடன். குணமார் - நற்குணத்தைக் கொடுக்கின்ற. (க)

1399. காதுப்பொ னூர்ந்த கடுக்கன் இரண்டுசேர்த்
தோதுந் திருமேனி யுட்கட் டிரண்டுடன்
சோதனை செய்து துவாதேச மார்க்கராய்
ஓதி யிருப்பார் ஒருசைவ ராகுமே.[2]

(ப. இ.) பொன்னாலாகிய இரண்டு காதணியும், சிவமணி வட மாகிய உட்கட்டிரண்டும் உடையராய் வழியாறினையும் ஆசானருளால் உண்மை காண்டலாகிய தூய்மை செய்து, ஐந்தெழுத்தருமறை கோட லாகிய உபதேசம்பெற்று அதனை இடையருது ஓதியிருப்பர். அவர் ஒப்பில்லாத சிறந்த சைவராவர். உபதேசத்தைப் பெற்றவர் மெய்கண் டார் என்று அழைக்கப் பெறுவர்.

---

1. பிறப்பொக்கும். திருக்குறள், கூஎஉ.
,. இணையார் திருவடி. அ. பூவல்லி. க.
2. தோலும். அ. திருக்கோத்தும்பி, கஅ.

(அ. சி.) சோதனை செய்து - அத்துவா சோதனை செய்து. இது நிர்வாண தீக்கையில் செய்யக் கூடியது. (உ)

**1400.** கண்டங்கள் ஒன்பதுங் கண்டவர் கண்டனர்
கண்டங்கள் ஒன்பதுங் கண்டாய் அரும்போருள்
கண்டங்கள் ஒன்பதுங் கண்டவர் கண்டமாங்
கண்டங்கள் கண்டோர் கடுஞ்சுத்த சைவரே.[1]

(ட. இ.) நாவலந்தீவு முதலிய நிலவுலகங்கள் ஒன்பது பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவ்வொன்பது கண்டங்களையும் இறையுறை திருப்பதிகளாகக் கண்டு வழிபட்டு வலஞ்செய்து வந்தவர். அங்ஙனம் விளங்கும் சிவபெருமானின் அருவம் நான்கு, உருவம் நான்கு, அருவுருவம் ஒன்று ஆகிய ஒன்பது திருமேனிகளையும் கண்டவராவர். இவர்களே வேறுபட்ட பல அண்டங்களையும் அருட்காட்சியால் கண்டவராவர். இவர்கள் கடுஞ்சுத்த சைவர் என அழைக்கப்படுவர். கடுஞ்சுத்த சைவர்: நிலைபேறுன உண்மைச் சித்தாந்த சைவர். இச் சிறப்பினரையே அசுத்த சைவர் எனக் குறிக்கப் பெற்றுள்ளது. அ: ஈண்டுத் தலைமை அழகு முதலிய சிறப்புப் பொருளுணர்த்தும்.

(அ. சி.) கண்டங்கள் ஒன்பது - இப் பூமி அண்டத்தின் பாகங்கள் ஒன்பது. கண்டு ஆய் - பார்த்து ஆராய்ந்த. (கூ)

**1401.** ஞானி புவியெழு நன்னூ லனைத்துடன்
மோன திசையும் முழுஎண்ணெண் சித்தியும்
ஏன நிலமும் எழுதா மறையீறுங்
கோனெடு தன்னையுங் காணுங் குணத்தனே.

(ப. இ.) திருவடியுணர்வு கைவந்த ஞானியர் ஏழுலகங்களிலும் நிலவும் நல்ல நூற்களுடன் வாய்வாளாநிலையும் எய்துவர்; அறுபத்து நான்கு கலைகளும், அவற்றுள் ஏற்படும் அறுபத்துநான்கு பேறுகளும் பெறுவர். இவ்வுலகம் நீங்கிய ஏன உலகங்களும், உணர்விலுணர்த்தும் எழுதாமறைமுடிவும் காண்பர். யாவர்க்கும் முதல்வனும் சிவபெருமானையும், யாண்டும் அடிமையாம் தன்மைவாய்ந்த தம்மையும் மாசறக் காணும் வாய்மையராவர். மோனதிசை - மவுனநிலை; வாய்வாளாமை. சித்தி - பேறு. வாள் - சொல். வாய்வாளாமை - சொல்லாடாமை. எழுதா மறை: ஓசை; நாதம்.

(ஞ. சி.) புவியெழு நன்னூல் - பூமியின்கண் தோன்றிய நல்ல நூல்கள். மோன திசை - மவுன நிலை. ஏன நிலம் - ஏனைய அண்டங்கள். எழுதா மறை - எழுதப்பட்ட வேதங்கள் (எழுதா - செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம்). கோன் - சிவம். தன்னை - ஆன்மாவை. (ச)

---

1. சிவஞ்சத்தி. சிவஞானசித்தியார், உ. ச, உ.

# 3. மார்க்க சைவம்

(மெய்யுணர்வுச் செந்நெறி)

1402. பொன்னுற் சிவசாத னம்பூதி சாதனம்
நன்மார்க்க சாதனம் மாஞான சாதனங்
துன்மார்க்க சாதனந் தோன்றுத சாதனஞ்
சன்மார்க்க சாதன மாஞ்சுத்த சைவர்க்கே.[1]

(ப. இ.) செம்பொன் அனைய சீலம் நோன்பு செறிவு அறிவு என்னும் நால்வகை நன்னெறியும், திருநீற்றுத்துணையும், ஆகிய இவை நன்னெறியாகிய சித்தாந்தச் செந்நெறி. பிறப்பு இறப்பிற் புகுத்தும் புன்னெறிக்கண் என்றும் பொருந்தாத மனக்கோளும் நன்னெறியின் வழித்துணையாகும். மேற்கூறியனவாகிய செந்நெறி நிற்பாரே உண்மைச் சைவர் என்று அழைக்கப் பெறுவர். சுத்தம் - உண்மை; இயற்கை.

(அ. சி.) பொன்னுற் சிவசாதனம் - பொன்கட்டிய உருத்திராக்க மாலை. நன்மார்க்க சாதனம் - சரியை, கிரியை, யோகம் ஞானம், துன்... சாதனம் - இவை சன்மார்க்கத்திற்கு அடைமொழிகள். (க)

1403. கேடறு ஞானி கிளர்ஞான பூபதி
பாடறு வேதாந்த சித்தாந்த பாகத்தின்
ஊடுறு ஞாலே தயனுண்மை முத்தியோன்
பாடுறு சுத்தசை வப்பத்த நித்தனே.

(ப. இ.) மலம் அற்ற திருவடியுணர்வுசேர் ஞானி மெய்யுணர்வுச் சிறப்பினனுவன். அவனே குற்றமற்ற மறையும்முறையும் எனப்படும் வேதாந்த சித்தாந்தப் பகுதியிலுள்ள சிவசிவ என்னும் உயிர்போல் ஊடுறும் மெய்யுணர்வு கைவந்த தவத்தோனுவன். அவனே அவாவென்னும் பசையற்றேனுகிய உயிர்வாழ் உண்மை வீடுபேற்றினனுவன். அவனே பெருமைமிக்க உண்மைச் சைவக்கோட்பாட்டினனுவன். அவனே என்றும் நிலைபெற்றேனுவன். அவனே மெய்யுணர்வுச் செந்நெறியினனுவன்.

(அ. சி.) பாடு - குற்றம் வேதாந்த சித்தாந்த பாகம் - வேதங்களின் முடியை ஒத்த சித்தாந்தப் பகுதி. தமிழ்ச் சிவஞான போதமே சித்தாந்த சாத்திரங்களில் முதன்மை பெற்றது, ஆகமங்களின் சாரமாயுள்ள அறம், பொருள், இன்பம், வீடு என்னும் தமிழ் நான்மறைகளின் முடிபை ஒத்தது. வடமொழி வேதங்களுக்கு ஆகமங்கள் உடன்பாடு இல்லை; அவ் வேதங்களில் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் பாகுபாடுகளும் இல்லை. இதனை வலியுறுத்தவே 'வேதாந்த சித்தாந்த பாகம்' என்றார் நாயனார். பாடு - பெருமை. (உ)

1. உன்றதவார்ந். அப்பர், இ. சகு - இ.

**1404.** சுத்தம் அசுத்தந் துரியங்கள் ஓரேழுஞ்
சத்தும் அசத்துந் தணந்த பராபரை
உய்த்த பராபரை யுள்ளாம் பராபரை
அத்தன் அருட்சத்தி யாயெங்கு மாமே.

(ப. இ.) அசுத்தமாகிய புலம்பின்கண் நனவு கனவு உறக்கம் என்னும் மூன்றும். சுத்தமாகிய புரிவின்கண் நனவு கனவு என இரண்டும். பேருறக்கம் உயிர்ட்படங்கல் என்னும் இரண்டும் ஆகிய ஏழும். நிலைப்பதாகிய காரணமாயையும் நிலையாததாகிய காரியமாயையும் நீங்கிய பராபரையாகிய திருவருள் ஆருயிரோடு பொருந்தியும் உயிர்க்கு உயிராகியும் நிற்பவளாவள். அவளே அத்தன் அருளாற்றலாகிய அன்னையாவள். அவளே எங்கும் நிறைந்து நின்று எவற்றையும் இயக்குபவளாவள். புலம்பு - கேவலம். புரிவு - சுத்தம். உள் - உயிர்க்குயிர்.

(அ. கீ.) தணந்த - நீங்கின. உள்ளாம் பராபரை - ஆன்மாவுக்கு உள்ளிருந்து நடத்தும் சத்தி. (கூ)

**1405.** சத்தும் அசத்துந் தணந்தவர் தாணுகிச்
சித்தும் அசித்துந் தெரியாச் சிவோகமாய்
முத்தியுள் ஆனந்த சத்தியுள் மூழ்கினர்
சித்தியு மங்கே சிறந்துள தானே.[1]

(ப. இ.) சத்து அசத்துக்களாகிய காரண காரிய மாயைகளை மலமற்றமையால் வேறுபடுத்துணரும் இயல்பு அகன்றவராவர். சிற்றுணர்வும் சுட்டுணர்வும் இல்லாச் சிவனிறைவில் அடங்கிச் சிவனேதானுமே வீடுபேற்றின்கண் இறவாத இன்ப இறைவியுள் அடங்கினவராவர். அவர்க்குப் பெரும்பேறும் சிறந்து விளங்கும். சிவ + அகம் = சிவோகம்; சிவநிறைவில் உறைதல். (ஈ)

**1406.** தன்னைப் பரனைச் சதாசிவன் என்கின்ற
மன்னைப் பதிபசு பாசத்தை மாசற்ற
முன்னைப் பழமல முன்கட்டை வீட்டினை
உன்னத் தகுஞ்சுத்த சைவர் உபாயமே.

(ப. இ.) உண்மைச் சைவர்கள் உள்ளுற நினைத்து மேற்கொண்டு ஒழுகவேண்டிய வழிவகையான பொருள்கள் எட்டு. அவை: ஆருயிர், இயற்கைப் பேரறிவுப் பெரும்பொருள், அருளோனுகிய சதாசிவன், இறை, உயிர், தளை தொன்மையாகிய ஆணவமலம், வீடுபேறு என்பன.

(அ. கீ.) தன்னை - ஆன்மாவை. முன்னை - அநாதியேயுள்ள. முன்கட்டை - அநாதியே ஏற்பட்ட ஆணவக் கட்டை. (ஙி)

---

1. அறிவரியான். சிவஞானசித்தியார், கூ. கூ - க.
, வந்தெனுடல். தாயுமானவர், ஆகார - கஅ.

1407. பூரணந் தன்னிலே வைத்தற்ற வப்போதம்
ஆரண மந்த மதித்தானந் தத்தோடு
நேரென ஈராறு நீதி நெடும்போகங்
காரண மாஞ்சுத்த சைவர்க்குக் காட்சியே.

(ப. இ.) ஆருயிர், நிறைவாம் சிவத்துள் அடங்குதலாகிய மூற்றுணர்வு எய்துதலும் பண்டைத் தன்முனைப்பாகிய சிற்றுணர்வு அறும். அதுவே மறைமுடிவாம் பேரின்பத்துடன் கலந்து, பன்னிரண்டாம் நிலையில் பிறப்படும் சிவ நுகர்வு முறையாக எய்தும் இவையனைத்தும் சுத்த சைவர்க்குக் காட்சியாம். மதித்தல் - மத்தித்தல்: கலத்தல். மத்தித்தல் என்பது மதித்தலென ஆயது இடைக்குறை.

(அ. சி.) அற்ற அப்போதம்-ஒழிந்த அந்த ஆன்மபோதம். ஆரணம் அந்தம் - வேதாந்தம். மதித்த – கலந்த. ஈராறு நீதி - 12 ஆதாரங்களின் முடிவு. (சு)

1408. மாறுத ஞான மதிப்பற மாயோகங்
தேறுத சிந்தையைத் தேற்றிச் சிவமாக்கிப்
பேறுன பாவனை பேணி நெறிநிற்றல்
கூறுகு ஞானி சரிதை குறிக்கிலே.

(ப. இ.) மெய்கண்டார் எல்லையற்ற என்றும் ஒருபடித்தாயிருக்கிற திருவடியுணர்வு கைகூடுதலால் பிறப்புக்கு வித்தாம் பெரிய யோகங்களைப் பொருளாகத் தெளியவொட்டாது தம் உள்ளத்தைத் தெளிவித்துச் சிவனிலையாக்குவர். முழுதுணர்பேறுன சிவனையே நாடுதலாகிய பாவனை பேணி அந்நெறியில் உறைத்துநிற்றல் அறிவிற்சிலம் எனப்படும். ஞானத்திற் சரியையாகும்.

(அ. சி.) மதிப்பு - எல்லை. பாவனை - சிவோகம் பாவனை. கூறுகுஞானி சரியை - ஞானத்தில் சரியை. (எ)

1409. வேதாந்தங் கண்டோர் பிரமமித் தியாதரர்
நாதாந்தங் கண்டோர் நடுக்கற்ற யோகிகள்
வேதாந்த மில்லாத சித்தாந்தங் கண்டுளோர்
சாதா ரணமன்ன சைவர் உபாயமே.

(ப. இ.) உலகியல் ஒழுக்கங்கூறும் மறைமுடிபு கண்டோர் பெரும் பொருளுணர்வு கைவரப் பெற்றோராவர். அருஞ்சைவர் தத்துவம் மூப்பத்தாறன் முடிவினைக் கண்டோர் பிறவித் தடுமாற்றமில்லாத சிவயோகியராவர். உலகியல் கடந்த உணர்நிலையாகிய சித்தாந்தத்தினைக் கண்டோர் பொதுச்சைவர்தம் வழிவகை யுணர்ந்தோராவர்.

(அ. சி.) வித்தியாதரர் - அறிந்தவர். (அ)

**1410.** விண்ணினைச் சென்றணு காவியன் மேகங்கள்
கண்ணினைச் சென்றணு காப்பல காட்சிகள்
எண்ணினைச் சென்றணு காம லெணப்படும்
அண்ணலைச் சென்றணு காபசு பாசமே.[1]

(வ. இ.) வானத்தை இடமாகக்கொண்டு பொழிகின்ற பெரிய மேகங்களும் அவ் வானத்தைப் போய் ஒட்டாது. கண்ணினுற் காணப்படும் பல காட்சிப்பொருள்களும் கண்ணினைச்சென்று பொருந்தா. அவைபோல நாடுதலாகிய பாவனைக்கு அப்பால்பட்டதென்னும் சிவபெருமானுகிய அண்ணலே யான் என்னும் சிற்றறிவும் எனதென்னும் கட்டறிவும் ஆகிய பசுபாசங்கள் சென்றணுகா (159) என்க.

(அ. சி.) வியன் - பரந்த. (கூ)

**1411.** ஒன்றும் இரண்டும் இலதுமாய் ஒன்றுக
நின்று சமய நிராகார நீங்கியே
நின்று பராபரை நேயத்தைப் பாதத்தாற்
சென்று சிவமாதல் சித்தாந்த சித்தியே.[2]

(ப. இ.) 'பொன்னும் பணியும் போல்' பொருள் ஒன்றே என்னும் தன்மையும், 'இருளும் ஒளியும் போல்' வேறு என்னும் தன்மையும் இல்லாமல் 'உடலுயிர் கண் அருக்கன் அறிவொளி போல்' வேறன்மையாகிய டுணர்ப்பாய் நின்று, திருவருளால் அன்பு செய்யப்படும் சிவனைச் சத்திநிபாதமாகிய திருவருள் வீழ்ச்சியால் சென்று சிவமாம் பெருவாழ்வைப் பெறறுப் பேரின்பம் உறுதல் சித்தாந்தப் பெரும்பேறுகும் இவ்வுண்மை வரும் சிவப்பிரகாசச் செந்தமிழாகமத் திருப்பாட்டானுரைலாம்.

"ஒன்றிரண் டாகி யொன்றின் ஒருமையாம் இருமை யாகி
ஒன்றிலொன் றழியும் ஒன்று தென்னினுனென் றுகா தியின்
ஒன்றிரும் புறழி னின்றும் உயரினைந் தொழிலும் வேண்டும்
ஒன்றிநின் றுணரும் உண்மைக் குவமையா னவத்தொ டொன்றே."
—கo. அ.

மேலும் 'கட்டுங்கால் நார்முன்னும் கண்ணிக்கண் பூமுன்னும், ஒட்டிலிறை முன்னுயிர்பின் ஒது' என்னும் ஒப்புங் காண்க.

(அ. சி.) ஒன்று - ஏகான்மவாதம். இரண்டு - துவிதம். ஒன்றுகின்று - சுத்த அத்துவிதமாய். சமய நிராகாரம் - மதநிந்தை. நேயத்தை - சிவத்தை. (கo)

---

1. பாசஞா. சிவஞானசித்தியார், கூ.
,, ஏவ்வுருவும். சிவஞானபோதம், அ
2. புறச்சமயத். சிவப்பிரகாசம், எ.

# 4. கருஞ்சுத்த சைவம்

(மெய்கண்டார் செந்நெறி)

**1412.** வேடங் கடந்து விகிர்தன்றன் பான்மேவி
ஆடம் பரமின்றி ஆசாபா சஞ்செற்றுப்
பாடொன்று பாசம பசுத்துவம் பாழ்படச்
சாடுஞ் சிவபோ தகர்சுத்த சைவரே.

(ப. இ.) செந்நெறிக்குக் கூறப்படும் திருக்கோலங்கள் ஏதும் இல்லாமல், கருத்தாலன்றிக் கருவியால் செய்விக்கும் தன்மையில்லாத முழுமுதற் சிவனைப் பொருந்தி ஆரவாரம் இல்லாமல் 'காமம், வெகுளி, மயக்கம் என்னும் மூன்றன் நாமங்களையும் கெடுத்து, துன்பத்தினை விளைவிக்கும் பசைமலமும் தன்முனைப்பும் அற்றொழியத் திருவடியுணர்வு வந்து தூண்ணயாகும் மெய்யுணர்வினர் சிவபோதகர் எனப்படுவர். இவர்களே உண்மைச்சைவராவர். சாடுதல் - ஒருசார் தூண்யாதல். பசைமலம் - ஆசனு மலம்; நசை.

(அ. சி.) விகிர்தன்-சிவன். ஆசாபாசம்-ஆசை, பாசம். பாடொன்று-அன்பம் பொருந்திய. போதகர் - ஞானிகள். (க)

**1413.** உடலான ஐந்தையும் ஓராறும் ஐந்தும்
மடலான மாமாயை மற்றுள்ள நீவப்
படலான கேவல பாசந் துடைத்துத்
திடமாய்த் தன்னையுறல் சித்தாந்த மார்க்கமே.

(ப. இ.) ஐம்பூதங்களாலான யாக்கையும். ஆறுகோடி மாயாசத்திகள் என்று சொல்லப்படும் செருக்கு. சினம், சிறுமை, இவறல், மாண்பிறந்த மானம், மாணவுவகை ஆகிய இறுவகைக் குற்றங்களும், ஐவகைப் புலன்களும், இவற்றிற்கு நிலைக்களமான காரணமாயையும், ஒழிக்கவேண்டுவனவாய புலம்பிணைச்செய்த பழமலமும் அருளால் துடைத்து உறுதியாகத் தன்னையுணர்ந்து தலைவனை யுறுதல் சித்தாந்த சைவச் செந்நெறிச் சீர்மையாகும். உடலான ஐந்து என்பதற்கு உடலின்கண் காணப்படும் நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம். உயிர்ப்படங்கல் என்னும் நிலை ஐந்தும் எனலுமாம். இதுவே மெய்கண்டார் செந்நெறியாகும்.

(அ. சி.) உடலான ஐந்து-உடலின்கண் ஏற்படும் ஐந்து அவத்தைகளும். ஓர் ஆறும்-காமம் முதலிய ஆறும். ஐந்தும்-ஐம்புலன்களும், அடல் - வலிமை. நீவப்படல் - ஒழிக்கத்தக்க. கேவலபாசம் - சகசமலம்; ஆணவம். தன்னையுறல் - தன்னை அறிதல். (உ)

**1414.** சுத்தச் சிவனுரை தானதில் தோயாமல்
முத்தர் பதப்பொருள் முத்திவித் தாமூலம்
அத்தகை யான்மா அரனை அடைந்தற்றுற்
சுத்த சிவமாவ ரேசுத்த சைவரே.

(ப. இ.) உண்மைச் சிவபெருமான் உரைத்தருளிய தமிழ் ஆகமத்தின்கண் சொல்லப்பெறுகின்ற தூமாயை நிலைக்களங்களாகிய பதம்

பேற்றின்கண் விருப்புற்றுத் தாங்காமல், திருவடிப்பேற்றினர்கள் திருவாய்மலர்ந்தருளிய திருவைந்தெழுத்தே செவியறிவுறூஉவாகிய உபதேசமாகும். அப்மெய்யுணர்வினைப் பெற்ற ஆருயிர் சிவபெருமானின் திருவடிப் பேற்றினைத் தலைக்கூடும். அதனால் அவ்வாருயிர்க்கிழவர் உண்மைச் சிவனுகவே இருப்பர். அவரே சுத்தசைவர் என்றழைக்கப் பெறுவர். சுத்தமெனினும், உண்மை எனினும், இயற்கை எனினும் ஒன்றே. இவரேமெய்கண்டாராவர். உபதேசம் - குருமொழி.

(அ. சி.) சிவன் உரை - சிவனுல் சொல்லப்பட்ட. தானத்தில் - பதமுத்திகளில். முத்தர்-சிவன் முத்தர். பதப்பொருள்-கூறும் பொருள். முத்திவித்தாம் மூலம்-முத்திக்குக் காரணமாகிய மூலம். அடைந்தற்றால்-அடைந்தால். (கூ)

1415. நானென்றுந் தானென்றும் நாடிநான் சாரவே
தானென்று நானென் றிரண்டிலாத் தற்பதந்
தானென்று நானென்ற தத்துவ நல்கலால்
தானென்று நானென்றுஞ் சாற்றகில் லேனே.

(ப. இ.) ஆருயிரானது உலகியல் தன்மையில் பிரியாப் பிரிவாக இருப்பதால் நானென்னும் நினைப்பும் சிவனைத் தான் என்னும் நினைப்புங் கொண்டு எண்ணி வாழும். அவ்வுயிர் மீளா அடிமையாகச் சாரவே தானென்றும் நானென்றும் எண்ணும் எண்ணம் தோன்றுமல் அதற்கு மலரும் மணமும்போலக் கலந்து ஒன்றுய்த் தோன்றும் சிவம் நானென்ற நினைவற்றுத் தானென்று மொழியும் உண்மையினை நல்கும். அப்படி நல்கியருளுதலால் தானென்றே நானென்றே சாற்று மாற்ற மடங்கித் திருவடியின்பத் துய்ப்பாகவே ஆருயிர் நிற்கும். இதற்கு ஒப்பு: கற்கலுற வாராசான் கல்லாரி நூல்தனையும், பொற்பினுடன் நாடுவர் புக்கதற்பின் - சொற் பொருள்நூல், கற்குஞ் செயலன்றிக் கண்ணுர் எவையுமே, அற்புறு பேற்றின்கண் ணும் ஆம் என்பதே. கண்ணுர் - கருதார்.

(அ. சி.) தற்பதம் - தான் ஆகிய பதம். நான் - ஆன்மா. தான்: சிவன். (சு)

1416. சாற்றரி தாகிய தத்துவஞ் சித்தித்தால்
ஆற்றரி தாகிய ஐந்தும் அடங்கிடும்
மேற்றிகழ் ஞானம் விளக்கொளி யாய்நிற்கும்
பாற்பர சாயுச்சிய மாகும் பதியே.

(ம. இ.) சொல்லவொண்ணுத இறைநிறைவில் அடங்குவதாகிய மெய்ம்மை கைகூடினுல் தன்வழி ஈர்க்கும் புலன் ஐந்தும் திருவருளால் ஆருயிரின் வழிச்சென்று அடங்கிடும். அதன்பின் திருவடிப் பேருணர்வாம் விளக்கொளி ஒளிர்ந்து நிற்கும். நிற்கவே தானுதலாகிய பரசாயுச்சியப்பேறு பதியும். பரசாயுச்சியம் - உயர்வற உயர்ந்த ஒரு பெருநலம்.

(அ. சி.) தத்துவம் - தானென்றும் நானென்றும் இரண்டிலாத் தற்பதம், ஐந்து - புலன்கள் ஐந்தும். (எ)

---

1. , நானவனென்ன். சிவஞானபோதம், க0. க - க.

# 5. சரியை

(சீலம்)

1417. உயிர்க்குயி ராய்நிற்றல் ஒண்ஞான பூசை
உயிர்க்கோளி நோக்கல் மகாயோக பூசை
உயிர்ப்பெறு மாவா கனம்புறப் பூசை
செயிற்கடை நேசஞ் சிவபூசை யாமே.[1]

(ப. இ.) சிவபெருமான் அனைத்துயிரினும் உயிர்க்குயிராய் நிற்கும் உண்மையினை அவனருளால் கண்டுணர்தல் சிறந்த அறிவுவழிபாடாகும். அச்சிவன் உள்ளொளியாய் நின்று அறிவை விளக்கும் அவ் வுண்மை காண்டல் செறிவுவழிபாடாகும். புறத்திருவுருவின்கண் உயிர்க்குயிராய் நிற்கும் சிவபெருமானை ஆவாகனம் முதலாகச் சொல்லப்படுகின்ற அழைத்தல். இழைத்தல், குழைத்தலாகிய தொண்டினைத் திருமுறை வழியாகச் செய்யின் அது நோன்புவழிபாடாகிய புறப்பூசையாகும் பூசை முடிவில் - மீட்டும் அச்சிவபெருமானை அகத்தே அமைத்தல் நுழைத்தலெனப்படும். 'அழைத்தல் இழைத்தல்' குழைத்தல் நுழைத்தல், விழைவார் சிவபூசை வித்து 'அழைத்தல் - ஆவாகனம் இழைத்தல் - தாபித்தல். குழைத்தல் - பிராணப் பிரதிட்டை. நுழைத்தல் உத்வாகனம். இப் புறபூசை தலையன்பாற் செய்யப்படும் சிவபூசை யாகும். கடை நேசம் - தலையன்பு. கடை - கடுத்தல்; மிகுதல்; தலை.

(அ. சி.) உயிர்க்குயிராய் நிற்றல் - எல்லா உயிர்களையும் தன்னுயிர் போல் கருதி நிற்றல் (ஞான பூசை). உயிர்க்கொளி நோக்கல் உயிரின் கண் எளியைக் கண்டு நிற்றல் (யோக பூசை. உயிர்பெறும் ஆவாகனம்- தன் உயிரின்கண் உள்ள சிவத்தை வெளியிலுள்ள பொருள்களில் தாபித்துப் பூசித்தல் (கிரியா பூசை.) (க)

1418. நாடு நகரமும் நற்றிருக் கோயிலுந்
தேடித் திரிந்து சிவபெரு மான்என்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாக் கொள்வனே.[2]

(ப. இ.) இதன்கண் சிலநெறி நிற்போர் திருத்தொண்டு ஒதப்பெறுகின்றது. சிவபெருமான் மெய்யடியார்கள் உய்யுமாறு ஆண்டாண்டு வெளிப்பட்டருள்கின்ற திருநாடு திருநகரம் திருக்கோவில் முதலிய வற்றைத் தலையன்பால் தேடித்திரிந்து 'ஆலயம் தானும் அரனெனத் தொழுமே' என்றபடி இடையருது தொழுவர். அங்ஙனம் தொழுவார்க்கு அகம்புறமாய் இன்றியமையாதன முறையே பாடுதலும் பணிதலுமாம். அங்ஙனம் செய்தார் நல்லுள்ளங்களைச் சிவபெருமான் திருக்கோவிலாகக் கொண்டருள்வன்.

(அ. சி.) இப்பாட்டில் சரியா பூசையைப் பற்றிக் கூறுகிறார். (உ)

---

1. சன்மார்க்கம். சிவஞானசித்தியார், அ. உ - அ.
,, விளக்கினர். அப்பர், கூ. எஎ - கூ.
,, தல்ல. கஉ. கணநாத நாயனார், கூ.
2. பத்தராய்ப். ஆரூரர் எ. கூக-கo.
தெண்ணிலா. கஉ. தடுத்தாட்கொண்ட, கoஎ.

1419. பத்தர் சரியை படுவோர் கிரியையோர்
அத்தகு தொண்டர் அருள்வேடத் தாகுவோர்
சுத்த வியமாதி சாதகர் தூயோகர்
சித்தர் சிவஞானஞ் சென்றெய்து வோர்களே.[1]

(ப. இ.) சீலநெறியிற் செல்வோர் பத்தர் எனப்படுவோர். தோன்பு நெறியிற் செல்வோர் தொண்டர் எனப்படுவர். இயற்கை இயமாதி எண்ணுறுப்புங் கைக்கொண்டோர் சிவயோகர் எனப்படுவர். சிவனே மறவாச் செய்கையோர் சிவஞானி எனப்படுவர். இவர்களே சித்தராவர். இவர்கள் முடிபே சித்தாந்தம் இந்நால்வரும் திருவெண்ணீறு, சிவமணி, திருவைந்தெழுத்து முதலிய திருக்கோலமுடையவராவர். எண்வகை யுறுப்பு அடக்கம், நடக்கை, இருக்கை, வளிநிலை, தொகைநிலை, பொறை நிலை, நினைவு, சமாதி என்பன இவற்றை இயமம், நியமம், ஆதனம், பிராணயாமம், பிரத்தியாகாரம், தாரணை தியானம், சமாதி எனவும் (பிங்கலந்தை சகக) கூறுப. சமாதி - சிவநிறைவு.

(அ. சி.) பத்தர் - சரியையாளர். தொண்டர் - கிரியையாளர். சாதகர் - யோகிகள். சித்தர் - சிவஞானிகள். (கூ)

1420. சார்ந்தமெய்ஞ் ஞானத்தோர் தானவ ஞயினோர்
சேர்ந்தவெண் யோகத்தர் சித்தர் சமாதியோர்
ஆய்ந்த கிரியையோர் அருச்சனை தப்பாதோர்
நேர்ந்த சரியையோர் நீள்நிலத் தோரே.[2]

(ப. இ.) திருவடியுணர்வு கைவரப்பெற்ற சிவஞானியர் சிவனிறை வில் அடங்கிச் சிவனுயிருப்பர். எண்வகைத் தவத்தால் சிவயோகம் மேற் கொண்டவர் சிவனுர் திருவுருவினைப் பெறுவர். நோன்பினராய கிரியை யாளர் சிவன் அணுக்கராயிருப்பர் நிலத்தராய சரியையாளர் சிவவுல கினிலிருப்பர். நீள்நிலம் - சிவவுலகம்; அழியாவுலகம்.

(அ. சி.) தானவனுயினோர் - சாயுச்சியம். சேர்ந்தவெண்யோகத் தார் - சாரூபத்தார். அர்ச்சனை தப்பாதோர் - சாமீபத்தார். நீணிலத் தோர்-சாலோகத்தார். இம் மந்திரம், சரியையாளர் சாலோகத்தையும், கிரியையாளர் சாமீபத்தையும், யோகத்தார் சாரூபத்தையும், ஞானத் தார் சாயுச்சியத்தையும் அடைவர் என்றது. (சு)

1421. கிரியை யோகங்கள் கிளர்ஞான பூசை
அரிய சிவனுரு அமரும் அரூடந்
தெரியம் பருவத்துத் தேர்ந்திடும் பூசை
உரியன நேயத் துயர்பூசை யாமே.

(அ. சி.) நோன்பு செறிவு அறிவு என்னும் முப்பருவத்தும் அழியாப் பண்ணலிக்கும் என ஆய்ந்தெடுத்துச் செய்யும் சிவபூசை, தன்னன் பாற் செய்யும் உயர்வற உயர்ந்த உடையவர் பூசையாகும். இவற்றுள்

1 தொண்டர்காள். அ. திருப்படை எழுச்சி; உ.
,, தாதமாக். சிவஞானசித்தியார், அ. உ. கூ.
2. சன்மார்க்கம், சிவஞானசித்தியார் அ. உ : அ.

நோன்பினர் செறிவினர் ஆகிய இருவரும் கட்புலனும் திருவுருவப் பற்றுக் கோடுடன் புரிவர். அறிவினர் உணர்வில் திகழும் பற்றுக் கோடில்லாத அறிவுருவிற்றெழுவர். பற்றுக்கோடு - சாதாரம். பற்றுக்கோடின்மை - நிராதாரம். சிவபூசையே உடையவர்பூசை.

(அ. சீ) கிரியையாளரும் யோகிகளும் செய்வது உருவப் பூசை யாகும்; ஞானபூசை என்பது அருவப் பூசையாகும். (இ)

1422. சரியாதி நான்குந் தருஞான நான்கும்
விரிவான வேதாந்த சித்தாந்த மாறும்
பொருளா னதுநந்தி போன்னகர் போந்து
மருளாகு மாந்தர் வணங்கவைத் தானே.[1]

(ப. இ.) சீலம் நோன்பு செறிவு அறிவு என்னும் நன்னெறி நான்கி னும் தனித்தனி முடிந்த முடிபாகக் கொள்ளப்படும் அறிவு நிலையாகிய ஞானம் நான்கு. வேதாந்த நெறி ஆறு. அவை கபாலம், காளுதம், பாதஞ்சலம், அச்சபாதம். வியாசம், சைமினியம் என்பன. இவையாறும் புறச்சமயமாகும். சித்தாந்த நெறி ஆறு. அவை வைரவம், வாமம், காளாமுகம், மாவிரதம். பாசுபதம், சைவம் என்பன. இவையாறும் அகப்புறச் சமயமாகும். சிவவுலகத்தில் நின்று நந்தியங்கடவுள். குன்று வருளால் குருவுருவாய்த் தோன்றி அறியாமை வயப்பட்டுழலும் மாந் தர்க்கு மெய்ப்பொருளுணர்வு தோன்றுமாறு சிலமுதலிய நன்னெறி நான்கினையும் அருள்புரிந்து முழுமுதற்சிவனே வழிபடுமாறு அமைத்தனன். மாந்தர்: குருமொழி மாந்திரங்கொள்வோர்.

(அ. சீ.) ஞான நான்கு - சரியையின் ஞானம், கிரியையின் ஞானம், யோகத்தின் ஞானம், ஞானத்தின் ஞானம். வேதாந்தம் ஆறு - காபிலம், காளுதம், பாதஞ்சலம், அட்சபாதம், வியாயம், ஜைமீனியம்-6 சித்தாந்தம் ஆறு-பைரவம், வாமம், காளாமுகம், மாவிரதம், பாசுபதம், சைவம். பொன்னகர் - சிவலோகம். மருள் - அஞ்ஞானம். (சு)

1423. சமையம லசுத்தி தன்செயல் அற்றிடும்
அமையும் விசேடமும் அரன்மந் திரசுத்தி
ச்மைய நிருவாணங் கலாசுத்தி யாகும்
அமைமன்னு ஞானமார்க் கம்அபி டேகமே.

(ப. இ.) செந்நெறிக்கண் திருமுறை வழியாகச் செய்யப்படும் சிவ தீக்கை மூவகைப்படும். அவை சமயம் விசேடம் நிருவாணம் என்ப. சமய தீக்கை என்பது நன்னெறிக்குத் தடையாகிய தீமைகள் பலவற்றின் உண்மையினை யுணர்த்தி அவற்றினைத் தூய்மைப்படுத்தலும் சிவபெருமா னருளின் துணையின்றி எவர்க்கும் யாண்டும் எச்செயலும் இல்லை என்னும் உண்மையுணர்ந்து தற்செயலறுதலுமாம். விசேடதீக்கையாவது 'நந்தி நாமமாகிய' திருவைந்தெழுத்தை இடையருது கணிப்பதான் எல்லா வகையான அகம்புறத் தூய்மைகள் எய்துவனவாகும்.

---

1. போதமிகுத். சிவஞான சித்தியார், நூல்.
,, தேவர்பிரான். சிவப்பிரகாசம், சந்தானம், இ.

நிருவாணதீக்கையாவது அறுவகை வழியாகிய மந்திரம், பதம், வன்னம், தத்துவம், புவனம், கலை என்பனவற்றைத் தூய்மைப்படுத்தலாகும். வழியறு வகையின் வாய்மை வருமாறு : க. அப்பால் நல்நிலையில் ஒப்பில் அறிவு ஒருசிறிதும் விளங்காது புலம்புற்றுக்கிடந்த ஆருயிர்கட்கு அறிவு விளங்கி அழுந்தி அறிதலாகிய நுகர்வு உண்டாகும்பொருட்டு நுண்ணுணர்வை முதல் செவியோசை ஈறுகிய மொழிகளோத் தோற்றுவிக்கும் கருவிகள் கலையாகும். உ. அம்மொழிகளால் ஆருயிர்கட்கு அழுந்தியறிதல் உண்டாகும்படி முயற்சிக்கும் கருவிகள் மெய்யாகும் மெய் - தத்துவம். ங. அம் முயற்சியால் கண்டும் கேட்டும் அறியப்படும் புல நுகர்வுக்குரிய இடம் உலகமாகும். உலகம் - புவனம். ஙு. அழ் முயற்சியால் கண்டும் கேட்டும் அறிந்தவற்றின் இயல்புகளையும் அவற்றைப் பெறுதற்குரிய வழிவகைகளையும் உள்ளவாறு உணரும்படி பயிலத்தக்க அறிவுக் கருவியாகிய செந்தமிழ் மறைமுறைகள் எனப்படும் வேதாகமங்களாகிய நூல்கள் எழுத்தெனப்படும். எழுத்து - வருணம். ஙி. அத் தமிழ் வேதாகமங்களாகிய மறைநூல் முறைநூல்களால் அறியப்படும் நுகர்வுகள் நிலை எனப்படும் நிலை - பதம். சு அந்நிலைக்கண் வழுவா தொழுகி உய்தற்கு விழுமிய முழுமுதல் வழிபாடு இன்றியமையாததாகும். அவ் வழிபாட்டிற்குத் திருவுருவ அமைப்பு உயிர்போன்றதாகும் திருவுருவம் படிமம் எனவும் படும். அத் திருவுரு சொல்லுருவும் பொருளுருவும் என இருவேறு வகைப்படும். அவற்றுள் பொருளுருவினும் சொல்லுருவே நனிமிகச் சிறந்ததாகும் சொல்லெனினும் மறையெனினும் ஒன்றே. மறை-மந்திரம். அது 'நமசிவய' 'சிவயநம' எனப்படும் இவ்வழி பாட்டுத் திருவுருவங்களே மந்திரம்.

இவற்றைத் தூய்மைப்படுத்தலென்பது. பயன் வேண்டிச் செய்யப் படும் செயலனைத்தும் தொழில் எனப்படும். சிவனடிமை என்னும் தெளிவுடன் செய்யப்படும் செயல் அனைத்தும் தொண்டெனப்படும். ஆருயிர்கள் முன் தொழிலாகச் செய்யப்பட்ட வினைப்பயன்கள் இவ் ஆறு வழிகளிலும் அமைந்து கிடக்கும். அவற்றை மாற்றி மேல் செய்வன அனைத்தும் தொண்டாமாறு விதித்து நிறுத்தல். 'தோற்று பயன் வேண்டல் தொழில் சிவத்தால் வேண்டாமை, ஆற்றுதொண்டாக்கலாம் ஆய்ந்து' என்பதனையும் நோக்குக. மேலும் 'ஓசைமெய்யோடுலகம் ஒங்கு நூல் துய்ப்புநிலை, ஆசில்வழி பாட்டுமறை ஆறு' என்பதையும் நினைவு கூர்க ஓசை - கலை. மெய் - தத்துவம் ஞான தீக்கை என்பது மேலோதிய மூன்றனையும் செய்விக்கும் உரிமை நல்குவதாகிய ஆசிரியத் திருமுழுக்கு என்னும் அபிடேகமாகும்.

**(அ. சி.) இம் மந்திரம் சைவத்திலுள்ள தீக்கைகளை விவரிக்கின்றது: சமயம் - விசேடம் - நிருவாணம் - அபிடேகம்.**

(ஈ)

# 6. கிரியை

(நோன்பு)

**1424.** பத்துத் திசையும் பரமொரு தெய்வமுண்
டெத்திக் கிலரில்லை என்பதின் அமலர்க்
கொத்துத் திருவடி நீழல் சரணைத்
தத்தும் வினைக்கடல் சாராது காணுமே.[1]

(ப. இ.) பத்துத் திக்குக்களிலும் ஒப்பில்லாத முழுமுதற்சிவன் ஒருவனுளன். அவன் இல்லாத திக்குகள் இல்லையென்று அருள் நூல்கள் கூறுகின்றன. அகத்தே கொல்லாமை முதலிய சிவனை எளிதாக எய்துவிக்கும் நற்பண்புகள் 'கொல்லாமை ஐந்தடக்கல் கொள்பொறுமை யோடிரக்கம், தல்லறிவு மெய்தவம் அன்பெட்டு அமையப் புறத்தே அவற்றிற்கு இனமாகிய நறுமலர்களைக்கொண்டு திருமுறைப்போற்றித் தொடர்புகன்று திருவடி நீழலே மாறுப் புகலிடமென்று அருச்சித்தல் வேண்டும். அங்ஙனம் அருச்சிப்பார்க்கு ஏறுளியாகிய ஆகாமியாம் உணக்கிலாவித்து ஒரு ஞான்றும் விளையாமைபோல் சாராது என்க.

(அ. சி.) எத்திக்கிலர் இல்லை-தெய்வம் பரவியில்லாத திக்கு இல்லை. தத்தும் - ஏறும். (க)

**1425.** கானுறு கோடி கடிகமழ் சந்தனம்
வானுறு மாமல ரிட்டு வணங்கினும்
ஊனினை நீக்கி உண்பவர்க் கல்லது
தேனமர் பூங்கழல் சேரவொண் ணுதே.[2]

(ப. இ.) மண்ணும் விண்ணும் ஆகிய எங்கணும் நறுமணம் கமழும் சந்தனமும், அத்தகைய சிறந்த மணம் கமழும் நறுமலரும் கைக்கொண்டு நாளும் வழிபட்டாலும் தம்மை அடிமை என்று கொண்டு கொல்லாமலும் கொன்றதைத் தின்னாமலும் இருப்பதாகிய செந்நெறியொழுகிச் சிவனை நினைப்பதாகிய திருவுடையார்க்கன்றித் திருவருள் வீழ்ச்சியாகிய சத்திநிபாதம் கிட்டாது. சத்தி - திருவருள், நிபாதம் நன்றாய்ப் பதிதல்; வீழ்ச்சி.

(அ. சி.) கோடி - எல்லை. வான் உறு - பெருமை பொருந்திய. ஊனினை நீக்கி - சரீர அபிமானம் விட்டு அல்லது மாமிச உணவை விட்டு. (உ)

**1426.** கோனக்கன் ருயே குரைகழல் ஏத்துமின்
ஞானக்கன் ருகிய நடுவே யுழிதரும்
வானக்கன் ருகிய வானவர் கைதொழும்
மானக்கன் நீசன் அருள்வள்ள மாமே.[3]

---

1. எல்லையில். சிவப்பிரகாசம் க0 - க0.
,, பிணக்கி அ. திருக்கழுக்குன்றம். க.
2. கொல்லா. தாயுமானவர், பராபரக்கண்ணி கக2.
,, கொல்லான். திருக்குறள் உசு0.
,, கொல்லா. ,, கஅச.
3. அக்கு. அப்பர், இ. கஎ - கச.

(இ. இ.) எவர்க்கும் முழுமுதலாய் வேண்டுவார் வேண்டுருவுடன் தோன்றுபவராய் உள்ள சிவபெருமானின் தாயாய் விளங்குபவள் திருவருளம்மை அத் திருவருளம்மையின் ஒலிக்கும் சிலம்பணிந்த திருவடியிணையிணைப் போற்றித் தொழுங்கள். தொழுதால் அத் திருவருளம்மை மெய்யுணர்வு நல்கும் வித்தாய் உங்கள் நடுவே எழுந்தருள்வள் அவள் எழுந்தருள்வதால் பெருமைமிக்க ஆனேற்றின்மீது வரும் சிவபெருமானின் பேரின்பப் பெருவளம் மிக்கு உண்டாகும். அச் சிவபெருமான் வானுலகப் பசுக்களாகிய தேவர்களால் என்றும் தொழப்படும் சிறப்பினன். கோன்-தலைவன்; முதல்வன். நக்கன் - தோன்றுபவன். ஞானக்கன்று - மெய்யுணர்வு நல்கும் வித்து. மான - பெருமையையுடைய. கன்று-ஆனேறு; இடபம். நகுதல் - தோன்றுதல்

(அ. சி.) கோன் நக்கன் தாய் - இறைவன் தாய்; தேவி ஞான... தரும் - ஞானம் உண்டாகும். வானக்கன்று ஆகிய வானவர் வானத்தின்கண் உள்ள உலகங்களில் வசிக்கும் பசுக்களாகிய வானவர் (பசுக்கள்-மும்மலங்களையுடையவர்.) ஆனக்கு - ஆனல் அன்று ஈசன் அருள் வளமாமே - அப்பொழுது ஈசன் அருட் செல்வ முண்டாம். (கூ)

1427. இதுபணிந் தெண்டிசை மண்டலம் எல்லாம்
அதுபணி தெய்கின் றவளோரு கூறன்
இதுபணி மானுடர் செய்பணி யீசன்
பதிபணி செய்வது பத்திமை காணே.

(ப. இ.) மேல் ஓதிய முறைமைகளை வணங்கி ஏற்றுக்கொண்டு எட்டுத் திசைகளால் சூழப்பெறும் உலகு உடல் பொருள்கள் நிறை மண்டலங்களை யெல்லாம் படைத்து அளித்து அழித்து மறைத்தருள் செய்யும் ஐந்தொழிலையுடைய அம்மையை ஒரு கூற்றிலே உடையவன் சிவன். மாந்தர் செய்யத் தகுந்த இறைபணி சிவப்பணியேயாம் இச் சிவப்பணியே தோன்பாளராகிய கிரியையினர் செய்யும் சிவபத்தித் திருப்பணியாகும்.

(ஆ. சி.) இது பணிந்து - இவ்வுரையை நம்பி. அது பணி - ஆக்கி அளிக்கும் தொழில். (எ)

1428. பத்தன் கிரியை சரியை பயில்வுற்றுச்
சுத்த அருளால் துரிசற்ற யோகத்தில்
உய்த்த நெறியுற் றுணர்கின்ற ஞானத்தாற்
சித்தங் குருவரு ளாற்சிவ மாகுமே.[1]

(ப. இ.) சிவபத்தன் ஆனவன் திருமுறையில் கூறியபடி சீலம் நோன்பு இரண்டினையும் சிறப்பாகச் செய்துவர இயற்கைத் திருவருள் மேலும் துணைசெய்யும். அத்துணையால் குற்றம் நீங்கும். குற்றம் நீங்கினும் யோகத்தில் செலுத்தும். யோகம் செறிவு. இச் செறிவால் அறியும் எண்ணமாகிய சித்தம் குருவருளால் சிவமாய்த் திகழும். (இ)

1. பாலிநெய்தல். திருக்களிற்றுப்படியார், கஉ.
புத்திரமார்க். சிவஞான சித்தியார், அ. உ. - கO.
பெருமை. கஉ. சண்டேசர், கூஎ.

1429. அன்பின் உருகுவ ளுளும் பணிசெய்வன்
செம்பொன்செய் மேனி கமலத் திருவடி
முன்புநின் ருங்கே மொழிவ தெனக்கருள்
என்பினுட் சோதி இலங்குகின் ருனே.

(ப. இ.) சித்தம் சிவமாய சிவபத்தன் எல்லையிலாத் தகையன்பால் உருகுவன். அவன் எந்நாளும் அடிமைப் பணி செய்தொழுகுவன். பொன்போலும் திருமேனியும் செந்தாமரையனைய திருவடியும் உடையவன் சிவன். அவன் அடியேன் முன்நின்று அருமறையருளத் திருவடியுணர்வு கைவந்த ஒரு மெய்யடியாரை ஊர்ந்து செறிந்த அறிவொளியாய் விளங்கியருள்வன். என்பு - உடல். அருமறை - உபதேசம். சித்தம் கூறவே இனக்கோளாக மனம் எழுச்சி இறுப்பு முதலியவும் கொள்ளப் படும். (கு)

---

# 7. யோகம்

(செறிவு)

1430. நெறிவழி யேசென்று நேர்மையுள் ஒன்றித்
தறியிருந் தாற்போல் தமமை யிருத்தச்
சொறியினுந் தாக்கினுந் துண்ணென் றுணராக்
குறியறி வாளர்க்குக் கூடலு மாமே.[1]

(ப. இ.) ஆசான் அருளிய அருமறைவழியே ஒழுகி அகத்தவமாகிய யோகத்தில் பொருந்தி ஆ முதலியவற்றைக் கட்டுந்தறி (தூண்) மாறு தலின்றி இருந்தாற்போல் தம் உடம்பை இருத்தித் தினவு முதலியன உடம்பில் தோன்றினும் சொறியாமலும், காற்று மழை மின்னல் இடி முதலியன உடம்பில் மோதினும் அசையாமலும் இருந்து கருதிய குறியாம் சிவத்தை அறிவார்க்கு அருளால் அச் சிவத்துடன் கூடலுமாகும். (க)

1431. ஊழிதோ றூழி உணர்ந்தவர்க் கல்லால்
ஊழிதோ றூழி யுணரவுந் தாணெட்டான்
ஆழி அமரும் அரியயன் என்றிவர்
ஊழி முயன்றும் ஒருச்சியு ளானே.[2]

(ப. இ.) ஊழிதோ றூழி பலவரினும் என்றும் ஒரு படித்தாய் நின்று நிலவும் முழுமுதற் சிவனை அவன் அருட்கண்ணால் உணர்ந்தவர்க் கல்லாமல் பலவூழிகண்டாலும் தம் அறிவால் அச் சிவனைக் காணமுடியாது சக்கரப் படையைத் தாங்கும் அரியும் அயனும் பலவூழி முயன்

1. கண்ட. கஉ. சண்டேசுரர், சகு.
,, விற்றாணைன். கு. அ. கி.
2. ஊழிதொ. ஆருரர், எ. கOO - ஈC

றும் காண ஒண்ணுது நீங்கி மறைந்துநின்றனன். ஒருச்சி : ஒருவி யென்பதன் திரிபு. ஒருவி - நீங்கி.

(அ. சீ.) ஒருச்சி - விலகி, நீங்கி. (உ)

1432. பூவினிற் கந்தம் பொருந்திய வாறுபோற்
சீவனுக் குள்ளே சிவமணம் பூத்தது
ஓவியம் போல உணர்ந்தறி வாளர்க்கு
நாவி யணைந்த நடுதறி யாமே.[1]

(ப. இ.) மலரின்கண் மணம்பொருந்தியமைவதுபோல் ஆருயிரின் கண்ணும் அன்னியத்தனும் சிவமணம் பூத்தமைந்தது. அவ்வமைவினை யுடையார், புனைந்த சித்திரம்போல் அச் சிவனையே உணர்ந்தறிவர். அப்படி அறிகின்றவர் புனுகுப்பூனை அணைந்த நடுதறிபோன்று அசையா திருப்பர். நாவி - புனுகுப் பூனை. (கூ)

1433. உய்ந்தனம் என்பீர் உறுபொருள் காண்கிலீர்
கந்த மலரிற் கலக்கின்ற நந்தியைச்
சிந்தை யுறவே தெளிந்திருள் நீங்கினால்
மூன்றைப் பிறவிக்கு[2] மூலவித் தாமே.

(ப. இ.) உயிர்க்குயிராய் உண்ணின்று உணர்த்திவரும் முதன்மை வாய்ந்த சிவபெருமானைக் கண்டவரே உய்வர். அங்ஙனம் உய்ந்தனம் என்று உணராதிருக்கின்றீர்கள். மணங்கமழும் நல்லார்தம் நெஞ்சத் தாமரையில் கலக்கின்ற நந்தியை, உங்கள் உள்ளம் பொருந்தத் தெளியுங் கள். தெளிந்தால் இருள் நீங்கும். இருள் நீங்கினால் நுண்ணுடலாகிய கருவுருவு தோன்றும் முதற் பிறவியை ஒழிப்பதற்கு அத் தெளிவு அழி யாக் காரணமாகும் வித்து - காரணம்.

(அ. சீ.) உறுபொருள் - அடைதற்கு உரிய பொருள். மூன்று அப் பிறவிக்கு மூல அவித்தாகும் - உண்டாகும் பிறவிகள் இல்லையாகும். (ச)

1434. எழுத்தோடு பாடலும் எண்ணெண் கலையும்
பழித்தலைப் பாசப் பிறவியும் நீங்கா
வழித்தலைச் சோமனே டங்கி யருக்கன்
வழித்தலைச் செய்யும் வகையுணர்ந் தேனே.[3]

(ப. இ.) இலக்கண இலக்கியங்களும், இவற்றின் விரிவான அறுபத்துநான்கு கலைகளும், பழித்தற்கிடமாகிய சுட்டுணர்வாகும். அச் சுட்டுணர்வாகிய பாசத்தினால் தொடரும் பிறவியும், நீங்காத முறைமை வாய்ந்த இடப்பால் நரம்பாகிய திங்களும், வலப்பால் நரம்பாகிய ஞாயி றும், நடுப்பால் நரம்பாகிய தீயும் அருளான் அமையும் நிலைகளை

1. மாதினையோர். அப்பர், கூ. சுக - க.
2. பிறப்பொக்கும். திருக்குறள். கஎஉ.
3 மூலகை. சிவஞானசித்தியார், க.க - உசு.

யுணர்வர். அவ்வுணர்வால் முதன்மையான செந்நெறிச் செல்லும் மேன்மை எய்தும்.

(அ. சீ.) எழுத்து - இலக்கணம், நூல். பாடல் - இலக்கியங்கள்; எண்ணெண் கலை - 64 கலைகள். பழித்தலை : பழிச்சலை என்பதன் திரிபு. படிக்காவிட்டால். வழித்தலை - தலைவழி . முக்கிய நெறி சோமன், அங்கி. அருக்கன் - இடகலை, பிங்கலை, சுழுமுனை. வருத்தலைச் செய்யும். பிராணயாமம் செய்யும். (இ)

1435. விரும்பிநின் றேசெயின் மெய்த்தவ ராகும்
விரும்பிநின் றேசெயின் மெய்யுரை யாகும்
விரும்பிநின் றேசெயின் மெய்த்தவ மாகும்
விரும்பிநின் றேசெயில் விண்ணவ ருகுமே.[1]

(ப. இ.) சிவத்தை விரும்பிநின்றே செயல் செய்யும் நல்லோர் உண்மைத் தவத்தவராவர். அவ்வாறே ஒழுகின் குருவருள் அருமறை கைகூடும் அதுபோல் செய்யின் அஃது இறப்பில் தவமாகிய உண்மைத் தவமாகும். மேலும் கைக்கொளின் தூய விண்ணுலக நேராட்சியுடைய சிவனென மதிக்கப்படுவன். அருமறை - குருமொழி. (ஈ)

1436. பேணிற் பிறவா உலகருள் செய்திடுங்
காணில் தனது கலவியு ளேநிற்கும்
நாணில் நரக நெறிக்கே வழிசெயும்
ஊனிற் சுடுமங்கி யுத்தமன் ருனே.[2]

(ப இ.) அகத்தவமாகிய யோகநெறியினைப் பேணி ஒழுகுவார் மீண்டும் பிறப்பதற்கு வாயிலில்லாத தூய சிவவுலகை எய்துவர். இவ் வுலகே பிறவாவுலகெனப்படும் அருட்கண்ணுற் காண்பார் சிவபெருமான் வேறறக் கலந்துநிற்கும் கலவியுள் நிற்பர். இத்தவ ஒழுக்கிற்செல்ல நாணமுறுவார் இருளுலகெய்தி இன்னலுறுவர். சிவன் உடம்பினுள் அவ்வுடம்பு நிலைத்துநிற்பதற்கு வேண்டும் சூட்டினை யருள்வன். அத்தகைய சிவபெருமானே சார்ந்தாரைக் காக்கும் தலைவனுவன்.

(அ சீ) பிறவா உலகு - சிவலோகம். தனது கலவியுளே - சிவனிற் கலந்தே. நாணின் - யோக மார்க்கத்தை நாணத்தால் விட்டுவிட்டால். நாக நெறி - பாப மார்க்கம். ஊனிற் சுடும் - சரீர துன்பத்தைக் கொடுக்கும். அங்கி உத்தமன் - நீ வடிவனுனை சிவன். (எ)

1437. ஒத்தசெங் கோலார் உலப்பிலி மாதவர்
எத்தனை யாயிரம் வீழ்ந்தனர் எண்ணிலி
சித்தர்கள் தேவர்கள் மூவர் பெருமையாய்
அத்த னிவனென்றே அன்புறு வார்களே.[3]

---

1. வித்தையோ. சிவஞானசித்தியார், க. ந - எ.
2. சார்ந்தாரைக் சிவஞானபோதம். கo. உ - ட
,, உருத்திறனை. அப்பர். சு கo - இ.
3. நாரா. அப்பர், இ. சுஇ - கப,
,, இயக்கர். ,, ,, கஎ - உஇ.

(ப. இ.) முட்டாது முறைசெய்யும் முடியுடை வேந்தர் எண்ணிலர் தவர்; கெடாத விழுத்தவவேந்தர் அளவிலாதவர். இவ்விரு திறத்தாரும் சிறந்த பெருமையுடைய சிவபெருமானே விரும்பி வழிபட்டு உய்ந்தனர். அளவிறந்த சித்தர்களும் தேவர்களும் மூவர்களும் அச் சிவபெருமானையே வழிபட்டுச் சிறப்பும் பெருமையும் சேரப்பெற்றனர். எல்லாரும் சிவபெருமான் திருவடியினைக்கே தலையன்புபூண்டு ஒழுகுவர். வீழ்ந்தனர் விரும்பினர்.

(அ. சி.) ஒத்த செங்கோலார் - முடி அரசர்கள். உலப்பிலி மாதவர் - கேடில்லாத தவசிகள். (அ)

1438. யோகிக்கு யோகாதி மூன்றுள கொண்டுற்றோர்
ஆகத் தகுகிரி யாதி சரியையாந்
தாகத்தை விட்ட சரியையொன் றும்ஒன்றுள்
ஆதித்தன் பத்தியுள் அன்புவைத் தேனே.[1]

(ப. இ.) செறிவு நிலையாகிய யோகிக்குச் செறிவு, நோன்பு, சீலம் என்னும் மூன்றும் உள்ளன. அவர்கள் அம் மூன்றினையும்கொண்டு செலுத்துவோர் ஆவர். நோன்புநிலையாகிய கிரியையாளர் சீலம் என்று சொல்லப்படும் சரியைக்கும் உரியவராவர். ஆசையறுத்தவராகிய சீலத்தர் சரியை ஒன்றற்குமே உரியர். என்றும் பொன்று ஒன்றுய் யாண்டும் இயற்கைப் பேரொளியாய் விளங்கும் சிவசூரியன்பால் நீங்கா அன்பு வைத்தேனே.

(அ. சி.) தாகம் - ஆசை. ஆதித்தன் - சிவசூரியன். (கூ)

1439. யோகச் சமயமே யோகம் பலவுன்னல்
யோக விசேடமே அட்டாங்க யோகமாம்
யோகநிர் வாணமே யுற்ற பரோதயம்
யோக அபிடேகமே ஒண்சித்தி யுற்றலே.

(ப. இ.) செறிவு நிலையாகிய யோகத்தில் சமயம், விசேடம், நிருவாணம், அபிடேகம் என நான்கு நிலைகள் உள்ளன. அவை முறையே சிவ நுழைவு சிவநோன்மை சிவ நுண்மை சிவ நுகர்மை என அழைக்கப் பெறும். யோகத்தில் சமயம் பல்வகையான யோக முறைகளை நிலைத்தல் யோகத்தில் விசேடம் எட்டுறுப்புடன் கூடிய யோகம. யோகத்தில் நிருவாணம்-முழுமுதற் சிவம் தோன்றல். யோகத்தில் அபிடேகம்-சித்தி பெறுதல். உறுதல்: உறல்; உற்றல் என மிக்குநின்றது.

(அ. சி.) இம் மந்திரம் யோகத்தில், சமயம், விசேடம், நிருவாணம் அபிடேகம் இற்றென விளக்குகின்றது. (கo)

---

1. சகமார்க்கம். சிவஞான சித்தியார், அ. உ. - உ.

# 8. ஞானம்

(மெய்யுணர்வு)

**1440.** ஞானத்தின் மிக்க அறநெறி நாட்டில்லை
ஞானத்தின் மிக்க சமயமும் நன்றன்று
ஞானத்தின் மிக்கவை நன்முத்தி நல்காவாம்
ஞானத்தின் மிக்கார் நரரின்மிக் காரே.[1]

(ப. இ.) திருவடியுணர்வாகிய ஞானத்தின் மிக்க பிறப்பறுப்பதாகிய அறநெறி எந்நாட்டினும் இல்லை. ஞானத்தின் வேறுன சமயமும் இம்மை உம்மை அம்மை என்னும் மூவிடத்து நன்மையுள் ஏதும் தருவதின்று. அதனல் அக் கோட்பாடு நன்மையுமாகாது. ஞானத்திற்குப் புறம்பாயுள்ளவை நல்ல வீடுபேற்றினைத் தாரா. சிவஞானத்தாற் சிறந்தோர் மாந்தரிற் சிறந்தோராகிய அந்தண மெய்யடியாராவர்.

(அ. சி.) நாட்டில்லை - நாட்டில் இல்லை. மிக்க - வேறுன. மிக்கார் - சிறந்தவர். நரரின் - மக்களில். (க)

**1441.** சத்தமுஞ் சித்த மனனுந் தகுமனம்
உய்த்த வுணாவு முணர்த்தும் அகந்தையுஞ்
சித்தமென் றிம்மூன் றுஞ் சிந்திக தஞ் செய்கையுஞ்
சத்தங் கடந்தவர் பெற்றசன் மார்க்கமே.

(ப. இ.) மிக்க வேகமாக யாண்டும் நிறைந்துள்ள ஒலி முதலாகிய நாதமெய்யும், அதுபோன்று பரந்த தன்மையுள்ள மனமும். அம் மனம் பற்றி ஐயுற்ற பொருளை உறுதிசெய்வதாகிய இறுப்பு என்னும் புத்தியும், அப் புத்தியினை எழுப்புவதாகிய அகங்காரமும், தூக்கி எண்ணுவதாகிய சித்தமும் ஆகிய ஐந்தனுள் சித்தம் மனத்தின்கண் அடங்குவதாலும், நாதம் இவற்றைத் தொழிற்படுத்துவதாலும் ஏனைய மனம் அகங்காரம், புத்தி என்னும் மூன்றும் சிறந்தன. அவை முறையே நிகழ்த்தும், நினைப்பு எழுச்சி இறுப்பு ஆகிய அந்தக்கரணச் செய்கைகளும் நாதகலையும் கடந்தவரே ஞானியராவர். அவர்கள் செல்லும் நெறியே மெய்ந்நெறியாகும். மெய்ந்நெறி - சன்மார்க்கம்.

(அ. சி.) இம் மந்திரம் அந்தக்கரணங்கள் சுத்தமாய் இருப்பதே சன்மார்க்க நெறி என்று கூறுகின்றது. (உ)

**1442.** தன்பால் உலகுந் தனக்கரு காவதும்
அன்பா லெனக்கரு ளாவது மாவன
என்பார்கள் ஞானமும் எய்துஞ் சிவோகமும்
பின்பாலின் நேயமும் பெற்றிடுந் தானே.

(ப. இ.) தான் சார்ந்திருக்கும் மாயாகாரியமாகிய நிலையுதலிலவாம் உலகமும், தன்னோடு தொடர்புடைய உடம்பும் நிலைபெற்ற திருவருளால் இடைத்தன. இவற்றுல் சிவபெருமானிடத்து நீங்காக் காதல்கொண்டு ஒழுகினுல் அச் சிவத்துள் அடங்கித் தானே சிவமாகப் பொலிவன்.

---

1 ஞானமெய்ந். கஉ. சம்பந்தர், கஉசஅ.
,, ஞானத். அப்பர், இ. கக - கூ.

இதுவே சிவோகம். பின் திருவருள் முயற்சியினால் தானுகவே சிவன் திருவடியின்பினைத் தலைக்கூடுவன். மருத்துவனைச்சார்ந்த நோயாளிக்கு நேரும் முயற்சியெல்லாம் மருத்துவனுலேயாம் என்பது இதற்கு ஒப்பாகும்.

(அ. சி.) சிவோகம் - அவனே தானே ஆகிய நெறி, பின்பால் - சிவோகம் பாவனை கைவந்த பின். நேயம் - சிவம். (கூ)

1443. இருக்குஞ் செருமி இடம்பிரம மாகும்
வருக்கஞ் சராசர மாகும் உலகந்
தருக்கிய ஆசார மெல்லாந் தருமே
திருக்கிலா ஞானத்தைத் தேர்ந்துணர்ந் தோர்க்கே.

(ப. இ.) மாறுபாடில்லாத சிவஞானத்தைத் திருவருளால் தெளிந்துணர்ந்தோர் சிவஞானியராவர். அவர் ஒடுக்கமாகிய நிட்டை கூடியிருக்குமிடம் சிவன் எழுந்தருளியிருக்கும் இடமாகும். இயங்குதினை நிலைத்திணையாகிய கூட்டமனைத்தும் அவர்கட்கு உலக உறவாகும். மேம்பாடு மிக்க ஒழுக்கமனைத்தும் தாமே வந்து எய்தும்.

(அ. சி.) செருமி இருக்கும் - மறைந்து இருக்கும். ஆசாரம்-ஒழுக்கம். திருக்கிலா - மாறுபாடில்லாத. (எ)

1444. அறிவும் அடக்கமும் அன்பும் உடனே
பிறியா நகர்மன்னும் பேரரு ளாளன்
குறியுங் குணமுங் குரைசுழல் நீங்கா
நெறியறி வார்க்கிது நீர்த்தோணி யாமே.

(ப. இ.) சிவத்தை அறியும் அறிவும், சிவத்தில் அடங்கும் அடக்கமும், சிவத்தைப்பற்றும் தலையன்பும் உள்ளவர் கேடில்லாத சிவலுலகத்தில் வாழ்வோராவர். அவர்கள்தம் புற அடையாளச் சிவக்கோலமும், அக அடையாளச் சிவப்பண்பும் ஒலிக்கும் கழலணிந்துள்ள சிவபெருமான் திருவடியிணையினை நீங்கா நிலைமையினைக் குறிப்பனவாகும். அவர்கள் பால் அடங்கிநிற்கும் திருவடியுணர்வு காற்று முதலிய தூணையால் நீரில் ஓலியுண்டாவதுபோல் செந்நெறிச் செல்லும் தூணையால் வெளிப்படும்.

(அ. சி.) பிறியா நகர் - முத்தி நகர். நீர்த்தோணி - நீரினிடத்து உள்ள ஒலி காற்று முதலிய கூட்டுறவால் வெளிப்படுவதுபோல, அறிவால் ஆன்மாவில் அடங்கியுள்ள ஞானம் பிரகாசிக்கும். (கி)

1445. ஞானம் விளைந்தெழு கின்றதோர் சிந்தையுள்
ஏனம் விளைந்தெதி ரேகாண் வழிதோறுங்
கூனல் மதிமண் டலத்தெதிர் நீர்கண்டு
ஊன மறுத்துநின் ரூண்சுட ராகுமே.[1]

(ப. இ.) திருவடியுணர்வாகிய சிவஞானமே முறுகிநிற்கும் நல்லார் திருவுள்ளத்துள் மூலாதாரம் உயிர்ப்பு முதலிய அகத்தவத்துக்கு

1. சுண்ட மாரிரு. அப்பர். இ. கள - உ.

வேண்டும் கருவிகளோடு கூடிச் செய்யும் யோகமும் கைகூடும். அதனுத் காணப்பெறும் வழிதொறும் பற்றுக்கோடின்றிச் சென்று புருவநடுவாம் திங்கள்மண்டிலத்துத் தோன்றும் புத்தமிழ்தங் காண்பர். கண்டு திரு வருளால் மலமாயா கன்மங்களாகிய தளையினை யறுத்து நிலைநிற்பர். அங்ஙனம் நின்றூர்க்கு விட்டு நீங்காது விளங்குவது சிவஞர் அருட்கடரே யாகும். அச் சுடர் ஒண்சுடர் எனப்படும்; இது பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாகும்.

(அ. சி) ஏனம் - சாதனக் கருவி. ஆதாரயோகம். வழி – ஆதார மார்க்கம் கூன...கண்டு - சந்திர மண்டலத்துப் பெருகும் அமுதம். ஊனமறுத்து - மலம் ஒழித்து. ஒண்சுடர் - சிவம். (கு)

1446. ஞானிக் குடன்குண ஞானத்தில் நான்குமா
மோனிக் கிவையோன்றுங் கூடாமுன் மோகித்து
மேனிற்ற லாஞ்சத்தி வித்தை விளைத்திடுந்
தானிக் குலத்தோர் சரியை கிரியையே.

(ப. இ.) சிவஞானிக்குரிய பண்பு நான்காகும். அவை, அறிவிற் சீலம், அறிவில் நோன்பு, அறிவிற்செறிவு, அறிவில் அறிவு என்பன. ஞானத்தின் மேனிலையாகிய மோனத்தை எய்தியவர்க்கு மேற்கூறிய நாற்படிகளுள் ஏதும் பொருந்தாது. சிவசத்தியில் தன்னை மறந்து நிற்க அஃது அப்பால் நிலையிலுள்ள குண்டலினிசத்தியின் வலிகொண்டி யற்றும் யோகப்பயனை விளைத்திடும். இவையே பற்றுக்கோட்டோடும் செய்யும் யோகியர்க்கு நிகழும் அறிவிற்சீலம், அறிவில் நோன்பு எனப் படும். இவை ஞானத்திற்சரியை ஞானத்திற் கிரியை எனப்படும்.

(அ. சி.) ஞானத்தில், நான்கு ஞானத்தில் சரியை, ஞானத்தில் கிரியை, ஞானத்தில் யோகம், ஞானத்தில் ஞானம். முன் மோகித்து - சிவ சன்னிதியில் தன்னை மறந்து. சத்திவித்தை - குண்டலி யோகம். தானிக் குலத்தோர் - ஆதார யோகிகள். (எ)

1447. ஞானத்தின் ஞானுதி நான்குமா ஞானிக்கு
ஞானத்தின் ஞானமே ஞானென தென்னுமல்
ஞானத்தில் யோகமே ஞாதாந்த நல்லொளி
ஞானக் கிரியையே நன்முத்தி நாடலே.[1]

(ப. இ.) சிவஞானிக்கு ஒதப்பட்ட அறிவில் அறிவு முதலிய நான்கும் உள்ளன. அறிவில் அறிவாகிய ஞானத்தில் ஞானமே யான் எனதென்னும் செருக்கறல். ஞானத்தில் யோகம் முப்பத்தாறு மெய்யும் கடந்த அருள்வெளியில் காணும் சிவ ஒளி. ஞானத்தில் கிரியையே திருவடிப்பேற்றினை நாடுதல். மெய் - தத்துவம். ஞானத்தில் சரியை என்பது திருவடிப்பேற்றினைத் திருமுறைச் செல்வர் நவில 'நன்கினிது கேட்டல். (அ)

---

1. ஞானநூல்தனை. சிவஞானசித்தியார், அ - உ - கஙூ.
,, ஞானயோ. சிவஞானசித்தியார். கஉ ஙூ-ஙூ.

1448. நண்ணிய ஞானத்தின் ஞானுதி நண்ணுவோன்
புண்ணிய பாவங் கடந்த பிணக்கற்றோன்
கண்ணிய நேயங் கரைஞானங் கண்டுளோன்
திண்ணிய சுத்தன் சிவமுத்தன் சித்தனே.

(ப. இ.) பொருந்திய சிவஞானத்தின் நாற்படியும் மேற்கொண்டவன், பிறப்புக்கு வித்தாம் இருள்சேர் இருவினையும் கடந்தோனுவன். இருவினை நான் என்னும் மூன்றப்பாற் செய்யும் புண்ணிய பாவம். கருதப்படுகின்ற பிழம்போடு கூடித் தோன்றி அருளும் திருவுருவில் மறைத்திருக்கும் அன்பின் விளை ஞானச் சிவப்பொருளை அவ்வுருக்கரைந்து நிகழ்யிற் காண்பவனும் அவனேயாவன். அவனே நிலைபேருனை தூயோன். அவனே சிவப்பேற்றினன். அவனே திருவடி எய்திய சித்தன். (சு)

1449. ஞானச் சமயமே நாடுந் தனைக்காண்டன்
ஞான விசேடமே நாடு பரோதயம்
ஞானநிர் வாணமே நன்றறி வானருள்
ஞானுபி டேகமே நற்குரு பாதமே.

(ப. இ.) சிவஞானத்தின் நிகழும் நால்வகைத் தீக்கையும் வருமாறு: சிவநுழைவென்பது சிவனைக்காணுமுறையால் தன்னைக் காண்பது. சிவநோன்மையென்பது மேலாம் சிவத்தோற்றம் காண்பது. சிவநுண்மை என்பது வாலறிவினனுகிய சிவபெருமானின் திருவருள் வீழ்ச்சி. சிவ நுகர்மை என்பது திருவருளாசான் திருவடியினை மறவாமை. நுழைவு - சமயம் நோன்மை - விசேடம். நுண்மை - நிருவாணம். நுகர்மை - அபிடேகம். திருவருள் வீழ்ச்சி - சத்தி நிபாதம். நிபாதம் - நன்குய்ப் பதிதல்.

(அ. சி.) பரோதயம் - பரம் + உதயம்; சிவம் தோன்றல். நன்றறிவான் அருள் - சிவனருள். நற்குரு - சிவகுரு. (கo)

---

# 9. சன்மார்க்கம்

(காதன்மை நெறி)

1450. சாற்றுஞ்சன் மார்க்கமாந் தற்சிவ தத்துவத்
தோற்றங்க ளான சுருதிச் சுடர்கண்டு
சீற்றம் ஒழிந்து சிவயோக சித்தராய்க்
கூறறத்தை வென்றூர் குறிப்பற்ந் தார்களே.

(ப. இ.) நல்லாரால் புகழ்ந்து சொல்லப்பெறும் தூமாயை மெய்கள் ஐந்து. அவை ஆசான், ஆண்டான், அருளோன், அன்னை, அத்தன் என்பன. இவற்றை முறையே சுத்தவித்தை, சுகரம், சதாசிவம், சத்தி, சிவம் எனவும் கூறுப. செந்தமிழ்த் திருமுறையும் திருமுறையும் (தமிழ் வேதாகமங்கள்) கூறும் சிவபெருமானின் உண்மைத் தன்மை

உணர்வொளியினைக் கண்டு, சிற்ற முதலிய அறுபகை செற்றுச் சிவயோக சித்தராய் வாழ்வார். அவர்களே கூற்றத்தைவென்று கூத்தப்பெருமான் திருவடியைத் தலைக்கூடும் இயல்பமைந்த மெய்ந்நெறியாகிய சன்மார்க்கத் தன்மை யுணர்ந்தோராவர். சிற்றம் - சினம்.

(அ. சி.) சிவதத்துவத் தோற்றங்கள் - சுத்தவித்தை, ஈச்சுரம், சாதாக்கியம், சத்தி, சிவம் ஆக 5. சுருதி - தமிழ் நான்மறைகளும் தமிழ் ஆகமங்களும். குறிப்பு - சன்மார்க்க நெறி. (க)

**1451.** சைவப் பெருமைத் தனிநா யகன்நந்தி
உய்ய வகுத்த குருநெறி ஒன்றுண்டு
தெய்வச் சிவநெறி சன்மார்க்கஞ் சேர்ந்துய்ய
வையத் துள்ளார்க்கு வகுத்துவைத் தானே.

(ப. இ.) கொலையும் புலையும் (1425) விடுத்த செந்நெறியாகிய சைவத்தின் பெருமைமிக்க ஒப்பில்லாத முதல்வன் நந்தியெம்பெருமான், அவன் ஆருயிர்கள் அனைத்தும் திருவடிபெற்று உய்யுமாறு வகுத்தருளிய குருநெறி ஒன்று உண்டு. அதுவே தெய்வச் சிவனெறி. அந்நெறியாகிய சன்மார்க்கத்தைச் சேர்ந்து ஒழுகி உய்யும்படி நிலவுலகத்துள்ளார்க்குச் செந்தமிழால் வகுத்தருளினன். தெய்வச் சிவனெறி எனினும் சன்மார்க்க நிலையினும் ஒன்றே. (உ)

**1452.** தேரிசிக்கப் பூசிக்கச் சிந்தனை செய்யப்
பரிசிக்கக் கீர்த்திக்கப் பாதுகஞ் சூடக்
குருபத்தி செய்யுங் குவலயத் தோர்க்குத்
தருமூத்திச் சார்பூட்டுஞ் சன்மார்க்கந் தானே.[1]

(ப. இ.) மெய்ந்நெறியாகிய சன்மார்க்கத்தில் சிவன் அளித்தருளும் திருவடிப்பேறு சிவகுருவின் பத்தியினால் கைகூடுவதாகும். அப்பெரும் பற்றுச் சிவகுருவினைக் காண, வழிபட, இடையறாது எண்ணத், திருவடியினைத்தொட, சிவகுருவின் பொருள்சேர் புகழினை வாயாரப்புகல சிவகுருவின் திருவடியிணையினைத் தம்முடிமேற் சூடத் தாமே விளைவதாகும். வழியறு வகையின் வாய்மை யிவ்வாறும். (ஊ)

**1453.** தெளிவறி யாதார் சிவனை யறியார்
தெளிவறி யாதார் சீவனு மாகார்
தெளிவறி யாதார் சிவமாக மாட்டார்
தெளிவறி யாதவர் தீரார் பிறப்பே.

(ப. இ.) சன்மார்க்க நெறியின்கண் ஒழுகித் திருமுறைவழியாக மூப்பொருளின் மெய்ம்மை தெளியாதவர் சிவனை உணரார். • சிவனை

1. மந்திரத்தான். சிவஞானசித்தியார், கஉ. கூ - சு.
,, மூவகையா. சிவப்பிரகாசம், அ.
,, சாத்திரத்தை. திருக்களிற்றுப்படியார், கூ.

உணராமையினுல் உயிர்ப்பயன் எய்தார். பயன் எய்தாராகவே அறி வுடைப் பொருளுமாகார். மெய்ம்மை தெளியாதவர் சிவன் திருவடி யிணையினைக் கூடிச் சிவமாம் பெருவாழ்வு எய்தார். மெய்ம்மை தெளியா தார் பிறப்பரூர்; சிறப்பும் உரூர். (அ)

1454. தானவ ஞகித் தானைந்தா மலஞ்சேற்று
மோனம தாமொழிப் பான்மூத்த ராவதும்
ஈனமில் ஞானனு பூதியில் இன்பமுந்
தானவ ஞயுஞ் லானசன் மார்க்கமே.[1]

(ப. இ.) சிவபெருமான் திருவருளால் ஆவி சிவமாகித் தொன் மையே ஒட்டிய ஆணவமும். அதனை அகற்றுதற்பொருட்டுத் தொடக்க மாகக் கட்டிய கன்ம மாயைகளும், மாயாகாரியமாகிய உலகுடல் உண் பொருள்களாம் மாயேயமும். இவற்றைத் தொழிற்படுத்துந் திருவரு ளாம் நடப்பாற்றலும் திரோதானசத்தி ஆகிய ஐந்து மலங்களையும் அகற்றி உணர்விற் கணிப்பதாகிய 'சிவாஹம்' என்னும் செந்தமிழ்மறையே வாய்வாளா மோனமொழி எனப்படும். அம்மொழி பெற்றூரே வீடுபேற் றினராவர். அவரே குறைவில்லாத சிவஞானத் துய்ப்பினர். அவரே அச் சிவனடியின்பமும் தலைப்படுவர். இந்நிலையே தானவஞ் சன்மார்க்க மாகும். சன்மார்க்கம் - மெய்ந்நெறி; தெய்வச் சிவனெறி.

(அ. சி.) ஐந்து ஆம் மலம் - ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதாயி ஆக. 5. மோன...மொழியால். "சும்மா இரு சொல்லற" என்ற குருமொழியால். அனுபூதி - அனுபவம். (இ)

1455. சன்மார்க்கத் தார்க்கு முகத்தோடு பீடமுஞ்
சன்மார்க்கத் தார்க்கு இடத்தோடு தெய்வமுஞ்
சன்மார்க்கத் தார்க்கு வருக்கங் தெரிசனம்
எம்மார்க்கத் தார்க்கும் இயம்புவன் கேண்மினே.[2]

(ப. இ.) எவ்வகை நெறியினர்க்கும் இயல்பாகிய சிறந்த உண்மை யினைக் கூறுகின்றேன், கேளுங்கள். மெய்ந்நெறியாகிய சன்மார்க்கநெறி நிற்பார்க்கு இணக்கம்சேர் நல்லார் கூட்டமும் அவர்கள் கூடிவாழும் இடமுமே சிறந்தன. அவர்கள் கூடியிருக்கும் இடமே சிவபெருமானை நோக்கி வழிபடும் திசையாகும். அவர்கள் இருப்பே சிவபெருமான் திரு வுருவ இருப்பாகும். அவர்களே தெய்வமாகும். அவர்களைக் காண்பதே தெரிசனமாகிய காட்சியாகும்.

(அ. சி.) வருக்கம் - சங்கம். (சு)

1456. சன்மார்க்க சாதனந் தான்ஞான ஞேயமாம்
பின்மார்க்க சாதனம் பேதையர்க் காய்நிற்கும்
துன்மார்க்கம் விட்ட துரியத் துரிசற்றூர்
சன்மார்க்கந் தானவ ஞகுஞ்சன் மார்க்கமே.[3]

---

1. தன்னறி, சிவப்பிரகாசம், அ - உ.
2. கைகள் கஉ. திருமூலச்சிறப்பு, கஅ.
3. சன்மார்க்கஞ். சிவஞானசித்தியார், அ. உ - கஉ.

(ப. இ.) சன்மார்க்க சாதனமாகிய நன்னெறிப் பயிற்சியால் எய்துவன, திருவடியுணர்வும், அதனுல் உணரப்படும் சிவமாம் பெருவாழ்வாம் திருவடியினையும் என்ப. நன்னெறி எனினும் காதன்மை நெறி எனினும் ஒன்றே. அதன் வழிநெறியாகிய தோழமை, மகன்மை, தொண்டன்மை (அடிமை) என்னும் மூன்றும் பின்மார்க்கப் பயிற்சியாகும். இம் மூன்றும் முற்ரு உரனுடைப் பேதையார்க்கு ஆவன. தீமை அனைத்தும் விட்டு நன்மையின்கண் தன்னிழப்பாகிய நெறியிற் செல்வோர். நான்காம் நிலையாகிய பேருறக்கமும் கடந்து அப்பால் என்று சொல்லப்படும் ஐந்தாம் நிலையாகிய உயிர்ப்படங்குதல் வழிநிற்பாராவர். தம் நிலையின் வழி நிலையாகிய நனவு கனவு உறக்கம் பேருறக்கம் முதலியவற்றைத் தூரி சென்றே கொள்வர். அதுவும் நீங்கினேர் நன்னெறியாளராவர். அவர்கள் எய்தும் தனிப்பேறு தானவனுகும் தனிப்பெரும் வழியே தானவன் என்பது தன்னை அடிமை எனவும் சிவனை ஆண்டவன் எனவும் கொண்டு தானற்று ஒழுகுதல். மெய்ந்நெறி என்ருலும் நன்னெறியென்ருலும் ஒன்றே.

(அ. சி.) பின் மார்க்கம் - சகமார்க்கம், புத்திர மார்க்கம். தாச மார்க்கம். துரியத் துரிசு - துரியாதீதத்துக்குக் கீழ்ப்பட்ட துரியம். (ஏ)

1457. சன்மார்க்க மெய்த வருமருஞ் சீடர்க்குப்
பின்மார்க்க மூன்றும் பெறவியல் பாமென்ரூல்
நன்மார்க்கந் தானே சிவனெடு நாடலே
சொன்மார்க்க மென்னச் சுருதிகைக் கொள்ளுமே.[1]

(ப. இ.) நன்னெறியினைப் பெறவிரும்பிப் பேராக் காதலுடன் வரும் மெய்கண்டாராகிய மாணவர்க்கு, அதன் வழிநிலையாகிய பின் மார்க்கம் என்று சொல்லப்பெறும் செறிவு நோன்பு சீலம் என்னும் மூன்றும் அவர்கள் பயின்று அவர்களுக்குக் கைகூடினமையின் அஃது அவர்களுக்கு இயல்பாம் என்பர். இயல்பென்பது சித்தித்ததென்பதாகும். மேல் அவர்களுக்கு நிகழவேண்டுவது இடையருது சிவத்தை எண்ணுதலேயாம். எண்ணுதல் - நாடுதல், சிந்தித்தல். இதுவே அருமறை என்னும் திருவைந்தெழுத்து உபதேசமாகும். இத்தகைய திருமுறைத் தமிழாகமங்களே மேற்கொண்டொழுகுவதே (சுருதி - ஆகமம்) அந்நிலையாகும். (அ)

1458. அன்னிய பாசமும் ஆதங் கருமமும்
மூன்னும் அவத்தையும் மூலப் பகுதியும்
பின்னிய ஞானமும் பேதாதி பேதமுந்
தன்னெடுங் கண்டவர் சன்மார்க்கத் தோரே.[2]

(ப. இ.) தனக்கு வேரூய்த் தன்னை அடிமைப்படுத்தித் தன்னுள் அடக்கும் ஆணவப் பழமலமாகிய அன்னிய பாசமும், அப்பாச ஆற்றலைத் தெய்த்து அடக்கும் மருந்தாகிய வினையும், அவ்வினை காரணமாக வினை

1. பரிதி அப்பர், நி. கூ - நி.
2. தெரிவரிய. சிவஞானசித்தியார், கக - சு.
,, நானவனென். சிவஞானபோதம், கo. க - க.

யும் பிறப்பு இறப்பாகிய நிலைகளும், இந் நிலைகளுக்குக் கருவியாகிய மாயா காரியமான மூலப்பகுதியும். இறைஉயிர் தளையாகிய பதிபசு பாசங்களின் உண்மை உணரும் மெய்யுணர்வும் ஒற்றுமை வேற்றுமைப் பொருள்களின் தொடர்புகளும் சார்புநிலையாம் தன்னைத் கண்டவர் சன்மார்க்கத் தார்ராவர். பின்னியஞானம் :[1] புணர்ப்புணர்வு; அத்துவிதஞானம்.

(அ. சி.) அன்னிய பாசம் - தனக்கு வேருய்ப் பாசம் உண்டு என்றும். ஆகும் கருமம்-பாசத்தால் கன்மம் உண்டு என்றும், முன்னும் அவத்தையும்-அக் கன்மங் காரணமாகப் பிறப்பு இறப்புக்களாகிய அவத்தைகள் உண்டு என்றும், மூலப் பகுதியும் - அவத்தைக் கேதுவான மூலப் பிரதிகிருதி உண்டு என்றும் பின்னிய ஞானம் இவைகளை அறிதலும் அறிவு உண்டு என்றும். பேதாதி பேதமும் - இவைகளின் பேதங்களையும். தன்னைத்தும் - ஆன்மாவையும். கண்டவர் - கண்டு ஆராய்பவர். (கூ)

**1459.** பசுபாச நீக்கிப் பதியுடன் கூட்டிக்
கசியாத நெஞ்சங் கசியக் கசிவித்
தொசியாத வுணைமைச் சொரூபோ தயத்துற்
றசைவான தில்லாமை யானசன் மார்க்கமே.

(ப. இ.) ஆணவப் பிணிப்பால் ஏற்படும் தன்முனைப்பாம் சித்து ணர்வுத் தன்மை முனைப்பு அல்லது பசு எனப்படும். அத்தகைய பசுத் தன்மையினையும் பாசத் தன்மையினையும் நீக்கி முழுமுதற் சிவமாகிய பதி யுடன் கூட்டிவைப்பதும் நன்னெறியாகும். ஒன்றுலும் இளகிக் கசியாத உள்ளத்தினைக் கசியச் செய்து என்றும் பொன்ற உண்மை ஆவித்தன்மை யைத் தோன்றச் செய்வதும் அந் நன்னெறியேயாம் என்றும் தளக்க மின்றித் திருவடிநிறைவில் அழுத்துவித்து வாழச் செய்வதும் அந்நன் னெறியேயாகும்.

(அ. சி.) ஒசியாத - கெடாத. சொரூப உதயம் - ஆன்மாவின் இயற்கை உருவம். (கூ)

**1460.** மார்க்கஞ்சன் மார்க்கிகள் கிட்ட வகுப்பது
மார்க்கஞ்சன் மார்க்கமே யன்றிமற் றொன்றில்லை
மார்க்கஞ்சன் மார்க்க மெனுநெறி வைகாதோர்
மார்க்கஞ்சன் மார்க்க மாஞ்சித்த யோகமே.

(ப. இ.) நன்னெறியாகிய சன்மார்க்கம் தன்னைச் சார்ந்த சன்மார்க்கிகளாகிய நல்லார் எய்தும்படி வகுப்பது சன்மார்க்கமேயன்றி வேன்றொன்றில்லை. அந் நன்னெறி நிலையினை எய்துவோர் செல்லுவழி தன்னெறிக்கு வாயிலாகிய சித்தயோகமேயாகும். சித்தயோகம் என்பது ஆருயிரின் எண்ணம் ஒவாது சிவத்தின்பால் கூடியிருப்பது. இதனைச் சிவயோகம் எனவுங் கூறுவர். (கக)

(அ. சி.) சித்தயோகம் - சிவராசயோகம்.

---

1. சன்மார்க்கஞ். சிவஞானசித்தி. அ. உ - கஉ.

# 10. சகமார்க்கம்

(தோழமை நெறி)

**1461.** சன்மார்க்கந் தானே சகமார்க்க மானது
மன்மார்க்க மாமுத்தி சித்திக்குள் வைப்பதாம்
பின்மார்க்க மானது பேராப் பிறந்திறந்
துன்மார்க்க ஞானத் துறுதியு மாமே.

(ப. இ.) சன்மார்க்கத்துக்கு வழியாக இருப்பது சகமார்க்கமாகும். சகமார்க்கம் எனினும் தோழமைநெறி எனினும் ஒன்றே நிலைபேருக அள்ள தோழமை நெறியின்பயன் சிறந்த பேருகிய சித்தியுள் நிலைப்பிப் பதாகும். நன்னெறி வாயிலாம் நானெறி விடுத்து ஏனைய நெறிகளில் உழல்வோர் நீங்காப் பிறப்பு இறப்புகளுக்கு உட்பட்டு அதுவே உறுதி எனத் திரிவர். ஆருயிர்களைத் தோழமை நெறியில் இருத்துதற்கு இருந்துகாட்டியவர் நம்பி ஆரூரர்.

(அ. சி.) சகமார்க்கம் - தோழனைப்போல் பத்தி பண்ணும் நெறி. மன் - பெருமை பொருந்திய. பின் மார்க்கம் - மேலே கூறிய நான்கு மார்க்கங்கள் அல்லாதது. உன் - அலைகிற. (க)

**1462.** மருவுந் துவாதச மார்க்கமில் லாதார்
குருவுஞ் சிவனுஞ் சமயமுங் கூடார்
வெருவுந் திருமகள் வீட்டில்லை யாகும்
உருவங் கிழியும் ஒருங்கிழப் பாரே.[1]

(ப. இ.) செந்நெறி வகையாம் பன்னிரண்டு நிலைகளைக் கைக் கொள்ளாதார் சிவகுருவினையும் சிவன் திருவடிநீழற் பெருவாழ்வினையும் சிவனெறியினையும் மேற்கொண்டு பொருந்தார். இம்மூன்றும் பொருந் தாப் புன்னெறியினரைக் காணவும் திருமகள் அஞ்சுவள். அவர்க்குச் சுற்றும்பமும் இல்லாதொழியும். அழகும் உறவும் பிறவும் ஒருங்கிழப்பர். பன்னிரண்டு நிலைகளுள் ஆறுநிலைகள் பற்றுக்கோடுள்ளன. ஏனை ஆறுநிலைகள் பற்றுக்கோடில்லன. இவற்றை முறையே பற்றுக்கோடி பற்றுக்கோடிலி எனப் பகர்வர். மூலம். அடிவயிறு, மேல்வயிறு, நெஞ்சம், கழுத்து, புருவநடு என்னும் ஆறும் ஆருதாரம். ஞாயிற்று மண்டிலம் திங்கள் மண்டிலம், தீ மண்டிலம், சமனை, உன்மனை, அதீதம் என்னும் ஆறும் நிராதாரம். இவையே பன்னிரண்டு நிலைகளுமாகும். ஆதாரம் - பற்றுக்கோடி. நிராதாரம் - பற்றுக்கோடிலி

(அ. சி.) துவாதச மார்க்கம் - பன்னிரண்டு ஆதாரங்களின் வழி - ஆதாரங்கள் 6. நிராதாரங்கள் 6. அவை மண்டலம் 3 -ம், சமனை - உன் மனை அதீதம் 3 - ம். சமயம் - சகமார்க்கம். திருமகள் வெருவும்-இலக் குமி அச்சப்படுவாள். (உ)

**1463.** யோகச் சமாதியின் உள்ளே யகலிடம்
யோகச் சமாதியின் உள்ளே யுளரோளி
யோகச் சமாதியின் உள்ளே யுளசத்தி
யோகச் சமாதி யுகந்தவர் சித்தரே.

---

1. அவ்வித். திருக்குறள், கஉள.

(ப. இ.) தோழமை நெறியாகிய சகமார்க்கத்தில் சமாதியாகிய நிட்டையிலிருப்போர்க்கு, அவர் உள்ளத்தின்கண் திருவருட்கண்ணால் பரந்த உலகங்கள் காணப்படும். அதுபோல் உள்ளொளியாகிய பேரொளி தோன்றும். அவ் வுள்ளத்தின்கண் திருவருளம்மை காட்சியருள்வள். இச் சமாதியின் உயர்ந்தோர் அனேத்துச் சித்தியும் அடைவர். அவர்களே சித்தரெனப்படுவர்.

(அ. சி.) யோகச் சமாதி - சகமார்க்கம். (கூ)

**1464.** யோகமும் போகமும் யோகியர்க் காகுமால்
யோகஞ் சிவரூபம் உற்றிடும் உள்ளத்தோர்
போகம் புவியிற் புருடார்த்த சித்திய
தாகும் இரண்டும் அழியாத யோகிக்கே.[1]

(ப. இ.) அகத் தவமாம் யோகமும் அதன் புறப்பொலிவாம் போகமும் யோகியர்க்கு எய்துவன. அகத்தவம் சிவவடிவம் எய்துதல். புறப் பொலிவு நம்பி ஆரூரரும் நங்கை பரவையாரும் போன்று சிவத்தொண்டு மறுவாச் சீர்மையுடன் அனேத்துயிர்க்கும் அருள்தாங்கி இம்பர்மனேத் தவம்புரிதல் இதுவே உயிர்க்கு உறுதிதரும் அறம், பொருள், இன்பம், வீடுபேறென்னும் நிலே எய்துவதற்கு வாயிலாகும். இவ்விரு நிலேயும் அழியாச் செவ்விசேர் யோகியர்க்கு ஒருங்கு எய்துவன. அழியாத யோகியர் சிவவடிவம் எய்திய உள்ளத்தராவர்.

(அ. சி.) புருடார்த்தம் - அறம், பொருள், இன்பம், வீடு. இரண்டு - யோகம், போகம். (எ)

**1465.** ஆதார சோதனே யாறுடி சுத்திகள்
மேதாதி யீரேண் கலந்தது விண்ணெளி
போதா லயத்துப் புலன்கர ணம்புந்தி
சாதா ரணங்கெட லாஞ்சக மார்க்கமே.[2]

(ப. இ.) ஆறு ஆதாரங்களேயும் திருவருள் துணேயால் கண்டு மேல் நோக்குதல் நாடி சுத்திகளாகும். சுத்தி - உண்மையோர்தல். மேதை முதலேழ் முதற் பொருள்களும் பதினெறு கலேகளும் கலந்த கலப்பும். பரவொளிப் பரப்பும். அறிவுநிலேயத்துள் காணப்படும் ஐம்புலன் அந்தக் கரணம் நான்கு ஆகியவைகளும். ஆய்தல் - சீல 'நிலேயினேத் தாண்டுதல். இவை தோழமை நெறியாகும். ஏழ் முதற் பொருள்கள் - சாரம், செந்நீர் ஊன், கொழுப்பு, எலும்பு. மூளே, வெண்ணீர் என்பன. இவற்றை இரசம், இரத்தம். மாமிசம், மேதசு, அத்தி, மச்சை, சுக்கிலம் எனவுங் கூறுப. முதற்பொருளேத் தாது என்ப.

(அ. சி.) மேதாதி - மேதை முதலிய தாதுக்கள். ஈரெண் - பதினெறு கலேகள். விண்ணெளி - சூரிய சந்திர ஒளி. போதாலயம் - ஞான ஆலயம். சாதாரணம் - சீவ இயல்பு. (இ)

---

1. தென்னவ. கஉ. தடுத்தாட்கொண்ட, கஅக.
,, நாடுகளிற். சிவஞானசித்தியார், கஐஉ - கூ.
,, போகியர. சிவஞானசித்தியார், க. உ - ஊஉ.
2. மேதாதி. கஐ. திருமந்திரம், கஐசகூ.

**1466.** பிணங்கிநிற் கின்றவை யைந்தையும் பின்னே
அணங்கி யெறிவ னயிர்மன வாளாற்
கணம்பதி னேட்டுங் கருதும் ஒருவன்
வணங்கவல் லான்சிந்தை வந்துநின் ரூனே.[1]

(ப. இ.) ஆருயிர்கட்கு உடலாய் அவற்றுடன் மாறுபட்டு நிற்கின்ற இருபத்தைந்து மெய்களையும் அவ்வுயிர் அகத்தவத்தால் எய்தும் கூரிய ஞான வாளால் வருத்தி எறியும். பதினெண் குழுவினரும் கைகூப்பி வணங்கித்தொழும் சீரும் சிறப்பும் வாய்ந்த ஒப்பில் சிவபெருமானை வணங்கவல்லவர் உள்ளத்தின்கண் அவன் வெளிப்பட வந்தருள்வன். கணம் பதினெட்டு: 'அமரர் சித்த ரசுரர் தைத்தியர், கருடர் கின்னரர் நீருதர் கிம்புருடர், காந்தருவ ரியககர் விஞ்சையர் பூதர், பசாசர் அந்தரர் முனிவ ருரகர் ஆகாய வாசியர் போகபூ மியரெனப், பாகு பட்டன பதினெண்கணமே.' (பிங்கலந்தை, கூஉ.) இருபத்தைந்து மெய்களும் மாறுபட்டு நிற்கும் உண்மையினை நம் மெய்கண்டார் குறிப்பிற் புலப்படுத்துவார் 'அன்றும் புலனுய் அஞ்செழுத்தை'. என்றருளினர். இது போன்று மெய்கண்டார் செந்தமிழ்ச் சிவஞானபோதத்தின்கண் காணப்படும் ஒற்றுமைகள் பல. அவை அங்கங்கே வரும் அடிக்குறிப்பிற் காண்க.

(அ. சி.) அணங்கி - வருத்தி (சு)

**1467.** வளங்கனி யொக்கும் வளநிறத் தார்க்கும்
வளங்கனி யொப்பத்தார் வாய்மைய ஞகும்
உளங்கனிந் துள்ள முகந்திருப் பார்க்குப்
பழங்கனிந் துள்ளே பகுந்துநின் ரூனே.

(ப. இ.) வளம் கனி என்பது வளம் கன்னி என்பதன் இடைக்குறை. வளந்தரும் கன்னியாகிய திருமகள் மனமொப்பி மார்பில் வீற்றிருக்கும் திருமால் வளமிக்க களங்கனியொத்த நிறமுடையவராவர். அத் திருமாலுக்கும் முதன்மை வாய்ந்த மெய்ப்பொருளாயுள்ளவன் சிவன். சிவபெருமான் வழிபாட்டினுல் உள்ளங் கனிந்து உயர்ந்திருப்பர் மெய்யடியார். திருவடிப பேரினபப் பழங்கனிய அம் மெய்யடியார்க்கு அதனைப் பகிர்ந்துகொடுத்து உடனின்றருள்வன் அச் சிவன்.

(அ. சி.) வாய்மையன் - தன்மையன். (எ)

---

1. ஞானவாள். அ. திருப்படை எழுச்சி, க.
,, ஒன்றறிந்த. சிவஞானபோதம், கூ. கூ - க.

# 11. சற்புத்திர மார்க்கம்

(மகன்மை நெறி)

1468. மேவிய சற்புத் திரமார்க்க மேதொழில்
தாவிப்ப தாஞ்சக மார்க்கஞ் சகத்தொழில்
ஆவ திரண்டும் அகன்று சகமார்க்கத்
தேவியோ டொன்றல் சன்மார்க்கத் தெளிவதே.[1]

(ப. இ.) தோழமை நெறியாகிய சகமார்க்கத்தை நிலைநிறுத்துவது மகன்மை நெறியாகிய சற்புத்திர மார்க்கமாகும். சகமார்க்கமாகிய அகத் தவமும்மனைத் தவமும் ஆகிய இரண்டும் காதன்மை நெறியாகிய சன்மார்க்க அடிப்படையாகும். அகத் தவம் - யோகம். மனைத் தவம் - சகத்தொழில்.

(அ. சி.) இம் மந்திரம் - சற்புத்திர மார்க்கம், சக மார்க்கம், சன் மார்க்கம், ஒன்றுக்கொன்று அடிப்படை என்று கூறுகிறது. (க)

1469. பூசித்தல் வாசித்தல் போற்றல் செபித்திடல்
ஆசற்ற நற்றவம் வாய்மை அழுக்கின்மை
நேசித்திட் டன்னமும் நீசுத்தி செய்தன்மற்
ரூசற்ற சற்புத் திரமார்க்க மாகுமே.[2]

(ப. இ.) மகன்மை நெறிநிற்பார்க்குத் திருமுறை வழியாக வழி பாடு செய்தலும், திருமுறை எழுதுதல் அதனை ஓதுதல். அறுவகைப் போற்றித் தொடர் புகன்று அருசசித்தல், திருவைந்தெழுத்தைக் கணித் தல். ஆகியவையும் குற்றமறச் செய்யும் நற்றவமாகும். வாய்மையும் அழுக்காறின்மையும் கைக்கொள்ளவேண்டிய தூய்மைகளாகும். அன்ப மைத்துப் படைப்புக் குழைத்தல் நைவேத்தியமாகும். திருமுழுக்கு முதலியன திருவுருவின்மாட்டுச் செய்தல் தூய்மையாகும். இவற்றோ டிணைந்த மற்றவையும் மகன்மை நெறியாகும் போற்றித் தொடர் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளிய போற்றித் திருத்தாண்டகம் ஐந்து திருவாதவூரடிகள் பாடியருளிய போற்றித் திருவகவல் ஒன்று ஆக ஆறும் திருமுறைக்கண் தனிமுதன்மையாகக் காணப்படுகின்றன. இவை முறையே ஐந்தொழிற்றனிமைக்கும் ஒருங்காம் இனிமைக்கும் வாய்ப்பாக அமைந்த அருளிப்பாடாகும். தனித்தனி ஐந்தொழிற்கு முறையே பிள்ளை யார், முருகவேள், ஆலமர் கடவுள், அம்மை, சிவக்கொழுந்து ஆகிய ஐம்பெரும் படிமங்களுக்கும் ஆம் திருவாசகப் போற்றித் திருவகவல் ஐம்பெருந்தொழிலும் ஒருங்கு காணப்படும் அம்பலவாண அரும்பெரும் படிவத்துக்கு ஆம். போற்றித் திருத்தாண்டகங்களின் முதல் நினைப்பு முறையே வருமாறு: க. பொறையுடைய, உ. எல்லாஞ், கூ. பாட்டான, ஃ. வேற்றுகி, இ. கற்றவர்களுண்ணும் என்பனவாம். (உ)

1. மனையறத்தி கஉ. சம்பந்தர், ககூ.
2. மற்று நீ. கஉ. தடுத்தாட்கொண்ட, எ0.
,, ஏடங்கை. க0. திருமந்திரம், க0ஃகூ.

**1470.** அறுகாற் பறவை அலர்தேர்ந் துழலும்
மறுகா நரையன்னந் தாமரை நீலங்
குறுகா நறுமலர் கொய்வன கண்டுஞ்
சிறுகால் அறுநெறி சேரகி லாரே.[1]

(ப. இ.) வண்டுகள் தேனையுண்டு இன்புறும்பொருட்டுத் தெவிளாத பூக்களை நாடித்திரியும். அதுபோல் வெள்ளை அன்னங்களும் தாமரை நீலரை நாடித்திரியும். அத்தகைய சிறப்புப் பொருந்திய தாமரை நீலம் முதலிய பூக்களைத் தக்க செவ்வியில் மெய்யடியார்கள் புனல் முழுகி வாய் புதைத்து உள்ளம் திருவைந்தெழுத்தோதிக் கொய்வன கண்டும் காலமுண்டாகவே சிலர் அறனெறியாகிய செந்நெறி சேராது பின்னிற்பர்.

(அ. சீ.) அறுகாற் பறவை - வண்டு. மறுகா - அலைந்து. தரை அன்னம் - வெள்ளை அன்னப்பறவை. சிறு கால்-இளம் பருவம். (கூ)

**1471.** அருங்கரை யாவது அவ்வடி நீழற்
பெருங்கரை யாவது பிஞ்ஞக ணீணை
வருங்கரை யேகின்ற மன்னுயிர்க் கெல்லாம்
ஒருங்கரை யாயுல கேழினைத் தானே.[2]

(ப. இ.) ஆருயிர்கள் பிறவிப் பெருங்கடல் நீந்திக் கரைபேறும் அரிய கரை சிவபெருமான் திருவடிநீழலாகும். அனைத்துயிர்க்கும் பேரெல்லையாகத் திகழ்வது சிவபெருமான் ஆணையாகும். வினைக்கீடாக வரும் பிறப்பெழுவகையுட் புகும் உயிர்கட்கெல்லாம் ஒப்பில்லாத ஒரு தனிவேந்தாய்த் தோன்றிய உலகனைத்தினும் ஒப்பறின்றருளினன் சிவன்.

(அ. சீ.) அருங்கரை - சம்சாரக் கடலுக்குக் கரை. வருங்கரை - எழும் பிறப்புக்கள். அரையாய் - இறைவனுய். (சு)

**1472.** உயர்ந்தும் பணிந்தும் முகந்துந் தழுவி
வியர்த்தும் அரனடிக் கேமுறை செய்மின்
பயந்தும் பிறவிப் பயனது வாகும்
பயந்து பரிக்கிலப் பான்மைய னுமே.[3]

(ப. இ.) திருவேடப் பொலிவால் உயர்ந்தும், சிவனடியார் திருவடி நிலையினைப் பணிந்தும், அதனால் உள்ளம் உவந்தும், திருவைந்தெழுத்தினை அகம் தழுவியும். அதனால் வியப்புற்றும் சிவபெருமான் திருவடிக்கே திருத்தொண்டு செய்வோம் என்பாரே மகன்மை நெறியினை தாவர். அப் பணியினை அன்புடன் செய்யுங்கள். பிறவிக்கு அஞ்சிப்

1. பெரும்புலர். அப்பர், சு. கூ க - சு.
,, வைகறை. கஉ. எறிபத்தர், கூ.
,, திருநாமம். அப்பர், கூ. கூடு - க
,, அன்பு. கஉ. ஏயர்கோன், உஉ கூ.
2. துன்பக். அப்பர், சு. கஉ - கூ.
3. அஞ்சி. ,, இ. உகூ - க.

பெருமான் அடியிணையைச் சேரும் பெரும்பேறதுவாகும். அன்பும் அச்ச முங்கொண்டு அவன் திருவடியிணை நெஞ்சத்தமைத்துத் தொழுதால் சிவ பெருமானும் அவ்வாருயிரினை முன்னின்று தாங்குபவனவன். அன்பும் அச்சமுங்கொண்டு வழிபடும் முறையினைத் திருவள்ளுவநாயனார் ''அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க, இகல்வேந்தர்ச் சேர்ந்து தொழுகு வார்'' (சுகக) என்னுந் திருப்பாட்டால் குறித்தருளினர், மேலும் ''யாவர்க்கும் மேலாம் அளவிலாச் சீருடையான்'' என்பதனால் அச்சமும், ''யாவரும் பெற்றறியா இன்பத்துள் வைத்தான்'' என்பதனால் அன்புங்கொண்டு வழிபடுதல்வேண்டும் என்பதாம். அல்லதூஉம், சிறப் பின்பாற் கொள்ளும் அன்பும், பிறப்பின்பாற் கொள்ளும் அச்சமும் அகலாவுள்ளத்தராய் வழிபடுதலென்றலும் ஒன்று.[1]

(அ. சீ.) பயந்து பரிக்கில் - பயம் பத்தியுடன் சற்புத்திர மார்க்கத் தைக் கைப்பற்றினால். (இ)

1473. நின்று தொழுவன் கிடந்தேம் பிரான்தன்னை
என்றுந் தொழுவன் எழிற்பரஞ் சோதியைத்
துன்று மலர்தூவித் தொழுமின் தொழுந்தோறுஞ்
சென்று வெளிப்படுந் தேவர் பிரானே.[2]

(ப. இ.) பணிசெய்து கிடந்து அருள்வழிநின்று எம்பிரானாகிய சிவ பெருமானைத் தொழுவேன். அப்பொழுது சிவப் பேரொளி தோன்றும். அந்த எழிற்பெருஞ்சுடரை என்றும் இடையருது தொழுவன். மெய்யன் பர்களே, நீங்களும் மிக்க மலர்கொண்டு சிவபெருமான் திருவடியில் திரு மாமுறை ஓதி வழிபாடு செய்யுங்கள். நீங்கள் கைகூப்பி வலம்வந்து கீழ்வீழ்ந்தெழுந்து தலைவணங்கித் தொழுந்தோறும் தயிரில் வெளிப்படும் வெண்ணெய் போன்று தேவர்க்கும் பிரானாகிய சிவபெருமான் உங்கள் உள்ளத் தாமரையின்கண் வெளிப்பட்டருள்வன். (சு)

(அ. சீ.) சென்று - உதயமாகி.

1474. திருமன்னுஞ் சற்புத் திரமார்க்கச் சரியை
உருமன்னி வாழும் உலகத்தீர் கேண்மின்
கருமன்னு பாசங் கைக்கூம்பத் தொழுது
இருமன்னு நாடோறும் இன்புற் றிருந்தே.

(ப. இ.) கிடைத்தற்கரிய மக்கள்யாக்கை பெற்ற உலகவரே கேளுங் கள். மகன்மை நெறிக்கண் ஒழுகுவார்க்கு வீடுபேறு எளிதின் எய்தும். பிறவிக்கு வித்தாகிய ஆணவமலப்பாசம் இம் மகன்மை நெறியினரைக் கண்டு செயலற்றொடுங்கும். அதனால் நாள் தோறும் திருவைந்தெழுத்து ஓதித்தொழுது இன்புற்றிருங்கள் மகன்மைநெறி - சற்புத்திர மார்க்கம். கைகூம்ப-செயலற்றொடுங்க. கை - செயல். (எ)

---

1. அஞ்சி யாகிலும். தி. உகூ - கூ.
2. விறகிற். அப்பர், தி, கo-கo.
,, தின்னுணர. சிவஞானபோதம். கஉ. கூ - கூ.

# 12. தாச மார்க்கம்

(அடிமை நெறி)

1475. எளியனல் தீப மிடல்மலர் கோய்தல்
அளிதின் மெழுக லதுதூர்த்தல் வாழ்த்தல்
பளிமணி பற்றல் பன்மஞ் சனமாதி
தளிதொழில் செய்வது தான்தாச மார்க்கமே.[1]

(ப. இ.) அடியார்க்கு எளியனாய் ஒழுகுதல், திருக்கோவில்களில் தல்ல விளகிடுதல், திருநந்தனவனத்தில் மலர்கொய்தல், அன்புடன் மெழுகல், திருவலகிடுதல், திருமுறைத் திருப்பதிகம் பாடியபடி பொருள் சேர் புகழை ஒதி வாழ்த்தல், திருக்கோவிற்கண் உள்ள அசையாமணி போன்ற விளக்கமிக்க பெரிய மணிகளை அடித்தல், திருமுழுக்குக்கு வேண்டிய திருத்தநீர் முதலியன கொணர்தல், இன்னும் திருக்கோவில் திருத்தொண்டு பலவும் புரிதல் அடிமைநெறி என்ப. பளி; பள்ளி என்பதன் இடைக்குறை. பள்ளி - திருக்கோவில். தளி - திருக்கோவில். அடிமைநெறி - தாசமார்க்கம்.

(அ. சி) எளி - பணிவாக. அளிதின் - அன்புடன். தூர்த்தல் - திருவலகு இடல். பளி - பள்ளி; கோவில். (க)

1476. அதுவிது வாதிப் பரமென் றகல்வர்
இதுவழி யென்றங் கிறைஞ்சின ரில்லை
விதிவழி யேசென்று வேந்தனை நாடும்
அதுவிது நெஞ்சில் தணிக்கின்ற வாறே.[2]

(ப. இ.) ஆதிப்பரம் அது இது என்று ஐயுற்றுத் தெளியாது நீங்குவர். வாய்மைச் செந்நெறி இது என்று தெளிந்து வேந்தனும் சிவபெருமானை வழிபட்டுத் தொழுதாரில்லை. தமிழ்த் திருமாமறை திருமுறை வழியே உண்மை கண்டு ஓர்ந்து செந்நெறிச் சென்று சிவபெருமானை நாடுங்கள். அதுவே உள்ளத்தில் தோன்றும் ஐயுறவை அகற்றித் தெளிவினைத் தருவதாகும். தணித்தல் - நீக்குதல். திருமாமறை - தமிழ் வேதம். திருமுறை - தமிழாகமம். வேந்தன் - மருதநிலத் தெய்வம்.

(அ. சி.) விதி வழி - தமிழ் வேதம்; தமிழ் ஆகமங்கள் விதித்தபடி. வேந்தன் - சிவபெருமான். (உ)

---

1. திருக்கோயி. அப்பர், சு. கஅ - இ.
,, நல்ல. கஉ. கணநாதநாயனார், கூ.
,, தாதமார்க். சிவஞானசித்தியார், அ. உ - கூ.
,, நீறணிந்தார், கஉ. திருநாவுக்கரசர், சுஅ.
,, மூவா. அப்பர், ச. ககச - கூ.
2. அல்லலாந் - தாயுமானார். கஇ. தேன்முகம், சு.
,, வேந்தன் : சிவபெருமான். (மாயோன், தொல். பொருள். இ).
,, செத்துச். அப்பர், இ. க00 - உ.

1477. அந்திப்பன் திங்க ளதன்பின்பு ஞாயிறு
சிந்திப்பன் என்றும் ஒருவன் செறிகழல்
வந்திப்ப வானவர் தேவனே நாடொறும்
வந்திப்ப தெல்லாம் வகையின் முடிந்ததே.[1]

(ப. இ.) திருவருள் துணையால் திங்களாகிய இடகலையையும் ஞாயிறாகிய பிங்கலையையும் அடக்குவன். அடக்கி எந்நாளும் ஒப்பில்லாத சிவபெருமானின் திருவடியிணையை நாடுவன். தேவர் முதல்வனாகிய அச்சிவபெருமானையே நாடொறும் வணங்குவன். அவ்வாறு வணங்கும் திறங்களெல்லாம் சீலம், நோன்பு, செறிவு, அறிவு, என்னும் நன்னெறி நான்கு வகையில் அடங்கும். இஃது உயிராவணமிருந்து உற்று நோக்குதலாம்.

(அ. சி.) அந்திப்பன் - அடக்குவேன். திங்கள் ஞாயிறு - இடகலை பிங்கலை. வகை - நான்கு வகையான மார்க்கங்கள். (உ)

1478. அண்ணலே வானவர் ஆயிரம் பேர்சொல்லி
உன்னுவர் உள்மகிழ்ந் துண்ணின் றடிதொழக்
கண்ணவ னென்று கருது மவர்கட்குப்
பண்ணவன் பேரன்பு பற்றிநின் றானே.[2]

(ப. இ.) ஒரு நாமம் ஒருருவம் ஒன்றும் இல்லாச் சிவனே வானவர்கள் ஆயிரம் திருப்பெயர் சொல்லி அண்ணல் என்று நினைத்து வழிபடுவர், அச் சிவபெருமானே நாம் திருவடி தொழுதல் வேண்டுமென்று எண்ணினால் அப்பொழுதே அவன் மகிழ்ந்து தொழுதற்குத் துணையாய் உயிர்க்குயிராய் உண்ணின்று அவனே அறிவிக்கின்ற கண்ணவன். அங்ஙனம் கருதுவார்க்குப் பண்ணவனாகிய அச் சிவபெருமான் அவ்வுயிரினிடத்துப் பேரன்பு பூண்டு அவ்வுயிரினைப்பற்றி நின்றான். கண்ணவன்: அவன் கண்; அவனே அறிவிக்கின்ற கண்ணாவான். (ஊ)

(அ. சி.) உண்ணின்று - மனமார.

1479. வாசித்தும் பூசித்தும் மாமலர் கொய்திட்டும்
பாசிக் குளத்தில்வீழ் கல்லா மனம்பார்க்கின்
மாசற்ற சோதி மணிமிடற் றண்ணலே
நேசத் திருந்த நினைவறி யாரே.[3]

(ப. இ.) பாசிக்குளம் போலும் கருக்குழியில் வீழ்ந்து உழலும் நன்னெறி கல்லாத மனத்தோரைப் பார்க்கின், நல்லார் திருமுறையினை ஓதியும், அம் முறையினை எழுதிப் பூசித்தும், அதன்வழியாக நறுமலர்

1. உயிரா. அப்பர், கூ. உஞ - க.
2. கண்ணவன்காண். அப்பர், கூ. ஙூ - க.
,, பேராயிரம் பரவி. அப்பர், கூ. ஙச - அ.
3. ஓதி உணர்ந்தும். திருக்குறள், அகூச.

கொய்தும், இயல்பாகவே மாசற்ற பேரொளிப்பிழம்பாம் திருநீகலண்டப் பெருமானேப் பேராப்பெருங் காதல்கொண்டு வழிபட்டிருக்குங் கருத்தினே அவர் அறியாதவராவர் என்பதாம். நல்லார் - ஞானி.

(அ. சி.) பாசிக்குளம் - கருப்பாசயம். (இ).

1480 எவ்விடத் தும்பணி யின்மைகண் டுள்ளவர்
எவ்விடத் தும்பணி யீசன் பணியென்றே
அவ்விடத் தைங்கரு மத்தால் அறிதலால்
உவ்விடத் தோருக்கோர் உபாய மில்லையே.[1]

(ப. இ.) திருவடி உணர்வுசேர் மெய்யடியார் எந்த இடத்தும் இறைவனேயின்றித் தமக்கொரு பணியின்மை கண்டுள்ளவராவர். தாம் செய்யும் பணியனேத்தும் ஆண்டவன், அடிமையாகிய தம்மைக்கொண்டு செய்விக்கும் பணியென்றே நினேவர். இது 'நின்னடியேன் செய்பணிகள் நின்தொண்டே நின்னருளே, நின்னடிக்கே ஒப்புவித்தேன்' என்னும் உண்மையினே உணர்த்தும். அங்ஙனம் அம் மெய்யடியார் அறிவதூஉம் உலகமும், உலகத்தொழில்களும், உயிர்ச் செயல்களும் ஆண்டவன் ஐந்தொழிலின்கண் அடங்கும் உண்மையறிவதால் என்க; இதனே யொழித்து எவ்விடத்தோர்க்கும் பேறெய்தும் வழிவகை வேறில்லே என்க. 'என்கடன் பணிசெய்து கிடப்பதே' என்னும் செந்தமிழ்ச் சிறப்பு மறையின் சீரிய பொருள் உலகிடை ஊர்ந்துசெல்ல ஊர்தி, உழைப்பதற்குக் கருவி, உறைவதற்கு இல்லம் முதலியன தருவார்க்குக் கொடுக்கும் கூலிப் பணம்போன்றுகும். இதனே வருமாறு நினேவுகூர்க.

ஊர உழைக்க உறையத் தருங்கருவிக்
காரத் தருங்குறி யாரறியார்—சாரத்
தருமுடற்கு நற்கோள் தருதல்சிவத் தொண்டே
உருகுமனத் தன்ப ருரை. (சு).

---

# 13. சாலோகம்

## (சிவனுலகம்)

1481. சாலோக மாதி சரியாதி யிற்பெயஞ்
சாலோகஞ் சாமீபந் தங்குஞ் சரியையான்
மாலோகஞ் சேரில் வழியாகுஞ் சாரூபம்
பாலோகம் இல்லாப் பரனுரு வாமே.[2]

(ப. இ.) சிவலுலகம், சிவனண்மை, சிவனுருவம், சிவனும் பெரு வாழ்வு என்னும் நான்கும் சிலம், நோன்பு, செறிவு, அறிவு என்னும்

1. சலமிலஞ்ய். சிவஞானசித்தியார், க0. உ-உ.
,, நாமல்ல. சிவஞானபோதம். க0. உ-க.
,, நின்னேபெப். அப்பர், ச. ககக-ச.
2. சன்மார்க்கம். சிவஞானசித்தியார், அ. உ - அ.

நானெறியின் பெறுபேறுக எய்துவன சிவவுலகநிலே சிலத்தால் எய்தப் பெறும். சிவணண்மைநிலே நோன்பால் மாவுலகத்தைச் சார்வதால் எய்தும். அந் நோன்பு வழித்தாம் செறிவினுல் விரிவாம் உலகத் தொடர்பில்லாத சிவத்தினுருவம் எய்தும்.

(அ. சி.) சரியையால் சாலோகம்பெறலாம் என்றது இம்மந்திரம். (க)

1482 சமயங் கிரியையிற் றன்மனங் கோயில்
சமய மனுமுறை தானே விசேடஞ்
சமயத்து மூலந் தனேத்தேறன் மூன்றுஞ்
சமயாபி டேகந் தானுஞ் சமாதியே.

(ப. இ.) நோன்மைநிலேயில் சிவனுழைவாகிய சமயம் 'நமசிவய' என்னும் திருவெழுத்தைந்தால் தன் உள்ளமே திருக்கோயிலாகக் கொள்ளுதல். சிவநோன்மையாகிய விசேடம் 'சிவயநம' என்னும் திருவைந்தெழுத்தே. திருக்கோவில் சிவ நுண்மையாகிய நிருவாணம். 'சிவயசிவ' என்பதே திருக்கோவில் சிவ நுகர்மை என்னும் திருமுழுக்கு அல்லது அபிடேகம். 'சிவசிவ' என்பதே திருக்கோவில் என்று வழி படுதல். இந் நுகர்மை நிலேயிலைச் சிவனும் சமாதி என்ப. சமாதி - நொசிப்பு. (உ)

---

# 14. சாமீபம்

(சிவணண்மை)

1483. பாசம் பசுவான தாகும்இச் சாலோகம்
பாசம் அருளான தாகும்இச் சாமீபம்
பாசஞ் சிரமான தாகும்இச் சாரூபம்
பாசங் கரைபதி சாயுச் சியமே.

(ப. இ.) பாசம் பசுப்போல் நெகிழ்ச்சியுறுநிலே சிவ அண்மையில் சிவவுலகமாகும். அப்பாசம் அருள்போல் வருத்துவதொழிந்து பொருந்து மளவானிற்பது சிவணண்மையாகும். பாசம் தோற்றத்தளவா னிற்பது சிவவுருவமாகும். பாசம் அத் தோற்றமும் ஒடுங்கிநிற்பது சிவஞதலாகும்.

(அ. சி.) பாசம் பசுவானதாகும் - செயலற்ற பாசம் பசுப்போன்று நெகிழ்ச்சியுறும். பாசமருளானதாகும்-பாசம் வருத்தும் தன்மையுறும். பாசம் சிரமான-பாசம் அதிகார மாத்திரையாய் நிற்கும். பாசம் கரை-பாசம் அற்று ஒழிதல். (க)

---

# 15. சாரூபம்

(சிவனுருவாதல்)

1484. தங்கிய சாரூபந் தானேட்டாம் யோகமாந்
தங்குஞ் சன்மார்க்கந் தனிலன்றிக் கைகூடா
அங்கத் துடல்சித்தி சாதன ராகுவர்
இங்கிவ ராக விழிவற்ற யோகமே.

(ப. இ.) எண்வகை உறுப்புக்களானமைந்த சிவயோக நெறியான் எய்துவது சிவவுருவம். இந்நிலையும் சீலம், நோன்பு செறிவு, அறிவு என வழங்கப்பெறும் நன்னெறியாகிய சன்மார்க்கத்தினன்றிக் கிடையாது. அச்சிவயோகர் உடல் உறுப்புக்களோடு கூடியிருப்பினும் சித்திப்பயிற்சி பெற்றவராவர்.

(அ. சி.) யோகமார்க்கத்தால் சாரூபம் கிட்டும் என்றது இம் மந்திரம். அங்கத்துடல் - உறுப்புக்கள் அமைந்த உடல். (எ)

1485. சயிலலோ கத்தினைச் சார்ந்த பொழுதே
சயிலம தாகுஞ் சராசரம் போலப்
பயிலுங் குருவின் பதிபுக்க போதே
கயிலை இறைவன் கதிர்வடி வாமே.[1]

(ப. இ.) உலகத்து ஒப்பில் ஒருமலை என்று சொல்லப்படும் பொன் மலையினைச் சார்ந்த இயங்கு தினையும் நிலைத்திணையுமாகிய பொருள்க ளெல்லாம் அப்பொன்வண்ணமாதல்போல் சிவகுரு வீற்றிருக்கும் திருவூர் புகுந்தபோதே கயிலைமலையில் வீற்றிருக்கும் சிவபெருமானின் இயற்கை அறிவொளி வடிவமாவன், மெய்கண்டானுகிய மாணவன். சயிலலோகம்: லோகசயிலம். சயிலம் - மலை. சயிலாதி : மலைகளுள் முதன்மையான கைலைமலை.

(அ. சி.) சயிலலோகம் - சிலை, சைலம், சயிலம் அஃதாவது மேரு. "மேருவைச் சார்ந்த காகமும் பொன்னும்" என்னும் பழமொழிப்படி "சயிலமதாகும் சராசரம் போல" என்றார். (உ)

---

# 16. சாயுச்சியம்

(சிவனுதல்)

1486. சைவஞ் சிவனுடன் சம்பந்த மாவது
சைவந் தனையறிந் தேசிவஞ் சாருதல்
சைவஞ் சிவந்தன்னைச் சாராமல் நீவுதல்
சைவஞ் சிவானந்தஞ் சாயுச் சியமே.[2]

---

1. படியில், கஉ. வெள்ளாளை, உ.
சுருக்கமில், பாப்பருங்கலக்காரிகை, கூ.
2 கந்தமலர்க். அப்பர், சு. அ - ஆ.
, முத்திநெறி. அ. அச்சோப்பதிகம், க.

(ப. இ.) சிவனும் நிலையில் முதனிலை சைவம் சிவனுடன் தொடர்புற்று நிற்றல். இரண்டாம்நிலை அந்நெறியின் உண்மை உணர்ந்து சிவன் அண்மையிற் சார்ந்துநிற்றல். மூன்றும்நிலை சார்ந்துநிற்றலைக் கடந்து முழுநீறு பூசிய முனிவர்போன்று வேறன்மையாக விரவிநிற்றல். இந்நிலையே சைவத்தின்கண் ஓதப்படும் சிவனுர் திருவடிப் பேரின்பம் என்னும் சாயுச்சியமாகும். 'தோல்மறைந்து வெண்ணீறு தோன்றல் பொருள் வேறன்மைச், சால்புணர்ப்புச் சாற்றுந் தனித்து.'

(அ. சி.) சாராமல் நீவுதல் - சார்ந்து நில்லாமல் இரண்டறக் கலத்தல். (க)

**1487.** சாயுச் சியஞ்சாக் கிராதீதஞ் சாருதல்
சாயுச் சியமுப சாந்தத்துத் தங்குதல்
சாயுச் சியஞ்சிவ மாதல் மூடிவிலாச்
சாயுச் சியமனத் தானந்த சத்தியே.

(ப. இ.) சிவனும் பெருநிலையாகிய சாயுச்சியம் சார்தல் மேலாலவத்தையில் நனவில் உயிர்ப்படங்குதல். வேண்டுதல் வேண்டாமையிலாமையாகிய உவர்ப்புநிலை உலகங் கடந்தநிலை. இந்நிலை உபசாந்தநிலை என்றும் கூறப்படும். இதுவே சிவனும் பெருநிலையில் தங்குதல். இவ்வுவர்ப்பு நிலை, 'காட்டல் வெறுப்புப்புக் காட்டாமை ஆம்விரும்பிங், கூட்டல் உவர்ப்பாம் உணர்' என்பதனுன் உணரலாம். ஊட்டல் - ஒப்பக் காண்டல். சிவமாம் பெருவாழ்வே எய்துதல் மூடிவிலாச் சாயுச்சியம். இதன்கண் சிவபெருமானது திருவருட் பேரின்பமாகவே திகழ்தல். இவ்விழுப்பேறு யான், எனது, ஆன், அறிவு என்னும் இருமாத்திரைச் சொற்பொருளாய் ஆருயிர் நிற்குங்காறும் பெறுதல் இயலாது. ஆனல் டென், அன்பு என்னும் ஒரு மாத்திரைச் சொற்பொருளாயவழி எய்துதல் இயையும். இயையவே விழுமிய முழுமுதற் சிவபெருமானும் கண், இன்பு என ஒரு மாத்திரைச் சொற்பொருளாய் விளங்கியருள்வன்.[1]

(அ. சி.) உபசாந்தம் - விருப்பு வெறுப்பு இல்லாமை. (உ)

---

# 17. சத்திநிபாதம்

## (திருவருள் வீழ்ச்சி)

மந்தரம் (மிகுமட்டம்)

**1488.** இருட்டறை மூலை யிருந்த குமரி
குருட்டுக் கிழவனைக் கூடல் குறித்துக்
குருட்டினை நீக்கிக் குணம்பல காட்டி
மருட்டி யவனை மணம்புரிந் தாளே.[2]

(ப. இ.) அறியாமையாகிய இருள் சூழ்ந்த இவ்வுடலகத்து அறியாமையை நீக்கி அறிவை விளக்கும் திருவருட்குமரி மூலையிலிருப்பார்

1. சாத்தி அப்பர், இ. கூo - கூ
2. மூலை. திருவுந்தியார், கஉ.

போன்று மறைந்துறைந்தனள். அறிவுக்கண் விளங்காது குருடாக விருந்த ஆருயிர்க்கிழவனைக் கூடுதல் கருதி அவனுக்கு ஏற்பட்ட குருடாகிய அறியாமையை அகற்றிச் சிவபெருமானின் எண்குணங்களை யும் வண்ணமுறக் காட்டித் தன்மாட்டே பேரன்புகொள்ளுமாறு மயக்கி அவன்பால் சிவமணம் கமழும்படி தான் கூடியிருந்தனள்.

(அ. சீ.) இருட்டறை - அஞ்ஞான இருள் படர்ந்த சரீரம். குமரி - திருவருட் சத்தி. குருட்டுக் கிழவன் - ஞானக்கண்ணில்லாத ஆன்மா. அஃதாவது அஞ்ஞானமுள்ள சீவன். குருட்டினை அஞ்ஞானத்தை. மருட்டி - தெளிவு உண்டாக்கி. மணம் புரிந்தாள் - தங்கினள். (க)

1489. தீம்புல னென திசையது சிந்திக்கில்
ஆம்புல னையறி வார்க்கமு தாய்நிற்குந்
தேம்புல னென தெளிவறி வார்கட்குக்
கோம்புல னடிய கோல்லையு மாமே.[1]

(ப. இ.) சிவனடியின்பம் எய்துதற்குரிய நிலையினை எண்ணில் அந் நிலை திருவடியுணர்வாய் அவ்வுணர்வினை உணர்வார்க்கு இறவா இன்ப நுகர்வாம் சிவ அமிழ்தாய் நிற்கும். இத்தகைய இனிய உணர்வாகித் தெளிவறிவுடையவர்கட்குக் கோப்புலனுகிய சிவஞானம் எண்ணிய வாறே ஐம்புலனுகர்வின்பம் தரும் புறத்துப் பூங்காவொத்து அகத்துத் திகழும். கோப்புலன் கோம்புலன் என எதுகைநோக்கித் திரிந்தது. கோப்புலன் - உயர்ந்த ஞானம். கொல்லை - பூங்கா.

(அ. சீ.) தீம்புலன் - இன்பம் அனுபவிக்கும். தசை - சமயம். ஆம் புலனுய் - பொருந்திய அறிவாய். கோம்புலன் - சிவஞானம். (உ)

1490. இருள்நீக்கி எண்ணில் பிறவி கடத்தி
அருள்நீங்கா வண்ணமே யாதி யருளும்
மருள்நீங்கா வானவர் கோனெடுங் கூடிப்
பொருள்நீங்கா இன்பம் புலம்பயில் தானே.[2]

(ப. இ.) பழமலமாம் இருளைப் பிறைமதிபோல் நீக்கி, அதன் பொருட்டு அவ்வுயிர்க்கு நேர்ந்த பல பிறவிகளையும் கொடுத்துக் கடத்தி ஆதியாகிய தூபப்பாற்றல் திருவருள் நீங்காவண்ணம் உடனின்றருளும். அருளவே அவ்வுயிர் உன்மத்தம் அகலாத வானவர் கோனுகிய சிவபெரு மானுடன் கூடி என்றும் நிலைத்திருப்பதாகிய பேரின்பம் நுகரும். உயிர் நிலைக்களமாம் உடம்பாகவும் அவ்வருள் திகழும். புலம்பயில்: பயில்புலம் - உறையும் உடம்பு. (கூ)

1491. இருள்சூ ழறையில் இருந்தது நாடிற்
பொருள் சூழ் விளக்கது புக்கெரிந் தாற்போன்
மருள்சூழ் மயக்கத்து மாமலர் நந்தி
அருள்சூழ் இறைவனும் அம்மையு மாமே.

---

1. மாசில். அப்பர், தி. கo - க.
2. மன்னும். சிவஞானபோதம், கக. உ - உ.
.., முழுவதும். அ திருச்சதகம், எ.

(ப. இ.) புறவிருள் நிறைந்திருக்கின்ற அறையின்கண் உள்ள நுகர் பொருள்களை ஆராய்ந்து கைக்கொள்ளலுறுவார்க்கு அப்பொருளையும் தாடுவார் கண்ணையும் சூழ்ந்து ஒருங்கு விளக்கும் திருவிளக்கு விளங்கி நின்று எரிந்தாற்போன்று, அகவிருளாகிய மலமயக்கத்தால் அறிவு விளங்காத ஆருயிர் பேரின்பப் பெருவாழ்வு நல்கும் மெய்ப் பொருளாம் சிவத்தினைக்கூடி அழியா இன்பம் நுகர்தற்குத் திருவருள் விளக்கொத்து அவ்வுயிரின் அறிவினை விளக்கிச் சிவத்தினைக் காட்டித் திருவடியிற்கூட்டி வனப்பாற்றலாகத் துணைசெய்து நிற்கும். மெய்ப் பொருளாகிய அப் பெரும்நந்தி ஆருயிரின் நெஞ்சத் தாமரையில் வீற்றிருந்தருள்வன். அதனால் மாமலர்நந்தி எனப்படுவன். அப் பெருமான் ஆருயிர்களை ஆட்டலும் காட்டலும் கூட்டலும் ஊட்டலும் அவ்வுயிர்க்கு வாட்டமில் ஊணுமாய் விளங்குந் தன்மையினன். அதனால் அவன் ஒருவனே அம்மையப்பரென்னும் விட்டுநீங்கா ஒட்டியுறும் இரு நிலையும் உடையவனவன். மாமலர் சிவனடிமறவாத் தூயநெஞ்சம்.

(அ. சீ.) இருட்டறையில் விளக்கொளியால் பொருளைக் காண்பது போல, அஞ்ஞான இருள் படர்ந்த சரீரத்தில் திருவருட் சத்தியின் ஒளியால் சிவமாகிய பொருளைக் காணலாம் என்றது இம் மந்திரம். (ச)

## மந்தம்

## (மட்டம்)

**1492.** மருட்டிப் புணர்ந்து மயக்கமும் நீக்கி
வெருட்டி வினையறுத் தின்பம் விளைத்துக்
குருட்டினை நீக்கிக் குணம்பல காட்டி
அருட்டிகழ் ஞான மதுபுரிந் தாளே

(ப. இ.) திருவருளம்மை ஆருயிர்கள் தன்மாட்டு விருப்பம் கொள்ளும்படி அவ்வுயிர்களை மயக்கிக்கூடினள். அவளே அவ்வுயிர்கள் பழமலப் பிணிப்பால் மாயையின்கண் மயங்கிக்கிடந்த மயக்கினை நீக்கியருளினள். அச்சுறுத்தி வினைகளை அறுத்துத் திருவடியின்பத்தினை விளைத்தவளும் அவளே. அவளே ஞானக்கண் பெறுது அகக்கண் குருடாயிருந்த குருட்டினை நீக்கியருளினள். எய்தற்குரிய நன்மைகள் பலவற்றையும் காட்டித் திருவருள் வண்ணமாகிய சிவஞானத்தினைப் பதித்தருளினவளும் அவளே. அங்ஙனம் செய்தருளியவள் வனப்பாற்றலாகிய திருவருளம்மை. வனப்பாற்றல்: இதன் முதலெழுத்து வகரம். இதுவே 'சிவ' என்பதிலுள்ள வ. (க)

**1493.** கன்னித் துறைபடிந் தாடிய ஆடவர்
கன்னித் துறைபடிந் தாடுங் கருத்திலர்
கன்னித் துறைபடிந் தாடுங் கருத்துண்டேற்
பின்னைப் பிறவி பிறிதில்லை தானே.[1]

(ப. இ.) புறத்தே செந்தமிழ் நாட்டுத் தென்கோடிமுனையாகிய கன்னியாகுமரி என்னும் கன்னித்துறைத் திருத்தநீர் படிந்து ஆடியவர்,

1. புறந்தூய்மை. திருக்குறள், உகஅ.
,, கங்கை. அப்பர், தி. ஈக - உ.

அத்துடன் அமைந்து விடுகின்றனர். அஃது அகத்தே விளங்கும் திருவருள் நெறியாகிய கன்னித்துறை படிந்தாடுதற்கு வழியென்று நினைந்து ஆண்டுச் செல்லும் பயிலும் கருத்துடையரல்லர். அத்திருவருள் நெறிச் செல்லும் கருத்துண்டாகுமாஞல் அவர் பிறவாப் பெருநெறிபற்றிப் பிறப்பற்றுச் சிறப்புற்று வாழ்வர்.

(அ. சி.) கன்னித்துறை-சத்தி பொருந்துதலுக்கு உரிய வழி. (உ)

1494 செய்யன் கரியன் வெளியன்நற் பச்சையன்
எய்த வுணர்ந்தவர் எய்வர் இறைவனை
மைவென் றகன்ற பகடுரி போர்த்தவெங்
கைய னிவனென்று காதல்செய் வீரே.[1]

(ப. இ.) படைத்தல் காத்தல் துடைத்தல் மறைத்தல் ஆகிய உலகியற்றெழில் நான்கிற்கும் கொள்ளும் திருமேனியின் நிறம் முறையே செம்மை, கருமை, வெண்மை, பசுமை என்ப. இறைவன் இந்நிறங்களை மேற்கொள்கின்றனன் என்னும் உண்மையைப் பொருந்த உணர்ந்தவர் அவன் திருவடியினை அடைவர். எய்வர்; எய்துவர் என்பது எய்வரென்க் குறைந்து நின்றது. அவனே அறியாமைச் சார்பாகத் தோன்றிய தன் மூன்றப்பாகிய யானையினைத் தற்கிழமைப் பொருளாகிய நகத்தால்உரித்துப் போர்த்தனன். மழுவாகிய தீயினைக் கையில் தாங்கியவனும் அவனே. இம் முறைமையினை நினைந்து அவன்பால் பேரன்பு பூணுங்கள். இந்நிறை வைப்புக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நானிலவைப்பமை வினை நினைவுறுத்துவதாகும்.

(அ. சி.) செய்யன் - அயன். கரியன் - அரி. வெளியன் - அரன் (உருத்திரன்). பச்சையன் - ஈசன் (மகேசன்). மை வென்றகன்ற பகடு - யானை. வெங்கையன் - வேம் + கையன் - இடது கரத்தில் எரி. (கூ)

1495 எய்திய காலங்கள் எத்தனை யாயினுந்
தையலுந் தானுந் தனிநா யகமென்பர்
வைகலுந் தன்னை வணங்கு மவர்கட்குக்[2]
கையிற் கருமஞ்செய் காட்டது வாமே.

(ப. இ) உலகினுக்கு எத்தனை ஊழிகள் செல்லினும் சிவையும் சிவனும் ஒப்பில்லாத முழுமுதன்மையராவரென்பர். நாடோறும் தம்மை வணங்கும் மெய்யடியார்கட்கு உண்மையறிவின்ப அடையாளத்திருக்கையால் மெய்ப்புணர்ப்புற்றிருக்கும் தவநிலையாற்றக் காட்டியருள்வர். அடையாளக் காட்டதுவுமாகும். உண்மையறிவின்ப அடையானம் - சின்முத்திரை. அடையாளம் - பொறி.

(அ. சி.) கையில் - சின் முத்திரையால். கருமஞ் செய் காட்டு - யோகம் செய் என்று கூறுவது போலும். (எ)

---

1. செய்யானை. அப்பர், சு. சுO - உ.
,, செய்யாய் ,, சு. நுஎ - நூ.
,, காலன்வலி. ,, சு - எடு - நி.
2. கல்லாலின். தாயுமானவர். சுஉ. கல்லாலின். க.

1496. கண்டுகொண் டோமிரண் டுந்தொடர்ந் தாங்கொளி
பண்டுபண் டோயும் பரமன் பரஞ்சுடர்
வண்டுகொண் டாடு மலர்வார் சடையண்ணல்
நின்றுகண் டார்க்கிருள் நீக்கிநின் றானே.

(ப. இ.) ஞாயிறும் திங்களும் ஆகிய ஒளியிரண்டும் பழைமையாக ஒன்றை ஒன்று தொடர்ந்து வரினும் அவை இளைப்புறும். ஆனல் பரம ஞகிய பரஞ்சுடர் என்றும் ஒன்றுபோலிருப்பன். வண்டு மொய்க்கும் கொன்றைமலர்மாலே யணிந்து நீண்ட திருச்சடையினையுடைய சிவ பெருமான் திருவடியினையினே நன்னெறி நால்வகையுள் மேலாம் அறிவு வகையில் நின்று கண்டோர்க்கு அவன் எழுந்தருளி இருள்நீக்கி ஆண் டருள்வன். நால்வகை: சீலம், நோன்பு, செறிவு, அறிவு.

(அ. சி.) இரண்டு - சூரியன்; சந்திரன். ஒயும் - தளர்வுறும். (இ)

## தீவிரம்

### (முதிர்வு)

1497. அண்ணிக்கும் பெண்பிள்ளை அப்பனூர் தோட்டத்தில்
எண்ணிக்கும் ஏழேழ் பிறவி யுணர்விக்கும்
உண்ணிற்ப தெல்லாம் ஒழிய முதல்வனைக்
கண்ணுற்று நின்ற கனியது[1] வாகுமே.

(ப. இ.) அப்பனூர் உடைமையாகிய தோட்டம் ஒன்றுள்ளது. அப்பனூர் - சிவனூர். அத்தோட்டம் ஆருயிர்களின் உடம்பாகும். அதன் கண் பொருந்தியிருக்கின்ற பெண்பிள்ளை திருவருளாற்றலாவள். அன வில்லாத எழுவகையாகத் தோன்றும் பிறப்புயிர்க்கு அத் திருவருள் உணர்வினை விளக்கும். உடம்பகத்துள்ள கருவிக்கூட்டங்களும் கருமக் கூட்டங்களும் ஆகிய அனைத்தினையும் அத் திருவருள் அகற்றியருள்வள். அகற்றவே முழுமுதலாகிய விழுமிய சிவக்கனி கண்ணுறப் பொருந்தி நிற்கும். எண்ணிக்கும் என்பது எண்ணிக்கும் என எதுகை நோக்கித் திரிந்தது. எண்ணிகும் - எண்ணைக் கடக்கும்; அளவிறக்கும்.

(அ. சி.) அண்ணிக்கும் - பொருந்தும். பெண்பிள்ளை - திருவருட் சத்தி. அப்பனூர் தோட்டம் - சரீரம். எண்ணிக்கும் - அளவுகடந்த. உண்ணிற்பது எல்லாம் - நெஞ்சத்துள் நிற்கும் வினைப்பயன்கள் எல்லாம். (க)

1498. பிறப்பை யறுக்கும் பெருந்தவம் நல்கும்
மறப்பை யறுக்கும் வழிபட வைக்குங்
குறப்பெண் குவிமுலை கோமள வல்லி
சிறப்பொடு பூசனை செய்யநின் றார்க்கே.[2]

---

1. உழப்பின். கக. பட்டினத். திருவிடை, கo.
2. சிறப்பொடு. திருக்குறள், கக
,, பிறப்போ. அப்பர், சு. கo - இ.
,, குறவிதோள். ,, இ சுo - கூ.
,, வேடனுய் ,, சு. அகூ - இ.

(ப. இ.) குறப்பெண்ணுகிய வெள்ளிமலே மலேயாள் - திருவருள் அம்மை செந்தமிழ்த் திருமுறை வழியே சிறப்புடன் பூசனேபுரியும் மெய்யடியார்கட்கு அவர்களுடைய பிறப்பை அறுப்பள், நானெறிப் பெருந்தவத்தை நல்குவள். அறியாமையான் நிகழும் சிவனே மறக்கும் மறப்பை அறுப்பள். 'சிவயநம' என்னும் திருவைந்தெழுத்தைக் கணித்து இடையருது வழிபடவைப்பள்.

(அ. சி.) குறப்பெண் - குறிஞ்சி நிலப் பெண், பார்வதி. (உ)

1499 தாங்குமின் எட்டுத் திசைக்குந் தலேமகன்
பூங்கமழ் கோதைப் புரிகுழ லாளோடும்
ஆங்கது சேரும் அறிவுடை யார்கட்குத்
தூங்கொளி நீலந் தோடர்தலு மாமே.[1]

(ப. இ.) எட்டுத் திசைக்கும் தலேமகனேடுகூடி விளங்கும். திருவருளம்மையை உள்ளத்தாமரையினிடத்து இடையருது உன்னுங்கள். மணங்கமழ்கின்ற மலர்சூடிய கூந்தலினேயுடைய திருவருள் அம்மையின் திருவடியை வழிபடும் மெய்யுணர்வினேயுடையார்க்கு நீங்கா ஒளிநீல மாகிய திருவருள் வீழ்ச்சி தொடர்ந்து அருள்புரியும். நீலம் - திருவருள்: உவமையாகுபெயர். திருவருள் வீழ்ச்சி: சத்திநிபாதம்.

(அ. சி.) தாங்குமின் - நினேயுங்கள். ஒளி நீலம் - நீல ஒளி, சத்தி. (ங)

1500. நணுகினு ஞானக் கோழந்தோன்று நல்கும்
பணிகிலும் பன்மலர் தூவிப் பணிவன்
அணுகிய தோன்றறி யாத வோருவன்
அணுகும் உலகெங்கும் ஆவியு மாமே.

(ப. இ.) பலவாகிய நறுமலர்களேத் தூவித் திருவருளம்மையைப் பணிந்தாலும், அப் பணிவின்வழியே அணுகினும் மெய்புணர்வினேயே நல்குவள். சிவபெருமான் வேறறநிற்பினும் அணுகிய ஆருயிர்க் கிழவன் அலனருளாலன்றித் தன்னறிவால் காணும் தகைமையன் அல்லன். அச் சிவபெருமான் உயிர்க்குயிராய் நிற்பதுமட்டுமன்றி ஒன்றேடொன்று நெருங்கிச் சுழலும் அண்டத்துலகினுக்கும் ஆவியாகவும் நின்றருள் இன்றனன். (ச)

## தீவிரதரம்

### (முறுகல்)

1501. இருவினே நேரோப்பில் இன்னருட் சத்தி
குருவென வந்து குணம்பல நீக்கித்
தருமெனு ஞானத்தால் தன்செய லற்றுல்
திரிமலந் தீர்ந்து சிவனவ னுமே.[2]

---

1. மிக்கதொரு. சிவஞானசித்தியார், அ. உ - கக.
2. இன்னயபல. சிவப்பிரகாசம், பொது, கூ0.
,, பசித்துண்டு. சிவஞானபோதம், அ. க - உ.

(ப. இ.) இறப்பில் தவமாகிய சீலம் நோன்பு செறிவு அறிவு என்னும் நன்னெறி நால்வகையால் நல்வினைப் பயனும் தீவினைப் பயனும் ஆகிய இரண்டிலும் உள்ளந் தோயாமல் உடல்தோய நின்று ஒப்புக் கொள்ளும் நிலைவந்தால் திருவருளாற்றல் சிவகுருவாக வெளிப்பட்டு வந்து ஆருயிர்கள்பால் முன்கிடந்த மருட்குணம் பலவற்றையும் நீக்கி அவ்வருள் தந்தருளுமென்று சிறப்பித்துச் சொல்லப்படும் திருவடியுணர்வினை நல்கும் அவ்வருளுணர்வால் ஆருயிரின் முனைப்பாகிய தஞ்செயலற்றால் ஆணவம் மாயை கன்மம் என்னும் மும்மலமும் தீரும். அம்மலம் தீர்ந்தால் அவ்வுயிர் சிவன் அவன் என்னும் சிறப்பினை எய்தும். இருவினையொப்பினை வருமொப்பால் காண்க: சந்தனமும் சாணகமும் சார்ந்த கூலிக்கெடுப்பார், எந்த மணமும் வரையார் இங்கு.

(அ. சி.) இருவினை நேரொப்பு - புண்ணிய பாவத்தில் சம உணர்வு. திரிமலம் - ஆணவம், கன்மம், மாயை. (கீ)

1502 மாலை விளக்கும் மதியமும் ஞாயிறுஞ்
சால விளக்குந் தனிச்சுடர் அண்ணலுள்
ஞானம் விளக்கிய நாதன்என் உள்புகுந்
தூனை விளக்கி யுடனிருந் தானே.[1]

(ப. இ.) மாலைக் காலத்தில் இருட்டைப்போக்கி ஒளியை நல்கும் திருவிளக்கும், அதுபோன்ற மதியமும், பகலில் அதுபோன்று ஒளியை நல்கும் ஞாயிறும் விளக்கம் தருமாறு அவற்றிற்கு விளக்கம் அருளும் தனிச்சுடர் அண்ணலாகிய சிவபெருமான். ஆருயிர்களுக்கு உயிர்க்குயிராய் உண்ணின்று திருவடியுணர்வினை விளக்குதற் பொருட்டுத்தானே முழுமுதல் தலைவன் என அருளி என் உள்ளே புகுந்துநின்றவனும் அவனே. அங்ஙனம் புகுந்தருளியதோ டமையாது உடம்பின் மெய்ம்மைத் தன்மையினையும் விளக்கியருளி உடனுய் நின்றனன்.

(அ. சி.) ஊனை - சரீரத்தை. (உ)

---

# 18. புறச்சமய தூடணம்

## (பிறநெறிப் பீழை)

1503. ஆயத்துள் நின்ற அறுசம யங்களுள்
காயத்துள் நின்ற கடவுளைக் காண்கிலா
மாயக குழியில் விழுவர் மனைமக்கள்
பாசத்தில் உற்றுப் பதைக்கின்ற வாறே.

(ப. இ.) விரிவின்றிச் சுருங்கிய கட்டினுள் ஒடுங்கிநிற்கும் முக்கூற்றுப்புறச் சமயங்களினுள்ளும் மேல் ஆராய்தலின்றி அது அதுவே மெய்ம்மையென மயங்கிநிற்கின்றவர் 'உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்' ஆக எழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானைக் காணமாட்டார். மெய்ப்பொருள் காணுமையால் மீண்டும் பிறப்பதற்கே ஆளாகி மாயக்

1. இல்லக அப்பர். சு. கக அ.
,, நாடி. ,, தி. க - கo.
2. கடியமே, அப்பர். சு. எசு - சு.

குழியாகிய கருக்குழியில் வீழ்வர். அங்ஙனம் வீழ்ந்து பிறப்பதால் மனிவி மக்கள் என்னும் பாசத்திலுற்றுத் தடுமாறுவர். இதுவே உள்ளம் நடுங்கி உலைதற்கு வழியாகும். முக்கூறு : புறப்புறம், புறம், அகப்புறம். (க)

1504. ஆறு சமய முதலாஞ் சமயங்கள்
ஊறு தெனவும் உணர்க உணர்பவர்
வேறு தறவுணர் வார்மெய்க் குருநந்தி
யாறி யமைபவர்க் கண்ணிக்குந் தானே.

(ப. இ.) ஆறுசமயம் முதலாகச் சொல்லப்படுகின்ற சமயங்களினைத்தும் பிறப்பற்றுச் சிறப்புற்றுப் பேரின்பம் எய்தலுறுவார்க்கு இடையூறுகும் என உணர்க. அங்ஙனம் மெய்ம்மையுணர்பவர் அச் சமயங்கட்கு வேருகிய சித்தாந்தச் செந்நெறியினைத் திருவருள் துணையால் நன்குக உணர்வர். உணரவே நந்தியாகிய சிவகுரு வெளிப்பட்டுவந்து அருமறை[1] அருள்வன். அருளவே அவ்வருள் பெற்றூர் ஆறியமைவர். அத்தகையோர்க்குச் சிவன் அணுக்கமாய் இன்புறுத்தியருள்வன். அருமறை - குருமொழி ; உபதேசம். (சிவயநம) (உ)

1505. உள்ளத்து ளேதான் கரந்தெங்கும் நின்றவன்
வள்ளற் றகலவன் மலருறை மாதவன்
பொள்ளற் குரம்பை புகுந்து புறப்படுங்
கள்ளத் தகலவன் கருத்தறி யார்களே.[2]

(ப. இ.) ஆருயிரின் நெஞ்சினுள்ளே மறைந்து எங்கும் நீக்கமற நிறைந்துநின்றவன், வள்ளலாகிய முதல்வன். அவன் உச்சிக்கு அப்பால் அருள் வெளியில் காணப்படும் ஆயிரவிதழ்த் தாமரையில் வீற்றிருந்தருளும் அம்மையோடு கூடிய அப்பன். அவன் ஒன்பது ஓட்டைகளையுடைய நிலையில்லாத இவ்வுடலில் புகுந்துநின்றனன். இங்கிருந்து ஆருயிர்களின் செவ்விநோக்கி வெளிப்படுபவன். கள்ளத்தகலவனுகிய மறையோன். அவனது மெய்ம்மைக் கருத்தினை எவரும் எளிதாக அறியமாட்டார்கள் என்க.

(அ. சி.) பொள்ளல் - ஒன்பது ஓட்டைகள் உள்ள. மலர் உறை மாதவன் - உள்ளத் தாமரையில் வீற்றிருப்பவன் ; "மலர்மிசை ஏகினன்" இதன் வழித்து. (ங)

1506. உள்ளத்தும் உள்ளன் புறத்துள்ளன் என்பவர்க்
குள்ளத்தும் உள்ளன் புறத்துள்ளன் எம்மிறை
உள்ளத்தும் இல்லை புறத்தில்லை என்பவர்க்
குள்ளத்தும் இல்லை புறத்தில்லை தானே.[3]

---

1. பெருமலை. கஉ. சம்பந்தர், சஉ.
2. கள்ளத். திருவருட்பயன், கo. அணைந், கo.
,, வெள்ளநீர்ச். அப்பர், சு. எஇ-கூ.
3. ஆக்கிலங். திருவுந்தியார், கூ.
,, உண்டெனி. திருக்களிற்றுப்படியார், ஙகூ.
,, தெய்வம். குமரகுருபரர், நீதிநெறி விளக்கம், எசு

(ப. இ.) எங்கும் நிறைந்துள்ள சிவபெருமானே ஆருயிர்களின் உள்ளத்துமுளன் புறத்துமுளன் என்று அன்புடன் 'சிவயநம' என்னும் செந்தமிழ்மறைஒதி வழிபடுவார்க்கு எம்மிறையாகிற அச் சிவபெருமான் வெளிப்பட்டு நன்மை அருள்வன். உள்ளத்தும் இல்லே; புறத்தும் இல்லே என்று கூறுபவர்க்கு உள்ளத்தும் புறத்தும் வெளிப்படாது மறைந்து நின்று நன்மையருள்வானல்லன் இல்லே என்பதன் பொருள் சிவபெருமானுல் எய்தும் நன்மை இல்லே என்பதாம். இதற்கு ஒப்பு திருக்குறளில் என்ன விருக்கின்றது? அதில் ஒன்றுமில்லே என்பார்க்கு அத் திருக்குறளினுல் எய்தும் நன்மை ஏதும் இல்லே என்பதாம். (சு)

1507. முதலோன்ரு மானே முதுதுடன் வாலுந்
திதமூறு கோம்பு செவிதுதிக் கைகான்
மதியுடன் அந்தகர் வகைவகை பார்த்தே
அதுகூற லொக்கும் ஆறு சமயமே.[1]

(ப. இ.) உறுப்பும் உறுப்பியுமாகிய யானே முதல் ஒன்ருகும். அவ் யானேயின் மலேபோன்ற முதுகையும், துடைப்பம் போலும் வாலேயும், தண்டுபோலும் உறுதியான கொம்பையும், முறம்போலும் செவியினேயும், உலக்கைபோலும் துதிக்கையினேயும், உரல்போலும் காலினேயும் கண்ணிலார் பலர் தனித்தனி ஒவ்வோர் உறுப்பினே மட்டுந் தடவி யானே என்பது முறையே மலே எனவும், துடைப்பம் எனவும், தண்டெனவும், முறம் எனவும், உலக்கை எனவும், உரல் எனவும் கூறித் தம்முள் மாறுபட்டுச் சண்டையிட்டனர். அச் சண்டையினே ஒத்ததே ஆறு சமயத்தாரும் தத்தம் சமயங்களே உயர்ந்ததெனக் கூறி முரண்படுதல் கண்ணுள்ளான் ஒருவன் இவையனேத்தும் யானே அல்ல. இவையனேத்தும் யானேயின் ஒவ்வோர் உறுப்பாகும். இவையனேத்தும் சேர்ந்த உறுப்பியே யானேயாம் என்று கூறியமைதிப்படுத்தினன். ஈண்டுக் கண்ணுள்ளான் திரு அருட்கண்ணுடைய சித்தாந்தச் சைவன்: (இ)

1508. ஆறு சமயமுங் கண்டவர் கண்டிலர்
ஆறு சமயப் பொருளும் அவனலன்
தேறுமின் தேறித் தெளிமின் தெளிந்தபின்
மாறுதல் இன்றி மனேபுக லாமே.[2]

(ப. இ.) முக்கூற்றுப் புறச்சமயத்துள் குறிப்பாக ஆறுவகைச் சமயம் வருமாறு: வைரவம், சமணம், பாஞ்சராத்திரம், பாட்டாசாரியம், உலகாயதம், சூனியவாதம் என்பன. இச் சமயங்களின் நின்றவர் சமயங் கடந்த தனிமுதற் சிவத்தைக் காண்கிலர், இச் சமயத்தாரால் கூறப்

1. விரிவிலா. அப்பர், சா. கூ0 - கூ.
,, புரிதி. '' இ. கூசு - இ.
,, தம்மை சிவஞானபோதம். அலையடக்கம்.
,, ஒதுசமயங்கள். சிவஞானசித்தியார், அ. உ - கூ.
2. சைவ. தாயுமானவர். நூ0. காடுங்கரையும், உ.
,, அறுவகைச். சிவஞானசித்தியார், மங்கலவாழ்த்து - க.

படும் பொருளும் அவனல்லன். இவ்வுண்மையினைத் தெளிதற்பொருட்டு தல்லாருடன் ஆராயுங்கள். ஆராய்ந்து தெளியுங்கள். தெளிந்தபின் நுமக்குத் திருவடியாகிய நிலைத்த புக்கில்லாம் மனைபுகுந்து பேரின்பம் எய்துதலாகும். நல்லார்: நற்றமிழாகமம் கைக்கொண்டு நாளும் இடை யறுதொழுகும் சித்தாந்தச் சைவர்.

(ப. இ.) ஆறு சமயம் - பைரவம், சமணம், பாஞ்சராத்திரம், பாட்டா சாரியம், உலகாயதம், சூனிய வாதம் (வேறுவிதமாகக் கூறு வாருமுளர்). (சு)

1509. சிவமல்ல தில்லை யறையே சிவமாந்
தவமல்ல தில்லை தலைப்படு வார்க்கிங்
கவமல்ல தில்லை அறுசம யங்கள்
தவம்வல்ல நந்திதாள் சார்ந்துய்யு நீரே [1]

(ப. இ.) அறைகூவி விளம்புங்கால் சிவபெருமான் அன்றி வேறு ஒரு முழுமுதல் யாண்டும் இன்று. சிவமாம் பெருவாழ்வெய்தும் சீலம் நோன்பு செறிவு அறிவென்னும் இறப்பில் தவமன்றி வேறு சீறந்த தவமும் இல்லை. திருவடிப் பேறெய்தும் செந்நெறிச் செல்வர்கட்கு மேல் ஒதியனவன்றி ஆறு சமயங்களும் தவத்திற்கு மாறுகிய அவமேயாகும். செந்நெறித் தவத்தான் வெளிப்பட்டருளும் வல்ல சிவகுருவாகிய நந்தி யெங்கடவுளின் திருவடியிணையினைச் சார்ந்து நீங்கள் உய்வீர்களாக.

(அ. சி.) அவமல்லதில்லை அறு சமயங்கள் - ஆறு சமயங்களும் பாப மார்க்கங்கள். (எ)

1510. அண்ணலை நாடிய ஆறு சமயமும்
விண்ணவ ராக மிகவும் விரும்பியேம்
உண்ணின் றுழிய முயன்றில ராதலான்
மண்ணின் றுழியும் வகையறி யார்களே. [2]

(ப. இ.) சிவபெருமான் திருவடியிணையினை எய்துதல் வேண்டு மென்று எண்ணிமுயலும் ஆறு அகச் சமயத்தவர்களும் பிறரும் அந் நாட்டமொழிந்து தாங்களே தேவராக வேண்டுமென்று மிகவும் விரும்பு கின்றனர். விரும்புதலான் பிறப்புக்கு வித்தாம் ஏமம் என்று சொல்லப் படும் உள்ளே நிற்கும் ஆசை ஒழியமுயன்றிலர் ஆதலான் மண்ணில் பிறக்கும் பிறப்பற முயலும் செந்நெறியின்நிற்கும் வகை அறியாராயினர்; விரும்பி: விரும்ப எனத் திரிக்க. ஏமம் என்பது ஏம் எனக் குறைந்து நின்றது.

(அ. சி.) அண்ணலை நாடிய ஆறு சமயம் - உட் சமயங்கள் ஆறும். உள் நின்று அழிய - ஆசை ஒழிய. மண்ணின்று ஒழியும் வகை - பிறப்பு அறும் வகை. (அ)

---

1. நமச்சி. அப்பர், தி. ஈ எ. ஊ.
,, புக்கில். திருக்குறள், ஈ.சா0.
2. வாழ்த்துவதும். அ. உ. அறிவுறுத்தல், ஈ.ஈ.

1511. சிவகதி யேகதி மற்றுள்ள எல்லாம்
பவகதி பாசப் பிறவியோன் றுண்டு
தவகதி தன்னொடு நேரொன்று தோன்றில்
அவகதி மூவரும் அவ்வகை யாமே.

(ப. இ.) சிவபெருமான் திருவடியினையினைச் சேர்ப்பிக்கும் நானெறி சேர் நன்னெறியே விழுப்பேறளிக்கும் முழுத்தவநெறியாகும். அஃ தொழிந்த மற்றுள்ள நெறிகளெல்லாம் பாசம் அறுமையால் பிறப்பைத் தரும் சிறப்பிலா நெறியாகும். அவர்கட்குப் பிறவியுண்டு. தனக்குத் தானே ஒப்பாகிய நன்னெறியாம் சன்மார்க்கம் தோன்றில் அதுவே சிவத்தைப் பேணும் தவகதியாகும். விண்ணவரினும் மேலாம் அயன் அரி அரன் என்று சொல்லப்படும் மூவரும் சிவத்தைப் பேணுமையால், பிறப்புக்கு வாயிலாம் அவகதியிற் சேர்வர். 'சிவத்தைப்பேணில் தவத்திற் கழகு' என்பதுங் காண்க.

(அ. சீ.) தவகதி - சன்மார்க்கம். மூவரும் - மும்மூர்த்திகளும்: அயன், அரி, அரன். (கூ)

1512. நூறு சமயம் உளவா நுவலுங்கால்
ஆறு சமயமவ் வாறுட் படுவன
கூறு சமயங்கள் கோண்ட நெறிநில்லா
வீறு பரநெறி யில்லா நெறியன்றே.[1]

(ப. இ.) சொல்லுமிடத்துச் சமயங்கள் அளவிறந்தனவாகவுள்ளன. அவ் வளவிறந்த சமயங்களும் ஆறுசமயம் கூறும் பொருள்களேயே பெரும்பாலும் கூறுகின்றன. இங்ஙனம் கூறும் சமயங்களின் நெறியினைப் படிமுறை எனக் கடந்து இவற்றினும் மேலாகவுள்ளது பரநெறியாம் சிவ நெறியே என்று தெளிக. அச் சிவபெருமான் திருவடியே என்றும் பொன்ரு இயற்கை எழில்சேர் எல்லையில் பேரின்ப இல்லாம் புகலிடவீடு பேற்று நெறியாகும். வீறு : பிறிதொன்றற்கும் இல்லாத் தனிப்பெரு முதன்மை.

(அ. சீ.) நூறுசமயம் - அளவிறந்த சமயம். ஆறு சமயம் - மேலே கூறிய ஆறு சமயங்களும். அவ்வாறுள் - அளவிறந்த சமயங்களுள். வீறு பரநெறி - வலிமை மிக்க சிவநெறி. (கo)

1513. கத்துங் கழுதைகள் போலுங் கலதிகள்
சுத்த சிவனெங்குந் தோய்வுற்று நிற்கின்றுன்
குற்றந் தெளியார் குணங்கொண்டு கோதாட்டார்[2]
பித்தேறி நாளும் பிறந்திறப் பாரே.

(ப. இ.) தவநெறி பேணுது அவநெறி திரியும் வீணர்கள் பிறர் வெறுக்கும்படியாகக் குரல் எழுப்பிக் கத்தும் கழுதையினை ஒப்பர். இயற்கை உண்மை அறிவின்ப வண்மைச் சிவபெருமான் எல்லா இடத்தும்

1. செங்கணவன்பால். அ. திருவெம்பாவை, கள
2. பெத்றி. அ. திருவம்மானை, உo.

பிரிப்பின்றி விரவிநிற்கின்ருன். மக்கள் அவனே நிணேயாமையாகிய குற்ற மும் அக் குற்றத்திற்குக் காரணமாகிய மலப்பிணிப்பும் தம்பால் உள்ளன என்பதனேயுணரார். அவனுடைய மெய்ம்மையான புகழைப் பாராட்டித் தொழார். நிலேயாப் பொருள்களாகிய உலகு உடைமை உடல்களில் மயக்கம் கொண்டு அதனல் பித்தேறி என்றும் பிறந்திறந்து துன்புறுவர்.

(அ. சீ.) கலதிகள் - வீணர்கள். (கச)

1514 மயங்குகின் ருரு மதிதெளிந் தாரும்
முயங்கி யிருவினே முழைமுகப் பாச்சி
இயங்கிப் பெறுவரே லீறது காட்டிற்
பயங்கெட் டவர்க்கோர் பரநெறி யாமே.

(ப. இ.) உண்மை தெளியாமையால் மயங்குகின்றவர்களும், அறிவு தெளிந்தவர்களும் இருவினேப் பயன்களே நுகர்ந்து உச்சித்தொளேக்குகை அருகிலிருக்கும் திருவருளம்மையினேக் கூடி அவள் இயக்கும் இயக்கத்தின் வழியே செல்லப்பெறுவார்களானல் அவர்களுக்கு வினேமுடிவும் பரவெளி யும் அருட்கண்ணுல் காட்டப்பெறும். காட்டப்பெறுதலாற் பிறப்பு இறப்புக் குறித்து ஒருசிறிதும் அவர் அஞ்சார் அவரே, நன்னெறியாகிய மேனெறியை எய்தியவர் ஆவர். முழைமுகப்பு ஆச்சி : உச்சித்தொளேயில் விளக்கும் திருவருளம்மை. ஆச்சி - அம்மை.

(அ. சீ.) முயங்கி - அனுபவித்து முழை முகப்பு ஆச்சி - குண்டலி சத்தி. ஈறு - வினே முடிவு. (கஉ)

1515. சேயன் அணியன் பிணியிலன் பேர்நந்தி
தூயன் துளக்கற நோக்கவல் லார்கட்கு
மாயன் மயக்கிய மானுட ராமவர்
காயம் விளக்குங் கருத்தறி யார்களே [1]

(ப. இ.) முழுமுதற்சிவம் மாற்றம் மனம் கழியநின்ற மறையோனு தலின் தொலேவிலுள்ளோன். அவன் அருள் கண்ணுல் காணும் தவ முடையார்க்கு உயிர்க்கு உயிராய் வெளிப்படுதலின் நெருக்கமாக உள்ள வனுமாவன். இயல்பாகவே பாசங்களினின்று நீங்கியவன் ஆதலின் பிணி யிலன். அவன் திருப்பெயர் நந்தி, இயல்பாகவே தூய்மையாகிய வாலறி வினன். அவனே ஒருமனப்பட்ட நெஞ்சினராய் அசையாது நின்று இடை யருது நோக்கவல்லார்க்குப் பிறப்பறும்; சிறப்புறும். திருவடிப்பேரின்பம் எய்தும். பிறப்பு இறப்புக்கு உட்பட்டு உடம்பால் விளேயும் துன்ப நிலே யினே அறியாது அதுவே இன்பமென மயங்குவோர், மாயவன் மயக்கிற் பட்ட மருண்ட மாந்தராவர். சிறப்பு - திருவடிப்பேறு. (கக)

1516. • வழியிரண் டுக்குமோர் வித்தது வான
பழியது பார்மிசை வாழ்தல் உறுதல்
சுழியறி வாளன்றன் சொல்வழி முன்னின்
றழிவறி வார்நெறி நாடநில் லாரே.

1. தாயி. அப்பர், இ. எOO - க.

(ப. இ.) மேல்நிலை கீழ்நிலை என்னும் இருவகைப் பிறப்பு நிலைக்கும் காரணமாகப் பழிக்கப்படுவது நில்லாவுலகினை, நிலையென மயங்கும் நிலைமை. ஒமொழியேனும் அல்லது புருவமத்தியேனும் என்று கொள்ளப் படும் சுழியினிடமாக வெளிப்பட்டு நின்று இயக்கவல்லவன் சிவபெரு மான். அவன் ஆணைவழி முன்னின்று உலக அழிவினை உணரவல்லார் தன்னெறியினை நாடவல்லாராவர். அவர்கள் தீநெறிக்கண் செல்லார்.

(அ. சி.) வழியிரண்டும் - மேல்கதி, கீழ்கதி. சுழி - பிரணவம். அழிவு அறிவார் - நிலையாமையை உணர்வார். நெறி - முற்கூறிய இரண்டு வழிகளை. (கச)

1517. மாதவர் எல்லாம் மாதேவன் பிரான்என்பர்
நாதம தாக அறியப் படுநந்தி
பேதஞ்செய் யாதே பிரான்என்று கைதொழில்
ஆதியும் அங்நெழி யாகிநின் ருனே.[1]

(ப. இ.) இறப்பில் பெரும்தவத்தோரெல்லாம் மாதேவனுகிய சிவ பெருமானே முழுமுதல்வன் என்பர். அவன் தூமாயையின்கண் விளங்கும் ஓசைமெய்யாகிய நாததத்துவ வடிவாக அறியப்படுவன். தூமாயை அவனுடைய நேராட்சி என்பர். அவன் திருப்பெயர் நந்தி. அவனே வேருகக் கருதாது அவனே உயிர்க்குயிராய்நிற்கும் முதல்வன் என்று சிவசிவ' என நினைந்து அம்மை அப்பரே என வாழ்த்தி ஆண் டருள் என்று கைதொழுதால் ஆதியாகிய சிவபெருமானும் அம்முறையே உடனுய்நின்றருள்வன். சி என்னும் முதலெழுத்து அப்பனையும், வ என்னும் இரண்டாமெழுத்து அம்மையையும் குறிப்பன.

(அ. சி.) நாதமதாக - நாத உருவினைக. (கஜ)

1518. அரனெறி யப்பனை யாதிப் பிரானை
உரநெறி யாகி யுளம்புகுந் தானைப்
பரநெறி தேடிய பத்தர்கள் சித்தம்
பரனறி யாவிடிற் பல்வகைத் தூரமே.

(ப. இ.) அரனெறியாகிய சிவனெறி அப்பனை,[1] [ஆதியாகிய அம்மையை உடம்பின் இடப்பக்கமாகிய ஒரு கூற்றிலே விட்டுவிலகாது ஒட்டித் திகழும் முழுமுதற்சிவனை, அறிவு நெறியாகிய ஆருயிர்களின் உள்ளம் புகுந்தவனை, தன்னெறியாகிய வீடுபேற்றுநெறியினைத் தேடிய 'பண்டை நற்றவத்தால்தோன்றிப்பரமனைப்பத்தி பண்ணும் தொண்டர்' களின் உள்ளத்தை உடனிருந்தறியும் ஒருவனை அறியாவிட்டால் வீடு பேற்றுவழி தொடுதற்கும் தொடுமாறுன்னுதற்கும் கிட்டாநெடுந் தொலைவாகும்.

(அ. சி.) அரன் நெறி - சன்மார்க்கம். உரநெறி - அறிவு நெறி. பரநெறி - முத்தி நெறி. பல்வகைத் தூரம் - நெடுந்தூரம். (கக)

1. வாது. அப்பர், இ. கoo - ச.
,, வித்தையோ. சிவஞானசித்தியார், க. கூ - எ.
,, வாதாண்ட. அப்பர், கூ. கஅ - கூ.

1519. பரிசற வானவன் பண்பன் பகலோன்
பெரிசறி வானவர் பேற்றில் திகழுந்
துரிசற நீநினை தூய்மணி வண்ணன்
அரிதவன் வைத்த அறநெறி தானே.

(ப. இ.) மாயையின் குணங்கள் சிறிதும் இல்லாதவன் மேலாம் சிவ பெருமான் ஒருவனே. அவன் எண்பெரும் அருட்குணங்களையுடையவன். இயற்கைப் பேரொளியாய் எவற்றினுக்கும் ஒளிகொடுப்பவனும் அவனே. மிகுதியும் உணர்ந்த தேவர்கள் அவனைத் தொழுவதால் தத்தம் பேருகிய தலையில் திகழ்கின்றனர். அவனை நம் ஆணவ முதலிய குற்றங்கள் நீங்கும் படி நெஞ்சே நீ நினைவாயாக. அவன் தூய பளிங்கு நிறத்தன். அவன் அருளிச்செய்த அறநெறியாகிய சன்மார்க்கம் மிக்க அருமையும் பெருமையும் வாய்ந்தது.

(அ. சி) பரிசற வானவன் - மாயை இல்லாதவனுன சிவன். பெரிசறிவானவர் - மிக்க அறிவுள்ள வானவர். தூய்மணி - படிகமணி. அரிதவன் - அரிய தவத்தைச் செய்து அடையக்கூடியவன் அறநெறி - சன்மார்க்கம். (கஅ)

1520. ஆன சமயம் அதுஇது நன்றெனும்
மாய மனிதர் மயக்க மதுவொழி
கானங் கடந்த கடவுளை நாடுமின்
ஊனங் கடந்த வுருவது வாமே.[1]

(ப. இ.) அச் சமயம் நன்று இச் சமயம் நன்று என்று திருவருள் உணர்த்த உணரும் தன்மையில்லாதார் பிழைப்பின் பொருட்டு வஞ்சனையாகக் கூறும் மயக்கமொழிகளை ஒழிப்பாயாக. செந்தமிழ்க் கீதங்கள் தந்தருளிய சிவபெருமானை அவன் திருவருட்டுணையால் நாடுங்கள். நாடவே மலமாயை கன்மங்களாகிய குற்றம் நீங்கி எல்லாமாம் சிவபெருமானது உண்மையறிவின்ப வண்ணவடிவினைப் பெறுவீர்.

(அ. சி.) மாய மனிதர் - வஞ்ச மனிதர். கானங் கடந்த - தத்துவங்கள் கடந்த. ஊனம் - குற்றம். (சகூ)

1521. அந்நெறி நாடி அமரர் முனிவருஞ்
சென்நெறி கண்டார் சிவனெனப் பேற்றூர்பின்
முன்னெறி நாடி முதல்வன் அருளிலார்
சென்னெறி செல்லார் திகைக்கின்ற வாறே.

(ப. இ.) மேலோதிய நன்னெறியாகிய சிவனெறியைத் திருவருளாலுணர்ந்து அதனையே முதன்மை எனக் கைக்கொண்ட அமரரும் முனிவர்களும் திருவடியைத் தலைக்கூடும் செல்லும் நெறியினைக் கைக்கொண்டனர். அவர்கள் சிவமாம் பெருவாழ்வை எய்தினர். மக்களால் மாறுகொண்டு காலத்தால் பின்னும் முன்னுமாக அமைக்கப்பட்ட நெறிகளை நாடிச் செல்வோர் முதல்வன் திருவருள் பெறுதவராவர். ஆகவே, நன்னெறியாகிய செல்லும் நெறியிற் செல்லாதவராவர். அவர்கள் மயங்கும் மயக்கத்திற்கு ஓர் அளவில்லை.

1. இவ்வகைப்பல. கூ. திருநாவுக்கரசர், அூ.

(அ. சீ.) சென்னெறி-செல்லத்தக்க நெறி. பின் முன் நெறி - நந்தி வகுத்த சன்மார்க்கத்துக்கு முந்தியும் பிந்தியும் மானிடரால் வகுக்கப் பட்ட நெறிகள். (உ0)

1522. உறுமா றறிவதும் உள்நின்ற சோதி
பெறுமா றறியிற் பிணக்கொன்றும் இல்லை
அறுமா றதுவான வங்கியு ளாங்கே
இறுமா றறிகிலர் ஏழைகள் தாமே.

(ப. இ.) சிவன் திருவடியைப் பொருந்துதற்கு வாயிலாகிய நன் னெறியினை அறிவதும், உயிர்க்குயிராகிய தழல் வண்ணனுகிய சிவபெரு மானை அறிவதும் ஆகிய அறிவினையறிவதும், அச்சிவனைப் பெறுமாறு அறிவதும் ஏற்பட்டால், எந்நெறியினரோடும் பிணக்கு ஒன்றும் ஏற்பட மாட்டாது. பிறப்பறும்படி பேரொளிப் பிழம்பாம் சிவபெருமான் திரு வடியிற் பிரிவிலா அடிமையாய் உறைதல் வேண்டும். இவ்வுண்மைகளை அறிவிற்குறைந்தார் அறியமாட்டார்.

(அ. சீ.) உறும்ஆறு-அடையத்தக்க மார்க்கம். பிணக்கு-விரோதம். அறுமாறு - பிறவி அறும் வழி. அங்கியுள் - அங்கி உருவனை சிவபிரா னிடத்தில். இறுமாறு - இலயிக்கின்ற விதம். (உக)

1523. வழிநடக் கும்பரி சொன்றுண்டு வையங்
கழிநடக் குண்டவர் கற்பனை கேட்பர்
சுழிநடக் குந்துய ரம்மது நீக்கிப்
பழிநடப் பார்க்குப் பரவலு மாமே.

(ப. இ.) சிவபெருமான் திருவடியிணைகளை அடைவதற்கு நேர்வழி யாகத் திகழ்வது நன்னெறியே. அதன்வழியே செல்வது பயிற்சித் துணை யாகும். உலகியல்பினைக் கடந்து செல்லும் புறச்சமயத்தார் கற்பனை யாகக் கூறும் பொய்ம்மொழிகளைக் கேட்பார் நன்னெறிச் செல்லார். பிறப்பு இறப்புக்களாகிய சுழியிற்பட்டு நடக்கும் பெருந்துன்பத்தினை நீக்கியும் நிலையாப் பொருளைப் பற்றுச்செய்தலாகிய பழியினை நீக்கியும் நடப்பார்க்குச் சிவபெருமானைத் தொழுதலுமாகும்.

(அ. சீ.) வழி - சன்மார்க்க வழி. பரிசு - சாதனம். கழி நடக்கு - வரம்பு கடந்த நடக்கை. கற்பனை - மானிடரால் கற்பிக்கப்பட்ட மதங்கள். கழி நடக்கும் துயரம் - கற்பனை செய்யப்பட்ட மதங்களின் கொள்கைகளால் ஏற்படும் துயரம். பழி நடப்பார் - துன்பம் தருவன வற்றைப் பழித்து நடப்பார். (உ-)

1524. வழிசென்ற மாதவம் வைகின்ற போது
பழிசெல்லும் வல்வினைப் பற்றறுத் தாங்கே
வழிசெல்லும் வல்வினை யார்திறம் விட்டிட்
டுழிசெல்லில் உம்பர் தலைவன்முன் னுமே.[1]

1. என்னபுண்ணியம் : சம்பந்தர், உ. கoசு - க.

(ப. இ.) சிவபெருமானே அடைதற்குரிய நன்னெறி மாதவம் இருக்கின்றபோது, புன்னெறிக்கண் செல்லும் கொடிய வினையின் பற்றறுத்துச் செல்லாமல் அப் புன்னெறியின்வழியே செல்லும் கொடுவினையார் சார்பைவிட்டகன்ற நன்னெறிக்கண் சென்றுல் தேவதேவனுய் மூவர் கோனுய் விளங்கும் முழுமுதற் றலைவனும் சிவபெருமான் அப்பொழுதே முன்னின்றருள்வன்.

(அ. சீ.) பழி செல்லும் - நிந்தனே பரவுகின்ற. ஆங்கே வழி-அந்த. நிந்தனே பரவும் வழியான பிற மார்க்கம். வழி செல்லில்-சன்மார்க்கத்தில் சென்றுல். (உகூ).

---

# 19. நிராசாரம்

(அல்லொழுக்கம்)

1525. இமையங்க ளாய்நின்ற தேவர்கள் ஆறு
சமயங்கள் பெற்றனர் சாத்திரம் ஓதி
யமையறிந் தோமென்ப ராதிப் பிரானுங்
கமையறிந் தாருட் கலந்துநின் ருனே.[1]

(ப. இ.) இமையமலேபோன்று அசைவற நின்ற தேவர்கள் அவர்கள் நிலேமைக்கேற்றவாறு ஆறு சமயங்கள் பெற்றனர். அவற்றிற்குரிய சாத்திரங்களாகிய பொருள்நூல்களே ஓதினர். அடைதற்காய் அமைந்த நிலேயினே அறிந்தோம் என்பர். ஆதிப்பிராளுகிய சிவபெருமானும் பிழைபொறுக்கும் தன்மையராய்ப் பொறுமையுடன் ஒழுகுவாருடன் கலந்து நின்றருள்வன்.

(அ. சீ.) இமையங்கள்-இமயமலேபோன்று அசைவற நின்ற. அமை-அடையத்தக்கது. கமை - பொறுமை. (க).

1526. பாங்கமர் கோன்றைப் படர்சடை யானடி
தாங்கு மனிதர் தரணியில் நேரோப்பர்
நீங்கிய வண்ணம் நினேவுசெய் யாதவர்
ஏங்கி உலகில் இருந்தழு வாரே.[2]

(ப. இ.) தாரும்கண்ணியும் ஆக முறையே மார்பினிடத்தும் தலேயினிடத்தும் கொன்றைப்பூவால் அமைந்தவற்றைச் சூடி விளங்கும் திருச்சடையினேயுடைய சிவபெருமான் திருவடியினேயினே மறவாது உளங்கொண்டு தாங்கும் மெய்யடியார்கள் இந்நிலவுலகத்தில் தமக்குத் தாமே ஒப்பாக விளங்குவர். சிவபெருமானே நினேயாது செந்நெறியினே நீக்கித் தாம் புன்னெறியிற் செல்லும் புரையாகிய குற்றத்தினே எண்ணுதவர் செய்வது இன்னதென்றறியாது இவ்வுலகத்தில் ஏங்கி இருந்து அழுவர்.

(அ. சீ.) நேரொப்பர் - சமானம் ஆவார். நீங்கிய - அஞ்ஞானம் நீங்கிய. (உ).

---

1. போற்றுந். அப்பர், சு. கo - எ.
,, அல்லும். ., சு எஅ - நி.
2. பெருமையால் கஉ. தடுத்தாட், ககசு

1527. இருந்தழு வாரும் இயல்புகேட் டாரும்
அருந்தவ மேற்கொண்டங் கண்ணலே எண்ணில்
வருந்தா வகைசெய்து வானவர் கோனும்
பெருந்தன்மை நல்கும் பிறப்பில்லை தானே.

(ப. இ) புன்னெறிச் சென்று துன்புற்றிருந்து அழுவாரும் மக்கள் தன்மையாம் இயல்பு குன்றினரும் நன்னெறி நான்கு தொண்டுகளாம் தற்றவத்தை மேற்கொண்டு அவ்விடத்து அண்ணலாகிய சிவபெருமானே வல்லவாறு 'சிவயநம' என எண்ணினால் அவன் எவ்வகை வருத்தமும் எய்தி வருந்தாதபடி செய்தருள்வன். சிவலுலகத்தார் நேர்தலேவலுகிய சிவபெருமான் திருவடியுணர்வினை நல்கியருள்வன். அதனால் இனிப் பிறப்பில்லையாகிச் சிறப்பு வந்துறும். பெருந்தன்மை - திருவடியுணர்வு.

(அ. சி.) இயல்பு - தன்னிலைமை. வானவர்கோன் - சிவன். பெருந் தன்மை - ஞானம். (கூ)

1528. தூரறி வாளர் துணைவர் நினைப்பிலர்
பாரறி வாளர் படுபயன் றுணுண்பர்
காரறி வாளர் கரந்து பிறப்பார்கள்
நீரறி வார்நெடு மாமுகி லாமே.[1]

(ப. இ.) குற்றமாகிய தூர்வையைக் குணமென அறிந்து தம்மனம் போல் ஒழுகுபவர் யாண்டும் உள்ளுறு துணையாக நிற்கும் அம்மையப்பரின் நினைப்பில்லாதவராவர். நிலையாத உலகமே பெரிதென மயங்கி அவ்வழி யொழுகுவார் உலகப் பயனை நுகர்ந்து பிறப்பர். அறியாமை வயப் பட்டுத் தம்முனைப்புடன் ஒழுகுவார் மீண்டும் மீண்டும் இறந்து பிறந்து இன்னலுறுவர். திருவடியுணர்வுகிய அருள்நீர் அறிவார் அத்திருவடி யுணர்வாக நின்று திருவருள் வண்ணமாவர். மாமுகில் - திருவருள் வண்ணம். இவர் சிவனடி இன்பம் எய்துவர். நீர் - தன்மை.

(அ. சி.) தூர் அறிவாளர் - ஈசனைத் தமக்குப் புறம்பாக நினைப் பவர். துணைவர் - பெத்தம் முத்திகளில் துணையாய் இருப்பவர் ஈசன் என்று. பார் அறிவாளர் - உலக அறிவுடையோர். படுபயன் - உலகப் பயன்களை. உண்பர் - துய்ப்பர். கார் அறிவாளர் - அஞ்ஞானிகள். கரந்து பிறப்பார் - செத்துப் பிறப்பார். நீர் அறிவார் - சிவத்தின் தன் மையை அறிவார். நெடுமாமுகில் - பெருமை தங்கிய கார்முகில் போன் றவர். (ஈ)

1529. அழிவுடன் கூடி அழைத்ததோர் தோணி
பறியுடன் பாரம் பழம்பதி சிந்துங்
குறியது கண்டுங் கோடுவி னையாளர்
செறிய நினைக்கிலர் சேவடி தானே.[2]

1. படுபயன். திருக்குறள். கஎஉ.
,, களவென்னும். திருக்குறள், உஉஎ.
2 செஞ்ஞாயிற்றுச். புறநானூறு, கூ0.
,, துன்பக். அப்பர், ச. கூஉ - சு.
,, ஆவதெ. கஉ. கண்ணப்பர், சுஎ.

(ப. இ.) முற்றுணர்வாகிய சிவஞானத்துடன் கூடித் திருவருள் துணையால் தோணியாகிய சிவபெருமான் திருவடியினை ஒவாது அழைத்தால் அவர் திருவருளால் உடம்பு பொன்மயமாகும். பாரமாகிய தூவா மாயைத் தத்துவக் கூட்டங்களும் பழமலத்தால் நேர்ந்த மாயாகாரிய மாகிய பழம்பதி என்னும் உடம்பும் அகலும். இவ்வுண்மையினைச் சிவனடியார்பால் நேரிற் கண்டிருந்தும், மலக்கொடும் வினைஞர் சிவபெருமான் திருவடியிணையினைச் சேருமாறு நினைக்கிலர்.

(அ. சி.) தோணி - சிவத்தின் திருவடி. பறி - பொன் போன்ற உடல். பாரம் - தத்துவக் கூட்டம். பழம்பதி - அநாதி மாயையால் ஆகிய சரீரம். குறி - கருத்து. (இ)

**1530.** மன்னும் ஒருவன் மருவு மனோமயன்
என்னின் மனிதர் இகழ்வரிவ் வேழைகள்
துன்னி மனமே தொழுமின் துணையிலி
தன்னையும் அங்கே தலைப்பட லாமே.[1]

(ப. இ.) நிலைபெற்ற ஒப்பில்லாத சிவபெருமான் அன்பால் நினைவாரது உள்ளக் கமலத்தின்கண் அவர் நினைந்த வடிவோடு பொருந்தி விளங்கும் மனோமயன் ஆவன். இவ்வுண்மையினை மெய்யடியார்கள் கூறக் கேட்டும் மக்கள் அதனைப் பொருட்படுத்துகின்றாரில்லை. பொருட்படுத்தாது இகழ்வார் தாழ்ந்த அறிவினையுடையவராவர். அவ்வழிச் செல்லாது சிவபெருமானை மனங்கொண்டு நெருங்கித் தொழுங்கள். தொழுதால் ஒப்பில்லாத அவன் அப்பொழுதே வெளிப்பட்டருள்வன். அருளவே அவன் திருவடியினைக் கூடி இன்புறலாம்.

(அ. சி.) மன்னும் - நிலைபெற்று இருக்கும். ஏழைகள் - அறிவில் வறியவர். துணையிலி தன்னை - ஒப்பற்றவனை. (சு)

**1531.** ஓங்காரத் துள்ளொளி உள்ளே உதயமுற்
றாங்கார மற்ற அனுபவங் கைகூடார்
சாங்கால மூன்னூர் பிறவாமை சார்வுறூர்
நீங்காச் சமயத்துள் நின்றுழிந் தார்களே.[2]

(ப. இ.) ஓங்காரத்தின் உள்ளொளி வண்ணமாக இருப்பவன் சிவன். அவன் அருளின்தோற்றம் அங்கே உண்டாக ஆங்காரம் அறும். அறவே சிவனடியின்ப நுகர்வு கைகூடும். இந்நிலைமை கைகூடாதவர் தங்கட்கு இறப்பு உண்டென எண்ணுர். எனவே பிறவாமையைச் சார்வுறுர். இத்தகையோர் பிறப்பு இறப்பினைத் தரும் புறச்சமய நெறியில் உழல்வர். நுகர்வு: துய்ப்பு; அமுந்தியறிதல்; அனுபவம்.

(அ. சி.) நீங்காச் சமயம் - மயக்கம் நீங்காத பிரம சமயம். (எ)

---

1. முழுத்தழல். அப்பர். ச. ககஉ - இ.
,, அக்கு ,, இ. கஎ - கச.
2. ஓங்காரமேநற். உண்மைவிளக்கம், கடு.

# 20. உட்சமயம்

1532 இமையவர் தம்மையும் எம்மையும் முன்னம்
அமைய வகுத்தவன் ஆதி புராணன்
சமையங்க ளாறுந்தன் ரூளிணை நாட
அமையங் குழல்கின்ற ஆதிப் பிரானே.[1]

(ப. இ.) பிறப்புத் தேவர்களையும், சிறப்பிற்குரிய மக்களையும் மல ஆற்றலின் வன்மை மென்மைகளுக்கேற்ப விணைக்கீடாகப் பொருந்தக் கருவுரு நுண்ணுடல் கருவுறும் பருவுடல்களை மாயையினின்றும் படைத்தருளியவன் அம்மையோடு கூடிய தொன்மையன். அறுவகைச் சமயங்களும் படிமுறையான் தன் திருவடியிணையினை எண்ண வகுத்தருளினவன் தொன்மைச் சிவபெருமானேயாவன். இவ்வுண்மையறியாது சிலர் அச் சமயங்களில் நின்று மேல் நோக்காது உழல்கின்றனர்.

(அ. சி.) இமையவர் - இமயமலை வாசிகள். ஆதி புராணன் - உலக உற்பத்திக்கு ஆதியாகிய அநாதி முதல்வன். (க)

1533 ஒன்றது பேரூர் வழியா றதற்குள
என்றது போல இருமுச் சமயமும்
நன்றிது தீதிது என்றுரை யாளர்கள்
குன்று குரைத்தெழு நாயையொத் தார்களே.[2]

(ப. இ.) திருவடிப் பேறெய்துதற்குரிய வழிகள் ஆறுகும். அவ்வாறினையும் சமயங்கள் என்று கூறுவர். அவைகள் படிமுறையின் வைத்து மேற்செலுத்துவன. இவ்வுண்மையினை உணராமல் இச்சமயம் நல்லது அச் சமயம் தீயது என்று சொல்லிச் சண்டையிடுவோர் குன்றினைப் பார்த்துக் குரைத்தெழுகின்ற நாயினைப் போன்றவராவர்.

(அ சி) குன்று குரைத்தெழு நாய் - (இஃது ஒரு பழமொழி) குன்றைப் பார்த்துக் குரைக்கும் நாய். அஃதாவது, வீண் ஆரவாரம். (உ)

1534. சைவப் பெருமைத் தனிநா யகன் தன்னை
உய்ய வுயிர்க்கின்ற ஒண்சுடர் நந்தியை
மெய்ய பெருமையர்க் கன்பனை இன்பஞ்செய்
வையத் தலைவனை வந்தடைந் துய்மினே.[3]

(ப. இ.) சித்தாந்த சைவத்தின் மாண்புமிக்க ஒப்பில்லாத தலைவனை, அனைத்துயிரும் உய்யும்படியாக உயிருக்கு உயிராக நின்று உயிர்ப்புக் கொள்ளுமாறு துணைசெய்யும் உணர்வொளிப்பிழம்பாம் நந்தியை, உண்மையான நன்னெறியின்கண் ஒழுகும் தக்க அடியார்கட்கு

1. அண்டமே. அப்பர், சு. இசு - எ.
,, போற்றுந் தகையன. சு. கoக - எ.
2. ஒதுசம. சிவஞானசித்தியார், அ. உ - கூ.
3. வீள்ளத்தா. அப்பர், சு. எசு - எ.

அன்பனே, அனைத்துயிர்க்கும் பேரின்பம் அருளும் உலக முதல்வனை காதலுடன் வந்து கழல்பணிந்து உய்வீர்களாக. உயிர்ப்பு - முச்சு.

(அ. சி.) மெய்ய - மெய்யான. (கூ)

1535. சிவனவன் வைத்ததோர் தெய்வ நெறியிற்
பவனவன் வைத்த பழவழி நாடி
இவனவன் என்ப தறியவல் லார்கட்
கவனவ னங்குள தாங்கட ஞமே.[1]

(ப.இ.) சிவபெருமான் ஆருயிர்கள் படிமுறையால் வழிபட்டு உய்யும்பொருட்டு அமைத்தருளிய தெய்வநெறியாகிய நன்னெறியில் அச் சிவபெருமான் ஏற்படுத்திய பழைமையான சன்மார்க்க நெறியை ஆராய்ந்து நோக்கிஞல் நன்னெறிச் செல்வார் இவன் அவன் என்னும் வேறுபாட்டினை ஒழித்து ஆருயிர்கட்கு அருள் செய்யும் பேருயிரே சிவன் என அழைக்கப்படுகின்ருன் என்னும் உண்மை காண்பர். இவ்வுண்மை அறியவல்லார்களுக்கு அவ்வச் சமயங்கள்தோறும் சிவபெருமான் நின்று பயிற்சி வேறுபாட்டிற்குத் தகப் பயன் அருள்வன்.

(அ. சி.) பவன்-பரமசிவன். பழவழி-பழைமையான சன்மார்க்கம். (ஈ)

1536. ஒத்த சமயங்கள் ஓராறு வைத்திடும்
அத்த ஞெருவனும் என்ப தறிந்திலர்
அத்தன் ஒருவனும் என்ப தறிந்திடின்
முத்தி விளக்கு முதல்வனு மாமே.[2]

(ப. இ.) அறுவகைச் சமயத்தையும் பருவத்திற்கேற்றவாறு அமைத் தருளியவன் சிவபெருமானே, அவன் ஒருவனே என்னும் உண்மையைப் பலரறிந்திலர். அத்தனுகிய அச்சிவன் ஒருவனே என்பதறிந்திட்டால், அங்ஙனமறிந்த மெய்யன்பர்க்கு வீடுபேற்றினை நல்கியருளும் முழுமுதல் வனும் அச் சிவபெருமானேயாவன். (இ)

1537. ஆமா றுரைக்கும் அறுசம யாதிக்குப்
போமாறு தானில்லை புண்ணிய மல்லதங்
காமாம் வழியாக்கும் அவ்வே றுயிர்கட்கும்
போமாறவ் வாதாரப் பூங்கோடி யாளே.[3]

(ப.இ.) அவரவர் நிலைமைக்கு ஏற்றவாறு கூறப்பட்டுள்ள ஆறு சமயங்கட்கும் பயன் முன்னேறிச் செல்வதற்கு வழித்துணையாம் புண் ணியம் ஒன்றுமேயாம். சிவபெருமான் திருவடியின்பத்தினை அளிக்கும்

---

1. வாது. இ. அப்பர், கo0-ச.
,, ஆருென்றிய ,, ச. கo0 - ச
2. ஒதுவித்- ,, ச. கo0 - க.
3. கையிலிடு. ,, ச. கoஉ - கூ.
,, திருமறைரோ. கஉ. அப்பூதி, கசு.

தன்னெறியாம் சன்மார்க்கத்திற்குப் பயன் உயிர்களின் செவ்விக்கேற்ப ஊட்டும் சிவப்பேறேயாம் எல்லாவுயிர்களையும் அவ்வவ்வுயிர்களின் செவ்விக்கு ஏற்பப் பயனளித்து ஆட்கொள்பவள் திருவருளம்மையே.

(அ - சி.) ஆமாம் வழி - சரியான மார்க்கம். அவ்வேறுயிர் - மலபரிபாகம் பெற்ற சீவர்கள். (சு)

1538. அரனெறி யாவ தறிந்தேனும் நானுஞ்
சிரநெறி தேடித் திரிந்தஅந் நாளும்
உரநெறி யுள்ளக் கடல்கடந் தேறுந்
தரநெறி நின்ற தனிச்சுடர் தானே.[1]

(ப. இ.) அரனுரால் அருளிச்செய்யப்பட்ட நெறிகளை அறிந்த நானும், தலைமையாகிய நன்னெறியினை நாடியலைந்த நாளிலும் மிகவும் வன்மையாகிய காமம் வெகுளி மயக்கம் போன்ற குற்றக்கடலுள் மனம் அழுந்தி நின்ற அக்காலத்து அக் கடலினைக் கடந்து கரையேறுவதற்கு வேண்டிய முறைமையான சிறந்த நெறியினைத் தந்தருளிய நாளிலும் என்னைவிட்டு நீங்காது உடனாக நின்றருளியவள் திருவருளம்மையே.

(இ. சி.) நன்னெறி உணராது வேறு நெறிகளில் அலைந்து திரிந்த காலத்திலும் கூடவே இருந்து மலபரிபாகம் வருவித்துச் சன்மார்க்கத்தில் கூட்டியதும் சிவசத்தியே என்று கூறுவது இம் மந்திரம். (எ)

1539. தேர்ந்த அரனை அடைந்த சிவனெறி
பேர்ந்தவர் உன்னிப் பெயர்ந்த பெருவழி
ஆர்ந்தவர் அண்டத்துப் புக்கவ் வருள்நெறி
போந்து புனைந்து புணர்நெறி யாமே.[2]

(ப. இ.) திருவருளம்மையால் உணர்த்தவுணர்ந்த சிவபெருமானை யடைந்த நன்னெறியானது, சிவனெறியைக் கைவிட்டு வேற்று நெறியிற் சென்றலைந்து பருவம் எய்தலும் மீண்டும் சிவனெறியைக் கருதி வந்தவர்க்கும் இடந்தரும் பெருவழி. ஏனைய நெறிகளினின்று ஒழுகி அவ்வப்பயன்களை அண்டமாகிய அவ்வவ் வுலகங்களிற் சென்று நுகர்வர். நுகர்ந்தபின் மீட்டும் திருவருள் நெறியாகிய சிவனெறி புகுந்து அந் நெறி ஒழுகி இறவா இன்பப் பேறெய்துவர். இவைகளனைத்தையும் உடனிருந்து உதவியருள்பவள் திருவருளம்மையே. 'புண்ணியனை வையம் புகழ்ந்தவாறும் புகழ்நூல்' அருளிச் செய்த நால்வருள், தேவாரம் அருளிய மூவருள் நடுவராம் முதல்வர் திருநாவுக்கரசு நாயனார். அவர் புறச்சமயம் புக்கு அருளால் மீண்டும் சித்தாந்த சைவப் பெருநெறி வந்து பெரும்பேறெய்தி நம்மையெல்லாம் ஆட்கொண்டருளியமை இதற்கொரு சாலும் கரியாகும். சாலும்கரி - போதுமான சான்று.

(அ. சி.) தேர்ந்து அவ் அரனை அடைந்த - திருவட் சத்தி உணர்த்த அறிந்து அடைந்த. பேர்ந்து - விலகி. உன்னி - உண்மை

1. ஆதி. சுஉ. சம்பந்தர், சுஉசு.
2. போற்றுங் அப்பர், சு. சுOசு - எ.
ஓதுவித். ,, சு. சுசு . சு.

நெறியென்று கருதி. பெயர்ந்த பெருவழி-சென்றடைந்த பிற சமயங்கள். ஆர்ந்தவர் - அவ்வச் சமய ஒழுக்க நெறி நின்றவர். அண்டத்துப்புக்கு - அவ்வச் சமயங்களுக்குத் தக்க போக பூமிகளில் சென்று புசித்து நீங்கி. அருணெறி போந்து - பூமியில் மறுபடியும் திருவருள் கூட்ட உட் சமயங்களில் புகுந்து படிப்படியாக மேலேறி. புணர்ந்து புணர் நெறியாம்- பின் உண்மை இதுவென்று கண்டு அதனைப் புகழ்ந்து கைக்கொண்டு அடையும் சன்மார்க்க நெறி ஆகும். (அ)

1540. ஈரு மனத்தை யிரண்டற வீசுமின்
ஊருஞ் சகாரத்தை ஓதுமின் ஞேதியே
வாரும் அரனேறி மன்னியே முன்னியத்
தூருஞ் சுடரோளி தோன்றலு மாமே.

(ப. இ.) திருவருள் துணையால் பொறிபுலன்வழிச் செல்லும் மனத்தை அடக்கி ஆளுங்கள். வேறுபட்ட நெறிகளிற் செல்லும் செல வீனை அகற்றுங்கள். இகரம் ஊர்ந்த சகரத்தை - சி என ஒட்டிழுத் துடன் அஃதாவது வ என்னும் எழுத்தும் சேர்த்துச் 'சிவ' என ஓதுங்கள். அங்ஙனம் ஓதிவருங்காலத்து அரனெறியில் நிலைத்துச் சார்பாகக் கருதப் படும் 'ய' கரத்தையும் கூட்டிச் 'சிவயசிவ' என ஓதுங்கள். அங்ஙனம் ஓதுங்கால் அடிப்படைச் சிவஒளி உள்ளொளியாகத் தோன்றும் என்க. இகரமாகிய இன்பப்பேறு ஆருயிர்கட்கே உரியது. அதனால் ஆருயிர் இகரம் எனக் குறிக்கப்படும். சிவபெருமான் அறிவின்பாகவும் ஆருயிர் இன்பியாகவும் அழைக்கப்படும். 'சி' 'ச் + அ + இ' ச் : ச. சத்து உண்மை; திருவருள். அ : அறிவு - சிவன். இ : இன்பு - திருவடி; இன்பி - இன்பந் துய்க்கும் ஆருயிர். எனவே 'சி' என்னும் சிறப்பின் முதலெழுத்து உண்மை அறிவு இன்பம் ஒருங்கமை ஓர் உருவாய்த் திகழும் உண்மை வண்மையுணர்ந்தின்புறுக. இது 'சிவயநம'வின் முதலெழுத்தாலும் நோக்குக.

(அ. சி.) ஈரும் மனம் - சலிக்கும் மனத்தை. இரண்டற - ஒரே நிலையில் நிற்க. ஊரும் சகரம் - சி. வாரும் அரனெறி மன்னி - வ எழுத்தைச் சேர்த்து. முன்னி - எண்ணிய. உயிர் தூரும் - மண்டி இருக்கும். (கு)

1541. மினற்குறி யாளனே வேதியர் வேதத்
தனற்குறி யாளனே ஆதிப் பிரான்தன்னே
நினைக்குறி யாளனே ஞானக் கொழுந்தின்
நயக்குறி காணில் அரனேறி யாமே.[1]

(ப. இ.) அகத்தவமாகிய யோகக் காட்சியில் சிவபெருமான் மின்னல் போன்று அறிவொளி அருள்வன். அத்தகைய சிவபெருமானே திருநான் மறைவல்ல சிவமறையோன் அம்மறையிற் குறித்தபடி சிவனே முழு முதலாக்கொண்டு செந்தழல் ஓம்பும். சிவவேதியராகிய அந்தணர்க்கு அவ் வனல் வடிவாகத் தோன்றியருள்வன். அவனே ஆதிப்பிராஞ்சிய அம்மையப்பனவன். மெய்யன்பர்கள் நினைக்கும் நினைவுக்குறியாகிய திரு மேனி தொண்டருள்வன். செறிவு நோன்பு சீலமாகிய முத்திறத்தார்க்

1. இவனுலகில். சிவஞானசித்தியார், கo.

கும் வெளிப்பட்டருளும் அகஒளி, புறவொளி, திருவுரு ஆகிய மூன்றும் கடந்த அறிவு நிலையாகிய ஞானநெறியில் உணர்வுக்கு உணர்வாய்த் தோன்றும் பேரறிவுப் பேரொளியை அருட்கண்ணுற் காணின் அதுவே அரனெறியாகும். சிவபெருமானே முழுமுதலாகக்கொண்டு கொலையும் புலையுமொழித்துச் செந்தமிழ்த் திருநான்மறைவழியே செய்யும் நலவேள்வியே சிவவேள்வி என்க. அதுவே 'கற்றுங் கெரியோம்பிக் கலியை வாராமே செற்றுர்' செய்யும் சிவத்தொண்டாகும். 'பசுவேட்டு எரியோம்பு' மென்பதற்கு அணைத்துயிரும் இன்புற்று வாழவேண்டுமெனச் சிவவேள்வி சிறக்கப்பேணும் என்பதே பொருளாம். எரிபெருக்குவர் அவ்வெரி ஈசன, துருவருக்கம தாவ துணர்கிலார்' செய்யும் மயலுற்ற அயலவர் வேள்வியே பிறவேள்வி என்க. பசு-மன்னுயிர்த் தொகுதி.

(அ. சி.) மினற்குறியாளனே - மின்னல்போன்ற ஒளியுடையாளே. அனற்குறியாளனே - சிவாக்கினி உருவமானவனே. நீணெக்குறியாளனே - சகுணத்திருமேனியுடையானே. (கo)

1542. ஆய்ந்துண ராக்களின் ஆன்மாச் சதுர்பல
வாய்ந்துண ராவகை நின்ற அரனேறி
பாய்ந்துணர் வார்அரன் சேவடி கைதொழு
தேர்ந்துணர் செய்வதோர் இன்பமு மாமே.[1]

(பொ. இ.) நெறிகளை ஆராய்ந்துணரும் தன்மையிலாதாராகிய ஆவிகளின் திறமைப்பாடு பலவாகும். வாய்ந்துணர்ந்து அவ்வழியிலே நின்று நன்னெறியாகிய அரனெறியிற் சென்று உணர்ந்து ஒழுகுவார் ஒரு வகையினர்; அரன் திருவடியிணையினைக் கைதொழுவர் மற்றொரு வகையினர். அங்ஙனம் ஏர்ந்துணர்ந்தொழுகுவார் எய்தும் பெரும்பயன் திருவடியின்பமேயாகும்.

(அ. சி.) வாய்ந்து உணராவகை - வாய்ந்து உணரும் வகை. (உணரா - செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம்), ஏர்ந்து - சிவஞானம் கைவரப்பெற்று. உணர்செய்வது - அனுபவிப்பது. (கக).

1543. இத்தவம் அத்தவம் என்றிரு பேரிடும்
பித்தரைக் காணின் நகுமெங்கள் பேர்நந்தி
எத்தவ மாகிலென் எங்குப் பிறக்கிலென்
ஒத்துணர் வார்க்கொல்லை யூர்புக லாமே.[2]

(பொ. இ.) நன்னெறியாகிய சிவனெறியிற் கொண்டுய்க்கும் எந்நெறிகளிலும் செய்யப்பெறும் தவங்களெல்லாம் அவ்வந்நெறியினிற்பார்க்கு ஏற்புடையனவே. எனவே இத்தவம் அத்தவம் என்று வேறுபடுத்திப் பேசுவோர் பித்தராவர். அத்தகையோரைக் காணில் நம் நந்தியாகிய சிவபெருமான் சிரித்தருள்வன். எவ்வகைத்தவமானுலென்ன, எவ்வகைப் பிறப்பு எய்தினுலென்ன, திருவருள் துணையால் திருவடியுணர் வெய்துவார் விரைந்து சிவவுலகு எய்துவர்.

(அ. சி.) ஒல்லை-சிக்கிரம், விரைவில். (கஉ)

1. பெருகலாம். அப்பர், தி. அ அ - க.
2. ஒட்டாத. ,, சு. தி - க.
,, நமச்சி. ,, தி. கஎ - உஉ.

1544. ஆமே பிரான்முகம் ஐந்தோடு மாருயிர்
ஆமே பிரானுக் கதோமுக மாறுள
தாமே பிரானுக்குந் தன்சிர மாலைக்கும்
நாமே பிரானுக்கு நரரியல் பாமே.[1]

(ப. இ.) சிவபெருமானின் திருமுகம் ஐந்துள. அவை இயக்கம் ஆட்சி நடுக்கம் தோன்றுவித்தல் என்னும் தொழில் பற்றிய பெயர்க ளுடையன. இவற்றை ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோ சாதம், எனவும் கூறுப. இத்திருமுகங்களின் இடம் முறையே உச்சி கிழக்கு தெற்கு வடக்கு மேற்கு எனத் திசைநோக்குவன. இத் திருமுகங்கள் ஐந்துடன் ஆருயிர்களே உடல் உலகுடன் பொருத்துவதும், மாயையைக் காரியப்படுத்துவதும், விஞ்ஞானமலங்களைத் தொழிற்படுத்து வதும் ஆகிய நடப்பாற்றலாகிய ஆதிசத்தி கீழ்நோக்கிய திருமுகம் என்று கூறப்படும். இதனுடன் சேர்த்து ஆறு திருமுகங்கள் உள. இவை சிவபெருமானுக்குரியன. இத்துடன் அயன்அரி முதலிய தேவர்கள் தலை மாலையும் பூண்டுள்ளார். மக்களாகிய நாம் அச் சிவபெருமானுக்கு அன்புடையராவோம். நரரியல்பு : நாரரியல்பு; நாரம் - அன்பு.

(அ. சி.) ஆருயிர்...ஆறுள - ஆர் உயிர்களும் மாயை (Matter) யின் அணுக்களும் தங்கும்படியான அதோ முகத்தையும் கூட்ட சதா சிவத்தின் முகங்கள் ஆருகும். (கூ)

1545. ஆதிப் பிரானுல கேழும் அளந்தவன்
ஓதக் கடலும் உயிர்களு மாய்நிற்கும்
பேதிப் பிலாமையின் நின்ற பராசத்தி
ஆதிக்கட் டெய்வமும் அந்தமு மாமே.

(ப. இ.) அம்மையோடு கூடிய அப்பனுகிய சிவபெருமான் உலகை அளந்த மாலாகவும், அம்மால் நிறம்போலும் ஒலியுடைய கடலாகவும் அக்கடல் சூழ் உலகில் வாழும் பல்வேறு உயிர்களாகவும், கலப்பால் ஒன்றுய் நிற்பன். அவன் வனப்பாற்றலாகிய திருவருளம்மையுடன் பிரிப் பின்றி மரமுங் காழ்ப்பும்போல ஒருவனே இருநிலைமையுமாய் நிற்பன். அவ்வாழ்மையே நடப்பாற்றலாகிய ஆதியும் ஆவள். அவளே ஒடுக்கத்தைச் செய்யும் ஆண்டவனுமாவள். ஆதி - நடப்பாற்றல்.

(அ. சி.) பேதிப்பிலாமையில் - பிரிவு இல்லாமல். ஆதிக்கண் - சிருட்டி ஆரம்பத்திலும், அந்தமும் - ஒடுங்கும் காலத்திலும். (கச)

1546. ஆய்ந்தறி வார்கள் அமரர்வித் தியாதரர்
ஆய்ந்தறி யாவண்ணம் நின்ற அரனெறி
ஆய்ந்தறிந் தேனவன் சேவடி கைதொழ
ஆய்ந்தறிந் தேனிம்மை அம்மைகண் டேனே.[2]

---

1. தலேவே. அப்பர், சி. கூ - க.
2 நானேயோ. அ. திருவேசறவு - கo.
,, தேடிக். அப்பர், சு. கூ - கூ,

(ப. இ.) அமரரும் வித்தியாதரரும் சிவனே ஆய்ந்தறிவார்கள். அவர்கள் ஆய்ந்து அறிய முடியாதபடி அப்பால் நின்றதாகும் அரனெறி. சிவபெருமானின் திருவடியைத் தொழும்பேறு கிடைத்தமையால் அவ்வருள் துணையால் அவனே ஆராய்ந்துணர்ந்தேன். அம்முறைமையினால் நிலையாதனவாகிய இம்மை உம்மையாகிய மறுமைகளை வெறுத்து ஒதுக்கினேன். அதனால் செந்நெறியாகிய அம்மையென்னும் அரனெறியின் உண்மையினை உள்ளவாறு உணர்ந்தேன். அம்மை - திருவடிப்பேறு.

(அ. சி.) ஆய்ந்து அறியாவணம்-சாதாரண மனிதர்கள் ஆராய்ந்து அறியமுடியாத. காய்ந்து - விருப்பு வெறுப்பு இன்றி. (கஇ)

1547. அறியவொண் ணுதவ் வுடம்பின் பயனே
அறியவொண் ணுத அறுவகை யாக்கி
அறியவொண் ணுத அறுவகைக் கோசத்
தறியவொண் ணுததோர் அண்டம் பதிந்ததே.[1]

(ப. இ.) பெறுதற்கரிய மக்கள்யாக்கையின் பயன் வீடுபேறடைதல். அதனையடையும் வழிவகைகளை எளிதாக்க அகச்சமயம் ஆறனையும் அருளினன். உண்டென்று கூட உணரமுடியாத தொன்மை ஆணவ மலத்தை அறுவகை செய்து, உணவுடம்பு, வளியுடம்பு, மனவுடம்பு, அறிவுடம்பு, இன்பவுடம்பு ஆகிய ஐவகையுடம்புகளானும் அறியமுடியாத திருவருள் பெருவெளி ஆருயிர்மாட்டுப் பதிந்ததென்க. அறுவகை - அற்றுப்போம்வகை. ஐவகையுடம்பினையும் முறையே அன்னமயகோசம், பிராணமயகோசம், மனோமயகோசம், விஞ்ஞானமயகோசம். ஆனந்தமய கோசம் என்ப. அகச்சமயம் ஆறும் வருமாறு: க. ஆவிக்கற்கோள். உ. ஆவி வேற்றுமைக்கோள். கூ. சிவனெப்புக்கோள். ச. கருவிசென்று பற்றுங்கோள். டி. சிவன் செயலின்மைக்கோள். சு. சிவத்திரிபுக்கோள். என்பன. இவற்றை முறையே பாடாணவாதம், பேதவாதம், சிவசமவாதம், சங்கிராந்தவாதம், ஈசுரவவிகாரவாதம், நிமித்த காரண பரிணமவாதம் எனவுங் கூறுப.

(அ. சி.) உடம்பின் பயன் - உடம்பினால் பெறப்படும் பயன் முத்தி. அறுவகை-ஆறுவகை உட்சமயங்களாக. அறியவொண்ணுத அறுவகை - அறிதற்கு அரிதாகிய ஆணவமலம் அறும்வகை செய்து. கோசத்து - உடம்பினுள், அண்டம் - அண்டகாரணனாகிய சிவம். (கக)

நான்குறுதி பெற்றூர் சிவநற்றூட் பேறுறுவர்
நூன்முறைஐந் தாந்தந்திரம் நோக்கு.

ஐந்தாம் தந்திரம் முற்றும்.

டாக்டர் ந. சஞ்சீவி
தமிழ்ப் பேராசிரியர்
செ[illegible] கல்லூரி

---

1. பலரைப். திருவருட்பயன் கூ. இருவினைவொப்பு, ஆணவமலம்.
,, என்று. கஉ. வெள்ளானைச் சருக்கம், திரு.
,, மருவானந்தம். சிவஞானசித்தியார், ச. உ - கஅ.
,, தோற்பாவைக் ச. உ - கக.